# THE BOOK WAS DRENCHED

UNIVERSAL
LIBRARY
OU_208001
UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 181.4. Accession No. Tm 681

Author 5023. Sivagnana padiyam.

Title Sivagnana arulichaikka Sivagnana bodhamum !

This book should be returned on or before the date last marked below.

- சிவஞானபோதமும் -

# சிவஞானபாடியமும்

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேவர்

அருளிச்செய்த

# சிவஞானபோதமும்,

வார்த்திகப் பொழிப்புரையும்,

மாதவச் சிவஞானயோகிகள்

அருளிச்செய்த

# சிவஞான பாடியமும்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடேட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

First Print: March, 1936
Reprints: March, 1952

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

சிவஞானபோதம் என்னும் அறிவுநூல் செந்தமிழ் அணங்கிற்கு அழகுசெய்யும் அணிகலன்களுள் மிகச்சிறந்து விளங்குவதாகும். மக்கட்கு உறுதிப்பயக்கும் அறிவைப்புகட்ட வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நூல்கள் எழுந்தனவாயினும் மெய்கண்ட தேவர் அருளிச்செய்துள்ள சிவஞானபோதமன்றிப் பல்லாற்றானும் சிறப்புடைய நூல் பிறிதில்லை யென்னலாம்.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. இப் பன்னிரண்டு சூத்திரங்களும் நாற்பது (சஅ) அடிகளை யுடையன. இந்நாற்பது (சஅ) அடிகளும் உகசு சொற்களை யுடையன. இவ் இருநூற்றுப்பதினாறு சொற்களும் சுஉச எழுத்துக்களை யுடையன. இதனுட் கூறப்படும் பொருளோ அளவின்றிப் பரந்து கிடக்கும் பான்மையது. ஆகவே இச் 'சிறிய பெரு'நூல் ஒதற்கெளிதாய் உணர்தற்கரிதாயுள்ளது. மக்கள் செய்த தவப்பயனாய்ச் செந்தமிழ் நாட்டிற் றோன்றிய ஆசிரியர் சிவஞானயோகிகள் இந்நூற்கு மாண்புடைய பேருரை யொன்று உலகம் உய்யுமாறு செய்தருளினார்கள். நம் பேருரையாசிரியர் தம் உரைநடை, கற்பார் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு தன்வயமாக்குந் தகைமையது. அழகிய உரைநடை எழுதும் ஆற்றல் விழைவார் பலர்க்கும் இந்நூல் சிறந்ததொரு காட்டாக அமைந்துள்ளது.

இப்பேருரையாம் சிவஞானபாடியம் முழுவதும் சென்ற துன்மதியாண்டு (1921) சூரியனார்கோயிலாதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமிதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியவண்ணம் அவர்களிடம் பயின்ற தம்பிரான்கள் சிலர், அவருடைய நண்பர்கள் சிலர் ஆகியோரின் நன்கொடைப் பொருளுதவிகொண்டு அச்சியற்றப்பெற்று வெளிவரலாயிற்று.

முன் அச்சிட்ட சிவஞானபாடியப்படிகள் (பிரதிகள்) செலவாகி விட்டமையாலும், கற்க விரும்புகின்ற மக்கள் ஒவ்வொருவரிடமும் இவ்வறிவுநூல் இருக்கவேண்டுமென்ற

பெருநோக்கத்தாலும் குறைந்த விலைக்கு இதனை அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இப்பேருரையை இச்செவ்விய முறையில் அழகுடன் அச்சிடுவதற்குத் தங்கள் நீண்டகால நுண்ணறிவால் செய்து வைத்திருந்த திருத்தங்களைக் கொடுத்துதவிய உயர் திரு. செப் பறைச் சிதம்பரசுவாமிகளுக்கும், உயர்திரு. இலக்கணச்சுவாமிகள் என்ற முத்துக்குமாரதம்பிரான் அவர்கட்கும் இக்கழகத்தார் என்றுங் கடப்பாடுடையார்கள். இதன்கண் சேர்க்கப் பெற் றிருக்கும் நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகளை எழுதித் தந்த உயர்திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்களுக்கு இக்கழகத்தின் நன்றி உரியதாகும். மேற்கோள் நூலகராதி, பொருளகராதி, அருஞ்சொல் சொற்றொடரகராதி ஆகியவற்றையும் எழுதி யுதவிய அப்பெரியாருக்கும், திருவாளர் வே. மாணிக்க வாசகம் பிள்ளையவர்களுக்கும் இக்கழகம் நன்றி செலுத்து கின்றது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


மெய்கண்டதேவர் வரலாறு ள

சிவஞானயோகிகள் வரலாறு கஉ

சிவஞானபோதச் சூத்திரமும் அதிகரணமும் உசு

திருவெண்பாத் தொகை ஙஙூ

சூத்திரத்தொகை முதலியன உணர்த்துஞ்
செய்யுட்கள் ஙூச

சூர்ணிக் கொத்து ஙூரு

சிவஞானபாடியம் க

சிறப்புப்பாயிரம் ஙூ

மங்கல வாழ்த்து ஙூரு

அவையடக்கம் ஙூள

பொதுவதிகாரம் சூஉ


உண்மையதிகாரம் ஙூளசூ

வெண்பா முதற்குறிப்பகராதி சசூசூ

மேற்கோள் நூலகராதி ரு0க

பொருளகராதி ரு0ச

அருஞ்சொல் சொற்றொடரகராதி ருகசூ


ஔவைகண்டதேவர்.

உ

திருச்சிற்றம்பலம்

# மெய்கண்டதேவர் வரலாறு

தொண்டை நாட்டிற்குஞ் சோழ நாட்டிற்கும் நடுவேயுள்ளதான திருமுனைப்பாடி என்னும் நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம்* என்னும் திருப்பதியிலே வேளாளர் குலத்திலே சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பு மிக்குடையவராய், அச்சுதகளப்பாளர் என்னுந் திருப்பெயருடையவராய் ஒருவர் வாழ்ந்துவந்தனர். அவர் கல்விச் செல்வத்தினாலும் பொருட்செல்வத்தினாலும் சிறந்து விளங்கியும், மகப்பேறில்லாத குறையுடையவராயிருந்தார். அவர் ஒருநாள், திருத்துறையூருக்குப் போய்த் தம் குலகுருவாகிய சகலாகமபண்டிதர் என்னும் சிறப்புப் பெயருடைய அருணந்தி சிவாசாரியர்பாற் சென்று தமக்கு மகப்பேறில்லாத குறையைத் தெரிவித்தார்.

அதுகேட்ட அருணந்திசிவாசாரியர் தம் வழிபடு கடவுளை வழிபாடு செய்து அதன் முடிவில் தேவாரத் திருமுறையை மலரிட்டு வணங்கி அதனிடத்தில் திருக்கயிறு சாத்தும்படி அச்சுதகளப்பாளருக்குச் சொல்லியருளினர். அவ்வாறே அச்சுதகளப்பாளர் தேவாரத் திருமுறையின் முன்னே எட்டுறுப்புக்களும் நிலத்திலே தோயும்படி வணங்கிச் சிவபெருமானைத் துதித்துத் திருமுறைக்கண் கயிறுசாத்தினபொழுது திருஞானசம்பந்த அடிகள் பாடியருளிய திருவெண்காட்டுப் பதிகத்தில் இரண்டாவது பாட்டாகிய

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினை யுள்ளவினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்

---

* இப்பெண்ணாகடம் என்னுந் திருப்பதி **திருக்கடந்தைநகர்** என்ற பெயராலும் அழைக்கப்படும். இது, தென்னிந்திய இருப்புப்பாதையிலுள்ள **விருத்தாசலமென்னுந்** திருப்பதிக்குத் தென்மேற்கில் பதினெரு கல் தொலைவிலுள்ளது. இத்திருப்பதியிலுள்ள திருக்கோயில் **திருத்தூங்கானை மாடம்** என்ற பெயரால் அழைக்கப்படும். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய **கலிக்கம்ப நாயனார்** பிறந்து திருவருள் பெற்றதும், **திருநாவுக்கரசு அடிகள்** சிவபிரானை வேண்டித் திருப்பதிகம் பாடித் தந்தோள்களிற் சூலக்குறியும் இடபக் குறியும் பொறித்தருளப் பெற்றதும் ஆகிய இடம் இத்திருப்பதியேயாம்.

வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.* ''

என்னும் செய்யுள் காணப்பட்டது.

பின்னர், சகலாகமபண்டிதர் பேருவகையுடன் அச்சுத களப்பாளருக்கு அச்செய்யுளின் பொருளைக் கூறித் திருவெண் காட்டுத் திருப்பதியின் மேன்மையையும், அப்பதியிலுள்ள திருக்குளத்தில் முழுகி இறைவனை வழிபடும் முறைமையையும் அறிவுறுத்தித் திருவெண்காட்டுக்குப் போகும்படி ஆணை செய்தார்.

அச்சுதகளப்பாளர் குருவின் ஆணையைத் தலைமேற் கொண்டு மனைவியாருடன் திருவெண்காட்டிற்குச் சென்று நாள்தோறும் சோமகுளம், சூரியகுளம், அக்கினிகுளம் என்ற மூன்று குளங்களிலும் நீராடிச் சிவபெருமானையும் இறைவியையும் சிலகாலம் மெய்யன்புடன் வழிபட்டுவந்தனர்.

ஒருநாள் இரவில், அச்சுதகளப்பாளர் தூங்கும்பொழுது இறைவன் அவர் கனவில் வந்து தோன்றி, "அன்பனே! உனக்கு இப்பிறவியிலே மக்கட்பேறு அரிதாயினும் எமக்கு மிகவும் விருப்பமுடையதாயும், மெய்யன்போடு தன்னை ஒதுவார்க்கு எல்லாப் பேறுகளையுந் தருவதாயுமுள்ள தேவாரத் திருப்பதிகத் தையே உண்மையாக நம்பிவந்து வழிபாடு செய்கின்றாய்; ஆக லின், அத்தேவாரங்களைப் பாடிய ஞானசம்பந்தன் போலவே, அத்தேவாரத் திருப்பதிகங்களின் மெய்ப்பொருளை விளக்கி, மெய்ந்நெறியாகிய சைவசமயத்தையும் விளக்கி நிறுவவல்ல நற் புதல்வன் ஒருவனை நாம் உனக்குத் தந்தோம்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

உடனே அச்சுதகளப்பாளர் விழித்தெழுந்து, பெருமகிழ் வுற்றுத் திருவெண்காட்டிறைவர் தமக்குத் திருவருள் புரிந்ததை நினைந்து அவரை வணங்கித் துதித்து, நிகழ்ந்த செய்தியைத் தம் மனைவியாருக்குத் தெரிவித்து, அவரோடு தாமும் திருக் கோயில் சென்று இறைவனையும் இறைவியையும் மிக்க பேரன் போடு வழிபட்டுத் தமது இல்லத்திற்குத் திரும்பினர். இங்ஙனம் அவர் நாடோறும் தம் மனைவியாரோடு திருக்கோயில் சென்று நீராடி வழிபாடு செய்துகொண்டு வந்தார். சிலகாலஞ் சென்ற

---

* **இச்செய்யுளின் கருத்து:** திருவெண்காட்டுத் திருக்கோயிற் சுற் றிலுமுள்ள மூன்று குளங்களிலும் நீராடிச் சிவபெருமானை வழிபடுகிறவர் களைப் பேய் அணுகாது; மூன் அணுகியிருப்பினும் நீங்கும்; தங்கள் உள் ளத்தில் நினைந்த பிள்ளைப்பேறு முதலிய சிறந்த பேறுகளையும் நினைந்தவண் ணந் தப்பாமல் அடைவர் என்பதாம்.

பின் அவர் மனைவியார் திருவயிற்றில் சிவபெருமான் திருவருளால் கருத்தோற்றப் பெரும்பேறு உளதாயிற்று.

அஃதறிந்த அச்சுதகளப்பாளர், சிவபிரான் தமக்கு அருள் செய்த திருவருளைப் புகழ்ந்து துதித்துப் பத்துத் திங்களிலுஞ் செய்யவேண்டிய சடங்குகளைச் சிவாகம நெறிப்படி செய்துவந்தார். தென்னாடு செய்த தவவலியால் சைவசமயஞ் சிறந்து விளங்குமாறு நற்கோள்களமைந்த நல்ல வேளையிலே அவருக்கு நற்புதல்வர் ஒருவர் தோன்றியருளினார்.

அச்சுதகளப்பாளர் பெருமகிழ்வுற்றுக் குழந்தைக்குச் சிவாகம நெறிப்படி செய்யவேண்டிய பிறப்புக்குறிப்பு எழுதுதல் முதலிய சடங்குகளைச் செய்து, அப்புதல்வர்க்குத் திருவெண்காடர் என்னுந் திருப்பெயரிட்டருளினர்.

பின்பு, அவர் தம்மனைவியாரோடும் அருமைக் குழந்தையோடுந் திருவெண்காட்டிறைவனையும் இறைவியையும் வழிபட்டு விடைபெற்றுக்கொண்டு தமது உறைவிடமாகிய திருப்பெண்ணாகடத்தை யடைந்தனர். அச்செய்தி யறிந்த அவ்வூரிலுள்ளார் அச்சுதகளப்பாளர் மனைக்கு வந்து இறைவன் திருவருளாற் றோன்றியருளிய குழந்தையைப் பார்த்து வணங்கி உவகையுடன் சென்றனர். அத்திருப்புதல்வர் வளர்பிறை போல வளர்ந்துவருநாளில், திருவெண்ணெய் நல்லூரிலிருந்த அவர் நண்மாமனார் திருப்பெண்ணாகடம் வந்து அவரைப் பார்த்துப் பெருமகிழ்வுற்று அவரைத் தம் இல்லத்திற்குக் கொண்டுபோய் அன்போடு வளர்ப்பாராயினர்.

அவர், இங்ஙனம் வளர்ந்து இரண்டாண்டு நிறைவுற்ற பொழுது, முற்பிறவியிலேயே சரியை, கிரியை, யோகம், ஞானம் முடிக்கப் பெற்ற சாமுசித்தராதலின், சிவபெருமானே உள்ளவாறுணரும் மெய்யுணர்வு கைவரப்பெற்றவராய் விளங்கியருளினர்.

அப்பொழுது, சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலையிற் காவல்பூண்ட திருநந்திதேவர் மரபில் சனற்குமார மாமுனிவருடைய மெய்யறிவுப் புதல்வராகிய சத்தியஞான தெரிசனிகளிடம் அருள் விளக்கம் பெற்ற பரஞ்சோதி மாமுனிவர் என்பார், பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்தியமாமுனிவரைக் காணும் பொருட்டுப் பொதியமலை நோக்கி வெளிவழியே (ஆகாயமார்க்கம்) செல்லும்பொழுது, திருவெண்ணெய்நல்லூரில் அருளொளிப் பிழம்பாய் விளங்கின மெய்கண்ட தேவரைப் பார்த்து, நிலத்திறங்கி, அவருக்குச் சிவஞானபோதத்தைக் கொடுத்தருளி, 'இதனைத் தமிழுலகம் உணர்ந்து உய்யும் பொருட்டு ஏது திருட்டாந்தங்களினால் விளங்க உரைக்க,' என்று

திருவாய் மலர்ந்தருளித், தம் குரவராகிய சத்தியஞானதரிசனி கள்பால் தாம் கேட்டவாறே அவருக்குச் சைவசித்தாந்த மெய்ப் பொருளே உள்ளவாறுணர்த்தி, மெய்கண்டார்* என்ற திருப்பெய ரையுஞ் சூட்டி, அவரைவிட்டு நீங்கி மீட்டும் வெளிவழியே சென்றனர்.

பின்பு, மெய்கண்டதேவர் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள பொல்லாப்பிள்ளையார் திருமுன்பு நிட்டைகூடிச் சிவஞான போதப் பொருளைத் தமதுள்ளத்தில் உள்ளவாறு நினைந் துணர்ந்து, இத்தமிழுலகம் உய்யுமாறு சிவஞானபோதத்தை ஏது திருட்டாந்தங்களினுல் உரைத்தருளி மெய்யறிவு விளங்கப் பெற்ற ஞாயிறுப் விளங்கித், தம்மையடைந்த தகுதிவாய்ந்த மாணவர்கள் பலர்க்கும் சிவஞான நூற்பொருளைத் தெரித்து விளக்கி, அறிவுறுத்திக்கொண் டிருப்பாராயினர்.

இவர் இங்ஙனம் மாணவர்கட்குச் சிவஞான நூற் பொருளை அறிவுறுத்திக்கொண்டிருந்ததைத் திருத்துறையூரிலிருந்த குல குருவாகிய அருணந்தி சிவாசாரியர் கேள்வியுற்றுத், தம் மாண வர் பலரோடும் திருவெண்ணெய்நல்லூருக்குப் புறப்பட்டு வந் தார். அவர் அங்குவந்து சேர்ந்தபொழுது, அவருடைய மாண வர்களாகிய சைவ நன்மக்கள் பலர் அவரை எதிர்கொண்டு வணங்கி முகமன் கூறினர்கள். ஆனல், அவர்தம் மாணவருள் ஒருவராகிய மெய்கண்டதேவர் மட்டும் அவர்களுடன் வரவில்லை; அவர் திருவெண்ணெய்நல்லூருக்குள் வந்தபின்னுவது அவரை வந்து பார்க்கவுமில்லை. அருணந்தி சிவாசாரியர் தம்மிடம் மெய் கண்ட தேவர் வராததறிந்து, தாமே அவரைப் பார்த்துவர அவ ரிருக்கை சென்றனர். சென்றகாலத்து மெய்கண்டதேவர் தம் மாணவர்கட்கு ஆணவமல உண்மையைப்பற்றிக் கூறி விளக்கிக் கொண்டிருந்தனரே யன்றி, அருணந்திசிவாசாரியரைக் கண்டு ஒன்றும் பேசவில்லை.

தாம் அவரிருப்பிடம் சென்றும் தம்மிடம் மெய்கண்ட தேவர் ஒன்றும் பேசாததைக் கண்டு உள்ளச் செருக்கோடு அரு ணந்தி "ஆணவமல வடிவம் எவ்வாறிருக்கும் ?" என்று வினு வினர். அவ்வினுவிற்கு விடையாக, மெய்கண்டதேவர் தம் முன் நின்றுகொண்டிருந்த அருணந்தி சிவாசாரியரையே தமது விரலாற் சுட்டிக் காண்பித்தார். காட்டவும், சிவாசாரியர் தமது

* 'மெய்கண்டார்' என்ற காரணப்பெயர், "மலத்தினீங்கிய மெய்யறி வின் பயனுக உலகத்தை நிலேயில்லாத பொய்ப்பொருளெனக் கண்டு கழித்துச், சிவமே மெய்ப்பொருளெனத் தேறித் துணிந்து உணர்ந்தவர்" என்று பொருள்படும்.

அறியாமை நீங்கி மெய்யறிவு விளங்கப்பெற்று, மெய்கண்ட தேவர்தந் திருவடிகளில் விழுந்து வணங்கித் தமக்கு மெய்ப் பொருளே அறிவுறுத்த வேண்டுமென்று குறையிரந்தார்.

அவ்வாறு குறையிரந்த அருணந்தி சிவாசாரியரது முதிர்ந்த அறிவுநிலையைக் கண்ட மெய்கண்டதேவர், அவருக்கு மெய்ப் பொருளே உள்ளவாறுணர்த்தித் தம் மாணவர் நாற்பத்தொன் பதின்மருள் முதன்மையான மாணவராயிருக்கும் பெருமையையு நல்கினர்.

அருணந்தி சிவாசாரியர் தாம் தமது ஆசிரியர்பாற் கேட்ட மெய்ப்பொருளே விரித்து விளக்கி முதனூலாகிய சிவஞான போதத்திற்கு வழிநூலாகச் சிவஞான சித்தியார் என்ற நூலைச் செய்தருளினர். இன்னும் அவர் இருபா விருபஃது என்ற நூலை யும் செய்தருளினர்.

மெய்கண்ட தேவர் சிலகாலம் நிட்டைகூடியிருந்து ஐப் பசித் திங்களில் சோதிநாளில் எங்கும் நிறைந்துள்ள பெருஞ் சுடர்ப் பிழம்பாகிய சிவபெருமானெடு இரண்டறக் கலந்து பேராப் பேரின்பவாழ்வுநிலையை யடைந்தனர்.*

மெய்கண்ட தேவருடைய திருவுருவம் நிறுவப்பெற்ற திருக்கோயில்கள் சிதம்பரத்திலும் திருவெண்ணெய் நல்லூரிலு முள்ளன. திருவெண்ணெய் நல்லூரிலுள்ள கோயில் மெய்கண் டார் சந்தானத்தை விளக்கவந்த சைவத்திருமடங்களி லொன் றாகிய திருவாவடுதுறை மடத்தார் மேற்பார்வையில் இருந்து வருகிறது.

மெய்கண்டதேவர் வரலாறு முற்றிற்று

---

* மெய்கண்டான் யாண்டு இற்றைக்கு 729 ஆகின்றது.

# சிவஞானயோகிகள் வரலாறு

இவ்வுலகில் இந்தியநாடானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஏனைய நாடுகளைக்காட்டினும் அறிவிற் சிறந்து விளங்கியதென்பதைப் பண்டைய தமிழ் இலக்கண இலக்கிய நூல்களால் நாம் நன்கு அறிகின்றோம். இவ்விந்திய நாட்டின் வடக்கெல்லையில் உலகிலுள்ள மலைகள் எல்லாவற்றினுஞ் சிறந்த இமயமலை உளது. அம்மலையின் முடிகளில் ஒன்றாக உலகமுழுவதையும் ஆளும் சீகண்ட பரமசிவன் சிவகணங்களோடு வீற்றிருந்தருளுமை திருக்கைலாயமலை விளங்குகின்றது. இங்ஙனஞ் சிறந்த இந்தியநாட்டின் தெற்கு எல்லையிலுள்ள தென்பாண்டி நாட்டிலே சீர்தங்கு செந்தமிழ்மொழியைச் சிறந்து விளங்கச்செய்த அகத்திய முனிவரென்னும் குறுமுனிவர் வீற்றிருந்தருளும் பெருமைவாய்ந்த பொதியமலைச் சாரலின் பாங்கிலுள்ள பாவநாசத் திருப்பதிக்கு அணித்தாக விக்கிரமசிங்கபுரமென்ற சிற்றூர் ஒன்று உள்ளது. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்பு, அவ்வூரில் ஏழுதலைமுறை வரையும் அருட்புலமை நிரம்புமாறு அகத்திய முனிவர்பால் வரம்பெற்ற சைவவேளாளர் குலத்திலே, சிறந்த கல்வியறிவும், சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பும் மிக்குடையவராயுள்ள ஆனந்தக் கூத்தரென்பார் தம் கற்புடைய மனைவி மயிலம்மையாரோடு இல்வாழ்க்கை நடத்தி வருவாராயினர். அவருக்குச் சிவபெருமான் திருவருளாலும் அகத்திய முனிவர் வரத்தாலும், தென்றமிழ்நாடு செய்த தவப் பயனாக அவர்தம் மனைவியார் திருவயிற்றில் சைவசமயந் தழைத்தோங்கும்படி நற்புதல்வர் ஒருவர் தோன்றினர்.

ஆனந்தக்கூத்தர் பேருவகையுற்று, அவ்வரும்பெறற் குழந்தைக்குச் சிவாகம முறைப்படி பிறப்புக்குறிப்பு எழுதுதல் முதலிய சடங்குகளைச் செய்து முக்களாலிங்கர் என்று பெயரிட்டு அன்புடன் பேணி வளர்த்து வந்தார்.

முக்களாலிங்கருக்கு ஐந்தாண்டு நிரம்பவும், அவர் தந்தையார் அவருக்கு நற்கல்வி பயிற்றுவதற்காக அவரைப் பள்ளிக்கு வைத்தார். முக்களாலிங்கர் நாடோறும் பள்ளிக்குப் போய்க் கல்விபயின்று வந்தார். ஒருநாள் அவர் பள்ளியிலிருந்து தமது மனைக்குத் திரும்பி வரும்பொழுது காவியுடையணிந்த திருவாவடுதுறை மடத்துத் தம்பிரான்கள் சிலரைக் கண்டு, பெருமகிழ்வுற்று, அவர்களிடம் சென்று வணங்கி 'அடிகளே! எங்கள் மனைக்கு எழுந்தருளிவந்து திருவமுது செய்தருளவேண்டும்' என்று அவர்களை இரந்து வேண்டினர்.



சிவஞான முனிவர்

[கா. பு.

தம்பிரான்களும் அக் குழந்தையாரின் அரும் பெருங் குணத்தைத வியந்து பாராட்டி, அவர் வேண்டுகோளுக் கிசைந்து, அவர் வழிகாட்ட அவர்தம் மனைக்குச் சென்றனர்.

முக்களாலிங்கர் தமது மனையில் தம்பிரான்களை ஓர் இருக் கையில் இருக்கச் செய்தார். அப்பொழுது அவர் தந்தையார் வெளியே சென்றிருந்தாராகலின், அவர் தம் அருமைத் தாயா ரிடம் போய்த் தாம் அழைத்து வந்திருக்கும் தம்பிரான்களுக்கு உணவளிக்க வேண்டுமென்று கூறினர். அதுகேட்ட தாயார், தம் புதல்வர் செய்கையை வியந்து, தம்பிரான்களை வரவேற்று வணங்கி, அவர்களைத் தமது மனையில் அமுதுசெய்ய வேண்டு மென்று வேண்டிக்கொண்டனர். பின்பு அவ்வம்மையார் இன் னடிசில் அறுசுவைக் கறிகளோடும் சமைத்துத் தம்பிரான்களைத் திருவமுது செய்வித்தனர். திருவமுது செய்து மகிழ்ந்து வீற் றிருக்கும்பொழுது தம்பிரான்களுள் ஒருவர் அவ்வம்மையாரைப் பாராட்டி,

> "அருந்ததியென் அம்மை அடியவர்கட் கென்றுந்
> திருந்த அமுதளிக்குஞ் செல்வி—பொருந்துவே
> ளானந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
> மானந்தவாத மயில்"

என்னுந் திருப்பாடலைப் பாடினர்.

பின்பு, தம்பிரான்கள் அவ்வம்மையாரையும் முக்களாலிங் கரையும் வாழ்த்தி விடைபெற்றுச் சென்று, அவ்வூரிலுள்ள திருமடமொன்றில் தங்கியிருந்தார்கள்.

சிறிதுநேரம் சென்றபின், வெளியே போயிருந்த ஆனந்தக் கூத்தர் திரும்பிவந்து, தம் மனைவியாரால் அங்கு நிகழ்ந்த செய் தியையறிந்து, தம் அரும்புதல்வரை மார்போடு தழுவி முத்த மிட்டு, அவரது நற்பண்பைப் புகழ்ந்து பாராட்டினர்.

பின்னர், அவர் தம் புதல்வரோடு தம்பிரான்கள் தங்கி யிருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களை வணங்கினர்.

அப்பொழுது முக்களாலிங்கர், தம்பிரான்களுடன் திரு மடத்திற்குச் சென்று, அங்கு மெய்யறிவு நூல்களைக் கற்றுத் துறவுநிலையை யடையவேண்டுமென்ற தமது உட்கருத்தைத் தந்தையார்க்குத் தெரிவித்தார். அதுகேட்ட தந்தையார் தம் தவப்புதல்வரை விட்டுப் பிரிந்திருப்பதற்கு உள்ளம் பொறுதல வராய் வருந்திப் பின் மகனார் நற்கருத்துக்கு இடையூறாய்த் தாம் நிற்பது சரியன்றென்று ஒருவாறு தேறி, மகனாரைத் தம்பிரான் களிடம் ஒப்புவித்துத் தமதில்லத்திற்குச் சென்றனர்.

பின்பு, தாயாரும் அதனைக்கேட்டு முதற்கண் தம் மகனைப் பிரிந்திருக்க வருந்தினரேனும், பின் தங்கணவனார் கருத்துக்கு இணங்கி மனந்தேறினர்.

தம்பிரான்கள் முக்களாலிங்கரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, அக்காலத்துத் திருவாவடுதுறை மடத்துச் சின்னப் பட்டத்துத் தம்பிரான் எழுந்தருளியிருந்த சேரநாட்டெல்லையிலுள்ள சுசீந்திரத்திலிருக்கும் ஈசானமடத்தைச் சேர்ந்தார்கள். அம்மடத்தில் திருக்கோயில்கொண்டு விளங்கும் நமச்சிவாய மூர்த்தியின் திருவுருவத்தைத் தம்பிரான்கள் முக்களாலிங்கருடன் வணங்கியபின், சின்னப்பட்டத்து எழுந்தருளியிருந்த வேலப்பதேசிகரைக் கண்டு வணங்கினார்கள். அவ் வாசிரியர் தம்பிரான்களுடன் வந்த முக்களாலிங்கரை யாரென்று வினவ, அவர்கள் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

வேலப்பதேசிகர் அவருடைய முதிர்ந்த அறிவை வியந்து பாராட்டி, அவருக்குச் சமயதீக்கை, சிறப்புத்தீக்கைகளைச் செய்து, காவியுடைதந்து துறவுநெறியை யடைவித்து மெய்யறிவு நூல்களை ஐயந்திரிபற உணர்த்தி யருளினர்.

பின்பு, சிலகாலம் முக்களாலிங்கர் வடமொழித் தென்மொழிச் சைவசித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்து, மெய்யறிவும் குன்றாத ஒழுக்கமும் முடையவராய் விளங்கினர். ஆசிரியர் வேலப்பதேசிகர் அவருடைய மெய்யறிவு நிலையையும் விழுமிய ஒழுக்கத்தையுங் கண்டு, நிருவாண தீக்கைசெய்து 'சிவஞானம்' எனத் தீக்கைப் பெயர் வழங்கி, மெய்கண்ட நூல்களையும் பண்டாரநூல்களையும் அறிவுறுத்தி வீடடைதற்கு வழிகாட்டியருளினர்.

வேலப்பதேசிகர் சிவஞானத் தம்பிரானுக்குத் தீக்கைகள் செய்தருளிய ஞானாசிரியரென்பது, சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் தாம் பாடிய காஞ்சிப்புராணக் கடவுள்வாழ்த்துச் செய்யுட்களில், வேலப்பதேசிகர் துதியாகப் பாடிய,

"எவ்வெவர்கோட் படுபொருளு மஞ்செழுத்தின்
அடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவபோகத் தழுத்தி னாயேன்
செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்"

என்னுஞ் செய்யுட்கருத்தால் விளங்கும்.

சிவஞானத் தம்பிரான் வடமொழிக் கலைகளையும் தென் மொழிக் கலைகளையும் கற்றுணர்ந்து இருமொழிகளிலும் பெரும் புலவராக விளங்கினர்.

சிலகாலஞ் சென்றபின், வேலப்பதேசிகர் திருவாவடு துறையிலுள்ள தம் ஞானசிரியரைப் பார்க்க விரும்பி, சிவ ஞானத் தம்பிரான் சுவாமிகளையும் ஏனைய தம்பிரான்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சுசீந்திரத்தை விட்டுப் புறப் பட்டனர். போகும் வழியில், பாண்டிநாட்டிலுள்ள பல திருப்பதிகளை வணங்கியபின், செப்பறையை யடைந்து, அவ் வூரில் திருக்கோயில்கொண் டருளியிருக்கும் அழகிய கூத்தப் பிரானையும், சிவகாமியம்மையையும் வணங்கி, அருகாமையி லுள்ள இராசவல்லிபுரத்தில் வீற்றிருந்தருளும் அகிலாண்டேசு வரியின்மீது சுவாமிகள் வேலப்பதேசிகர் ஆணையின்படி சைவசித்தாந்தக் கருத்துக்களடங்கிய பதிகமொன்றைப் பாடி அவ்வாசிரியர் முன்பே அரங்கேற்றினர்.

பின், வேலப்பதேசிகர் தம் மாணவரோடு கொங்கு நாட்டிலுள்ள பல தலங்களையும் வணங்கித் திருப்பேரூரை யடைந்து, அங்குக் கூத்தப்பிரானையும் சிவகாமியம்மையையும் வணங்கிக்கொண்டு தங்கியிருந்தனர். சில நாட்களில் வேலப்ப தேசிகர் அவ்வூரிலேயே சிவபிரானுடைய திருவடி நீழலை அடைந்தார்.

சிவஞானசுவாமிகள் தம் ஞானசிரியருக்குப் பத்துநாளும் செய்யவேண்டிய அறிவுச் சடங்குகளைச் செய்துமுடித்து, அவ ருக்கு வழிபாடியற்றத் தம்பிரான் ஒருவரை அங்கே வைத்து விட்டு, ஏனைய தம்பிரான்களோடும் திருவாவடுதுறையை யடைந்து, அங்கு மடத்தின் முதலாசிரியராகிய நமச்சிவாய அடிகளின் திருவுருவத்தை வழிபட்டபின், அக்காலத்து ஒன் பதாவது ஆசிரியராக வீற்றிருந்த வேலப்பதேசிகரைக் கண்டு வணங்கி அவர் திருவருள்பெற்று, சுசீந்திரத்திலிருந்து வரும் வழியில் திருப்பேரூரில் இரண்டாவது ஆசிரியராகிய வேலப்பதேசிகர் இறைவனடிநீழலை யடைந்த செய்தியை யும், பிறசெய்திகளையுந் தெரிவித்தார்.

அதுகேட்ட ஞானசிரியர் தம் தம்பிரான்கள் பல்லோ ருள்ளும் சிறந்த வேலப்பத் தம்பிரானுக்கு இரண்டாவது ஆசி ரியப்பட்டம் சூட்டியருளினர்.

சிலகாலம் சென்றபின் முதலாவது ஞானசிரியராகிய வேலப்பதேசிகர், இரண்டாவது ஞானசிரியராகிய பின்

வேலப்பதேசிகரையும், சிவஞானமுனிவர் முதலிய தம்பிரான்களையும் அழைத்துக்கொண்டு, திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டு, வழியிற் பல திருப்பதிகளையும் வணங்கி முடிவில் சுசீந்திரத்தை யடைந்தார்.

அங்கு அவர் இரண்டாவது ஆசிரியரை வைத்துவிட்டு ஏனைய தம்பிரான்களுடன், திருக்குற்றாலம் சென்று பணிந்து, சங்கரநயினார் கோவிலைச் சேர்ந்தனர். அவ்வூரிற் சிலநாள் தங்கியிருக்கும்பொழுது அவர் சிவபிரான் திருவடி நீழலை யடைந்தார்.

இந்தச் செய்தியைச் சிவஞானமுனிவர் சுசீந்திரத்திலிருந்த இரண்டாவது ஞானாசிரியராகிய பின் வேலப்பதேசிகருக்குத் தெரிவிக்க, அவர் சில தம்பிரான்களுடன் அங்கு வந்து ஞானாசிரியருக்குச் செய்யவேண்டிய அறிவுச்சடங்குகளை யெல்லாம் செய்து முடித்தபின், சிவஞானமுனிவர் முதலியவர்களுடன் திருவாவடுதுறையை அடைந்து முதலாவது ஞானாசிரியராக எழுந்தருளியிருந்தார். பின்னர் அப்பொழுது அங்கிருந்த தம்பிரான்களிற் சிறந்தவராகிய நிருச்சிற்றம்பலத் தம்பிராணைத் தமக்கடுத்த இரண்டாம் ஆசிரியராகப் பட்டஞ் சூட்டியருளினர்.

சிவஞானமுனிவர் திருவாவடுதுறையிலிருந்த காலத்தில் **பஞ்சாக்கர தேசிகமாலை** என்ற சமயநூலை இயற்றியருளினர்; நண்பர்கள் சிலரும், மாணாக்கர்களும் அவரை வேண்டிக் கொண்டபடி நெல்லை சங்கர நமச்சிவாயப்புலவர் இயற்றிய விருத்தியுரையை ஆராய்ந்து பார்த்து, அதில் தாம் கண்ட பிழைகளை நீக்கித் திருத்தஞ் செய்தருளினர்; திருவாரூர் **வைத்தியநாததேசிகர்** இயற்றிய **இலக்கணவிளக்கம்** என்ற இலக்கண நூலை ஆராய்ந்து பார்த்து, அதிற் காணப்பட்ட பிழைகளைக் குறிப்பிட்டு **இலக்கணவிளக்கச்சூறாவளி** என்ற ஓரிலக்கண நூல் செய்தருளினர். திருவாவடுதுறைத் தம்பிரான் ஒருவர் இயற்றிய **மரபட்டவணை** என்ற சைவசித்தாந்த நூலிற் கண்ட கருத்துக்களை மறுத்துத் தருமபுர ஆதினத்தைச் சேர்ந்த தம்பிரான் ஒருவர் **சித்தாந்த மரபுகண்டனம்** என்ற பெயரால் எழுதிய மறுப்பு நூலுக்கு, நமது தம்பிரான்சுவாமி அம்மறுப்பு நூலிற்கண்ட கருத்துக்களை மறுத்து, மரபட்டவணை நூலின் உண்மைகளை ஆதரித்து விளக்கி, **'சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம்'** என்னும் நூலை இயற்றியருளினர். பின் அவர் மெய்கண்டார் செய்த சிவஞானபோத முதனூலுக்கு ஒரு சிற்றுரையும், அருணந்தி சிவாசாரியர் செய்த சிவ

ஞானசித்தியார் சுபக்கம் என்ற வழிநூலுக்குப் பொழிப்புரையும் செய்தருளினர்.

இங்ஙனம் அருட்பணி யாற்றியபின், அவர் ஞானசிரியர் வேலப்பதேசிகரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தம் மாணாக்கர்கள் சூழத் திருத்துருத்தி, மாயூரம் என்னும் திருப்பதிகளுக்குச் சென்று, அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபிராணியும் இறைவியையும் வணங்கினர். பின் அவர் திருத்தில்லைக்குப்போய், அங்கே கூத்தப் பிராணியும் சிவகாமி யம்மையையும் வழிபட்டுக்கொண்டு சிலநாள் வதிந்திருந்தனர். அந்நாட்களில் அவர் கொற்றவன்குடிக்குப் போய் அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் உமாபதி சிவத்தையும், அருணமச்சிவாயதேசிகரையும் வணங்கிக் கொண்டு, திருக்களாஞ்சேரி சென்று அங்குத் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் மறைஞான சம்பந்தரை வணங்கியபின் திருத்தில்லைக்கு மீண்டருளினர். பின்பு அவர் திருத்தில்லையில் கூத்தப்பிராணை வழிபட்டு விடைபெற்றுக்கொண்டு, திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று சிலகாலம் தங்கி யிருந்தனர்.

அங்கு ஒருநாள் கோயிலின்முன் கூடியிருந்த புலவர் பேரவையொன்றில், கல்விநலமும் செல்வநலமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒருவர் நூறுபொன்கட்டிய ஒருபொன் முடிப்பை அவையார் முன்பு வைத்து, "கரையேற விட்ட முதல்வா உன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ?" என்ற அடியை நான்காவது அடியாகக்கொண்டு ஒரு செய்யுளியற்றித் தருபவர்க்கு அப்பொன்முடிப்பைக் கொடுப்பதாக உரைத்தனர். அன்று மாலைவரையும் அவ்வவையிலிருந்த புலவர்கள் எவரும் அச்செய்யுளைப் பாடிமுடிக்கவில்லை. இதனை யறிந்த ஓர் ஏழை அந்தணன், அப்பொழுது அவ்வூரிலிருந்த சிவஞான முனிவரிடம்போய் அச்செய்யுளைப் பாடித்தரும்படி குறையிரந்தான். அவர் அச்செய்யுளை,

"வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வுண்டனைவல் வினைமென் முலும்
உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கி லென்னும்
நரையேற விட்டமுத ஞளவனுக் கொண்டுநறும் புனிசை மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ"

எனப் பாடி முடித்து, ஓர் ஏட்டில் எழுதி அவன் கையிற் கொடுத்தார். அவ்வேழை அந்தணன் ஏட்டினை வாங்கிக் கொண்டு அவையாரிடம் போய் அச்செய்யுளை ஓதிப் பொன் முடிப்பைப் பெற்றுத் தனது வறுமை தீர்ந்தான்.

பின் அவர், திருப்பாதிப்புலியூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் தோன்றுத்துணை ஈசரையும் தோகை யம்பிகை அம்மையாரையும் வழிபட்டுக்கொண்டு சிலநாள் தங்கியிருந்தனர்.

சிலநாட்கழிந்தபின் அவர், திருப்பாதிரிப்புலியூரில் இறை வனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்திற்குப் போய் அங்கு ஏகாம்பரநாதரையும், காமாட்சியம்மையாரை யும் வழிபட்டுக்கொண்டு சிலநாள் வதிந்திருந்தனர். அங்கு அவர் இருந்தபொழுது, திருமால் அடியார்களிற் சிலர் அவ ரிடம் வந்து 'எங்கள் கம்பராமாயணம் ஒன்றுமே தமிழில் சிறந்து விளங்கும் நூல்' என்று கூறினர். அடிகள் அவர்கள் எண்ணிய தப்புக்கருத்தை அவர்கள் மனதிலிருந்து நீக்க வேண்டிக் கம்பராமாயணத்தில் "நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்" என்ற காப்புச்செய்யுளே முழு வதும் குற்றம் எனத் தெரிக்கும் சங்கைகளை அவர்கட்குக் கூறி னர். அச்சங்கைகளைக் கேட்ட திருமால் அடியார்கள் அவற் றிற்கு விடைகூறும் ஆற்றலில்லாதவராகி, அடிகளிடம் தங் கள் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்று தாழ் வுடன் வேண்டினர். அப்பணிவுரையைக் கேட்ட அடிகள் தாமே அச்சங்கைகளுக்கு விடைகூறி, அவர்களை மகிழ்வித் தனர். அச்சங்கைகளும் விடைகளும் சேர்ந்த நூல் இப் பொழுது "கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணுமலை ஆதீனப்பண்டார சந்நிதிகளில் ஒருவர் காஞ்சிபுரத்திற்கு வந்து, தம் மாணவர் ஒருவரை அடிகளி டம் அனுப்பி, தமது மடத்து ஆசிரியராகிய ஞானப்பிரகாச முனிவர் சிவசமவாதக் கொள்கையைத் தழுவி எழுதிய சிவ ஞானசித்தியார் உரையானது, அடிகள் எழுதிய சிவஞான சித்தியார் உரையைப் பார்க்கினுஞ் சிறந்ததாயுள்ளது என்று சுட்டிக் காட்டவேண்டுமென்ற உட்கருத்தைக்கொண்டு, சிவ ஞான சித்தியார் சுபக்கத்தில், "என்னையிப் பவத்திற் சேரா வகை எடுத்து" என்ற முன்னூற் சிறப்புச் செய்யுளில் வருகிற 'எடுத்து' என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்ன ? என்று வினவுமாறு செய்தனர். அடிகள் திருவண்ணுமலை ஆதீனப் பண்டார சந்நிதியின் உட்கருத்தை யுணர்ந்து, 'எடுத்து என்னுஞ் சொல்லுக்குச் சிவசமவாத வுரைமறுப்பு' என்ற நூலை இயற்றினர். இந் நூலை ஓதிய பண்டார சந்நிதி அதற்கு ஒரு மறுப்புரை எழுதி வெளிப்படுத்தினர். அடிகள் அம் மறுப் புரையை யறிந்து அதனை மறுத்து "எடுத்து என்னுஞ்

சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்" என்ற நூலை எழுதியது மன்றி, சிவஞானசித்தியார்க்கு ஞானப்பிரகாச முனிவர் எழுதிய உரை முழுவதுமே போலியுரையென விளக்கி, "சிவசமவாத வுரை மறுப்பு" என்ற கண்டன நூலையும் எழுதி வெளிப்படுத்தினர்.

அடிகள் காஞ்சிபுரத்திலிருந்த காலத்தில் சைவசித்தாந்த ஆசிரியராகிய சர்வாத்ம சம்பு சிவாசாரியார் வடமொழியில் எழுதிய "சித்தாந்தப் பிரகாசிகை" என்ற நூலையும், கஞ்சனூர் அரதத்த சிவாசாரியார் வைணவமதக் கண்டனஞ்செய்து, சிவ பெருமானே பரம்பொருள் என்று இருபத்திரண்டேதுக்களால் நிலைநாட்டி, வடமொழியில் எழுதியருளிய 'சுலோக பஞ்சகம்' என்ற நூலையும், வடமொழியிலுள்ள தர்க்க சங்கிரக அன்னம் பட்டீயங்களையும் தமிழிலே மொழிபெயர்த்து வெளியிட்டனர். மேலும் அடிகள், சைவப் பெரியாராகிய அப்பய்ய தீக்கிதர் வட மொழியில் பாடிய 'சிவதத்துவ விவேகம்' என்ற நூலையும் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுளாகப் பாடியருளினர். இன்னும் அடிகள் தமிழ்மொழி இலக்கண முதனூலாகிய தொல்காப்பியத் திற்கு உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்ற மூவர்களும் செய்த உரைகளிற் கண்ட சில ஐயப்பாடுகளையும் வழுக்களையும் நீக்கித் தெளிவிக்கும் பொருட்டு அத் தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற் கும் சூத்திரவிருத்தி எனப் பெயர்பெற்ற ஓர் அரிய விரிவுரையை யும் செய்தருளினர்.

பின்னர் அடிகள், காஞ்சிபுரத்திலிருந்து திருவொற்றி யூருக்குப்போய், அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் மாணிக்கத் தியாகரையும் வடிவுடைநாயகி அம்மை யாரையும் வணங்கி வழிபட்டுக்கொண்டிருந்தார். அவ் வூரில் அக்காலத்திலிருந்த பெருஞ்செல்வர் மணலி சின்னையா முதலி யார் என்பார் அடிகளை வணங்கித் தமதூராகிய திருவொற்றி யூரிலேயே சிலகாலந் தங்கியிருக்கும்படி வேண்டினர்; அடிக ளும் அதற்கிசைந்தனர். சிவஞானபோதத்துக்கு விரிவுரை யொன்று இயற்றவேண்டுமென்று நெடுநாளாக எண்ணியிருந்த அடிகள், அவ் வெண்ணம் நன்கு நிறைவேறும்பொருட்டுச் சிவாகமங்களை ஓதியறியவேண்டுமென்னுந் தமது கருத்தைச் சின்னையா முதலியாருக்கு வெளியிட்டனர். உடனே சின்னையா முதலியார் சிவாகமங்களை நன்கு ஓதிய சைவ அந்தணர்களைச் சில ஊர்களிலிருந்து வரவழைத்து, அவர்களை அடிகளோ டிருந்து ஓதும்படி செய்வித்தார். அடிகள் சிவாகமங்களை அவர் களோடு ஓதி நன்கு கற்று ஆகமநூற் பொருள்களை முன்னெடு பின் மலைவின்றித் தெளிந்து உணர்ந்தனர். அவ் வந்தணர்கள்

அடிகளது அறிவின் பேராற்றலைப் பெரிதும் வியந்து பாராட்டிச் சென்றனர்.

சிலகாலம் சென்றபின் அடிகள், சின்னையா முதலியாரிடம் விடை பெற்றுக்கொண்டு, திருவொற்றியூரைவிட்டுக் காஞ்சிநகர் சென்றனர். அங்கு அவர் ஏகாம்பரநாதரையும் காமாட்சி யம்மையாரையும் வணங்கிக் கொண்டு சிலகாலம் வதிந்திருந் தனர். அங்கு வந்திருக்குங்காலத்தில், அவர் தாம் நெடுங்கால மாக எழுத வேண்டுமென்று எண்ணியிருந்த சிவஞானமாபாடி யத்தை எழுதிமுடித்தனர். இந் நூலானது, இதுவரை தமிழ் மொழியிலும் வடமொழியிலும் எழுதப்பட்டுள்ள மாபாடியங்க ளெல்லாவற்றிலும் சிறந்ததொரு நூலாகும். ஆதலின் அடிகள் "மாபாடியச் சிவஞான யோகிகள்" என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்படுவாராயினர்.

பின், அவர் தாமியற்றிய சிவஞானபாடியச் சுவடியை எடுத்துக்கொண்டு காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருவா வடுதுறைக்குச் சென்றனர். அந்நாளில், சுசீந்திரமடத்திலிருந்த இரண்டாவது ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகரும் திருவாவடுதுறைக்கு வந்திருந்தனர். அடிகள் முதலாவது ஞானசிரியரை வணங்கி அவருடைய திருவடிகளில் தாமியற்றிய சிவஞானமாபாடியச் சுவடியை வைத்தனர். ஞானசிரியர் திருவுளமகிழ்ந்து, அடிகளுக்குப் பெருமகிழ்வுடன் நல்லுரைவு கூறி வியந்து வாழ்த்தினர். சிலநாட் சென்றபின், ஞானசிரியர் ஆணைப்படி மடத்தில் அவர்முன்பு ஒரு பேரவை கூடியது.

அப் பேரவையில் திருச்சிற்றம்பலதேசிகர் முதலியஅடியார் களும், சைவசமயப் புலவர்கள் பலரும் குழுமியிருந்தார்கள். அவர்கள் முன்பு அடிகள் தாமியற்றிய சிவஞானமாபாடியம் என்ற நூலைத் தொடக்கத்திலிருந்து ஓதி அதிலெழுதப்பட்ட அரிய நுண்பொருள்களை யெல்லாம் விளக்கிச் சில நாட்களில் முடித்தனர். ஞானசிரியர் அடிகள் செய்த சிவஞானமாபாடிய விளக்கவிரிவுரையைக் கேட்டு மகிழ்ந்து "இம் மாபாடியந்தான் நம் திருச்சிற்றம்பலவர்க்கே முற்றிலும் உரிமை யாகற்பாலது" என்று கூறி, அடிகளை வாழ்த்தினர். பிற அடியார்களும் புலவர் களும் சிவஞானமாபாடிய விரிவுரையைக் கேட்டுத் தாம் செவி யினலடையத்தகும் பெரும்பயன் பெற்றதாகக் கூறிப் பெரு மகிழ் வடைந்தார்கள்.

சில நாட்கள் சென்றபின் அடிகள், ஞானசிரியரிடம் விடைபெற்றுத் திருவாவடுதுறையை விட்டுப் புறப்பட்டுத் தம்முடைய மாணவர்களுடன் காஞ்சி நகரத்திற்குச் சென்றனர்.

அங்கு ஏகாம்பரநாதரையும், காமாட்சியம்மையாரையும் வழி பட்டுக்கொண்டும், தம்முடைய மாணாக்கர்களுக்குச் சைவசித் தாந்த நூல்களை அறிவுறுத்திக்கொண்டும், அவர் சில காலம் சிவத்தொண்டாற்றிக்கொண்டு வந்தனர்.

அக்காலத்தில் திருவாவடுதுறையிலிருந்து, முதலாவது ஆசிரியர் பின்வேலப்பதேசிகர், தென்னாட்டுத் திருப்பதிகளின் வழிபாட்டிற்காகத் திருப்பெருந்துறைக்குச் சென்றிருந்த பொழுது அங்கே இறைவன் திருவடிநீழலை யடைந்தார். அப் பொழுது அவருடனிருந்த இரண்டாவது ஆசிரியர் திருச்சிற்றம் பலதேசிகர் அவருக்குச் செய்யவேண்டிய சைவச் சடங்குகளை யெல்லாம் செய்து முடித்தபின், திருவாவடுதுறைக்கு வந்து, அம்பலவாணத் தம்பிரானுக்குத் தமக்கடுத்த இரண்டாவது ஆசிரியர் பட்டமளித்தருளினர்.

அவ்விழாவினைக் காணச் சிவஞானமுனிவர் காஞ்சியி லிருந்து திருவாவடுதுறைக்கு வந்து ஆசிரியர்க ளிருவரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு மீளவும் காஞ்சியை அடைந் தனர்.

அடிகள் காஞ்சிபுரத்திலிருந்தபொழுது மார்கழித் திரு வாதிரை விழா வந்தது. அவ்விழாத் தொடங்கி முடியும் வரை யும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவைப் பாக்கள் தவிர ஏனைய தேவாரம் முதலிய ஐந்து திருவருட்பாக்களும் காப்பிடப் பெற்றுத், தன் பொருட்டு (ஆன்மார்த்த) வழிபாட்டிலும், சிவன் திருக்கோயில் வழிபாட்டிலும் ஓதாதிருக்கப் படாதலையும், நாடோ றும் திருத்தொண்டர் பெயரை மந்திரமாக ஓதி வழிபடுவார்க்கு அவ் விழாநாட்கள் ஒரு தடையாயிருத்தலையும் அடிகள் அறிந்து, "திருத்தொண்டர் திருநாமதேசை" யென்ற பெயரால் ஒரு நூல் பாடியருளினர்.

திருவாவடுதுறையில் ஞானசிரியராகிய திருச்சிற்றம்பல தேசிகர்பால் மூவகைத்தீக்கையும் பெற்றுத் துறவுநிலையை யடைந்த கச்சியப்பத்தம்பிரானும், சுப்பிரமணியத் தம்பிரானும் சிவஞான அடிகளுடைய நுண்ணறிவுத்திறனைக் கேள்வி யுற்று, அவரிடம் இலக்கணநூல்களையும் சைவசித்தாந்த நூற் பொருளையும் கேட்க மிக்க அவாவுடையவர்களாய்க் காஞ்சி புரத்துக்கு வந்து, அடிகளை வணங்கித் தங்களுக்கு மெய்யறிவு நூற்பொருளை உணர்த்தும்படி குறையிரந்தனர். அவர்களது வேண்டுகோளைக் கேட்ட அடிகள், அவர்களுக்குப் பேரிலக்கண மாகிய தொல்காப்பியத்தையும், சைவசித்தாந்த நுண் பொருள்

களையும் கற்பித்துத் தாமியற்றிய சிவஞானபோத மாபாடியத் தையும் விளக்கிப் பாடஞ் சொல்லியருளினர்.

பின், அடிகள் தம்மாணாக்கர்களுடன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டுப் பல சிவப்பதிகளை வணங்கிக்கொண்டு, திருமுல்லை வாயிலை அடைந்து சிலநாள் அங்கு வதிந்திருந்தனர். அப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற மாசிலாமணிப் பெருமானை வணங்கி, அவர்மீது 'வடதிரு முல்லைவாயில் அந்தாதி' என்ற ஒரு நூலை அவர் பாடினர்.

பின்பு அவர் அருகிலுள்ள குளத்தூருக்குச் சென்று, அப் பதியில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சோமேசர்மீது, "குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி" என்ற நூலைப் பாடினதுமன்றி, திருக்குறளிலுள்ள நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில், ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள பத்துப்பாட்டுக்களில் ஒரு பாட்டைப் பின் இரண்டடிகளாக அமைத்து, முதலிரண்டடி களிலும் அக்குறட் கருத்து விளங்க ஒருவரலாறு குறித் தமைத்து, 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்ற ஒரு நூலையும் இயற்றியருளினர். மேலும், அக் குளத்தூர் அமுதாம்பிகை யம்மையார் மீது பிள்ளைத்தமிழொன்றும் பாடியருளினர்.

பின், அவர், இளங்காடு என்ற திருப்பதிக்குச் சென்று அவ்வூர் இறைவன்மீது, 'இளைப் பதிற்றுப்பத்தந்தாதி' என்ற நூல் ஒன்று பாடி அவ்விறைவனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, பல திருப்பதிகட்கும் சென்று வழிபாடு செய்து, காஞ்சிமாநகரம் வந்து சேர்ந்தார். அங்கு அடிகள் ஏகாம்பரநாதரைப் பணிந்து 'கம்பரந்தாதி' என்ற நூலையும் ஆனந்தக்களிப்பையும் பாடி முடித் தார். இன்னும் அவர் காஞ்சிபுராணம் முதலாவது காண்டத்தை யும், ஆனந்தருத்திரேசர்மீது 'கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்' என்ற நூலையும் இயற்றியருளினர்.

காஞ்சிப்புராணத்தை அடிகள் அங்ஙகரில் கூடிய ஒரு புலவர் பேரவையில் அரங்கேற்றிய காலத்தில், புலவர் பலர் "நீர் பாடிய காஞ்சிப்புராணத்தின் கடவுள் வாழ்த்தில், அத்தலக்கடவுளா கிய ஏகாம்பரநாதர் பேரில் முதற்கண் காப்புச் செய்யுள் பாடாது கூத்தப்பிரானைப் பாடியது என்னை?" என அடிகளை வினவினர். அடிகள் அவர்களுக்குத் தக்கவாறு அறிவுறுத்தவேண்டி, அங் ஙகர் ஒதுவார் சிலரை வரவழைத்து, அவர்களைக் காஞ்சிபுரத் தலத் தேவாரப் பதிகத்தைப் பாடும்படி பணித்தனர். ஒதுவார் முதற்கண் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லித் தேவாரப் பதிகத்தின் முதற்பாட்டைப் பாடத் தொடங்கினர். அதனை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அடிகளின் முதல் மாணவ

ராகிய கச்சியப்ப முனிவர் ஒதுவாரைத் தடுத்து நிறுத்திப் புலவர்களைப் பார்த்து, "இத்தலவோதுவார் இத்தலத்துக் கேற்பப் 'பிருதிவியம்பலம்' என்று சொல்லித் தேவாரம் தொடங்காமல் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்குகின்றார். அது நுங்கட்குச் சம்மதந்தானே?" என்று வினவினர். உடனே புலவர்கள் நாணமுற்றுத் தலைகுனிந்து அவையைவிட்டு நீங்கினர். அடிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் காஞ்சிப் புராணத்தின் இரண்டாவது காண்டத்தைப் பாடி அந்நூலை முற்றுவித்தார். நிற்க,

அப்பொழுது தொட்டிக்கலையில் பெருஞ் செல்வமுடைய வராய் வாழ்ந்துவந்த கேசவ முதலியார் என்பார் காஞ்சிபுரத்துக்கு வந்து அடிகளை வணங்கித் தமதூருக்கு வந்து சிலகாலந் தங்கியிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அடிகள் அதற்கிசைந்து தம்முடைய மாணாக்கர்களுடன் தொட்டிக்கலைக்குப் போயினர். ஆங்கு, கேசவ முதலியாரின் வேண்டுகோட்கிணங்கி, அப்பதியில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சிதம்பரேசுரர்மீது "கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி" என்ற ஒரு நூலையும், அவ்வூர்ப் பிள்ளையார்மீது "செங்கழுநீர்ப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ்" என்ற நூலையும் பாடினர். அப்பிள்ளைத்தமிழின் காலம் ஆங்கில ஆண்டு கி. பி. 1762-க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1684-என்பது அந்நூலிற்கண்ட:

"இலகுசக னீரெட்டு நூற்று நாற்பத்தேழி னிற்கரங் கும்பமிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதியை யோர்க்கவுல வுஞ்சுப்பிரம்
கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற் கலைசைப் பதிக்குள்வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க் கவிபாடி வாஞ்ஞருண
அலைமலிக டற்கடைந் தமுதூட்டு மாலென்ன வவனியிற் புலவர்செவியா
லார்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிக னரங்கேற்றி ஞஞ்தலால்
நலசுகுண மணிகுவ்ஹ யணிபுயன் வீரப்ப னல்குமக ராசயோக
னங்கள்கே சவபூப னநுசர்சேய் சுற்றமு நன்மைதரு வாழ்வுறுகவே"

என்ற பாயிரச் செய்யுளால் தெரியவருகிறது.

பின்பு, அவர் கலைசையிலிருந்து திருவாவடுதுறைக்குச் சென்று, அங்கே திருமடத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற சிவப்பிரகாசப் பிள்ளையாரையும், திருமாளிகைத் தேவரையும், ஆதீன முதலாசிரியராகிய நமச்சிவாய மூர்த்தியையும் வணங்கித் திருவருள் பெற்றுக்கொண்டு ஞானசிரியராகிய திருச்சிற்றம்பல தேசிகரையும் வணங்கி அடியார்களோடு கூடிக்குலாவி வாழ்ந்திருந்தனர்.

முடிவில் அவர், மெய்கண்டான்யாண்டு—562-க்குச் சரியான கி. பி. 1785-ல் (சாலிவாகன சகாப்தம் 1708) சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நாளிலே சிவபெருமானுடைய திருவடி நீழலில் இரண்டறக் கலந்து நிலையான பேரின்ப வாழ்வில் வீற்றிருப்பாராயினர்.

இதுகாறும் கூறியவாற்றால் சிவஞான முனிவர் தமிழ்நூல்களையும் வடமொழி நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரும் புலவராய் விளங்கித் தமது புலமையின் பயனுகத் தமிழ் நூல்கள் இயற்றி வெளியிட்டுப், பொதுவாக உலகிற்கும் சிறப்பாகத் தமிழுலகிற்கும் பேருதவி புரிந்தனர் என்பது நன்கு விளங்கும்.

ஒரு மொழியின் வளம், கருத்து வளத்தினாலும் அதனோடு சேர்ந்து பிரியாது அதற்குத் துணையாயிருக்கின்ற சொல்வளத்தினாலும் உள்ளதாகும். சொற்கள் ஒருமொழியில் திருத்தமாக அமையாவிட்டால், கருத்துக்களுந் திருத்தமாக விளங்கா. அடிகள் தமிழ்மொழியின் சொற்களை வளப்படுத்தும் பொருட்டுத் தாமே பல இலக்கிய நூல்களை இயற்றினதுமன்றி, முன்காலத்திலிருந்து தம்முடைய காலத்தில் வழங்கப்பட்டு வந்த இலக்கணவுரையாசிரியர்கள் உரைகளையும் படித்து, அவற்றில் காணப்படுவனவாகிய ஐயப்பாடுகளையும் வழுக்களையும் விளக்கித் திருத்தியருளினர். மேலும் வடமொழியிலிருந்து சில சமயநூல்களையும், தருக்கநூலையும் தமிழில் மொழிபெயர்த்தும் தமிழ் மொழியை வளப்படுத்தினர். சிறப்பாக அவர் சைவசமய விளக்கத்தின் பொருட்டுச் செய்த உதவி அவருக்குப் பின்னுல் இதுகாறும் வேறு எவராலும் செய்யப்படவில்லை. சைவசமய நூல்களைப் பற்றிச் சைவப்பெரியார் பலரால் எழுதி வழங்கப்பட்டு வந்த பல தத்துவக் கொள்கைகளையும், சமயக்கொள்கைகளையும் நன்கு தெருவி ஆராய்ந்து அவற்றிலுள்ள ஐயப்பாடுகளை எடுத்துக்காட்டியும் வழுக்களை நீக்கியும் அவர் சைவ உலகத்திற்குச் செய்த பேருதவி பெரிதும் போற்றற்பாலது. அவர் எழுதிய சிவஞானபோதச் சிற்றுரையும், சிவஞானசித்தியாரின் பொழிப்புரையும், சிவஞானமாபாடியமும், அவர் காலத்துள்ள சைவர்களும், பிற்காலத்துள்ள சைவர்களும் கற்றுச் சைவசமயத்தின் அரிய உண்மைகளை அறிந்துகொள்வதற்குப் பெரிதுந் துணையாயிருக்கின்றன.

அடிகள், சைவசமயத்தைப்பற்றியும் சைவசித்தாந்தத்தைப் பற்றியும் எழுதிய நூல்களின் துணையின்றி இக்காலத்திலுள்ள சைவநன்மக்கள் சைவசமய உண்மையை விளக்கமாக அறிந்து

கொள்ளவியலாது. அடிகள் செய்த நூல்கள் எல்லாவற்றினும் தலைசிறந்து விளங்குவது சிவஞானபாடியம். சைவ உலகிற்கு உதவியாகும் பொருட்டு அடிகள் செய்த சிவஞானமாபாடியம் சைவமக்களுடைய தவக்குறைவினால் நீண்ட காலமாகத் திருவாவடுதுறை மடத்தை விட்டு வெளிவாராதிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்புதான் சைவநன்மக்கள் சிலருடைய பெருமுயற்சியால் அந்நூல் வெளிவந்தது. அதனாலேதான், இப்பொழுது சைவசமய மாணவர்களெல்லோரும் அதனைப் படிக்கும் தவப்பயனுடையவர்களாயிருக்கின்றார்கள்.

வடமொழியில் மாபாடியம் இயற்றியருளிய பெரியார் நால்வர். அவர்கள், நீலகண்ட சிவாச்சாரியார், சங்கராச்சாரியார், இராமாநுசாச்சாரியார், மாத்துவாச்சாரியார். இந்த நான்கு பெரியார்களும் வேதவியாசமாமுனிவர் செய்தருளிய பிரமசூத்திரத்திற்குப் பாடியம் செய்திருக்கின்றனர். நீலகண்ட பாடியம் வேதாகமங்களைத் தழுவிச் சைவசமயத்தைச் சார்ந்த சிவாத்துவிதக் கொள்கையை விளக்குவது. சங்கராச்சாரியார், இராமாநுசாச்சாரியார், மாத்துவாச்சாரியார் ஆகிய இம்மூன்று பெரியார்களுமோ சிவாகமங்களைப் பொருட்படுத்தாது பிரமசூத்திரம், வேதோபநிடதங்கள், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களையும் மேற்கோள்களாகக் கொண்டே வெவ்வேறு காலத்தில் ஒன்றேடொன்று முரண்படும் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவைதம் ஆகிய தங்கள் தங்கள் கொள்கைகளை முறையே கூறியருளினர்.

ஆனால், நம் சிவஞான அடிகளோ மும்மலங்களினீங்கி மெய்யுணர்விற் றலைப்பட்ட மெய்கண்டதேவர், சைவசித்தாந்த சுத்தாத்துவைத உண்மையை நிலைநாட்டி ஞானபாத நூலாகச் செய்தருளிய சிவஞானபோத நூலிற் கூறப்பட்ட உண்மைகளை விளக்கித் தமது மெய்யுணர்வின் பயனாக மாபாடியம் செய்தருளினர். அச்சிவஞானபோதத்திற் கண்ட உண்மைகளை வற்புறுத்தி, அவர் வேதநூல்களிலிருந்தும் சிவாகம நூல்களிலிருந்தும் மெய்கண்ட தேவரின் முதன்மாணவராகிய அருணந்தி சிவாச்சாரியார் வழிநூலாக இயற்றிய சிவஞானசித்தியார், இருபாவிருபஃது நூல்களிலிருந்தும் உமாபதி சிவாச்சாரிய ரியற்றிய சிவப்பிரகாசம் முதலிய தமிழ்நூல்களிலிருந்தும், சைவப்பெரியார் பலர் வடமொழியிலியற்றியருளிய இரத்தினத்திரயம், சிவதத்துவவிவேகம், பௌட்கரவிருத்தி முதலிய நூல்களிலிருந்தும் திருக்குறள் நாலடியார் முதலிய தமிழ் அறநூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றனர். இன்னும்

அடிகள், தமது பாடியத்தில் சங்கராச்சாரியாரின் கேவலாத்து விதக்கொள்கையையும், இராமாநுசாச்சாரியாரின் விசிட்டாத்து விதக் கொள்கையையும், மாத்துவாச்சாரியாரின் துவைதக் கொள்கையையும், அவர்கள் தங்கள் தங்கள் பாடியங்களிற் கூறு கிறபடி எடுத்துக்கூறி, அவற்றை யெல்லாம் அளவைநூன்முறை மைப்படி உண்மைக்குப் பொருந்துவன வல்லவென்று மறுத்து, அம் மூன்று கொள்கைகளையும் அடிப்பகுதியில் தன்னகத்தே கொண்டு, அவற்றிற்கு வேறுய் மேம்பட்டு விளங்கும் சைவசித் தாந்த சுத்தாத்துவிதக் கொள்கையை நிலைநாட்டியுள்ளார். இன் னும் அடிகள் நமது இந்தியநாட்டுத் தத்துவக் கொள்கைகளாகிய பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை, சாங்கியம், யோகம், வைசே டியம், நியாயம் என்ற ஆறு கொள்கைகளையும் அவை ஒவ் வொன்றும் சைவசித்தாந்தத்தோடு முரணுமிடங்களில் மறுத் துத் தமது சித்தாந்தத்தை நிறுவிக் கூறியுள்ளார். அகச்சமயங் களுளொன்றுகிய சிவாத்துவித சைவக் கொள்கை பெரிதும் சைவசித்தாந்தத்திற்கு ஒத்திருப்பினும், சிறுபான்மை முரணு வதாயிருப்பதால், அதனையும் ஏனைய அகச்சமயக் கொள்கை களைப்போலவே தமது நூலில் மறுத்திருக்கின்றார்.

அடிகள் பிற்காலத்துள்ளவர்கள் தமிழ்மொழியில் சமய நூல்களின் உண்மையை விளக்கி உரைநடையில் எழுதுவதற் கும், இலக்கண இலக்கிய விளக்கக் கண்டனம் பிறர்க்கறி வுறுத்து முறையில் எழுதுவதற்கும், தமிழ்ச் செய்யுளியற்று வதற்கும், தமிழ் உரைநடை நூல்கள் எழுதுவதற்கும் ஒரு பெரிய எடுத்துக்காட்டாசிரியராக விளங்குகின்றார். அடிகள் எழுதிய இலக்கணநூலையும் தருக்கநூலையும் சிவஞானபோதச் சிற்றுரை பேருரை நூல்களையும் படியாது, இக்காலத்திலுள் ளார் சைவநற்புலவராய் விளங்குதல் இயலாது.

அடிகளிடத்திற் கல்விபயின்ற மாணவர் பலர். அவர்களிற் சிறந்த மாணவராகக் கூறப்படுபவர்கள் திருத்தணிகைக் கச்சி யப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர், காஞ்சிச் சிதம்பர முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், காஞ்சி முத்துக்குமாரசாமி தேசிகர், காஞ்சிச் சரவணபத்தர், இராமநாத புரம் சோமசுந்தரப் பிள்ளை, திருமுக்கூடல் சந்திரசேகர முதலி யார், கரவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார், கடம் பார் கோவில் கலியாணசுந்தர உபாத்தியாயர் முதலிய பன்னிருவ ராவர்.

அடிகள் பலதுறைகளிலும் பயின்று சிறந்த புலமை எய்தி இயற்றிய நூல்களின் தொகை இருபத்தொன்பது. அவையாவன :-

## இலக்கணம்

க. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி

உ. இலக்கண விளக்கச் சூறாவளி

ங. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்.

## இலக்கியம்

ச. காஞ்சிப்புராண முதற்காண்டம்

ஞ. சோமேசர் முதுமொழிவெண்பா

ண. குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி

எ. இளசைப் பதிற்றுப்பத் தந்தாதி

அ. கலிசைப் பதிற்றுப்பத் தந்தாதி

கூ. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்

கo. திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு

ஙக. கலிசைச் செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ்

ஙஉ. குளத்தூர் அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்

ஙங. இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி பதிகம்

ஙச. திருவேகம்பரந்தாதி

ஙஞ. திருமுல்லைவாயிலந்தாதி

ஙண. திருத்தொண்டர் திருநாமக்கோவை

ஙள. பஞ்சாக்கரதேசிகர்மாலை

ஙஅ. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி

## தருக்கம்

ஙகூ. தருக்கசங்கிரகமும் அன்னம்பட்டீயமும்

## சமயம்

உo. சிவஞானபாடியம்

உக. சிவஞானபோதச் சிற்றுரை

உஉ. சிவஞானசித்திப் பொழிப்புரை (சுபக்கம்)

உங. சித்தாந்தப் பிரகாசிகை

உச. என்னை யிப்பவத்தில் என்னும் செய்யுட் சிவசமவாத வுரை மறுப்பு

உரு. எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்

உசு. சிவசமவாத வுரை மறுப்பு

உள. அரதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு

உஅ. சிவதத்துவவிவேகம்

உசு. சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம் முதலியன.

இவற்றுள், இலக்கிய நூல்களில், 'காஞ்சிப்புராணம்' தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகும். 'தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம்' 'சித்தாந்தப் பிரகாசிகை' 'சுலோக பஞ்சகம்' 'சிவதத்துவவிவேகம்' என்ற நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோதச் சூத்திரமும் அதிகரணமும்

## க. பொதுவதிகாரம்

### க. பிரமாணவியல்

சூத்திரம் க : அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
ரூற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனூர் புலவர். சூஉ

முதலதிகரணம்-அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின். சூஎ
இரண்டாமதிகரணம்-தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம். எச
மூன்றமதிகரணம்-அந்தம் ஆதி. கூடு

சூ.—உ : அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே. கஅங

முதலதிகரணம்-அவையே தானே ஆய். ககஅ
இரண்டாமதிகரணம்-ஆணையின் இருவினையின். கஉஉ
மூன்றமதிகரணம்-போக்கு வரவு புரிய. உஉஎ
நான்காமதிகரணம்-ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும். உஙச

சூ.—ங : உளதில தென்றலி னெனதுட லென்றலி
னெம்புல னெடுக்க மறிதலின் கண்படி
வுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தநுவினு ளான்மா. உஎஅ

முதலதிகரணம்-இலது என்றலின் ஆன்மா உளது. உஎஉ
இரண்டாமதிகரணம்-எனது உடல் என்றலின் ஆன்மா உளது. உஎங

## ஈ0 சிவஞானபோதச் சூத்திரமும் அதிகரணமும்

**மூன்றமதிகரணம்**-ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது. உஎடு
**நான்காமதிகரணம்**-ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது. உஎஅ
**ஐந்தாமதிகரணம்**-கண்படில் உண்டி வினை இன்மையின் ஆன்மா உளது. உஎக
**ஆறமதிகரணம்**-உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது. உஅக
**ஏழாமதிகரணம்**-மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா உளது. உஅச

## உ. இலக்கணவியல்

சூ.—ச: அந்தக் கரண மவற்றினென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பரின் றஞ்சவத் தைத்தே. உஅள

**முதலதிகரணம்**-அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று. உகக
**இரண்டாமதிகரணம்**-(ஒன்றன்றுயினும்) சகசமலத்து உணராது அவை சந்தித்தது. உகள
**மூன்றமதிகரணம்**-அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத் தைத்தே. ஈகஐ

சூ.—ஞ: விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. ஈஉச

**முதலதிகரணம்**-விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்து அறிந்து அறியா. ஈஉள
**இரண்டாமதிகரணம்**-(ஆங்கு அவைபோல) தாம் தம் உணர்வின் தமியருள் (காந்தம் கண்ட பசாசத்து அவையே). ஈஉஅ

சூ.—சு: உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே. ஈஙச

**முதலதிகரணம்**-உணருரு அசத்து எனின் உணராது இன்மையின். ஈசஐ
**இரண்டாமதிகரணம்**-இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே. ஈசசு

## உ. உண்மையதிகாரம்

### ங. சாதனவியல்

சூ.—எ : யாவையுஞ் சூனியஞ் சத்தேதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா. ங எக

**முதலதிகரணம்**-யாவையுஞ் சூனியம் சத்து எதிர் ஆகலின் சத்தே அறியாது. ங அக

**இரண்டாமதிகரணம்**-அசத்து இலது அறியாது. ங அங

**மூன்றமதிகரணம்**-இருதிறன் அறிவு உளது இரண்டலா ஆன்மா ங அள

சூ.—அ : ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே. ங கூசை

**முதலதிகரணம்**-தவத்தினில் உணர்த்த. ங கூசு

**இரண்டாமதிகரணம்**-தம்முதல் குருவுமாய் (உணர்த்த). சகங

**மூன்றமதிகரணம்**-ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்து. சஉ0

**நான்காமதிகரணம்**—விட்டு அன்னியமின்மையின் அரன்கழல் செலும். சஉங

சூ.—கூ : ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.
சங0

**முதலதிகரணம்**-ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண் ணினின் சிந்தை நாடி. சங்க

**இரண்டாமதிகரணம்**-உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி. சங்சு

**மூன்றமதிகரணம்**-விதி எண்ணும் அஞ்செழுத்தே. சசஉ

### சு. பயனியல்

சூ.—க0 : அவனே தானே யாகிய வன்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே. சசக

**முதலதிகரணம்**-அவனே தானே ஆகிய அந்தெறி ஏகன் ஆகி. சூஇக
**இரண்டாமதிகரணம்**-இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை இன்றே. சூஇசு

சூ.—கக : காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னையரா வன்பி னரன்கழல் செலுமே. சூசுசு

**முதலதிகரணம்**-காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டல். சூகூக
**இரண்டாமதிகரணம்**—(அதனை) அயரா அன்பின் அரன்கழல் செலுமே. சூஎஇ

சூ.—கஉ : செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே. சூஅக

**முதலதிகரணம்**—செம்மலர் நோன்ருள் சேரல்ஒட்டா அம்மலம் கழீஇ. சூஅஉ
**இரண்டாமதிகரணம்**-அன்பரொடு மீஇ. சூஅஇ
**மூன்றமதிகரணம்**-மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே. சூஅஅ
ஒழிபாகிய நான்காமதிகரணம். சூகூக

# திருவெண்பாத்தொகை


| | | | |
|---|---|---|---|
| அவையடக்கம் | .... | .... | க |
| மூதற்சூத்திரம் | .... | .... | இ |
| இரண்டாஞ்சூத்திரம் | .... | .... | கo |
| மூன்றாஞ்சூத்திரம் | .... | .... | எ |
| நான்காஞ்சூத்திரம் | .... | .... | எ |
| ஐந்தாஞ்சூத்திரம் | .... | .... | ச |
| ஆறாஞ்சூத்திரம் | .... | .... | சு |
| ஏழாஞ்சூத்திரம் | .... | .... | ஞ |
| எட்டாஞ்சூத்திரம் | .... | .... | கூ |
| ஒன்பதாஞ்சூத்திரம் | .... | .... | அ |
| பத்தாஞ்சூத்திரம் | .... | .... | சு |
| பதினோராஞ்சூத்திரம் | .... | .... | சு |
| பன்னிரண்டாஞ்சூத்திரம் | .... | .... | அ |
| | | ஆதிருவெண்பா, | அட |
| சிறப்புப்பாயிரம் | .... | .... | க |

## தந்திரத்தொகை முதலியன உரைத்துஞ் செய்யுட்கள்

### நேரிசை வெண்பா

சூத்திரமீ ராறினுக்குச் சூரணிமுப் பாலென்பா
னேத்தவெண்பா வென்பா னிரண்டனேத்துஞ்—சேர்த்ததொகை
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நுண்ணுணர்வி னுய்ந்துணர்ந்தோர்
வேற்றுருக்கொள் ளாருறுவர் வீடு.

## அதிகரண வெண்பாத் தொகை

### நேரிசை வெண்பா

ஐயொருப தேழேழு மாங்கமைந்த நாலாறு
மையொன்ப தோரெட்டோ டாருறுங்—தூய்யவெட்டோ
டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
மன்னருளும் வெண்பா வகை.

## அதிகரணத் தொகை

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மூன்றுநான் கேழு மூன்றே முடிந்தபி னிரண்டி ரண்டே
மூன்றுநான் மூன்று நன்றுய் முடிந்தபி னிரண்டி ரண்டே
யேன்றநான் கீறு தாமே யிவையீரா றிலகத் துள்ளே
யேன்றமுப் பாலென் பாலை யெனக்கர னிரங்கி னானே.

## தந்திரக் கருத்து

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

முதற்பதி யரனே யைந்து முன்னத்து விதமி ரண்டே
யிதற்பினே யனுமா னத்தா லெண்ணிலா வுயிர்கண் மூன்றே
யதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே யைந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நினைத்த லெட்டே
சிறப்புடை யுபாயந் தம்மாற் றெளிவித்த லுயிரை யொன்பா
னறுத்திடன் மலங்கள் பத்தே யழுந்தலே சிவத்தி லொன்றே
நிறப்பணி கொளலி ரண்டே சிவஞான போதஞ் சித்தி.

---

# சூர்ணிக்கொத்து

## முதற்சூத்திரம்

க.—சகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது.
உ.—அது அரனுலே உடையது.
ங.—மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள்.

## இரண்டாஞ்சூத்திரம்

க.—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.
உ.—உயிர்களுக்குக் கன்மபலனே அரனே கொடுப்பன்.
ங.—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.
ச.—அரன் சருவ வியாபகன்.

## மூன்றாஞ்சூத்திரம்

க.—இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினுலே அறிவுயிர் உண்டு.

உ.—எனது உடல் என்று பொருட்பிறிதின்கிழமையாகச் சொல்லுகையினுலே, உடற்கு வேருய் உயிர் உண்டு.

ங.—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேருய் உயிர் உண்டு.

ச.—கனவுடலிலிட்டு நனவுடலிலே வருகையினுலே, அக் கனவுடற்கு வேருய் உயிர் உண்டு.

ஞ.—நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினுலே, பிராணவாயுவுக்கு வேருய் உயிர் உண்டு.

சு.—மறந்து மறந்து நினைக்கிறபடியினுலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேருய் உயிர் உண்டு.

எ.—எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினுலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

## நான்காஞ்சூத்திரம்

க.—அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினுலன்றித் தொழில் இல்லாதபடியினுலே, அந்தக்கரணங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

உ.—மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.
ங.—உயிர் மூன்றவத்தைப்படும்.

## ஐந்தாஞ்சூத்திரம்

க.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.
உ.—அரனுலே உயிர்களெல்லாம் அறியும்.

## ஆருஞ்சூத்திரம்

க.—உயிரறிவினுலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.
உ.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

## ஏழாஞ்சூத்திரம்

க.—அரன் பாசத்தை அநுபவியான்.
உ.—பாசம் அரனை அநுபவியாது.
கூ.—உயிர் அவ்வரனை அடையும்; அநுபவிக்கும்.

## எட்டாஞ்சூத்திரம்

க.—உயிருக்கு நல்லறிவு தவத்தினுலேயே வரும்.
உ.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.
கூ.—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினுலே தன்னையும் அறிய மாட்டாது.

ச.—உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றுல் தன்னையும் அறியும்.

## ஒன்பதாஞ்சூத்திரம்

க.—உயிர் அரன் ஞானத்தினுலேயே அரனைக் காணும்.
உ.—உயிர் பாசத்திலே பற்றற்றுல், அரன் வெளிப்படுவன்.
கூ.—பஞ்சாக்ஷரசெபம் பண்ணினுல் வாசனுமலம் போம்.

## பத்தாஞ்சூத்திரம்

க.—அரனுடன் ஒன்றுகி நில்.
உ—உன்றொழிலெல்லாம் அரன் பணி யென்று கொள்.

## பதினொராஞ்சூத்திரம்

க.—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.
உ.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கிய மாய்ப் போவான்.

## பன்னிரண்டாஞ்சூத்திரம்

க.—மும்மலங்களையுங் களைக.
உ.—சிவஞானிகளுடனே கூடுக.
கூ.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

ச.—வழிபடாமையை ஒழிக.

ஆகூத்திரம் கஉ-க்குச் சூர்ணிக்கொத்து. கூக.

முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபாடியம்

திருப்பாசுரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் காமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலே போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்

அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

திருச்சிற்றம்பலம்

திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

திருச்சிற்றம்பலம்

கற்பக விநாயகர் துதி

பொற்பொதுக் குடபாற் பொற்புற நடிக்குங்
கற்பகத் திருதாள் கற்பவர் நமரே.

திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதமெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிறப்புப்பாயிரம்

சைவாகமங்களின் உளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத் தோதிய பொருளே ஆராயும் ஆராய்ச்சி இந் நூலின் கண் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சிக்குப் பயன் யாதோ வெனவும், இது கேட்டற்குரியார் யாவரெனவும், இதனுல் நுதலப்படும்பொருள் யாதெனவும், இதனைப் பயப் பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஒரு தலையான் உணர்தற்பாலது யாதெனவும், இதனை வழங்குதற்கு இட்ட பெயர் யாதெனவும், இஃது யாண்டு வழங்குவ தெனவும், இதன் முதனூல் யாதென வும், இந் நூல் செய்தார் யாவரெனவுங் கேட்போர்க்குப் பல வாற்றுன் ஆசங்கை நிகழுமன்றே; அவர்க்கு அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற் பொருட்டு இந் நூன்முகத் துரைக்கப்படுவ தாகிய சிறப்புப்பாயிரம் :—

மலர்தலை உலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்த்து
நு. அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத்து அளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்
கo. பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே

என வரும்.

இதன் பிண்டப்பொழிப்பு உரைத்துக்கொள்க. இப் பாயிரப்பொருள் நூலிறுதியின் 'எந்தைசனற்குமரன்' என்னும் வெண்பாவாற் பெறப்படுதலின் ஈண்டுங்கூறுதல் கூறியது கூற

லாம் பிறவெனின்,—ஆகாது; எந்தை சனற்குமரனென்பதனாற் பெறப்பட்டதனையே மாணாக்கர்க்கு நான்முகத்து உணர்த்துதற் பொருட்டு ஈண்டுத் தந்துரைத்ததாகலானென்பது. மிருகேந்திரத் திருதியிற் கூறும் வரலாற்றினை நாராயணகண்ட ஆசிரியர் நான்முகத்துத் தந்துரைத்ததூஉம் இக் கருத்தேபற்றி யென்க. அல்லதூஉம், பொதுவியல்பு சிறப்பியல்பென இருதிறப்படுத்து உணர்த்தியது இந் நூல் என்னும் பாகுபாடு ஆண்டுப் பெறப்படாமையின், அது கூறப்புகுந்தார் ஏனையவும் உடன் கூறினரென்றலு மொன்று.

நிலவுலகமுழுதும் பரந்த விருளென அதன் பெருமை கூறுவார், மலர்தலையுலகின்மாயிருள் என்றார். மா-பெருமை. ஆகாரமுன்னும் யகரவுடம்படுமெய் சிறுபான்மை அருகி வருதலை * "மாயிரு ஞாலம்" என்றாற்போலக் கொள்க. மாயாத விருளினீக்குதற்கு மாயிருளென்றாரென, வினைத்தொகை யாக்கலுமொன்று. இவ்விருளென்னும் பொருளதியல்பும், இதன் றோற்றமும், கண்ணிற்திரியத்தினியல்புரைப்புழிக்† காட்டுதும். ஒன்றோடொன் றொவ்வாத எல்லாச் சமயத்தாராலும் புகழப்படுதலிற் பலர்புகழ்ஞாயிறு என்றார். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

ஏனை ஒளிகளான் மடங்காது யாண்டும் பரந்த புறவிருளை ஒருபா லெழுந்த ஞாயிறு துமிப்பதுபோல, ஏனைச் சமயநூல்களான் மடங்காது யாங்கணும் நிறைந்த அகவிருளை ஓராகமத்தின் ஒரு படலத்தினெழுந்த பன்னிருசூத்திரந் துமிக்குமென்பது குறிப்பான் விளக்குதற்குப் படரின் என்றார். அல்லதையென்பது, ‡ "தன்மனைக் கிழத்தி யல்லதை பிறர்மனை—யன்னையிற்றீரா நன்ன ராண்மை" என்றாற்போல அன்றியென்னும் பொருள்பட வந்த வினையெச்சக்குறிப்பு ஐயீற்றுடைக்குற்றுகரம். படரிற் காண்டல் செல்லுங் கண் எனற் பாலதனை எதிர்மறை முகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு; "வாராமையில்லை" யென்றாற் போல்வனவுந் தேற்றப் பொருள் பயப்பவந்தவாறுகாண்க. இது வடமொழி மதம். இப்பொருள் விளங்குதற்பொருட்டுக் கண்மேல் வைத்துக் கூறினரேனும், உவமேயப் பொருட்கேற்பக் கண் காண்டல் சேறற்குப் படிந்த ஞாயிறுபோல் என ஞாயிற்றின்மேல் வைத்துரைத்தல் கருத்தாகக் கொள்க.

---

* திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், திருவாவடுதுறை, க.

† உ-ஆம் சூத்திரம், உ-ஆம் அதிகரணம்.

‡ ஞானமிர்தம்—கஎ, அடி—நகூ.

# சிறப்புப்பாயிரம்

இருட்கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும் இரு வகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாய வாறுபோல, மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி அறிவூதி யென்னும் இருவகை யுணர்விற்கும் இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந்நூலென்பார், துமியப் பாரினல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல் நாடித் தீர்ந்து கண்டு மயர்வற அளித்த சிவஞான போதம் என்றார். எனவே, புறவிருணீக்கிக் காட்டுதற்குப் பன்னிரு வகைப்பட்ட ஞாயிறுபோல, அகவிருணீக்கி யுணர்த்துதற்குச் சூத்திரத்தாற் பன்னிருவகைப் பட்டது இந்நூ லென்பதூஉம் ஆயிற்று. இவ்வாறன்றி ஞாயிற்றைக் கடவுட்கு உவமையாக்கு வாருமுளர். நூலுட் கூறியவதனைப் பாயிரத்துட் கூறவேண்டா மையானும், ஈண்டைக் காவதோர் பயன்தாராமையானும், அஃது உரையன்மை யறிக.

பெரும்பெயர்க் கடவுள் என ஞேயமொன்றே பெரும் பெயர்க்குப் பொருளாகக் கூறினர்; ஏனையவற்றைத் தன்னு ளடக்கிநிற்றலில் தலைமைபற்றி யென்றுணர்க. பெரும்பெய ரெனினும், மகாவாக்கியமெனினும், ஒருவார்த்தை யெனி னும் ஒக்கும். பெரும்பெயர்ப்பொருளே அஞ்செழுத்திற்கு மாதலின், பெரும்பெயரொடு அஞ்செழுத்திடை வேற்றுமை யின்மையுணர்க. ஈண்டிய பெரும்பெயர் - எல்லா நூற்பொரு ளுந் திரண்டுகூடிய பெரும்பெயரென்க. *"அருள்நூலும் ஆர ணமும் அல்லாதும் அஞ்சின்—பொருள்நூல் தெரியப் புகின்" என்பதனானு முணர்க. கண்ணிருள் வினைத்தொகை; புறவிருள் போலப் புலனுகாது கருதலளவையான் அறியப்படுவதென வேற்றுமை கூறுவார் கண்ணிருளென்றார். குரம்பையின் - இன் ஏதுப்பொருட்கண்வந்த ஐந்தாமுருபு. புக்கில்போலன் றென்பது உணர்த்துதற்கு அருந்துயர்க்குரம்பை யெனப்பட் டது. அது, †"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் —துச்சில் இருந்த உயிர்க்கு" என்பதனானும் அறிக.

தலைமைபற்றி அருந்துயர்க்குரம்பையி னென்றாரேனும் இனமாதல்பற்றிக் கரணம் புவனம் முதலாயினவும் உடன் கொள்ளப்படும்; படவே, உடம்பு முதலியவற்றான் ஆன்மாவை நாடுதலாவது, இவ்வுடம்பு சடமாகலின், இதன்கண் இன்பத் துன்பங்களை அறிந்து நுகர்தற்கு இதனின் வேறாய் ஆன்மா வென்றொரு பொருள் உண்டென்றும்; ஒருடம்பின் நிகழும் இன்பத்துன்பங்கள் மற்றொருடம்பின் அறியப்படாமையின்,

---

* திருவருட்பயன், ஐந்தெழுத்தருணிலை—க.

† திருக்குறள், நிலையாமை—க0.

உடம்புதோறும் ஆன்மாக்கள் வெவ்வேறு உண்டென்றும்; அவை இவ்வுடம்பிற் கட்டுற்று நிற்றற்கு மூலமாய் ஒருபந்தம் அநாதியே யுடையவாதல் வேண்டுமென்றும்; வேண்டவே, மூன்றவத்தை யுளவாமென்றும்; நாடோறும் நனவும் கனவும் உறக்கமும் பேருறக்கமும் உயிர்ப்படங்குதலுங் காணப்படுதலான், உடம்பினும் ஐந்தவத்தைப் படுமென்றும்; புலன்களே யுணரும் நனவிடத்து நினைப்பும் மறப்பும் மூறையானே மாறிமாறி நிகழ்தலின் ஆண்டும் ஐந்தவத்தைப் படுமென்றும்; இவ் வான்மாக்கள் உடம்பிற் கட்டுண்டு தம்வயத்தனவன்றி நிற்றலின், இவற்றிற்கு உடம்பு முதலியவற்றைப் படைத்து நடாத்தி யொடுக்குதற்குப் பரமான்மா ஒருவன் உண்டென்றும்; அவன் இம்மூன்றனுள் ஒரோவொரு தொழில் செய்யும் கடவுளர்க்கு மேலாய் இவர்களே யுந் தொழிற்படுத்தி நிற்பனென்றும்; அவன் உலகத்தைப் படைக்குங்கால் விகாரமின்றி யுடனுய்நின்று தனது சமவேத சத்தியான் இருவினைகட்கேற்ப மாயையென்றொரு சடசத்தியினின்றும் தோற்றுவித் தொடுக்குவனென்றும்; இதனானே அவனும் இலயம் போகம் அதிகாரமென்னும் மூன்றவத்தையுடையனென்றும்; அஃது அவனுக்கு உபசாரமே யென்றும்; அவன் அமலனுய் நின்றே இவ்வான்மாக்களுக்கு இன்பத்துன்பங்களைக் கருவிகளின் வழியான் நுகர்விப்ப னென்றும்; அவன் அழிபொருள்போலச் சுட்டி யறியப் படுவானுமன்றிப், பொய்ப் பொருள்போல அறியப்படாதவனுமன்றி, வேறுயறியப் படுவனென்றும்; அங்ஙனம் அறிகின்றவன் ஆன்மாவென்றும் ஆகம வளவை சார்பாகத் தலைநின்று வழியளவையான் ஆராய்ந்து பொதுவியல்பு துணிதல். வழியளவை யெனினும், கருதலளவை யெனினும், அதுமானமெனினும் ஒக்கும். ஆன்மாவென்பது பொதுச்சொல்லாகலிற், பரமான்மாவுங் கொள்ளப்பட்டது.

இனிப், பெரும்பெயர்க் கடவுளிற் காண்டலாவது, அங்ஙனந் தன்னையுந் தலைவனையும் பொதுவிலக்கணத்தா னுணர்ந்து மல நீங்கிய பின்னர்ப், பெரும்பெயர்ப் பொருளே சிறந்தெடுத்தோதும் ஆகமவளவை சார்பாகத் தலைநின்று அழுந்தியறிதலே அநுபவித்தலென்னுஞ் சொற்குப் பொருளாகலின், அவ்வநுபவ மெனப்படுவது மேற் பொதுவியல்பாற் பெறப்பட்ட முப்பொருள்களுள் அழுந்தாது நின்றறியும் பரமான்மாவுக்கும் அறிவில்லாத சடமாகிய பாசத்திற்குங் கூடாமையின் அவ்விரண்டின் வேறுய்ச் சார்வுஞானேத்தரத்தி னேதியவாறு தன்னைப் பற்றப்பட்ட பொருளின் அதுவதுவேயாக அழுந்துமியல்புடைய ஆன்மாவே அவ்விரண்டினையும் அநுபவிக்குமென்றும்; எனவே மாசு நீங்கியவழி ஆடையின் குணமாகிய வெண்மை ஆடை முழு

தினும் விளங்கினாற்போல, மலநீங்கிய வழித் தன் வியாபக முற்றும் விரிந்து விளங்குமியல்புடைமை மாத்திரையேபற்றி முன் விளங்கிய ஏகதேச வறிவை நோக்கி முற்றறிவெனப்படும் ஆன்மாவின் அறிவு, ஒன்றின் அழுந்துங்கால் மற்றொன்றினை அறியுமாறின்மைபற்றி முழுவதும் ஒருங்கேயறியும் பேரறிவாகிய பரமான்மாவினறிவை நோக்கிச் சிற்றறி வெனப்படு மென்றும் சார்ந்ததன் வண்ணமாய் அழுந்தி யறிவதாகலின், யாண்டும் தனக்கு வியஞ்சகமாய் அறிவிக்கும் அறிவையின்றி அமையா தென்றும்; சில ஆன்மா வீடுபேறெய்தினவாகச், சில எய்தாநிற்பனவாகச் சிலவெய்துவனவாகக் காணப்படுதலான், அவ்வாறு தற்கு ஏதுவாய்த் தத்தங் காலவெல்லைகளில் நீங்குவனவாகிய மலசத்திகள் பலவுளவென்பது பெறப்படுதலின், அதுபற்றி ஆன்மாக்களும் பலவாதல் பெறப்படுமென்றும்; பலவாதல் பெறப்படவே, இலக்கணத்தால் அவற்றிற்குத் தம்முள் வேற்றுமையாவது தத்தமறிவு தத்தமக்குரிய சோபானமுறையிற் றாலமுஞ் சூக்குமமுமாய் நிகழ்தல்பற்றி யறியப்படுமென்றும்; இதனானே ஆன்மாக்களுக்குப் பக்குவாபக்குவ பேதங்களாமாறும், அவற்றுற் பெத்தமுத்திப் பேதங்களாமாறும், செயற்கை யியற்கைகளாமாறும், முத்தியும் பெத்தமும் ஒன்றாகக் காணப்படுமாறும் எல்லாமினிதாகவே, விளங்குமென்றும்; இவ்வான்மாக்களின் வேறாகிய பரமான்மாவின் அறிவு இதுபோல் அழுந்துதலின்றி நின்றறியுஞ் சுதந்தரவறிவாகலின், வியஞ்சகம் வேண்டாது முழுவதுந் தானே அறிந்தும் அறிவித்தும் நிற்கும் பேரறிவாமென்றும்; அதனால் இதுகாறும் உயிர்க்குயிராய் நின்று உணர்த்திவந்த பரமான்மாவே இப்பொழுது குருவுமாய் வந்து, இது பகை இஃது உறவு என்றுணர்த்தி விடுவிக்குமென்றும்; அதனை யுணர்தற்குத் தவங் காரணமென்றும்; பகையைப் பகையென்றுணரவே உறவோடு கூடுமென்றும்; அது சிவஞானமொன்றானே உணரப்படுமென்றும்; அது பாசப்பற்று அற்றாலன்றி விளங்காதென்றும்; அப்பற்று, முத்திபஞ்சாக்கரத்தின் முறைமையறிந்து உச்சரிக்கவே பற்றறக்கழியு மென்றும்; மாணிக்கத்தைச் சார்ந்த படிகம் மாணிக்கமாயொழியாது மாணிக்கத்தின் ஒளியும் நிறமும் பெற்றுத்தன்னொளி அதுவாயடங்கி அம்மாணிக்கத்துக்குச் சமமாய் நிற்குமாறுபோலப், பரமான்மாவினுடைய எண்குணங்களுமே தன் குணமாகக்கொண்டு தன்குணம் அவையேயா யடங்கிப் பரமான்மாவே போல ஒற்றித்து நின்று, அப்பரமான்மாவே தனக்கு விடயமாக அயராவன்பு செய்யிற் சிவாநந்த அநுபவம் பெறுவனென்றும், அடிமை என்றும் அடிமையே யென்றுந் திருவருள்கண்ணுக அநுபூதியிற்கண்டு சிறப்பிலக்கணம் உணர்தல்.

பெத்தத்தினின்ற நிலைபற்றிக்கூறும் இலக்கணம் ஆகந்துக மாகலிற், பொதுவியல்பென்றும்; முத்தியினின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணஞ் சகசமாகலிற், சிறப்பியல்பென்றும் ஆயின. புடைநூலாசிரியர் முதற்கட் *"பொதுவுண்மை யெனக்கருதி" யென்றெடுத்துக்கொண்டு, முடிவின்கட் †"பெத்தமுத்திகண் மதித்தாமன்றே" யென முடித்தமையின், ஈண்டுக் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்புகளுக்கு இவையே பொருளாதல் அறிக. ஆகவே, பல பொருட்குப் பொதுவாய இலக்கணம் பொதுவியல்பென்றும், ஒரு பொருட்கேயுரிய விலக்கணஞ் சிறப்பியல்பென்றும், அளவை நூலாற் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு; தடத்தலக்கணம் சொரூபலக்கணம் என்னும் வடசொற்குப் பரியாயப் பெயராய் ஈண்டுக் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறெனத் தெரிந்துணர்ந்து கொள்க. இவ்விரு வேறு வகைக்குஞ் சொல்லொருமை மாத்திரைபற்றியே மயங்கற்க.

அற்றேல், அஃது அங்ஙனமாக; ஆகமங்களின் இங்ஙனம் இருவகைப்படுத்துக் கூறவேண்டியது என்னை? சிறப்பியல்பு ஒன்றே கூற அமையுமாலோவெனின்,—அமையாது: ‡"புறச் சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம—அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்-சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத சிரப் பொருளே மிகத்தெளிந்துஞ் சென்றுல் சைவத்—திறத்தடைவர் இதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்" என்றோதுதலின், ஆன்மாக்கள் அங்ஙனந் தத்தமக்குரிய சோபானமுறையின் அறிந்துவருந் தன்மைக் கேற்பத் தூலாருந்ததி நியாயமாக உணர்த்துதல் வேண்டும் ஆகலி னென்க.

தூலாருந்ததி நியாயமாவது, அருந்ததிமீனை அறியாதானுக்கு இஃது அருந்ததி மீனெனக் காட்டின் அது மிகவும் நுண்ணிதாகலிற் காண்டல் அரிதாகலான், அதனுடன் றோன்று வதோர் பெருமீனை இஃது அருந்ததியெனக் காட்டி, அதனை உற்றுநோக்கி யுணர்ந்தபின்னர் அருந்ததிமீன் அஃதன்று, அதன்மருங்கே தோன்றுகின்றது பார் எனக்காட்டி உணர்த்துதல்போல்வதோர் முறைமை.

---

* சிவப்பிரகாசம், பாயிரம்—கக.

† சிவப்பிரகாசம், உண்மை—ஈக.

‡ சிவஞானசித்தி, எட்டாஞ்சூத்திரம்—கக.

அவையாவன ;—*"காரணங் கழறல் வேண்டுவல் ஆரணம் - அறியோன் அமலன் ஆதற்கு அத்த—பொறிதீர் புற்கலன் விழு மலம் புணர்தற்கு" என விளையவழி, †"அற்றே சொற்ற தனுதி மற்றவர்க்—கெற்றெனி லாதி யியையிற் குற்றமில்—காரணங் கழ றுவல் அம்ம சீருணங் - திகழொளிப் பளிங்கு போலப் புகழறும் - —இறைபுற் கலனுக் கென்றனன் குறைவின் று—அறைகழல் அருளொலி பரந்த—பொறைவளர் ாா லறவ ணேனே" என் றெடுத்துக்காட்டி உளங்கொளற்பொருட்டுத் தூலமாக விடை கூறிப், பின்னர்ச், சீருணம் தான்பிறந்த நிலத்தியல்பாற் களிம் புற்றதாகலின் அது காரணமின்மைக்கு எடுத்துக்காட் டாமா றென்னையென் றுசங்கித்து, "ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிட மொன்று மேலிடிலொன்—றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்—தெளிக்கு மறிவு செறிந்துள தேனுந் திரி மலத்தே-குளிக்கு முயிரருள் கூடும் படிகொடி கட்டினனே" என் றெடுத்துக்காட்டி, வேறுவிளையவழி உண்மையான் விடைகூறி உணர்த்துதலும் ; ‡விளையோ வன்றிச்—சொல்லிவரு மாயையோ வணுவைமுந்தச் சூழ்ந்த" தென விளையவழி, "மலமுளதா வொழிந்த வெல்லாம்—நெல்லின்வரு தவிடுமிபோ லநாதியாக நிறுத்திடுவ" ரெனவும், "வித்தும் மரமும் போலு" மெனவும் எடுத்துக்காட்டி உளங்கொளற்பொருட்டுத் தூலமாக விடை கூறிப், பின்னர்த், தவிடும் உமியும் ஒன்றற் கொன்று காரண காரிய மாகாமையின் அவை ஒருங்கே நெல்லின்கண் உளவாதல் கூடும், வித்தும் மரமும் ஒன்றற்கொன்று காரணகாரிய மாயி னும் அவற்றிற்கு மூலகாரணமாகிய பூதங்கள் உண்மையின் அப் பூதங்களினின்று முதற்சிருட்டியில் மரமாதல் வித்தாதல் இரண்டிலொன்று முந்தித்தோன்ற அதன்பின் ஒன்றற்கொன்று காரண காரியமாகத் தோன்றுதல் கூடுமாகலின், அவற்றை ஈண்டு எடுத்துக்காட்டி அநவத்தைப்பட விடுத்தல் விடையாமாறு யாங் ஙனம் என விளையவழி, அநவத்தையாகாதவாறு உண்மையான் விடைகூறி உணர்த்துதலும் போல்வனவாமென்க.

பொதுவியல்புணர்த்தும் நூல்கள் பொதுவெனவும், சிறப் பியல்புணர்த்தும் நூல்கள் சிறப்பெனவுங் கூறப்படும். சிறப் பியல்பு சகசமாயுள்ளதாதலின் உண்மையெனவும்படும். ஏனைச் சமயத்தார்கூறும் சிறப்பியல்பெல்லாம் போலியென்பது உணர்த் துதற்கும் இஃது உண்மையெனப்படும். பவுட்கரம் மிருகேந் திரம் மதங்கம் முதலிய சிவாகமங்கள் பெத்தத்தினின்ற நிலை பற்றி இலக்கணங்கூறுதலின் அவை பொதுவெனவும், சர்வஞ்

---

* ஞானமிர்தம்—உ. † ஞானமிர்தம்—உ.
‡ கொடிக்கவி—க. § சிவப்பிரகாசம், பொது—கஉ.

ஞானேத்தரம் முதலிய சிவாகமங்கள் முத்தியினின்ற நிலைபற்றி இலக்கணங்கூறுதலின் அவை உண்மையெனவுங் கூறப்படுமாகலின், பவுட்கர முதலியவற்றின் பொருளுக்கேற்பச் சர்வஞ் ஞானேத்தர முதலியவற்றிற்குப் பொருள்கொள்ளாது சர்வஞ் ஞானேத்தர முதலியவற்றின் பொருளுக்கேற்பப் பவுட்கர முதலியவற்றிற்குப் பொருள்கொள்வர் திருவருள்கிடைத்த நுண்ணறிவினரென்றுணர்க.

அன்றியும், பவுட்கரமுதலிய சிவாகமங்கள் முனிவர் முதலாயினோர்க்கு அருளிச்செய்தது. சர்வஞ்ஞானேத்தர முதலிய சிவாகமங்கள் கந்தன் கணபதி முதலாயினோர்க்கு அருளிச் செய்தது. கந்தன் முதலாயினோரை நோக்க முனிவர் முதலாயினோர் பரிபாகத்திற் முழ்ந்தவராதலின், அவர்க்கருளிச் செய்த பவுட்கர முதலியவற்றிற்கேற்பக், கந்தன் முதலியோர்க்கு அருளிச்செய்த சர்வஞ்ஞானேத்தர முதலியவற்றிற்குப் பொருள் கோடல் பொருந்தாமையும், முனிவர் முதலாயினோரை நோக்கக் கந்தன் முதலாயினோர் பரிபாகத்தின் முதிர்ந்தவராதலின், அவர்க்கு நிட்பப்பொருளே உள்ளவாறருளிச்செய்த சர்வஞ் ஞானேத்தர முதலியவற்றின் பொருளுக்கேற்ப, முனிவர் முதலாயினோர்க்கு அருளிச்செய்த பவுட்கர முதலியவற்றிற்குப் பொருள் கோடல் பொருத்தமுடைமையுந் தெற்றென வுணர்ந்து கொள்க. இன்னும், இவற்றிற்குத் தம்முள் வன்மைமென்மைகள் பொதுவதிகாரத்திறுதியிற் காட்டுதும். இக்கருத்தறியாத அகோரசிவாசாரியர் முதலியோர் சர்வஞ்ஞானேத்தர முதலியவற்றிற்குச் செய்த வியாக்கியானம் போலியுரையென்றெழுதிக.

உபநிடதங்களினுஞ் சுபாலமுதலிய உபநிடதம் உலகந் தோன்றியொடுங்கு முறைமையும், தோற்றி யொடுக்குதற்கு ஒருகருத்தா வுண்டென்னு மாத்திரையும் போல்வன உணர்த்து தலிற் பொதுவெனப்படும். சாந்தோக்கியமுதலிய உபநிடதம் இருவகையுங் கூறுதலிற் பொதுவுஞ் சிறப்புமாம். அதர்வசிகை அதர்வசிரம் சுவேதாச்சுவதரம் கைவல்லியம் முதலிய உபநிடதங்கள் முத்திநிலையேபற்றிச் சாதகமும் பயனுங் கூறுதலின் உண்மையெனப்படும். ஆகலான், அதர்வசிகை முதலிய உபநிடதப்பொருள்பற்றிச் சுபாலமுதலிய உபநிடதங்களுக்குப் பொருள்கொள்வதன்றிச், சுபால முதலியவற்றின் பொருள்பற்றி அதர்வசிகை முதலியவற்றிற்குப் பொருள்கோடல் பொருந்தாதென்பது நுண்ணறிவான் உணர்ந்துகொள்க. இக்கருத்தறியாத இராமானுசர் முதலியோர் கூறும்பொருள் போலியென்றெழுதிக. .

இனி, அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பொருள்களுஞ் சிவாகமப்பொருளே நோக்கும்வழிச், சூத்திரமும் பாடியமும்போலத் தூலாருந்திமுறைமையாமாகலின், வேதம் பொதுநூலெனவும், ஆகமஞ் சிறப்புநூலெனவுங் கூறப்பட்டன. *"வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தத் திற னிங்குத் தெரிக்கலுற்றும்" என்றதூஉம் இம்முறைமை தெரிந்துணர்ந்துகோடற்கென்க. †"வேதப் பயனுஞ் சைவமும்போல்" என்பதும் அது. இவ்வுண்மையுணர்ந்துகொள்ள மாட்டாதார் உபநிடதங்கள் ஒன்றோடொன்று முரணுமெனவும், உபநிடதமுஞ் சிவாகமமுந் தம்முள் முரணுமெனவும், சிவாகமத்துள்ளும் ஒன்றோடு ஒன்று முரணுமெனவும் மயங்கி, ஒன்றன்பொருளேபற்றி ஏனையவற்றை இகழ்வர்; தொன்றுதொட்டுவருங் கேள்வியான் அநுபவமுடைய தேசிகன் றிருவருள் பெறுமையான் என்பது. ‡"சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் தன்வசன—மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ—ஆர்த்தகடல்—தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ—தெண்ணீர்மை யாயினைச் செப்பு" என்றதூஉம் இக்கருத்து நோக்கி யென்க.

இனி, மொழிபெயர்த்துக்கூறும் நூல்களினும் ஞானமிர்த முதலியன பெரும்பாலும் பொதுவியல்பு மாத்திரையே கூறுதலிற் பொதுவெனவும், திருவுந்தி திருக்களிற்றுப்படியார் முதலியன சிறப்பியல்பு மாத்திரையே கூறுதலின் உண்மையெனவுமா மென்பது.

பொதுவியல்பு அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் என்னும் இருகிறத்தான் உணரப்படும். சிறப்பியல்பு சாதனமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென நான்குவகையான் உணரப்படும். சிறப்பியல்பு எனினுந் தன்னியல்பு எனினும் ஒக்கும். நடி என்றதனால் வழியளவையான் என்பதூஉம், கண்டு என்றதனால் அநுபூதியினால் என்பதூஉந் தாமே விளங்கும். அநுபூதி தன்வேதனைக்காட்சி என்பன ஒருபொருட் கிளவி. பெரும்பெயர்க் கடவுளிற் காண்டற்கு மலத்தீர்வும், மலத்தீர்விற்கு அருந்தயர்க்குரம்பையி னன்மாநாடனும் ஏதுவென்பது விளக்குதற்கு அம்முறையே கூறினர்; கூறினரேனும், பொருளுக்கேற்ப மாறுதல் கருத்தெனக் கொள்க.

அற்றேல், மயர்வறுதல் பெரும்பெயர்க்கடவுளிற் காண்டற் பயனுதலின் அம்முறைபற்றி அதனை முற்கூறுகவெனின், அங்

* சிவப்பிரகாசம், பாயிரம் - எ. † பெரியபுராணம், சண்டேசுர நாயனார் - கூ. ‡ திருக்களிற்றுப்படியார் - சூ.

ஞனமாயினும் இது சிறந்தபயனென்பது விளக்குதற்கும், அனித் தவென்பதனோடு இயைதற்கும் ஆண்டுக் கூறுது பிற்கூறினு ரென்க.

இஃது என்சொல்லியவாறோ வெனின், இவ் விருவகையியல் பும் வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணர மாட்டாது ஒரோவொன்றேபற்றி ஐக்கியவாதமுதற் பலதிறத் தான் வேறுபட்டுத் தம்மூள் மாறுகொண்டு மயங்குவார்க்கு, அங்ஙனம் மயங்காது அவற்றின் பொருளொருமை உணர்த்து தற்கு எழுந்தது இந்நூலென்றவா றுயிற்றென்பது. இஃது அறியாதார் எல்லாவாகமப் பொருள்களையும் பன்னிரு சூத்திரத் தாற் றொகுத்து விளக்குதற்கெழுந்தது இந்நூல் என்றுரைப்ப. மிருகேந்திரத்தின் முதற் கண்ணதாகிய ஒருசூத்திரத்தானே எல்லாவாகமப் பொருளுந் தொகுத்து விளக்கப்பட்டனவென் பது ஆண்டே அறியக் கிடத்தலானும், மற்றும் அங்ஙனந் தொகுத்துக்கூறும் ஆகமங்கள் பலவுள ஆதலானும் அதுபற்றி இதன்கட் போந்த விசேடமின்மையானும், நாடிக் கண்டு மயர்வற அளித்த சிவஞானபோதம் என்றதற்குத் தாற்பரியம் அஃதாகாமை யானும், அவருரைப்பனவெல்லாம் போலியென்றொழிக.

சிவஞானபோதம் என்றதூஉம் இக்காரணத்தாற் பெற்ற பெயர். அஃது எவ்வாறெனின், *"உயர்ஞான மிரண்டா மாறு மலமகல வகலாத மன்னுபோதத்—திருவரு ளொன்றுன் றதனைத் தெளிய வோதுஞ் சிவாகம மென்றுலகறியச் செப்பு நூலே" என்பவாகலிற், பரஞானம் அபரஞானம் இரண்டுஞ் சிவஞான மெனப்படும். அவற்றுள், பரஞானத்தைப் போதிப் பது எல்லா வபரஞானங்கட்குஞ் பொதுவாதலின், ஈண்டுச் சிவஞானம் என்றது அவ்வபரஞானமாகிய சிவாகமமேயாம். போதித்தல் - அவற்றின் நிச்சயப்பொருள் இதுவென உணர்த்து தலாம். ஆகவே, சைவாகமங்களின் பொருணிச்சயம் உணர்த்து வது சிவஞானபோதம் எனக் காரணக்குறி யாயிற்றென்று உணர்க. இப்பொருள் வடமொழிச் சிவஞானபோதத்துப் பன் னிரண்டாஞ் சூத்திரத்துப் பிற்பாதியிற் கூறியவாறுபற்றி உரைக்கப்பட்டது.

சிவஞானமெனப் பொதுப்படக் கூறினுந் தலைமை பற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞானபாதத்திற்குத் தலைமை "கிரியையென மருவுமவையாவு ஞானங் கிடைத்தற்கு நிமித் தம்" † என்பதனானும் அறிக.

---

* சிவப்பிரகாசம், பாயிரம்-கட.

† சிவப்பிரகாசம், பாயிரம் - கo

அற்றேல், ஏனை மூன்றுபாதப் பொருள்களோ ஆராயும் நூல்கள் யாவையெனின், அவை சோமசம்புசிவாசாரியர் செய்த கிரியாகாண்டக்கிரமாவலி முதலியனவாமென்க. அற்றேல், ஞானபாதப் பொருளாராய்ச்சி நூலும் பிற்காலத்து ஆசிரியன்மாரே கூறவமையும்; ஆகமத்துட் கூறவேண்டாம் பிற வெனின், ஆசிரியன்மார் அவை அநுட்டிக்கு முறைமை ஆராயப் புகுந்தாரன்றி அவற்றிற்குப் பொருளொருமை ஆராயப் புகுந்தாரல்லர். அவை சிறுபான்மை தம்முள் வேறுபாடுடைய வென்றும், "யார்யார் எவ்வாகமத்தின் முறையே தீக்கைபெற்றார், அவரவர் அவ்வாகமத்தின் முறையே அநுட்டிக்க" என்றும், "எக்கோயிலின் எவ்வாகமத்தின் முறையே பிரதிட்டை செய்யப்பட்டது, அக்கோயிலுக்கு அவ்வாகமத்தின் முறையே பூசை, விழா முதலிய நடாத்துக" என்றும், மாறிச்செய்யிற் குற்றமென்றும் ஆகமங்களே கூறுதலின் அவற்றிற்குப் பொருளொருமை காட்டலாகாமையிற், கற்பபேதத்தானும், ஆன்மாக்கள் கருத்து வேறுபாட்டானும், அவ்வவற்றிற்கேற்பப் பொருள்கூறல் பொருத்த முடைத்து என்பதுபற்றி, அவற்றைக் கூறும் ஆகமங்கள் சிறுபான்மை அங்ஙனம் வேறுபட நிகழ்ந்தன. இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலின் ஆண்டு வேறுபடுதல் பொருந்தாதாயினும், ஆன்மாக்களின் மலபரிபாகதாரதம்மியத்திற்கேற்பத் தூலாருந்ததி முறைமைத்தாக உணர்த்துதல் மரபு என்பதுபற்றி, அங்ஙனங் கூறும் ஆகமங்களே நோக்குவோர் அவை ஒன்றேபோன்று முரணுவனபோலக் கருதி மயங்குவர். அங்ஙனம் மயங்காமைப் பொருட்டு ஞானபாதப் பொருள்களேயெல்லாம் பொது உண்மை என இருவகைப்படுத்து ஆராய்ச்சி செய்து ஒருதலையான் உணர்த்த வேண்டுதலின் அஃது ஏனையோரான் ஆகாமையின், வேண்டுமென்க.

அங்ஙனம் முரணுவனபோலத் தோன்றுவன யாவையெனின், சுவாயம்புவம் முதலியவற்றிற் பதார்த்தம் ஏழென்றலும், பவுட்கரம், மதங்கம் முதலியவற்றின் ஆறென்றலும், பராகிகயை முதலியவற்றின் ஐந்தென்றலும், சர்வஜ்ஞானேத்தரம் முதலியவற்றின் நான்கென்றலும், இரௌரவம், மிருகேந்திரம் முதலியவற்றின் மூன்றென்றலும் போல்வனவாமென்க. அவையெல்லாம் மூன்றென்றதனுள் அடங்குதலின் முப்பொருளென்றலே எல்லா வாகமங்கட்குந் துணிபெனக் காட்டுதல்போல்வன பொருளொருமை கூறுதலாமென்பது.

அஃது அங்ஙனமாக; இந்நூல் நந்திபெருமான் பெறுதற்கு வரலாறு என்னையெனிற், கூறுதும்:—மகாசங்காரகால முடிவின்

கண் உலகங்களை மீளப்படைத்தற் பொருட்டுப் பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்றும் நாத வடிவாயும், அதன்பின் விந்து வடிவாயும், அதன்பின் அக்கர வடிவாயும் முறையே தோன்றின. பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச்செய்தற் பொருட்டுப் பரமசிவன் ஈசான முதலிய பஞ்சப்பிரம மந்திரங்களாகிய சத்திகளே திருமுடி முதலிய அவயவங்களாகச் சகளநிட்களத் திருமேனி கொண்டருளிச் சதாசிவ மூர்த்தியாய் நின்று, தற்புருட முதலிய நான்கு திருமுகங்களான் வேதங்களைத் தோற்றுவித்து, மேற்கண்ணதாகிய ஈசான முதலாகிய ஐந்து திருமுகங்களானும் காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் தோற்றுவித்து, வேதங்களை அநந்ததேவர் வழியானே பிரமனுக்கு அருளிச்செய்து, சிவாகமங்களைப் *பிரதிசங்கிதை முறையானே பிரணவர் முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதிணெண்மருமாகிய இருபத்தெண்மருக்குஞ் சிவபேதம் உருத்திரபேதமெனப் பகுத்து ஒரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து, பின்பு †மகௌளக முறையானே அவ்விருபத்தெட்டினையும் வித்தியேசர் எண்மரின் முதல்வராகிய அநந்ததேவருக்கு அருளிச்செய்தான். அவற்றை அநந்த தேவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரரின் முதல்வராகிய சிகண்டருத்திரருக்கு அருளிச் செய்தார். அவற்றைச் சிகண்டருத்திரர் கணங்கட்குந் தேவர்க்கும் முனிவர்க்கும் அளித்தற் பொருட்டு முதற்கண் நந்திபெருமானுக்கு அருளிச் செய்தார். இது சிவாகமம் வந்த வரலாறு என்றுணர்க. இன்னும் இதனை விரிப்பிற் பெருகும்; ஆகமங்களிற் கண்டுகொள்க.

அங்ஙனம் ஆகமங்களெல்லாங் கேட்டருளிய நந்திபெருமான் சிகண்டமுதல்வரை வணங்கி நின்று, சிவாகமந்தோறுஞ் சரியை முதலிய நாற்பாதங்களுஞ் சிறுபான்மை வேறுவேறுகக் கூறப்பட்டன. அவற்றுள், உண்மையாவது இதுவென்று அருளிச் செய்யவேண்டுமென இரந்து விண்ணப்பஞ் செய்து வினைய வழிச், சிகண்ட முதல்வர் கருணை கூர்ந்து "நன்றே வினயினை! அநந்ததேவர் எமக்கு அருளிச்செய்தவாறே கூறுகின்றேம்; கேட்பாயாக" என்றருளிக், "கற்பந்தோறும் படைப்பு வேறுபாடுங் கேட்போர் கருத்து வேறுபாடும்பற்றி அவற்றிற்கு இயையச் சரியை முதலிய மூன்றுபாதங்களும் ஆகமங்களின் வெவ்வேறுகக் கூறப்பட்டன. ஆகலான், அவற்றுள், எவ்வாகமத்தின்

*பிரதிசங்கிதை முறை-ஒரு விடயத்தை வேறுவேறு வகுத்துக்கூறுதல்.

† மகௌளகமுறை - வேறுவேறு வகுக்கப்பட்ட பலவற்றைத் திரட்டிக் கூறுதல்.

வழி யார் தீக்கை பெற்றார், அவ்வாகமத்தின் வழி அவர் ஒழுகற் பாலர். இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவ தாகலான் அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல் லாந் தூலாருந்ததி முறைமைபற்றிக் கூறப்பட்டனவன்றி மாறு கோளல்ல வென்பது வகுத்துணர்த்துதற் பொருட்டு, இரௌர வாகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞான போதம் என்பதோர் படலம். அது கேட்டார்க்கு எல்லா வாகமப் பொருள்களும் மாறுகோளின்றி இனிது விளங்கும் " எனக்கூறி அச் சிவஞான போதத்தை நந்திபெருமானுக்கு அருளிச் செய்தார்.

நந்திபெருமானும் அதுகேட்ட துணையானே, எல்லா ஐய மும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து, பின்னர் அதனைத் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சனற்குமார முனிவர்க்கு அருளிச்செய்தார். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச்செய்தார். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பரஞ்சோதிமாமுனி கட்கு அருளிச்செய்தார். அவர் தமிழ்நாடு செய்த தவத்தானே திருவெண்ணெய்நல்லூரின் அவதரித்தருளி மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளியிருந்த மெய்கண்டதேவர் பால் வந்து சிவஞானபோதத்தை நல்கி, " இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற் பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்பு முரைக்க " என்று அளித்தருளிப் பொழிப்புரைக்கு மாறுஞ் சத்தியஞானதரிசனிகள்பால் தாம் கேட்டவாறே வகுத் தருளிச் செய்து நீங்க, அவரும் அவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளித், தம்முடைய மாணாக்கர் பல்லோ ருள்ளுஞ் சிறந்த அருணந்திசிவாசாரியர்க்கு அளித்தருளினர். இஃது இந்நூல் வந்த வரலாறெனக் கொள்க.

இப் பொழிப்புரையை வடநூலார் வார்த்திகம் என்பர். பொழிப்பு எனினுங் காண்டிகை எனினும் ஒக்கும். பொழிப் புரை இருவகைப்படும்; அது முன்னர்க் கூறுதும்.

உயர்சிவஞானபோதம் என்றது ஏனை மூன்றுபாதத்தை ஆரா யும் நூல்கட்கு மேற்பட்ட சிவஞானபோதம் என்றவாறு; எனவே, அந்நூல்கள் உணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்பது பெற்றாம்; பெறவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாக மங்களை ஓதி அதன்பின் ஏனை மூன்றுபாதங்களை ஆராயும் நூலே முறையே கேட்டு அவ்வாறு ஒழுகி மனந்தூயராய் நித்தியாநித் திய உணர்வு தோன்றிப் பிறவிக்கு அஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குண்டாயவழி, அவர்க்கு இந்நூல் உணர்த்துக என்பது போந்ததெனக் கொள்க.

அற்றேல், மூற்பிறவியில் சரியை, கிரியை யோகங்களைச் செய்து, மூற்றுப்பெற்று அறியாமையின் நீங்கினோர்க்கு இப்பிறவியின் அவை செய்ய வேண்டாமையிற், சரியைநூல் முதலிய மூன்றும் ஆராய்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது ஒருதலையன்றுலெனின், அற்றன்று ; *"ஆலயந்தானு மரனெனத் தொழுமே" எனவும், †"மண்முதனுளம்" எனவும், †"சூண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்" எனவுங் கூறுதலின் ஞானநிலையின் நிற்போர்க்கும் மயர்வறுத்தற்குச் சாதகமாகச் சரியை முதலியன செய்யவேண்டுதலின், அந்நூல்கள் ஒருதலையான் முன்னர் ஆராயவேண்டுமென்க. அகன்ற, ‖ஊனந்த என்னும் பெயரெச்சங்கள் முறையே காரியப் பெயரும், ஏதுப் பெயருங்கொண்டு முடிந்தன.

உயர்சிவஞானபோதமென்பதனுல் யாப்புங் கேட்போரும் நூதலியபொருளும் நூற்பெயரும், நாடித் தீர்ந்து கண்டு மயர்வறவென்பதனுல், நூதலியபொருளின் வகையும் பயனும், நந்தி முனிகணத்தளித்த வென்பதனுல் வழியும் வெண்ணெய்ச் சுவேதவனன் மெய்கண்ட தேவன் என்பவற்றுல் ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமென எல்லையும் உணர்ந்துகொள்க. ஈண்டுக் கூறும் பயன் முதலாயின ஏனையாகமங்களுக்கு ஏலாமையின், இவ்வொரு நூற்கே உரிய சிறப்புப்பாயிரமாயவாறு உணர்க. வடநூலார் யாப்பை ஆநந்தரியமென்றும், நூதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றும் கூறுப. யாப்புச் சம்பந்தமென்பாரும் உளர்.

இஃதறியாது வழியின்வகையா யடங்குந் தொகுத்தன் முதலியவற்றை யாப்பென்றும், நூல் அரங்கேறும் அவைக்களத்துள்ளோரைக் கேட்போரென்றும், உரைப்பாருரையெல்லாம் போலியென்பதும் பிறவுந் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள் விரித்துரைத்தாம்; ‡ஆண்டுக்காண்க.

## § சைவாகமப் பிராமாணியம்.

அற்றேல், அஃது அங்ஙனமாக; வேதங்கள் ஒருவராற் செய்யப்படாது நிலைபேறு உடைமையானும், ஆன்றோரால்

---

* இந்நூல் கஉ-ம் சூத்திரம். † இந்நூல் கூ-ம் சூ. ஙூ-ம் அதிகரணம்.

‡ தொல்காப்பியப் பாயிரவிருத்தி, பக்கம்—கஉ.

§ இதனைச் சிவாக்கிர பாடியத்தினும், க-ம் சூ-ம், ஙசு முதல் கூஉ-ம் பக்கம் வரையும் காண்க.

தழுவப்படுதலானுங் குற்றமின்றிப் பிரமாணமாம் என்பது துணியப்படும். ஆகமங்கள் அவ்வாறு நித்தமன்றி ஒருவராற் செய்யப்பட்டமையானும்; பிரமப்பொருள் வேதமொன்றுனே * உணர்த்தப்படும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமை யானும்; அங்ஙனமாயினும், மிருதிநூல் முதலியனபோல வேதம் முதனூலாகக் கொண்டு ஆகமங்கள் செய்யப்பட்டன வெனின், அது நும்மனோர்க்குக் கொள்கை அன்மையானும்; அங்ஙனங் கொள்ளின், வேதப்பொருள் உணர்ந்து நூல்செய்த மனு முதலி யோர்போல, ஆகமஞ்செய்த இறைவனுக்கு முற்றுணர்வின்மை பெறப்படுதலானும்; அவ்வாறன்றி முற்றுணர்வு இயல்பாக வுடைய இறைவனுற் செய்யப்பட்டமையின் ஆகமங்கள் பிரமாண மெனக் கூறின், முற்றுணர்வுடைய இறைவனுண்மை துணிந்த பின்னர் அவனுற் செய்யப்பட்டமையின், ஆகமம் பிரமாண மெனத் துணியப்படும். ஆகமம் பிரமாணமெனத் துணிந்த பின்னர், அதனால் இறைவனுண்மை துணியப்படுமென, "ஒன்றனையொன்றுபற்றுதல்" என்னுங் குற்றமா மாகாலானும் ஆகமம் பிரமாணம் என்பது தெளியப்படாதாம்.

அல்லதூஉம், வாசிட்டலிங்கத்திற் "பாஞ்ச ராத்திரம் புகழ்ந்தெடுத்தொருசிலர் பகர்வார்" என்பது முதலாகத் தந்திர வழி ஒழுகுவோரை எடுத்துக்கூறி "அவர் மாமூடர்" எனவும், பாத்மபுராணத்தில் வசிட்டனுக்குந் திலீபனுக்குங் கூற்று நிகழ் வழித் "திராவிட தேசந் தன்னிற் சித்திரசேன னென்பான்" என்று எடுத்துக்கொண்டு, "சித்திரசேனன் என்னும் அரசன் பாசண்டர் கூற்றே பற்றி வைதிக ஒழுக்கத்தைக் கைவிட்டுப் பாசுபதவழி ஒழுகி நரகத்தில் வீழ்ந்தான்" எனவும், வாசிட் டலிங்கத்திற் "சாண்டில்லியன் என்பான் ஒருவன் தறுகண்ண ஞய்ப் பிறர்மனை நயந்து வாசுதேவனைத் தீங்கு நெறியானே வழி பட்டு நிரயத்தில் வீழ்ந்தான்" எனவுஞ், சூதசங்கிதையில், "மொழிபாஞ்ச ராத்திரங்கா பாலங் காளா முகஞ்சாத்தம் பவுத் தமா ருகதந் தன்னிற்-கழிபாசு பதநூல்சாம் பவத்திற் மீக்கை காதலிப்பீர் வேதியரிற் கடையர் காணீர்" என்றற் றொடக்கத் தால் "தந்திரவழி ஒழுகுதல் பொய்த்தொழில் உணர்ந்து வெகுண்ட கவுதமன் சாபப் பயன்" எனவுங், கூர்மபுராணத்தில், "அனைவரு மரன்றனையரியை யண்மி" என்று எடுத்துக்கொண்டு † "அறுமுனிவர் இட்ட சாபவயத்தானே வேட்பித்தல் முதலிய வற்றின் அதிகாரமின்மையான் விருத்தியின்றி வருந்துவோர்க்கு

(பாடம்) * உணரப்படும்.

† அறுமுனிவராவார்—துருவாசர், துர்வாசி, கௌதமர், கண்ணுவர், பிருகு, உபமன்னியு என்னுமிவர்.

விருத்தியின் பொருட்டுத் தந்திரஞ் செய்யப்பட்டது'' என்வும், அதனுள், "மோகநூலிருவேமுஞ் செய்வோம் விடைக்கொடியாய்'' என்பதனால் ஆகமங்கள் மோகிப்பிக்கும் நூல் எனவுங் கூறுதலால், ஆகமம் பிரமாணமல்ல என்பதே தெற்றென விளங்குமாகலின், அவை வீடுபேறுமுதலிய மறுமைப் பயன் பயப்பிக்குமாறு என்னேயெனிற், கூறுதும் :—

வேதம் நித்தம் என்பதற்குப் பிரமாணம் இன்மையானும், தோற்றக்கேடுகள் காணப்படுதலான் அநித்தம் என்பதே துணியப்படுதலானும், "அந்தக் ககரமே இது'' என்னும் மறித்துணர்வு "அந்தச் சுடரே இது'' என்பதுபோல சாதி யொருமை பற்றி நிகழ்வதேயாம் ஆகலானும், அவ்வாறன்றி எழுத்துக்கள் நித்தமெனக் கொள்ளினும் அவை ஒன்றோடொன்று தொடர்ப்பாடுற்றுவருஞ் சொற்கள் அநித்தமே ஆகலானும், உலகத்திற் குத்தோற்ற ஒடுக்கங்கள் உண்மையிற் பிரவாகநித்தம் என்பதும் பொருந்தாமையானும், எல்லா உயிர்கண்மாட்டும் பேரருளுடைய பரமசிவனுற் செய்யப்பட்டமை பற்றியே வேதங்கட்குப் பிரமாணமுண்மை கொள்ளப்படும். அம் முறையானே சிவாகமங்களும் பிரமாணமாதல் துணியப்படும். அது வேதமுதல் உலகாயதநூல் இறுதியாகிய எல்லா நெறியும் பரமசிவனுற் செய்யப்பட்டமையிற் பிரமாணமாமெனச் சூதசங்கிதையிற் கூறியவாற்றானும் அறிக.

ஒருவன் இன்னேன் வந்தேன் என்புழி, அவனும் அவன் வாய்மொழியும்போல, முதல்வனும் முதல்வனுற் செய்யப்படும் வேதாகமங்களுந் தம்முட் காரக ஏதுவும் ஞாபக ஏதுவுமாகிய வேறுபாடுடைமையின்; இன்னோரன்னவை "ஒன்றனை யொன்று பற்றுதல்'' என்னுங் குற்றமாகா என்க. இனி ஆன்றோரால் தழுவப்பட்டமைபற்றி வேதஞ் சிவாகமம் இரண்டும் பிரமாண மெனத் துணிந்தபின்னர் அவற்றானே அவை பரமசிவனுற் செய்யப்பட்டன என்பது துணியப்படும் ஆகலானும் ஒன்றனை யொன்று பற்றுதல் ஆகாமை உணர்க. ஆன்றோரால் தழுவப்படுதல் ஆகமப்பகுதியின் இன்றுலெனின், அற்றன்று; "துறக்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தான் வேட்க'' என்றற்றொடக்கத்துச் சுருதிகட்கு அவை வேட்குமாறு வகுத்துக் கூறுஞ் சுருதிகளும் அத்தன்மையவாகிய கற்பசூத்திரங்களும் இன்றியமையாது வேண்டப்படுமாறு போல, வேதத்துள் விதிக்கப்படுஞ் சிவபூசை முதலிய விதிகட்கும் அவற்றை வகுத்துக் கூறுங் காமிகம் முதலிய சிவாகமங்கள் இன்றியமையாது வேண்டப்பட்டு நிற்றலின், அவை ஆன்றோரால் தழுவப்படுதல் ஒரு

தலே; ஆகலான் என்க. இது சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் அரதத்தாசாரியர் கூறியவாற்றுன் அறிக.

அங்ஙனமாயினுங் தீக்கைப்பேறு ஆன்றேரால் தழுவப் படாமையின், அப்பகுதியிற் பிரமாணமாமாறு என்னே யெனின், அற்றன்று; சுவேதன், உபமன்னியன், அகத்தியன் முதலி யோர்க்குத் தீக்கைப்பேறு காண்டலான் என்க. உபமன்னியன் அகத்தியன் முதலியோர்பாற் கண்ணன், இராமன் முதலி யோர்க்குத் தீக்கைப்பேறு அரிவஞ்சம் பாரதம் பாத்ம புராணம் முதலியவற்றின் விரித்துக் கூறியவாறுங் காண்க. அஃது எல்லாரும் பெறுமை, எல்லாருக்கும் மலபரிபாகம் இன்மையாற் * பரமகஞ்ச சந்நியாசம்போல், அதற்கு உரிய அதிகாரிகள் சிலரேயாகலான் என்பது.

அற்றேல், வாமநூல் முதலாயினவும் பரமசிவனுற் செய்யப் பட்டமையின், காமிகம் முதலியவற்றேடு ஒப்பப் பிரமாண மாதல் வேண்டப்படும் பிறவெனின், படாது; அவற்றுட் கூறுஞ் சுரைக்குடந் தாபித்தல் முதலிய ஆசாரங்கள் வேதத்துள் எடுத் தோதி விலக்கப்பட்டமையின், சவுத்திராமணி யாகத்தில் சுரை ஏற்றல் வேதத்துள் விதிக்கப்பட்டதாயினும் ஏனேயோர்க்கே ஆயவாறுபோல, அவையும் ஏனேயோர்க்கே உரிய என்பது பெறுதுமாகலான், அவையும் அவற்றிற்கு உரிய அதிகாரிகள் வேறுபாட்டாற் பிரமாணமாம் எனக் கொள்ளப்படும் என்க. அங்ஙனமாயின், அது வேத விதியோடு முரணுமாலோவெனின், அவற்றுட் கூறுங்கிரியைகட்கு வேதநெறியில் தப்பிய மாந்தர் அதிகாரிகள் எனப் பிரித்து வைத்தலான் முரணுதென்க. இது காந்தத்துட் கூறப்பட்டது.

இனிப், பொருள்கள் முரணியவழி வலியவற்றுன் மெலி யவை கண்டிக்கப்படும் எனக்கொள்க. எல்லாநெறியும் இறை வனுற் செய்யப்பட்டமையான் விசேடம் இன்மையின், அவற் றுள், ஒன்றற்கொன்று வன்மை மென்மை கூறின், இதுவே மாறுகொளக் கூறலாமால் எனின், அற்றன்று; அவற்றைப் பின் வழிப்படுத்து நூல்செய்தோர் தாரதம்மியத் தானே அவற்றிற்கு வன்மை மென்மை கூறுதல் அமையுமாகலின். பின்னூல் செய்தார் அவ்வந்நெறியிற் கூறும்பொருள்களே அம்மொழியின் தாற்பரியம் அறியாது மயங்கி அவற்றேடு மாறுகொளத் தொகுத்தும் விரித்துஞ் செய்தாராகலின், அவை மென்மை

* பரமகஞ்ச சந்நியாசம்—குடிசகம், பெகூதகம், ஹம்ஸம் என்னும் மூன்றினும் மேலாய் நான்காவதாய் உள்ளது; அது நிட்டை புரியும் பக்குவர்க்கு உரியது.

எனப்பட்டன. மாறுகோளில் கூற்றின் எல்லாம் பிரமாணமே யாம் என்க.

இனி, வேதத்தினுஞ் சிவாகமத்தினும் இந்திரன் முதலி யோர் அவ்வாறு வழிப்படுத்து வேறு நூல் செய்யாது, வேதத் திற்கு வியாசர் முதலியோரும் ஆகமத்துக்குப் பிரணவர் முதலியோரும் போலச் சம்பிரதாய மாத்திரமே விளக்கினு ராகலின், அவ்விரண்டனுள் வன்மை மென்மைகள் கூறுதல் பொருந்தாமையின், அவற்றுள் ஒரோவழி மாறுகோள் போலத் தோன்றியவழி, வேதவாக்கியங்கள் தம்முள் மாறுபட்ட வழி விடய வேறுபாடுபற்றிக் கூறியதெனத் தெரிந்துரைத்துக் கொள் வதுபோல, அவை முரணுதவாறு தெரிந்துரைத்துக் கொள்வ தன்றி அவை ஒன்றுனென்று மறுக்கப்படா என்க.

இவ்வாறன்றி, இன்னும் ஒருவாற்றுன் விடுக்குமாறு:— சாருவாகம் முதலிய எல்லாச் சமயமும் பரமசிவனுற் செய்யப் பட்டமையிற் பிரமாணமேயாமாயினும், அவற்றுள், முதற்கண் மிகவும் மந்த உணர்வினராய் உலக இன்பமே பெரும்பயன் எனவுந், தமக்குப் புறம்பாகிய மக்கள் முதலியோரே ஆன்மா எனவும் அபிமானஞ் செய்து உழலும் அதிகாரிகளுக்குப் பரம சிவன் இரங்கித் துன்பம் முதலியவற்றோடு விரவுதலான் உலக இன்பம் பேருறுதிப்பயனன்று எனவும், மக்கள் முதலியோர் ஆன்மா அல்லர் எனவும் உணர்த்தி, அவர்களுணர்வு அவ்வள வின் நிலைபெறுதற்பொருட்டு, நடப்பப்பொருள் உணர்த்தப்புகிற் கொள்ளமாட்டாமையால் தூலவுடம்பே ஆன்மா எனவும், அவ் வுடம்பு நசித்தலே பேருறுதிப் பயன் எனவும் அறிவுறுத்தருளி ஞன். பின்பு அங்ஙனம் அறிவுறுத்த நெறியே ஒழுகிப் பரம சிவன் திருவருட்கு உரியராய் மலசத்தியிற் சிறிது நீங்கி, உடம்பே ஆன்மா உடம்பு நசித்தலே பேருறுதிப் பயன் என்ப வற்றின் ஐயப்பாடு தோன்றிய அதிகாரிகளுக்கு, உடம்பு முதலி யன ஆன்மாவல்ல என்று மறுத்தற்பொருட்டுப் புத்தநூல் அறி வுறுத் தருளினுன். இவ்வாறே மேலுஞ் சோபான முறையான் உபதேசித் தருளியதென மாறுபாடின்மை உணர்ந்து கொள்ளப் படும்.

இங்ஙனஞ் சாருவாகம் முதலிய நூல்களைச் சோபானமுறை யாற் கொள்ளவே, அதிகாரி தாரதம்மியத்தான் மேலுள்ள நூல் கள் கீழுள்ள நூல்களை மறுக்குமுகத்தால் தோன்றினவாகலின் மாறுகோளில்லை என்பதூஉம், அவையும் ஒருவாற்றுற் பிரமாண மேயாம் என்பதூஉம் போந்தமை உணர்க.

இது, தைத்திரியத்தில் அதிகாரி பேதம்பற்றி "அன்னமய கோசம் பிரமம்" என்றும், அதனை மறுத்து மேல் அதனிற் சூக்குமமாகிய "பிராணமய கோசம் பிரமம்" என்றும், அதற்கு மேல் "மனோமய கோசம் பிரமம்" என்றும், அதற்கு மேல் "விஞ்ஞானமய கோசம் பிரமம்" என்றும், அதற்கு மேல் "ஆனந்தமய கோசம் பிரமம்" என்றும், ஒன்றற்கொன்று சூக்குமமாய் உணர்த்துதல் போலவும், கவுசிதக உபநிடதத்தில் அதிகாரி பேதத்தால் இந்திரன் தைத்தியனுக்குத் தன்னையே பிரமமாகக் கூறியது போலவும் கொள்க. அங்ஙனம் புல்லீல எதிரே காட்டி ஆக்களைப் பிடிக்குமாறு போலச், சோபானமுறைமை பற்றிக் கூறியது என்பதூஉம், அவை எல்லாம் ஒருவாற்றுற் பிரமாணம் என்பதூஉம் சூத சங்கிதையிற் காண்க.

இங்ஙனங் கூறியவாற்றானே, வேதமுஞ் சித்தாந்த சைவாகமும் என்னும் இரண்டுமே உத்தமநூல் எனவும், ஏனைச் சாருவாக முதற் பஞ்சராத்திரம் இறுதியாகிய நூல்களெல்லாம் இவ் விரண்டனோடும் மாறுபட்டவழி மறுக்கப்படும் எனவும், அவற் றுள்ளும் வழிநூல் செய்தார் தாரதம்மியத்தாற் கீழ்க்கீழ் நூல்கள் மேன்மேல் நூல்களான் மறுக்கப்படும் எனவும், உணர்ந்து கொள்க.

இனித், "தந்திரவழி ஒழுகினோர் மூடர்" எனவும், "நிரயத்தில் வீழ்ந்தார்" எனவும். "அவை சாபப்பயன்" எனவும், "விருத்திப் பொருட்டு" எனவும், "மோகநூல்" எனவும் புராணங்களிற் கூறியது வேதப்பொருளோடு மாறுகொளக் கூறும் பாசுபதம், பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களையேயாம்; வேதப் பொருளையே விரித்துகூறப் புகுந்த வேதசாரமாகிய சித்தாந்த சைவாகமங்களை அன்றென உணர்க. இதுவும் வாயவ்விய சங்கிதை, சனற்குமாரசங்கிதை, கூர்மபுராணம், மகுடாகமம் முதலியவற்றுட் கூறியவாறு.

இனிப், புறச்சமயவழி ஒழுகினோரை அங்ஙனம் இழித்துக் கூறியதூஉம் அந்நெறி ஒழுகுதல்பற்றி அன்று; மற்றென்னெனின், அவற்றையே பொருளாகக்கொண்டு வேதநெறியை நிந்தித்தமைபற்றி என்க. அதுவும் ஆண்டே கூறப்பட்டது. புறச்சமய நூல்கள் விருத்திப் பொருட்டுச் செய்யப்பட்டன என்பதூஉம் உடலோம்புதற் பொருட்டென்றதன்று; விருத்தி ஒழுக்கமுமாமாகலிற் சாபத்தால் வேதநெறியின் நீங்கினோர் ஆசரித்தற் பொருட்டு என்றவாறும். மோகநூல் என்றதூஉம் மணிமந்திர மருந்து முதலியவற்றான் விம்மிதம் பயக்கும் நூல் என்றவாறேயாம்.

இனி, வேதமுஞ் சிவாகமமும் ஒன்றேயாயினும் இரு பகுதிப் பட்டது. வேதம் மூன்று வருணத்தாருக்குஞ் சிவாகமம் நான்கு வருணத்தாருக்கும் பொதுவாதல் பற்றியாதலாற் சிவாகமங்கள் பிரமாணம் என்பது தெற்றென உணர்க. இங்ஙனஞ் சைவாக மங்களுக்குப் பிராமாணியம் பவுட்கரவுரையின் உமாபதி சிவா சாரியர் காட்டியவாறே காண்க.

நீலகண்ட பாடியத்திற் பதியதிகரணத்திற் காட்டுமாறு :—

"சிவாகமங்களில் ஒருசாரன பரப்பிரமங் கேவலம் நிமித்த காரணம் எனக்கூறும்; அதனை மறுத்தற்கு எழுந்தது இவ்வதி கரணம் என்று உரைப்பாருமுளர்; அது பொருந்தாது; யாம் வேதத்திற்குஞ் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம்; சிவனாற் செய்யப்படுதலின் வேதமுஞ் சிவாகமம் என வழங்கப்படும். ஆதலாற் சிவாகமம் மூன்று வருணத்துக்கே உரித்தாயதும், நான்கு வருணத்துக்கே உரித்தாயதும் என இருவகைப்படும். அவற்றுள், முன்னையது வேதம் எனவும் பின்னையது சிவாகமம் எனவும் வழங்கப்பட்டன; இவ்விரண்டுஞ் செய்த கருத்தன் சிவன் ஒருவனேயாம்; இவ்வாறு சுருதியினும் புராணங் களினுஞ் சிவாகமங்களினுங் கூறப்பட்டது; பஞ்சப்பிரமம், பிரணவம், பஞ்சாக்கரம், பிராசாத முதலிய மந்திரங்களும், பதி, பசு, பாச, முதலிய பொருள் வழக்கமும், திருநீற்றின் உத்தூள னம், திரிபுண்டரம், உருத்திராக்கந் தரித்தல், சிவலிங்க பூசை முதலிய தருமங்களும் பிறவும் வேதஞ் சிவாகமம் இரண்டினும் ஒப்பக்காண்டலான், அவ்விரண்டும் பிரமாணமே ஆகலானும், கருத்தா ஒருவனே ஆகலான் அவ்விரண்டற்கும் பொருள் ஒன்றேயாகலின் அவற்றுள்ளும் மாறுபாடின்மையானும், இவ் வதிகரணங் கேவலம் நிமித்த மாத்திரமே இறைவன் எனக்கூறும் இரணிய கருப்ப நூலாகிய யோகசாத்திரத்தை மறுத்தற்கு எழுந்ததெனவே யாங் கூறுதும்" என்று இவ்வாறு நீலகண்ட சிவாசாரியராற் காட்டப்பட்டது. இதனை விரித்துச் * சிவாதித்த மணிதீபிகை, சிவதத்துவ விவேக முதலிய நூலுடையார் சிவாக மங்கட்குப் பிராமாணியங் காட்டியவாறும் அந்நூல்களுட் காண்க.

"வேதஞ் சிவாகமம் என இருபகுதிப்பட்டது, மூன்று வருணத்திற்கும் உரிமையாதலும் நான்குவருணத்திற்கும் உரிமை யாதலும் பற்றி" என நீலகண்ட பாடியத்திற் கூறப்பட்டது.

† "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறு ரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க—ளாதிநூ லாதியம லன்

* அப்பயதீட்சித சுவாமிகள். † சிவஞானசித்தி அ-ம் சூ. கஇ.

றருநூ லிரண்டு மாரண நூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா-நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண் மறையி னெழிபொருள்வே தாந்தத்—தீதில்பொருள் கொண் டுரைக்கு நூல்சைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித் தாந்தமாகும்" எனவும், *"உலகியல் வேதநூலொழுக்க மென் பது—நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்" எனவுங் கூறுபவாகலின் அங்ஙனந் தூலாருந்தி முறைமைபற்றிக் கூறு தலின் இருபகுதிப்பட்டது எனவே யாங் கோடும்.

இனிச், சைவரில் ஒருசாரார் சைவாகமங்களில், "உலகநூல், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம்" என நூல்களை ஐவகைப்படுத்து, "மாந்திரம் ஒழிந்த நான்கும் புற நூல்" என வைதிகத்தினையும் அவற்றுடன் விலக்குதலானும், "வேதாந்தத்தில் ஏகனே ஆன்மா" என வேதாந்தத்தைப் புறச் சமயங்களோடு எடுத்தோதி மறுத்தலானும், வேதம் பிரமாண மன்று என்பர். அது பகுத்துணர் வில்லாதார் கூற்றேயாம் என்று மறுக்க; என்னை? ஆண்டு வைதிகம் என்றது மீமாஞ்சை நூலும், வைசேடிக நூலும், நையாயிக நூலும் என்னும் மூன்று மேயாம் எனவும், புறச்சமயங்களோடு வைத்து எண்ணிய வேதாந்தமாவது ஏகான்மவாதங் கூறும் வியாசநூல் எனவுஞ் சித்தாந்தப் பிரகாசிகையிற் சர்வான்ம சம்புசிவாசாரியார் கூறுத லான், அது வேறென்பது தெற்றென விளங்குமாகலின், ஆண்டு வேதம் என்றதூஉம் மீமாஞ்சை நூலே எனக்கொள்க; வேதத் துள் விதித்த கரும காண்டத்தை ஆராய்ச்சி செய்தலின், அதற் கும் அப்பெயராயிற்று. அங்ஙனங் கொள்ளாக்கால், "வேத சாரஞ் சிவாகமம் ஆதலாற் சைவசாரத்திற் குரியோன் வைதி கன்" எனவும், "வேதாந்தப் பொருளைத் தெளித்துக் கூறுவது சித்தாந்தம்" எனவும், "பிறநூல் பிறபொருள்களைக் கூறும்" என வும் வேதத்தோடு ஒற்றுமையுடைமை பற்றியே சிவாகமங்கட்குப் பிரமாணமாதல் கூறும் வசனங்களோடு முரணுமாறு அறிக.

"பாசுபதம்" என்பது †யோகப்பெயராற் சைவாகமங் கட்கும் ‡உரூடிப் பெயராற் பாசுபதாகமங்கட்கும் ஆமாறு போல, "வேதாந்தம்" என்பது யோகப்பெயரான் வேதத் தின் முடிபாகிய உபநிடதங்களைக் கூறும்; உரூடிப்பெயரான் அவற்றை எடுத்துச் செய்த ஏகான்மவாத நூல்களைக் கூறும்; ஆத லின், அவ்விரு வேறு வகையுந் தெரிந்துணர்ந்து கொள்க.

---

*பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், அஉ0.

†யோகம் - காரணம். ‡உரூடி - இடுகுறி.

## சிவதீக்கை

வேதம் ஓதுதற்கண்ணும் வைதிகாசாரத்தின்கண்ணும் உபநயனப் பேறுடையார்க்கன்றி அதிகாரமின்மைபோலச், சைவாகமம் ஓதுதற்கண்ணுஞ் சைவாசாரத்தின்கண்ணுஞ் சிவதீக்கைப் பேறுடையார்க்கன்றி அதிகாரம் இல்லையெனக் கொள்க.

அத்தீக்கை நிராதாரஞ் சாதாரமென்று இருவகைப்படும். அவற்றுள், நிராதாரமாவது விஞ்ஞானகலர், பிரளயாகலருக்குத் தீவிரந் தீவிரதரமென்னும் இருவகைச் சத்தி நிபாதத்தாற் பரமசிவன், ஆசான்மூர்த்தியை அதிட்டித்து நின்று செய்வதன்றித், தானே முன்னின்று செய்வது. அஃது உயிர்க் குயிராய்நின்று செய்வதுஞ் சதாசிவமூர்த்தமாய் நின்று செய்வதுமென இருவகைப்படும். அவற்றுள், முன்னையது விஞ்ஞானகலருக்கும் பின்னையது பிரளயாகலருக்குமெனக் கொள்க. இன்னும் நிராதாரதீக்கை இருவகைப்படும். அவற்றுள், ஒன்று தீவிரசத்தி நிபாதத்தான், அநந்ததேவர் முதலியோர் பதங்களை உதவுவது; ஒன்று தீவிரதரசத்திநிபாதத்தான் வீடுபேறே உதவுவதாம்.

இனிச், சாதார தீக்கையாவது சகலருக்கு நிலவுலகத்தின் ஆசான்மூர்த்தியை அதிட்டித்துநின்று நால்வகைச் சத்திநிபாதத்தாற் செய்வது. அதுவுந் திருநோக்கமுதற் பலவகைப்படும். அவற்றுட் சிறந்தது ஒளத்திரிதீக்கை. அது சபீசம், நிர்ப்பீசமென்று இருவகைப்பட்டுச், சாதிகாரை, நிரதிகாரையென்று இருவகைப்படும்.

அவற்றுள், சபீசமாவது சைவாசாரத்தின் வழுவாதொழுகும் ஆற்றலுடையோர்க்குச் சைவாசார கன்மத்தை நிறுத்தி மற்றவற்றைச் சுத்திசெய்வது. அஃது, அசத்தியோநிர்வாணத்தின் விசேடமாய்ச் சிவதருமினி, உலகதருமினியென்று இருவகைப்படும். நிர்ப்பீசதீக்கையாவது சைவாசாரம் அநுட்டிக்கும் வலியில்லோர்க்குச் சைவாசாரகன்மத்தையும் ஓமத்தாற் சுத்திசெய்து செய்யுந் தீக்கை. அது சபீசமல்லாத அசத்தியோநிர்வாணமுஞ் சத்தியோ நிர்வாணமுமென்று இருவகைப்படும். சபீசதீக்கைப் பேறுடையார் சாதகரும் ஆசிரியருமாய் நித்தியத்தும் நைமித்திகத்துங் காமியத்தும் அதிகாரிகளாவராகலின், அவ்வதிகாரத்தைப் பயக்குஞ் சபீச நிர்வாணமும், அதற்கு அங்கமாகச் செய்யப்படுஞ் சமயவிசேடங்களுஞ் சாதிகாரை எனப்படும். நிர்ப்பீச நிர்வாண முடையார்க்கும், ஏஜீச்சமய விசேட தீக்கையுடையார்க்கும் நித்திய மாத்திரத்தினன்றி நைமித்திகத்துங் காமியத்தும் அதிகாரமின்மையின் நிர்ப்பீச நிருவாணமும் ஏஜீச் சமயவிசேடங்களும் நிரதிகாரை எனப்

படும். சாதிகாரை நிரதிகாரையென்னும் இவை இரண்டுங் கிரியாவதியென்றும் ஞானவதியென்றும் ஒவ்வொன்று இரு வகைப்படும்.

அவற்றுள், கிரியாவதியாவது குண்டமண்டலாதி அனைத்தும் புறத்தே நிலவுவித்துக் கிரியைசெய்வது. ஞானவதியாவது அவையனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு பாவனையாற் கிரியைசெய்வது. இவை புறப்பூசையும், அகப்பூசையும்போலக் கொள்க.

இவ்வாறு சோமசம்புசிவாசாரியர் முதலியோர் சாதிகாரை, நிரதிகாரை இரண்டும் ஞானங் கிரியை என வெவ்வேறு இரு வகைப்படுமெனப் பகுத்து முதற்கண் வைத்துக்கொண்டு, மேற் சமயமுதலியனவாகச் செய்யுமுறையெல்லாம் விரித்துக் கூறுதலின், அங்ஙனம் மேற்கூறும் விதிகளெல்லாம் இவ்விரண்டற்கும் பொதுவென்பது தானே போதரும்: போதரவே, மனத்தாலியற்றுங்கால் நாபித்தானமே குண்டமும், ஆண்டுறும் அங்கியே அங்கியும், விந்துத்தானத் தமிழ்தமே நெய்யும், இடையுஞ் சுழுமுனையுயே சுருவமுஞ் சுருக்குமாகலான், அவை எஞ்ஞான்றுந் தூயனவே யாகலின், அவற்றைத் தூய்மைசெய்ய வேண்டாமையிற் புறத்தே குண்ட முதலியவற்றில் தூய்மை செய்தற்கு விதித்த கிரியைகளும் மற்றுமவைபோல்வனவும் மீமாஞ்சை நூலிற் பத்தாமத்தியாயத்திற் கூறும் நியாயத்தானே விலக்கப்படுதலின் அவையொழித்து ஒழிந்தவையெல்லாம் மனோபாவனையாற் செய்யப்படும் என்பதூஉம், குண்ட முதலியவற்றை அவாவாது மாணாக்கனுடம்பில் தூய்மை செய்தற்குரிய நிரீக்கண முதலிய கிரியைகள் புறத்தே செய்யப்படும் என்பதூஉம் பெற்றும். புறத்தங்கி குண்டலியங்கியோடும் விந்துவங்கியோடுஞ் சார்த்தி வாங்கி வாகீசுவரி கருப்பநாடியிற் புகுவித்துப் பிறப்பிக்கும் பாவனையானன்றித் தூய்மை பெறுதலுஞ் சிவாக்கினியாதலுங் கூடாமையானும், குண்டலியங்கி விந்துவங்கி இவ்வாறு வேண்டாது இயல்பானே தூய்மையுற்றுச் சிவாக்கினியேயாய்ப் புறத்தங்கியினையுந் தூய்மைப்படுத்தும் ஆற்றலுடைமையானும், புறத்துச்செய்யும் அங்கிகாரியத்தினும் அகத்துச்செய்யும் அங்கிகாரியஞ் சிறந்ததென்பது தெரிந்துணர்ந்து கொள்க. குண்டலியங்கி தூய்மைசெய்யவேண்டாது இயல்பானே சிவாக்கினியாமாயினும் அதனைப் "பூரகத்தானே சுழுமுனைவழியான் வாங்கித் துவாதசாந்தத்தின் ஞானவனலோடுங் கூட்டி மீளக்கொணர்ந்து குண்டலித்தானத்தின் வைத்துக் கிரியைசெய்க" என விதித்தது ஞானமயமாக்குதற் பொருட்டெனக் கொள்க.

சிவஞானசித்தியினும், *"ஔதத்திரி யிரண்டு திறனுமிலகு ஞானங்கிரியை" என முதற்கண் எடுத்தோதி, முடிவினும், †"அழிவிலாக் கிரியையினு ஞதல்சத்தி மத்தானுதல்" என முடித்தமையின், இடைக்கட் பட்டனவெல்லாம் இரண்டற்கும் பொதுவென்பது கண்டுகொள்க. "மனத்தாலியற்றுவது கிரியை" என்பதனை "மனத்தாற் கிரியையியற்றுவது" என மாறிப் பொருளுரைத்துக்கொள்க. அங்ஙனங் கொள்ளாது கிரியையென்பதனை மேலேகூட்டின் மனத்தால் எத்தையியற்றுவது எனக் கடாயினுர்க்கு விடையின்மை அறிக. அங்ஙனங் கொள்ளவே, "கிரியாவதிதான்" என்னும் எழுவாய் "நிலவுவித்துச் செய்தல்" என்னும் பயனிலைகொண்டு முடிந்ததென்க; எனவே, "நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்" என்பதற்கு எழுவாய் "அவ்விரண்டும்" என்பது பெற்றும். அற்றுகலினன்றே இறுவாயினும் "அழிவிலாக் கிரியையினு ஞதல்சத்தி மத்தா ஞதல்" என அவ்விரண்டனையும் எடுத்தோதி முடித்தாகு மென்க.

இஃதறியாதார் தமக்கு வேண்டியவாறே உரைப்ப. அது, சோமசம்புசிவாசாரியர் முதலியோர் பத்ததிகளையும், அவற்றிற்கு மூலமாகிய சிவாகம வசனங்களையும் ஒதியுணராத மடவோர் நாத்திகமதம்பற்றி உரைக்கும் உரையாகலின், அது பொருளாகவைத்து மறுக்கற்பாற்றன்று என்றொழிக. "அழிவிலாக் கிரியையினு ஞதல்சத்தி மத்தா ஞதலத்து வாசுத்திபண்ணி" என்பதனுல் இவ்விருவகையுள் ஒன்றுனே அத்துவ சுத்திபண்ண அமையுமெனக் கூறுதலானும், இவ்வாறு சோமசம்புசிவாசாரியர் முதலியோர் நூலினுஞ் சிவாகமங்களினுங் கூறுதலானும், "அத்துவசுத்தி செய்தபின்னர் மந்திரங்கிரியை பாவனைகளின் குறைபாடு தீர்தற்பொருட்டு விஞ்ஞானதீக்கை செய்யப்படும்" என்றது ‡சாம்பவதீக்கை யெனவுஞ் §சத்திதீக்கையெனவுந் தெரிந்துணர்ந்து கொள்க. எனவே ஞானதீக்கை இங்ஙனம் இருவகைப்படும் என்பதாயிற்று.

அஃதாக; தீக்கைபோலப் பிரதிட்டையும் இருவகைப்படும் என்றற்கு ஒத்திலாமையிற் சிவலிங்கப் பிரதிட்டை புறத்தங்கிகாரியத்தானன்றி அகத்தங்கி காரியத்தால் செய்தல் பொருந்தாதெனின், அற்றன்று. பரார்த்த விதிக்கு அஃதொக்கும்; ஆன்மார்த்தபூசை தீக்கைப்பின் செய்யும் ஆசாரமாகலின்

---

* சிவஞானசித்தி, அ-ம் சூத்திரம்: கூ.

† சிவஞானசித்தி, அ-ம் சூத்திரம்: சு.

‡ கிரியாவதி. § ஞானவதி.

ஆன்மார்த்தலிங்கப் பிரதிட்டை தீக்கையுள் வியாப்பியமாய் அடங்குதலின், அது தீக்கைசெய்த முறைபற்றியே செய்யப்படு மென்பது கூறுமையே விளங்குமென்று உணர்க.

### ஞானவதியந்தியேட்டி

இனி, ஞானதீக்கையுடையார்க்கு அந்தியேட்டி செய்யு மாறுவது, துறந்தோர்க்குக் *கனனமே விதித்தலின் அவரை யொழித்து, ஏனை நைட்டிகப் பிரமசரியமுதலிய நிலையினின்று ஞானதீக்கைப்பேறுடையராய் ஒழுகினோர் இறந்துழிப் புறத் துடம்பினை வாளா புறத்தெரியிற் பெய்து அடக்கி சமக்கடன் முற்றிய பின்னர், அவ்வான்மாவை மாசாலப்பிரயோகத்தாற் கொணர்ந்து சந்தன முதலியவற்றுள் ஓர் ஆதாரத்தின் வைத்து முன்போல எல்லா விதியும் மனோபாவனையாற் சங்கார முறை பற்றிச் செய்து சமய தீக்கையுடையாரை உருத்திரலோகத் தினும், விசேடதீக்கை யுடையாரை ஈசுர லோகத்தினும், நிரு வாண தீக்கை யுடையாரைப் பரமசிவன் திருவடியினுஞ் சேர்ப் பிப்பதாம் எனக்கொள்க.

### சமயதீக்கை

இனி, அவற்றின் விரிவாகிய சமய முதலியவற்றுள், சமய தீக்கையாவது மண்டப பூசை செய்து விதிமுறையே மாணாக் கனை வழிபடுவித்துச் சம்பாத ஓமத்தாற் சுத்திப்படுத்துவது. இதனாற் சைவாசாரத்திற்கு அதிகாரியாவன்.

### விசேடதீக்கை

விசேட தீக்கையாவது அவ்வாறு சமயதீக்கை செய்து குண்டத்தில் வாகீசுரனையும் வாகீசுவரியையும் ஆவாகித்து மாணாக்க னான்மாவை வாங்கி வாகீசுரனுல் வாகீசுவரி கருப்ப நாடியிற் செலுத்திக் கருப்பாதான முதலிய கிரியைகளை மும் மூன்று ஆகுதியின் நிரப்பிக் கருமுதிர்ந்து பயந்ததாகப் பாவித்துக் குண்டத்தினின்றும் ஆன்மாவை மீளவாங்கி மாணாக்க னிதயத்தானத்திலே தாபித்து இவ்வாறு சிவபுத்திரனாகச் செய்வது. இதனானே சிவபூசை முதலியவற்றிற்கும் யோக நெறிக்குஞ் சிவாகமம் ஓதுதற்கும் அதிகாரியாவன்.

### நிருவாண தீக்கை.

நிருவாண தீக்கையாவது இவ்வாறு சமய விசேடம் இரண்டுஞ் செய்து ஆன்மாக்கள் †மூன்று திறத்தாற் செய்யுங்

---

* கனனம் - நிலத்தில் குகைசெய்து அடக்குதல்.

† மூன்று திறம் - மனம் மொழி மெய்.

கன்மங்கட்கு இடமாகிய அறுவகை அத்துவாக்களின் தன்மை களும் அவை ஒன்றிலொன்று அடங்கு முறைமையும் அறிந்து, மந்திர முதல் ஐந்தியையுங் கலையைந்தினும் பகுத்து அடக்கி, நிவிர்த்தி முதலிய ஐந்தையும் ஒவ்வொன்றுகச் சோதித்து, அவற்றினின்றும் நீங்கிய மாணக்க னன்மாவை வாங்கிப் பிரா சாத நெறியானே பரமசிவனிடத்தில் ஒடுக்கி, ஒடுங்கியவழி, மாணிக்கத்தைச் சார்ந்த படிக வொளிபோலத் தற்போதம் அடங்கிப் பரமசிவனுடைய அறுவகைக் குணங்களுந் தன் குண மாகத் தன்மாட்டு மிக்கு விளங்கிச் சிவானந்தம் மேலிடும்படி ஒவ்வொரு குணங்களை மும்மூன்று ஆகுதியால் தோற்றுவித்து, மும்பொருள்களின் பொதுவியல்பு உணர்த்துமுகத்தானே மலத்தை நீக்கி உண்மை ஞானம் விளங்கச் செய்வது. இதனானே சிவாகமங்களின் உண்மைப்பொருள் ஆராய்தற்கு அதிகாரி யாவன். அங்ஙனம் உண்மைப் பொருளாராய்ச்சியாற் சிவஞானம் விளங்கிச் சிறப்பியல்புணர்ந்து சிவம்பிரகாசித்து வாசனை நீங்கி வீடுபேறு அடைவன். இது * "அத்துவா சுத்திபண்ணி மல மகற்றி—யொழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞான முதிப்பித் தற்பவந் துடைப்பன்" எனவும்; † "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண நல்லவா கமஞ்சொல்ல" எனவுங் கூறுந் திருவாக்குக்களானும், இவ்வாறே கூறுஞ் சிவாகம வசனங்க ளானும் அறிக. அத்துவாக்களி னியல்பு‡ முன்னர்க் காட்டுதும்.

இனிப் §"பொருவினிருவாணம்.....அறுவகையு மொருவி நினைவரிதாம் பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று" மென்றுற் போலுஞ் சிவாகம வசனங்களைப்பற்றி அவற்றின் கருத்துண ராது தீக்கையே வீடுபேறுதவும் ஞானம் வேண்டாமெனவும், "ஞானத்தால் வீடென்றே" என்புழி, ஞானமென்பதும் ஆகு பெயரால் தீக்கையை யுணர்த்துமெனவும் முரணிக்கூறுவாரு முளர். பவுட்கரத்தில் "ஆசிரியத் தன்மையினதிகாரமும் மல நீக்கமுஞ் சிவ விளக்கமும் ஞானத்தாற் பெறற்பாலனவாகலான் ஞான பாதத்தையே எமக்குத் தெரித்தருளுக" என முனிவர் வேண்டிக்கோடலானும், அவை வேறுபொருள்படுதற் கேலாமை யானும், மதங்க முதலியவற்றினும் இவ்வாறே கூறுதலானும், தீக்கையென்னுஞ் சொற்குப் பொருள் மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்குமென்று ஆகமங்கள் கூறுதலானும், தீக்கையாவது சிவாகமங்களிற் கூறும் நித்திய முதலியவற்றின்

---

* சிவஞான சித்தி, அ - ம் - சூத்திரம் - கூ.

† சிவஞானசித்தி, அ - ம் சூத்திரம் - உஎ.

‡ இந் நூல் இரண்டாஞ் சூத்திரம் மூன்றும் அதிகரணத்திற் காண்க.

§ சிவப்பிரகாசம், பாயிரம் - கூ.

அதிகாரமும் ஆகமக் கேள்வியின் அதிகாரமு மென்னும் இரண்டனுள் ஒரதிகாரத்தை முற்றுவிக்க வல்லதாகிய பரமசிவனுடைய * வியாபாரசத்தியாமென்பது தீக்கைக்கெல்லாம் பொதுவிலக்கணமாகலானும், பிறவிக்குருடனுக்குப் படலத்தை நீக்கிய துணையானே பொருள்களைக் காட்டினலன்றிக் காண்டல் கூடாமையானும், † கந்தகாலோத்தரஞ் சிவதருமோத்தரந் தேவிகாலோத்தரஞ் சருவஞ்ஞானோத்தரம் ஞானதிலக முதலியவற்றினெல்லாம் ஆன்மா ஞானமொன்றனே வீடெய்தற்பாற்றென வரையறுத்துக் கூறுதலானும், தீக்கை மாத்திரத்தானே சிவப்பேறு கூடுமென்றல் பொருந்தாதென மறுக்க.

இனி, ஒளியானன்றி இருணீங்காதவாறுபோல ஆணவமும் ஞானத்தானன்றித் தீக்கை மாத்திரத்தானே நீங்காதெனவும், அத்துவசுத்தியின் அத்துவாக்கண் நிரம்பிக்கிடந்த சஞ்சித கன்மமாத்திரையே நீங்குமெனவும், அதனானே ஞானத்திற்கு உரியவனுவனெனவுங் கொள்க. இன்னும் விஞ்ஞானகலர்க்கு முதல்வன் உண்ணின்றவாறே தீக்கையென்னும் இயற்கைப் பெயருடைய தனது கிரியாசத்தி சங்கற்ப மாத்திரையானே மல நீக்குவதன்றி ஒளத்திரி தீக்கையான் அன்றென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலாற், கண்ணின் படலம் மருத்துவன் செய்யுந் தொழிலானன்றி நீங்காதவாறுபோல ஆன்மாவின்கண்ணதாகிய மலமுங் குரவன் செய்யும் ஒளத்திரி தீக்கையானன்றி நீங்குதல் கூடாதென்பார்க்கு அஃது யாண்டுஞ் செல்லாமையான் யாண்டுஞ் செல்வதாகிய முதல்வனது கிரியாசத்தி சங்கற்பமொன்றே மலநீக்கத்திற்குக் காரண மெனவும், கிரியாசத்தியும் ஞானசத்தியுந் தம்முள் வேறன்மையான் உபசாரத்தாற் றீக்கையெனப் பெயர்பெறும் ஒளத்திரி முதலியவை சஞ்சித வினையை நீக்கி உரிமைப்படுத்து முகத்தானே ஞானத்திற்கு அங்கமாவதன்றிச் சுதந்திரமாகா தெனவுந் தெற்றென உணர்க. முதல்வனது சங்கற்பமொன்றே உண்மையாற் றீக்கையெனப்படுமாகலின் அதுவே மலநீங்குதற்குக் காரணமெனக் கூறுதும் என்பையாயின், அது சித்தசாதனமாகலான் அதனுன் உனக்குப் போந்ததொன்றில்லையென்றுழிக. "பொருவி னிருவாணம்.....பரபதத்துளுயிர் விரவப் பயிற்று" மென்றது ஞானவழியான் ஏதுவாதல் பற்றியென்க.

---

* வியாபாரசத்தி - கிரியாசத்தி.

† இவ்வாகம வசனங்களும் இன்னோரன்ன பிறவுஞ் சிவாக்கிர பாடியத்தினும் எட்டாஞ் சூத்திரம், உகூ - ம் பக்கமுதற் காண்க.

இனி, நிருவாணதீக்கை சத்தியோநிருவாணதை யென்றும் அசத்தியோநிருவாணதை யென்றும் இருவகைப்படும். அவற் றுள், சத்தியோ நிருவாணதை அதிதீவிர சத்திநிபாத முடை யார்க்குத் தீக்கைசெய்த மாத்திரையே பொருளின் சிறப்பியல்பு புலப்படவுணர்த்திக் கண்ணுக்குப் பகல்விளக்குப்போல உடம் போடற்று நீங்கச் செய்வது. அசத்தியோ நிருவாணதையாவது மந்த முதலிய சத்திநிபாதமுடையார்க்குத் தீக்கைசெய்தபின் உடம்புமுகந்துகொண்ட வினைப்பயன் நிற்குங்காறும் உடம் போடு நின்று உடம்பு நீங்கியபின்னுதல், பதமுத்திகளின் வைகிக் காலாந்தரத்தினுதல் முத்தியடையச் செய்வது. இவ் வசத்தியோ நிருவாணதையின் விசேடம் உலகதருமிணி எனவுஞ் சிவதரு மிணி எனவும் இருவகைப்படும்.

அவற்றுள், உலகதருமிணியாவது அதன்ம மாத்திரையே சுத்திசெய்யுந் தீக்கை. பௌதிக தீக்கை யென்பதும் இது.

இனிச், சிவதருமிணியாவது தன்மமும் அதன்மமுமாகிய எல்லாக் கன்மங்களையுஞ் சுத்தி செய்யுந் தீக்கை. நைட்டிக மென்பதும் இது.

பௌதிகதீக்கை பௌதிகப் பிரமசாரிகட்கும் இல்வாழ் வார்க்கும் வானப்பிரத்தர்க்குஞ் செய்யப்படும். நைட்டிக தீக்கை நைட்டிகப் பிரமசாரிகட்குந் துறவறத்தினின்மூர்க்குஞ் செய்யப்படும்.

பௌதிகப் பிரமசாரியாவான் காலவரையறையிற் பிரம சரியவிரத முடித்து இல்லறத்திற் செல்வோன். நைட்டிகப் பிரமசாரியாவான் அவ்வாறன்றி மரணந்தம் பிரமசரிய விரதம் பூண்டுகொண்டோன். அவன் அங்கிவேட்டல் முதலிய கன்மங் களைத் துறவாமையின் மனஞ் சலித்ததாயின் ஆசாரியன் அனுஞ்ஞை பெற்று விரதவுறுப்புக்களை விதிமுறையானே மாற்றி இல்லறத்திற் சேறலும் ஒரோவழிக் கூடும். துறவறத் தினின்மூன் அங்கிவேட்டல் முதலிய கன்மங்களையுந் துறந் தமையின் அவனுக்குக் கூடாது. இவை அவ்விருவர்க்குந் தம் முள் வேற்றுமை யென்பது. நைட்டிகப் பிரமசாரிகளுந். துற வறத்தினின்மூருமாகிய நைட்டிகதீக்கைக்கு உரியராகலின் நைட் டிகர் எனவும், ஏனையோர் பௌதிக தீக்கைக்கு உரியராகலிற் பௌதிகர் எனவும் பெயர்பெற்று, இவ்வாறு நான்காச்சிரமத் தோருந் தீக்கை வேறுபாட்டான் இருதிறத்தராய் அடங்குவர் என்க.

## சைவசந்நியாசம்

இங்ஙனந் தீக்கை வேறுபாடுபற்றி இருவகையாக அடக்கிக் கூறுங் கருத்துணராதார் சைவத்தின் இரண்டே ஆச்சிரமம், நான்கில்லையெனப் பிதற்றுவர். சௌசவிதி நியாசவிதி முதலியவை நான்காச்சிரமங்கட்கும் வெவ்வேறுகச் சைவாகமங்களிற் கூறுதலானும், அசிந்திய விசுவசாதாக்கிய முதலியவற்றிற் சைவ சந்நியாசங் கொடுக்கு முறைமையும், தபசுவி விவிதிசு வித்துவான் என்னுஞ் சைவசந்நியாசத்தின் பாகுபாடும், அவற்றினின் றேர் அநுட்டிக்கு முறைமையும், அவர்க்கு இறந்துழிக் கனனஞ் செய்யு முறைமையும் பிறவும் விரித்தோதுதலானும், வேதமுஞ் சிவாகமமும் ஒன்றே யென்பது மேற்காட்டினுமாகலின் வேத வழக்கோடு முரணுதலின்மையானும், அது வேத வழக்கோடுஞ் சிவாகம வழக்கோடும் மாறுகொள்ளுவார் கூற்றேயாமென மறுக்க.

## ஆசிரியத்தன்மையினதிகாரம்

அற்றாயினுந் துறவறத்தினின்றோர்க்கு ஆசாரியாபிடேகம் விலக்கப்பட்டமையின் தீக்கை செய்தற்கு அதிகாரம் இன்றெனின், அங்ஙனம் விலக்கியது தபசுவி யென்னுஞ் சந்நியாசிக்கே ஆகலானும் நைட்டிகருக்கென்று எடுத்துக்கூறப் பட்டனவெல்லாம் நைட்டிகப் பிரமசாரிகளுஞ் சந்நியாசிகளு மென்னும் இருவருக்கும் பொதுவாகலானும், வித்துவானென்னுஞ் சந்நியாசிக்கு அங்கிகாரியமன்றி அபிடேகஞ் செய்யுமாறு அசிந்திய விசுவசாதாக்கியத்தில் விதந்தெடுத் தோதுதலானும், அங்ஙனமாயினுஞ் சாம்பவ தீக்கை மாத்திரைக்கே அதிகாரம் உண்டெனக் கோடுமெனின், அங்ஙனம் விதந்தோதாமையின் அது பொருளன்மையானும், அதுவும் வேத வழக்கோடுஞ் சிவாகம வழக்கோடும் முரணுவார் கூற்றேயாமென மறுக்க.

அங்ஙனமாயினுஞ் சைவத்தில் தீக்கை முதன்மையாகலின் வருணம் ஆச்சிரமம் பற்றித் தாரதம்மியங் கூறுதல் பொருந்தாதெனின்,—தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்களெல்லாம் வருணமும் ஆச்சிரமமும் பற்றியே தாரதம்மியம் ஓதுதலானுஞ், சிவதீக்கை ஆன்மாவுக்கே யன்றி வைதிகச் சடங்கு போல உடம்பு முதலியவற்றிற்கு அன்றெனச் சித்தாந்தசாராவலி முதலியவற்றிற் கூறுதலின், அத்தீக்கையால் ஆன்மாவின் கண்ணதாகிய பசுத்துவம் நீங்கியதன்றி உடம்பின் கண்ணதாகிய சாதி நீங்காமையானும், சாதியுந் தீக்கையாற் கழியுமாயின் ஆதி சைவம் மகாசைவம் அநுசைவம் அவாந்தர சைவம் என்னும் பகுப்பு ஏலாமையானும், மகா சைவர்க்கு விதித்த ஆசாரம்

அவாந்தர சைவராற் செய்தல் கூடாமையானும், "வேதியர் நான்கு வருணத்தார்க்குங் குரவராவார், அரசர் மூன்று வருணத் தார்க்குங் குரவராவார், வணிகர் இரண்டு வருணத்தார்க்குங் குரவராவார், சூத்திரர் சூத்திரர்க்கே குரவர்" என விதந்தோதுத லானும், "பிராமணர் முதலிய மூன்று வருணத்தின் நான்காச் சிரமத்துள்ளோருங் குரவராவார், சூத்திரரின் நைட்டிகரே குரவ ராவார், பிரணவ முதலிய மந்திரங்கட்குந் தாபன முதலியவற் றிற்கும் உரியராவார், சூத்திரரின் இல்வாழ்வார்க்கு நித்தியமாத் திரத்தினன்றி நைமித்திக முதலியவற்றின் அதிகாரம் இல்லை" யென்றும், "நித்தியத்தினும் மந்திரங்கள் பிரணவம் ஒழியவே கொள்ளப்படு" மென்றும், "அவர் அபிடேகத்திற்கே உரியரல் லர் மற்றுத்தாபன முதலியவற்றிற் கூறவேண்டுவதென்னை" யென்றும் ஆகமங்களுக்கெல்லாந் தலையான காமிகத்துள்ளே விதந்தெடுத்து ஓதுதலானும், இதனுளும் ஆச்சிரமங்கட்குத் தாரதம்மியந் தானே விளங்குதலானும், பௌதிகர்க்கு உலகதரு மிணியும் நைட்டிகர்க்குச் சிவதருமிணியுமென ஆச்சிரமங்கட்குத் தீக்கையினுந் தாரதம்மியம் உண்மையானும், சிவதருமிணி இல் வாழ்வார்க்கும் ஆமென்றற்கு மூலவசனம் இன்மையானும், ஆகாதெனவே சிவாகமங்களோடாறும் விலக்குதலானும், "நைட்டி கன் நைட்டிகனுக்கும் பௌதிகனுக்குந் தீக்கை செய்க, பௌதி கன் பௌதிகனுக்கே தீக்கை செய்க" என விதித்தலானும், வருணத்தினும் ஆச்சிரமத்தினுந் தாரதம்மியம் உண்மை தெற் றென உணரப்படுமாகலின், அதனை இல்லையென்றலும் வேத வழக்கோடுஞ் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றே யா மென மறுக்க.

சிவாகமங்களின் இல்வாழ்வார்க்கு உயர்ச்சி கூறும் வசனங்க ளெல்லாம் பரார்த்த பூசைக்கண் ஆதிசைவரைக் குறித்துக் கூறியதேயாமென்பது தெரிந்துணர்ந்துகொள்க. "பிரமசாரி கிருகியென்னும் இருவருமே குரவராவார், ஏனை இருவருங் குரவ ராகார்" என்றதூஉம் பரார்த்தபூசைக்கண் ஆதிசைவரைக் குறித்துக் கூறியதெனக் கொள்க. கிரியாவதி செய்தற்கண் அவ் விருவருமே குரவர், ஏனை இருவருங் குரவராகார் என்னுங் கருத்தான் ஒதியதென்றலும் ஒன்று. இங்ஙனங் கொள்ளாக்கால் ஏனைச் சிவாகமங்களோடு முரணுமாறு அறிக.

அற்றேல், நான்கு வருணங்களினும் *இலிங்கிகட்கும் இல் வாழ்வார்க்கும் ஆசிரியத்தன்மை உண்டெனச் சிவாகமங்களிற் கூறுதலிற் காமிகவசனம் ஒன்றே பற்றிச் சூத்திரரின் இல்வாழ்

* தவசிகள்

வார்க்கு ஆசிரியத்தன்மை இன்றெனக்கோடல் பொருந்தாதெனின்,—அற்றன்று ; நான்கு வருணத்தினும் விரத்தற்கும் இல்வாழ்வார்க்கும் ஆசிரியத்தன்மை உண்டென்றது ஏனையோரிற் சாவகாசமுடைமையிற் பொதுவிதி. காமிகத்திற் சூத்திரரின் இல்வாழ்வாரை விதந்தெடுத்தோதி விலக்கியது வேறு சாவகாசமின்றி நிரவகாசமாய் நிற்றலின் அபவாதமாகிய சிறப்புவிதியாகலாற், பொதுவிதி ஆயிரங் கூடினும் விதந்தெடுத்தோதுஞ் சிறப்புவிதி ஒன்றுனே விலக்கப்பட்டு அஃதொழிந்தவற்றின் மேற் செல்லுமென்னும் நியாயம் எல்லா நூலார்க்கும் ஒப்ப முடிந்ததாகலிற் காமிகவசனம் வலியுடைமையானென்க.

அற்றேல், காமிகவசனம் அங்ஙனங் கூறியது சூத்திரரிற் சாமானியமாகிய இல்வாழ்வாரை நோக்கியெனக் கொள்ளாமோவெனின்,—கொள்ளாம் ; என்னை ? நான்கு வருணத்தினுஞ் சாமானிய மாயினுர்க்கு ஆசிரியத்தன்மை இல்லையென்பது ஆசிரியவிலக்கணம் கூறும்வழிப் பெறப்பட்டதாகலின் வேறு எடுத்து விதந்தோதவேண்டாமையானும், அங்ஙனங் கொள்ளிற் சூத்திரரின் நைட்டிகரும் ஏனை மூன்று வருணத்து இருதிறத்தாருஞ் சாமானியராயினும் ஆசிரியத்தன்மைக்கு உரியரெனப் பொருள்பட்டு ஆசாரிய விலக்கணங் கூறிய விதிகளெல்லாம் பயனிலவாய் முடியும் ஆகலானும் என்பது.

இனி, நைட்டிகதீக்கை இல்வாழ்வார்க்கும் ஆமெனக் கொண்டு சூத்திரரின் நைட்டிகர் ஆசிரியரெனப் பொதுவாகக் கூறுதலான் நைட்டிக தீக்கையுடைய இல்வாழ்வார்க்கும் ஆசிரியத்தன்மை உண்டென்று பொருள்கொண்டு சூத்திரரின் இல்வாழ்வார்க்கு அபிடேக முதலியன இல்லையென விலக்கியதூஉம் மற்றைப் பௌதிகரையெனக் கொள்ளிற் படும் இழுக்கு என்னையெனின்,—நைட்டிகதீக்கை இல்வாழ்வார்க்கும் உண்டென்பது சிவாகம வழக்கோடு முரணிக் கூறுவார் கூற்றேயா மாகலிற் பொருந்தாதென்க. இதனுனே மூற்காலத்துச் சூத்திரரின் ஆசிரியராயினுரெல்லாம் நைட்டிகர் எனவும், அங்ஙனம் ஆசிரியராய் நைட்டிகப் பிரமசரிய விரதத்தினின்றுரிற் சிலர் விரதந்தாங்கும் ஆற்றலின்றி இல்லறம் பூண்டு விருத்திப்பொருட்டு ஆசிரியத்தன்மையும் விடாது கொண்டு மக்கண்முறைமையினும் ஆசிரியத்தன்மை வைத்தாரெனவுங் கொள்க. அஃது அவர்மரபின் தொன்மைகள் ஆராயின் இனிதுவிளங்கும். சிவாகமங்களின் ஆதிசைவர்க்கேயன்றி ஏனையோர்க்கு மக்கண் முறைமையினும் ஆசிரியத்தன்மை விதியாமையும் அறிக.

இச் சமயமுதலிய தீக்கைப்பேறு மறையோர் முதலிய மூன்று வருணத்தார்க்கும், சற்சூத்திரருக்கும், அநுலோமருக்கு

மேயாமென உணர்க. ஏஜீயோர் திருநோக்கமுதலிய தீக்கைக்கே யன்றி ஒளத்திரிதீக்கைக்கு உரியரல்லர் என்க. திருநோக்கமுதலியன சுதந்திரதீக்கையாயும் ஒளத்திரிக்கு அங்கமாயும் இருவகைப்படும். சமயவிசேடங்களும் அவ்வாறு சுதந்திர தீக்கையாயும் நிருவாணதீக்கைக்கு அங்கமாயும் இருவகைப்படும். இன்னும் இவற்றின் விரிவெல்லாஞ் சிவாகமங்களுட் காண்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

சற்சூத்திரர் அசற்சூத்திரர் என்னும் வேறுபாடு சிவாகமங்களினும், பராசரமிருதி முதலியவற்றினும், புராணங்களினும், "சூத்திராணும்" என்னும் பாணினிசூத்திரத்தின் மாபாடியங்கையடங்களினும், பிறவற்றினுங் கண்டுகொள்க. இவ்வேறுபாடு அறியாதார் சூத்திரர் என்னும் பொதுப்பெயரேபற்றிச் சற்சூத்திரரையும் அசற்சூத்திரரோடு வைத்தெண்ணி இகழ்வர்; மனிதர் என்னும் பொதுப்பெயரேபற்றி மறையோரையும் அவ்வாறு சூத்திரரோடு வைத்தெண்ணி இகழ்வர்போலும் என்றுழிக.

அல்லதூஉம், மாலயனெடு குணதத்துவத்தின் வைகுஞ் சங்காரருத்திரனுக்குஞ், சதாசிவதத்துவத்தின் வைகும் மகாசங்காரருத்திரனுகிய சதாசிவக்கடவுளுக்கும் வேறுபாடு வேதங்களெல்லாம் முழங்கவும் அவ்வேறுபாடு உணராது உருத்திரனென்னும் பொதுப்பெயரேபற்றி ஒன்றுகவைத்து மூவரென்று எண்ணியும், வேதப்புறமாகிய பாசுபதம் பாஞ்சராத்திர முதலியவற்றிற்கும், கற்பசூத்திரம்போல வேதவிதியை வகுத்துக் கூறுங் காமிகமுதலிய சிவாகமங்கட்கும் வேறுபாடு வாயவ்விய சங்கிதை முதலிய புராணங்களின் முழங்கவும் அவ்வேறுபாடு உணராது தந்திரமென்னும் பொதுப்பெயரேபற்றிச் சித்தாந்த சைவாகமங்களையுஞ் சமயநூல்களோடு வைத்தெண்ணியும் இகழும் புல்லறிவாளர் சற்சூத்திரர் அசற்சூத்திரரென்னும் வேறுபாடு அறியாது ஒன்றுக வைத்தெண்ணி இகழ்தல் வியப்பன்று என்க.

சிறப்புப்பாயிரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபாடியம்

## மங்கலவாழ்த்து

காமிகம் முதலிய சைவாகமங்களுள் ஞானபாதப்பொருளின் இகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தற்கு இரௌரவாகமத்தில் எழுந்த சிவஞானபோதநூலினைத் தமிழுலகம் உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர், சாக்கிரத்தே *அதீதத்தைப்புரியுந் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டும் முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார் :—

கல்லா னிழன்மலி
வில்லா ரருளிய
பொல்லா வினைமலர்
நல்லார் புனைவரே

எனவரும்.

வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்புரைத்தலும் என மங்கலவாழ்த்து †மூவகைப்படும். அவற்றுள், இது பொருளியல்புரைத்தல் எனக்கொள்க.

நந்திபெருமானுக்கு இந்நூலறிவுறுத்தருளிய முதலாசிரியரென்பது உணர்த்துதற்குக் கல்லாணிழல் என இடங்கூறினர். ஆண்டெழுந்தருளியிருந்து, சிவாகமப் பொருள்கள் ஒன்றே

---

* சாக்கிராதீதத்தின் இயல்பை, "பொற்புறு கருவியாவும் புணராமே யறிவிலாமைச்—சொற்பெறு மதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற-சிற்பர மதனுலுள்ளச் செயலறுத் திடவுதிக்குந்—தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந்தானே" என்னுஞ் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானுணர்க.

† இவற்றை வடநூலார் முறையே ஆசி, நமஸ்காரம், வஸ்து நிர்த்தேசம் என்பர்.

டொன்று முரணுவனவாக மலைந்து வினைய நந்திபெருமானுக்கு, இந்நூலான் மலைவு தீர்த்தருளினர் என்பார் மலைவில்லார் என்றார். இல்லார் - இல்லாகச் செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர்.

இனி, மலைவில்லார் என்பது மேருவை வில்லாகவுடையர் எனக்கொண்டு, கல்லாணிழலில் எழுந்தருளியிருந்து வீடு பேறும், மலையை வில்லாக வளைத்துப் பகைவரை வென்று போகமும் அளித்தருளியோர் எனினும் அமையும். எனவே, ஐந்தொழிற் கும் வினைமுதல் என்றவாறுயிற்று.

அருளிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச் சம்; *"உண்ணியபுகில்" என்றாற்போல. அது புனைவர் என் னும் பிறவினை முதல்வினைகொண்டு முடிந்தது. அருளுதல் - புனைந்தமைபற்றிக் கல்லாணிழலில் வீற்றிருந்து மலைவு தீர்த்தரு ளிய ஆசிரியர் கருணை மீக்கூர்தல். அருளியபொல்லார் எனப் பெய ரெச்சமுடிபாகவைத்து உரைத்தலும் ஒன்று.

பொள்ளார் பொல்லார் என மரீஇயிற்று: சுயம்புமூர்த்தி என்றதாம்.

இணைமலர் - பண்புத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன் மொழித் தொகையாய்த் திருவடியை உணர்த்திற்று. இணை என்பதனைத் திருவடிக்கு அடையாக்கி இருபெயரொட்டாகு பெயர் என்றலும் ஒன்று. இவற்றியல்பெல்லாஞ் †சூத்திர விருத்தியுள் உரைத்தாம்; ஆண்டுக்காண்க. புனைவர் என்ற தற்கேற்பத் திருவடியை மலராக உருவகஞ் செய்தாரென்றலும் ஒன்று.

நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் ‡தெளிந்து முதிர்ந்தோர். புனைதல் - §"தாடலைபோல்" அடங்கிநிற்றல். ஏகாரம் ஈற்றசை; தேற்ற மெனினும் அமையும்.

இப்பாட்டு வஞ்சித்துறை. இது கல் என்பது முதல் ஏ என் பதிறுவாய்ப் பன்னிரு சொற்களாற் கூறவே, இந்நூல் பன்னிரு சூத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுள் மும்மூன்று சொற்கள் ஒவ்வோரடியாக வைத்து நான்கடியாகக் கூறவே, இந்நூலும் அவற்றுள் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக வைத்து நான்கியலாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுள் முன்

---

* திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், நமச்சிவாயத் திருப்பதிகம் - கூ. விண்ணுற. † தொல்காப்பியச் சூத்திரவிருத்தி: சசு-ம் பக்கம். ‡தெளிந்த முதியோர் எனவும் பாடம். § திருவருட்பயன், இன்புறுநிலை: ச.

னீரடியும் ஒருவினைமுடிபும் பின்னீரடியும் பிறிதோர் வினைமுடிபு மாக இருவகைப்படுத்துச் செய்யவே, முன்னுறுசூத்திரமும் ஓரதிகாரமும், பின்னுறு சூத்திரமும் வேறோரதிகாரமுமாக இந் நூல் இரண்டதிகாரத்தாற் செய்யப்பட்டதெனவுங் குறிப்பா னுணர்த்தியவாறு காண்க. இரண்டாமோத்தின் முதற்சூத்தி ரம் "இதுவுமது" என முதலோத்தின் இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படுவ தென்பது உணர்த்துதற்கு 'மலைவு' என் பதனை ஈரடியினுஞ் சாரவைத்தார். 'கல்லானிழல்' என முத லடியில் இடங்கூறவே முதலோத்துப் பிரமாணங் கூறுவதென்ப தூஉம், இரண்டாமடியில் 'மலிவில்லாரருளிய' எனச் செய்கை கூறவே இரண்டாமோத்து இலக்கணங் கூறுவதென்பதூஉம், மூன்றுமடியிற் 'பொல்லாரிணைமலர்' எனத் திருவடி கூறவே மூன்றுமோத்துச் சாதனங் கூறுவதென்பதூஉம், நான்காமடி யில் 'நல்லார் புனைவர்' எனப் பேறு கூறவே நான்கா மோத்துப் பயன் கூறுவதென்பதூஉங் குறிப்பாற் பெறப்படும். பிறவும் இவ்வா றோர்ந்துணர்க. இங்ஙனம் நூனுதல் பொருளெல்லாங் குறிப்பாற் றன்னகத்தடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக் கணமென்றுணர்க. இவ்வாறு நால்வகைப் படுத்தோதியது இந் நூலென்பது, *"ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ்செய்தி-முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம்" என வழி நூலாசிரியர் வகுத்தோதிய வாற்றானுங் கண்டுகொள்க.

மங்கலவாழ்த்து முடிந்தது

திருச்சிற்றம்பலம்

---

## அவையடக்கம்

மங்கலவாழ்த்துக் கூறுமுகத்தான் ஈண்டைக்கு இறைவ னுவான் இவனென்பது உணர்த்தி, இனி அவையடக்கங் கூறு முகத்தான் அவ்விறைவனுல் இயம்பப்படும் நூல் உணர்ந்தாரது உயர்வும் ஏனைச் சமயநூல் உணர்ந்தாரது இழிவும் உணர்த்து கின்றார் :—

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
உணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்

எனவரும்.

---

* சிவஞானசித்தி, பரபக்கம், பாயிரம் : க0. இறைவனே.

உணர்ந்து எனவே குருமுகத்தாற் கேட்கப்படுஞ் சிவாகம நூல்பற்றி யென்பது வருவித்து உரைத்துக் கொள்ளப்படும். தமையுடையதன் எனவே தாம் தலைவனுக்கு உடைப்பொருளென் பதூஉம், எம்மையுடைமை எனவே யாம் தமக்கு உடைப்பொரு ளென்பதூஉம் பெறப்பட்டன. உடைப்பொருள் அடிமையும் உடைமையுமென இருவகைப்படும். அவற்றுள், உயிர்வருக்க மெல்லாம் இறைவனுக்கு அடிமை எனவும், மாயை கன்மங்க ளும் அவற்றின் காரியங்களும் உடைமை எனவும் உணர்ந்து கொள்க.

தன்னுணர்வார் என்புழி இரண்டனுருபு விகாரத்தாற் றொக் கது. உடைமையின் என ஏதுப்பொருட்கண் வரும் இன்னுரு பும், புணராமையான் என்னும் ஆனுருபும் தொக்குநின்றன.

எமையிகழார் என்பது எம்மைக் *"குற்றங்க ணீக்கிக் குணங் கொண்டு கோதாட்டுவா" ரன்றி இகழ்தல் செய்யாரென்க. எனவே, எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வா று கைக்கொள் வர் என்பது குறிப்பெச்சம். நம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் எனவே, தம்மையுணர்ந்தன்றித் தலைவனை உணர் தல் கூடாதென்பது பெற்றும்.

அற்றேல், †"தன்னிலை தானையறிந்தாற்—றன்னையுந் தானே காணும்" எனவும், ‡"அதிலறி வடங்கி—மன்னிடவியாபி யாய வான்பயன் றேன்றும்" எனவுந் தலைவனை யுணர்ந்தன்றித் தம்மையுணர்தல் கூடாதென்னுஞ் சார்புநூல் இதனோடு முர ணும் பிறவெனின்,—முரணுது; அஃது ஆண்டுச் சிவரூபத்தான் ஆன்மதரிசனமுஞ் சிவதரிசனத்தால் ஆன்மசுத்தியு மாமாறு கூறிற்றெனவும், இஃது ஆன்மசுத்திப்பின் சிவப்பேறுமாறு உணர்த்துகின்ற தெனவுந் தெரிந்துகொள்ளப்படு மாகலின். §"அரன்—றன்னிலை தன்னையுங் கண்டு தமைக்காணுர்" என்பத னோடு முரணுமையும் இவ்வாறே உணர்ந்துகொள்க.

இதனானே, தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா ராவார் ஆன்மலாபப் பேறுடையார் என்பது பெற்றும். அவர் சிவமேயாகலின் எம்மையுடைமை என்றார். உடைமை-உடைய ராந் தன்மை. எம்மையுடைமை யென இரண்டாவது குறிப்புப் பெயர் கோடல் அமையுமென்பது, $"இரண்டாகுவதே"

---

* திருவாசகம், திருவம்மானை. உ0-ம் திருப்பாசுரம். கோதாட்டல், சீராட்டல். † சிவப்பிரகாசம், உண்மை - உஉ. ‡ சிவப்பிரகாசம்-உண்மை - உஅ. § இந்நூல் கூ-ம் சூத்திரம், க-ம் அதி. நாடியோ.

$ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல்; க0-ம் சூத்திரம்.

என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் "புகழை யுடைமை" என உதாரணங்காட்டி யாப்புறுத்தமையானும் அறிக.

தம்மையுணரார் எனப் பொதுப்படக் கூறுதலானே, தாமொரு பொருளுண்டென்பதை உணராத உலகாயதரும், தம்மைக் குணிப்பொருளென்று உணராத புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு அடிமையென்று உணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளுஞ் சிவாத்துவிதசைவருந் தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுபரிமாணங் கோடலானும், உடையானல்லாதானே உடையானென மயங்கிக் கோடலானும், உடையானுக்குப் பரிணமங் கூறுதலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணமங் கூறுதலானும், பிறவாற்றானும் அவருந் தம்மையுணரார் எனக் கொள்க.

'தம்மையுணர்ந்தார் தன்னுணர்வார்' எனவே, தம்மையுணரார் தன்னுணரார் என்பதுதானே போதருமென்பது பற்றி உணராருரை ரென்றுழிந்தார். முன்னின்ற உணரார் எதிர்மறை விகினப்பெயர்.

அவர் உடங்கியைந்து தம்மிற் புணராமையாவது, பிறவிக் குருடர் பலர் குழீஇக்கொண்டு வேழங்காண்டல் விருப்பான் அது நின்றுழிச் சென்று கையினால் ஒவ்வோருறுப்பினைத் தைவந்து, வேழமாவது முறம்போல்வ தென்றும், உரல்போல்வ தென்றும், உலக்கை போல்வதென்றும், மலை போல்வதென்றுந் தம்முண் மாறுகொண்டு ஒருவரை யொருவர் மறுத்துக் * கலாம் விளைத்தல்போலச் சித்தாந்த சைவநெறி நின்று ஆசான் திருவருள் பெறுதார் தத்தம் உணர்விற்கேற்பச் சமய நூல்களில் ஒவ்வொன்றனை ஆராய்ந்து அவற்றிற்கூறும் ஏகதேசப் பொருள்களேபற்றிக் கூறி, ஒருவரை யொருவர் மறுத்துத் தம்முண் மாறுகொண்டு கலாம் விளைத்தல். அங்ஙனங் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையா னொருவன் நோக்கி, இவர் செவி முதலிய ஒரோ ருறுப்புக்களேபற்றிக் கூறிக் கலாம் விளைக்கின்றாரெனவும், வேழத்தினியல்பு வேறெனவுந் தெரிந்துணர்ந்து அவர்க்கு அதனை உணர்த்தலுறின், † "கொடிறும் பேதையும்" போலத் தாங் கொண்டதேபற்றி அவனையுந் தம்மொளொருவ னாகவைத்து இழித்துக் கூறி, மாறுகோடலேயன்றிப் பொருளெனக் கொள்ளமாட்

---

* கலாம் - கலகம்.

† திருவாசகம், போற்றித் திருவகவல், கூக. கொடிறு என்பதை இக்காலத்தார் குறடு என வழங்குப.

டார். அதுபற்றி அவன் வெகுளாது இவரதியல்பு இதுவென நகையாடி ஒழிந்துவிடும். அதுபோல, ஒவ்வொரு சமயநூல் பற்றி அங்ஙனம் பிணங்குவாரை அவையெல்லாம் ஒவ்வோ ரேக தேச இயைபுபற்றிக் கூறினவாகலான், அவைபற்றிப் பிணங்கற்க எனவும், பொருட்டன்மை வேறெனவும் யாம் இந்நூலாலுணர்த்தப் புகின், அவர் அதனைக் கொள்ளமாட்டாது பயிற்சிவயத்தால் தாங்கொண்டதே பற்றி எம்மையுந் தம்மொளொருவராக வைத்து இகழ்ந் துரைப்பாராகலின், அவ்வழி அவர் வெள்ளறிவு இது வென்றுழிவதேயன்றி அதனைக் கொள்ளாமென்பார் **கேளாம் புறன்** என்றார். கேட்டல் - பொருளாகக் கோடல். அது "ஊறு கேளாது" என்பதனாலும், * "கேளாரும்-வேட்ப மொழிவதாம்" என்பதனாலும் அறிக.

**புறன்**-புறச் சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும் மொழியும், புறங்கூற்று மொழியு மென்பது இரட்டுற மொழிதலாற் கொள்க. புறங்கூற்று மொழியாவது புறச் சமயிகளல்லாத பாடாணவாத சைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறும் மொழி.

இச் சமயங்களெல்லாம் புறப்புறச் சமயமும், புறச் சமயமும், அகப்புறச் சமயமும், அகச் சமயமுமென நான்கு வகைப்படும். அவற்றுள், புறப்புறச் சமயம் உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதமென அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திர மென அறுவகைப்படும். அகப்புறச் சமயம் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவ மென அறுவகைப்படும். † அகச்சமயம் பாடாணவாத சைவமுதற் சிவாத்துவிதசைவ மீறாக அறுவகைப்படும். இவையெல்லாம் அகம் புறம் என்று இரண்டாய் அடங்குமாறும் ஓர்ந்துணர்க.

இவ்வர்றிரண்டாய் அடக்கியும், அவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி நான்காக வகுத்துக் கூறுதலும் அமையு மென்பது, தொல்காப்பியத்தில் அகம் புறம் என்றிரண்டாய் அடக்கிக் கூறிய பொருளைத் தம்முள் வேறுபாடு நோக்கிப் பன்னிரு படலத்தில் அகம் அகப்புறம் புறம் புறப்புறமென நான்காகப் பகுத்தோதியவாற்றானு முணர்க. இஃதறியாதார், தொல்காப்பியமும் பன்னிரு படலமுந் தம்முண் முரணுவனவாகக் கருதி, அவற்றுள் ஒரு நூலையேபற்றி மற்றொன்றனை இகழ்வர்.

---

* திருக்குறள், சுஙி-ம் அதி. சொல்வன்மை. கூ, கேட்டார்ப்.

† அகச்சமயம் ஆறுவன.—பாடாண வாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவரவவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன.

சண்டுக்கூறிய சமயத்தாருள், உலகாயதர் முதல் ஆருகத ரீருகிய அறுவரும், வேதஞ் சிவாகம மிரண்டனையும் நிந்திக்கும் நாத்திகராயினும், ஒரு நூலென்றும் பிரமாணமென்றுங் கொண்டு ஒரு நெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப் புறச் சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன.

தார்க்கிகர்முதற் பாஞ்சராத்திரிக ரீருகிய அறுவரும், வேதம் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருள் தார்க்கிகர், * தன்னூற் பிராமாணியங் கொள்ளாமை யானும், வேதப் பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேத மாத்தி ரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங் களை இகழ்தலானும், ஏகான்மவாதிகள் ஞானகாண்ட மாத்தி ரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைமூவரும் வேத வாக்கியங்களில் தத்தம் மதத்திற்குப் பொருந்துவன மாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனைய வற்றிற் குப் பிரமாணங் கொள்ளாமையானும், வேதப்புறமாகிய நூல் களைப் பிரமாணமெனக் கோடலானும், இவ்வறுவருஞ் சிவாகம நிந்தகராகலானும் இவர் சமயம் புறச் சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன.

பாசுபதர் முதலிய ஐவரும், வேதஞ் சிவாகம மிரண்டற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறமாகிய பாசுபத முதலிய நூல்கட்குச் சிறப்புவகையாற் பிர மாணங் கோடலானும், வேதஞ் சிவாகமமிரண்டினும் ஆகா என விலக்கப் பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கிய வாத சைவர் வேதஞ் சிவாகம மிரண்டற்கும் சிறப்புவகையாற் பிர மாணங்கொண்டு, அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்த வழி ஒழுகுவாராயினும் எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரண மாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அத னுண்மை சாதிக்குஞ் சிவாகம வாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச் சமயமும் அகப்புறச் சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன.

ஏனைப்பாடாணவாத சைவர் முதலிய அறுவரும் பொரு ளுண்மையெல்லாஞ் சித்தாந்த சைவரோடொப்பக் கொள்ளும் அந்தரங்க உரிமையுடையராயினும், அவ்வப் பொருள்கட்குக் கூறுந் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுத லான் அவர்சமயம் அகச்சமயமென வேறுவைத் தெண்ணப் பட்டன.

---

* இதனைத் தருக்கசங்கிரக வுரையிற் சத்தப்பிரமாணங் கூறும் வழிக் காண்க.

இவ்வாறு நால்வகைச் சமயங்கட்குஞ் சித்தாந்த சைவத் தோடுளதாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

அகச்சமயமாறனுட் சிவாத்துவித சைவமாவது நிமித்த காரணத்துக்குப் பரிணமங் கூறுவதாகலின், அது நிமித்த காரண பரிணமவாதம் எனவுங் கூறப்படும். அங்ஙனங்கொண்ட சிவாத்துவிதசைவர் கருத்தறாதார் சிவாத்துவித சைவமாவது யாதோவெனவும், * "நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்—குலவின ரளவளாவா" என்றமையின், இறுதிக்கண் எடுத்தோதப்படுஞ் சுத்த சைவம்போலுமெனவும் மயங்குவர். சுத்த சைவம் நூட்பப் பொருளுணராமை மாத்திரையேபற்றி வேறு வைக்கப்பட்ட தன்றிக் கருத்துவகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்மை யிற் சுத்தசைவஞ் சித்தாந்த சைவத்துள் அடங்குமென் றுணர்க. அற்றாகலினன்றே, * "நிலவுலகாய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்—குலவின ரளவளாவாக் கொள்கையதாகி" என ஏனைச் சமயங்களே எடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்கா தொழிந்ததூஉ மென்க.

இனி, இவ்வாறன்றிப் பாடாணவாதத்திற்கும் பேத வாதத்திற்குந் தம்முள் வேறுபாடு சிறிதாகலின், அவ்விரண் டனையும் ஒன்றாகவைத் தெண்ணிச் சுத்தசைவத்தையு முடன் கூட்டி அகச்சமய மாறெனக் கோடலுமொன்று. இங்ஙன மாகலான் †"மெய்தரு சைவ மாதி யிருமூன்றும்" என்றதூஉம் பாடாணவாத முதலிய அறுவகைச் சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர் முதலியோர் கலைக்கு மேலுள்ள தத்து வங்களை உணராமையின், அவர் † "வித்தையாதி—யெய்துதத் துவங்களேய்வர்" எனக் கோடல் பொருந்தாமை அறிக. ஐக்கிய வாத சைவர் கலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொண் டாராயினும், மூலமலம் உண்டென்ப தறியாமையின் மூலமல நீங்கிய முத்தர்க்கன்றிச் சுத்ததத்துவ புவனங்களி லெய்துதல் கூடாமையின், அவர்க்கு முத்தித்தானம் மோகினிக்குமேற் சுத்த வித்தைக்குக் கீழ் விஞ்ஞான கலர்க்குரிய தானமேயா மாகலின், ஏனைப்பாடாண வாதசைவர் முதலியோரே, ‡ "வித் தையாதி.....தத்துவங்களேய்வர்" என்றறிக. ‡ "புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத்தொளியாய" என்புழியும் அகச்சமய மென்றது, § "ஏகனேக னிருள்கரும மாயை யிரண்டு"

---

* சிவப்பிரகாசம், உண்மை: சக.

† சிவஞானசித்தி, உ - ம் சூத்திரம். எக.

‡ சிவப்பிரகாசம், பாயிரம்: எ.

§ திருவருட்பயன், அறியுநெறி: உ.

என்னும் ஆறுபொருளுங்கொண்ட பாடாணவாத முதலிய அறு வகைச் சைவங்களேயெனவும், புறச்சமய மென்றது அங்ஙனம் பொருளுண்மை கொள்ளாத ஏனை மூவகைப் புறச் சமயங்களேயு மெனவும் உணர்ந்து கொள்க.

## புறப்புறச்சமயம்

### உலகாயதம்.

புறப்புறச் சமயமாதனுள் * உலகாயதமாவது,—காண்ட லளவை ஒன்றே பிரமாணம்; காணப்படும் நிலம் நீர் தீ வளி யென நான்கே தத்துவங்கள்; இவை நித்தப்பொருள்கள்; இவற்றின் கூட்டமே உடம்பு; பாகடையுஞ் சுண்ணும்புங் கூடிய வழிச் செவ்வண்ணம் பிறக்குமாறுபோல இவற்றின் கூட்டரவின் ஒருணர்வுண்டாம்; அவ்வுணர்வு உடம்பு வளர வளரும் தேயத் தேயுமாகலின், உடம்பிற்கு வேறே யுயிரென்பதும் பொய்: உடம்பிற்கு இன்பத்துன்பங்கள் இயல்பாயுள்ளன; இவற்றிற்குக் காரணம் வினை யென்பதும் பொய்: மயிலைச் சித்திரித்தாரையுங் குயிலைக் கூவுவித்தாரையுங் காணுமையிற் கடவுளுண்டென்பதும் பொய்; இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்து உண்டுடுத்து வாழ்வதே துறக்க மின்பம்: அதுபெறுது பகை வரால் நோயால் வறுமையால் நூல்களாற் பிறவாற்றால் வருந்து வதே நிரயத்துன்பம்; வேறே துறக்க நிரயமுள என்பதும் பொய்: நான்கு பூதக் கூட்டரவிற் பிராணவாயு ஒன்று நீங்கில் உணர்விழந்து உடம்பு நாசமாம்; அதுவே வீடுபேறு; வேறே வீடுபேறுண்டென்பதும் பொய்; இவ்வுண்மை யுணராத மட வோர் மறுமை யுண்டெனக்கொண்டு தவங்கள் பட்டினி முதலிய வற்றான் வருந்துவர், கற்பு முதலிய † சங்கேத நூல்கள் மதுகை யின்றி மதியுடையோராற் செய்யப்பட்டன: பொன் நிலம் உணவு முதலிய தானங்களே உயர்த்துக்கூறும் நூல்கள் பசியான்வருந்தி நல்கூர்ந்தோராற் செய்யப்பட்டன: தேவகுலந் தண்ணீர்ப்பந்தர் கூவல் பொய்கை சோலை முதலியன செய்தலே உயர்த்துக் கூறும் நூல்கள் வழிச்செல்வோராற் கூறப்பட்டன; ஆகலான் இவற் றைக் கைவிட்டு உழவு பசுக்காவல் வாணிகம் செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்று இம்மையின்பங்களே துகர்ந்து வாழ்தல் உறுதிப் பயன் என் பதாம்.

* இவ்வுலகாயத மதம் சாருவாகமத மெனவும் பெயர்பெறும்.

† சங்கேதம் - நியமனம்.

இவ்வுலகாயத நூல் செய்தோன், * பிருகற்பதி யென்றுணர்க. இவ்வுலகாயதர் தேகான்ம வாதிகளும், இந்திரியான்மவாதிகளும், பிராணன்ம வாதிகளும், அந்தக்கரணன்ம வாதிகளுமெனப் பலதிறப்படுவர்.

## பௌத்தம்

இனிப் பௌத்தமாவது:—உலகத்துப் பிறந்திறந்துழன்று சில முதலியவற்றுன் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப்போற் பிறரு முணர்ந்து உய்தற் பொருட்டுக் கருணையினூற் பிடகநூல் செய்தவன் புத்தக்கடவுள்; அந் நூலிற் கூறும் பொருள்களாவன ஞானமே ஆன்மா எனப்படும்; அது நீரோட்டம்போலச் † சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அங்ஙனம் தோன்றி யழியுங்கால் ‡ மான்மத நாற்றம்போல முற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்திற் றேன்றிய வாசனை, பிற்கணத்திற்றேன்றும் ஞானத்திற் பற்றுதலான் அறிவு முதலாயின நிகழும்; மற்றும் உள்பொருளெனப் பட்டவையெல்லாங் கணந்தோறுந் தோன்றியழியும்; இந்த ஞானத்திற்றேன்றிய வாசனை அழிவதே முத்தி என்பதாம். ஞானங் கூடக் கெடுதல் முத்தி என்பாருமுளர்.

இப்பௌத்தமதத்தர் மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகரென நால்வகைப்படுவர். இந் நால்வரும், முறையே எல்லாப் பொருளுஞ் சூனியமெனவும், புறப்பொருள் சூனியமெனவும், புறப்பொருளுண்மை வழியளவையான் அறியப்படுமெனவும், புறப்பொருள் காட்சி பொருளாமெனவுங் கூறுப. இந் நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்.

## மாத்தியமிகர்

இவருள், மாத்தியமிகராவார்:—உலகத்துப் பொருள்கள் உள்பொருளாயின் அழியா; இல்பொருளாயின் தோன்றா; உள்ளவுமில்லவுமாமெனின் முரணும்; இரண்டுமல்லவெனின் உணர்ச்சி கூடா; ஆகலின் இந் நான்கு பகுதியுமின்மையான் எல்லாப்பொருளுஞ் சூனியமே; மயக்கத்தாற் காட்சிப் பொருள் போலப் புலப்படுகின்றனவென ஆசிரியன் பிடகநூற் பொருள் உணர்த்தியவழி அதனை உண்மையாகக்கொண்டு மேல் விஞ்ஞாதார்.

---

* பிருகற்பதி – தேவகுரு.

† சந்தான மென்பது தொடர்ச்சி.

‡ முன் மான்மதம் வைத்தொடுக்கப் பட்டொழிந்த பெட்டியில் பின் வைக்கப் படும்பொருளும் அதன் வாசனை பற்றுதல்போல என்க.

ஆசிரியன் மொழிந்தது பொருளெனக் கோடலிற் றலை மாணாக்கர், அதற்குமேல் விஞ்ஞகிழத்தாமையிற் கடைமாணாக் கரென இரண்டும் ஒருங்குற்று நின்றமையின், மத்தியமமாணாக் கராய் மாத்தியமிகர் எனப் பெயர் பெற்றார் என்பது.

யோகாசாரர்

இனி, யோகாசாரராவார்:—அங்ஙனம் ஆசிரியன் உணர்த் தியவழிப் புறப்பொருள் பாழென்பதனோ டடம்பட்டு ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றே? என விஞ்யினர்க்கு, நன்றே விஞ்யினீர்! ஞானமாத்திரம் உள்ளது; அந்தஞானம் சாகாரம் நிராகாரம் என்று இருவகைப்படும்; அவற்றுள், வட்டம் சதுரம் கறுப்பு சிவப்பு முதலிய வடிவிற் றாய் அகத்தே தோன்றும் ஞானம் சாகாரமெனவும், பந்தம் நீங்கியவழி அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் எழுவதாகிய ஞானம் நிராகாரமெனவுங் கூறப்படும். இத் தன்மைத்தாகிய ஞானமேயன்றிப் பொருளென வேறில்லை; கனவின்கட் புறப்பொருளை அவாவாது கேவலஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின்கண் வழங்குவதும் அவ்வாறே யாம்; அவ்வுணர்வு அகத்தின் நிகழ்வதேயாயினும் அநாதி வாசனை வயத்தாற் புறத்தே காணப்படுவது போலத் தோன்று நின்றதெனக்கொள்க என்று ஆசிரியனுணர்த்தினன். அங் ஙனம் உணர்த்தப்பட்டோர், ஆசிரியன் மொழிந்ததனை உடம் பட்டு அதற்குமேல் விஞ்யிஞராகலின் யோகாசாரரென்றுயினர் என்பது.

பௌத்தமதத்தில் ஆசிரியன்மொழி உடம்படுதலை ஆசார மெனவும் அதற்குமேல் விஞ்ஞுதலை யோகமெனவுங் குறியிட்டு வழங்குபவாகலான், அவ்விரண்டானும் பெற்ற பெயர் என் றுணர்க.

சௌத்திராந்திகர்

இனிச், சௌத்திராந்திகராவார்:—அங்ஙனம் ஆசிரியனு ணர்த்தியவழிப் புறப்பொருண் முழுவதுஞ் சூனியம் என்ப தென்னை? யான் இது கண்டேனென்று உணர்வுழி யான் என் னும் ஞானம் அகத்துப்பொருளும் இது என்று சுட்டியறியப் படுவது புறத்துப்பொருளுமாகலான் அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டும் ஒருங்குணர்தலை பற்றி ஒன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டு மொருங் குணர் தல் எனவே, வேறுபாடின்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படம் முதலியனவாகத் தோன்றுகின்ற தெனக் கோடல் பொருத்தமன்று என விஞ்யினர்க்கு,

நன்றே விளையினீர்! புறத்தைத் தோன்றுவனவும் உள்பொருளே யாம்; அவை காட்சிப் பொருளல்ல; குடவடிவிற்றாகிய ஞான மூணர்ந்த பின்னன்றிக் குடமூணர்தல் கூடாமையிற் கணத்திற் றோன்றியழியுங் குடமுதலாயின அங்ஙனம் உணருங்காறும் நிலைபெறுதலின்மையாற் குடமுதலாயின சத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டழிந்த பின்னை, ஞானத்துட்பற்றிய வடிவானே அங்ஙனம் இறந்துபோய குட முதலாயின வழி யளவையின் வைத்து உணரப்படும். இவற்றிற்குக் காரணம் என்னையெனின், புறம் அகம் என்னும் இருவகைச் சமுதாய மாம். அவற்றுட் புறச்சமுதாயம் நில முதலாயின. அவற் றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை, நிலவணு நீரணு தீயணு வளியணு என நால்வகைப்படும். அவை ஒருங்கு பல தொக்கவழிப் புறச்சமுதாயந் தோன்றும். இனி, அகச் சமுதாயம் சித்தமுஞ் சித்தப்பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படுங் கந்தங்கள்; அவை, உருவம் வேதனை ஞானங் குறி வாசனை என்பனவாம். கந்தமென்பது சமூகம் என்னும் பொருட்டு. அவற்றுட் சித்தத்தாற் சிந்திக்கப்படுஞ் சத்த முதலாயின உருவக்கந்தம். இவை புறத்துள்ளன வாயினும் அகத்திற் சித்தத்தாற் சிந்திக்கப்படுதலின், அகச் சமுதாயத்துள் வைத்து எண்ணப்பட்டன. இனி, அகச் சமுதாயத்துட்பட்ட உடல் பொறி முதலியவற்றை உருவக் கந்தம் என்றலு மொன்று. அவ்வுருவக்கந்தத்தை உணரு மூணர்வு ஞானக்கந்தம்; அது சாகாரம் நிராகாரம் என்னும் வேறுபாட்டாற்* பிரவிருத்தி விஞ்ஞானமென்றும் †ஆலய விஞ் ஞானமென்றும் இருவகைப்படும். சாகாரஞ் சவிகற்பமாம். நிரா காரம் நிருவிகற்பமாம். இனி, இவ்வுணர்வாற்றோன்றும் இன்பத் துன்ப நொதுமல்கள் வேதனைக்கந்தம். சாத்தன் கொற்றன் முத லிய பெயர்கள் குறிக்கந்தம். அப்பெயர்களாற் பகுத்துணருஞ் சவிகற்பவுணர்வு குறிக்கந்தமெனவும், நிருவிகற்பமொன்றே ஞானக் கந்தமெனவுங் கோடலுமொன்று. அவற்றின் வாசனை வாசனைக்கந்தமாம். வாசனையெனினுஞ் செய்கையெனினும் ஒக் கும். குறியெனினுஞ் சஞ்ஞையெனினும் ஒக்கும். இவ்வைந்தும் ஒருங்கே தொகுதலான் அகச்சமுதாயந்தோன்றும். இவற்றுள், உருவக்கந்தம் புறச்சமுதாயத்துள் வைக்கப்படும். ஏனை நான் குமே சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் என்பாரு மூளர். சகமுழுதும் இவ்விருவகைச் சமுதாயத்துள் அடங்கு மென்று ஆசிரியன் உணர்த்தினன். அதுகேட்ட மாணாக்கர்,

---

* பிரவிருத்தி விஞ்ஞானம் - சவிகற்பமாய் விரியும் ஞானம்.

† ஆலய விஞ்ஞானம் - அங்ஙனமன்றி ஒடுங்கும் ஞானம்.

இங்ஙனம் மாணாக்கர் விஞ்சிய கடாவிற்கேற்ப அறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவுபெறுமெனக் கடாயினர். அவ் வழி ஆசிரியன் சூத்திராந்தங் கடாவிய நீர் சௌத்திராந்திக ரெனப் பெயர்பெறுக என்றமையின், அவர்க்கு அது பெயரா யிற்று.

### வைபாடிகர்

இனி, வைபாடிகராவார் :—ஆசிரியன் அங்ஙனம் உணர்த் தியவழி அதுகேட்ட மாணாக்கர் புறப்பொருள் ஞானத்தால் அதுமித்தறியற்பாற் றென்றதென்னே? ஞானமே தனக்குக் காட்சிப்பொரு ளாகலானும், காட்சிப்பொருள் ஒன்றுமின்மை யின், * வியாத்தியுணர்தற்கு இடமின்மையான் வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோளுரைபோலுமெனக் கடாயினா ராகலின், அவர் வைபாடிகர் எனப்பட்டார். மாறுகோளுரை எனினும் விபாடை எனினும் ஒக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப்பொருளாம் எனவும் ஆசிரியன் உணர்த்தினன்.

இங்ஙனம் விஞ்சியினர் கருத்துக்கேற்ப நால்வகைப் படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்க முதலியவற்றை உடம்பட்டுக் கோடலான் எல்லாரும் முறையானே முழுதுஞ் சூனியம் என்று கோடற்குரியர் என்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் விஞ்சியினர் கருத்துக் கேற்ப ஆசிரியன் கூறிய விடைப்பொருளை உறுதியாகக் கோடலின், மதம் வேறுபட்டு நால்வராயினர். இங் ஙனம் பௌத்தமதம் நான்குங் கண்டுகொள்க.

### ஆருகதம்

இனி, ஆருகதமாவது :—சீவனும் அசீவனும் ஆச்சிரவமும் சமுவரமும் நிர்ச்சரமும் பந்தமும் வீடுமெனப் பதார்த்தங்கள் ஏழுள. இவற்றுட் சீவன் அநாதிசித்தனும் முத்தனும் பெத்தனு மென மூவகைப்படும். இவற்றுள் அநாதிசித்தன் அருகக்கடவுள். முத்தன் †மோகமுதலிய பந்தத்தின் நீங்கியவன். பெத்தன் அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்த உடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறும்.

இனி அசீவன், புற்கலமும் ஆகாயமும் தன்மமும் அதன் மமுமென நான்குவகைப்படும். அவற்றுள் உருவப்பொருளான நிலமுதலிய நாற்பெரும் பூதமும், மரம் புல்லு முதலிய கிலேயியற்

* வியாத்தி – நியதமான உடனிகழ்ச்சி.

† மோகம் முதலியன :—மோகம், அந்தராயம், கோத்திரம், நாமம், ஆயுஷ்யம், வேதனீயம், தரிசனாவரணீயம், ஞானாவரணீயம் என்பன.

பொருளும், பை முட்டை முதலியவற்றிற் பிறக்கும் இயங்கியற் பொருளுமெனப் புற்கலம் அறுவகைப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். உலகாகாயமும் உலகங்கடந்த ஆகாயமுமென ஆகாயம் இருவகைப்படும். உலகங்களுக்கு உட்படுமாகாயம் உலகாகாயமெனவும், உலகங்கட்குப் புறத்தே எல்லையின்றியுள்ளது உலகங்கடந்த வாகாயமெனவும் உணர்க. தன்மம் புற்கலத்தின் வேறாய் நன்மையைப் பயப்பது. அதன்மம் தீமையைப் பயப்பது. அசிவபதார்த்தவகை நான்கும் இங்ஙனங் கண்டுகொள்க. இவையெல்லாம் அத்திகாயமென்னும் வாய்பாடுகூட்டி வழங்கப்படும்.

இனி ஆச்சிரவமாவது, பொறிவழிச்சேறல்; கன்மத்தொடர்ச்சி யென்பாரும் உளர்.

சமுவரமாவது, அங்ஙனஞ்செல்லாமற்றடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்தின் எறும்பு முதலியன சாவாது வழிநோக்கி மெல்லமெல்ல வியங்குதலும், இனியவை கூறுதலும், நியமவுணவும் முதலாயினவாம்.

நிர்ச்சரமாவது, சுடுபாறையிற்கிடத்தல் தலைமயிர் பறித்தன் முதலிய தவம்.

பந்தமாவது, இருப்புக்குடம்பை தன்னகப்பட்ட சுரைப்பழத்தை நீர் நிலையிற் கீழ்ச்செலுத்துமாறு போலச் சிவனுடைய சுதந்திரத்தை அடக்கிப் பிறவியிற் சுழல்விக்கும் மோக முதலிய எண்குணங்களுமாம்.

வீடாவது, இருப்புக்குடம்பை தகர்ந்தவழிச் சுரைப்பழம் மேலெழுமாறு போலச் சிவன் மோக முதலியவற்றின் நீங்கிச் சுதந்திரம் பெற்று உலகங்கடந்து எல்லையின்றியுளதாகிய ஆகாயத்தின் மேனோக்கிய சேறல். மேலெல்லைக்கண் இருத்தல் முத்தியென்பாரும் உளர்.

இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் அநேகாந்தவாதத்தாற் கூறப்படும். அஃதாவது உடம்பெடுத்தற்கு முன் சிவனுண்டோ? இல்லையோ? என்று வினாவழி, உண்டாம், இல்லையாம், உண்டுமில்லையுமாம், சொல்லொணாதாம், உண்டுமாஞ்சொல்லொணாதுமாம், இல்லையுமாஞ்சொல்லொணாதுமாம், உண்டுமில்லையுமாஞ் சொல்லொணாதுமாமென எழுவகையான் இறுத்தல். வினாவையெல்லாம் இவ்வாறே இறுக்கப்படும். ஆம் என்பது உண்டுச் சற்றென்னும் பொருட்டாயதோ ரிடைச்சொல். சொல்லொணாதது என்பது உளதுமிலதுமல்லாதது என்னும் பொருட்டென்பது. எனவே, உள்ளதும் இல்லதும் உளதில

தும் இரண்டுமல்லதுமென நான்குபக்கமாய், இரண்டுமல்லதென்னும் பொருட்டாகிய சொல்லொணாதென்பதனோடு உள்ளதும் இல்லதும் உளதிலதும் என்னும் மூன்றுங்கூட்ட *ஏழுபக்கமாயின வெனக் காண்க.

பொருளியல்பு இவ்வெழுவகையுள் ஒன்றுகச் சொல்லவும் பிறிஞ் சொல்லவும்படாது என்பது கருத்தாகலின், முரணுமையு மறிக. இவ்வெழுவகையுள் ஒவ்வொன்றேபற்றிக் கூறும் ஏனைச் சமயத்தார் கோட்பாடெல்லாம் உள்ளடக்கி நிற்றலின், இங்ஙனம் அநேகாந்த வாதங் கூறுஞ் சமயமே மேற்பட்ட சமயம் என்பது அவர்கருத்து. ஆருகதம் முடிந்தது.

இவருள், உலகாயதன் காட்சிவாதியெனவும், பௌத்தன் கணபங்கவாதியெனவும், ஆருகதன் அநேகாந்தவாதி யெனவும், பௌத்தருள்ளும் மாத்தியமிகன் சூனியவாதியெனவும் யோகாசாரன் விஞ்ஞானவாதியெனவும் ஏனை இருவருஞ் சமுதாயவாதிகளெனவும் உணர்க. இவ்வாறு புறப்புறச் சமயமாறுங் கண்டுகொள்க.

## புறச்சமயம்

### தருக்கம்

இனிப் புறச்சமயமாறனுள் தருக்கமாவது :—வைசேடிகமும் நையாயிகமுமென இருவகைப்படும். அவற்றுள், வைசேடிக நூலிற் கூறும் பொருளாவன, திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மை யெனப் பதார்த்தம் எழுவகைப்படும்.

அவற்றுள் திரவியம், நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனமென ஒன்பது வகைப்படும். அவற்றுள், நில முதலிய நான்கும் அநித்தப் பொருள்கள். அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாய முதலிய ஐந்தும் நித்தப்பொருள்கள். அவற்றுள், ஆகாயம் காலம் திசை மூன்றும் ஒரோவொன்றேயாய் வியாபகமாயுள்ளன. ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணிறந்தவாம். மனம் அணுவளவிற்றாய் ஆன்மாக்கடோறும் வெவ்வேறுபிரிருக்கும். ஆன்மா பரமான்மா சீவான்மாவென இருவகைப்படும். பரமான்மா முற்றுணர்வுடை-

---

* வடநூலார் இவற்றைச் சப்தபங்கமென்றும் சப்தபங்கமாகக் கூறுவதைச் சப்தபங்கி நியாயமென்றுங் கூறுவர். இதனை நீலகண்டபாடியத்தினுங் காண்க.

யவன் ; எல்லாம் வல்லவன் ; அவனிச்சை வயத்தானே உலகந் தோன்றி ஒடுங்கும் ; அவனுற் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவான்மாக்கள், சிற்றறிவினவாய் விணைக்கிடாகப் பிறந்திறந்து இன்பத்துன்பங்களை நுகர்வனவாம். ஆன்மாக்களுக்கு மனத் தோடு கூடாதவழி அறிவில்லை. இங்ஙனந் திரவியம் ஒன்பதுங் கண்டுகொள்க.

இனிக் குணங்களாவன, திரவியம் பற்றுக்கோடாக நிகழ் வன. அவை, உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்து நான்கு வகைப்படும். அவற்றுள், புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவம் என்னும் எட் டுக்குணமும், *பாவனை யென்னும் வாதனையுஞ் சீவான்மாக்க ளுக்குச் சிறப்புக்குணங்கள். இவற்றுள், புத்தி விருப்பு முயற்சி மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக்குணங்கள். பரமான்மா வின் குணங்களாகிய புத்தி முதலிய மூன்றும் அநித்தியம். ஏனையவும் ஓர்ந்துகொள்க.

தொழிலாவன, எழும்பல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத் தலென ஐவகைப்படும்.

சாதியாவது, பலபொருட்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரமென இருவகைப்படும்.

விசேடமாவது, ஒவ்வொரு பொருட்கே உரிய தன்மை. அவை, நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாய முதலிய ஐந்துமாகிய நித்தப் பொருள்களின் வேறுபாடுணர நிற்பன வாய்ப் பலவாம்.

சமவாயமாவது, அவயவ முதலியவற்றிற்கு அவயவி முத லியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு. அஃது ஒன்றே யாம்.

இன்மையாவது, முன்னின்மையும் அழிவுபாட்டின்மையும் என்று மின்மையும் ஒன்றினொன்றின்மையுமென நான்கு வகைப் படும்.

ஆக இங்ஙனங்கூறும் எழுவகைப் பொருள்களின் சிறப் பியல்பு பொதுவியல்பு வேற்றியல்புகளை உணரவே உடம்பு முத லியவற்றின் வேறுகிய ஆன்மாவினியல்பு விளங்கும் ; விளங்கவே, உடம்பு முதலியவற்றை நானென்று எண்ணிய மித்தையுணர்வு கழியும் ; அது கழியவே, முயற்சியின்மையின், அறம்பாவங்கள்

* பாவனை - அநுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமா யுள்ளது.

இல்லையாய்ப் பிறவி ஒழியும்; ஒழியவே, வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின், உடம்பு முகந்துகொண்ட வினைப்பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மணத்தோடு கூடுதற் கேதுவின்மையின், அறிவின்றிப் பாடாணம்போற் கிடப்பதே முத்தியென்பதாம். வைசேடிக நூல் செய்தவன் கணாதமுனிவன்.

இனி நையாயிகமாவது:—வைசேடிகநூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்துப் பிரமாணம் பிரமேய முதலாகப் *பதினாறுவகையான் விரித்துக் கூறுவதாம். நையாயிகநூல் செய்தவன் அக்கபாத முனிவன்.

இங்ஙனம் இருவேறுவகைப்படுந் தருக்கநூலார் சிலவற்றிற் †குக்கணபங்கங்கோடலின் அத்தவைநாசிகரெனவும், புத்தநூலார் எல்லாப் பொருட்குங் கணபங்கங் கோடலின் முழுவைநாசிக ரெனவும் உணர்க. தருக்கநூலார் சிலவற்றிற்குக் கணபங்கங் கூறுமாறுவது, உண்டவுணவின் சாரமே அவயவங்களாய்ப் பரிணமித்துக் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வேறுபடுதலின், அவயவியாகிய உடம்பும் வளர்ந்துந் தேய்ந்துங் கணந்தோறும் பிறிதுபிறிதாம்; அங்ஙனங் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும், மழைத்தாரையால் நிறையும் பொய்கைநீரும் இறைப்பக் குறையுங் கூவனீரும்போல முடிவின்கட் காணப்படுதலின், கணந்தோறும் வளர்தலுந் தேய்தலுமுடைமை பெற்றும். இவ்வாறே மண்டொடுதல் பூரித்தல் முதலியவற்றுல் நிலமும், யாற்றுநீர்ப் பெருக்கு முதலியவற்றுற் கடலும், கணந்தோறும் நிறைவு குறைவுடைமையான் இன்னோரன்னவையெல்லாங் கணபங்கமாய்ப் பிறிதுபிறிது தோன்றுமெனக் கொள்வர்.

சௌத்திராந்திகரும் வைபாடிகருஞ் சமணருந் தார்க்கிகரும் பரமாணுகாரணவாதிகளாயினும், அவருட் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் பரமாணுக்கள் ஒருங்கு பல தொக்குக் காரியமாமென்பர்; தார்க்கிகர் இறைவனிச்சை வயத்தாற் பரமாணுக்களிற் கிரியையுதோன்றி, இவ்விரண்டு பரமாணுக்கள் தம்மிற்சேர்ந்து இரட்டையணுவாய், அவை மும்மூன்று தம்

---

* பதினாறு வகையாவன—பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானமென்னும் இவை. இவற்றின் விரிவைத் தர்க்க பரிபாஷையினுங் காண்க.

† அத்தம் - பாதி. வைநாசிகர் - விநாசங்கொள்பவர். விநாசம் பங்கம் அழிவு என்பன ஒரு பொருட்சொற்கள்.

மூட்சேர்ந்து மும்மையணுவாய், அவை நந்நான்கு தம்மூட் சேர்ந்து நான்மையணுவாய், இவ்வாறே ஒன்றற்கொன்று சிறீ யும் முதலுமாய் முறையே தோன்றிக் காரியப்படுமென்றும், ஒடுங்குங்காலும் இறைவனிச்சையைத்தான் அம்முறையே ஒடுங்குமென்றுங் கொள்வர்.

தார்க்கிகரும் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் நிலவணு நீரணு தீயணு வளியணுவெனப் பரமாணுக்கள் நால்வகைப்படு மெனக் கொள்வர். சமணர் அவ்வாறு கொள்ளாது பரமாணுக் களெல்லாம் ஒருதன்மையனவே என்பர். இவை தம்முள் வேற்றுமை.

இங்ஙனமாயினுந் தார்க்கிகர், வேதநெறியி னெழுகி வேதத் திற்குப் பிரமாணங் கோடலின், புறப்புறச் சமயிகளாகிய நாத் திகரோடு சேராது வைதிகருள்வைத் தெண்ணப்பட்டா ரென்க. தார்க்கிகமதம் முடிந்தது.

## மீமாஞ்சை

இனி மீமாஞ்சையாவது:—வேதத்தி ற் கர்மகாண்ட வாராய்ச்சி செய்தற்கெழுந்த நூலாகலின், அதுவும் வேதமெனப் படும். அது, பன்னிரண்டத்தியாயமாகச் சைமினி முனிவனற் செய்யப்பட்டது.

அந்நூலுட் கூறும் பொருளாவது:—வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியே சுயம்புவாயுள்ளது; அங்ஙன மாகலின் வேதம் பிரமாண மெனப்படும்.

வேதத்துள்ளும் "நீராடுக," "வேள்வி செய்க," "வழிபடுக" என்றாற்போலத் தொழிற்படுத்துவனவாகிய சோதக வாக்கியங் களே பிரமாணமாம். உலகத்துச் சொற்பொருளுணரும் அவா வினராகிய இளையோர், "ஆவினை யாக்க" "மேதியை விடுக்க" என ஏவும் முதியோன் கூறும்மொழி கேட்டும், அதுபற்றி இயற் றும் முதியோன் செய்யுந் தொழிலினைக் கண்டும், பின்பு "மேதியை யாக்க," "ஆவினை விடுக்க" எனமாறிக் கூறியவழி அங்ஙனஞ் செய்யுந் தொழிலினைக் கண்டும், இச்சொற்கு இது பொருள் இச்சொற்கு இது பொருளெனவும், இங்ஙனஞ் சொற் பொருளெல்லாந் தொழிற் படுத்துஞ் சொல்லானே உணர்தற் பாலன எனவும் உணர்ந்துகொள்வாராகலின், வேதத்தினும் அவ்வாறு தொழிற்படுத்துஞ் சொற்களே பொருள்விளக்கிப் பிரமாணமா மென்பது தெளியப்படும்.

அங்ஙனமன்றி, "உலகந்தோன்றி யொடுங்கும்" என்றும், "தோற்றியொடுக்குதற் கோரிறைவனுண்டு" என்றும், "இந்திரன் முதலிய கடவுளர் உளர்" என்றும், "அவர் இவ்வியல்பினர்" என்றும் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமாகாவாயினும், அவை தொழிற் படுத்துவனவாகிய சோதகவாக்கியங்கட்குப் புனைந்துரைவகையான் உபகார மாதல்பற்றிப் பிரமாணமெனக் கொள்ளப்படும்.

"இந்திராயசுவாகா", "வருணாயசுவாகா" என்றாற்போலும் வேதமந்திரங்களும் பொருளுடைய வல்லவாயினும் விதிவாக்கியங்கட்கு உபகாரமாதல்பற்றிப் பிரமாண மெனப்படும்.

"சோதிட்டோமம்" "பரிமேதம்" என்றாற்போலும் வேள்விப்பெயர்களும், வேள்விகளின் வேறுபாடு முதலியன உணர நிற்றலிற் பிரமாணமாம்.

இங்ஙனம் வேதத்தின் விதிவாக்கியமல்லாதனவும் ஒருவாற்றான் விதிக்கு உபகாரப் படுதல்பற்றிப் பிரமாணமென்று உபசரித்துக் கொள்ளப்படும்.

வேதமெல்லாம் இங்ஙனம் விதியும் புனைந்துரையும் மந்திரமுங் குறியீடுமென நான்கு வகைப்படும். இவற்றுள், விதி அங்கியும் ஏனை மூன்றும் விதிக்கு அங்கமுமாம். விதிவாக்கியம் விதித்தலும் விலக்குதலுமென இருவகைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும் அறமும் பாவமுமென இருவகைத்து.

"ஆன்மாவை அறிக" என விதித்தலின் ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்ப் பிறந்திறந்து வினைகளைச் செய்து வினைப்பயன்களை நுகர்ந்துவரும்.

வினைசெய்தவர்க்கு வினையே துறக்கமுதலிய பயன்களை உதவும். காமியப்பயன்களைக் குறித்து வினைசெய்யின் அவ்வினை அவ்வப்பயன்களை உதவும். காமியம் வேண்டாது, விலக்கியனவும் ஒழித்து, வேள்விசெய்யின் அவ்வினை முத்தியை உதவும்.

இவ்வான்மாக்களுக்கு வேறுப்ப் பரமான்மா ஒருவன் உண்டு என்பதூஉம், உலகந்தோன்றி அழியும் என்பதூஉம் பொய்; உலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பதாம்.

இங்ஙனஞ் செய்யப்பட்ட சைமினி சூத்திரங்கட்குப் பாடியஞ் செய்தான் சபரமுனிவன். சூத்திரத்திற்கும் பாடியத்திற்கும் சிறுபான்மை வேறுபாடுகொண்டு பட்டாசாரியன் சூத்திர மதம்பற்றி வழிநூல் செய்தான். பட்டன் மாணக்கனகிய

பிரபாகரன் பாடிய மதம்பற்றி வழிநூல் செய்தான். இங்ஙன மாகலின் மீமாஞ்சை மதம் இருவகைப்பட்டது.

பட்டாசாரியன், கன்மமே பயன் கொடுக்கு மென்றும் முத்தியில் நையாயிகர்போல ஆனந்தமுண்டு என்றுங் கொள் வன். பிரபாகரன், கன்மநாசத்தில் அபூர்வமென ஒன்று தோன்றி நின்று பயன்கொடுக்கு மென்றும், வைசேடிகர் போலப் பாடா ணம்போற் கிடப்பதே முத்தியென்றுங் கூறுவன்; பொருட்டன் மைகளினுஞ் சிறுபான்மை பட்டாசாரியனில் வேறுபடக் கூறு வன். பிரபாகரமதமெனினுங் குருமதமெனினும் ஒக்கும்.

மீமாஞ்சைநூல் பன்னிரண்டத்தியாயத்துள் முதலத்தியா யம், முதற்பாதத்திற் கருமங்களுக்கு நேரே பிரமாணமான விதி வாக்கியங்கட்குப் பிரமாணம் இல்லையென வாதிகள் கூறுஞ் சங்கைகளை மறுத்து வேதஞ் சுயம்புவாகலிற் பிரமாணமா மென்றும், இரண்டாம்பாதத்திற் பூனர்துரை வாக்கியங்களும் மந்திரங்களு மாகிய இரண்டும் விதிக்கு வேண்டப்படுந் திரவியங் களுந் துதிகளும் முதலியவற்றைத் தெரிவித்தலிற் பிரமாணமா மென்றும், மூன்றும்பாதத்தில் வேதத்தோடு மூரணுது மனு முதலிய ஆன்றோராற் செய்யப்பட்ட மிருதி முதலியவற்றிற்கு மூலவேதம் உண்டென்று வழியளவையான் உரைப்படுதலின் அவை பிரமாணமா மென்றும், நாலாம்பாதத்தில் விதிவாக்கியத் தில் அகப்பட்ட வேள்விப்பெயர்கள் கருமவேறுபாடும் மாட் டேற்றும் அதுவாதமும் முதலியன உணராநிற்றலானும் கருமத் திற்குப் பெயராகலானும் பிரமாணமாமென்றும் இவ்வாறு பிர மாணமாமாறு உணர்த்துதலின், "பிரமாணவியல்" என்னும் பெயர்த்து.

இரண்டாமத்தியாயம், அங்ஙனம் பிரமாணமாகிய வேதத் திற் பெறப்பட்ட கருமங்கள், வேதவாக்கியங்களிற் கூறும் பகுதி வினை வேறுபடுதலும், ஒருவினை பலகாற்கூறுதலும், தொகை கூறுதலும், வெவ்வேறு குறியிடுதலும், குணவேறுபாடு கூறுத லும், வேறுபிரகரணத்திற் கூறுதலுமாகிய இவற்றுள் ஒன்றற் கொன்று வேறுபாடின்மை தெரிவித்தலின், "கருமபேத வியல்" என்னும் பெயர்த்து.

மூன்றுமத்தியாயம், அங்ஙனம் பல வேறுவகைப்பட்ட கருமங்கட்குச் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணம் தானம் குறியீடு என்னும் இவற்றுனே இதற்கு இஃது அங்கமெனவும், இஃது அங்கியெனவும், அங்கமுமங்கியுமாமுறைமை கூறுதலின், "அங்காங்கியியல்" என்னும் பெயர்த்து. தலைமைப்பொருள் அங்கியும் தலைமை யில்பொருள் அங்கமுமெனக் கொள்க.

சுருதி முதலியவற்றுட் சுருதியாவது, வேறொன்றனை அவாவாது தான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது. அது விதிக்குஞ்சொல்லுங் குறியீட்டுச்சொல்லும் விவகரிக்குஞ் சொல்லுமென மூவகைப்படும்.

இலிங்கமாவது, ஆற்றலாற் பொருளை உணர்த்துவது. அது சொல்லாற்றலும் பொருளாற்றலுமென இருவகைப்படும். ஒரு மந்திரத்தின்வருந் தொழில்பற்றி அத்தொழில் நிகழுங் கருமத்திற்கு அம்மந்திரம் அங்கமென்பது சொல்லாற்றலாற் பெறப்படும். அவியினைக் கருவியாற் சுருவத்தாற் கையால் வாங்குக எனப் பொதுப்படக் கூறியவழி, கருவி இறைச்சிக்குஞ் சுருவம் நெகிழ்ந்த பொருட்குங் கை *புரோடாசம் முதலியவற்றிற்கும் அங்கமென்பது பொருளாற்றலாற் பெறப்படும்.

வாக்கியமாவது, இங்ஙனஞ் சுருதியும் இலிங்கமுமன்றிச் சொற்றொடர்புபற்றி உணரவருவது.

பிரகரணமாவது, "சோதிட்டோமம் வேட்க" என்றாற் போலும் விதிவாக்கியங்களாற் பொதுப்பட உணர்ந்து, சிறப்பானறியப்படாத கன்மங்களான் அவாவப்பட்டு இவ்வாறு செய்யற்பாற்றென வகுத்துக் கூறுவது. அது பெரும் பிரகரணமென்றும் இடைக்கட்பட்ட பிரகரணமென்றும் இருவகைப்படும்.

தானமாவது, நிரணிறையிடமும் அண்மையிடமுமென இருவகைப்படும். அவற்றுள் அண்மை, சொல்லினண்மையும் அதுட்டானத்தினண்மையுமென இருவகைத்து.

குறியீடாவது, காரணத்தான் வரும் பெயர். அது வேதமரபுபற்றிய பெயரும் உலகமரபு பற்றிய பெயருமென இருவகைப்படும்.

இவ்வாறு சுருதி முதலியவற்றின் இயல்பு உணர்ந்து கொள்க.

நாலாமத்தியாயம், இங்ஙனம் அங்கமும் அங்கியுமாகிய கன்மங்களை அதுட்டிப்பிக்கும் பிரயோகமாமாறு கூறுதலின், "பிரயோகவியல்" என்னும் பெயர்த்து. அங்கம் பிழைத்தவழி அங்கியின்பொருட்டு வேறங்கம் வேண்டப்படும்; அங்கிபிழைத்தவழி அங்கத்தின் பொருட்டு வேறங்கி வேண்டப்படுவதின்று. அங்கம் பிழைத்தவழி அதற்கு அங்கி பலவுளவாயின், யாதொன்றற்கு அங்கமாயே மற்றொன்றற்கு அங்கியாம் அதன்பொருட்டே வேறங்கம் வேண்டப்படும்; மற்றொன்றன் பொருட்டு வேண்டப்

* புரோடாசம் - யாகத்திற்கொடுக்கும் ஒருவகை யவி.

படுவதின்று என்றுற்போலத் தெரிவிப்பது பிரயோகமுறைமை என்க.

அஞ்சாமத்தியாயம், ஒருபிரயோகத்துட்பட்ட அங்காங்கி களை அறுட்டிக்கும் முற்பிற்பாட்டு முறைமையைச், சுருதி முறைமை பொருண்முறைமை பாடமுறைமை முதலியனபற்றித் தெரிவித்தலின், "முறைமைப்பாட்டியல்" என்னும் பெயர்த்து.

இங்ஙனம் இரண்டாவதின், உற்பத்திவிதியான் அறியப் படுங் கருமபேதமும், மூன்றுவதின், உபகரிக்கும் விதியான் அறியப்படும் அங்காங்கி யியல்பும், நான்கினும் ஐந்தினும், பிர யோகிக்கப் படுவனவற்றின் விதியான் அறியப்படும் பிரயோக மும் முறைமைப்பாடுந் தெரிந்துணர்த்தியபின், ஆறுமத்தியாயம், பயன்கூறுமுகத்தான் அதிகாரிகளாவாரைத் தெரிவித்தலின், "பயனியல்" என்னும் பெயர்த்து; அதிகாரவியலெனினுமாம்.

இங்ஙனம் நால்வகைப்படும் எடுத்தோதாத்து விதிகளை ஆராயு மாறு ஆறத்தியாயத்துள் உணர்த்தி, மேல் ஏழாவது முதற் பத்தாவதிறுவாய் நான்கத்தியாயங்களான் மாட்டேற்றுவிதி ஆராயுமாறு உணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்யற்பாற்று என எடுத்தோதாதுவது எடுத்தோதாத்து விதியெனவும் அதுபோலச் செய்க என மாட்டெறிவது மாட்டேற்றுவிதியெனவும் உணர்க.

அவற்றுள் ஏழாமத்தியாயம், "அதுபோலச் செய்க என் னும் வசனத்தானும், அங்ஙனம் வசனமில்லனவற்றிற்குப் பெய ரொருமையானும், அதுவுமில்லனவற்றிற்கு இதுசெய்க என விதித்தலான் அது செய்யுமாறு யாதானும் ஒன்றனொடு மாட் டெறியும் வசனமுண்டென வழியளவையா லுணரப்படும் விதி யானும் மாட்டெறியுமாறுணர்த்தி, எட்டாமத்தியாயம் அங்ங னம் பொதுப்பட வழியளவையான் உணரப்படுவனவற்றுள் எதுபோல் எது செய்யப்படுமென்று அவாயவழிச் சொல்லொப் புமை பொருளொப்புமைபற்றி இன்னதுபோலின்னது செய்யப் படுமெனத் தெரிந்தெடுத்துணர்த்துதலின், ஏழாவதும் எட்டா வதும் "மாட்டேற்றியல்" என்னும் பெயரினவாம்.

ஒன்பதாமத்தியாயம், அங்ஙனம் மாட்டெறிந்தமைபற்றிப் பகுதிப்பொருளிற் செய்யுங்காரியம் விகுதிப்பொருளிற் செய் வுழிப் பகுதியிற்கூறும் மந்திரமுந் சாமமுந் தொழிலும் விகுதிப்பொருளுக்கேற்ப வேறுபடக் கொள்ளுந்திறம் நியாயம் பற்றி ஊகிக்குமாறு உணர்த்துதலின், "ஊக வியல்" என்னும் பெயர்த்து.

பத்தாமத்தியாயம், அங்ஙனம் ஊகித்தபின்னர் மாட்டெறிந்தவற்றுள் ஆண்டைக்கு உரியனவாகாதவற்றை நியாயம் பற்றி விலக்குமாறு உணர்த்துதலின், "விலக்கியல்" என்னும் பெயர்த்து.

இங்ஙனம் பத்தத்தியாயத்தினும் எடுத்தோத்து விதியினும் மாட்டேற்று விதியினுந் தெரித்துணர்த்த வேண்டியவற்றைத் தெரித்துணர்த்திய பின்னர், ஏனை இரண்டத்தியாயத்தினும் இவ் விருவகைக்கும் பொதுவாகிய தந்திரமும் பிரசங்கமுமாமாறு உணர்த்துதலின், பதினொராமத்தியாயம் "தந்திரவியல்" என்னும் பெயர்த்து; பன்னிரண்டா மத்தியாயம் "பிரசங்கவியல்" என்னும் பெயர்த்து.

தந்திரமாவது, கருமஞ்செய்யுங்காற் றலைமைவினை பலவுள வாய் ஒருதேசமும் ஒருகாலமும் ஒருகருத்தாவுமாயவழி, அவ் வவற்றிற்கெல்லாம் பொதுப்பட அங்கவதுட்டானம் ஒருகாற் செய்யவமையும் என்றூற்போல்வது. அங்ஙனமன்றி மறித்துஞ் செய்யற்பாலதாதலே அவாபம் என்பர். பிரசங்கமாவது, முதற் கண்வந்த ஆசிரியன் அமுதுசெய்தற்கட்ட அறுசுவையடிசில் ஆசிரியனையன்றியும் ஒருதலையான் அங்ஙனம் அட்டிடுதற்குரிய னுய்ப் பின்பு வந்த மருகனுக்கும் உபகாரமாதல்போல, ஒன்றன் பொருட்டுச் செய்தவினை மற்றொன்றற்கும் உபகாரமாதல். ஆசிரி யனுக்கட்ட அடிசில் ஆசிரியரைடைவ் வந்தவர்க்கும் உபகார மாதல் பிரசங்கமன்றென்பது.

மீமாஞ்சை நூலிற் பன்னிரண்டத்தியாயமும் முதலிய பொருள் இங்ஙனந் தொகுத்துணர்த்தப்பட்டது. இவற்றிற்கு உதாரணம் விரிப்பிற் பெருகும். நையாயிக நூலிற் கூறுந் தருக்கமும், மீமாஞ்சைநூலிற் கூறும் நியாயங்களும் எல்லா நூல்கட்குமுபகாரமாமெனக் கொள்க. மீமாஞ்சை மதம் முடிந்தது.

## ஏகான்மவாதம்

ஏகான்மவாதமாவது :— மாயாவாதமும், பாற்கரியவாத மும், கிரீடாப்பிரம வாதமும், சத்தப்பிரமவாதமுமென நான்கு வகைப்படும்.

## மாயாவாதம்

அவற்றுள், மாயாவாதமாவது :—சச்சிதானந்தமாய் நித்த மாய் வியாபகமாய் நிற்பது பிரமம்; பரமார்த்தத்தில் அஃ தொன்றே மெய்ப்பொருள்; ஏனையவெல்லாம் பிரமத்தின் விவர்த் தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவிச்சையினுற் காணப்படு

வன வாகலிற் பொய். இங்ஙனந் தோன்றும் உலகத்திற்கு முதற் காரணமாகிய மாயை பிரமம்போலச் சத்துமன்றி முயற்கோடு போல அசத்துமன்றி அநிருவசனமாயிருக்கும். அநிருவசனம் என்பது சொல்லுதற்கரியது என்னும் பொருட்டு. இந்த மாயைக்கு வேறுகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தால் அறி வதே முத்தியென்பதாம்.

### பாற்கரியவாதம்

பாற்கரியவாதமாவது :—முன் கூறப்பட்ட பிரமமே சட முஞ் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமையினாற் பந்தமா யிற்று. பரமார்த்தத்தில் ஒருபொருளே. வேதாந்த ஞானத் தான் உடம்பிற்கு வேறுகிய ஆன்மரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி யென் பதாம்.

### கிரீடாப்பிரமவாதம்

கிரீடாப்பிரமவாதமாவது :—முன் கூறப்பட்ட பிரமமே நான். யான் ஒருபடித்தன்றிப் பலவேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடுகூடிப் பலவாற்றான் விளையாடுகின்றேன். என்று இவ்வாறறிவதே முத்தியென்பதாம்.

### சத்தப்பிரமவாதம்

சத்தப்பிரமவாதமாவது :—காரணமாகிய பரப்பிரமம் இறு திக்காலத்திற் சத்தவடிவிற்றா யிருக்கும். அஃது அவிச்சை யினாற் சடமுஞ் சித்துமாய உலகங்களாய் விரியும். முடிவின்கட் சத்தமாத்திரையே உள்ளது என்று இங்ஙனமறிவதே முத்தி யென்பதாம். இங்ஙனம் நால்வேறு வகைப்பட்ட ஏகான்ம வாத நூல் செய்தவன் வியாதமுனிவன்.

### சாங்கியமதம்

இனிச், சாங்கியமதமாவது :—மூலப்பகுதி, நித்தமாய் வியா பகமாய்ச் சடமாய் எல்லாப் பொருட்குங் காரணமாய் முக்குணங் களும் ஒப்பநின்ற அவதரமாய் அருவாய் உள்ளது. இஃது இருபத்துநாலாந் தத்துவம். இதன் கட்டோன்றுங் காரியம் புத்திமுதல் நிலமீறாக இருபத்துமூன்று தத்துவமுள. இத்தத் துவம் இருபத்துநான்கிற்கும் வேறாய் நித்தமாய் வியாபகமாய் அருவாய்ப் பலவாய் அறிவதுஞ் செய்வதுமின்றி அறிவுமாத்திர மாய் ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமின்றி நிற்கும்

ஆன்மாக்கள் இருபத்தைந்தாந் தத்துவமெனப்படும். இவ்விரு பத்தைந்தாந் தத்துவமாகிய புருடன் முத்தியினும் பெத்தத் தும் ஒருதன்மையனேயாம். புருடனுக்கு மலினமென்பதில்லை. தாமரையிலைநீர்போல் ஒட்டற்று நிற்பன். அநாதியே புத்தி யைச் சார்ந்த அவிச்சைவயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத் துன்ப வுணர்வு தோன்ற நின்றது. புத்தியாவது மூலப்பகுதி யின் பரிணமம்; அதுவே மான் என்றும் அந்தக்கரணம் என்றுங் கூறப்படும். அது பொறிவழியான் ஞானமாய்ப் பரிணமித்து விடயத்திற் செல்லும். புருடன் செய்வானென்பதும் புத்தி அறியுமென்பதும் வேற்றுமை யுணராமையான் என்பது. மூலப் பகுதியையும் புருடனையும் பகுத்துணரவே அவிச்சை நீங்கும்; அதுவே முத்தி எனப்படும். ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவ னொருவன் உண்டென்பது பொய் என்பதாம். இந்நூல் செய்த வன் கபில முனிவன். இதனுட் கூறுஞ் சற்காரியவாதம் சைவ முதலிய சற்காரியவாத நூல்கட்கெல்லாம் உபகாரமாம். இத னுட்கூறும் அத்தியாசவாதம் மாயாவாதத்துக்கு உபகாரமாம். சாங்கியமதம் முடிந்தது.

## யோகமதம்

யோகமதமாவது :—நிலமுதற் புருடனீறுகிய இருபத் தைந்து தத்துவமும் பெத்தமுத்திகளும் நிரீச்சுரசாங்கியர் கூறிய வாறேயாம். மூலப் பகுதியையும் புருடனையும் பகுத்துணரும் விவேக வுணர்வுபோல எண்வகை யுறுப்பிற்றுகிய யோகமும் முத்திக்கேதுவாம். இருபத்தாறாந் தத்துவம் இறைவனொருவ னுளன்; அவன், முற்றுணர்வுடையனாய்ச் சாத்திரங்களை அருளிச் செய்து புருடருக்கு ஞானத்தை அறிவுறுப்பனாகலின், இவ்வான் மாக்களுக்கு வேறென்றுணரப்படும் என்பதாம். இந்நூல் செய் தவன் பதஞ்சலி முனிவன். யோகமதம் முடிந்தது.

## பாஞ்சராத்திரமதம்

இனிப், பாஞ்சராத்திர மதமாவது :—இருபத்துநாலாந் தத் துவமாகிய குணதத்துவத்தின் மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்று ஒருவனுளன். அவனே பரம்பொருள். அவ னிடத்தினின்றுங் கண்ணனும், அநிருத்தனும், மகரத்துவசனும் இரௌகிணேயனுமென நால்வர் உலகங்களைப் படைத்தற் பொருட்டுத் தோன்றினர். இந்த நால்வகை வியூகங்களாற் சடமுஞ் சித்துமாகிய எல்லா வுலகமும் படைக்கப்பட்டனவாக லான், எல்லாம் வாசுதேவன் பரிணமமேயாம். இங்ஙனங்கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களின் உறுதிப் பயன்

உண்டாகாது; ஆதலாற் பாஞ்சராத்திர முறையே தீக்கைபெற்று வாசுதேவனே வழிபட்டு வாசுதேவனுருவில் இலயமாதலே முத்தி என்பதாம். இந்நூல் செய்தவன் வாசுதேவன் என்க. பாஞ்சராத்திரமதம் முடிந்தது. இவ்வாறு புறச்சமயமாறும் கண்டு கொள்க.

## அகப்புறச்சமயம்

### பாசுபதம்

இனி, அகப்புறச் சமயமாறனுட் பாசுபதமாவது :—ஆன்மாக்கள், பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரியகாரணக் கூட்டரவாற்றோன்றும் ஞானத்தாற் றனித்தனி வேறுயுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவமலம் என்பதொன்றில்லை. மாயை கன்மம் என்றிரண்டாற் பந்தமுற்று இன்பத் துன்பங்களை அநுபவிக்கும். இவற்றின் உவர்ப்புத் தோன்றிச் சாத்திர முறையானே தீக்கை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப் பற்றும். அப்போது, குடும்பத்தின்பாரம் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார்போல, ஈசனுந் தன்னுடைய குணங்களை அவன்பாற் பற்றுவித்துத் தான் அதிகாரத்தினெழிவுபெற்றிருப்பன் என்பதாம்.

### மாவிரதம்

மாவிரதமாவது :—மேற்கூறிப்போந்த இயல்பையுடைய ஆன்மாக்கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களை அநுபவிக்கும். சாத்திரத்திற்கூறும் முறையே தீக்கைபெற்று எலும்பு மாலையணிதன் முதலிய சரியைகளின் வழுவாதொழுகினவர் முத்தராவார். முத்தருக்குச் சிவனெடு சமமாக எல்லாக் குணங்களும் உற்பத்தியாம் என்பதாம்.

### காபாலம்

காபாலமாவது:—ஆன்மாக்களியல்பும் பந்தவியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே தீக்கைபெற்றுப் பச்சைக்கொடியொன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்பவர் முத்தராய்ச், சிவ னுவேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பதாம்.

இம்மூவரும், முறையே சங்கிராந்த சமவாதியெனவும், உற்பத்தி சமவாதியெனவும், ஆவேச சமவாதியெனவும் உணர்க. இம்மூன்று மதமுஞ் செய்தார் முறையே மாயை வித்தை

காலமென்னுந் தத்துவங்களின் வைகும் உருத்திரர் மூவரெனக் கொள்க.

### வாமம்

இனி, வாமமாவது :—பாற்கரியன் கூறியவாறே சடமுஞ் சித்துமாகிய அனேத்துலகுஞ் சத்தியின் பரிணமமே. வாம நூலில் விதித்த முறையே ஒழுகிச் சத்தியில் இலயித்தலே முத்தி என்பதாம். இந்நூல் செய்தார் சித்தபுருடர். சத்தி தத்துவத்தின் வைகும் ஓரான்மாவாற் செய்யப்பட்டது சுத்த சாத்தம் என்றறிக.

### வைரவம்

இனி, வைரவமாவது :—பெரும்பாலும் வாமமதத்தோடொத்துச் சிறுபான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருளெனக் கொண்டு வைரவபதத்திற் சேர்வதே முத்தி என்பதாம்.

### ஐக்கியவாதசைவம்

இனி, ஐக்கியவாத சைவமாவது :—*"இன்மைமல மாயை கன்ம மென்றிரண்டே யிறைதா னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின்—றன்மைகளா லெவர்களுக்குந் தனு கரண புவனந் தந்திடுமிங் கிதனாலே யிருபயனுஞ் சார்ந்து—கன்மமெலா நேராக நேராதன் மருவக் கடவுளருளா லெவையுங் கழித்திடுவ னதனாற்—பின்மலமா னவையணுகா பெருகொளிமுன் புளதே பெற்றிடும்" என்பதாம். இவ்வாறு அகப்புறச் சமயமாறுங் கண்டுகொள்க. காளாமுகம் சாம்பவம் முதலியனவும் இவற்றின் பகுதியாய் அடங்கும்.

இனிப், பாடாணவாத முதலிய அகச்சமயங்களாறன் கருத்துச் சங்கற்ப நிராகரணத்தில் விரித்தோதியவாற்றானறிக; ஈண்டும் வந்துழி வந்துழிக் காட்டுதும். ஈண்டுக் கூறுத சமயங்களும், கூறியவற்றின் பகுதியவாய் இவற்றுள்ளே அடங்கும். அஃதறிந்து அடக்கிக்கொள்க.

அவையடக்கம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்

---

* சிவப்பிரகாசம், பொது: உஉ.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பொதுவதிகாரம்

## பிரமாணவியல்

### முதற்சூத்திரம்

ஈண்டு வடமொழிச் சிவஞானபோதத்துட் கூறியவாறே பொது உண்மை என்று இரண்டதிகாரமாகப் பகுத்துக் கொண்டு, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயனென நான்கு திறத்தாற் பொருளியல் புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர், அவற்றுள் மூப்பொருளின்வைத்து முதற்கட் பதியுண்மைக்குப் பிரமாணங் கூறும் முதற்சூத்திரத்திற்கு வார்த்திகமாகிய பொழிப்புரைப்பான் புகுந்து, சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச்செய்கின்றார் :—

அவனவ ளதுவெனு மவைமு வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
அந்த மாதி யென்மனர் புலவர்

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என் பது சூத்திரமெனக்காட்டி, இனி அதன் கருத்துரைக்கின்றார்:—

என்பது சூத்திரம்; என்னுதலிற்றோவெனின், சங்கார காரணனுயுள்ள முதலியே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்ப துணர்த்துத னுதலிற்று

எனவரும்.

சங்காரம் ஐவகைப்படும்; அவற்றுள் முதலாவது, *நிவிர்த்தி கலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இரண்டாவது பிரதிட்டாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; மூன்றுவது, வித்தியாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; நான்காவது, சாந்திகலையிலடங்கிய தத்துவ புவனங்

* இவற்றினியல்பை இரண்டாஞ் சூத்திரம் மூன்றும் அதிகரணத்திற் காண்க.

களின் சங்காரம்; இறுதியது, சாந்தியதீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்.

அவற்றுள், ஈண்டைக்கேற்புடையது இறுதிக்கண்ணதாகலின், ஈண்டுச் சங்காரகாரணன் என்றது சுத்தமாயாபுவனந்தஞ் சங்காரிக்குஞ் சங்கார காரணனுகிய பரமசிவனை; அயன்மாலொடுங் கூடக் குணதத்துவத்தின்வைகிப் பிரகிருதிபுவனந்தஞ் சங்காரிக்குங் குணிருத்திரனையன்றென உணர்க. என்னை? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்காரகாரணனன்மையானும், பரமசிவன் இலயம் போகம் அதிகாரமென்னும் மூன்றவத்தையினும் முறையே அருவம் அருவுருவம் உருவமென்னும் மூன்று திருமேனிகொண்டு, சத்தன் உத்தியுத்தன் பிரவிருத்தனெனவும், சிவன் சதாசிவன் மகேசனெனவும் பெயர் பெற்று நிற்பனென்றும், இங்ஙனந் தொழிலான் வேறுபட்ட தன்றிப் பொருளான் வேறுபாடில்லை யென்றும், பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவமுடையவன் சிகண்டருத்திர னென்றுஞ் சைவாகமங்களெல்லாம் ஒதுதலின், மகேசுர மூர்த்தி யிறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவம், ஏனையவை அன்னவல்ல வென்பது பெறப்படுதலானும் என்பது. இவ்வேறுபாடுணராது மகாருத்திரனுகிய பரமசிவனைக் குணிருத்திரனுகவைத் தெண்ணுவோரை நோக்கி, * "நம்மவரவரே—மூவரென் றேயெம் பிராணுடு மெண்ணிவிண்ணுண்டு மண்மேற்—றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந்திரிதவரே" என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக. இன்னும்' † "தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்—மூவராய் நின்ற தோரார்" எனவும், ‡ "தேவராயு மசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்—நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காலீரு—மேவராய விரைமலரோன் செங்கண்மா லீச னென்னு—மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே" எ-ம். § "வரியாய மலராணும் வையந் தன்னை—யுரிதாய வளந்தானு முள்ளு தற்கங்—கரியானு மறியாத கள்ளின் மேயான்—பெரியானென் றறிவார்கள் பேசு வாரே" எ-ம். $ "மாலை

* திருவாசகம், திருச்சதகம், ச.
† சிவஞானசித்தி, க-ம் சூ. சக.
‡ சம்பந்தமூர்த்தி தேவாரம், திருமுதுகுன்றம். பழந்தக்கராகம், க.
§ ,, ,, திருக்கள்ளில், கூ.
$ சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம், திருக்காளப்பேர், எ.

யுரித்ததள் கொண்டங்க மணிந்தவனே வஞ்சர் மனத்திறையு நெஞ்சணு காதவனே—மூவரு ருத்தனதா மூல முதற்கருவை" எ-ம். * "படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினே" எ-ம். † தேவர்கோ வறியாத தேவதேவன் செபும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை—மூவர்கோ னுய்கின்ற முதல்வன்" எ-ம். ‡ "மூந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்—சிந்துரச் சேவடி யானே" எ-ம். § "மூந்திய முதனடு விறுதிபு மானுய் மூவரு மறிகிலர்" எ-ம். $"அரியாகிக் காப்பா னயனுய்ப் படைப்பா -னரனு யழிப்பவனுந் தானே" எ-ம். ¶ "வீரனயனரி.....யாரு மறியா வகையெங்களீசர் பரிசுகளே" எ-ம். வரும் திருவாக்குக ளானும் ஓர்ந்துணர்க. இதுவே சுருதி மிருதி புராணம் இதி காசம் எல்லாவற்றிற்குங் கருத்தென்பது, சிவதத்துவ விவேக மூடையார் **"குணுதீதன்" என்னுஞ் சுலோகத்திற் கடாவிடை களான் விரித்துக்காட்டியவாற்றுன் அறிக.

இங்ஙனமாயினும், சிகண்டருத்திரன் அயன்மால்போலச் சகலரினன்றிப் பிரளயாகலரிற் பக்குவமுடையோனுய்க் கட்டு நீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக்குரிய எல் லாப் பெயர்களும் வடிவமுந் தொழிலும் பெற்றுடையவனுக லானும் சைவாகமங்களே அறிவுறுக்குங் குரவனுகலானும், அயன் மாலிருவர்க்கும் மேலாய்ச் சைவத்தினெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடப்படுங் கடவுளாயினனென்க.

இங்ஙனங் கருத்துரைத்துக் கண்ணழித்துரைப்பான் புகுந்து ஈண்டு முதற்கண் உரைவகையாமாறு உணர்த்து கின்றூர் :—

இதன்போழிப்பு உரைத்துக்கொள்க

எனவரும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொருள் முன்னர்க் கண்ணழித் துரைக்கும் உரைபற்றி உரைத்துக்கொள்க என்றவாறு. எனவே, பொழிப்புரை இங்ஙனம் இருவகைப்படும். அவற்றுள்,

---

* சம்பந்தமூர்த்தி தேவாரம், திருப்பிரமபுரம், திருவெழுகூற் றிருக்கை, ச.

† திருவாசகம், திருச்சதகம், கூ0.

‡ திருவாசகம், குயிற்பத்து, கி.

§ திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, அ.

$ திருக்கைலாய ஞானவுலா, கூ.

¶ பொன்வண்ணத்தந்தாதி, கூகி.

** கந-ம் சுலோகம்.

கண்ணழித்துரைக்கும் பொழிப்புரை மாத்திரையே யாம் ஈண் டுரைக்கின்றும். பிண்டமாகக்கொண்டுரைக்கும் பொழிப்புரை இதுபற்றி உணர்ந்துகோடல் எளிதாமாகலின், அஃது யாமுரைக் கின்றிலமென மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறுயிற்று.

இங்ஙனம் பொழிப்புரை இருவகைப் படுமென்பது *"பொழிப்பெனப்படுவது பொருந்திய பொருளைப்—பிண்ட மாகக் கொண்டுரைப்பதுவே" எ-ம், †"பாடங் கண்ணழிவுதா ரண மென்றிவை—நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே" எ-ம், ஓதியவாற்றுனறிக.

இஃது, ஏனைச் சூத்திரங்களினும் உய்த்துரைத்தற்பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது. பிண்டப்பொருளெனினும் பதப் பொருளெனினும் ஒக்கும்.

உரைத்துக்கொள்க என்புழிக் 'கொள்' என்பது, தற்பொருட் டுப் பொருட்கண் வந்த விகுதியாய்ப், பகுதியோ டியைதற்குரிய துச்சாரியை பெற்று உரைத்துக்கொள் என நின்றவழி, அது வும் பகுதித்தன்மைப்பட்டு மேல்வரும் வியங்கோள்விகுதி ஏற் றுத் தற்பொருட்டுப்பொருள் இனிது விளங்குதற்பொருட்டு உரைக்க என்னும் பொருட்டாய்நின்றது. இது சூத்திரவிருத்தி யுள் உரைத்தாம். ‡ஆண்டுக் காண்க.

இங்ஙனம் ஆசிரியர் ஆணைதந்தமையிற் கண்ணழித்துரை பற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

அவனவளது....என்மனார் புலவர் என்பது ஆண் பெண் அலி என்றாற்போலும் உலகத்தொகுதி, தோற்றம் நிலை இறுதி என் னும் முத்தொழிலுடைமையான், ஒருவனுற்றாற்றப்பட்டு நின்று உள்ளதேயாம். அற்றேல், அஃது யாவனிடத்துளதா மெனின், தானெடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே ஒழியாது மீள உளதாவது எதனு லெனின், சகசமான ஆணவமலந்தீர்ந் தொடுங்காமையான் உள தாம். இங்ஙனமாகலின், சங்காரத்தொழிலைச் செய்யுங் கட வுளே முதற்கடவுளென்று கூறுவர் அறிவுடையோர் என்ற வாறு.

எனும் என்பது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெய ரெச்சமாய், இவ்வாறு என்னும் பொருள்குறித்து நின்றது.

---

* நிவாகரம், ஒலிபற்றிய பெயர்த் தொகுதி, சூத்திரம், கூ0.

† தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் நச்சினார்க்கினியருரை மேற்கோள்; பக்கம், கஉ.

‡ தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, ச்க, ச்உ-ம் பக்கம்.

வடமொழிச்சூத்திரத்தில் "ஆதி" என்றதும் அப்பொருட்டு. அவை என்பது தொகுதி; அஃறிணைப்பன்மைச்சுட்டுப் பெய ரெனக்கொள்ளின், உள எனப் பிரித்துப் பயனிலையாக்கித், தாம் என்பது அசையாகக் கொள்க. வினைமை - வினையுடைமை. உடைமை-உடைத்தாந்தன்மை.

அவ்வக்காலத்தன்றி மூவினையும் ஒருகாலத்துப்படுதல் கண்டிலம் என்பாரை நோக்கித் தன்மையின்வைத்து ஓதினார்.

தோற்றிய எனப் பிறவினை வாய்பாட்டானோதுதலின், அதற் குரிய வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. தோற்றிய என் புழிப் படுசொற்றொக்குநின்றது; *"இல்வாழ்வான் என்பான்" என்புழிப்போல. திதிப்படும் உலகத்தைத் திதி எனவும் அந் தத்தைச் செய்யுங் கடவுளை அந்தம் எனவும் உபசரித்தார்.

காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என உலகின்மேல்வைத்துக் கூறினார். சங்கார காரணையுள்ள முதலிலே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்றதும் இக்கருத்தேபற்றி என்க. "தோற்றுவானொருவனுளன்; அவன் ஒடுக்கி உளதாக்குவன்" எனக் கடவுளின் மேல்வைத்தோதிய வடமொழிச் சூத்திரத் திற்குந் தாற்பரியம் இதுவேயெனக் கொள்க.

ஏகாரம் தேற்றம். ஒடுங்கி என்பதுபெயர். ஒடுங்கி என் புழி இன்னுருபும், மலைந்து என்புழி ஆனுருபுந்தொக்கு நின்றன. ஆம் என்பதனை முன்னுங்கூட்டுக. என்மனார் என்பது செய்யுண் முடிபாயதோர் ஆரீற்று முற்றுச்சொல். மன் எதிர்காலவிடை நிலை. அஃது †"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரைய ருரையானும் அறிக.

ஈண்டுப் புலவர் என்றது அளவையினியல்புணர்ந்தோரை.

இதனுள், அவனவ ளதுவெனு மவைமு வினைமையின் என்பது ஓரதிகரணம்; தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என்பது ஓரதி கரணம்; அந்தமாதி என்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகர ணத்தது இச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும், ஒன்றற் கொன்று முறையே ஏதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வரு தலின், ஒருசூத்திரத்தாற் கூறினார். வருஞ்சூத்திரங்களினும் இவ்வாறே கண்டுகொள்க.

---

* திருக்குறள், சு-ம் அதி, இல்வாழ்க்கை, க.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம். கிளவியாக்கம். க.

தன்னைற் கூறப்படும் *பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனை மறுத்துக்கூறுஞ் சித்தாந்தத்துணிபும், இயைபும் என்னும் இவற்றிற்கு நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும். இவற்றுள் இயைபு, நூலியைபும் அதிகாரவியைபும் ஒத்தியைபும் பாதவியைபும் அதிகரணவியைபுமென ஐவகைப்படும். அவை யெல்லாம் ஆண்டாண்டுக் காட்டுதும்.

---

## முதலதிகரணம்

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது, மேற்கருத்தாவினுண்மை சாதித்தற்பொருட்டு உலகிற்கு முத்தொழிலுண்மை சாதித்தலாம்.

அதற்கு அவை உளவோ இலவோ என்று இரட்டிறத்தோன்றும் ஐயப்பாடு.

ஈண்டு மீமாஞ்சை நூலாரும் உலகாயத நூலாரும் உலகந்தோன்றுதலும் அழிதலுமின்றி என்று மிவ்வாறே நிலைபெறுவதாகலின், உலகம் காரியப்பொருளாத லில்லையெனவும், எனவே இதுகொண்டு கருத்தாவினுண்மை சாதித்தல் "முயல் கோடுடைத்து; ஆன்வயிற்றுப் பிறத்தலான்" என்பதனோடு ஒக்குமெனவுங் கூறுவர்.

அவருள் மீமாஞ்சைநூலார் கூறுமாறுவது :— உலகந்தோன்றி நின்றழியு மென்பது காட்சியளவையாற் பெறப்படுவதுமன்று; அவிநாபாவமாகிய ஏதுக்காணுமையின், வழியளவையாற் பெறப்படுவது மன்று; வேதத்துட் கூறப்படுதலாற் பெறுதுமெனின், வேதத்தில் "நடாத்துக," "நிறுவுக," "செய்க," என்றாற்போலத் தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளுணரும் வேட்கையாளர்க்கு அங்ஙனம் ஏவுவோர் சொற்கேட்டு இயற்றுவோர் செய்யுந்தொழிலானே அவ்வச் சொற்பொருளுணர நிற்றலிற் பிரமாணமாம்; அவ்வாறன்றிப் பொருளியல்புகூறும் வாக்கியங்களாற் சொற்பொருளுணரப் படாமையின் அவை பிரமாணமாகாவாயினும், தொழிற்படுத்தும் வாக்கியங்கட்கு யாதானு மொருவாற்றான் உபகாரமாதலுடைமையான் உபசரித்துப் பிரமாணமெனக் கொள்ளப்படு மாகலான், அது

---

* இவற்றை வடநூலார் முறையே விடயம், சம்சயம், பூர்வபக்கம், சித்தாந்த நிர்ணயம், சங்கதி என்பர்; சிகண்டபாடியம் முதலதிகரண ஆரம்பத்தினுங் காண்க.

பற்றி உரையளவையாற் பெறப்படு மென்பதும் இன்று ; ஆக லான், உலகிற்கு முத்தொழிலுண்மை பெறப்படாது என்பதாம்.

இவ்வாறு ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்குதற்குக் கண்ணழித்து எடுத்துக்கொண்ட மேற்கோள் :—

ஈண்டு உளதாய் ஒருவனெருத்தி யொன்றென்று சுட்டப் பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது

எனவரும்.

ஈண்டு என்றது இவ்வதிகரணம் மூன்றனுள்வைத்துமுதற் கண் என்பதாம்.

அவயவப் பகுப்புடைமையான் முத்தொழி லுடைமை துணியப்படுமென்றுணர்த்துவார் ஒருவனெருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் எனச் சூத்திரத்தி னெதியவாறே *உடம் பொடுபுணர்த்து ஓதினார். எனவே, "உலகந் தோன்றி நின்று அழியும், அவனளவது வென்று இவ்வாறு பகுக்கப்படும் அவய வப் பகுப்புடைமையின், ஆடைபோலும்" என்னும் அநுமானத் தானே மூவினையுடைமை துணியப்படுமென்பதாயிற்று.

சொற்பொருளுணர்ச்சி, தொழிற்படுத்துஞ் சொன்மாத் திரையானே துணியப்படுமென்னும் வரையறையின்றித், தாய் தந்தை முதலியோர் இச் சொற்கு இதுபொருள் இச்சொற்கு இது பொருளெனத் தெரிவித்தலானும், நிகண்டு நூன் முதலிய வற்றானுந் துணியப்படுமாகலின், அதுபற்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமல்லவென்றல் பொருந்தாமை யின், உரையளவையே பிரமாணமென்றேதவமையும்; அமையு மாயினும், அவர்மதமேபற்றி அவரை மறுத்தற் பொருட்டு மூவினையுடைமையும் வழியளவையாற் சாதித்தார்.

ஈண்டு அவயவமென்றது, ஆடையின் ஏகதேசமாய்த் தனித் தனி பிரிக்கப்படும் நூல்கள்போல ஒரு பொருளின் ஏகதேச மாய்த் தனித்தனி பிரிக்கப்படுந் தகுதியுடையவற்றை. நிலம் மலை கடல் முதலியவற்றின் ஏகதேசமாகிய மண் சிலை நீர் முதலி யன தொடுதல் போழ்தல் முகத்தல் முதலியதொழில்களானே தனித்தனி பிரித்தற்குரியவாமாறு காண்க. கலை ஆணவமலத்தின் ஏகதேசத்தை நீக்கிக் கிரியையை எழுப்பு மெனவும், பரமசிவன் சுத்தமாயையின் ஏகதேசத்தைக் கலக்கிச் சுத்த தத்துவங்களைத்

* உடம்பொடு புணர்த்தலென்பது ஒருத்தி : அது பிறிதொரு கருத் தையும் அடையொடு புணர்த்தோதல்; அதனை வடநூலார் சாபிப்பிராய விசேடணமென்பர்.

தோற்றுவிப்பனெனவும், அநந்த தேவன் அசுத்தமாயையின் ஏக தேசத்தைக் கலக்கிக் கலீமுதலியவற்றைத் தோற்றுவிப்ப னெனவும் வழங்குவதுபற்றி அவயவம் எனப்படா; வேறுவேறு பிரித்தற்குரியனவன்மையின். இவற்றை நீக்குதற்கன்றே ஒரு பொருளின் ஏகதேச மென்றொழியாது வேறுவேறு பிரித்தற் குரியன அவயவம் என்றதூஉமென்க.

இங்ஙனமாயினும், தார்க்கிகர்மதத்திற் பரமாணுக்கள் அவயவமுடையனவல்லவாகலான் அவை தோன்றி நின்று அழியும் என்பது பெறப்படாமையின், அவயவமுடைமை காரி யப்பாட்டிற்கு ஏதுவென்றல் யாண்டுஞ் செல்லாதாலெனின்,— அற்றன்று; அவள் என்றும் அவள் என்றும் அது என்றும் இவ்வாறு சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன வெல்லாந் தோன்றிநின்றழியு மென்பது கருத்தாகக் கொள்க.

* "இன்னுழை கதிரின் றுன்னணு"க்களே பரமாணுக்க ளாம். அவற்றை மும்மையணுவெனக்கொண்டு அவற்றினும் நுண்ணியவாய்க் கட்புலனுகாதன உள என்றற்குப் பிரமாண மின்மையின், பரமாணுக்களும் அவயவ முடையனவேயாம். அல்லவெனக் கொள்ளினும், அவை சடமுமாய்ப் பலவுமாகலாற் றோன்றி நின்று அழிவனவேயாம் என்க. ஆணவமலஞ் சடமா யினும் பலவன்று; ஆன்மாக்கள் பலவாயினுஞ் சடமல்ல; ஆக லான் அவற்றின்கட் செல்லாமை அறிக.

இங்ஙனமாயினும், மாயை சுத்தமாயை அசுத்தமாயை யென இரண்டாய்ச் சடமுமாகலான் அவை காரியப் பொரு ளாவான் செல்லும். அவை தனித்தனி ஒன்றேயாமெனிற் குட முதலியனவுந் தனித்தனி ஒன்றேயாகலாற் பலவாதல் யாண் டையது என்பதாய் முடியுமாலோவெனின்,—அற்றன்று; அவ னென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சுட்டி யறியப்படுவனவெல்லாந் தோன்றி நின்று அழியும் என்பதே சித்தாந்த முடிபெனக்கொள்க. இது விளங்குதற் பொருட் டன்றே ஆண் பெண் அலி என்றுதல், ஒருவன் ஒருத்தி ஒன்று என்றுதல் ஒதாது, அவ னவ ளது எனச் சுட்டுப் பெயர்களான் ஓதியதூஉமென்க. இதற்கிதுவே பொருளாதல் உணர்த்து தற்கன்றே ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்ச மென உரைசெய்து எடுத்துக்கொண்டதூஉமென்க. †"அசத் தாஞ்சுட்டி யுணர்பொருளான வெல்லாம்," ‡"அறிவினுலறிந்த

---

* திருவாசகம், திருவண்டப்பகுதி. கு.

† சிவானசித்தி சு-ம் சூ. உ.

‡ சிவப்பிரகாசம், உண்மை. கு.

யாவு மசத்தாதலறிதி'' என்னுந் திருவாக்குக்களானும் இதுவே இதற்குச் சிறந்த ஏதுவாதல் கண்டுகொள்க.

அற்றேல், *''அவனேதானே'' எனவும், †''அவனிவனுய் நின்ற முறை'' எனவும், ‡''அவனிவனுனது'' எனவும், §''அது நானுனேனென்று பாவிக்கச் சொல்லுவது'' எனவுங் கூறுமாற் றுன் நித்தப் பொருள்களுஞ் சுட்டியறியப்படுமாலோ வெனின்,- அற்றன்று; அவை அங்ஙனம் பொதுமையிற் சுட்டியறியப்படு மாயினும் அநுபவநிலையிற்சுட்டி அறியப்படா வென்பது, $''உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே'' எனவும், ¶''அறிவிறந்தங் கறிந்திடீர்'' எனவும், **''பாவனே யிறந்து நின்று—பாவிக்கப்படுவதாகும்'' எனவும், ††''ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்புங்—கேட்பான் புகி லளவில்லே கிளக்க வேண்டா'' எனவும், ‡‡''ஏதுக்களாலுமெடுத்த மொழி யாலு மிக்குச்—சோதிக்க வேண்டா'' எனவும், ஓதுவனவற்றுன் அறிக.

பிரபஞ்சம் அவ்வாறன்றிச் சிறப்பியல்புபற்றி அநுபவமாய் உண்மையாற் சுட்டப்படும் என்னுங் கருத்தானன்றே, ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்ச மென்றெழுயாது, உளதாய் என விசேடித்ததூஉ மென்க. நித்தப் பொருள் சுட்டி யறியப்படா தென்பது ஆருஞ் சூத்திரத்திற் காண்க.

இங்ஙனம் வழியளவையானே உலகந் தோன்றி நின்று அழியுமெனச் சாதித்து மீமாஞ்சை நூலாரை மறுத்தவழி, உலகாயதநூலார் காட்சியளவை ஒன்றே பிரமாண மன்றி வழி யளவை முதலியன பிரமாணமல்ல வாகலான் அவற்றுற் சாதிப்பன பொருள்படாவாம் என்பர். வழியளவையின்றுயின், மேல்வரும் பயனைக் குறித்து முயற்சி செய்வாரில்லையாதல் வேண்டும். §§''இம்மையின் முயற்சியாலே யிருநிதி யீட்''டப் படும் என்பதே அவர் கொள்கையாகலான் வழியளவையும்,

---

* இந்நூல். க0-ம் சூ.
† சிவஞானசித்தி, க0-ம் சூ. க.
‡ திருவுந்தியார், ச0.
§ சிவஞானசித்தி, கூ-ம் சூ. எ.
$ திருவாசகம், கோயிற்றிருப்பதிகம், கூ.
¶ சிவஞானசித்தி, கூ-ம் சூ. கூ.
** சிவஞானசித்தி கூ-ம் சூ. எ.
†† சம்பந்தர் தேவாரம், பொது, ச.
‡‡ சம்பந்தர் தேவாரம், பொது, நி.
§§ சிவஞானசித்தி, உ-ம் சூத்திரம், எ.

அதுபற்றி உரையளவையும் பிரமாணமெனக் காட்டியவழி, அவரும் அதனுனே மறுக்கப்படுவாராயினும், அவர் மதமேபற்றி அவரை மறுத்தற்பொருட்டுத், தோன்றியழிதல் கண்கூடாகக் காட்டுவார், வேறுமோர் ஏதுக் கூறுகின்றூர் :—

தோற்றமுமீறும் உள்ளதன்பாலே கிடத்தலின்

எனவரும்.

ஈண்டு உள்ளது என்றது திதியினை. கிடத்தல் - அதனேடு உடனிகழ்தல். அஃது எங்ஙனமெனின்,—ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டுவது உதாரணம் என்றறிக.

வார்த்திகப் பொழிப்பாவது உரைச் செய்யுளானும் பாச் செய்யுளானுஞ் செய்யப்படுமென்னும் வடமொழி மதம்பற்றிக், கருத்துரையும் மேற்கோளும் ஏதுவும் உரைச் செய்யுளான் உரைத்து, உதாரணம் பாச்செய்யுளான் உரைக்கின்றூர் :—

பூதாதி யீறு முதலுங் துணையாகப்
பேதாய் திதியாகும் பேற்றிமையி—னேதாரோ
வொன்றென்றிற் றேன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து

எனவரும்.

ஈறும் முதலுந்துணைக்காரணமாகக் கொண்டே திதிநிகழும். அற்றுயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழியக் கண்டில மாலெனின்,-ஒவ்வொரு கால விசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிவதனைக் காண்டலால், என்றுயினும் அதற்குரிய காலம்வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சி பற்றி அறியப்படும் என்பதாம்.

பூதாதி-அன்மொழித்தொகை. பூதாதிக்கு எனநான்க னுருபு விரித்து உரைக்க. ஆகும் என்பது முற்றுவினை. பெற்றிமை என்றது ஈண்டுச் சாதியை. ஓகாரம் - எதிர்மறை. ஒன்றென்றி னென்பது, * "ஒன்றென்றுப் பார்த்துணர்வதுள்ளமே" என் புழிப்போல அடுக்குமொழி. கண்டும் என்னும் உம்மை சிறப்பு. பெற்றிமையின் ஒன்றென்றிற்றேன்றி யுளதா யிறுதலாவது, † "பயில் வித் தெல்லாங்-காரிடமதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்"

* இந் நூல், கக-ம் சூ, க-ம் அதி.
† சிவஞானசித்தி, க-ம் சூ, கூ.

என்றதுபற்றி உணர்ந்து கொள்க. இங்ஙனஞ் சொற்பிரபஞ்சம் பொருட் பிரபஞ்ச மென்னும் இரண்டனுட் பொருட் பிரபஞ்சந் தோன்றி நின்று அழியுமென்பது ஏதுக்களாற் சாதிக்கப் பட்டது.

இனி இரட்டுறமொழிதலான், அவனவள் என்பதனுற் பெறப்படும் உயர்திணையும், அது என்பதனுற் பெறப்படும் அஃறிணையு மென்னும் இருதிணைப்பகுதித்தாய சொற்பிர பஞ்சம், இங்ஙனம் அவயவப்பகுப்புடைமையானும் சடமுமாய்ப் பலவுமாகலானும், சுட்டியறியப்படுதலானும், திதியின்பால் ஏனை யிரண்டுங் காணப்படுதலானும் தோன்றிநின்றழிதலுடைத்து எனவும் பொருளுரைத்துக்கொள்க.

அற்றேல், வேதம் நித்தியம் என்னுஞ் சுருதிகளோடு முரணும்பிற வெனின்,—முரணுது; நித்தனுகிய பரமசிவனுற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரமசிவனிடத் தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன் றுதலானும் நித்தமென்று உபசரித்துக் கூறப்படுமாகலின், சிவா கமங்களே நித்தமென்பதும் இக்கருத்தேபற்றி என்க. அங்ஙன மல்லாக்கால், வேதம் "பரமசிவனுற் செய்யப்பட்டது" என்னுஞ் சுருதிகளோடும், "அட்டாதச வித்தைக்கும் முதற் கருத்தா வாகிய சூலபாணி" என்றற் றொடக்கத்துப் புராணவசனங்க ளோடும், ஈண்டுக் கூறும் வழியனவையோடும் முரணுமாறறிக.

வித்தை பதினெட்டாவன :—இருக்குமுதலிய வேதம் நான்கும் சிக்கை கற்பசூத்திரம் வியாகரணம் நிருத்தம் சந்தோ விசிதி சோதிடமென்னும் அங்கமாறும், புராணம் நியாயநூல் மீமாஞ்சை மிருதியென்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவவேதம் அருத்தநூலென்னும் இருக்கு முதலியவற்றிற்கு உபவேதம் நான்குமென இவை.

இவற்றுள், வேதம் நான்கும் பிரமகாண்டமும், பிரம ஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமும் உணர்த்துவன வாம். சிவாகமங்களும் பிரமகாண்ட மாயடங்கு மென்க.

வேதங்களே எடுத்தல் படுத்தல் முதலிய இசைவேறு பாட் டான் உச்சரிக்குமாறு உணர்த்துவது சிக்கை.

வேதங்களிற் கூறுங் கருமங்களே அநுட்டிக்கு முறைமை உணர்த்துவது * கற்பசூத்திரம்.

வேதங்களின் எழுத்துச்சொற்பொருளியல்பு உணர்த்து வது வியாகரணம்.

---

* ஆசுவலாயநீயம், போதாயநீயம் முதலியன.

வேதங்களின் சொற்பொருள் உணர்விப்பது நிருத்தம்.

வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற்கு எழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி

வேதத்திற் சொல்லப்படுங் கருமங்கள் செய்தற்குரிய கால விசேடங்களை உணர்த்துவது சோதிடம். இங்ஙனமாகலின் இவையாறும் வேதத்திற்கு அங்கமெனப்பட்டன.

பரமசிவன் உலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமும் ஈண்டு அடங்கும்.

வேதப்பொருளை நிச்சயித்தற்கு அனுகூலமான பிரமாண முதலியவற்றை உணர்த்துவது நியாயநூல்.

வேதப்பொருளின் தாற்பரியம் உணர்தற்கு அநுகூலமான நியாயங்களை ஆராய்ச்சிசெய்து உணர்த்துவது மீமாஞ்சை. அது பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என்றிருவகைப்படும். அவற்றுள், முன்னையது மீமாஞ்சையெனவும், வேதமெனவும், பின்னையது வேதாந்தமெனவும் வழங்கப்படும்.

அவ்வவ் வருணங்கட்கும் நிலைக்கும் உரிய தருமங்களை உணர்த்துவது மிருதிநூல். புராணமுதலிய நான்கும் வேதத்திற்கு உபாங்கம் எனப்படும்.

எல்லாம் அநுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச் செய்வது ஆயுள்வேதம்.

பகைவரான் நலிவின்றி உலகங் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை உணர்த்துவது வில்வேதம்.

எல்லாக் கடவுளர்க்கும் உவகைவரச்செய்யும் இசை முதலியவற்றை உணர்விப்பது காந்தருவவேதம்.

இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களை ஈட்டும் உபாயமுணர்விப்பது அருத்த நூல். இவை நான்கும் உபவேதமெனப் படுமென்றுணர்க.

முதலதிகரணம் முடிந்தது.

---

## இரண்டாமதிகரணம்

முதலதிகரணத்திற் பிரபஞ்சம் நித்தியமெனக்கொண்ட மீமாஞ்சை நூலாரையும் உலகாயதநூலாரையும் மறுத்துச், சொல்லும் பொருளுமென்று இருவகைப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தெனக் கருத்தாவினுண்மை சாதித்தற் கோதிய ஏதுவை ஏதுக்களாற் சாதித்தவழி, ஏதுஉண்டு; சாத்தியம் இல்லையெனப் பிணங்கும் புத்தர் முதலியோரை மறுத்துப் பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருத்தாவுண்மை சாதித்தற்கு எழுந்தது இரண்டாம் அதிகரணம். அதிகரணவியைபும் இதனானே விளங்கும்.

இனி என்றது அதிகரணவியைபுணர்த்துதற்பொருட்டு. முன்வரும் அதிகரணங்களினும் இவ்வாறே கண்டுகொள்க.

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது.

எனவரும்.

சூத்திரத்தின் ஒடுங்கி என உலகவினைமேல் வைத்தோதினமையின், அதற்கேற்ப ஈண்டும் ஒடுக்கின என்னாது ஒடுங்கின என உலகவினைமேல் வைத்துரைத்தார். சங்காரகருத்தாவைச் சங்காரம் என்று உபசரித்தார். அல்லதில்லை என எதிர்மறை முகத்தாற் கூறினர், ஏனைக்கடவுளிற் செல்லாமை அறிவுறுத்தற் பொருட்டு.

அற்றேல், உலகம் ஓரிடத் தொடுங்கி நின்று மீள உளதாமென்றது என்னை? உள்ளதாயின் உண்டாக வேண்டுவதில்லையாகலான், இல்லது உண்டாம்; உள்ளது அழியும்; இல்லவை தோன்றுங்காற் சந்தானமாய்க் கணந்தோறுந் தோன்றி யழிவனவற்றுள், முற்கணத்தினின் றழியும் பொருள் பிற்கணத்திற் றோன்றும் பொருட்குச் சார்பாகலின், அவை அவ்வச்சார்பிலே வித்தின் கேட்டின் அங்குரம்போற் றோன்றும்; இதற்கொரு கருத்தா வேண்டுவதில்லையெனப் புத்தர் கூறுவர். அதனை மறுத்து மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:—

இல்லதற்குத் தோற்றமின்மையின்

எனவரும்.

அற்றேல், உள்ளதற்கு உண்டாக வேண்டுவதென்னை யென்றற்றொடக்கத்து ஆசங்கைகளை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்

எனவரும்.

உள்ளதற்கு உண்டாகவேண்டுவதென்னையென்னும் ஆசங்கையை நீக்குதற்கு இலயித்தது இலயித்த தன்னில் ஆம் என்றும், அற்றேல், இலயித்தது இலயித்தவாறே ஒழியாது மீள உண்டாக வேண்டா, வேண்டுமாயின் முன் இலயித்தலின்றி நிலைபெறவே அமையுமென்னும் ஆசங்கையை நீக்குதற்கு மலத்தால் என்றும், நசித்தலேயன்றி ஒடுங்கிநின்று மீள உண்டாமென்றற்குப் பிரமாணம் என்னையென்பாரை நோக்கி இலயித்தவா றுளதாவேண்டும் என்றுங்கூறினார். இலயித்தவாறன்றி உளதாகாதென்னும் நியமமில்லையாயின், நெற் கழுகாய் நீளாது நெல்லாயே நீளுதற்கு ஏதுவென்னையென்னுந் தருக்கமுகத்தானே அஃது அறியப்படுமென்பதாம்.

சற்காரியவாதம்

உற்பத்திக்கு முன்னுங் காரியம் உள்ளதென்று கொள்ளாக்கால், முயலின்கட் கோடுதோன்றுதவாறுபோல, மண் முதலியவற்றிற் குடமுதலியன தோன்றுதொழிதல் வேண்டும்.

அற்றேல், முன்னுங் காரியம் உள்ளதாயிற் காரகமுயற்சிகளாற் பயனென்னையெனின்,—கூவன் முதலியவற்றின் முயற்சிகளாற் புனல் வெளிப்படுமாறுபோலக் காரியம் வெளிப்படுதல் பயனென்க. அற்றேல், ஈரிடத்தினும் ஒப்பக் காரியம் உள்ளனவாயிற் கூவன்முதலியவற்றின் மண்டொடுதன்முதலிய முயற்சிகளாற் புனல் வெளிபட்டதென்னும் உணர்வுநிகழ்ச்சிபோல, மண்முதலியவற்றினுங் குடம் வெளிப்பட்டதென்னும் உணர்வு நிகழ்தல்வேண்டும். அங்ஙனமன்றி மண்ணிற் குடம் உண்டாயிற்றென்றும், கூவலிற் புனல் வெளிப்பட்டதென்றும் வெவ்வேறுய் உணர்வு நிகழ்தல் பொருந்தாதாலெனின்,—அற்றன்று; முன்னர்த் தூலவடிவிற்றுய்நின்று பின் வெளிப்பட்டதன்கண் வெளிப்பட்டதென்னும் உணர்வும், முன்னர்ச் சூக்குமவடிவிற்றுய்நின்று பின்னர்த் தூலவடிவிற்றுய் வெளிப்பட்டதன்கண் உண்டாயிற்றென்னும் உணர்வும் நிகழ்தல் பொருந்துமென்க.

இன்னும், காரணமாய் நின்ற அவத்தையானன்றி வேற்றுப் பொருளாற் றடைப்பட்டு வெளிப்பட்டதன்கண் வெளிப்பட்டதென்னும் உணர்வு நிகழும். காரணமாய் நின்ற அவத்தை மாத்திரையானே தடைப்பட்டுநின்று வெளிப்பட்டதன்கண் உண்டாயிற்றென்னும் உணர்வு நிகழும். கூவன்முதலியவற்றிற்

புனல், அவத்தையன்றி வேற்றுப்பொருளாகிய மண்ணே தடை செய்து நிற்றலின், ஆண்டு வெளிப்பட்டதென்று வழங்கப்படும். அல்லுழிக் குட முதலியவற்றை மண்முதலியனவாய் நின்ற சூக்குமாவத்தையே தடைசெய்து நிற்றலின், ஆண்டுத் தோன்றினவென்று வழங்கப்படுமென்பது. குயவன் முதலியோர் முயற்சிக்கு முன்னும் மண் முதலியவற்றின்கட் குட முதலியன உளவெனக் கொள்ளின் அப்பொழுது காணப்படுகவென்பதூஉம் இதனுனே மறுக்கப்பட்டது; மண்முதலியனவாய் நின்ற அவத்தையானே மறைபட்டு நிற்குமெனக் கோடலின்.

அற்றேல், கூவன் முதலியவற்றிற் புனன் முதலியனவுண்மை பிரமாணத்தான் அறியப்படுதலின், ஆண்டு வெளிப்படாமைக்குக் காரணம்வேற்றுப் பொருளாற் றடைப்பட்டு நிற்றலென்பது பெறுதும். ஈண்டு அத்தன்மைத்தாகிய பிரமாணமின்மையின், மண்முதலியனவாய் நின்ற காரணவத்தையே தடைசெய்து நிற்குமென்பது பொருந்தாது; அவை இல்லியாகலாற் காணப்படவில்லையென்பதே பொருத்தமுடைத்தெனின்,—அற்றன்று; "குடம் மண்ணின்கண் முன்னும் உள்ளது; ஆண்டுத் தோன்றுதலின், யாது யாண்டில்லை அஃது ஆண்டுத் தோன்றுது; வெண்மணலிற் றைலமும், முயலின் சென்னியிற் கோடும்போலும்" என்னும் அநுமானப் பிரமாணத்தானே முன்னுங் குடமுதலியன உண்மை ஒருதலையாற் றுணியப்படுதலின், அது வெளிப்படாமைக்குக் காரணம், மண்முதலிய காரணவத்தையாற் றடைப்பட்டு நிற்றலே யென்பது பெறுதுமாகலின்.

அற்றேல், இங்ஙனஞ் சற்காரிய வாதத்தின் வெளிப்படுதற்கு முன்னும் உளதெனக்கோடலின், வேறுவேறு நிகழுங் காரக முயற்சிகள் பயனிலவாய் முடியும் பிறவெனின்,—முடியா; சூக்குமவடிவினவாயுள்ளவை தூலரூபமாய் வெளிப்படுதற் பொருட்டு அவ்வவற்றிற்குரிய காரண முயற்சிகள் ஒருதலையான் வேண்டப்படுமாகலின். அல்லதூஉம், காரணத்தோடு இயைபுடைத்தாயன்றிக் காரியம் பிறவாமையின், முன்னுங் காரியம் ஒருதலையான் உள்ளதென்று உணரப்படும். காரணத்தோடியைபு வேண்டாவாயின் எல்லாக் காரணத்தும் எல்லாக் காரியமுந் தோன்றுமைக்கு ஏதுவென்னை யென்க. அவ்வச் சத்தியுடையவற்றிற் றோன்றுமெனிற் சத்தியுங் காரியத்தோடு இயைபுடைத்தாயன்றித் தோற்றுவியாது; தோற்றுவிக்குமெனின், முற்கூறிய குற்றம் ஒழியாமை அறிக. *இது ஞாணமிர்த நூலினுங் கூறப்பட்டது:—

---

*இங்ஙனங் கூறிய சற்காரியவாதஞ் சிவாக்கிரபாடியத்தினுங் காண்க; (இரண்டாஞ் சூத்திரம், உகக-ம் பக்கம்.)

* "தந்தி முதல காரக மைந்துறக்
கோட லாடை யின்றெனி னுடை
யுளதேற் காரக மென்னே யென்ன
வுளையாக் காரக மசத்துற் பத்திக்
குண்டே யாக வாயிடை யாவினுந்
தண்டா தியாருந் தாம்வேண் டியமன்
கண்டோ ராயின் மன்ற கண்டில
மன்ன தாயி னதினஃ துண்டென
வென்னே நியம மிதினுள தில்வலி
யென்னிற் சித்த சாதன மன்னே
வன்றெனிற் காரகக் குழுவும் வென்றி
தாரா தோடு மோட வேரிசை
யெல்லா முடையு முடைய நல்லோய்
சொல்லே யாகு நிற்க வல்லே
யுற்பா திக்கும் வலியுண் டில்லைச்
சத்தி ரூப மாகிக் கரும
மென்றிடின் விசேட நின்ற தொன்றிடைக்
கண்டில மொன்றும் வென்றியோ டொன்றக்
காரக மதற்குப் பேரிசை நியம
மாகத் தோற்று விக்குஞ் சீரிசை
வலியந் நுவய வெதிரே கத்து
மொலிகெழு முரூடி யானுங் கலிகொள
வறிய லாகு மவ்வெளிப் படுத
லொலிகெழு தோற்ற மதனுற் கலிகெழு
தந்துமுதல காரகம் வந்தி லாமையிற்
புடமடி மறைத்த தடமலிந் தகன்ற
வேம முதல தாமினி தகற்றத்
தமடி விளங்கு மியாங்கு மாமரு
கடமிக மறைத்த படங்கட மகற்ற
விடமிக விளங்கி யாங்கு வடிவுற
வெல்லாக் காரக முறினு முயற்கோ
டில்ல தில்ல தாகலின் வல்லே
கலைமுதன் மாயையி னிவண
நிலைமலி புடைய நினையுங் காலே."

இதனுனே இல்லதுமுள்ளதுமல்லாதபொருள் தோன்று மென்னுஞ் சூனிய வாதிகளையும், இல்லது முள்ளதுமான பொருள் தோன்றுமென்னும் அநேகாந்த வாதிகளையும் மறுத்த வாறுயிற்றென்க.

---

* ஞானமிர்தம், கடி.

இங்ஙனம் இல்லதற்குத் தோற்றமின்மையின் என்னும் ஏது வானே புத்தர் முதலியோரை மறுத்துச் சற்காரியவாதத்தான் ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்னும் மேற்கோளைச் சாதித்தவழிப், பாஞ்சராத்திரிகள் முதற்காரணத்தோடு இயைபுடைத்தாய்க் காரியந்தோன்றி அதன்கண் ஒடுங்குமென்பதே பொருத்தமுடைத்தாகலின், உலகிற்கு முதற்காரணம் மூலப்பகுதியாகலான் மூலப்பகுதி வாசுதேவனேயாகலின், வாசுதேவன்பானின்றுந் தோன்றிவிரிந்த உலகம் ஆண்டு ஒடுங்குமென்பதே பொருத்தமுடைத்து; பரமசிவன் நிமித்தகாரணமாத்திரையேயன்றி முதற்காரணமாமென நும்மவரோர் கொள்ளாமையின், நிமித்த காரணத்தில் ஒடுங்குமென்றல் பொருந்காதென்பர். அதனை மறுத்து மேற்கோளிற்போந்த *குறிப்பேதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

—இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு

எனவரும்.

சித்தாகிய வாசுதேவனைச் சடமாகிய மூலப்பகுதியென்று நீ கொள்ளினும், மூலப்பகுதிக்குக் கீழுள்ள ஏகதேச மாத்திரையேயன்றி அதன்மேலுள்ள புவனங்களுஞ் உளப்பட முற்றும் ஆண்டு ஒடுங்காதென்பார் அழியாதவை எனவும், முற்றும் ஒடுங்குமிடம் இதுவென்பார் அழிவை நத்திதியு மாதியுமாமங்கு எனவுங் கூறினர்.

†"செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு—மையப்பா டின்றி ‡யமையுமா—மைதீரொற்—றின்றியுஞ் செய்யுட்கெடி னெற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற்றளபுங் கொள்" என்பது போலவே இவ்வெண்பாவினை இருதொடராக்கி வேறுவைத்துரைத்து இங்ஙனம் இருவகையதிகரணப் பொருள் தருமாறு கண்டுகொள்க. ஈண்டு இலயித்த எனவும், தன்னிலில எனவும், யித்ததாம எனவும், லித்தா எனவும் வகையுளியாக வைத்துச் சீர் செய்து வெண்டளை சிதையாது தளையறுத்துக்கொள்க. அன்றி இதனை வெண்டுறைப்பாற் படுத்தினும் இழுக்காது. இலயித்த தன்னிலில யித்தது என்பழி, இலயித்ததென்பது ஏதுப்பொருண்மை

* குறிப்பேது—ஆண்டு ஒடுங்குதலின், என்பது.

† "நீட்டம் வேண்டின்" என்னும் தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திரத்து நச்சினார்க்கினியர் உரைமேற்கோள்.

‡ அமையுமாமென்பதும் பாடம்.

யுணர்நின்ற பெயர். இம்மெய்ந்நிலைதனைச் சற்காரியவாதம் கூறுவே இலயித்தவவத்தையின் அவ்வக்காரிய சத்திகளெல்லாமுடைய சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு; அதுவே மூதற் காரண மெனப்படும்எனவும் பிரபஞ்சத்திற்கு மூதற்காரணமாகிய மாயையதுண்மையும் பெறப்பட்டது. அவை என்றது மாயா காரியத் தொகுதியை. ஆஃறிணைப் பன்மைப் பெயரெனக் கொள்ளின் அறியாது அழிவது என்னும் ஒருமைகளோடு இயையாமை அறிக. ஆமங்கு என்பது பெயரெச்ச முடிபு. இரணியகருப்ப மதத்தையும் மறுத்தற் பொருட்டுப் படைப்புக் கடவுளையும் உடன்கூறினர்; கூறவே, இவரோடு ஒருங்கெண்ணப்படுஞ் சங் காரக்கடவுளும் இவரோடு தோன்றி யழிவனெனப் பாசுபதர் முதலியோரையும் இதனானே மறுத்தவாறுயிற்று. இம்மூவரை யுந் தோற்றுவிக்குங் காரணக்கடவுள் மகாசங்கார காரணனுகிய பரமசிவனென்பது அதர்வசிகை யுபநிடத முதலியவற்றுட் காண்க.

நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகட்கும் அதிதெய்வமான பிர மன்முதலிய ஐவருள், பிரகிருதிமாயைகாறும் வியாபித்து நிற் கும் பிரதிட்டாகலைக்கு மாயோன் அதிதெய்வமாகலின் அப்பிர கிருதிமாயைக்கு அபிமானதேவதை யென்னும் ஒற்றுமைபற்றிப் பிரகிருதிமாயையே வாசுதேவனெனவும், அதன்காரியம் அவன் வடிவெனவும், உபசரித்துக் கூறப்படும். அவ்வாறன்றிச் சித்தா கிய வாசுதேவனைச் சடமாகிய பிரகிருதி யென்றற்குப் பிரமாண மின்மையானும், ஒற்றுமைபற்றிக் கொள்ளினும் பிரகிருதிக்கு மேலுந் தத்துவங்களுண்மை *முன்னர்க் காட்டுதுமாகலின் அவை ஆண்டொடுங்குதல் கூடாமையானும், திதிக்கடவுளே முழுவதுஞ் சங்கரிக்குமாயின் திதிக்கடவுள் சங்காரக்கடவுள் படைப்புக்கடவுள் என்னும் பகுப்பேலாமையானும், சங்காரக் கடவுள் முழுவதுஞ் சங்கரிக்குங்காற் சிலரையொழித்துச் சங்க ரிப்பனென்பது பொருந்தாமையானும், சங்காரக்கடவுள் முழுவ துஞ் சங்கரித்தவழித் தானொருவனே நின்றமையிற் புனருற் பத்தி அவன்கணின்றே ஆகற்பாலதென்பது பொருத்தமுடை மையானும், பிரமன் முதலிய மூவரையும், சாக்கிரமூர்த்தி சொப் பனமூர்த்தி சுழுத்திமூர்த்தியெனக் கூறிப், பரமசிவனைத் துரிய மூர்த்தியென உபநிடதங்களெல்லாம் மூவரின் வேறுகவைத்துக் கூறுதலானும், இவ்வாறு ஏனையோரைக் கூறுமையானும், சங்கார காரணனுயுள்ள முதல்வனே முதல்வன்; உலகமுழுவதும் அவன் பாலொடுங்கி அவனிடத்தினின்றே தோன்றுமென்பது போந்த வாறு அறிக. நிமித்தகாரணனுகிய முதல்வன் உலகிற்கு முதற்

* இரண்டாஞ்சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

காரணம் அல்லனுயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதார மாய் நிற்றலின் உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்று தல் அமையுமென்பது வித்துண்டாமூலம் என வருகின்ற வெண் பாவிற் காட்டுதுமாகலின், அதுபற்றி ஆசங்கையின்மை உணர்க. இன்னும்,

"உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னெராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னேங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் மும்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மானுட மடங்கல் வலிதபக் கோறலின்
மாயோன் மகடூ வாகிய காலைத்
தடமூலை திளைத்துச் சாத்தினைத் தருதலி
னுழ்கடல் வரைப்பி னுன்றே ரனேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னுன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
மும்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிப வியல்புணர்ந் தோரே"

என்றிங்ஙனம் அரதத்தாசாரியர் கூறிய இவ்விருபத்திரண்டு ஏதுக்களானும் பரமசிவனே பரம்பொருளென்பது தெளியப்

படுதலின், அவனே முழுவதும் ஒடுக்கி உளதாக்குஞ் சருவ காரணனென்பது உணர்ந்துகொள்க. இவற்றை நாத்திகம் பேசி மறுத்துப் பாஞ்சராத்திரிகள் செய்த கிரந்தத்திற்கு மூலவசனம் இல்லையென்றெழுதிக.

இன்னும் பாஞ்சராத்திரிகள் *சிவபுராணந் தாமதபுராண மாகலின் சாத்துவிக இராசத புராணமாகிய இரண்டு புராணங்க ளோடும் முரணியவழிப் பிரமாணமாகாவெனவும்; நான்முக னுடைய ஒவ்வொருநாள் கற்பமெனப் பெயர்பெறும், அவற்றுள், ஒரு கற்பத்திற் பிரமன் சாத்துவிககுணத்தான் மேற்பட்டிருப் பன், ஒரு கற்பத்தில் இராசத குணத்தான் மேற்பட்டிருப்பன், ஒரு கற்பத்தில் தாமதகுணத்தான் மேற்பட்டிருப்பன், ஒரு கற்பத்தில் முக்குணங்களின் †சங்கீரணத்தான் மேற்பட்டிருப் பன் ஆகலின் அவ்வக் கற்பங்களின் அவ்வக் குணங்களையுடைய கடவுளர் புராணம் அவனால் விரித்துக் கூறப்பட்டனவாகலின், அவற்றுள், தாமத குணத்தினையுடைய சிவன் பெருமை கூறிய புராணந் தாமத புராணமென்பது துணியப்படுமெனவும்; இதற்கு மூலவசனம் மச்சபுராணத்திற் காணப்பட்டதெனவும் பிதற்றுவர். அது பகுத்தறிவில்லார் கூற்றேயாமென மறுக்க; என்னை? அவ்வக்கற்பங்களின் அவ்வக் குணங்களான் மேற்பட் டிருப்பன் நான்முகக்கடவுளென மச்சபுராணத்திற் கூறுமை யின். ஒவ்வொரு கற்பங்களின் ஒவ்வொரு குணம் மேற்பட்டு நிகழும் என்றது மாத்திரையேபற்றி, நான்முகனும் அவ்வக் குணங்களான் மேற்பட்டிருப்ப னென்றல் பொருந்தாமையின், கார் கூதிர் பனி முதலியவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்தின் மிக்கு நிகழ்தலும், அதுபற்றி அவ்வக் காலங்களும் அவ்வப் பெயர் பெறுதலும், கார் கூதிர் முதலியனபற்றிச் செழிப்பனவாகிய பூவும் புள்ளும் முதலாயின அவ்வக் காலங்க ளின் மிக்குத் தோன்றுதலும், அதுபற்றிக் காப்பியங்களின் அவற்றை வருணித்தலும் போலச் சாத்துவிக முதலிய குணங்க ளின் ஒவ்வொன்று ஒவ்வொரு கற்பத்தின் மிக்கு நிகழ்தலும், அதுபற்றி அவ்வக் கற்பங்களும் அவ்வப் பெயர்பெறுதலும், அவ்வக் கற்பங்களின் அவ்வக் குணமுடைய கடவுளர் மேன்மை மிக்குத் தோன்றுதலும், அங்ஙனம் மிக்குத் தோன்றுதல்பற்றி அவ்வவர் புராணங்களின் அவ்வவர் மேன்மை கூறுதலும் பொருந்துமாறுணர்க.

---

* இதுமுதற் பாஞ்சராத்திர மதமும் மறுப்புமாகக் கூறப்படும் விஷயங் களுட் பெரும்பாலன வொக்கிரபாடியத்தினுங் காண்க. (முதற் சூத்திரம், கஉசு-ம் பக்கமுதல் கசo-ம் பக்கம் வரை.)

† சங்கீரணம் - கலப்பு.

அற்றேல், இங்ஙனங் கற்பங்களைப் பகுத்தோதிய மச்ச புராண வசனத்திற்குப் பயன் வேறின்மையின், அது பயனில் கூற்றாய் முடியுமாலோவெனின்,—அற்றன்று; புராணங்கள் ஒன்றற்கொன்று மாறுபடக் கூறுதலின், இவற்றுள் யாது பிரமாணம், யாது அப்பிரமாணமென்னும் ஆசங்கையை நீக்கி, அவ்வக் குணம் மிக்குடைய கற்பங்களின் அவ்வக் குணமூர்த்திகளின் மேன்மை மிக்குத் தோன்றுதல்பற்றி அவ்வப் புராணங்கள் அவ்வாறு கூறுதலிற் கற்ப வேறுபாடுபற்றி எல்லாப் புராணங்களும் பிரமாணமேயாமென்று உணர்த்துதற் கெழுந்தாகலின், அதுவே பயனென்க.

அற்றேல், மச்சபுராணத்திற் கற்பங்களின் இயல்பு வகுத்தோதிய வசனம்பற்றிக் கோடற்கு ஓரியைபில்லையாயினும், தாமத குணமுடைய உருத்திரன் மேன்மை கூறுதல்பற்றிப் பிரமனுந் தாமத குணமுடையன் என்னுமோவெனின்,—என்னும்; அங்ஙனங் கொள்வுழித், தாமத குணமுடைய அரக்கர் பெருமை ஆண்டாண்டுக் கூறுதல்பற்றி வியாசர் முதலியோரையுந் தாமத குணமுடையரென வேண்டுதலின். இதுவுங் குணமூர்த்திகளை நோக்கிக் கூறியது. துரியமூர்த்தியாகிய பரமசிவன் முக்குணங் கடந்தவனாகலின் அவ்விறைவன் பெருமை எல்லாக்கற்பத்தும் ஒப்பநிகழ்தலின், ஆண்டு ஆசங்கையின்மை உணர்க.

இனிச், சங்காரவுருத்திரனுஞ் சங்கரித்தற்றொழிலின் பொருட்டுத் தாமதகுணத்தை மேற்கொண்டதல்லது இயல்பாகவுடையனல்லன் என்க; தாமதகுணத்தின் காரியமாகிய துயில் மயக்கம் வஞ்சனை முதலியன அவன்கண் இன்மையின். மாயோனுக்குச் சாத்துவிக குணங் கூறியது காத்தற்றொழின் மாத்திரைக்கேயெனக் கொள்க. இன்னோரன்னவை யெல்லாம் "பிரமதருக்கத்தவம்" என்னும் வடநூலுள் விரித்துக் காட்டியவாற்றான் அறிக. இதனானே வைணவம் நாரதீயம் கருடம் பாகவதம் பாற்மம் வராகமென்னும் ஆறும் சாத்துவிகபுராணமெனவும், பிரமம் பிரமாண்டம் பிரமகைவர்த்தம் மார்க்கண்டேயம் பவுடிகம் வாமனமென்னும் ஆறும் இராசதபுராணமெனவும், இலிங்கம் சைவம் ஆக்கினேயம் காந்தம் கூர்மம் மச்சமென்னும் ஆறும் தாமதபுராணமெனவும் பகுத்துக் கூறுதல் பொருந்தாமை அறிக. என்னை? புராணங்களெல்லாம் பரமசிவன் அருளிச் செய்யப் பெற்று, நான்முகனால் ஒருங்கே விரித்துக் கூறப்பட்டனவன்றி, அவ்வக்கற்பங்களின் அவ்வப் புராணங்கூறப்பட்டனவென்றற்கு ஒத்திலாமையின், அவ்வக் குணமூர்த்திகளின் மேன்மை கூறும் புராணங்களை அவ்வக்கற்பங்களின் விளக்கு

வித்தான் என்பதுமாத்திரையேபற்றி அங்ஙனங் கோடல் பொருந்தாமையின்.

இனிச், சத்துவகுணமுதலியன உடைய கடவுளரைக் கூறுதல்பற்றி அங்ஙனம் பகுத்தாமெனின்,—அதனுன் எமக்குவருவதோர் இழுக்கின்று; எம்முடையகடவுள் முக்குணங்களுங் கடந்தவனென்பது வேதஞ் சிவாகமம் புராணம் இதிகாசம் எல்லாவற்றினும் முழங்குதலானென்க.

அல்லதூஉம், அவர் சாத்துவிகபுராணமெனக் கொண்ட கருடபுராணத்திற் சிவரகசியத்தினும், பாற்ம புராணத்திற் சிவகீதையினும், இன்னும் பலவிடங்களினும் பரமசிவன் பெருமையை விரித்தெடுத்து இலிங்கபுராண முதலியவற்றினும் அதிகமாகக் கூறுதலின், இங்ஙனம் பகுத்ததனுனும் அவர் கருத்து நிரம்பாமை அறிக.

இனி, உண்மையான் நோக்குவார்க்குச் சிவபுராணங்களெல்லாம் வேதத்திற்கு உபப்பிருங்கணமாய் வேதப்பொருளேயே விரித்து எடுத்தோதுதலிற் சிறந்த பிரமாணமாமெனவும், ஏனைய புராணங்கள் அங்ஙனம் அல்லாமையின் இவற்றோடு முரணிய வழி, முரணுதலாறு உய்த்துணர்ந்து பொருள்கொள்ளப்படுமெனவும், அவற்றுள், ஓரோரிடங்களின் மாயோனுக்கும் பிரமனுக்குந் தாழ்வாக உருத்திரனைக் கூறுவனவெல்லாங் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலும் இனிது நடாத்துதற் பொருட்டுச் சங்கார வுருத்திரன்கூறுய் அவர்பாற்றோன்றிய நீலலோகிதன் முதலிய அவதார மூர்த்திகளே அவர்க்குப் புதல்வரென்னும் உபசாரமேபற்றிக் கூறியனவாமெனவும் ஓர்ந்துணர்க.

பாரதத்தினும் ஓரோரிடங்களின் அங்ஙனங் கூறுவனவற்றையும் இவ்வாறே பொருளுரைத்துக்கொள்க; அல்லுழியெல்லாம் பாரதஞ் சிவன் பெருமையே விளக்குதலின். அது "பாரததாற்பரியசங்கிரக" த்துட்காண்க.

இங்ஙனமன்றி, "நாராயணன் நான்முகனைப் படைத்தான் நான்முகன் உருத்திரனைப் படைத்தான்" என்பது முக்கியப் பொருளென்பாரை, "நாராயணன்பானின்றும் பிரமன்றோன்றினுன், நாராயணன்பானின்றும் உருத்திரன்றோன்றினுன்" என்புழி, உருத்திரனென்றது யாரையெனவும், "நாராயணன்பானின்றும் உருத்திரன்றோன்றினுன்" என்பது முக்கியப் பொருளெனக்கொள்வாரை "நான்முகன் உருத்திரனைப் படைத்தான்" என்புழி, உருத்திரனென்றது யாரையெனவுங் கடாவி மறுக்க.

அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பரமசிவன் "மும்மூர்த்திகளையும் படைத்தான்" என்றதுபோலக் குண மூர்த்திகளை இவ்வாறு கூறுது, தம்மையொழித் தொழிந்த இரு வரையும் படைத்தாரெனவே கூறுதலாற் புராணங்கட்கும் அதுவே பொருளெனக் கொள்க.

"அயனை முன்படைத் திடுமொரு கற்பத்தரியை முன் படைத் திடுமொரு கற்பத்—துயரு ருத்திரன் றனைமுனம் படைப்ப னொருகற்ப மற்றொரு கற்பந் தன்னின்—முயலு மூவரை யொருங்குடன் படைப்பன் முன்பிறந்தவர் மற்றிரு வரையுஞ்—செயலி னுற்படைக் கவுமருள் புரிவன் சிவபிரா னெனி லேற்றமிங் கெவனே" எனச் சிவதத்துவ விவேகத்திற் கூறியதனையும் ஈண்டு விரித்துரைத்துக்கொள்க.

பாரதத்தில் "அளவில் பேரொளிப் பகவனு * முருத்திரற் கச்சுதனென்மா" வாமெனச் சிவனுக்கு விண்டு ஆன்மாவென்றது அபேதமென்னும் பொருள்பட உபசரித்துக் கூறியது. சரீர மென்னும் பொருட்டு எனினும் அமையும். இவ்வாறன்றி, ஆண்டு ஆன்மாவென்றது அந்தரியாமி யென்னும் பொருட்டு எனக்கொள்ளின், "அளவில் பேரொளிப்பகவன்" என்று உயர்த்திக் கூறியதோடு முரணுமாறறிக. பாரதத்தின் மோக்க தருமத்தின், "ஆதலா லெனக்கான் மாவே யாமுருத்திரனை மூன்னர்க்—காதலா லருச்சிக்கின்றேன் யான்" எனக் கண்ணன் கூறும் வாக்கியத்திற் சிவனைத் தனக்கு ஆன்மா வென்றது அந்தரியாமியென்னும் பொருட்டேயாம்; தன்னுற் பூசிக்கப்படுங் கடவுளாதற்கு உரியபொருள் அதுவே யாகலானென்க.

இனி, † வேதத்துட் கருமகாண்டத்தின் "விண்டு பரமன் அங்கி அவமன், அவ்விருவர்க்கும் இடையே யெல்லாத் தேவரும்" என்றது ஆண்டுச் செய்வதொரு வேள்வி விசேடத்தின் அவிர்ப் பாக மேற்கு முறையின் "விண்டு மூந்தினவன் அங்கி பிந்தின வன் அவ்விருவர்க்கும் இடையே ஏனைத்தேவ ரெல்லாம்" என்னும் பொருட்டாகலின், ஆண்டுப் "பரமம் அவமம்" என்பன "ஆதி அந்தம்" எனவே பொருள்படுமாறு காண்க. இவ்வா றன்றி ஆண்டுப் "பரமன்" என்றதற்கு விண்டு எல்லாக் கடவு ளர்க்கும் மேற்பட்டவனென்றும், "அங்கி அவமன்" என்றதற்கு அங்கி எல்லாக் கடவுளர்க்குங் கீழ்ப்பட்டவனென்றும் பொருள் கொள்ளின், "அங்கி கடவுளர்க்குள் மேற்பட்டவன்" என்று ஆண்டாண்டுக் கூறுஞ் சுருதி மிருதி புராணங்கள் பலவற்றோடும்

* சிவனுக்கு எனவும் பாடம்.

† சிவாக்கிரபாடியம், முதற் சூத்திரம் கஉ-ம் பக்கம்.

மூரணுமென்றெழுதிக. இவ்வாறு முன்னெடுபின் முரணுமைப் பொருள்கொள்ள அறியாது "விண்டு ஆன்மா" என்றது பற்றியும் "விண்டு பரமன்" என்றதுபற்றியும் விண்டுவுக்கு முதன்மை கோடல் பொருந்தாமை யறிக. இன்னும் வருவனவெல்லாம் இவ்வாறே ஓர்ந்துணர்க.

பாஞ்சராத்திரிகள் இன்னுங் கூறுமாறு :—அரசன் உலாப் போதுங்காலைத் தொகுதி தொகுதியாகச் செல்வாருள் அரசனுவான் இவனென்பது ஆடை அணி யானை குதிரை முதலிய வைபவம்பற்றித் துணியப்படாதாம்; என்னை? அவை அமைச்சர் படைத்தலைவர் முதலியோர்க்கும் பொது; அல்லதூஉம், அரசன் உவகையுற்றுழி அமைச்சர் முதலாயினுர்க்குத் தன்னினும் மிக்க வரிசைகள் அளித்தலுமுண்டு ஆகலின். அதுபோல, வேதத்துட் கூறப்படுங் கடவுளருட் பரப்பிரமப் பொருளாவான் இவனென்பது ஏனைப் பெருமைகளாற் றுணியப்படாதாம். மற்றுக் கிரீடங்கவித்து வெண்கொற்றக் குடைநிழற்கீழ் வருசலொன்றே பற்றி அரசனுவான் இவனென்பது துணியப்படுமாறு போலக், காரணவாக்கியங்களுட் படைப்பு முதலியவற்றிற்குக் காரணமாகக் கூறப்படுதலொன்றேபற்றி அவனே பரப்பிரமமென்பது துணியப்படும். காரணப் பொருளாவான் நாராயணனேயென்பது சுபால முதலிய உபநிடதங்களிற் காணப்படும்.

அற்றேல், சிலவுபநிடதங்களிற் காணப்படுங் காரணப் பொருள் "சத்து" என்றும், "பிரமம்" என்றும், "ஆன்மா" என்றும், இங்ஙனம், பொதுவகையாலும்; "இரணியகருப்பன்" என்றும், "சிவன்" என்றும், "உருத்திரன்" என்றும் இங்ஙனஞ் சிறப்புவகையாலும் வெவ்வேறு பெயரான் எடுத்தோதவும் படுமாலோவெனின்,—அற்றன்று; சுபால முதலியவற்றுட் காரணப்பொருள் நாராயணனென்றது உலகந் தோன்று முறைமை எடுத்துக்கொண்ட வழிக் கூறப்பட்டதாகலின் அதுவே உண்மைப் பொருளெனவும், "சத்து" "பிரமம்" "ஆன்மா" என்றற் றொடக்கத்துப் பொதுப் பெயர்கள் * சாக பசுனியாயம் பற்றி நாராயணனையே உணர்த்திநிற்கும்; இரணிய கருப்பன் முதலிய சிறப்புப் பெயர்களுங் காரணப் பெயராய் நாராயணனையே உணர்த்திநிற்கும்; அங்ஙனமன்றி இடுகுறிப் பெயர் காரணத்தை விலக்குமெனக் கொள்ளினும் ஆகு பெயராய்த்தான், மாயோனுடைய ஆயிரம்பெயர்க்குட் சிவன் முதலிய

---

* சாகபசு நியாயமாவது, முன்னர்ப் பசுவெனப் பொதுப் பெயராற் கூறிப் பின்னர்ச் சாகபசுவெனச் சிறப்புப் பெயரடையாற் பொது நீக்கிக் கூறுதலான் முன்னர்க் கூறிய பசுவுஞ் சாகமேயெனப் பொருள் கொள்ள நிற்பதோர் முறைமையாம். சாகம் - வெள்ளாடு.

நாமங்களும் எடுத்தோதுதலின், இடுகுறியாய்த்தான், நாராயணனையே உணர்த்திநிற்குமெனவுங் கொள்ளப்படுமென்க.

அற்றேல், நாராயணன் முதலிய மாயோன் பெயர்களுங் காரணக்குறியாய்ச் சிவனையே உணர்த்தி நிற்குமாகலின், காரணப்பொருள் சிவனென்னும் உபநிடதங்களே வலியுடையவென மாறிக் கொள்ளிற் படும் இழுக்கு என்னையெனின்,—அற்றன்று; மாயோன் பெயருள் ஏனையவெல்லாங் காரணக் குறியாய் வேறொரு கடவுளை உணர்த்துமெனக் கொள்ளினும், நாராயணனென்னும் பெயர் இடுகுறிப் பெயராதலேயன்றி ஏனைப் பெயர்கள் போலக் காரணப்பெயருமா மென்றற்கு ஏலாது. அஃது எங்ஙனமெனின்,—நாரமென்பது நீர், அயனமென்பது இடம், நாரம் அயனமாகவுடையவன் நாராயணனென அன்மொழித் தொகையாய், இருமொழியும் புணர்ந்தவழி "ரகரத்தின்முன் வந்த நகரம் ஒருமொழிக் கண்ணதாயின் ணகரமாய்த் திரியும்; உயிரெழுத்துக்களும் யகரவகரங்களும் ககர பகர வருக்கங்களும் இடையே நிற்பினும் அங்ஙனந் திரியும்; ரகரம் நிலைமொழிக் கண்ணதாக நகரம் வருமொழிக் கண்ணதேல் இடுகுறிப் பெயராயின் ணகரமாய்த் திரியும்" என்பது பாணினி சூத்திரமாகலின், நாராயணனென்பதனைக் காரணக் குறியாக்குவார்க்கு நகரம் ணகரமாய்த் திரியுமென்றற்கு ஒத்தில்லையென்பது. அற்றாகலினன்றே சிவன் முதலிய பெயர்போல அவயவப் பொருள்பற்றிக் காரணக்குறியாய் மற்றொரு கடவுளை உணர்த்துதல் பெறுக நாராயணனென்னுஞ் சிறப்புப்பெயராற் சுபால முதலியவற்றின் எடுத்தோதிய தூஉமென்கவென்று இங்ஙனம் பிதற்றுவர். இவை அனைத்துஞ் சுவேதாச்சுவதரமுதலிய உபநிடதங்களை ஓதியுணராத மடவோர் கூற்றேயாமென மறுக்க.

படைப்புமுதலியவற்றிற்குக் காரணமாதல் ஒன்றே பிரமத்திற்குச் சிறந்த இலக்கணமென்பது ஒக்கும். அதுபற்றியன்றே பரப்பிரமப்பொருள் பரமசிவனேயெனத் துணிந்தாமென்க. சுபாலமுதலிய உபநிடதங்கள் உலகந் தோன்றி யொடுங்கு முறைமை உணர்த்தப் புகுந்தனவன்றிக், காரணப்பொருளை உணர்த்தப் புகுந்தனவல்ல. இடையே இயைபுபற்றிக் காரணப் பொருளும் உடன்கூறப்பட்டது. சுவேதாச்சுவதரத்தின் அவ்வாறன்றிச், சுபால முதலியவற்றுட் பொதுவகையான் உணர்ந்த காரணப்பொருளைச் சிறப்புவகையான் உணர்த்தற்பொருட்டுக், "காரணமாகிய பிரமம் யாது?" என முனிவர் வினவும் வினைவை முதற்கண் எடுத்துக்கொண்டு, உபநிடதமுழுவதும் பரமசிவனுக்குரிய சிறப்புப்பெயர்களாற் பரமேசுவரன் பெருமையை விளங்கக் கூறுதலானும், இவ்வாறு ஏனையுபநிடதங்களுண் முதற்கண்

எடுத்துக் கொள்ளாமையானும், ஏனையுபகிடதங்களினுஞ் சுவே தாச்சுவதரம் வலியுடைத்தாகலான் அதனுட் கூறப்படுங் கார ணப்பொருளாகிய பரமசிவனே பரப்பிரமமெனவும், ஏனைக் காரணவாக்கியங்களுட் கூறும் பெயர்களெல்லாஞ் சாகபசுகியா யத்தாற் பரமசிவனையே உணர்த்திநிற்குமெனவும், இரணியகருப் பன் நாராயணன் முதலிய சிறப்புப்பெயர்களும் அவயவப் பொருள்பற்றிக் காரணப்பெயராய்த்தான், அங்ஙனமன்றி ஆகு பெயராய்த்தான், பரமசிவனையே உணர்த்தி நிற்குமெனவும் உணர்க. எல்லாப்பெயரும் பரமசிவன் பெயரென்பதே வேதத் தின் துணிபென்பது ஆண்டுக்காண்க.

நாராயணனென்னும் பெயர் மாயோனுக்கு இடுகுறியாகலி னன்றே இயைபுபற்றிப் பரமசிவனை உணர்த்தும்வழி ஆகுபெய ரெனக் கொண்டா மென்பது. கங்கையின் இடைச்சேரி யென் புழிக், கங்கையென்பது இடுகுறியாய் வெள்ளத்தினையே உணர்த் திநிற்றலானன்றே கரையையுணர்த்தும்வழி இயைபுபற்றி ஆகு பெயராமெனக் கொண்டதூஉமென்க. கரையினை யுணர்த்தும் வழியும் ஆற்றலா லுணர்த்துமாயின், ஆகுபெயரென்றற்கு ஏலாமை அறிக. இங்ஙனம் நாராயணனென்பது மாயோனுக்கு இடுகுறிப்பெயராய் நின்றே கங்கையின் இடைச்சேரியென்புழிப் போல இயைபுபற்றி ஆகுபெயராய்ப் பரமசிவனையே உணர்த்து மெனக் கோடலின், ஆண்டு ணகரமாய்த் திரிதற்கு இழுக்கின் மையின், நாராயணனென்னுஞ் சொல் அவயவப்பொருள்பற்றிக் காரணக்குறியாதற்கு ஏலாதெனக் கொண்டவழியும் நின்கருத்து நிரம்புமாறில்லையென்க.

இனி, உண்மையாலேக்குங்கால் நாராயணனென்பது அவ யவப்பொருள்பற்றிக் காரணப்பெயராய்நின்றே பரமசிவனை உணர்த்துமென்பது காட்டுதும்:—*நரருடைய தொகுதி நாரம் எனத் "தொகுதிப்பொருள்பற்றி அண்விகுதிவரும்" என்னும் பாணினி சூத்திரத்தால் அண்விகுதி பெற்றுநிற்ப, அதன்மேல் ஆசாரப்பொருளுணர்த்துங் ககர ஙகர இத்துக்களையுடைய யகர விகுதி வந்து அயனீண்டு நாராய் என நின்றவழி, அதுவும் பகு தித்தன்மைப்படுதலின், அதன்மேல் வினைமுதற் பொருண் மையை யுணர்த்தும் லகர டகர இத்துக்களையுடைய யுகரவிகுதி அர எனத் திரிந்து நாராயர என நின்றவழி, "வினைப்பெயர் விகுதியினின்ற நகரம் ணகரமாய்த் திரியும்" என்பதனால் அங்ங னந் திரிந்து நாராயணனென ஒருமொழியாய் உயிர்த்தொகுதியை ஒத்துநிற்பனென்னும் பொருட்டாய்க் காரணக்குறியாயவாறு

* சிவாக்கிரபாடியம் முதற்சூத்திரம், கஉ-ம் பக்கம்.

காண்க. இங்ஙனம் நாராயணனென்பது லகர டகர இத்துக்களையுடைய யுகரவிகுதியீற்றுச் சொல்லாகலினன்றே பெண்பாலின் நாராயணீயென ஙகர பகர இத்துக்களையுடைய ஈகாரவிகுதியீற்றுன் யாண்டும் வழங்குவதூஉமென்க. யுகரவிகுதியீற்றுச் சொல்லெனக் கொள்ளாக்கால் நாராயணீயென ஈகாரவிகுதி பெறுதற்கு விதியின்மை உணர்க. நாராயணனென்னும் வடமொழிக்கு இங்ஙனம் விகுதிமேல் விகுதிபுணர்த்துச் செய்கை செய்வனவெல்லாம் வடமொழி வியாகரணம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. இன்னும் விரிப்பிற் பெருகுமென்றெழுதிக. இத்தாவது செய்கைசெய்தன் முதலியவற்றிற்குக் கருவியாக முதனூலாசிரியனாற் படைத்திட்டுக் கொள்ளப்பட்ட கருவிச்சாரியை. இரணியகருப்பன் காரணப்பொருளென்பாரையும் இவ்வாறே கூறி மறுக்க.

இங்ஙனம் இல்லதற்குத் தோற்றமின்மையின் என்னும் வெளிப்படை ஏதுவானும், மேற்கோளில் ஒடுங்கின சங்காரம் என்னும் பெயர்விசேடத்தாற் பெறப்பட்ட குறிப்பேதுவானும் முறையே புத்தரையும் பாஞ்சராத்திரி முதலியோரையும் மறுத்துச் சிறப்பு வகையான் முதற்கடவுளதுண்மை சாதித்தவழிச், சாங்கிய நூலார் இல்லதற்குத் தோற்றமின்மையின் என்னும் ஏதுவை உடம்பட்டுச் சாத்தியமில்லை யென்பர். அவரையும் மறுத்து மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது :—

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்

எனவரும்.

இதன்பொருள், மண்முதலியவற்றின் உள்ளதாகிய குடமுதலிய பொருட்குக் குயவன்முதலிய செய்வோரையின்றி வினைதன்முதலிய செய்தொழில் நிகழாமையின் ஒடுங்கின சங்காரத்தினல்லது உலகிற்கு உற்பத்தியில்லை என மேற்கொண்டதென்றவாறு.

ஈண்டு, ஒடுங்கின சங்காரத்தினல்ல துற்பத்தியில்லை என்றது மேற்கோள். பொதுப்பட, உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையில்லை என்றது ஏது. அற்றேல், ஏதுவும் பொருளும் ஒருங்குகிற்பினன்றே பொருளுண்மை துணியப்படும். அவ்வாறின்றி, இல்லதற்குத் தோற்றமின்மையின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்புழி, ஏதுக்கள் இல்லதன்கண்ணும் உள்ளதன்கண்ணும், துணிபொருள் உலகின்கண்ணுமாய் வேறு நிற்றலின், அவற்றுன் அது துணியப்படுமென்பது பொருந்தாது. அன்றியும், செய்வோரின்றிச் செய்வினையில்லை என்பதும், சங்காரத்தினல்ல துற்பத்தியில்லை என்பதும் பொதுவுஞ்

சிறப்பும் மாத்திரையேயன்றிப் பொருளான் வேறன்மையின், "மலே தீயுடைத்து, நெருப்புடைமையான்" என்புழிப்போல, அதுமானமாதற்கேலாதாம். இன்னும், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையில்லை என்பதனுன் உலகிற்குச் செய்வோனொருவன் உண்டென்பது மாத்திரையே பொதுவகையாற் றுணியப்படுமன்றிச், சிறப்புவகையாற் சங்காரக் கடவுளென்பது அதனுற் றுணியப்படாதாம். இங்ஙன மாகலின், ஈண்டுக்கூறும் ஏதுவும் பொருளுந் தம்முள் இயையாவாம் பிறவெனின்,—சொற் பல்காமைப்பொருட்டுத் துணிந்ததாக வைத்து அவ்வாறு கூறினாயினும், "உலகம் உள்ளது; அது தோற்றமுடைமையின், யாது இல்லது, அது தோன்றுது; முயற்கோடுபோலும்" என்னும் எதிர்மறை யநுமானத்தாற் சூத்திரத்துத் திதி என்றதனாற் பெறப்படும் உள்ளதாதலைச் சாதித்துப், பின்னர், "உலகஞ் செய்வோனை யுடைத்து, உள்ளதாய்க் காரியப்படுதலின்; யாது உள்ளதாய்க் காரியப்படுவது, அது செய்வோனையுடைத்து; குடம்போலும்" என்னும் உடம்பாட்டநுமானத்தானே தோற்றிய என்னும் பிறவினைவாய்பாட்டாற் பெறப்படுங் கருத்தாவொரு வனைப் பொதுவகையாற் சாதித்தவழி, அவன் யாவனென்னும் அவாய் நிலையை நீக்குதற்கு ஒடுங்கியுளதாம் என்றதனை எடுத்துக் கொண்டு, "உலகஞ் சங்காரகாரணனால் உற்பத்தியாம்: ஆண்டொடுங்குதலின்; யாது யாண்டொடுங்கும், அஃது அதனில் உற்பத்தியாம், மண்ணிற் குடம்போலும்" என்று இம்முறையே மூன்றதிகரணமாகவைத்துப் பொருள் செய்தல் ஆசிரியர் கருத்தென்பது முன்னர்க் கூறப்படும் வெண்பாக்களின் பொருளான் அறியக்கிடத்தலின், இயையுமென்க.

அற்றேனும், "யாது யாண்டொடுங்கும்; அஃது ஆண்டுத் தோன்றும்" என்னும் அவிநாபாவத்தான் உலகம் மாயையினொடுங்குதலின், மாயையே உலகத்தைத் தோற்றுவிக்கும்; நீர் உண்டெனக்கொண்ட இறைவன் நிமித்த காரணமென்பதன்றி முதற்காரண மென்னுமையின், முதற்காரணம் மாயையேயாகலின் நிமித்தகாரணத்தொடுங்குமென்றல் பொருந்தாமையின்.

அல்லதூஉம், ஒருதன்மையானன்றிப் பறவை பசு நரர் முதலியனவாகவும், சிலர் செல்வராகவும், சிலர் வறியராகவும் இங்ஙனங் காணப்படுதலின், இவ்வாறு தோற்றுவிப்பான் ஒரிறைவன் உண்டெனின், அவன் யாவர்மாட்டும் ஒப்ப அருளுடையனுதலின்றி, விருப்பு வெறுப்புடையனும்; ஆகலின், எம்மனோர்களின் ஒருவனுவன். அங்ஙனந் தோற்றுவிப்பது அவரவர் வினையாலெனின், தன்வயத்தானன்றி வினைவயத்தாற் றோற்றுவிப்பான் இறைவனுகான். அன்றியும், இங்ஙனந் தோற்றுவித்தற்கு

ஏதுவான வினையே அமையும்; இறைவன் வேண்டா. வினையும் மாயையுஞ்சடமாகலான் அவற்றைத்தொழிற்படுத்தற்கு வேறோர் இறைவன் வேண்டுமெனின்,—அற்றன்று; பால் சுரந்து கன்றினை வளர்ப்பவும், காந்தம் இரும்பை வலிப்பவுங் கண்டாமாகலின், சடத்துக்குஞ் செய்தியில்லையென்பது பொருந்தாது. இன்னும், குடத்தை வினையுங் குயவன் அவிச்சையாற் கட்டுண்டு சிற்றறிவனாய் வினைவயத்தனாய் வடிவுடையனாயிருத்தலின், இவ்வுவமையாற் றுணியப்படுங் கடவுளும் இவ்வாறாய்ப், படைப்பு முதலியன செய்யுங்கால் விகாரமெய்தி அதனிற் கட்டுற்று நிற்பன். அல்லதூஉம், குடத்தையும் அதனைவனையுங் குயவனையும் ஓரிடத்து ஒருங்குகண்டான், அல்லுழிக் குடத்தைக்கண்டு, இதுவும் வினைதற்கு ஒருகருத்தாவையுடைத்தென அதுமிதத் துணர்வதுபோல, இவ்வுலகம் படைத்தற்கு ஒருகருத்தா உண்டென வழியளவையான் உணர்தற்கு முன் ஒருலகத்தையும் அதனைப் படைப்பானொரு கடவுளையும் ஒருங்குடன் கண்டதின்மையின் அவிநாபாவமறிதல் கூடாமையான், அதுமானமே சண்டைக்கேலாதாம். இங்ஙனமாகலின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னும் ஏதுவான் முதற்கடவுள் உண்டெனத் துணிதல் பொருந்தாதாலென்னும் ஆசங்கையை நீக்கி, ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:-

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்ரு ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து

எனவரும்.

நிலங்குளிர்ந்தவழி அதன் கண்ணதாயன்றி வித்து முளையாதவாறு போல, மாயையுந் தனக்கு ஆதாரமாய் நிற்கும் இறைவன் சத்தியின்கண்ணதாய் நின்று, அச்சத்தி சங்கற்பித்த வழியே வித்தகமாம். ஆகலின் மாயையினெடுங்கித் தோன்றும் உலகம் அதற்கு ஆதாரமாகிய இறைவன் சத்தியின்ஒடுங்கி, அதன்கணின்றுந் தோன்றியதேயாமென்பார், மண் குளிர்ந்து வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா மத்தன்ரு ணிற்றல் வித்தகமாம் என்றும், ஒருபடியன்றிப் படைத்தல் துணைக்காரணவேறுபாட்டான் ஆகலின், அதுபற்றி அவனதருளுடைமைக்கும் நடுவுநிலைமைக்கும் இழுக்கில்லையென்பார், அவர்வினையால் வித்தகமாம் என்றும், வேண்டுவார் வேண்டும் உருவினைக் கொடுத்துச் செய்வினைப் பயனைக் கூட்டுதல் பற்றிச் சுதந்தரத்திற்கு இழுக்கில்லையென்பது

உவமையின்வைத்துக் காட்டுவார், வேட்டுவனு மப்புழுப்போல் வெண்டுருவைத் தான்கொடுத்துக் கூட்டானே என்றுங் கூறினர்.

இடத்தினிகழ் பொருளின்கட் படுவதனை இடத்தின்மே லேற்றிக் கூறுதல் அமையுமென்பது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானும் அறிக.

இவ்வியைபுடைமை நோக்கியன்றே *"உயிரவை யொடுங் கிப் பின்னுமுதிப்பதை னரன்பால்" எனவும், †"உலகவ னுருவிற் றோன்றி யொடுங்குமே" எனவும் வழிநூலாசிரியர் ஓதிய தாமும், உலகவ னுருவிற் றோன்றி யொடுங்குமாறு வாது ளாகமத்தின் வகுத்தெடுத் தோதியதாமும் என்க.

இதுபற்றிச் சிவாத்துவிதசைவர் நிமித்தகாரணனுகிய இறைவன் மாயையோடுங்கூடி முதற்காரணமாம் என்பர். அங்ஙனங் கூறுதல் வாய்பாடு மாத்திரையே யென்பது ‡இருவினை யதிகரணத்திற் காட்டுதும்.

இறைவன் ஆதாரமும் மாயை ஆதேயமுமாதல் வியாபக மும் வியாப்பியமுமாயவற்றுன் உணர்க. வியாபகமாதல் முப் பொருட்குஞ் சமமாயினும், அவை தண்ணீரும் எண்ணெயும் போலத் தம்முள் தூலமுஞ் சூக்குமமுமாய் நிற்றலின், தூலப் பொருள் வியாப்பியமுஞ் சூக்குமப்பொருள் அதற்கு வியாபக மாய் நிற்குமென்பது.

மூப்பொருள்களுந் தம்முள் தூலசூக்குமங்களால் நிற்கு மாறும், அதுபற்றியே வியாப்பிய வியாபகமாமாறும் §முன்னருங் காட்டுதும்.

உவமவினை பொருளினும் பொருளடை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியவாதத்தை வலியுறுத்தமையின், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந் தோன்றுதவாறுபோல, மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந் தோன்றுதெனப் பரிணமவாதிகளையும், மாயை அநிர்வசன மென்னும் மாயா வாதிகளையும் மறுத்தவாறுயிற்று.

மண்போல் என்புழிப் போல் என்பது அசை. வித்துண்டா யலுமனைந்தவா போல் எனக் கூட்டியுரைப்பாரும் உளர். வித்துண் டாக அம்மூலத்தினின்றும் முளைத்தவாறென்று உணர்க.

---

* சிவஞானசித்தி, க-ம் சூ. கூஉ.
† சிவஞானசித்தி, க-ம் சூ. சுஅ.
‡ இரண்டாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.
§ இரண்டாஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணம்.

மூலம் - காரணம். குளிர்ந்தவழி என்பது குளிர்ந்து எனத் திரிந்துநின்றது. நிற்றலால் என உருபு விரித்துரைக்க. மேலே வெண்பாவின் இலயித்த என்றதனுன் மாயை பெறப்படுதலின், அஃது ஈண்டைக்குத் தோன்ரு எழுவாயாய் வருவித்துரைக்கப் பட்டது. அவரவர் செய்த வினையால் வித்தகமாதலும், வினையுண்மைக்குப் பிரமாணமும், அதுபற்றி முதல்வன் சுதந்திரத்திற்குக் கேடின்மையும் இருவினையதிகரணத்துட் பெறப்படும்.

அற்றேல், வினையே அமையும்; இறைவன் வேண்டாவெனின்,— அற்றன்று; வினையும் மாயைபோலச் சடமாகலிற் கூட்டுவானையின்றி அமையா தென்க. பால்சுரந்து கன்றினை வளர்ப்பவும், காந்தம் இரும்பை வலிப்பவுங் காண்டலிற் சடமுங் கூட்டுவானையின்றி அமையுமென்பது பொருந்தாது; பால்சுரந்து வளர்க்குமாயின் உயிர்நீங்கிய ஆன்முலையினும் பால்சுரத்தல் வேண்டும். அஃதின்மையிற் சேதனமாகிய ஆவையின்றி அமையாமை உணர்க. காந்தம் இரும்பை வலித்தலும் அவ்விரண்டனையும் இயைவிக்குஞ் சேதனனையின்றி அமையாமை உணர்க.

அற்றேல், உயிர்கள் சேதனமாகலின் அவையே அமையும். இவற்றின் வேருய் இறைவனுண்டென்பதற்குப் பிரமாணமில்லையெனின்,— அற்றன்று; உயிர்கள் மலத்தாற் கட்டுற்றுச் சுதந்தரமின்றித் தம்முடைச் செயற்குங் குடம்போல வேருரு கருத்தாவை அவாவிநிற்றலானென்பது.

அற்றேல், மலந்தீர்ந்த முத்தரே அமைவராலெனின்,—நன்று சொன்னுய்! முத்தராவார் ஆதிமுத்தரோ? அநாதிமுத்தரோ? கூறுவாயாக. அநாதி முத்தரெனின், அதுவே எமது சித்தாந்தமாகலின், * சித்தசாதனம். ஆதிமுத்தரெனின் அவருக்குப் முத்தியளிப்பவன் முன்னரே யுளனுதல் பெறப்படுமாகலின் அநாதிமுத்தனுகிய இறைவனுண்டென்பது தெற்றென வுணர்க. இது †"பதியள வளவை மதியோர் வரத" என்னும் ஞானமிர்தத்தினுங் காண்க. இவை அனைத்தும் கூட்டானே என்னும் ‡இசையெச்சத்தால் வருவித்துரைக்கப்பட்டன.

ஏகாரம் - எதிர்மறை. கூட்டரனே எனப் பாடமோதுவாரு மூளர்; அதனுல் ஈண்டைக்குப் பொருள் சிறவாமையுஞ் சொன் முடிபிற்கு இயையாமையும் உணர்ந்துகொள்க.

---

- *சித்தசாதனம் - பரனுடம்பட்டதாய்ச் சித்தித்ததனை மறித்துஞ் சாதித்தல்.

†ஞானமிர்தம், நிக.

‡இசையெச்சமாவது, தன்னை முடிக்கும் பிறசொல்லை அவாயில்லாது சொல்லுவார் குறிப்பான் எஞ்சிநின்ற பொருளை யுணர்த்துவது.

இனிக், குடத்தைவனையுங் குயவன் அவிச்சையாற் கட்டுண்டு சிற்றறிவனுய் வினைவயத்தனுய் வடிவுடையனுயிருத்தலின், இவ் வுவமையாற் றுணியப்படுங் கடவுளும் இவ்வாறுய்ப் படைப்பு முதலியன செய்யுங்கால் விகார மெய்தி அதனிற் கட்டுற்றுநிற்ப னென்றதனை மறுத்து ஏதுவை வலியுறுத்தற்கு எடுத்துக் காட்டும் உதாரணம் :—

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
ருக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—ஞக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்றுங் கட்டு

எனவரும்.

நீ அங்ஙனங் கூறியதொக்கும். இஃது இவ்வாறுகவென எண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉம், கரணத் தாற் செய்வதூஉமென விரண்முதல் இருவகைப்படும். குயவன் கரணத்தாற் செய்வதன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்யமாட் டான். இறைவன் சத்தி அவ்வாறன்றிச் சங்கற்ப மாத்திரை யாளே எல்லாத் தொழிலுஞ் செய்யுமாகலாற் சங்கற்பமாத்திரத் தாற் செய்யுஞ் செய்திக்குப் பகைப்பொருளாகிய அவிச்சையாற் கட்டுண்டன்முதலிய குற்றங்கள், கரணத்தாற் செய்யுங் குயவன் முதலியோர்மாட்டுப்போல ஆண்டு உளதாவதற்கோர் இயை பில்லையென்பார், இறைவன் அன்றே காலத்திற் ருக்காதே நின்று ஆக்காதே கண்டும் நோக்காது நோக்கியும் நொடியாது நொடித்தும் கட்டின்முதல் உளத்திற்கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக் கண்டவனி லிற்று என்றுர்.

செய்யுளாகலின் இவ்வாறு கொண்டுகூட்டியுரைக்க. ஆக்கு தல் - படைத்தல். காண்டலும் அது. நோக்குதல் - காத்தல். நொடித் தல் - அழித்தல்; அது *"நொடித்தான்மலை" என்பதனுனும் அறிக.

ஆக்காது நோக்காது என்றமையான் நொடியாது என்றதூஉம் வருவித்துரைக்கப்பட்டது.

கரணத்தால் ஆக்காது நோக்காது நொடியாது, சங்கற்ப மாத்திரையான் முத்தொழிலுஞ் செய்யுமென்றுரைக்க.

நொடித்தலால் என்பது நொடித்து எனத் திரிந்துநின்றது; அது இன்றென்னும் வினைக்குறிப்புமுற்றுக்கொண்டு முடிந்தது.

---

*சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம், திருக்கைலாயம் - க.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. இன்றுங்கட்டு என்பது *"அருங்கேடன்" என்றாற்போல நின்றது.

இவ்வாறு வினைமுதல் இருவேறுவகைத்தாகவுங் குயவனை இறைவனுக்கு எடுத்துக்காட்டியது வினைமுதலாதற் பொதுமையான் ஒருபுடை யொத்தல் பற்றியே பிறிதில்லையென்பது கருத்து.

அற்றாயினும் முத்தொழில் செய்யும் இறைவன் உருவுடையனாதல் வேண்டும்; உடம்பின்றி வினைசெய்தல் கூடாமையானினின்,—அற்றன்று; தன்னுடம்பினை இயக்குவதாயவுயிர்க்கு வடிவின்மையின், இறைவனும் அவ்வாறு உருவின்றிநின்றே தன்னுருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்துதல் அமையுமென்க. இஃது உணர்ந்துகோடற்கன்றே †"உலகமே யுருவமாக யோனிக ளுறுப்ப தாக—விலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக—வலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கியைத்து—நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன்" என்றார் வழிநூலாசிரியர். அன்றி, இறைவன் உருவமுடையவனேயென்னின்,—உருவமெல்லாங் காரியப் பொருளாகலின், அவ்வுருவினைத்தருவான் வேறோரிறைவன் வேண்டும்; வேண்டவே, அவனுக்கும் வேறோரிறைவன் வேண்டுமென்று அநவத்தையாய் முடியும்.

அல்லதூஉம், உருவமாவது எல்லாத்தொழிலுஞ் செய்யும் ஆற்றலைத் தடுப்பதாகலின், முதற்கண் இறைவன் அருவம் உருவம் என்னும் இருவகைவடிவும் இன்றிநின்றே தனதுசத்தியால் விந்துவைக் கலக்கி நாதமுதலியவற்றைத் தோற்றுவித்துப், பின்னர்த் தனது இச்சைவயத்தால் வடிவமுங் கொள்வனென்று உணர்க. இது ‡"விந்து வவத்தை விசேடத் தெந்தை" என்னும் ஞானமிர்தத்தினுங் காண்க.

இனிக், குடத்தையும் அதனை வனையுங் குயவனையும் ஒரிடத்து ஒருங்கு கண்டான் அல்லழிக் குடத்தைக்கண்டு, இதுவும் வனைதற்கு ஒரு கருத்தாவையுடைத்தென அநுமித்துணர்வதுபோல, இவ்வுலகம் படைத்தற்கு ஒருகருத்தாவுண்டென வழியளவையான் உணர்தற்குமுன் ஒருலகத்தையும் அதனைப் படைப்பா னொருகடவுளையும், ஒருங்கு கண்டதின்மையின் அவினாபாவமறிதல் கூடாமையான், அநுமானமே ஈண்டைக் கேலா

* திருக்குறள், உக-ம் அதி. தீவினையச்சம், கo.
† சிவஞானசித்தி, இ-ம் சூத்திரம், எ.
‡ ஞானமிர்தம் - இரு.

தென்றுய்! ஈண்டு வினவுதும். அட்டிலிற் புகையுந்தீயும் ஒருங் குடன் கண்டான் மற்றோரட்டிலிற் புகைகண்டவழித் தீயுண் டெனத் துணிதல்கூடும். மலைமேற் புகைகண்டவழி, ஆண்டுத் தீயுண்டென அட்டிலிற் புகையை எடுத்துக் காட்டித்துணிதல் கூடாதாகல்வேண்டும்; என்னை? சிறிதாகிய அட்டிற்புகைக்குப் பெரிதாகிய மலையிற்புகை வேறுபாடுடைமையின், ஆண்டுத் துணிபு நிகழ்ந்தவாறு என்னையென்பது. ஆண்டுத் துணிபு நிகழாதென்பையாயின், நீ அறுமானங் கொண்டவனல்லை. வேறுபாடுடைத்தாயினும் புகையென்னுஞ் சாதி சாமானியம் பற்றித் துணிந்தேன் என்பையாயின், ஈண்டும் அஃது ஒக்கும். செயப்படுபொருளையுஞ் செயலையுஞ் செய்வோனையும் ஒருங்குடன் கண்டவன் அல்லுழிச் செயப்படுபொருளைக் கண்டவழிச், சாதி சாமானியம் பற்றி, இதுவுஞ் செய்வோனை யுடைத்தென்று அது மானத்தாற் றுணிதல் பொருந்துமென் றெழுக. இது *"பூதாதி" என்னும் ஞாயிர்த்தத்தினுங் காண்க. இன்னுங் கடாவிடைகளான் விரிப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடமொழிச் சிவாகமங்களுட் காண்க.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றாமதிகரணம்

இரண்டா மதிகரணத்தின் உலகந் தானேதோன்றி யழியு மென்னும் புத்தர்முதலியோரையும், காரணக் கடவுளன் அவன் சங்காரகருத்தாவின் வேறென்னும் பாஞ்சராத்திரி முதலியோரையும் மறுத்துச் சங்கார கருத்தாவே முத்தொழிற் குங் காரணமெனச் சாதித்தபின்னர், இங்ஙனமாகலிற் சங்கார கருத்தாவே முதற்கடவுளெனச் சாதித்தற்கெழுந்தது மூன்றா மதிகரணம்.

அற்றேல், எய்தாததனை எய்துவிக்கின்றே சாத்திரம் பயன்படுவ தது; ஒடுங்கிய சங்காரக்கலைகளு உற்பத்தியில்லை யெனவே, சங்காரகருத்தாவே முதற்கடவுளென்பது பெறப்பட் டமையின், அதனை வேறோரதிகரணமாக வைத்தோதுதல் பய னுடைத்தன்றும் பிறவெனின்,—விதியெல்லாம் எய்தாததனை யெய்துவிப்பதாகும், ஒருகாலெய்தி ஒருகாலெய்தாதாகற்பால தனை அவ்வழியும் இகந்துபடாமற் காத்து நியமமாக எய்து

* ஞாயிர்த்தம்-(20.

விப்பதூஉம், ஈரிடத்தெய்தற் பாலதனை ஒருமருங்கு மறுப்பதூஉம் என மூவகைப்படும். அவற்றுள், இஃது எய்தியதனை ஒரு மருங்கு மறுத்தற் கெழுந்ததாகலின் ஆகாதென்க.

அஃதாமாறு :—சிவபூசை செய்யற் பாற்றென்பது விதி யாக்காற் சிவபூசை செய்தல் வேறோராற்றாற் பெறப்படாமை யின், இங்ஙனம் விதிப்பது எய்தாததெய்துவிப்பதாம். சிவ பூசை செய்யுங்கால் இருந்துசெய்தல் வேண்டுமென்பது விதியா தொழியினும், இருந்துசெய்தல் சிவபூசை செய்யற் பாற்றென் னும் பொதுவிதியான் எய்திற்றேயாம். ஒரோவழிநின்று செய் தலுங் கூடுமாகலின், அவ்வழி இருந்து செய்தல் எய்தாமை யானும், இருந்து செய்தல் விதியாக்கால் சிவபூசைச் சிறப்புவிதி யெய்தாமையானும் அதனை வரையறுத்து எய்துவிப்பது நியம விதியாம், வேதாகமங்களிற் *"சிவனென்னு நாமஞ் சிவனுக்கே யுரித்து" எனச் செவியறிவுறுத்தாதவழிப் பொதுவகையான் மங்கலப்பொருள்பற்றி ஏனைப்பொருள்களினுஞ் செல்லுமாகலின், அதனை நீக்குதற்கு அங்ஙனஞ் செவியறிவுறுப்பது எய்திய தொருமருங்கு மறுப்பதாமென்க.

அற்றேல், இருந்துசெய்ய வேண்டுமென்பதனுன் நின்று செய்தன் முதலியன விலக்கப்பட்டன. சிவனென்னு நாமஞ் சிவனுக்குரித்தென்பதனுன் ஏனையோர்க் குரித்தாதல் விலக்கப் பட்டதாகலின், ஈரிடத்தும் விலக்குதலே பயனுகலானும், இருந்துசெய்தலே வேண்டும் ; சிவனுக்கேயுரித்து என ஈரிட த்தினும் ஏகாரம் பிரிநிலைப்பொருளே தந்து நின்றதாகலானும், இவை தம்முள் வேற்றுமை யில்லையாலோவெனின்,—அஃதொக் கும். இங்ஙனமாயினும் நின்று செய்யப் புகுங்கால் இருந்து செய்தல் பெறப்படாமையின், அவ்வழியும் அதனை எய்துவித் தன்றி ஏனையது விலக்குதல் கூடாமையானும், விதிப்பொருள் முற்படத் தோன்றுதலானும், அதுவே அதற்குப் பயன் : விலக் குதல் அதன் பின்னுக வந்த பயனென்பது.

இனிச், சிவனென்னு நாமம் ஈரிடத்தும் ஒப்பச்சேறலின் ஒருவாற்றானும் எய்துவிக்க வேண்டாமையின், ஆண்டு விலக்கு தன்மாத்திரையே பயனும் ஆகலின், ஈரிடத்தினும் முறையே பிரிநிலை ஏகாரம் இயைபின்மை நீக்குதற்கண்ணும், பிறிதி னியைபு நீக்குதற்கண்ணும் வந்ததாகலின், வேறுபாடின்மை யுணர்க.

* "சிவனென்னு நாமந்தனக்கே யுரியசெம் மேனியெம்மான்" என்னுந் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கற்பாற்று ; திருநாவுக்கரசுநாயனூர் தேவாரம், பொது, தனித் திருவிருத்தம், கூ.

எய்தாததனை எய்துவித்தன் முதலிய மூன்றினையும் வட நூலார் முறையே அபூர்வவிதி, நியமவிதி, பரிசங்கியாவிதியெனக் கூறுப. அவையெல்லாம் மீமாஞ்சை நூலுட் காண்க.

அற்றேல், அஃதாக, சங்காரமே முதல் என்னும் அதிகரணம் எய்திய தொருமருங்கு மறுத்தற் கெழுந்ததாமாறு யாங்ஙனமெனின், கூறுதும்:—ஒடுங்கின சங்காரத்தினல்ல தூற்பத்தியில்லையாகலாற் சங்கார கருத்தாவே முதற் கடவுளென்றல் பொருந்தும். அங்ஙனமாயினுந் தேர்முதலாயின பலர்கூடிச் செய்யக் காண்டலின், அவற்றினும் அதிவிசித்திரமான உலகம் ஒருவனுற் செய்யப்படுமென்றற்குப் பிரமாணமின்மையாற் காரணவாக்கியங்களிற் கூறப்படும் மாயோன் முதலியோரும் முதற்கடவுளர் எனல்வேண்டும். அற்றாகலினன்றே வேதத்துள் நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரையும் ஆண்டாண்டு முதற்கடவுளரெனப் புகழ்ந்தெடுத் தோதியதூஉமென்பது. அல்லதூஉம், குடமுதலியவற்றிற்குக் குயவன் முதலியோரே கருத்தாவென்பது கண்கூடாகக் காண்டலிற் சங்காரக் கடவுளொருவனே முதற்கருத்தாவென்றல் பொருந்தாது. குயவன் முதலியோர் செய்யுஞ் செயலுஞ் சங்காரக் கடவுள் செயலேயாகலின், அதுபற்றி யிழுக்கில்லை யென்னிற் குயவனை உவமைகூறல் பொருந்தாது; ஒரு பொருளே உவமானமும் உவமேயமுமாதல் செல்லாமையின். இன்னுஞ், சைவாகமங்களிற் சிவசமமாதலே முத்தியெனக் கூறுதலின், முத்தரெல்லாஞ் சங்கார கருத்தாவோடொப்ப முதற்கடவுளாவரென்பது நும்மனோரும் ஒருதலையாகக் கோடல்வேண்டும். இங்ஙனமாகலின், ஒடுங்கின சங்காரத்தினல்ல தூற்பத்தியில்லை எனச் சிறப்புவகையாற் சாதித்ததனற் போந்த பயனென்னையென்று ஆசங்கித்தவழி, ஏனையோர் முதற்கடவுளரல்லரென மறுத்தற்கெழுந்தது மூன்றும் அதிகரணமெனக் கொள்க. இவை யனைத்துந் தோன்றுதற்கன்றே இனி யென்றுரைன்பது.

இனிச் சங்காரமே முதலென்றது

எனவரும்.

ஏகாரம் பிரிநிலையை நீக்குதற்கண்வந்த பிரிநிலை. அஃதெங்ஙனமெனின்,—மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:—

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நினற
சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான்

எனவரும்.

உலகிற்குச் சுதந்தரமின்மையுஞ் சங்காரகருத்தாவுக்குச் சுதந்தரமுண்மையும் விளக்குதற்குச், சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் எனவும், சுட்டுணர்வின்றிநின்ற சங்காரம் எனவும் ஈரிடத்திற்கும் அடை கொடுத்தோதினர்.

சுட்டுணர்விற்குரிய பிரபஞ்சம் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் என்று உபசரித்துரைக்கப்பட்டது.

ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப் பிரபஞ்சத்தை ; பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவேயாகலின்.

இஃதறியாதார் சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சமென்றுரைப்பர். சேதனப் பிரபஞ்சஞ் சுட்டியறிதலும், சங்கார முதல்வன் சுட்டாதறிதலும் உண்மை யதிகாரத்திற் பெறப்படும்.

தோர்முதலாயின பலராற் செய்யப்படினும் பலரும் ஒருவன் ஏவல்வழி நின்றே செய்வாராகலானும், முதற்கடவுளில்லையென்பார்க்குக் காட்சிப் புலனுதல்பற்றிக் குடத்தைவனையுங் குயவனை எடுத்துக்காட்டி முதற்கடவுளதுண்மை அநுமானத்தாற் சாதித்த பின்னர்க், குயவனுஞ் சுட்டுணர்வுடையனுய் அவிச்சையாற் கட்டுற்றுச் சுதந்தரமின்றி நிற்றலின், அவனைத் தொழிற்படுத்துவானும் அவ்வியல்பில்லாத முதற்கடவுளேயாமெனப் பிறிதோரநுமானத்தாற் சாதித்தல் பொருந்துமாகலின், ஆண்டு இழுக்கின்மையானும், செய்தஞ் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினைமுதலாகிய முதற்கடவுள் சங்காரகாரணனொருவனே என்பது கருத்து.

காரண வாக்கியங்களின் நாராயணன் இரணியகருப்பன் முதலியோரைக் கூறியது குயவன்போல அவாந்தர காரணமாதல் பற்றியேயாகலின், அவையெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனுகிய முதற்கடவுளையே உணர்த்தி நிற்குமெனக் கொள்க. இது சுவேதாச்சுவதரம் மூன்றுமத்தியாயத்து மந்திரத்தானும் உணர்க.

அற்றுயினும், சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினுற் போலச் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமும் பலவாகுக. ஒன்றேயென்றற்குப் பிரமாணமென்னை ? அல்லதூஉம், சுட்டுணர்வினர் ஆகிய ஆன்மாக்கள் முத்தியிற் சிவசமமாவரெனக் கூறுதலின் அவிச்சை நீங்கியபின்னர்ச் சுட்டுணர்வின்றி நிற்பராகலின், அவ்வழி அவரும் முதற்கடவுளாவராலோவென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம் :—

ஒன்றலா வொன்று வுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தோழும்பாகு மங்கு

எனவரும்.

இது *சொற்பொருட் பின்வருநிலே. காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றுய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்துதற்கு இவற்றின் வேறுகிய முதற்கடவுள் உண்டென்பது பெற்றும். பெறவே, பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலின், இங்ஙனஞ் செய்யும் முதற்கடவுள், அளவிலாற்றலும் முற்றுணர்வும் பேரருளுமுதலிய குணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது. படவே, அத்தன்மையனுகிய முதற்கடவுள் ஒருவனே அமையும்; ஆகலின், வேறும் அத்தன்மையர் உண்டெனக் கொள்ளின், மிகையென்னுங் குற்றமாம்.

அல்லதூஉம், இலக்கணத்தான் வேறுபாடில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தான் **ஒன்றலா வொன்று** என வரையறுத் தோதினுர். ஒன்றலா என்பது உருவும் அருவுமாகிய இருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத என்றவாறு. ஒன்றென்பது இலக்கணத்தான் வேறுபாடில்லது என்னும் பொருட்டு. †"எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ" என்றதும் அது.

ஈண்டு அவை என்றது சேதனப்பிரபஞ்சத்தொகுதியை. அது நித்தமாகலிற் றோன்றி யழிதலின்றியினும் உடம்பொடு கூடி உளதாய் நின்று ஈறுதல் பொருந்துமென்க. ஈறுதல் - ஈறுதலாலென விரிக்க. ஈறுசெய்வதனை ஈறென்றுர். **ஈறேறுதல்** என்றது முடிந்தது முடித்தல்.

அதனி னீறலாவொன்று பலவாறே தோழும்பாகு மங்கு என்றது அச்சங்காரக கடவுள்போல அழிவின்றி நித்தமாகிய சேதனப் பிரபஞ்சம் பலவாற்றலுஞ் சங்காரக்கடவுளுக்கு அடிமையேயாம் முத்தியின்கண்ணும் என்றவாறு.

---

*"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்—பின்வரு மென்னிற் பின்வரு நிலையே" என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்தான் உணர்க.

†திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் தேவாரம், பொது, திருப்பாசுரம், கூ.

அங்கும் என்னும் இறந்ததுதழீஇய எச்சவும்மை தொக்கு நின்றது. பலவாற்றானுந் தொழும்பாதல், *"சிவன்சிவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றன்—பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற் படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று—னவன்றனே யறியுஞ்சித் தாதலினு லிரண்டு மணைந்தாலு மொன்றுகா தநங்கியமா யிருக்கு—மிவன்றனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே;" †"பாவியாம் புத்தி முத்திப் பயன் கொளும் பண்பிற் றருகும்;" ‡"உள்ளத்—தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன்—றன்றொழி னடத்து மேனி தனக்கெனக் கொண்டு தானே" என்பவற்றுள் அறிக. முத்தியிற் சிவ சமமாமென்ப தற்குப் பொருள் இவ்வதிகாரத்திறுதியிற்காட்டுதும்.

இதனானே முத்திபெற்றேரும் முதற்கடவுளராவாரென்னுஞ் சிவசமவாதி, சங்கிராந்தவாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி முதலியோர் மதமும் மறுக்கப்பட்டவாறு அறிக.

## ஆணவமலத்துண்மை

பதியுண்மைக்குப் பிரமாணங் கூறுவார் மலந்நுளதாம் எனப் புனருற்பவத்துக்கு ஏதுக்கூறுமுகத்தான் மலத்தினதுண்மைக்குப் பிரமாணமும் உடன்கூறினர்.

அற்றேல், மலந்நுளதாம் என்பதனை வேறோரதிகரணமாகவைத்தோதாமை குன்றக்கூறலாம் பிறவெனின்,—ஆகாது; அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியனவெல்லாம் §"சகசமலத்துணரா" தென அதனிலக்கணங் கூறும்வழிப் பெறப்படுதலின், ஈண்டு வேறோதல் வேண்டாமையின்.

அற்றேல், வடமொழி முதற்சூத்திரத்தில் "மலத்தால்" என்பதில்லையாலோவெனின்,—அற்றன்று; நாலாம் பாதத்தில் "இதனால்" என்பது மலத்தாலென்னும் பொருட்டு. ஆண்டுச் "சிருட்டிப்பன் இதனால்" என்பதனை "இதனாற் சிருட்டிப்பன்" என மாறிப் பொருளுரைக்க. அற்றேல், சுட்டுப்பெயர் மூன்வந்ததனைச் சுட்டுவதேயாகலின், அங்ஙனம் வாராத மலத்தைச் சுட்டுமாறு என்னையெனின்,— அற்றன்று; சுட்டுப்பெயர்

* சிவஞானசித்தி, சுக-ம் சூ, சுக.
† சிவஞானசித்தி, சு-ம் சூ. சூசு.
‡ சிவப்பிரகாசம், உண்மை, உஎ.
§ காஞ்சூத்திரம்.

முன் வந்ததனையே சுட்டுமென்னும் நியமஞ் செய்யுளுக்கின்மை யானும், சூசிப்பது சூத்திரமாகலானும் நாலாஞ்சூத்திரத்து வருவதனை ஈண்டுச் சுட்டுப்பெயராற் சூசிப்பித்தாரெனக் கொள்க. இஃதுணராதார் ஆண்டு "இதனுல்" என்பதற்கு "இங்ஙனமாகலின்" எனப் பொருளுரைப்ப. அது கூறுமையே பெறப்படுமென்றெழுதுக. அற்றாகலினன்றே ஆசிரியர் "இங்ஙனமாகலின் அந்தமாதி" என்றோதாது வாளாகூறியொழிந்ததூஉமென்க.

## நூற்பொருட்டொகைப்பொருள்

இச்சூத்திரத்தாற் போந்த தொகைப்பொருளாவது :— தோற்றக்கேடுகளதுண்மை காட்சிமுதலிய அளவைகளான் அறியவாராமையின், பிரபஞ்சம் நித்தப் பொருளேயாம்; அன்றித் தோன்றியழிவதாயினும், இல்பொருட்குத் தத்தஞ் சார்பிற் றோன்றியழிதல் இயற்கையெனவமையும்; செயற்கையெனின் அதற்கோர் ஏதுவேண்டுதலின்; மற்று உள்பொருளாயின், அதுவேயமையும், இறைவன் வேண்டா; இரண்டுள்பொருள் கோடல் மிகையாகலின்; வேண்டுமாயினும் மாயோன் முதலிய கடவுளரில் ஒருவரேயமையும்; அவரையொழித்துச் சங்கார கருத்தா முதற்கடவுளென்றற்குப் பிரமாணமென்னே? பிரமாண முண்டாயினும், அதிவிசித்திரமாகிய பிரபஞ்சம் ஒருவனுற்செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராகிய முதற்கடவுளர் உளராதல் வேண்டுமென உலகாயதர் மீமாஞ்சைநூலார் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்சராத்திரிகள் அநேகேசுரவாதிகண்முதலியோர் மதம்பற்றிப் பூர்வபக்கம் நிகழ்ந்தவழி, அவரை மறுத்துத் தோற்றக்கேடுகளதுண்மைக்கு ஆகமவளவையேயன்றி வழியளவை காட்சியளவைகளும் பிரமாணமாகலின், பிரபஞ்சம் நித்தப்பொருளன்றெனவும்; அன்றாகவே, இல்பொருட்கு முயற் கோடுபோலத் தோற்றக்கேடுகள் இன்மையானும், மாறுபட்ட இரண்டுதன்மை ஒரு பொருட்கு இயற்கையாதல் உலகத்தின்மையானும், ஒடுங்குதற்கும் உளதாதற்குங் காரணம் மூலமலமொன்றுண்டு ஆகலானும், பிரபஞ்சம் உள்பொருளென்பதூஉம், தோன்றியொடுங்குதல் செயற்கையென்பதூஉம் பெற்றும்; பெறவே உள்பொருட்குக் குடமுதலியன போலச் செய்வோரையின்றிச் செய்தொழிற்பாடு இன்மையினுற் கருத்தாவுண்மை பெறப்பட்டது; படவே, முழுவது மொடுங்கின சங்கார கருத்தாவினன்றிப் புனருற்பத்தி கூடாமையானும், திதிக்கடவுள் முதலியோரின் முழுவது மொடுங்குமென்றல் பொருந்தாமையானும், முழுவதுமொடுங்கின சங்காரகருத்தாவே முத்தொழிற்குங் கருத்தாவாமெனவும்; முற்றுணர்வும், அளவிலாற்றலும்,

பேரருளுஞ், சுதந்தரமு முதலிய குணங்களுடைமையின், அதிவிசித்திரமாகிய உலகத்தைத் தொழிற்படுத்துதற்கு அவன் ஒருவனே அமையும்; அக் குணங்களின்மையின் ஏனையோ ரெல்லாம் அவ்விறைவனுக்குத் தொழும்பராதலேயன்றி முதற் கடவுளராகாரெனவுஞ் சித்தாந்தஞ் செய்து வழியளவையான் முதற்கடவுளதுண்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கூறியவாறென்று உணர்க.

இங்ஙனம் மூன்றதிகரணமும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் ஒரு பொருண்மேல் வந்தவாறு காண்க. வருஞ் சூத்திரங்களினும் இவ்வாறு உரைத்துக்கொள்க.

மூன்றுமதிகரணம் முடிந்தது

பிரமாணவோத்தின் முதற்பாதமாகிய

**முதற்சூத்திரம் முடிந்தது**

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

# இரண்டாஞ் சூத்திரம்

இங்ஙனம் முதற்சூத்திரத்திற்கு வார்த்திகப்பொழிப் புரைத்த ஆசிரியர், இனி இரண்டாஞ்சூத்திரத்திற்கு அஃ தரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார்.—

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

எனவரும்.

இவ்வாறு பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என்பது சூத்திரமெனக் காட்டி, இனி அதன் கருத்துரைக்கின்றார்:—

எ-து. சூ-ம். எ-னின். புனருற்பவம் வருமாறுணர்த்துத லுதலிற்று

எனவரும்.

மேலையதிகரணத்திறுதியின் அந்நம் என்று உத்தேசமா யெடுத்துக்கொண்ட இறைவனுக்கு இலக்கணங் கூறுமுகத் தானே துணைக்காரணமுதலியன இன்மையின் இறைவன் உல கிற்கு நிமித்தகாரணனென்றல் சாலா தென்னும் ஆசங்கையை நீக்கி, ஒடுங்கியினின்றும் மீள உளதாமாறு வகுத்துணர்த்துதல் பிரமாணவோத்தின் இரண்டாம் பாதமாகிய இவ்விரண்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

இதனுள், உத்தேசங்கூறியபின்னர் இலக்கணங்கூறுதல் முறைமை யாகலின், அது முறைமைபற்றியவியையெனவும்; துணைக்காரணமுதலியன வுண்மைக்குப் பிரமாணங்கூறுதவழி, இறைவன் நிமித்தகாரணனுதல் சாலாமையின் சாலாதென்னும் ஆசங்கையை அவற்றதுண்மைக்குப் பிரமாணங்கூறி நீக்குதலின், அஃது ஆசங்கை பற்றியவியையெனவும்; ஒடுங்கியினின்றும் மீளஉளதாமாறு வகுத்துக்கூறுதவழி, ஒடுங்கியின் எவ்வாறு உளதாமென்று அவாய்நிற்றலின், அஃது அவாய் நிலைபற்றிய வியையெனவும் உணர்ந்துகொள்க.

இவற்றுள், அவாய்நிலைபற்றிய இயைபு சிறந்ததாகலின், அதுவேபற்றிப் புனருற்பவம் வருமாறுவைத்துஞ் ஙுநற்று என்ஙு ரேனும், இவ்வாறு பொருள்கோடல் ஆசிரியர் கருத்தென்க.

மூறைமைபற்றியவியைபான் அதிகரணவியைபும், அவாய் நிலைபற்றிய வியைபாற் பாதவியைபும், ஆசங்கைபற்றியவியை பான் ஒத்தியைபும் பெறப்பட்டன. அதிகாரவியைபு பெத் தத்தினின்ற நிலைபற்றி இலக்கணங்கூறுதல் முன்ஞறுசூத்திரத் திற்கும் ஒக்கும். நூலியைபு ஞானபாதப்பொருளியல் பாராய்தல். இவையிரண்டுங் கூறுமையே விளங்கும். இங்ஙனம் ஐவகை யியைபுங் கண்டுகொள்க.

அற்றேல், அஃது அங்ஙனமாக; மேலிச்சூத்திரத்தின் அந்நம் என்றது உத்தேசமாயினன்றே அதன்பின் இலக்கணங் கூறுதல் முறைமைபற்றிய வியைபென்றதமையும். உத்தேசமாவது, பெயர்மாத்திரையாற் பொருள் புலப்படச் சொல்லுதலென்பது நியாயநூலார் துணிபாகலின், ஈண்டுப்பெயர் மாத்திரையானன்றி ஆதி என்பதனால் விசேடிக்கப்படுதலானும், அந்நம் என்றதும் வாளாபெயராய் நில்லாது, அந்தத்தைச் செய்யுங் கடவுளெனக் காரணக்குறியாய் ஏனையோரிற் பிரித்து இலக்கணந்தோன்ற நிற்றலானும், அதனை உத்தேசமென்றல் அமையாதாலெனின்,- அற்றன்று; *"பலகலியா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சந்தெரித்தல்" என்புழிப், பதி பசு பாசமென்னும் உத்தேசம் தெரித்தலே விசேடித்து நின்றது; †"பசுபா சத்தொடு பதியாய் பெற்றி" என்புழி, ஆய்தற்குச் செயப்படுபொருளாய் நின்றது. இங்ஙனம் யாதானுமொன்றன் விசேடிக்கப்பட்டாதல் விசேடித்தாதல் நிற்றலன்றி, வாளாபெயராய்நிற்றல் யாண்டு மின்மையான், முன்னர்க் கூறப்படுவதாகிய இலக்கணத்தை அவாய்நிற்பதாய் எடுத்துக்கோடலே உத்தேசமெனப்படு மாகலின், அந்நம் என்றது உத்தேசப்பொருளென்றற்கு இழுக் கின்மை அறிக.

இதனை உத்தேசமன்றென்பார்க்கும் உத்தேசஞ் செய்யுங் காரியஞ் செய்தல்பற்றி உத்தேசமாகவைத்து இயைபுகோடல் பொருந்துமென்பது. உத்தேசஞ் செய்யுங் காரியமாவது முன்னர்க் கூறப்படும் இலக்கணத்தை அவாய்நிற்றலேயாமென் றுழிக.

அற்றேல், ஒடுங்கியுளதாம் அந்நமாதி எனவே, முத்தொழிற் கும் வினைமுதலாதல் இறைவனுக்கு இலக்கணமென்பதாஉம்

* சிவப்பிரகாசம், பொது, க.

† ஞானமிர்தம், க, அடி-கூ.

பெறப்பட்டமையின், ஈண்டு அவாய்நிற்றல் யாண்டையதெனின், —நன்று சொன்னாய்! அதனைற் போந்ததாயினுந் துணைக்காரண முதலியன உண்மைக்குப் பிரமாணங் கூறுதவழி விஞைமுதலா தலே பெறப்படாமையின், அஃது இலக்கணமன்றாய் முடியும்; ஆகலின் அங்ஙனம் பொதுவகையான் எய்தியதனைச் சிறப்பு வகையான் அவாய்நிற்றல் ஒருதலையென்க. யாண்டும் பொது வகையான் உணர்ந்து சிறப்பு வகையான் உணராததற்கே இலக் கணங்கூறப்படும். பொதுவகையான் உணராக்கால் இல க் கணத்தை அவாவுமாறில்லை; சிறப்புவகையான் உணர்ந்தவழி இலக்கணத்தாற் பயனில்லை யாகலானென்றுழிக.

அற்றேல், பிரமாணவோத்துள் இலக்கணங்கூறுதல் முறை மையன்றும்பிற வெனின்,—மேலைச் சூத்திரத்தான் நிமித்த காரணம் உண்மைக்குப் பிரமாணங்கூறி, ஈண்டுத் துணைக்காரண முதற்காரணங்களது உண்மைக்குப் பிரமாணங்கூறிய தொடங் கினர்; அவை நிமித்தகாரணனுகிய இறைவனுக்குக் குணமும் உடைமையுமாய் இலக்கணக்கூற்றின் அகப்பட்டு நிற்றலின் வேறுதலாகாமையான் இலக்கணமும் உடன்கூறினராகலின், ஆகாதென்க.

அவ்விலக்கணம் பொதுவியல்பு சிறப்பியல்பென இருவகைப் படும். முகிற்படலத்தின் மறைந்து சிறிதேதோன்றும் இரண்டா நாளைப்பிறையை காணலுறுவார்க்கு நுனிக்கொம்பின் கண்ணது திங்களென்றல் பொதுவியல்பு. அதுபற்றி ஆண்டு உற்று நோக்கியவழிப் பேரொளியாற் றண்ணென்ற கிரணங்களையுடை யது திங்களென்பது சிறப்பியல்பு. இங்ஙனம் பொருடோறுங் கண்டுகொள்க.

அவற்றுள், ஈண்டுக் கூறப்படும் இலக்கணம் பொதுவியல் பென்க.

அஃது அங்ஙனமாக; முதலுற்பவம் வருமாறுணர்த்தாது புனருற்பவம் வருமா றுணர்த்துவது என்னையெனின்,—பிரபஞ் சம் அநாதியாகலின், அம்முதற்கோடி நம்மனோரான் அறிய வாராமையானும், ஒடுங்கியின் மீள உளதாமாறே ஈண்டு அவாய்நிலையான் உணர்த்த நின்றதாகலானும் அதுவே கூறினர் என்பது.

அற்றாயினும், முதற்க ணுற்பவமாமாறு இவ்வியல்பிற் றென்பது,* "பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்-முற்பாற் — றநுகரண மும்புவன முந்தந் தவற்றான் — மனமுதலாய்

* போற்றிப்பஃறொடை, அடி-உஉ.

வந்தவிகா ரத்தால்—வினையிரண்டுங் — காட்டி" என்பதனுன் அறிக. ஈண்டுத் "தநு" என்றது சூக்குமதேகத்தை. "மன மூதலாய்" — மனங்காரணமா யென்க. *"விச்ச தின்றியே வினைவு செய்குவாய்" எனவும்; *"விண்ணு மண்ணக முழுதும் யாவையும்—வைச்சு வாங்குவாய்" எனவும் ஓதிய திருவாக் காலும் இவ்விருவேறு வகையுங் கண்டுகொள்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—மேலைச் சூத்திரத் தின் எடுத்துக்கொண்ட சங்காரகாரணனுகிய முதல்வன் கலப்பி னல் உடலின் உயிர்போல அவ்வான்மாக்களேயாய்ப், பொருட் டன்மையாற் கண்ணின் அருக்கன்போல அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற் றன்மையாலே கண்ணெளியின் ஆன்ம போதம்போல உடனுமாய் நின்று, ஆணவென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான்வரும் இருவினைகளான் அவ் வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் அவ் வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பனென்றவாறு.

அவையோநானேயாய் என்பதனை இரட்டுறமொழிதலான் அவையேயாய்த் நானேயாய் அவையோநானேயாய் எனக் கூறிப் பொருளுரைக்க. ஆய் என்பது யாண்டுங் கூட்டப்பட்டது. வழிநூல்செய்த ஆசிரியரும் இக்கருத்தைபற்றி† "உலகெலா மாகி வேறு யுடனுமாய்" என்றார்.

ஒடுங்கியுளதாம் என்றதற்கேற்ப ஈண்டும் போக்கினை முற்கூறினர்.

புரிதல் - எப்பொழுதும் மேற்கோடல்.

ஆணையின் என்பது சிங்கநோக்காய் இருவினையின் என்பத னேடும், நீக்கமின்றி நிற்கும் என்பதனேடும் இயைந்து பொருடந்து நின்றது. ஆண்டு இன் உருபு இருவினை என்பதனேடு இயையுங் கால் ஏதுப்பொருட்கண்ணும், நீக்கமின்றி என்பதனேடு இயையுங் கால் நீக்கப்பொருட்கண்ணும் வந்தது. இன் என்பது சாரியை யெனக் கொண்டு ஈரிடத்தும் ஏற்குமுருபுகள் விரித்துரைத்த லும் ஒன்று. அன்றே - அசை; அநாதியே இவ்வாறு நிற்கு மெனினும் அமையும். ஆய்ப் புரிய நிற்கும் எனக் கூட்டுக.

ஆய்ப் புரிய நிற்கும் எனவே, அங்ஙனம் நின்று ஐந்தொழில் செய்யுங் கருத்தாவாதல் முதல்வனுக்கு இலக்கணமென்பதூஉம், ஆணையின் இருவினையின் எனவே, தனது சிற்சத்தி துணைக்

* திருவாசகம், திருச்சதகம், கூசு.

† சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், க.

காரணம், இருவினை அதன்வழித்தாய துணைக்காரணம், இரு வினையின் எனவே, இருவினைக்குப் பற்றுக்கோடுண்மையும் பெறப்பட்டமையின், அது முதற்காரணமென்பதூஉம், இரு வினையிற் போக்குவரவு புரிய எனவே, ஒடுங்கியின் மீளவுள தாங்கால் இருவினைகட்கேற்பப் பலவேறு வகைப்பட்டு விரியு மென்பதூஉம் போந்தவாறு உணர்க.

படைப்புமுதலிய ஐந்தனுள் ஒன்றற்கு வினைமுதலாதல் முதல்வனுக்கு இலக்கணமெனல் அமையுமேனும், ஏனையவற் றின் ஐயப்பாடு நீக்குதற்கு ஐந்தொழிற்கும் வினைமுதலாதல் இலக்கணமென்றார்.

தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருளென்னும் ஐந் தொழிலும் தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்று மூவகைப் படும்.

அவற்றுள், தூலமாகிய தோற்றமும் இறுதியும் பிரபஞ் சத்தின் தோற்றமும் ஒடுக்கமுமென்பது வெளிப்படை. நிலை - தோன்றிய பிரபஞ்சம் ஒடுக்கம் வருங்காறும் நிலைபெறுதல். மறைப்பு அருள் என்பன பந்தமும் வீடுமென்று உணர்க.

அற்றேல், தோற்ற முதலியனபோல நிலைத்தொழிலும் முதல்வன் காரியமென்றது என்னை? தோற்றிய பிரபஞ்சஞ் சங்கரிக்கப்புகுமளவுந் தானேநின்று நிலைபெறும். இதற்கு இறைவன் வேண்டா. *தன்னுடு பகைவரால் அழிவின்றி நிலைபெறுத்துதல் அரசன் ஞெழிலானுற்போலப், பிரபஞ்சத்தைச் சங்கரிப்பார் வேறு உளராயினன்றே அவரைத் தடுத்துப் பிரபஞ்சத்தை நிலைபெறுத்துதல் வேண்டும். முதல்வன் சங்கரியாது நிற்குமளவும் வேறு சங்கரிப்பாரின்மையின், நிலைத் தொழில் முதல்வன் காரியம் அன்ரூலோ வெனின்,—நன்று சொன்னாய்! ஒருகாலத்து ஒருங்குதோன்றிய பொருள் இரண்ட னுள் ஒன்று நெடுங்காலநிற்றலும், ஒன்று சிறிதுகால நிற்றலு மாகிய நிலைவேறுபாடுண்மையின், இந்நிலைவேறுபாடு இதற் கேதுவாகிய வினைவேறுபாட்டா †னையிற்றெனவும், அவற்றுட் சேதனப்பிரபஞ்சத்திற்குத் தம்முள் நிலைவேறுபாடு தத்தம் வினைவேறுபாட்டானையதெனவுங் கொள்ளப்படும். அவ்விரு வேறுவினையும் முதல்வனுணையா னன்றி வாராமையான் நிலைத் தொழிலும் முதல்வனுற் செய்யப்படுங் காரியமாதல் அறிக.

இன்னும், தண்ணீர்க்குடம் நிலைபெறுதல் அதனைத் தாங்கிச் செல்வோனது முயற்சியின்றி அமையாதவாறுபோலத் தோன்

* தன்னுறு எனவும் பாடம்.

† ஆயிற்றென்றல் அமையும் எனவும் பாடம்.

றிய பிரபஞ்சம் ஒடுங்குமளவும் நிலைபெறுதலும் முதல்வனது முயற்சியின்றி அமையாதென்றுணர்க. அம்முயற்சியாவது தோன்றிய பிரபஞ்சம் ஒடுக்கம்வருங்காறும் நிலைபெறுக என்னும் ஆணையாகிய சங்கற்பமேயெனக் கொள்க.

இனிப், பிரபஞ்சத்துட்பட்ட உயிர்ப்பொருளும் உயிரில் பொருளும் முதல்வனாணையால் ஏவப்படுந் தத்தங்காரியத்தின் எல்லையைக் கடவாமனிற்றல் நிலையென்பாரும் உளர். அதுவும் நிலையென்பதனுள் அடங்கும்.

அஃது அங்ஙனமாக; மறைப்பாவது அநாதியாய மூல மலத்தின் காரியமாகலின், அது முதல்வனுற் செய்யப்படுங் காரியமென்பது என்னையெனின், கூறுதும்:—முதல்வனுவான் முற்றுணர்வுடைமையின், உலகத்துயிர்கள் படுந் துன்ப முழுவதும் உணர்ந்தோனுகியும்; பேராற்றலுடைமையான், உயிர்களெல்லாம் ஒருங்கே வீடுபேறடைவிக்க வல்லனுகியும்; சிவன் சங்கரன் முதலிய பெயர்களானும் அறியப்படுவதாய், விருப்பு வெறுப்பின்றி, எல்லாவுயிர்கண்மாட்டும் ஒப்ப நிகழ்வதாய்த், தொடர்புபற்றுது, பிறர் துன்பங்கண்டுழி அதனை அக்கணமே நீக்குதற்கு விளையும் மனவெழுச்சியாகிய பெருங் கருணையுடைமையான், அவற்றை ஒருங்கே வீடுபேறடைவித்தற்கண் ஒருப்பாடு மிக்குடையனுகியும்; இத்தன்மைகளெல்லாமுடைய இறைவன் உயிர்களால் அநாதிமுதல் ஈட்டப்பட்டுப் பலவேறு வகைப்பட்ட துன்பங்களையெல்லாம் விளைவிக்கும் வினைவலியினையும், எல்லாப்பெருங் கொடுமைக்கும் மூலமாகிய சகசமலசத்திகளையும், அவற்றுன்வருந் துன்பங்களையுங் கெடுத்து, எல்லாவுயிர்களையும் ஒருங்கே வீடுபேறடைவியாமைக்குக் காரணம், குடங்கையினேந்திய தீயின்சூட்டினை நிகழாவொட்டாது தனக்கு மாருகிய மந்திரமுச்சரிக்குங்காறுந் தடுத்துநிற்குங் குளிகை போல, அம்முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் அவனது பெருங்கருணை உயிர்கண்மாட்டு ஒருங்கே நிகழாதவண்ணந் தடுத்துநிற்கும் உயிர்க்குற்றமாகிய அவ்வம் மலசத்தியின்வழி நின்று அவற்றை நடாத்துவதாகிய அவனது சங்கற்பமேயன்றிப் பிறிதில்லையென்பது பெறப்படுதலின், அங்ஙனம் நடாத்துவதாகிய முதல்வனது சங்கற்பமே ஈண்டு மறைப்பெனப்படும். *"பந்தமு மாய்வீடு மாயினருக்கு" என்புழிப் பந்தமென்றதனுலும் அது. இங்ஙனமாகலான் மறைப்பு முதல்வன் செய்யுங் காரியமாதல் அறிக. அது முதல்வன் றொழிலாகலானன்றே உயிர்களுக்கு அறிவுந் தொழிலும் இடை

* திருவாசகம், திருப்பொற்சுண்ணம், உo.

யிடையே விளங்கியும் மடங்கியுஞ் சோபானமுறையான் மேற் பட்டு நிகழ்வதூஉமென்க.

இனி, ஒருசாரார் இழிந்தனவாகிய விடயங்களின் அவ் விழிபினை மறைப்பது திரோபாவமென்பர். காண்போனை மறைக்கும் மலமாயை கன்மங்களின் வேறுய்க் காட்சிப்பொருளை மறைப்பதொன்று உண்டென்பதற்குப் பிரமாணமின்மையின், விடயங்களினுளதாகிய இழிபினை உணராமைக்கேதுவாய்க் காண்போனைமறைப்பதே அவ்வாறு வழங்கப்படுமாகலின், அது பொருளான் வேறன்மை உணர்க. மலத்தை மறைப்பது திரோபாவமென்பாரும் உளர். அஃது அருளென்னுந் தொழி லின் வேறன்மை உணர்க. இன்னும் அவரவர் கூறுவனவெல்லாம் பொருந்தாமை ஓர்ந்துணர்க. *"ஏயுமும் மலங்க டத்தந் தொழி லினை யியற்ற வேவுந்—தூயவன் றனதோர் சத்தி திரோதான கரியது" என்பவாகலான், ஈண்டு யாங்கூறியதே ஆசிரியர் கருத் தாதல் காண்க.

அருளென்பது வெளிப்படை.

இனிச், சூக்குமமாகிய ஐந்தொழிலாவன, சங்கரித்த பின்னர் மேற் செய்யக்கடவனவாகிய தூலவைந்தொழிற்கு யோக்கியமாம்படி சேவலத்தின்சண் நிகழ்த்துவனவாம். அது †மிருகேந்திர ஞானபாதத்தின் நான்காம் படலத் திறுதியிற் காண்க. அதிசூக்குமமாகிய தோற்றமுதலியன ஐந்தும் அவ்வவ் விடயநுகர்ச்சி தோறும் நிகழ்தல் கண்டுகொள்க. அவையெல் லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

அற்றேல், மேலைச்சூத்திரத்தின் மூவினையை என்றெழிந் தார். ஈண்டுப் போக்குவரவுரிய என்றெழிந்தார். ஆகமங்களி னும் முதல்வனுக்கு இலயம் போகம் அதிகாரமெனவும், ஆரணி ஜநநி ரோதயித்திரியெனவும் மூத்தொழில்பற்றி மூன்றவத்தை யும் மூன்றுசத்தியுமே கூறப்பட்டன ; ஆகலான், மறைப்பும் அருளும் உடன்கூட்டி ஐந்தொழிலென்பது யாண்டுப் பெற்று மெனின்,—நன்றுசொன்னுய்! மறைப்பாவது வினைநுகர்ச்சிக்

---

* சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், அள.

† மிருகேந்திர ஞானபாதத்தின் நான்காம்படலத்திறுதிச்சுலோகத் தின் கருத்து, ஒடுங்கியகாலத்தினும், அறிவித்தற்குரியாரை அறிவித்தும் மறைத்தற்குரியாரை மறைத்தும் உயிர்களின் வினையைப் பக்குவப்படுத்தி யும் மாயாசத்திகளே வெளிப்படுதற்குரியனவாகச்செய்தும் இங்ஙனந் தூல மாகத் தோன்றுதற்குரிய எல்லாப் பொருள்களையும் நோக்கிநிற்பன் முதல் வன் என்பதாம். இச்சுலோகம், வைஷ்ணவமிய நைர்க்கிருண்ணியாதிகரணத் திறுதியிற் சிவார்க்கமணி தீபிகையினுங் காட்டப்பட்டது.

கண் அதன்வழிநின்று நடாத்துவதாகிய முதல்வனது சங்கற் பமேயாகலின், அது திதியின்கண்ணும், வீடுபேறுவது மீட்சி யின்றி இலயித்தலேயாகலின், அது சங்காரத்தின்கண்ணும் அடங்குமென்பதுபற்றி, முத்தொழிலெனத் தொகுத்துக் கூறப் படும். மறைப்பினுள் ஏனையமூன்றும் அடங்குதல்பற்றிப், *"பந்தம் வீடு தரும் பரமன்" என இரண்டு தொழிலாகவும் வைத்து ஓதப்படும். விரித்துக் கூறுங்கால் ஐந்தொழிலென் றலே எல்லாவாகமங்கட்குந் துணிபென்க.

இதனுள், அவையே தானேயாய் என்பது ஓரதிகரணம். ஆணவ மிருவினையின் என்பது ஓரதிகரணம். போக்கு வரவு புரிய என்பது ஓரதிகரணம். ஆணவ மீக்கமின்றி நிற்கும் என்பது ஓரதிகரணம். ஆக நான்கதிகரணத்தது இச்சூத்திர மென் றுணர்க.

---

## முதலதிகரணம்

அவற்றுள், முதலதிகரணம் :—

**ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்கு மென்றது.**

**எனவரும்.**

**அவையே தானேயாய்** என்புழிச் சுட்டுப்பெயர் பொதுச் சொல்லாய் மேல்வந்ததொன்றனைச் சுட்டிநிற்பதன்றித் தனக் கெனப் பொருளுடைத்தன்றுகலின், அவை என்றது மேலைச்சூத் திரத்தின் அவ ளவ ளதுவெ ளவை என்றதனுற் பெறப்படுஞ் சடப்பொருளும், அதனையொட்டித் தோன்றுஞ் சேதனப் பொருளுமென்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்தினையுஞ் சுட்டி யதோ? அன்றி முற்படத்தோன்றுஞ் சடப்பொருண்மாத் திரையே சுட்டியதோ? என்னும் ஆசங்கையை நீக்குதற்கு இவ்வான்மாக்கள் பலவும் என விதந்துரைத்தார். அணிமைக்கட் கூறிப்போந்த அந்நமாதி என்ற அதிகரணத்தானே விலக்கப்பட்டு நின்ற சேதனப்பொருணிற்ப அதனையொழித்துச், சேய்மைக் கட் கூறிப்போந்த அவனவளது வெனுமவை என்பதனைச் சுட்டு மென்பது பொருந்தாமையின் ஆசங்கை நிகழாதாயினும், சிவாத் துவிதசைவர் தமதுமதத்திற்கேற்பச் சடப்பொருண்மேல்வைத் துப் பொருள் கொள்வர்; அதனை மறுத்தற்பொருட்டு இவ்வான் மாக்கள்பலவும் என்றுரைக்க. முதல்வன் என்றது மேலைச்சூத்தி

* பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம், கஇச.

ரத்தினின்றும் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஈண்டும் இவ்வான் மாக்கள் பலவுமாய்த் தானேயாய் இவ்வான்மாக்கள்பலவுந் தானேயாய் என்றுரைத்துக்கொள்க.

அற்றேல், அவை என்பது, சடப்பொருளைச் சுட்டியதாயின், புனருற்பவஞ் செய்யுங்காற் காரணரூபமாய்நின்ற அப்பிரபஞ் சத்துடன் ஒன்றுயும் வேறுயும் உடனுயுநின்று செய்வனெனப் புனருற்பவம் வருமாறுணர்த்திப் பயன்படுமென்பது பெறுதும். அங்ஙனமன்றிச் சேதனப்பொருளைச் சுட்டிவரின் ஒருவாற்றுனும் ஈண்டைக்காவதோர் பயன்படாமையின், இவ்வதிகரணம் வெற் றெனத் தொடுத்தலாய் முடியுமாலெனின்,—அறியாது கடாயி னுய். மேலைச்சூத்திரத்தின் முழுவதுஞ் சங்கரிக்குஞ் சங்கார காரணன் யாவன், அவனே ஐந்தொழிலுஞ்செய்வன்; அவ் வைந்தொழில் செய்வோன் உலகிற்கு முதற்கடவுளென்பது போந்தது. ஆண்டு இவ்வாறு ஆசங்கை நிகழும் :—

முதல்வன் ஐந்தொழில்செய்தல் தன்பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணே? தன்பொருட்டெனின்,—வரம்பிலின்ப முடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயனில்லை. உயிர்களின் பொருட்டெனின்,—உயிர்களும் அவ னும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? பொன்னும் பணியும்போல அபேதமாயின், அது தன்பொருட்டேயாம். இருளும் வெளியும்போற் பேதமாயின், அவ்வுயிர்களின் பொருட்டு ஐந்தொழில்செய்தற்கு ஒருவாற்றுனும் இயைபில்லை. சொல்லும் பொருளும்போற் பேதாபேதமெனின், அபேதமும் பேதமுமாமென்றல் சமணர்கூறும் அநேகாந்தவாதமாம். சொல் லும் பொருளும் வேறேயாயினுஞ் சொல்வந்தெழலும் பொரு ளோன்றுதல்பற்றி அபேதமென்பார் மதத்தை ஒருவாற்றுன் உடம்பட்டுப் பேதாபேதமென்னுந் துணையேயன்றி, ஒரு பொருட்கு இரண்டுதன்மை கோடல் பொருந்தாமையின், அது சாலியேயாம். இங்ஙனமாகலின், பிறர்பொருட்டென்பது பொருந்தாது. இனி, அவ்வாறன்றி வீணெனின்,—பித்தர்செய் யுந் தொழிலோடொக்கும். பித்தரேயன்றி, அறிவான்முதிர்ந்த அரையர் முதலியோரும் வேட்டையாடுதல் சூதாடுதல் உயிர்த்தல் இமைத்தல் ஆவித்தல் தும்முதல் முதலிய வீண்டொழில் செய் யக்காண்டலின், முதல்வனும் அவ்வாறு கொன்னேசெய்தல் அமையுமெனின்,—வேட்டையாடுதல் புலிமுதலிய விலங்குகண் மிக்கு நாடுநலியாமைப் பொருட்டாதல், தமக்கு மடிமை வாராமை முதலியவற்றின் பொருட்டாதல், உணவின்பொருட் டாதல் யாதானுமொரு பயன்குறித்தன்றிச் செய்யாமையானும்; சூதாடுதல் வஞ்சனையாற் பகை வரை வெல்லுதற்கு உபாயமறிதற்

பொருட்டாதல், பணையம்பேசிப் பொருளீட்டற் பொருட்டாதல் யாதானுமொரு பயன்கருதியன்றிச் செய்யாமையானும்; உயிர்த்தல் உயிர்நிலையின் பொருட்டாகலானும், இமைத்தல் விழியைப் பாதுகாத்தற் பொருட்டாகலானும், ஆவித்தல் தும்முதல் முதலாயின தங்குறிப்பினன்றிக் காரணத்தான் நிகழ்தலானும், இளஞ்சிறார்செய்யுஞ் சிறுதேருருட்டல் சிற்றிலிழைத்தல் முதலிய விளையாடற்றொழிலும், போர்முகத்திற் றோற்றடாத்துதல் அட்டிற்றொழில்வன்மை முதலியன சோபானமுறையாற் பயிலுதற்பொருட்டு இருமுதுகுரவர் முதலியோராற் செலுத்தப்பட்டு நிகழ்தலின், அவை அப்பெரும்பயனுடைய்வாய், அவ்விளமைப் பருவ மாத்திரையின் மகிழ்ச்சிமீதூர்தலாகிய அற்பபயனும் உடையவாகலானும், அவையெல்லாம் வீண்டொழிலன்மையின், வீண்டொழிலெல்லாம் பித்தர் முதலியோர் செய்யுந் தொழிலேயாம். இங்ஙனமாகலின், ஐந்தொழில்செய்வோன் முதல்வனென்றல் இலக்கணவழுவாமென்று ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்கி வேறுயினுங், கலப்பினுல் அவையோர மியைபுடைமையின், உயிர்களின்பொருட்டே முதல்வன் ஐந்தொழில் செய்வன்; ஆகலான், இலக்கண வழுவாமாறு யாண்டையதென்று ஒருதலையான் இறுக்கவேண்டுதலின், அங்ஙனமிறுத்தற் பயத்ததாய்ப் போந்த அவையே நானேயாய் என்பது ஈண்டைக்குப் பயன்படாமை யாண்டையதென்க.

*"முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம்" எனவும், †"ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட் டாக வியம்புவர்கள்" எனவும், ‡"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி." எனவும் பிறுண்டும் இவ்வாறே ஐந்தொழில் செய்தல் §விளையாட்டென்றது ஐங்கலப்பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே பிறிதில்லையாகலின், அஃதறியாது விளையாட்டென்றதே பறறி வீண்டொழி லென்றல் சிறிதும் ஏலாமை யறிக.

இன்னும், ஒரு விடயத்தைக் காணுங்கால் ஆன்மபோதம், கண்ணெனினெனத் தானென வேறின்றி, உடனுய்நின்று காணுமாறுபோல, முதல்வன் ஐந்தொழில் செய்யுங்கால் உயிர்களினுடனுய்நின்று செய்வனெனப் புனருற்பவம் வருமாறுணர்த்து

---

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம், கூசு.

† சிவப்பிரகாசம் பொது, கூ.

‡ திருவாசகம், திருவெம்பாவை, கூஉ.

§ நீலகண்ட பாடியத்தில், லகவல்லியாதிகளைத்துச் சிவார்க்க மணிதீபிகையிலுங் காண்க.

தலையும் பயந்தமை காண்க. அவையோயாய்த் நாலோயாய் என்ப தனால் இலக்கண வழுவின்மையும், அவையே நாலோயாய் என்ப தனாற் புனருற்பவம் வருமாறுணர்த்துதலும் பயத்தற்கன்றே ஆசிரியர் இங்ஙனம் இரட்டுற மொழிந்ததூஉமென்க.

வடமொழி இரண்டாஞ் சூத்திரத்தினும், "புமான்க ளுக்கு" என்று எடுத்துக்கொண்டமையின், ஆண்டு இயைபில் லாத சடப்பொருளை வருவித்துரைத்தல் பொருந்தாமையறிக.

அல்லதூஉம், "அது நீயாகின்றாய்" எனவும், "அதுவா னேன்" எனவும், "அது இது" எனவும், "அது நான்" எனவும், பொருள்படுந் "தத்துவ மசி" முதலிய மகா வாக்கியங்களின் பொருளை ஈண்டு எடுத்தோதினராகலின், ஆண்டைக் கியைபில் லாத சடப் பிரபஞ்சத்தை வருவித்துரைத்தல் பொருந்தாமை அறிக. மகாவாக்கியப் பொருளாகலானன்றே பயனேத்துள், *"அவனே தானே யாகிய வந்நெறி" என, இதனை அதுவதித் துச் சுட்டியதூஉமென்க.

இன்னும், ஆன்மாக்களின் முதல்வன் நிற்குமாறு கூறவே அவ்வான்மாக்களின் வியாப்பியமான மாயை, கன்ம மாயேயங் களினும் அவ்வாறே நிற்பனென்பது போதருமாகலின், அது வேறுகூற வேண்டாமை உணர்க.

அற்றேல், முதல்வன் இங்ஙனம் மூன்றுவகையுமாய் நிற்ப னென்றற்குப் பிரமாணமென்னையெனின், மேற்கோளைச் சாதித் தற்கெழுந்த ஏது :—

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத் தியை யுணர்த்துமாயிட்டு.

எனவரும்.

இதன்பொருள், வேதத்துள் அத்துவிதம் என்ற சொல்லே இம்மூன்றற்கும் பிரமாணம். அஃது எவ்வாறெனின், "துவிதம்" என்பது இரண்டென்னும் பொருட்டு. "அ" என்னும் "நகரம்" அபிபிரகாசமென வருமொழிப் பொருளின் இன்மையினையும், அதன்மமென வருமொழிப் பொருளின் மறுதலையினையும், அப் பிராமணனென வருமொழிப் பொருளின் அன்மையினையும் உணர்த்தி நிற்கும். அவற்றுள், ஈரடு இன்மைபபொருள்பற்றி இரண்டில்லையெனப் பொருள்கொளவிரி இரண்டின்மை ஒன்றின் கண்ணேயாமாகலின், ஒன்றெனப் பொருள்படும். மறுதலைப் பொருள்பற்றி இரண்டற்கு மறுதலையாகிய ஒன்றெனப் பொருள்

* இந்நூல், பத்தாஞ் சூத்திரம்.

கொள்ளின், மறுதலை இருபொருட்கண்ணதாகலின், அதன் மறுதலையாகிய இரண்டாவதுண்மையும் பெறப்படும். படவே, இரண்டு ஒன்று என்பது பதிப்பொருள் ஒன்றன்றென்னுங் கருத்தெனப் பொருள்படும். அன்மைப் பொருள்பற்றி இரண்டல்லவெனப் பொருள்கொள்ளின், இருபொருள்களும் வேறன்றி உடனுய் நிற்குமெனப் பொருள்படும். இம்மூன்றனுள் இன்மைப் பொருள் சிறந்தமையின் அதுபற்றி ஒன்றென்றல் பொருத்தமுடைத்தெனின், தானே தன்னே ஒன்றெனக் கருதல் வேண்டாமையின் அங்ஙனங் கருதும் பொருள் வேருென்று உண்டென்பது பெறப்படுமாகலானும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி, ஏனைச் சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மைமறுதலைப்பொருள்களையும் உணர்த்துதல் வழக்கின்கணின்மையின், அத்துவிதமென்ற மொழிதானே பிறிதுகாரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்திநிற்கு மாகலானும், ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருலேயாய் நிற்கும் என மேற்கொண்டதென்றவாறு.

ஆகலானென்பது ஆய் எனத் திரிந்துநின்றது; "மழை பெய்து குளநிறைந்தது" என்புழிப்போலென்க. *"நெஞ்சம் பிளந்திட்டு" என்புழிப்போல இட்டு என்பது பகுதிப்பொருள் விகுதி. வார்த்திகமாகிய பொழிப்புரையுஞ் செய்யுளாகலின், அங்ஙனங் கூறினர். ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்கால வழக்கென்றலும் ஒன்று. அற்றுகலினன்றே †"நீயோ செய்யாய் நின்மலனுயிட்டு" என்றுர் வழிநூலாசிரியரும்.

*எண்ணும்மை விரித்துரைக்க.*

வேறன்றி யுடனுமென்பது பெறப்படவே; பொருண்மையாற் பேதமெனபதூஉம், கலப்பிஞல் ஏகதேமென்பதூஉந் தாமே போதருமென்பது கருத்து. "கலப்பிஞல்" "பொருண்மைய..." "உயிர்க்குயிராதற் றன்மையால்" என்னும் ரதுக்கள், ‡"ஒரக்கொடு சேர்த்தி" என்னும் வெண்பாவில் "உடங்கியைந்து" எனவும், "நின்று" எனவும், "பிரிப்பின்றி" எனவும் மூவகைப்படத்தோதிய சொற்றிப்புப்பற்றி எடுத்துக் கொள்ளப்பட்டன.

அற்மேல், இங்ஙனம் மூன்று வகையாகக் கூறுதல் அநேகாந்தவாதமாமெனின், ஆகாதென்பது உவமை முகத்தான்

---

* கலித்தொகை, முல்லை, ச

† இருபாவிருபஃது. ச, அடி. ஆ.

‡ இந்நூல். பக்கம்: ஈஎ.

உணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணங்களுள், அவையேயாதலை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம் :—

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கோட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு

எனவரும்.

இருவர் கைகோத்துநின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனைன் என்னையென்றல் உலகத்தின்மையின், உடம்பிற்கிட்ட பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம் பிறிதோராற்றுற் பெறப்படாமையின், அவ்வுயிர் உடம்பெனத் தானென வேறுபாடின்றி அபேதமாய்நிற்றல் பெற்றும். அதுபோல முதல்வனும் உயிர்களின் அபேதமாய்நிற்பனென்பார், கட்டுமுறுப்புங் கரணமுங் கொண்டுள்ளமிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங் கோட்டி என்றும், அங்ஙனம் ஒன்றுய வழியும் ஒன்றுகாமைக்கு அநுபவங்காட்டுவார், அவனுளமாகில்லா னுளமவனு மாட்டா தவனுளமா யல்லனுமா மங்கு என்றுங் கூறினர்.

கட்டுமுறுப்பு - நரம்புமுதலியவற்றுற் கட்டப்படும் உடம்பென்க. உறுப்பு - ஆகுபெயர். எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டி என்பது பெயர். விணையெச்சமெனினுமமையும். அங்கு - அதுபோல.

இதனுனே அவையேயாதல் வலியுறுத்தப்பட்டவாறு காண்க.

அற்றேல், வேதத்துள் அத்துவிதமென்றதூஉ மன்றி, "ஏகமே" எனவும் ஸ்துதலின் அது வேறுபொருள் படாமையான், அதற்கு மறுதலையாய உயிர்களோடு ஒட்டிநிற்பனெனப் பேதப்படக்கூறுதல் பொருந்தாதாலெனின், அசசொற்குத் தாற்பரியங் கூறித் தானேயாய் என்பதனை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம் :—

ஒன்றென்ற தொன்றேகா ணென்றே பதிபசுவா
மொன்றெனுறு நீபாசத் தோடுனேகா—ணென்றின்று
லக்கங்க ளின்று மகர வுயிரிலறே
லிக்கிரமத் தென்னு மிருக்கு

எனவரும்.

வேதத்துள் "ஏகம்" என்றசொல் வேறுபொருள் படாதென்பார், ஒன்றென்றது தானேயென்றும், அதற்குத் தாற்பரியங்

கூறுவார், "விண்ணும் மண்ணுந் தோற்றுவிக்குந் தேவன் ஒருவனே" என்றும், "ஒருவனே யுருத்திரன் இரண்டாம் முதற் கடவுளில்லை" என்றும், "பிரமப்பொருளொன்றே" என்றும் ஓதுகின்ற அச்சுருதிப்பொருளேபற்றி ஒன்றேபதி என்றும், பதியோடு உயிர்களிடை வேற்றுமைகூறுவார், பசுவாமொன் றென்றறீ என்றும், பசுவாதற்குக் காரணங் கூறுவார், பாசத்தோடுளே காண் என்றும், "பிரமப்பொருளில்லையாயின் ஒருபொருளுமில்லை" என்பதோர் சுருதிப்பொருள் இதனோடு முரணுமை அதன் தாற் பரிய மூணர்த்துமுகத்தான் அங்ஙனம் வேறுரையினும் வேறன்மைக்கு அநுபவங்காட்டுவார், ஒன்றின்ரு லக்கரங்க ளின்ருமகர வுயிரின்றே லிக்கிரமத் தென்னு மிருக்கு என்றுங் கூறினர்.

இதனுல் நானேயாதல் வலியுறுத்தப்பட்டவாறு காண்க.

மெய்கள் அகரமொடு சிவணியன்றி இயங்காமையானும், இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத்திற்குரிய அங்காப்பு முயற்சியொடு சிவணியன்றிப் பிறவாமையானும், ஏகார ஓகாரமுதலாயின மூன் அகரக்கூறும் பின் இகர உகரக்கூறுகளுமாய் இயைந்தன்றிப் பிறவாமையானும், அவையெல்லாம் அகரமாகிய உயிரையின்றியமையாமை பெற்றும். அதுபோலப் "பிரமமில்லையாயின் ஒரு பொருளுமில்லை" என்றதூஉம் பிரமத்தையின்றி யமையாமைப் பொருட்டென்பார், அக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே லிக்கிரமத் தென்னு மிருக்கு என்ருர். அகரவுயிர் நாதமென் றுரைப் பாருமுளர்.

இன்ருளென்பது இன்ருள் என மரீஇயிற்று; *"என்ஞானு மொன்று" என்ருற்போல. இக்கிரமத்து இக்கிரமத்தாலென விரிக்க. இன்று என்னுமொருமை அப்பண்பின்மேனின்றது. காண் என்பதனைப் பசு என்பதனோடுங் கூட்டுக. ஆம் என்பது அசை. ஏகாரமுதலிய அன்னவாதல் மாபாடியங்கையடங்களிங் வெளிப்படை. அது †சூத்திரவிருத்தி புளுரைத்தாம் ஆண்டுக்காண்க.

அற்றேல், ஏகமாகிய பிரமத்தை ஏகமென்றல் பொருந்தும். யாண்டும் அவ்வாறே ஏகமென்னுது சிலவிடங்களில் "பிரமம் அத்துவிதம்" எனவும் பேதங்கூறியதென்னை? அத்துவிதம் இருபொருட்கண்ணதெனக் கொள்ளின் ஒருபொருளை அத்துவிதமென்றல் பொருந்தாமாலெனின்,—அவ்வாசங்கை நீக்குமுகத்தான் அவையேநானேயாய் என்பதனை வலியுறுத்துற்றெடுத்துக்காட்டும் உதாரணம்:—

---

* நாலடியார், கி.

† தொல்காப்பிய பாயிரவிருத்தி, பகுதி, உடு.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணுரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு

எனவரும்.

ஆண்டுப் "பிரமம் அத்துவிதம்" என்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதென்னும் பொருட்டாகலான், அஃது "ஏகம்" என்பதனோடு முரணுமாறில்லை யென்பதாம்.

பண்ணை என்னும் ஐகாரம் பகுதிப்பொருள் விகுதி. பண்-பாலிப்பண் முதலாயின. ஓசை-எடுத்தல் படித்தல் நலிதன் முதலாயின. ஆதல்—ஆதலானென்க. இதனானே அனையே தானேயாதல் வலியுறுத்தப்பட்டவாறறிக.

எங்குமா மண்ணுருள் என விசேடித்தது குணமுங் குணியும் போல உடனுயும் அவ்வாறுடனுகாமைக்கு அநுபவங்காட்டிய வாறு. வியாப்பியமும் வியாபகமுமாத லொப்புமை மாத்திரையேபற்றிக் குணகுணிகளை உவமை கூறினரென்பது.

அற்றேல், இங்ஙனம் வேறுவேறு உவமைகூறுதல் ஏகாந்தவாத மன்றென்பார்க்கு ஏகாந்தவாதமாதல் உவமைமுகத்தாற் கூறி மூன்றினையும் ஒருங்கே வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்:—

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகெலா மின்று

எனவரும்.

கலப்பாய் நிற்றலான் உலகாயம் என்பார், உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையான் வேறுநிற்றலால் தானேயாம் என்பார், நின்று எனவும், உயிர்ச்சுயிராய் நிற்றலால் தானே யுலகாம் என்பார், பிரிப்பின்றி எனவுங் கூறினர்.

ஈண்டும் இரட்டுற மொழிதுமாயிற்று. உலகென்றது ஈண்டு உயிர்களை. இலனுகலா னென்பது இன்றியெனத் திரிந்தாயின்றது. இதனுன் மூவகையும் ஒருங்கு கூடுதற்கு எடுத்துக் காட்டிய வாறறிக.

அற்றேல், வாமதேவ முனிவனை முதலினேபோர் "யாமினை உலகமாயினேம்" எனக் கூறுதலானும், சர்வ ஞானோத்தரத்தின்,

"யானே எல்லாமாய் நின்றேனும், யானே எல்லாவற்றினையுங் கடந்து நின்றேனும், யானே எல்லாவற்றினையும் படைத்தளித் தழிப்பேனும்" என்று ஆன்மாக்கண்மேல்வைத்துக் கூறுதலா னும் முதல்வனேடொப்ப உயிர்களும் அவ்வியல்பினவாம்போலு மென்னுங் கடாவை ஆசங்கித்துத் நமியேனுளம் புருநல்யானே யுலகெல்பனின்று என்றார். அம்முதல்வன் பாசக்கூட்டத்தி னீங்கித் தனியாய்நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானே யுலகெல்லா மென்பே னுயினேன் இம்முத்திக் காலத்தென்க.

எனவே, வாமதேவமுனிவன் முதலியோர் "யான் மது வாயினேன் ஆதித்தனுயினேன்" என்றிங்ஙனங் கூறியதூஉம், சர்வஜ்ஞானேத்தரத்தின் ஆன்மாவை அவ்வாறு பாவிக்கச் சொல்லியதூஉம், அவ்வொற்றுமை பற்றியேயன்றிப் பிறிதின் மையின், அதுபற்றி உயிர்களும் அவ்வியல்பினவாவான் செல்லா தென்றவாறுயிற்று. இவ்வொற்றுமை பற்றியன்றே அருச் சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் "யானே யுலக மெல்லா" மென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், "ஏனையவற்றைக் கை விட்டு என்னையே வழி படுக" என்றதூஉம், "அதனை உறுதியாகக் கொண்டே"னென்ற அருச்சுனன் அவன் கூறிய கருத்துணர்ந்து சாங்காறுஞ் சிவ பூசை செய்ததூஉம், * கண்ணன் மேலிட்ட போதுகள் முதல் வன்றிருமுடிமேற் கண்டதூஉ மென்க.

கண்ணன் உபமன்னியுமுனிபாற் சிவதீக்கை பெற்றுத் தன்னையுந் தலைவனையும் உணர்ந்தோனுதலிற் சிவோகம்பாவனை யைத் தலைப்பட்டோனுதல் அறிக.

புருநல் - புகுதலா னெனவிரிக்க. இன்று - இம்முத்திக் காலத்து. நமியேனுளம்புருநல் யானே யுலகெல்பனின்று என்பது கூறுக்கால் அவையே நானேயாய் என முதல்வனுக்கோதிய விலக் கணம் வாமதேவமுனிவன் மு ிய உயிர்கள் மாட்டுஞ் சென்று வழுவாய முடியும், அதனை நீக்குதற்கு அதிகரணத் நிறுதியின் இவ்வாறு கூறினர்.

இக்கருத்தறியாது இதனை முழுவதும் ஒரு தொடராகவி யுரைப்பிற் பொருளியைபு படாமை அறிக. பொருளியைதற் பொருட்டு யா முதல்வ உலகாமினறு என்றுரைப்பாரும் உளர். தானே யுலகா மெனறதனை மீட்டுங்கூறுதல் கூறிய கூறலா கலானும், பிறவாறுரைனும அது பொருளுரை யென் றொழிக.

* பாரதம் கர்ணபர்வம், அக, உ.

இவ்வதிகரணத்தாற் பொன்னும் பணியும்போல் அபேத மென்னும் மாயாவாதி முதலியோரையும், சொல்லும் பொருளும்போற் பேதாபேத மென்னும் பரிணமவாதிகளையும், இருளும் வெளியும்போற் பேதமென்னும் ஏகதேச்சமயத்தாரையும் மறுத்து மூவகையுமாகிய அத்துவிதத்தினுண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு காண்க.

இவ்வதிகரணப் பொருளைபற்றிப், *"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்—பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேத மூஞ்சொற் பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன—வறத்திறலில் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க னறி வொளிபோற் பிறிவருமத் துவிதமாகுஞ்-சிறப்பினதாய் வேதாந் தத்தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றும்" என்று வகுத்தோதினர் புடைநூலாசிரியருமென்க.

ஈண்டுப் "புறச்சமயத்தவர்" என்றது முக்கூற்றுப் புறச் சமயத்தவரெனக் கொள்க. அவரெல்லாஞ் சித்தாந்த சைவரோடு ஒப்ப †"ஏகனநேகனிருள்கருமமாயையிரண்டு" என்னும் ஆறுபதார்த்தங்களுங் கொள்ளாமையின், அவ்வறுவகைப் பதார்த்தங்களின் இயல்பைக் கொளுத்தினுங் கொள்ள மாட்டா ரென்பார், "புறச்சமயத் தவர்க்கிருளாய்" என்றார்.

சங்கற்ப நிராகரணத்திற் கூறப்படும் அகச்சமயத்தவராகிய பாடாணவாதசைவர் முதலியோர் சித்தாந்த சைவத்தோடொப்ப ஏகன் முதலிய ஆறுபதார்த்தங் கொண்டமையின், அவ்வாறு பதார்த்தங்கட்கும் பொது வியல்பு சிறப்பியல்பு கூறும் ஆகமங்களின் தாற்பரியம் இதுவேயென்று எடுத்துக்காட்டிச்சித்தாந்த சைவப் பொருளுண்மையைக் கொளுத்திற் கொள்ள வல்லுவ ரென்பார், "அகச்சமயத் தொளியாய்" என்றார். கொளுத்தினுற் கொள்ளவல்லுவரெனவே, அகச்சமயத்தவருந் தாமே கொள்ள மாட்டாரென்பது கருத்தாகலின், ‡"சிவாத் துவிதாந் தத்துக்—குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என்பதனோடு முரணுமை அறிக.

சிவாத்துவிதமாவது நிமித்தகாரண பரிணமவாதமென அவையடக்கத்துள் உரைத்தாம்; கடைப்பிடிக்க.

‡ "சிவாத் துவிதாந் தத்துக்—குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என இறுவாயெண்ணு முறைமைக்கண்

* சிவப்பிரகாசம், பாயிரம், எ.
† திருவருட்பயன், சூ-வது, அறியுநெறி, உ.
‡ சிவப்பிரகாசம், உண்மை, சக.

கின்ற சுத்தசைவரை யொழித்து ஒழிந்த சமயத்தாரை யெல் லாம் விலக்கவே, சுத்தசைவர் இந்நூல் கேட்டதுணையானே தாற் பரியம் இனிதுணர்ந்து சித்தாந்தப்பொருள் கைக்கொள்வ ரென்பது பெறப்பட்டது. அத்துணை அணிமையராகலானன்றே சித்தாந்தசைவத்தைச் சாரவைத்தா ரென்பது.

இக்கருத்தறியாதார் "சிவாத்துவிதாந்தத்" தென்றமையிற் சிவாத்துவிதமாவது இறுதிக்கணெடுத் தோதப்படுஞ் சுத்த சைவம்போலுமென மயங்குப. நிமித்தகாரணனுகிய முதல் வன் மாயையொடுங் கூடி முதற்காரணமுமாய்ப் பரிணமிப்ப னென்பதே சிவாத்துவிதசைவர் கொள்கையென்க. இது சுத்த சைவர்க் கேலாமையும் அறிக.

இனித், தார்க்கிகர் முதலியோர் காட்சிமுதலிய பிரமிதிக் குப் பொறி முதலியனவே பிரமாணமென்பர். பிரமாணம் பிரமேயப் பொருளாதல் செல்லாமையிற்பொறி முதலாயினவும் ஏனையபோலப் பிரமேயமாய் அளந்தறியப்படும் பொருளேயா மாகலின், அவற்றைப் பிரமாணமென்றல்பொருந்தாது; மற்றுச் சிவஞானமுணர்த்த உணர்வதாகிய ஆன்மசிற்சத்தியே அவர் பிரமாணமெனப் புகலும் இந்திரிய முதலியவற்றை அளந்தறியும் பிரமாணமாம்; பொறி முதலியன அதற்கு வாயிலாதல் பற்றிப் பிரமாண மென்று உபசரித்துக் கூறப்படுவனவேயா மென்பது சைவசித்தாந்த மென்பார், "புகலளவைக் களவாகி" என்றார்.

பொற்பணிபோல் அபேதமும், இருள்வெளிபோற் பேத மும், சொற்பொருள்போற் பேதாபேதமுமாமாறும், அவை பொருந்தாமையும் மேலேயுரைத்தாம்.

சைவசித்தாந்தத்தின் எய்துதற்கு அருமைகூறுவார், "பெருநூல் சொன்ன வறத்திறனுல் விளைவதாய்" என்றார். எனவே, அஃதில்வழி விளையாதென்பதாம். "உடலுயிர் கண் ணருக்க னறிவொளிபோற் பிறிவருமத்துவித" மாமாறும் ஆண்டேயுரைத்தாம்.

அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருள் கூறுவார், "பிறிவருமத்துவிதம்" என்று உடம்பொடு புணர்த்தோதினார்.

இஃது ஏனையோர் கூறும் பொருள்போலன்றிச் சிறந்த தென்பார், "சிறப்பினதாய்" என்றார்.

வேதாந்தமுஞ் சித்தாந்தமும் வேறென்பாரை மறுத்துப் பலபொருள்படுஞ் சூத்திரத்தை அங்ஙனம்படாமைத் தெளித் துரைக்கும் பாடியம்போல வேதாந்தத்தைத் தெளித்துரைப் பதே சைவசித்தாந்த மென்பார், மகுடாகம முதலியவற்றுள் ஓதியவாறே "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத்திறன்"

என்றூர். ஈண்டு வேதாந்தமென்றது வேதத்தின் முடிபுகளாகிய உபநிடதங்களை; வேதாந்தமெனப் பெயர் பெற்ற ஏகான்மவாத நூலெயன்றென உணர்த்துதற்கு *"வேதத் தலைதரு பொருளாய்" என விறுதியினுங் கூறினர். ஆகலான், அது கூறியது கூறலன்மை உணர்க.

திறன் - பொது உண்மையென்னும் வகை. இங்கு - இந் நூலின். முதனூல் வழிநூல்களிற் பொதுவுண்மையென வகுத்துக்கொண்டு ஒதினும் எடுத்தோதாமையான் அவ்வகை தெரிவரிதாகலான், அது தெரியுமாறு பொதுவுண்மை யென்று எடுத்தோதி, அந்நூல்களின் கருத்து ஈண்டுத் தெரியச் செய்துமென்பார், "சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றும்" என்றூர்; "சைவசித்தாந்தம்" சுத்தசைவ முதலியவற்றிற் செல்லாமைப்பொருட்டு.

"அறிவொளிபோல்" என்பதற்குப் பொருள்காணுது, "அறிவை" ஆன்மாவிற்கு ஆகுபெயராக்கி அறிவிற்கும் மற்றொன்றனை ஆகுபெயராக்கி ஆன்மாவும் ஆன்மபோதமும் போலென்று உரைப்பாரும், பொற்பணிபோல் அபேதமென்பார் முதலிய மூவரையும் மறுத்தற்கு முறையே இம்முத்திறத்துவமையும் ஒதினரென்பதும் உணராது, சொற்கிடக்கை முறையும் பாராது, உடலுமுயிருங் கூடியவிடத்து அறிவும், கண்ணும் அருக்கனுங் கூடியவிடத்து ஒளியும் போலென்று உரைப்பாருமாய் இடர்ப்படுவர்.

இன்னும், அவர் †"ஒளியான திருமேனி" என்னுஞ் செய்யுளின் "உளமான" என்னும் எழுவாய்ப்பன்மைக் கேற்ப "ஆகும்" எனவும், "நினையா" எனவும் பயனிலைகளும் பன்மையாற்கூறிய கருத்துணராது, கூடுதற்குச் செயப்படு பொருளாகிய "வினையை" "நினையா" என்னும் பயனிலைக்கு எழுவாயாகக் கொண்டுரைத்து "வலிது" என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கி ஒருமைப்பன்மை மயக்கமென்று இடர்ப்படுவர். இன்னோரன்னவை ஒருமைப்பன்மை மயக்கமாதற்கேலாமை உணர்க. "வினையை" எழுவாயாக்குவார்க்கும் "வலிதாயவினை" என்பதனை வலியினைக் கடந்தவினை என்றுரைப்பிற் பால்வழுவாது. அங்ஙனம் உரைக்குமாறும் உணர்ந்திலர். இவ்வாறே ஆண்டாண்டுச் சொற்கிடக்கைமுறை உணராது உரைசெய்தல் அவரியல்பென்க.

முதலதிகரணம் முடிந்தது

---

* சிவப்பிரகாசம், உண்மை, சக. † சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து.

## * இரண்டாமதிகரணம்

முதலதிகரணத்தின் முதல்வன் உயிர்களின் வேற்றுமை யின்றி நிற்பனென்றதனால் அவ்வியல்புபற்றி உயிர்களின் பொருட்டே ஐந்தொழில் செய்வனென்பது போந்தமையின், அது முதல்வனுக்கு இலக்கணமென்பது வலியுறுத்தப்பட்டது. அங்ஙனமாயினும், † சிலரைவாழ்வித்துஞ் சிலரைத் தாழ்வித் துஞ் சிலரைத் துறக்கத்துய்த்துஞ் சிலரை நரகத்துய்த்துஞ் சிலரை உயர்ந்தசாதியிற் பிறப்பித்துஞ் சிலரை இழிந்தசாதியிற் பிறப்பித்துஞ் சிலருக்கு ஆயுளை நீட்டிப்பித்துஞ் சிலருக்குக் குறைப்பித்தும், இவ்வாறு ஐந்தொழில் செய்வான் எல்லாவுயிர் களையும் ஒப்பநோக்காமையும் அருளின்மையும் உடையனை லான் முதல்வனுவான் செல்லாமையின், அஃதுஇலக்கண வழுவா மென மீளவும் ஆசங்கை நிகழ்ந்துழி, அதனை நீக்குமுகத்தாற் றுணைக்காரணங்கள துண்மைக்குப் பிரமாணங் கூறி, ஒத்தியைபு பற்றிய ஆசங்கையை நீக்குதற்கு எழுந்தது இரண்டாமதி கரணம்.

இனி என்றது இவ்வியைபுணர்த்தி நின்றது.

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வருமென்றது

எனவரும்.

இருவினை முதல்வனுணையின் வருமெனவே, ஆன்மாக்களுக் கென்பது தானே போதருமாயினும், சாங்கியர் இருவினை யீட்ட லும் நுகர்தலும் மூலப்பகுதியிற் சேர்ந்திய புத்திதத்துவத் துக்கே யன்றிப் புருடனுக்கில்லையென்பர். உலகாயதர் முதலி யோர் உடம்புமுதலியவற்றுக்கென்பர். அவர் மதங்களின் மறுப்புத்தோன்ற இவ்வான்மாக்களுக்கு என்றுரைத்தார். வருமதி கரணத்திற் கூறியதும் அது.

இவ்வான்மாக்கள் - முதல்வன் இவ்வாறு மூவகையுமாய் நிற்றற்கு உரிமையுடைய ஆன்மாக்கள். ஈண்டு இருவினை என்றது, பல பிறவிகளினும் ஈட்டப்பட்டுச் சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணியபாவங்களை யென்க. எனவே, அவரவர் செய்த வினைக்கேற்ப அவ்வாறு ஐந்தொழில் செய்யும் முதல் வனை எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்காமையும் அருளின்மை

---

* இதனை இருவினையதிகரணமென வழங்குப.

† இதனை நீலகண்டபாடியத்தின் வைஷம்மிய நைர்க்கிருண்ணியாதி கரணத்தினுங் காண்க.

யும் உடையனென்றல் பொருந்தாமையின், இலக்கணவழுவா மாறு யாண்டையதென்பதாம்.

அற்றேல் இருவினைக்கு முதன்மையன்றி அவற்றின்வழி நின்று செய்வானுக்கு முதன்மையில்லையெனப்பட்டு, மீளவும் இலக்கணவழுவாய் முடியும்; இது * "சுற்றிப்போயுஞ் சுங்கத் துறையில் வந்துகூடிய முறைமைத்" தாலோவென்னும் ஆசங் கையை நீக்குதற்கு ஆணையின் என்றார். முதல்வனுணையான் வருவனவன்றி இருவினை தாமேவருஞ் சுதந்தரமுடையவன்மை யின், அதுபற்றி இழுக்கின்மையான் ஐந்தொழில் செய்தலே முதல்வனுக்கிலக்கணமென வலியுறுத்தவாறு.

அற்றேல், வினையுண்டெனக்கொள்ளின், அதுவே அமை யும்; முதல்வனதுண்மை பெறப்படாது. முதல்வனுண்டெனக் கொள்ளின், அவனே அமையும்; வினையுண்மை பெறப்படாது; இரண்டுங்கோடல் மிகையாகலானென, ஒரு தானுன்றி ஒரு தானைத் தூக்கினின்றுடும் † "மயிற்கூத்தின்முறைமை"த்தாம் என்னும் ஆசங்கையை உவமைமுகத்தான் மறுத்து மேற் கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது :—

ஒருகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினையாகலான்

எனவரும்.

உலகத்து வேந்தரெல்லாம் பாடிகாவலாளன்மாட்டுத் தம் ஆணையைவைத்து அவனைக்கொண்டு, அத்தொழில் செய்வித் தலேயன்றித், தாமேமுன்னின்று அத்தொழில் செய்யார். அவ்வாறே முதல்வனுந் தன்னாணையை இருவினையின்மாட்டு வைத்து அவற்றைக்கொண்டு அப்பயன் நுகர்வித்தலே முறை யாகலின், மிகையாதல் யாண்டையதென்பதாம்.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின், ஈண்டைக்கு அரசன் செய்தி உவமையா யிற்று. இவ்வுவமைப் பொருளேபற்றி, ‡ "வையகங் காப் பான் செல்கை வழக்கன்றே வூர்காப் பான்போல்" என்றார் வழிநூலாசிரியரும். பாடிகாவல் என்பது நெறியின் வழீ இயினரை வழக்குவினுய் ஒப்பநாடிச் செய்யுந் தண்டத்தொழில்

---

* இதனை வடநூலார், கட்ட குடிப்பிரபாத நியாயம் என்பர்.

† இதனை வடநூலார்: மயூரநிர்த்தன நியாயம் என்பர்.

‡ சிவஞானசித்தி, பரபக்கம், பாஞ்சராத்திரிமறுப்பு, ௧௯.

உணர்த்துவதோர் சொல். *"கோடி காவணைக் கூறீரேற் கூறினேன்—பாடி காவலிற் பட்டுக் கழிதிரே," †"கோடி காவணைக் கூறுத நாளெல்லாம்—பாடி காவலிற் பட்டுக் கழியுமே" எனத் திருப்பாட்டோதியதூஉம் அது.

இனி, வினையில்லையென்னும் உலகாயதர் முதலியோரை மறுத்து வினையுண்மையும், அவற்றின்பயனை ஆன்மாவே நுகருமாறும், நுகர்ந்தவழி மேலைக்கு வினைவிளையுமாறும், அவற்றை முதல்வன் தருமாறும், வினைக்குச் சுதந்தரமின்று மாறும் உணர்த்தி, ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம் :—

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று

எனவரும்.

மேலைச் சூத்திரத்திலுணைதிய சற்காரியத்தின் இயல்புபற்றி வினையுண்மை சாதிப்பார், உள்ளதேதோற்ற என்றும், உள்ள தாகிய சஞ்சிதவினை தோற்றப்பட்ட இன்பத்துன்ப நுகர்ச்சிக்கு நிலைக்களமாகிய உடம்பிற் பொருந்தி அவற்றை அநுபவிப்பது சடமாகிய புத்திதத்துவமேயாமென்னுஞ் சாங்கியரை மறுப்பார், உயிரணைய மவ்வுடலின் என்றும், முற்செய்வினையை ஈண்டு அநுபவித்தொழிந்தால் மேலைக்குவருமாறு என்னையென்னுங் கடாவை விடுப்பார், முற்செய்வினையுள் ளடைவே யுள்ளதாம் என்றும், வினை தானே பயனுக வரும்; இறைவன் எற்றுக் கென்னும் மீமாஞ்சகரை மறுப்பார், செய்பவர் செய்திப் பயன் விளைக்குஞ் செய்யேபோல் வள்ளலவன் செய்வன் செயல் சென் றணையா என்றுங் கூறினர்.

ஏகாரம் - முன்னையது தேற்றம். பிரிநிலையுமாம். நடுவணது ஏழாம் வேற்றுமைப் பொருட்கண் வந்தது. பின்னையது அசை.

முற்செய்வினை என்புழிச் செப்பலோசையிற் சிதை வின்மையான் எழுத்திற்கு மாத்திரைகோடல் இசைபற்றியே யாகலான், ‡"மாத்திரை வகையாற் றளைதமகெடா" என்ப

* திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், திருக்கோடிகா, திருக்குறுந் தொகை, உ.

† மேற்படி பதிகம், சு.

‡ இது யாப்பருங்கலவிருத்தியினும், எழுத்தோத்து, உ-ம் சூத்திரத்து மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

வாகலின், மாத்திரைபற்றி, "நேர்நிரைநேர்" எனச் சீர்செய்து வெண்சீர் சிதையாமற் கண்டுகொள்க. * அம்மைதிருவந்தாதி முதலியவற்றினும் இவ்வாறு வருதல் காண்க. இதனை வெண்டுறைப்பாற் படுத்தினும் இழுக்காது. உள்ளடைவு - உள்ளுதற்கேதுவாகிய முறைமை. உள்ளுதல் - ஈண்டு அனுபவித்தல். அதற்கேதுவாகிய முறைமையாவன அநுபவித்தற்குத் துணைக் காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள். அவற்றின்கண் உண்டாமாறு †முன்னர்க் காட்டுதும்.

முதல்வனுக்கு வினை வேண்டப்படுமென் றுணர்த்துதற்கு மேல் அரசனை உவமைகூறினார். வினை முதல்வனையின்றி அமையாதென்பது உணர்த்துதற்கு ஈண்டு உழவுதொழிலை உவமை கூறினார். இன்னும், இதன்கட்படுங் கடாவிடைகளெல்லாஞ் சிவஞானசித்தியில், ‡ "இருவினை யின்பத்துன்பம்" என்னுந் திருவிருத்தமுதலாக விரித்தோதுதலின், அவை எல்லாம் ஆண்டேகாண்க. சிவஞானசித்தியில் விரித்தோதப் பட்டன வெல்லாம் ஆண்டே அறியக்கிடத்தலின், ஈண்டு விரிக்கின்றிலமென்றுணர்க.

அற்றேல், வினை சடமாகலிற் சென்றணைய மாட்டாதாயினும் ஆன்மாக்கள் சேதனமாகலின் அவையே வினைப்பயன்களை அறிந்தெடுத்துக்கொண்டு நுகரும்: இதற்கொரு முதல்வன் வேண்டாவாகலின், வள்ளல்செய்வினை என்றல் பொருந்தாதென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்:—

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தான்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லாட்டும் பிரானி னுகராரே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு

எனவரும்.

---

* பதினெராந்திருமுறை: அற்புதத்திருவந்தாதி, "எளிய தீதுவன்றே யேழைகாள் யாது—மளியீ ரறிவிலீ ராவா—வோலிகொண்மீடந்—றெந்தையராப் பூண்டுழலு மெம்மானை யுண்ணினைந்த—சிந்தையராய் வாழுந் திறம்" (ச.சு). "விருப்பிலு னீபிரிய கில்லாயோ வேறு—விருப்பிடமற் றில்லையோ வென்னை—பொருப்பன்மகண்—மஞ்சுபோன் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க—வஞ்சுமோ சொல்லாயவள்" (கூ.சு) என்னும் வெண்பாக்களின், "முற்செயவினை" என்புழிப்போல வருதல் காண்க.

† பன்னிரண்டாஞ் சூத்திரம், முதலதிகரணத்து உதாரணவெண்பாப் பொருள்கூறும்வழிக் காண்க.

‡ சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், ச.

ஆன்மாக்களுக்குத் தமக்கென வறிவின்மையானும், வினை சடமாகலானும், மாயை "தாரகமாமத்தன்றுணிற்ற" லெனப் போந்தமையானும், முதல்வனே அறிந்தணைப்பனெனப் பாரி சேடப் பிரமாணங் கூறுவார், அவ்வினையைப் பராமலாட்டும் பிரானி னுகராரே லார்தா மறிந்தணைப்பார் என்றார்.

*"இங்கிவை பொதுவியம்பும்" என் புழிப்போல அங்கவ்வினை என்பது அவ்வினையென்னும் பொருட்டாய் நின்றது. யாவர் என்னும் பலரறிசொல் வகரங்கெட்டு யார் என நின்று பின் ஆர் என மரீஇயிற்று.

காந்த பசாசம்போல் அவ்வினையைப் பராமலாட்டும் பிரானின் அவ்வினைஞர் அவ்வினையைச் செய்வதனில் அவ்வினையைச் சென்று நுகராரேல் ஆர்தாம் ஆங்கு அறிந்து அணைப்பார் எனக் கூட்டுக.

செய்தற்கிடனுய உடம்பைச் செய்வது என்றுபசரித்தார்.

இது சொற்பொருட்பின் வருநிலை.

அற்றேல், இவ்வினை ஆதியோ? அநாதியோ? ஆதியாயின், முன்னில்லது இடையே தோன்றுமென்பது சற்காரியவாதத்திற் கேலாது, அநாதியாயின், ஒருவர் கூட்டவேண்டுவதில்லை என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தோன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் போன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்

எனவரும்.

புதிதன்று என்பதனைத் தனித்தனி கூட்டுக. தொன்மையின் உள்ளவற்றைத் தொன்மை என்றுபசரித்தார்.

இஃது எடுத்துக்காட்டுவமை. ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாகலின் வல்லி என்றார். இஃதறியாதார் மகடூஉ முன்னிலையாக்கி யுரைப்ப. வினைக்குத் தொன்மை கூறுவார், இனம்பற்றி மாயை மலங் கட்குத் தொன்மையும் உடன்கூறினர். இருவினையுண்மைக் கோதிய பிரமாணமே அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய

* சிவப்பிரகாசம், உண்மை, க.

மாயையுண்மைக்கும் பிரமாணமா மென்பதனானும், மேலைச் சூத்திரத்திற்கூறிய சற்காரியவாதத்தானும், மாயையுண்மை பெறப்பட்டது. மலமுண்மைக்குப் பிரமாணமும் மேலைச் சூத்திரத்திற் பெறப்பட்டது.

## மும்மலகாரியம்

அவற்றின் காரியங்களாவன :—

மூலமலங் காரிய வேறுபாட்டான் எழுவகைப்படும். அவையாவன மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பனவாம்.

இவற்றுள் மோகம், மதமுதலிய அறுவகைக் காரியங் கட்கும் ஏதுவாய்க் கட்டு நீங்குங்காறும் ஆன்மாக்களோடு சகசமாயுள்ளது. மோகமில்வழி ஏனை மதமுதலியன நிகழாமையின், அது முதன்மைத்தாதல் அறிக. அம்மோகமாவது, கொள்ளற்பாலது இது நீக்கற்பாலது இதுவென நான்முகத்தான் உணர்ந்தும், அரிவையர் முதலிய விடயங்களின் மயங்குதற் கேதுவாயது.

மதமாவது, தன்னாலெய்தப்படும் அரிவையைத் தானே கொண்டாடிப் புகழ்ந்து இவளின்மேற்பட்ட மகளிர் உலகத் தில்லையென மதித்தற்கேதுவாயது.

அராகமாவது, அவள்பால் மேன்மேலும் ஆசைமிகுதற் கேதுவாயது.

கவலையாவது, ஊழ்வலியால் அவளைத் தணந்தவழிக் கண்ணீர்விட்டு அழுது பெரிதுந் துன்பமுற்றுக் கவலுதற் கேதுவாயது.

தாபமாவது, அதனால் உள்வெதும்பித் தபித்தற் கேதுவாயது.

வாட்டமாவது, அங்ஙனம் அலறியும் ஆற்றியும் உள் வெதும்புதலான் மூர்ச்சையுற்று உள்ளமும் உடம்பும் வாடுதற் கேதுவாயது. அரிவையர்மேல் வைத்துக் காட்டியது உபலக் கணமாகலின், விடயந்தோறும் இவ்வாறு கண்டுகொள்க.

விசித்திரமாவது, தான் பெற்ற உலகவாழ்க்கையை நோக்குந்தோறும் இவர் எமக்கு உரிமைச் சுற்றத்தார், இவள் உரிமையுடைய மனைவி, ஆடை அணி பொன் முதலிய செல்வங்களிற் குறைவில்லை, மனை கழனிமுதலிய நிலங்களிற் குறைவில்லை, ஆகலான் எனக்கு இனிப் பெறக்கடவதென்னை

யெனவும், என் குடும்பத்தைப் புரப்போர் யாவரெனவும் இவ் வாறு பல வேறுவகைப்படச் சிந்தை செய்தற்கேதுவாயது.

இனி, வினையின் காரியமாவன, இன்பத்துன்ப முதலாயின.

மாயையின் காரியமாவன, தநுகரண முதலாயின.

வல்லாலாம் எனவே, திரோதான சத்தியதுண்மையும் பெற்றும். அது பாகம் வருதற்பொருட்டு மலத்தின்வழி நின்று மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்துதலாகிய சிவசங்கற்பத் திற் கேதுவாகலின், மலமென்று உபசரித்துக் கூறப்படும். இத னும் பஞ்சமலங்களுங் கண்டுகொள்க.

## இருவினையுண்மை

*அஃது அங்ஙனமாக; வினையுண்டென்பதற்குப் பிரமாண மென்னை? முதல்வன் செய்திக்குத் துணைக்காரணம் அவனது ஆணையேயமையும். வினையுந் துணைக்காரணமெனின், வினையின் வழி நடாத்துவான் தனக்கெனச் சுதந்தரமுடையனல்லனெனப் பட்டு முதன்மைக்கு வழுவாமாலோவெனின்,—அற்றன்று; முதல்வன் செய்திக்கு வினையுந் துணைக்காரணமேயாம். அஃ தில்லையாயின், எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்குதலும் பெருங் கருணையுமுடைய முதல்வன் இன்பத்துன்ப முதலியவற்றைக் கூட்டுதல் பொருந்தாதாய் முடியுமென்க.

அவ்வவர் குணங்குற்றங் கண்டு அவ்வவற்றிற்கேற்ப அரு ளுந் தண்டமுஞ் செய்யும் வேந்தற்கு அதுபற்றிச் சுதந்தரமுடை மைக்கு இழுக்கில்லாதவாறும், வேட்டுவனுதலை விரும்பும் புழு விற்கு அவ்வேண்டுமுருவினைக் கொடுத்தல்பற்றி வேட்டுவனுக்கு அத்தொழிற்கணுளதாகிய சுதந்தரமுடைமைக்கு இழுக்கில் லாதவாறும்போல, வினைவழி நடாத்துதல்பற்றி முதல்வன் சுதந் தரத்திற்குச் சிறிதும் இழுக்கின்மை யுணர்க.

அன்றியும், குயவன் வனைதற்குத் தன்னுடைமையாகிய திகிரிமுதலிய துணைக்காரணங்களே வேண்டினும், பிறரேவல்வழி நின்று வனையவேண்டாமைபற்றிச் சுதந்தர முடையனெனப் படும்; ஆகலின், ஈண்டும் அவ்வாறே கொள்க.

இன்னும், காரியங்களெல்லாம், ஒருங்கே தோன்றுது அடைவே தோன்றுதற்குக் காரணம் வினையேயன்றிப் பிறிதின் மையானும் வினையுண்மை துணியப்படும்.

* இதனை இவ்வாறே சிவாக்கிரபாடியத்தினும், "ஈண்டொரு சாரார் இங்ஙனங்கூறுவர்" என்று எடுத்துக்கொண்டு கடாவிடைகளான் விரித் துரைத்தாண்க. (இரண்டாஞ்சூத்திரம், ககூ-ம் பக்கம்.)

அற்றேல், தேவர் மனிதர் விலங்குமுதலிய யோனிகளை எய்துவிக்கும் வினைகள் முற்பிறவிகளின் ஈட்டப்பட்டு ஒருங்கே கிடந்தனவெனக் கொள்வார்க்கும் அவை ஒருங்கே கிடத்தலின் அவ்வவயோனிக்கேய்ந்த உடம்பெல்லாம் ஒருங்கேதோன்ற வேண்டுமாலோவெனின்,—அற்றன்று; அவை ஒருங்கே கிடப்பினும், அவற்றுட் பக்குவமான வினையடைவேபற்றி அவ்வவற்றிற்கேற்ப முதல்வன் தோற்றுவிப்ப னென்க.

அற்றேல், பக்குவமாவதென்னை? காய் பழமாதல்போல அவத்தை வேறுபடுதலெனின், அஃது அருவமாகிய வினைக்குப் பொருந்தாது. நெடுங்காலங் கிடத்தலே அதற்குப்பக்குவமெனின், நெடுங்காலத்துளவாகிய வினைநிற்ப அணிமைக்கட் செய்தவினை மிக்கதாயின், அஃது அப்பொழுதே பயனுய் வருமென்றல் பொருந்தாதாய் முடியுமாலெனின்,—அற்றன்று; அவ்வப்பயன்களைத் தோற்றுவித்தற்குரிய துணைக்கருவிகளெல்லாவற்றோடுங் கூடுதலே பக்குவமென்னுஞ் சொற்குப் பொருளென்றறிக.

இன்னும், வினையில்லையாயின், விதித்தனசெய்து விலக்கியனவொழிதலாற் பயனின்றாய் முடியும்; ஆகலானும், வினையுண்மை துணியப்படும்.

அற்றேல், விதியின் வழுவாது வேள்விமுதலியன ஆற்றியவழியும், தக்கன்முதலியோர்க்கு முதல்வன் அருளாமையான் அவை பயன்படா தொழிந்தமை புராணங்களிற் கூறப்படுதலின், வினையுண்டென்பார்க்கும் முதல்வன் றிருவருள் ஒருதலையான் வேண்டப்படுதலின், விதித்தவழி நின்றமைபற்றி முதல்வன் கருணைகூர்தலே அதற்குப்பயனுமாகலின், அதுபற்றி வினையுண்டென்றல் பொருந்தாதெனின்,—அற்றன்று; தக்கன் முதலியோர் செய்தவினை அவர் அகங்காரத்தான் நசித்துப்போதலின், பயன்படாதாயிற்று. அங்ஙனமல்லாக்கால், முதல்வன்பணியாகிய வேதவிதியி னின்றோர்க்கு முதல்வன் அருளாதொழிதல் பொருந்தாமையறிக.

இக்காலத்துவேந்தர் தம் ஏவலின் ஒழுகினார்மாட்டும் ஒரோவழி அருளாமையும், ஒழுகாதார்மாட்டும் ஒரோவழி அருளுதலுங்கண்டாமாகலின், முதல்வனும் அவ்வாறுசெய்தல் பொருந்துமெனின்,—அற்றன்று; உலகத்து வேந்தர் கருத்துணராமையானுதல், ஊழ்வலியானுதல், அங்ஙனஞ்செய்தல் பொருந்தும். முதல்வன்மாட்டு அது பொருந்தாதென்பது உணர்க.

அற்றேல், ஈண்டுக் கூறிப்போந்த முறைமைபற்றிச் சுத்த அசுத்த புவனங்களினும் வினையுண்டென்றல் வேண்டும். ஆண்டும்

உண்டெனக்கொள்ளின், *"சுத்தாத்துவாக்களின் வினையில்லை" எனவும், "விஞ்ஞானகலர் ஆணவமலமொன்றேயுடையர்" எனவுங் கூறிய ஆகமங்களோடு முரணும் பிறவெனின்,—முரணுது; "காலமுதல் நிலமீறுகிய தத்துவங்களெல்லாம் அசுத்தமாயையிற்போலச் சுத்தமாயையினும் உள; அவை இவைபோலன்றிச் சுத்தமாயுள்ளன" என்னும் பவுட்கரவசனத்தான் அசுத்த தத்துவபுவனங்களினுள்ளன அனைத்துஞ் சுத்த தத்துவபுவனங்களினுஞ் சுத்தமாயுளவா மென்பது போதருதலானும், †"சுத்ததத்துவபுவனங்களினுள், அவ்வப் பதங்களை விழைந்து அவற்றிற் செல்லுதற்குரிய மந்திரங்களைக் கணிப்போரும், அவ்வப்பதங்களின்வைகும் மந்திரேசுரர் வித்தியேசுரர் சதாசிவர் முதலியோரை வழிபடுவோரும், அவ்வப்பதங்களைப் பெறுவர்" என்னும் ஆகம வசனங்களானும், "அசுத்தம் மிச்சிரம் சுத்தமென்னும் வேறுபாடுபற்றி, உலகமும் வைதிகமும் அத்தியான்மிகமும் அதிமார்க்கமும் மாந்திரமு மென விணைகள் ஐவகைப்படும்" எனவும், "அவை முறையே ஒன்றற்கொன்று ஏற்றமாய் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளின் அடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமாகிய போகங்களைப் பயப்பிக்கும்" எனவுங் கூறும் ஆகமவசனங்களானும் ஆண்டுச் சுத்தவினையுண்டென்பது உணர்ந்துகொள்க. "சுத்தாத்துவாவின்வினையில்லை" என்பதற்குத் தாற்பரியம் அசுத்தகன்மம் ஆண்டில்லை யென்பதாம். அவ்வாறு கொள்ளாக்கால், ஈண்டுக்கூறிய வசனங்களோடு முரணுமாறறிக.

அற்றேல், இன்பத்துன்ப முதலியவற்றிற்குக் காரணம் நல்வினை தீவினையாகிய தொழில்களே அமையும். அவற்றுன் வரும் அபூர்வமாகிய புண்ணிய பாவங்களுங் காரணமெனக் கோடன் மிகையாகலின், அவற்றதுண்மைக்குப் பிரமாணமில்லையாலோவெனின்,—அற்றன்று; வேள்வி முதலிய விணைகள் செய்தபொழுதே அழிவனவாகலின் நெடுங்காலஞ் சென்று வருவனவாகிய காரியங்களைப் பயப்பித்தற்கு அவை வருந்துணையும் நிலைபெற்றுடையதொன்றனைத் தோற்றுவித்தன்றித் தாமே காரணமாதல் பொருந்தாமையின், அதுபற்றி அபூர்வமாகிய புண்ணிய பாவங்களதுண்மையுந் துணியப்படுமென்க.

அற்றேல், அழிவுபாட்டபாவம் வேள்விக்கு மறுதலையாகலின், வேள்வி முதலிய வினை அழிந்தவழி, அவ்வழிவுபாட்டு

---

* இங்ஙனங்கூறும் ஆகமவசனமுதலியன சிவாக்கிரபாடியம், நகஅ-ம் பக்கத்திற் காண்க.

† இவற்றைச் சிவாக்கிரபாடியத்துங்காண்க; எட்டாஞ்சூத்திரம், பக்கம் நகக, சஂ00.

அபாவம் நிலேபேறுடைமையின், அதுவே யமையும்; வேறொன்று கற்பித்தல் மிகையாமெனின்,—வேள்வியின் அழிவுபாட்டு அபாவம் வேள்வியின் பயனைத் தோற்றுவித்தல் பொருந்தாமையின், அமையாதென்க.

அற்றேல், வேள்விமுதலியவற்றுன் இந்திரன் முதலிய கடவுளர்க்கு உவகை பிறத்தலின், உபவாசந் தீர்த்தயாத்திரை முதலியவற்றினும் அவற்றிற் கபிமானிகளாகிய கடவுளர்க்கு உவகை பிறத்தலின் அக்கடவுளருவகை நிலேபேறுடைமையின், அதுவே யமையுமெனின்,—அற்றன்று; வேள்வி முதலியன செய்தபொழுதே இந்திரன் முதலியோர்க்கு உவகை பிறத்தலின் உவகையுற்றுழி நீட்டித்தல் பொருந்தாதாகலின், அப் பொழுதே பயன்றரல் வேண்டும். அஃதின்மையான், நீட்டித்துப் பயன்றருதற்கேதுவாகிய சஞ்சிதவினை யுண்டென்பது துணியப்படும்.

அற்றேல், வேறொன்று கற்பித்தலின் வேள்வி முதலிய தொழில்களே நிலேபேறுடையவெனக்கோடல் பொருத்த முடைத்து. அஃதாயின் மூன்றுங்கண முதலியவற்றினுங் காட்சிக்குப் புலனுதல் வேண்டுமெனின், இரண்டாங்கணத்திற்குமேல் எல்லாஞ் சூக்குமமாய் நிற்குமாகலின், காட்சிக்குப் புலப்படாதெனக் கோடுமெனின்,—நன்று சொன்னுய்! அவை சூக்குமமாய் நின்ற வவத்தையே அபூர்வமாகிய சஞ்சிதவினை யென்பது சித்தாந்தமென்க.

சற்காரிய வாதத்திற் மூலமாய்நின்ற அவத்தையினீங்கிச் சூக்குமமாய் நின்ற அவத்தையே அழிவுபாடென்னுஞ் சொற்குப் பொருளென மேலைச் சூத்திரத்தினுரைத்தாம். முன்னருங் காட்டுதும். கடைப்பிடிக்க.

அற்றேல், விதித்தன செய்யாதவழிப் பாவமுண்டாதற்கு முன்னர்த் தூலமாய்நின்று அழிவுபட்டதென்னை? செய்யாமைக்கு அழிவில்லையாலெனின்,—அற்றன்று; நாளை விதித்தவற்றை இன்று செய்யாமையாற் பாவமின்மையின், அவ்வக்காலங் கழிவொடுகூடிய விதித்தனசெய்யாமையே பாவத்துக்கேதுவாகலான், அவ்வக்காலங் கழியவே அவற்றிழுடுகூடி விதித்தனசெய்யாமையும் அழியுமாகலின், அஃதழிந்து சூக்குமமாய்நின்ற அவத்தையே பாவ வினையாமென்றெழுதிக.

இங்ஙனங் கூறிப்போந்தவாற்றுற் பெறப்பட்டவினை ஈட்டப்படுங்கால் மந்திரமுதலிய அத்துவாக்களிடமாக முறையானே மனம் வாக்குக் காயமென்னும் மூன்றுன் ஈட்டப்பட்டுத் தூலகன்மமாய் ஆகாமியமெனப் பெயர்பெறும். பின்னர்ப் பக்குவம்

ஆங்காறுஞ் சூக்கும கன்மமாய்ப் புத்திதத்துவத்தினிடமாக மாயையிற்கிடந்து, சாதி ஆயுப் போகமென்னும் மூன்றற்கும் ஏதுவாகி, முறையே சனகம் தாரகம் போக்கியமென மூவகைத் தாய், அபூர்வஞ் சஞ்சிதம் புண்ணியபாவமென்னும் பரியாயப் பெயர் பெறும். அது பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகமென்னும் முத்திறத்தாற் பல திறப்பட்டுப் பிராரத்தமெனப் பெயர்பெறுமென்றுணர்க.

மந்திரமுதலிய அத்துவாக்களினியல்பு *முன்னர்க் காட்டு தும். மனம் வாக்குக் காயங்களான் வினை ஈட்டப்படுமாறு :—

†" பொய்ப்பொறி புணர்க்கு மூப்பொறி யுள்ளு
மூள்ளச் செய்தி தெள்ளிதிற் கிளப்பி
னிருடீர் காட்சி யருளொடு புணர்தல்
பெரும்பொறை தாங்கல் பிறன்பொருள் விழையாமை
செய்தநன் றறிதல் கைதவங் கடிதல்
பால்கோ டாது பகலிற் றூன்றன்
மான மதாணி யாணிற் றுங்க
லழுக்கா றின்மை யவாவிற் றீர்த
லருந்துய ருயிர்கட் கிருந்த காலை
யழறூய் வன்ன ராகி யாளுக்
கழலு நெஞ்சிற் கையற் றினைதல்
பன்னருஞ் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட்
கறிவும் பொறியுங் கழிபெருங் கவினும்
பெறற்கருந் துறக்கமு மிறப்ப வூங்குத்
தம்மினும் வேண்டுமென் றெண்ணரும் பெருங்குணம்
வாக்கொடு சிவணிய நோக்கின் மீக்கொள
வறம்பெரி தறைதல் புறஞ்கூ றுமை
வாய்மை கல்வி தீமையிற் றிறம்ப
லின்மொழி யிசைத்தல் வன்மொழி மறுத்த
லறிவநூல் விரித்த லருமறை கழற
லடங்கிய வறைதல் கடுஞ்சொல் விடுத்தல்
பயனின்ற படித்தல் படிற்றுறை விடுத்தல்
காயத் திலையந்த வீயா வினையு
ளருந்தவந் தொடங்க றிருந்திய தானங்
கொடைமடம் படுதல் படையுடன் படாமை
யமரர்ப் பேண லாகுதி யருத்த
லொழுக்க மோம் விழுப்பெருங் கிழமை

* இச் சூத்திரத்து மூன்றும் அதிகரணம்.
† ஞானமிர்தம், கஎ.

யுடம்பிடி யேந்தி யுடறடிந் திடுமா
ரடைந்த காலை யவணிய றுயரந்
தேரா ரல்லர் தெரிந்து மாருயிர்
பெரும்பிறி தாக விரும்பிண மிசைஞரி
னேராங் குப்படாஅ மாசில் காட்சி
யையம்பெரும் பாதகத் தாழி நீந்த
லிந்தியப் பெரும்படை யிரிய நூறும்
வன்றறு கண்ணை வாளிட் டாங்கு
நோவன செய்யினு மேவன விழைத
றவச்சிறி தாயினு மிகப்பல விருந்து
பாத்தூண் செல்வம் பூக்கம ழிரும்பொழி
றண்மனைக் கிழத்தி யல்லதை பிறர்மனை
யன்னையிற் றீரா நன்ன ராண்மை
கார்கோ ளன்ன கயம்பல கிளைத்தல்
கூவ ரெட்ட லாதுலர் சாலை
யறங்கரை நாவி னன்றேர் பள்ளி
கடவுள் கண்ணிய தடவுநிலைக் கோட்ட
மினையவை முதல நினைவருந் திறத்த
புரத்தன் மாதோ வறத்துறை மறத்துறை
யிவற்றின் வழிப்படா தெதிர்வன கெழீஇ
யுஞற்றன் மொழிப வுணர்ந்திசி னோரே ”

என்னும் ஞானமிர்தத்திற் காண்க.

இனி, ஆக்கியான்மிக முதலிய மூன்றும் :—

* “ ஆதி யைதிக மாதி பௌதிக
மாதி யாத்தியான் மிகமென வோதிய
திக்க மூன்றினு ளாத்தி யான்மிக
மெய்யின் மனத்தி லேயமி லிரண்டே
வளியிற் பித்தின் விளியா வீகாயி
னூனுகு தொழுனையி னுதகக் கொட்டின்
வெப்பிற சூலையின் மக்களின் விலங்கி
லைகையிற் கள்வரிற் பறவையி னிருதரின்
மைந்தர் மகளிர் மணந்திடை தணப்பிற்
பேறம் வளர்ப்பிற் பெருந்திரு நுகர்விற்
சீரிய யாக்கை மாதுயர் மாசு
மனத்துறு துயர நினைப்பருஞ் சோக
மறிவுரு வாக்க மடையுநர்ப் பொருமை
மான மாக்கலம் பூணுது மறுத்த

* ஞானமிர்தம்; கக

லிச்சையி னிசைத லிருஞ்சின மிருத்த
லினையவை முதல கினைவருந் திறத்த
வாதி பௌதிகஞ் சீத மாமழை
யுருப்பவிர் வேனி லுட்குவரு கடுங்கா
லிருள்கிழி மின்னுப் பெருவிற லசனி
மன்னுயிர்க் குறுகண் டுன்னியா றருந்த
லாதி யாய வீவருந் திறத்த
வாதி தைவிகம் பேதையர் வயினக்
கருக்குழி யழுங்கல் பிறப்பிறும் பூது
திரைவருந் தீமை வரைவில் பேதைமை
மடங்க லாருயிர் தொடங்கினன் வெளவல்
யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து
வீழ்ந்தன ரெழாஅ வான்கழி துன்ப
மினைய மாலைய துயரிடை வினைகர்க்
கருங்கைக் கயமைக் களிறுகைத் திரும்புலப்
பெரும்படை விரிந்து சூழத் திருந்தா
நாற்கதிப் பவனி யுலாஅ
யார்த்தவிழ் திறம்பிற போற்றுமதி புரிந்தே''

என்னும் ஞானமிர்தத்திற் காண்க.

இவ்வினை புத்திதத்துவத்தைப் பற்றிநின்று சங்காரகாலத்திற் புத்திதத்துவம் மாயையினெடுங்கியவழி, அம்மாயை பற்றுக்கோடாகநின்று, புனருற்பவத்தில் ததுகரணமுதலியவற்றிற் கேதுவாய் வருமெனக் கொள்க.

*இன்னும் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரமென வினை ஐவகைப்படும்.

அவற்றுள், உலகவினையாவது கூவல் குளம் தண்ணீர்ப்பந்தல் முதலியன செய்தலான் உண்டாவதாய் நிவிர்த்திகலையிலடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

வைதிகமாவது வேதத்துள் விதிக்கப்படும் அக்கினிட்டோம முதலிய வேள்விமுதலியவற்றான் உண்டாவதாய்ப் பிரதிட்டாகலையிலடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

அத்தியான்மிகமாவது வேதநெறியாற் செய்யும் யோக துறவு முதலியவற்றான் உண்டாவதாய் வித்தியாகலையிலடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

---

* இது, சிவாக்கிரபாடியத்தினும் காண்க; எட்டாஞ்சூத்திரம், ச00-ம் பக்கம்.

அதிமார்க்கமாவது இயமம் நியமம் முதலிய யோகப்பயிற்சியான் உண்டாவதாய்ச் சாந்திகலையிலடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

மாந்திரமாவது சுத்தமந்திரங்களைக் கணித்தன்முதலிய ஞானப்பயிற்சி விசேடங்களான் உண்டாவதாய்ச் சாந்தியதீதகலையிலடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

இவற்றுள், முன்னையவிரண்டும் அசுத்ததத்துவ புவனங்களுக்காதாரமாகிய நிவிர்த்தி பிரதிட்டாகலைகளினடங்கிய அசுத்தபோகங்களைப் பயப்பித்தலான் அசுத்தகன்மமெனவும், நடுவணதுமிச்சிரதத்துவ புவனங்களுக்காதாரமாகிய வித்தியாகலையிலடங்கிய சுத்தாசுத்தபோகங்களைப் பயப்பித்தலான் மிச்சிரகன்மமெனவும், பின்னையவிரண்டுஞ் சுத்ததத்துவ புவனங்களுக்காதாரமாகிய சாந்திகலை சாந்தியதீதகலைகளினடங்கிய சுத்தபோகங்களைப் பயப்பித்தலாற் சுத்தகன்மமெனவும் பெயர்பெறுமெனக் கொள்க.

*"நாசோற் பத்தி பண்ணிவரு மாதலா லநாதி" என்பவாகலின், ஆகாமியமுதலிய மூன்றும் ஒன்றற்கொன்று காரணமுங்காரியமுமாக நாசத்திலுற்பத்தியாய்த் தொன்றுதொட்டு வருதல்பற்றிப் பிரபஞ்சம்போற் பிரவாகாநாதியாவதன்றிப், பதி முதலிய பொருள்போல் அநாதியன்றென்பாரும் †"ஏக னனேக னிருள்கரும மாயையிரண்—டாக விவை யாருதியில்" எனவும், ஞானமிர்தத்தில். ‡"ஆணவ முதலன் றதுபோற் கருமமுங்—காணல தெனினக் கரைகழி நாநா—விதமினி துயிர்கட் சுதவுவ தெதனு—லற்றது மாயையு மற்றறி யவணே" எனவும் ஆணவ முதலிய பொருளோடும் ஒப்பவைத்து அநாதியென்றமையானும், காரியங்களெல்லாம் முதல் துணை நிமித்தமென மூன்று காரணங்களில் ஒன்றையின்றியும் அமையாமையானும் முதற்காரணமாகிய மூலவினை பதி முதலிய பொருளோடொப்ப அநாதியாயுண்டென்பாரு மென்று இருகிறத்தர் ஆசிரியர்.

அவருள், மூலவினை உண்டென்பார் கருத்தேபற்றி, §"வினையே செய்வது" என்னுஞ் சூத்திரத்துள், வினைந்தானென்புழிச் செய்தற்கு வினைதல் செயப்படுபொருணீர்மைத்தாய்த் தொழின் முதனிலையாமெனக் கொண்டார் தொல்காப்பியனுரு மென்க. அங்ஙனமல்லாக்கால் வினைதற்றொழில் தொழின் முதனிலையாமாறு யாண்டையதென்பது.

---

* சிவப்பிரகாசம், பொது, கசு.
† திருவருட்பயன், சு-வது, அறியுநெறி, உ.
‡ ஞானமிர்தம், உஉ. அடி, இ.
§ தொல்காப்பியஞ் சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், உக.

மாயையுண்மை

இங்ஙனம் வினையுண்மை பெறப்படவே, ஏய்தற்குப் பற்றுக் கோடாகிய மாயையுண்மையும் பெறப்படும்.

அஃதேல், ஏதுவொருபக்கமும் பயனொருபக்கமுமாதல் பொருந்தாமையானும், இன்பத்துன்பங்களை நுகர்வோன் ஆன்மாவேயாகலானும், செய்தவினை செய்தவனைப்பற்றி நிற்றலே பொருத்தமுடைமையானும், ஆன்மாவே வினைக்குப் பற்றுக்கோடாவதன்றி மாயை பற்றுக்கோடாகாதா லெனின்,— அற்றன்று; அங்ஙனங் கொள்வார் மதத்தினும், தென்புலத்தாரை நோக்கி மகன் செய்தவினை மகனைப் பற்றிநின்று தந்தைக்குப் பயனுதவுதலும், தந்தைசெய்யுஞ் சாதகன்ம முதலிய வினை தந்தையைப் பற்றி நின்று மகனுக்குப் பயன்றருதலு முடைமையின், ஏதுவொருபக்கமும் பயனொருபக்கமும் ஆகாவென்னும் நியமஞ் சாத்திரவிதியானன்றி வருவனவற்றிற்கே யாகலானும், உழவர்செய்யுஞ் செய்திப்பயன் உழவரைப்பற்றி நில்லாது பழனத்தைப் பற்றிநின்றே அவர்க்குப் பயன்றருதல் காண்டு மாகலானும், தோற்றமு நாசமுமுடைய சடத்துக்குப் பற்றுக்கோடு சடமாவதன்றிச் சித்தாதல் பொருந்தாமையானும், இன்பத்துன்பமாகிய வினைப்பயன்கள் மாயாகாரியங்களினிடமாகவே ஆன்மாவுக்கு வருதலானும் வினைக்குப் பற்றுக்கோடு மாயையேயன்றி ஆன்மாவன்றென்பது துணியப்படுதலின், அது பற்றி மாயையுண்டென்பது துணியப்படுமென்க.

இன்னும், மேலைச்சூத்திரத்திற் பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணமுண்டெனச் சாதித்த வழியளவையே முதற்காரண முண்மைக்கும் பிரமாணமாம்; ஆகலானும், மாயையுண்மை துணியப்படுமென்க.

சூனியமுதற்காரணவாதமறுப்பு

அற்றேல், காரணமின்றி வானினின்றும் மண்மாரிபெய்யவும், இந்திரசாலம்வல்லார் அவர் நினைந்தவடிவங்களை நினைந்த மாத்திரையே தோற்றுவிக்கவுங் காணப்படுதலான், இவ்வாறே உலகிற்குப் புத்தரிலொருசாரார் கூறுஞ் சூனியமே முதற்காரண மென அமையும். அற்றாகலினன்றே *"விச்சதின்றியே வினைவு செய்குவாய்" எனவும், †"விச்சின்றி நாறு செய்வானும்" எனவும், சூத்திரத்துள், இருவினையின் என்றதுபோல மாயை

* திருவாசகம், திருச்சதகம், கூசு.

† திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், திருவாரூர், காந்தாரம், உ.

(நான்யைக்)

யென்று வகுத்தோதா தொழிந்ததூஉ மெனின்,—அற்றன்று; அசற்காரியம் பொருந்தாமை மேலுரைத்தாம் ஆகலானும்; பிருதிவித்தத்துவம் நூறுகோடி யோசனையளவும் வியாபக மாதலின் வானினின்றும் மண்மாரி பெய்தற்கு ஆண்டும் பிருதிவி தூலரூபமாயின்றியினுஞ் சூக்குமரூபமா யுண்டெனக் கொள்ளப்படுதலின், அதுவே முதற்காரணம்; இந்திரசாலம் வல்லாரும் மந்திரவலியான் அவ்வக் காரணங்களினின்றே நீனைந்த வடிவத்தைத் தோற்றுவிப்பாராகலிற் சற்காரியவாதத் திற் கிழுக்கின்மையானும்; பயனேத்துள், * "மலமாயை தன் னெடு வல்வினை" என்று எடுத்தோதிய ஆசிரியர்க்கு ஈண்டு மாயையுண்மை எடுத்தோதுதலே கருத்தாகலானும், ஈண்டு இருவினையின் என்றதனானும், மேலைச் சூத்திரத்தோதிய சற்காரிய வாதத்தானும், மாயையுண்மையுந் தானே பெறப்படுமென்னுங் கருத்தான் வாளா போயினராகலின் அதுபற்றி யிழுக்கின்மை யானும் மாயையே உலகிற்கு முதற்காரணமென்று உணர்க.

"விச்ச தின்றியே விளைவு செய்குவாய்" "விச்சின்றி நாறு செய்வானும்" என்பவற்றிற்குத் தாற்பரியம் வேறென்பது† மேற்காட்டினும். அல்லதூஉம், "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்பது வித்தின்றி விளைவாயெனப் பொருள்பட்டுத் திருமேனி கொள்ளுமுறைமை உணர்த்தியதூஉமாம். "வித்தின்றி விளைந்தது" என்றுர் பிறரும். "விச்சின்றி நாறு செய்வானும்" என்பதற்கும் இவ்வாறுரைத்துக் கொள்க. அவ்வாறன்றிச் சித்தாந்தத்தோடு முரணிப் பொருள்செய்தல் பொருந்தாமை அறிக.

இனி, விச்சென்பது காரணப் பொதுமையை உணர்த்தாது முதற்காரண மாத்திரையே உணர்த்துமெனக் கொள்ளினும், அதனுன் ஈண்டுப் படுவதோர் இழுக்கின்று. என்னை? உலகத்திற் காணப்படும் வித்துக்களெல்லாம் அவ்வத்தொழில் செய்வோர்க்கு வேண்டுழிக் கைகூடாது முயன்று தேடிக் கோடற் பாலனவாய்க் காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய் வேறு நிற்பனவாமன்றே; அத்தன்மைத்தாகிய முதற் காரணமின்றியே தன்போல நித்தவியாபகமாய்த் தன்னுள் வியாப்பியமாய்த் தன்னையே தாரகமாகக்கொண்டு வேறின்றி உடனுய் நிற்ப தொன்றுனே விளைவு செய்குவாயென ஏனை முதற்காரணங் களோடு முதல்வன் செய்திக்கு முதற்காரணமாகிய மாயை யிடை உளதாகிய வேற்றுமைதோன்றக் கூறுதலே அத்திருப்

---

* இந்நூல், பத்தாஞ் சூத்திரம்.

† இச்சூத்திரத்தில், பக்கம். கoசு.

பாட்டின் கருத்தாகலானென்க. "யோகசித்தர்போல முதல்வன் நிருபாதானமாய்ச் சகத்தைப் படைப்பான்" என்றோதிய சிவ புராணத்திற்கும் இதுவே கருத்தென்பது சிகண்ட பாடியத்துட் காட்டியவாற்றான் அறிக.

இதனானே ஏனையோர்போல முதல்வனுந் தன்செய்திக்கு முதற்காரணம் வேண்டுமாயின் அது ஏனை முதற்காரணங்கள் போல ஒரோவழிக் கிடையாதொழியும்; ஒழியவே, அவ்வழி முதல்வன் உலகத்தை ஆக்கமாட்டானாய் அசத்தனுவான் செல்லும் எனப் பிரம முதற்காரணவாதிகள் கூறும் ஆசங்கையை நீக்கியவாறுமாயிற்று. இவையனைத்தும் விளக்கிய, * "அன்னவனு மிதுவொழிய வாக்க மாட்டா னசத்தனு மெனினதுவு மவன்போ னித்த-முன்னவனவ் வசித்தைவிரித் தெவையு மாக்கு முதன்மையது கொடுத்தென மொழிந்தி டாரே" என்றார் புடைநூலாசிரியரும்.

## பரமாணுமுதற்காரணவாதமறுப்பு

அற்றேல், இங்ஙனங் கூறியவாற்றாற் சூனியவாதம் பொருந்தாதென்ற தொக்கும். அங்ஙனமாயினுஞ் † சமுதாய வாதிகள் ‡ ஆரம்பவாதிகள் கூறும் அணுக்களே பிரபஞ்சத்திற்கு முதற் காரண மென்றல் அமையும்; மாயையுண்டென்பார்க்கும், தூல மாய்நின்ற அவத்தையினீங்கிச் சூக்குமமாய்நின்ற அவத்தையே முதற்காரணமென்பது கருத்தாகலிற் சூக்குமம் அணு என்பன ஒருபொருட் கிளவியாகலான், அவ்வணுக்களின் வேறாய் மாயையுண்டெனக் கோடல் பொருந்தாதெனின்,—அற்றன்று; அணுக்கள் அவயவமுடைமையானும்; அவற்றின் நுண்ணிய பரமாணுக்கள் உண்டென்பதற்குப் பிரமாண மின்மையானும்; உண்டெனினும், சடமுமாய்ப் பலவுமாயின வெல்லாந் தோன்றி நின்றழியுங் காரியமேயாகலின், அவற்றிற்குக் காரணமுண்டென்பது பெறப்படுதலானும்; காரியந் தோன்றியவழிப், பலவாய் ஏகதேசமாய்க் காட்சிப்புலனுய் நிற்றல் பற்றித் தூல மெனவும், ஒடுங்கியவழி, ஒன்றாய் வியாபகமாய்ப் புலனுகாது நிற்றல்பற்றிச் சூக்குமமெனவுங் கொள்ளப்பட்டன; அக்கருத்தறியாது சூக்குமமென்னுஞ் சொல்லேபற்றி அணுக்களே உலகிற்கு முதற்காரணமென்றல் பொருந்தாமையானும் மாயையே முதற்காரணமென்றுணர்க.

---

* சிவப்பிரகாசம், பொது, கக.

† பௌத்தருட் சௌத்திராந்திகரும், வைபாடிகரும்.

‡ தார்க்கிகர்.

இன்னும், பரமாணுக்களுக்கு அவயவ முண்டெனக் கொள்ளாக்கால் அவர் மதத்திற்கே அவசித்தாந்தமாய் முடியும்; என்னே? பரமாணுக்கள் இவ்விரண்டு தம்மூட் சையோக மென்பாரை, முழுவதுஞ் சையோகமோ? ஒருபுடை சையோகமோ? எனக்கடாயினர்க்கு, அவ்வியாப்பிய விருத்தி சையோக சம்பந்தமென்னும் அவர்மதத்தோடுமுரணி, வியாப்பிய விருத்தி சையோகமெனப்பட்டு வழுவாய் முடியுமாகலின், முழுவதுஞ் சையோகமென்றல் அவர்க்கே பொருந்தாது; இனி, அவ்வியாப்பிய விருத்தியென்றது வழுவாமைப்பொருட்டுப் பரமாணுக்கள் ஏகதேசமாகிய ஒரு பக்கத்திற் சையோகமும், ஒரு பக்கத்திற் சையோகமின்மையு முடைத்தென்று ஒரு தலையான் விடுத்தல்வேண்டும்; வேண்டவே, பரமாணுக்கள் அவயவமுடைய வென்பது தானே பெறப்பட்டது. இன்னும் விரிப்பிற் பெருகுமென் றொழிக.

### பிரகிருதிமுதற்காரணவாதமறுப்பு

அற்றேல், சாங்கியர்கூறும் மூலப்பகுதியதுண்மை எல்லார்க்கும் ஒப்பமுடிதலின், அதுவேயமையும். அதனின் வேறுய்மாயையுண்டென்பதற்குப் பிரமாணமில்லையெனின்,-அற்றன்று; முக்குணங்களும் அவ்வியத்தமாய்த் தம்முள் ஒத்துநின்ற அவத்தையே மூலப்பகுதியென்பது சாங்கியர் கூறும் மதமாகலின், அவர் கூறும் மூலப்பகுதி சடமுமாய்ப்பலவுமாகலிற் றோற்றநாசமுடைத்தாகலான் அதற்கு முதற்காரணமுண்டென்பது பெறப்படுதலின், அதுவே பரமமுதற்காரண மென்றல் பொருந்தாமை அறிக.

அற்றேல், சைவசித்தாந்தத்தின் முக்குணங்களுந் தோன்றுமல் அவ்வியத்தமாய்நின்ற அவத்தையே மூலப்பகுதி யாகலின் அஃது ஒன்றேயென்றற்கிழுக்கின்மையின், தோற்ற நாச முடைமைக் கேதுவின்மையான் இத்தன்மைத்தாகிய மூலப் பகுதியே பரமமுதற்காரணமென்றுற் படும் இழுக்கென்னை யெனின்,—நன்று சொன்னாய்! நிலமுதலிய பூதங்களுக்குச் சூக்குமந் தன்மாத்திரை; தன்மாத்திரையினுஞ் சூக்குமம் ஆங்காரம்; ஆங்காரத்தினுஞ் சூக்குமம் புத்திதத்துவம்; புத்திதத்துவத்தினுஞ் சூக்குமம் அவ்வியத்தமான மூலப்பகுதி; அதனினுஞ் சூக்குமங் கலை முதலிய தத்துவங்கள்; அவற்றினுஞ் சூக்குமம் மாயையாகலின், ஈண்டு மூலப்பகுதியை நோக்கிச் சூக்குமமாகிய கலை முதலியவற்றை நோக்கித் தூலமாகிய மூலப் பகுதி பரமமுதற்காரணமாகாமையின், தன்னைநோக்கித் தூல மாகிய புத்தி முதலிய தத்துவமாத்திரைக்கே முதற்காரண

மாய்த், தன்னைநோக்கிச் சூக்குமமாகிய கலையின் காரியமாய் நிற்கும் மூலப்பகுதி பரமமுதற்காரணமாமாறு யாண்டைய தென்க.

அற்றேல், கலை முதலியவற்றை நோக்கி மூலப்பகுதி சூக்குமம்; மாயை தூலமெனக்கொள்ளிற் படும் இழுக்கென்னை யெனின்,—அற்றன்று; அங்ஙனங் கொள்ளினும், மாயையும் மூலப்பகுதியுமென்று இருபொருள் கோடலின் விசேடமின்மையின், பெயர்மாத்திரையின் முரணுதலாற் போந்த தென்னையென்க.

"மா" என்பது ஒடுங்குதல், "யா" என்பது வருதல்: ஆகலின், எல்லாக் காரியங்களுந் தன்பால்வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்றுந் தோன்றுதற்கும் காரணமாய்நின்றது மாயையெனப்படும்; ஆகலான், ஒன்றற்கொன்று நுண்ணிதிற் செல்லுஞ் சூக்குமங்கட்கு முடிவிடமாய்நின்ற சூக்குமப்பொருள் யாது, அதனை மாயையென்றலே பொருத்தமுடைமை அறிக.

## பிரமமுதற்காரணவாதமறுப்பு

அற்றேல், சூனியமுதற்காரணவாதமும் பரமாணுமுதற் காரணவாதமும் பிரகிருதிமுதற்காரணவாதமும் வேதமுதலியவற்றிற்கு மாறுகோளாகலின், பொருந்தாவென்றதைக்கும். பிரமவாதிகள் பிரமம் பிரபஞ்சத்துக்கு முதற்காரணமென்பது வேதமுதலியவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்ததாகலின், அதுவே அமையும். அஃது எல்லா நூல்களுக்கும் ஒப்பமுடிந்ததென்பது வேதத்தின், "பிரமத்தையுணர்ந்தோன் எல்லாவற்றையு முணர்ந்தோனவன்" என்பதனானும், நான்மணிமாலையின் வேதப் பொருள்பற்றி, *"நுரையுந் திரையு நொப்புறு கொட்பும்—வரைவில் சிகர வாரியுங் குரைகட்டற்—பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி — யெண்ணில வாகி யிருங்கட லடங்குந்—தன்மை போலச் சராசர மனைத்து—நின்னிடைத் தோன்றி நின்னிடை †யொடுங்கும்" என்பதனானும், ‡"இருநிலனுய்த்தீயாகி.....எம்மடிகணின்ற வாறே" என நின்ற திருத்தாண்டகத்தும் பிறண்டும் முதல்வனே எல்லாமானென்பதனானும், அம்மைதிருவந்தாதியினும், §"அறிவானுந் தானே யறிவிப்பான் றானே—யறிவா யறிகின்றான் றானே—

---

* கோயிலன்மணிமாலை, உசை.

† அடங்கும் எனவும் பாடம்.

‡ திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், நின்றதிருத்தாண்டகம், க.

§ பதினொராந்திருமுறை, அற்புதத்திருவந்தாதி, உo.

யறிகின்ற—மெய்ப்பொருளுந் தானே விரிபொழில்பா ராகாய—மப்பொருளுந் தானே யவன்" எனத் தேற்றத்தாற் கூறுத லானும், இன்னும் இவ்வாறே ஆண்டாண்டுக் கூறும் வசனங்க ளானும் பெற்றுமெனின்,—அற்றன்று; அவ்வம் முதற்காரணங் களின் குணமெல்லாம் அவ்வக் காரியங்கட்கும் உளவென்பது நியமமாகலிற் சித்தாகிய பிரமத்திற் றோன்றிய பிரபஞ்சமுஞ் சித்தாதல்வேண்டுமன்றிச் சடமாதல் பொருந்தாமையானென்க.

அற்றேல், பாலினுண்டாகிய தயிருக்குப் பாலின்குணமும், நெல்லினுளவாகிய பதர் பலாலங்களுக்கு நெல்லின்குணமும், கொம்பினுண்டாகிய புல்லுக்குக் கொம்பின் குணமும், கோமயத்தினுண்டாகிய தேளுக்குக் கோமயத்தின்குணமும், சிலம்பியினுண்டாகிய நூலுக்குச் சிலம்பியின்குணமுங் காணு மையின், காரணத்தின்குணமே காரியத்திற்குக் கூடுமென்னும் நியமம் பொருந்தாதாலெனின்,—அற்றன்று; ஒன்றன்குண மொன்றற்காதல் இன்மையின், காரணத்தின்குணமே காரியத் திற்குமென்பதற்குத் தாற்பரியம், காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே காரியத்திற்கும் உளவாதலன்றி, அவ்விரண்டிற்கு மறுதலையான குணங்கள் உளவாகாவென்பதேயாமாகலான், சண்டு எடுத்துக்காட்டியவற்றுள் நியமத்திற் கிழுக்கின்மை அறிக.

சிலம்பிநூல்வருதற்குச் சூக்குமகாரணஞ் சிலம்பிவயிற்றி னுண்மையானும், கோமயத்திற்றோன்றியது தேளின் உடம்பே யாகலானும், இன்னோரன்னவையெல்லாம் பிறவிபேதமாக லானும் ஆண்டு ஐயப்பாடின்மை கண்டுகொள்க.

இன்னும், "மாயையைப் பிரகிருதியென்றறிக; மாயை யுடையவன் மகேசுரனென்றறிக" என வேதத்துட் பகுத் தோதுதலானும், பிரகிருதி முதற்காரணம் உபாதானம் சமவாயி காரணமென்பன ஒருபொருட்கிளவியாகலானும், இவ்வாறு பிரமத்தை முதற்காரணமென்னுஞ் சொல்லான் வேதத்துள் ஓரிடத்தும் எடுத்தோதாதாமையானும், பிரமம் முதற்காரண மென்பார்க்கு இவ்வசனம் முரணுதலானும் மாயையே முதற் காரணமாவதன்றிப் பிரமம் முதற்காரணமாகாதென்றொழிக.

அற்றேல், இவ்வசனத்தான் மாயை முதற்காரணமென்பது பெற்றும். மேற்காட்டிய வசனங்களான் முதல்வன் முதற் காரணமென்பது போதருமாகலான், இருபொருளுங்கூடி முதற் காரணமாமென அமையும்; அற்றுகலின்றே, *"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி—நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்

* திருவாசகம், போற்றித்திருவகவல், அடி-கஉஎ.

போற்றி—தீயிடை மூன்றுய்த் திகழ்ந்தாய் போற்றி—வளியிடை யிரண்டாய் மிழ்ந்தாய் போற்றி — வெளியிடை யொன்றுய் விளைந்தாய் போற்றி" எனவும், *"அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு—மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்—றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர் — வானிற் கலப்பு வைத்தோன் மேதகு—காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்—நீரி னின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட—மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றன்—றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு—மனைத்தனைத் தவ்வயி னடைத்தோன்" எனவும் ஓதியதூஉமெனின், — அற்றன்று; இருபொருளுங்கூடி முதற்காரணமென்பார்க்குத் தாற்பரியம் ஒரு கயிற்றிற் கிரண்டு நூல்போலப், பிரபஞ்சத்திற்கு மாயையும் முதல்வனுந் தனித்தனி முதற் காரணமென்பதோ? உடம்பே தோன்றிநின்றழிவதாகவும் உயிரும் அதனைடுகூடித் தோன்றி நின்று அழியுமாறுபோல, மாயை முதற்காரணம், முதல்வனும் அதனைடுகூடி விசிட்டமாய் முதற்காரணமென்பதோ? அவ்வாறன்றிப் பிரபஞ்சஞ் சடமாகலின் அதற்குச் சடமாகிய மாயையோடு முதல்வனுங் கூடி நின்றே இருபொருளும் முதற்காரணமாமெனின், அதற்கு அது பொருந்தாது; என்னை? அங்ஙனமாங்கால் மாயைபோல முதல்வனும் விகாரப்படுதலுண்மையின், "நிருவிகாரி" என்னும் வசனங்களோடு முரணுமாகலானென்க.

இதனானே நிமித்தகாரணனுகிய முதல்வன் மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனுய் முதற்காரணனுவனென்றதூஉம் பொருந்தாமையறிக. என்னை? தோன்றிநின்றழியும் உடம்பொடு கூடியவழி விகாரப்படுதல்பற்றி உடம்பொடு விசிட்டனுய் நின்ற ஆன்மாவுந் தோன்றிநின்றழிவனென்பது பொருந்தும். அதுபோல மாயையொடு விசிட்டனுய் முதல்வனும் முதற் காரணமாமென்பார்க்கு, விசிட்டமாவது விசேடணமும் விசேடியமும் அவ்விரண்டனியைபுமென்னும் இவற்றின் வேறன்மையான் முதல்வனும் அவ்வாறு விகாரியாதல் வேண்டப்படும். படவே, நிருவிகாரியென்னுஞ் சுருதியொடு முரணுமாகலானென்க. விசிட்டமாவது அம் மூன்றற்கும் வேறெனக் கொள்வார்க்கு முதல்வன் முதற்காரணமென்பதே பொருந்தாதாய் முடியுமென்றறிக.

அல்லதூஉம், நிமித்தகாரணமே முதற்காரணமென்று எடுத்துக்காட்டுதற்கு ஓர் பொருளின்மையின், அது வழியளவைக் கேலாமையானும், வழியளவையினும் ஆகமவளவை

* திருவாசகம், திருவண்டப்பகுதி, அடி-உ0.

வலியுடைத்தெனின்,—அற்றுயினும், வழியளவை ஆகமவளவை யொடு முரணுதாகலானும், ஒரோவழி முரணுமாயின், அதுபற்றி யாண்டுந் துணிவுபெறுமையின், வழியளவை பிரமாணமன் றெனப்பட்டு, ஈண்டோதிய மேற்கோள்களும் ஏதுக்களும் எடுத்துக் காட்டுகளும் பயனிலவாய் முடியுமாகலானும், ஆகமப் பொருள்கள் தம்முள் முரணுவனபோலத் தோன்றியவழி, அவற்றுள் வன்மை மென்மை உணர்ந்து பொருள்கோடற்கு வைத்ததே வழியளவையாகலானும், அஃது அதனெடுமுரணுதல் பொருத்தமின்மையானும் விடையன்மையறிக.

இனி, இவ்விரண்டும் பொருந்தாமையானும், வேறு விடுக்குமாறின்மையானும், மாயையே முதற்காரணம்; அதற்குத் தாரகமாய் விரவினின்று அதிட்டித்தலான், முதல்வனும் முதற் காரணமெனக் கோடல்வேண்டும். அங்ஙனங் கொள்ளின் விகாரியாதலின்மையான், முதல்வனும் முதற்காரணமாமென்பது வாய்பாடு மாத்திரையே யன்றிப் பொருள்படாமையின், அஃது எமது சித்தாந்தமென்றுழிக.

மாயையான் விசேடிக்கப்பட்டு விகிட்டஞ்சின்று முதல் வனும் முதற்காரணமாமென்ற நீலகண்டவாசிரியரும் பரந்து சென்று முடிவின்கண் இவ்வாறு கோடலே சித்தாந்தமாக வலியுறுத்தினர். அது சென்மாதிகரணத்திறுதியிற் சிவாதித்த மணிதீபிகையினுங் காண்க. சித்தாந்தத்தொடு பொருளான் முரணுதலின்றுயினும் வாய்பாடு மாத்திரையான் முரணுதலிற் சிவாத்துவித சைவம் வேறெனப்பட்டதென்றுணர்க.

அஃதாமாறு :—*"ஏற்றங் கருவி யிருபதோ டிரண்டும்— போற்றுமைந் தவத்தையும் புகறிரி மலமூ—மீசனு முயிரும் பேசினே யஃதொழிந்—தொன்றே யாகு மென்றனின் னியல்பு— தாயர் மனோவியர் தாதியர் தவ்வைய—ராயவ ரெவரையு மோர் மையிற் காணுங்—கோகழி தூர்த்தர் கொடுந்தொழி றகுமே" என்னுஞ் சங்கற்ப நிராகரணத்தான் அறிக. விகாரமெய்துமா றின்றியும் யாதானுமோ ரியைபுபற்றி முதற்காரணமாமென்றல் பொருந்துமென்பார்க்குக் குயவன் முதலியோருங் குடமுதலிய வற்றிற்கு அவ்வாறு முதற்காரணமாமென்றல் பொருந்து மாகலின், வாய்பாடு மாத்திரையாற் போந்ததென்னையென் றுழிக.

அற்றேல், "பிரமத்தை யுணர்ந்தோ னெல்லாவற்றையு முணர்ந்தோன்" என்றற்றொடக்கத்து வசனங்கட்குப் பொரு

* சங்கற்ப நிராகரணம், கஅ-வது நிமித்தகாரண பரிணமவாதி சங்கற்ப நிராகரணம், அடி, கஉசு.

ளாமாறு என்னையெனின், கூறுதும்:— *"அவையுடைமை யாளாநா மங்கு" என்றமையின், அவற்றை உடையானியல்பு உணர்ந்தவழி, அவ்வுயிர் மாயை கன்மங்களும் அவ்விலக்கணத்தின் அகப்பட்டு வியாப்பியமாய் நிற்றலின், அவையும் இனிது விளங்குமென்னுங் கருத்தான், "பிரமத்தையுணர்ந்தோ னெல்லாவற்றையு முணர்ந்தோன்" என்றதென்க.

அரசனை யுணர்ந்தோன் அமைச்சர் முதலியோரையும் உணர்ந்தோனுவான் என்றற்போலத் தலைமையும் பயனும்பற்றி அங்ஙனங் கூறியதென விடுப்பாருமுளர். †"நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" என்றது மாயைக்குத் தாரகமாதல் பற்றியென்றுணர்க. அக் கருத்து உணர்ந்துகோடற்கே நீரிற்றோன்றி யொடுங்கும் நுரை முதலியவற்றை நீர்க்கிடமாகிய கடலிற்றோன்றி யொடுங்குதல்போலென்று உவமை கூறினாராகலின், ஆண்டு ஆசங்கைக் கிடமின்மை உணர்க.

நின்றதிருத்தாண்டக முதலியனவும், ‡"உலகெலா மாகி வேறு யுடனுமாய்" என்னுங் கருத்தேபற்றி யோதுதலின், ஆண்டு ஆசங்கையின்மையும் கண்டுகொள்க.

அற்றேல், அஃது அங்ஙனமாக; மேலை யதிகரணத்தின், "உலகெலா மாகி வேறு யுடனுமாய்" என்றது முதல்வன் ஆன்மாக்களோடு நிற்கு முறைமையே கூறிற்றாக வுரைத்தலின், ஈண்டு மாயை மாயேயங்களோடு முதல்வன் நிற்கு முறைமைக்கு அதனை யெடுத்தோதி விடுத்தல் அமையாதாம் பிறவெனின்,— முதல்வன் தனது வியாபகத்தின் வியாப்பியமாகிய ஆன்மாவொடு நிற்கு முறைமை கூறவே, அவ்வான்ம வியாபகத்தின் வியாப்பியமான மாயை கன்ம மாயேயங்களோடும் அவ்வாறே நிற்பனென்பது கூறுமையே பெறப்படுதலின், அமைவுடைத்தென்க.

இக்கருத்தேபற்றியன்றே §"மாயைமா மாயை மாயாவருமிரு வினையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளெனி லிருளாய் நிற்கும்—மாயைமா மாயை மாயாவருமிரு வினையின் வாய்மை—யாயவா ருயிரின்மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" என்றூர் புடைநூலாசிரியரு மெனக்கொள்க.

இவ்வுண்மை யுணராது, சைவரிலொருசாரார் "முதல்வனுக்கும் மாயைக்குஞ் சந்நிதிமாத்திரையேயன்றிச் சம்பந்த

---

* இந்நூல் - இரண்டாஞ் சூத்திரம், சு-ம் அதி, உதாரணவெண்பா.

† கோயிஞான்மணிமாலை. உசு.

‡ சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், க.

§ சிவப்பிரகாசம், உண்மை, உ0.

மின்று" எனவும், "இன்றுகலின், முதல்வன் மாயைக்குத் தாரக மல்லன்; மாயை தனித்த முதலேயாம்" எனவும், பாசுபதர் மதத்தில் வீழ்ந்து, "மாயைமாமாயை" என்னுஞ் செய்யுளுக்குந் தமக்கு வேண்டியவாறே பொருளுரைத்துக்கொள்வர். வியாபக வியாப்பியங்கட்குத் தம்மூட் சம்பந்தமின்மையுந் தானமுந் தானியுமாகாமையும் யாண்டைய வென்றுழிக.

வியாபகப்பொருள்கட்குத் *"தண்கடனீ ருப்புப்போல்" தம்முள் வியாபக வியாப்பியமாமாறு கூறியது தானமுந் தானியுமாமுறைமைபற்றியேயல்லது பிறிதில்லையெனக் கொள்க.

மூலமலமும் அவ்வாறு வியாப்பியமாயினும், ஒளிமுன் இருள்போல முதல்வனுக்கு மறுதலைப்பொருளாகலின், சம்பந்த மின்றுயிற்று. மாயையும் அதுபோல மறுதலைப்பொருளென் பார்க்கு, †"இகலிவரு மிவையுணரி னிருள்வெளியாந் தன்மை" எனவும், ‡"விமலனுக்கோர் சத்தியாய்" எனவும், §"தாரகமா மத்தன்று ணிற்றல்" எனவும், $"அவையுடைமை யாளாநா மங்கு" எனவுங் கூறும் இத்தொடக்கத்து வசனங்களெல்லாம் முரணுமாறு அறிக.

இன்னும், $"அவையுடைமை யாளாநா மங்கு" என்றதனானும் ¶"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்—புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றனன்" என அட்டமூர்த்தத்துள் மாயேயத்தையும் ஆன்மாவோடொப்பத் திருமேனியாகவைத்து ஓதுதலானும், முதல்வனோடு ஆன்மாவுக்கு எச்சம்பந்தம் அச்சம்பந்தம் ஆன்மாவின் வியாப்பியமான மாயைக்கும் உண்டெனவும், அங்ஙனமாயினுஞ் சித்தென்னுஞ் சாதியொருமையான் ஆன்மாவுக்கு விசேடவுரிமை உண்டெனவுங்கொள்க.

அற்றேல், முதல்வனுக்கும் ஆன்மாவுக்கும் உளதாகிய சம்பந்தமாவது சையோகம் சமவாயம் தாதான்மியம் ஐக்கியம் சொரூபம் என்பனவற்றுள் யாதோவெனின்,—அஃது இவ்வதிகாரத்திறுதியிற் காட்டுதும். இதனானே ஆன்மாவின் வியாப்பியமான மாயைகன்மங்களுக்கும் அச்சம்பந்தமுண்மை பெறப்பட்டது.

---

* இந்நூல், ஏழாஞ்சூத்திரம், கூ-ம் அதி. உதாரணவெண்பா.
† சிவப்பிரகாசம், பொது, உடு.
‡ சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், டுகூ.
§ இந்நூல், முதற்சூத்திரம், உ-ம் அதி. உதாரணவெண்பா.
$ இந்நூல், இரண்டாஞ் சூத்திரம், ச-ம் அதி. உதாரணவெண்பா.
¶ திருவாசகம், திருத்தோணோக்கம், டுடு.

அற்றேல், இவற்றைப் பாசமென்றல் பொருந்தாதெனின்,—அற்றன்று ; ஆன்மா மலத்திற் பிணிப்புண்டு பசுவெனப் பெயர் பெற்று நின்றவழி, ஆன்மாவின் வியாப்பியமான மாயைமுதலியனவும், திரோதானமும் மலத்திற்குக் கருவியாய்ப் பாசமெனப் பெயர்பெற்று மலமேயாய்நிற்கும். ஆன்மாப் பசுவென்னும் பெயர்நீங்கி முத்தனுய் அருளோடுங் கூடிநின்ற வழி, அவ்வான்மாவின் வியாப்பியமான மாயைமுதலியனவுந் திரோதான சத்திபோலப் பாசமென்னும் பெயர் நீங்கி அருளேயாய் நிற்குமென்க.

பெத்தத்தினின்றநிலையே பொதுவியல்பெனவும், முத்தியினின்றநிலை தன்னியல்பெனவும் மேற் பாயிரத்திற் காட்டுதலின், இவை அங்ஙனம் நிற்றல் முறையே பொதுவியல்புந் தன்னியல்புமாகலான், அநேகாந்தவாத மென்னுங் குற்றமின்மை அறிக. *"இருளி லிருளாகி யெல்லிடத்தி னெல்லாம்—பொருள்க ளிலவோ புவி" என்றது இன்னோரன்னவை அநேகாந்தவாதம் அல்லாமைக்கு எடுத்துக்காட்டியவாறு. இங்ஙனமாகலானும், †"மேலைச்செய்யுளின் ரெடர்ச்சியானும், சொற்கிடக்கை முறைமையானும், "மாயைமாமாயை" என்னுஞ் செய்யுளுக்கு மாயைமுதலியமூன்றும் ஆன்மாநின்றபடி நிற்குமென்பதே செம்பொருளெனக் கொள்க.

அற்றேல், இங்ஙனங்கூறியவாற்றுன் இவ்வாறுபொருள் கோடலொக்கும். மேலைச்செய்யுளின் ரெடர்ச்சியாமா றென்னையெனின், கூறுதும்:—மேலைச்செய்யுளினிறுதியின், †"நன்னலம் பெறநிறைந்த ஞானமே ஞான மென்பர்" என்புழி ஏகாரந் தேற்றப்பொருட்டன்று ; "நன்னலம் பெறநிறைந்த ஞானம்" ஞானமோ அன்றேவென்னும் ஐயப்பாடின்மையின் இதனுனே விளப்பொருட்டுமன்று. ஈற்றசை யென்றெழியின், "ஞானம் ஞானம்" என்றல் புனருத்தியாம். ஏனைப்பொருள்கள் பயத்தற்கு மேலாமையின், "நன்னலம் பெற நிறைந்ததாகிய பதிஞான மொன்றே சுதந்தர ஞானமென்று உயர்த்துக்கூறுவர் ; ஏனைய பசுஞானமும் பாசஞானமும் அன்னவல்ல" எனப் பிரிநிலைப் பொருள் குறித்துநின்றதேயாம். ஆகவே, பிரிநிலையெச்சத்தான் ஆண்டு எஞ்சிநின்ற பசுஞான பாசஞானங்களின் இயல்பு அவற்றின் குணிகளாகிய ‡"சிற்சடங்களின் தன்மை" கூறுமுகத்தான் உணர்த்தி, "நன்னலம் பெறநிறைந்த ஞானமே ஞானம்"

---

* திருவருட்பயன்-உ-வது உயிரவைநிலை, அ.

† சிவப்பிரகாசம், உண்மை-கக.

‡ சிவப்பிரகாசம், உண்மை, கக.

என்றதனை வலியுறுத்தற்கெழுந்தது "மாயைமா மாயை" என்னுஞ்செய்யுளென்றறிக.

அவற்றுள், பசுஞானத்தினியல்பு ஆன்மவிலக்கணத்தாற் கூறிப்போந்தமையின், அதனை அதுவாதமுகத்தான் விளக்கி, ஏனைப் பாசஞானத்தினியல்பு அப்பசுஞானத்தினியல்புணர்த்து முகத்தான் விளக்கினார். தன்னியல்புணர்தற்கு எடுத்துக்காட் டாகப் பொதுவியல்பும் உடன்கூறப்பட்டது. "மருளெனி லிருளாய் நிற்கும் அருளெனி லொளியாய் நிற்கும்" எனவே, பசுஞானந் தனக்கெனச் சுதந்தரமுடைத்தன்றுகலானும், பாச ஞானந்தானென வேறன்மையானும் பதிஞானமொன்றே சுதந் தரஞானமெனப்படுமெனப் பிரிநிலையேகாரத்தை வலியுறுத்தவா றுயிற்று.

இங்ஙனம் பிரிநிலையேகாரத்தாற் போந்த பொருளை வலி யுறுத்துதற்கு "மாயைமாமாயை.....ஒளியாய் நிற்கும்" எனவெடுத்தோதிய ஆசிரியர்கருத்துணராது, ஞானவாய்மையுள் மாயைமுதலியவற்றினியல்பு கூறுதற்கு இயைபு என்னையென்று இடர்ப்பட்டு, மாயைமுதலியவற்றை ஆருயிர்க்கு அடையாக்கி, ஆண்டு எடுத்துக்கோடற்கு இயைபில்லாத திரோதானசத்தியை எழுவாயாக வருவித்து, அது "மருட்காலத்திருளாய் நிற்கும், அருட்காலத்தொளியாய் நிற்கும்" என மேலைச்செய்யுளோடு இயைபின்றியுரைப்பாரும் உளர். திரோதானசத்தி அவ்வாறு நிற்றல், *"பாகமாம் வகைகின்று திரோதானசத்தி பண்ணுத லான் மலமெனவும் பகர்வர்" என்பதனானும், †"முற், சினமருவு திரோதாயி கருணை யாகி" என்பதனானுங் கூறிப்போந்தமையின், மீளவுங்கூறல் கூறியதுகூறலாய் முடியுமாகலானும், மாயை முதலியவற்றை ஆருயிர்க்கு அடையாக்கிற் படுவதோர் பயனின் மையின், அது வெற்றெனத்தொடுத்தலுங் கூறியதுகூறலுமாய் முடியுமாகலானும், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆசிரி யர் உய்த்துணரவைத்து அங்ஙனம் வழுப்படக்கூறு மாகலானும், மேலைச்செய்யுளோடு இயைபின்மையானும் அது போலி யுரையென் றுழிக.

இனி, மாயைமுதலியவற்றை ஆருயிர்க்கடையாக்காது, எழு வாய் வருவிக்கவும் வேண்டாது, ஈரிடத்தும் "மருள்" என்றே பாடமோதி, அதனை எழுவாயாக்கி, "ஆய்" என்பதற்கு இரு தலையும் வேறுவேறு உரைசெய்து அப்பொருள்பயப்பக் கோடு மெனின், அங்ஙனங் கொள்ளினும், அதுவும் பொதுவுட்கூறிப்

* சிவப்பிரகாசம் பொது, அ.

† சிவப்பிரகாசம் பொது, கூ.

போந்ததென்பது காட்டினமையின், அதனை ஈண்டுக்கூறல் வழுவாமாகலானும், ஈண்டு ஒதுதற்கோர் இயைபின்மையானும், ஆன்மலக்கணம் அவத்தையிலக்கண முதலியன ஈரிடத்துங் கூறப்பட்டனவாலெனின், அங்ஙனங் கூறுதல் அவற்றிற்குப் பொருள்வேற்றுமை அறியாதார் கூற்றேயாம் ஆகலானும், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆசிரியர் பொதுவுட்கூறிய வற்றை உண்மையிற்கூறார் ஆகலானும் அங்ஙனம் உரைப்பன வெல்லாம் போலியென் றொழிக.

அற்றேல், அஃது அங்ஙனமாக; நிமித்தகாரணனுகிய முதல்வன் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாவனுயின் உவமைப்பொருளாகிய குயவனும் மண்ணுக்கு ஆதாரமாதல் வேண்டுமாலெனின்,—அறியாது கடாயினுய். உவமமெல்லாம் ஒருபுடையொத்தலேயன்றி முழுவதுமொத்தல் இன்று. முழுவது மொக்குமென்பாரை, முதல்வனுக்குரிய வியாபகமுதலிய குணங்களுங் குயவனுக்கு உளவாதல் வேண்டுமெனக் கடாயினுர்க்கு விடையென்னையெனக்கூறி மறுக்க. ஒருபுடையொத்தலானன்றே ஒருபொருளுக்கு ஓரியல்புபற்றி வேறுவேறுவமை கூறியதூஉமென்க.

அற்றேல், இவ்வியல்பிற்கு உவமை யாதோவெனின்;—நன்றே கடாயினுய்! குழவியுடம்பின் முதற்காரணமாகிய உதிர சுக்கிலங்களுக்கு ஆதாரம் அதற்கு நிமித்தகாரணமாகிய தாய் தந்தையாதலும், சிலம்பிநூலின் முதற்காரணத்திற்கு ஆதாரம் அதற்கு நிமித்தகாரணமாகிய சிலம்பியாதலும், *காளியுருவிற் றோன்றிய கணங்களது உடம்பின்முதற்காரணத்திற்கு ஆதாரம் அவற்றிற்கு நிமித்தகாரணமாகிய காளியாதலும் அறிந்தா யன்றே. இவ்வாறு பலவுளவெனக் கொள்க. இங்ஙனங் கூறிய வாற்றுற் பாசுபதர் முதலியோர் மதமும் மறுக்கப்பட்டன.

### மாயாவாதமதம்

இனி, மாயாவாதிகள், மாயையாவது மெய்ப்பொருளென் றுஞ் சொல்லப்படாது பொய்ப்பொருளென்றுஞ் சொல்லப் படாது அநிர்வசனமாய் நிற்பதொன்றெனவும், அற்றுகலி னன்றே மாயையெனப் பெயர்பெற்றதெனவும், அத்தன்மைத் தாகிய மாயையிற் சித்தாகிய பரப்பிரமங் கண்ணுடியின் நிழல் போல அத்தியாசமாய்த் தோன்றுமெனவும், அங்ஙனந் தோன் றியவழிப், பேய்த்தேர் நீராகவும் கயிறு பாம்பாகவுங் காணப்படு

* காளியுருவிற் கணங்கள் தோன்றிய சரிதம், கந்தபுராணத்துத் தக்க காண்டம் வீரபத்திரப்படல முதலான விடங்களிற் காண்க.

மாறுபோல அத்தோற்றம் மண் புனல் அனல் கால்முதலிய பிரபஞ்சமாய்க் காணப்படுமெனவும், இங்ஙனமாகலின், சித்தினுடைய விவர்த்தனமே சகமெனவுங் கூறுவர்.

மெய்ப்பொருளுமன்றிப் பொய்ப்பொருளுமன்றி நிற்ப தொன்றுண்டென்று எடுத்துக்காட்டுதற்கு ஒருபொருளின்மையின், வழியளவைக் கேலாமையான், வழியளவைக்கேலாதாகவே உரையளவைக்கு மேலாதாகலானும், பேய்த்தேரிற் நீரொன்றும், நீர்மாத்திரையே அசத்தியமாவதன்றி, உள்பொருளாய்த் தோன்றுவதாகிய பேய்த்தேர் அநிர்வசனம் ஆகாமையின், அஃது ஆண்டைக்கு எடுத்துக்காட்டாதல் செல்லாமையானும், மாயை அநிர்வசனமென்பது ஒருசமயத்தார்க்குங் கொள்கையன்மையானும் அஃது ஒன்றுகவைத்து மறுக்கற் பாற்றன்றென் றொழிக.

அல்லதூஉம், விவர்த்தனவாதிகள் ஒன்று பிறிதொன்று போலத் தோன்றுதல் விவர்த்தனமென்பர். அஃது அசத்திய மேயாம். பிரபஞ்சஞ்சத்தியமென்பது காட்சிமுதலிய எல்லா வளவைகளானுந் துணியப்படுதலின், அத்தன்மைத்தாகிய பிரபஞ்சஞ் சித்தினுடைய விவர்த்தனமாமாறு யாண்டையதென்க. இதனானும் மாயை அநிர்வசனம் அன்றென்பது தெற்றென வுணர்க; மாயை அநிர்வசனமாயின், அதன் காரியமாகிய பிரபஞ்சஞ் சூனியமாதல் வேண்டுமாகலான் என்பது.

அற்றேல், பிரபஞ்சஞ் சத்தியமென்பதற்குப் பிரமாண மென்னை? காட்சியே பிரமாணமெனின்,—அற்றன்று; காட்சியானே நிகழ்காலத்துப் பிரபஞ்சஞ் சத்தியமென்று உணரப்படுமாயினும், முக்காலத்தினும் ஒருதன்மைத்தாகிய சத்தியப் பொருள் பிரபஞ்சமென்பது அதனான் உணரப்படாமையின். அன்றியும், காட்சியளவையானே இது குடம் இஃது ஆடை யென விதிமுகத்தாற் காணப்படுவதன்றி, இஃது ஆடையன்று இது குடமன்று என மறுதலைமுகத்தாற் காணப்படாமையின், அன்மையாதல் உணர்ந்தன்றிப் பேதந்தோன்றுமையின், பேதப் பிரபஞ்சமுண்மைக்குக் காட்சியளவை பிரமாணமன்று.

அற்றேல், ஆடை குடத்தின்வேறு குடம் ஆடையின்வேறு என்னுங்காட்சி எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலின், பேதப் பிரபஞ்சமுண்மைக்குக் காட்சியளவை பிரமாணமன்றென்றல் பொருந்தாதெனின்,—அற்றன்று; அத்தன்மைத்தாகிய காட்சி சவிகற்பமாகலின், சவிகற்பமெல்லாம் மயக்கமாகலான் என்க. பேதப்பிரபஞ்ச முண்மைக்குக் காட்சியளவை பிரமாணமின்றுகவே, அவிநாபாவமாகிய ஏதுவுணர்தற்கு இடமின்மையின்,

வழியளவை பிரமாணமன்று. அவ்விரண்டற்குமு மாறுபாடா கியபொருளின் ஆகமவளவையும் பிரமாணமாகா வென்க.

இன்னும், இஃது இதனின்வேறு என்னும் சவிகற்பக் காட்சி பிரமாணமென்பார்க்கும் அபேதவுணர்வு நிகழ்ந்தன்றிப் பேதவுணர்ச்சி நிகழாது; எய்தியதற்கன்றி விலக்கின்மையின். அங்ஙனமாகவே, முற்படத்தோன்றும் அபேதவுணர்ச்சி பிர மாணமென்பது ஒருதலையாகக் கோடல் வேண்டும்; வேண் டவே, பிற்படத்தோன்றும் பேதவுணர்ச்சி அதனை அவாய்நிற் றலின், பிரமாணமாகாமை அறிக.

அபேதவுணர்ச்சி காட்சியளவையானே பெறப்படுதலின், "குடம் ஆடையின்வேறன்று, திரவியமாகலான்; ஆடைபோ லும்" என்னும் அநுமானமும், வேற்றுமையின்றிக் கூறும் வேதவாக்கியங்களும் அதற்குப் பிரமாணமென்க. ஆகவே, வான் வளி தீ நீர் முதலியனவாக வேற்றுமைப்படக் கூறும் வாக் கியங்களெல்லாம் இவ்வளவைகளோடு மூரணுதலின், உப சாரமேயன்றிப் பொருள்படாவென்பது கண்டுகொள்க.

இங்ஙனம் பேதவுணர்ச்சிக்குப் பிரமாணமின்மையின், பேதப்பிரபஞ்சமாகிய பிரமேயமின்மையுந் தானேபோதரும். அவ்விரண்டும் உளவெனக்கொள்ளினும், பிரமிதிக்கும் பிரமே யத்திற்குஞ் சம்பந்தமென்னே? தாதான்மியமோ? காரணகாரி யத்தன்மையோ? சையோகமோ? சமவாயமோ? வேறென்றோ? எனக் கடாயினுரக்குத், தாதான்மியமாவது ஒன்றுதானே ஒருவாற்றுன் இருவகைப்பட்டுப் பிரிப்பின்றி நிற்றற்குரித்தாக லின், அத்தன்மைத்தாகிய தாதான்மியசம்பந்தங் குடஞானத் திற்குங் குடத்திற்கும் உண்டெனின், குடஞானம் போலக் குடமும் அகத்தின்கண் உளதாதல் வேண்டும். குடம் புறத்தின் கண்ணதாதலும் குடஞானம் அகத்தின்கண்ணதாதலும் எல் லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், அவற்றிற்குத் தாதான்மியங் கூறல் பொருந்தாமையானும், காரணகாரியத்தன்மையே சம்பந்த மெனின், காரணகாரியங்களின் ஒன்றுள்வழி ஒன்றின்றுதல் பொருந்தாமையின், கனவின்கட் குடஞானமுதலியவுணர்வு உண்மையின், குடமுதலியனவும் ஆண்டு உளவாதல் வேண்டும்; அஃதின்மையானும்' இதனுனே சையோகஞ் சமவாயமென்ப னவும் பொருந்தாமையானும், விடயமும் விடயிப்பதுமாந்தன்மை சம்பந்தமெனின், விடயமாவது இதுவென்று அறியவாராமை யானுஞ் சம்பந்தமே பெறப்படாமையின், பேதப்பிரபஞ்சம் பிரமிதிக்குப் புலனுகாமையானும், பிரபஞ்சம் அசத்தியப் பொருளே யாகலான் அவற்றிற்குக் காரணமாகிய மாயை அநிர்

வசனமென்றல் பொருத்த முடைத்து என்று இங்ஙனம் மாயா வாதிகள் கடாவிடைகளாற் சாதிப்பராகலின், ஆண்டு இழுக் கென்னையெனின், கூறுதும்:—

மாயாவாதமறுப்பு

பிரபஞ்சஞ் சத்தியப்பொருளென்பதற்குக் காட்சியள வையே பிரமாணமாம். கயிற்றைஅரவெனக்காணுந் திரிவுகாட்சி யிற்போல மாசறுகாட்சியின் வேறுபடுதலின்மையின், நிகழ்காலத் திற்கண்டது முக்காலத்தினுமொக்கும் ஆகலானும், நிருவிகற் பக்காட்சியின் விதிமுகத்தாற் பேதம் அறியப்படாதாயினும், குற்றியோ மகனேவென்னும் ஐயத்தின் பின்னர், இது குற்றியே மகனன்றென எதிர்மறை முகத்தாற் பேதவுணர்வு காட்சிக்குப் புலப்படுதலானும்; திரிவுகாட்சியிற் கயிறு பாம்புபோலவும் மாலைபோலவும் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருகாலத்திற் றோன் றும், அதுபோலன்றி மாசறு காட்சியின் எல்லார்க்கும் எக்காலத்துங் குடங்குடமேயாய் தோன்றுவதல்லது வேறுபடத் தோன்றுமையின், சவிகற்பக் காட்சி பிரமாணமே யாகலானும்; அன்றியும், கயிற்றிற்கும் அரவிற்கும் கோணிநீண்டு கிடத்தன் முதலிய இலக்கண வொப்புமையான் ஆண்டு ஒன்றை ஒன்றுகத் திரியக்காண்டல்பொருந்தும், அதுபோலச் சித்தாகிய பிர மத்தைக்குடமுதலிய பொருளாகத் திரியக்காண்டற்குத் தம்முள் ஒப்புமையின்மையின், அதனையும் அவ்வாறு திரிவுகாட்சி யென்றல் பொருந்தாமையானும்; சவிகற்பக்காட்சிக்கு நிருவிகற் பக்காட்சி காரணமாகலின், காரணத்துள்ளதே காரியத்தினும் உண்மையாற் பெயர் சாதி குணமுதலிய பேதவுணர்ச்சி நிரு விகற்பக்காட்சியின் இன்றியிற் சவிகற்பக்காட்சியினும் இன்றாய் முடியுமாகலின், நிருவிகற்பக்காட்சியினுஞ் சூக்குமமாய்ப் பேதந் தோன்றுமாகலானும்; அதுபற்றி எய்தியதற்கே விலக்காதலிற் பேதமுணர்ந்தன்றிப் பேதமின்மையுணர்தல் கூடாமையின், அபேதஞானமும் பேதஞானத்தை அவாவிநிற்றலின், அபேத ஞானமும் முற்படத்தோன்றுதல்பற்றிப் பிரமாணமென்றல் பொருந்தாமையானும்; "ஆடை குடத்தின்வேறு" என்றற் றொடக்கத்துப் பேதவுணர்ச்சி முக்காலத்தினும் வேறுபடா மையின், "ஆடைகுடத்தின்வேறன்று" என்றற்றொடக்கத்து அபேதவுணர்ச்சி எதிர்காலத்தின் வேறுபடுதலின், வேறுபடா மையும் வேறுபடுதலும்பற்றியே பிரமாணமென்றும் அப்பிர மாணமென்றுங்கோடல் பொருத்தமுடைத்து ஆகலானுங் காட்சியளவையே பேதவுணர்ச்சிக்குப் பிரமாணமாதல் அறிக. ஆகவே, அபேதஞ்சாதித்தற்கு முற்கூறிய அனுமானமும் போலியாயவாறு காண்க.

அங்ஙனமல்லாக்கால், அவ்வநுமானத்தானே ஆடையெடுக் கச்சென்றான் குடத்தையெடுத்து வருதல் வேண்டுமென் றொழிக. இதனானே அபேதங் கூறும் ஆகமங்களும் உபசார மென்பது கண்டுகொள்க.

இன்னும், பிரபஞ்சம் மித்தையெனத் துணிதற்குக் கொண்ட பிரமாணம் மெய்யோ? பொய்யோ? எனக்கடாயி னார்க்கு, மெய்யெனிற் பிரபஞ்சத்துட்பட்ட பிரமாணம் மெய் யெனவே, அம்முறையாற் பிரபஞ்சமும் மெய்யேயாம். பொய் யெனிற் பொய் பிரமாணமாகாமையின், பிரபஞ்சம் மெய்ப் பொருளென்பது தானே போதரும்.

அற்றேல், பிரமிதிக்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்த மென்னையெனின்,—அறியப்படுவதும் அறிவதுமாகிய விடய விடயித்தன்மை சம்பந்தமென்று உணர்க. விடயவிடயித் தன்மை சம்பந்தமன்றென்பையாயின், நீ பிரபஞ்சம் மித்தை யென்றுணரும் உணர்விற்கு அது விடயமாகாமையின், பிர பஞ்சம் மித்தையன்றெனப்பட்டு உனக்கே வழுவாமென் றொழிக.

அற்றேல், விடயமாவது யாதெனின், எவ்வுணர்வு நிகழ்ந் தழி எப்பொருள் விளங்கும் அஃது அதற்கு விடயமென்க. விளங்குதல் விளங்குதற்கு உரியையாதல். ஆகவே, இங்ஙனங் கூறியவற்றாற் பிரமாணமுஞ் சம்பந்தமும் உண்மையின், பிரமேயமாகிய பிரபஞ்சம் மெய்ப்பொருளே யாகலான் அதற்கு முதற்காரணமாகிய மாயையும் மெய்ப்பொருளாவதன்றி, அநிர் வசனமாதல் பொருந்தாமை யறிக.

அற்றேல், பிரபஞ்சஞ்சத்தியப்பொருளென்பது *"உணருரு வசத்தெனின்" எனவும், †"உண்டுபோ லின்றும் பண்பி னுலகினி யசத்துமென்பர்" எனவுங் கூறும் இத்தொடக்கத்து வசனங்களோடு முரணுமெனின், அவற்றிற்குப்பொருள் ஆண் டுக் கூறுதுமாகலின், முரணுமை யறிக.

### மாயையின்வகை

இங்ஙனங் கூறியவாற்றாற் பிரபஞ்சத்திற்கு முதற்காரண மாய் நித்தமாய்ச் சடமாய் முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய் முதல்வனின் வியாப்பியமாய் மெய்ப்பொருளாய் அருவாயுள்ள தெனப் போந்த மாயை சுத்தமாயை அசுத்த மாயை யென்று

---

* இந்நூல், ஆருஞ்சூத்திரம்.

† சிவஞானசித்தி, ஆருஞ் சூத்திரம், உ.

இருவகைப்படும். சுத்தமாயை மாமாயை குடிலை குண்டலி விந்து என்பன ஒருபொருட்கிளவி. அசுத்தமாயை அதோமாயை மாயை மோகினி என்பன ஒருபொருட்கிளவி. இவற்றுள், சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணஞ் சுத்த மாயை; அசுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் அசுத்தமாயை. சுத்தப்பிர பஞ்சஞ் சிவதத்துவமுதலாயின. அசுத்தப்பிரபஞ்சங் கலைமுத லாயின.

அற்றேல், சுத்தம் அசுத்தமென்பன யாவையெனின், துன் பத்தோடு விரவுதலின்றி இன்பமாத்திரையே பயத்தற் கேது வாயது சுத்தம். ஏனையது அசுத்தமென்க.

சுத்தமாயை.

அற்றேல், சுத்தப்பிரபஞ்ச முண்மைக்குப் பிரமாண மென்னை யெனின், கூறுதும்:—ஐந்தொழில் செய்தல் முதல் வனுக்கு இலக்கணமென்பது போந்தமையின், அவனுக்கு இலயம் போகம் அதிகாரமென்னும் மூன்றவத்தை யுண்மை பெற்றும். பெறவே, நிருவிகாரியாகிய முதல்வன்மாட்டு அவை நிகழ்தற்கு இடம் வேண்டும். அசுத்தப்பிரபஞ்சம் இடமாதல் பொருந்தாமையின், அவற்றிற்கிடமாகிய சுத்தப் பிரபஞ்ச முண்டென்பது துணியப்படும். படவே, அதற்கு முதற்காரணம் யாது அது சுத்தமாயையெனக்கொள்க.

இன்னும், அநந்ததேவர் சீகண்டருத்திரர் முதலியோர் விஞ்ஞானகலர் பிரளயாகலரிற் பக்குவமுடையராய்ச் சகச மலத்தினீங்கி முதல்வனருளான் முழுதுணர்ந்து படைப்பு முதலிய தொழில் செய்தற்கு ஏதுவாகிய அதிகாரமலவாசனை மாத்திரமுடையராய் முதல்வனேவல்வழிநின்று அசுத்த மாயை முதலியவற்றைக் காரியப்படுத்துவோராகலின், அவர்க்குத் தநுகரணாதி யுண்மையின், அவற்றிற்குக் காரணமாதல்பற்றியுஞ் சுத்தமாயையுண்மை துணியப்படும். அநந்ததேவர் முதலியோர் தநுகரணாதிக்கும் அசுத்தமாயையே காரணமெனக் கோடு மெனின்,—அசுத்தமாயை மயக்குவ தாகலின், அவர்க்கும் மயக்கமுண்டாதல் வேண்டும்; அஃதின்மையானும், அசுத்தத் திற் சுத்தந்தோன்றுமையானும், அசுத்தமாயை கன்மமார்ந்த அணுக்களுக்கே ஆவாரகமாகலின் விஞ்ஞானகலர்க்குக் கன்ம மின்மையானும், விஞ்ஞானகலருண்மைக்குப் பிரமாணம் * முன் னர்க்காட்டுது மாகலானும் அவர் தநுகரணாதிக்கு அசுத்தமாயை காரணமாகாதென்றொழிக.

* எட்டாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

இன்னும், பெயர் சாதி முதலிய சவிகற்பவுணர்வு எழுத்தா ஞகிய சொல்லானன்றிப் பெறப்படாதென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. அவ் வெழுத்தோசைக்குக் காரணமாதல் பற் றியுஞ் சுத்தமாயையுண்மை துணியப்படும். காரண மின்றிக் காரியந் தோன்றுதென்பதூஉம் எழுத்தோசை அநித்த மென்ப தூஉம் * மேற் காட்டினுங் கடைப்பிடிக்க.

அற்றேல், சத்ததன்மாத்திரையின் காரியமாகிய ஆகாயமே சத்தத்திற்கெல்லாங் காரணமாகலின், எழுத்தோசைக்கு வேறு காரணமாமாறு என்னையெனின்,—அற்றன்று; ஆகாயம் எழுத் தோசையைப் புலப்படுத்துவதாகிய இசையோசைக்கே காரண மாவதன்றி, அதனாற் புலப்படுவதாகிய எழுத்தோசைக்குக் காரணமாகாதென்க. ஒளியும் உருவமும்போலப் புலப்படுப்பதும் புலப்படுவதுமாகிய இசையோசைக்கும் எழுத்தோசைக்குந் தம்முள் வேற்றுமை அநுபவத்தின் வெளிப்படத் தோன்றுத லானும், கடலோசை முதலாயின எழுத்தோசையின் வேறுதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலானும், அவ்விரண்டன் காரண முந் தம்முள் வேறென்பது துணியப்படுமென்க. எழுத்தோ சையும் அதனைப் புலப்படுத்தும் இசையோசையும் வேறென்பது தார்க்கிகர்மதத்திற் குடமும் அதனைப்புலப்படுத்துங் குடத் தன்மையாகிய சாதியுந் தம்முள் வேறென்பதுபோலக் கொள்க.

இன்னும், அங்காப்புமுதலிய அகமுயற்சியாற் பிறப்பது எழுத்தோசையெனவும், அதனைப்புலப்படுப்பதாய் எடுத்தல் படுத்தன் முதலிய புறமுயற்சியாற் பிறப்பது இசையோசை யெனவும் இவ்வேறுபாடு தெரிந்துணர்ந்து கொள்க.

அற்றேல், இரண்டோசைக்கும் ஆகாயமே காரணமென்றுற் படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; ஆகாயத்தின் மேலுள்ள ஆங்காரமுதலிய புவனங்களின் வைகுவோர்க்குச் சவிகற்பவுணர்வு சொல்லானன்றிப் பெறப்படாமையின், ஆண்டு எழுத்தோசையுண்மை பெற்றும்; பெறவே, அதற்குக் காரணங் கீழுள்ள ஆகாயமென்றல் பொருந்தாமையானும், வேறு காரண மின்மையானும், அதற்குக் காரணஞ் சுத்தமாயை யென்பதே சாங்கியர் முதலியோர்க்கும் ஒருதலையாகக் கோடல் வேண்டு மென்க. புத்தி நிச்சயிப்பிக்குமென்பதே சாங்கியர்முதலிய சமயத்தார்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததாகலின், நிச்சயித்தலாவது இவன் தேவதத்தன் பார்ப்பான் காரியன் என விகற்பித்துணருஞ் சவிகற்பவுணர்வேயாகலின், புத்திதத்துவ முதலியவற்றின் எய்து வோர்க்குச் சவிகற்பவுணர்வு உண்டென்ப துணர்க.

---

* முதற் சூத்திரம், எடு-ம் பக்கத்தும், எஉ-ம் பக்கத்துங் காண்க.

## நால்வகைவாக்கு

இவ்வெழுத்தோசை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென நான்கு வகைப்பட்டு, ஒன்றற்கொன்று காரணமாய்ச், சவிகற்பவுணர்விற் கேதுவாய்ப், படங்குடிலாஞற் போலச் சுத்தமாயையின் விருத்தியாய்ச், சாந்தியதீதை முதலிய பஞ்சகலைகளைப்பற்றிச் சிவதத்துவமுதலிய சுத்ததத்துவங்களின் ஐவகைப்பட்டு நிற்கும்.

வைகரி தன்செவிக்குக் கேட்குஞ் சூக்குமவைகரியும், பிறர் செவிக்குக் கேட்குந் தூலவைகரியுமென்று இருவகைப்படும்; ஆகலின், ஐவகையாமாறு கண்டுகொள்க. வைகரியை ஒன்றாக வைத்தெண்ணிச் சூக்குமைவாக்குச் சூக்குமை, அதிசூக்குமையென்று இருவகைப்பட்டு ஐந்தாமென்பாரும் உளர். இவற்றின் இயல்பெல்லாம் வழிநூல் புடைநூல்களின் விரித்தோதுதலின், ஆண்டுக்காண்க.

அற்றேல், எழுத்தோசை சுத்தமாயையின் காரியமெனின், சுத்தமாயையின் காரியமாகிய பஞ்சகலைகளுஞ் சுத்த தத்துவ புவனங்களும்போல நம்மனோர்க்குக் காட்சிப்புலனாகா தொழிதல் வேண்டும்; அவ்வாறன்றி எழுத்தோசை நம்மனோர்க்கு அநுபவப்படுவதாய்ச் செவிக்குப் புலனுமாறென்னை யெனின்,—அஃதொக்கும். எழுத்தோசையாகிய வாக்கு ஒன்றுதானே உபாதி இன்மையிற் சுத்தமாயாகாரியங்களிற் சூக்குமமாயும், இசையோசை முதலிய உபாதிவயத்தான் அசுத்தமாயாகாரியங்களில் தூலமாயும், பிரகிருதிமாயாகாரியங்களின் அதிதூலமாயும் நிற்றலின், அவ்வுபாதிவயத்தானே நம்மனோர்க்குப் புலப்படுமென்று உணர்க.

அஃது அங்ஙனமாக; வாக்குக்கள் சத்தரூபமுங் கலை முதலியன * அத்த ரூபமுமாகிய வேறுபாடுடைமையின், அவ்விரண்டற்குஞ் சுத்தமாயையொன்றே முதற்காரணமென்றல் பொருந்தாமையின், சுத்தப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் வேறென்று கொள்ளற்பாற்றெனின்,—அவ்விரண்டுந் தம்முள் வேறுபாடுடையவாயினுஞ் சுத்தமென்னுஞ் சாதியான் வேறுபாடின்மையானும், சத்தப்பிரபஞ்சம் * அத்தப் பிரபஞ்சத்தைப் பற்றியன்றி நில்லாமையானும், அத்தன்மைத்தாகிய சத்தப் பிரபஞ்சத்திற்கு வேறு காரணங்கோடல் மிகையாகலின், சுத்தமாயையொன்றுதானே சத்தரூபமும் அத்தரூபமுமாகிய இரண்டுதன்மையையுடைத்தாய் அவ்விரண்டற்கும் முதற்காரணமெனக் கொள்ளப்படுமென்க.

---

* அத்தம் - பொருள்.

முதற்காரணமுடிபு

அற்றேல், இவ்வாறே சுத்தப்பிரபஞ்சமும் அசுத்தப்பிரபஞ்சமுஞ் சுத்தமும் அசுத்தமுமாகிய வேறுபாடு தம்முளுடைய வாயினுஞ் சடமாகிய காரியமென்னுஞ் சாதியின் வேறுபாடின்மையின், அத்தன்மையவாகிய இரண்டற்கும் வேறு வேறு காரணங்கோடல் நிகையாகலின், மாயையொன்று தானே சுத்தம் அசுத்தம் என்னும் இரு தன்மையுமுடைத்தாய் அவை இரண்டற்கும் முதற்காரணமாமெனக் கொள்ளிற் படும் இழுக்கென்னையெனக் கடாவியவழி, அங்ஙனமாகலானும், * "விந்துவின் மாயை யாகி மாயையி னவ்வியத்தம் வந்திடும்" எனவும், † "தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு—மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்றன்—மேலதாம் விந்து" எனவும் ஓதப்பலாகலானும், சுத்தமாயையிற் பஞ்சகலைகளைச் சுத்தி செய்யவே, அசுத்ததத்துவ புவனங்களுஞ் சுத்திப்படுதலானும், ‡ "விரிவாய தன்செயலின் வியாபியாய்" என ஏக தேசமாய் வைத்தோதுப ஆகலானும், அசுத்தமாயா தத்துவத்தைப் பிரகிருதிமாயா தத்துவம்போலக் காரியதத்துவங்களின்வைத்து எண்ணுதலானுஞ் சுத்தமாயையொன்றே தூலஞ் சூக்குமம் பரமென மூவகைப்பட்டுத் தூலமாய்நின்ற அவத்தையிற் பிரகிருதிமாயையென்றும், சூக்குமமாய்நின்ற அவத்தையின் அசுத்தமாயையென்றும், பரமாய்நின்றவவத்தையிற் சுத்தமாயையென்றும் பெயர்பெற்று நிற்குமெனப்படுமாகலின், அசுத்தமாயையுஞ் சுத்தமாயையின் காரியமேயாம் என்பாரும்; அங்ஙனம் விடுப்பின், § "ஏக னனேக னிருள் கருமு மாயையிரண்—டாகவிவை யாறுதி யில்" என்றற் றொடக்கத்து வசனங்களோடு முரணுதலானும், $ "விந்துவின் மாயையாகி" என்புழி, "இன்" உவமவுருபெனவும், ¶ "தூலமா முருவினுக்கு" என்றது ஒன்றற்கொன்று வியாபக வியாப்பிய மாமாறே கூறியதெனவும், ** "விரிவாயதன்செயலின் வியாபியாய்" என்பது கலைக்குமேலுள்ள வியாபகம் அநந்ததேவராற் கலக்குண்ணுமையின், ஆண்டுப் பயன்படாமைபற்றி ஓதியதெனவுங் கொள்ளப்படும் ஆகலானும், சுத்தமும் அசுத்தமுந்

---

* சிவஞானசித்தி, முதற் சூத்திரம், கசு.

† சிவஞானசித்தி இரண்டாஞ்சூத்திரம், நெ.

‡ சிவப்பிரகாசம், பொது, கெ.

§ திருவருட்பயன், சு-வது அறியுநெறி, உ.

$ சிவஞானசித்தி, க-ம் சூ. கசு.

¶ ஷை உ-ம் சூ. இெ.

** சிவப்பிரகாசம் - பொது. கெ.

தம்முண் மாறுகோளுடையன, அன்றியுஞ் சுத்தமாயை மயக்க மின்றி அறிவைவிளக்குவது, அசுத்தமாயை மயக்கத்தைச் செய்வ தாகலின் மாறுபட்ட இரண்டுதன்மை ஒருபொருட்கின்மை யானும், புருடதத்துவந் தத்துவங்களின் வைத்தெண்ணப்படினுங் காரியமன்றென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலின், தத்து வங்களின் வைத்தெண்ணியதேபற்றிக் காரியமென்றல் பொருந்தா மையானும், சுத்தமாயைபிற் பராசத்தியாற் கலக்குண்டபாகஞ் சிவதத்துவமெனவைத்தெண்ணப்பட்டாற்போல, மோகினியின் அநந்தரேசுவராற் கலக்குண்டபாகம் அசுத்தமாயாதத்துவமென வைத்தெண்ணல் பொருத்தமுடைத்தாகலானும், சுத்தமாயையின் அசுத்தமாயை வியாப்பியமாகலின், வியாபகமாகிய கலா சுத்தி யான் வியாப்பியமான அசுத்ததத்துவபுவனங்கள் சுத்தியா மாகலின், அதுபற்றிக் காரியமென்றலும் பொருந்தாமையானும், சுத்தமாயையும் அசுத்தமாயையுந் தம்முள் வேறேயென்பாரும்; இரத்தினத்திரயமென்னும் வடநூலின் இவ்விரண்டுமதமும் பிறர்கருத்தாகவைத்துக் கூறுதலானும், சுத்தமாயையும் அசுத்த மாயையுந் தம்முள் வேறுயிற் சடமுமாய்ப் பலவுமானவை யெல்லாம் அழிவெய்துமாகலின், "மாயையிரண்டும் அநாதி" என்னும் வசனங்களோடு மூரணுமாகலானும், அவை தனித்தனி நோக்குங்கால் ஒவ்வொன்றேயெனிற் குடமுதலியனவும், செங் குடங் கருங்குடம் பசுங்குடம் பெருங்குடஞ் சிறுகுடமெனத் தனித்தனி நோக்குங்கால் ஒவ்வொன்றேயாகலிற் பலவாதல் யாண்டையதெனப்பட்டு வழுவாய்முடியுமாகலானும், பிரபஞ்சத் திற்குப் பரமநிமித்தகாரணம் ஒன்றுயினுற்போலப் பரமமுதற் காரணமும் ஒன்றுதலே பொருத்தமுடைமையானும், வியாபக சுத்தியான் வியாப்பியஞ் சுத்தியாமெனின் வியாபகமாகிய முதல் வனுஞ் சத்தியுஞ் சுத்தமேயாகலின், எக்காலமும் எல்லாப் பொருளுஞ் சுத்தமாதல் வேண்டுமாகலானும், சடவியாபக வியாப்பியங்கட்கே இந்நியமமெனினும், சடமாகிய சுத்தமாயை யின் வியாப்பியமான அசுத்தப்பிரபஞ்சமுஞ் சுத்தப்பிரபஞ்ச மாதல் வேண்டுமாகலின், வியாபகசுத்தியான் வியாப்பியஞ் சுத்தியாமென்றல் பொருந்தாமையானும், இன்பமாத்திரையே பயப்பது சுத்தம், இன்பமுந் துன்பமும் பயப்பது அசுத்தம் எனப் பயத்தல்விசேடத்தான் ஒன்றேயாகலின், ஈண்டு அசுத்த மென்றது சுத்தத்திற்கு மறுதலைப் பொருளன்மையானும், புத்தி குணங்களாகிய ஞானமும் அஞ்ஞானமுமுதலியனபோல மயக்க மின்றியறிவிப்பது சுத்தமாயை, மயக்கியறிவிப்பது அசுத்த மாயையென அறிவித்தல்விசேடத்தான் மாறுகோளின்மை யானும், *"விரிவாய தன்செயலின் வியாபியாய்" என்றுரிய

* சிவப்பிரகாசம், பொது, கo.

சொற்குறிப்பானும், மாயையொன்றே, குன்றிமணி முதலியன போல மலகன்மங்களோடு விரவாத பாகத்திற் சுத்தமும், அவற்றோடு விரவியபாகத்தின் அசுத்தமுமென்று இரண்டு தன்மையுமுடைத்தாய்க், கன்மமொன்றே சுத்தகன்மம் அசுத்த கன்மம் என்று இருவகைப்பட்டவாறுபோலப், பயத்தல்விசேடத் தானும் அறிவித்தல்விசேடத்தானுஞ் சுத்தமாயை அசுத்தமாயை என்று இருவகைப்பட்டுநிற்கும்; இக்கருத்துப்பற்றியன்றே சிவஞானசித்தி சிவப்பிரகாச முதலியவற்றுள் மாயையிரண்டென வகுத்தோதி, ஏகத்தொகை கூறுங்கால் வேறென்னாது ஒன்றாக வைத்தெண்ணி, மாயாகாரியமுந் திரோதமும் உடன்கூட்டி, மலம் மாயை கன்மம் மாயேயம் திரோதமென மலம் ஐந்தென் றொழிந்ததூஉமென்பாருமெனப் பலதிறத்தர் ஆசிரியர். அவற்றுட் பின்னையதே பொருத்தமுடைத்தென்பது இங்ஙனங் கூறியவாற்றான் அறிக.

இன்னுமொருசாரார் முதல்வனுக்கு ஞானசத்தியுங் கிரியா சத்தியுமெனத் தாதான்மியசத்திகள் இரண்டுள. அவற்றுள், ஞானசத்தி பராசத்தியெனவும், கிரியாசத்தி சுத்தமாயை யெனவும் பெயர்பெறும். முதல்வன் ஞானசத்தியால் அறிந்து *"கிரியாசத்தியாற் பிரபஞ்சத்தை இயற்றுவன். இவ்விரண்டும் முதல்வனையின்றி நில்லா. முதல்வனும் அவற்றையின்றி நில்லான். அவற்றுள், ஞானசத்திமாத்திரையாய் நிற்பிற் சிவதத்துவம், கிரியாசத்திமாத்திரையாய் நிற்பிற் சத்திதத்துவம், இரண்டு மொத்து நிற்பிற்சதாசிவதத்துவம், கிரியாசத்திமிக்குநிற்பின் ஈசுரதத்துவம், ஞானசத்தி மிக்குநிற்பிற் சுத்தவித்தையெனப் படும். இக்கருத்தேபற்றியன்றே †"ஞானமே யான போது சிவன்றொழின் ஞான மொக்கி—னீனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறி—னானமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக—மானபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னுமே" என்றோதியதூஉமெனக்கூறுப. சைவாகமங்களெல்லாஞ் சுத்தமாயையைத் தாதான்மியசத்தியன்று, பரிக்கிரகசத்தியென்று ஓதுதலின் அவற்றோடு முரணுதலானும், தாதான்மியசத்தி சித்தாவதன்றிச் சடமாதல் பொருந்தாமையானும், கிரியாசத்தி ஞான

---

*ஞானமிர்தம், நிசு-ம் அகவலில், "மற்றவன்—காரியத் திசைந்த பேரிசைப் பெருவலி—யறிவின் றறிவதை யோத்துப் பிறிவின்—றிருந் தொழி லிலதஃ தருந்தொழில் சிவணலு—மருமறை யகத்து முலகத் தெங்க ணும்—வருமறி சிந்தா மணிகற் பகமிலை—வேண்டுநர் வேண்டிய வாண் டாண் டுதவல்" என்புழிக் கிரியாசத்தியைச் சடமெனக் கூறுதலும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

†சிவஞானசித்தி, முதற்சூத்திரம், சுகி.

சத்தியின் வேறன்மையானும், "ஞானமேயான போது" என்றோதியது இடத்தினிகழ்பொருளாகிய முதல்வனது இலயபோகவதிகாரமென்னும் அவத்தைகளை ஒற்றுமைநயம்பற்றி அவற்றிற் கேதுவாய் இடமாகிய தத்துவங்களின்மேலேற்றிக் கூறியதேயாமாகலின், அதுபற்றியாசங்கையின்மையானும் அது பொருந்காது என மறுக்க.

## சுத்தமாயாகாரியம்

இத்தன்மைத்தாகிய சுத்தமாயையின் காரியஞ் சத்தப் பிரபஞ்சம் அத்தப்பிரபஞ்சமென்று இருவகைப்படும். அவற்றுள், சத்தப்பிரபஞ்சத்தினியல்பு மேலே தொகுத்துக்கூறினும். அத்தப் பிரபஞ்சஞ் சுத்ததத்துவமுங் கலையுமென்று இருவகைத்து.

அவற்றுள், சுத்ததத்துவம் சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தையென்று ஐந்துவகைப்படும். இவை தோன்றுமாறு முறையே கூறுதும்:—

## சிவதத்துவம்

சுத்தமாயை மகாசங்காரகாலத்துத் தனது காரியங்களெல்லாம் ஒடுங்கிக் காரணமாத்திரையாய் நின்றவழி, முதல்வனுந் தனது சத்திவியாபாரங்களை யொழித்துப் பசுப்பின்றித் தானேயாய் நிற்பனன்றே; அத்தன்மையனுகிய முதல்வன் அத்தன்மைத்தாகிய சுத்தமாயை மீளக் காரியப்படுதற்கு யோக்கியமாம்படி தன்னினின்றும் வெளிப்பட்ட ஞானசத்திமாத்திரையானே அதனை நோக்கிநிற்பன். அங்ஙனம் நோக்கிநின்ற வழிச் சுத்தமாயையிற் கலக்குண்டபாகம், ஞானமாத்திரையாய் நின்ற சிவனுல் அதிட்டிக்கப்படுதலிற் சிவதத்துவமென்றும், இலயித்தமாத்திரையாய் நிற்றலின் இலயதத்துவமென்றும், வடிவமின்மையின் நிட்களதத்துவமென்றும், காரியப்படுதற்கு யோக்கியமாகலிற் சத்திமானென்றும், நால்வகை வாக்குக்களிற் சூக்குமைவாக்காகிய நாதத்திற்குப் பற்றுக்கோடாகலின் நாததத்துவமென்றும் பெயர்பெற்று நிற்கும். அதனையதிட்டிக்கும் முதல்வனும் இவ்வைவகைப் பெயருமுற்று நிற்பன்.

சுத்தமாயையின் மூந்தியவிருத்தியாகிய இச்சிவதத்துவம் முதல்வனது ஞானசத்திக்கும், அதன்பேதமாகிய *இந்திகை முதலிய பத்துக் கலைகட்கும், காமிகமுதலிய பேதந்தோன்றுது

* இந்திகைமுதலிய கலைகள் பத்தாவன:-இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருஷ்டை என்பனவாம்.

சூக்குமை வாக்குரூபமாய் நிற்குஞ் சிவாகமத்திற்கும், சிவதத்துவ புவனத்தை விரும்பிச் சிவதீக்கைபெற்று நாதமூர்த்தியை வழிபட்டு அதிகாரமலவாசனையுநீங்கி முத்தராய்ச் சூக்குமலயவாசனை மாத்திரமுடைய ஆன்மாக்களுக்கும், ஆண்டுள்ள புவனபோகங் கட்கும் இடமாம் என்றுணர்க.

## சத்திதத்துவம்

இனி, அங்ஙனம் ஞானசத்தியாற் கலக்குண்டபாகத்திற் சிவதத்துவமென விருத்திப்பட்டுக் காரியப்படுதற்கு யோக்கிய மாய்நின்ற சுத்தமாயை காரியப்படுமாறு, சூக்குமலயவவத்தையி னின்ற முதல்வனது கிரியாசத்தி வெளிப்பட்டுப் பொதுமையிற் சங்கற்பித்தவழிச், சுத்தமாயை காரியப்படுவதாய்நின்ற இரண் டாம்விருத்தி, சத்தியென்றுரைக்கப்படுஞ் சிவனால் அதிட்டிக்கப் படுதலிற் சத்திதத்துவமென்றும், சிவதத்துவத்தினியல்பை நோக்கத் தூலமாகலின் தூலயதத்துவமென்றும், தூலநிட்கள தத்துவமென்றும், பைசந்தியென்னும் வாக்கிற்குப் பற்றுக் கோடாகலின் விந்துதத்துவமென்றும் பெயர்பெற்று நிற்கும். அதனை அதிட்டிக்கும் முதல்வனும் அப்பெயர் பெற்று நிற்பன்.

இது முதல்வனது கிரியாசத்திக்கும், அதன் பேதமாகிய நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும், பைசந்தி ரூபமாய்நிற்குஞ் சிவாகமங்கட்கும், விந்துதத்துவ புவனத்தை விரும்பித் தீக்கை உற்று விந்துமூர்த்தியை வழிபட்டு மலபந்தநீங்கித் தூலய வாசனை மாத்திரமுடைய முத்தர்க்கும், அவர்க்குரிய புவன போகங்கட்கும் இடமாம் என்றுணர்க.

## சதாசிவதத்துவம்

இனி, அங்ஙனம் காரியப்படுவதாய்ச் சத்திதத்துவ மென விருத்திப்பட்டுநின்ற சுத்தமாயையைக் காரியப்படுத்துமாறெல் லாம் அங்ஙனந் தூலயவவத்தையினின்று பொதுவகையாற் சங்கற்பித்த முதல்வன் பின்னர் போகவவத்தையினின்று தனது ஞானசத்தியாற் சிறப்புவகையாலேக்கிக் கிரியாசத்தியாற் சிறப்பு வகையாற் சங்கற்பித்தவழிக், காரியங்களைத் தோற்றுவித்தற்கு உன்முகியாய்நின்ற சுத்த மாயையின் மூன்றும்விருத்தி சதாசிவ மெனப் பெயர்பெற்ற சிவனால் அதிட்டிக்கப்படுதலிற் சதாசிவ தத்துவ மென்றும், உன்முகமாய் நிற்றலின் உத்தியுத்ததத்துவ மென்றும், போகமென்னும் அவத்தையுடைமையிற் போக தத்துவமென்றும், சதாசிவமூர்த்தி சத்திகலையுண்மையாற் சகள மாதலும் மாயாகலை யின்மையான் நிட்கள மாதலுமுடைமை

யானும் பிரவிருத்தி நிவிர்த்தி யிரண்டற்கும் பொதுவாகலானுஞ் சகளநிட்கள தத்துவமென்றுந் தன்னேயதிட்டிக்கும் முதல் வனுக்குரிய பெயரேத்தும் பெற்றுநிற்கும்.

இது சதாசிவனுக்குஞ் சதாசிவமூர்த்திக்கு மூடிமுதலிய வுறுப்புகளாகிய பஞ்சசத்திகட்கும், அவற்றின் பேதமாகிய * சகினியாதி மூப்பத்தெட்டுக்கலேகட்கும், * ஆரணி சனனி முதலிய சத்திகட்கும், மத்திமைவாக்குருபமாய்நின்ற சிவாக மத்திற்கும், அச்சிவாகமங் காமிகமுதல் வாதுளமீறுக இருபத் தெட்டாய்ப் பாகுபடுதற்குக் காரணமான பிரணவர் முதலி யோர்க்கும், சுத்தசாமீப்பிய முதலிய முத்திபதங்களிற் போக வாசனேயுடைய அணுசதாசிவர் முதலியோர்களுக்கும், அவர் கருகரணபுவன போகங்கட்கும், இடமாம் என்றுணர்க.

## ஈசுரதத்துவம்

இனி, உன்முகியாய்நின்ற சுத்தமாயையிற் சூக்குமமாய்க் காரியந்தோன்றுதற்கு அங்ஙனம் உத்தியுத்தனாய்நின்ற முதல் வன் அதிகாரவவத்தையினின்று கிரியாசத்தியை மிக்குச்செலுத் திப் பிரவிருத்தி செய்தவழிச், சூக்குமமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் காலாம்விருத்தி ஈசுரனுய்நின்ற சிவனுல் அதிட்டிக்கப்படுதலின் ஈசுரதத்துவமென்றும், சூக்குமவதிகார தத்துவமென்றும், சூக்குமப்பிரவிருத்தி தத்துவமென்றுந், சூக்கும சகள தத்துவ மென்றும் தன்னே அதிட்டிக்கும் முதல் வனுக்குரிய பெயரேத்தும் பெற்றுநிற்கும்.

இஃது ஈசுரனுக்கும் சூக்குமவகரியுருவாய்நின்ற சிவா கமங்கட்கும் அதிகாரமலவாசனேயுடையவராய் அசுத்தமாயை யைக் காரியப்படுத்தும் அநந்ததேவர்முதலிய வித்தியேசுரர் எண்மர்க்கும், அவரைவழிபட்டு அப்பதத்தைப் பெற்ற உருத்தி ரர்கட்கும், அவர் கருகரணமுதலியற்றிற்கும் இடமாம் என் றுணர்க.

## சுத்தவித்தியாதத்துவம்

இனி, அங்ஙனம் நின்ற சுத்தமாயையிற் மூலகாரியந் தோன்றுதற்கு அம்முதல்வனுந் தூலவதிகாரவவத்தையினின்று ஞானசத்தியை மிக்குச்செலுத்திப் பிரவிருத்திசெய்தவழித், தூலமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் ஐந்தாம்விருத்தி, வித்தைக்கேதுவாகிய ஈசுரனுய்நின்ற சிவனுல் அதிட்டிக்கப் படுதலிற் சுத்தவித்தியாதத்துவமென்றும், தூலஈசுரதத்துவ

* இவற்றை இச்சூத்திரத்து ஈான்காமதிகரணத்துக் காண்க.

மென்றும், தூலவதிகாரதத்துவமென்றும், தூலப்பிரவிருத்தி தத்துவமென்றும், தூலசகளதத்துவமென்றுந், தன்னை அதிட்டிக்கும் முதல்வனுக்குரிய பெயரானேத்தும் பெற்றுநிற்கும்.

இது தூலமாய்நின்ற ஈசுரனுக்கும், தூலவைகரிரூபமாய் நின்ற சிவாகமமுதலிய சாத்திரங்கட்கும், ஏழுகோடி மந்திரங் கட்கும், நந்திமுதலிய கணங்கட்கும், வாமைமுதலிய ஒன்பது சத்திகட்கும், முத்திபெற்று மலவாசனை மாத்திரமுடைய வராய்க் கீழுள்ள உருத்திரன் மால் அயன் இந்திரன் முதலிய யோரைத் தொழிற்படுத்துவோராகிய உருத்திரன், மால், அயன், இந்திரன்முதலியோர்க்கும், அவர் தாதிகரணதிகட்கும் இடமாம் என்றுணர்க.

இவையைந்துஞ் சுத்தமாயையின் விருத்தியாய்த் தம்மைய திட்டிக்கும் முதல்வனுக்குரிய பெயர்களையுடையவாய் முறையே பத்தும், ஐந்தும், ஒன்றும், எட்டும், ஒன்பதுமாகிய புவனங்களை உடையவாய் முதல்வனுக்கு இலயம் போகம் அதிகாரமென் னும் அவத்தைக்கிடமாதற் பொருட்டும், சிவதீக்கையாற் பசுத் துவநீங்கி வாசனைமலமாத்திரமுடையராய் இலயிகள் போகிகள் அதிகாரிகளெனநிற்கும் ஆன்மாக்கள் விசித்திரமாய்ச் சுத்த மாய் இன்பமயமாகிய போகங்களைத் தாந்தாம் இச்சித்தவாறே அநுபவித்தற்பொருட்டும் உளவாயினவென்க.

அற்றேல், ஆண்டுப் போகநுகர்தற்குக் காலமுதலிய தத்து வங்களின்மையின், அவை போக்கியங்களாமாறு எங்ஙன மெனின்,—அற்றன்று ; அசுத்தாத்துவாவிற்போலச் சுத்தாத் துவாவினுங் காலமுதலியதத்துவங்கள் அனேத்தும் உள. அவை சுத்தமாயாகாரியமாகலின், அசுத்தமாயாகாரியம்போல அசுத் தமாதலின்றிச் சுத்தமாயுள்ளன, ஆகலான் ஆண்டும் போக நுகர்ச்சிக்கு இழுக்கின்மையறிக. இது பௌட்கரத்திற் காண்க.

சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தையென்னும் இவையைந்தும் *இலயம் போகம் அதிகாரமென மூன்றாய் அடங்குதல்பற்றிச் சுத்ததத்துவம் மூன்றென்றும், சிலவற்றிற் சிவஞ் சத்தி சதாசிவம் மூன்றுஞ் சிவனுலகிட்டிக்கப்படுகலின் ஒன்றாகவைத்து, ஈசுரமுஞ் சுத்தவித்தையும் அநந்ததேவர் முதலியோரான் அதிட்டிக்கப்படுவனவென வேறாவைத் தெண்ணி மூன்றென்றும், அதிற் சிலவற்றின் ஈசுரமுஞ் சுத்த வித்தையுஞ் சிவனேவல் வழிநிற்போரான் அதிட்டிக்கப்படுந்

* இது, சிவாக்கிரபாடியத்துங் காண்க ; (இரண்டாஞ் சூத்திரம், உ0சு-ம் பக்கம்.)

தன்மையான் ஒன்றெனவைத்தெண்ணி நான்கென்றும், சிலவற் றிற் சத்திதத்துவம் சிவதத்துவத்தின் வேறன்மையான் ஒன் றெனவைத்தெண்ணி நான்கென்றும் கூறப்படும். வகையான் அங்ஙனங் கூறினும் விரியான் ஐந்தென்றலே அவற்றிற்கெல் லாங் கருத்தாகலின், மாறுகோளின்மை உணர்க.

இக்கருத்தேபற்றிச் சிலவாகமங்களிற் சிவஞ் சத்தி சதாசிவ மென்னும் மூன்று தத்துவமுமே முதல்வனது இலயபோக வதிகாரங்கட்கு முறையே இடமாமென்றும், ஏனைய ஈசுரமுஞ் சுத்தவித்தையும் விஞ்ஞானகலர் பிரளயாகலரிற் பசுத்துவநீங்கி முத்தராய் அதிகாரமலவாசனை மாத்திரமுடைமையான் முதல் வன் ஏவல்வழிநின்று ஐந்தொழில் நடாத்துவோராகிய அநந்த தேவர் முதலியோர்க்கே இடமென்றுங் கூறுமெனக்கொள்க.

சிவப்பிரகாச முதலியவற்றிற் சிவதத்துவத்திற் சத்திதத் துவமும், சத்திதத்துவத்திற் சதாசிவதத்துவமும், சதாசிவதத் துவத்தின் ஈசுரதத்துவமும், ஈசுரதத்துவத்திற் சுத்தவித்தை யுந் தோன்றுமென்றது அவ்விருத்திரூபமாய்நின்ற சுத்தமாயை யிற் றோன்றுமென்னுங் கருத்தாகலின், முரணுமை அறிக.

அற்றேல், இங்ஙனந்தோன்றிய சுத்தப்பிரபஞ்சங் காரணத் தின் சமூகமோ? ஆரம்பமோ? விவர்த்தனமோ? விருத் தியோ? பரிணமமோ? எனின், கூறுதும் :—எட்குப்பை கவரி மயிர்ச்சாமரம்போலக் காரணத்தின் சமூகமே காரியமெனப் புத்தரிலொருசாராருஞ் சமணருங் கூறுஞ் சமூகவாதமும் நூலானுகிய ஆடைபோல இவ்விரண்டு மும்மூன்று முதலிய வாக ஆரம்பிக்கப்பட்டுக் காரியமாமெனத் தார்க்கிகர் சொல் லும் ஆரம்பவாதமும் ஈண்டைக்கேலா; ஈண்டுக் காரணம்பல அன்மையானென்க. அல்லதூஉம், பாலானுகிய தயிர்முதலிய வற்றின்கட் சமூகவாதமும் ஆரம்பவாதமுஞ் செல்லாமையிற் சமூகவாதமும் ஆரம்பவாதமும் சிலவற்றிற்கன்றி யாண்டுஞ் செல்லாமை அறிக.

இனிப், பேய்த்தேரின் நீர் தோன்றுதலும், கயிற்றின் அரவுதோன்றுதலும்போலக் காரணத்தின் விவர்த்தனமே காரியமாய்த் தோன்றுமென்னும் மாயாவாதஞ் சூனியமாய் முடியுமென்றொழிக.

இனிப், பாலானுகிய தயிர்போலக் காரணத்தின் பரிணம மெனின்,—மோரோடுவிரவிய பால்போல மலகன்மங்களோடு விரவிய அசுத்தமாயையே பரிணமமாதற்குரித்தன்றி, அவற்

றேடு விரவாத சுத்தமாயை பரிணமமாதற் கேலாமையின், படங்குடிலானுற்போலுஞ் சுத்தமாயையின் விருத்தியே சுத்தப் பிரபஞ்சமென் றுணர்க.

விருத்தியாவது சூக்குமபரிணமமென்பாரும் உளர். ஏனைய அசுத்தமாயையின் காரிய மெல்லாம் பரிணமமேயெனக் கொள்க.

### பஞ்ச கலைகள்

இனிப், பஞ்சகலைகளாமாறு :—ஆன்மாக்களைப் பந்தத்தினின்றும் நிவிர்த்திசெய்யுஞ் சிவசத்தி நிவிர்த்தியெனப் பெயர் பெறும். அச்சத்திக்கிடமாகிய சுத்தமாயையின் விருத்தியும் நிவிர்த்தியெனப் பெயர்பெறும். மேலும் இவ்வாறே கண்டு கொள்க.

பந்தத்தினின்றும் நிவிர்த்திபெற்ற ஆன்மாக்கள் மீளநோக் காதவண்ணம் பிரதிட்டைசெய்யுஞ் சிவசத்தி பிரதிட்டையெனப் பெயர்பெறும்.

அங்ஙனம் நிலைபெற்ற ஆன்மாக்கட்கு அநுமானஞானம் ஆகமஞானமன்றி அநுபவஞானத்தைப் பயப்பிக்குஞ் சிவசத்தி வித்தையெனப் பெயர்பெறும்.

அங்ஙனம் அநுபவஞானம்பெற்ற ஆன்மாக்கட்கு விருப்பு வெறுப்புச்சங்கற்பமுதலிய எல்லாத்துன்பங்களுஞ் சாந்தமாகச் செய்யும் சிவசத்தி சாந்தியெனப் பெயர்பெறும்.

அங்ஙனஞ் சாந்தமாய் நின்றதும் ஒழியச்செய்யுஞ் சிவசத்தி சாந்தியதீதையெனப் பெயர்பெறும்.

இங்ஙனஞ் சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டான் நிவிர்த்திமுதலிய பெயர்பெற்று ஐவகைப்பட்டவழி, அவற்றிற்கு முதல்வனும் நிவிர்த்திபதி, பிரதிட்டாபதி, வித்தியாபதி, சாந்திபதி, சாந்தியதீதபதியெனப் பெயர்பெற்று ஐவகைப்பட்டு நிற்பன்.

அவற்றிற்கிடமாகிய சுத்தமாயாவிருத்தியும் ஐவகைப்பட்டுத் தன்னியதிட்டிக்குஞ் சத்திகளின் பெயர்பெற்று நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதையென நின்று தத்துவமுதலிய ஐவகை அத்துவாக்களையும் உள்ளடக்கி அவற்றிற் காதாரமாய் நிற்கும்.

இத்தன்மையவாகிய நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளும், சத்திதத்துவத்திற் புவனரூபமாகிய நிவிர்த்திமுதலிய பஞ்சகலை

களும் வேறுயினும் பெயரொற்றுமைபற்றி ஒன்றுகவைத் தோதுப.

பிருதிவிதத்துவ முதலியவற்றின் வைகுவோர் பஞ்சகலை களைப் பஞ்சபூதரூபமாகவைத்துத் தியானஞ்செய்யின் அவை அவ்வப்பயன்களைப் பயப்பிக்குமென்று உணர்க.

இங்ஙனஞ் சுத்தமாயையினியல்பும் அவற்றின் காரியங் களும் ஒருவாற்றாற் கூறிப்போந்தாம்.

### அசுத்தமாயை

இனி, அசுத்தமாயையாவது மெய்ப்பொருளாய், நித்த மாய்ச், சடமாய், ஒன்றுய்க், கலைமுதல் நிலமீறுகிய அசுத்தப்பிர பஞ்சத்திற்குக் காரணமாய், அவற்றின் வியாபகமாய், வினைக் குப் பற்றுக்கோடாய், ஆணவமலம்போலச் சிறப்புவகையா னன்றிப் பொதுவகையான் வினையிற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவதாய், அருவமாய் நிற்குமென்பது மேற்கூறியவாறு பற்றிக் கண்டுகொள்க.

அற்றேல், காரணத்தினில்லது காரியத்தின் உண்டாகா தாகலான், அருவமாகிய மாயையின் உருவமாகிய பிரபஞ்சந் தோன்றுமாறு என்னையெனின்,—அறியாது கடாயினுய். காரி யாவத்தையினுளதாகிய உருவங் காரணத்திற்றோன்றுது சூக்கும மாய் நிற்றல்பற்றியே மாயை அருவமென்றோதப்பட்டதாக லின், அருவமும் உருவமுந் தம்முண் மாறுகோளன்மையான், அது கடாவன்றென்க. காரியாவத்தையின் உருவமுடையதற் கன்றி அருவமென்பது ஏலாதாகலினன்றே பதிமுதலிய பொரு ளின் இயல்புகூறுமிடத்து அவற்றை அருவமென்னுதோதூஉம், *"நிலவுமரு வுருவின்றி" எனவும், †"அசித்தரு வியாப கம் போல் வியாபக மருவமின்றுய்" எனவுங் கூறியதூஉமென்க.

சிவஞானசித்தியின் ‡"அருவுரு வீனு தாகும்" என்றது மாயாவாதிகள் கூறும் ஆசங்கையாகலின், அதனை அவர் மதமே கொண்டு மறுப்பார், ‡"வான்வளி யாதி பூதந்—கருவது" என விடுத்தாரென உணர்க.

இவ் வசுத்தமாயையின் காரியங்களாமாறு கூறுதும் :—

---

* சிவப்பிரகாசம், பொது, க.

† சிவஞானசித்தி, நான்காஞ் சூத்திரம், உ0.

‡ சிவஞானசித்தி, முதற்சூத்திரம், உஅ.

### அசுத்தமாயாதாரியம்

அநந்ததேவர் சத்திகலக்கக் கலக்குண்ட * அசுத்தமாயா தத்துவத்தினின்றும் முறையே காலமும், நியதியும், கலையும், கலையின்வித்தையும், வித்தையின் அராகமுந் தோன்றும்.

### காலதத்துவம்

அவற்றுள், கலைவித்தை அராகங்களால் தொழிலும் அறிவும் இச்சையும் விளங்கிப் போகதிருகர்ச்சிக்கட் சென்ற ஆன்மாக்களுக்குக் கணம் இலவம் துடி என்றற்றொடக்கத்தாற் பல வேறுவகைப்பட்டுப் போகவரையறைப் படுத்துவது காலதத்துவம்.

அற்றேல், கலைமுதலியவற்றிற்கெல்லாம் முன்னரே தோன்றிய காலதத்துவம் கலைமுதலியவற்றின் உபகாரம் நிகழுங்காறும் வறிதேநின்று பின்னுகவுபகரித்தல் பொருந்தாதெனின்,—அற்றன்று; கலைமுதலிய மூன்றும் விஞ்ஞைமுதலாகிய ஆன்மாக்களுக்குத் தொழிலறிவிச்சைகளை விளக்கி நேரே உபகரிப்பன. காலமும் நியதியும் அவ்வான்மாக்களுக்கு விஞ்ஞையை வரையறுப்பதும் நியமிப்பதுமாகிய முகத்தான் உபகரிப்பன; ஆகலான், ஆன்மாக்களுக்குத் தொழிலறிவிச்சை நிகழ்ந்த பின்னன்றிக் கன்மத்தோடு இயைபு கூடாமையின் காலநியதிகளின் உபகாரம் அவற்றின் பின்னர்த்தாயிற்றென்க.

அற்றேல், காலநியதிகள் கலை வித்தை யராகங்களின் பின்னர்த்தோன்றுமென்றலே பொருத்தமுடைத்து. அவற்றிற்கு முன்னர்த்தோன்றுமென்றற்குப் பிரமாணமில்லையாலோவெனின்,—அற்றன்று; காரியமாத்திரைக்குக் காலங் காரணமாகலின், கலைமுதலியன தோன்றுதற்குங் காலம் வேண்டுதலான் என்க.

அற்றேல், காலமுங் காரியமாகலின், அது தோன்றுதற்கு வேறோர்காலம் வேண்டுமாலெனின்,—அஃதொக்கும். சுத்தப் பிரபஞ்சத்திற் சுத்தகாலமுண்டென்பது மேலே கூறிப் போந்தாமாகலின், அதுவே அசுத்தகாலந் தோன்றுதற்கும், அநந்ததேவர் அசுத்தமாயையைக் கலக்குதற்கும் அதிகாரஞ் செய்தற்குங் காரணமெனக் கொள்க.

அற்றேல், அதுவே அமையும். அசுத்தகாலமொன்று கோடன் மிகையாம் பிறவெனின்,-ஆகாது; அசுத்தமாயையின்

---

* அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமே மாயாதத்துவமென வித்தியாதத்துவங்கள் ஏழனுள் ஒன்றாகவைத் தெண்ணப்படுவ தென்க.

காரியத்திற்குச் சுத்த காலங் காரணமாகாமையின், அசுத்த காலம் ஒருதலையான் வேண்டுமாகலானென்க. அங்ஙனமாயின், அசுத்தகாலமும் அசுத்தமாயையின் காரியமாகலின், அதற்குச் சுத்தகாலங் காரணமாதல் பொருந்தாதெனின்,—அற்றன்று; காலமென்னுஞ் சாதியொருமையான் அசுத்தகாலமாத்திரைக்குச் சுத்தகாலந் துணைக்காரணமாதல் பொருந்துமென்க.

அற்றேல், அஃதங்ஙனமாக; சுத்தகாலத்திற்கு மேலுள்ள சுத்தவித்தை யீறுகிய தத்துவங்களின் றோற்றத்திற்கும், பெரும் பிரளயத்தின் முதல்வன் சூக்குமமாகிய ஐந்தொழில் செய்வ னென்பது மேற்கூறினமையின் அக்காரியப்பாட்டிற்குங் கால மின்மையின், காரியமாத்திரைக்குக் காலந் துணைக்காரண மென்றல் பொருந்தாதாலெனின்,—அற்றன்று; காலவரையறை யின் அகப்பட்ட அநந்ததேவர் முதலியோர் நம்மனோராற் செய் யப்படுங் காரியமாத்திரைக்கே காலங் காரணமாதல் வேண்டுவ தன்றிக், காலவரையறையைக் கடந்து காலத்தினையுந் தோற்றித் தொழிற்படுத்துங் காலகாலனுகிய முதல்வனுற் செய்யப்படுங் காரியத்திற்குக் காலம் வேண்டாமையானும், காலவரையறை யைக் கடந்த முதல்வன்றொழிற்பாட்டிற்குக் காலத்தாற் செய் யக்கடவதொன்று இன்மையானும் ஆண்டு அம்முதல்வனே கலையித்திரியென்னுஞ் சத்தியொடு கூடிக் காலத்தானமாய் நிற்ப னுகலின், ஈண்டுக் காரியமாத்திரைக்கே காலந் துணைக்காரண மெனக் கோடலானென்க. இக் கருத்தேபற்றிச், * "சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவ மாகு—நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமையாலே"—வைத்திலர் முற்பிற்பாடு வருவித் தார் கருமத்தாலே" என்றார் வழிநூலாசிரியரும். இஃதறியா தார் "நித்தமென் றுரைப்பர்" என்றமையான், ஈண்டுச் சுத்த தத்துவமென்றது சிவசத்திபேதமாகிய இலயமுதலியவற்றைப் போலுமென மயங்கித் தமக்கு வேண்டியவாறே உரைப்ப.

இனி, நியதிதத்துவத்தின் உபகாரமுங் கலைமுதலியவற்றின் றொழிற்பாட்டிற்குப் பின்னர்த்தாயினுங் கலைமுதலியனை தொழி லறிவிச்சைகளை விளக்கீடாக விளக்குதற்கும் நியதிவேண்டு மாகலின், காலத்தின் பின்னர் கலைக்குமுன்னுகவே நியதி தத்துவந் தோன்றியவாறென்று அறிக. தோற்ற முறைமை பற்றிக் காலம் முன்னுயினுந் தொழிற்பாட்டு முறைமைபற்றிக் கலை முன்னுகலின் †"கலையாதி மண்ணந்தம்" என வழங்கப் படும். இவ்வுண்மையுணராதார் "கலையாதி மண்ணந்தம்" என

---

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம், சுசு.

† இந்நூல், மூன்றுஞ் சூத்திரம், எ-ம் அதி. உதாரணம்.

வழங்குதல்பற்றிக் கலையே முந்தித் தோன்றுமென மயங்கிக் கூறுப.

அற்றேல், தோற்றமுறைமைபற்றிக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்று எடுத்துக்கோடலும், தொழிற்பாட்டு முறைமைபற்றிக் கலை வித்தை, அராகம், காலம், நியதி என்று எடுத்துக்கோடலும் பொருந்தும். சிவப்பிரகாசத்தின், *"அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை யராகமிவை" எனக் கலையின் பின்னுகக் காலநியதிகளை வைத்தவாறு என்னையெனின், செய்யுளாகலின் முறைபிறழவைத்தார் என்பார் ஒரு சாரார். அற்றன்று; "கலாதத்துவங் காலமும் நியதியுந் தனக்குத் துணைக்கருவியாகக்கொண்டு முதற்காரணமாய் நின்று வித்தை அராகமுதலிய தத்துவங்களெல்லாவற்றையுந் தன்பானின்றுந் தோற்றுவிக்கும்" எனத் தத்துவப்பிரகாசமென்னும் வடநூலுள் ஓதுதலின், அஃதுணர்ந்து கோடற்கு அம்முறை வைத்தாரென்க. மிருகேந்திரத்திற் கூறியதூஉம் இது பற்றியென்று உணர்க. சிவப்பிரகாசத்தில், *"வித்தை யராகங் களும் மாயைதனி லாகும்" என்றது பரம்பரையான் மாயை முதற்காரணமாதல்பற்றியென்று உணர்த்துவார், *"உடன்" என்று ஒடுக்கொடுத்துப் பிரித்தோதினரென்பது. சிவஞானசித்தியில், †"விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை—மூந்திடு மராக மாதி முக்குண மாதி மூலந்—தந்திடும்" என்றதூஉம், விந்து மோகினி மூலப்பகுதிகள், சூக்குமகலாதி முக்குண மொழித் தொழிந்தவற்றிற்கும் பரம்பரையான் முதற்காரண மாதல்பற்றியென்று உணர்க. ஆண்டு †"அராக மாதி" என்றது "வைகரியாதி" என்றதுபோலச் சங்காரமுறைமைபற்றி; இங்ஙனமாகலின், யாண்டும் முரணுமையறிக.

அற்றேல், அஃதங்ஙனமாக: புத்தர்முதலியோர் காலமென் றொருபொருள் இல்லையென்பராகலின் அதனுண்மைக்குப் பிரமாணம் யாதெனின், கூறுதும்:—இப்பொழுது உற்பத்தியாகாநின்ற குடம் இதற்கு முன்னுங் குயவன் றிகிரி முதலிய காரணங்களெல்லாம் ஒருங்கு தொக்குழியும் ஒரு காரணங் கூடாமையின், இதற்குமுன் உற்பத்தியாகாதாயிற் றென்பது பெறுதும்; குயவன் திகிரி மண் முதலிய காரணங்கள் ஒருங்கு தொக்குழியும் உற்பத்தியாகாமையின். யாதொன்று யாவை தொக்குழியும் உற்பத்தியெய்தாது, அஃது அவற்றின் வேறுகிய காரணமொன்று கூடாமையான், உற்பத்தியாகாதாயிற்றென்பது

* சிவப்பிரகாசம், பொது, கசு.

† சிவஞானசித்தி, முதற்சூத்திரம், கக.

பெறப்படும்; நாடா முதலிய எல்லாக்காரணங்களுந் தொக்க வழியும், நூலாதல் நெய்வோனதல் கூடாதவழி, உற்பத்தி யெய்தாத ஆடைபோலும் என்னும் வழியளவையான் ஏனைக்காரணங் களெல்லாந் தொக்கவழியும் இதற்குமுன்னர் குடங்தோன்றுது நிற்பொழுது தோன்றுதற்கு நின்ற காரணம் யாது அது காலமெனத் துணியப்படுமென்க. குடமுதலியன அங்ஙனந் தோன்றுதற்கு வினையே காரணமெனின், அற்றன்று; வினையுங்காலந் துணையாகக்கொண்டன்றி உற்பத்திக் கேதுவாகாது. ஆமெனின் வேள்விசெய்தபொழுதே துறக்க வின்பமுண்டாதல் வேண்டு மென்றெழிக.

அல்லதூஉம், மாந்தளிர்முதலியன இளவேனிற்கால முத லியவற்றினன்றி உற்பத்தியாகாமையும், முல்லைப்பூ முதலியன கார்கால முதலியவற்றினன்றி உற்பத்தியாகாமையும், நசித்த லும் அவ்வக்காலம் வந்துழியன்றி நசியாமையுங் காண்டும். கால மில்லையென்பார்க்கு அவ்வக்காலமின்றியும் அவையவை உற் பத்தியாய் உற்பத்தியான பொழுதே எல்லாப்பொருளும் நாச மெய்தவும் வேண்டும். அங்ஙனங் காணுமையானும், செய்க வினைக்குப் பயன் நீட்டித்துவருதலானும், ஒரு கணத்திற் றோன்றும் ஒருகணத்தி லழியுமென்று வழங்கப்படுதலானும் இன்னோரன்னவற்றிற்குக் காரணமாகிய காலமுண்டென்பது தெற்றெனவுணர்க.

இனித், தார்க்கிகர் முன் பின் என்னும் வழக்கமுண்மை யின், அங்ஙனம் வழங்குதற்குக் காரணம் வேறின்மையான், அவ் வழக்கிற்குக் காரணமாகிய அக்காலமுண்டென்பது துணியப்படு மென்பர். காலம் ஒன்றெனக்கொண்டார்க்கு ஒன்றுகிய காலம் பலவே று வகையான் வழங்கப்படுதல் பொருந்தாமையின், ஞாயிற்றின் செலவோடு கூடிய செயற்கையானே அங்ஙனம் வழங்கப்படுமென்றல் வேண்டும். வேண்டவே, ஞாயிற்றின் செலவே அங்ஙனம் வழங்குதற்குக் காரணமாதல் அமையு மெனப்பட்டுக் காலமுண்டென்பது துணியப்படாதாய் முடியு மாகலின், அது பிரமாணமன்றென்க.

இதனானே காலம்பற்றிய முன் பின் என்னும் வழக்கிற்கு வேறுகிய இடம்பற்றிய முன் பின் என்னும் வழக்கிற்கு வேறு காரணமின்மையின் அதற்குக் காரணமாய்த் திக்கென்றொரு தத்துவம் உண்டென்பதூஉம் மறுக்கப்பட்டது; நிலம் ஆகாயம் முதலியவற்றின் ஏகதேசமே அங்ஙனம் வழங்குதற்கு ஏதுவாகலான் என்க. ஓரிடத்தானே ஒன்றைநோக்கிப் முன் னெனவும், ஒன்றைநோக்கிப் பின்னெனவும், ஒன்றை நோக்கிக்

கிழக்கெனவும், ஒன்றைநோக்கி மேற்கெனவும், ஒன்றை நோக்கி வடக்கெனவும், ஒன்றை நோக்கித் தெற்கெனவும் வழங்கப்பட்டு பயன்றந்து திக்கெனப் பெயர்பெற்று நிற்கு மாகலின், திக்கென்பது வேறு பொருளன்மை உணர்க.

அற்றேல், காலமும் இவ்வாறேயாய் ஒருகாலந்தானே ஒரு பொருளே நோக்கி இறந்தகாலமும், ஒருபொருளே நோக்கி நிகழ் காலமும், ஒரு பொருளேநோக்கி எதிர்காலமுமென வழங்கப்படு மாகலின், இங்ஙனம் முறைகைப்படுதல்பற்றிக் காலம் பலவென்றல் பொருந்தாதாய் முடியுமாலெனின்,—அங்ஙனம் பலபொரு ளின்கண் ணிகழ்தல்பற்றிக் காலம் பலவாதலில்லையாயினும் ஒரோவொரு பொருளின்கண்ணே மற்றொன்றை நோக்காமையே முக்காலமும் நிகழ்தல்பற்றிப் பலவெனத் துணியப்படுமென்பது முன்னர்க் கூறுமாற்றாற் காண்க.

அற்றேல், அஃதொக்கும். காலம் ஒன்றுய் வியாபகமாய் நித்தமாயுளதென நையாயிகர் முதலியோர் கூறுவராகலின், அதனைமறுத்துப் பலவாய் ஏகதேசமாய் அநித்தமாயுள்ளது காலமென்றது என்னேயெனின், கூறுதும்:—காலம் ஒன்றுயின் நடத்தன் முதலிய தொழில்களும் இறப்பு நிகழ்வு முதலிய வற்றுன் வேறுபடுதலின்றி யொன்றேயாதல் வேண்டும், அவ் வாறன்றி இறப்பு நிகழ்வு முதலியனவாய்நிகழுந் தொழிற் பாகு பாட்டிற்குக் காரணங் காலத்தினது பாகுபாடேயாகலின், காலம் பலவாதல் அறிக.

அற்றேல், நடத்தன் முதலிய தொழில்கள் இறப்பு நிகழ்வு முதலியவாக வேறுபடுதல் அவற்றதியற்கையே; காலவேறுபாடு பற்றிய செயற்கை அன்றென்றுற்படும் இழுக்கென்னே யெனின்,—அற்றன்று; நடத்தற்றொழில் இயற்கையாஞன்றே யாகலின், அது பலவாய் வேறுபடுதல் செயற்கையானன்றி ஆகாதென்க. ஆமெனின், இறப்பு நிகழ்வு முதலிய வழக் கிற்கும், அங்ஙனம் நிகழும் உணர்விற்குங் காரணம் நடத்தன் முதலிய தொழில்களேயென அமையும். அவ்விரண்டற்கும் ஏதுவாதல்பற்றிக் காலமுண்டென்பது துணியப்படாதாய் முடியுமாகலின், காலம் ஒன்றென்பார்க்குங் காலப்பாகுபாடு பற்றியே பொருள்கட்கு இறப்பு நிகழ்வு முதலிய பாகுபா டுள்ளதென்று ஒருதலையாற் கோடல் வேண்டுமென்க.

அற்றேல், காலப்பாகுபாடுபற்றியே தொழிற்கு இறப்பு நிகழ்வுமுதலிய பாகுபாடென்பது ஒக்கும். அங்ஙனமாயினும், காலத்திற்கு இறப்பு முதலிய பாகுபாடு ஞாயிற்றின் செலவு முதலியவற்றுனுகிய செயற்கையேயா மாகலின், இயற்கையாற்

காலம் ஒன்றேயென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; ஞாயிற்றின்செலவு முதலியனவுந் தொழிலின் வேறன்மையான் இறப்பு நிகழ்வுமுதலிய தொழிற்பாகுபாடுகளெல்லாங் காலப்பாகுபாட்டானன்றி நிகழாமையானும், நிகழுமெனின், மேற்கூறிய குற்றமே தலைப்படுமாகலானும் ஞாயிற்றின் செலவு முதலிய தொழிற்பாகுபாட்டிற்குக் காரணங் காலப்பாகுபாடும், காலப்பாகுபாட்டிற்குக் காரணம் ஞாயிற்றின்செலவு முதலிய வற்றின் பாகுபாடுமெனின், ஒன்றனையொன்று பற்றுதலென்னுங்குற்றமாகலானும், ஞாயிற்றின்செலவு முதலியவற்றைக்குறியாது ஒருகுடம்உடைந்தது உடையாநின்றது உடையுமென அறியவும் வழங்கவுங் காண்டுமாகலானும், இங்ஙனம் உணர்தற்கும் வழங்குதற்கும் ஞாயிற்றின்செலவு முதலியன ஏதுவன்மையானும், நாழிகைகழிந்தது; நாள்கழிந்தது; திங்கள்கழிந்தது என்றுணர்தலும் வழங்கலும் ஞாயிற்றின் செலவுமுதலிய வற்றைக் குறித்தன்றி உளவாகாமையும், அங்ஙனம் உணர்தற்கும் வழங்குதற்கும் ஞாயிற்றின்செலவு முதலியனவே ஏதுவாதலுங்காண்டுமாகலானும், நாழிகை நாள் பக்கம் திங்கள் பருவம் அயனம் ஆண்டு என்றற்றொடக்கத்துக் காலப்பாகுபாடுமாத்திரையே ஞாயிற்றின்செலவு முதலியவற்றுனை செயற்கையாவதன்றி, இறப்பு நிகழ்வு எதிர்வு கணம் இலவம் என்றற்றொடக்கத்துக் காலப்பாகுபாடுகள் ஞாயிற்றின்செலவு முதலியவற்றுனைகிய செய்கையல்லவாகலான், இயற்கையான் இறப்பு நிகழ்வு என்றற்றொடக்கத்துப் பலவேறு வகைப்படுங் காலம் ஒன்றுமாறு யாண்டையதென்க.

குடம் உடைந்தது உடையாநின்றது உடையும் என்பன பொருட்பெற்றிபற்றிய வழக்கெனின்,—அது காலமில்லையென்னும் புத்தர் முதலியோர் மதமாகலானும், பொருட்பெற்றியாயின், பெற்றிக்கு நீக்கமின்மையின் மூவகைவழக்கும் ஒருங்கு நிகழ்தல்வேண்டுமாகலானும், மாறுபட்ட பலபெற்றி ஒருபொருட்கு உளவாகாமையானும் அது பொருந்தாதென்றொழிக.

அற்றேல், மாறுபட்ட பலபெற்றி ஒருபொருட்கு உளவாகாவென்ற தென்னை? புத்திதத்துவத்தில், தன்மமும் அதன்மமும் முதலிய மாறுபட்டபாவங்களும், மூலப்பகுதியிற் சாத்துவிகமுதலிய மாறுபட்ட குணங்களும் உளவாமாலெனின்,—அற்றன்று; * தன்மமுதலிய பாவங்கள் ஒன்றற்கொன்று மாறுபட்டனவல்ல. அவையெல்லாம் புத்தியின்

* இவற்றைப் புத்திதத்துவனியல்புரைப்புழிக் காண்க பக்கம் கஅஅ.

காரியமாகிய ஞானவிசேடங்களேயாம். ஆண்டு அஞ்ஞான மென்றது ஞானமின்மையென்னும் பொருட்டன்று; திரிவாகிய ஞானமென்னும் பொருட்டேயாம். சாத்துவிகமுந் தாமதமுந் தம்முள் மாறுபட்டனவல்ல. உள்ளபடியுணர்விப்பது சாத்துவிகம், வேறுபடவுணர்விப்பது தாமதம்; உணர்வித்தல் விசேடமே இரண்டற்குமாகலின், மாறுபாடின்மை உணர்க.

அற்றேல், ஒருகாலத்திற்றானே உடைந்த குடத்தை நோக்கி இறந்தகாலமெனவும், பிறந்தகுடத்தைநோக்கி நிகழ்காலமெனவும், பிறக்கக்கடவதாகிய குடத்தை நோக்கி எதிர்காலமெனவும் வழங்கக் காண்டும். அங்ஙனம் வழங்குதல் பற்றிக் காலந் தம்முள் வேறுகாமையுங் காண்டுமாகலின், இறப்பு நிகழ்வுமுதலிய வேறுபாடேபற்றிக் காலம் பலவென்றல் சாலாதெனின்,—அற்றன்று: ஒருவன்றானே தந்தையை நோக்கி மகனும், மகனைநோக்கித் தந்தையுமாதலும், நெடியானைநோக்கிக் குறியனும், குறியானைநோக்கி நெடியனுமாதலும்போலப், பல வேறுவகைப்பட்ட பொருள்களை நோக்கிப். பலவேறுவகைப்பட வழங்கும் இறப்புமுதலியன மாறுபட்டதன்மைய வல்லவாகலின், அவற்றைநோக்கிக் காலம் ஒன்றேயாயினும், ஒருகுடத்தின் கண்ணவாகிய இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன மாறுபட்டதன்மையவாதல் காட்சிப் புலனுகலின், அவற்றை நோக்கிக் காலம் பலவாதல் சாலுமென்க.

இதனானே இறப்பு நிகழ்வு முதலிய வேறுபாட்டாற் காலம் பலவேறுவகைப்படுமென்பது பெறவே, தம்முட் பலவுமாய்ச் சடமுமாகலின், தோன்றி நின்றழியும் அநித்தமேயென்பதூஉம்; அநித்தப்பொருளாகலின், ஏகதேசமேயென்பதூஉந் தாமேபோதருமென்று உணர்க.

அற்றேல், பதிமுதலியபொருள் நித்தமென்பது வேறோராற்றாற் பெறப்படாமையின், நித்தமான காலத்தைப்பற்றி நிற்றல்பற்றியே நித்தமென்றுணரப்படும். அத்தன்மைத்தாகிய காலம் அநித்தமென்பார்க்கு நித்தப்பொருளென்பது ஒன்றுமின்றாய் முடியுமாலெனின்,—நன்றுசொன்னாய்! காலம் நித்தப்பொருளென்பது எற்றாற்பெற்றாயெனக் கடாயினார்க்கு அதுவும் நித்தகாலத்தைப்பற்றி நிற்றலாற் பெற்றேனென விடுப்பின், அது தன்னைப்பற்றுதல் என்னுங் குற்றமாம். வேறொரு நித்தகாலத்தைப்பற்றி நிற்குமென விடுப்பின், அநவத்தையாய் முடியுமாகலின் நித்தகாலத்தைப்பற்றி நித்தமென்றல் உனக்கே ஏலாமையின், அதுபொருளன்றென்க. மற்றென்னையோ நித்தப்பொருளாமாறெனின்,— காலவரை

அறையின் அகப்படாதுநிற்பதே நித்தப்பொருளெனக்கொள்க. இங்ஙனமாகலாற் காலம் நித்தமாகாமைபற்றி நித்தப்பொருளுண்மைக்கு இழுக்கின்மையும் அறிக.

அஃதங்ஙனமாக; இறந்தகாலமும் எதிர்காலமும் அறிவிற்கு விடயமாயினுற்போல அவையிரண்டற்கும் இடையே நிகழுங் கணப்பொழுது ஒன்றுண்டென்பது அறியவாராமையானும், உண்டெனக்கொள்ளினும் அது நிகழ்ந்தபின் நிகழும் அறிவிற்கு அஃதிறந்தகாலமேயாம் ஆகலானும், நிகழ்கால மொன்று கூட்டிக் காலம் மூன்றென்றல் பொருந்தாதெனின்,—அற்றன்று; சூக்குமநிகழ்காலம் அறிவிற்கு விடயமாகாதாயினும், தூலநிகழ்காலம் அறிவிற்கு விடயமாமாகலின், அதுபற்றி முக்காலமும் உளவெனக் கொள்க.

தூலநிகழ்காலம் யாதெனின், கூறுதும்:—சற்காரியவாதத்தின் முதற்காரணமுங் காரியமும் வேறன்மை மேற் கூறிப் போந்தாமாகலின், இறந்தகாலத்தின் மட்பிண்டவடிவிற்றாயும் எதிர்காலத்தின் ஓட்டுவடிவிற்றாயும் நிற்குங் குடம் அவ்விரண்டுகாலத்திற்கும் இடையேயன்றிப் புனன்முகத்தன் முதலிய காரியத்திற்கு உரித்தாகாமையானும், ஏனையிரண்டு காலத்தினும் மறைந்துநின்று இடைப்பட்டகாலத்திற் குடவடிவம் வெளிப்படக் காண்டலானும், இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையே புனன்முகத்தன்முதலிய காரியத்திற்குரித்தாய்க் குடம் வெளிப்பட்டு நிற்றற்கேதுவாகிய காலம் நிகழ்காலமெனக் கொள்க. இதனாற் போந்தது குடமுதலிய காரியப்பொருள்களினுளவாய மூன்றவத்தையுண்மை காணப்படுதலான், அவற்றிற்கேதுவாகிய காலம் மூன்றுளவென்பது பெறப்படுமென்று ஓதியவாறென்க. இங்ஙனம் காலதத்துவத்தினியல்பு ஒருவகையாற் றெருட்டுக் கூறப்பட்டது

## நியதிதத்துவம்

இனி, கலைமுதலிய மூன்றனுந் தொழில் அறிவு இச்சை விளங்கிப் போகதுகர்ச்சிக்கட் செல்லும் ஆன்மாக்கள் உயர்ந்த போகத்தின் விழைவும், இழிந்தபோகத்தின் வெறுப்பும் உடையரன்றே; அதனாற் பிறரானீட்டப்படும் நல்வினைப்பயனைக் கவரவும், தம்மாலீட்டப்படுந் தீவினைப்பயனை நீக்கவும் எண்ணுதலுடைமையின், அங்ஙனமாகவொட்டாது அவரவரானீட்டப்படும் வினையின்பயனை அவரவரே நுகருமாறு அரசராணைபோல் நியமித்து நிறுத்துவது நியதிதத்துவமென்க. நியதி, பால், ஊழ், தெய்வம், விதியென்பன ஒருபொருட்கிளவி.

அற்றேல், புதல்வன் செய்த தென்புலத்தோர்கடன் முத லிய வினையின்பயன் தந்தையைச்சாரவும், தந்தைசெய்த சாத கன்மமுதலிய வினையின்பயன் புதல்வனைச்சாரவும், மள்ளர் செய் யும் உழவுமுதலிய வினையின்பயன் நிலமுடையானைச்சாரவும், இருத்துவிக்குக்கள்செய்யும் வேள்வியின் பயன் இயமானனைச் சாரவுங் காண்டுமாகலின், அவரவர்செய்த வினையின்பயன் அவ ரவரே நுகர்வரென்னும் நியமமே காணுமையின், அதுபற்றி நியதித்துவம் உண்டென்றல் சாலாதாமெனின்,—அற்றன்று; புதல்வனுக்குந் தந்தைக்கும் இயைபுண்மையின், தந்தையை நோக்கிப் புதல்வன்செய்யும் வினையின்பயன் தந்தைக்கும், புதல் வனைநோக்கித் தந்தைசெய்யும் வினையின்பயன் புதல்வனுக்கு மாயின. மள்ளர் ஏவல்வழிநின்று வினைசெய்து தந்தொழிற் கேய்ந்த கூலிபெற்றுழிதலின் உழவுமுதலிய வினையான்வரும் பயன் ஏவும் வினைமுதலாகிய நிலமுடையானுக்கும், இருத்துவிக் குக்களும் ஏவல்வழிநின்று வினைசெய்து தந்தொழிற்குத்தக்க தக்கணைபெற்றுழிதலின், வேள்விவினையான் வரும்பயன் ஏவும் வினைமுதலாகிய இயமானனுக்குமாயின; ஆகலான், அவ்வாறு யாதானுமோர் இயைபின்றி ஒருவர்செய்த வினைப் பயன் ஒருவர்க்காதலில்லை; ஆகலான், நியமத்திற்கிழுக்கின் மையின், அதுபற்றி நியதித்துவம் உண்டெனக்கொள்க.

ஒருபாற்கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அர சனுக்கியல்வழி, எளியோர்பொருளை வலியோர் கவர்ந்து கொள் வதுபோல நியதித்துவமில்வழி, ஒருவர்செய்த வினைப்பயன் மற்றொருவர் கவர்வதாய் முடியுமாகலின், நியதித்துவமுண் டென்பது தெற்றெனவுணர்க.

அற்றேல், அங்ஙனம் நியமித்தற்கு இருவினையே அமையும் நியதித்துவம் வேண்டாவெனின்,—அற்றன்று; இருவினை போகத்தைப் பயத்தன்மாத்திரையேயன்றி, அப்போகங் கருத்தாவைச் சென்றடைவிக்குமாறு செய்யமாட்டா. அடை விக்குமெனின், ஒருகருவியும் வேண்டாது உடம்பு முதலியன வும் வேண்டாது இருவினைதாமே போகதுகர்வித்தல் வேண்டும். அவையெல்லாம் இருவினைகள் போகதுகர்வித்தற்குத் துணைக் கருவியாதல் வேண்டுமெனின்,—அவ்வாறே நியதித்துவமுந் துணைக்கருவியாதல் வேண்டுமாகலான் இருவினைதாமே நியமிக் கமாட்டாமை யறிக.

அற்றேல், முதல்வனதாணையாகிய சத்தியே போகத்தை நியமித்து நிறுத்துவதாகலின், நியதித்துவங்கோடன் பிழை யாமெனின்,—அஃதொக்கும். முதல்வனது சத்தி அவ்வக்

கருவிகளே முன்னிட்டு அவ்வக்காரியங்களைச் செய்வதன்றித் தானே முன்னின்று செய்யாது. செய்யுமாயிற் பிறகாரணங்களின்றியே வீடுபெறுதல் வேண்டும்; அஃதின்மையான் முதல்வனதுசத்தி கருவிகளேமுன்னிட்டே காரியநடாத்துவதாகலின், அது போகத்தை நியமித்து நிறுத்துதற்குக் கருவி நியதிதத்துவமெனக் கொள்க.

## கலாதத்துவம்

இனிக், கலாதத்துவமாவது, மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம்போனின்ற ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியின்பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கிக் கிரியாசத்தியை விளக்குவது. கலித்தல் நீக்குதலுஞ் செலுத்துதலுமாகலின், மலத்தை நீக்குதலாற் கலையெனப்பெயராயிற்று. மலம் வியாபகமாகலின், அதனை நீக்குதலாவது நெருப்பினது சுடுதற்சத்தியை நிகழவொட்டாது தடுக்கும் குளிகைபோல, மலத்தினது மறைத்தற்சத்தியை ஆன்மாவின் கிரியாசத்தியின்கண் நிகழவொட்டாது தடுத்துநிற்றலாம். சிறிதே நீக்குதலாவது வினைக்கீடாகப் புத்திதத்துவத்தின் வியாபாரத்திற்கு யாதுயாது விடயமாம் அவ்வவ்விடயத்தின் நிகழும் மறைத்தற்சத்தி மாத்திரையே நீக்குதலெனக் கொள்க.

அற்றேல், வினைக்கீடாகப் போக்கியப்பொருள் ஒரோவொன்றுய் விடயமாதற் பொருட்டுப் புத்திதத்துவத்தின் தொழிற்பாடு ஒருதலையான் வேண்டப்படுமாகலின், அதுவே அமையும்; கலையாற் பயனென்னையெனின்,— அற்றன்று; புத்திதத்துவஞ் சடமாகலிற் சேதனனுகிய ஆன்மாவாலன்றித் தொழிற்படாமையான் அதனை மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாத் தொழிற்படுத்தற்குக் கருவி இன்றியமையாமையின், ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கிப் புத்திதத்துவத்திற் செலுத்துவதாகிய கலை ஒருதலையான் வேண்டப்படுமென்க.

அற்றேல், முதல்வனது சத்தி சேதனமாகலின், அது புத்திதத்துவத்தைத் தொழிற்படுத்துமென்னுமோவெனின்,— என்னும்; என்னை? உடம்புபோல் அந்தக்கரண முதலியனவும் ஆன்மா அதிட்டித்தன்றித் தொழிற்படாமையின். அங்ஙியமம் இல்லையாயின், குயவன்முதலியோ ருடம்பினும் அவரதிட்டானமின்றி முதல்வனதிட்டித்தன்மாத்திரையானே குடமுதலியன உளவாதல் வேண்டுமென்றெழுக.

அற்றேல், கலையுஞ் சடமாகலின், அதனைத் தொழிற் படுத்துவது யாதெனின்,—அஃதொக்கும். * "சுத்தவித்தை யாதிமுதற் சொன்னவெழு தத்துவமு—மொத்து நடத்தி யிடும்" எனவும், †"சீவர்க்கு—வந்திடும் பிரேரகாண்டம்" எனவுங் கூறுபவாகலின், முதல்வனது சத்தியான் அதிட்டிக் கப்படுஞ் சுத்ததத்துவங்களே கலைமுதலியவற்றைத் தொழிற் படுத்தும் பிரேரக கருவியென்று உணர்க.

அற்றேல், ஆன்மாக்கள் புத்திதத்துவத்தைத் தொழிற் படுத்துதற்குச் சுத்ததத்துவமே கருவியாதல் அமையுமென் றூற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; பசுத்துவ மூடைய ஆன்மாக்களுக்குச் சுத்ததத்துவங் கருவியாகாமையா னென்க. வித்தைமுதலியவற்றிற்கும் இவ்வுரையை உய்த் துரைக்க. இத்தன்மைத்தாகிய கலை கருவிக்காரகமாயினும் ஆன்மாக்கள் வினைமுதலாதற்குரிய கிரியாசத்தியை விளக்கிப் போகநுகர்ச்சிக்கண் வேறின்றி உட்ளைய் நிற்றலின், வினை முதற்காரகமென்று உரைக்கப்படுமென்க.

## வித்தியாதத்துவம்

இனிக், கலையாற் கிரியாசத்தி விளங்கி வினைமுதலாதலை யெய்தின்ற ஆன்மாக்களுக்குக் கலையினின்றுந்தோன்றி ஞானசத்தியை விளக்கி அதனால் அதிட்டிக்கப்பட்டுப், புறத் தின்கண் விடயமாகிய குடமுதலியவற்றைச் சவிகற்பக்காட் சியான் நிச்சயிக்கும் புத்திதத்துவமாகிய அகத்தின்கண்விட யத்தையறியுந் தன்வேதனைக்காட்சியறிவிற்கும், புத்திதத்து வத்தொடு கூடாமையாற் புறப்பொருளை விகற்பமின்றியறிவ தாகிய நிருவிகற்பக்காட்சியறிவிற்கும், மனம் புத்தி அகங் காரங்களின் றொழிற்பாடாகிய சங்கற்பம் நிச்சயம் அபிமான மென்பனவற்றை அறியுமறிவிற்குங் கருவியாய்நிற்பது வித் தியாதத்துவமென்றுணர்க.

அற்றேல், கலையான் மலஞ் சிறிதுநீங்கவே கிரியாசத்தி போல ஞானசத்தியும் விளங்குதற்கு இடையீடின்மையின், வித்தையாற் பயனென்னையெனின்,— அற்றன்று; குருடுசிறிது நீங்கியவழிக் கண்ணொளி சிறிதுவிளங்கினுந் திகைப்புற்று நிற்குமன்றிக் குருடுநீங்கியபொழுதே விடயங்களைப்பகுத்துக் காணமாட்டாது. அதுபோலக் கலையான் மலசத்தி நீங்கிய வழி ஞானசத்தி விளங்கினும், புத்திதத்துவத்தைப்பற்றி விட யத்தைப் பகுத்துணரமாட்டாது திகைப்புற்றுநிற்கும். அத்

* திருவுந்தியார், கசு. † சிவஞானசித்தி, உ-ம் சூ. எ0.

திகைப்புநீக்குதற்குக் கலியினின்றுந் தோன்றிய வித்தையே கருவியாகலின், அஃது ஒருதலையான் வேண்டப்படுமென்க.

அற்றேல், மலசத்தியைநீக்கிய கலையே திகைப்பினை நீக்குதற்கும் அமையும்பிறவெனின்,—அமையாது; ஒருதொழிற் கமைந்தகருவி மற்றொருதொழிற் காகாமையின். அற்றேல், நீக்குதலிரண்டும் மறுதலைத்தொழிலன்மையான் மறுதலைப் படாத இரண்டுதொழில் ஒருகருவியானமைதல் உலகத்திற் காண்டுமாகலின், கலியொன்றே அவ்விரண்டற்கும் அமையுமென்றுற்பமிம் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; அங்ஙனமாயினும் ஒருகருவி இரண்டுதொழில் ஒருங்குசெய்தல் கூடாமையின், ஈண்டுத் திகைப்பு நீக்கத்தினும் மலநீக்கம் ஒருங்கு நிகழவேண்டுதலின், மலசத்தியை நீக்குவதாகிய கலியே தனது ஏகதேசத்தின் வித்தையாய்ப் பரிணமித்துத் திகைப்பினைநீக்கிப் புத்திதத்துவத்திற் கோசரமான விடயத்தையறிதற்குக் கருவியாய் நிற்குமெனக் கொள்க. அற்றாகலின்றேற வித்தை மாயையிற்றோன்று மென்னுது கலியிற் றோன்றுமென்றதூஉமென்க.

இவ்வாறே ஏனைத்தத்துவங்களுந் தம்மூட் காரணகாரியங்களாய் ஒன்றினொன்று தோன்றுமென்னும் உற்பத்திமுறையெல்லாம் ஆகமவளவை மாத்திரையானன்றி வழியளவையானும் உய்த்துணர்ந்துகொள்க. அவையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

அஃது அங்ஙனமாக; அறிதற்குக் கருவியாகிய புத்திதத்துவத்தை அறியப்படும் விடயமென்றும், அதனை ஆன்மா வறிதற்கு வித்தை கருவியென்றுஞ் சொல்லியது என்னையோவெனின், கூறுதும்:—வாயிற்காட்சி மானதக்காட்சிக்கு வாயிலும், அந்தக்கரணங்கள் கருவியும், சந்தனம் மாலை முதலிய புறப்பொருள்கள் விடயமுமாம். அவற்றின் பின்னிகழுந் தன் வேதனைக்காட்சியறிவிற்குச் சந்தனம் மாலை முதலிய புறப்பொருள் விடயமாகா; என்னை? சந்தனம் மாலைமுதலியன போக்கியத்திற் கேதுவாதலன்றிப் போக்கியமன்மையிற் றன் வேதனைக் காட்சியறிவிற்குப் போக்கியமாத்திரையே விடயமாகலின். மற்றென்னையோ அதற்கு விடயமாவதெனின்,—சந்தனம் மாலை முதலியவற்றிற் பற்றி அவையவையாய்ப் பரிணமித்த போதமாகிய புத்திதத்துவமே தன் வேதனைக்காட்சியுணர்விற்கு விடயமாமென்க; அதுவே இன்பத்துன்பவடிவாகிய போக்கியமாகலானென்பது. இங்ஙனமாகலின், கேவலமாய் நின்ற புத்திதத்துவஞ் சந்தனம் மாலை முதலியவற்றிற் பற்றி

அவையவையாய்ப் பரிணமித்துநின்று ஆன்மாவின் ஞான சத்திக்கு விடயமாமாகலின், அதனை விடயமாக்குதற்குக் கருவி வித்தையென்னுந் தத்துவமென்றுணர்க. சிவப்பிரகாசத்தில், *"வாயில்களின் பயனைப்—புத்திதர வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும்" என்றதும் அப் பொருட்டு; † அதற்கு மனமே கருவியாகுக வெனின், ‡ இது பொருந்தாதென்பது முன்னர்க் கூறப்படுமாற்றான் அறிக.

அற்றேல், ஆன்மாவின் ஞானசத்தியே அதற்குக் கருவியா மென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; இயல் பானே நிரதிசயவின்பத்தினை நுகர்வதாகிய ஆன்மாவின் ஞான சத்திக்கு யான் இன்பமுற்றேன் துன்பமுற்றேன்என்று இன்பத் துன்பமுதலிய ஞானங்களை அறிதல் செயற்கையானன்றி ஏலா மையின், ஞானசத்தி கருவியென்பார்க்கும் வித்தையொடு கூடிக் கருவியாமென்றல் வேண்டுமாகலின், ஒருதலையான் வேண்டப் படும் வித்தையே ஆண்டுக் கருவியெனக்கொள்க.

அற்றேல், அவையவையாய்ப் பரிணமித்துவந்த புத்தி தத்துவத்தை அறிவதாகிய தன்வேதனைக்காட்சி யறிவிற்குக் கருவி வித்தையென்றது ஒக்கும். நிருவிகற்பக் காட்சியுணர் விற்கும் அது கருவியென்றது என்னையோவெனின், கூறுதும்:- எதிரே காணப்படுவதொருபொருளைப் பெயர் சாதி முதலிய வற்றான் நிச்சயித்தறிவதாகிய சவிகற்பக்காட்சி பொதுமையாற் கண்டறிவதாகிய நிருவிகற்பக்காட்சி நிகழ்ந்த பின்னன்றி நிகழாமையான், அத்தன்மைத்தாகிய நிருவிகற்பக் காட்சியறி வொன்று உண்டென்பதுபெற்றாம். பெறவே, அவ் வறிவு நிகழ்ச்சிக்குக் கருவிவேண்டும், கண் செவி முதலிய வாயில்களே அதற்குக் கருவியாயினும், வாயில்கள் ஆன்மா அதிட்டித்தா லன்றித் தொழிற்படமாட்டாமையின், நிருவிகற்பக் காட்சியின் கண் ஆன்மா வாயில்களை அதிட்டித்தற்குக் கருவியாய் நிற்பது வித்தையெனக் கொள்க. சவிகற்பக் காட்சியிற்போல நிருவி கற்பக்காட்சியினும் புத்தியே கருவியென்றுற்படும் இழுக் கென்னையெனின்,—புத்தி நிச்சயிப்பதாகலின், நிருவிகற்பமுஞ் சவிகற்பமாய் முடியுமாகலின், அஃது ஆண்டைக்குக் கருவியாக தென்றுரைக்க. புத்திதத்துவங் கூடாமையானுங் கூடுதலானு மன்றே நிருவிகற்பஞ் சவிகற்பமென்று இருவகையான் அறிவு நிகழ்ந்ததாமென்க.

---

* சிவப்பிரகாசம், பொது, உ எ.

† அதற்கு என்றது வாயில்களின் பயனைத்தருதற்கு என்க.

‡ இது என்றது புத்தியை.

அஃது அங்ஙனமாக; புத்தியாங்கார மனங்களின்றொழிற் பாடாய் நிகழ்ந்த நிச்சயம் அபிமானஞ் சங்கற்பமென்பன ஆன்மாவிற்கு விடயமாதற்கும் வித்தையே கருவியென்ற தென்னை? ஆண்டும் புத்திமுதலியனவே கருவியெனக் கொள்ளாமோ வெனின்,—கொள்ளாம். என்னை? புத்தி முதலியன தத்தங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாயினும் மேலுள்ளவற்றை நோக்கிச் சடமாகலின், அவை தத்தந் தொழிற்பாட்டளவினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமையானென்க.

இங்ஙனமாகலான் எவ்வகைப்பட்ட உணர்வும் ஆன்மாவிற் சென்று விடயமாதற்குக் கருவியாய் நிற்பது வித்தையெனக் கொள்க.

## அராகதத்துவம்

இனி, வித்தையான் ஞானசத்திவிளங்கி விடயங்களை அறியலுறும் ஆன்மாவுக்கு இச்சை நிகழ்ந்தன்றிப் போக நுகர்ச்சி செல்லாமையின், வித்தையினின்றுந் தோன்றி ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்கிப் புத்திகுணங்களின் அவைராக்கியமெனப்படும் அராகநிகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்பது அராகதத்துவம்.

இச்சையாவது ஞானவிசேடமாகலின், அதனை விளக்குவதாகிய அராகதத்துவம் வித்தையின் பரிணாமமாதலே பொருத்தமுடைத்து; ஆகலானும், * "விச்சையி னராகந் தோன்றி" என வழிநூலாசிரியர் கூறுதலானும், பவுட்கர முதலியவற்றின் அராகத்திற்குக் கலையினின்றுந் தோற்றங் கூறியது, †"கலிகால நியதியுடன்வித்தை யராக' மைந்தும் 'மாயைதனிலாகும்" என் புழிப்போலப் பரம்பரையான் முதற்காரணமாதல் பற்றியென் றறிக. இவ்வாறன்றிக் கலையினின்றே அராகந்தோன்று மென் பாரும் உளர். அவரெல்லாம் *"விச்சையி னராகந் தோன்றி" என்புழி, இன்—உவமவுருபாகவைத்து, வித்தைபோல அராகங் கலையினின்றுந் தோன்றுமென்றுரைப்ப.

அற்றேல், இச்சை நிகழ்தற்குக் கருவி புத்தியின்கண்ணதாகிய அராகமேயமையும். அராகதத்துவமொன்று கோடன்மிகையாமாலெனின்,—அற்றன்று; ஆன்மாவின் இச்சாசத்தி புத்திதத்துவத்தை அதிட்டித்தபின்னன்றி அதன்கண்ணதாகிய அராகந் தோன்றுதென்பது மேற் கூறியவாற்றுற் பெறப்படுதலின், அத்தன்மைத்தாகிய புத்தியினராகந் தன்னைத் தோற்றுவிப்பதாகிய ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்குமென்றல்

* சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், கசு.

† சிவப்பிரகாசம், பொது, கச.

பொருந்தாமையின், அராகதத்துவமே ஆன்மாவின் இச்சா சத்தியை விளக்குமுகத்தாற் புத்தியினராகத்திற்கும் ஏதுவா மென்பது.

அற்றேல், அராகதத்துவமே அமையும். புத்தியின்கண்ண தாகிய அராகத்தாற் பயனின்மையின், அது மிகையாமா லெனின்,—அற்றன்று ; அராகதத்துவம் ஆன்மாவின் இச்சா சத்தி ஞானசத்திபோலப் பொதுமையான் விளங்குதற் கேதுவா வதன்றி, அவ்வவ் விடயந்தோறுஞ் சிறப்புவகையான் நிகழ்தற் கேதுவாகாமையின், சிறப்புவகையான் இச்சை நிகழாதவழி, எல்லாவிடயங்களிலும் ஒருங்கே இச்சை நிகழவும் ஒழியவும் வேண்டும். அஃதின்மையான் அராகதத்துவத்தாற் பொது வகையானிகழ்ந்த இச்சை சிறப்புவகையான் நிகழ்தற் கேது வாகிய புத்தியினராகம் மிகையாதல் யாண்டையதென்க.

அற்றேல், அராகதத்துவமும் வேண்டா ; புத்தியி னராக மும் வேண்டா ; உலகத்துள்ள பொருள்களெல்லாம் பரம் பரையான் மூக்குணத்தினின்றும் உற்பத்தியாதலின், சுகரூப மும் துக்கரூபமும் மோகரூபமுமாய் நிற்பனவாகலாற் சுகரூப மாய் நிற்றல் பெற்றுமன்றே : அதுவே சிறப்புவகையானும் பொதுவகையானும் இச்சையை நிகழ்த்திப் போகதுகர்ச்சிக் கேதுவாமென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று : இச்சிப்பார்மாட்டு விசேடமில்வழி, எல்லாப்பொருளும் எல்லா வுயிர்கட்கும் ஒப்பச் சுகரூபமாய் நிற்றலிற் றிரியாமையின், எல்லாப் பொருள்களினும் வேட்கை ஒப்பச் சேறல்வேண்டும். அது கண்டிலம். அல்லதூஉம், அநுபவித்தாழிந்த பொருளி னும் ஒழியாது வேட்கை சென்று, மீளவும் அதனையே அநுப விக்க முயறல்வேண்டும். அவ்வாறன்றி அநுபவித்த பொருளின் வேட்கை நீத்தோரையுங்காண்டும் ; ஆகலாற் சுகரூபமாதல் வேட்கைக்குக் காரணமென்றல் பொருந்தா தென்க.

அற்றேல், அராகம் வேறுண்டென்பாரும் அது கலாதி போல ஆன்மாவைவிட்டு நீங்காது எக்காலமும் உடனிற்கு மெனக் கோடலின், அவர்க்கும் அவ்வாறுதல் வேண்டுமென்ப தாய் மூடியுமாலெனின்,— அற்றன்று : ஞானரூபமும், வாதனை ரூபமுமென்று அராகம் இருவகைப்படும். அவற்றுள் ஞான ரூபமாகிய புத்தியினராகமே விடயத்தைப்பற்றி நிகழுமாகலின், அது நீங்கியவழி, அவ்விடயத்தின் வேட்கை நிகழாமையான் ஒழிதல் கூடுமென்க. வாதனைரூபமாகிய அராகதத்துவம் உடனுய் நிற்பினுஞ் சிறப்புக்காரணமில்வழிப் பொது காரண மாத்திரையாற் காரியந் தோன்றுதல் கூடாமையானென்பது.

வாதனாரூபமாகிய அராகம் நீங்குமாயின், மற்றொருவிட யத்தின் வேட்கை நிகழ்தல் இல்லையாய் முடியும். அஃதின்மை யான் அராகதத்துவம் நீக்கமின்றி ஆன்மாவினுடனாய் நிற்கு மெனக்கொள்க.

அங்ஙனம் வாதனாரூபமாய் நிற்கும் அராகதத்துவம் முத் திக்காலத்திற் றன்னெல்லையளவும் அத்துவசுத்திசெய்யுந் தீக் கையாற் பற்றறக்கழியும். கழியவே, விடயங்களிற் பொதுமை யானிகழும் விருப்பமும் நிகழாமையின், ஆண்டுச் சிவராகம் வெளிப்பட்டு ஆன்மாவின் இச்சாசத்தியை முத்திக்கேது வாகிய சாதகங்களிற் கோசரிப்பிக்கு மென்றறிக.

அற்றேல், அஃதொக்கும். அராகதத்துவம்போல விடயங் களில் வெறுப்பு நிகழ்தற்கு ஏதுவாக வெறுப்புத்தத்துவமொன் றுண்டெனக் கொள்ளாமோவெனின்,—கொள்ளாம். என்னை ? ஆன்மாவின்கண் இச்சாசத்திபோல வெறுப்புச்சத்தி யொன்று இன்மையானும், விடயங்களினிகழும் வெறுப்பிற்குப் புத்தி யின் கண்ணதாகிய வெறுப்பே காரணமாதலமையுமாகலானு மென்க.

அற்றேல், . ஆன்மாவிற்கு இச்சாசத்திபோல வெறுப்புச் சத்தியும் ஒன்றுண்டெனக்கொண்டு அதனை விளக்குதற்கு வெறுப்புத்தத்துவமொன்று உண்டெனக்கொள்ளிற் படும்இழுக் கென்னையெனின்,—அற்றன்று; புத்தியின்கண்ணதாகிய அராகம் புறப்பொருளை இது சுகத்திற்கேது, இது துக்கத்திற்கேதுவென விடயிக்கும் ஞானம் நிகழ்ந்தபின்னன்றி நிகழாது. புறப் பொருளை அங்ஙனம் விடயிக்கும் ஞானமும் புத்தியின் றொழிற் பாட்டானன்றி நிகழாது. புத்திபின்றொழிற்பாடும் புத்தியிற் கோசரிப்பதாகிய ஆன்மாவின் இச்சாசத்தியின்றி நிகழாது. அவ்விச்சாசத்தியின் விளக்கமும் அராகதத்துவத்தானன்றி நிகழாது. இங்ஙனமாகலாற் புத்தியிற்கோசரித்தற்குப் புத்தியின் கண்ணதாகிய அராகத்தின் வேறாய் ஆன்மாவின் இச்சாசத்தி யுண்டென்பதூஉம், இச்சாசத்தியிற் கோசரித்தபின்னர்ப் புத்தி யின் றொழிற்பாட்டாற் புறப்பொருளை விடயிக்கும் ஞானம் நிகழ்ந்தபின்னை நிகழும் புத்தியினராகமும் அவ்விச்சாசத்தியை விளக்குமென்பது கூடாமையின், அதனை விளக்குதற்கு அராக தத்துவம் உண்டென்பதூஉம், புறப்பொருள்விடயத்திற் சிறப்பு வகையான் நிகழும் இச்சையை விளக்குதற்குப் புத்தியினராகமும், அதன் மறுதலையாய வெறுப்பைவிளக்குதற்குப் புத்தியின் வெறுப்பும் உளவென்பதூஉம் ஒருதலையான் வேண்டப்படும். இவ்வாறு புத்தியின்கண்ணதாகிய வெறுப்பின் வேறாய் ஆன்மா

வின்வெறுப்புச்சத்தி யுண்டென்பதற்குப் பிரமாணமின்மையின், வெறுப்புத்தத்துவமென்ப தொன்றில்லையென்றுணர்க.

ஆன்மாவின் வெறுப்புச்சத்தியுண்டென்பார்க்கும் விடய வெறுப்பைச் சிறப்புவகையான் விளக்குதற்குப் புத்தியின் வெறுப்பு ஒருதலையான் வேண்டப்படுமாகலின், இரண்டுகோடன் மிகையாகலானும், புத்தியின்வெறுப்பு நிகழ்தற்குக் காரணம், இது துக்கத்திற்கேதுவென்றறியும் ஞானமே யாகலானும், அஃது இச்சாசத்திகோசரித்தமாத்திரையானே புத்தித்தத்துவம் விடயத்திற்சென்று பற்றுந்தொழிற்பாட்டான் நிகழுமாகலின், வேறுகாரணம் வேண்டாமையானும், ஆன்மாவின் வெறுப்புச் சத்தியொன்று இல்லையென்பது தெற்றெனவுணர்க.

அற்றேல், யான் வெறுத்தேனென்னும் அநுபவம் ஆன்மா வின் மாட்டு நிகழுமாறு என்னையெனின்,—அஃது யான்நிச்ச யித்தேன், யான்அபிமானித்தேன் எனப் புத்திமுதலியவற்றின் றொழிற்பாடுகள் ஆன்மாவின்கண்ணவாய் அநுபவமாமாறு போலாமெனக் கொள்க.

இத்தத்துவங்கள் ஒன்றொன்றுப்ப் பரிணமிப்பனவாயிற் பரிணமமாவது முன்னின்றஅவத்தையினீங்கிவேறோரவத்தை யெய்துவதாகலாற் பால் தயிராய்ப் பரிணமித்தவழியும், தயிர் மோராய்ப் பரிணமித்தவழியும் பாலெனவுந் தயிரெனவுநின்று தத்தம் பயனைத் தருமாறில்லையாயினுற்போல, மாயையிற் கலக்குண்டபாகம் காலம் நியதி கலைகளாய்ப் பரிணமித்தவழி, அது கலக்குண்டபாகமாய்நின்று மயக்குதற்றொழிலேச்செய்யு மென்பதூஉம்; கலை வித்தையாய்ப் பரிணமித்தவழிக் கலையாகவு நின்று கிரியாசத்தியை விளக்குதலும், பின்னர் மூலப்பகுதியைத் தோற்றுவித்தலுஞ் செய்யுமென்பதூஉம்; வித்தை அராகமாய்ப் பரிணமித்தவழி, அது ஞானசத்தியை விளக்குமென்பதூஉம் அமையுமாறென்னையெனின்,—அற்றன்று; ஈண்டுக் கூறியன வெல்லாந் தத்தம் ஏகதேசத்திற் பரிணமமாதலன்றிப், பால் தயிராஞற்போல முழுவதும் பரிணமமாதலின்மையின், பரிணம மாகாதுநின்ற கூற்றுனே அவை தத்தங்காரியங்களேச் செய்தலும் அமையுமென்க. ஏனை மூலப்பகுதிமுதலியன பரிணமமாமாறுஞ் சுத்தமாயையின் விருத்தியாமாறும் இவ்வாறே கண்டுகொள்க.

இவற்றுள், அராகமுதலிய மூன்றும் ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகளே விளக்கிப் போகதுகர்தற்பொருட்டுப் புத்தி தத்துவத்திற் செலுத்தியும், நியதித்தத்துவம் இதனையே நுகர்க வெனப் போகத்தின்கண்ணே ஆன்மாவை நியமித்து நிறுத்தியும், காலதத்துவம் இதனை இத்துணைப்பொழுதுமாத்திரையின், நுகர்க

வெனப் போகத்தின்கண் வரையறுத்துச் செலுத்தியும் இவ்வாறு இவ்வைந்தும் ஆன்மாவுக்கு உபகாரமாய், ஏனைக் கருவிகள் போல அவத்தைப்படுதற்கு ஏதுவாய் இடையிடையே கூடுதலும் நீங்குதலுமின்றி எக்காலத்தும் ஆன்மாவினுடனுய்க் கஞ்சுகம் போலப் பந்தித்துநிற்றலின், இவை பஞ்சகஞ்சுகமென்றுபசரித்துக் கூறப்படுமென்க.

புருடதத்துவம்

இனி, இங்ஙனங் கலைமுதலிய பஞ்சகஞ்சுகத்துடன் கூடிப் பொதுமையாற் போத்திருத்துவமெய்திநின்ற ஆன்மாப் பிரகிருதி மாயைப் போக நுகர்ச்சியின் உன்முகத்திற்கேதுவாகிய அவிச்சை முதலிய பஞ்சக்கிலேசமென்னும் பும்ஸ்துவமல முடையனுய்ப் புருடதத்துவமென நிற்பன்.

பஞ்சக்கிலேசமாவன:—அநித்தத்தை நித்தமென்றும், அசுத்தத்தைச் சுத்தமென்றும், துன்பத்தை இன்பமென்றும், தானல்லாதபொருளைத் தானென்றுந் திரியக்காணும் உணர்வாகிய அவிச்சையும், அதுபற்றி அவற்றை யானெனமதிக்கும் ஆங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லும்ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட்செல்லுங் கோபமுமென இவை. இப்பஞ்சக்கிலேசமே பும்ஸ்துவமலமென்றோதப்படும். இவ்வைந்தினையும் மூன்றாயடக்கிக், *"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற—னுமங் கெடக் கெடு நோய்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும். இவ்வவிச்சைமுதலியன வுடையோர் சகலரேயாகலின், ஏனை விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர்போலப்புருடதத்துவ மெனப் பெயர்பெறுமாறு இல்லையென்க.

ஆன்மாப் புருடதத்துவமாவதற்குக் காரணங் கலாதியே யமையும் அவிச்சையாதி வேண்டாவென்பார்க்குக் கலாதியுடைய பிரளயாகலரும் பிரகிருதிமாயைப் போகம் நுகர்வதாகிய புருட தத்துவமாவான் செல்வராகலானும், அவிச்சையாதியே யமையுங் கலாதிவேண்டா வென்பார்க்குக் கலாதியாற் கிரியைமுதலிய விளங்கிப் பொதுவகையாற் போத்திருத்துவ மெய்தாதவழிச் சிறப்புவகையாற் போத்திருத்துவமெய்துதல் கூடாதாய் முடியு மாகலானும் இவ்விருவகையுங் கூடிய பொதுமையின் ஆன்மாப் புருடதத்துவமெனப் பெயர்பெற்றுப் பிரகிருதிமாயைப் போகம் நுகர்தற் குரியனுவனென்பது.

அவிச்சை முதலியவைந்தும் முன்னர்க் கூறப்படும் மூலப் பகுதியின் உளவாயினவென் றுணர்க.

---

* திருக்குறள், கூசு-ம் அதி. மெய்யுணர்தல், கo.

அற்றேல், மூலப்பகுதியினுளவாகிய பும்ஸ்துவமல மூடைமைபற்றி ஆன்மாப் புருடதத்துவமென நிற்பது மூலப் பகுதியின் பின்னர்த்தாகலின், அதன்முன்னுக அராகதத்துவத் தைச் சாரவைத்தெண்ணுதல் பொருந்தாதெனின்,—அங்ஙன மாயினுஞ் சங்காரமுறைமையிற் பஞ்சக்கிலேசமாகிய பும்ஸ்துவ மலம் நீங்கலே புருடதத்துவத்திற்குச் சுத்தியாகலின், அத் தன்மைத்தாகிய பஞ்சக்கிலேசம் நீங்கல் மூலப்பகுதியைச் சுத்தி செய்த பின்னர்த்தாகலானும், புருடதத்துவத்தினெதிய புவனங் கள் மூலப்பகுதியின் மேலிடத்துளவாகலான், அவை சுத்திப் படுதலும் மூலப்பகுதியினுளவாகிய புவனங்களைச் சுத்திசெய்த பின்னர்த்தாகலானும், புருடன் மூலப்பகுதியை அநுபவிக்கும் முதன்மையுடைமையானும் மூலப்பகுதிக்கு முன்னுகவைத் தெண்ணப்பட்டதென் றுணர்க.

இனிச், சேதனனுய் நித்தனுகிய ஆன்மாவே புருடதத்துவ மெனப் பெயர்பெறுவனெனிற் சடமாகிய தத்துவங்களின் வைத்து எண்ணுதலும், அத்துவசுத்தியிற் றத்துவங்களோடு வைத்துச் சுத்திசெய்தலும், புருடதத்துவம் மாயேயமென் றலும், புருடதத்துவத்திற் புவனங்களுளவென்றலுமாகிய இன்னேரன் னவற்றோடு முரணுமாகலாற் புருடதத்துவமென்பது ஆன்மா வின் வேறுய்க் கலைமுதலிய ஐந்துங்கூடிய பொதுமையிற் றோன் றுவதாய்ப் போத்திருத்துவத்திற்குக் கருவியாய்ச் சடமாய்நிற்ப தென்றென்பாரும் உளர். பஞ்சகஞ்சுகமும் பஞ்சக்கிலேசமும் பொதுவகையானுஞ் சிறப்புவகையானும் போத்திருத்துவத் திற்கு ஏதுவாமென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின் வேறுமோர் கருவிகோடல் மிகையாமாகலானும், போத்திருத்து வத்தின் வேறுய் ஆண்டுத்தரக்கடவதோர் உபகாரமின்மையானும் பயப்பாடின்றி மிகையாய் அங்ஙனம் ஒருகருவிகொண்டதனற் போந்ததென்னை யென்றுழிக.

ஆன்மா வியாபகமாயினும் புருடதத்துவமெனப் பெயர் பெறுதற்கு ஏதுவாகிய போத்திருத்துவநீங்குதல் மூலப்பகுதி யின் சுத்திப் பின்னுதல்பற்றி, மூலப்பகுதிக்கும் அராகதத்துவத் திற்கும் இடையேவைத்தெண்ணுதலும், புருடனுதற்கேதுவாய் விசேடித்துநிற்குந் தத்துவங்கள் சடமாதல்பற்றி, அடுத்ததின் றன்மையாய்நிற்கும் புருடதத்துவத்தையுஞ் சடமென்று உபசரித் தக்கூறுதலும் பொருந்துமாறறிக. உண்மையாற்சித்தும், உபசா ரத்தாற் சடமுமாமென்பதுபற்றியன்றே, *"சித்தசித் தான்மா வொன்று" என வழிநூலாசிரியர் ஓதியதூஉமென்க.

---

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், கூக.

புருடதத்துவத்திற் புவனங்களுளவென்பது "கங்கையி னிடைச்சேரி" என்பதுபோல ஆகுபெயராய்ப் புருடதத்து வத்தின் அணிமைக்கணின்ற பிரகிருதிதத்துவத்தினுளவென்று பொருள்கோடற்பாற்றென்பது பவுட்கரத்தின் வகுத்தோதிய வாற்றுனறிக. இதனுனும் புருடனென வேறோர் தத்துவமின்மை உணர்க. வேறோர் தத்துவமாயின் ஏனையபோலப் புருட தத்துவத் திற்கோதிய புவனம் ஆண்டுளவென்றலே அமையும்; ஆகுபெய ரான் மற்றொருதத்துவத்தின்கண் உளவென்றோதல் வேண்டா வாகலான் என்க.

போத்திருத்துவம் நீங்குதலே புருடனுக்குச் சுத்தியாகலின், காலாக்கினிருத்திர புவனமுதற் கலையளவும் போத்திருத் துவமுண்மையான், அத்துவசோதனையிற் காலாக்கினிருத்திர புவனசுத்திமுதற் சிறிது சிறிதாக நீங்கிச் சூக்குமமாய் வந்து மூலப்பகுதியிற் சிகண்டருத்திரபுவனசுத்திவரையிற் சிறப்பு வகையாணிகழும் போத்திருத்துவங்கள் பற்றறக்கழிந்து கலாதி சுத்திவரையிற் பொதுவகையாணிகழும் போத்திருத்துவமும் பற்றறக்கழியுமென்றுணர்க. இக்கருத்தேபற்றி, * "மெய் வகைய கலாசுத்தி தனினிதற்குஞ் சுத்தி மேவியிடும் வகைதா னும் விரும்பியநூல் விளம்பும்" என்றார் புடைநூலாசிரியரு மெனக் கொள்க. போத்திருத்துவமாவது போகநுகர்வோடுதற் றன்மை.

### ஏலப்பாகுதி

இனி, இங்ஙனங் கலைமுதலிய பஞ்சகஞ்சுகமுடையனாய்ப் போகநுகர்ச்சிக்கட் சென்ற ஆன்மாவிற்குக் குணமுதல் நில மீறுகிய போக்கியங்கள் முறையேயுளவாதற் கேதுவாகக் கலையி னின்றும் மூலப்பகுதியென்னுந் தத்துவந் தோன்றிச், சிகண்ட ருத்திரர்சத்தி கலக்கக் கலக்குண்டு, தன்னினின்றுங் குண தத்துவத்தைத் தோற்றுவிக்கும். அவிச்சைமுதலிய பஞ்சக் கிலேசம் என்னும் பும்ஸ்துவமல வினைவிற்கும் இதுவே காரண மெனக்கொள்க.

போக்கியரூபமாய்நின்ற தத்துவப்பிரபஞ்சங்கட்கெல்லாம் இது மூலகாரணமாதல்பற்றி மூலப்பகுதியென்றும், பிரகிருதி மாயையென்றும், பிரதானமென்றும், மாயனென்றும், மூக்குணங் களுஞ் சுத்தமாய்விளங்காது மயிலண்டசலத்திற் பஞ்சவன் னம்போலச் சூக்குமமாய்நின்ற அவத்தையுடைமைபற்றி அவ் வியத்தமென்றும் வழங்கப்படும்.

---

* சிவப்பிரகாசம். பொது, உக.

சாங்கியநூலார் முக்குணங்கள் மிக்குங் குறைந்தும் நில்லாது தம்முட் சமமாய்நின்ற அவத்தையே மூலப்பகுதி யென்றும், அதுவே காரியங்களெல்லாவற்றிற்கும் முதற்கார ணமாய் நித்தமாய் நிற்பதன்றி, அஃதொன்றன் காரியமாதலில்லை யென்றுங் கூறுவர். அது பொருந்தாதென்பது * மேற்காட்டி னுமாகலின், முக்குணங்களும் விளங்கித் தம்முட் சமமாய் நின்ற அவத்தையிற் குணதத்துவமாவதல்லது மூலப்பகுதியாகா தெனவும், முக்குணங்களும் விளங்குதலின்றிச் சூக்குமமாய் நின்ற அவத்தையே மூலப்பகுதியா மெனவுந் தெரிந்துணர்ந்து கொள்க.

அற்றேல், குணதத்துவமே கலையினின்றுந் தோன்றிய தென லமையும், இடையே மூலப்பகுதியொன்று உண்டென்ப தற்குப் பிரமாணமில்லையாலோ வெனின்,—அற்றன்று; காரி யத்திற் சிறப்புவகையான் நிகழுங் குணங்கள் காரணத்திற் பொதுவகையான் நிகழ்ந்தன்றி உளவாகாவென்பது நியமமா கலின், சத்தமுதலிய குணஞ் சிறப்புவகையான் நிகழும் பஞ்ச பூதங்கள் அவை பொதுவகையாற் சூக்குமமாய்நிற்கும் பஞ்சதன் மாத்திரைகளே இடையிட்டன்றிப் பூதாதியாங்காரத்திற்றோன் றுமையும், பெயர் சாதி முதலிய உணர்வு சிறப்புவகையான் நிகழுஞ் சவிகற்பக்காட்சி அவை பொதுவகையாற் சூக்கு மமாய் நிகழும் நிருவிகற்பக்காட்சியை இடையிட்டன்றிப் போதத்திற் றோன்றுமையும், † "உருவெவையுந் தெரித்துச்" சிறப்புவகையான் நிகழும் மத்திமைவாக்கு அவைபொதுவகை யாற் சூக்குமமாய் நிகழும் பைசந்தியை இடையிட்டன்றிச் சூக்குமையிற் றோன்றுமையுமாகிய இன்னோரன்னவைபோலச், சுகதுக்கமோகரூபமாய்ச் சிறப்புவகையானிகழுங் குணதத்து வமும் அவற்றை "அடைவுபட உள்ளொடுக்கிச்" சூக்குமமாய்ப் பொதுவகையான் நிகழ்வதொன்றனை இடையிட்டன்றிக் கலை யினின்றுந் தோன்றுதல் கூடாமையான் அத்தன்மைத்தாகிய மூலப்பகுதி உண்டென்பது ஆகமவளவை மாத்திரையானன்றி அருத்தாபத்தியளவையானும் உணர்ந்து கொள்க.

அற்றேல், மூலப்பகுதி கலையினின்றுந் தோன்றியதென் னுது மாயையினின்றே தோன்றியதென்றுற் படும் இழுக் கென்னையெனின்,—அற்றன்று; அங்ஙனமாயிற் கலையுள் அடக்க மின்மையின், கலையான் விளங்குங் கிரியாசத்திக்கு நேரே போக் கியமாதலின்றிக் காலநியதிகள்போல வேறோராற்றான் ஆன்மா விற்கு உபகாரமாவதாய் முடியும். அது கூடாமையானும், கேவல

* பக்கம், கருக. † சிவப்பிரகாசம், பொது, உசு.

மாய்நிற்குங் கலையைநோக்க முக்குணங்களை அடைவுபட வொடுக்கி, அவ்வியத்தமாய்நிற்கும் அவத்தை தூலமாக லானும், அத்தன்மைத்தாகிய மூலப்பகுதி மாயேயமாகிய கலை யினின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையறிக.

மூலப்பகுதி அவ்வியத்தமாய் நிற்பதாகலின், அதன்கட் கூறப்படும் புவனங்களும் குணதத்துவமத்தகத்தின் உளவா மெனக் கொள்க.

குணதத்துவம்

இனி, இங்ஙனம் அவ்வியத்தமாய்நின்ற மூலப்பகுதி வியத்த மாதற்பொருட்டு ஒன்றுய்நின்ற பாலியும் நீரையும் பகுக்கும் ஓதிமம்போலச் சீகண்டருத்திரர் சத்திகலக்கக் கலக்குண்டு முக் குணமாய்ப் பகுப்புற்று விளங்கித் தம்மூட் சமமாய்நின்ற அவத்தை குணதத்துவமெனப்படும்.

குணங்கள் மூன்றுயினுந் தொழிற்பாட்டின்கண் ஒருங்கு விரவிநின்று ஒருகாரியத்தைச் செய்தல்பற்றிக் குணதத்துவம் ஒன்றெனவைத் தெண்ணப்படுமென உணர்க.

சாத்துவிகமுதலிய மூன்றும் ஆன்மாக்கடோறும் மிக்குங் குறைந்தும் விரவி முறையே சுகதுக்கமோகங்கட்கு ஏதுவாய்ப் பிரகாசமுதலிய விருத்திகளையுடையவாய் நிற்கும்.

குணதத்துவம் மூலப்பகுதியின் விருத்தியேயன்றி ஏனைய போலப் பரிணமனன்மையான், மூலப்பகுதியோடு ஒன்றுகவைத் தோதவும்படுமெனக் கொள்க.

புத்திதத்துவ முதலியனவுங் குணரூபமேயாகலின், அவற் றோடு இவற்றிடை வேற்றுமை யென்னையெனின்,—முக்குணமும் விளங்குதலின்றித் தம்மூட் சமமாய்நின்ற அவத்தையின் மூலப் பகுதியும், விளங்கித் தம்மூட் சமமாய்நின்ற அவத்தையிற் குண தத்துவமும், அவை சமமாகாது தம்மூண்மிக்குங்குறைந்தும் பரிணமித்துநின்ற அவத்தையிற் புத்திதத்துவமுதலியனவுமா மாகலின், இவை தம்முள் வேற்றுமையென்க.

அற்றேல், சாத்துவிகமுதலியவற்றுள் ஒன்றுமிக்கவழி, மற்றையிரண்டுங் குறைந்து நிற்பனவன்றி மூன்றுஞ் சமமாய் நிற்றல் யாண்டுமின்மையிற் சமமாய்நிற்கும் அவத்தைபற்றிக் குணதத்துவமொன்று உண்டென்பதற்குப் பிரமாணம் இல்லையா லெனின்,—அற்றன்று; தத்தமியல்பிற் சமமாய் நிற்பவற்றிற் கன்றித் தம்மூண் மிகுதலுங் குறைதலும் பெறப்படாமையான் அதுபற்றிச் சமமாய்நிற்குங் குணதத்துவமொன்று உண்டெனக் கொள்ளப்படுமென்க.

### புத்திதத்துவம்

இனிக், கரணமுதலியவற்றினும் பிரகிருதி குணங்களானும், பொதுவகையானுஞ் சிறப்புவகையானும் போத்திருத்துவமெய்தி நின்ற புருடனுக்குக் குணதத்துவத்தினின்றுஞ் சாத்துவிகத்தான் மிக்கும், ஏனையிரண்டுகுணங்களாற் குறைந்தும் பரிணமித்துத் தோன்றி, வித்தையிற் பொதுமையான் விளங்கிய ஞான சத்தியை அவ்வவ்விடயந்தோறுஞ் சிறப்புவகையான் விளக்கி அவற்றைப் பெயர் சாதி முதலியவற்றுன் நிச்சயிப்பிக்குங் கருவியாயும்; அங்ஙனம் நிச்சயித்தபின்னர் அவ்வவ்விடயவடிவிற்றுய்ப் பரிணமித்துத் தோன்றும் ஞானமாய்நின்று, ஆன்மாவிற்குப் புலனுயடுத்த போக்கியமாயும்; அங்ஙனமாகலாற் புருடனுற் செய்யப்படும் இருவினைப்பயனுகிய புண்ணியபாவங்கட்கெல்லாஞ் சிறப்புவகையாற் பற்றுக்கோடாயும்; அவற்றுன் உளவாகிய தன்மமுதலிய பாவகமெட்டும், அவற்றினுனைய சித்திமுதலிய பிரத்தியயங்கள் ஐம்பதும், அவற்றின் விரிவகளுமாகிய எல்லாவற்றிற்கும் இடமாயுநிற்பது புத்திதத்துவமென் றுணர்க.

நிச்சயித்தற்றொழில் பிறிதொன்றுற் பெறப்படாமையின், அருத்தாபத்தியளவையான் இத்தன்மைத்தெல்லா முடைத்தாகிய புத்திதத்துவமொன் றுண்டெனத் துணியப்படும்.

நிச்சயித்தலாவது யாதெனின், கூறுதும்:—ஆன்மா அந்தக்கரணங்களோடு இயைபின்றி, உடனுய்நிற்கும் வித்தைமாத்திரையே கருவியாகக்கொண்டு வாயில்களை அதிட்டித்தவழி, எதிரே தோன்றுவதோர் விடயத்திற் பொதுவகையான் இஃதோர் பொருளென்று அறிதலாகிய நிருவிகற்பக்காட்சி முற்படநிகழுமன்றே; அதன்பின்னர் ஆன்மா மனத்தை அதிட்டிப்ப, மனமானது சித்தமாய்நின்று இஃது யாதாகற்பாற்றென ஒன்றைத்தூக்கிச் சிந்தித்துப் பின்னர் இது குற்றியாகற்பாற்று மகனுகற்பாற்றென ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ, அன்றோவென ஐயுற்றும் நிச்சயித்தற்கேதுவாகிய வேட்கையை விளைத்துநிற்கும். அதன்பின் ஆன்மா ஆங்காரத்தை அதிட்டிப்ப, ஆங்காரமானது குற்றியென்றுதல், மகனென்றுதல் ஒன்றை நிச்சயிப்பேன் யான் என்னும் அகந்தையைவிளைத்து, நிச்சயித்தற்கண் முயலும் ஊக்கத்தை உண்டாக்கி; அதற்கேதுவாகப் பிராணவாயுவையும் இயக்கிநிற்கும். அதன்பின் ஆன்மாப் புத்தியை அதிட்டிப்பப், புத்தியானது இவன் மகன், இது குற்றி, இது குடம், இஃது ஆடையென அவ்வப்பொருள்களைப் பெயர் சாதி முதலியனபற்றிச் சிறப்புவகையாற் றுணிதலாகிய சவிகற்பக்காட்சியே ஈண்டு நிச்சயித்தலெனப்படு மென்க.

ஈண்டுக் கூறியவாற்றானே வாயின்முதலியவற்றின் றொழிற் பாடுகட்குத் தம்முள் வேறுபாடும், அவை ஒன்றற்கொன்று ஒரு தலையான் ஏதுவாமாறுங் கண்டுகொள்க.

சவிகற்பக்காட்சி புத்திக்காட்சியேயாயினும், முதற்கண் மனத்தின் றொழிற்பாடு ஏதுவாகவைத்து முறையேவருதல்பற்றி ஆகுபெயரான் மானதக்காட்சியெனப்படும்; *"புந்தியை மனமதென்று மனமது புந்தியென்றும்.....வந்திடும்" என்றோதுதலின். இஃதுணராது மானதக்காட்சி என்றதேகொண்டு பெயர் சாதி முதலியவற்றான் நிச்சயித்தலே மனத்தின் றொழிற்பாடாகிய சங்கற்பமென்றும், என்னுல் இது செய்யற்பாற்றென நிச்சயித்தல் புத்தியின் றொழிற்பாடென்றும் மயங்கிக் கூறுவாரும் உளர். பெயர் சாதி முதலியவற்றுற் றுணிவதாகிய நிச்சயித்தற்குச் சங்கற்பமென்னும் வழக்கம் யாண்டுமின்மையானும், ஐயத்தைச் செய்யும் மனம் அதற்கு மறுதலையாகிய நிச்சயத்தினையுஞ் செய்தல் கூடாமையானும், கூடுமென்பார்க்கு நியமம் வேண்டாமையின், ஒருகருவியே எல்லாத்தொழிற்பாட்டிற்கும் அமையுமெனப்பட்டு ஏனைக்கருவிகளெல்லாம் மிகையாய்முடியுமாகலானும், இஃது இன்னதாகற்பாற்றென்னுஞ் சங்கற்பநிகழ்ந்தன்றி ஐயப்பாடு நிகழாமையின், அஃது ஒருதலையான் வேண்டப்படுதலானும், அது வேறொருகருவியின் றொழிற்பாடாதல் அமையாமையானும், என்னுல் இது செய்யற்பாற்றென்பது யான் இதனைச் செய்வேனென்னும் அகந்தையின் வேறன்மையான் அஃது ஆங்காரத்தின் றொழிலாவதன்றிப் புத்தியின்றொழிற்பாடன்மையானும் அங்ஙனங்கூறுதல் புத்திமுதலியவற்றிற்குத் தம்முள் வேற்றுமையறியாதார் கூற்றேயாமென் றொழிக.

அல்லதூஉம், புறப்பொருள் விடயத்தைப் பெயர் சாதி முதலியவற்றான் நிச்சயித்த ஞானமே சுகதுக்கமோகவடிவிற்றாய்த் தன்வேதனைக்காட்சியின் ஆன்மாவுக்கு விடயமாமென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின், அது மனத்தின் றொழிலாய வழிப், புத்திதத்துவம் போக்கியமென்பதூஉம், போக்கியமாதல் பற்றி இருவினைக்குச் சிறப்புவகையாற் பற்றுக்கோடு புத்திதத்துவமென்பதூஉம், தன்மம் ஞானம் முதலாயினவெல்லாம் அதன்கண்ணவென்பதூஉம் பொருந்துமாறு யாண்டையதென்க.

இனி, நையாயிகர்முதலியோர் தன்மம் ஞானம் முதலாயினவற்றை ஆன்மாவின் குணமென்பர். தோன்றிநின்று அழிவனவாகிய குணங்கள் சடப்பொருளுக்கன்றிச் சேதனப்பொருளுக் கேலாமையானும், ஏற்குமெனிற் குணகுணிகளின் இயல்பு

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், உஅ.

*"முன்னர்க் காட்டப்படுமாகலிற் குணமழியக் குணியுமழியுமாகலின், ஆன்மா விகாரியாய் அழிவெய்துமாகலானும், அது பொருந்தாதென்பதூஉம்; இதனானே அநுபவித்த பொருளைப் பின் நினைத்தற்கேதுவாகிய வாசனைக்குப் பற்றுக்கோடாவது புத்திதத்துவமேயன்றி, ஆன்மாவன்றென்பதூஉம் அறிக.

இதனானே ஆன்மாவே இருவினைக்குப் பற்றுக்கோடென்பார் மதமும் மறுக்கப்பட்டவாறு கண்டுகொள்க.

அஃதேல், புத்திதத்துவஞ் சடமாகலின், அதன்கண் ஞானமுண்டாமென்றல் மலிவாம்பிறவெனின்,—ஆகாது; புத்திதத்துவஞ் சடமாயினுஞ் சாத்துவிககுணத்தான் மேற்பட்டுத் தோன்றியதாகலின், சேதனப்பொருளாகிய ஆன்மாவிற்கு எதிர்முகமாயவழிக், கண்ணுடியின் நிழல்போல அதன்கண் எதிர்விம்பமாய் ஞானமுண்டாதல் பொருந்துமாகலின்.

## புத்திகுணபாவகங்கள்

இனிப், புத்தியின்குணங்களாகிய பாவகம் எட்டனுள், தன்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியமென்னும் நான்குஞ் சாத்துவிககுணத்தான் உளவாவன. அதன்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியமென்னும் நான்கனுள், அவைராக்கியமொழித்தொழிந்த மூன்றுந் தாமதகுணத்தான் உளவாவன. அவைராக்கியமாகிய அராகமொன்றும் இராசதகுணத்தான் உண்டாவதென்றறிக. மோகத்திற்கேதுவாதல்பற்றி, ஐசுவரியமுந் தாமதகுணத்தானுவதெனச் சிலவாகமங்களிற் கூறப்படும். தன்மமுதலியவற்றிற்குப் பொருள், அறம் அறிவு வெறுப்பு செல்வம் பாவம் அறியாமை விருப்பு வறுமையென மொழிபெயர்த்துக்கூறிக் கண்டுகொள்க.

## தன்மம்

அவற்றுள், தன்மமாவது, இயமம் நியமம் என்று இருவகைத்து. அவற்றுள் இயமம், கொல்லாமை மெய்ம்மை கள்ளாமை பிரமசரியம் அகந்தூய்மை என்று ஐவகைப்படும். நியமம், வெகுளாமை வழிபாடு புறந்தூய்மை உவகை செப்பம் என்று ஐவகைப்படும். இப்பத்தும் வேள்விமுதலிய அறஞ்செய்வார்க்கு ஒருதலையான் வேண்டப்படும் அங்கமென்றுணர்க. கண்ணோட்டம் அறிமடம் ஒப்புரவு நட்பு நடுவுநிலைமை முதலியனவெல்லாம் இவற்றுள்ளே அடங்கும். இவற்றினியல்பெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்; விரிந்தநூலுட்காண்க.

---

* தன்மாத்திரையினியல்பு கூறும்வழிக்காண்க.

## ஞானம்

இனி, ஞானம் எண்வகைப்படும். அவற்றுள், உம்மையின் வாசனைபற்றி முன்னெடுபின் மலிவின்றிப் பொருந்துமாற்றாற் பொருள்களை ஆராய்ச்சிசெய்து ஊகித்தறியும் ஞானம் ஒன்று. ஆத்தியான்மிகமுதலிய மூவகைத் துக்கத்தான் மடிவுவந்துழி நிகழ்வனவாகிய ஞானம் மூன்று. நட்டோர்கூறும் * வாயுறை மொழியான் வரும் ஞானம் ஒன்று. சாத்திரங்களைத் தானே யோகி உணர்தலானும், ஆசிரியனை வழிபட்டு ஒதியுணர்தலானும் வரும் ஞானம் இரண்டு. தான முதலிய நல்வினைகளான்வரும் ஞானம் ஒன்று. ஆக ஞானவகை எட்டுங் கண்டுகொள்க. இங்ஙனம் ஞானம் எண்வகைப்படுதலின், அதனான்வருஞ் சித்தியும் எண்வகைப்படுத்து ஓதப்படும். சித்தியெனினும் முத்தியெனினும் ஒக்கும்.

இங்ஙனங் காரண வேறுபாடுபற்றி எண்வகைப்பட்ட சித்திகள் பூதமுதற் புருடதத்துவம் வரையினிற்கும் மதவேறுபாடுபற்றி ஒரோவொன்று பப்பத்தாய் விரியான் எண்பதாமெனக் கொள்க.

அவையாவன :—

உலகாயதர் பூதக்கூட்டரவாகிய உடம்பே ஆன்மாவென நிற்றலிற் பூதங்களுக்கு மேலுள்ளதத்துவங்களை அறியும் ஞானமின்மையின், அவர் பூதவுலகத்தின் முத்தியைப் பெறுவர். பிராணவாயுவை ஆன்மாவென நிற்குங் கவுளரும் ஆண்டே முத்தியைப் பெறுவர்.

சோதிடநூலார் நாண்மீனுலகத்திற்சேறலே முத்தியென நிற்றலின், அவரும் பூதவுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

மிருதிநூலார் ஐம்பெரும் பூதத்திற்குக் காரணம் யாது அதுவே பிரமமென நிற்றலின், ஐம்பெரும்பூதத்திற்குக் காரணந் தன்மாத்திரையேயாகலின் அதற்குமேலுள்ள தத்துவங்களை உணராமையான், அவர் தன்மாத்திரையுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

உலகாயதரில் ஒரு சாரார் இந்திரியமே ஆன்மாவெனவும், சித்தமே ஆன்மாவெனவும், மனமே ஆன்மாவெனவும், ஆங்

---

* வாயுறைமொழியாவது, அருந்துங்காற் கைப்புடைத்தாய்ப் பின்னர் இதஞ்செய்யும் மருந்துபோலக் கேட்குங்கால் வெய்யதாய்ப் பின்னர் உறுதி பயக்கும் மொழி. இதனை, "வாயுறைவாழ்த்தே" என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியருரையினுங் காண்க. தொல், பொருள். சூ. ௨௯.

காரமே ஆன்மாவெனவும் நிற்றலின், அவர் அவ்வவுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

புத்தர் நையாயிகர் முதலியோர் முறையே புத்திதத்துவத்தின் பரிணமமாகிய ஞானமே ஆன்மாவெனவும், ஆன்மாவின் குணமெனவும் நிற்றலின், அவர் புத்திதத்துவவுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

சமணர் உண்டுமாம் இல்லையுமாம் என்றற் றொடக்கத்து எழுவகையான் அநேகாந்தம் பேசி நிற்றலின், மிக்குங் குறைந்தும் நிற்றல்பற்றி அங்ஙனங் கூறுதலின், அதற்கேற்புடையது குணதத்துவமாகலின் அதனை ஆன்மாவென மயங்கிக்கொண்டாரெனப்படுதலின், அவர் குணதத்துவவுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

பாஞ்சராத்திரிகள் நிலமுதலிய இருபத்துநான்கு தத்துவத்திற்கு மேலுள்ளபொருள் நாராயணனென்பர். இருபத்துநான்கு தத்துவத்திற்குமேலுள்ளது மூலப்பகுதியே யாகலின், அதனை மயக்கத்தான் நாராயணனெனக் கொண்டாரென்பதன்றிப் பிறிதின்மையின், அவர் மூலப்பகுதியுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

ஏகான்மவாதிகள் பொதுவகையானுஞ் சிறப்புவகையானும் போத்திருத்துவ மெய்திநின்ற புருடதத்துவத்தின் முத்தியைப் பெறுவர். சாங்கியர் பொதுவகையாற் போத்திருத்துவ மெய்திநின்ற புருடதத்துவத்தின் முத்தியைப் பெறுவர்; புருடதத்துவத்திற்கு மேலுள்ள பொருள்களை அறியாமையானென்க.

இவ்வாறே ஏனைப்புறச்சமயத்தாரும் அவ்வத்தத்துவங்களின் முத்தியைப் பெறுமாறு உய்த்துணர்ந்து கொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

அதுவதுவே முத்தியெனவும், அதுவதுவே சித்தாந்தமெனவும் நிற்பர்ர்க்கு, அவரறிந்த வெல்லையளவுஞ் சேறல் கூடுமாகலின் அறியாதவெல்லைக்கட் செல்லமாட்டாமையின், அவ்வத்தத்துவங்கள் அவரவர்க்கு முத்தித்தானமாயின என்க.

பூதமும், தன்மாத்திரையும், வாயிலும், சித்தமும், மனமும் ஆங்காரமும், புத்தியுங், குணமும், அவ்வியத்தமும், புருடனுமெனப் புறப்புறச் சமயத்தாரும் புறச்சமயத்தாரும் எய்துஞ் சித்தித்தானம் பத்தாகலின், சித்திகளும் ஒரோவொன்று பப்பத்தாய் விரியான் எண்பதாயினவாறு காண்க.

அற்றேல், புருடதத்துவத்திற்கு மேலும் அராகமுதல் மோகினியீறுகிய தத்துவங்களும், சுத்தவித்தைமுதற் சிவதத்துவ மீறுகிய தத்துவங்களுமு அதுவதுவே முத்தியெனநிற்கும் அகப்புறச்சமயத்தார்க்கும் அகச்சமயத்தார்க்கும் முறையே முத்தித்தானமாகலின், அவற்றையும் உடன்கூட்டியெண்ணித் தொகைகொள்ளாமை மலிவாம்பிறவெனின்—ஆகாது : புத்தி தத்துவத்தின் பரிணமமாகிய ஞானத்தானெய்துஞ் சித்திகண் மாத்திரையே ஈண்டு எடுத்துக்கொண்டாமையா னென்க.

குணரூபமாகிய புத்திதத்துவத்தின் தொழிற்பாடு பிரகிருதி புருடனுக்குமேற் செல்லமாட்டாமையின், ஆண்டெய்துஞ் சித்திகட்குக் காரணம் முறையானெய்தும் பலவேறு வகைப்பட்ட சத்திநிபாதமே யாமென உணர்க.

இங்ஙனமாகலாற் புத்தியின் குணமாகிய ஞானத்தானெய்தும் பிரத்தியயஞ் சித்தியெனத் தொகையான் ஒன்றும், ஊகித்தன் முதலிய காரண வேறுபாடுபற்றி வகையான் எட்டும், பூத முதலிய தானவேறுபாடுபற்றி விரியான் எண்பதுமாயவாறு கண்டுகொள்க.

## வைராக்கியம்

இனி, வைராக்கியங் காரணவேறுபாட்டாற் பத்துவகைப் படும். அவையாவன :—

பிணி முதலியவற்றுன் வருந்துவோரை நோக்கியவழி, எம் முடம்பும் இவ்வியல்பிற்றன்றே ; இதன் பொருட்டு உண்டி முதலியன தேடி வருந்துதலாற் பயனென்னையென வரும் வெறுப்பு ஒன்று.

ஆத்தியான்மிகமுதலிய மூவகைத் துக்கத்தான்வரும் வெறுப்பு மூன்று.

பொருளீட்டலுங் காத்தலு முதலியவற்று னெய்தும் வருத்தத்தை நோக்கி வரும் வெறுப்பு ஒன்று.

நட்டார்முதலியோரை இழந்தவழி அழுது வருந்தி இங்ஙனம் வருந்துதற்குக் காரணம் நட்புச்செய்தலன்றே யென்று எண்ணுதலான் வரும் வெறுப்பு ஒன்று.

காமுகன் தன்மனையாண்மாட்டு வெறுப்பு நிகழ்தற்கு ஏதுவாயதொன்றனைக் கண்டுழி அதனால் வரும் வெறுப்பு ஒன்று.

ஒருநாளோயுண்டி சுருங்கினும் வாட்டமுறுவதாகிய இவ்வுடம்பு எத்துணைக்காலம் ஓம்பினும் நிரம்புமாறில்லையென்று எண்ணுதலான் வரும் வெறுப்பு ஒன்று.

இழிந்தோர்பாற் சென்றுநின்று இரத்தன் முதலியவற்றிற்கு மனஞ் செல்லாமையான் வரும் வெறுப்பு ஒன்று.

இவற்றுளொன்றுனும் இன்றி உம்மைப் பிறப்பிற்செய்த தவவிசேடத்தான் வரும் வெறுப்பு ஒன்று. ஆக வைராக்கிய வகை பத்துங் கண்டுகொள்க. இன்னும் வெவ்வேறு காரணங்களெல்லாம் இவற்றுள்ளே அடங்கும்.

இப்பத்துவகை வைராக்கியத்தான்வருந் துட்டியும் அவற்றுற் பத்து வகைப்படும். துட்டியாவது வெறுப்பு நிகழ்ந்தமையான் உடம்பு முதலியவற்றை ஒம்புதற்பொருட்டு வருங் கவலையின் நீங்கி மகிழ்ச்சியெய்துதல், இப்பத்துவகைத் துட்டியும் மேற்கூறிய பூதமுதலிய முத்தித்தானம் பத்திற்கும் ஏதுவாதல்பற்றி, ஒரோவொன்று பப்பத்தாய் விரியான் நூறுமெனக் கொள்க.

## ஐசுவரியம்

இனி, ஐசுவரியம் அணிமா மகிமா முதல் எட்டுவகைப்படும். அவற்றுள், அணுவினும் அதிசூக்குமவடிவுற்று நிற்றல் அணிமாவென்னுஞ் செல்வம்.

மேருவினும் மிகப்பெரிய வடிவுற்றுநிற்றல் மகிமாவென்னுஞ் செல்வம்.

சேறுமுதலியவற்றின் இயங்கினும் அழுந்துதலின்றிக் காற்றினுங் கடுநடைத்தாய் மெல்லியவடிவுற்று நிற்றல் இலகிமாவென்னுஞ் செல்வம்.

மனத்தான் விழையப்பட்டன அனைத்தும் விழைந்தவாறே பெறுதல் பிராத்தியென்னுஞ் செல்வம்.

சங்கற்பமாத்திரையான் ஆயிரம் மகளிரைப்படைத்து அவ்வாயிர மகளிரோடும் ஆயிரம்வடிவாய்நின்று கிரீடித்தல் பிராகாமியமென்னுஞ் செல்வம்.

பிரமன்முதலியோர்மாட்டுந் தன்னுணைசெலுத்தி அவராற் பூசிக்கப்படுதல் ஈசத்துவமென்னுஞ் செல்வம்.

உலகமுழுவதையுந் தன்வசமாக்குதலும், உலகத்தை உண்டாக்குதலும் வசித்துவமென்னுஞ் செல்வம்.

விடயங்களே நுகர்ந்தும் அவற்றிற் றொடக்குண்ணுமை கரிமாவென்னுஞ் செல்வம்.

இவ்வெண்வகைச்சித்தியுள் முன்னியமூன்றும் உடம் பானும், பின்னிய வைந்தும் மனமுதலியவற்றானும் பெறப்படு வனவென்று உணர்க.

பேய்களுக்கு இவ்வெட்டும் நிலவுலகத்தை வியாபித்துக் கூறியவாறே உள்ளன. அரக்கருலகத்துள்ளார்க்கு நீருலகத் தையும் வியாபித்து இருமடங்கும், இயக்கருலகத்துள்ளார்க்குத் தீயுலகத்தையும் வியாபித்து மும்மடங்கும், காந்தருவவுலகத் துள்ளார்க்கு வாயுவுலகத்தையும் வியாபித்து நான்மடங்கும், இந்திரவுலகத்துள்ளார்க்கு ஆகாயவுலகத்தையும் வியாபித்து ஐந்துமடங்கும், சோமலோகத்துள்ளார்க்கு மனத்தினையும் வியா பித்து ஆறுமடங்கும், பிரசாபதியுலகத் துள்ளார்க்கு ஆங்கா ரத்தையும் வியாபித்து ஏழுமடங்கும், பிரமலோகத்துள்ளார்க் குப் புத்தியையும் வியாபித்து எட்டுமடங்கும் ஏற்றமாயுள்ளன வாகலான், எண்வகைச் செல்வமும் இங்ஙனம் ஒரோவொன்று எவ்வெட்டாய் விரியான் அறுபத்துநான்காமெனக் கொள்க.

இருகூற்றுப் பத்துவகைப்பட்ட தன்மமுடையார்க்கு எண் வகை ஞானத்துள் ஒருஞானம் உண்டாம்; ஞானத்தானே பத்துவகை வைராக்கியத்துள் ஒருவைராக்கியம் உண்டாம்; வைராக்கியத்தானே எண்வகைச் செல்வமும் உளவாம்; ஆக லின், இவை ஒன்றற்கொன்று ஏதுவாமாறு அறிக.

## அதன்மம்

இனி, இவ்வணிமாமுதலிய ஐசுவரியம் பெற்றூர் அதனுற் செருக்கெய்தி யோகநெறியைக் கைவிட்டு விடயங்களிற்றுவக் குண்டுகிடப்பாராகலின், அதுகாரணமாக அதன்மமுண்டாம். அதுவும் பத்துவகைப்படும். அவையாவன :—கொல்லாமை முதலிய பத்துவகைக்கும் மறுதலையாகிய கொலை பொய் களவு பிறர்மனைநயத்தல் அழுக்காறு வெகுளி வழிபடாமை மாசுண் டல் செற்றம் கோட்டம் என்பனவாம்.

## அஞ்ஞானம்

இனி, அதன்மத்தால் அஞ்ஞானமுண்டாம். அது, தமமும், மோகமும், மாமோகமும், தாமிசிரமும், அந்ததாமிசிரமுமென்று ஐவகைப்படும்.

அவற்றுள் தமமாவது, ஆன்மாவல்லதனை ஆன்மாவென மயங்குதல். அதுவும் மதவேறுபாட்டான் மேற்கூறிய பூத முதலிய பத்தினையும்பற்றி நிகழ்ந்து பத்துவகைப்படும்.

மோகமாவது, அணிமாமுதலிய எண்பெருஞ்செல்வமே மேலாகிய உறுதிப்பயனென மயங்குதல். அதுவும் அணிமாமுதலிய எட்டினும் நிகழ்ந்து எட்டுவகைப்படும்.

மாமோகமாவது, விருப்புச்சத்தம் வெறுப்புச்சத்தமுதலிய பத்தினும் இதுவே பொருளென மயங்குதல்.

தாமிசிரமாவது, உயர்ந்தனவும் இழிந்தனவுமாகிய இருகூற்றுச் சத்தமுதலிய பத்தினையும், அணிமாமுதலிய எண்பெருஞ்சித்தியினையும் பெறுதற்குரிய சாதகஞ்செய்துழி, அவைபெறுமையானுதல் பெற்றிழத்தலானுதல் வருந்துதல். அஃது அப்பதினெட்டும்பற்றி நிகழ்ந்து பதினெட்டு வகைப்படும்.

அந்ததாமிசிரமாவது, இருகூற்றுச் சத்தமுதலிய பத்தினையும், அணிமாமுதலிய எட்டினையும் ஒருயோகி அநுபவிக்குங்காலை, அவற்றுன்வரும் இன்பத்தினை அவனினும் மேற்பட்ட மற்றொரு யோகி கவர்ந்துழி, அதனான் வருந்துதல். அதுவும் அப்பதினெட்டும்பற்றி நிகழ்ந்து பதினெட்டுவகைப்படும்.

இங்ஙனந் தமத்தின்வகை பத்தும், மோகத்தின்வகை எட்டும், மாமோகத்தின்வகை பத்தும், தாமிசிரத்தின்வகை பதினெட்டும், அந்ததாமிசிரத்தின்வகை பதினெட்டுமாக விரியான் அஞ்ஞானம் அறுபத்து நான்காமென்று உணர்க.

## அவைராக்கியம்

இனி, அஞ்ஞானத்தான் அவைராக்கியமாகிய ஆசையுண்டாம். அது வைராக்கிய மறுதலையாய், அவ்வாற்றுன் நூறு வகைப்படும்.

இனி, அஞ்ஞானம் அறுபத்துநான்கும், அவைராக்கியம் நூறும், மனமும் ஆங்காரமும் வாக்காதியைந்துஞ் சுரோத்திராதியைந்துமென்னும் பன்னிரண்டுமாகிய நூற்றெழுபத்தாறுனும் அநைசுவரியத்திற்கேதுவாகிய அசத்தியென்னும் வலியின்மை உண்டாம். அவ்வசத்தி அவ்வக்காரண வேறுபாட்டான் நூற்றெழுபத்தாறுமாறு கண்டுகொள்க.

## அநைசுவரியம்

இனி, அவ்வசத்தியானே அநைசுவரியமென்னும் வறுமை உண்டாம். அஃது அணிமாமுதலிய எட்டுக்கும் மறுதலையாய் எட்டுவகைப்படும்.

இங்ஙனம் முறையானே தன்மவகை பத்தும், ஞானவகை எண்பதும், வைராக்கியவகை நூறும், ஐசுவரியவகை அறுபத்து நான்கும், அதன்மவகை பத்தும், அஞ்ஞானவகை அறுபத்து நான்கும், அவைராக்கியவகை நூறும், அநைசுவரியவகை எட்டு மாக நானூற்று மூப்பத்தாறும், அசத்திவகை நூற்றெழுபத் தாறும் உளப்படப் புத்திதத்துவவிருத்தி விரியான் அறுநூற் றுப்பன்னிரண்டாமென் றுணர்க.

அங்ஙனம் அநைசுவரியமாகிய வறுமையுடையானுக்கு மீளத் தன்மத்திற் கருத்துச் செல்லும். இங்ஙனமாகலின், புத்திதத்துவமாகிய சக்கரத்தில் தன்மமுதலிய பாவகமாகிய அரங்கள் எட்டினது முடிவுகாணமாட்டாது *மறித்து மறித் தும் உழிதருவன் புருடனென்று அறிக.

## ஆங்காரதத்துவம்

இனிப், புத்தி தத்துவத்தான் விடயத்தை நிச்சயித்தல், இஃது இன்னதெனநிச்சயிப்பேன் யான் என்று ஒருப்பட்டெழுந் தாலன்றி, உண்டாகாமையின், அங்ஙனம் ஒருப்பட்டெழுதற்குக் கருவியாய்ப், புத்தியினின்றும் ஏனைய இரண்டு குணமுங் குறைந்து இராசத மிக்குத் தோன்றுவது ஆங்காரமென்னுந் தத்துவமென் றுணர்க.

அற்றேல், ஒருப்பட்டெழுதலுந் துணிதலேயாகலின், புத்தி யின் றெழிற்பாடாகிய துணிதலோடு இதனிடை வேற்றுமை யின்மையின், புத்திதத்துவமேயமையும்; ஆங்காரமொன்று கோடன்மிகையா மாலெனின்,—அற்றன்று; புத்தியின்றெழிற் பாடாகிய துணிபு விடயத்தின்கண்ணதாய், இது குடம் இஃ தாடையெனப் பொருடோறும் வேறுவேறாய், இஃதென்னும் வடிவிற்றாய் நிற்பது. ஆங்காரத்தின் றெழிற்பாடாகிய துணிபு புருடன் கண்ணதாய், விடயந்தோறும் யான்நிச்சயிப்பேனென ஒன்றாய், யானென்னும் வடிவிற்றாய் நிற்பது. இங்ஙனந் தொழிற் பாடிரண்டிற்குந் தம்முள் வேற்றுமை பெரிதாகலின், இருவேறு வகைப்பட்ட தொழிற்பாட்டிற்குக் கருவி ஒன்றுதல் பொருந் தாமையான், புத்தியின்வேறாகிய ஆங்காரதத்துவம் மிகையா மாறு யாண்டையதென்க.

---

* "அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி—வீளை வொன்று மறியாதே வெறுவியனுய்க் கிடப்பேனுக்—களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்—களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே" என்னும் அமுதவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது; திரு. வாசகம், கண்டபத்தி, அ.

அல்லதூஉம், சாத்துவிகக்கூறு மிக்குப் பரிணமித்தாலன்றி இஃது இன்னதெனத் துணிந்தறிதற்குக் கருவியாதலும், இராசதக்கூறு மிக்குப் பரிணமித்தாலன்றி ஒருப்பட்டெழுதலுங் கூடாமையானும் இருவேறு தொழிற்கும் ஒன்றே கருவியாமென்றல் பொருந்தாமை யறிக.

இவ்வாங்காரங் கருவிக்காரகமாயினுங் கலிபோல வினை முதலாதற் கேதுவாய்ச் சிறப்புவகையான் நிச்சயிப்பேன் யான் என நிற்றலின், உபசாரத்தால் வினைமுதற்காரகமெனப்படுமாகலானும், அது விடயங்கட்கு எதிர்முகமாய் நிற்கும் புத்தியின்வேறுதல் அறிக. இவ்வாங்காரமும் புத்திதத்துவமுதலியனபோல ஆன்மாக்கடோறும் வெவ்வேறுய்ப் பலவாம். அற்றாகலினன்றே, ஒருதன்மையானன்றி, ஒருவன் யான் செல்வேனெனவும், ஒருவன் யான் உண்பேனெனவும், ஒருவன் யான் அறிவேனெனவும் அவரவர் வெவ்வேறுய் ஒருப்பட்டெழுவதூஉமென்க.

இவ்வாங்காரஞ் சாத்துவிகம் மிக்கு ஏனையிரண்டுங் குறைந்த கூற்றில் தைசதவாங்காரமென்றும், இராசதம் மிக்கு ஏனையிரண்டுங் குறைந்தகூற்றில் வைகரியாங்காரமென்றும், தாமதம் மிக்கு ஏனையிரண்டுங் குறைந்தகூற்றிற் பூதாதியாங்காரமென்றும் பெயர்பெற்று மூவகைப்படும்.

இவற்றுள், தைசதத்தின் மனமும், சுரோத்திரமுதலிய ஞானேந்திரியமைந்துந் தோன்றும்; வைகரியின் வாக்கு முதலிய கன்மேந்திரியமைந்துந்தோன்றும்; பூதாதியிற் சத்த முதலிய தன்மாத்திரையைந்துந் தோன்றுமென் றறிக.

அவற்றுள், மனமாவது வாயின்மாத்திரையான் நிருவிகற்பமாயறிந்த விடயப்பொருளிற் சங்கற்பவிகற்பம் நிகழ்தற்குக் கருவியாய் நிற்பது.

சங்கற்பமாவது இஃது யாதாகற்பாற்றென ஒன்றன் குணங்களைத் தூக்கிச் சிந்தித்துப், பின்னர் முன் அநுபவித்தறிந்த வாதனைபற்றிக் குணங்கள் இன்னவாகலின், இக்குணங்களையுடைய பொருள், குடமாகற்பாற்று ஆடையாகற்பாற்றென ஒன்றனை நினைக்கும் நினைவு.

விகற்பமாவது அங்ஙனம் நினைத்தபின்னர், இது குடமோ அன்றேவென்று எண்ணும் ஐயம். ஐயநினைவு நிகழ்ந்தன்றி, இஃது இன்னதாகற் பாற்றென்னுஞ் சங்கற்ப நினைவுமாத்திரையானே நிச்சயம் பிறவாமையின், சங்கற்பநினைவின்பின் ஐயம் ஒருதலையான் நிகழுமெனக் கொள்க.

இதனுனே சங்கற்பநினைவிற்கும் விகற்பநினைவிற்குங் காலவேறுபாடுமாத்திரையேயன்றிப் பயன்வேறுபாடின்மையின், மனம் ஒன்றே சங்கற்ப விகற்பமென்னும் இரண்டு தொழிற் பாட்டிற்குங் கருவியாமாறு என்னையென்னும் ஆசங்கைக் கிடமின்மை உணர்க; ஈண்டுப் பயன்வேற்றுமைபற்றித் தொழிற் பாட்டிற்கு வேற்றுமைகோடலின்.

அற்றாயினும், இஃது யாதாகற்பாற்றெனக் குணங்களைத் தூக்கிச் சிந்திக்கும் நினைவிற்கு நிருவிகற்பக்காட்சிமாத்திரையே காரணம். இன்னதாகற்பாற்றென்னுஞ் சங்கற்ப நினைவிற்குத் தூக்கிச் சிந்திக்கும் நினைவின்பின் வெளிப்படும் வாதனை காரணம். இவ்விருவகை நினைவுங் காலமாத்திரையானன்றிக் காரணத்தானுந் தம்முள் வேறுபாடுடைமையின், இவ்விரண்டற்கும் மனம் ஒன்றே கருவியாதல் சாலாதெனின்,—அஃதொக்கும். அங்ஙனமாயினும் பயனால் வேறுபாடின்மையின், மனமே அவத்தைவிசேடத்தாற் சித்தமென விருத்திப்பட்டு நின்று அங்ஙனந் தூக்கிச் சிந்திக்குமென்றுணர்க.

இதனுனே மனத்தின் விருத்தியாகிய சித்தமொன்று உண்டென்பது பெற்றும். அஃது ஏனைத்தத்துவங்கள்போலப் பரிணமமன்மையின், மனத்தின் வேறாகக் வைக்கற்பாற்றன்றென்னுங் கருத்தால், * "சிந்தைநினை வையம் வந்துதரு மன மொழிய வகுப்பொணுதே" என்றார் புடைநூலாசிரியரும். "சிந்தைநினை வையம் வந்துதரும்" என்பதனைச், "சிந்தை நினைவு வந்து ஐயந்தரும்" என மாறுக. "சிந்தை நினைவுவந்தையந்தரு" தலாவது, சித்தத்தின் றொழிற்பாடாகிய அங்ஙனந் தூக்கியெண்ணும் நினைவுநிகழ்ந்து வாதனையை வெளிப்படுத்துமுகத்தான் ஐயநினைவைத் தோற்றுவித்தல்.

இதனுனே அந்தக்கரணம் மூன்றெனக்கொண்டு, குணதத்துவத்தை மூலப்பகுதியின் வேறுவைத்தெண்ணி, மூலப்பகுதிக்குக் கீழ்த் தத்துவம் இருபத்துநான்கெனத் தொகைகொள்ளுவாரும், குணதத்துவத்தை மூலப்பகுதியுளடக்கி, உபகரித்தற் சிறப்புப்பற்றிச் சித்தத்தை மனத்தின் வேறுவைத்தெண்ணி, அந்தக்கரணம் நான்கெனக்கொண்டு மூலப் பகுதிக்குக்கீழ்த் தத்துவம் இருபத்துநான்கெனத் தொகை கொள்ளுவாரும், சித்தமும் மனமும் ஒன்றுகவைத்து, மூலப்பகுதியையுங் குணதத்துவத்தையும் ஒன்றுகவைத்தெண்ணி, இருபத்துநாலாந் தத்துவம் மூலப்பகுதியெனத் தொகை கொள்ளுவாருமெனப்

* சிவப்பிரகாசம், பொது, கூக.

பலதிறத்தர் ஆசிரியர். அவையெல்லாம் பொருளான் வேறு பாடின்மையின், தம்மூண்முரணுமை யறிக.

இஃதறியாதார் அந்தக்கரணம் மூன்றெனத் தொகை கொண்டு, சித்தமென்பதொன் றில்லையென்பர். சித்தமில்லையாயிற் கண்கண்டபொருள் எல்லாவற்றினுஞ் சங்கற்பவிகற்பம் நிகழ்தல்வேண்டும். அங்ஙனம் நிகழாமைக்குக் காரணம் வேறின்மையின், நிருவிகற்பமாய்க் கண்டபொருள் பலவற்றுள்ளும், இஃது யாதாகற்பாற்றென ஒன்றனைத் தூக்கியெடுத்துத் தன் காரணமாகிய மனத்திற்குக் கொடுக்குங் கருவியாகிய சித்தம் ஒருதலையான் வேண்டப்படுமாறு அறிக. ஆண்டு அறிதல்வேட்கையே காரணமெனின்,—கெட்டபொருளைத் தேடி நெறிச்செல்வோனுக்கு நெறியிடைக் கண்ட பொருள்களின் அறிதல் வேட்கையின்றியும் அறிவுநிகழ்தலான் ஆண்டு அறிதல் வேட்கை காரணமன்மையானும், ஆண்டுக் கன்மங் காரணமெனின், கன்மங் கருவித்துணையாதலின்றித் தானே காரணமாகாதென்பது * மேற்காட்டினுமாகலானும், வேறு காரணமின்மையானும் ஆண்டு மனத்தின் அவத்தைவிசேடமாகிய சித்தமே காரணமெனக் கொள்க.

அற்றேல், வழி நூலாசிரியர், † "சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்" எனச் சித்தத்தை அவ்வியத்தத்தின் அவத்தைவிசேடமாக வைத்தோதியது, "மனமொழிய வகுப்பொணாதே" என்றோதியதனோடு முரணும் பிறவெனின்,—முரணாது; அவ்வியத்தத்தின் காரியமாகிய அந்தக்கரணங்களும் அவ்வியத்தமென்று உபசரித்துக் கூறப்படுமென்னுங் கருத்தான் அவ்வாறு கூறினரென்க. அற்றாயினும், சிவப்பிரகாசத்திற் கூறுமாறுபோலச் சித்தத்தை மனத்தின்பின்வைத்தோதாது குணதத்துவத்தைச் சாரவைத்தோதியது மலிவாம் பிறவெனின்,—ஆகாது; செய்யுளாகலின், அங்ஙனம் முறை பிறழவைத்தாரென்க. ‡ "அந்தமனம் புத்தியுடனங்காரம்" என்றற்றொடக்கத்து நூல்களின் மனம் ஆங்காரங்கட்கு இடையே புத்தியைவைத்ததும் அவ்வாறெனக் காண்க.

இஃதறியாதார் § "பற்றியது நிச்சயித்துப் பல்காலெழுந் திருந்தங்—குற்றதுசிந் திக்குமுணர்" என்றிங்ஙனம் வைத்ததே முறைபோலுமென மயங்கிப் புத்திநிச்சயித்தபின் ஆங்காரம்

---

* நியதித்தத்துவத்தியல்புரைப்புழிக்காண்க. பக்கம், களக.

† சிவஞானசித்தி, உ-ம் சூத்திரம், நிஅ.

‡ நெஞ்சுவிடுதூது, அடி, கூஉ.

§ உண்மை விளக்கம், கள.

ஒருப்பட்டெழுமென்றும், ஒருப்பட்டெழுந்தபின்னர்ச் சித்தஞ் சிந்திக்குமென்றுங் கொள்வர். சித்தஞ் சிந்தித்தபின்னன்றிச் சங்கற்பவிகற்பங்கள் பிறவாவென்பதூஉம், ஆங்காரம் ஒருப் பட்டெழுந்தபின்னன்றி நிச்சயம் பிறவாதென்பதூஉம் ஈண்டுக் கூறியவாறுபற்றி அறிந்துகொள்க.

அற்றேல், நினைத்தற்பொதுமைபற்றிச் சித்தம் மனத்தின் விருத்தியாய் அதனுள் அடங்குமென்றுற்போலத், துணிதற் பொதுமைபற்றி ஆங்காரமும் புத்தியின் விருத்தியாய் அதனுள் அடங்குமெனவமையும்; பரிணுமமென்றல் பொருந்தாதெனின்,- அற்றன்று; மனஞ்சித்தங்களின் றெழிற்பாடாய இருவேறு வகை நினைவும் விடயத்தின்கண்ணவாய் நிற்றலின், தம்முள் வேறுபாடு முன்கண்டதுபவித்த வாதனை வெளிப்படுதற்கு முன் னிகழ்தலும் பின்னிகழ்தலு மாத்திரையேயன்றிப் பிறிதின்மை யின், ஆண்டுச் சித்தம் மனத்தின் விருத்தியாய் அதனுள் அடங்குமென்பதொக்கும்; ஈண்டு அவ்வாறன்றி ஆங்காரத்தின் றெழிற்பாடாகிய துணிபு யான் இன்னனுவனென்னும் வடிவிற் றுய்ப் புருடன்கண்ணே நிகழ்வதூஉம், புத்தியின் றெழிற் பாடாகிய துணிபு இஃது இன்னதென்னும் வடிவிற்றுய் விடயத் தின்கண்ணே நிகழ்வதூஉமாகிய தம்முள் வேறுபாடு பெரிதாக லின், ஆங்காரம் புத்தியின் விருத்தியாய்ப் புத்தியுளடங்கு மென்றல் சாலாமையறிக.

## மனத்தத்துவம்

இனி, வாதனைபற்றிநிகழுஞ் சங்கற்பவிகற்பமாகிய தொழிற் பாடு மனத்திற்கேயாகலின், ஒரு குடத்தை எதிரே காட்டி. இது குடமென்னுஞ் சொற்குப் பொருளென்று ஒருவனுணர்த்த வுணர்ந்தவன் மற்றொருகுடத்தைக் கண்டவழி, அவ்வாசனையான் ஒப்புமைபற்றி இதுவுங் குடமென்னுஞ்சொற்குப் பொருளென் றுணர்ந்துகோடற்கும், முன்காணப்பட்டவனைப் பின்கண்டவழி அவனேயிவனென்றுணர்ந்துகோடற்கும் ஏதுவாகிய கருவி மனமேயென்றுணர்க.

நையாயிகர்முதலியோர் இன்னோரன்னவற்றிற்குக் காரணஞ் சாமானியக்காட்சி யென்றும், சாமானியக்காட்சியாவது ஒரு குடத்தைக் கண்டபொழுதே சாதிபற்றி எல்லாக்குடத்தையுங் காண்டல் என்றுங் கூறுவர். ஒருகுடத்தையுணர்ந்த பொழுதே எல்லாக்குடத்தையும் உணர்ந்தாலுயின் அவ்வளவினும் முற் றுணர்வினனுதல் வேண்டும். அஃதவர்க்குங் கருத்தன்மையான் அது பொருந்தாமையறிக.

இன்னும், அவர் ஐம்பொறிகளுந் தத்தம் விடயங்களை ஒருங்குணராது ஒரோவொன்றுகவுணர்தற்குக் காரணம் அவ்வப்பொறிகளோடு மனத்திற்குளதாகிய சையோகமேயாகலின் மனந் தூலப்பொருளாயின், ஐம்பொறியினும் ஒருங்கு சையோகமாதற்கிழுக்கின்மையின், அவை ஒருங்குணர்தல் வேண்டும். அஃதின்மையான் அதிசூக்குமமாகிய அணுவளவிற்றாய் நிற்பது மனமெனவும், அங்ஙனமாகலான் அது நித்தப்பொருளெனவும் கூறுவர். அது பொருந்தாது; ஆங்காரத்திற்றோன்றிய மனம் ஆங்காரமீறுகிய தத்துவங்களை நோக்கித் தூலமாதலுடைமையானும், ஐம்பொறிகள் ஒரோவொன்று யுணர்தற்குக் காரணம் வித்தையாற் சிறிதேவிளங்கி அதுவதுவாய் அழுந்தியறிவதாகிய ஆன்மாவின் ஞானசத்தி எல்வாத்தத்துவங்களையும் ஒருங்கே அதிட்டிக்கமாட்டாது ஒரோ வொன்றுயதிட்டித்தலேயாகலின், ஆண்டு மனச்சையோகமே காரணமன்மையின், அதுபற்றி மனம் அணுவென்றல் சாலாமையானு மென்க.

மனம், நாட்டின்கண் நிகழ்வனவற்றைச் சென்றறிந்து வந்து வேந்தர்க்குப் புலனுகச்செய்யும் ஒற்றர்போலப், புறவிந்திரியங்களான் அறிந்த விடயத்தை இடையேகின்று பற்றி வாங்கிப் புத்தியின் எதிர்விம்பமாய்த் தோன்றுமாறு கொண்டுய்க்கும் அகவிந்திரியமாய்க், காகத்தின் கண்மணிபோல அகம்புறமாகிய ஈரிடத்தினும் விரைந்துசெல்லுஞ் சதாகதியுடையதாய் நிற்பதாகலின், புறவிந்திரியங்களோடொப்பத் தானுஞ் சாத்துவிகாகங்காரத்தினின்றும் அவற்றிற்கு மூன்றித் தோன்றுமென்றல் பொருந்துமாறு அறிக.

இனி, * "மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்—கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளேந்துங் கூட்டி—யொருபுல னுகரும்" என்றதுபற்றி ஒருவிடயநுகர்ச்சிக்கண் அவ்வத் தத்துவங்களின் றொழிற்பாடெல்லாம் ஒருங்கே நிகழுமென்பாரும் உளர் "கூட்டி—யொருபுலனுகரும்" என்றதற்குத் தாற்பரியம் ஒருவிடயத்தின்கண் அவ்வத்தத்துவங்களெல்லாம் முறையான் நிகழ்ந்தபின்னர் அஃது ஆன்மாவுக்குப் புலனுமென்பதேயாமாகாலானும், அங்ஙனங் கொள்ளாக்கால் அவை ஒன்றற்கொன்று ஏதுவாதல் பொருந்தாமையானும், ஒன்றற்கொன்று ஏதுவாகாதவழி, அவ்வத்தத்துவங்களின் றொழிற்பாடு நிகழாவென்பது † மேற்காட்டினுமாகலானும், ஒருவிடயத்தைப் புறவிந்திரியம் பொதுவாகையான் மூன்றினுணர, அதன்பின் அவ்விடயத்தை அகவிந்திரியமாகிய மனம்

* சிவப்பிரகாசம், உண்மை, கஉ. † பக்கம், கஅஅ.

பற்ற, அதன்பின் ஆங்காரம் ஒருப்பட்டெழ, அதன் பின்னர்ப் புத்தி நிச்சயிக்குமென்பதே முறையெனக் கொள்க. அங்ஙன மன்றி ஒருங்கே தொழிற்படுமென்றல் காலதிட்பமறியாதார் கூற்றேயாமென் றுழிக.

ஞானேந்திரியம்

இனிச், சாத்துவிக அகங்காரத்தினின்றும் மனத்தின் பின்னர் முறையானே தோன்றுவனவாகிய ஞானேந்திரிய மாவன:—செவி, துவக்கு, நோக்கு, நாக்கு, துண்டம் என் பனவாம்.

செவிமுதலிய இடங்களின்பெயர் ஆகுபெயராய் அவ்வ விடங்களை அதிட்டித்துநிற்கும் இந்திரியங்கட்காயின. இந்திரியம் பொறி வாயில் என்பன ஒருபொருட்கிளவி.

இவையைந்தும் ஆன்மாவின் ஞானசத்தியான் அதிட்டிக்கப்பட்டுப் பொருள்களை விசேடணவிசேடியவியல்புபற்றி அறியுமாறின்றி, நிருவிகற்பமாயறியுங் கருவியென்றுணர்க. இவை அறிகருவியாகலாற் சாத்துவிக அகங்காரத்தினின்றுந் தோன்றினவாதல் பொருத்தமுடைமை அறிக.

உலகாயதர் முதலியோர் செவிமுதலிய இடங்களை இந்திரியமென்பர். செவிடனுக்குச் செவியுள்ளதாகவும் ஓசை கேளாமையின், அது கேளாமைக்குக் காரணஞ் செவியென்னும் உறுப்பின்வேறாய் அதனையதிட்டித்து நிற்கும் இந்திரியமில்லாமையேயன்றிப் பிறிதின்மையாற் செவியென்னும் உறுப்பு இந்திரியமாகாதென்பது எல்லார்க்கும் விளங்கிக் கிடந்தவாறு அறிக. இது பற்றி ஏனையிந்திரியங்களும் அவ்வவிடங்களின் வேறுதல் கண்டு கொள்க.

கண்ணிந்திரியம்

இன்னும், கண்ணிந்திரியஞ் சென்றியைந்து விடயத்தை அறிவதன்றி, நின்றவாறேயறிதல் கூடாமையாற் கண்ணென்னும் உறுப்பு நின்றவாறு நிற்றலேயன்றிச் சென்றிசையுமாறின்மையானும் உறுப்பினை இந்திரியமென்றல் பொருந்தாமை யறிக.

அற்றேல், கண்ணிந்திரியஞ் சென்றியையவேண்டா, அபிமுகமாத்திரையானே காணுமென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; துவக்குமுதலிய இந்திரியங்கள் அவ்வப்புலனெடியைந்தன்றி அறியுமாறின்மை காண்டுமாகலிற் கண்ணும் அவைபோலப் புறவிந்திரியமாகலின், பொருளோடு இயைந்தன்றிக் காண்டல் கூடாதென்பது உணர்ந்துகொள்க.

அல்லதூஉம், அபிமுகமாத்திரையானே காணுமாயின், சுவர்க்கு அப்பாலுள்ள பொருளையுங் காணல்வேண்டும். கண்ணுக்கும் பொருளுக்கும் இடையேநின்ற சுவர் அபிமுகமாதற்குத் தடையாதலிற் காணுதெனின், அஃதங்ஙனமாயினும், அபிமுகமாதலின்றிப் பின்பக்கத்துளவாகிய பொருள்களை அபிமுகமாய்நின்ற கண்ணுடியின் எதிர்விம்பமாகக் காணுதல் காண்டும்; ஆண்டு அபிமுகங் காரணமென்றல் பொருந்தாமையின், இயைபே காரணமெனக்கொள்க.

அற்றேல், பின்பக்கத்துள்ள பொருளைக் கண்ணிற்திரியங் கண்ணுடியின் இயையுமாறு எங்ஙனமெனின், கூறுதும்:—குடத்தின் நீர்முதலியவற்றிற் பிரதிபலித்த ஞாயிற்றின் கிரணம் மீளக் குள்ளாகிய சுவரிற் சென்றியையுமாறுபோலக் கண்ணிற்திரியத் திணைளி கண்ணுடியிற் பிரதிபலித்து நின்று பின்பக்கத்துள்ள பொருளைச் சென்றியையுமென்று உணர்க. இங்ஙனமாகலின், விம்பத்தின் முகமே கன்ணுடியினின்று காணப்படுமெனவும், அதனை எனதுமுகமெனக்காண்டல் உண்மைக்காட்சியேயாமெனவும், கண்ணுடிக்குண்முகமின்மையின் விம்பத்தின்முகமே ஆண்டு வேறுபோல விளங்குமெனவும், கண்ணுடியினகத்துள்ளதுபோலத் தோன்றுதலும் விம்பத்தினளவிற்குச் சிறிது பெரிதுபோலத் தோன்றுதலுமாத்திரையே பொருந்துமாறு பற்றி மயக்கக்காட்சியெனப்படுமெனவும் அறிக.

இவ்வாறன்றிக் கண்ணுடியின் வேறுமுகமுண்டாமெனின், அஃதுண்டாதற்குக்காரணம் ஆண்டின்மையானும், உண்டெனக் கொள்ளினும் நகைத்தன் முதலிய சேதனத்தொழில் ஆண்டு நிகழ்தற்குக் காரணமின்மையானும் அது பொருந்தாமை அறிக.

அன்றியும், இருளினிடத்துளதாகிய புனலினும் எதிர்விம்பமாய் முகங்காணப்படுதலின், அது விம்பத்தின் வேறென்பார்க்கு ஆண்டுப் பிரகாசமின்மையின், காண்டல் செல்லாதாகல் வேண்டும். எமக்காயின், விம்பத்திற்குப் பிரகாசக் கூட்டரவுண்மையின், அதுவே புனற்கண் அதுபோலத் தோன்றுதலின், முரணுமாறில்லை யென்க.

அற்றேல், வேறெனக்கொள்வார்க்கும் விம்பத்திற்குரிய பிரகாசமே எதிர்விம்பத்தைக் காண்டற்கும் ஏதுவாமென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; அவ்வவற்றைக் காண்டற்கு அவ்வவற்றிற் பற்றிய பிரகாசமே காரண மென்பது யாண்டும் நியமமாகக் காணப்படுதலானென்க. இதனானே புனன் முதலியவற்றின் முகந்தோன்றுதல் மயக்கக்காட்சி யென்பார் மதமும் மறுக்கப்பட்டது; மயக்கக்காட்சியும் ஆண்டுப் பிரகாச

மில்வழி நிகழாமையானென்க. நிகழுமாயின், திணிந்தவிருளி னுங் கயிற்றைக்கண்டு பாம்பென மயங்குதல்வேண்டுமென் றெழுதிக.

இன்னும், கண்ணிந்திரியஞ்சென்றியைந்து காண்டலன்றி, எதிர்முகமாத்திரையானே காணுமாயின் ஆண்டுவிசேட மின்மை யின், சேய்மைக்கட் கண்டபொருளும் அணிமைக்கட்கண்ட பொருள்போல விளங்குதல்வேண்டும். அஃதின்மையானுஞ் சென்றியைந்து காணுமென்பதறிக. சென்றியைந்துகாணும்வழி, விளக்கினொளி சேய்மைக்கட் செல்லச்செல்லச் சிறுகுதல் போலக் கண்ணொளியுஞ் செல்லச்செல்லச் சிறுகுதலின், அங்ஙனங் காண்டல் பொருந்துமாறறிக.

அற்றேல், கண்ணிந்திரியம் எதிர்முகமாத்திரையானன்றிச் சென்றியைந்து காண்பதாயின், மரத்தின் நுனிக்கொம்பினையும், சேய்மைக்கண்ணதாகிய சந்திரனையும் ஒருங்குகாண்டலும்; பளிங்குமுதலியவற்றின் உள்வைத்த பொருளைத் தடையின்றிக் காண்டலுங் கூடுமாறென்னையெனின், கூறுதும்:—கண்முதலிய இந்திரியங்கள் விளக்கொளிபோல விடயத்தின் இயைந்தன்றி விளக்குதலின்மையானும், இயைபு வேண்டாதவழிச் சுவர் முதலியவற்றுன் மறைந்தபொருளையுங் காண்டல் வேண்டுமென் பது மேற்கூறினு மாகலானுங் கண்ணிந்திரியத்திற்குக் காணுங் கால் விடயத்தோடியைபுண்மை நியமமென்பது பெறப்பட்டது; படவே, நுனிக்கொம்பினையுந் திங்களினையுங் காண்டலும், பளிங்கு முதலியவற்றின் உட்பட்ட பொருளைக் காண்டலும் இயைந்தே காணுமென்பது பெற்றும். ஆண்டு நுனிக்கொம்பினையுந் திங்க ளினையும் ஒருங்கு கண்டேனென்று அநுபவநிகழ்தல், தாமரை யிதழ் நூற்றினையும் ஊசியான் ஒருங்கேபோழ்ந்தேனென நிகழும் அநுபவம்போல விரைந்துசெல்லுங் காலதுட்பமறியாமையின் நிகழும் அபிமான மாத்திரையேயெனவும், பளிங்குமுதலியன தூயனவாகலாற் சுவர்முதலியனபோலத் தடைசெய்வனவன்மை யின், அதிசூக்குமமாகிய கண்ணொளி விளக்கொளிபோல அவற் றின் உட்சேறல் கூடுமெனவும் நுண்ணுணர்வான் ஓர்ந்துணர்க.

அற்றேல், அதிசூக்குமமாகிய கண்ணொளி தன்னளவி னன்றி மலைமுதலிய தூலப்பொருட்களின் இயைந்துகாணுமா றென்னையெனின்,—சூக்குமமாயினும், புனலிற்றுளித்த எண் ணெய்த்துளியும், விளக்கொளியும்போலப் பரந்துவியாபிக்கும் இயல்புடைமையின், அங்ஙனங் காண்டற்கிழுக்கின்றென்க.

அற்றேல், இடத்தினிகழ்பொருள் இடத்தைவிட்டு நில்லா மையின், கண்ணிந்திரியந் தனக்கிடமாகிய கண்மணி இருளினிற்

புழி, விளக்கொளி கலந்தபொருளை இயைந்துகாணுமாறென்னை யெனின்,—கண்ணிந்திரியஞ் சாத்துவிக அகங்காரத்தினின்றுஞ் செவிமுதலிய இந்திரியங்களினும் அதிகமாய்ச் சத்துவகுணத் தான் மிக்குப் பரிணமித்தலின், ஒளியுடைமையான் இருளின்க ணிற்பினுந் தகழியினின்றெரியுந் தீபந் தன்னொளியாற் புறத்திற் சென்று பொருள்களை வியாபித்து விளக்குமாறுபோலத் தன் னொளியாற் புறத்துச்சென்று பொருள்களை வியாபித்து இயைந் தறிதல் கூடுமென்க.

அற்றேல், இமைதிறந்துழிப் புறத்திற்சென்ற தன்னொளி யோடியைந்தபொருளை இமைமூடியவழியுங் காண்டல்வேண்டுமா லெனின்,—அற்றன்று; குடவிளக்கினை மூடியவழிப் புறத்திற் சென்ற அதனொளி விரையக்கெடுமாறு போலப், புறத்திற் சென்ற தன்னொளி இமைமூடியவழி விரையக்கெட்டொழிதலின், காண்டல் செல்லாதென்க. ஈண்டுக் கெடுதலென்றது தன்னுள் வந்து ஒடுங்கிப்போதலை.

அற்றேல், செவிமுதலிய இந்திரியங்களுங் கண்ணிந்திரியம் போலச் சாத்துவிகாகங்காரத்திற் றோன்றுதலின், அவையுஞ் சென்றியைந்து விடயத்தை அறியுமென்னுமோவெனின்,—என் னும்; என்னை? அங்ஙனம் அநுபவமின்மையானென்க. செவி முதலியனவுஞ் சாத்துவிகாகங்காரத்திற்றோன்றியனவேயாயினுங் கண்ணிந்திரியத்தைநோக்கச் சத்துவகுணத்தாற் குறைவுடை மையின், அவை தங்கண் வந்த விடயத்தை இயைந்துணர்தலே அன்றிக் கண்போலச் சென்றியைந்து விடயத்தை அறியுமாறில்லை எனக்கொள்க.

அற்றேல், சேய்மைக்கண்ணதாகிய புனலின் றட்பமும், தாழம்பூமணமுந் துவக்கிற்கும் மூக்கிற்கும் விடயமாமாறு என்னையெனின்,—அநுகூலமாயியங்குங் காற்றுத், தண்ணீர் தாழம்பூ முதலியவற்றின் அவயவங்களைக்கொண்டுவந்துய்த் தலின், அவை அவற்றிற்கு விடயமாயினவென் றுணர்க. அன்றி, அவ்விந்திரியங்களே சென்றியையுமாயின், எதிர்காற்றியங்குழி யும் அவ்வவ்விடயங்களை அறிதல்வேண்டும். அஃதின்மையின் ஏனையிந்திரியங்கள் கண்ணிந்திரியம்போலச் சென்றறிவனவல்ல வென்க.

அங்ஙனமாயினும் ஓசை அவ்வாறு செவியின்கண்வந்து இயையுமென்றற்குப் பிரமாணமின்மையானும், இவ்வோசை வடபாலது, இவ்வோசை தென்பாலது, இவ்வோசை தேவகோட் டத்தது, இவ்வோசை வேந்தன் கோயின்மாட்டதெனவும்; இது முழவோசை, இது தண்ணுமையோசை, இது குழலோசை, இது

யாழோசையெனவும் அறிதல் சென்றியைந்தன்றியாகாமையா னுஞ் செவியிந்திரியங் கண்ணிந்திரியம் போலச் சென்றறியு மென்றலே பொருத்தமுடைத்தெனின்,--அற்றன்று; ஆண்டான் டெழுந்த ஓசை நீர்த்தரங்கம்போலச் சந்தானமாய்க் காற்றின் வேகத்தான் விரைந்துவந்து செவியின்கண் இயையுமாகலான், இங்ஙனம் வந்தியைந்த ஓசையினையே செவியிந்திரியம் அறியு மெனவும், அம்புமுதலியன வந்து வீழ்ந்தவழி, அவை வீழ்ந்த விசேடம்பற்றி இஃதின்னதிசையினின்றும் வந்ததென்று அநுமித்தறியுமாறுபோல, ஓசைவந்தியைந்த விசேடம்பற்றி அவ்வத்திசை அநுமித்தறியப்படுமெனவும், முழுவோசை தண் ணுமையோசை யென்றற் றொடக்கத்து வேறுபாடுகள் முன்னை அநுபவம்பற்றி அநுமித்தறியப்படுமெனவுங் கோடல் பொருத்த முடைமையாற் செவியிந்திரியமுந் துவக்கிந்திரியமுதலியன போலத் தன்கண்வந்தனவற்றை நின்றியைந்தறிவதன்றிக் கண் இந்திரியம்போலச் சென்றியைந்தறிவதன்றெனக் கொள்க.

நீர்த்தரங்கம்போல வருதலானன்றே சேய்மைக்கணெழுந்த மெல்லோசை ஆண்டாண்டெழுந்த வல்லோசைபோலச் செவிக் குப்புலனாகாததூஉம், அணிமைக்கணெழுந்த மெல்லோசை புலனாவதூஉமென்க. சேய்மைக்கணெழுந்த நீர்த்தரங்கமும் பெரி தாயிற் கரைகாறுஞ் சந்தானமாய் வந்தியைவதூஉம், சிறிதாயின் இடையே கெட்டொழிவதூஉங் கண்டு கொள்க.

ஈண்டுக் கூறியவாற்றாற் கண்ணிந்திரிய மாத்திரையே ஒளி யாற் சென்றியைந்து விடயத்தையறியுமென்பதூஉம், ஏனை நான்குந் தம்பால் வந்தனவற்றை அவ்வவ்விடங்களினின்று இயைந் தறிவனவென்பதூஉம், எவ்வாற்றானும் இந்திரியங்கள் விடயத் தோடியைந்தறிவனவன்றி எதிர்முகமாத்திரையான் அறிவன வல்லவென்பதூஉம், இதனானும் அவ்விந்திரியங்கள் அவ்வவிடங் களின் வேறென்பதூஉம் உணர்ந்துகொள்க.

## இருவுண்மை

அற்றேல், சாத்துவிகாகங்காரத்தினின்றும் ஏனையிந்திரியங் களினுஞ்சிறந்து சத்துவகுணமாத்திரையாய்ப் பரிணமித்து ஒளி யுடைத்தாகிய கண்ணிந்திரியந் தன்றொழிற்பாடு நிகழ்தற்குப் பிறிதோரொளியினுபகாரத்தை இன்றியமையாதவாறு என்னை யெனின்,—அங்ஙனமாயினுங், கண்ணிந்திரியம் ஏனையிந்திரி யங்கள்போலாது ஒளியாற் சென்றியைந்து விடயத்தை யறிதற் குரித்தாய் ஏனையிரண்டுங் குறைந்து சத்துவகுணமிக்குப் பரிண மித்த கூறுகிய சாத்துவிகாகங்காரத்தினின்றும் ஏனையிந்திரியங்

களினுஞ் சிறந்து சத்துவகுணசாரமாத்திரையாய்ப் பரிணமிப் புழி, அப்பகுதியின் எஞ்சினின்ற தமோகுணக்கூறுகிய சாரம் இருளெனப்பரிணமித்துக் குற்றச் சகசமாய் உடன்றோன்றிக் கண்ணொளியைத் தடைசெய்துநிற்றலின், அக்குற்றத்தை நீக்கி விடயத்தைக்காட்டுதற்கு, ஏனையிரண்டுங் குறைந்து தமோகுண மிக்குப் பரிணமித்தகூறுகிய தாமதாகங்காரத்தினின்றுஞ் சத்துவ குணமாத்திரையாய்ப் பரிணமித்துத் தனக்குத் துணையாகிய பூதவொளியின் உபகாரம் இன்றியமையாது வேண்டப்பட்ட தென் றுணர்க.

சாத்துவிகாகங்காரத்தினின்றும் ஆண்டு எஞ்சினின்ற தமோகுணக்கூற்றின் பரிணமமாகிய இருளுக்குத் தாமதாகங் காரத்தினின்றுஞ் சத்துவகுணமாத்திரையாய்ப் பரிணமித்த பூதவொளியே மறுதலைப்பொருளாகலின், அஃது அவ்விரு ளாகிய குற்றத்தை நீக்கித் தன்னைடொப்பச் சத்துவகுண சாரமாத்திரையாய்ப் பரிணமித்த கண்ணொளிக்குத் துணையாய் நின்று காட்டுதல் சாலுமென்பது பொருந்துமாறுபற்றி உணர்ந்துகொள்க.

இதனானே *ஆலோகத்தினபாவமே இருளென்றும், அன்றிப் பாவப்பொருளெனின், இதற்குத் தோற்றம் யாண் டையதென்றுங் கூறுவார் மதங்களெல்லாம் போலியாயவாறு காண்க.

ஆலோகத்தின் அபாவமே அந்தகாரமென்பார்க்கு அம் முறைபற்றிச், சுகத்தினபாவமே துக்கம், தன்மத்தினபாவமே அதன்மம், சையோகத்தினபாவமே விபாகமென்று இவ்வாறு கோடல்வேண்டும்; அங்ஙனங்கொள்ளாமையான், அவர்க்கும் அது கருத்தன்றுபோலுமென மறுக்க.

அன்றியும், ஆண்டு ஒளியில்லை இருளுள்ளது என ஒளி யின்மையின் வேறாய் இருளென்னும் உணர்வு நிகழ்தலானும், ஆட்டின்கழுத்திற்றாங்கும் மூலையோடொக்கும் அபாவத்தாற் செய்யக்கடவதொன்று யாண்டுமின்மையானுங் கண்ணொளி யைத் தடைசெய்துநிற்பதாகிய இருளே அபாவமென்றல் கூடா மையறிக.

இவ்விருளினதுண்மை வெள்ளிடையின் அலரவிழித்து நோக்கியவழியும் மறைத்தற்றொழில் நிகழ்தல்பற்றிப் பாரி சேடவளவையான் அறியப்படும்.

---

* ஆலோகம் - ஒளி.

அற்றேல், நீலவடிவிற்றுய்த்தோன்றுதலின், இருள்காட்சிப் பொருளென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று, துன்னியவிருளின்கண் விழித்துழிப்போலக் கண்ணிமை இறுக மூடியவழியும் ஒருதன்மைத்தாய்த் தோன்றுதலின் வேற்றுமையின்மையான், ஆண்டுத் தோன்றுவதும் ஒரு வடிவப்பொருளாமெனின், வடிவப்பொருள் கண்மூடியவழிக் காட்சியெய்துதல் சாலாமையான் அது மயக்கவுணர்வேயாமென்பது போதருதலின், விழித்துழி அவ்வாறு தோன்றுவதும் அதுபோல மயக்கவுணர்வாவதன்றி, இருளின்றோற்றம் அன்றென்பது அநுபவத்தாற் கண்டுகொள்க. *"ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்" என்பது காட்சிப்பொருளாமென்னும் பொருட்டன்று; உடனுப் மறைந்துநிற்புழியும் பாரிசேட வளவையான் அறியப்படு மியல்பிற்று என்னும் பொருட்டேயாம். இன்னுமிதனை விரிப்பிற் பெருகுமென் றொழிக.

அஃது அங்ஙனமாக; மூலமலம் ஒன்றே பலசத்தியையுடைத்தாயதுபோல ஞானேந்திரியமொன்றே அவ்வவிட வேறு பாட்டான் அவ்வவ்விடயங்களையறியும் ஐவகைச்சத்தியையுடைத்தென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று; மூலமலம், ஆன்மாக்கள் பலவாயினும் அவற்றினிச்சா ஞானக்கிரியைகளை மறைத்தற்றொழில் ஒன்றேயாதல்பற்றி ஒன்றெனத் துணிந்தவழிப், பந்தமும் வீடும் பலவேறுவகைப்படும் வரையறை பற்றி ஒன்றுகிய மூலமலத்திற்குச் சத்திகள் பலவுளவென்பது துணியப்படும். கண்முதலிய இந்திரியங்களதுண்மை அவ்வாறன்றித் துணியும்பொழுதே தம்முள் வேற்றுமையுடைய ஐவகைத்தொழிற்பாட்டிற்கு வேறுவேறு கருவியாதல்பற்றித் துணியப்படுதலின், மீளவொன்றென்றல் முரணுதலான் அது பொருந்தாமை யறிக.

அற்றேல், புறக்கரணம் அந்தக்கரணமென்னும் இருவகையுள் ஒன்றேயமையும், இரண்டுங்கோடன் மிகையாமெனின்,—அற்றன்று; புறக்கரணம் நிகழ்காலப்பொருளொன்றனையே அறியும்; அந்தக்கரணம் முக்காலப்பொருளினையும் அறியும்; இவை தம்முள் வேற்றுமையாகலான், நிகழ்காலமாத்திரையின் அறிதல்பற்றிப் புறக்கரணமும், முக்காலமுமறிதற்பொருட்டு அந்தக்கரணமும், நிகழ்காலமாத்திரையேயறியும் புறக்கருவியில்வழிக், குருடர் செவிடர் முதலியோர்க்கு அந்தக்கரணம் பயன்படாமையின், அவை பயன்படுதற்பொருட்டு அதற்கேதுவாகிய புறக்கருவியும் ஒருதலையான் வேண்டப்படுதலின், மிகையாதல் யாண்டையதென்க.

---

* திருவருட்பயன், கூ-வது, இருண்மல நிலை, கூ.

இன்னும், அறிந்தன்றிச் செய்தல்கூடாமையின், வாக்கு முதலிய கன்மேந்திரியங்களின் ரூழிற்குச் செவிமுதலிய ஞானேந்திரியங்களின் அறிவு உபகாரமாதல்பற்றியும் அவை ஒருதலையான் வேண்டப்படுமென்ப தறிக.

இனி, நையாயிகர்முதலியோர் ஓசைமுதலிய வைந்தும் ஆகாயமுதலிய பூதங்களின் குணமாதலான், அவ்வப்பூதகுணங் களைத் தெரிவிக்குஞ் செவிமுதலிய விந்திரியம் அவ்வப்பூதங் களிற்ரூன்றிய காரியமென்றலே பொருத்தமுடைத்தாகலான், ஞானேந்திரியங்கள் பௌதிகமேயா மென்பர். இந்திரியம் பூதகாரியமாயிற் குடமுதலியனபோல வடிவுடைத்தாய் வேரூர் இந்திரியத்தான் அறியப்படுவதூஉ மாமெனப்பட்டு அநவத்தை யாய் முடியுமாகலின், அது பொருந்தாமை யறிக.

இன்னும், அவ்வவற்றின் குணங்களைத் தெரிவிப்பன அவ்வவற்றின் சாதியவேயா மென்பார்க்குக் கண்ணிந்திரியந் தேயுவினுருவ மாத்திரையைத் தெரிவிப்பதன்றி, நிலத்தின் குணமாகிய நிலவுருவமுதலியவற்றையுந் தெரிவித்தலின், கண் ணிந்திரியம் நிலத்தின் காரியமெனவுங் கோடல்வேண்டும்; அங்ஙனங் கொள்ளாமையான், அவர்க்கும் அது கருத்தன்று போலுமென மறுக்க. இவ்வாறே செவிமுதலிய விந்திரியங் களும் அவ்வப்பூத குணமாத்திரையையே தெரிவிக்குமென்னும் நியமமின்றி, ஏனைப்பூதகுணங்களையுந் தெரிவிக்குமாறு கண்டு கொள்க.

இதனானே இந்திரியம் பூதகாரியமெனச் சாதித்தற்கு அவர் கூறிய பிரமாணம் போலியாதல் உணர்ந்துகொள்க; சத்தகுணம் ஆகாயமாத்திரைக்கேயன்றி வாயுமுதலியவற்றிற்கும், பரிசம் வாயுமாத்திரைக்கேயன்றித் தேயுமுதலியவற்றிற்கும், உருவந் தேயுமாத்திரைக்கேயன்றிப் புனன்முதலியவற்றிற்கும், இரதம் புனன்மாத்திரைக்கேயன்றி நிலத்திற்குமுண்மையானென்க. அல்லதூஉஞ், சாத்துவிகரூபமான அறிகருவியை அறியாமை யைச் செய்யுந் தமோகுணரூபமான பூதத்தின் காரியமென்றல் சாலாமையறிக.

## கன்மேந்திரியம்

இனி, இராசதவாங்காரத்திற் ரூன்றுங் கன்மேந்திரியம் ஐந்தாவன வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்பன வாம். இவையும் அவ்வவறுப்பின்பெயர் அவ்வவற்றையதிட் டிக்கும் இந்திரியங்கட்கு ஆகுபெயராயின. இவ்வைந்துந் தொழில்செய்யுங்கருவியாகலின், இராசதவாங்காரத்திற்ரூன் றினவாதல் பொருத்தமுடைமை கண்டுகொள்க.

செவிமுதலிய ஞானேந்திரியங்கள் ஆன்மாவின் ஞானசத்தி மாத்திரையே விளக்கிநிற்பனவாகலின், கிரியாசத்தியை விளக்குதற்குக் கன்மேந்திரியமைந்தும் வேண்டப்படுமென்க. ஈண்டுக் கன்மமென்றது ஆன்மாவின் கிரியாசத்தியை. ஞானசத்தியுங் கிரியாசத்தியும் இயற்கையாற் றம்முள் வேறுபாடுடையவல்ல வாயினுஞ் செயற்கையான் வேறுபாடுடைமையின், கருவிகளும் வேறுவேறு வேண்டப்பட்டன. ஆன்மாவின் ஞானசத்தி ஒன்றுயினும் அறியப்படுஞ் சத்தமுதலிய விடயங்கள் ஐவேறு வகைப்படுதல் பற்றி அறிகருவி ஐந்தாயினாற்போலக், கிரியாசத்தியும் ஒன்றுயினும், செய்யப்படும் புடைபெயர்ச்சித்தொழில் வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தமென்று ஐவேறு வகைப்படுதல்பற்றித் தொழிற்கருவியும் ஐந்து வேண்டப்பட்டனவென்பது.

அற்றேல், புருவநெரித்தல் பற்கடித்தல் சிரமசைத்தன் முதலிய தொழில்களுமுண்மையின், புடைபெயர்ச்சி ஐவகைத்தென்றல் சாலாமையின், அவற்றைச்செய்யுங் கருவியாகிய இந்திரியங்களும் பலவாதல் வேண்டுமாகலின், ஐந்தென்றல் சாலாதெனின்,—அ ற் ற ன் று ; புருவநெரித்தன் முதலியன பாணியின்றொழிலாகிய இடுதலேற்றலின் வகையாயடங்குதலின், இந்திரியங்கள் உடலெங்கும் வியாபகமெனக்கோடலின், பாணியிந்திரியம் புருவநெரித்தன்முதலிய தொழில்களைச் செய்யுங்கால் அவ்வவ்வுறுப்புக்களே அதிட்டித்துநின்று செய்யுமெனக்கொள்க. இவ்வாறே உடம்பினிகழும் எல்லாத்தொழில்களும் வசனமுதலிய ஐந்தினும் அடங்குமாறு அறிந்தடக்கி, வாக்குமுதலிய ஐவகையிந்திரியங்களுள் ஒன்றின்றொழிற்பாடாதல் கண்டுகொள்க.

பாணி முதலியவிந்திரியங்கள் ஏனையுறுப்புக்களையும் அதிட்டிக்குமாயினும், பாணிமுதலியவற்றிற்கு விசேடவதிட்டானமாதல்பற்றிப் பாணி முதலிய பெயர் பெற்றனவெனக்கொள்க. வாக்குப் பாதமுதலிய உறுப்புக்களே அவ்வத்தொழிற்குக் கருவியாமென்றுற்படும் இழுக்கென்னையெனின்,—அற்றன்று ; வாக்குப் பாதமுதலிய உறுப்புள்வழியும் அவ்வத்தொழில் நிகழுமாறின்றி மூங்கையும் முடமும் முதலியனவாதல் காண்டுமாகலின், ஞானேந்திரியம்போலக் கன்மேந்திரியங்களும் அவ்வவ்வுறுப்புக்களின் வேறுய் அவற்றை அதிட்டித்து நிற்பன உளவெனக்கொள்க.

அற்றேல், ஞானேந்திரியங்களால் நிருவிகற்பமாயறிந்த விடயங்கள் பலவற்றுள், ஒன்றனைத் தூக்கிச் சித்தஞ் சிந்திப்ப,

அதன்பின் மனஞ் சங்கற்பவிகற்பங்கள் செய்தபின் ஆங்காரம் ஒருப்பட்டெழு, அதனைப் புத்தி நிச்சயித்தமாத்திரையே சுக துக்க மோகரூபமாய் ஆன்மாவிற்குப் போக்கியமாதலின், கன் மேந்திரியங்களாற் பயனென்னையெனின்,—அற்றன்று; சிறு பான்மை அங்ஙனம் நிச்சயித்தமாத்திரையே போக்கியமா மாயினும், நிச்சயித்தபொருள் மீள ஆங்காரத்தால் யான் நிச்சயித்தேனெனவும், யான் இதனைச் செய்வேனெனவும் ஒருப் பட்டெழுந்து செய்யுமாறு மனத்தாற் சங்கற்பவிகற்பங்கள் செய்து எண்ணியபின் மீள ஞானேந்திரியங்களான் அறிந்து கன்மேந்திரியங்களாற் காரியப்பட்டு மீளவும் முறையானே புத்தி தத்துவத்தின் வந்து போக்கியமாதலே பெரும்பான்மை யாகலின், கன்மேந்திரியங்கள் ஒருதலையான் வேண்டப்படு மென்க.

இனிச், சாங்கியர் ஆன்மாவுக்கு ஞானசத்திமாத்திரையே யன்றிக் கிரியாசத்தி இல்லையெனவும், ஆன்மாவின் சந்நிதியின் உடம்பிற் கிரியைநிகழுமெனவுங் கூறுவர். சந்நிதிமாத்திரை யானே சடத்தின்கட் கிரியைநிகழுமாயின் வியாபகமாகிய ஆன் மாவின்சந்நிதி யாண்டுமுண்மையின், விசேடமின்மையாற் குட முதலியவற்றினுங் கிரியைநிகழ்தல்வேண்டும். அதுகாணுமை யானுஞ், சித்துக்கன்றிச் சடத்துக்குக் கிரியையின்மையானும், ஞானக்கிரியாரூபமாகிய சத்தி ஆன்மாவைப் பற்றிநிற்பதன்றிப் புத்திதத்துவமுதலிய சடத்தைப்பற்றி நில்லாதெனவும்; அவை விளங்குதற்கு இவை கருவியாதன் மாத்திரையேயெனவும் அறிக.

இனித், தார்க்கிகர் இந்திரியங்கள் ஆன்மாவின்கண் ஞான முதலியவற்றைப் பிறப்பிப்பனவன்றி, முன்னுள்ளவற்றை விளக் குவனவல்லவென்பர். இல்லது தோன்றுதென்பது சற்காரிய வாதத்துட் கூறினுமாகலானுங், குணியினுடனே எக்காலமும் நீக்க மின்றிநிற்பது குணமாவதன்றி, இடையே தோன்றியழிவது குணமாகாமையானும் அது பொருந்தாதெனவும்; அநாதியே ஞானக்கிரியாசத்திகள் மலத்தாற்றடையுண்டமையின், பாடா ணம்போற்கிடந்த ஆன்மாவுக்குத் தடையைநீக்கி ஞானக்கிரியை களே விளக்குதன்மாத்திரையே இந்திரியங்களின் தொழிற்பா டெனவும் உணர்க.

இருட்காலத்தின் விளக்குள்வழிப் பொருள்கள் விளங்கும்; விளக்கு நீங்கியவழி விளங்கா. அதுபற்றிப் பொருள்கள் அங்ஙனந் தோன்றி யழிந்தனவெனப்படா; அதுபோல, மலத் தாற் றடையுண்டிருக்கும் பெத்தகாலத்தில் ஆன்மாவின் ஞானக்

கிரியைகள் கருவிகள் கூடியவழி விளங்கும்; அவை நீங்கியவழி விளங்கா; அதுபற்றித் தோன்றியழிவனவெனப் படாவென்க.

அற்றேல், இமையாடுதலுமின்றி ஒருவிடயத்தை இடையறாது நோக்கியவழியும் அதுபவஞானங் கணந்தோறும் வெவ்வேறாய் நிகழுமாறென்னோ? ஆண்டு காண்டற்குரிய கருவிகளாற் குறைவில்லையாலோவெனின்,—அற்றன்று; ஞானக்கிரியைகளை விளக்கும் புத்திதத்துவமுதலிய கருவிகளின் தொழிற்பாடுசந்தானமாய்க் கணந்தோறும் வேறுபட்டு நிகழ்தலின், அதுபற்றி ஞானமுஞ் சந்தானமாய் விளங்குதலின், அவ்வாறு அதுபவிக்கப் படுமென்க.

இதனானே அங்ஙனம் அதுபவநிகழ்தலேபற்றி ஞானங் கணபங்கமென்னும் புத்தர்மதமும் மறுக்கப்பட்டவாறு அறிக.

## தன்மாத்திரை

இனித், தாமதாங்காரத்திற் றோன்றுந் தன்மாத்திரை ஐந்தாவன சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்பனவாம். இவையைந்துஞ் சுரோத்திராதி வாக்காதியாகிய இருவகை இந்திரியங்கட்கும் முறையே இடமாய்த் தேரூர்வானுக்குத் தேர்போல அவை அறிதலுஞ் செய்தலுமாகிய தத்தந்தொழிற்பாட்டினைச் செய்தற்கண் மதுகையெவிளைத்து நிற்றன்மாத்திரைக்கே கருவியாகலின், இவை தாமதாங்காரத்திற் றோன்றினவாதல் பொருத்தமுடைமை அறிக.

அற்றேல், செவிமுதலிய இந்திரியங்கட்குச் செவி வாய் முதலியவுறுப்புகள் இடமென மேற்கூறினமையின், ஈண்டுச் சத்தமுதலிய தன்மாத்திரை இடமென்றல் மலைவாம்பிறவெனின்,—ஆகாது; தேரூர்வானுக்குத் தேரும் தேரோடுநிலமும் இடமெனப்படுதல்போல இரண்டுமிடமாதல் அமைவுடைமையானென்க.

இவற்றுள், வல்லோசை மெல்லோசைமுதலிய சிறப்புவகை ஓசைகளையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையான் ஓசைமாத்திரையாய்ச் சூக்குமமாய்நின்றது சத்ததன்மாத்திரையெனவும், அவ்வோசையொடுகூடத் தட்பம் வெப்பம் முதலிய சிறப்புவகைப் பரிசங்களையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையாற் பரிசமாத்திரையாய் சூக்குமமாய் நின்றது பரிசதன்மாத்திரை யெனவும், அவ்விரண்டனொடுகூட வெண்மை செம்மை முதலிய சிறப்புவகையுருவங்களையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையான் உருவமாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது உருவதன் மாத்திரையெனவும், அம்மூன்றனொடுகூடத்

தித்திப்புப் புளிப்புமுதலிய சிறப்புவகைச் சுவைகளையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையாற் சுவைமாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது இரததன்மாத்திரையெனவும், இந்நான்கினொடு கூட நறுநாற்றந் தீநாற்றமென்னும் இருபகுதிச் சிறப்புவகைக் கந்தங்களையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையாற் கந்தமாத்திரையாய்ச் சூக்குமமாய்நின்றது கந்ததன்மாத்திரையெனவும், இவை முறையே ஆகாயமுதலிய பெரும்பூதமைந்திற்கும் முதற் காரணமாமெனவும் அறிக.

அற்றேல், ஆகாயமுதலிய ஐம்பெரும்பூதங்கட்குச் சத்த முதலிய தன்மாத்திரையே முதற்காரணமென்னுது, தாமதாங் காரமே முதற்காரணமென்றுற்படும் இழுக்கென்னையெனின்,— அற்றன்று; ஆகாயம் பல வேறுவகைப்பட்ட சத்தமென்னும் ஒரு குணமுடையது; வாயுப் பலவேறுவகைப்பட்ட சத்தம் பரிசம் என்னும் இரண்டுகுணமுடையது; தேயுப் பலவேறு வகைப்பட்ட சத்தம் பரிசம் உருவம் என்னும் மூன்று குண முடையது; அப்புப் பலவேறுவகைப்பட்ட சத்தம் பரிசம் உருவம் இரதம் என்னும் நான்குகுணமுடையது; புடவி பல வேறுவகைப்பட்ட சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்துகுணமுடையதாகலின், இக்குணங்கள் காரணத்திற் சூக்குமமாய் நிகழ்ந்தன்றிக் காரியத்திற் றூலமாய் நிகழ்தல் கூடாதென்பது நியமமாகலின் தாமதாங்காரங் கேவலமாய் நிற்ப தாகலின், அதன்கண்ணே மயிலண்டசலத்திற் பஞ்சவன்னம் போலச் சத்தமுதலிய குணங்கள் சூக்குமமாய் நிகழ்தலின்மை யின், அங்ஙனஞ் சூக்குமநிகழ்சியுடைய தன்மாத்திரைகளே தூலநிகழ்ச்சியுடைய பெரும்பூதமாய்ப் பரிணமிக்குமென்று உணர்ந்துகொள்க.

அற்றேல், அங்ஙனம் பெரும்பூதங்கட்குக் காரணமாய்ப் பொதுமையினிற்குந் தன்மாத்திரை ஒன்றுதலேயமையும்; ஐந்துளவாதன் மிகையாமாலெனின்,—அற்றன்று; காரணமாய தன்மாத்திரை ஒன்றுபவழி, விசேடமின்மையின், காரியமாகிய பெரும்பூதங்களைந்தும் ஐந்து குணமுமொப்பவுடையவாதல் வேண்டும். அங்ஙனமன்றி ஆகாயத்திற்கு ஒருகுணமும்வாயுவுக்கு இரண்டுகுணமும், தேயுவுக்கு மூன்றுகுணமும், அப்புவிற்கு நான்குகுணமும், புடவிக்கு ஐந்துகுணமும் இங்ஙனம் நிகழ்தல் காரணவேறுபாட்டானன்றி உண்டாகாமையின், அவ்வாறு நிற்குந் தன்மாத்திரை ஐந்துளவாதலறிக.

இதனானே தன்மாத்திரைகட்கும் பூதங்கட்குந் தம்முள் வேற்றுமை, முளையும் மரமும்போலச் சூக்குமமாய் நிற்றலுந்

தூலமாய்நிற்றலுமாத்திரையே யன்றிப் பிறிதில்லை யெனக் கொள்க.

இத்தன்மாத்திரைகளுள்ளுந் தாமதாங்காரத்தினின்றும் ஒன்றன்பின்னொன்று முறையானே தோன்றுங்கால் ஒரோவொருகுணம் அதிகமாகத்தோன்றுதலின், அவ்வதிககுணத்தின் பெயரேபற்றித் தலைமைபற்றிய வழக்காய்ப் பரிசதன்மாத்திரை உருவதன்மாத்திரை இரததன்மாத்திரை கந்ததன்மாத்திரையெனப்படுதலும், கந்தமொழிந்த நான்குகுணமும் பொதுவாயினும் அம்முறையேபற்றிச் சிறப்புக்குணமெனப்படுதலும் பொருந்துமாறறிக.

குணகுணிகளிலியல்பு

அற்றேல், சத்ததன்மாத்திரையாய் நிற்பது சத்ததன்மாத்திரை ; பரிசதன்மாத்திரையாய் நிற்பது பரிசதன்மாத்திரை ; உருவதன்மாத்திரையாய் நிற்பது உருவதன்மாத்திரையென்று இங்ஙனங் கூறியவாற்றால், தன்மாத்திரைகள் குணரூபமாத்திரையாய் நிற்குமென்பது பெறப்பட்டது ; குணியுமுளவாயின், அது மாத்திரையெனப் பிறிதினியைபுநீக்கிக் கூறப்படுதல் பொருந்தாமையின். அங்ஙனமாகவே குணரூபமாகிய தன்மாத்திரைகள் குணிரூபமாகிய ஆகாயமுதலியவற்றிற்குக் காரணமாதல் அமையாதெனின்,—அறியாதுகூறினாய். புத்தி முதல் நிலமீறாகிய உலகமெல்லாம் முக்குணத்தின் காரியமென்றதனை மறந்தாய்போலும். உலகமெல்லாஞ் சாத்துவிகுணமயமாகிய பிரகாசரூபமுஞ் சாந்தரூபமுஞ் சுகரூபமும், இராசத குணமயமாகிய பிரவிருத்திரூபமுங் கோரரூபமுந் துக்கரூபமும், தாமத குணமயமாகிய நியமனரூபமும் மூடரூபமும் மோகரூபமுமேயாய் நிற்றலின், இத்தன்மையவற்றிற்கு முதற்காரணம் மூலப்பகுதியேயன்றிப் பிறிதன்றெனவும் ; அங்ஙனமாகலின் உலகமெல்லாங் குணரூபமேயெனவும் ; மனிதர் பலர் திரண்டவழிப் படையெனவும், மரங்கள் பலசெறிந்த வழிப் பொதும்பரெனவும் பெயர்பெற்று அநுபவமாய் வழங்கப்படுமாறு போலக், குணங்களே தம்முள்தொக்குக் குணியெனவுந் திரவியமெனவும் பெயர் பெற்று அநுபவமாய் வழங்கப்படுவனவன்றிக், குணியென வேறின்மையின், குணகுணிகட்குத் தம்முட் பெரும்பாலும் வேற்றுமைகூறும் வைசேடிகர் முதலியோர் மதஞ் சைவசித்தாந்தத்திற்கேலாதெனவும்; இங்ஙனமாகலின், தன்மாத்திரையாகிய சத்த முதலிய சூக்குமத்தினின்றும் ஆகாயமுதலிய பெரும் பூதங்கள் தோன்றுதல் அமைவுடைத்தெனவும் ஓர்ந்துகொள்க.

இன்னும், வைசேடிகர் முதலியோர் அவயவத்தின் கூட்டமே அவயவியென்பதுணராது அவயவத்திற்கும் அவயவிக்கும் பெரும்பாலுந் தம்முள் வேற்றுமை கூறுதலும், கன்மஞ்சாமானியம் விசேடம் என்பவற்றைத் திரவியத்தின் வேறென்றலும் பொருந்தாதென்பதும், இங்ஙனமாகவே, தாதான்மிய சம்பந்தத்தின் வேறுய்ச் சமவாயசம்பந்த மொன்றில்லை யென்பதுங் குணகுணிகட்குக் காட்டிய நயம்பற்றி ஓர்ந்துணர்க.

அற்றேல், கண்ணுலே அதனைக்கண்டேன் அதனையே கையாற்றொட்டேன் என்றுணர்வு நிகழ்தலின், கண்ணிந்திரியத்துக்குந் துவக்கிந்திரியத்துக்கும் ஒருபொருளே விடயமாதல் பெற்றும்; பெறவே, கண் பரிசத்தை யறிதலும், துவக்கு உருவத்தையறிதலுங் கூடாமையின் உருவமும்பரிசமு மென்னும் இரண்டுமின்றி, அவற்றின்வேறுய் இரண்டிந்திரியத்திற்கும் விடயமாவதாகிய குணிப்பொருளொன் றுண்டென்பது துணியப்படுமாலோவெனின்,—அற்றன்று; கண்முதலிய இந்திரியங்கள் தத்தமக்குரிய உருவமுதலியவற்றை மாத்திரையே அறியுமென்பது நியமமாகலின், உருவமுதலிய குணங்களின் வேறுய்க் குணிப்பொருளொன் றுண்டெனக் கொள்ளினும் அஃதிந்திரியத்திற்கு விடயமாதல் கூடாமையானும், குணத்தின் வேறுய்க் குணியென்ப தொன்றில்லையென ஈண்டுக் காட்டிய பிரமாணங்கள் வலியுடைமையானும், அதனைக்கண்டேன் அதனைப்பரிசித்தேன் என இரண்டிந்திரியத்திற்கும் ஒன்றேவிடயமாக நிகழுமுணர்வு மயக்கவுணர்வென்றுதல், தொக்க வழிக் குணியெனப்பெயர்பெற்று ஒன்றுய் நிற்றல்பற்றி நிகழும் உபசாரவுணர்வென்றுதல் கொள்வதன்றி, அதுபற்றிக் குணிப்பொருள் வேறெனக் கோடல் பொருந்தாமையறிக.

இங்ஙனமாகலிற் குணங்களே சமுதாயத்திலுக்கிற் குணியென்றும், வேறு வேறு நோக்கிற் குணமென்றும் வழங்கப்படுவனவாமென்பது கண்டுகொள்க. இன்னும் விரிப்பிற் பெருகும்; பயுட்கர முதலியவற்றுட் காண்க.

இதனுனே ஈண்டுப் போந்தது சத்தமுதற் கந்தமீருகிய ஐந்துகுணங்களும் பகுப்பின்றிப் பொதுமையினின்ற அவத்தை கந்ததன்மாத்திரை யென்பதூஉம், சத்தமுதல் இரதமீருகிய நான்குகுணமும் பகுப்பின்றிப் பொதுமையினின்ற அவத்தை இரததன்மாத்திரையென்பதூஉம், சத்தமுதல் உருவமீருகிய மூன்றுகுணமும் பகுப்பின்றிப் பொதுமையினின்ற அவத்தை உருவதன்மாத்திரை யென்பதூஉம், சத்தமும் பரிசமுமாகிய இரண்டுகுணமும் பகுப்பின்றிப் பொதுமையினின்ற அவத்தை

பரிசதன்மாத்திரை யென்பதூஉம், சத்தகுணமொன்றும் வல்லோசை மெல்லோசைமுதலிய பகுப்பின்றிப் பொதுமையினின்ற அவத்தை சத்ததன்மாத்திரை யென்பதூஉம், இதனானே குணமே தன்மாத்திரையெனப்படு மென்பதூஉம், இங்ஙனமாகலின் ஒரோவொருகுணமேற்றமாகவுடைய ஆகாயமுதலிய ஐந்திற்கும் இவைமுறையே காரணமாதல் பெறப்பட்ட தூஉமா மென்க.

### ஆகாயம்

இனிச், சத்ததன்மாத்திரையினின்றுந் தூலமாய் ஆகாயந்தோன்றிப் பலவேறுவகைப்பட்ட சத்தமுடைத்தாய்ப் பிராணிகள் போக்குவரவு முதலிய தொழில்செய்தற்கு இடங் கொடுத்து நிற்கும்.

ஆகாயம் உண்டென்பது, வல்லோசை மெல்லோசை முதற் பலவேறுவகைப்பட அறியுஞ் சத்தகுணங்கள் பிரிப்பின்றித் தொக்குநிற்பதாகிய குணிப்பொருளாயின்றி உளவாகா வென்பதனானும், இடங்கொடுத்தல் வேண்டாதவழி, இடைவெளியில்லாத நிலத்தினகத்தும் போக்குவரவு செய்தல் வேண்டும்; அது கூடாமையாற் போக்குவரவு செய்தற்கேதுவாக இடங் கொடுத்தலுண்டென்பது ஒருதலையாற் பெறப்படுதலின், அவ்விடங்கொடுத்தற்குக் காரணம் வேறில்லையென்பதனானுந் துணியப்படும்.

அற்றேல், ஆகாயமுண்மைக்கு இங்ஙனம் வழியளவை கோடல் வேண்டா; இவ்வாகாயத்திற் பறவையுண்டு இவ்வாகாயத்திற் பறவையில்லையென ஆகாயத்திற்கும் பறவைக்கு முளதாகிய சையோகங் காட்சிப் புலனுதல் எல்லார்க்குமொப்ப முடிந்தமையின், சையோகப் பொருளிரண்டுங் காட்சிப்புலனுய வழியன்றிச் சையோகங் காட்சிப்புலனுதல் கூடாமையின், அது பற்றி ஆகாயமுண்மை காட்சியளவையானே துணியப்படுமா லெனின்,—அற்றன்று; ஆகாயத்தினுளதாகிய ஒளிமண்டலங் காட்சிப்புலனுமாகலின் அவ்வொளி மண்டலத்தோடு பறவைக்குளதாகிய சையோகமே காட்சிப்புலனுவதாகலின், அதுபற்றி ஆகாயங் காட்சிப்பொரு ளென்றல் சாலாமையறிக.

அற்றேல், ஆகாயம் புகைநிறமாய்க் காணப்படுதல்பற்றிக் காட்சிப் பொருளென்னுமோவெனின்,—என்னும்; சேய்மைக்கட் கண்ட புகைநிறம் அணிமைக்கட்சென்றவழிக் காணப்படாமையின், அது திரிவுகாட்சியெனவும், அத் திரிவுகாட்சிக்கிடமும் ஒளிமண்டலமேயெனவு முணர்க.

அற்றேல், இடங்கொடுத்தற்குக் காரணமென்பதுபற்றி ஆகாயமுண்டென்றல் பொருந்தாது; நிலமுதலிய பூதங்களின் அபாவமே இடங்கொடுத்தற்குக் காரணமாமாலெனின்,— அற்றன்று; மேற் சற்காரியவாதத்துட் கூறியமுறையானே அபாவமாவது பாவம்போலப் பாவப்பொருளின்றன்மையே யன்றி வேறன்மையாற் பொருட்டன்மை பொருளின்கணிற்பதேயாமாகலின், அவ்வாறன்றி, யாங்கணும் நிறைந்து நின்றிடங் கொடுக்கும் ஆகாயம் நிலமுதலியவற்றின் அபாவமாமாறு யாண்டையதென்க.

அற்றேல், பாவப்பொருட்கு மறுதலையாகிய அபாவத்தைப் பாவப்பொருளின்றன்மையென்பது எவ்வாறெனின்,—அறியாதுகடாயினாய்; தார்க்கிகர்முதலியோர் பாவப்பொருள் புலனுகாமைக்குக் காரணம் அபாவமென்பர். அது பொருந்தாது; பாவப்பொருள் புலனுகாமையே அபாவமென்னுஞ் சொற்குப் பொருளென்பது சித்தாந்தமாகலின், பொருள்புலனுகாமை பொருட்டன்மையென்றற் கிழுக்கென்னையென்க.

உலகத்துப் பொருளெல்லாம் முக்குணமயமாகலின், அவை இராசத குணமிகுதிப்பாட்டாற் றூலமாய்க் காரியப்பட்டு விளங்கி நின்ற அவத்தையினீங்கித், தாமதகுணமிகுதிப்பாட்டாற் சூக்குமமாய்ச் சத்திவடிவாய் விளங்காதுநின்ற அவத்தையே புலனுகாமையாகிய அபாவமெனவும், அஃதவ்வப்பொருளின் றன்மையெனவும், அதற்குக்காரணந் தாமதகுணமிகுதிப்பாடேயாகலின், வேறுமோர்காரணங்கோடன் மிகையாமெனவும், அங்ஙனஞ் சத்திவடிவாய்நின்ற காரணவத்தையினீங்கி, இராசதகுணமிகுதிப்பாட்டாற் றூலமாய்க் காரியப்பட்டு வியத்தமாய்நின்ற அவத்தையே புலனுதலாகிய பாவமெனவும், அதுவும் அவ்வப்பொருளின் றன்மையேயாகலின், அதற்குக்காரணம் இராசதகுணத்தின் மிகுதிப்பாடேயாமெனவும், இவ் விரண்டவத்தைகளுந் தம்முண் மறுதலையன்மையின், அவ்வக்குணங்கண் மேற்பட்டகாலத்து அதுவது நிகழ்தல் பொருந்துமெனவும் மேற் சற்காரிய வாதத்துட்கூறியதுபற்றி உணர்ந்துகொள்க.

இங்ஙனமாகலின், ஈண்டுக் குடமில்லையென்பதற்குப் பொருள் ஆண்டுச் சையோகக்கிழமையாற் காட்சிப்புலனுதலையுடைய குடம் ஈண்டு விசேடணவிசேடியமாதற் கிழமையாற் புலனுகாமையையுடைத்தென்பதாம். முயற்கோடில்லையென்பதற்குப் பொருள் ஆவின்கட் சமவாயக்கிழமையாற் காட்சிக்குப் புலனுதலையுடைய கோடு முயலின்கண் விசேடண விசேடியமாதற் கிழமையாற் புலனுகாமையையுடைத்தென்பதாம். குடமுடைந்த

தென்பதற்குப் பொருள் இராசதகுணமிகுதிப்பாட்டான் விளங்கித் தூலாவத்தையினின்ற குடந் தாமதகுணமிகுதிப்பாட்டான் விளங்காது சூக்குமாவத்தையெய்திநின்றதென்பதாம். குடந் தோன்றிற் றென்பதற்குப் பொருள் தாமதகுணமிகுதிப்பாட்டான் விளங்காது சூக்குமாவத்தையெய்திநின்ற குடம், பின் இராசதகுணமிகுதிப்பாட்டான் விளங்கித் தூலாவத்தையுடைத்தாயிற் றென்பதாம். ஆகவே, காரியப்பொருளெல்லாங் கிழமை வேறுபாட்டான் முக்காலத்தும் புலனுகாமைபற்றிப் பொய்ப் பொருளெனவும் அவ்வக் குணமிகுதிப்பாட்டான் நிகழ்காலத்து விளங்கி ஏனைக்காலத்து விளங்காமைபற்றி அழிபொருளெனவும் அநுபவமாய் வழங்கப்படுவனவன்றிப், பொய்ப்பொருள் அழி பொருளென்பன இவற்றின் வேறில்லையென்பதுணர்ந்துகொள்க.

இனி, அபாவம் வேறுபொருளெனக் கொள்ளுவார்க்கும் நிலமுதலியவற்றின் அபாவம் ஆகாயமென்றல் பொருந்தாது; என்னை? ஈண்டு அபாவமென்பது நிலமுதலியவற்றின் *என்றுமபாவமோ? முன்னபாவமோ? அழிவுபாட்டபாவமோ? ஒன்றினொன்றபாவமோ? எனக்கடாயினுர்க்கு என்றுமபாவமென்றல் பொருந்தாது; எய்தியதற்கு விலக்காகிய என்றுமபாவம் அவ்வவற்றின் நிலைக்களத்தன்றி நில்லாது; ஆகாயம் அவ்வாறன்றியாண்டுமாய்நின்று இடங்கொடுக்குமாகலானென்க. இனி, நிலமுதலியவற்றின் முன்னபாவம் நிலமுதலியன தோன்றியவழிக் கெட்டுப்போதலின், அவற்றிற்கிடங்கொடுத்தல் கூடாமையானென்பது. இனி, அவற்றின் அழிவு பாட்டபாவமென்பதுங் கூடாது; அவை அழிவுபட்டபின்னர்த் தோன்றும் அபாவம் முன் அவற்றிற்கிடங்கொடுத்தல் கூடாமையானென்பது. இனி, அவற்றது ஒன்றினொன்றபாவமென்றல் வேண்டும்; வேண்டவே, குடத்தினதான்றினொன்றபாவத்திற்கு நிலைக்களமாகிய ஆடைபோல நிலமுதலியவற்றின் ஒன்றினொன்றபாவத்திற்கு நிலைக்களம் வேறுண்டென்பது பெறப்படுதலின் அதுவே ஆகாயமாகலான், அதனை அபாவமென்றல் பொருந்தாமையறிக.

அற்றேல், அஃதங்ஙனமாக; சத்தம் ஆகாயத்தின்குணமென்ற தென்னை? வல்லோசை மெல்லோசைமுதலிய வேறுபாடுடைமையானும், தன்பற்றுக்கோடுநிற்குங்காறும் நில்லாது இடையே தோன்றியழிதலானும், தோன்றியவிடத்தன்றியும் வேறிடத்திற் சென்று புலனுதலானுஞ் சத்தந் திரவியமென்றலே பொருத்தமுடைத்தாகலின், அதனை ஒன்றன் குணமென்றல்

* இவற்றை முறையே, அத்தியந்தாபாவமெனவும், பிராகபாவமெனவும், பிரத்துவஞ்சாபாவமெனவும் அந்நியோந்நியாபாவமெனவும் வழங்குவர் வடநூலார்.

பொருந்தாதெனின்,—அற்றன்று; ஈண்டு வல்லோசை மெல்லோசையென்பன உயர்ந்தவோசை, தாழ்ந்தவோசையென்றன்றிப் பிறபொருள்படாமையின். உயர்ச்சி தாழ்ச்சிமுதலிய வேறுபாடு நாற்றமுதலிய குணங்கட்கேயன்றித் திரவியத்திற்கின்மையிற் பொன் இரும்புமுதலியவற்றினும் உயர்ச்சி தாழ்ச்சி அவ்வக்குணம்பற்றி வழங்கப்படுமென்றிப்பிறிதின்மையின்,வன்மை மென்மைமுதலிய வேறுபாடே ஓசை குணமென்றற்குச் சான்று ஆகலின், அதுபற்றித் திரவியமென்றல் பொருந்தாது.

இனித், தன்பற்றுக்கோடு நிற்குங்காறும் நில்லாது இடையே தோன்றி நின்றழியுமென்பதுபற்றி ஓசை குணமன்றென்பதும் பொருந்தாது; இருட்கண்ணதாகிய சூட்டதினுருவம் விளக்குவந்தவழி விளங்கி அல்லுழிவிளங்காமைபோல, ஓசையும் இதழ் நா அண்ணமுதலிய அவ்வக் கருவிகளின் தொழிற்பாடுநிகழ்ந்தவழி விளங்கியும், அல்லுழி விளங்காமையும்மாத்திரையேயன்றித் தோன்றியழிதலின்மையான், அது போலியேதுவென்றொழிக.

இனித், தோன்றியவிடத்தன்றி வேறிடத்துச் சென்று புலனும் என்பதுபற்றி ஓசை திரவியமென்றலும் போலியென்றொழிக; என்னை? சுடமுழா முதலியவற்றினெழுந்த ஓசை ஆண்டே அடங்கிநின்றொழிய, நீர்த்தரங்கம் போலத் தாரையாய் வேறு வேறோசை மேன்மேற் றோன்றுமுறையானே செவியணிமைக்கணெழுந்தவோசை செவிக்குப் புலனுமெனக் கோடலின் சுடமுழா முதலியவற்றினோசை ஆண்டே அடங்குதலன்றி, வேறிடத்திற் செல்லாமையானென்க.

இதனானே முதற்கணெழுந்தவோசைக்குச் சுடமுழா முதலியனவே குணியாயினும், இரண்டாவதுமுதற் செவியின்காறும் பரம்பரையாய்த் தோன்றும் ஓசைகட்குக் குணி ஆகாயமேயன்றிப் பிறிதில்லையென்பதும் உணர்ந்துகொள்க. குணகுணிகளின் இயல்பு *மேற்காட்டினும்; கடைப்பிடிக்க. வைந்தவவோசை பௌதிகவோசைகட்குத் தம்முள்வேற்றுமையும் †மேற்காட்டினுங் கடைப்பிடித்துக்கொள்க.

### வாயு

இனிப், பரிசதன்மாத்திரையினின்றுந் தோன்றிய வாயுச், சத்தம் பரிசமென்னும் இரண்டுகுணமுடைத்தாய்ச், சலித்துத் திரட்டுதற் றொழிற்பாட்டதாய், உடம்பினுள்ளும் பிராணன்

* பக்கம், உகஅ. † பக்கம், கஙுச.

அபானன் முதலிய பத்துவகைப்பட்டியங்கி, எழுதல் இருத்தன் முதலிய தொழிற்பாட்டிற்கேதுவாய் எல்லாவுயிர்க்கும்உபகாரமா மென்றுணர்க.

தேயு

இனி, உருவதன்மாத்திரையிற்றோன்றிய தேயுச், சத்தம் பரிசம் உருவமென்னும் மூன்றுகுணமுடைத்தாய்ப், பாகஞ் செய்தன்முதலிய தொழிற்பாட்டதாய், உலகத்திற் காருக பத்தியம் ஆகவனீயந் தென்றிசையங்கி யென்னும் வைதிகஅங்கி யும், இவற்றின்வேறுகிய சைவ அங்கியுமாய்நின்று வினைகட் குபகாரமாயும், அகத்தினுள் விந்துவங்கியாய்நின்று உண்ட வற்றை யெல்லாம் பாகஞ்செய்து உயிர்கட்குப் பெரிதும் உபகார மாகியும் இங்ஙனம் பலவேறு வகைப்படும்.

வெந்நீர்முதலியவற்றினுளதாகிய தேயுவுக்கு உற்பூதரூப குணமின்றியினும் அநுற்பூதரூபமுண்டென்பதும் முன்னை யுருவம்பற்றியுணரப்படுதலானும், விளக்கொளிமுதலியவற்றிற்கு உற்பூதபரிச மின்றியினும் அநுற்பூத பரிசமுண்டென்பதும் விளக்குமுதலியவற்றின் பரிசம்பற்றியுணரப்படுதலானுந் தேயு மூக்குணமுடைத்தென்பதற்கு யாண்டும் பிறழ்தலின்மையின், அஃதுருவதன்மாத்திரையிற் றோன்றுமென்றல் பொருத்த முடைமை அறிக.

இத்தேயு இந்திரியங்கள்போலப் பொருள்களை விளக்கு தலின், சாத்துவிகாகங்காரத்திற் றோன்றுதலே பொருத்த முடைத்தெனின்,—அற்றன்று; சூடமுதலியவற்றைநோக்க விளக்குவதாயினும், இந்திரியங்களைநோக்க விளக்கப்படுவதே யாகலின், தாமதாகங்காரத்தினின்றும் அதன்கண்ணதாகிய சாத்துவிககுணத்தான் மிக்குப்பரிணமித்துத் தோன்றியதென் பதே பொருத்தமுடைத்தென்க.

அப்பு

இனி, இரததன்மாத்திரையிற் றோன்றிய புனல், இரத மீறுகிய நான்கு குணமுடைத்தாய், நெகிழ்வித்துப் பதஞ்செய்த லாகிய தொழிற்பாட்டதாய், உயிர்களெல்லாந் தன்னுற் சீவித் தற்கேதுவாய் நிற்கும். பனி ஆலி முதலியனவுங் குளிர்ந்த பரிசமுடைமையிற் புனலேயாமெனவும், ஆண்டுக் கடினப் பொருள் விரவிநிற்றலான் வல்லென்றியினவெனவும் உணர்க.

இவ்வாறே அவ்வப்பொருள்களினியல்பெல்லாம் உய்த் துணர்ந்து கொள்க.

பிருதிவி

இனிக், கந்ததன்மாத்திரையிற் றோன்றிய புடவி, கந்தம் ஈறுகிய ஐந்து குணமுடைத்தாய், உரத்துத்தரித்தலாகிய தொழிற்பாட்டதாய் நிற்கும்.

இப்புடவிதத்துவ முதலியவைந்தும் உடம்பினும் மயிர், எலும்பு, ஓடு, நீர், உதிரமுதலியனவாய் நிற்குமாறு கண்டு கொள்க. ஆகாயம் எல்லாநாடிகளினும் ஆங்காரத்தின் விருத்திக்கிடமாய் நிற்குமென்க.

இவற்றுள், ஆகாயத்திற்குச் சத்தகுணம் நீர்த்தரங்கம் போலத் தாரையாய்த்தோன்றும் எதிரொலிமாத்திரையேயெனவும்; வாயுவுக்கு ஊர்தலைத் தெரிவிப்பதாகிய கசகச ஒலியெனவும்; தேயுவுக்கு எரிதலைத்தெரிவிப்பதாகிய தமதம ஒலியெனவும்; புனலுக்கு ஒழுகுதலைத்தெரிவிப்பதாகிய சளசள ஒலியெனவும்; புடவிக்குக் கடினத்தைத் தெரிவிப்பதாகிய கடகட ஒலியெனவும் இங்ஙனம் வேறுபாடுடைமையானும், அவற்றிற் றோன்றுதல் காண்டலளவைக்குப் புலனுகலானுஞ் சத்தகுணம் ஆகாயமாத்திரைக்கே யென்பார்மதம் பொருந்தாதெனவும்; இனிப், பரிசகுணம் வாயுவுக்கும் புடவிக்குந் தட்பமும் வெப்பமுமில்லாத பரிசமும், தேயுவுக்கு வெப்பப் பரிசமும், புனலுக்குத் தட்பப்பரிசமுமாமெனவும்; உருவகுணந் தேயுவுக்கு ஒளிகிறமும், புனலுக்கு வெண்மையும், புடவிக்கு வெண்மை முதற் பலகிறமுமாமெனவும்; இரதகுணம் புனலுக்குத் தித்திப்புச்சுவையும், புடவிக்கு அறுவகைச் சுவையுமாமெனவும் அவ்வவற்றின் குணங்களைப் பகுத்துணர்ந்துகொள்க.

இனி, ஆகாயத்தினின்றும் வாயுவும், வாயுவினின்றுந் தேயுவும், தேயுவினின்றும் அப்புவும், அப்புவினின்றும் புடவியுந் தோன்றுமென்பார்க்குக் காரியத்தின்குணங் காரணத்தினு முண்டென்பது நியமமாகலின், புடவிக்குரிய ஐந்துகுணமும் புடவிக்குக் காரணமென்ற புனலுக்குமுளவாதல் வேண்டும்; வேண்டவே, அம்முறைபற்றித் தேயு வாயு ஆகாயங்களும் ஐந்து குணமுடையவாதல்வேண்டும்; அஃதின்மையான், அவர்மதம் போலியென்றொழிக.

அற்றேல், வேதத்துள் அங்ஙனம் ஒன்றினொன்று தோன்றுமென்ற வாக்கியத்தோடும், *"இருநில னதுபுன லிடைமடி தரவெரி புகவெரி யதுமிகு—பெருவளி யினிலவி தரவளி கெட

* திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம், திருமறைக்காடு, திருவிராகம், எ.

விய னிடைமுழு வதுகெட—விருவர்க ளுடல்பொறை யொடு திரி யெழிலுரு வுடையவன்" எனச் சங்கார முறைபற்றி வேத வாக்கியப் பொருளே வலியுறுத்தோதிய திருப்பாட்டோடும் முரணுமாலெனின்,—அற்றன்று ; *வேதஞ் சிவாகமமிரண்டுஞ் செய்த முதற்கருத்தா பரமசிவனொருவனேயாகலின், அவை தம்முண் முரணுமாறின்மையின், ஒரோவழி முரணுவனபோலத் தோன்றியவழி, முரணுதவாறு வன்மை மென்மைபற்றித் தாற் பரியங்கோடல் வேண்டும். அற்றுகலினன்றே தேயுமுதன் முப்பூதங்கட்கே தோற்றங்கூறி, "இம் முப்பூதமயமே பிரபஞ்ச மெல்லாம்" என விரித்தோதிய சாந்தோக்கியவுபநிடதமும், ஆகாயமுதல் ஐந்திற்குந் தோற்றங்கூறி, "ஐம்பூதமயமே பிரபஞ்சமெல்லாம்" என்னுந் தைத்திரீயவுபநிடதமுந் தம்முண் முரணுவனபோலத் தோன்றுதலின், அங்ஙனம் முரணுமைப் பொருட்டு வன்மைமென்மைநோக்கித் தைத்திரீயத்திற்கூறி யதே பிரமாணமெனவும், சாந்தோக்கியத்திற்கூறும் வாக்கியங் கட்கும் அதுவே தாற்பரியமெனவும், உத்தரமீமாஞ்சையின் வியததிகரணத்துளோதியதூஉம் ; மற்றும் ஆண்டாண்டு முரணுதவண்ணம் ஒன்று முக்கியப்பொருளும், ஒன்று தாற்பரி யப்பொருளுமாக வைத்துப் பொருளொருமை யுணர்த்தியதூஉ மென்க.

அற்றேல், ஈண்டு முக்கியப்பொருள் யாது தாற்பரியப் பொருள் யாதெனின்,—மேற்கூறிப்போந்த ஏதுக்களான் அவ் வத் தன்மாத்திரைகளின் அவ்வப்பூதங்கள் தோன்றுமென்பதே பொருத்தமுடைத்தென்பது பெற்றுமாகலின், அதுவே முக்கி யப்பொருளெனவும், பிரமத்தின் ஆகாயந்தோன்றும் ஆகாயத் தின் வாயுத் தோன்றுமென்று இம்முறையாற் கூறியது மேற் காட்டிய ஏதுவாற் பொருந்தாமையின், அவை முக்கியப் பொருள்படாது தன்மாத்திரையிற் றோன்றுமென்னுந் தாற்பரி யப்பொருளே தருமெனவுங் கொள்ளப்படுமென்க.

அற்றேல், என்னையோ அவற்றிற்குத் தாற்பரியத்தாற் பொருள்கொள்ளுமாறெனின், கூறுதும் :—சூக்குமபூதமாகிய சத்தமுதலிய தன்மாத்திரை ஐந்திற்குஞ் சதாசிவன் மகேசன் உருத்திரன் மால் அயன் என்னும் ஐவரும் அதிதெய்வங்களா கலின், சதாசிவக்கடவுளுக்குரிய பிரமமென்னும் பெயர் ஆகு பெயராய் அவனுலதிட்டிக்கப்படுஞ் சத்ததன்மாத்திரையினையும்

---

* இது, **தொகுத்தவ னருமறை யங்க மாகமம்**—வகுத்தவன் வளர் பொழிற் கூகமேவினன்—மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்—செகுத்தவ னுறைவிடந் திருவிற் கோலமே" என்னுந் தமிழ் வேதத் தானுந் தெரியப்படும் ; திருஞானசம்பந்த சுவாமிகள், திருவிற்கோலம், சூ.

உணர்த்துமாகலின், "பிரமத்தினின்றும் ஆகாயந்தோன்றும்" என்றதற்குத் தாற்பரியம் பிரமமாகிய சதாசிவக்கடவுளான் அதிட்டிக்கப்படுஞ் சத்ததன்மாத்திரையினின்றும் ஆகாயந் தோன்றுமென்பதேயாம். "பிரமம்" எனினும், "பரமான்மா" எனினுமொக்கும்; பரமான்மாவை ஆன்மாவென்றது தலைக் குறையாகலின், "ஆன்மாவினின்றும் ஆகாயந்தோன்றும்" என்றதற்கு இதுவே தாற்பரியமென்க.

இனி, ஒரோவொருகுணம் ஏற்றமாகவுடைய வாயுமுதலிய நான்குங் கேவலமாய்நின்ற பரிசமுதலியவற்றிற் றோன்றுமை யிற் சத்தத்தோடுகூடி விசிட்டமாய்நின்ற பரிசதன்மாத் திரையே வாயுவுக்குக் காரணம்; அத்தன்மைத்தாய பரிசத் தோடுகூடி விசிட்டமாய்நின்ற உருவதன்மாத்திரையே தேயுவுக் குக் காரணம்; அத்தன்மைத்தாய உருவத்தோடுகூடி விசிட்ட மாய்நின்ற இரததன்மாத்திரையே புனலுக்குக் காரணம்; அத் தன்மைத்தாய இரதத்தோடுகூடி விசிட்டமாய்நின்ற கந்ததன் மாத்திரையே புடவிக்குக் காரணமென மேற்காட்டினுமாகலின், அவ்வுண்மை உணர்ந்துகோடற்பொருட்டு, ஆகாயத்தின் கார ணத்தோடுகூடி விசிட்டமாய்நின்ற பரிசதன்மாத்திரையை ஆகாயமெனவும், வாயுவின்காரணத்தோடுகூடி விசிட்டமாய் நின்ற உருவதன்மாத்திரையை வாயுவெனவும், தேயுவின்கார ணத்தோடுகூடி விசிட்டமாய்நின்ற இரததன்மாத்திரையைத் தேயுவெனவும், புனலின் காரணத்தோடுகூடி விசிட்டமாய்நின்ற கந்ததன்மாத்திரையைப் புனலெனவும் ஆகுபெயராக்கிப் பொருள்கொள்ளவைத்தமையின், அதுவே அவ்வாக்கியங்கட் குத் தாற்பரியமென உணர்ந்துகொள்க. இதுவே நீலகண்ட பாடியத்திற்குங் கருத்தாதல் ஆண்டெடுத்துக்காட்டிய புராண வசனத்தான் உய்த்துணர்ந்துகொள்க.

இன்னுஞ் சாந்தோக்கியத்தின், "அப்புக்கள் அன்னத்தைப் படைத்தன" என்புழி, அன்னமென்பது சோற்றை யுணர்த் தாது ஆகுபெயராற் புடவியையுணர்த்துமென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின், இவ்வாறே ஆண்டாண்டு வன்மைமென்மை நோக்கி மூரணுமைத் தாற்பரியங்கோடல் வேதபுருடனுக்குக் கருத்தென்பது ஓர்ந்துணர்ந்துகொள்க.

இங்ஙனஞ் சிவமுதல் நிலமிறுவாய் ஐந்தும் ஏழும் இருபத்து நான்குமாகிய மூப்பத்தாறு தத்துவங்கட்குத் தோற்ற முறைமை யும்; அவற்றின் றொழிற்பாடும்; போகநுகர்ச்சிக்கண் அவற்று ளொன்றையின்றியமையாமையின், அவை சுத்தம் மிச்சிரம் அசுத்தமெனவும் பிரேரககாண்டம் போசயித்திருகாண்டம்

போக்கியகாண்டமெனவும், சிவதத்துவம் வித்தியாதத்துவம் ஆன்மதத்துவமெனவுமாமாறும் இன்னோரன்னவையெல்லாம் ஈண்டோதியவாறு பற்றி உணர்ந்துகொள்க. இன்னும் விரிப்பிற் பெருகுமென்றெழுக.

இவை ஒடுங்குங்காலுந் தோன்றினமுறைமையே தத்தங் காரணங்களின் ஒடுங்கும்.

### தத்துவங்களின் வகை

நிலமுதற் கலையீறாகிய மூப்பத்தொரு தத்துவம் புறப் புறக் கருவியும், புறக்கருவியும், அகப்புறக்கருவியும், அகக்கருவியு மென நான்கு வகைப்படும்.

அவற்றுள், பூதமைந்துந் தன்மாத்திரையைந்தும் புறப் புறக்கருவி; இந்திரியம்பத்தும் புறக்கருவி; மனமுதலியன அகப்புறக்கருவி; அராகமுதலியன அகக்கருவியென்றறிக.

இன்னும், இத்தத்துவங்கள், பொதுவுஞ் சிறப்பும் பொதுச் சிறப்புமென மூவகைப்படும்.

அவற்றுள், புவனவடிவாகிய தத்துவங்கள் போகநுகர்ச் சிக்கண் எல்லா வுயிர்க்கும் பொதுவாய்ப் போகம்பயப்பித்தலின் பொதுவெனப்படும். புரியட்டகவடிவாகிய தத்துவங்கள் உயிர் தோறும் வேறுவேறுய்நின்று போகம்பயப்பித்தலின், சிறப் பெனப்படும்.

புரியட்டகஞ் சூக்குமதேகமும் பரதேகமுமென்று இரு வகைத்து. அவற்றுள், தன்மாத்திரையைந்தும், அந்தக்கரண மூன்றுமாகிய எட்டானுமாயது சூக்குமதேகம். இது காலோத் தரத்திற் காண்க.

இனிப், பூதமொன்றும், தன்மாத்திரையொன்றும், ஞானேந் திரிய மொன்றும், கன்மேந்திரியமொன்றும், அந்தக்கரண மொன்றும், குணதத்துவமொன்றும், மூலப்பகுதி யொன்றும், கலாதியொன்றுமென்னும் எண்வகைப்பட்ட மூப்பத்தொரு தத்துவங்களாலாயது பரதேகம். பரமெனினும் அதிசூக்கும மெனினும் ஒக்கும். இது மிருகேந்திர முதலியவற்றுட்காண்க.

இனி, இதனையே சூக்குமதேகமெனக்கொண்டு, சுத்த தத்துவம் பரதேகமென்பாரும் உளர். அது காலோத்தர வசனத்தோடு முரணுதலானும், தன்மாத்திரை அந்தக்கரணங் களுள் ஏனைத்தத்துவங்கள் அடங்குமென்றற்குப் பிரமாண மின்மையானும், அடங்குமென்பார்க்கு அவ்வாறே தன்மாத்

திரை அந்தக்கரணங்களும் ஐம்பெரும்பூதங்களின் அடங்குமென அமையுமாகலின் வேறுகூறுதல் பொருந்தாதாய் முடியுமாகலானும், சுத்ததத்துவங்களாதியைச் செலுத்துமுகத்தான் உபகரித்து வேறுநிற்பனவன்றிச், சகலர்க்குத் தேகமாயெய்துதல் கூடாமையானும் அது பொருந்தாமையறிக.

குடிலையிற்றோன்றிய நாதஞ் செயற்கைவயத்தானே தூலமாய்நின்றவழி, நம்மனோர்க்குப் புலனுதல் கூடுமென்பது * மேற்காட்டினமையின், சவிகற்பவுணர்விற்கேதுவாகிய தூலநாதமாத்திரையே பரதேகத்தோடு விரவி அகத்தே விளங்கி நிற்பதன்றி, ஏனைவைந்தவங்கள் அவ்வாறு நில்லாவென்றது பொருந்துமாறுபற்றி உணர்ந்துகொள்க.

இனித், தூலதேகவடிவாகிய தத்துவங்கள் அவரவர் போகநுகர்ச்சிக்குச் சிறப்புவகையான் நிலைக்களமாதலும், மலைவிழுதலியோர்க்குச் சந்தனம் பூமாலைமுதலியனபோலப் பொதுமையாற் போக்கியமாதலுமாகிய இருவகையுமுடைமையின் பொதுச்சிறப்பெனப்படுமென்றுணர்க.

அற்றேல், தூலதேகத்தின் வேறுகிய சூக்குமதேகமொன்றுண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்,—கூறுதும் :—தூலதேகஞ் செயலற்றுக் கிடப்பவுங் கனவின்கட் போகநுகர்ச்சி காண்டும். ஆண்டும் போகநுகர்ச்சி தேகத்தின் றொழிற்பாடின்றி அமையாமையின் சூக்குமதேகமே ஆண்டுப் போகநுகர்ச்சிக்கு நிலைக்களமாவதென அறிக. † "கனவின் பயனு நனவின் பயனும்விஞையின் பயனவை பொய்யெனவேண்டா" என்றோதுதலானும் பொய்யென்றற்குப் பிரமாண மின்மையானும் ஆண்டுப் போகநுகர்ச்சி மெய்யாதலறிக.

இன்னும், "வியாபகமாகிய ஆன்மாத் துறக்க நிரயங்களிற் சென்று அநுபவித்து மீள நிலத்தின்கண் வந்து கருவின் விழும்' என வருகின்ற அதிகரணத்திற் கூறப்படும் போக்கு வரவு செய்தற்கு உடம்பு இன்றியமையாமையானுஞ் சூக்குமதேகமுண்டென்பது துணிந்துகொள்க.

அற்றேல், தன்மாத்திரைகளானும் அந்தக்கரணங்களானும் இயன்றது சூக்குமதேகமென்றற்குப் பிரமாண மென்னையெனின் கூறுதும் :—ஆன்மா கனவின்கட் போகநுகர்தற்கும், போக்கு வரவுசெய்தற்கும் இடனுகிய தூலதேகமும்; கனவின்கட் போகநுகர்தற்கும், ஆண்டுப் போக்குவரவு செய்தற்கும், தூலவுடம்பு

* பக்கம் கஎடு.

† சங்கற்பநிராகரணம், மாயாவாதிசங்கற்ப நிராகரணம், அடி-கடஉச.

கழிந்தவழி, ஒருலகினின்றும் மற்றோருலகிற் போக்குவரவு செய்தற்கும் இடனாகிய சூக்குமதேகமும் ஒருசாதியென்பது பெற்றாம். பெறவே, அவ்விரண்டிற்குந் தம்முள் வேற்றுமை தூலமாகலுஞ் சூக்குமமாகலுமாத்திரையேயாகலின், அதற்கேற்பத் தூலபூதங்கள் ஐந்தானும் இயன்ற தூலதேகத்திற்குக் காரணமாகிய சூக்குமதேகஞ் சூக்குமபூதங்களைந்தானும் இயன்றதாமெனத் துணியப்படும்.

இனித், தூலதேகத்தினின்றறியும் புறவிந்திரியங்கள் போலச் சூக்குமதேகத்தினின்றறியும் அந்தக்கரணங்கள் அதற்கு இன்றியமையாது உறுப்புப்போல் உடனிற்றல்பற்றி அவையுஞ் சூக்குமதேகமெனக் கூட்டியுரைக்கப்படுமாகலின், தன்மாத்திரை அந்தக்கரணமென்னும் இருகூற்றெட்டுக் கருவியுங் கூட்டிச் சூக்குமதேகமாமென்பது ஆகமவளவைமாத்திரையானன்றி வழியளவையானும் உணர்ந்துகொள்க. வழியளவையாமாறு :—"சூக்குமதேகஞ் சூக்குமபூதங்களானும் அந்தக்கரணங்களானுமாயது, ஆன்மாப் போகதுகர்தற்கும் போக்குவரவு செய்தற்கும் இடனாகலின்; தூலபூதங்களானும் புறக்கரணங்களானுமாகிய தூலதேகம்போலும்" எனக்கூறிக் காண்க.

இனிப், போகதுகர்தற்கட் கருவியாய்நிற்குங் கலைமுதல் நிலமீறாகிய தத்துவங்கள் ஆன்மாவுக்குக் காரணமேயாயினும், ஆன்மாக்கடோறும் வெவ்வேறாய் நீக்கமின்றி உடனாய்நிற்றல் பற்றிப் பரதேதகமென்று உபசரித்துக் கூறப்படுமதுவேயன்றித், தூலதேதகஞ் சூக்குமதேகம்போலத் தேதகமல்லவென் றுணர்க.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றாமதிகரணம்

இரண்டாமதிகரணத்தின் நாட்டிலுள்ளார்க்கு அவரவர் செய்த குணங்குற்றங்கட்கியைய அருளுந் தண்டமுஞ் செய்யும் வேந்தர்போல, ஆன்மாக்களுக்கு அவரவர்செய்த இருவினைகளை அறிந்து அவற்றிற்குத் தக்கபயனை முதல்வன் செய்வனாகலின், அங்ஙனம் ஐந்தொழில்செய்யும் முதல்வன்மாட்டு எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்கும் நடுவு நிலைமைக்கும் பெருங்கருணைக்குஞ் சுதந்தரத்திற்கும் இழுக்கின்மையின், ஐந்தொழில் செய்தலே முதல்வனுக்கு இலக்கணமெனவலியுறுத்தியவழி, அங்ஙனமாயினுஞ் சங்காரகாரணனாகிய முதல்வனுக்கு ஐந்தொழில்செய்தல்

இலக்கணமெனச் சிறப்புவகையாற் கோடல் பொருந்தாது; சங்காரகாரணனுகிய முதல்வன் சங்காரத்தொழின்மாத்திரையே யன்றி ஏனைத்தொழிலுஞ் செய்வனுயிற் சங்காரகாரணனென விசேடித்தல் வழுவாய் முடியும்; அஃதியைபின்மைமாத்திரை நீக்கித் தலைமைபற்றி வந்தடுத்த விசேடணமாகலின் வழுவாகாது, சங்காரத் தொழிற்குத் தலைமை, "ஒடுங்கினசங்காரத்தினல்ல துற்பத்தியின்மையாற்" பெறப்படுமெனின், - அற்றன்று; இறந்தவுயிர்கள் மீளப்பிறக்குமாயினன்றே உற்பத்திக்குச் சங்காரங் காரணமாதலும், அதுபற்றிச் சங்காரத்திற்குத் தலைமையுண்மையும் அமையும்; இறந்தவுயிர்களே மீளப்பிறக்கு மென்றற்குப் பிரமாணமென்னே? பஞ்சாக்கினி வித்தையுணர்த்தும் உபநிடத முதலிய ஆகமங்களே பிரமாணமெனின், "சூடத்தகப்பட்ட ஆகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பகத்தகப்பட்ட ஆன்மா உடம்புநீங்கியவழிப் பரமான்மாவொடு கூடும்" என மீட்சியின்மையுணர்த்தும் ஆகமவளவையொடுமுரணுதலின், பஞ்சாக்கினிவித்தை முதலியனவுணர்த்தும் ஆகமங்கள் புனைந்துரையெனக்கொள்வதல்லது பிரமாண மெனக் கோடல் பொருந்தாது; அன்றியும், சற்காரியவாதத்தின் இல்லது தோன்றுமாறின்மையின், இவ்வுடம்புநீங்கியவழி வேறுவேறு டம்புகள் உளவாமென்பார்க்கு, அவையனைத்தினும் ஏகமாய்த் தொடர்ந்து நிற்குஞ் சிறப்புக்காரணமொன்றுண்டெனக் கோடல்வேண்டும்; அது காணுமையானும், வியாபகமாகிய ஆன்மாப் போக்குவரவுசெய்தல் பற்றுக்கோடின்றியமையாமையின், இவ்வுடம்பு நீங்கியவழிப் பிறிதோருடம்பிற் சேறற்குப் பற்றுக்கோடு பிறிதின்மையானும், உண்டாயின் அதுவேயமையு மெனப்பட்டு இவ்வுடம்பு மிகையாய்முடியுமாகலானும், இன்னும் இறந்தவுயிரே பிறக்குமாயின் முற்பிறவியினிகழ்ந்தனவெல்லாம் இப்பிறவியின் அறிந்துரைத்தல் வேண்டும்; அதுவுமின்மையானும், அறம்பாவங்கட் குரிய இன்பத்துன்பங்களைத் துறக்க நிரயங்களிற் சென்று எஞ்சாததுபவித் தொழிந்தவழி, மீளக் கருவினெய்துதற்குக் காரணமின்மையானும் வழியளவைக் கேலாமையான், இறந்தவுயிரே பிறக்குமென்றற்குப் பிரமாண மின்மும்; இன்முகவே, சற்காரியவாதங் கூடாமையாற் சங்காரத் தொழிற்குத் தலைமையின்மையின், சங்காரகாரணனென்றது இயைபின்மை மாத்திரை நீக்கித் தலைமைபற்றிவந்த விசேடண மென்றல் பொருந்தாமையின், அது பிறிதினியைபு நீக்கியவிசே டணமேயாம்; ஆகவே, சங்காரகருத்தா ஏனைப்படைப்பு முதலிய வற்றிற்கு வினைமுதலாதல் கூடாதென்பது தானே பெறப் படுதலின், மேலையகதிகரணங்களிற் கூறிய முறைமைபற்றி, "ஐந்தொழில் செய்தலே முதல்வனுக் கிலக்கணமெனப் பொது

வகையாற் கூறுதல் பொருந்துமாயினுஞ், "சங்காரகாரணனுகிய முதல்வனே ஐந்தொழில் செய்வன்" எனச் சிறப்புவகையாற் கூறுதல் இலக்கணவழுவாமாலென்று இங்ஙனங் கிரீடாப்பிரம வாதிகண்மதம் பற்றி நிகழும் ஆசங்கையைநீக்கி இலக்கணத்தை வலியுறுத்துதற்கெழுந்தது மூன்றும் அதிகரணம்:—

இனி இவ்வான்மாக்கண் மாறிப்பிறந்து வருமென்றது
எனவரும்.

இனி என்றது இவ்வியைபுணர்த்துதற்பொருட்டு. இவ்வான் மாக்கள் - மேலையதிகரணத்திற் பெறப்பட்ட இவ்விருவினைப் பயன்களை நுகர்தற்குரிய ஆன்மாக்கள். மாறிப்பிறந்து வரும்- இறந்து மீளப்பிறந்து இவ்வாறேவரும். மாறுதல்-ஈண்டு இறத்தல்; போக்குவரவுபுரியா என்பதற்குரையாகலானும், ஏதுவுதாரணங் களின் இயைபானும் அதுவே பொருளாதல் அறிக.

அஃதெங்ஙனமெனின், மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:—

தோற்றமுமீறும் உள்ளதற்கல்லது உவதாயின்மையான்
எனவரும்.

இறந்தபின்னும் பிறத்தலும் இறத்தலுமுள்ள பொருட்கே யன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தியின்மையான், இவ்வான்மாக் கண்மாறிப்பிறந்துவரும் என மேற்கொண்டதென்றுணர்க.

இறந்தபின்னும் என்றது மேற்கோளிற் கூறிப்போந்த பொருள்பற்றி அவாய்நிலையான்வந்தது. உவதாதல்-தோன்றுதல்; அது * "ஒன்றலா வொன்று லுளதாகி நின்றவாறு" என்பத னானு முணர்க. ஒடுங்கியபின்னுந் தோற்றவொடுக்கங்க ளுள்ள பொருட்கே தோற்றமுண்டென்பது சற்காரியவாதத்தான் அங்ஙனமாதல் பெறப்பட்ட குடமுதலியவற்றின்வைத்துக் காணப்படும். இதற்குப் பிறவாறும் உரைப்ப.

அற்றேல், இறந்தவுயிர் பிறவாமைக்கு மேற்காட்டிய ஏதுக் களொடு முரணுமாலெனின், அவ்வாசங்கைகளை நீக்கி ஏதுவை வலியுறுத்தற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

கண்ட நனவைக் கனவுணர்விற் றுன்மறந்து
விண்படர்ந் தத்தூடு வீனியினுற்—கண்செவிகேட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றுன்
எனவரும்.

* முதற்சூத்திரம் மூன்றுமதிகரணத்து உதாரணம்,

கண்செவிகெட்டு உள்ளதேதோற்ற உளம் அத்தூடு விண் படர்ந்து வினையிறல் மனந்தள்ளக் கண்ட நனவைக் கனவுணர்வில் தான் மறந்து அணுவாய்ச் சென்று கருவில் வியூந்தான் எனமாறுக.

கண்செவிமுதலிய உறுப்புக்களோயுடைய உடம்பினைக் கண் செவியென்று உபசரித்தார்.

கெட்டவழி என்பது கெட்டு எனத்திரிந்து நின்றது. உள்ளது - தூலவுடம்புகள் கெட்டவழியுந் தனக்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் சங்காரகாலமளவும் நிலைபெற்றுள தாகிய புரியட்டதேகம். தோன்றுதல் - பூதசாரவுடம்புமுதலி யனவாய்க் காரியப்படுதல். ஏகாரம் - தேற்றம்.

ஐம்பெரும்பூதத்தின் காரியமாகிய தூலவுடம்பு சூக்கும தேகத்தின் காரியமாமாறென்னையென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்ற எனத் தேற்றவேகாரங் கொடுத்தோதினர். ஆகாயமுதலிய தூலபூதங்கள் சூக்குமபூதமாகிய தன்மாத்திரை களின் காரியமாகலின், அவற்றுளைய தூலவுடம்பு தன்சாதி யாகிய அச்சூக்குமதேகத்தின் காரியமாதற் கிழுக்கின்மையறிக.

இன்னும், முதலுற்பவத்திற் சூக்குமதேகம் முதற் படைத் துப், பின் அதுகாரணமாகவரும் இருவினையாற் பலவேறு வகைப்பட்ட தூலதேகம் படைக்கப்பட்டனவாகலானுஞ் சூக்குமவுடம்பின் காரியமே தூலவுடம்பாதல் அறிக. சூக்கும தேகத்தின் காரியமாதல்பற்றியே தூலதேகம் ஐம்பெரும் பூத மயமெனப்பட்டதென்க.

*"பூதஞ சரீரம் போனற் புரியட்ட ரூபந் தானே—யாதஞ சரீர மாகி" எனவும், †"சூக்கும வுருவ தென்னிற் றூலகா ரணம தாகும்" எனவும், ‡"தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல்" எனவும், §"மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னிற்—கூறிய சூக்கு மத்தாம்" எனவும், $"விதிப்படி சூக்கு மத்தே யுருவரும்" எனவும் வழிநூலாசிரியர் கூறியவாறுங் காண்க.

இவ்வுண்மையுணரமாட்டாதார் ஐம்பெரும் பூதத்தானகிய தூலவுடம்பு சூக்குமதேகத்தின் காரியமாமாறு என்னையென் றுசங்கித்துப், *"புரியட்டரூபந் தானே—யாதஞ சரீர மாகி"

---

* சிவஞானசித்தி, உ-ம் சூ. கூசு.
† சிவஞானசித்தி சூ-ம். சூ. கo.
‡ சிவஞானசித்தி, உ-ம். சூ. நிo.
§ சிவஞானசித்தி, உ-ம். சூ. சஎ.
$ சிவஞானசித்தி, உ-ம். சூ- சகூ.

என்றற்றொடக்கத்தன பிறர்மதம் பற்றிக் கூறியனவாமென்று உரைப்ப; பலவிடத்தும் அவ்வாறே யோதுதலான் அங்ஙன முரைத்தல் பொருந்தாமையறிக.

உள்ளதுநோற்ற என்பதனுல் இல்லதுதோன்றுதென்னுஞ் சற்காரியவாதத்திற் கிழுக்கின்மையும், துறக்கநிரயங்களிற் சென்றுமீட்டற்குப் பற்றுக்கோடின்மையுமுணர்த்தி, அவை பற்றிநிகழும் ஆசங்கையை நீக்கியவாறு காண்க.

அற்றேல், சூக்குமதேகமே அமையும், தூலதேகம்மிகை யாமாலெனின்,—அற்றன்று; தூலபோகதுகர்ச்சிக்குத் தூல தேகம் ஒருதலையான் வேண்டப்படுமாகலானென்க. இங்ஙன மாகவே, ஒருதன்மைத்தாகிய சூக்குமதேகத்திற் தூலதேகம் அச்சுமாறித்தோன்றுதல், *"வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியுமாதல்" போலவும், சூக்குமதேகங் கெடாதுநிற்பத் தூல தேகங்கெட்டுத்தோன்றுதல், †"கால முற்று—நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்துமா போலவும்" ‡"மதிக்கெழு கலைகள் வருவன போவன போல"வுமாமென்று உணர்ந்துகொள்க. இவையெல்லாஞ் சிவஞானசித்தியில் விரித்தலின் ஆண்டுக் காண்க.

உளம் - ஆன்மா. அதனூடென்பது அத்தூடு எனமரீஇ யிற்று. அத்தூடு - உள்ளதேதோற்ற அங்ஙனந்தோன்றிய யாதனுசரீரத்தூடு. விண்படர்ந்து என்னும் உபலக்கணத்தால் நிரயம்படர்ந்தென்பதூஉம் பெற்றும். படர்ந்து - படர்ந்தநுப விந்து; காரியத்தைக் காரணமாகவுபசரித்தார்.

இனி, இறந்தவுயிரே பிறக்குமாயின், முற்பிறவியின் நிகழ்ந் தனவெல்லாம் இப்பிறவியின் அறிதல்வேண்டுமென்னும் ஆசங் கையை நீக்குதற்குக் கண்டனவைக் கனவுபோற் குன்மறந்து என்றுவமைகூறினர். கண்டனவை - நனவின்கட்கண்டவற்றை யென்க. இன் - உவம உருபு. நான் - அசை. மறந்து - என்ற தற்குச் செயப்படுபொருள், கண்செவிகெட்டவாறும், உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்ந்தவாறும், ஆண்டு அநுபவித்த வாறும் முதலாயின.

அற்றேல், ஈன்றணிய குழவி தாய்முலைப்பால் பசிதீர்க்கு மருந்தென்றறிந்து அதன்கண் முயலுதற்கேதுவென்னை? முதல்வனுணர்ந்து செலுத்துவனெனின், குழவியின் மாட்டு

---

* சிவஞானசித்தி, உ-ம் சூ. சஎ.

† சிவஞானசித்தி, உ-ம். சூ. ஈஅ.

‡ சிவஞானசித்தி, உ-ம். சூ. சக.

அவ்வுரிமையில்வழி முதல்வன் செலுத்துதல் சாலாது ; சாலு மாயின், உயிரில் பொருளோயுந் தொழிற்படுத்துதல் வேண்டு மாலெனின்,—அஃதொக்கும். அவ்வாறுதல்பற்றி ஈன்றணிய குழவி சீவித்தற்பொருட்டு அப்பருவத்தின் அவ்வுணர்வு மாத் திரை மறவாது நிலைபெறச் செய்வன் முதல்வனெனக்கோடும்.

உள்ளதே தோற்ற என்றதனால் உடல் வேறுபடுமாறும், விண்படர்ந்து என்றதனால் இடம் வேறுபடுமாறும், கண் முன னைக் கனவுணர்விற் றுன்மறந்து என்றதனால் அறிவு வேறுபடு மாறும் உணர்த்தியவாறு.

மூன்னுடம்பிறக்குஞான்று மனம் யாண்டுச் சென்று பற் றியது ஆண்டு வந்து மீளப் பிறக்குமென்பார், மனந் தள்ளக் கருவில் விழும் என்றார். தள்ள - தள்ளுதலாலென்க. சுட்டு வருவித்துரைக்க. வினையினால் - புண்ணியபாவ சேடத்தால் என்க.

இதனானே மனந்தள்ளிய கதியிற் சென்று பிறத்தற்கேது வாகிய புண்ணியபாவ சேடங்கள் எஞ்சிநிற்ப, ஏனையவே துறக்க நிரயங்களிற் சென்று அநுபவிக்கப்படுமென இறுதிக்கட்டும் ஆசங்கையை நீக்கியவாறு காண்க.

பஞ்சாக்கினி வித்தையி னியல்புணர்த்துவார், விண்படர்ந்து மறந்து அணுவாய்ச்சென்று கருவில்விழும் என்றார். அணுவாய்ச் சேறல் - துறக்கநிரயங்களின் எடுத்த பூதசார முதலிய உடம்பி னீங்கிச் சூக்குமதேக மாத்திரையாய்ச் சேறல்.

## பஞ்சாக்கினிவித்தை

பஞ்சாக்கினி வித்தையினியல்பு தொகுத்துக் கூறுதும் :— பார்ப்பனச்சாதி முதலியவற்றிற் பிறந்து வேள்விமுதலிய நல் வினைசெய்த உயிர்கள் அவ்வினையின்பய னுகர்தற் பொருட்டு இவ்வுடம்புநீங்கிச், சூக்குமதேகத்தோடுந் துறக்கத்திற்சென்று, இன்பமநுபவித்தற்குரிய பூதசாரவுடம்பெடுத்து, ஆண்டு வைகுங் கடவுளரோடு வாழ்ந்து, நல்வினைப்பயன்கள் அநுப வித்துத் தொலைந்தவழி, மீள நிலத்தின்வந்து, பார்ப்பனச்சாதி முதலியவற்றிற்றோன்றி, வினைகளையீட்டுதற் கேதுவாய் எஞ்சி நின்ற வினைச்சேடத்தால் அவ்வுடம்பினீங்கிச், சூக்குமதேகத் தோடு மேகமண்டலத்தினையெய்தி, ஆண்டு நின்று மழைத் தாரையினோடுகூடி, நிலத்தினையடைந்து, நெல்முதலிய பைங் கூழின் விரவினின்று, அவை உணவாய்ப் பரிணமித்தவழி அவற்றோடுகூடிக், தந்தையின் வயிற்றுட்சென்று, ஆண்டுச்

சுக்கிலமாய்ப்பரிணமித்து, அதனோடுகூடித் தாய்வயிற்றுட் சென்று, ஆண்டுக் கருவாய்ப்பரிணமித்துப், பார்ப்பனச்சாதி முதலியவற்றிற் குரித்தாகிய தூலதேகத்தோடு நிலத்திற் றோன்றுமென்றுணர்க.

ஆன்மாத் தூலவுடம்பினீங்கியவழித் துறக்கமும், மேக மண்டலமும், நிலனும், தந்தையும், தாயுமென்னும் ஐந்து நிலைக் களத்தும்வைகித் தோன்றுதலின், இவ்வைந்திடமும் அங்கி யாகவும், இவற்றினெய்திய ஆன்மா ஆகுதியாகவும் இங்ஙனந் தியானிப்பதொரு சாதகமாகலின், இது "பஞ்சாக்கினி வித்தை" எனப்பட்டது. இம்முறை நல்வினைகளைச் செய்து துறக்கத்திற் சென்று இன்பப்பயன் அநுபவித்து, மீள நிலத்திற்றோன்று முயிர்கண் மாத்திரைக்கேயெனவும், ஏனைத் தீவினைசெய்து நிரயத்திற்சென்று துன்பப்பயனை அநுபவித்து மீள நிலத்திற் றோன்றுமுயிர்கட்கு இவ்வாறு நியமமில்லை யெனவும் உணர்க. இவற்றினியல்பெல்லாம் நீலகண்ட பாடிய முதலியவற்றுட் காண்க. சண்டுரைப்பிற் பெருகும்.

மனந் நள்ளக் நருவில் விழும் என்பதற்கு விண்ணிரயங்களிற் படர்ந்து அநுபவித்தொழிந்த பின்னர் இடையீடின்றி மனத் தினும் விரைந்துசென்று கருவில்விழுமெனப் பொருளுரைப் பின் அதுவே நியமமன்மையின், *"உடல்விடா யோனிபற்றி யுதிப்பினு முதிக்கு மொன்றிற்—படர்வுறு துறும்பா வத்தாற் பாடாணம் போற்கிடந்து—கடனதாங் காலஞ் சென்றுற் கடுநர கதனில் வீழ்ந்தங்—கிடருறு முருவங் கன்மத் தளவினி லெடுக்கு மன்றே" என்றற் றொடக்கத்தோடு முரணுமாறறிக.

அற்றேல், அஃதாக; "குடாகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்புநீங்கியவழிச் சீவன் சிவத்தோடு கூடும்" என்னுஞ் சுருதி புணர்துரையென்றொழித் தற் கேலாமையின், அது பொருள்படுமாறென்னையெனின்,—அது பொருள்படுமாறும், தூலவுடல்விட்டுச் சேறற்குவமம்வேறு மாறும் உணர்த்தி, அவ்வாசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத் துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்டும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது

எனவரும்.

---

* சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம், கூஎ.

எனவே, உடல்விட்டுப்போமாற்றிற்குவமை குடாகாய மாத்திரையேயன்றி, அரவுதன்ரோலுரிவுமுதலியனவும் ஆகமங் களிற் கூறப்படுதலின், இவ்விருவேறுவகையும் ஒன்றற்கே யுவமையாதல் கூடாமையின், அரவுதன்ரோலுரிவுமுதலிய வுவமை தூலவுடம்புவிட்டுப் போமாற்றிற்கெனவும், குடாகாய வுவமை சூக்குமவுடம்புவிட்டுப்போமாற்றிற்கெனவுந் தாற்பரிய முணர்ந்து கொள்ளப்படுமாகலான், ஈண்டைக்கு மூரணுமாறின்மையின், புனருற்பவமுணர்த்தும் ஆகமவளவையும், ஈண்டெடுத்தோதிய வழியளவையும் பிரமாணமாகலான், இறந்தவுயிர் மீளப்பிறக்கு மென்பது பெற்றும்; பெறவே, சேதனப்பிரபஞ்சமுஞ் சடப் பிரபஞ்சம்போல, ஒடுங்கின சங்காரத்தினின்று உற்பத்தியெய்து மென்றற்கு ஐயமின்மையின், சங்காரகாரணனென்றது இயை பின்மைமாத்திரைநீக்கித் தலைமைபற்றிவந்தடுத்த விசேடணத் தான் விசேடிக்கப்பட்டதேயாமாகலான், ஐந்தொழில்செய்தல் சங்காரகாரணனுகிய முதல்வனுக்கேயுரிய இலக்கணமாதற்கிழுக் கென்னையென இலக்கணத்தை வலியுறுத்தவாறுயிற்று.

மேலைவெண்பாவிற் கண்டநனவைக் கனவுரைவிற் ருன்மறந்து என்றது அறிவுவேறுபடுதற் கெடுத்துக்காட்டியது; ஈண்டுக் கனவு என்றது அதனையே உடல்வேறுபடுதற் கெடுத்துக்காட்டிய தாகலின், கூறியது கூறலல்லாமையுணர்க.

**பரவின் அடாது** எனக் கூட்டுக. பரவுதல் - எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.

குளவாம்பல் - குளாம்பல், மரவடி - மராடி என மரீஇயினைற் போலக், குடவாகாயங் குடாகாயம் என மரீஇயிற்று. கடமென் னும் வடமொழி குடமெனத் திரிந்ததெனக் கோடலுமொன்று.

ஈண்டு உள்ளம் என்றது சூக்குமதேகத்தை. போமாற்றிற்கு என்னும் நான்கனுருபு செய்யுளாகலின், விகாரத்தாற்றொக்கது; *"ஐந்தவித்தா னற்றல்" என்புழிப்போல. அது - அக்குடாகாய வாகாயவுவமை.

சூக்கும தேகத்தினியல்பு மேலையதிகரணத்துரைத்தாம். விஞையான்வருந் தூலவுடம்பின் பேதம், †"தோற்றியிடு மண்ட சங்கள் சுவேதசங்கள் பாரிற் றுதைந்துவரு மூற்பீசஞ் சராயு சங்க ணென்கி—னூற்றமிகு தாபரங்கள் பத்தொன்பதென்று மூர்வபதினேந்தமரர் பதினென்ரே டுலவா—மாற்றரு நீருறை வனநற் பறவைகணற் காலி மன்னியிடும் பப்பத்து மானிட

* திருக்குறள், கூ-ம் அதி. நீத்தார்பெருமை, கு.

† சிவப்பிரகாசம், பொது, கூகு.

ரொன்பதுமா—வேற்றியொரு தொகையதனி லியம்புவர்கள் யோனி யெண்பத்து நான்குநூ றுயிரமென் றெடுத்தே" என்பத னன் அறிக.

அண்டங்களினியல்பு

இனி, இவ்வுடம்புகளோடு கூடிநின்று போக்குவரவுசெய்தற் கிடனுகிய அண்டங்களின் அளவையும், அவற்றியல்புந் தொகுத்துக்கூறுதும் :—

சாளரத்திற்றோன்றும் ஞாயிற்றின்கதிரின் அதிநுட்பமாய்த் தோன்றும் தண்ணிய துகள் அணுவெனப்படும். அஃதெண் மடங்குகொண்டது *திரசரேணு. அஃதெண்மடங்கு கொண்டது கசாக்கிரம். அஃதெண்மடங்குகொண்டது இலீக்கை. அஃதெண் மடங்குகொண்டது யூகை. அஃதெண்மடங்குகொண்டது இயவைநெல்லு. இயவைநெல்லகலம் எட்டுக்கொண்டது ஓர் அங்குலம். அங்குலம் இருபத்துநான்கு கொண்டது ஒருமுழம். முழம் நான்குகொண்டது ஒருவில்லு. வில்லிரண்டு கொண்டது ஒருதண்டம். தண்டம் இரண்டாயிரங்கொண்டது ஒருகுரோசம். குரோசம் நான்குகொண்டது ஒருயோசனை ; ஆகலான், இந்த அளவையாற் சாதாரண புடவிதத்துவமாகிய அண்டம் நூறு கோடியோசனை ஆழவகல நீளங்களையுடைத்து. இதற்கு வகை :—

கீழண்டச் சுவர்க்கனங் கோடியோசனை. அதன்மேற் காலாக்கினி யுருத்திரபுவனங் கோடியோசனை. இந்தப்புவனத்திற் காலாக்கினியுருத்திரர் ஆயிரம்யோசனையுயரமும், இரண்டாயிரம் யோசனை அகலமுமுடைய சிங்காசனத்திற் செந்தழன்மயமான திருமேனி பதினுயிரம் யோசனை உயரமுடையவராய், வலக் கரத்தில் வாளும் அம்பும், இடக்கரத்திற் கேடகமும் வில்லு முடையவராய் எழுந்தருளியிருப்பர். அவர்க்குப் பரிவாரமாய் அவரோடொத்த வடிவுடையவராய்ச் சூழ்ந்திருக்கும் உருத்திரர் பதின்மர் உளர். அவருள் ஒவ்வொருவர்க்குங் கோடியுருத்திரர் பரிவாரமாய்ச் சூழ்ந்திருப்பர். இத்தன்மையராகிய காலாக்கினி யுருத்திரர் திருமேனியின் மேனோக்கி யெழுந்த சுடர்க்கொழுந்து காலாக்கினியுருத்திரர் புவனத்திற்குமேற் பத்துக்கோடியோசனை. அதன் புகைப்படலம் அதன்மேல் ஐந்துகோடியோசனை. ஆக அண்டச் சுவர்க்கனமுளப்படப் பதினேழுகோடி யோசனை கண்டு கொள்க.

---

* திரிசரேணு எனவும் பாடம்.

இது,

*" அருட்படை பரப்பிய மருட்பெருங் குரிசில்
காம முதலிய வேமத் தானையொடு
மான மாக்களு மிரிய வாஞ
தோடுபுறங் கண்ட பீடுடை மறவ
தோத்தா துக்க ளேய்த்து வாவினை
கோத்தெறி கவர்வினென் குறிமற் றுற்றவை
யாற்றித் தத்துவ வத்துவா முதல
மாற்றிப் புவன மந்திர மீறில்
வருண மாப்பத மிருடி ரின்கலை
யாறு மீறி லாண்டிய லடையக்
கூறு மரனெறி தேறின ரோய
வாதித் தத்துவ வத்துவா வோதிற்
றீதி லண்ட கடாகங் கோடி
யோசனை கீழத னும்பர்ப் பேசிற்
கால வனலுருத் திரர்வரை கோடி
தோலாப் பற்ப னனந்த னீசன்
பிங்கலன் காலன் குரோதன் சலசன்
றங்கா வதிபலன் றனதன் சங்கர
னென்றிவர் கோடி யுருத்திர ரொருவரைச்
சென்றனர் சூழத் திகழ்வோர் தன்றி
வீரிந்துசூழ் போதத் திருந்தரி யமளி
யாயிர மிரண்டகன் றருமணிச் சுடர்சொரிந்
தாயிர முயர்ந்த வதனுங் கேய
வீரைந் தாயிரம் யோசனை யுயர்ந்தோர்
மேனி யீரிரண் டியல்கரத் துற்ற
வைவாட் கேடகந் தந்துற் றெளிர
வெஞ்சரஞ் சாப மெஞ்சா தேந்தி
யிருந்தோர் புவனம் பொருந்தின ரவர்போ
லாகமம் புரியு மணிகிள ரிறைவர்
போகிய வுயர மாவீழ் கோட்டங்
கோடி மற்றவர் கொழுஞ்சுடர்க் கற்றை
யோடிய தொருபது கோடி மாடு
நிரலம் பனமைங் கோடி பேரா
வொளிகிளர் கால வுருத்திர
ரணிகிளர் தேகந் தெளிமதி சிறிதே"

என்னும் ஞானமிர்தத்தினுங் காண்க.

---

* இது, ஞானமிர்தத்திற் கிரியாபாதத்துள்ளது.

இந்தப் பதினேழுகோடி யோசனைக்குமேற் பாவிகள் சென்றடையு மிடமாகிய நரகலோகங்கள் ஒன்றன்மே லொன்றாக ஒரோவொன்று தொண்ணூரிலக்கம்யோசனை அளவுடைய முப்பத்துமூன்று தளங்களும், தனித்தனி நூறுயிரம்யோசனை அளவுடைய முப்பத்திரண்டு இடைவெளியு முடையவாயுள்ளன.

இந்த நரகங்கள் நரகமும், மாநரகமும், இராசநரகமும், இராசராசேச்சுரநரகமுமென நான்குவகைப்படும்.

அவற்றுள், நரகம் இரௌரவமும், துவாந்தமும், சீதமும், வெப்பமும், சந்தாபமும், பதுமமும், மாபதுமமும், காலசூத்திரமுமென எண்வகைப்படும்.

மாநரகஞ் சூசிமுகமும், காலகட்கமும், குரதாரமும், அம்பரிடமும், தத்தாங்காரமும், மாதாகமும், சந்தாபமும், பீபற்சமுமென எண்வகைப்படும்.

இராசநரகம் *இலாக்காப்பிரலேபமும், மாஞ்சாதமும், நிருச்சுவாசவுச்சுவாசமும், யுக்குமாத்திரியும், சான்மலியும், உலோகப்பிரதீப்தமும், சூற்பிபாசமும், கிருமிநிசயமுமென எண்வகைப்படும்.

இராசராசேச்சுரநரகம் உலோகத்தம்பமும், விண்மூத்திரமும், வைதரணியும், தாமிச்சிரமும், அந்ததாமிச்சிரமும், கும்பிபாகமும், மாரௌரவமும், அபிசியுமென எண்வகைப்படும்.

இந்த நால்வேறுவகையின் எவ்வேழுக்கு, ஒவ்வொன்று பிரதானநரகமாகவிருக்கும்; ஆக முப்பத்திரண்டு நரகின்பெயருங் கண்டுகொள்க.

இங்ஙனம் முப்பத்திரண்டு இடைவெளிகளின் அளவு தனித்தனி இலக்கமும், முப்பத்துமூன்று தளங்களின் அளவு தனித்தனி தொண்ணூரிலக்கமுமாக நரகலோகம் முப்பதுகோடியே யிரண்டிலக்கம் யோசனையுயர முடைத்தெனக் கண்டுகொள்க. இவற்றின் அகலநீளம் காலாக்கினியுருத்திரபுவனம் போலப் பிரமாண்டகடாகம்வரையுமாம். முன்னர்க் கூறப்படும் உலகங்கட்கும் அகலநீளம் இவ்வாறே காண்க.

இந்த நரகலோகங்களுக்குமேல் நிராலம்பவெளி முப்பதினாயிரம் யோசனையுயரம். அதன்மேல் ஒன்பது நூறுயிரம் யோசனையுயரமுடைய நிலம் மேலேபொன்மயமும், கீழே இருப்புமயமுமென் றிரண்டுபுடமாய், அவ்விருப்புப் புடத்தின் ஒருபாதி

* இலாக்காப்பிரலோபமெனவும் பாடம்.

மண்மயமாயிருக்கும். அதன் கீழ்த்தளத்தின் ஊழிக்காலத்தின் ஞாயிறுபோன்ற வடிவமும், கராளமுகமும், மழுக்கரமுமுடைய கூர்மாண்டர் முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதியாய்த் தம்மோடொத்த உருத்திரகணங்களோடு வீற்றிருப்பர்.

இந்தக்கூர்மாண்ட புவனத்தின்மேல் ஏழுநிலமுடைய பாதாளம் ஏழுளவாம். அவை ஆபாசமும், பாதாளமும், நிதலமும், கபத்திமானும், மாதலமும், இராசாங்கமும், பாதலமு மென்பனவாம்.

இவற்றுள் ஆபாசமுதலிய ஆறுலகமும் ஒரோவொன்று ஒன்பதினாயிரம் யோசனையுயரமும், மேனிலம் ஆயிரம்யோசனை உயரமுமுடையன. பாதலமென்னும் பாதாளம் பதினாயிரம் யோசனையுயரமும், இரண்டுகோடியே யெண்பத்தெட்டு நூறுயிரம் யோசனையுயர்ந்த மேனிலமுமுடையது. இவ்வேழனுள் ஒரோவொன்று மும்மூன்று கண்டமாம்.

அவற்றுள், கீழ்பாற்கண்டத்தின் ஆபாசமுதலிய ஏழினும் முறையே சங்கசுருதியும், பிரகலாதனும், சிகபாலனும், கர்க்கந்துகனும், இரணியாக்கனும், பிருகற்கர்ப்பனும், பெலியுமென்னும் அசுரவேந்தர் எழுவரும்; நடுக்கண்டமேழினும் முறையே குடிலனும், வாசுகியும் கம்பளனும், கார்க்கோடகனும், காளாங்கனும், தற்றரிசனும், தக்கனுமென்னும் உரகவேந்தர் எழுவரும்; மேல்பாற்கண்டமேழினும் முறையே விகடனும், உலோகிதாக்கனும், இயமனும், விகாடனனும், கராளனும், வீமகிருகிராதனனும், பிங்கலனுமென்னும் இராக்கதவேந்தர் எழுவரும் அவ்வப் பாதாளங்கட்கு அதிபதிகளாயிருப்பர்.

இவற்றுள், மேலெல்லைக்கணின்ற பாதல மென்னும் பாதாளத்திற் பொன்மயமாய் ஆயிரம்யோசனையளவுடைய புவனத்தில் இவ்வேழுபாதாளங்கட்கும் அதிபதியாகிய ஆடகேசுரர், அவுணர், இராக்கதர் இயக்கர் கடவுளர்மகளிரெல்லாரும் ஏழிசைப்பாடல்களாற் றுதிசெய்ய வீற்றிருப்பர்.

இங்ஙனம் முப்பத்துமூன்றுநிலமுடைய முப்பத்திரண்டு நரகங்களுக்குமேல் நிராலம்பவெளி முப்பதினாயிரம்யோசனையும், அதன்மேற் கீழ்த்தலத்திற் கூர்மாண்டர் வீற்றிருக்கும் நிலம் ஒன்பதுநூறுயிரம்யோசனையும், அதன்மேல் ஆறுபாதாளங்கள் ஒரோவென்று இடைவெளி ஒன்பதினாயிரம்யோசனையும், மேனிலம் ஆயிரம்யோசனையும், மேலெல்லைக்கணின்ற ஏழாம்பாதாளத்திற்கு இடைவெளி பதினாயிரம்யோசனையும், அதற்கு மேனிலமாகிய பூமி இரண்டுகோடியே எண்பத்தெட்டு நூறுயிரம்

சோசனையுமாக நரகலோகத்தின் மேற்பூமியளவு இரண்டு கோடியே தொண்ணூற்றெட்டிலக்கம்யோசனை. நரகலோகம் முப்பதுகோடியே இரண்டிலக்கம்யோசனையும், அதன்கீழ் அண்ட கடாகம்வரையிற் பதினேழுகோடியோசனையுமுளப்படப் பூமிக் குக்கீழ் ஐம்பதுகோடி யோசனையளவு கண்டுகொள்க.

இனி, இரண்டுகோடியே யெண்பத்தெட்டு நூறுயிரம் யோசனையுடைய பூமியின் மேற்பரப்புப் பிரமாண்டத்திற்கு நடு வாய் நூறுகோடியோசனைவிரிவும், எழுபெருங்கடலும், எழு பெருந்தீவும், நடுவே மேருவரையுமுடைத்தாய்ப் பூலோகமெனப் பெயர்பெறும்.

எழுபெருந்தீவின் நடுத்தீவாவது நூறுயிரம்யோசனைப் பரப்புடைத்தாய் வட்டமாய் நிலமகட்கு உந்தித்தானமாயுள்ள நாவலந்தீவு.

இந்நாவலந்தீவின் நடுவே ஞாயிற்றினொளியும் மழுங்கும்படி பேரொளிகான்று பொன்மயமான மேருவரை நூறுயிரம் யோசனை அளவுடைத்தாய், அவற்றுட் பதினுயிரம்யோசனை பூமிக்குளாழ்ந்து, எண்பத்துநாலாயிரம் யோசனை பூமிக்கு மேலுயர்ந்து, மூலத்திற் பதினுயிரம்யோசனை விரிவும், முடியின் முப்பத்தீராயிரம் யோசனைவிரிவுமுடைத்தாய், முக்கூறாய், முக் கூற்றினும் முறையே கீழ்க்கீழ் மேகலையைநோக்கி மேன்மேல் நாலாயிரம்யோசனையகலம் மிக்குடையனவாகிய மூன்றுமேகலை களையுமுடைத்தாய்த், தாமரைப்பொகுட்டுவடிவிற்றாய் நிற்கும். முக்கூற்றின் அடிக்கூறு பூமிக்குமேல் இருபத்தையாயிரம் யோசனையுயரமும், அதன்மேற்றாகிய முதன்மேகலை மூவாயிரம் யோசனையுயரமும், பதினுயிரம்யோசனைப் பரப்புமுடைத்தாய்க் கடகம்போல் வயங்கும். அதன்மேல் நடுக்கூறு இருபத்தையா யிரம்யோசனையுயரமும், அதன்மேற்றாகிய இரண்டாம்மேகலை மூவாயிரம்யோசனையுயரமும் பதினுலாயிரம்யோசனைப் பரப்பு முடைத்தாய்க் கடகம்போல் வயங்கும். அதன்மேல் நுனிக்கூறு இருபத்தையாயிரம் யோசனையுயரமும், அதன்மேற்றாகிய மூன் றும் மேகலை மூவாயிரம்யோசனையுயரமும், பதினெண்ணுயிரம் யோசனைப் பரப்புமுடைத்தாய்ச் சக்கரவாளமென்னும் பெயர்த் தாய்க் கடகம்போல் வயங்கும்.

இங்ஙனம் முக்கூற்றிற்குமுயரம் மூவிருபத்தையாயிரம் யோசனையும், மூன்றுமேகலைக்குமுயரம் மும்மூவாயிரம் யோசனை யுமாகப் பூமிக்குமேல் உயரம் எண்பத்திநாலாயிரம்யோசனை. பூமியின்கீழ் ஆழ்ந்தது பதினுறுயிரம்யோசனையுமுளப்பட மேரு வரையின் நீளம் நூறுயிரம்யோசனையுங் கண்டுகொள்க.

இதன் மேகலைமூன்றனுள், கீழிரண்டு மேகலையினுஞ் சித்தர் கந்தருவர் முதலியோர் வைகுவர். மேற்கண்ணதாகிய சக்கரவாள மேகலையின்மேற் பலபலகொடுமுடிகளுள. அவற்றுள், கிழக்கு முதலிய எட்டுத்திக்கினும் ஒரோவொன்று ஒன்பதினாயிரம் யோசனைப் பரப்புடையவாய், அதிவிசித்திரமாய்ப், பலவேறு வகைப்பட்ட வளங்களுடைய நகரங்கள் எட்டுள. அவற்றுட் கீழ் பால் அமராவதியென்னும் நகரம். தென்கீழ்பால் தேசோவதி. தென்பாற் சமுயமினி. தென்மேல்பாற் கண்ணவதி. மேல்பாற் சுத்தவதி. வடமேல்பாற் கந்தவதி. வடபான் மகோதையை. வட கீழ்பால் யசோவதியென்னும் நகரமாம். இவ்வெட்டினும் முறையே இந்திரன், அங்கி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னுந் திசைகாவலர் எண்மருந் தத்தம் பரிசனங்களோடும் வைகுவர்.

இம்மகாமேருவினுச்சியிற் பதினாலாயிரம்யோசனை யுயரமும் அகலமுமுடைய மநோவதியும், அதன்மேல்பால் அத்துணை யுயரமும் அகலமுமுடைய வைகுண்டமும், அதன்வடகீழ்பால் இருபதினாயிரம்யோசனையுயரமும் அகலமுமுடைய சோதிட்கமு மென மூன்று கொடுமுடிகளுள. இந்தமூன்றினும் முறையே பிரமன், மால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் வைகுவர்.

இத்தன்மைத்தாகிய மேருவரையின் தென்பால் நிடதம், ஏமகூடம், இயமம் என மூன்றுமலைகளும்; வடபால் நீலம், சுவேதம், சிருங்கவான் என மூன்றுமலைகளும் ஒரோவொன்று இரண்டாயிரம் யோசனையகலமும், பதினாயிரம் யோசனையுயர்மும், ஒன்பதினாயிரம்யோசனை இடைவெளியுமுடையவாய்க், கிழக்கு மேற்கு உவர்க்கடல்வரையும் நீண்டுகிடக்கும். மேருவரையின் கீழ்பால் மாலியவானென்னும் மலையும், மேல்பாற் கந்தமாதன மென்னும் மலையும் ஒரோவொன்று ஆயிரம்யோசனையகலமும், இரண்டாயிரம்யோசனையுயரமும், முப்பத்துநாலாயிரம்யோசனை நீளமுமுடைத்தாய்த், தெற்குவடக்கு நிடதம் நீலம் என்னும் மலையிரண்டினும் முட்டிநிற்கும்.

இம்மலையெட்டனுள்ளும், நிடதங் கந்தமாதனம் நீலம் மாலியவானென்னும் நான்கிற்கும் நடுவாக மேருவைச்சூழ்ந்து நாற்றிசையினும் ஒன்பதினாயிரம்யோசனைப் பரப்புடையநிலம் இளாவிருதவருடமெனவும், மாலியவான்மலைக்குக் கிழக்கு உவர்க்கடற்கு மேற்கு முப்பத்தீராயிரம் யோசனைப் பரப்புடைய நிலம் புத்திராசுவருடமெனவும், கந்தமாதனத்திற்கு மேற்கு உவர்க்கடற்குக்கிழக்கு முப்பத்தீராயிரம்யோசனைப் பரப்புடைய நிலங் கேதுமால வருடமெனவும், தென்பால் நிடதத்திற்கும்

ஏமகூடத்திற்கும் இடையே ஒன்பதினாயிரம்யோசனைப்பரப் புடைய நிலம் அரிவருடமெனவும், ஏமகூடத்திற்கும் இயமத் திற்கும் இடையே அத்துணைப் பரப்புடைய நிலங் கிம்புருட வருடமெனவும், இமயத்திற்குந் தென்கடற்கும் இடையே அத் துணைப் பரப்புடைய நிலம் பாரதவருடமெனவும், வடபால் நீல மலைக்குஞ் சுவேதமலைக்கும் இடையே அத்துணைப்பரப்புடைய நிலம் இரமியவருடமெனவும், சுவேதமலைக்குஞ் சிருங்கவானுக் கும் இடையே அத்துணைப்பரப்புடைய நிலம் இரணியவருட மெனவும், சிருங்கவானுக்கும் வடகடற்கும் இடையே அத்துணைப் பரப்புடைய நிலங் குருவருடமெனவும் பெயர்பெறும்.

இவற்றுள், மேருவைச்சூழ்ந்த நிலத்தின் மேருமலை, சலியாமை நிலைபெறுதற்பொருட்டுக் கிழக்குமுதலிய நான்கு திக்கினும் முறையே வெண்மை பொன்மை கருமை செம்மை யென்னும் நிறங்களும், இந்தநான்கும் ஐம்பதினாயிரம்யோசனை உயரமுமுடையவாய் மந்தரம், கந்தமாதனம், விபுலம், சுபார்சு வெனப் பெயர்பெற்றுநிற்கும் விட்கம்பமலைகள் நான்கள. இந்த நான்குமலைகளிலும் முறையே கடம்பும், நாவலும், அரசும், ஆலு மென்னும் நான்கு கற்பகமரங்கள் ஆயிரம்யோசனையுயரமுடைய வாய் நிற்கும்.

இவற்றுள், தென்றிசையினிற்கும் நாவன்மரம் ஏனைய மூன்றினுஞ் சிறந்த அதிசயமிக்குடைத்தாகலின், அதன்பெய ராலே உவர்க்கடலாற் சூழப்பட்டு, இலக்கம்யோசனை அளவும், ஒன்பதுவருடமுமுடைத்தாகிய இந்த நடுத்தீவு நாவலந்தீவென்று வழங்கப்படும். இந்நாவற்பழத்தின் சாறெழுகி ஆறுய்ப்பரந்து மேருவைச்சூழ்ந்து அந்நிலத்தையும் பொன்மயமாக்கி மேருவின் மூலத்திற் சென்றடையும். அந்தச் சாற்றினைப்பருகிய பறவை விலங்கு முதலாயினவும் பொன்னிறம்பெறும்.

இந்த விட்கம்பமலை நான்கனுட் கீழ்பால் நிற்கும் மந்தர மலையடிவாரத்திற் சைத்திரரதமென்னும் உய்யானவனமும், அருணோதகமென்னும் மடுவும், தென்பாற் கந்தமாதனத்தினடி வாரத்தில் நந்தனமென்னும் வனமும், மானசமென்னும் மடுவும் மேல்பால் விபுலமலையடிவாரத்திற் வைப்பிராசமென்னும் வன மும், சிதோகமென்னும் மடுவும், வடபாற் சுபார்சுமலையடி வாரத்தில் சுருதிமானென்னும் வனமும், பத்திரகமென்னும் மடுவுமுளவாம்.

இவையெல்லாமுடைத்தாய் மேருவைச் சூழ்ந்த நிலமாகிய இளாவிருதமென்னும் வருடத்தின் வாழ்வோர் நாவற்பழச்

சாற்றினைப் பருகிப் பொன்மயமாய்ப் பதின்மூவாயிரமாண்டு நிலைபெறுவர்.

கந்தமாதனத்திற்குங் குடகடற்குஞ் அந்தராளமாகிய கேதுமாலவருடத்தின் வாழ்வோர் பனசப்பழத்தின்சாற்றைப் பருகிக் குவளைப்பூநிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நிலை பெறுவர்.

மாலியவானுக்குங் கீழ்கடற்குஞ் அந்தராளமாகிய பத்தி ராசுகவருடத்தின்வாழ்வோர் கருங்குவளைப்பூவையுண்டு மதி யொளிபோலும் நிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நிலை பெறுவர்.

சிருங்கவான்மலைக்கும் வடகடற்குஞ் அந்தராளமான * குருவருடத்தின் வாழ்வோர் ஆலம்பழத்தை நுகர்ந்து கருங் குவளைப்பூநிறமுடையராய்ப் பன்னீராயிரமாண்டு நிலை பெறுவர்.

இந்தக் குருவருடத்திற்கணித்தாக வடதிசையினும், வாயு திசையினும் உவர்க்கடலின் கட் சந்திரத்தீவும் பத்திராகரத்தீவும் என்றிரண்டு தீவுள. அவற்றின் வாழ்வோர் முறையே சந்திர நிறமுஞ் செந்தாமரைப்பூநிறமும் உடையராய்க் கனி கிழங்கு களையுண்டு பதின்மூவாயிரமாண்டு நிலைபெறுவர்.

சிருங்கவான்மலைக்குஞ் சுவேதமலைக்கும் அந்தராளமான இரணியவருடத்தின் வாழ்வோர் எலுமிச்சம்பழத்தை நுகர்ந்து மதிபோலும் வெண்ணிறமுடையராய்ப் பன்னீராயிரத்தைஞ் ஞூறாண்டு நிலைபெறுவர்.

சுவேதமலைக்கும் நீலமலைக்கும் அந்தராளமான இரமிய வருடத்தின் வாழ்வோர் கருப்பஞ்சாற்றைப்பருகி வெள்ளை நிற முடையராய்ப் பன்னீராயிரமாண்டு நிலைபெறுவர்.

நிடதத்திற்கும் ஏமகூடத்திற்கும் அந்தராளமான அரி வருடத்தின் வாழ்வோர் தத்தமக்கு வேண்டுங் கனிகளை யுண்டு, பச்சிலைமரப்பூநிறமுடையராய்ப், பெண்ணும் ஆணுமாகிய இரட்டைப்பிள்ளைகளைப் பெற்று, மூப்பதினாயிரமாண்டு நிலை பெறுவர்.

---

* குருவருடத்தின் வாழ்வோர்க்குக் கூறிய உண்டியும் நிறமும் ஆயுளும் முதலாயினவெல்லாம் இரமியவருடத்தின் வாழ்வோர்க்கும், இரமியவருடத்தின்வாழ்வோர்க்குக் கூறியனவெல்லாம் அரிவருடத்தின் வாழ்வோர்க்கும், அரிவருடத்தின் வாழ்வோர்க்குக் கூறியனவெல்லாங் குருவருடத்தின் வாழ்வோர்க்கும் உரியனவாக மிருகேந்திரத்துக் காணப் படுகின்றன. அங்ஙனமே சிவாக்கிரபாடியத்துங் கூறப்படுகின்றன ; (எட்டாஞ்சூத்திரம், பக்கம், சஉஅ.)

ஏமகூடத்திற்கும் இமயத்திற்கும் அந்தராளமான கிம்புருடவருடத்தின் வாழ்வோர் இறலியின்கனிதுகர்ந்து பொன்னிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நீலைபெறுவர்.

இங்ஙனம் இளாவிருதமுதலிய வருடங்கள் எட்டினும் வைகுவோர் நால்வகையுகங்களான் வரும் அவத்தைவேறுபாடின்றி என்றும் ஒரு தன்மையராய் இன்பதுகர்ந்துவாழ்வர்.

இனி, இமயத்திற்குந் தென்கடற்கும் நடுக்கண்டமான பாரதவருடத்தின் வாழ்வோர் நால்வகையுகங்களின் அவ்வவ யுகங்கட்குத் தக்க அறிவும் ஆயுளும் வடிவும் வலியுஞ் செல்வமும் மக்களுமுடையராய், உழவுமுதலியவற்றுன்வரும் உணவுகளை மாந்தி, ஆத்தியான்மிக முதலிய மூவகைத் துக்கங்களிற்பட்டு வைகுவர்.

இந்தப் பாரதவருடத்தினீட்டப்படுங் காமியங்கள் ஏனை யிடங்களிற்சென்று அநுபவிக்கப்பட்டு அழிவெய்துமாகலின், இஃதோர் பெருங்குணமுடைய பாரதவருடம் கருமபூமியென்றும், ஏனையவெல்லாம் போகபூமியென்றும் வழங்கப்படும்.

இவ்வொன்பது வருடங்களையும் நாவலந்தீவிற்கு வேந்தனாக மநுமரபிற்றோன்றிய ஆக்கினீத்திரனென்னும் அரசன் தன் புதல்வராகிய பரதன் முதலிய ஒன்பதின்மர்க்கும் பகுத்தளித்தானாகலின், அவரவர் பெயர் அவ்வவ்வருடங்களுக்காயினவென்றுணர்க.

இவற்றுள், பாரதவருடமும் ஒன்பதுகண்டமாய், இந்திரத்தீவும், கசேருத்தீவும், தாமிரவருணித்தீவும், கபத்தித்தீவும், நாகத்தீவும், சாந்திரமத்தீவும், காந்தருவத்தீவும், வாருணத்தீவும், குமரித்தீவுமெனப் பெயர்பெற்றுப், பலபல மலைகளும், பலபல நதிகளும், பலவேறுவகைப்பட்ட சாதிகளு முடைத்தாய் வயங்கும்.

இவ்வொன்பதினுள்ளுங் குமரிக்கண்டமொன்றே வேதாகம வழக்கமும், சாதிவரம்பும், கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களும், காசிமுதலிய புண்ணியத்தலங்களு முடைத்தாய்ச் சிறந்தது. ஏனை எட்டுக்கண்டமும் மிலேச்சர்வாழிடங்களாம்.

இவ்வாறு நாவலந்தீவினியல்பு தொகுத்துக் காட்டினும். இதனைச் சூழ்ந்துகிடக்கும் உவர்க்கடலும் இதுபோல இலக்கம் யோசனை அகலமுடைத்து.

உவர்க்கடலைச்சூழ்ந்து இரண்டுநூறுயிரம் யோசனை விரிவுடையது சாகத்தீவு. இது சாகமென்னும் மரத்தாற்பெற்ற

பெயர். அந்தச் சாகத்தீவைச்சூழ்ந்து அத்துணைப்பரப்புடையது பாற்கடல். அதனைச்சூழ்ந்து நான்கு நூறுயிரம் யோசனைப் பரப்புடையது குசத்தீவு. இது பிரமன் வேள்வி செய்யுங்கால் ஆண்டுப் பொன்மயமாய் முளைத்த குசைப்புல்லாற்பெற்ற பெயர். அந்தக் குசத்தீவைச்சூழ்ந்து அத்துணைப் பரப்புடையது தயிர்க் கடல். தயிர்க்கடலைச்சூழ்ந்து எட்டு நூறுயிரம் யோசனைப் பரப்புடையது கிரௌஞ்சத்தீவு. அஃது ஆண்டுக் கிரௌஞ்ச மென்னும் வரையிற் கிரௌஞ்சனென்னும் அவுணன் அறுமுகக் கடவுளொடு பொருது மடிந்தமையின், அவனுற் பெற்றபெயர். அந்தக்கிரௌஞ்சத்தீவைச் சூழ்ந்து அத்துணைவிரிவுடையது நெய்க்கடல். அந்த நெய்க்கடலைச்சூழ்ந்து பதினாறு நூறுயிரம் யோசனை விரிவுடையது சான்மலித்தீவு. அஃதாண்டுப் பொன் மயமாய் ஆயிரம் யோசனையளவு வளர்ந்து நிற்குஞ் சன்மலி யென்னும் மரத்தாற்பெற்ற பெயர். அந்தச் சான்மலித்தீவைச் சூழ்ந்து அத்துணை விரிவுடையது கருப்பஞ் சாற்றுக்கடல். அதனைச்சூழ்ந்து முப்பத்திரண்டு நூறுயிரம் யோசனைப் பரப் புடையது கோமேதகத்தீவு. அஃதாண்டு மதுமரபிற்றோன்றிய கோபதியென்னும் வேந்தன் கோசவ மென்னும் வேள்விசெய் வான் றொடங்கியவழி, உசத்தியன் மரபிற்றோன்றுங் கவுதம னாகிய தன்னுசிரியன் வாசவனைவேட்பித்தற் பொருட்டுச் சென் றனனாக, பிருகுவைத் தனக்கு ஆசிரியனாகக்கொண்டு வேள்வி செய்யுங்கால் அஃதறிந்துவந்து சபித்த கவுதமன் கோபத் தீயானே வேள்விச்சாலையினின்ற கோக்களெல்லாம் வெந் தொழிய அவற்றின் மேதை அந்நிலமுழுதும் நிறைந்தமையாற் பெற்ற பெயர். அத்தன்மைத்தாகிய கோமேதகத் தீவைச் சூழ்ந்து அத்துணைப் பரப்புடையது மதுக்கடல். அக்கடலைச் சூழ்ந்து அறுபத்துநான்கு நூறுயிரம் யோசனை விரிவுடையது புட்கரத்தீவு. அஃதாண்டுளதாகிய புட்கரணி யென்னும் நதி யாற்பெற்ற பெயர். அந்தப் புட்கரத்தீவைச் சூழ்ந்து அத் துணைப்பரப்புடையது சுத்தநீர்க்கடல்.

இவ்வெழுபெருந்தீவின் நாவலந்தீவொழிந்த ஆறுதீவினு மூள்ளார் இளாவிருத முதலியவற்றின் வாழ்வார்போல நால் வகையுகங்களான்வரும் அவத்தை வேறுபாடின்றி என்றும் ஒரு தன்மையராய்ப் பால்முதலிய உணவுகளை யுண்டு பதினாயிர மாண்டு நிலைபெறுவர்.

இங்ஙனம் நாவலந்தீவின் நடுத்தொடங்கிச் சுத்தநீர்க்கடல் வரையில் இரண்டுகோடியேயைம்பத்து மூன்றிலக்கத் தைம்பதி னாயிரம் யோசனை யென்றறிக.

இனிச், சுத்தநீர்க்கடலிலச்சூழ்ந்து கனகமயமாய் மாணிக்க முதலிய பலவேறுவகைப்பட்ட மணிகளெயெல்லா முடைத்தாய் வயங்குவதாகிய பொன்னிலம் பத்துக்கோடி யோசனையுடைத்து. ஆண்டுக் கடவுளர்வந்து விளையாடி வாழ்ந்து தத்தமுலகிற் கேகுவர்.

இந்தப் பொன்னிலத்தைச்சூழ்ந்து உலோகாலோகமென் னுஞ் சக்கரவாளகிரி பதினுயிரம்யோசனைப் பரப்புடைத்தாய் நிற்கும். இப்பக்கத்தின் ஒளியும், அப்பக்கத்தின் இருளு முடைமையான் அஃதுலோகாலோகமெனப் பெயர்பெற்றது.

அந்த மலையின் புறத்தைச்சூழ்ந்து இருண்மயமாய்த் துன் னிய நிலம் முப்பத்தைந்துகோடியே பத்தொன்பது நூறுயிரத்து நாற்பதினுயிரம் யோசனைப்பரப்புடைத்து. இது வெகுளி முதலியவற்றுல் தம்முயிரை வீட்டினுர் பேய்வடிவெடுத் தழன்று துன்பமுற்றலையுமிடம்.

அவ்வந்தகாரநிலத்தைச் சூழ்ந்து கோடியே யிருபத்தேழு நூறுயிரம் யோசனைப்பரப்புடையது நாயகக்கடலாகிய பெரும் புறக்கடல். அதனைச் சூழ்ந்த அண்டச்சுவர்க்கனங் கோடி யோசனை. ஆகச் சம்புத்தீவின் மேருவரைநிற்கும் நடுநிலமுதல் அண்டகடாகமீறுக எத்திசையினும் ஐம்பதுகோடி யோசனைப் பரப்புடைய பூலோகத்தினளவு நூறுகோடி யோசனையுங் கண்டு கொள்க.

இத்தன்மைத்தாகிய பூலோகத்தின்மேல் வாயுமண்டலம், மேகமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் முதலாகத் துருவமண்டலங்காறும் புவலோகம். அது பதினைந்து நூறு யிரம் யோசனையுயரமுடைத்து. அதன்மேல் இந்திரன்முத லியோர்வைகுஞ் சுவலோகம் எண்பதைத்து நூறுயிரம் யோச னையுயரமுடைத்து. அதன்மேல் மரீசிமுதலிய முனிவர்வைகும் மகலோகம் இரண்டுகோடி யோசனையுயரமுடைத்து. அதன் மேல் தென்புலத்தாரும், சன்னுமுதலிய முனிவர் கணங்களும் வைகுஞ் சனலோகம் எட்டுக்கோடி யோசனையுயர முடைத்து. அதன்மேற் சனகன்முதலியோர் வைகுந் தவலோகம் பன்னி ரண்டுகோடி யோசனையுயரமுடைத்து. அதன்மேற் பிரமன் வீற்றிருக்குஞ் சத்தியலோகம் பதினுறுகோடி யோசனையுயர முடைத்து. அதன்மேற் செங்கண்மாலுலகம் நாலுகோடி யோசனையுயரமுடைத்து. அதன்மேல் உருத்திரலோகம் ஆறு கோடியோசனையுயரமுடைத்து. அதன்மேல் அண்டச்சுவர்க்

கனங் கோடியோசனையுயரமுடைத்து. ஆகப் பூலோகத்தின் மேல் அண்டகடாகம்வரையின் ஐம்பதுகோடியோசனை ; பூலோகத்தின்கீழ்க்கூறிப்போந்த ஐம்பதுகோடி யோசனையு மூளப்படப் பிரமாண்டத்தின் அளவு நூறுகோடியோசனை யுங் கண்டுகொள்க. இது மிருகேந்திரத்திற் கண்டது.

கற்பந்தோறும் படைப்பு வேறுபடுதல்பற்றி ஆகமங்களிற் பிரமாண்டத்தின் வகையளவு சிறுபான்மை ஒன்றற்கொன்று வேறுபடக் கூறுமாயினுந் தொகையளவு நூறுகோடியோசனை யென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபெனக்கொள்க.

இத்தன்மையவாகிய சாதாரண புடவிதத்துவமென்னும் அண்டங்கள் ஆயிரங்கோடியுள. அவையெல்லாம் இவ்வாறே காலாக்கினியுருத்திரலோகமுதல் உருத்திரலோகமீறுகிய உலகங்களும், வளங்களும், நூறுகோடியோசனையளவும் ஒப்ப உடையனவாய் விளங்கனிவடிவினவாய் வயங்கும்.

இந்தச் சாதாரணபுடவிதத்துவமாகிய அண்டத்தின் அப் புறத்தே பத்துத்திசையினுங் காவல்பூண்டுவைகும் உருத்திரர் ஒவ்வொருதிசைக்குப் பதின்மராக நூற்றுவரும், அண்டத்தின் உள்ளாகக் கீழும் மேலும் அறுவரும், எல்லார்க்கும் மேலாக இருவருமாக நூற்றெட்டு உருத்திரர் உளர். அவரவர் வைகும் புவனங்களும் அவரவர்பெயரானே வழங்கப்படும்.

## நிவிர்த்திகலை

அவையாவன :—அண்டத்துள்ளாகக் கீழே காலாக்கினி யுருத்திரபுவனம், கூர்மாண்டபுவனம், ஆடகேசுரபுவனம் என வும் ; மேலே பிரமம், வைணவம், உருத்திரம் எனவுங் கூறப்படும் புவனங்கள் ஆறு

கீழ்பால் இந்திரதிசையிற் கபாலீசன், சடன், புத்தன், வச்சிரதேகன், பிரமர்த்தனன், விபூதி, அவ்வியயன், சாத்தன், பிங்கி, திரிதசாதிபன் எனப் பத்து உருத்திரர் இந்திரனைக் கீழ்த் திசைக்காவலின் நியமித்துவைகும் புவனங்கள் பத்து. மேலும் அவ்வத்திசையிற் கூறப்படும் உருத்திரர் அவ்வத்திசைகாப்பாள ராகிய அங்கியங்கடவுண் முதலியோரை அவ்வத்தொழிலின் நியமித்து அவர் வழிபட வீற்றிருப்பரென் றறிக.

தென்கீழ்பால் அங்கிதிசையின் அங்கிருத்திரன், உதா சனன், பிங்கலன், காதகன், அரன், சுலவனன், தகனன், பப்புரு,

பதுமாந்தகன், கயாந்தகன், என்னும் உருத்திரர் வைகும் புவனம் பத்து.

தென்பால் இயமன்றிசையில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கருத்தா, சையோத்தா, வியோத்தா, தருமன், தருமபதி என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

தென்மேல்பால் நிருதிதிசையில் நிருதி, மாரணன் அந்தா, குரூரதிருட்டி, பயானகன், *ஊர்த்துவகேசன், விரூபாக்கன், தூமிரன், உலோகிதன், தமிட்டிரி என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

மேல்பால் வருணதிசையிற் பலன், அதிபலன், பாசவத்தன், மாபலன், சுவேதன், சயபத்திரன், தீர்க்கவாகு, சலாந்தகன், மேகநாதன், சுநாதன் என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

வடமேல்பால் வாயுதிசையிற் சீக்கிரன், இலகு, வாயுவேகன், சூக்குமன், தீக்கணன், கயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபர்த்தி, மேகவாகனன் என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

வடபாற் குபேரனுஞ் சோமனும்வைகுந் திசையில் நிதீசன், உரூபவான், தன்னியன், சௌமியதேகன், சடாதரன், இலக்குமிதரன், அரதனதரன், சீதரன், பிரசாதன், பிரகாமதன் என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

வடகீழ்பால் ஈசானதிசையில் வித்தியாதிபன், ஈசன், சர்வஞ்ஞன், ஞானபுக்கு, வேதபாரகன், சுரேசன், சருவன், சேட்டன், பூதபாலன், பலிப்பிரியன், என்னும் உருத்திரர் வைகும் புவனம் பத்து.

கீழ்க்கண்ணதாகிய மாயோன்றிசையில் இடபன், இடபதரன், அநந்தன், குரோதனன், மாருதாசனன், கிரசனன், உதும்பரன், ஈசன், பணீந்திரன், வச்சிரதமிட்டிரி என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

மேற்கண்ணதாகிய பிரமன்றிசையிற் சம்பு, விபு, கணேத்தியக்கன், திரியக்கன், திரிதசேசன், சமுவாகன், விவாகன்,

---

*ஊர்த்துவகேசன் என்பது ஊர்த்துவலிங்கன் என்றும், பயானகன் என்பது விடப்பட்டும், பீமன் என்பது பத்தாவதாகச் சேர்க்கப்பட்டும் மிருகேந்திரத்திற் காணப்படுகின்றன.

நபன், இலீசசு, திரிலோசனன் என்னும் உருத்திரர்வைகும் புவனம் பத்து.

எல்லாவற்றினுக்கும் மேலாக வீரபத்திரன், பத்திரகாளி என்னு மிவர்வைகும் புவனம் இரண்டு. ஆகச் சாதாரணபுடவி தத்துவத்திற் புவனம் நூற்றெட்டுங் கண்டுகொள்க. இந்த நூற் றெட்டுப் புவனமும் பிருதிவியண்டம் ஆயிரங்கோடியினும் இவ்வாறே வேறுவேறுள்ளன.

இவ்வண்டஞ் சுருங்கியவடிவிற்ருகிய அடித்தலத்தில் தாமத மும், மேலே சற்று விரிவுடைத்தாகிய முகத்தில் இராசதமும், அவ்விரண்டுங்கூடும் முடித்தலத்திற் சாலவும் விரிவுடைமையாற் சாத்துவிகமுமென்னும் மூவகைத்தாம்.

இத்தன்மைத்தாகிய பார்த்திவமண்டலம் ஐவகை வடிவின் நாற்கோணவடிவும், ஐவகைக்குறியின் வச்சிரக்குறியும், ஐவகை நிறத்திற் பொன்னிறமும், இருவகைப் பத்துப்பீசத்தின் அகரம் லகரம் என்னும் இரண்டு பீசங்களும், பத்துவகை நாடியின் இடை பிங்கலை என்னும் இரண்டு நாடியும், தசவாயுக்களிற் பிராணன் அபானன் என்னும் இரண்டுவாயுவும், இருவகைப் பத்திந்திரியங்களின் ஆக்கிராணம் உபத்தம் என்னும் இரண் டிந்திரியங்களும், ஐவகை விடயத்திற் கந்தமும், கந்தமுதற் சத்த மீருகிய ஐந்துகுணமும், ஐவகை அவத்தையிற் சாக்கிரமு மூடைத்தாய், விலங்கு, பறவை, பசு, பாம்பு, தாவரம், மானிடம், பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்தருவம், ஐந்திரம், சௌமி யம், பிராசாபத்தியம், பிரமம் என்னும் பதினென்குவகை யோனி கட்கும் இடனாய் நிற்கும்.

இதற்கு அதிதெய்வம் பிரமன். இதற்கு இலயத்தானம் மூலப்பகுதி. போகத்தானம் புத்தி. ஏனைய அத்துவாக்கட்குரிய நிறம், குறி, வடிவு, பீசம், நாடி, வாயு, இந்திரியம், விடயம், குணம், அதிதெய்வம் முதலாயினவும் இம்முறையேபற்றி யுணர்ந்துகொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனிப் புவனங்களிற் புவனபதிகளினிடமாக நிலைபெறும் அக்கரங்கள் ஐம்பத்தொன்றின், ளகரத்தினிறுதிக்கணின்ற உடலெழுத்தொன்றும், அவ்வக்கரங்களாலியன்ற பதங்களெல்லா வற்றிற்கும் மூலமாகிய எண்பத்தொரு பதத்தின், இறுதிக்க ணின்ற பதமுதல் இருபத்தெட்டுப்பதமும், பதங்களானியன்ற மந்திரங்களெல்லாவற்றிற்கும் மூலமாகிய பதினைருமந்திரத்தின், இதயம், சத்தியோசாதம் என்னும் இரண்டுமந்திரமும் இதன்க

ணடங்கும். இவையெல்லாமுடைத்தாய் ஈண்டுக் கூறிப்போந்த புடவிதத்துவத்தை அடக்கி நிற்பது நிவிர்த்திகலை.

## பிரதிட்டாகலை

இனிச், சாதாரணமான அப்புதத்துவ அண்டம் பிருதிவி யண்டத்தளவிற் பதிற்றுமடங்கேற்றமாகிய ஆயிரங்கோடி யோசனைமான முடைத்து. அவ்வண்டங்களும் எண்ணிறந்தன. இவ்வாறே சாதாரணதேயுதத்துவ முதற் சாதாரண மூலப்பகுதி தத்துவங்காறும், கீழ்க்கீழண்டத்தை நோக்கி மேன்மேலண்டம் பப்பதிற்றுமடங்களவு ஏற்றமாக வுடையனவெனக்கொள்க.

அத்தத்துவங்களாவன :—புடவிதத்துவமொழித்தொழிந்த பூதங்கள் நான்கும், தன்மாத்திரையைந்தும், ஞானேந்திரியமைந்தும், கன்மேந்திரியமைந்தும், மனமாதி அந்தக்கரணம் மூன்றும், அவ்வியத்தமுமென்னும் இருபத்துமூன்றுமாம். சித்தம் மனத்தினும், குணதத்துவம் அவ்வியத்தத்தினும் அடங்குமாகலின், இருபத்துமூன்றென்னுந் தொகைக்கிழுக்கின்மை அறிக.

அவற்றுள், அப்புமண்டலத்தின் அமரேசம், பிரபாசம், நைமிசம், புட்கரம், ஆசாடி, திண்டிமுண்டி, பாரபூதி, இலகுளீச்சுரம் ஆகிய குய்யாட்டக புவனம் எட்டு. தேயுவண்டத்தின் அரிச்சந்திரம், சீசைலம், செற்பேசம், ஆமிராதகம், மத்திமேசம், மாகாளம், கேதாரம், வைரவம், ஆகிய அதிகுய்யாட்டகமென்னும் புவனம் எட்டு. வாயுவண்டத்திற் கயை, குருக்கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந்திரம், பீமேசம் ஆகிய குய்யதராட்டகமென்னும் புவனம் எட்டு. ஆகாயவண்டத்தில் வத்திராபதம், உருத்திரகோடி, அவிமுத்தம், மகாலயம், கோகர்ணம், பத்திரகரணம் சுவர்ணக்கம், தாணு ஆகிய பவித்திராட்டகமென்னும் புவனம் எட்டு. தன்மாத்திரை ஐந்தும், இந்திரியம்பத்தும், மனமும் என்னுந் தன் காரியமாகிய பதினறண்டங்களையுந் தன்னுளடக்கிநிற்கும் ஆங்கார வண்டத்திற் சகலண்டம், துவிரண்டம், மாகோடம், மண்டலேச்சுரம், காளாஞ்சரம், சங்குகன்னம், தூலேச்சுரம், தலேச்சுரம் ஆகிய தாணுவட்டகமென்னும் புவனம் எட்டு. புத்தியண்டத்திற் பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்திருவம், ஐந்திரம், சௌமியம், பிராசேசம், பிராமம் ஆகிய சூக்கும புவனட்டகம் எட்டு. பிரகிருதியண்டத்தில் அகிருதம், கிருதம், வைரவம், பிராமம், வைணவம், கௌமாரம், ஔமம், சீகண்டம் என்னும் யோகாட்டக புவனம்

எட்டு. ஆக அப்புதத்துவமுதல் மூலப்பகுதியீறுகிய அண்டங் களைக் காக்கும் உருத்திரர் வைகும் புவனம் ஐம்பத்தாறு.

இந்தப்புவனங்களிற் புவனபதிகளிடமாக நிலைபெறும் அக்கரங்கள் சங்காரமுறையின் ளகரமுதல் டகரமீறுகிய இருபத்துநான்கு; ளகரத்தை லகரத்துளடக்கி இருபத்து மூன் றென்றலுமொன்று. ஈண்டடங்கும் பதங்கள் சங்காரமுறையின் இருபத்தெட்டுக்கு மேலுளவாகிய இருபத்தொரு பதங்கள். மந்திரஞ் சிரமும் வாமதேவமும் என இரண்டு. இவையெல்லா முடைய அப்புதத்துவமுதல் மூலப்பகுதியீறுகிய இருபத்து மூன்று தத்துவங்களும் பிரதிட்டாகலையில் அடங்கும்.

### வித்தியாகலை

இனி, மூலப்பகுதிக்குமேற் புருடதத்துவமுதல் மோகினி யீறுகிய ஏழுதத்துவங்களுங் கீழ்க் கீழ்த் தத்துவங்களை நோக்கி மேன்மேல் நூறு நூறு மடங்கு பிரமாணம்ஏற்றமாகவுடையன.

அவற்றுள், புருடதத்துவத்தில் வாமன், வீமன், உக்கிரன், பவன், ஈசானன், ஏகவீரன், என்னும் உருத்திரர் புவனம் ஆறு. அராகதத்துவத்திற் பிரசண்டன், உமாபதி, அசன், அநந்தன், ஏகசிகன் என்னும் உருத்திரர்புவனம் ஐந்து. நியதியிற் குரோதன், சண்டன், சமுவத்தன், சோதி, சூரன் என்னும் உருத்திரர் புவனம் ஐந்து. வித்தையிற் பஞ்சாந்தகன், ஏகவீரன், என்னும் உருத்திரர் புவனம் இரண்டு. கலையிற் சிகேசன், மகா தேசன் என்னும் உருத்திரர் புவனம் இரண்டு. காலத்தில் வாம தேவன், பலன் என்னும் உருத்திரர் புவனம் இரண்டு. மாயையில் உற்பவன், ஏகபிங்கலன், ஏகேக்கணன், ஈசானன், அங்குட்டமாத் திரன் என்னும் உருத்திரர் புவனம் ஐந்து. ஆகத் தத்துவமேழி னும் அடங்கும் புவனம் இருபத்தேழு.

இந்தப் புவனங்களிற் புவனபதிகளிடமாய் நிலைபெறும் அக்கரஞ் சங்காரமுறையின், ஞகரமுதல் கவ்வருக்கத்தின் நான்கா மெழுத்தீறுக ஏழக்கரம். பதங்கள் சங்காரமுறையின் இருபத் தெட்டும் இருபத்தொன்றுமாகிய நாற்பத்தொன்பதிற்கு மேலுள்ள இருபதுபதங்கள்.

மந்திரஞ் சிகையும் அகோரமுமென இரண்டு. இவையெல்லா முடைய இவ்வேழுதத்துவமும் வித்தியாகலையில் அடங்கும்.

### சாந்திகலை

இனி, இவ்வேழுக்கும் மேலாகிய சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் மூன்றுதத்துவங்களுங் கீழ்க்கீழ்த்

தத்துவங்களே நோக்கி மேன்மேல் ஆயிரமடங்கு பிரமாணமேற்ற மாகவுடையன.

இவ்வண்டங்களுட் சுத்தவித்தையில் வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகரணி, பெலப்பிரமதனி, சருவபூததமனி, மனோன்மனி, என்னும் நவசத்திகள் புவனம் ஒன்பது. ஈசுரதத்துவத்தில் அநந்தன், சூக்குமன், சிவோத்தமன், ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, சீகண்டன், சிகண்டி என்னும் அட்டவித்தியேசுரர்புவனம் எட்டு. சதாசிவதத்து வத்திற் சதாசிவபுவனம்ஒன்று ஆகத்தத்துவம் மூன்றினும் அடங்கும் புவனம் பதினெட்டு.

ஈண்டுப் புவனபதிகளிடமாக நிலைபெறும் அக்கரங் கவ்வருக் கத்தின் நான்காவதொழித்தொழிந்த மூன்றுமாம். பதங்கள் சங்காரமுறையின் அறுபத்தொன்பதிற்குமேல் வியோம வியாபி ஈறுகிய பதினொருபதம். மந்திரந் தற்புருடம், கவசம் என்னும் இரண்டு. இவையெல்லாமுடைய இம்மூன்றுதத்துவமுஞ் சாந்தி கலையில் அடங்கும்.

### சாந்தியதீதகலை

இனிச், சத்திதத்துவஞ் சிவதத்துவம் இரண்டுங் கீழ்க் கீழ்த் தத்துவப்பிரமாணத்தைநோக்கி நூறுயிரமடங்கு பிர மாணம் ஏற்றமாகவுடையன. அவற்றுட், சத்திதத்துவத்தின் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் புவனம் ஐந்து. சிவதத்துவத்தில் இந்திகை, தீபிகை, இரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் புவனம் பத்து. ஆகத் தத்துவம் இரண்டினுமடங்கும் புவனம் பதினைந்து.

ஈண்டுப் புவனபதிகளிடமாக நிலைபெறும் அக்கரம் அகர முதலிய உயிர் பதினாறு. பதஞ் சங்காரமுறையின் இறுதிக் கண்ணதாகிய ஓம் என்பது ஒன்று. மந்திரம் ஈசானமும் அத்திரமும் மூலமந்திரமும் என மூன்று. இவையெல்லாம் உடைய இவ்விரண்டுதத்துவமுஞ்சாந்தியதீதகலையில் அடங்கும்.

இங்ஙனம் நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளிலடங்கி மூவகை ஆன்மாக்களும் தத்தமக்குரிய காரணரூபமுஞ் சூக்கும தேக ரூபமுமாகிய சிறப்புத்தத்துவங்களோடுந் தூலரூபமாகிய பொதுச்சிறப்புத் தத்துவங்களோடுங்கூடிப் போக்குவரவு செய் தற்கும் போகதுகர்ச்சிக்கும் இடமாய்ப் புவனமுதலிய அத்து வாக்களனைத்தையுந் தம்மூலடக்கி நிற்பனவாகிய நிலமுதல் நாதமீறான சாதாரணதத்துவங்களுக்களவும், அவற்றதியல்பு

களும் ஒருவாற்றுற் றொருதத்துக் கூறப்பட்டன. சகலர் போக்கு வரவுசெய்து போகநுகர்தற்கிடமாகிய அண்டத்தினியல்பே ஈண்டு எடுத்துக்கொண்டதாயினும், இனமாதல்பற்றி ஏனையவும் உடன்கூறப்பட்டனவென் றுணர்க.

ஈண்டுப் பதிற்றுமடங்கேற்றமெனப்பட்ட எண்களியறியுமாறு :—

ஒன்றுமுதற் பதிற்றுமடங்காயது பத்து; தசமென்பதும் இது. அதற்குப் பத்தாந்தானம் நூறு; சதமென்பதும் இது. அதற்குப் பத்தாந்தானம் ஆயிரம்; சகத்திரமென்பதும் இது. அதற்குப் பத்தாந்தானம் பதினாயிரம்; அயுதமென்பதும் இது. அதற்குப் பத்தாந்தானம் நூறுயிரம்; இலக்கம் நியுத மென்பதும் இது. அதற்குப் பத்தாந்தானம் பத்திலக்கம். அதற்குப் பத்தாந்தானங் கோடி. அதற்குப் பத்தாந்தானம் அற்புதம். அதற்குப் பத்தாந்தானம் பதுமம். அதற்குப் பத்தாந்தானங் கருவம். அதற்குப் பத்தாந்தானம் நிகர்வம். அதற்குப் பத்தாந்தானம் பிருந்தம். அதற்குப் பத்தாந்தானம் மாபதுமம். அதற்குப் பத்தாந்தானஞ் சங்கம். அதற்குப் பத்தாந்தானம் மாசங்கம். அதற்குப் பத்தாந்தானஞ் சமுத்திரம். அதற்குப் பத்தாந்தானம் மாசமுத்திரம். அதற்குப் பத்தாந்தானம் மத்தியம். அதற்குப் பத்தாந்தானம் பரார்த்தம். இங்ஙனம் ஒன்றுமுதற் பரார்த்தமீறுகிய இருபது தானமுங் கண்டுகொள்க.

இனிக், குணதத்துவங்காறும் பதிற்றுமடங்கு ஏற்றமாம் என்றும், மூலப்பகுதி குணதத்துவத்தைநோக்கி நூறுமடங்கு யோசனை ஏற்றமாகவுடைத்தென்றும், சுத்ததத்துவத்தை நோக்கிச் சிவதத்துவம் அளவிடப்படாத எல்லையுடைத்தென்றும், குணதத்துவத்திற்குமேல் மூலப்பகுதி முதலியவற்றின் ஈண்டுக் கூறியனவேயன்றி *இன்னுஞ் சில புவனங்கள் உளவென்றும், உளவாகவே, அவையுமுளப்படப் புவனத்துவா இருநூற்று முப்பத்தாறுமென்றும், ஐம்பத்தோரக்கரங்களின் ளகரம் லகரத் துளடங்குமென்பதுபற்றி வன்னத்துவா ஐம்பதென்றும், பதம் எண்பத்தொன்றனுட் சிலவற்றைத் தம்முள் வேறுவைத் தெண்ணிப் பதாத்துவாத் தொண்ணூற்றுநான்கென்றும், பீசமொன்றுதல்பற்றி மூலமந்திரத்துளடங்குவதாகிய நேத் திரத்தை வேறுவைத்தெண்ணி மந்திராத்துவாப் பன்னிரண் டென்றுஞ் சிலவாகமங்களிற் கூறப்படும். மூலப்பகுதிமுதலிய

*இப்புவனங்களைச் சிவாக்கிரபாடியத்துக்காட்டிய மிருகேந்திரவசனங் களான் அறிக. (எட்டாஞ்சூத்திரம், பக்கம், சுஉடு.)

வற்றின் வேறுஞ்சில புவனங்களுளவென்பது மிருகேந்திரத்திற் கூறப்பட்டது. அது ஞானபாதத்தினுங் காண்க.

அற்றேல், நிருவாணதீக்கையின் அத்துவசுத்தி செய்தற்கண் மலிவாம் பிறவெனின்.—ஆகாது; அவ்வவாகமவழி நின்றோரான் அவ்வவாகமத்திற் கூறியவாறே சுத்திசெய்யப் படுமாகலானென்க. அற்றாயினும், அண்டங்களுக்களவும், ஆண்டுள்ள பொருள்களும், ஆண்டாண்டைக்குரிய புவனங்களுஞ் சிறுபான்மை தம்முள் வேறுபடக் கூறுமாகமங்கள் ஒன்றோடொன்று முரணுமாலோவெனின்,—முரணுது; என்னை? கற்பந்தோறும் படைப்பு வேறுபாடுடைமையின், அவ்வேறுபாடுபற்றி அவை அங்ஙனம் வேறுபடக்கூறுதல் பொருந்துமாகலானென்பது.

ஈண்டு அத்துவாக்களாறனுள், கலாத்துவா நிவிர்த்தி முதற் சாந்தியதீதையீறுகவும், தத்துவாத்துவா நிலமுதற் சிவமீறுகவும், புவனத்துவாக் காலாக்கினியுருத்திர புவனமுதல் அநாசிருத புவனமீறுகவும், வன்னத்துவா ளகரத்தின் அயனின்ற எழுத்து முதல் அகரமீறுகவும், பதாத்துவ ஓம்நமோ நம என்பதுமுதல் வியோமவியாபிஓம் என்னும் பதமீறுகவும், மந்திராத்துவாவிற் பஞ்சப்பிரமங்கள் சத்தியோசாத முதல் ஈசானமீறுகவும், அங்கங்கள் இதயமுதல் அத்திரமீறுகவும் வைத்துக்கூறியது ஒடுங்கு முறைபற்றி யெனவும்; இனித்தோன்று முறைபற்றிக் கலாத்துவாச் சாந்தியதீதைமுதல் நிவிர்த்தியீறுகவும், தத்துவங்கள் சிவமுதல் நிலமீறுகவும், புவனங்கள் அநாசிருதபுவனமுதற் காலாக்கினியுருத்திரபுவன மீறுகவும், வன்னங்கள் அகரமுதல் ளகரத்தினயனின்ற எழுத்தீறுகவும், பதங்கள் ஓம்வியோமவியாபி என்னும் பதமுதல் நமோநமஓம் என்பதீறுகவும், மந்திரங்களிற் பிரமம் ஈசானமுதற் சத்தியோசாதமீறுகவும், அங்கம் அத்திரமுதல் இதயமீறுகவுங் கூறப்படுமெனவுந் தெரிந்து கொள்க. அத்துவாவெனினும், வழியெனினுமொக்கும். இவை ஒரோவொன்றுகக் கழித்துக்கொண்டு சிவபதத்திற் சேறற்கு வழிபோறலின், அத்துவா வெனப்பட்டன. தத்துவமுதல் ஐந்தினையுந் தம்முளடக்கி நிற்கும் பஞ்சகலைகள் திரோதாயிரூபமாய் நின்ற சிவசத்தியிலடங்கும், சிவசத்தி சிவன்கண்ணடங்குமென்றுணர்க.

மூன்றாமதிகரணம் முடிந்தது

## நான்காமதிகரணம்

மூன்றுமதிகரணத்தின் உயிர்கள் முன்னியச்சுமாறி மீளப் பிறந்து இவ்வாறே வருமென்றதனுன் மீளப் பிறக்குங்கால் ஒடுங்கின சங்காரத்தினல்ல தற்பத்தியில்லையாகலின், சங்கார காரணனுகிய முதல்வனே ஐந்தொழிற்கும் விணமுதலாவன் எனச் சிறப்புவகையான் இலக்கணத்தை வலியுறுத்திய வழி, அஃதொக்கும்; அங்ஙனமாயினும், இருவினையதிகரணத்தின் முதல்வனுணையாகிய பராசத்தியான் இருவினைவருமென்றதனுற் பராசத்தியும் ஐந்தொழில் செய்யுமென்பதுபோந்தது. போதவே, பராசத்தியும் முதல்வியாவான் சேறலின் ஐந்தொழில்செய்தல் சங்காரகாரணனுகிய முதல்வனுக்கேயுரிய சிறப்பிலக்கணம் என்றல்பொருந்தாதென்று ஆசங்கை நிகழுமன்றே; அவ் வாசங்கை நீக்குமுகத்தானே முதல்வனுக்குச் சிற்சத்தியாகிய துணைக்காரண முண்டென்பதற்குப் பிரமாணங் கூறுதற்கெழுந் தது நாலாமதிகரணம்:—

இனி நீக்கமின்றி நிற்குமன்றே

எனவரும்.

ஈண்டு நீக்கமின்றி நிற்கும் எனப் பொதுப்படவுரைத்தமை யின், யாதனின் நீக்கமின்றி நிற்கும் என்றவாயவழி, அணிமைக் கணின்ற ஆணையின் என்பது வந்தியைவதன்றி, ஏனைய வந்தியை தற்கோரியைபின்மையானும்; ஆன்மாக்களின் வியாபித்து நிற்றல் அவையேதானே என்னும் அதிகரணத்தாற் கூறிப்போந் தமையின், அதனையே மீளவுங் கூறுதல் வழுவாமாகலானும்; ஆன்மா மாயை கன்மங்களின் முதல்வன் வியாபித்துநிற்றல், சருவவியாபியாய் நிற்றல் என்னும் ஏதுவின் பொருளாகலான் மேற்கோளுக்கும் அதுவே பொருளாக வுரைப்பின், "மலை தீயுடைத்து, தீயுடைமையான்" என்பதுபோல் இழுக்குப்படும் ஆகலானும்; நீக்கமின்றி அவையே நானேயாய் நிற்கும் எனக் கூட்டியுரைப்பின் அதனை வேறோரதிகரணமாக்கி இறுதிக்கண் வைத்தல் வழுவாய் முடியுமாகலின், அஃதாசிரியர் கருத்தன்மை யானும் அங்ஙனமுரைப்பனவனைத்தும் போலியென்றொழிக.

மற்றும் வடமொழியிரண்டாஞ் சூத்திரத்திறுதியிற் "சம வேதை" என ஆணையை விசேடித்தோதுதலிற் சமவேதையா மாறு ஓரதிகரணமாகவைத்து ஒருதலையாணுணர்த்தவேண்டு தலின், அது கூறுக்காற் குன்றக்கூறலாய் முடியுமாகலானும்; "அந்நியயோகவியவச்சேதம், அயோக வியவச்சேதம்" என்னும் வடசொற்களைப் "பிறிதினியைபுநீக்குதல், இ யை பி ன் மை

நீக்குதல்" எனவழங்குமாறுபோலச், "சமவாயம்" என்னும் வடசொல், "நீக்கமின்றிநிற்றல்" என மொழிபெயர்த்து வழங் கப்படுமாகலின், அது வேறுபொருள்படாமையானும்; வியா பித்துநிற்றல் ஏதுவின்பொருளாகலின், அதனையே மேற் கோளின் பொருளாகக் கோடல் பொருந்தாதென்பது மேற் காட்டினுமாகலானும் இனி நீக்கமின்றி நிற்குமன்றே என்பது தன்னைச்சாரவைத்ததோதிய ஆணையாகிய சிற்சத்தியினோடு முதல்வன் சமவேதமாய் நிற்பனெனவே பொருள்கொள்ளக் கிடந்தவாறு காண்க.

வடமொழி இரண்டாஞ்சூத்திரத்தின், "ஆணை முதல்வ னோடு சமவேதமாய் நிற்கும்" என ஆணைமேல்வைத்தோதினர். ஈண்டு "முதல்வன் ஆணையோடு சமவேதமாய் நிற்கும்" என முதல்வன்மேல் வைத்தோதினர். அவ்விரண்டும் பொருளான் வேறன்மையுணர்க.

ஈண்டுச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை; தாதான்மியமே சமவாயமெனவும் வழங்கப்படுவதன்றி, அத னின்வேறாய் நையாயிகர் முதலியோர் கூறுஞ் சமவாயசம்பந்தம் ஒன்றுண்டென்பதற்குப் பிரமாணமின்மையா னென்க. தாதான்மியமாவது பொருளான் ஒன்றேயாயினும் ஒருவாற்றாற் பேதமாதற்குரிமையுடைமையென * மேலுரைத்தாம்; கடைப் பிடிக்க. தாதான்மியமென்னுஞ் சொல்லியல்பு "அதுதானுதல்" என்றவாறு. எனவே, முதல்வனாணையாகிய சிற்சத்தி முதல் வனின் வேறின்றி அவனின் வியாப்பியமாய் நிற்றலான் ஆண்டுச் சேறல்பற்றி இழுக்கின்மையின், ஐந்தொழில் செய்தல்; சங்கார காரணனாகிய முதல்வனுக்கேயுரிய சிறப்பிலக்கண மென்பது வலியுறுத்தியவாறு காண்க.

அற்றேல், ஆணையாகிய சிற்சத்தியோடு முதல்வன் அபேத மும் பேதமுமின்றி அவ்விரண்டற்கும் பொதுமையாய் அங்ஙன நிற்பன் என்றற்குப் பிரமாணமென்னையெனின், மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது :—

அவன் ஏகானேகமிரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்ற லான்.

எனவரும்.

அவினாபாவமுணர்த்துதற்கு ஏகானேகமிரண்டுமின்றி என மேற்கோளிற் போந்தபொருளை அதுவதித்துச் சருவ வியாபி யாய் நிற்றலான் என ஏதுக்கூறினர். சருவவியாபியாய் நிற்றல்

* பக்கம் 60.

அவையேதானேயாய் என்பதனாற் சாதித்தமையின், அதனை ஈண்டு ஏதுவாகவைத்து நீக்கமின்றிநிற்கும் என்னும் மேற்கோளைச் சாதித்தார். ஈண்டு அநுமானங்கூறிக் காணுமாறு :— "முதல்வன் தனது சிற்சத்தியோடு பேதமும் அபேதமுமின்றி அவ்விரண்டற்கும் பொதுமையாய்நிற்பன், சருவவியாபியாகலான்; யாதியாதுவியாபியாய்நிற்கும், அதுவது ஒன்றுதலும் இரண்டாதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுமையினிற்கும்; தன்னெல்லையளவும் வியாபியாய்நிற்கும் ஞாயிறு தன் கிரணத்தோடு அவ்வாறு நிற்றல்போலும்" என உடம்பாட்டு முகத்தானும்; "யாதியாது அங்ஙனம் பொதுமையினிற்பதன்று, அதுவது வியாபியாய்நிற்பதுமன்று; குடம்போலும்" என எதிர்மறைமுகத்தானுங் கூறிக் கண்டுகொள்க.

ஏதுவும் மேற்கோளுந் தம்முள் அவிநாபாவமாமாறு இங்ஙனங் கூறிக்காட்டி, ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன் றெவற்றேவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் பொன்னெளிபோ லீச
னவையுடைமை யாளாநா மங்கு
எனவரும்.

பசுபாசங்களும் வியாபகமாகலின், அவையும் இம்முறைமை பற்றித் தத்தஞ் சத்திகளோடுந் தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனோடு அவற்றிடை வேற்றுமையில்லை போலுமென்னும் ஆசங்கை நிகழாமைப்பொருட்டு அவையுடைமை யாளாநா மங்கு என மேலைச் சூத்திரத்தில் தாரகமாமத்தன்றுள் எனவும், அதனின்றிலா வொன்றுபல வாறே தொழும் பாகும் எனவுங் கூறிப் போந்தவற்றை அநுவதித்துணர்த்தினராகலின், அது கூறியது கூறலன்மையுணர்க.

அன்று எனப் பாடமோதுவாருமுளர். என்ற அளவை என்னும் பெயரெச்சவீறு திரிந்துநின்றது; * "புகழ்புரிந்தில்லோர்க்கு" என்புழிப்போல. அளவை - பிரமாணம். அளவையான் என விரிக்க. ஒன்றன்று உளனன்று என்புழி, ஒன்றுஉளன் என்னுந் தருமிவாசகங்கள் ஆகுபெயரான் அத்தருமங்களின் மேனின்றனவாகலான், உளன் என்பது அஃறிணை யொருமை வினைகொண்டது. அன்மை - கூடாமைப் பொருட்டு.

* திருக்குறள், சுஉ-ம் அதி. வாழ்க்கைத்துணைநலம், கூ.

எவற்றெவறு மங்க ணைவையவ னன்றில்லை என்பது எவ் விடங்களிலுள்ள எத்திறப் பொருளுமாகிய அவ்விடத்துப் பொருள்கள் அம்முதல்வணியின்றியமையாவென்றவாறு.

அஃறிணைக்கண்வரும் எவன் என்னும் வினாவிணைக்குறிப்புச் சொல் ஈண்டுப் பெயர்த்தன்மைப்பட்டு எஞ்சாப்பொருண்மை உணர்த்தி நின்றது. அன்றி என்னும் வினையெச்சம் செய்யு ளாகலின் அன்று எனத் திரிந்தது; * "நாளன்றுபோகி" என்புழிப்போல. இன்மை - அமையாமைப்பொருட்டு. பொன்- ஆகுபெயர். போல் - போலுமென்றுரைக்க. செய்யுமென்னு முற்றுத் தன்மையிற்செல்லாமையின், ஆம் என்பதனை உடைமை யோடு கூட்டுக. ஆள் என்னும் அஃறிணையோடியையு மென்றலு மொன்று. †"பணியுமாமென்றும்பெருமை" என்புழிப்போல அசைச்சொல்லெனினும் அமையும்.

ஆளாநாம் என்பதனுல் வருஞ்சூத்திரத்திற்குத் தோற்று வாய் செய்தவாறுங் காண்க.

இவ்வதிகரணத்தாற்போந்த தொகைப்பொருள் :—முதல் வன் வியாபகனுகலின், வியாபகப்பொருள் ஒன்றுய்நிற்றல் கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின், வியாபகனுதல் கூடாது; வியாபகனல்லனெனின், பசுபாசங்கள் அவணியின்றியமைதல் கூடாது; இங்ஙனமாகலான், முதல்வ னெருவனே ஞாயிறும் ஒளியும்போலச் சிவனுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தான் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பனென்று உவமைமுகத்தாற் பொதுமையி னிற்குமாறு தெரிவித்துத், தாதான்மியசத்தி யுண்மைக்குப் பிரமாணங்கூறியவாருமென் றுணர்க.

அற்றேல், இவ்வதிகரணம் இருவினை முதல்வனுணையின் வருமென்னு மதிகரணத்தைச் சாரவையாது போக்குவரவதி கரணத்தின் பின்வைத்தல் முறையன்றுலெனின்,—அங்ஙன மாயினும், அவையே தானேயாய் என்பது அவனவ எதுவெனு மவைமு வினைமையிற்——ரேற்றிய நிதியே என்றதனுலுழிபு; இருவினையின் என்பது இல்லதற்குத் தோற்றமின்மையின் என் பதனுற் சாதிக்கப்பட்டுத், நிதியே என்றதனுற் குறித்துணரப் படுஞ் சற்காரியவாதத்தினுலுழிபு; போக்குவரவு புரிய என்பது ஒடுங்கிமலத்துளதாம் என்றதனுலுழிபு; ஆணையினீக்கமின்றிநிற்கும்

---

* புறநானூறு, கூஉச,

† திருக்குறள், கூஅ-ம் அதி. பெருமை, அ.

என்றது எய்தியதொருமருங்கு மறுப்பதாகிய அந்தமாதி என்றதனைழிபாமென்பதூஉம் உணர்ந்துகோடற்கு இம்முறை வைத்தாரென்க; அவை அவற்றினைழிபாதல் ஈண்டுரைத்த வாறுபற்றி உணர்ந்துகொள்க.

அஃதங்ஙனமாக, ஒருபொருளே தாதான்மியத்தான் இருதிறப்பட்டுப் பொதுமையினிற்றல் யாங்ஙனமெனின், அஃதாமாறு விளங்கவுணர்த்துதும் :—தன்னைவிளக்குவதூஉம், விடயங்களை விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்று தானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவும், தன்னைவிளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தான் இருதிறப்பட்டு இயைந்துநிற்கும்; அதுபோலப் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்பினிற்பதூஉம், புறப்பொருளைநோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய இரண்டியல்புடைய பேரறிவாகிய சைதன்னியமொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கிநிற்குழியிற் சத்தியெனவும், புறப்பொருளைநோக்காது அறிவுமாத்திரையாய் அவாவாதுநிற்குழியிற் சிவமெனவுந் தாதான்மியத்தான் இருதிறப்பட்டியைந்து குணகுணியாய்நிற்கும். இது சித்தாந்தசாராவலி இரண்டாஞ் சுலோகப் பொருளானும் அறிக.

இனித், தீயின் சத்தியொன்றே சுடுதல் அடுதன்முதலிய தொழில்வேறுபாட்டாற் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி என்றற் றொடக்கத்துப் பலவேறுவகைப் படுமாறுபோலச் சிவசத்தி யொன்றே காரியவேறுபாட்டாற் பராசத்தி, திரோதான சத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பஞ்ச சத்திகளாயும்; முறையே ஐந்தும், நான்கும், எட்டும், பதின்மூன்றும், எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானமுதற் சத்தியோசாதமீறாகிய, * பஞ்சசத்திகளாயும்; ஆரணி, சனனி முதலிய † மூவகைச்சத்திகளாயும்; நிவிர்த்தி, பிரதிட்டை

---

* இவ்வைந்தும் ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி எனப் பெயர் பெறும். இவற்றுள், ஈசானியின் ஐந்துகூறுவன :—சஞ்சனி, அங்கதை, இட்டை, மரீசி, சுவாலினி என்பன. பூரணியின் நான்கு கூறுவன :—சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்பன. ஆர்த்தியின் எட்டுக்கூறுவன :—தமை, மோகை, சயை, நிட்டை, மிருத்தியு, மாயை, பயை, சரை என்பன. வாமையின் பதின்மூன்று கூறுவன :—இரசை, இரட்சை, இரதி, பாலி, காமை, சமுயமினி, கிரியை, புத்தி, காரி, தாத்திரி, பிராம்மணி, மோகினி, பவை என்பன. மூர்த்தியின் எட்டுக்கூறுவன :—சித்தி, இருத்தி, திருதி, இலக்குமி, மேதை, காந்தி, சுவதை திருதி என்பன. இவை மூப்பத்தெட்டும் அட்டத்திரிம்சத்கலை எனப்படும்.

† ஆரணி, சனனி, இரோதயித்திரி என்பனவாம்.

முதலிய *பஞ்சசத்திகளாயும்; வாமை, சேட்டைமுதலிய †அட்டசத்திகளாயும்; பரவாகீசுவரி, அபரவாகீசுவரி மனோன்மனி, மகேசை, உமை, திரு, வாணி என்று எழுவகைச்சத்திகளாயும்; அத்தியான்மிகமான ‡உன்மனை, சமனை முதலிய கலைகளாயும் இன்னும் பலவேறுவகைப்பட்டு நிற்கும். அவ்வச்சத்திகளோடுபுணர்ந்த சிவமும் அங்ஙனம் பலவேறுவகைப் பெயர்பெற்றுநிற்கும். அவ்வச்சத்திகட் கிடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறுவகையான் விருத்திப்பட்டு நிற்கும். இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இப்பேதமனைத்தும் இலயம், போகம், அதிகாரம் என மூன்றுபடுங்கும். இலயசிவமெனினும், அநாகதசிவமெனினும், சிவனெனினும், சாந்தமெனினும், நாதமெனினும், வாகீசுரனெனினும், சத்தனெனினும், நிட்களனெனினுமொக்கும்.

இலயசத்தியெனினும், விந்துசத்தியெனினும், பரவாகீசுவரியெனினும், நிட்களையெனினுமொக்கும்.

இவ்விலயவவத்தை சூக்குமவிலயமும், தூலவிலயமுமென்று இருவகைப்படும். இருவகை மாயைகளினும் இருவகைப் பிரபஞ்சமும் ஒடுங்கியவழி, ஒன்றனைக் குறிக்குமாறின்றி, அனைத்தினையும் பொதுமையினேக்கி நிற்கும் பரமசிவன் அவை மீளத்தோன்றுமாறு குறித்து, ஞானசத்தி மாத்திரையாலேக்கிநின்ற அவதரஞ் சூக்குமவிலயம். இதனானே பரமசிவனுக்கும் இலயசிவனுக்குந் தம்முள் வேறுபாடுகண்டு கொள்க.

அதன்பின்னர்ச் சூக்குமமான இச்சாஞானக் கிரியையென்னும் மூவகைச்சத்திகளொடு புணர்ந்து விந்துவிற்பதிந்து தூலவைந்தொழிற் கேதுவான சூக்குமவைந்தொழில் செய்துநிற்கும் அவதரந் தூலவிலயம். சூக்குமவிலயத்திற் சிவம் பரநாதமென்றும், சத்தி பரவிந்துவென்றும், தூலவிலயத்திற் சிவம் அபரநாதமென்றும், சத்தி அபரவிந்துவென்றும் பெயர் பெறும். இவை நான்கும் நிட்களம்.

---

*நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்பனவாம்.

†வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்பனவாம்.

‡உன்மனை, சமனை, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரன், விந்து, விடம், அருக்கீசம், மேதை என்பனவாம். இவை துவாதசகலைப் பிராசாதமெனவும், வியாபினியின்மேல் வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னும் நான்குங்கூட்டிச் சோடசகலைப் பிராசாதமெனவும் வழங்கப்படும்.

இனி, அங்ஙனஞ் சூக்குமவிச்சாஞானக் கிரியைகளாற் கேவலத்திற் சூக்குமவைந்தொழில்செய்து தூலவிலயமாய் நின்ற சிவம் அதன்பின் ஆன்மாக்கள் கேவலத்தினீங்கிப் புனருற்பவமா மாறு குறித்துத் தூலவிச்சா ஞானக்கிரியைகளொடு மணந்து இருவகை மாயைகளினின்றும் இருவகைப் பிரபஞ்சங்களையுந் தோற்றுவித்தற்கு உன்முகமாய்நின்ற அவதரம் போகம். போகம் பாலனம் என்பன ஒருபொருட்கிளவி. இப்போகவ வத்தையினின்ற சிவஞ் சதாசிவனெனப் பெயர்பெறும். ஈண்டுச் சூக்கும வைந்தொழிற்குந் தூலவைந்தொழிற்கும் பொதுவாய் இடையே நிற்றலின், இது நிட்களசகளமாயிற்று.

இனி, அதிகாரஞ் சூக்குமவதிகாரம், தூலவதிகாரமென்று இருவகைப்படும். அங்ஙனம் உத்தியுத்தனுய்ப் போகவவத்தையி னின்ற சதாசிவன் அதன்பின் விந்துவினின்றுஞ் சுத்தப் பிரபஞ் சங்களைச் சந்நிதி மாத்திரையிற் றோற்றுவித்துத் தொழில் செய்துநின்ற அவதரஞ் சூக்குமவதிகாரம். இவ்வவத்தையி னின்ற சிவம் மகேசனெனப் பெயர்பெறும். ஈண்டுத் தூலவைந் தொழில் செய்வதாகலின், சகளமாயிற்று.

இனி, அநந்தேசன் உருத்திரன் மால் அயன் என்னும் இவர்களை அதிட்டித்துநின்று மோகினிமான்களினின்றும் மிச் சிரப்பிரபஞ்சமும், அசுத்தப் பிரபஞ்சமுந் தோற்றுவித்துத் தொழில்செய்யும் அவதரந் தூலவதிகாரமென வுணர்க.

இங்ஙனமாகலின், சூக்குமவதிகார அவத்தையினின்ற மகேசனிறுவாயாகிய பேதங்களைச் சம்புபக்கமெனவும், தூல வதிகாரத்தினின்ற அநந்தேசன்முதலிய பேதங்களை அணுபக்க மெனவும் அறிக. அணுபக்கத்துள்ளும் அநந்தேசன் விஞ் ஞானகலருட் பக்குவனுய் முத்திபெற்று அதிகார மலவாசனை மாத்திரமுடையனெனவும், உருத்திரன் பிரளயாகலருட் பக் குவனுய் முத்திபெற்றுத் தூலமலவாசனையுடைய னெனவும், ஏனை மாலும் அயனுஞ் சகலருட் புண்ணியமிகுதிப் பாட்டான் அதிகாரசத்தி பெற்றுடைய ரெனவுந் தாரதம்மியங் கண்டு கொள்க. சம்புபக்கத்திற் றாரதம்மியம் ஒரோவொரு கூற்றிற் றோன்றுதன்மாத்திரையானன்றிப் பிறிதில்லை யென்க.

ஒரோரிடங்களிற் சதாசிவனை அணுபக்கமென்றது அணு சதாசிவரைநோக்கிக் கூறியதெனவும், மகேசனை அணுபக்க மென்றது அநந்தேசன் முதலியோரைநோக்கிக் கூறியதெனவும் ஆண்டுமுரணுமை யுணர்ந்துகொள்க.

இன்னும், மாலும் அயனும் அணுபக்கம், ஏனை உருத்திர னீறுகிய எல்லாப்பேதமுஞ் சம்புபக்கமே யென்பாரும், மாலய

னீ ருகிய எல்லாப்பேதமுஞ் சம்புபக்கமேயென்பாரும், பரமசிவன் பராசத்தியொழியப் பரநாதமுதல் அயனீ ருகிய எல்லாப்பேதங் களும் அணுபக்கமே யென்பாரும், அணுபக்கத்தினும் பரநாத முதலிய பேதமுள, சம்புபக்கத்தினும் பரநாதமுதலிய பேதமுள வென்பாருமெனப் பலதிறத்தர் ஆசிரியரென் றுணர்க.

அயன்முதலிய மூவர்க்கும் முறையே படைப்புமுதலிய மூன்றனுள் ஒரோவொன்று சிறப்புத்தொழிலும், ஏனைய பொதுத் தொழிலுமாமெனவும்; மகேசன் சதாசிவன் இருவர்க்கும் முறையே மறைப்பும் அருளுஞ் சிறப்புத்தொழிலும், ஏனைய பொதுத்தொழிலுமா மெனவும்; அபரநாதத்திற்குச் சூக்கும வைந்தொழிலும், பரநாதத்திற்குச் சூக்குமவைந்தொழிற்குக் காரணமாய் ஞானசத்தி மாத்திரையாலேக்கும் பொதுமைத் தொழிலுஞ் சிறப்புத்தொழிலா மெனவுங் கொள்க. கொள்ளவே, அநந்தேசன் மகேசனிலடங்கு மாகலின், சிறப்புத்தொழில்பற்றி நவபேதமாமாறு கண்டுகொள்க.

அற்றேல், பரவிந்துவும் அபரவிந்துவும் மலைனன்மனிமுதலிய வற்றோடொப்பச் சத்திபேதமாகலின், சிவபேதத்துள் வைத் தெண்ணி நவபேதமென்றவா றென்னையெனின்,--அஃதொக்கும்; பரநாதத்திற் பரவிந்துவும், பரவிந்துவின் அபரநாதமும், அபர நாதத்தின் அபரவிந்துவும், அபரவிந்துவிற் சதாசிவனும், சதா சிவனின் மகேசனும், மகேசனின் அநந்தேசன் முகத்தாலுருத் திரனும், உருத்திரனின் மாலும், மாலின் அயனுமாக ஒன்றி னொன்றுய்ப் பவந்தருதலின், அத்தோற்றமுறைமையேபற்றிச், சத்திபேதமாகிய பரவிந்துவும் அபரவிந்துவுமுடன்கூட்டி, நவ பேதமென வைத்தெண்ணப்பட்டதன்றிச், சிவபேதமென்னுங் கருத்தான் அங்ஙனமெண்ணப்பட்டதன்றுகலின், ஆண்டு மயக்க மின்மை யுணர்க.

இஃதறியாதார், *"சிவஞ்சத்தி நாதம்விந்து" என்னுஞ் செய்யுளின் ஒன்பதுபேதங்கூறிச், †"சத்தியாய் விந்து சத்தி யாய்" என்னுஞ் செய்யுளின் ஏழுபேதங் கூறுதலின், சிவபேத மொன்பதிற்குச் சத்திபேதமேழாமா றென்னையோவென மயங்கு வாரும்; பரநாத அபரநாதங்கள் ஒரோவொன்று இருவகைப்படும், பரவிந்து அபரவிந்துக்களும் ஒரோவொன்று இருவகைப்படு மென்றிடர்ப்பட்டுக்கொண்டு, சிவபேதமுமொன்பது, சத்தி பேதமு மொன்பதாமென்பாருமாய் இடர்ப்படுவரென்க.

---

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், எச.

† ஷை ஷை எஇ.

உண்மையானேக்குவார்க்குச் சிறப்புத்தொழில்பற்றி யெண்ணப் படுஞ் சிவபேதமேழுஞ் சத்திபேதமேழுமே யாமெனக் கொள்க.

இனி, மனோன்மனியின் மகேசனும், மகேசையின் உருத்திரனும், உமையின் மாலும், திருவில் அயனுந்தோன்றுவரென் பாருமுளர். *"சிவஞ்சத்தி நாதம்விந்து" என்றெடுத்துக் கொண்டு, "ஒன்றினொன்றுய்ப் பவந்தரும்" என்பதனோடு மூரணுதலின், அங்ஙனந் தோன்றுதல் அவாந்தரசிருட்டி பேத மெனக் கொள்வதன்றிப் பிரதானசிருட்டியெனக் கோடல் பொருந்தாமையறிக.

இவ்வதிகரணத்தின் முதல்வன் வியாபகமாதல் பிறிதொன் றுற் பெறப்படாமையின், அருத்தாபத்தியளவையாற் றன்னின் வேறின்றியும் வேறுகிய தாதான்மிய சத்தியுடையா னென்பது துணியப்படுமெனச் சிவசத்தியுண்மைக்குப் பிரமாணங்கூறப் பட்டது; படவே, ஆன்மா மலம் மாயை கன்மங்களும் அம் முதல்வன்போல வியாபகமாகலின், அவையும் அவ்வளவை யானே தத்தமக்குரிய தாதான்மியசத்திகளுடையனவென்ப தூஉம்; அங்ஙனமாயினும், தூலசூக்கும முறையின் வியாபக வியாப்பியங்களாய் நிற்றலின், அவ்வவ்வியாப்பியப்பொருளின் சத்திகள் அவ்வவ்வியாபகப் பொருட்சத்திகளின் அடங்குமியல் பினவன்றி, ஒத்தவியல்பினவல்ல வென்பதூஉம் பெறப்பட்டன.

### நாதசத்தியுண்மை

இனி, நிலம், மலை, தீ, நீர், குடம், படம் முதலிய ஏகதேசப் பொருள்களுந் தாந்தாஞ் செய்யுங் காரியத்தளவின் வியாபகமாத லுடைமையின், அவ்வளவின் வியாபித்தலும் பிரிதொன்றுற் பெறப்படாமையான், அவையும் இவ்வாறே தத்தங் காரியங்களின் வியாபித்தற்குரிய காரணரூபமாய் நிற்குந் தன்மையும், தத்த மியல்பினிற்குந் தன்மையுமென்று இருதன்மையுடையனவா மென்பது பெறப்படுதலின், அங்ஙனங் காரணரூபமாய் நிற்ப தாகிய சத்தி அவ்வப்பொருடோறுந் தாதான்மியத்தாலுண் டென்பது கண்டுகொள்க.

இதனானே சத்தியென்பதொன்றில்லை யென்னும் நையாயிகர் முதலியோர் மதமும் மறுக்கப்பட்டது.

நெருப்பின்சத்தி அதனின்வேற்றுமையின்றி உடனுய்நிற்ற லின், நெருப்புப்போலக் காட்சியளவையான் வேறுய்த் துணியப் படாதாயினும், இங்ஙனம் அருத்தாபத்தியளவையான் வேறுய்த்

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், எச.

துணியப்படுதலின், அத்தன்மைத்தாகிய சத்தியுண்டென்பது தெற்றெனவுணர்ந்துகொள்க.

சத்தியுண்மை அருத்தாபத்தியாற்றுணியுமாறு காட்டுதும்:- நெருப்புத் தன்னைத்தீண்டின் விரலைச்சுடுதல் காண்டும்; அதன்பின் ஒருவன் உச்சரிக்கும் மந்திரசத்தியாற் சுடாமையுங் காண்டும்; அவ்விரண்டு காலத்தும் நெருப்பு ஒருதன்மைத்தாதலிற் பிறழாமையுங் காண்டுமாகலின், மந்திரசத்தியான் மறைந்தும், அஃதில் வழி விளங்கியுஞ் சுடுதற்றொழிற்குக் காரணமாவதோர் சத்தி அந்நெருப்பின்வேறுயுண்டென்பது துணியப்படுமென்க.

அற்றேல், சுடுதற்காரியநிகழ்ச்சிக்குத் தடைமந்திரமில்லாமையும் ஒருகாரணமாகலின், ஏனைத் தீமுதலிய காரணமெல்லாமுள்வழியும் அஃதோர் காரணங்கூடாமையான், அக்காரியம் நிகழாதாயிற்றெனக்கோடும்; பொருடோறும் வேறுவேறுசத்திகளும், அவற்றிற்குத் தோற்றநாசங்களுங் கோடலினும் இவ்வாறு கோடல் சிறந்ததாலோவெனின்,—அங்ஙனமாக; தடை மந்திரத்தை அம்மாந்திரிகன் முன்போலவே செலுத்திநிற்புழியும், மற்றொருவன் அதற்கு மாறுக வுச்சரிக்கும் மந்திரசத்தியானே அந்நெருப்பு மீளவுஞ்சுடுதல் கண்டாமன்றே; அவ்வழித் தடைமந்திரந் திரிபின்றி நிலைபெறுதலின், அஃதில்லாமை காரணமென்பார்க்கு ஆண்டஃதின்மையின், சுடுதற்காரியம் நிகழாதாதல் வேண்டும்; மூவகைக்காரணங்களின் ஒன்றில்வழியுங் காரியந்தோன்றுதல் கூடாமையானென் றொழிக.

அற்றேல், விடைமந்திரத்தோடு கூடாதுநின்ற தடைமந்திரத்தின் அபாவமே ஆண்டுக் காரியநிகழ்ச்சிக்குக் காரணமாமெனக்கோடுமெனின்,—அற்றன்று; அவ்வாறுகொள்ளினும், அத்தன்மைத்தாகிய அபாவமும் ஆண்டின்றியே காரியம் நிகழ்தலின், அபாவம் ஆண்டுக்காரணமென்பது பெறப்படாமையறிக.

அற்றேல், விடைமந்திரத்தோடு கூடாதவழி மாத்திரையே தடைமந்திரத்தினபாவங் காரணம்; அல்லுழிக் காரணமன்றெனக் கோடுமெனின்,—அற்றன்று; நியமமில்வழிக் காரணமாதலே செல்லாதென்பார்க்கு நியதமாய்க் காரியத்திற்கு முன்னிற்பது காரணமெனக் காரணத்திற்கு நீ கூறும் இலக்கணமே சான்றாகலின், பயனின்றித் தூங்கும் ஆட்டின் கழுத்தின் முலை போலுமபாவங் காரணமாகாமையான், ஆண்டுஞ் சத்தியேகாரணமென்பது கண்டுகொள்க.

இன்னும், திரிபின்றி முன்போலவே நிலைபெறுந் தடைமந்திரம், விடைமந்திரம் வந்துழிக், காரிய நிகழ்ச்சியை முன்

போலத் தடைசெய்யாமைக்கு ஆண்டுநிகழ்ந்த விசேடம் என்னை யெனக் கடாயினுர்க்குத், தடை மந்திரத்தைச் செலுத்துவோன் விடைமந்திரத்தைச் செலுத்தும் வழியும் ஒருங்கேசெலுத்தி நிற்றலின், அதுவாராமையை விடைமந்திரம் பாதுகாத்தலென் றுதல், அதனழிவுபாட்டைச்செய்தலென்றுதல், வறிதேயிருத்த லென்றுதல், பிறிதோராற்றுணுதல் விடுத்தல் அமையாமையின், விடைமந்திரம் வந்துழித் தடைமந்திரஞ் செய்யுங் காரியம் நிகழாது, அல்லுழி நிகழுமென்னும் அவிநாபாவத்தானே நெருப் பின்சூடு நிகழவொட்டாமையாகிய தடைமந்திரஞ் செய்யுங் காரியத்தைத் தடுத்து நின்றது விடைமந்திரமெனவே விடுத்தல் வேண்டும்; வேண்டவே, காரியத்திற் குறைவுபாடு காரணத்திற் குறைவுபாடின்றி உண்டாகாதென்பது நியமமாகலின், திரிபின் றிச்செலுத்தப்படுந் தடைமந்திரமாகிய காரணத்திற் குறைவு பாடு காணப்படாமையின், அம்மந்திரத்தின்வேறுய் ஆண்டுப் புலனுகாத காரணமொன்று குறைவுபட்ட தென்பது போதரு தலின், அதுவே சத்தியென்பது அருத்தாபத்தியாற் கண்டு கொள்க.

இங்ஙனம் விடைமந்திரத்தாற் றடுக்கப்படுதல்பற்றித் தடை மந்திரத்திற்குச் சத்தியுண்மை பெறப்படுதலின், இவ்வாறே தடைமந்திரத்தாற் றடுக்கப்படுதல்பற்றித் திரிபின்றி யெரியும் நெருப்புமுதலியவற்றின் வேறுய் அவ்வக்காரியங்கட்கு அதுகூல மாகிய சத்திகள் அவ்வப்பொருடோறும் உளவென்பது காண்க. ஈண்டுத் தடுத்தலாவது காரியநிகழ்ச்சியிற் செல்லுமாறின்றி நின்றுங்கு நிற்கச்செய்தல்.

இங்ஙனஞ் சத்தியுண்மை பெறப்படவே, ஈண்டுக் கூறிய வாற்றுற் சத்தியுடைமை காரணத்தன்மை, வியத்தியுடைமை காரியத்தன்மை யென்றலே காரணகாரியங்களுக்கிலக்கணமா மாறும்; வேறுராற்றுற் பெறற்பாலதின்றி நியதமாய் முன் னிற்பது காரணம், அவ்வாறு நியதமாய்ப் பின்னிற்பது காரிய மெனக் காரணகாரியங்கட்குப் பயப்பாடின்றி நையாயிகர் முதலியோர்கூறும் இலக்கணம் ஆட்டின்கழுத்திற் றூங்கும் முலையோடொக்குமாறும் உணர்ந்துகொள்க.

### ஞாபகசத்தியுண்மை

இனி, ஈண்டுக் கூறப்படுங் காரகசத்திகளையுடைய அவ்வப் பொருள்களை எழுத்தானுகிய சொல்லாற் புலப்பட்டு அறிவுறுக் கும் ஞாபகசத்தி சமூகங்களுங் குடிலையிற்றேன்றிய நாதத்தின் கண்ணனவேயாமென்பது.

அற்றேல், எழுத்தாதல், எழுத்தானியன்ற பதங்களாதல், பதங்களானியன்று அவாய்நிலை தகுதி அண்மைகளான் எழுவாய் பயனிலை முதலியனவாய்த் தொடர்ந்துநிற்கும் வாக்கியங்களாதல் அவ்வப்பொருள்களை அறிவுறுக்குமெனவே கோடும்; அவ்வாறின்றி எழுத்தின்வேறுப்பொருள்களையறிவுறுக்குஞ் சத்தியுண்டென்பதற்குப் பிரமாணமில்லையாலோவெனின்,—அற்றன்று; "கால்" என்புழிக், ககர ஆகார லகர எழுத்துக்களேயன்றி அவற்றின் வேறுப்பதமென்பதொன்றின்மையானும், அவ்வாறே "கால்கிடந்தது" என்புழி, அப்பதங்களின் வேறுப் வாக்கியமெனவொன்றின்மையானும் எழுத்தின் வேறுப்பதவாக்கியங்கள் பொருளுணர்த்துவன வல்லவென்பது பெறப்படும்; படவே, நையாயிகர்மதம்பற்றிக், ககர ஆகார லகர எழுத்துக்களே அப்பொருளுணர்த்துமெனக் கோடல் வேண்டும். அங்ஙனங் கொள்வுழி, அவை ஒருங்குகூடிப் பொருளுணர்த்துமோ? ஒரோவொன்றே பொருளுணர்த்துமோ? எனக்கடாயினுர்க்கு ஓசை, உணர்வு, தொழில் மூன்றும் முக்கணப்பொழுதே நிலைபெறுமென்பது நையாயிகர்முதலியோர்க்குடம்பாடாகலின், முறையிற்பிறந்து நின்று கெடும் எழுத்துக்கள் ஒருங்கு கூடிநின்று பொருளுணர்த்துதல் கூடாமையின், ஒரோவொன்றே பொருளுணர்த்துமெனல் வேண்டும்; "க" என்ற மாத்திரையே கம்பலமென்னும் பொருளுணர்த்தாமையானும், உணர்த்துமெனினுங் ககரமொழிந்த எழுத்துக்களையுச்சரித்தல் பயனிலவாய்முடியுமாகலானும், ஒன்றென்றே பொருளுணர்த்துமென்பது பொருந்தாமையின், எழுத்துக்களின்வேறுப்பொருளறிவுறுப்பதாகிய சத்தியுண்டென்பது கண்டுகொள்க.

அற்றேல், எழுத்துக்கள் ஒருங்குநிற்குமாறில்லையென்பதூஉம், ஒன்றென்றே பொருளுணர்த்துமாறில்லையென்பதூஉமொக்கும்; எழுத்துக்கள் ஒருங்குகூடிநில்லாவாயினும் அவற்றின் வாசனை மனத்தின்கண் நிலைபேறுடைமையின், அவ்வாசனையோடு ஒருங்குகூடிய ஈற்றெழுத்துப் பொருளுணர்த்துமெனக் கோடுமெனின்,—அற்றன்று; இதற்கு முன் கூறிப்போந்த எழுத்துக்களின் வாசனையும் மனத்தின்கண் நிலைபேறுடைமையின், ஈண்டுக் கூறப்படும் பெயரீற்றினின்ற எழுத்து அவ்வாசனைகளெல்லாவற்றோடுங் கூடிநிற்றலின், ஒருபெயரினீற்றெழுத்தை உச்சரித்தமாத்திரையானே அவ்வீற்றுப் பெயர்ப்பொருள் எல்லாவற்றையும் ஒருங்குணர்தல்வேண்டும்; இனி, வாசனை நினைவைத்தோற்றுவிப்ப அந்நினைவோடுகூடிய ஈற்றெழுத்துப் பொருளுணர்த்துமெனக் கொள்ளின், நினைவுணர்வும் அவ்

ஒசைபோல முக்கணப்பொழுது மாத்திரையே நிலைபெறு மென்பது அவர்க்குடம்பாடாகலான், அவை ஒருங்குகூடிநிற்கு மாறு யாண்டையதென்றெழிக.

அன்றியும், எழுத்தோசையை அநுபவித்தறிந்த வாசனை யான் நிகழும் நினைவுணர்விற்கு விடயமாய் நினைக்கப்படுவது அவ்வெழுத்தோசையன்றிப் பிறிதன்மையானும் அந்நினைவு பொருளை விடயிக்கு மென்றல் பொருந்தாதென்றெழிக. இங்ஙனங் கூறியவாற்றால் வாக்கியமாதல், வாக்கியத்தினுள வாகிய பதங்களாதல், அவற்றினுளவாகிய எழுத்துக்களாதல், அவற்றின் வாசனை நினைவுகளாதல் பொருளுணர்த்தமாட்டா வென்பது போதருதலின், அவற்றாற் புலப்படுவனவாய் அவ்வப் பொருள்களை அறிவுறுக்கும் ஞாபகசத்திகள் அவற்றின் வேறுள வெனவும், அச்சத்திகளையுடையது நாதமெனவுந் தெரிந்துணர்க.

அற்றேல், எழுத்துக்கள் நாதத்தைவிளக்க நாதமொன்றே எல்லாப் பொருள்களையும் உணர்த்துமாயின் ஒரெழுத்தை உச்சரித்தமாத்திரையானே நாதம் விளங்குமாகலின், எல்லாப் பொருளினும் உணர்வுநிகழ்தல் வேண்டுமாலெனின்,—அறியாது கூறினாய். நாதம் ஒன்றாயினும் அதன்கண்ணவாய்ப் பொருள் களைத் தனித்தனியறிவுறுக்குஞ் சத்திகள் பலவாகலின், அவ்வச் சத்திகளைப் புலப்படுத்தற்கு அவ்வவற்றிற்குரிய எழுத்தின் கிடக்கை முறையும் வேறுவேறு வேண்டப்படுமாகலின், நெருப் பின்கட் சுடுதற்சத்தியைத் தடுக்குமந்திரத்தான் விளக்குதற் சத்தியைத் தடுத்தலும், விளக்குதற்சத்தியைத் தடுக்கு மந்திரத் தாற் சுடுதற்சத்தியைத் தடுத்தலுங் கூடாதவாறுபோல, அவ்வக் கிடக்கைமுறையுடைய எழுத்துக்கள் அவ்வப்பொருள்களை உணருஞ் சத்திமாத்திரையே விளக்குவனவன்றி ஏனையசத்தி களை விளக்குமாறின்மையின், அவ்வப்பொருண்மாத்திரையின் அறிவுநிகழாதென்க.

அற்றேல், "ஆ" "ஆண்டு" என்றாற்போலும் பலபொரு ளொருசொற்கட்குக் கிடக்கைமுறையும் வேறுபாடின்மையின், அவை அப்பொருள்களையுணர்த்தும் வேறுவேறு சத்திகளை விளக்குமாறென்னையெனின்,—அஃதொக்கும். பலபொருட் சொற்கட்குக் கிடக்கைமுறையும் வேறுபாடின்றாயினும் அவ் வெழுத்தோசையைப் புலப்படுத்தும் எடுத்தல் படுத்தல் முதலிய இசையோசை அவ்வக்காரணத்திற்கேற்ப வேறுவேறுண்மை யின், அவற்றோடுகூடிய சொற்களும் வேறுவேறாகலின் வேறு வேறுசத்திகளை விளக்குதல் அமையுமெனவிடுப்பர் ஒருசாரார். இனி, உண்மையாநோக்குவார்க்கு "ஆ" என்பது மர

விசேடத்தை யுணர்த்தும்வழியும், பெற்றத்தை யுணர்த்தும்வழி யும், குறிப்பான் இரக்கம் வியப்பு விளக்களை யுணர்த்தும்வழியும், ஆதற்றொழிலையுணர்த்தும்வழியும் வெவ்வேறெழுத்தேயாமென் பது தத்தமக்குக் காரணமாய் அவ்வப்பொருள்களை யறிவுறுக் குஞ் சத்திகள் வெவ்வேறுதல்பற்றி யுணரப்படுமாகலின், சாதி மாத்திரையான் ஒரெழுத்தென்பதுபற்றி ஆசங்கையின்மை யுணர்க.

இனி, "ஆ" என்பது பெற்றத்தினையுணர்த்தும்வழிப் பெயர்ச்சொல்லெனவும், இரக்கக்குறிப்பினையுணர்த்தும்வழி இடைச்சொல்லெனவும், ஏவற்பொருண்மையையுணர்த்தும்வழி வினைச்சொல்லெனவும், ஆதற் புடைபெயர்ச்சியையுணர்த்தும் வழி உரிச்சொல்லெனவுங் கோடல் எல்லார்க்குமொப்பமுடிந் தமையின், எழுத்தோப்புமைபற்றி உபசாரத்தாற் பலபொரு ளொரு சொல்லெனப்படினும், உண்மையான் வேறுவேறு சொல்லேயாமென்பது போந்தது. பெயர்ச்சொன்மையினுந் தினை பால் முதலியவற்றுள் வேறுபாடின்றியும், புணர்ச்சிக்கட் பெற்றத்தினையுணர்த்தும்வழி, ஆன்கோடெனச் சாரியைபெறு தலும்; மரவிசேடத்தை உணர்த்தும்வழி, ஆங்கோடென மெல் லெழுத்துப்பெறுதலுமாகிய செய்கை வேறுபாடுஞ் சொல்வேறு பாட்டானன்றிப் பெறப்படாமையின், அவை வேறுவேறுசொல் லென்பது பெற்றும்; பெறவே, இங்ஙனம் ஆவென்னுஞ் சொற் களுக்குளவாகிய தம்முள்வேறுபாடு எழுத்துவேறுபாடுமாத் திரையானன்றி, வடிவாஞ்தல், கிடக்கைமுறையாஞ்தல், பிறி தொன்றாஞ்தல் பெறப்படாமையான், "ஆ" என்னும் எழுத் துக்கள் வேறுவேறென்பதூஉம்; அவை வேறுதல் பிறிதொன் றாற் பெறப்படாமையான், அவ்வாகாரத்திற்கு வேறுவேறு காரணமாய் நாதத்தின்கணுளவாகிய சத்திகள் பலவென்பதூஉந் தாமே போதருமென்க.

ஆயீறு குன்றினின்று ஏவற்பொருண்மையுணர்த்தும் "ஆ" என்பது விகுதிவேறுபாட்டாஞ்கிய சொல்லாகலின், ஈண்டைக் கேலாதாயினும் பிறர் மதம்பற்றியும், ஈறுகுன்றியவழி வடி வொப்புமையாதல்பற்றியும் அதனையு மூடனெடுத்தோதினு மாகலின், ஈண்டைக்கு அஃதொழித்து ஏனையவே கொள்க. ஆதற்புடைபெயர்ச்சிக்குறிப்புணர்த்துவது உரிச்சொல்லேயா மென்பது *சூத்திரவிருத்தியுள் விரித்தாம்; ஆண்டுக்காண்க.

இங்ஙனமாகலின், இவ்வாறே எழுத்துக்களெல்லாம் வேறு வேறெனவும்; எழுத்து ஐம்பத்தொன்று, மூப்பதெனத்

* தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, பக்கம், உச, உஙு.

தொகை கூறியது சாதியொருமைபற்றி யெனவும்; எனவே, அவ்வெழுத்தின் கிடக்கைமுறையான் அவ்வச்சத்திமாத் திரையே விளங்குதலின், அவ்வப்பொருண்மாத்திரையினன்றி ஏனைப்பொருளின் உணர்ச்சிசெல்லாதெனவும் உணர்ந்து கொள்க.

அற்றேல், பலபொருளுணர்த்துதலிற் பலசொல்லெனக் கோடும்; அதுபற்றி எழுத்துப் பலவென்றல் சாலாதென்னுற் படு மிழுக்கென்னையெனின்,—அற்றன்று; பலபொருளுணர்த்து தன்மாத்திரையானே பலசொல்லாமெனின், "கங்கையின்மச் சம், கங்கையினிடைச்சேரி" என்புழிக், கங்கையென்பதும் பல பொருளுணர்த்துதலின், வேறு சொல்லெனப்பட்டு, ஆகுபெய ரென்பதொன் றின்றுய்முடியுமாகலின், எழுத்துவேறுபாடே சொல்வேறுபாட்டிற்குக் காரணமென் றெழுக.

அற்றேல், கங்கையென்பது கரையினையுணர்த்தும்வழியுஞ் சத்தியானுணர்த்து மியற்பெயரெனக்கோடும்; இயைபுபற்றி யுணர்த்தும் ஆகுபெயரெனல் வேண்டாவெனின்,—அற்றன்று; "கங்கையினிடைச்சேரி" என் புழிக், கங்கையென்பதனால் வெள்ளத்தினையுணர்ந்தன்றிக் கரையினையுணர்தல்கூடாது. "ஆ" என் பதனான் மரவிசேடத்தினையுணரும்வழிப், பெற்றத் தினையுணர்தல்வேண்டுமென்னும் யாப்புறவில்லை. அன்றியும், "ஆவினைப்பார்" என்னும் வினைவேறுபடாப் பலபொருளொரு சொல்லின் ஐயப்பாடுநிகழும்; "கங்கையைப்பார்', என்றவழி, வெள்ளமோ கரையோவென்று அவ்வாறு ஐயப்பாடு நிகழுமா றில்லை. இன்னும் இத்தொடக்கத்து வேறுபாடு தம்மூட் பெரி தாகலின், அவ்வேறுபாட்டிற் கேற்பக் கங்கையென்பது வெள் ளத்தோடுளதாகிய இயைபுபற்றி ஆகுபெயராய்க் கரையினை யுணர்த்துமெனக் கொள்வதன்றி, ஆவென்றற்றொடக்கத்துப் பலபொரு ளொருசொற்போல, இயைபுவேண்டாது சத்தியாற் கரையினையுணர்த்துமெனக்கோடல் பொருந்தாமையறிக. இன் னும் விரிப்பிற் பெருகுமென் றெழுக.

## சத்திசத்திமான்களின் வேற்றுமை

அற்றேல், அஃதங்ஙனமாக: எழுத்தோசையான் விளக்கப் படுஞ் சத்தியே நாதமென்னுது சத்தியுடையது நாதமென வேற்றுமைப்படுத் தோதியவாறென்னையெனின்,-அஃதொக்கும்; குணங்கள் குணசமூகமாகிய குணியையின்றியமையாதவாறு போலச் சத்திகளுஞ் சத்திசமூகமாகிய சத்திமானை யின்றி யமையாவென்பது பெறப்படுதலின், சத்திமானுகிய நாதம்

தாதான்மியத்தாற் சத்தியவத்தையின் வேறுதல் அமைவுடைத் தென்க.

அற்றேல், யாண்டுஞ் சத்திரூபமாய்நின்றது வியத்திரூப மாதலே காரியப்பாடெனக்கோடலின், ஈண்டும் நாதசத்தியே வைகரியென்னுங் காரியமாய் வியத்திப்படுமென்பது போதரு தலின், அங்ஙனம் வியத்திப்பட்டவழிச் சத்திரூபமாய் நிற்றல் பெறப்படாமையின், அஃதக்காரியத்தான் விளக்கப்பட்டு வேறு நின்று பொருளையறிவுறுத்தலாகிய காரியத்தையுஞ் செய்யு மென்றல் சாலாதாம்பிறவெனின்,—அற்றன்று; சத்திகளெல் லாந் தத்தம் ஏகதேசத்தின் வியத்திரூபமாய்க் காரியப்படுவன வன்றி முழுவதும் வியத்திப்படுதலின்மையான். படுமெனின், அம்முறையேபற்றி மூலகாரணமாகிய மாயை மாமாயைகளுந் தத்தமேகதேசத்தானன்றி முழுவதும் வியத்திப்படுமெனப் பட்டு அநித்தமாவான் செல்லுமாகலான் அது கூடாமையின், அவ்வாறே வாக்குச்சத்திகளும் வைகரியாய்க் காரியப்படாது வேறுநின்ற கூற்றனே விளக்கப்பட்டுப் பொருளை யறிவுறுத்த லாகிய காரியத்தை நிகழ்த்துதல் அமையுமென்க.

இங்ஙனமாகவுந் தோற்றக்கேடுகளுடைய எழுத்தோசையே பொருளையறிவுறுக்கும்; அவற்றுனியன்ற பதவாக்கியங்களே பொருளையறிவுறுக்கு மென்றுணருமுணர்வு அவ்வச்சத்திகளை விளக்குமுகத்தாற் பரம்பரையினறிவுறுக்குமென்னும் உபசாரம் பற்றி நிகழ்வதேயாமென்பது.

இவ்வாறு காரகசத்தி ஞாபகசத்தியென்னும் இருவேறு வகையவாகிய பொருட்சத்தி வாக்குச்சத்தியென்னும் இரு வகைச்சத்திகளதுண்மையும், அவற்றதியல்பும், சத்திசத்தி மான்கட்கு மேற்கூறியவாறுளதாகிய வேற்றுமையுங் கண்டு கொள்க. சத்தியெனினும், போடமெனினும், ஆற்றலெனினு மொக்கும்.

நான்காமதிகரணம் முடிந்தது

பிரமாணவோத்தின் இரண்டாம்பாதமாகிய

## இரண்டாஞ்சூத்திரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

# மூன்றாஞ் சூத்திரம்

இனி, ஆசிரியர் மூன்றாஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப் பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த் தருளிச் செய்கின்றார் :—

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னனம்புல னெடுக்க மறிதலிற் கண்படி
வண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தநுவினு ளான்மா

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என்பது சூத்திரமெனக்காட்டி, இனி அதன்கருத்துரைக்கின்றார்.

எ - து. சூ - ம். எனின். ஆன்மப்பிரகாசமுணர்த்துத னுதலிற்று

எனவரும்.

அவையே தானேயாய் என மேலைச்சூத்திரத்தில் எடுத்துக் கொண்ட ஆன்மாக்கள் சூனியமுதலியவற்றின் வேறுபடுவென வழியளவையான் விளக்கி, ஆன்மாக்கள் பலவும் முதல்வனொருனே யாய்நிற்கும் எனவும், ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வனுணர்வின் வரும் எனவும், ஆன்மாக்கள் மாறிப்பிறந்து வரச்செய்யும் எனவும், ஆன்மாக்களுக்குப் புறப்பொருளை யுணர்த்துவதாகிய தாதான்மிய சத்தியுடையன் எனவும் ஆன்மாக்களின் மேல்வைத்து மேற்கூறிய முதல்வனிலக்கணத்தை வலியுறுத்துதல் இவ்வோத்தின் மூன்றும்பாதமாகிய மூன்றாஞ் சூத்திரத்தின் கருத்தென்பதாம்.

பாதவியையும் இதனானே விளங்கும். அதிகரணவியைபு ஆனாநாமங்கு என்றதனாற் பெறப்பட்டது. பதியுண்மைக்கும் பாசவுண்மைக்கும் பிரமாணங்கூறி, எஞ்சினின்ற பசுவுண்மைக் குப் பிரமாணங்கூறுதலின், ஒத்தியைபாமாறுங் கண்டு கொள்க.

முதன்மையுடைமைபற்றி உலகிற்கு நிமித்தகாரணமுண்மை முதற்பாதத்திற் கூறிக், காரணமாதற்பொதுமையான் இயை புடைமைபற்றித் துணைக்காரண முதற்காரணங்களதுண்மையும்,

அவற்றுள் உலகங் காரியப்படுமாறும் இரண்டாம்பாதத்திற்கூறி, அவற்றுளை பயனுகர்தற்குரிய பசுவுண்மைக்குப் பிரமாணம் மூன்றும்பாதத்திற்கூறுகின்றுரென் றுணர்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—இலதென்றன் முதலிய அறுவகை ஏதுக்களானும், மாயாவியந்திரதருவினு ளென உடம்பொடு புணர்த்தோதிய குறிப்பேதுவானும் இவற் றின்வேறுய் இவ்வுடம்பினுள் ஆன்மா வெனப்படுவதொன் றுண் டென்றவாறு.

இது பூட்டுவிற்பொருள்கோள். சாதியொருமைபற்றி உளது என்றார். நாநுவினுளான்மாவுளது என்றுரேனுங் காணப் பட்டவுடம்பாற் காணப்படாத ஆன்மாவுக்குண்மைகூற வேண்டு தலின், "இவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறுகிய ஆன் மாவையுடைத்து, அறிதலுடைமையான்; யாதியாது ஆன்மாவை உடைத்தன்று, அதுவது அறிதலுடைத்தன்று; குடம்போலும்" என எதிர்மறையநுமானத்தான் உடம்பின்மேல் வைத்துக் கூறுதல் ஆசிரியர் கருத்தென்க. அற்றுகலினன்றே முதற் சூத்திரத்திற் பதியுண்மை உலகின்மேல்வைத்துக் கூறியதூஉம் என்க.

ஈண்டு மேற்கோள் ஒன்றுயினும் எழுவகைமதங்களே வேறு வேறு மறுக்கும் ஏதுக்கள் ஏழாகலான், ஆன்மாவுளது என்னும் மேற்கோள் அவற்றொடு தனித்தனி கூட்டியுரைக்கப்பட்டு ஏழதி கரணமாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இச்சூத்திரத்திற் கூறிய ஏதுவே ஏது. மேற்கோளுமதுவேயாகலின், ஏனைச் சூத்திரங்களுட்போல வேறே ஏதுக்கூறவேண்டாமையின், இவை ஏதுவாமாறும், இவற்றுள் மேற்கோளைச் சாதிக்குமாறும் விளங்கவுணர்த்தி வலியுறுத்துதன் மாத்திரையே இவ்வதிகர ணங்களுட் கூறப்படுவதென்க.

சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணன்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணன்ம வாதி, பிரமான்மவாதி, சமூகான்மவாதியென்னும் எண்மருள், அந்தக்கரணன்மவாதிகள் ஆன்மாவின் இலக்கணங் கூறும்வழி அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின், அவரை யொழித் தொழிந்த எழுவர்மதங்களையும் முறையே மறுக்கின்றுர்.

## முதலதிகரணம்

அவற்றுள், புத்தர்நால்வருள் மாத்துமிகர்கூறுஞ் சூனியான்மவாதத்தை மறுத்தற்கெழுந்தது முதலதிகரணம் :—

ஈண்டு இலதென்றலின் ஆன்மாவுளதென்றது

எனவரும்.

ஆன்மாவிலதென்றலின் எனவருவித்துரைக்க.

அற்றேல், ஆன்மாவில்லையென்றதேபற்றி அஃதுண்டெனக் கோடல் முயற்கோடில்லையென்னுமேதுவான் அஃதுண்டெனச் சாதித்தலோ டொக்குமென்னு மாசங்கையை அதன்றுற்பரிய முரைக்குமுகத்தானே அவ்விரண்டுந் தம்முளொவ்வாமைகூறி நீக்குதற்கெழுந்த பொழிப்புரை :—

எவற்றினையும் அன்றன்றெனவிட்டு ஆன்மாவிலதென்று நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எனவரும்.

ஆன்மாவிலதென்னுஞ் சூனியவாதிகளும் இல்லையென வாளாகூறுதல் அமையாமையின், உடல் பொறி விடயமனைத் தினையும் முறையே இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றுகக் கழித்து, இங்ஙனமாகலான் ஆன்மாவென் பது சூனியமென்று இவ்வாறு கூறுபவாகலின், அவற்றை ஒரோவொன்றுக விட்டு அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்பதோர் அறிவுண்மையின், அவ்வறிவே மேல் அவையோதானே என்னும் அதிகரணத்தின், அந்நுவிதமென்ற சொல்லானே என்று ஆகம வளவையாற் சாதித்த ஆன்மாவென்றவாறும் ; இலதென்றலின் ஆன்மாவுளது என மேற்கொண்ட தென்றவாறு.

இன்மை - ஈண்டுச் சூனியப்பொருட்டு.

அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃதென்னை யீன்றுண் மலடியென்பதனேடொக்குமென் றெழுகிவென்பது கருத்து.

அதுவேயவ்வான்மாவாம் என்புழி ஏகாரம் பிரிநிலை. அவ் வான்மா - மேலைச்சூத்திரத்து முதலதிகரணத்தின் ஆகமவளவை யாற் பெறப்பட்ட ஆன்மாவாமென்க.

அற்றேல், அவ்வறிவை உடல் பொறிமுதலியவற்றின் வேறுகப் பிரித்துக் காணுமாறும், அதுவே அவ்வான்மா

வாமாறும் யாங்ஙனமெனின், அஃதாமாறு கூறி, ஏதுவின் பொருளே வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி

எனவரும்.

விட்டவழியென்பது விட்டு எனத் திரிந்துநின்றது. அவ் வறிவாவது இதுவென் றுணர்த்துதற்கு அன்றன்றெனநின் றனைத்தும்விட்டவழி என்று அதுவதித்து, அஞ்செழுத்தாயொன்று நின்றுளது என அடையாளங்கூறினர். அதுவுமான்மாவன் றெனக் கழிப்பின், அங்ஙனங் கழித்தவுணர்வு வேறொன்றெனப் பட்டு, மேலும் வரம்பின்றியோடுமென்னுங் கருத்தான் அதுவே நீ என்றார்.

ஏகாரந் தேற்றம். அஞ்செழுத்தாய்நின்று அறியுமாறு வருஞ்சூத்திரத்திற் பெறப்படும். இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட மேலுமோரியைபின்றி யுரைத்தார்.

அனைத்துமாய் என ஆக்கச்சொல் வருவித்துரைக்க. தற்பரம் என்றது குறிப்பேதுவாய் நின்ற பெயர்.

வரம்பின்றியோடுமென்றல் வேண்டா, மாயையுஞ் சிவமு மூண்மை மேலைச்சூத்திரங்களாற் பெறப்பட்டமையின், அவற்று ளொன்றேயமையுமெனக் கோடுமென்பாரைநோக்கி, அனைத்து நின்றின்று தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை தற்பரமு மல்லை தனி என்றார். இதனானே வருமதிகரணங்களுக்கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறு மாயிற்று.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

மேலையதிகரணத்துச் சூனியான்மவாதிகளே மறுத்துப் பாசத்துக்கும் பதிக்கும் வேறுப் அறிபொருளாகிய ஆன்மா வொன்றுண்டெனச் சாதித்தவழி, அறிபொருளுண்டென்ற தொக்கும்; அது நான்குபூதக் கூட்டமாகிய உடம்பின்க ணன்றி நிகழக்காணுமையாலும், நான்குபூதமுஞ் சடமாயினும்

பாகடையுஞ் சுண்ணும்புங் கூடியவழிப்பிறந்த செவ்வண்ணம் போல அவற்றின் கூட்டரவிலோ ருணர்வுண்டாத லமையுமாக லானும், யான் பருத்தேன், யான் சிறுத்தேன், யான் மனிதன், யான் பார்ப்பானென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும் உடம்பே ஆன்மாவென்னும் உலகாயதர்மதத்தை மறுத்தற்கெழுந்தது இரண்டாமதிகரணம்.

அதிகரணவியைபும் இதனானே விளங்கும்.

இனி எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது

எனவரும்.

எனதுடலென்றலின் ஆன்மா வேறுளது என்றுரைக்க. உடம்பின் வேறாய் உயிருண்டெனச் சாதித்தற்கு வேறும் ஏதுக்க ளுளவாயினும் மேலையதிகரணத்துட்போல அவன் வழங்குமுரையேபற்றி அவனையு மறுப்பார், எனதுடலென்றலின் ஆன்மாவுளது என்றார். யான் வளர்ந்தேன், யான் மெலிந்தேன், யான் மனிதன், யான் பார்ப்பான், யான் கரியனென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும் யானுடம்பு, யான் கை, யான் கால் என உடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி, எனதுடல், எனது கை, எனது காலென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின், அதுவே ஆன்மா வேறுண்டென அறிவுறுத்துமென்பது கருத்து.

அற்றேல், எனதுடலென்பது, பிறிதின்கிழமைப் பொருடாராது தலைமாத்திரையாய்நிற்கும் இராகுவை இராகுவினது தலையென வழங்குமாறுபோல வழங்கப்படு மென்றுற்படும் இழுக்கென்னை யென்னும் ஆசங்கையை அதன் றுற்பரிய முரைக்குமுகத்தானே நீக்குதற்கெழுந்த பொழிப்புரை :—

என்பதி யென்மனை யென்றுற்போல என்கை யென்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எனவரும்.

இராகுவின்றலை யென்றுற்போல்வன சிறுபான்மை வழங்கப்படுமாகலின், ஆண்டு ஒற்றுமைப் பொருள்கோடலொக்கும்; சண்டு அவ்வாறின்மையின், அது கூடாதென்பார், என்பதி யென்மனையென்றுற்போல எனப் பெரும்பான்மைபற்றி அங்ஙனம் வழங்கப்படும் பொருளோடு சார்த்திக்காட்டினார்.

அற்றேல், பதி மனைவி முதலிய பொருள்களைத் தன்னின் வேறுகக்கண்டு பிறிதின்கிழமைப்பொருளாக எனதென்றுற்

போலக் கைகான் முதலியவற்றைத் தன்னின் வேறுகக் காணு மாறின்றித், தற்கிழமைப்பொருளாக எனதென்று கூறிநிற்ற லின், அவை தம்முளொக்குமாறென்னே யென்னு மாசங்கையை நீக்கி அதனே வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறு முணர்

எனவரும்.

உலகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனேவி முதலிய புறப்பொருள்களே ஆன்மாவென மயங்கி எனதென்று ஒற்று மைப்படக் கூறிக்கொண்டுநின்று, பின் உலகாயதநூல் கேட்ட துணேயானே புறப்பொருள்கள் ஆன்மாவல்லவென்பது நிச்ச யித்துத், தன்னுடம்புமாத்திரையின் அவ்வாறு கூறிக்கொண்டு நிற்பானுக்கு அவ்வநுபவத்தை யெடுத்துக்காட்டித்தெளிவிப்பார் எனதலா தென்னது எனதென்ற மாட்டி னெஞ்சத்துநீ நிற்றிகாண் என்றார்.

இன் - உவமவுருபு. உனதலாது என்பதனேத் தனித்தனி கூட்டுக.

உன்னுதலாவது, * "உடலின்வேறுயிரே னிந்த வுடலன்றே வுணர்வதென்னி—னுடல்சவமான போது முடலினுக் குணர் வுண்டோ" என்றற் றொடக்கத்தா னுரைத்தல்.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றுமதிகரணம்

மேலையதிகரணத்தில் தேகான்மவாதத்தை மறுத்து, ஆன்மா வேறுண்டெனச் சாதித்தவழி, உடல் சடமாகலா னும், பிறவாற்றானும் அஃதான்மாவன்றென்றதொக்கும்; ஐம் பொறிகள் ஐம்புலன்களேயும் அறியுமென்பது எல்லார்க்கு மொப்ப முடிந்ததாகலின், அவையே ஆன்மாவெனவமையு மென்னும் இந்திரியான்மவாதிகளே மறுத்தற்கெழுந்தது மூன்று மதிகரணம் :—

இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது

எனவரும்.

---

* சிவஞானசித்தி, மூன்றுஞ்சூத்திரம், உ.

அறிதலின் என்பது ஐம்புலனறிதலின் ஒடுக்கமறிதலின் என ஈரிடத்துங் கூட்டியுரைக்கப்பட்டது.

இஃதறியாதார் ஐம்புலனொடுக்கமறிதலினென ஒரேது வாகவைத்து, ஐம்புலனை ஆகுபெயராக்கி ஐம்பொறியின்றொழிற் பாட்டினையுஞ் சொப்பனத்தின் அவை யொடுங்கிய வாற்றினையும் அறிதலினென்றுரைப்பாரும், ஐம்பொறிகள் கெட்டவாற்றை, என்விழிகுருடாயிற்று என்காது செவிடாயிற்று என்றிங்ஙனம் அறிதலினென் றுரைப்பாருமாயினர். அங்ஙனமுரைப்பிற் சூக் குமதேகான்மவாதிகளை மறுக்குமாறு பெறப்படாமை யறிக.

ஐம்பொறிமுதலியன ஆன்மாவல்லவெனச் சாதித்தற்கும் எனதுபொறி யென்றற்றொடக்கத்து வழக்கமே ஏதுவாதலமையு மேனும் அவை எனதுடலென்றல்போலப் பெரும்பான்மை வழக்கமல்லவென்பாரை நோக்கி வேறுவேறு சிறப்பேதுக் கூறு கின்றாரென்க.

அற்றேல், ஐம்பொறிகளே ஐம்புலன்களையும் அறியு மென்றல் எல்லார்க்கு மொப்பமுடிந்தமையின், அஃதான்மா வேறுளதெனச் சாதித்தற்கேதுவாமா றென்னையென்னும் ஆசங் கையை அதன்றூற்பரியமுரைக்கு முகத்தானே நீக்குதற்கெழுந்த பொழிப்புரை:—

ஐம்புலனுகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ்வைந்தினுனும் ஐம்பயனு மறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எனவரும்.

அற்றேல், இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாதென்ற தொக்கும்; ஐந்தும் ஐந்தான்மாவெனக் கோடலின், அதனை னெமக்காவதோ ரிழுக்கில்லை. இனி, இவ்வைந்தையுங்கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியுமென்றதற்குப் பிரமாண மென்னை? குடத்தினைக்கண்ட யானே அதனைத் தீண்டினேனென மறித்துணர்வுநிகழ்தல் ஐந்தும் ஒருடம்பின் கண்ணே நிலைபெறு மொற்றுமையா னிகழுமென வமையுமா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனுய வஞ்செழுத்தை—யொன்றறித
லுள்ளதே யாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை யோர்

எனவரும்.

உடன்மன்னி என்றது உடலின்கணிலேபெற்றென்றவாறு. அன்றுதல் - மாறுபடுதல். ஆகி என்னுஞ் சிறப்புவிணை ஆய் என்னும் பொதுவிணைகொண்டது; "இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுப" என்றாற்போல. இங்ஙனங்கோடல் பொருந்துமென்பது, * "ஆடூஉ வறிசொல்" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரையானு மறிக. ஆய் என்பது வினைத்தொகை. ஆய்தல் - ஆராய்தல். அவ்வஞ்செழுத்து என்னும் வகரம் விகாரத்தாற்றொக்கது. அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்து என்றார். அஃதிருமடியாகுபெயராய் ஐம்பொறியின் றொழிற்பாட்டையுணர்த்தி நின்றது. இனிப்புலனைப் பொறிக்கு ஆகுபெயராக்கி, அஞ்செழுத்தாயபுலனை என மாறியுரைப்பினுமமையும். அஞ்செழுத்தாயபுலன்-அஞ்செழுத்தாலாகிய பொறியின்றொழிற்பாடென்க. உள்ளல் - உள்ளுவனவாகலானென விரிக. ஒன்றல்லை என்பது வேறுவையென்னும் பொருட்டாய் நின்றது.

இம்மூன்றதிகரணத்தானுஞ் சாக்கிரத்தினிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

மூன்றாமதிகரணம் முடிந்தது

---

## நான்காமதிகரணம்

மேலையதிகரணத்தில் இந்திரியான்மவாதிகளை மறுத்து, ஆன்மாவேறுளதெனச் சாதித்தவழித் தனித்தனியறியும் ஐம்பொறியின் றொழிற்பாட்டினையுணர்ந்து அவ்வைந்தானும் ஐம்புலனுமறிவது வேறொன்றுள தென்றதைக்கும்; † "நேசவிந்திரியங்கட்கு நிகழறி விதனுற் காண்டும்" என நீவிருங்கோடலின், அங்ஙனமறிவது புரியட்டதேகமே யெனவமையும்; அது புறத்துவிளங்காதாயினும் அகத்துநின்று இந்திரியங்களைப் புறத்திற்செலுத்தியறியு மென்னுஞ் சூக்குமதேகான்மவாதிகளை மறுத்தற்கெழுந்தது நான்காமதிகரணம்:—

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுள தென்றது

எனவரும்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உ.

† சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், சுசு.

ஈண்டு ஒடுக்கம் என்றது ஐம்பொறிகளுமொடுங்கின அவசர மாகிய சொப்பனவத்தையை; அஃதாகுபெயரான் ஆண்டு நிகழ் வனவற்றை யுணர்த்திநின்றது.

அற்றேல், சொப்பனத்தினிகழ்வனவற்றை யறிவதுஞ் சூக் குமதேகமேயாகலின், இது சித்தசாதனமாமாலென்னும் ஆசங் கையை அதன் ரூற்பரிய முரைக்கு முகத்தா னீக்குதற்கெழுந்த பொழிப்புரை :—

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எனவரும்.

எனவே, ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தினிகழ்ந்த வற்றை நனவின்கண் மயங்கியறிதலின் என்னும் பொருட்டாக லின், சித்தசாதனம் யாண்டையதென்றவாரூயிற்று. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனையறியுமாயிற் கண்டபடி யறியாது மயங்கியறிதல் கூடாமையின், ஆன்மாவுக்காயின் அது போல ஒருதன்மைத்தாதலின்றி, அகத்துச் சேறலும் புறத்துச் சேறலுமாகிய வேறுபாடின்மையான் அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின், அங்ஙன மறியுமான்மா வேறுண்டென்பதாம்.

கனவின்கட்செல்லுமாறும், ஆண்டுநிகழுமாறும், மீளவரு மாறும் வகுத்துணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேரூன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று

எனவரும்.

இங்ஙனம் அவத்தைப்படுமியல்பெல்லாம் வருஞ்சூத்திரத் தின் விளங்கக் காட்டுதும்.

உயிர்ப்ப என்பது அன்பெறுத அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர். உயிர்த்தல் - தொழிற்படுதல். தாம் - அசை. மீண்டு - மீள. மாறல் - மாறலாலென்க. மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தி னிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

நான்காமதிகரணம் முடிந்தது

———

## ஐந்தாமதிகரணம்

மேலையதிகரணத்திற் சூக்குமதேகான்மவாதிகளை மறுத்து ஆன்மா வேறுண்டெனச் சாதித்தவழிச், சூக்குமதேகத்தின் றொழிற்பாடு சொப்பனத்தானமாத்திரையினன்றிச் செல்லாமையின் அஃதான்மாவன்றென்ற தொக்கும்; பிராணவாயுவின் றொழிற்பாடு ஆண்டுங் காணப்படுதலின், அதுவே அடங்குதல் விடுதல்செய் தறிவதாகிய ஆன்மாவென்னும் பிராணன்மவாதிகளை மறுத்தற்கெழுந்தது ஐந்தாமதிகரணம்:—

இனிக் கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவுளதென்றது

எனவரும்.

உண்டிவினை - உம்மைத்தொகை. அஃது, *"உண்டியும் வினையுமின்றி" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானு மறிக. உண்டியின்மைமாத்திரையே கூறிய வடமொழிச்சூத்திரத்திற்கும் இனம்பற்றி வினையின்மையுமுடன்கோடல் கருத்தென்க. இக்கருத்தறியாது உண்டியாகிய வினையெனவிரிப்பாருமுளர்.

அற்றேல், கண்படைகொண்டவழி உண்டிவினையில்லையென்றது உடற்கோ? பிராணவாயுவுக்கோ? உடல் ஆன்மாவன்மையின், அதற்கெப்பொழுதும் அவை இல்லையேயாம்; பிராணவாயுவுக்காயின், துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாய்த் துயின்றேனென்றறிதலுண்மையின், ஆண்டு இன்பநுகர்ச்சியுண்மைபெற்றும்; விழித்துழிப்போல உறங்குழியும் பிராணவாயு இயங்குதலான், ஆண்டு வினையுண்மையுங் கண்டாம்; அதற்கவை ஆண்டில்லையென்றல் மாறுகோளாமாகலின், இவ்வேதுப் போலியாய்முடியுமென்னும் ஆசங்கையை அதன்றூற்பரியமுரைக்குமுகத்தானே நீக்குதற்கெழுந்த பொழிப்புரை:-

ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ்சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாநிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது

எனவரும்.

*கண்டு உண்டி என்றது விடயங்களினிடமாகவரும் இன்பதுன்ப நுகர்ச்சியை; வினை என்றது உடம்புசேட்டித்தலையென்பார், இன்பத்துன்பஞ் சீவனம் என்றார். செவ்வெண் டொகைவிகாரத்தாற்றொக்கது.

---

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், கூ:

சீவியாநிற்பது என்பது, *"உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி—விழிப்பது போலும் பிறப்பு" என்புழிப்போலச் சீவியாநிற்றலென்னுந் தொழிற்பெயர்மாத்திரையாய்நின்றது. உளது என்றது எனத் தனித்தனி கூட்டுக.

துயின்றுழியும், விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத்தாதல்பற்றி, உடம்பு பிரகிருதி எனப்பட்டது. பிரகிருதிக்கு என்பது உருபுமயக்கம்.

இரண்டுகாலத்து மொப்பவியங்குதல்பற்றிப் பிராணவாயுவைப் பிரகிருதியெனக்கொண்டு, பிராணவாயுவுக்கு அவையின்மையினென்றுரைப்பாரும், பிரகிருதிவிகாரமாகிய சித்தத்திற்கவையின்மையினெனவுமுரைத்துச், சுழுத்தியின்கண்ணுந் தொழிற்படுவதாகிய சித்தமேயான்மாவென்னுஞ் சித்தான்மவாதிகளே மறுத்தற்கெழுந்ததென்பாரும் உளர்.

அற்றேல், ஆண்டுக்கருவிகளொடுங்கினமையின், இன்பதுன்பதுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லையாயினவாகலான், அதுபற்றிப் பிராணவாயு ஆன்மாவன்றென்றல் பொருந்தாதென்னும் ஆசங்கையைநீக்கி அதனை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

> கண்டறியு மிவ்வுடலே காட்டோடுங்கக் காணுதே
> யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
> முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
> லுள்ளதா முண்டிவினை யூன்
>
> எனவரும்.

ஆன்மாவின்சந்நிதியிற் கண்டறிவதாகிய இவ்வுடல் உண்டியும் வினையுமின்றிக் காணுதவாறு காட்டாய கருவிகளொடுங்கவுமொடுங்காது பிராணவாயுவியங்குதலாற் கண்டறியுமூரிமையுடைய ஆன்மாப் பிராணவாயுவன்று; அதனின் வேறுண்டு; அவ்வான்மாவொடுங்காது கருவிகளோடுங் கூடிற்றுயின், உடல் உண்டியும் வினையுமுடைத்தாம்; அதனை ஆய்ந்தறிவாயாகவென்க.

கண்டறிதல் - மீமிசை. காட்டு என்றது கருவிகளை. ஒடுங்கவும் என்னுஞ் சிறப்பும்மை தொக்கது. அது, †" அறிந்திடுமுதலியாகி னதுநிற்கக் கரணம் போகா " தென்னும் பொருளை விளைத்துநின்றது. ஏகாரங்கள் அசை. காணுதேகாட்டொடுங்க எனமாறுக. இன்றி - இல்லையாகவென்க. உயிர்த்தல் - பிராணவாயு

---

* திருக்குறள், ஊசூம் அதி. நிலையாமை, கூ.

† சிவஞானசித்தி, மூன்றுஞ்சூத்திரம், ச.

வியங்குதல். உண்டு என்பது உண்மைத்தன்மையையுணர்த்தும் வினைக்குறிப்புமுற்று. ஆய் - முன்னிலையேவல். உடம்பை ஊன் என்றது ஆகுபெயர். ஆன்மா வேறுண்டென்றதனை வலியுறுத்துவார், ஒடுங்காதுடனண்ணிஎழுஎன்றார்டிவினை யூன் என உடம் பாட்டுமுகத்தானுமோதினர்.

இவ்வதிகரணத்தானே சுழுத்தி துரியங்களினிகழு மியல்பு பற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

இதுகாறுஞ் சார்மாயை நீயல்லை என்றதனை வலியுறுத்திய வாறு.

ஐந்தாமதிகரணம் முடிந்தது

---

## ஆறுமதிகரணம்

மேலையதிகரணங்களாற் பிராணன்மவாதமீறுகிய மதங்களை மறுத்து, ஆன்மா வேறுண்டெனச் சாதித்தவழி, இவையெல் லாஞ் சடமாகலானும், பிறவாற்றானும் ஆன்மாவல்லவென்ற தொக்கும். பிரமஞ் சித்தாகலின், அதுவே ஆன்மாவென வமையும்; வேறுமென்றுகோடல் மிகையாமாலென்னும் பிரமான்மவாதிகளை மறுத்தற்கெழுந்தது ஆறுமதிகரணம்:—

இனி உணர்த்த உணர்தலின் ஆன்மாவுளதென்றது
எனவரும்.

தொழிற்படுங்கருவிகளொன்றுமின்றிக் கேவலமாய் அதீ தாவத்தையினின்றுழி அறியுமாறின்றிப், பின்னர்க் கலை முதலிய கருவிகளான் அறிவிக்க வறிதலுண்மையின், எக்காலத்துந் திரிபின்றி அறிந்தாங்கறிந்துநிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இதுதகாமையான், ஆன்மா வேறுண்டென்பதாம்.

உணர்த்தவுணர்தல் எனவே முன் உணராதுகிடத்தல் பெற்றும்.

அற்றேல், அத்தன்மைத்தாகிய பிரமம் அவிச்சைக்காலத் துக் கருவிகளோடுங் கூடியன்றி அறியாதெனக்கோடுமாகலின், அதுபற்றி ஆன்மாவேறுண்டென்றல் பொருந்தாதென்னு மாசங்கையை, "அவ்வளவினவன்மகிழுக" என்னும் நியாயம் பற்றி அதனையுடன்பட்டே வேறுமொரு தாற்பரியமுரைக்கு முகத்தான் நீக்குதற்கெழுந்த பொழிப்புரை:—

அவன் அறிந்தாங்கறிவனேன் றறிவிக்கவறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

எனவரும்.

கருவிகளோடுகூடியவழியும் நீ பிரமமெனப்பட்ட முதல்வன் தன்னியல்புணருமாறின்றி, "அம்முதல்வன் இதுபோல மறந்து மறந்தறியாது அறிந்தவாறே திரிபின்றியறிந்துநிற்கும் பேரறிவுடையன்" என வேதாகமங்களான் அறிவிக்கவறிந்து, குரவனறிவுறுத்து முபதேசமொழியைப் பெற்றுடையதாய் நிற்பதொன்றுளதாகலின், அதுவே மேல் உரையளவையாற்சாதித்த ஆன்மாவென்றவாறும். உணர்த்தவுணர்தலின் ஆன்மாவளது எனமேற்கொண்டதென்பதாம்.

அறிந்தாங்கு என்பது அப்பொருட்டாதல் *"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்—திண்ணிய ராகப் பெறின்" என்பதனானுமறிக. இதற்குப் பிறவாறு மூரைப்ப; அவையெல்லாம் ஈண்டைக்குப்பொருந்தாமை ஓர்ந்துணர்க.

அற்றேல், கருவிகளோடு கூடியவழியும் அவிச்சைநீங்காமையின், விடயங்கண் மாத்திரையே அறிவதன்றித் தன்னியல் பறியுமாறில்லை; அஃதுபதேசத்தான் அறியற்பாலதாமெனக் கோடுமெனின்,—அதனையும் மேற்கூறிய நயம்பற்றியுடம்பட்டு, இன்னுமொரு தாற்பரியமுரைக்குமுகத்தானே விடயங்களை யறிவுழியும் படும் வேறுபாடுகூறி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

(அவன் அறிந்தாங்கறியுமாறும், இது மறந்துமறந்தறியுமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதற்கெடுத்துக் காட்டியதெனினு மமையும்.)

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—யறிந்த
தெதுவறிவு மன்றுகு மெய்கண்டா ளென்றி
னதுவதுதா னென்னு மகம்

எனவரும்.

கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்திறன்று விடயங்களையறியுமிடத்து ஒருங்கேயறியமாட்டாது ஒன்றனையறிந்தும், ஒன்றனையறியப்புகுவதாயும், முன்னறிந்ததான்றனையறியாதொழிந்தும் இங்ஙனம் ஒரோவொன்றுகவறியப்பட்ட

* திருக்குறள், கூஎ-ம் அதி. விளக்கத்திட்பம், கூ.

விடயத்தையும் இடையீடின்றியறியமாட்டாது விட்டுவிட்டாங்கே ஐந்தவத்தைப்பட்டடங்கி மீளவறிந்துவருதல் கண்கூடாகக் காண்டுமன்றே. அங்ஙனம் அறிந்துவந்தபொருள்யாது? சடமன் றென்பது மேற்காட்டப்பட்டது; முன்னருங்காட்டப்படும்; ஒன்றுகவியல்பானுணர்ந்திடுவதே பேரறிவாகலின், அதுவு மன்றும்; மெய்யாகிய சித்தாந்த நெறியைக் கண்டோன் மற்றென்னையோவென உற்றுணர்ந்தானுயின், காட்டுமொளிக்கு வேறுய கண்ணெளிபோல, அவ்வறிவிற்குவேறுய், அதுவதுவே தானுகச் சார்ந்ததன்வண்ணமாய்நின் றறியுமியல்பினையுடைய உள்ளமாகிய வான்மாவாமென்க.

அறிந்தும் அறிவதேயாயும் என்னுமும்மைகள் எண்ணும்மை. அறியாதும் என்னுமெண்ணும்மை விகாரத்தாற்றொக்கது. அறிந் ததையும் என்னுமும்மை இழிவுசிறப்பு. அறிவும் என்னுமும்மை மேற்கூறிப் போந்த சடமுமன்றென இறந்ததுதழீஇயிற்று. அங்கு - உணர்த்துமுறைமைத்தானமாகிய இலாடத் தானத்தி னென்க. ஒன்றுதல் - மனத்தானெருங்கியாராய்தல். அகம் - உள்ளம்; ஆன்மாவென்றவாறு. அறிந்ததையும் விட்டங்கடங் கியறியுமாறு வருஞ்சூத்திரத்திறுதியதிகரணத்தும், அதுவது தானெனச் சார்ந்ததன்வண்ணமாமாறு உண்மையதிகாரத்தும் பெறப்படும்.

அறிந்து மறிவதே யாயு மறியா தறிந்ததையும் விட்டங்கடங்கி யறிந்ததெது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதே யுணர்ந் தும், பலகாலோதியுணர்வதாயும், பலகாலோதியுமுணராது அங்ஙனமுணர்ந்ததனையும் மறந்தும் இவ்வாறுதியுணர்ந்தது யாதென்றுரைத்தலுமொன்று. இப்பொருட்கு அடங்கி என் புழியும் எண்ணும்மை விரித்துரைக்க.

இங்ஙனம் மூவகைப்படுத்துரைக்கவே, உணர்ந்தவுணர்தல் என்னுமேதுவால் அதீதத்தினிகழ் மியல்புபற்றியும், சுத்தத்தி னிகழ் மியல்புபற்றியும், உணர்த்துமுறைமைக்கணிகழ் மியல்பு பற்றியும் ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

இவ்வதிகரணந் தற்பரமுமல்லை என்றதனை வலியுறுத்தவாறு. கணபங்கமாகிய ஞானமே ஆன்மாவென்னும் புத்தரில் யோகா சாரன்மதத்தைமறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக் கொண்டு, அதற்கியையவுரைப்பாருமுளர்.

ஆருமதிகரணம் முடிந்தது

---

## ஏழாமதிகரணம்

இங்ஙனம் ஆறதிகரணங்களானும் ஆன்மா வேறுண்டெனச் சாதித்தவழி, உடம்பு முதலியவற்றுள் ஒரோவொன்றை ஆன்மாவன்றென்ற தொக்கும்; அவற்றுளொன்று குறைந்தவழியும் அறிவுகிகழாமையானும், எல்லாங்கூடியவழி அதுகிகழ்தலானும் அணைத்துங்கூடிய சமுதாயமே ஆன்மாவாமென்னுஞ் சமூகான்மவாதிகளாகிய சவுத்திராந்திகர் வைபாடிகரை மறுத்தற் கெழுந்தது ஏழாமதிகரணம்.

ஒரோவொன்றினை ஆன்மாவன்றென மறுத்துப் பல பொருட்கூட்டமும் ஆன்மாவன்றென மறுத்தற்கெழுந்தமையின், மேலையதிகரணங்களோடு இயைபுடைத்தாயவாறு காண்க.

இனி மாயாவியந்திரதநுவினுள் ஆன்மாவுளதென்றது

எனவரும்.

மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற தநுவின்கண் அவற்றிற்குவேறாய் ஆன்மாவுளதென்பதாம். எனவே, அவையெல்லாம் மாயையின் காரியங்களாகலின், நிலைபேறுடைய வான்மாவல்ல வென்றவாறாயிற்று.

மாயை - ஆகுபெயர். இகரம் விரித்தல் விகாரம்.

அற்றேல் சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயமைந்தும் மாயையின் காரியங்களென்பது எம்மனோர்க்குடம்பாடன்மையின், அதுபற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதிக்குமாறென்னையென்று ஆசங்கித்தவழி, "அவ்வளவினவன் மகிழுக" என்னும் நியாயம்பற்றி வேறும் அதனை வலியுறுத்துதற் கெழுந்த ஏது:—

அவைதாம் வேவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்

எனவரும்.

நீ ஐந்துகந்தமெனக்கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெண்ணும் பெயர்பெறுமாறில்லையென்பார், அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான் என்றார்.

அற்றேல், அவை தனித்தனி வெவ்வேறு பெயர்பெறினுந் தொக்க சமுதாயத்தின் ஆன்மாவெனப் பெயர்பெறுமாகலின், அவையே ஆன்மா வென்றுற்படு மிழுக்கென்னையென்னும் ஆசங்கையை நீக்கி, அவை வெவ்வேறு பெயர்பெறும் வழியும் அவர் கூறுமாறு பெயர்பெறுது வேறுபெயர் பெறுமாறும், அவை

மாயையின் காரியங்களேயாமாறும், அவை தொக்கவழியும் ஆன்மாவெனப் பெயர்பெறுமாறின்றி வேறுபெயர் பெறுமாறு மூணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாங் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதருவாங்
தானத்தின் வேருகுந் தான்

எனவரும்.

அவைதாம் வெவ்வேறு பெயர்பெறுமாறிது வென்பார், கலையாதிமண்ணந்தம் என்றும், அவை ஒன்றன் காரியங்களேயாய்த் தோற்றக்கேடுகளுடையன வென்பார், காணிலவை மாயை நிலையாவாம் என்றும், அவைதொக்கவழிப் பெறும்பெயரும் வேறென்பார், அது தீபம்போலத் தருவாம் என்றும், தீபத்துக்குக் கண்வேருதல் கண்டாற்போல உயிர் அவ்வுடம்பிற்கு வேறென்றறியப்படுமென்பார், தானத்தின் வேருகும் என்றுங் கூறினர்.

தூலவுடம்பு, சூக்குமவுடம்பு, பரவுடம்பென்னும் மூன்று மடங்கத் தரு என்றார்.

ஆம் என்பதனை முன்னுங்கூட்டுக. மாயை - ஆகுபெயர். நான் என்பது முன்னியது ஆன்மா ; பின்னியது அசை. ஏகாரம் அசைநிலை. அதனினென்பது அத்தின் என மரீஇயிற்று ; *"இத்தை மெய்யெனக் கருதி" என்புழிப்போல.

இங்ஙனமாதல் மேலைச்சூத்திரத்திரண்டா மதிகரணத்தில் விரித்துரைத்தவாறுபற்றி யுணர்ந்துகொள்க.

இவ்வதிகரணத்தானே தனி என்றதனை வலியுறுத்தியவாறு.

எழாமதிகரணம் முடிந்தது

---

இங்ஙனம் மூன்று சூத்திரத்தானுஞ் சைவாகமங்களிற் கூறப்படும் பதிமுதலிய பொருள்களினுண்மை அநுமானத்தாற் சாதிக்கப்பட்டது.

அற்றேல், ஆகமவளவையானே அமையுமாகலின், அது மானப்பிரமாணத்தானுஞ் சாதித்தல் பிழையாம்பிறவெனின்,—

* திருவாசகம்; அதிசயப்பத்து, எ.

ஆகாது ; மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச் சமய நூல்களே நோக்கியவழி ஆகமப்பொருள்களின் மேலவுரிகழாமைப் பொருட்டும், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென் னும் நான்குவகையானன்றி, ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவநிகழ்தல்கூடாமையின், சிந்தனை செய்து வன்மை மென்மை யுணர்ந்துகோடற் பொருட்டும் வழியளவையும் வேண்டப்படுமாகலானென்க.

பிரமாணவோத்தின் மூன்றும்பாதமாகிய

மூன்றாஞ்சூத்திரம் முடிந்தது

பிரமாணவியல் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இலக்கண வியல்

## நான்காஞ் சூத்திரம்

இனி, ஆசிரியர் நான்காஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப் பொழிப்புரைப்பாராய்ச் சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார் :—

அந்தக் கரண மவற்றிலுென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என்பது சூத்திரமெனக்காட்டி, இனி, அதன்கருத்துரைக்கின்றார் :-

எ-து. சூ-ம். எ-னின். இதுவுமது

எனவரும்.

"பிரமாணம் இலக்கணம் இரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்று" என்னுமுறைமைபற்றி, மேற்பிரமாணத்தாற் பெறுவித்த பதிமுதலிய பொருள்களே எதிர்நிரனிறையாக வைத்து ஈண்டிலக்கணத்தாற் பெறுவிக்கின்றமையின், இவ் வோத்து இலக்கணவியலென்னும் பெயர்த்து.

இதனுள், இம்முதற்பாதமாகிய நான்காஞ்சூத்திரம், மேலைச் சூத்திரத்தின் ஆன்மாவுளது என்றுத்தேசமாயெடுத்துக்கொண்ட ஆன்மாவிலக்கணங்கூறுத னுதலிற்றெனக் கொள்க.

அற்றேல், ஆசிரியர் இதுவுமது என மாட்டெறிந்துரைத்தது இச்சூத்திரமும் மேலைச்சூத்திரமுதலிய பொருளே முதலிற்றெனவே பொருடருதலின், அதனையொழித்து மேலைச் சூத்திரம் பிரமாணமுணர்த்திற்றென்றும், இச்சூத்திரம் இலக்கணமுணர்த்திற்றென்றும் உரைத்தல் மாட்டேற்றுரையோடு முரணும்போலுமெனின்,—அறியாது கூறினாய். கருத்துரை கருத்துரையோடு மாட்டெறியப்படுவதன்றிச் சூத்திரப்பொரு

ளோடு மாட்டெறியப்படுவதன்றுகலின், இதுவுமது என்றது இச் சூத்திரமும் ஆன்மப்பிரகாச முணர்த்துதலுதலிற்று எனப்பொருள் படும். படவே, ஆண்டு ஆன்மப்பிரகாச முணர்த்துதலுதலிற்று என்றது ஆன்மாவினுண்மையுணர்த்திற்று எனவும், ஈண்டு ஆன்மப்பிரகாசம் என்றது ஆன்மாவினிலக்கண முணர்த்துத லுதலிற்றெனவுஞ் சூத்திரப்பொருட் கேற்பவைத்துரைத்துக் கொள்ளப்படுமென்க.

சொற்பல்காமைப் பொருட்டும், ஒத்துவேறுபடுவழியும் பாதவியைபுடைமை யுணர்த்துதற்பொருட்டும் ஈண்டு இதுவுமது என மாட்டெறிந்துரைக்குமாசிரியர் இங்ஙனம் உரைத்துக் கோடற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினுண்மையுணர்த்துத லுதலிற்றெனச் சிறந்தெடுத்தோதாது ஆன்மப்பிரகாச மெனப் பொதுப்படவோதியதூஉமென்க.

இனி, மேலைச்சூத்திரத்தின் ஆன்மாவினுண்மை கூறுமுகத் தாற் றொகுத்தோதிய அஞ்சவத்தை ஈண்டு இலக்கணங் கூறு முகத்தான் விரித்தோதப்படுதலின், இதுவுமது என்றது மேலைச் சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்த தென்றுரைப்பினும் இழுக் கின்மையறிக.

உத்தேசத்தின்பின் இலக்கணங்கூறுதல் முறைமைபற்றிய வியைபாகலின், அதனானே அதிகரணவியைபும், ஆன்மாவி னுண்மைக்குப் பிரமாணங் கூறியவழி, அற்றேல், அவ்வான்மா ஒரு தன்மைத்தாய்நில்லாது ஐம்புலனறிந்தும், ஒடுக்கமறிந்தும், உண்டியும் வினையுமின்றிக் கிடந்தும், உணர்த்த வுணர்ந்தும் இவ்வாறு வேறுவேறவத்தையுறுதல் பொருந்தா தென்னுமாசங் கையை ஈண்டு நீக்குதலின், அவ்வாசங்கைபற்றிய வியைபானே பாதவியைபும்,மேற்பிரமாணத்தாற்பெறப்பட்டபொருள்களுக்கு இலக்கணமென்னையென இலக்கணத்தை அவாய்நிற்றலின் அவ்வ வாய்நிலைபற்றிய வியைபானே ஒத்தியைபும் பெறப்படும். இன்னும் இதன்கணுரைக் கற்பாலனவெல்லாம் இரண்டாஞ் சூத்திரத்தினுரைத்தவாறு பற்றி உணர்ந்துகொள்க.

இதன் பிண்டப்பொழிப்பு:—ஆன்மா அந்தக்கரணங்க ளாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னும் நான்கனுள் ஒன்றன்றுயினும் நுண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணை வராகிய அமைச்சரோடுங் கூடிநின்று தன்றொழில் நடாத்தும் அரசன்போலச், சகசமலத்தினு லுணர்வின்றிக், கஞ்சுகம் போலுங் கலாதிகளாற் பொதுவகையானுணர்வு நிகழினுஞ் சிறப்புவகையானுணருமாறு அவற்றுற் பெறப்படாமையின், அங்ஙனமுணர்தற்குத் தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அந்தக்

கரணங்களோடுங் கூடிநின்று சாக்கிரமுதலிய ஐந்தவத்தை யுடைத்தாமென்றவாறு.

எனவே, அங்ஙனநின்று அவத்தைப்படுதல் ஆன்மாவுக் கிலக்கணமென்றவாறாயிற்று.

ஒன்றன்றாயினுஞ் சகசமலத்துணராது அமைச்சரசேய்ப்ப அவற்றொடு சந்தித்துநின்று அஞ்சவத்தைத்தாம் எனக்கூட்டுக.

சந்தித்தது - விஞையெச்சமுற்று.

இனி, இவ்வாறன்றி, அந்தக்கரணம் அவற்றினென்றன்றாயினுஞ் சகசமலத்துணராமையான் அவற்றோடு சந்தித்தது; சந்தித்தவழி, அவை யுந்தாமும் அமைச்சரசேய்ப்ப நிற்றலான் அஞ்சவத்தைத்தாயிற்று என்று அதிகரணம் பகுத்துக்கோடற் கேற்ப வேறுவேறு விஞை முடிபுசெய்துரைத்தலு மொன்று.

வடமொழிச் சூத்திரத்தோதுதலின், ஈண்டும் "ஆயினும்" என வருவித்து ஒருதொடராக்கி யுரைத்தலே ஆசிரியர் கருத் தென்க.

அந்தக்கரண மவற்றினென் றன்றாயினும் எனவே, அவற்றி னென்றன்றாதலும் அதுவாத முகத்தான் ஈண்டேபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கரண மவற்றினென்றன்று என்றதனை வேறு தொடராகவைத்துரைப்பர். அங்ஙனமுரைப்பின் வருமதி கரணங்களை அவாய்நின்று ஒருபொருண்மேல் வாராமையின், ஒரு சூத்திரமாதற் கேலாமையறிக.

அவை சந்தித்தது என்புழி ஒடுவெருபு விகாரத்தாற் றொக்கது இரண்டாவது விரிப்பினும் அமையும். ஆன்மா என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கற்பாலதாகவும் ஈண்டும் வேறோதியது ஒத்துவேறுத லுணர்ந்துகோடற்கும், ஆன்மா வென்னுஞ்சொல் வியாபகமெனவுஞ் சித்சித்தெனவும் இரு பொருளுடைத்தாத லுணர்ந்துகோடற்குமாகலின், அது மிகை யன்மை யுணர்க.

மலத்து - மலத்தாலென விரிக்க. அமைச்சரசு - அமைச்ச ரோடுகூடிய வரசென உருபும் பொருளுமுடன்றொக்கன. நின்று என்னும் விஞையெச்சம் அவத்தைந்து என்னும் விஞைக்குறிப்பு முற்றேகொண்டு முடிந்தது.

இவற்றுள், அந்தக்கரணமவற்றினென்றன்று என்றது ஓரதி கரணம்; ஒன்றன்றாயினுஞ் சகசமலத்துணரா தவை சந்தித்தது

என்றது ஒரதிகரணம்; அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே என்றது ஒரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

அவற்றுள், அந்தக்கரணன்மவாதிகளே மறுத்து ஆன்மா வேறுளதெனச் சாதித்தற்கெழுந்தது முதலதிகரணம்.

அற்றேல், இதனே ஈண்டுவைத்தற் கியைபென்னேயெனிற் கூறுதும்:—மேலேச்சூத்திரத் திறுதியதிகரணத்தின் அவை வெவ் வேறு பெயர்பெற்று நிற்றலான் ஆன்மாவல்லவெனச் சமூகான்ம வாதிகளே மறுத்து வேறுண்டெனச் சாதித்தவழி, ஏனைய வெல் லாம் ஆன்மாவெனப் பெயர்பெறுது வேறுவேறு பெயர் பெற்று வழங்கப்படுதலான் மாயாவியந்திரதநுவினு ளான்மாவுளது என்ற தொக்கும்; மனமுதலிய அந்தக்கரணங்கள் மனமுதலிய பெயர் மாத்திரையானன்றி ஆன்மாவென்னும் பெயராலும் ஆண் டாண்டு வழங்கப்படுதலுண்மையானும்; அங்ஙனம் வழங்குதல், *"புந்தியை மனம தென்று மனமது புந்தி யென்றுஞ்—சிந்தை யைச் சீவனென்றுஞ் சீவனேச் சிந்தையென்று-முந்தனே யான்மா வென்று மான்மாவை முந்தனென்றும்—வந்திடு" மாகலின், ஆகு பெயராலுமதனின், ஆகுபெயராதற்கோ ரியைபின்மையானும்; உண்டெனின், அதுபற்றி இந்திரிய முதலியவற்றையும் அங்ஙனம் வழங்கவேண்டும், அஃதின்மையானும்; அத்தன்மையவாகிய அந்தக்கரணங்களே ஆன்மாவென்றுற்படு மிழுக்கென்னேயென்று ஆசங்கை நிகழுமன்றே: அதனை நீக்குதற்கெழுந்தது முதலதி கரணமென்றுணர்க.

அற்றேல், இதனைப் பிரமாணவோத்துள்வையாது ஈண்டு வைத்தல் மரபன்றுலெனின்,—அஃதொக்கும்; ஆண்டுவைப் பினும், அவற்றி னொன்றன்றுயினு மமைச்சரசேய்ப்ப வவற்றொடு சந் தித்துநின் றஞ்சவத்தைப்படும் என்று ஈண்டு இலக்கணங் கூறும் வழியும் எடுத்தோதல் வேண்டுதலின், ஈரிடத்து மெடுத்தோதல், †"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு—சில்வகை யெழுத்தின் செய்யுட்டாகிச்-சொல்லுங் காலையுரையகத் தடக்கி நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னு மிலக் கணத்தானுகிய சூத்திரத்திற்கேலா தென்னுங் கருத்தான் அது வாதமுகத்தான் ஈண்டே விளங்கவைத்தோதினராகலின், விதி முகத்தானேதாமையான் அமைவுடைத்தென்க.

---

* சிவஞானசித்தி, ஈான்காஞ்சூத்திரம், உஅ.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. கoo.

ஈண்டு அந்தக்கரணங்கள் சமுதாயத்தி னுன்மாவோ? தனித்தனி யான்மாவோ? என விகற்பித்துச், சமுதாயத்தி னுன்மாவென்பது நாடி லதுதநுவாம் என்றதனுன் மேல்மறுக் கப்பட்டமையின், அதனையொழித்துத் தனித்தனி யான்மா வென்றதனை ஈண்டு மறுக்கின்றூர் :—

---

## முதலதிகரணம்

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனே புத்தி யகங்கார சித்தங்களிலொன்றன் றென்றது

எனவரும்.

ஈண்டு அந்தக்கரணம் என்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளிற் செல்லாமைப்பொருட்டு மனேபுத்தி யகங்காரசித்தங் களில் என விதந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக் கொண்டோரின் ஆன்மா வேறுண்டெனக் கொள்ளாதாரின் மையின், ஆண்டாசங்கை நிகழாமையின், மனமுதலிய புறவந்தக் கரணங்களை ஈண்டு மறுக்கநின்றனவென்பது.

இனி, அமைச்சரோடுவமிக்கப்பட்டு, அவத்தைக் கேதுவா வனவும் மனமாதியேயன்றிக், கஞ்சுகத்தோடு உவமிக்கப்படுங் கலாதிகளன்மையின், அவற்றை ஈண்டைக் கெடுத்தோதல் வேண்டாமையறிக.

இஃதறியாதார் கலாதிகளோடு முடன்கூறுதவழிக் குன்றக் கூறலாய் முடியுமென் றுசங்கித்து, ஈண்டு அந்தக்கரணமென்ற தனுற் புறவந்தக்கரணமாகிய மனமாதியும், அகவந்தக்கரண மாகிய கலாதியுங் கொள்ளப்படுமென் றுரைப்ப.

அஃதங்ஙனமாக ; ஆன்மா அந்தக்கரணங்களின் ஒன்றன் றென்றதென்னை? * "மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு —மருவியான் மாவே யென்ன வரும்" என நீவிருங்கோடலின், அவைதாமே சித்தாகிய வான்மாவென்னுமோ வெனின், அவ் வாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்

எனவரும்.

ஐம்பொறிகளறிந்தவிடயத்தைச் சித்தஞ் சிந்தித்தறியும், யான் சிந்தித்தேனென் றறியமாட்டாது; மனம் அதனைச் சங்கற்ப விகற்பஞ்செய்தறியும், யான் சங்கற்பவிகற்பஞ்செய்தேனென்று

---

* சிவஞானசித்தி, சு-ம் சூத்திரம், க.

அறியமாட்டாது; ஆங்காரம் ஒருப்பட்டெழுந்தறியும், யானொருப் பட்டெழுந்தே னென்றறியமாட்டாது; புத்தி நிச்சயித்தறியும், நிச்சயித்தறிந்தேன் யானென் றறியமாட்டாதாகலின்; அவ்வா றன்றி அவற்றோடுகூடி, யான்சிந்தித்தேன், பற்றினேன், எழுந் திருந்தேன், நிச்சயித்தேன் என்றும்; அதன்பின் அதுவது வாய்ப் பரிணமித்துச் சுக துக்க மோகரூபமாய்நின்ற புத்திதத்து வத்தின் பரிணமங்களைக் கலாதிகளோடுகூடி, இது சுகம், இது துக்கம், இது மோகம் என்றறிந்தும்; யான் சுகித்தேன், யான் துக்கித்தேன், யான் மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றைநோக்கியுந் தன்னைநோக்கியுஞ் சித்தாகியவான்மா, தம்மைநோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களி னொன்றுமாறு யாண்டைய தென்பார், அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாச மாய்நிற்றலான் ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனேபுத்தியாகங்காரசித்தங்களி லொன்றன்று என மேற்கொண்ட தென்றார்.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்து என்னும் பொருளவாம். *"இவன்றானும் புத்தியுஞ்சித் திவ ளோமோ புத்தி" என்றதூஉம் இவ்வியல்புநோக்கியென்க. எனவே, அமைச்சர் அரசனுக்குச் சேவகராயினும் அணுக்கராதற் சிறப்புப் பற்றி ஏனையோரைநோக்கி அரசரென் றுபசரித்துக் கூறப்படு மாறுபோலப் புறக்கருவிகளைநோக்கி ஆன்மாவுக்கணுக்கமாய் நிற்றற் சிறப்புப்பற்றி "மனமும் புத்தியகங்காரஞ் சித்த நான்கு-மருவியான் மாவே யென்ன" உபசரித்துக்கூறப்படுமாகலின், அதுபற்றி மலையற்கவென்பது கருத்து.

சூழ்ச்சித்துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரை யொக்கு மெனவே, ஏனைப் புறக்கருவிகள் ஏனைப் பரிசனங்களை யொக்குமென்பது பெற்றும்; அஃதாமாறு முன்னர் வகுத்துக் காட்டுதும்.

எனதுட லென்றல்போல எனதுசித்தம், எனதுமனம், எனதகங்காரம், எனதுபுத்தியென்றலும், ஒன்றறிந்த தொன்றறி யாதாதலும்; நனவின்கட்கனவுகண்டாமென்றுங் கண்டிலமென் றும் மயங்கிநிற்றலுமாகிய ஏதுக்களினென்றே ஈண்டைக்கமையு மாயினுஞ் சிறந்தமைபற்றி வேறேதுக்கூறினார்.

அந்தக்கரணங்கள் தம்மிற்கீழுள்ளவற்றைநோக்கிச் சித்தா மாறும், தம்மின்மேலுள்ளவற்றைநோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

* சிவஞானசித்தி, கக-ம் சூத்திரம், கக.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தோன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையை யொத்து

எனவரும்.

மனமாதியால் மன்னு புலன்க ளுணர்தல் மனமே லுதித்தோன்றை உள்ளமுணர்தல் கடற்றிரையை யொத்து உதிக்கும் அதனின் மனமாதி மன்புலனில்லன் எனக் கூட்டுக.

உதிக்கும் என்னும் பயனிலைக்கு உணர்தல் இரண்டுமெழுவாய்.

மனமாதி மன்புலனி னல்லன்என்பது மனமுதலியன அப் புலன்களல்லவாயினுற்போல ஆன்மாவும் மனமாதியல்லன் அவற் றின் வேறென்பதாம். மனமே லுதித்தோன்றை என்பது மனத்துக்கு மேலெனப்படும் புத்தி தத்துவத்திற் றோன்றிய தொன்றனை யென்பதாம்.

புலனின் இன் - உவமவுருபு. அல்லன் என ஆடுஉவறி சொல் லாற் கூறியது வடமொழிமதம்பற்றி. உதித்த என்னும் பெய ரெச்சவீறு திரிந்து கின்றது; *"புகழ்புரிந் தில்லிலோர்க்கு" என்புழிப்போல. புத்தியிற்றோன்றியதொன்றுவது †மேற் கூறினும். உள்ளம் - ஆன்மா. அதனின் - அதனால்; ஆகலானென் னும் பொருட்டு.

கடற்றிரையையொத் துதித்தலாவது கடலிடையெழுந்து கரைசாருந்திரைபோல அவ்விருவேருணர்வும் பரம்பரையின் ஆன்மாவின்மாட்டு வந்து தோன்றுதலென்க. பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற்காட்சி யுணர்வுதோன்றி, அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி, அதன்பின்னர்த் தன்வேதனைக்காட்சியுணர்வு ஆன்மாவின்கண் வந்து தோன் றுதல்.

இதனை அந்தக்கரணங்கள் கீழுள்ளவற்றைநோக்கிச் சித்தாய்நிற்குமாறும், மேலுள்ளவற்றைநோக்கி அசித்தாமாறும், ஆன்மா அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

இங்ஙனம் பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களி னியல்பு சிறப்புவகையாற் கூறுமுகத்தான் மானதக்காட்சி யுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையான் வேறுவேறுகி

* திருக்குறள், சூ-ம் அதி. வாழ்க்கைத்துணைநலம், கூ.
† பக்கம், களகூ.

உணர்வுநிகழுமாறுணர்த்தி ஆன்மா வேறுதலே வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேரு
மவ்வேரும் போதுபோ லாங்கு

எனவரும்.

ஆன்மாவுக்கு வாயிற்காட்சியாற் கண்ட விடயங்களிலெனென்றீன மனமாதியாலுணரும் மானதக்காட்சியின் கண்ணும் ஒரு படித்தன்றி வெவ்வேறாய் உணர்வுநிகழுமென்பார், அங்குச் சித்தமாய்ச் சிந்தித்தும் மனமாகிப் பந்தித்தும் ஆங்காரமாய்த் தெளியாதும் புந்தியா யாய்ந்தும் வெவ்வேறு தானே துணிந்து என்றும், இங்ஙனந் துணிதலான் ஆன்மா இவ்வந்தக் கரணங்களின் வேறுதல் உவமையின்வைத் துணர்த்துவார், அவ்வேரும் போது போல் உள்ளம் இவ்வேரும் என்றுங் கூறினர்.

போது அவ்வேருதலாவது ஞாயிறுமுதலியவற்றோடு கூடி நின்று நாழிகை, நாள், பக்கம், திங்கள் முதலியனவாய்ப் படும் பாகுபாடுசெய்யுங் காலதத்துவம் ஞாயிறுமுதலியவற்றின் ஒன்றன்றுதலென்க. காலதத்துவம் அங்ஙனமாமாறு அதனியல்புரைப்புழி உரைத்தாம்; * ஆண்டுக்காண்க.

ஆய்தல் - ஈண்டு நிச்சயித்தற்பொருட்டு. துணிதல் - அறிதற் பொருட்டு. வேறுவேறென்பது வெவ்வேறு என மரீஇயிற்று. இவ் அவ் என்பன வகரவீற்றஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர், சாரியையும் உருபுந் தொக்கன.

ஆங்கும் - மானதக்காட்சியின்கண்ணு மென்க; எனவே, மானதக்காட்சியும் இங்ஙனம் நால்வேறுவகைத்தாய், ஒன்றற் கொன்று ஏதுவும் பயனுமாய்க், கடற்றிரைபோலப் பரம்பரையிற் றோன்றுமென்றவாறாயிற்று.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

செய்யுளாகலின், முறைபிறழவைத்தார். இவை இங்ஙனந் தொழிற்படுதல் ஆன்மாப் பஞ்சகஞ்சுகமும் பஞ்சக்கிலேசமு மூடைத்தாய்நின்று அதிட்டித்தமாத்திரையே நிகழுமாயினும் அவற்றுற்றோன்றும் மானதக்காட்சியாவது பெயர் சாதிமுதலி

* பக்கம், கஎ0.

யனபற்றிநிகழுஞ்சவிகற்பவுணர்வாகலின், அவ்வுணர்வு நிகழுதற்குக் காரணம் எழுத்தோசையாகிய நால்வகை வாக்குக்களென்பது *மேற்காட்டினமையின், ஆண்டு அச்சவிகற்பவுணர்வு நிகழுதற்பொருட்டு அவையும் அவற்றை உடனின்றுசெலுத்துவனவாமாகலின், அவற்றுள், இஃதிக்கருவியைச் செலுத்துமென விதந்தெடுத்தோதி, அவற்றுன் உணர்வு மாறிமாறித் தோன்றுமாறுணர்த்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று

எனவரும்.

†"மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை—யுன்னு முகார முபகரிக்கு—முன்னுகு—மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு—நீங்காத சித்தம்விந்து நேர்" என்பவாகலானும் ஈண்டோதியதே முறையெனவும், ‡"அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்" என்புழி எதிர்நிறனிரைப்பொருள் கோளெனவுங் கொள்க. "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்" என்றதே முறையெனவும், அகார வுகார மகங்காரம் புத்தி—மகார மனம் என்றதும் இதற்கேற்பக்கொண்டு கூட்டியுரைக்கப்படுமெனவும் உரைப்பாருமுளர்.

பகாதிவற்றை நாடிற் பிரணவமாம் எனவும், போன்றும் எனவுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்துமக்கரங்கள் கூறுவார், ஒப்புமைபற்றிப் புருடனைச் செலுத்துமக்கரமும் உடன்கூறினர்.

§"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றி யைந்தாய்த்திகழு" மாறும் $மேலுரைத்தாமாகலின், அவை அந்தக்கரணங்களையும் புருடனையும் உடனின்றுசெலுத்துங்கால் முறையே வைகரிமுதலிய வாக்கைந்தும் அகார முதலிய பஞ்சகலை வடிவினவாய்நின்று ஒரோவொன்று ஒரோவொரு கருவிகளைச் செலுத்தி உடனிற்குமெனவும்; அவ்வகார முதலிய வைந்தினையுங் கூட்டியுச்சரிக்குமாறு நாடுங்காற் பிரணவரூபமா

* பக்கம். கடுடு. † துகளறுபோதம், கக.
‡ சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், கூ.
§ சிவஞானசித்தி, மூதற்சூத்திரம், உச. $ பக்கம், கடுடு.

மெனவும்; இங்ஙனமாகலின், சூக்குமபஞ்சாக்கரமைந்தும் ஒன்றற்கொன்று முறையே காரணமாய் நாதகலே மூலகாரணமா மெனவும்; இங்ஙனம் பிரணவரூபமாகியவாக்குக்களினின்றும் வன்னம், பதம், மந்திரமெல்லாந் தோன்றுதலிற் சத்தப்பிரபஞ்ச மனைத்திற்கும் மூலகாரணம்பிரணவமாமெனவும்; சூக்கும பஞ்சாக்கரமே தூலபஞ்சாக்கர ரூபமாகநிற்பனவாகலின், அவையும் அவ்வியல்பினவாமெனவும்; இங்ஙனங் கருவிகளைச் செலுத்துஞ் சூக்குமபஞ்சாக்கரம் அசபையாய்ப் பரிணமித்துப் பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்றுணர்த்து மெனவும்; அதனனே கணந்தோறும்நினைப்பும் மறப்புமாகிய சகலகேவலங்கள் மாறிமாறி நிகழுமெனவும்; அங்ஙனம் மகாசகலத்தின்கட் கணந்தோறும் மாறிமாறிநிகழுஞ் சகலகேவலங்களாய் உணர்வு உதித்துமொடுங்கியும் வருமாறு சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரை தோன்றியு மொடுங்கியும் வருமாறுபோலுமெனவும்; எனவே, உதிக்குங்கடற்றிரையை பொத்து என்றது வாயிற் காட்சிமுதலியன பரம்பரையிற்றோன்றுமாற்றிற்கும், போதங் கடற்றிரையே போன்று என்றது புதிது புதிதாய் உணர்வு மாறி மாறித் தோன்றுமாற்றிற்கும் உவமையாகவைத்துக் கூறுதலின், அது கூறியதுகூறலன்றெனவும்; சூக்குமபஞ்சாக்கரத்தின் பரிணமமாகிய அசபை அதிதெய்வங்களைப்பற்றி ஒரோவொன்று மும்மூன்றாய் மீளமீள மாறி ஒரோவொன்றாய்ப்பரிணமித்து, இடையிடையே அறுவகைச் சூனியங்களுடைய பன்னிருகலைப் பிராசாதமாமெனவும்; இங்ஙனமாகலின், சூக்குமபஞ்சாக்கரம், தூலபஞ்சாக்கரம், அசபை, பிராசாதமென்பன தம்மின் வேறல்ல வெனவும் உணர்ந்துகொள்க. இவற்றின் விரிவெல்லாஞ் சிவாகமங்களுட் காண்க; ஈண்டுரைப்பிற் பெருகும்.

இனிக், காரணத்திற் பொதுவகையானிகழாதது காரியத்திற் சிறப்புவகையா னிகழுமாறில்லையாகலாற் சவிகற்பவுணர்விற்குக்காரணமாகிய நிருவிகற்பவுணர்வினும் பெயர் சாதி முதலியனபற்றி நிகழும் பேதவுணர்வு விசேடணவிசேடியப் பகுப்பின்றிப் பொதுமையானிகழுமென்பது பெற்றுமாகலின், அவ்வுணர்விற்குக் கருவியாகிய வாயில்கள் அவற்றிற்கிடமாய ஊக்கத்தை விளைவித்துநிற்குஞ் சூக்குமபூதந் தூலபூதங்க ளென்னு மிவற்றையுஞ் சூக்குமபஞ்சாக்கரங்கள் முறையே ஒரோவொன்றாய்ச் செலுத்தி நிற்குமெனக் கொள்க.

இங்ஙனமாகலின், அநந்ததேவர் முதலியோர் கட்டுநீங்கி முழுவது முணர்ந்தாராகவுஞ் சவிகற்பவுணர்விற்கு மூலகாரண மாகிய நாதகலையொன்றனை உணராமையிற் பரமுத்திக்குத் தடையாகிய அதிகாரமல வாசனையுடையராயினராகலின்,

இதுவே அவற்றினும் மேலாகியபந்தமெனவும், இதனினீங்கு தலே பரமுத்தியெனவு முணர்க. இது, * " ஒவிடா விந்துஞான முதிப்பதோர் ஞான முண்டேற்—சேவுயர் கொடியி னன்றன் சேவடி சேரலாமே" என்பதனானு மறிக.

இனி, இவ்வைக்கரங்களுஞ் சடமாகலின், இவற்றை யதிட்டிக்கும் அதிதெய்வங்களுளவென்பதுணர்த்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரம னதிதெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்

எனவரும்.

அகரவுக ரம்மகரத் தாம் என்புழி மகரம் இசைப்பொருட்டு ஒற்றில்வழி யொற்றுய் வந்தது ; † " மைதீரொற்—றின்றியுஞ் செய்யுட் கெடினெற்றை யுண்டாக்கு " என்பதோத்தாகலின்.

ஈண்டு அயன் மால் பரமன் என்றது சுத்தவித்தையின் வைகுவோருளரென மேற்காட்டிய பிரமன்முதலியோரை. பரமன் - உருத்திரன்.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

மேலையதிகரணத்தில் சற்பிரகாசமும் பரப்பிரகாசமுந் தானேயாகிய ஆன்மாப் பரப்பிரகாசமாத்திரையாய் நின்ற அந்தக்கரணங்களின் வேறுயுண்டென்று அதுவாதமுகத்தாற் சாதித்தவழி, அற்றேல், அத்தன்மைத்தாயுண்டெனப்பட்ட ஆன்மா இத்தன்மையவாகிய கருவிகளைப்பற்றி நின்றன்றி அறியாமைக் கேதுவென்னையென்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனி, இவ்வாறன்றி மேலையதிகரணத்தால் அங்ஙனஞ் சாதித்தவழி, ஆன்மா அத்தன்மைத்தாயிற் சாக்கிரத்தின் ஐம்புலனறிந்தும், சொப்பனத்தின் ஒடுக்கமறிந்தும், கழுத்தி துரியங்களின் உண்டியும் வினையுமின்றிக் கிடந்தும், அதிதத்தி

---

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம், உசு.

† இதனை, எஅ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க.

னின்றுமீக்கி உணர்த்த உணர்ந்தும், உணர்த்துமுறைமைக்கண் உணர்த்த உணர்ந்தும், சுத்தத்தின் உணர்த்த உணர்ந்தும் இங்ஙனம் வேறுவேறவத்தையுறுதற்குக் காரணமென்னெனின மேலைச்சூத்திரப் பொருள்பற்றி ஆசங்கை நிகழ்ந்துழி, அதனை நீக்குதற்கெழுந்தது இரண்டாமதிகரணமென்றலு மொன்று.

இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின்றென்றது

எனவரும்.

இவ்வான்மா - அந்தக்கரண முதலியன போலன்றித் தற்பிர காசமும் பரப்பிரகாசமுந் தானேயாய் நிற்குமென்னு மித்தன் மைத்தாகிய ஆன்மா.

ஆகந்துகமலமாகிய மாயை கன்மங்களி னீக்குதற்குச் சகசமலம் என விசேடித்தார். எனவே, மூலமலஞ் செம்பிற் களிம்புபோல வேறுகாரணமின்றித் தன்னோடு உடனிற்றலின், ஆன்மாத் தானேயுணருமாறின்றிக் கருவிகளைப் பற்றிநின்று உணர்வதாயிற்று ; வெவ்வேறவத்தை உறுவதூஉமாயிற்றென விடுத்தவாறு காண்க.

இங்ஙனம் ஆசங்கையை விடுக்குமுகத்தானே மலத்துளதாம் என மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்தை ஆன்மாவோடு சகசமாய் நின்று அறியாமையை விளைத்துக் கருவிகளோடு கூடி ஐந்தவத்தையுறுதற் கேதுவாயது மலமென வண்டு இலக்கணத்தாற் பெறுவித்தாரென் றுணர்க.

இதனுள், அறியாமையை விளைத்துநிற்பதெனக் கேவலத் தினின்ற நிலைபற்றிக் கூறுமிலக்கணமே மலத்திற்குத் தன் னியல்பு ; கருவிகளோடு கூடி அவத்தையுறுவதாகிய விபரீத வுணர்வைச் செய்வதெனச் சகலத்தினின்ற நிலைபற்றிக் கூறு மிலக்கணமே பொதுவியல்பாகலின், மலத்திற்கு இருவகை யிலக்கணமும் வண்டே கூறப்பட்டன.

அற்றேல், சகசமலத்தினுன் முன்பில்லதாகிய உணர்வு பின் கருவிகளோடுகூடியபழித், தோன்றுமென்றல் இல்லது தோன்றுதென்னுஞ் சற்காரியவாதத்தோடு முரணுமாலென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளை வலியுறுத்துதற் கெழுந்த ஏது :—

அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்

எனவரும்.

மலத்திலக்கணம் வடமொழிவழக்குப்பற்றி யோதுவார், ஞானதிரோதாயி எனவும், அதனைத் தமிழ்மொழியினுரைத்துக் காட்டுவார், மறைத்துநின்றொடுநிற்றலான் எனவுங் கூறினராகலின், கூறியதுகூறலன்மையுணர்க.

திரோதாநம் என்பது மறைத்தலைச் செய்வதென்னும் பொருட்டாய் விஜேமுதன்மேனின்ற விஜேப்பெயர்.

இதனுனே ஞானபாவமே அஞ்ஞானமென்பார் முதலியோர் மதங்கள் மறுக்கப்பட்டன.

சிவாதித்தமணிதீபிகையுடையாரும் முதலதிகரணத்திறுதியிற் பயன் கூறும்வழி, ஞானபாவமே அஞ்ஞானமென்பாரை மறுத்து, மலந் திரவியமென்றும், அநாதிப்பொருளென்றும், மலசத்திகள் பலவென்றும், முத்தியின் மலசத்திக்குக்கேடன்றி மலத்துக்குக் கேடின்மையின், அநாதியாதற்கிழுக்கில்லை யென்றுங், கடாவிடைகளான் விரித்துக்கூறியவாறுணர்ந்து காண்க.

அற்றேல், மாயாதநுவே அத்தன்மைத்தாகிய மலமாதமையும்; வேறுமோர் மலமுண்டென்றல் மிகையாமென்னும் ஐக்கியவாத சைவரைமறுத்து, மாயைசெய்யுங் காரியத்திற்கும், மலஞ்செய்யுங் காரியத்திற்குந் தம்முள் வேற்றுமை பெரிதாமாறுணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

மாயா தநுவிளக்கா மற்றுள்ளங் காணுதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்போற்
றன்னைமல மன்றனைத ருன்

எனவரும்.

காட்டாகினின்று விடயங்களை யறியுமாறு ஆன்மஞானத்தை விளக்குதல் மாயையின்செய்தி: அவ்வறிவைத் தடுத்துநிற்றல் மலத்தின்செய்தி. இவையிரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும் போல இகலிநிற்றலின், அத்தன்மைத்தாகிய மாயை இத்தன்மைத்தாகிய மலமாமாறு யாண்டையதென்பார், மாயா தநு விளக்கா மற்றுள்ளங் காணுதே—லாயாதா மொன்றை எனவும், தன்னைமல மன்றனைதல் அதுவதுவாய் வீயாத வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்போல் எனவும் வகுத்தோதினர்.

அதுவதுவாய் ஆயாதாம் என மேலேகூட்டியுரைப்பாரு முளர். அதனுன் ஈண்டைக்காவதோர் பயன்றராமை யுணர்க.

மற்று - விஜ்ஞானமாற்றின்கண் வந்தது. ஒன்றையும் என்னும் முற்றும்மையும், ஆயும் என்னுஞ் சிறப்பும்மையும் விகாரத்தாற் றொக்கன. ஆறுந் நானும் அசை.

வன்னியதுவெனுனாதல் - காட்டத்துண் மறைந்துழிக் காட்டமேயாயும், சூரியகாந்தத்துண்மறைந்துழிச் சூரியகாந்தமேயாயும் இங்ஙனம் மறைந்து நிற்புழித் தானென்பதொன் றில்லையென்னும்படி அதுவதுவேயாய் நிற்றல்.

அங்ஙனமாகியும் வீயாமை கடைதன்முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெற்றும். தன்னுண்மறைத்தல்—வன்னியென்பதொன் றில்லையென்னும்படி பொதிந்துகொண்டு தானேயாதல்.

ஒன்றுங்காட்டும் - ஒன்றேபோலுமத்துவிதமாங்காட்டம்.

இங்ஙனம் உவமைக்கோதிய அடையுந் தொழிலுஞ் சம்பந்தமும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயைகன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார், அன்றுணைதல் என்றார்; அணைதல்—அறிவு முழுதினையும் மறைத்தல்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது பிராந்திஞானமே பிறிதில்லையென்பர் ஒருசாரார்; ஒருசாரார் ஞானபாவமென்பர்; ஒருசாரார் தமோகுணமென்பர்; ஒருசாரார் மூலப்பகுதியிற் றோன்றும் அவிச்சையென்பர்; ஒருசாரார் மாயை கன்மங்களென்பர்; ஒருசாரார் சிவசத்தியென்பர்; ஒருசாரார் ஆன்மாவின் குணமென்பர்.

மலமாவது இவையனைத்தினும்வேறாய், ஒன்றாய், நித்தமாய், வியாபகமாய், ஞானதிரோதகமாகிய திரவியமென்பது தொகுத்துக் காட்டுதும் :—இலதென்றன்முதலிய ஏதுக்களாற் சூனியமுதலியவற்றின் வேறாய் ஆன்மாவுண்டென்பது பெற்றும்; பெறவே, யான் குடத்தையறிந்தே னென்னும் அநுபவம் அவ்வான்மாவின்கண்ணே நிகழ்தல் காட்சியளவையானே அறியப்படுதலின், அஃதறிதற்குணமுடைத்தென்பது பெறப்பட்டது; படவே, ஆன்மாத் தோற்றக்கேடின்றி நித்தமாய் வியாபகமாய் நிற்றலின், அதன்குணமாகிய அறிவுந்தோற்றக்கேடின்றி, நித்தமாய், வியாபகமாய் நிற்குமென்பது போந்தது, அறிவாவது ஒன்றனைவிடயிப்பதே பிறிதன்றாகலின்; அங்ஙனம் விடயிப்பதாகிய அவ்வறிவு ஒருகால் நிகழ்ந்தும், ஒருகால் நிகழாதுங் காலத்தானும், இடத்தானும் ஏகதேசமாய்

நிகழ்தலுங்காண்டும். அவ்வறிவு செயற்கையான் இங்ஙனம் நிகழ்தற்குக் காரணமுண்டென்பது பெறப்படுதலின், அது பிராந்திஞானமுதலியவற்று ளொன்றென்றல் கூடாமையின், பாரிசேடத்தான் அவற்றின்வேறுகிய சகசமலம் அத்தன் மைத்தா யுண்டென்பது பெற்றுமென்க.

அற்றேல், இலதென்றன் முதலிய ஏதுக்களாற் சூனியமுத லியவை ஆன்மாவல்லவென மேற்சாதித்தமையின், ஆன்மா வேறுண்டென்றதொக்கும். யான் குடத்தையறிந்தே னென் னும் அநுபவம் அவ்வான்மாவின்கண் நிகழுமென்றதென்னோ? ஆன்மாவின் சன்னிதியிற் புத்திதத்துவத்தின்கண் நிகழ்வதே யாமெனச் சாங்கியர் கூறுபவாலோவெனின்,—அற்றன்று; புத்திதத்துவஞ் சடமாகலின், ஆன்மபோதத்தைத் தீபம்போல நின்று விளக்குதன்மாத்திரையேயன்றி அஃதறியுமாறுயாண் டையதென்க.

புத்திதத்துவஞ் சடமாயினும் ஆன்மா எதிர்விம்பமாய் அதன்கட்பற்றுதலான் அஃதறியுமெனின்,—நன்று சொன்னாய்! கண்ணுடியி னெதிர்விம்பமாய்ப்பற்றிய கண்ணே விடயத்தைக் காண்பதன்றிக், கண்ணுடி காணுமென்பதில்லை; அதுபோலப் புத்திதத்துவத்தின், எதிர்விம்பமாகப்பற்றிய ஆன்மாவே யான் குடத்தையறிந்தேனெனத் தற்பிரகாசமும், பரப்பிரகாசமுமாய் நின் றறிவதன்றிப், புத்திதத்துவம் அங்ஙனம் அறியுமாறில்லை யென் றுழிக.

அன்றியும், பூவினுற்றம் மற்றொன்றிற்பற்றியவழிப் பூவின் கண் நாற்றமின்றுயினுற்போலச் சேதனத்தின் குணஞ் சடத் திற்பற்றியவழிச் சேதனப்பொருள் சேதனமன்றுய் மூடியுமாக லானும், சடத்துக்கன்றிச் சேதனப்பொருட்குச் சங்கிரமித்தல் கூடாமையானும், அத்தியாசவாதம் எல்லாச்சமயத்தாரானும் இழிக்கப்பட்டதாகலானும் இதுபொருந்தாமை யறிக.

அற்றேல், அஃதாக; அறிவாவது ஒன்றினைவிடயிப்பதே யாமென வரைந்தோதியதென்னோ? விடயித்தலன்றியும் ஆல விஞ்ஞானமுண்டெனப் புத்தர் கூறுபவாலோவெனின்,—அவ் வாலயவிஞ்ஞானம் எவ்வியல்பிற்றெனக் கடாயினர்க்கு விடை யின்மையின், அஃதுண்டென்றல் ஆகாயத்தாமரை யுண்டென் பதோ டொக்குமென் றுழிக.

அற்றேல், இங்ஙனங் கூறியவாற்றால் அறிதற்குணமுடைத் தான்மா வென்றதொக்கும்; அவ்வறிவு தோற்றக்கேடின்றி நித்தமாய் வியாபகமாயுள்ள தென்றற்குப் பிரமாணமென்னை

யெனிற் கூறுதும் :—ஆன்மாவுக்குத் தோற்றக்கேடுக ளுள வாயின், செய்தவினை நுகர்ப்பச் செய்யாதவினை யுண்டாமெனப் பட்டு, மேற்கூறிய வினையிலக்கணங்களோடு முரணுமாகலானும், ஈன்றணியகுழவி தாய்முலைப்பால் பகிர்ப்பிணிதீர்க்கு மருந்தென் றறிந்து அதன்கண் முயலுதல் காண்டும் ; அஃதும்மைப் பயிற்சி வயத்தா னுளதாகிய வாசனையில்வழிக் கூடாதாகலானும் ஆன்மா நித்தமென்பதூஉம் ; எனவே, நித்தப்பொருள் அவயவ முடைத்தெனப்பட்டு அழிவெய்துவதாகிய ஏகதேசமென்றல் கூடாமையின், வியாபகமென்பதூஉம் பெற்றும் ; பெறவே, அவ்வக்குணங்கள் அவ்வக்குணிகளின் வேறன்மையான், ஆன் மாவின்குணமாகிய ஞானமும் அவ்வாறே நித்தவியாபகமாதல் பெறப்பட்டது.

இனி, ஆருகதர் இவ்வாறு கொள்ளாது உடம்பின்க ணன்றி ஏனையிடத்து அறிவுநிகழாமையின், ஆன்மா உடம்பள வின் வியாபகமாய்நிற்குமென்றும் ; அஃதெறும்புடலிற்புகுதுங் கால் அவ்வளவிற் சிறுத்தும், யானையுடலிற் புகுதுங்கால் அவ் வளவிற் பெருத்தும் இங்ஙனம் அவ்வுடம்பளவிற் *செழுகம் போலச் சுருங்கியும் விரிந்தும் வருமியல்பிற்றென்றுங் கூறுவர். ஆன்மா அவ்வுடம்பளவிற் சிறுத்தும் பெருத்தும் வருவதாயின், அறிவும் அவ்வாறே சிறுத்தும் பெருத்தும் நிகழ்தல்வேண்டும் ; அங்ஙனமின்றிப் பேருடம்பிற் சிற்றறிவுஞ் சிற்றுடம்பிற் பேரறிவும் நிகழக்காண்டலானும், சுருங்கியும் விரிந்தும் வரு மாயின் அவயவமுடைத்தெனப்பட்டு அழிவெய்து மாகலானும், உடம்புமாத்திரையினன்றிச் சேய்மைக்கண்ணே துருவமண்ட லத்தை யறிதலானும் அதுபொருந்தாமை யறிக.

இனிப், பாஞ்சராத்திரி முதலியோர் உடம்பினின்று நீங்கிப் போக்குவரவு புரிதலானும், உடம்பினுஞ் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுறுதலானும், சைவாகமங்களின் ஆன்மாக்களுக்கு அணுக்களென்னும் வழக்குமுண்மையானும் "இதயகமலத்திற் புன்னுனிச் சிறுதுளிவடிவிற்றாயிருக்கும்" என்பதனானும், வேதத்தும் அவ்வாறு கூறுதலானும் ஆன்மா அணுவடிவிற் றென்பதே பொருத்தமுடைத்தென்றும் ; அணுவடிவிற்றாயின் ஏகதேசத்தன்றி உடம்புமுழுதினும் அறிவுநிகழுமாறும், சேய் மைக்கண்ணதாகிய துருவமண்டலத்தையறியுமாறும் யாங்ஙன மெனின், விளக்கின்பிரபை விளக்களவினில்லாது பக்கங்களிற் பரந்துசென்று வியாபிக்குமாறுபோல, ஆன்மா ஏகதேச மாயினும் ஆன்மாவின்குணமாகிய ஞானம் வியாபகமாகலின்,

* இது, செழுகை என நூல்களிற் காணப்படுகிறது ; செழுகை-ஒருவகை அட்டை.

அங்ஙனம் அறிதல்கூடுமென்றுங்கூறுவர். குணியளவினன்றிக் குணம் வேறிடத்திற்சேறல் யாண்டுமின்மையானும்; விளக்கின் பிரபை விளக்கின் சூக்குமரூபமே யன்றி வேறன்மையான் அதுதிரவியமே, குணமன்றுகலான் ஈண்டைக் குவமையாகாமையானும்; தட்பம், வெப்பம், மணங்களுள் காற்றுற் கொணரப்படும் அவ்வக்குணிகளின் அவயவங்களே யொட்டியன்றி வாராவென்பது *மேற்காட்டிணமாகலானும்; குணங் குணியளவினன்றி வேறிடத்துச் சென்று வியாபிக்குமென்பது குணகுணிகளினியல்பறியாதார் கூற்றேயாமாகலானும்; பெத்தகாலத்தின் ஆன்மா அணுவடிவிற்றாகிய சூக்குமதேகமாய்நிற்குஞ் செயற்கைபற்றி வேதாகமங்களின் அணுவென வழங்கப்படுதலானும்; இதயகமலத்தின் அவ்வாறிருக்குமென்றலும், போக்குவரவு புரிதலுங் கூடுமாகலானும்; இஃது, உளமணுவாய்ச் சென்று மனந்—நள்ள விழுங்கருவிற் றுள் என்பதனுற் பெறப்பட்டதாகலின் அதுபற்றி வியாபகமென்றெற் கிழுக்கின்மையானும் வேதாகமங்களின் ஆன்மாவியாபகமெனவே கூறுதலானும்; ஆன்மாவென்னுஞ் சொற்குப் பொருள் வியாபகமாகிய †நித்தசித்தென்பதேயன்றி வேறுபொருள்படாமையானும் சேய்மைக்கண்ணும் வியாபித்தறிவதாகிய ஆன்மா ஏகதேசமான அணுவளவிற்றுதல் யாண்டையதென் றெழுதிக.

அற்றேல், இங்ஙனங் கூறியவாற்றானே ஆன்மாத் தோற்றக்கேடின்றி நித்தமாய் வியாபகமாய்நிற்குமென்பது பெற்றும்; அங்ஙனமாயினும் அதன் குணமாகிய ஞானமும் அவ்வாறே நித்தமாய் வியாபகமாய்நிற்குமென்றற்குப் பிரமாணமென்னை? நையாயிகர்முதலியோர் குணிநிற்பக் குணந்தோன்றியழியுமெனக் கொண்டு, ஆகாயம் நித்தமாய் வியாபகமாய்நிற்ப அதன்குணமாகிய சத்தம் ஏகதேசமாய்த் தோன்றுதலுமழிதலுமுடைமை காண்டுமாகலின், அதுபோல ஆன்மா நித்தமாய் வியாபகமாய்நிற்ப அதன் குணமாகிய ஞானம் ஏகதேசமாய்த் தோன்றியழிந்துவருதல் இயல்பென்றாலெனின்,—அற்றன்று; குணிநிற்பக் குணந்தோன்றியழிதல் யாண்டுமின்மையானும்; குணமழிவுழிக் குணியுமழிவெய்துமாகலானும்; இருளின் கண்ணதாகிய குடம் விளக்கு வந்துழி விளங்கியும், அல்லுழி விளங்காமைமாத்திரையேபற்றி அப்பொழுது குடந் தோன்றியழிந்ததென்பார் யாருமில்லை; அதுபோல, ஆகாயத்தின் குணமாகியசத்தமும் அதனை விளக்குதற்குரிய காரணமுயற்சிகள்

---

* பக்கம், உ0சு.

†உஅசு-ம் பக்கத்தில், சித்துசித்தெனக் கூறப்பட்டிருத்தலுஞ் சிந்திக்கத்தக்கது.

கூடியவழி விளங்கியும், அல்லுழி விளங்காமைமாத்திரையேயன்றி அப்பொழுது தோன்றியழிந்ததன்றுகலான், அதுபற்றிக் குணி நிற்பக் குணந்தோன்றியழியுமென்பார் மதம் போலியாகலானும்; வெந்நீரினுளதாகிய தட்பம் நெருப்பின் சையோகத்தாற்றடை யுண்டுநின்று, பின் அது நீங்கியமாத்திரையானே அத்தட்பந் தோன்றுதற்குரிய காரணமுயற்சிகளின்றித் தானே விளங்குதலின், ஆண்டழிந்துதோன்றிற்றென்றல் பொருந்தாமையின், பொருடோறும் இவ்வாறேயாமாகலானும்; மேற்சற்காரியவாதத்திற் கூறியவாற்றானே அழிபொருளாகிய உடம்பு இந்திரியம் முதலியவற்றிற்குந் தோற்றக்கேடின்மை பெறப்படுதலின், ஈண்டுக் கூறவேண்டாமையானும் நித்தமாய் வியாபகமாகிய ஆன்மாவின்குணமும் அவ்வாறே நித்தமாய் வியாபகமாய்நிற்குமெனவும், அத்தன்மைத்தாகிய ஞானம் ஒருகால் விளங்கியும் ஒருகால் விளங்காதும் இடத்தானுங் காலத்தானும் ஏகதேசமாய் நிகழ்தல் செயற்கையானையதேயாமெனவும், எனவே, அதற் கொருகாரணமுண்டெனவுந் தெற்றெனவுணர்ந்துகொள்க.

அற்றேல், ஆன்மாவின்ஞானம் அத்தன்மைத்தாயினுஞ் சத்தகுணம்போலக் காரணமுயற்சியுள்வழி விளங்கி, அல்லுழி விளங்காதுநிற்றல் அதனியல்பென்றுற்படும் இழுக்கென்னெனின்,—அறியாது கூறினாய். சத்தகுணத்தைப் புலப்படுக்கும் வியஞ்சகப்பொருளாகிய குணில் முதலாயின காலத்தானும் இடத்தானும் ஏகதேசப்பொருளாகலின், அதனாற் புலப்படுவதாகிய சத்தகுணமும் அதன்குணிமுழுவதும் விளங்காது காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய் விளங்குவதாயிற்று; ஆன்மஞானத்தைப் புலப்படுக்கும் வியஞ்சகப் பொருளாகிய சிவசத்தி அவ்வாறு காலத்தானுதல் இடத்தானுதல் ஒருவாற்றானும் ஏகதேசமாதலின்றி, நித்தமாய் வியாபகமாய் நிற்றலின், ஈண்டுக் காரணமுயற்சி ஒருகாலுண்டாய் ஒருகாலின்றுமென்பதற்கோரியைபின்மையின், அத்தன்மைத்தாகிய சிவசத்தியான் விளங்கிப் புலப்படுவதாகிய ஆன்மஞானமுந் தன்குணிமுழுவதிலும் நித்தமாய் வியாபகமாய் விளங்குதலே இயல்பாவதன்றி, ஏகதேசத்தின்விளங்குதல் இயல்பாகாமையின், ஏகதேசமாய் அறிவுநிகழ்தல் காரணத்தானுகிய செயற்கையேயாமெனக் கொள்க. அற்றாகலினன்றே சத்தகுணம்போல் ஒருதன்மைத்தாதலின்றி, ஆன்மாவின்குணமாகிய அறிவு குவிந்தும் விரிந்தும் ஒருகாலைக்கொருகால் மிக்குமிக்குச் சோபானமுறையான் மேற்பட்டுவிளங்குதல் அநுபவமாய்க் காணப்படுவதாஉ மென்க.

அற்றேல், காரணம் பிராந்திஞானமுதலியவற்றினொன்றே யாக; அவற்றின் வேறுண்டென்பதற்குப் பிரமாணமென்னை யெனின், கூறுதும்:—கயிற்றை அரவெனக்காணும் பிராந்தி கண்ணின்கண் யாதானுமொரு குற்றமில்வழி நிகழாமையின், அதுபோலத் தேகமே ஆன்மாவென்றற் றொடக்கத்துப் பிராந்தி ஞானமும் ஆன்மாவின்கண் ஒருகுற்றமில்வழி நிகழாமையின், அக்குற்றமாகிய சகசமலம் பிராந்திஞானத்தின் வேறுயுண் டென்பது பெறப்படும். இனி, ஞானபாவமே அதுவெனின்,—ஞானத்தின் என்றுமபாவத்திற்கும், அழிவுபாட்டபாவத் திற்கும், ஒன்றினொன்றபாவத்திற்கும் ஒருகாலுமழிவின்மை யான் முத்தியென்பதொன் றில்லையாய் முடியும்; வீடுபேறுண்மை வேதாகமங்களிற் பெறப்படுதலின், அவற்றோடு முரணுமைப் பொருட்டு ஞானபாவமாவது ஞானத்தின் முன்னபாவமெனக் கோடல்வேண்டும்; வேண்டவே, நித்தமாகிய ஞானம் முன் னில்லாதொழிதற்கு வேறு காரணமுண்டென்பது பெறப்படு தலின், அதுவே ANAVAM எனப்படுமென்க.

இனித் தமோகுண முதலியன ஒன்றன் காரியமாய் இடையே தோன்றியழிவனவாகலின், அவை அநாதியே ஞான திரோதகமாய் ஆன்மாவைப் பந்திக்கமாட்டாமையின், சுத்த மாய்நின்ற ஆன்மாவை இடையே பந்தித்து நின்றனவெனின், அவை இடையே பந்தித்தற்குக் காரணம் வேண்டும்; காரண மின்றிப் பந்திக்குமெனின், முத்திபெற்றவழியும் பந்திக்குமென் பதாய் முடியுமாகலின், அவற்றின் வேறாய் அநாதியே பந்திப்ப தாகிய சகசமலமொன் றுண்டென்பது பெறப்படும்.

இனிச், சிவசத்தி ஞானதிரோதகமாய் நிற்குமெனின், சித்தாகிய சிவனதுசத்தியுஞ் சித்தாவதன்றிச் சடமாதலின்மை யாற் றனக்குப் பகையாகிய சடப்பொருள் சித்தைப் பந்த முறுத்துவதன்றிச், சித்துப்பொருள் சித்தைப் பந்தமுறுத்து மாறின்மையானும், உறுத்துமெனின், முதல்வனது பெருங் கருணைக் கிழக்காமாகலானுஞ் சடப்பொருளாய்ப் பந்தமுறு விக்குஞ் சகசமலம் வேறுண்டென்பது பெற்றும்.

அற்றேல், மலஞ் சகசமாய் உடனிற்றலின், ஆன்மாவின் குணமெனக்கோடலே பொருத்த முடைத்தெனின்,—அறியாது கூறினாய். குணமாயின் இடையே நீங்குதல் கூடாமையானும், ஆன்மா அறிதற்குணமுடைத்தென்பது மேற்காட்டினும், மூன் னருங்காட்டுதுமாகலின், அறியாமையும் அறிவுமாகிய இரண்டு மறுதலைக்குணம் ஒருபொருட்குக் கூடாமையானும் அஃதான்மா வின் வேறுயதோர் திரவியமேயென்பது தெற்றெனவுணர்ந்து கொள்க.

அற்றேல், மாயை கன்மங்கள் ஆன்மாவின் வேறுமாய்ச் சடமுமாய்ப் பந்தமுஞ்செய்துநிற்றலின், அவையேயமையும்; வேறுமோர் சகசமலமுண்டெனக்கோடன் மிகையாமாலோ வெனின்,—அவை யங்ஙனமாயினும், ஞானதிரோதகமல்லவாகலான் ஞானதிரோதகமாகிய மூலமலம் வேறுண்டென்பது, * "சுத்தமா மான்ம சித்தைத் துகளுடன் மறைத்த தென்னின் .....முத்த னுய்ப்பிர காச னுமே," † "பருதியை முகின்ம றைப்ப.....வந்திடாவிடின் மறைப்பே", ‡ "போதகா ரியமறைத்து நின்றது புகன்ம லங்காண்.....யாதலா லிரண்டுஞ் சோதி யிருளென வேறுமன்றே" எனவும்; § "மாயை மூதலென.....லறியாமை யெனநீ சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே", ¶ "அங்கியமானனையுணர்த்தி .....றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா மூனக்கே" எனவும் வழிநூலாசிரியரும் புடைநூலாசிரியரும் விரித்தோதிய வாறுபற்றி உணர்ந்துகொள்க.

இங்ஙனங் கூறியவாற்றானே பிராந்தி ஞானமுதலியவற்றின் வேறாய், ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய்ச், செம்பிற் களிம்புபோல ஆன்மாவுக்குக் குற்றச் சகசமாய், அநாதிபந்தமாய்ச், சடமுமாய்ப்பலவுமாயி னழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படாமையான் ஒன்றேயாய், ஆன்மாக்கடோறும் வெவ்வேறாய் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரெனப்படும் பாகுபாட்டிற் கேதுவாய்நின்று மறைத்துத் தத்தங் காலவெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், ஆன்மாக்கள் கேவலஞ் சகலஞ் சுத்த மென்னும் மூன்றவத்தையுறுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், அணுக்களைச் சகசமாய்ப்பற்றி நிற்றலின் ஆணவ மென்னும் பெயர்த்தாய்ப், பசுத்துவம் பசுங்காரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதி என்றற் றொடக் கத்துக் காரணக்குறிகளுமுடைத்தா யுள்ளது மூலமல மென்க.

அற்றேல், மலம் ஞானதிரோதகமாயின் முதல்வன் ஞானத்தையும் மறைக்குமாறின்றி ஆன்மாவின் ஞானத்தை மாத்திரம் மறைத்துநிற்குமாறு யாங்ஙனமெனின்,—அஃ தொளிக்கு மறுதலையாகிய இருள் ஞாயிற்றினொளியை மறைக்க

---

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், ககூ.
† சிவஞானசித்தி, உ-ம் சூத்திரம், அகூ.
‡ சிவஞானசித்தி, உ-ம் சூத்திரம், அச.
§ சிவப்பிரகாசம், பொது - உகூ.
¶ சிவப்பிரகாசம், பொது-உச.

மாட்டாது கண்ணெஞளிமாத்திரையே மறைத்துநிற்குமாறு போலுமென்க.

அற்றேல், ஞாயிற்றின் சன்னிதியினிற்குங் கண்ணெஞளியை இருள் மறைக்குமாறில்லை; அதுபோலப், *"பண்ணையு மோசை யும் போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா மண்ணருள்" எனவும், †"இன்றே யிறையுயிருக் கிப்படியே நின்றநிலை," ‡"அன்றே யிறைக்கடிமை யையமிலை யையமிலை" எனவும் பிறண்டும் இவ்வாறே கூறுபவாகலின், அங்ஙனமுயிர்க் குயிரா யுடன்விரவிநிற்கும் முதல்வன்சன்னிதியே யாண்டு மாகலின், அம்முதல்வன் சன்னிதியின் அங்ஙனநிற்கும் ஆன் மாவை மலம் மறைத்தல் கூடாதாலெனின்,—அற்றன்று; ஞாயிற்றின் சன்னிதியினிற்பினும் படலம்படர்ந்த கண் அவ் வொளியையிழந்து இருளினழுந்துதலின், அவ்விருள் அதனை மறைத்தல் கண்டாமாகலின், அதுபோல ஆன்மா முதல்வன் சன்னிதியினிற்பினுஞ் சோபானமுறையின் அறிவிக்கவறியுந் தன்மையுடையதாகலின், அத்தன்மைத்தாகிய ஆன்மா அநா தியே அறிவித்தா லறியமாட்டாமையின், அம்மாட்டாமையானே அநாதியின் அவ்வறிவையிழந்து அறியாமையாயழுந்துதலின், உயிரோடுவிரவிக் குணம்போல நிகழும் அறியாமைப் பொரு ளாகிய மலம் அவ்வுயிரைமறைத்தல் கூடுமென்க.

அஃதங்ஙனமாக: விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகல ரெனப்படும் பாகுபாடு முறையே மலத்தானும், மலகன்மங்க ளானும் மலகன்மமாயைகளானு மாயினவெனச் சிவாகமங்களிற் கூறுதலின், ஈண்டு மலமொன்றே அப்பாகுபாட்டிற்கெல்லாங் காரணமென்ற தென்னையெனின்,—அஃதுண்மையதிகாரத்துள் விடுத்துக்காட்டுதுமாகலின், எல்லாவநத்தங்கட்கும் மூலகாரணம் மலமேயாமென்க.

விஞ்ஞானகலர்முதலிய மூவர்க்கும் புவனம் முறையே அசுத்தமாயைக்கு மேலும், நடுவும், கீழுமாமெனக் கொள்க. அசுத்தமாயைக்கு மேலாவது அசுத்தமாயைக்குஞ் சுத்தவித் தைக்கு மிடையேயுள்ள புவனமெனவும், நடுவாவது அசுத்த மாயைமுதல் அராகமீறாய தத்துவபுவனங்களெனவும், கீழாவது மூலப்பகுதிமுதல் நிலமீறாகிய தத்துவங்களிலுள்ள புவனங்க ளெனவு முணர்க.

---

* இந்நூல், இரண்டாஞ்சூத்திரம், முதலாமதிகரணத்து உதா ரணம், ஈ.

† அநுபூதிவிளக்கம், உஉ.

‡ அநுபூதிவிளக்கம், ஈஅ.

இனி, அசுத்தமாயா தத்துவபுவனமாத்திரையே நடுவெனவும், ஏனைக் காலமுதல் நிலமீறுகிய தத்துவங்களைக் கீழெனவுங் கொண்டு, பிரளயாகலர்க்குத் தானம் அசுத்தமாயா தத்துவபுவனமாத்திரையே யென்பாருமுளர். விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தானஞ் சுத்ததத்துவபுவனங்களெனச் சில ஆகமங்களுட் கூறியது விஞ்ஞானகலர் பிரளயாகலரின் மலபந்த நீங்கி, அவ்வக்குறிமணக்கும் வாசனைமாத்திர முடையவராய், அபரமுத்தராகிய அணுசதாசிவர், அட்டவித்தியேசர், மந்திரேசுரர் முதலியோரை நோக்கியென்க.

அற்றேல், அசுத்தமாயைக்குஞ் சுத்தவித்தைக்கும் நடுவே வேறு தத்துவங்களின்மையின், ஆண்டுப் புவனங்களுண்மைக்குப் பிரமாணமில்லையாலெனின்,—அற்றன்று; அவ்விரண்டற்கு மிடையே சுத்தகாலமுதலிய தத்துவங்களுளவென்பது * மேற்காட்டிஞமாகலின், ஆண்டுப்புவனங்களுண்மைக் கிழுக்கென்னை யென்க.

இனி, விஞ்ஞானகலர் அநாதியே மலபந்தமாத்திரமுடைய விஞ்ஞானகலரும், அநுபவத்தானுதல், விஞ்ஞானத்தானுதல், யோகத்தானுதல், சன்னியாசத்தானுதல், தீக்கையானுதல் இடையே மாயபந்தங் கன்மபந்தம் முழுவதுநீங்கி, அசுத்த மாயையின் மேலுள்ள புவனங்களி னுகரக்கடவனவாகிய போகங் கட்கேதுவாய்நின்ற மலபந்தமொன்றேயுடையராகிய விஞ்ஞானகலருமென இருவகையர்.

பிரளயாகலரும் அநாதியே மலகன்மங்கண் மாத்திர முடைய பிரளயாகலரும், இடையே பரிபக்குவவிசேடத்தான் மாயாபந்தமாத்திரநீங்கி, ஏனையிரண்டுமுடைய பிரளயாகலருமென இருவகையர்.

அற்றேல், விஞ்ஞானகலர் பிரளயாகலரென்பன விஞ்ஞானத்தாற் கலியற்றவர் பிரளயத்திற் கலியற்றவரெனக் காரணக்குறியாகலின், அக்காரணமின்றி இயல்பானும் ஒருமலமுடையாரும், இருமலமுடையாருமுளராயின், அவர் அப்பெயர்பெறுதல் சாலாதாம் பிறவெனின்,—மலமொன்று பிரண்டுமுடைமையாகிய ஒப்புமைபற்றி இவர்க்குரிய பெயரே அவர்க்குமாதல் சாலுமாகலின், ஈண்டிழுக்கின்மை யுணர்க. இது பஞ்சகலைகட்குக் காரணக்குறியாகிய நிவிர்த்திமுதலிய பெயர்கள் காரணமின்றியும் ஒப்புமைபற்றிச் சுத்தித்தத்துவ புவனங்களைந்திற்கும் பெயராயினுற்போலவும், வாயிற்காட்சிக்கே காரணக்குறியாகிய பிரத்தியக்கமென்னும் பெயர் காரணமின்றியும் ஒப்புமைபற்றி

* பக்கம், கஙo.

மானதக்காட்சிமுதலியவற்றிற்கும் பெயராயினற் போலவுங் கொள்க.

இன்னும், விஞ்ஞானகலரென்றது *"மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு" என்பவாகலின், முதல்வன் உண்ணின்றுவாறே யுணர்த்த விளையும் விஞ்ஞானத்தாற் கலைநீங்குதற் குரிமையுடையாரென்றும், பிரளயாகலரென்றது எல்லாமொடுங்கும் பிரளயகாலத்தின் முதல்வன்றானே குருவாய் முன்னின்றுணர்த்துதலாற் கலைநீங்கு முரிமையுடையாரென்றும் பொருள்படுமாகலின், அவ்வாற்றான் உரிமைபற்றிய காரணக்குறியாங்கால் ஒப்புமைபற்றாது சிறப்புப்பெயராமாறு காண்க. இப்பொருட்குக் கலையென்றது பந்தமென்னும்பொருட்டு. விஞ்ஞானகலர் எனற்பாலது விஞ்ஞானகலர் என மரீஇயிற்று.

இஃதறியாதார் பக்குவவிசேடத்தான் இடையே பிரளயாகலர் விஞ்ஞானகலராவாரன்றி, இயல்பானே விஞ்ஞானகலர் பிரளயாகலராவாரில்லையென மறுக்கவுமிஃதான்மாக்களினிலக்கணமறியாதார் கூற்றேயாமென மறுக்க. அஃதாமாறு உண்மையதிகாரத்திற் காட்டுமாறுபற்றியுணர்ந்து கொள்க.

†"உரைதருமிப் பசுவருக்க முணரின் மூன்றும்" எனப் பொதுப்பட வோதுதலானும், ‡"மூவகையா ருயிர்வருக்கமலத்தார் கன்ம மூலமலத்தார்மூன்று முடையா ரன்றே" என அநாதியே மூவகையாதல் சிறந்தெடுத்தோதுதலானும், இங்ஙனங்கூறும் ஆகமவசனங்களானும் இதுவே தொல்லாசிரியர் கருத்தாத லறிக.

பவுட்கரமுதலியவற்றின் அநாதியே விஞ்ஞானகலர் பிரளயாகலருண்மைக்குப் பிரமாணங்கூறுவார் இடையே அங்ஙனமாவாரை யெடுத்துக்காட்டினாராகலின், அதுவேபற்றி மயங்கற்க. விஞ்ஞானகலர் பிரளயாகலர் தூகரக்கடவனவாகிய போகத்துக் கேதுவான கலைகளோடு கூடினும் அவற்றுற் பந்தமுறுதலின்மையின், அகலரேயன்றிச் சகலராகாமை யுணர்க. இன்னும் இவரியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க. ஈண்டு ரைப்பிற் பெருகும்.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

* இந்நூல், எட்டாம்சூத்திரம், இரண்டாமதிகரணத்து உதாரணவெண்பா, க.

† சிவஞானசித்தி, எட்டாஞ்சூத்திரம், உ.

‡ சிவப்பிரகாசம், பாயிரம், அ.

## மூன்றாமதிகரணம்

மேலையதிகரணத்தின் மலமறைப்பால் ஆன்மா அறிவில தாகிநிற்றலான் இருளாஞ்ஞெரியிழந்தகண்ணுக்குக் காட்டாகிய விளக்குப்போலத் தனக்குக் காட்டாகிய அந்தக்கரணங்களோடு கூடியறிவதாயிற்று; ஐப்புலனறிந்தும், ஒடுக்கமறிந்தும், உண்டியும் வினையுமின்றிக்கிடந்தும், உணர்த்த வுணர்ந்தும் இங்ஙனம் வேறுவேறவத்தையுறுவதூஉமாயிற்றென விடுத்தவழி, அவ்வாற்றானே ஆன்மாக் கருவிகளோடுகூடியன்றி யறியாதென்ற தெதாக்கும்; விளக்கோடுகூடிய கண் விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தையுறுமாறின்மையின், அதுபோல மலத்தின்மறைந்த ஆன்மாக் கருவிகளோடுகூடியவழி, ஒருதன்மையானறிந்துவருதலே பொருத்தமுடைத்து; அவ்வாறன்றி வேறுவேறவத்தையுறுதல் சாலாதென்னுமாசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெழுந்தது மூன்றாமதிகரணம்:—

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தைதனுய் நிற்கு மென்றது

எனவரும்.

கண்ணுக்குக் காட்டாகிய விளக்குப்போல ஆன்மாவுக்குக் காட்டாகிய அந்தக்காரணம் ஒன்றுதலின்றி நால்வேறுவகைத்தாய் வேறுகருவிகளையும் அவாய்நிற்றலின், ஒருபுடையொப்பாகிய விளக்கு ஈண்டைக் குவமையாகாதென்னுங் கருத்தான் அமைச்சரசேய்ப்ப என வேறுவமை கூறினார்; கூறவே, அமைச்சரோடுகூடிநின்று தன்காரியஞ்செய்யுமரசன் வேறுவேறவத்தையுறுதல் காண்டுமாகலின், அவ்வாறே அந்தக்கரணங்களோடு கூடிய ஆன்மா அஞ்சவத்தையுறுதல் சாலுமென வலியுறுத்திய வாறு காண்க.

தலைமைபற்றி அந்தக்கரணங்களை அமைச்சரோ டுவமிப்பவே, ஏனைக்கருவிகளும் ஏனை அரசுறுப்புக்களோ டொக்குமென்பது பெற்றாம். அஃதாமாறும், ஆன்மா அவற்றோடுகூடி அரசன்போ லவத்தையுறுமாறும்

*"கால்கொடுத் திருகை மூட்டி வாழிய
வெங்நிற் றண்டென் விடங்கத் தின்னியற்
பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயி றசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
யைம்புலச் சாளரத் தரும்பெறன் மாடத்

* ஞானமிர்தம், கூ.

தும்பர் மணிக்குடைச் சென்னிப் பொங்கிய
கூந்தற் பதாகை நான்குநிலை தழீஇயிய
வாங்கினி தமர்திற னறையி னுன்ற
சாக்கிரஞ் சுவனஞ், சுழுத்தி துரியம்
பிருகுடி நாப்ப ணெருபெருங் கந்தர
மருமத் தாதி வலஞ்சுழி யுந்தி
யுறுநான் கங்குலி யும்பர் வரன்முறை
செவிமெய் கண்வாய் மூக்கெனப் பெயரிய
வாயின் மிலேச்சர் சாணர் தூதர்
சூத மாகதர் புரோகித ரென்ற
மேதகு புத்தீந் தியமுந் தீதறு
வாக்கொடு *பதங்கை பாயு வுபத்தமென்
னிவுளி மறவரும் யானை வீரருந்
திகிரி தாண்டிய தறுக ணுளரும்
வன்கண் மள்ளருந் தந்திரத் தலைவரு
மென்கரு மேந்திப் திறனு மெஞ்சிய
வோசை கூட்ட முருவ மிரதம்
கந்த முரைநடை கொடைபோக் கின்பமென்
விடயப் பல்பரி சனமு மிடைபாப்
பி ாண வபான வுதான வியான
சமான நாக கூர்ம கிருகர
தேவ தத்த தனஞ்சய னென்ற
வீரைந் தறுதிச் சுற்றமு நீதி
சிந்திந் தாய்ந்து துணிந்து செயப்படு
மந்தக் கரண வமைச்சருந் தூர்த்த
முறையுளி வழாது துறைதோ றீண்டிச்
சாதுரங் கத்து நீதி யாகிப்
பேரத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுப வீசி விரும்புவ வீரும்பி
மாசில் காட்சி மன்ன னீங்கிப்
பல்பரி வாரமும் விள்ளாச் சுற்றமுந்
தந்திரம் புணர்ந்த மந்தி மாக்களும்
பலர்புக லறியா வவைபுகு மரங்கி
னிலைனந்தாய்ந்து துணிந்துசெயன் மணந்தினி துணர்ந்தி
நனவெனக் கனவி னன்னடை வழாஅ
துரைத்தனன் சுவனத் துகத்தினி திறந்து
மந்திரத் தலைவனும் வன்கடும் பரிபனு
மந்திர பூமி மருங்கு போகிச்

---

* பாத பாயுரு வுபத்தம் என்பதும் பாடம்.

சிங்கை மாத்திரங் கனவலி னனவிற்
றங்துரை சுழுச்தி யின்றே மந்திரத்
தூலவற் றணைந்து விலைவரம் பில்லாச்
சிங்களஞ் சுமந்த வைம்பே ரமளிப்
பள்ளி மண்டபத் தூஞர்ந் தனைது
திகிரி யுருண்ட பெருவனப் பேய்ப்ப
வுறுதிச் சுற்றத் தெறிவளி யெடுப்ப
வேற்ற மிழிவு சீற்ற மாற்ற
விழுச்சல் பழிச்ச லின்பத் துன்ப
மொழிக்கனல் றுரியத் தழித்தினி தளித்தத்
தொருவக யெங்கணு மாகி யிருளிரி
சுடர்த்தொழிற் சாக்கிரத் தாங்க ணுன்கி
னிடைத்தகைத் தெரிதனிற் றெரியு மாறே''

என்னும் ஞாணமிர்தத்தினுங் காண்க.

அவத்தையி னியல்பெடுத்துக் கொண்டமையின் அவத் தைப்படுதற் கேதுவாய் அவ்வவத்தானங்களிற் சென் றுநின் றொழியுங் கருவிமாத்திரைக்கே ஈண்டுவமைகூறி ஏனையவற்றிற் குக் கூறுதொழிந்தாரென்பது.

அற்றுயினும், ஏனைத்தத்துவங்கட் கிவ்வாறு கூறப்படு முவமைகள் யாவையோவெனின்,—அவற்றுள், கலாதி பஞ்ச கஞ்சுகமெனப் பெயர்பெறுதலின், அவை அரசனுக்குக் கவசம் போலுமெனவும், தன்மாத்திரையும் ஐம்பெரும்பூதமுந் தேரூர் வானுக்குத் தேர்போல இந்திரியங்கட்கு ஆற்றல் விளைத்து நிற்குமெனக் கூறுதலின், அவை ஊர்திபோலுமெனவும் உணர்ந்துகொள்க.

ஈண்டுக் கூறப்படுஞ் சத்தாதியாவன ஞானேந்திரியங் களானறியப்படும் விடயங்களேயன்றிச் சத்தமுதலிய தன் மாத்திரைகளல்லவென்பதற்கு வசனுதியோ டொப்பவைத்து, ''விடயப்பல்பரிசனம்'' எனக் கூறியதே சான்றாத லறிக. இஃதறியாதார் இவ்வவத்தைக்கண்ணிற்கும் முப்பத்தைந்துகருவி களுட் சத்தாதியென்றது பெரும்பூதங்கட்குக் காரணமாகிய தன்மாத்திரை போலுமெனப் பெயரொருமை மாத்திரையே பற்றி மயங்குப. இந்திரியங்கட்கு மதுகையை விளைவிக்குந் தன் மாத்திரைகள் ஆண்டுளவாயின் இந்திரியங்கள் முன்போலன்றி மெத்தெனவறிதற்கு வேறுகாரணநின்மை யுணர்க. அன்றியும், பெரும்பூதமுந் தன்மாத்திரையுங் குடமுங் குடமேற்பூச்சும் போலுமென்று ஆகமங்களிற் கூறுதலின், அவ்விருவகையுள் ஒன்றுநீங்க மற்றொன்று நிற்குமென்றல் பொருந்தாதெனவும்,

பூதங்கள் நீங்குமெனவே தன்மாத்திரைகளும் நீங்குமென்பது தானேபோதருமெனவு முணர்க. அற்றுகலினன்றே புடைநூலா சிரியரும் பிரேரகவவத்தையிற் றொழிற்படுங்கருவிகளைக் கூறும் வழிப் பூதங்களைக் கூறவே தன்மாத்திரைக ளடங்குமென்னுங் கருத்தான், *"மாபூத மைந்தி லொன்றும்" என்றொழிந்ததூஉ மென் றுணர்க.

அவத்தையெனப்படுவன பலவுளவாகலின், அவற்றுள், ஈண்டு அஞ்சவத்தை யெனப்பட்டன யாவையென்னும் ஐயநீக்கு தற்குச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியா தீதமாயுள்ள பஞ்சாவத்திநனுய் நிற்கும் என விதந்துரைத்தார்.

அவத்திநல் என்னும் வடமொழி விஞமுதன்மேனின்ற விஞப்பெயர். ஆடூஉவறிசொல்லாற் கூறியது வடமொழிமதம் பற்றி.

இவ்வான்மா - இங்ஙனஞ் சகசமலத்தான் உணர்விதைாய் நின்ற ஆன்மா.

அற்றேல், அரசன் ஏகதேசியாகலின், †"கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுத், தனியே யந்தப்புரத்திற்" சேறல் கூடும்; ஆன்மா அவ்வாறே அவத்தைகளினிழிந்தேறுமாயின் வியாபகத்திற் கிழுக்காமாலென் றுசங்கை நிகழ்ந்தவழி, வியாப கத்திற் கிழுக்கின்மையுங்காட்டி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது:—

அதுதான் மலசொரூபத்தின்மறைந்து அரூபசொரூபியாய் நிற்றலான்

எனவரும்.

எனவே, ஆன்மா வியாபகமாயினும் அருவமாகிய தத்து வங்கள் முறையிற் செயற்படும் வேறுபாடுபற்றி அவத்தை யுறுதல் சாலுமென்பதாம்; ‡"சிவனே வியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் குற்றமாங் கருவிசேருதல் பிரித லில்லையா முறையிற் செயற்படுங் கருவியே தெரியுந்—காவிலாவறிவு தங்கின விடமே தகுமுயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இவ்வதி கரணத்தாற் பெறப்படும் பொருள்பற்றியென்க.

---

* சிவப்பிரகாசம், உண்மை, கஙூ.

† சிவஞானசித்தி, நான்காஞ் சூத்திரம், ஈ உ.

‡ உலகுடைநாயனார், கழிநெடில், கூ.

கலைமுதலிய தத்துவங்கள் பரதேகமாகலின், அரூபசொரூபம் எனப்பட்டது. *"தத்துவவன்னரூப" ஞதல், வீடுபெற்றுழி யின்மையிற் போலியாய் மூடியுமென் ரூசங்கை நிகழாமைப் பொருட்டு மலசொரூபத்தின் மறைந்து என மேலையதிகரணப் பொருளே வழிமொழிந்துகொண்டு, அரூபசொரூபியாய் நிற்றலான் என்று ஏதுக்கூறினர்.

மறைந்தவழியென்பது மறைந்து எனத் திரிந்துநின்றது.

இனி, அத்தத்துவங்களின் தொழிற்பாடும், முறையானே நிகழும் அவத்தைவேறுபாடும் வகுத்துணர்த்தி அஃதேதுவாதலே வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு

எனவரும்.

நன்னுதலில் வாக்காதி மெய்பாதி மன்ற ஏய் ஐயைந்தாம், கண்டத்து வாக்காதி மெய்பாதி விட்டகன்று வேறு ஐயைந்தாம், இதயத்துச் சித்தஞ் சென்றணையும், நாபியினில் உயிரணையும், அணையா மூலத்து ஒன்று என்று மாறுக.

இதனுற்போந்தது இலாடத்தான முதலிய ஐந்தினுநிற்குங் கருவிகள் முறையே மூப்பத்தைந்தும், இருபத்தைந்தும், மூன்றும், இரண்டும், ஒன்றுமென்பதாம்.

மன்ற என்பது தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல். ஏய்தல் - பொருந்துதல். வாக்காதியை மெய்பாதியை என இரண்டாவது விரித்துரைக்க; அஃதீரிடத்துங் கூட்டியுரைக்கப் பட்டது.

வருஞ்சூத்திரத்து "மெய் வாய் கண் மூக்கு" எனச்செய்யுட் கேற்ப மெய்யை முற்கூறுதலின், அம்முறைபற்றி ஈண்டுச் செவி யாதியென்னாது மெய்பாதி என்றார்.

வாக்காதி மெய்யாதியாகிய புறவிந்திரியம் பத்தோடுங் கூடிய இருபத்தைந்தாவன அவற்றின்விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும், அவற்றினுக்குட் கருவியாகிய அந்தக்கரணம் நான்கும், அவற்றோடுகூடி அவத்தையுறுவதாகிய புருடனென்றும், அஃதவத்தையுறுதற்குரிய மதுகையையளிப்பனவாய்

* சிவப்பிரகாசம், உண்மை, கசு.

ஆங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணன் முதலிய வாயுக்கள் பத்துமென விவை.

அஞ்சவத்தை

இனி, இவ்வான்மா அவ்வக்கருவிகளோடுகூடி ஆண்டாண் டவத்தையுறுமாறு காட்டுதும்:—

சாக்கிரம்

அவ்வக்கருமங்கட்குரிய அரசுறுப்புக்களெல்லாவற்றோடுங் கூடித் தன்காரியஞ்செய்யும் அரசன்போல இலாடத்தானத்தின், *"மருவிய பொறியிலொன்று மாபூத மைந்திலொன்றுங்— கருவிக ணான்கு நீங்காக் கலாதிகளோந்துங் கூடித்" தொழிற் படும் பிரேரகாவத்தையினின்று விடயங்களை அநுபவித்துவரும் ஆன்மா அங்ஙனந் தொழிற்படுங் கருவிகளுட் பொறிகளின் தொழிற்பாட்டின்கண் ஊக்கத்தை விளைவித் துடனீற்குஞ் சூக்குமந் தூலமாகிய இருவகைப்பூதங்களும், அவற்றின்கூறுகிய தாத்துவிகங்களுந் தமது சத்திமடங்கி வினைக்கீடாகத் தொழிற் படாதுநிற்குமவத்தையின் ஏனைப்பொறிமுதலியன தொழிற் படினும் மதுகையின்மையின், பொறிகளின் தொழிற்பாடு மெத் தெனநிகழுமாகலான் அவ்விடத்திற் கண்டுங் காணாது, கேட்டுங் கேளாது, தீண்டியுந் தீண்டாது, சுவைத்துஞ் சுவையாது, மூரன்றும் மூரலாது இங்ஙனம் விடயநுகர்ச்சியின் மெத்தென நிற்குமவத்தை சாக்கிரம். இதற்குத் தானம் புருவநடு; நேத்திர மென்பாருமுளர்; அவர் நன்னுதல் என்பதனை ஆகுபெயராக்கி யுரைப்ப.

ஈண்டுப் புறப்பொருள்விடயங்களின் அறிவுந் தொழிலும் மெத்தென நிகழ்தலுண்மையின், அதற்குரிய வாக்காதி மெய் யாதி இந்திரியங்கள், வசனாதி சத்தாதி விடயங்கள், பிராணாதி நாகாதி வாயுக்கள், மனமாதி அந்தக்கரணங்கள், புருடதத்துவம் என்னும் முப்பத்தைந்துகருவி தொழிற்பட்டுநிற்ப, விடயநுகர்ச் சியின் ஊக்கத்தைவிளைவிக்குந் தன்மாத்திரைகளும், ஐம்பெரும் பூதமும், வாயுக்கள் விடயங்களொழித்தொழிந்த தாத்துவிகங் களும் ஈண்டுத் தொழிற்படாதொழியுமென்பது பிரமாணமாதல் கண்டுகொள்க.

ஈண்டுத் தொழிற்படுங்கருவி முப்பத்தைந்தெனத் தொகை கூறினமையேபற்றி ஏனை மூலப்பகுதி, கலாதி, சுத்ததத்துவங் களுங் கீழ்நோக்கிய ஐந்தவத்தையிற் றொழிற்படாதொழியும்

* சிவப்பிரகாசம், உண்மை, கக.

போலுமென மயங்கற்க; முப்பந்தைந்துகருவிகளுட் புருடணையு முடன்கூட்டியெண்ணியது புருடதத்துவமுளதாதற் கேதுவாகிய மூலப்பகுதி கலாதிகளின் தொழிற்பாடும், அவற்றைச் செலுத்துவனவாகிய சுத்தாதத்துவங்களின் தொழிற்பாடும் ஆண்டுளவென்ப துணர்ந்துகோடற்கேயா மென்க.

கலாதியும், மூலப்பகுதியும் ஏனைக்கருவிகள்போல இடையிடையே புருடனைக் கூடியும், நீங்கியும் அவத்தைக்கேதுவாமியல்பினவன்றி, யாங்கணுமுடனுய்நிற்றலின், அவற்றை வேறெடுத்தோதவேண்டாமையின், ஒருகாலின்றும், ஒருகாலீங்கியும் அவத்தைக்கேதுவாமியல்புடைய கருவிமாத்திரைக்கே கூறியதுபற்றிக் கலைமுதலியவற்றின் தொழிற்பாடின்மையின் ஐயம் வாராமைப்பொருட்டும், ஆன்மா வியாபகமாயும் அவத்தையெய்துதற்குரிமையுடைத்தாயவா றுணர்ந்து கோடற்பொருட்டும் புருடதத்துவமுமுடன் கூட்டி முப்பத்தைந்தென்றாகலின், அதுபற்றி ஏனைக் கலைமுதலியவற்றின் தொழிற்பாடு யாண்டு முண்மைக் கிழுக்கின்மையுணர்க.

அற்றேல், போற்றிப்பஃறொடையில், * "மூலவருங் கட்டிலுயிர் மூடமாயுட்கிடப்பக்—காலநியதி யதுகாட்டி—மேலோங்கு—மூந்திவியன் கட்டிலுயிர் சேர்த்துக் கலைவித்தை—யந்த வராக மவைமுன்பு—தந்த—தொழிலறிவிச்சை திணையாக மானி—னெழிலுடைய முக்குணமு மெய்தி" எனமேனைக்குமவத்தையினியல்புரைப்புழிக் கூறுதலிற் கீழ்நோக்கியவவத்தையிற் கலை கால முதலியவற்றின் தொழிற்பாடில்லையென்பது பெறப்படும் பிறவெனின்,—படாது; *"மூலவருங் கட்டிலுயிர் மூடமாயுட்கிடப்ப" என்றதே ஆண்டுக் கலை முதலியவற்றின் தொழிற்பாடுண்மைக்குச் சான்றுமாகலின், "காலநியதி காட்டி" என்றது மூலத்தின் ஏனைக்கருவிகளின்மையின், ஆண்டு மூடமாயுட்கிடத்தன்மாத்திரைக் கேதுவாய்ச் சூக்குமமாய் நிகழும் அவற்றின் தொழிற்பாடு பின்னர், ஏனைக்கருவிகளோடுகூடித் தொழிற்படுதற் கேதுவாய்த் தூலமாய் நிகழச்செய்யுமென்னும் பொருட்டாகலானென்க.

"மூலவருங் கட்டிலுயிர் மூடமாயுட்கிடத்த" லாவது, பஞ்சகஞ்சுகனுகிய புருடன் மூலாதாரமாகிய அந்தப்புரத்தின் மூலப்பகுதியாகிய மணியாளைத் தழுவிக்கொண்டு, பஞ்சக்கிலேசத்துள் அவிச்சைமாத்திரத்தை விடயித்துநிற்குமென்பது விழித்துழிச் சுகமாய்த்துயின்றே னென்பதனுற் குறித்துணரப்

* போற்றிப்பஃறொடை, அடி, ங கூ.

படுதலின், அங்ஙனந் தமோமயத்தின்மூழ்கி அதனுட்கிடத்த லென்பதாம்; எனவே, கலாதிபஞ்சகஞ்சுக ஞாதவழி, ஆன் மாப் புருடனுதலும், அவிச்சையைவிடயித்தலும், ஏகதேசமாய் ஆண்டுக்கிடத்தலும் பெறப்படாமையின், ஆண்டுக் கலைமுதலிய வற்றின் தொழிற்பாடு அவிச்சைமாத்திரத்தை விடயித்தற் கேற்பச் சூக்குமமாய் நிகழுமெனவும், அதற்கேற்பச் செலுத்துங் கருவியைந்தனுட் சிவதத்துவம் மிக்குச்செலுத்த ஏனை நான்குஞ் சூக்குமமாய்ச் செலுத்துமெனவு முணர்ந்துகொள்க.

*"நிலாவு சகலத்தி னின்றபூ தாதி—கலாதி சிவாதி கழித்துக்—குலாவிய நூல்—வாட்டிய சாத்திரத்தின் வாயுவச ஞதிகளைக்—கூட்டியதென் மெய்த்தேவே கூறு" என்றது நிலாவாநின்ற சகலசாக்கிரத்தின்கண்ணே நின்றொழிந்தன பூதங்களும் அவற்றிற்காதிகாரணமாகிய தன்மாத்திரைகளுமே யாம்; ஆகவே, அவையொழித்தொழிந்த தத்துவங்களெல்லாங் கேவலசாக்கிரத்தின்கண் உள்ளனவாகவும், அவற்றுட் சிறப் புடைய கலாதி சிவாதியாகிய தத்துவங்களைக்கூட்டி யெண் ணித் தொகைகொள்ளாதொழிந்து, நூல்களெல்லாம் புறக் கருவியெனப்படும் வாயுபத்தும், வசனமுதலிய விடயங்கள் பத்துமாகிய தாத்துவிகங்களைக் கூட்டியெண்ணித் தொகை கொண்டது என்னையோவென்றவாறும்.

பூதாதி-உம்மைத்தொகை; அங்ஙனங் கொள்ளாக்கால் "ஆதி" என்பது பொருள்படாமை யறிக. "நின்ற" என்பது அஃறிணைப்பன்மை வினைமுற்று. இதற்குவிடை மேலுரைத் தமைபற்றிக் காண்க. இப்பொருள் காணமாட்டாது மயங்குவா ருரைப்பனவெல்லாம் போலியென்றொழிக. இன்னும் முர ணுவனபோலத் தோன்றுவனவெல்லாம் இவ்வாறே முரணுத வாறுணர்ந்துரைத்துக் கொள்க.

இங்ஙனங் கூறியவாற்றால் தன்மாத்திரையும், ஐம்பெரும் பூதமும், வாயுக்கள் விடயங்களொழித்தொழிந்த தாத்து விகங்களுமாத்திரையே தத்தஞ் சத்திமடங்கிச் செயலற்றுநின் றொழிய ஏனைப் பொறிமுதலியவெல்லாம் கீழ்நோக்கிய சாக் கிரத்தில் தொழிற்படுமென்பது கண்டுகொள்க.

இன்னும், சாக்கிரமுதல் அதீதமீறுய்ப்படும் ஐந்தவத்தை யும், மீள அதீதமுதற் சாக்கிரமீறுய்ப்படும் ஐந்தவத்தையும் அவ்வவிடங்களானும், ஆண்டாண்டுத் தொழிற்படுங் கருவிக ளானும், ஆண்டாண்டுநிகழும் அநுபவத்தானும் ஒன்றேயன்றித்

* சதமணிக்கோவை, ஏ0.

தம்முள் வேறல்லவாகலான், அத்தன்மையவற்றைத் தம்முள் வேறெனைக்கொண்டு, ஆண்டுத் தொழிற்படுங்கருவிவேறு; ஈண்டுத் தொழிற்படுங்கருவி வேறென்றல் பொருந்தாமையறிக. இரண்டுமொன்றுகலானன்றே நூல்களெல்லாவற்றினுஞ் சாக்கிர முதற்படி மைந்தவத்தையாதல், அதீதமுதற் படிமைந்தவத்தை யாதல் இரண்டனுளொன்றேபற்றி வகுத்தோதி, ஏனைய தனை அங்ஙனம் ஓதாதொழிந்ததூஉமென்க.

## சொப்பனம்

இனிப், பொறிகளுந் தமது சத்திபடங்கி, அவைமடங்கவே, அவற்றின் வழியவாகிய வாக்காதிகளுந் தமதுசத்திமடங்கி, அவ்விருவகையிந்திரியங்களுந் தொழிற்பாடின்றி ஆண்டுநின் றொழியுமவத்தையின் ஏனை அந்தக்கரணமுதலியன தொழிற் படினும் புறப்பொருள் விடயமாகாமையின், அகத்தே சூக்கும தேகத்தோடு நின்று ஆண்டைக்குரிய இருவினைப்பயன்களை நுகர்ந்து நிற்குமவத்தை சொப்பனம். இதற்குத்தானங் கண்டம்.

ஆண்டுக் கனாக்காண்டலுண்மையின், அதற்குரிய சத்தாதி வசனுதியாகிய விடயங்கள் பத்தும், அவ்வவ்விடயங்களை அறி தற்குஞ் செய்தற்கும் ஊக்கத்தைவிளைவிக்கும் வாயுக்கள் பத்தும், அவை ஆண்டு விடயமாக்குதற்குரிய அந்தக்கரணங்கள் நான்கும், அவற்றுடன்கூடி விடயிக்கும் புருடனுமாகிய இரு பத்தைந்துகருவிகள் ஆண்டுளவென்பது அருத்தாபத்தியா னுணர்ந்துகொள்க.

கனாக்காண்டல் மேனோக்கியவவத்தையினன்றி ஈண்டில்லை யென்பாரும், ஈண்டேயன்றி மேனோக்கியவவத்தையி னில்லை யென்பாருமாய் மயங்குவாருமுளர். ஞாணமிர்தத்தின், *"நன வெனக் கனவி னன்னடை வழாஅ—துரைத்தனன் சுவ னத்து" எனக் கீழ்நோக்குமவத்தையி னியல்புரைப்புழிக் கூறுதலானும், போற்றிப்பஃறொடையின், †"இருவினையான் முன்புள்ள வின்பத்துன் பங்கண்—மருவும் வகையங்கே மருவி" என மேனோக்கியவவத்தையி னியல்புரைப்புழிக் கூறுதலானும், ஆண்டைக்குரிய தத்துவங்கள் ஈரிடத்து மொப்பநிகழ்த லானும், இரண்டுந் தம்முள் வேறல்லவென்பது மேற்காட்டினு மாகலானுஞ் சாக்கிரத்தினின் றிழியுங்காலும், அதீதத்தி

* ஞாணமிர்தம், கூ; அடி, ஈ0.

† போற்றிப்பஃறொடை அடி, ஈக.

னின்றேறுங்காலுங் கண்டத்தானத்திற் கனவுநிகழ்த லுண் டென்பது தெற்றென வுணர்க.

இக்கனவு நிகழ்ச்சியும் நனவுபோலச் சத்தியமேயென்பது * மேற்காட்டினுமாகலின், • கனக்காண்டல் போலியென்றும், † "கனக்கழு திரதங்காட்டி" எனக் கனவோ டுவமிக்கப்படு தலின், நனவும் அவ்வியல்பிற்றென்றுங் கூறும் மாயாவாதி முதலியோர் மதங்கள் பொருந்தாமை யறிக.

## சுழுத்தி

இனி, அந்தக்கரணங்களுந் தமது சத்திமடங்கிச் செயலற்ற வழி, அவை விடயித்தற் கேதுவாகிய வசனாதி சத்தாதி விடயங் களும், பிராணனுழித்தொழிந்த வாயுக்களும், அவற்றோடு செயலற்று நின்றொழிய, மனத்தின் விருத்தியாகிய சித்தமும், ஆண்டுநிகழு மவத்தைக்குரிய ஆற்றன்மாத்திரைக்கும், உடம் பிற்குக் காவலாதன்மாத்திரைக்கு மேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயுவும், அவற்றோடுகூடி விடயிப்ப தாகிய புருடனுமாகிய மூன்றுகருவிகளுங் கூடித்தொழிற்படு மவத்தையில் நிச்சயித்தற்கேதுவாகிய புத்திதத்துவமுதலியன தொழிற்படாமையான் நனவின்கண் அறியவாராததாய் ஒன் றினைத் தூக்கிச் சிந்தித்துநிற்கு மவத்தை சுழுத்தி. இதற்குத் தானம் இதயம்.

சுழுத்திதுரியங்களிற் பிராணவாயுவியங்குதல் பிறிதொன் றிற்பெறப்படாமையின், ஆங்காரம் ஒருப்பட்டொழுதலாகிய தன்றொழிற்பாட்டின்கட் சத்திமடங்கி நிற்பினும் பிராணவாயு வொன்றனை இயக்குதன்மாத்திரைக்குச் சத்தியுடைத்தாய் அவ்விடங்களி னுடனிற்குமெனவும், அங்ஙனமாயினும் ஒருப் பட்டொழுதற்கண் ஆற்றலின்றிச் செயலற்றொழிதல்பற்றி நீங்கிய கருவிகளோடுவைத் தெண்ணப்பட்டதெனவு முணர்ந்து கொள்க.

## துரியம்

இனிச், சித்தமுந் தனது சத்திமடங்கிச் செயலற்றொழியு மவத்தையின் ஆங்காரத்தானியக்கப்படும் பிராணவாயுவும், புருடனுமென்னும் இரண்டு கருவியுங்கூடி உடம்பிற்குக் காவ லாயதனையே விடயிக்குமவத்தை துரியம். இதற்குத்தானம் உந்தி.

---

* பக்கம், உஉசு.

† சிவஞானசித்தி, ஆறுஞ்சூத்திரம், கூ.

## துரியாதீதம்

இனி, ஆங்காரம் பிராணவாயுவை யியக்குதற்கண்ணுள தாகிய சத்திமடங்கிச் செயலற்றொழிதலின், பிராணவாயுவுஞ் செயலற்றொழியுமவத்தையிற் பஞ்சகஞ்சுகனுகிய புருடனென் றுந் தன்னினீங்காத மூலப்பகுதியோடுகூடி, அவிச்சைமாத்தி ரையை விடயித்துநிற்குமவத்தை துரியாதீதம். இதற்குத் தானம் மூலம்.

இங்ஙனம் இலாடத்தானத்தினின் றிழிந்து மூலாதாரத்திற் செல்லுங்கால் ஆண்டாண்டுக் கருவிகளை விட்டுவிட்டுச் செல்லு மாறு வகுத்தோதினர். இனி, அங்ஙனம் இழிந்துநிற்கும் புருடன் மூலாதாரத்தினின்றும் மீள இலாடத்தானத்தினெய்து மென்பது வருகின்ற வெண்பாவின் அநுவாத முகத்தாற் கூறு தலின், அங்ஙன மேறுங்காலும், இவ்வாறே ஆங்காங்குநின்ற கருவிகளோடு கூடிக்கூடி அவத்தையெய்திச் செல்லுமென்பது கூறுமையே விளங்கும். அது, *"தண்டாத—புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்" என்பது முதற், "சூக்கஞ் சுட ருருவிற் பெய்து தொழிற்குரிய—ராக்கிப் பணித்த வறம் போற்றி" என்பதீறுகக் கூறும் போற்றிப் பஃறொடையிற் காண்க. ஆண்டுத் "திண்மை மலத்தாற் சிறையாக்கி" என்றது 'ஏனைக்கருவிக ளொன்றுமில்லாத அதீதாவத்தையின் மூலப் பகுதியாயினெய்தும் பும்ஸ்துவமலமாத்திரையாற் புருடனைப் பிணிப்புறுத்தி' என்னும் பொருட்டேயாம்; நாடோறும்படும் ஐந்தவத்தையி னியல்புரைப்புழிக் கூறுதலானென்க.

இங்ஙனம், பிரேரகாவத்தையி னீங்கிக் கீழ்ச்செல்லுழிப் படும் ஐந்தவத்தைக்கிடமும், ஆண்டாண்டு முறையிற் செயற் படுங் கருவிக ளிவையென்பதுங் கூறி ஏதுவை வலியுறுத்தப் பட்டது.

இங்ஙனம் அதீதத்தையெய்திய புருடன் மீளப் பிரேரகா வத்தையிற் சாக்கிரத்தை யெய்துமாறு அநுவாதமுகத்தா னுணர்த்திப், பிரேரகாவத்தையின்கண்ணும் முறையிற்செலுத் தும் பிரேரகக் கருவிகளோந்தின் தொழிற்பாடுபற்றி நிகழும் ஐந்தவத்தையுளவென்பதூஉம், அவை இவை யென்பதூஉம், சுத்தாவத்தையும் இவைபோலுண்டென்பதூஉங் கூறி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

---

* போற்றிப்பஃறொடை, அடி, ஈஅ.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு

எனவரும்.

மூலத்தானத்தினீங்கி மேனோக்கி இலாடத்தானத்திற் செல்லுழி, ஆண்டாண்டுப்படும் அவத்தைகளும் மேற்கூறிய வாறேயன்றி விசேடமின்மையின், வகுத்தோதல் வேண்டா மையான், இலாடத்தே சாக்கிரத்தை யெய்தியவுள்ளம் என அநுவாத முகத்தாற் பொதுப்படக் கூறினார்.

அவ்வவவிந்திரியம் - ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந் திரியம். அவ்வவ்வி யம் - ஆண்டாண்டுப் புலனுதற்குரிய விடயம். இந்திரியத்து என்புழி மூன்றுவது விரித்துரைக்க.

கண்டு நீங்கல் எனக் கூட்டுக. அதுவே - அப்பொழுதே. அவ்வவ விந்திரியத்து எனவும், அவ்வவற்று எனவுஞ் சுட்டடுக்கிக் கூறுதலின், அத்துறைகள் என்புழியும், அதுவே என்புழியும் அவ்வாறடுக்கிக்கூறிப் பொருளுரைத்துக்கோடலே ஆசிரியர் கருத்தென்ப தறிக.

கண்டதுவே என ஒருமொழியாகவைத் துரைப்பாருமுளர்; குற்றிய லுகரத்தின்முன் வருமுயிர் உடம்படுமெய் பெறு மென்றற் கோத்திலாமையான் அஃதுரையன்மை யறிக.

ஏகாரம் ஏழாவதன்பொருள் குறித்துநின்றது.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்ட கண்டபொழுதே அயர்த்துவிடுதல். * "ஒன்றன் பாலும்—வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் ஓதிய தூஉம் இவ்வியல்புநோக்கி யென்க; எனவே, உணர்த்துமுறை மையிற் புருடன் இலாடத்தினின்று ஒருவிடயத்தை யறிவுழி, அதனைவிட்டுவிட்டறிவதல்லது இடையறவின்றி அறியமாட்டா தென்பது பெற்றும்; பெறவே, கருவிகளெல்லாந் தொழிற் படும்வழியும் அங்ஙனம் விட்டுவிட்டறிதற்கேற்பக் கலாதி களைச்செலுத்தும் பிரேரகக்கருவிகள் ஒன்றும், இரண்டும், மூன் றும், நான்கும், ஐந்துமாக முறைமையிற் செயற்படுமெனவும், அங்ஙனஞ் செயற்படுதல்பற்றி விடயத்தின் தூகார்ச்சிதோறும் அதிதுட்பமாய் ஐந்தவத்தை விரைய மாறி மாறிக் காற்றடி

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம், கூச.

சுழலல்போல் நிகழுமெனவும், அவையே சாக்கிரச் சாக்கிர முதலிய பெயர்பெறுமெனவும், இங்ஙனம் அறிதலும் அயர்த்தலுமே புசிப்பும் ஆர்ச்சிப்புமாமெனவும் விடயதுகர்ச்சிக்கணிகழும் அநுபவம்பற்றி நுண்ணுணர்வா னுணர்ந்துகொள்க. * "கரணந் தன்னிற் செயறொறுங் கண்டுகொண்ணீ" என்றார் வழிநூலாசிரியரும். "கரணந் தன்னிற் செயறொறுங் கண்டு கொள்" என்பது கருவிகளான் விடயங்களையறியுஞ் செய்கை தோறும் ஐந்தவத்தையுஞ் செறிதரும் அதனை அநுபவத்தாற் கண்டுகொள் என்றவாறு.

அற்றேல், ஆண்டு முறையிற் செயற்படுங்கருவிகள்யாவை யென்னும் அவாய்நிலைக்குதற்கு, * "ஐந்துசாக் கிரத்தி னொன்கு கனவினிற் சுழுனை மூன்று—வந்திடுந் துரியந் தன்னி லிரண்டொன்று துரியா தீதம்" என வருஞ்செய்யுளின் வகுத்தோதி, இது பிறிதோரவத்தைக் கோதியதுபோலுமென மலையாமைப் பொருட்டுக், † "கரணந்தன்னிற் செயறொறு மூணர்ந்து கொள்ளே" என மறித்துணர்வுநிகழக் கூறினார். இங்ஙனம் மறித்துணர்வித்தோதியதூஉம் அறியமாட்டாதார் தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. ஈண்டு ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்றெனப்பட்டன சுத்ததத்துவங்களேயா மென்பது, ‡ "சுத்தக் கருவிக ளைந்துங்கொண் டேசொல் லவத்தை யைந்துஞ்—சித்திக்கும்போது" என்பதனு னறிக.

இங்ஙனம் இடையீடின்றி அவ்வவ்விடயதுகர்ச்சிதோறும் அதிசூக்குமமாய் நிகழுஞ் சாக்கிரத்தி னைந்தவத்தையினியல்பு மந்தவுணர்வுடையார்க்குத் தெரித்துணர்த்துதற் பொருட்டுத் தூலவருந்ததிநியாயம்பற்றிக் கைப்பொருள் வீழ்த்தித் தெளி தன்முதலிய தூலத்தின்வைத்துக் காட்டுப. அவ்வுண்மையறியாதார் கைப்பொருள்வீழ்த்தி மயங்கித் தெளிந்தாற்போல் வனமாத்திரையே சாக்கிரச்சாக்கிராதிபோலுமென மயங்கி, இவ்வவத்தை ஒருவர்க்கொருவர்க்கு ஒருகாலொருகால் அருகி வருமெனத் தமக்கு வேண்டியவாறே கூறுப.

இனி, மலசொரூபத்தின்மறைந்து அரூபசொரூபியாய் நிற் புழிப்படும் ஐந்தவத்தையினியல்புகூறுதற் கெடுத்துக்கொண்ட இவ்வதிகரணத்தின் மலநீங்கிய சுத்தத்திற்படும் ஐந்தவத்தை கூறுதற்கோ ரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியவை மாத்திரையேபோலுமென மயங்காமைப்

---

* சிவஞானசித்தி, சூ-ம் சூ. கூடு.
† சிவஞானசித்தி, சூ-ம் சூ. கூசு.
‡ சிற்றம்பலநாடிகள் கட்டளைக்கலித்துறை, கூஎ.

பொருட்டு வேறும் ஐந்தவத்தையுள ; அவை உண்மையதிகாரத்துக்கூறப்படுமென்னுந்துணையே கூறுவார், அதுவாங்கு என் றெழுந்தார். இக்கருத்தே பற்றிப், *"பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லங்கே—குறியொடு மஞ்சவத்தை கூடுவர் வீடு கூட" என்றெழுந்தார் வழி நூலாசிரியருமென்க.

இக்கருத்தாற் பொதுப்படக்கூறிப்போந்த சுத்தாவத்தையினியல்பு இவ்வதிகரணத்தே வகுத்தோதுதற்கோ ரிடையூறின்மையானும், மலரீங்கிய ஐந்தவத்தையிற் கருவிகளுளவென்றல் பொருந்தாமையானும், அங்ஙனம் ஆகமங்களிற் கூறுமையானும், சித்தாந்தசாராவலியின் ஞானபாதங் கிரியாபாதங் கூறிப்போந்தபின் யோகபாதங்கூறும்வழி, அவத்தைக்குக் கருவிகூறியது யோகத்திற்படும் ஐந்தவத்தைக்கெனக் கொள்வதன்றி, ஆண்டைக்கியைபில்லாத ஞானத்தின்கட்படும் ஐந்தவத்தைக்கெனக்கோடல் பொருந்தாமையானும், சிவாகமங்களின் அங்ஙனங் கூறுவனவும் யோகத்தின்கட்படும் ஐந்தவத்தைக்கேயாகலானும், இருணீங்கியவழி ஞாயிற்றைக்காணலுறுவார்க்கு விளக்குவேண்டாமையின், அதுபோலச் சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தைக்குக் கருவிகளாஞகக்கடவதொன்றின்மையானும், *"கரணந் தன்னிற் செயலொரு மூணர்ந்துகொள்" என மறித்துணர்வித்துக் கூறலானும் †"ஐந்துசாக்கிரத்தின்" என்னுந் திருவிருத்தம் மேற்கூறியவாறன்றி வேறுபொருடருதற் கேலாமையறிக.

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத்தைகட்கு முறையே காரணமாகிய கேவலம், சகலம், சுத்தமென்னும் மூன்றனுள்வைத்துத் தன்னுண்மையாகிய கேவலாவத்தையினிகழுமியல்பு சகாமலத்துயராது என்பதனானே பெற்றும். ஏனைச் சகலாவத்தையினிகழுமியல்பு வருஞ்சூத்திரத்தினும், சுத்தாவத்தையினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

மூன்றாமதிகரணம் முடிந்தது

இலக்கணவோத்தின் முதற்பாதமாகிய

**நான்காஞ்சூத்திரம் முடிந்தது**

திருச்சிற்றம்பலம்

---

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், கூ.

† சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், கூசு.

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாஞ்சூத்திரம்.

இனி, ஆசிரியர் ஐந்தாஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப் பொழிப்புரைப்பான் புகுந்து, சூத்திரத்தை மொழிபெயர்த் தருளிச் செய்கின்றார்:—

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என்பது சூத்திரமெனக்காட்டி, இனி, அதன் கருத்துரைக்கின்றார்:—

எ - து. சூ - ம். எ-னின். இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத னுதலிற்று.

எனவரும்.

மேல் அமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தையெய்துமெனப்பட்ட ஆன்மாக்கள் அங்ஙனம் இருவகையைந்தவத்தையு மெய்துங்கால் அமைச்சரசேய்ப்ப நிற்பினும் அவ்வுயிர்கண் மாட்டு அவை நிகழ்தல் அவற்றிற்கு முதலாகிய சிவசத்தி செய்யும் உபகாரத்தையின்றியமையாதென்ப தணர்த்துமுகத்தானே மேலியோத்துள் இரண்டாம்பாதத்திற்கூறிய துணைக்காரண முதற்காரணங்களதிலக்கணமுணர்த்துதல் இலக்கணவோத்தின் இரண்டாம் பாதமாகிய இவ்வைந்தாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

எனவே, அமைச்ச சேய்ப்பநின் றஞ்சவத் தைத்து என உவமை கூறியது பற்றித் தன்காரியஞ்செய்தற்கண் அமைச்சர்முதலிய வுறுப்புக்களோடுகூடிய அரசனேயமையும்; அதுபோல, ஆன்மாத்தத்துவங்களோடுகூடிநின்று ஐந்தவத்தையெய்தி விளைப்பவனுகர்தற்கண் இவ்வான்மாவுந் தத்துவங்களுமே அமையுமாகலின், உலகத்தைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குதன்மாத்திரைக்கேயன்றி, ஈண்டைக்கு முதல்வன் வேண்டாவென் றுசங்கைநிகழுமன்றே: அதனை நீக்கித் தத்துவங்கள் சடமாகலானும், ஆன்மாத் தனக்கென அறிவிலாமையானும், தத்துவங்களோடு கூடியவழியுங் *"தத்துவவன்னரூபி"யே யாகலானும், அமைச்சர சேய்ப்ப

* சிவப்பிரகாசம், உண்மை, கச.

என்றது முற்றுவமையன்மையானும் அவை ஐந்தவத்தைப்பட்டு வினைப்பயனுகர்தற்கண்ணும் முதல்வனுபகாரம் ஒருதலையான் வேண்டப்படுமென ஆண்டைக்குரிய திரோதானசத்தியினியல் புணர்த்துதலின், அஃதாசங்கைபற்றிய வியைபெனவும், மேற் சகச மலத்நுணராது என்றதனுனே கேவலாவத்தையினியல்பு விளக்கி ஈண்டுச் சகலாவத்தையினியல்பு விளக்குதலின், அது முறைமைபற்றிய வியைபெனவும், அடுக்கநின்ற ஆன்மாவினிலக் கணம் முதற்பாதத்திற் கூறி, அதன் மேனின்ற துணைக்காரண முதற்காரணங்களதிலக்கணம் ஈண்டுக் கூறுதலின், அஃதவாய் நிலைபற்றிய வியைபெனவுங் கண்டுகொள்க.

ஆசங்கைபற்றிய வியைபானே அதிகரணவியைபும், முறைமைபற்றிய வியைபானே பாதவியைபும், அவாய்நிலைபற்றிய வியைபானே ஒத்தியைபும் பெறப்படும்.

மாயையுங் கன்மமுந் திரோதானசத்திக்குக் கருவியாய் அதனுளடங்குதலின், திரோதானசத்தியின திலக்கணங்கூறவே மாயைகன்மங்களதிலக்கணமுங் கூறியவாறுதலறிக.

அற்றுகலினன்றே அஞ்செழுத்தின்வைத்து நகாரமாகிய திரோதத்துள் ஒற்றுமைபற்றி மாயைகன்மங்களும் அடங்கு மென்றெழுந்தருளினபதூஉம், அஃதுணர்ந்து கோடற்பொருட் டுத், * "திருவெழுத் தைந்தி லான்மாத் திரோதமா சருள்சிவஞ் சூழ்—தரநடு நின்றது" என்றோதிய புடைநூலாசிரியர் தாமே திருவருட்பயனில், † "இறைசத்தி பாச மெழின்மாயை யாவி—யுறநிற்கும்" என்புழியும் அவ்வாறோதாது, நகரத்துள் மாயைநிற்குமென்றோதியதூஉ மென்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—மேலைச்சூத்திரங் களின் அங்ஙனங் கூறிப்போந்த ஆன்மாவினுல் மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன தத்தம் விடயங்களே இஃதின்னதென் றறிந்தும் அங்ஙனம் அறிவனவாகிய தம்மையும், தம்மையதிட் டித்துநின்று செலுத்தும் ஆன்மாவையும் அறியமாட்டா; அக் கருவிகள்போல ஆன்மாக்களுந் தம்முணர்விற்கு முதலாகிய சிற்சத்தியானே மேற்கூறப்பட்ட இருவகையஞ்சவத்தையினின்று வினைப்பயன்களே அறிந்து நுகரும்; அங்ஙனம் அறிவனவாகிய தம்மையும், தம்மையதிட்டித்து நின்று செலுத்துந் திருவரு ளையும் அறியமாட்டா. இவ்வான்மாக்கள் அங்ஙனஞ் சிவசத்தி யான் அதிட்டிக்கப்பட்டுநின்றறிதல் காந்தத்தின் சன்னிதி மாத்திரையின் வலித்துக்கொள்ளப்படும் இரும்புபோலக்

---

* சிவப்பிரகாசம், உண்மை, ஈக.

† திருவருட்பயன், கூ-வது, அஞ்செழுத்தருணிலை, உ.

கரணத்தானன்றிச் சங்கற்பத்தானதிட்டிக்கும் முதல்வன் சன்னிதிமாத்திரையினும்; ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதல் இல்லை யென்றவாறு.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலில்லையென்பது குறிப்பெச்சம்.

செவி என்பது சொல்லெச்சத்தால் வருவிக்கப்பட்டது.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்றது உபலக்கணமாகலின், ஏனைக் கருவிகளுங் கொள்ளப்படும். அற்றாகலினன்றே, * "பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு லறிந்து" என்றார் வழி நூலாசிரியரும்.

விடயங்களையறிதற்கண் முதல்வன் உடனின்று செலுத்துவனையின் விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்னும் ஆசங்கையை நீக்குதற்கு அளந்தறிந்து என் றொழியாது அறியாது என்றார்.

ஆங்கவை - ஒருசொல். தம்முணர்வின்றாமி என்றது தமது முதலென்னும் பொருள்படவந்த ஆறாம்வேற்றுமைத் தொகை. தமியருள் என்பது தமியாகிய முதல்வனதருளென ஆண்டைக் குரிய திரோதானசத்தியை யுணர்த்திநின்றது.

அருளால் என விரித்து அளந்தறிந்தறியா என உவமைக் கோதிய விடையைப் பொருளினுங் கூட்டியுரைக்க. இஃது எடுத்துக்காட்டுவமை.

இதனுள், விளம்பிய உள்வைத்து மெய்வாய் கண்மூக் களந்தறிந் தறியா என்றது ஓரதிகரணம்; தாந்தமுணர்வின்றாமியருள் என்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச் சூத்திர மென் றுணர்க.

---

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம், க.

## முதலதிகரணம்

அவற்றுள், ஆன்மாத் தாமரையிலையி னீர்போற் பற்றற்று நிற்ப ஆன்மாவின் சன்னிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறி வழியான் விடயங்களை அறியுமாகலான் அவ்வாறன்றிக் கருவி களோடுகூடி ஆன்மாவே அவத்தைப்படுமென மேற்கூறியது சாலாதென்னுஞ் சாங்கியர்மதத்தை மறுத்து, முன்னர்க் கூறப் படும் பொருட்குப் பொறிபுதலியினவும் இன்றியமையா வாதலைச் சாதித்தற் கெழுந்தது முதலதிகரணம் :—

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணருமென்றது
எனவரும்.

உணர்விற்கேதுவாகிய பொறிகளை உணர்வு என்றுபசரித் தார்.

அஃதெங்ஙனமெனின், மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவற்றினூன் ஆன்மா ஒற்றித்துக்காணினல்லது அவை ஒன்றையும் விடயியாவாகலான்
எனவரும்.

**ஆல்** - உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது; * "தூங்கு கையா னேங்கு நடைய" என்புழிப்போல. **உம்மை சிறப்பு. அல்லது விடயியா என எதிர்மறைமுகத்தாற் கூறினர் இன்றி யமையாமை யுணர்த்துதற்கு.**

அற்றேல், ஆன்மா அவற்றி னொற்றித்துநின்று செலுத்து தலும், அவை விடயித்தல் ஆன்மாவை யின்றியமையாமையும் எற்றுற் பெறுதுமென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலி யுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணுதேற் காணுது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி
எனவரும்.

ஐம்பொறிகள் ஆன்மாவையறியாவென்பது இருவர்மதத் தினு மொக்கும். ஆன்மாவின் சன்னிதிமாத்திரையின் அவை அறிவனவாயிற் சன்னிதிமாத்திரையின் அறிந்துவருகின்றும்

* புறநானூறு, ஈ உ.

என ஆன்மாவையும் அறிதல்வேண்டும். இங்ஙனம் அறியமாட்டாமை பிறிதொன்றுற் பெறப்படாமையின், அருத்தாபத்தியானே அவை ஆன்மாவான் ஒற்றித்துகின்றுசெலுத்தி ஆளப்பட்டுத் தமக்குரிய விடயங்களே அறியுமென்பது பெறப்படுமென்பார், அசாய் ஐம்பொறியை யாண்டுங் நிற்ப ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் என்றார்

ஐம்பொறியிற்—காலுதற் காணுங் காணுபுலங் காலுதற்—காண கண் கேளா செவி என்றது இன்றியமையாமை கூறியவாறு.

ஆன்மா ஐம்பொறியினீங்கிச் சொப்பனத்தானத்தினெய்தியவழி அன்னவாதல் அறிக. ஐம்பொறியுணர்தல் ஆன்மாவையின்றியமையாமை கூறினார், ஆன்மாவுணர்தல் ஐம்பொறிகளையின்றியமையாமையும் உடன்கூறினர்.

ஐம்பொறி என்றதும், காலு கண் கேளா செவி என்றதும் உபலக்கணமாகலின், ஏனைக் கருவிகளுங் கொள்ளப்படும்.

நிற்ப என்பது மழைபெய்யக் குளநிறைந்த தென்றுற் போலக் காரண காரியப்பொருட்டாய் நின்றது.

இங்ஙனமுரையாக்கால் இஃது ஏதுவின்பொருளை வலியுறுக்கும் உதாரணமாதற் கேலாமையறிக.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

பிறிதியதிகரணத்திற் சாங்கியர்முதலாயினரை மறுத்துக் கருவிகளின் தொழிற்பாடு ஆன்மாவின் இச்சாஞானக்கிரியைகளே யின்றியமையாமை சாதித்தவழி, அதனை உவமையாக வைத்து, அவையுந் தமதுபகார மின்றியமையாமை சாதித்து, ஈசுரவிகாரவாதிமுதலியோரை மறுத்தற் கெழுந்தது இரண்டாமதிகரணம்:—

இனி இதுவுந் தமது முதலாலே யுணருமென்றது
எனவரும்.

இது என்றது சாதியொருமை. உம்மை சிறப்பு; இறந்ததுதழீஇயதுமாம். இதுவுந் தமது முதலாலே யுணரும் என்பது

யான் எம்மூர் புகுவன்; நீ நும்மூர் புகுவை; என்புழிப்போல வேறுமுடிபுகோடலிற் பால்வழுவாகாமை யறிக.

அற்றேல், இம்முறைபற்றி முதல்வனுபகாரமும் மேலொன்றனை அவாய்நிற்குமெனப்பட்டு அநவத்தையாமாலென்னும் ஆசங்கையை நீக்குதற்குத் நமது முதல் என்று உடம்பொடு புணர்த்தோதினர். நம்பரான்றாமி என்றதும் அது.

எனவே, இம்முறை தமக்கொரு முதலுடையவற்றிற்கே யன்றி அஃதில்லதற் கின்மையின், அநவத்தையாமாறில்லை யென்றுணர்த்தியவாறாயிற்று.

கத்துவங்களும் ஆன்மாக்களுந் தமக்கொரு முதலுடைய வென்பதூஉம், முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறிப் போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டனவென்பது கருத்து.

அற்றாயினும், ஐம்பொறிகள் சடமாகலான் ஆன்மா ஒற்றித் நுங்காணினல்லது அவை ஒன்றையும் விடயியா என்றதொக்கும்; அவ்வாறின்றி ஆன்மாச் சேதனமாகலான் விளக்கோடுகூடிய கண்போலப் பொறிகளோடுகூடிய துணையானே உடனின் றுணர்த்துவோனே வேண்டாது விடயங்களை அறிந்து துகரு மென்றற் கிழுக்கின்மையின், இதுவுந் நமது முதலாலேயுணரும் எனக் கருவிகளோடொப்பவைத் தோதுதல் சாலாதென்னும் ஆசங்கையைநீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது :—

**இவ்வான்மாத் தன்னாலேயுணரு மிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னையுணராதுநிற்றலான்**

எனவரும்.

சடமுஞ் சேதனமுமாகிய வேறுபாடுபற்றித் தம்முளொவ்வாவாயினும், தம்மையுந் தமது முதலையும் அறியமாட்டாமைக் கண் ஐம்பொறியும் ஆன்மாவுந் தம்முளொக்குமாகலின், அது பற்றியே சாங்கியமதத்தை மறுத்து ஆன்மா ஒற்றித் நுங்காணினல்லது அவை ஒன்றையும் விடயியா என்பது வலியுறுத்தப்பட்டதாகலான் அவ்வாற்றான் இதுவுந் தமது முதலாலேயுணரும் என மேற்கொண்டது சாலுமென்பது கருத்து.

தன்னை என்பதனை இரட்டுறமொழிந்து, தன்னையுந் தமது முதலையுமென் றுரைத்துக்கொள்க.

அற்றேல், அங்ஙனந் தன்னாலுணரு மிந்திரியங்களை ஆன்மாவுக் குவமைகூறின் அவ்விந்திரியங்கட்குவரும் பயன் அவற்றினான் ஒற்றித்துக்காணும் ஆன்மாவுக்காயவாறுபோல ஆன்மா

வுக்குவரும் இன்பத்தின்பப் பயனும் ஆன்மாவாலொற்றித்துக் காணும் முதல்வனுக் காதல்வேண்டு மெனப்பட்டு வழுவாமாக லான் அஃதேதுவாதல் செல்லாதுபோலுமென்னு மாசங் கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

மன்னுசிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று

எனவரும்.

ஈண்டுக்காட்டிய அதுமானவளவையேயன்றி "முதல்வன் சன்னிதியில் உயிர் சேட்டிக்கும்" என்னும் ஆகமவளவையும் உண்மையின், அதனைமறந்து, முதல்வனலன்றியும் உயிர்கள் தாமேயுணருமென முரணிக்கூறுதல் சாலாதென்பார், மன்னு சிவன் சன்னிதியின் உயிர் சேட்டித்த தென்னும் மறையி னியன்மறந் தாய் என்றும், ஈண்டுச் சன்னிதி என்றது சிவசத்தி அவ்வக் காரியங்களில் உன்முகமாதலாகிய சங்கற்பமேயன்றி அவிகார வாதிகள் கூறும் அபிமுகமாத்திரை யன்றென்பார், சொன்ன சிவன் கண்ணு என்றும்; ஐம்பொறிபோலன்றி அறிதற்பயன் ஆன்மாவுக்கேயாதற் கேதுக்காட்டுவார், உளம் வினையாற் கண் டறிந்து நிற்குங்காண் என்றும், எண்ணுன் சிவனசத்தை யின்று என்றுங் கூறினர்.

இயல்பு என்னும் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. மறந்தாய் என்பது விளியுருபேற்ற பெயர். கண்ணு என்றது காட்டாக என்றவாறு. நாந்தங் கண்ட பாசாசத் தவையே என்று சன்னிதியை எடுத்துக்கூறியது ஒருபுடையொத்தல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து. கண்டறிதல் - ஒருபொருட் பன் மொழி. எண்ணல் - ஈண்டநுபவித்தன்மேற்று. இன்று ஆகலாற் சிவன் ஏதந்தை எண்ணுன் எனக் கூட்டியுரைக்க. இன்றுதல் - சத்தேதிர் யாவையுஞ் சூனியமாதல்.

இதனுட் சிவன் என்பது முன்னையது பேரின்பத்துக்குக் காரணனென்னும் பொருட்டாய்த் தனதுசன்னிதிக்கண் உல கத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணராநின்றது. நடுவ ணது முற்றுணர்வினனென்னும் பொருட்டாய்க் காட்டாதற் குரிய இயைபுகுறித்து நின்றது. ஈற்றது தூயதன்மையனென் னும் பொருட்டாய் அசத்தை எண்ணுமைக்குரிய இயைபு குறித்து நின்றது. ஆதலாற் கூறியதுகூறலன்மை யுணர்க.

அஃதை இம்மூப்பொருளுடைத்தென்பது சோமசம்புபத்ததி யியாக்கியான முதலியவற்றுட் காண்க. சிவதத்துவவிவேகத் துள் மூவகைப்படுத் தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க. இக்கருத்தேபற்றி, *"மாயை மருவிடான் சிவன வல்க—ணுறைதரா தசேத னத்தால்" என்றார் வழி நூலாசிரியரும். †"உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லா முன்னுடைய தென்னுய்நீ யுற்றனையோ—மன்னுயிர்க—ளவ் வகையே காணிங் கழிவதவு மாவதவுஞ்—செவ்வகையே நின்ற சிவன் பால்" என்றதூஉம் இவ்வியல்பு நோக்கி.

அற்றேல், ஆன்மா அங்ஙனங் கண்டறியுங்கால் முதல்வ னின் வேறுய் நின்றறியுமோ? ஒன்றுய்நின்றறியுமோ? என் னும் ஆசங்கையைநீக்கி, அவ்விருவகையுமன்றிநின் றறியுமாறு உவமையின்வைத் துணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத் துக்காட்டும் உதாரணம் :—

வெய்யோ ளொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டடனுய் மன்னுதலிக் காண்

எனவரும்.

வெய்யோ ளொளியி லொடுங்கி விளங்காது வெய்யோனை யாகாத மீன் என்றது ஆன்மா முதல்வனின் வேறுய் விளங்குதலு மின்றி அவனு யொழிதலு மின்றி உடனு யடங்கிநின்றுணர்தற் குவமை யாகலான், உவமையடையைப் பொருளினும், பொருளடையை உவமையினுங் கூட்டிப் பொருளுரைக்க.

ஐ-சாரியை. அறியுமைம்புலன் என்புழிப் பெயரெச்சஞ் செயப்படுபொருள்கொண்டது.

நாண்மீன் முதலியவற்றி னொளியெல்லாம் ஞாயிற்றினுய வொளியே யென்பது வேதநூற்றுணிபென் றுணர்க.

எழுவாய் மேலிலவெண்பாவினின்றும் வருவித்துரைக்க.

அற்றேல், ஈண்டுக் கூறியவாற்றுன் விடயநுகர்ச்சிக்கண் ஆன்மாக்கள் தாமே யுணரமாட்டா, முதல்வன்றிருவருளுணர்த்த வுணரு மென்றதொக்கும்; முதல்வனுணர்த்தும்வழி எல்லாவுயிர் கட்கும் எக்காலத்தும் ஒப்ப அறிவுநிகழக் காணுமையின்,

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம், சூ.
† திருக்களிற்றுப்படியார், அ.

ஆன்மாக்கடோறும் அங்ஙனம் பலவேறு வகைப்பட உணர்வு நிகழ்தல் உணர்த்துதல்வேறுபாட்டா னுயதெனல் வேண்டும்; வேண்டவே, திருவிகாரியென்னுஞ் சுருதிகளோடு முரணி முதல்வன் விகாரியாவான் செல்லும்; விகாரமாவது செயற்கைக் குணத்தோடு சமவெதித்தல், செயற்கையாவது யாதானுமொரு காரணம்பற்றி பூன்னின்றகிலையின் வேறுபடுதலேயாமாகலின், இனி, முதல்வன் திருவிகாரியென்னுஞ் சுருதியும், முதல்வன் சன்னிதியின் உயிர்கள் சேட்டிக்குமென்னுஞ் சுருதியுந் தம்முண் முரணுமைப்பொருட்டு ஞாயிற்றின் சன்னிதியிற் றுமரைப்பூ ஒன்றுமொக்குளாதலும், ஒன்று அலர்தலும், ஒன்று கூம்புதலும் ஒன்றுவாடுதலுமாகிய பலவேறு தொழில் நிகழவும் அவ்வவற்றிற் குரிய தொழில்வேறுபாடு தன்கணன்றி ஞாயிறு நின்றுங்குநிற்றல் கண்டாம்; அதுபோல முதல்வனும் விகாரமின்றி நின்றுங்கு நிற்பஅவன் சன்னிதிமாத்திரையின் ஆன்மாக்கடோறுந் தத்தங் கன்மத்துக்கேற்ப உணர்வு பலவேறுவகைப்பட்டு நிகழ்த லமையுமென விடப்பின் ஞாயிற்றி னிச்சைவயத்தானன்றி அபி முகமாத்திரையின் அப்பூக்கள் அங்ஙன மாமாறுபோல உயிர் கண்மாட்டு அங்ஙனம் அறிவுநிகழ்தலும் முதல்வனிச்சை வயத்தானன்றி அவன் அபிமுகமாத்திரையான் நிகழுமெனப் பட்டு முதல்வனிச்சாஞானக்கிரியைவயத்தாலே உயிர்களுக்கு இச்சாஞானக்கிரியை நிகழுமென்னும் நமது சித்தாந்தத்தோ டும், சிவசத்தி அவ்வக்காரியங்களில் உன்முகமாகலாகிய சங் கற்பமே ஈண்டுச் சன்னிதியெனப்படுமென மேலுரைத்தவுரை யோடும் முரணி ஈசுரவிகாரவாதிமதமாய் முடிதலின், இது தேளுக்கஞ்சிப் பாந்தள்வாயின் வீழ்ந்தாலொக்கு மாகலின், அது பொருந்தாமையான் முதல்வன் உணர்த்தும்வழி விகாரி யாவான் செல்லுமாலென்னும் ஆசங்கையை, மேல் ஆனை எனக் கூறிப்போந்த தாதான்மியசத்தியினியல்பு கூறுமுகத்தான் நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து

எனவரும்.

எனவே, அவ்வா றியைந்து தன்வயத்தனையிற்கும் முதல் வன் விகாரமின்றியே தனது சத்திசங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்வனென்க.

அவ்வாறியைந்து தன்வயத்தனுய்கிற்கும் முதல்வன் விகாரமின்றியே தனது சத்திசங்கற்பமாத்திரையான் அனேத்துஞ் செய்வன் என்பது குறிப்பெச்சம்.

அநாவது உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவமளித்தற்கண் ணுளதாகிய இரக்கம்.

அன்றே அருளுண்டாம் எனக்கூட்டுக. உம்மை எதிரது தழீஇயது. இன்றியென்னும் விணையெச்சக்குறிப்பு இன்று எனத் திரிந்தது. அன்றே- அசை.

இவ்வியல்பு சித்தாந்தநெறி உணர்ந்தார்க்கன்றி விளங்காதென்பார், அருட்கண்ணுர் கண்ணுங் கிரவிபோ னிற்குமனேய்ந்து என்றூர்.

சத்திய துண்மையும், அதனியல்பும் நீக்கமின்றி நிற்கும் என்னும் அதிகரணத்தின் விரித்துரைத்தமையின் ஆண்டுக் காண்க.

இரண்டாமதிகரணம் முடிந்தது

இலக்கணவோத்தின் இரண்டாம்பாதமாகிய

## ஐந்தாஞ்சூத்திரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## ஆருஞ்சூத்திரம்

இனி, ஆசிரியர் ஆருஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப் பொழிப் புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார் :—

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு, என்பது சூத்திரமெனக் காட்டி, இனி, அதன் கருத்துரைக்கின்றார் :-

எ - து. சூ - ம். எ - னின். சத்தும் அசத்தும் வரை செய்துணர்த்துத னுதலிற்று

எனவரும்.

மேலைச்சூத்திரத்தின் ஐம்பொறிகள் ஆன்மாவால் அளந் தறிந் தறியாதவாறுபோலத் நாந்நரர்வின்றியிருப்பின் அளந் தறிந்தும் அங்ஙனம் அறிவிக்கும் முதல்வனையுந் தம்மையும் அறியமாட்டாவென்பதுபற்றி, அற்றேல், முதல்வன் எவ்வாற் றானும் அறியப்படாத பொருளேவென்று ஆசங்கை நிகழ்ந்த வழி, அதனைநீக்கி, இலக்கணவோத்துட் கூறுதற் கெஞ்சின்ற பதிப்பொருளதிலக்கணம் 'பாரிசேடவளவையா னுணர்த்துமுகத் தானே, மேற் பொதுவியல்பாற் கூறிப்போந்த ஆன்மாவிற்குச் சிறப்பியல்பு பாரிசேடவளவையான் வருஞ்சூத்திரத்தின் விளக் குதற்பொருட்டு அவ்வான்மாவின் வேறுகிய சத்தினையும் அசத் தினையும் இலக்கணத்தாற்றம்முள் மயங்காதவாறு வரைந்து வைத்துணர்த்தி, உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தல் இவ்வோத்தின் ஆன்றும் பாதமாகிய ஆருஞ்சூத்திரத் தின் கருத்தென்க.

ஆசங்கைபற்றியவியைபான் அதிகரணவியைபு பெறப்பட் டது. மேலைச்சூத்திரங்களிற் கேவல சகலங்களினியல்பு முறையே விளக்கி, ஈண்டுச் சுத்தத்தினியல்பு விளக்குதல் முறைமைபற்றிய வியைபாகலான் அதனானே பாதவியைபு பெறப்பட்டது. பிரமாணவோத்துட் கூறிய பொருள்களுள்

ஏனைப்பொருள்களுக் கிலக்கணங்கூறி எஞ்சிநின்ற பதிப்பொருளுக் கிலக்கணங் கூறுதல் அவாய்நிலைபற்றிய வியைபாகலான் அதனானே ஒத்தியைபு பெறப்பட்டது.

பதிப்பொருளுக்குப் பொதுவியல்பு மேற் பெறப்பட்டமையின், ஈண்டுக்கூறு மிலக்கணஞ் சிறப்பியல்பெனக் கொள்க. அற்றாகலினன்றே இதனை முதற்கட் கூறுது உண்மையதிகாரத்தைச் சாரவைத்து இறுதிக்கட் கூறியதூஉ மென்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—தம்முணர்வின் தமியாகிய முதற்பொருள் அளவைகளான் அறியப்படுமியல்பிற்றெனினின், அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம்போல அழிபொருளாகிய அசத்தாம் : எவ்வாற்றானும் அறியப்படாத வியல்பிற்றெனின், அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு ஆமை மயிர்க்கம்பலம்போலச் சூனியமாம் : ஆகலான், இவ்விரண்டு கூறுபாடுமன்றி ஒருவாற்றான் அறியப்படாமையும், ஒருவாற்றான் அறியப்படுதலும் என்னும் இரண்டு வகையானுஞ் சிவமாகிய சத்தாயுள்ளதெனைக் கூறுவர் மெய்யுணர்வினிலைபெற்றுயர்ந்தோர் என்றவாறு.

உணருரு ளினின் அசத்து எனமாறுக. எனின் என்பதனை உணராது என்பதனோடுங் கூட்டி உரைக்க. இன்மையின்—இல்லையாகலானென்க. முற்றும்மைகள் தொக்கன. அல்லது என்பது வினையெச்சக்குறிப்புமுற்று. அறிதி ஆம் எனக் கூட்டுக. ஒருவாற்றான் அறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை. ஒருவாற்றான் அறியப்படுதல் சிவஞான மொன்றானே அறியப்படுதல்.

இரண்டுவகையிற் சிவசத்தாமென இசைக்குர் எனக்கொண்டு கூட்டுக.

பாசஞான பசுஞானங்களா னறியப்படாமையிற் சிவமாதலும், பதிஞானத்தா னறியப்படுதலிற் சத்தாதலும் பெற்றுமென்பார், இரண்டுவகையிற் சிவசத்தாம் என்றார். சிவசத்து என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு. சடமாகிய சத்தின் நீக்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்து என்பது சித்துச்சத்தென்னும் பொருட்டு. உரு என்றது உயர்ந்தோரை. எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

இருதிறனுமன்றி இரண்டுவகையானுஞ் சித்துமாய்ச் சத்துமாய்நிற்றல் முதல்வனுக்குச் சிறப்பியல்பென்பதுபோந்தவாறு

கண்டுகொள்க. இன்னும் முதல்வனுக்குரிய ஏனைச் சிறப்பியல் புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுள் அடங்கும்; அஃதறிந் தடக்கிக் கொள்க.

அற்றேல், *"நின்னைக் காணு மாந்தர்—தம்மையுங் காணுத் தன்மை யோரே" எனவும், †"தன்னுலே தன்னையறிந்தாற்—றன் னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" எனவும், ‡"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" எனவும், §"உன்னரிய திருவருளே யொழியமல முளதென் றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எனவும், $"சுடரா லிருடேடச் சொல்லார்களெந்தாய்—சுடராலிருடேடச் சொன்னுய்" எனவும் ஓதியவாற்றுன் ஏனைப்பசுபாசங்களுஞ் சிவஞானத்தா னன்றி அறியப்படாவென்பது போதருதலின், அவையும் அவ் விரண்டுவகையும் உடைமையாற் சிவசத்தாவான் செல்லும் பிற வெனின்,—செல்லா; என்னே? அவை சிறப்புவகையா னறியப் படுதல் சிவஞானமொன்றுனேயன்றி ஆகாதாயினும் பொது வகையாலே ஏனை ஞானங்கட்கு விடயமாதலுண்மையின், ஒரு வாற்றுன் உணருருவாதற்கு இழுக்கின்மையான் என்க.

அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்:- ¶"ஆன்மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு னர்ந்தோர்—தருமிது பசுஞா னம்பின் சிவ ஞானந்தனக்கு மேலாம்" எனவும், **"காதலிலு ஞன்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்" எனவும் ஓதுதலின், பசு ஞானத்தானே உண்மைசுட்டும் உணர்விற்கும் நான்பிரம மென் னும் உணர்விற்கும் ஆன்மா விடயமாதல் பெற்றும். ¶"வருந் தீபமெனத் தெரிந்தாங்—கொருவி" எனவும், **"இவைகீழ் நாட வாலே" எனவும் ஓதுதலின், ஒருவுதலுங் கீழ்நாடுதலு மாகிய அப்பசுஞானத்திற்குப் பாசம் விடயமாதல் பெற்றும். இனி, இதனை யான் அறிந்தேன் அறிகின்றிலேன் என்புழி, இது என்னுஞ் சுட்டுணர்விற்கு விடயம் புறத்தே தோன்றுங்குடமும் யான் என்னும் உணர்விற்கு விடயம் அந்தக்கரணங்களே அதிட் டிக்கும் ஆன்மாவும், அறிந்தே னென்னும் உணர்விற்கு விடயம் அவ்வான்மபோதமும், அறிகின்றிலேனென்னும் உணர்விற்கு

---

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, கஉ.
† சிவப்பிரகாசம், உண்மை, உ உ.
‡ சிவப்பிரகாசம், உண்மை, உ ஏ.
§ சிவப்பிரகாசம், பொது, உ ச.
$ சதமணிக்கோவை, கூ உ.
¶ சிவஞானசித்தி, ச-ம் சூ. உ.
** சிவஞானசித்தி, கூ-ம் சூ. உ.

விடயம் அறியாமையுமே யன்றி வேறின்மையின், இங்ஙனம் உணரு முணர்வு எல்லார்க்கும் ஒப்பநிகழ்கின்றமையிற் பசு பாசங்கள் பாச ஞானத்திற்கு விடயமாதல் கண்கூடாகப் பெறப் பட்டது. மெய்யுணர்வில்லாதார் உடம்பு முதலியவற்றை யானென மயக்கத்தான் மதிப்பினும், இதனையானறிந்தேன் என் பழி, யானென்னும் உணர்விற்கு விடயம் ஆன்மாவே என்பது, * அநுபவந் தன்மாட்டு நிதழ்தல்பற்றி உணர்ந்துகொள்க. இருளின்கட் கயிற்றை அரவென மதித்து இது கிடக்கின்ற தெனக் கூறினும் ஆண்டு இது என்னும் உணர்விற்கு விடய மாய்க் கிடந்தது கயிறேயன்றி அரவன்மையான் யாண்டும் அவ்வாறே கண்டுகொள்க.

அற்றேல், சிவனுண்டு, சிவனில்லை எனவும் மெய்யுணர் வில்லாதார் வழங்கக் காண்டலின், சிவனும் பொதுவகையான் அவ்வாறே பாசஞானத்திற்கு விடயமாம்போலுமெனின்,—அற் றன்று; என்னை? குடமுண்டு குடமில்லை என்றவழிக் குடம் புத்திவிருத்தியிற் பரிணமித்துத் தோன்றி ஆன்மாவின்கண் வந்து அநுபவமாமாறுபோல, உலகத்துள்ளார் சிவனுண்டு சிவ னில்லை என்றவழிச் சிவப்பொருள் அவ்வாறு பொதுவகையாஞ யினும் அநுபவத்தானுணரவாராமையின், இன்னோரன்னவாய் உணர்ந்துரைப்பனவெல்லாம் பேதைப்பருவத்துப்பெண் காம நூற்பொருளை உணர்ந்துரைக்குமாறுபோல வாசகஞான மாத் திரையேயன்றி அநுபவஞானமல்ல வாகலானென்க. அநுபவ ஞானத்திற்கு விடயமாவதே ஈண்டு ஒருதலை என்றெடுத்துக் கொள்ளப்பட்டதென் றுணர்க.

அற்றேல், ஈண்டுக் கூறியவாற்றானே பசுபாசங்கள் சிறப்பு வகையான் உணருருவல்லவாயினும் பொதுவகையான் உணரு ருவாமாகலின், முதல்வன்போற் சிவசத்தாவான் செல்லா என்பது பெற்றும். அங்ஙன மாயினும், உணருருவெல்லாம் அசத்தென்றலின், அவையும் அசத்தாவான் செல்லும்; செல்லவே, முப்பொருளுஞ் "சத்து" என்னுஞ் சைவசித்தாந் தத்தோடு முரணி அவசித்தாந்தமாமாலோ வெனின்,— அறி யாது கடாயினாய். சற்காரியவாதங் கூறுஞ் சைவசித்தாந் தத்திற் சத்தின்வேறாய் அசத்தென்ப தொன்றின்மையின், பிரபஞ்சமுஞ் சத்தியப்பொருளேயா மென்பது மேலே காட் டப்பட்டது. அங்ஙனமாகவும், ஒருதன்மைத்தாய் நில்லாது காரியாவத்தையிற் றூலமாய் விளங்கி நின்ற பிரபஞ்ச ங் காரணாவத்தையிற் சூக்குமமாகிய சத்திவடிவாய் விளங்காது

* அநுபவமதன் மாட்டு என்பதும் பாடம்.

நிற்கும் வேறுபாடுடைமை மாத்திரையே பற்றியன்றே பிர பஞ்சம் அசத்தெனப்பட்டது. அவ்வாறே, காரணவத்தையின் விளங்காது சூக்குமமாய்நிற்குந் தத்தமியல்பினீங்கிக் காரியாவத் தையிற் தூலமாய் விளங்கி நிற்கும் வேறுபாடு மாத்திரையே பற்றிச் சத்தாகிய மாயைகன்மங்களையும், ஒளிமுன் இருள் போலப் பெத்தகாலத்து மேற்பட்டுநின்ற தனது சத்தி முத்தி காலத்து மடங்கிச் சூனியம்போ னிற்றன்மாத்திரையேபற்றிச் சத்தாகிய ஆணவமலத்தினையும் அசத்தென்றற் கிழுக்கென்னே யென்க. இக்கருத்தேபற்றியன்றே, *"பொய்யிருள் கடிந்த மெய்ச் சுடரே" எனவும், †"பொய்ம்மாயப் பெருங்கடலுள்" எனவும் பிறண்டும் இவ்வாறோதியதூஉ மென்க. இஃதறியாது, "பொய்யாவது மெய்க்கெதிர்மறையாவதொன்று" என்னும் நையாயிகர் முதலியோர் மதம் அடாதென்பதூஉம் அபாவ வாதத்தில் விரித்துக் காட்டினும். ஆண்டுக்காண்க.

இனிச், சத்தாகிய ஆன்மாவும் அநாதியே தனக்குரிமை யில்லாத மலத்தின் மறைப்புண்டு தனது சத்தி மடங்கிச் சூனி யம்போற் கிடத்தன்மாத்திரையேபற்றி அவ்வா றசத்தாதற்கும், முத்திகாலத்தின் மறைப்பு நீங்கியவழித் தனது சத்தி விளங்கித் தனக்குரிய சிவானந்தத்தை அநுபவிக்கும் முதன்மை யுடைத் தாய் மீள மலத்தின் மறைப்புண்ணுதலின்றி என்றும் ஒருதன் மைத்தாதல்பற்றிச் சத்தாதற்கும் பொதுவாய் நிற்றலின், சதசத் தெனப்படும். ‡"அசத்தைச்—சத்துடனின்று நீக்குந் தன்மை யாற் சதசத் தாமே" என்றதும் இப்பொருட்டு. இதனானே, சத்தாகிய ஆன்மாவை ஒருவாற்றான் அசத்தென்றலும், சத்தா கிய மல மாயை கன்மங்களை மேற்கூறியவாறுபற்றி அசத்தென் றலும் அமையுமாதலின், அவை அங்ஙனம் பொதுவகையான் உணருருவாதல்பற்றிச் சித்தாந்தத்திற் கிழுக்கென்னேயென் றெழுதிக.

அநாதி முத்தனுகிய முதல்வன் ஏனையபோலத் தனது சத்தி மடங்குதலின்றிப், பெத்தத்தும் முத்தியினும் ஒருதன் மையனேயாய் மேம்பட்டுநிற்றலின், ஆண்டு ஒருவாற்றானும் அசத்தென்றற்கு உரிமையின்மையின், எவ்வாற்றானுஞ் சத்தே யாதலும் எவ்வாற்றானுஞ்சித்தேயாதலும் முதல்வனுக்கேயுரிய இலக்கணமாதல் கண்டுகொள்க. ஆன்மாச்சித்தாயினும் §"அவ

---

* திருவாசகம், கோயிற்றிருப்பதிகம், ஈ.

† திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், திருவாரூர்த் திருத்தாண்டகம், ச-வது பதிகம், க. ‡ சிவப்பிரகாசம், உண்மை, எ.

§ சிவஞானசித்தி, சக-ம் சூ. சக.

ணுக் கிவனுமசித் தாமே" என்றோதுதலின் முதல்வனை நோக்கச் சித்தாதலின்மையின், எவ்வாற்றானுஞ் சித்தாதலாகிய இலக்கணம் எவ்வாற்றானுஞ் சத்தாதலாகிய இலக்கணம்போல ஆன்மாக்கண்மாட்டுச்செல்லாமை கண்டுகொள்க. உணருருவசித்து என்றவழி, மலம் மாயை முதலியனவும் உணருருவாகலின் அவையும் அசத்தாவான் செல்லுமாலெனக் கடாயினார்க்கு இங்ஙனஞ் செல்வனே இறுக்கமாட்டாதார் அபாவத்தினியல் பாவது நையாயிகர் முதலியோர் கூறியதேபோலுமென மயங்கி மூப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுமைப் பொருட்டு ஈண்டுச் 'சத்தசத்து' என்பன 'சித்தசித்து' என்னும் பொருள எனவும், 'சுத்தமசுத்தம்' என்னும்பொருள எனவும் இடர்ப்பட்டுத் தமக்கு வேண்டியவாறே உரைப்ப. மூலமல முதலியனபோலப் பிரபஞ்சமும் மெய்ப்பொருளேயாயினுங் காரியாவத்தையினின்ற தூலவடிவம் இத்துணைப்பொழுது நிற்குமென நம்மனோரால் அறியவாராது நீர்மேலெழுத்தும், கனவும், பேய்த் தேரும்போல நிலைபெறுவதுபோலத் தோன்றிக் காட்சிப்புலனுய் விரையக்கெட்டு மறைந்துபோதற் சிறப்புடைமைபற்றி அசத்தென்றும், அழிபொருளென்றும் மிக்கு வழங்கப்படுமென்க.

அஃது அங்ஙனமாக; ஆசிரியர் வடமொழி ஆருஞ்சூத்திரத் தோதியவாறே "உணருருவசித்து" எனச் சூத்திரஞ்செய்யாது உணருருவசித்து எனச் சூத்திரித்தது முதலுலோடு முரணும் பிறவெனின்,—முரணுது; அசத்தினவே சடம் என்பதுந் தானேபோதருமென்னுங் கருத்தான் அவ்வாறு சூத்திரித்தாராகலானென்க. அக்கருத்துணர்ந்துகோடற்கன்றே, *"அறிபொருள்சித்த சத்தாம்" எனக் கூட்டி உரைத்தார் வழிநூலாசிரியரும். அற்றேல், அம்முறைமைபற்றி அசித்தினவே அசத்தென்பதுந் தானே பெறப்படுமென்னுமோவெனின்,—என்னும்; என்னை? அசித்தாகிய மலமாயை கன்மங்கள் நீர்மேலெழுத்து முதலியனபோல நிலைபெறுவனபோலக் காட்சிப்புலனுய்த் தோன்றிச் சடதியின் மறைந்துபோ மசத்தாதலின்மையின், என்றும் ஒருதன்மையனுகிய முதல்வனேநோக்க அசத்தெனப் படுமாயினும் அங்ஙனந்தோன்றி மறைவதாகிய பிரபஞ்சத்தை நோக்கச் சத்தேயாமாகலிற் சிறப்புவகையான் உணருருவாகிய அசத்துப் பொதுவகையான் உணருருவாகிய சடத்தின் வியாப்பியமாவதன்றி வியாபகமாதலின்மையானென்றுழிக. ஈண்டு அசத்தென்றதற்குப் பக்கங் காரியப்பிரபஞ்சமாத்திரையே யென்பது வருஞ்சூத்திரத்திற் காட்டுதும்.

* சிவஞானசித்தி, சூ-ம் சூத்திரம், க.

இதனுள், உளருருவசத்தெனி னுளரா தின்மையின் என்பது ஒரதிகரணம்; இருதிறனல்லது சிவசத்தாமென விரண்டுவகையி னிசைக்குமன்னுலகே என்பது ஒரதிகரணம்; ஆக இரண்டதிகர ணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

---

## முதலதிகரணம்

அவற்றுள், பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அறியப்படும் பொருளேயாமென்னும் நையாயிகர் முதலியோர் மதத்தை மறுத்தற்கெழுந்தது முதலதிகரணம்:—

ஈண்டு அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்தென்றது
எனவரும்.

சுட்டப்படும் பொருளைச் சுட்டு என்றார், ஆகுபெயரான். சிவஞானத்தானறியப்படும் பொருளினீக்குதற்கு அறிவினுல் என விசேடித்தார். ஈண்டு அறிவு என்றது உலகத்துள்ளாரறியும் அளவையறிவினை; சுட்டென்றதனாற் சுட்டியறிவ தாதுவே யாகலின். இஃதுணர்ந்துகோடற்கன்றே, * "அறிவினு லறிந்த யாவு மசத்தாத லறிதி" என்ற புடைநூலாசிரியர், "தொன்மை —யறிவுதா னென்றை முந்தி யதுவது வாகக்காணு—மறிவுகா ணசத்து" என மீளத் தெரித்துணர்த்தியதூஉ மென்க.

அற்றேல், இல்லை என்னும் உணர்விற்கு விடயமாய் † அது பலத்தியைப் பயப்பிப்பதுமாத்திரையன்றே அசத்தாவது; அவ்வாறன்றி, "இது குடம்" "இஃதாடை" என்றாற்போல உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் ‡ உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சமும் அசத்தேயாயிற் சத்து அசத்து என்னும் பாகுபாடே பெறப்படாமையின், உணருருவாதன் மாத்திரையேபற்றி அறிபொருள் அசத்தென்றல் சாலாதென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது:—

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்ற லான்.
எனவரும்.

இல்லை என்னும் உணர்விற்கு விடயமாய் அதுபலத்தியைப் பயப்பித்தலன்றே அசத்தினியல்பாவதெனின்,—நன்று சொன்

---

* சிவப்பிரகாசம், உண்மை, இ. † அதுபலத்தி - இல்லையென் றறியு மறிவு. ‡ உபலத்தி - உள்ளதென்றறியு மறிவு.

ஞய்! அங்ஙனம் அநுபலத்தியைப் பயப்பிப்பது முன் உண்டென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் இராசதகுண மிகுதிப்பாட்டினின்ற பொருளேயன்றிப் பிறிதன்மையாற் பாவம்போல அபாவமும் பாவப் பொருளின்றன்மை எய்துதற்குக் காரணம் பொருட்பெற்றியாகிய தாமதகுண மிகுதிப்பாடே என்பது பெறப்படுதலிற் பொருட்பெற்றியின் வேறாய் அபாவமென ஒன்றின்மையான் அறிவினில் அறியப்பட்டு அசத்தே என்றற்கு இழுக்கென்னை யென்பதாம்.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன உபலத்தி அநுபலத்தி என்னும் பொருளவாய் ஆகுபெயரான் அவை நிகழ்தற்கிடனாகிய பொருளை உணர்த்தி நின்றன.

அற்றேல், ஒருசாரன அங்ஙனமாயினும் அறியப்பட்டன வெல்லாம் அவ்வாறசத்தாமென்றல் பொருந்தாது; பிரமாணமின்மையின். அன்றியும், இவ்வேதுவேபற்றி அறியப்பட்டன வெல்லாம் அசத்தெனக்கொண்டு, பதிமுதற் பொருள்களினுஞ் செல்லாமைப்பொருட்டு நித்தப்பொருள்கள் அளவைகளான் அறியப்படாவெனக் கொள்ளின், * "அருளிலுலாகமத்தே யறியலா மளவினுலுங்—தெருளலாம்" என்றற் றொடக்கத்துச் சுருதிகளோடு முரணி, இந்நூலின் மேற்சொலும் ஏதுவும் எடுத்துக்காட்டுமாக வைத்துப் பதிமுதலிய பொருள்களினியல்பு வழியளவையாற் சாதித்தற்கெழுந்த அதிகரணங்களும் பயனிலவாய் அஃது உமக்கே † அவசித்தாந்த மாமாலோ வென்னும் ஆசங்கையைநீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வேல்லா
மசத்தாகு மேய்கண்டா னுயின்

எனவரும்.

அறியாய் என்பது விளியுருபேற்ற பெயர். மெய்கண்டான் ஆயின் அறிவறிந்த எல்லாம் அசத்தாகும் என மாறுக.

அசத்தினியல்பை அறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவாயல்லை என்பார், அசத்தறியாய் என்றும் ‡ "எங்தை—தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்க" என்பார், கேணீ என்றும்,

* சிவஞானசித்தி, பாயிரம், கூ.

† அவசித்தாந்த மென்பது தோல்வித் தானங்களுளொன்று; அஃதாவது தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தல்.

‡ திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பாசுரம், ச.

உபலத்திக்கு விடயமானவையெல்லாம் அநுபலத்திக்கு விடய மாதல் ஒருதலை யென்பார் அறிவறிந்த வெல்லா மசத்தாகும் என்றும், சத்தினியல்புணர்ந்தார்க் கன்றி அசத்தினியல்பு உணரவாராதென்பார், மெய்கண்டான் என்றும், ஆய்தற்கருமை நோக்கி ஆயிர் என்றுங் கூறினர். கூறவே, உபலத்திப்பட்டன வெல்லாம் அநுபலத்திப்படுதலும் ஒருதலையாகலின், அவ் வாறன்றி என்றும் ஓரியல்பாய் நிற்பதாகிய பதிப்பொருள் அறிவினால் அறியப்படுவதன் றென்பதூஉம் பெறப்பட்டது. * "போதமிகுத் தோர்தொகுத்த பேதமைக்கே பொருந் திவை ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல—வேதநெறி யெனை மவர்கட்" கே நூலாகலின், † "அருளினு லாக மத்தே யறிதலும், அளவினுற்றெருளுதலும்' உண்மை ஞானத்தைத்தோற்றுவிக்கு முகத்தான் அவருக்குப் பயன்படுத லுடைமையின், ஈண்டுக் கூறும் அதிகரணங்கள் பயன்படாமையும் அறியப்படாதென் றதனோடு முரணுதலுமின்மையான், அவசித்தாந்தமாதல் யாண் டைய தென்பதுகருத்து. இஃதுணர்ந்துகோடற்கன்றே † "ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே—மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்" என்பதனை அவற்றின் பின்னுகவைத் தோதியதூஉமென்க. "அருளினு லாகமத்தேயறியலாமளவி னுலுங்—தெருளலாம்" எனப் பொதுப்படவோதி, "ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே—மருளெலா நீங்கக் கண்டு வாழ லாம்" என விதந்தோதுதலின், "மருளெலா நீங்கச் சிந்தை யுள்ளே காண்டல்" ஞானச்செய்தி ஒன்றுனன்றி ஏனையவற் றுற் கூடாதென்பதூஉம், அவையெல்லாம் அநுபவஞானத் தைத் தோற்றுவித்தன்மாத்திரையாற் பயன் படுதலுடைய வென்பதூஉம்போந்தவாறுகாண்க. அவை அங்ஙனம் பயன் படுதலும் அநுபவமுடைய தேசிகனருளில்வழிக் கூடாதென் பார், ‡ "மறையினு லயனன் மாலான் மனத்தினுன் வாக்கான் மற்றுங்—குறைவிலா வளவி னுலுங் கூறுணுதாகி நின்ற—விறைவனுர்" எனவும், "அருளினுலாக மத்தே யறியலாமள வினுலுங்—தெருளலாம்" எனவுங் கூறினர்.

இங்ஙனம் அசத்தென்றது வேறுபொருளெனக்கொண்டு, சத்தாகிய திரவியமுதலிய பிரபஞ்சத்தை உணருருவாதல்பற்றி அசத்தென்றல் சாலாது, சாலுமாயினும் அநுபற்றி முதல்வன் அறியப்படாத பொருளென்றல் பொருந்தா தென்னும் நையாயிகர் முதலியோரை மறுத்து மேற்கோளைச் சாதித்

* சிவஞானசித்தி, பரபக்கம், பாயிரம், கூ.
† சிவஞானசித்தி, சுபக்கம், பாயிரம், டு.
‡ சிவஞானசித்தி, சுபக்கம், பாயிரம், சு.

தவழிச், சற்காரியவாதத்திற் சத்தாகிய பிரபஞ்சத்தை அசத் தென்றல் அவசித்தாந்தமெனச் சாங்கியர் முதலியோர் கூறும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்ததாகலின், அதனையே * "பெரியா ரைப் பிழையாமை" என்புழிப்போல இரட்டுறமொழிந்து கொண்டு வேறுமோரதிகரணமாக வைத்துப் பொருள்கோடற் பாற்று. அஃதாமாறு :—

[ஈண்டு அறிவினாலறியப்பட்ட சூட்டு அசத்தென்றது]

அஃதெங்ஙனமெனின், மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது :—

[அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்]

எனவரும்.

காரியாவத்தையிற் றூலமாய் விளங்கிநின்றே காட்சிப் புலனுய்ச் சடதியின் மறைந்து, காரணாவத்தையின் விளங்காது நிற்கும் வேறுபாடுடைமையான் அங்ஙனம் புலனுகாத காரண மாகிய மாயை முதலியவற்றை நோக்கக் காரியமாகிய பிரபஞ்சம் அசத்தாதல் சாலுமாகலின் ஈண்டு அறிவினாலறியப்பட்ட சூட்டு அசத் தென மேற்கொண்ட தென்பதாம்.

அற்றேல், அங்ஙனம் நிலைபெறுதல்போலத் தோன்றிக் காட்சிப்புலனுய்க் கணத்தின் மறைந்துபோதன் மாத்திரையே பற்றிச் சத்தியமாகிய பிரபஞ்சத்தை அசத்தென்ப தெவ்வா றென்னும் ஆசங்கையை நீக்கி உவமைமுகத்தானே அவ் வேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

—அசத்தலாய்

நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினைவை யின்ருமா றேற்பு

எனவரும்.

அசற்காரியவாதியல்லாத அறிவுடையோனே ! அங்ஙனந் தோன்றி மறைவனவாகிய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமை ஆராயின் நீர்மேலெழுத்து முதலியனவாம் என்பதாம்.

எனவே, அப்போதுள்ளனவாகிய நீர்மேலெழுத்து முத லியவற்றை அங்ஙனே சடதியின் மறைந்துபோதல்பற்றி அசத்தென்றல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின், அவை போலப் பிரபஞ்சத்தையும் அசத்தென்றல் சாலுமென்றவா

* திருக்குறள், கூ0-ம் அதி. பரிமேலழகருரையிற் காண்க.

ருயிற்று. *"உண்டுபோ லின்ரும் பண்பி லுலகினை யசத்து மென்பர்" என்ரூர் வழிநூலாசிரியரும். உண்டுபோலின்ரு தல் இத்துணைப் பொழுதின் நசிக்குமென்றறியவாராது நெடுங் காலம் கிலேபெறுவனபோலத் தோன்றிக் காலம்வந்துழி அங்ஙனே சடிதியின் மறைந்துபோதல். †"நெருநு லுளனெரு வனின்றில்லே யென்னும்—பெருமை யுடைத்திவ் வுலகு" என் ரோதியதூஉம் இவ்வியல்புநோக்கி யென்க. *"அசத்துமென்பர்" என்னும் எதிர்மறையும்மையாற் பொருட்டன்மை பற்றிச் சத்தேயாமென்பது போந்தவாறுணர்க.

அசற்காரியவாதியை அசத்து என்று உபசரித்தார். நிகழ் என்பதனே யாண்டுங் கூட்டுக. குவ்வுருபு விகாரத்தாற்ரொக் கது. நீரிலெழுத்துத் தோன்றியபொழுதே மறைந்துபோதற் கும், கனவிற் காட்சி முடிவுபெறுதலின்றி இடையேமறைந்து போதற்கும், அருஞ்சுரத்தின்கண் முதுவேனிலின் நண்பகற் கடுமைபற்றித்தோன்றி ஞாயிற்றின்கிரணம் முகிற்படலத்தில் மறைந்தவழித் தானும் மறைந்துபோவதாகிய ‡பேய்த்தேர் ஒருகாரணங்காட்டி மறைந்துபோவதற்கும் உவமையெனக் கொள்க.

நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழ் என்று அடைகொடுத்தார். நீரிலெழுத்து எழுதுங்கால் உள்ளதாய்த்தோன்றுதலின், அது பொய்யாமாறு யாண் டையதென்பது. கனவு மெய்யென்பது §மேற்காட்டினும். அன்றியும், கனவின்கண் மகளிரை மணந்து பேருவகை யுற்றுழியும், புலி முதலியவற்றைக்கண்டு அச்சம் மிக்குற்றுழி யும் அவ்வநுபவக்குறி தூலவுடம்பின்கண் நிகழக்காண்ட லானும் இன்ரேரன்னவை மெய்யாதல் பெறப்பட்டமையின், ஏனைக்கனவினிகழ்ச்சியும் அவ்வாறே மெய்யாமென்பது தானே போதரும். சூக்குமவுடம்பிற் பெறப்படும் அநுபவங்கள் மிக்கு நிகழ்ந்துழி ஒற்றுமைபற்றித் தூலவுடம்பினுங் குறிநிகழும்; மிக்குநிகழாதவழித் தூலவுடம்பிற் குறிநிகழுமாறில்லேயென் றுணர்ந்துகொள்க.

இனிப், பேய்த்தேரை நீரெனக்காண்டன் மாத்திரையே பொய்யாவதன்றிப் பேய்த்தேர் பொய்யன்றென்பது கண் கூடாக அறியப்படும். இங்ஙனமாகலின், நீர்மேலெழுத்து முதலி யன சத்தேயாகவும் ஒருவாற்ரூற் பிரபஞ்சத்தைநோக்க அசத்

---

* சிவஞானசித்தி, சூ-ம்சூ. கூ.
† திருக்குறள், கூசூ-ம் அதி. நிலேயாமை. சூ.
‡ பேய்த்தேர்-கானல். § பக்கம், ஏஉசூ.

தென்றற் குரிமையுடையவாயினுற்போல நாத முடிவாகிய பிரபஞ்சமுங் காரணப்பொருளேநோக்க ஒருவாற்றான் அசத் தென்றற் குரிமையுடைமையின், அதுபற்றிச் சற்காரியவாதத்திற் கிழுக்கின்மை உணர்க.

இவ்வெண்பாவின் அசத்தறியாய் எனவும் அசத்தல்லாய் எனவும் வேறுவேறு விளித்தலானும், ஆயின் ஓரின் எனவும், அசத்தாகும் இன்றாயிற் எனவும் ஒருபொருட்கிளவியை இருகாற் கூறுதலானும், இதனை இங்ஙனம் இருதொடராகவைத்து, *"இலயித்ததன்னில்" என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்பட உரைத்துக் கோடலே ஆசிரியர்கருத்தாதலறிக. இவ்வாறன்றி, இதனை ஒருதொடராகவைத்துரைப்பின் அசத் தறியாய் அசத்தல்லாய் என்றதனால் ஒருபயன்படாமையும், ஆயின் ஓரின் என்று இருகாற்கூறுதலும், அசத்தாகும் இன்றும் என்று இருகாற் கூறுதலுங் கூறியதுகூறலென்னுங் குற்றமாதலும் அறிக.

இனி, ஒருவாற்றானும் உணரப்படாதபொருள் சூனிய மென்பது எல்லாச்சமயத்தாருக்கும் ஒப்பமுடிந்தமையின், ஆண்டு அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியன நிகழாமை யான் அதனைவேறோர் அதிகரணமாகவைத்துரைத்திலர். அங்ஙன மாயினும் உணராதபொருளைச் சத்தென்றற்படுமிழுக்கென்னை யோவெனமாணாக்கர்க்கு ஆசங்கை நிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர், †"உணராத பொருள்சத் தென்னி லொருபய னில்லை தானும்—புணராது நாமுஞ் சென்று பொருந்துவ தின்று மென்றுங்—தணவாத கருமம் மொன்றுந் தருவது மில்லை வானத் —திணராரார்பூந் தொடையு மாமைக் கொழுமயிர்க் கயிறும் போலும்" என விடுத்தெழுந்தாரென்க.

முதலதிகரணம் முடிந்தது

---

* இந்நூல், முதற்சூத்திரம், உ-ம் அதிகரணத்து உதாரண வெண்பா, க.

† வெளானசித்தி, சூ-ம் சூத்திரம், ச.

## இரண்டாமதிகரணம்

மேலையதிகரணத்தின் உணர்பொருளியல்பும் உணராத பொருளியல்பும் உரைக்குமுகத்தான் அசத்தினியல்பை வரை செய்துணர்த்தியவழி, இரண்டும் இவ்வாறுயின் முதல்வனியல்பு வேறென்னையோவென்னும் ஆசங்கையை நீக்கிப் பாரி சேடவளவையான் முதல்வனது சிறப்பியல்புணர்த்துமுகத்தானே சத்தினியல்பு வலரெய்துணர்த்துதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

**இனி** என்றது இவ்வியைபுணர்த்துதற்பொருட்டு. அதிகரணங்தோறும் இனி என்பன அவ்வவற்றிற்கு மேற்போந்த அதிகரணங்களோ டிளவாகிய இயைபுணர்த்துதற் பொருள என்பது மேலே காட்டினும். யாண்டுங் கடைபிடித்துக் கொள்க.

இனி இவ்விரண்டு தன்மையுமின்றி, வாக்குமனுதீத கோசரமாய்நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணரற் பாற்று

எனவரும்.

இருதிறனுவன யாவை என மலையாமைப் பொருட்டு இவ்விரண்டு தன்மையும் என மேற்போந்தவற்றைச் சுட்டிக் கூறினர். இரண்டு வகையாவன இவை யென்பார், வாக்குமனுதீத கோசரமாய் என்றார். ஈண்டு வாக்கு என்றது வாக்காகிய சுரத முடிவான பாசஞானத்தை. மனம் என்றது அவற்றின் வேறுகிய பசுஞானத்தை. வாக்குமனுதீத கோசரமாய் நின்ற என்றது அவ் விரண்டன் விருத்திகளைக் கடந்து அதீதமாயும், வேறற நின்று ணரும் அநுபவஞானமாத்திரையின் விளங்கிக் கோசரிப்பதாயும் நின்ற என்றவாறு. அங்ஙனம் நின்ற பொருள் இதுவென அளவைகளான் அறியவாராமைபற்றி அது எனப் பொதுப்பட மகாவாக்கியத்துட் கூறியதனை அநுவதித்துச், சத்தாயுள்ள சிவமாதலைச் செவியறிவுறுக்கின்றாராகலின், அது சத்தாயுள்ள சிவமே எனப் பிரிநிலையேகாரத்தை மாறிக் கூட்டுக. சத்தென்னும் வடமொழிக்குப் பொருளுரைப்பார், சத்தாய் என்றெழியாது உள்ள என்றார். என்றுரைப்பாற்று என்று உயர்ந்தோரான் அறியும் பான்மைத்தென்க.

*வாக்கு மனுதீதம் என்றது தமிழ்நூன்முடிபு. மரவடி மராடி என மரீஇயினுற்போல மனவதீதம் எனற்பாலது

* இது வடநூன்முடிபாயின் வாங்மனோதீதம் எனவரும்.

மனிதம் என மரீஇயிற்று. அதீதகோசரம் என்பது வடநூன் முடிபு. வாக்குமனாதீதப்பொருளாகலான் உணருருவாந் தன்மையும், கோசரப்பொருளாகலான் உணராதாந் தன்மையும் இல்லையென்பது பெறப்படுதலின், இவ்விரண்டு தன்மையுமின்றி என்றார்.

அற்றேல், ஐந்தொழிற்கும் விஷ்ணுமுதலாதல் பற்றி உண்டெனத் துணியப்பட்ட முதல்வன் வாக்குமனாதீத கோசரமாய் நிற்பன் என்பது எற்றாற் பெற்றும்? ஆகமவளவையாற் பெற்றுமெனின், வழியளவைக் கேலாவாய் ஆகமங்களுட் கூறப்படுவன வெல்லாம் புனைந்துரைவகையானன்றிப் பிரமாணமாகாவால் என்னும் ஆசங்கையை நீக்கி "அவ்வளவி னவன் மகிழுக" என்னும் நியாயம்பற்றி வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலை வழியளவையாற் சாதித்து, இவ்விரண்டு தன்மையுமின்றி என்ற தனை வலியுறுத்துதற்கெழுந்த ஏது:—

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாச மின்மையானும்

எனவரும்.

வாக்குமனங்களான் ஒதி யுணரப்படுவதாகிய பிரகாசப் பொருட்கு முன்னர் உண்மை யதிகாரத்துட் கூறப்படுஞ் சாதகங்களினின்று அறியப்படவேண்டுவ தின்மையானும், ஒரு வாற்றானு மறியப்படாத அப்பிரகாசப்பொருட்குச் சாதகத்தினின்றும் அறியப்படுந் தன்மை யின்மையின் அதனைவதோர் பயனின்மையானும் இவ்விரண்டு தன்மையு மின்றி வாக்குமனாதீத கோசரமாய் நிற்றல் பெறப்படுதலின், அங்ஙனம் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்பதாம்.

பிரகாசிக்கப்படுவதனைப் பிரகாசம் என்று உபசரித்தார்.

அற்றேல், வாக்குமனாதீதம் என்றல் பொருந்தும், கோசரமாம் என்றல் பொருந்தாது; என்னை? பரப்பிரமப்பொருள் அவிச்சையவத்தான் ஞாதாவெனவும் ஞேயம் எனவும் பகுக்கப்பட்டு, முன்னர்க் கூறப்படுஞ் சாதகங்களினின்று அறியவும் படும்; அவிச்சை நீங்கியவழி ஞாதிரு ஞானம் ஞேயம் என்னும் பாகுபாடு சிறிதுமின்மையிற் சத்தென்றாதல் அசத்தென்றாதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவலம் ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான், என மாயாவாதிமதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்கிக் கோசரமாதலை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மேய்சிவன்று ளாம்

எனவரும்.

பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்துமன்று அசத்துமன்றென்னின், அங்ஙனம் ஒருபொருள் உண்டென்றல் யாதுபிரமாணங் கருதியோ அதனைக் கூறுவாயாக; பிரமாணமொன்று உண்டென்னின் அதற்கு அது பிரமேயமெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென்றஞ்சி ஆண்டு அதற்குப் பிரமாணமில்லை யென்பையாயின், சத்தினியல்புணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சிமுதலிய பிரமாணங்களான் அறியப்பட்டதூஉம், ஒருவாற்றானும் பிரமாண மில்லாதசூனியமுமாகிய இரண்டும் மேற்கூறியவாற்றான் அசத்தேயாம்; ஆகலின் "சத்து" என்னுஞ் சாந்தோக்கியம் முதலிய சுருதிகளோடு மூரணுமாகலாற் சத்தென்றோதப்படும் அறிவினுலறியப்படாத மெய்ப்பொருள் நீகூறுஞ் சூனிய மன்று; சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அங்கியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையிற் * கோசரிப்பதென்றோதப்படுஞ் சிவனருளாம் என்க.

அறிய என்னுஞ் செயவெனெச்சம் "மழைபெய்யக் குளநிறையும்" என்புழிப்போலச் செயினென்னும் எச்சப்பொருட்டாய் நின்றது. இரண்டும் என முற்றும்மை விரிக்க. அசத்தாம் என மாறுக. சத்தாகியமெய் எனக்கூட்டுக. † "அடியளந்தான்றன்று யது" என்புழிப்போல அறிவறியாமெய் என்றது வாளாபெயராய் நின்றது; ‡ "பெயர்நிலைக் கிளவியு ஞஅ குநவும்" என்றது ஓத்தாகலின்.

**சிவன்ருள்** எனச் சிவசத்தியின்மேல்வைத்து உயர்த்துக் கூறினர். § "இறைவனுர் கமல பாதம்" என்றதும் அது.

இதனுற் போந்தபொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒருபொருளுண்டென்பதற்குப் பிரமாணம் என்னே? பிரமாணநில்லாத சூனியமெனிற் சூனியமும் அழிபொருளும் என்னுமிரண்டும் அசத்தேயா மென்பது $"மேற்காட்டினமையிற் பிரமப்பொருள்

---

* கோசரிப்பது - விடயமாவது.
† திருக்குறள், சுகம் அதி. மடியின்மை, கo.
‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், கூக.
§ சிவஞானசித்தி, சுபக்கம், பாயிரம், ச.
$ இச்சூத்திரத்து முதலதிகரணத்திற் காண்க.

அசத்தெனப்பட்டுச் "சத்து" என்னுஞ் சுருதிகளெல்லாவற் றோடும் முரணுமாகலான், அவற்றிற் சத்தென்றோதப்படும் பரப்பிரமப் பொருள் உண்மைஞானத்திற் கோசரிப்பதெனயாங் கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரம் என்றதனை வலியுறுத்தியவாறு மென்க.

எண்ணியறிய விரும்பா மசத்தாதல் என்பதற்குப் பிறரெல் லாம்வருகின்ற வெண்பாவிற் கூறும் பொருள்படக் கூறியது கூறலாக்கி உரைப்ப.

அற்றேல், முதற்பொருள் கோசரமாமென்றல் பொருந்தும், வாக்கு மனுதீதம் என்றல் பொருந்தாது; என்னை? பிரகாசித்த பொருளையும் வேறோராற்றான் அறிதுமென வேட்கைசென்றுழி அவ்வாற்றாற் புதுவதாய்ப் பிரகாசிக்கவேண்டுதலின், பிரகாசத்தி னுக்குப் பிரகாசிக்கவேண்டுவதின்மையின் என்னும் ஏது யாண்டுஞ் செல்லாமையானும், மனத்தோடு கூடாதவழி ஆன்மாவுக்கு அறிவுண்டாகலின்மையின், வாக்கு மனுதீதமாயவழிக் கோசர மாமா றின்மையானும், ஆன்மாவினுடனேகூடி மன முதலிய கருவி யாதல் அவற்றோடுகூடி ஆன்மாவாதல் அறியுமென்றல் பொருத்த முடைத்தாகலான்; என நையாயிகர் முதலியோர் கூறும் மதம் பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி அதனை நீக்கி, முதற்பொருள் வாக்கு மனுதீதமாய் நின்றே கோசரமாமென வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணரு நீ தானுணரா யாயி—னுணருமுனிற்
றுனிரண்டா மெய்கண்டான் றன்னு லுணர்தலாற்
றுனிரண்டாய்க் காணுன் றமி

எனவரும்.

நின்னால் அறிவனவாகிய கருவிகளெல்லாம் மேற்கூறிய வாற்றான் அசத்தாம். அசத்தெனவே, அசித்தாதலும் பெறப் பட்டது. ஆகலின் அவற்றுள் ஒரு கருவியும் முதற்பொருளை அறியமாட்டாது; அவற்றான் அறிகின்ற நீதானும் அதனை அறிய மாட்டாய்; நீ ஆய்ந்தறிவையாயின் அங்ஙனம் அறியப்படும் பொருள்கள்போல உணர்கின்ற நின்னின் வேறும். ஆகவே, ஆதனான் உனக்காவதோர் பயனின்றும். அற்றேல், மனம் நீங்கியவழி ஆன்மாவுக்கு அறிவுண்டாமா றில்லை. உண்டாயினும் அதனாலறிவுழியும் வேறாய் நின்றன்றி அறிதல் கூடாதா லெனின்,—அற்றன்று; ஆன்மாவுக்கு இயல்பாயுள்ள அறிவினை மன முதலிய கருவிகள் விளக்குவனமாத்திரையேயன்றி மூன்

இல்லதனை உண்டாக்குவனவல்லவென்பது * மேற் காட்டப்பட்டதாகலின், அவ்வுண்மையை உணர்ந்தோன் சத்தாயுள்ள சிவத்தை அறியுங்கால் தன்னறிவு அதன்கணடங்கி அதுவாய்நின்று அதனானே அதனை அறியுமாகலான் ஏனைப் பொருள்களைப்போல அத் தனிமுதற்பொருளை வேறுப்நின்று அறிவானல்ல னென்க.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானுதல் பசுஞானத்தானுதல் அறியப்படாது. அறியப்படிற் குடமுதலியன போல ஆன்மாவின் வேறுப் அவிச்சையான் வருஞ் சுகதுக்கங்களைப் பயப்பதன்றி அவிச்சையினீங்கிய †பெரும் பயனைப் பயவாதாகலான் ஆன்மா அறியு முண்மையை உணர்ந்தோன், ஏனையபோல அசத்தல்லாத தனிமுதற் பொருளாகலான் அதனை அதனானே ஒற்றித்துநின்று காண்பனென நையாயிகர் முதலியோரை மறுத்துக், கோசரமாமாறுணர்த்தி, வாக்குமனாதீதம் என்றதனை வலியுறுத்தியவாறு மென்க.

உளர்ப என்பது அகரவீற் றஃறிணைப் பன்மைப்பெயர்ச் சொல். ஒன்றும் என முற்றும்மை விரித்துரைக்க. உளின் என்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒற்றிரட்டியாமை புறனடையாற் கொள்க. இரண்டாதல் - வேறுதல். தான் - அசை. தமியை என இரண்டனுருபு விரித்துரைக்க. ஒராயாயின் என ஒருதொடராக்கி யுரைப்பின் உணராத பொரு ளில்லையென விடுத்தல்வேண்டும். அவ்வாறன்றி இரண்டாம் என விடுத்தல் உளர்பொருட்கன்றி ஏலாமையின், அஃதுரையன்மை அறிக.

அற்றேல், ‡தன்னையறிந்தாலன்றித் தன்னுலறிதல் கூடாமையால் தன்னுலே தனையுணரும் என்பது §தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாமாகலின், அவ்வாறன்றி வாக்கு மனுதீதமாய் நிற்கின்ற பொருள் யோகநூலிற் கூறுந் தியான பாவனைகளிற் கோசரமாமென்றலே பொருத்தமுடைத்தெனப் பாதஞ்சலர் மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை மறுத்துத் தன்னுலன்றிக் கோசரமாகா தென்பதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

பாவகமேற் றுனசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த துனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ் எனவரும்.

---

* நாலாஞ்சூத்திரத்திற் காண்க. † பெரும்பயன் - சிவபோகம்.

‡ ஈண்டுத் தன் என்பன பாதஞ்சலர்கொள்கைப்படி சிவத்தை யுணர்த்தின.

§ தன்னைப்பற்றுதல் - ஆன்மாச்சிரயம்.

நீ கூறும் பாவனை ஏனைப் பாவகங்கள்போல மன முதலிய வற்றோடு கூடிநின்று பாவிக்கும் பாவனையோ? அவற்றோடு கூடாதுநின்று பாவிக்கும் பாவனையோ? இரண்டுமின்றிப் பாவிக்கும் பாவனையோ? இம்மூவகையுமின்றிப் பசித்தவ னுண்டவனுகப் பாவிக்குமாறுபோல உணராத பொருளை உணர்ந்ததாகவைத்துப் பாவகஞ் செய்வதாகிய பாவனையோ? கூறுவாயாக என இந்நான்கினையும் முறையே மறுத்தவாறு. அற்றேல், ஒருவாற்றானும் பாவனைக் கெய்தாத பொருள் சூனிய மாம்போலும் என்பாரைநோக்கித், தன்னருளாற் பாவிப்பதுபரம் நல்பாழ் எனச் சித்தாந்தஞ் செய்தார்.

ஏனைப் பாவகங்கள் போல மன முதலியவற்றோடு கூடிநின்று பாவிக்கும் பாவகமெனின், அறிவினுலறியப்பட்ட சுட்டாகலான், அசத்தேயாம். நான் - அசை. பாவகமாம் என்பது பாவனைமாத்திரையேயன்றிப் பயனில்லை என்பதாம். பாவகத்தைப் பாவித்தல் என்புழிப் பாவித்தல் என்பது செய்தலென்னும் பொருட்டாய் நின்றது; *"உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்," †"கறைமிட றணியலு மணிந்தன்று" என்புழிப்போலக் கொள்க. மேலை வெண்பாவில் தன் என்றது தனது சத்தியை யாகலான், தன்னைப்பற்றுதலென்னுங் குற்றமாமாறு யாண்டையதென விடுப்பார், தன்னருளாற் பாவிப்பது என்றார். தன்னருளே அறியுமாறும் அதனுற் பாவிக்குமாறும் ‡உண்மையதிகாரத்திற் பெறப்படும்.

அற்றேல், பாவனையும் பாசஞானமாகலானுவ தாகலிற் சத்தாகியசிவம் அதன்கட் கோசரமாகாதென்றலொக் கும், அங்ஙனமாயினுந் தன்னருளாற் பாவிக்கவேண்டா; "ஆன்மாப் பசுத்துவம் நீங்கிய முத்திகாலத்திற் சிவனைப்போல முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களுமுடையன்" என்று ஆகமங்களிற் கூறுதலின், ஆண்டு ஆன்மாவினறிவு சிவஞானத் தோடொத்த ஞானமேயன்றிப் பசுஞானமன்மையான் அவ் வறிவா னறியப்படுங் கோசரப் பொருளென்றலே பொருத்த முடைத்தெனச் சிவசமவாதிமதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்த வழி, அதனை மறுத்துத் தன்னருளா னன்றிக் கோசரமாகா மையை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

---

* கலித்தொகை, பாலை, உஉ.

† புறநானூறு, க.

‡ ஒன்பதாஞ் சூத்திரத்துட் காண்க.

அறிய விரண்டல்ல ஞங்கறிவு தன்ஞ
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றனைக் கண்ணறியா மெய்யென்னைக்
காட்டா தறிவறிந்து கண்டு

எனவரும்.

சிவாகமங்களில் அத்துவிதமே கூறுதலின், ஆன்மாத் தன்னறிவா னறிவதற்குத் தன்னின் வேறல்ல ஞகலானும், சமமாகலின்றித் தூல சூக்குமமுறையில் தன்னறிவிற் குள்ளுமாய் நிற்றலிற் றன்னறிவினு லறிய வாராஞகலானும், தன்னறிவிற்கு வியஞ்சகமாய் அறிவித்து உயிர்க்குயிராய் நிற்றலானும் அத்தன்மையனுகிய முதல்வனைப் பசுத்துவ நீங்கிய வழியும் ஆன்மாவினறிவு தான் கண்டறிந்து தன்குணியாகிய ஆன்மாவுக்குக் கோசரமாம்படி காட்டமாட்டாது ; தன்னின்வேறின்றித் தனக்குண்ணிற்றலிற் றன்னுற் காணப்படாது தனக்குக் காட்டாகி நின்ற ஆன்மாவை யறியமாட்டாத கண்ணெளியைப்போல என்பதாம்.

அல்லன் படான் உள்ளால் நின்றுள் என்பன குறிப்பேதுக்களாகலின், இங்ஙனம் ஒருதொடராகக் கொண்டுரைக்க. ஆங்கு - அசை. அறிவினுள்ளாகலின் அறியப்படான் என்க. காட்டு - முதனிலைத் தொழிற்பெயர், கண்டறிந்து காட்டாது எனக் கூட்டுக. கண்டறிதல் - * "குழிந்தாழ்ந்தகண்" என்புழிப் போலச் சிறப்பின்கண்வந்த மீமிசை. மெய் அறியாக் கண்ணென்ன என இயைத்துரைக்க. கண்முதலியவற்றை நோக்க ஆன்மாச் சத்துச் சித்தென்பது தோன்ற மெய் என்றார்.

கண்ணறியா மெய்யென்ன என்றதற்குக் கண்ணையறியாத உடம்புபோலென்று உரைப்பாரு முளர். உடம்பிற்கு அறியுந்தன்மை யின்மையானும், உடம்பிற்குக் கண் காட்டாதலின்மையானும் ஈண்டு உவமையாதற் கேலாமையின், அது போலியுரையென் றொழிக.

அற்றேல், அத்தன்மையனுகிய முதல்வனைத் தலைப்பட்ட ஆன்மா அம்முதல்வனே டொன்றாய்ப் போதலேயன்றித் தானென வேறு நிற்குமாறின்மையிற் றன்னருளா லான்மா உணருமென வேறுபடுத்துக் கூறுதல் பொருந்தாதெனச் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி ஆசங்கைநிகழ்ந்தவழி, அதனை மறுத்து, முத்தியின் முதல்வனேடுநிற்கு மியல்பு உணர்த்து

* நாலடியார், தூய்தன்மை, ஈ.

முகத்தானே தன்னருளாலுணரு மான்மாவிற்கோசரமாமாறு வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ளுங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்

எனவரும்.

சத்காகிய சிவம் மாயாவாதிகள்போல் அநிருவசனமாய்க் கூறப்படுவ தொன்றன்மையான் முத்தியினும் அறிபொருள் வேறுண்டென்பது துணியப்படுமென்பார், அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே யதுவென்றறியறிவும் ஆங்குண்டு என்றும், அங்ஙனமறிதல்பற்றி யொன்றாய் நிற்றற்கிழுக்கில்லை யென்பார், அதுவென் றறிய விரண்டல்லன் அறிவு ணிற்ற லறியுமறிவே சிவமுமாம் என்றுங் கூறினர்.

உம்மை சிவமாயுஞ் சிவமாகாமையை விளக்கி நின்றது. அறிவும் என்ற உம்மை இறந்ததுதழீஇயது. அதுவென்னுமொன் றன் முதலான் என ஏதுப் பொருள்படக் கொண்டுரைக்க.

இங்ஙனம் ஐந்துவெண்பாக்களானும் முறையே வாக்குமனாதீதம் என்றல் பொருந்தும் கோசரமென்றல் பொருந்தாதென்னும் மாயாவாதிகளையும், கோசரமென்றல் பொருந்தும் வாக்குமனாதீத மென்றல் பொருந்தாதென்னும் நையாயிகர் முதலியோரையும், பாவனைக்குக் கோசரமாதலே யன்றித் தன்னு ணுணரும் உணர்விற்குக் கோசரமென்றல் பொருந்தாதென்னும் பாதஞ்சலரையும், பசுத்துவம் நீங்கியவழி ஆன்மாவின் ஞானத் திற் கோசரமாமென்னுஞ் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமேயன்றி ஆன்மாவென வேறின்மையின், ஆன்மாவுக்குக் கோசரமாமாறு யாண்டையதென்னுஞ் சிவாத்துவிதசைவரை யும் மறுத்து, வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலே வலியுறுத்து தலின், இவ்வைந்தும் ஒருபொருண்மேல் வந்தவாறு காண்க.

## சிவசமவாதம்

### மதம்

அற்றேல், பொருந்துமாற்றாலுஞ் சிவாகமங்களோடும் முரணுதலான் ஏனையோர் கூறுவனவெல்லாம் பொருள்படா மையின், அவற்றை மறுத்தல் அமையும்; சமவாதசைவரில் ஒருசாரார் முத்திகாலத்தில் அறுவகைக்குணங்களும் விளங்கிச் சதாசிவக்கடவுளோ டொப்பின்று ஐந்தொழில் செய்வன்

என்பதூஉம் அவற்றோடு முரணுதலின், மறுக்கப்படுவதேயாம். மற்றொருசாரார் கூறுஞ் சிவசமவாதம் பொருந்துமாற்றிற்குஞ் சைவாகமங்கட்குஞ் இயைபுடையதுபோலத் தோன்றுதலின், அவ்வொருசாரார் மதம்பற்றி ஆன்மாத் தன்னறிவானே முதல்வனை அறியுமென்றல் பொருத்த முடைத்துப்போலும்; அஃதெங்ஙனமெனின், அவர் கூறுமாறு :—

*"ஐம்புல வேடரி னையர்த்தனை வளர்ந்தென" என ஆசிரியர் உருவகமுகத்தானேகிய ஆன்மாவி னியல்பை வழிநூலாசிரியர்,—

†"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்—பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடுந் தானுக்கிப் பேணு மாபோற்-றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத் துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிரை—மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

என உவமமும் பொருளுமாகவைத்து விளங்கக் கூறினர். கூறவே, மன்னர் சாதியிற் பிறந்த மன்னவன்மகன் அம்மன்னவனை டொப்ப எல்லாக் குணங்களுமுடையனுகியும் வேடரிடத்தே தங்குதலான் அவ்வாற்றலை அறியாது மயங்கிச் சிறுமைப்பட்டு நின்று, பின் அதனை அவனறிந்து பலவகை உபாயங்களினுலும் அவ்வேடரினின்றும் பிரித்து 'நீ என்மகனுகலின் நீயும் நானும் ஒருசாதியேம், என்னைடொப்ப அரசுரிமை செய்யும் எல்லாவாற்றலு முடையை' எனத் தெரிவித்து முடிசூட்டித் தன்னைப்போலாக்கி உதவிசெய்தவழி, முன்னின்ற சிறுமை நீங்கி, அங்ஙனம் எல்லாப் பெருமையுமுடையனுய், மீள அவனுதவியை வேண்டாது தானே சுதந்திரனுய் இன்புற்று வாழ்வன்; அதுபோல, ஆன்மாச் சிவனைடொப்ப முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களையுமுடையனுயும் ஐம்புலவேடர் சுழலிற் பட்டமையாற் சிவனுந் தானும் ஒருசாதியெனத் தன்னுற்றலை அறியாது செயற்கையபத்தாற் சிற்றுணர்வுஞ் சிறுதொழிலுமுடையனுய்ச் சிறுமைப்பட்டு நின்று, பின்பு சிவன் குருவை யதிட்டித்து நின்று சிவதீக்கை செய்து செவியறிவுறுத்தி அவ்வைம்புலவேடரினின்று நீக்கி, என்னைடொப்ப நீயும் எண்குணங்களுமுடையை எனத் தெரிவித்துத் தன்னைப்போலாக்கி உதவி செய்தவழிச், செயற்கையானுகிய சிற்றறிவு சிறுதொழில்களைவிட்டு, இயற்கையானுள்ள பேரறிவுபெருந் தொழில்களின் பகுதியவாகிய எண்குணங்களுமுடையனுய்,

* இந்நூல், அ-ம் சூத்திரம். † சிவஞானசித்தி, அ-ம் சூ. க.

மீளவுஞ் சிவன் உதவிசெய்ய வேண்டாமையிற் பரதந்திரம் நீங்கிச் சிவனைப்போலத் தன்வயத்தனாய்கின்று இன்புற்று வாழ்வனென்பது பெறப்படுதலானும், *"உன்னைப்போலென்னைப் பாவிக்கமாட்டேன்" எனவும், †"எண்குணத்துளோமே" எனவும் பிறண்டும் ஆன்றே ரெல்லாம் இவ்வாறே கூறுதலானும், சிவாகமங்களில் ஆண்டாண்டுச்சிவசமமாதலே முத்தியென்று ஓதுதலானும் முத்தனாகிய ஆன்மாத் தன்னறிவானே சிவன் முதலிய எல்லாப்பொருளையும் அறிவன் என்பது.

இன்னும், "முத்திபெற்ற ஆன்மாக்கள் சிவனொடொப்பர், மலம் முழுவதும் நீங்கி விளங்கிய சிற்சத்தியுடையராகலின், யார் யார் சிவனொடொப்பாரல்லர் அவர் அவர் முழுவதும் மலம் நீங்கிய சிற்சத்தியை யுடையரல்லர், சகலர் முதலியோர் போல" என்னும் வழியளவையானுஞ் சிவசமமாதலே முத்தியென்பது பெறப்படும்.

இன்னும், முத்தியிற் சிவசமமாகாதவழிச் சுதந்திர முடையனல்லனும்; ஆகவே, ‡"பரதந்திரியங் கரைகழிபந்தம்" என ஞானமிர்தத்திற் கூறுதலானும், சிவாகமங்களினும் இவ்வாறே கூறுதலானும் முத்தியும் பெத்தமெனப் பட்டு வழுவாம். அற்றேல், முத்திபெற்ற ஆன்மாக்கள் சிவசமமாயவழிச் சிவனைப்போல ஐந்தொழில் செய்வரெனல் வேண்டும், செய்வரெனக் கொள்ளின் அநேகேச்சுர வாதமாய் முடியுமாலெனின்,- முடியாது. ஐந்தொழில் செய்யுங் கருத்தாவாதற்றன்மை சிவனுக்குக் கருணையானுள்ளது, முத்திபெற்ற ஆன்மாக்களுக்குத் தள்ளப்படாமையா னுள்ளதாகலான் ஐந்தொழில் செய்வதற்குச் சிவனொருவனே அமையுமாகலின் அவர் மிகைபடச் செய்யுமாறின்மையா னென்பது. இக்கருத்தானன்றே, §"உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என வழிநூலாசிரியரும் ஓதினர். ஆண்டுச் "சிவானுபவம்" என்றது ஆகுபெயரால் தன்னுடைய தாகிய சிவத்துவத்தை அநுபவித்தல் என்றவாறும்.

இன்னும், நூல்களின் ஆண்டாண்டுச் சிவசமமாதல் முத்தி என்பதனோடு முரணுவனவாகத் தோன்றுவனவெல்லாம் முரணுதவாறு ஆகுபெயராகவைத்துப் பொருள்கொள்ளப்படும்

---

* சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம், திருவொற்றியூர், ரு.

† திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், பொது, மறுமாற்றத் திருத்தாண்டகம், க0.

‡ ஞானமிர்தம், கஉ, அடி, க0.

§ சிவஞானசித்தி, கக-ம் சூத்திரம், க0.

என்று இங்ஙனம் சைவரிலொருசாரார் உருவ சமவாதிகளிற் சிறுபான்மை வேறுபடப் புதிதாக ஒரு மதங்கொண்டு தாங்கள் கொண்டதற்கேற்பச் சிவாகமவாக்கியங்களையுந் தமக்குவேண்டியவாறெல்லாம் இடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டு உரைசெய்து தாமே தம்மில் வியந்துகொள்வாராகலான் ஆண்டு இழுக்கென்னையெனின், நடுவுநிலைமையுடையராய்ச் சிவாகமங்களை ஓதியுணர்ந்தார்க்கு அவருரைப்பனவெல்லாம் இந்திரசாலம் போல ஆரவாரமாத்திரையேயன்றி நிலைபெறமாட்டாவாகலின், அவை ஒருபொருளாகவைத்து மறுக்கற்பாலனவல்லவாகலானும், எத்தன்மையராயினுஞ் சிவதீக்கை யுடையராய்ச் சிவாகமத்தில் விதித்தவாறொழுகி அகச்சமயத்தினிற்றலின், அவரைப் பழிக்கலாகாமையானும் அவரறிவு அவ்வளவிற்றென்று போதலே பொருத்தமுடைத்தென் றொழிக.

அற்றேல், வழியளவைக்கும் ஆகம வளவைக்கும் இயைவனபோல இத்திணை வலியுறுத்தி அவருரைத்தனவெல்லாம் ஆரவாரமாத்திரையாய்ப் போமாறு யாங்ஙனம்? அதனை அறியுங் குதூகல முடையேன் என்பையாயிற் சிறிது காட்டுதும் :—

## *மறுப்பு

மன்னவன் மகனை ஆன்மாவுக்கு உவமை கூறியதுபற்றிச் சிவசமமாதல் முத்தியெனக் கொண்டாய்; ஈண்டு வினவுதும்: மன்னவன்மகன் வேடரிலீங்கி மன்னவனைச் சார்ந்தவழி மன்னவ னேவலினின்று பணிந்தொழுகுவானே? மன்னவனை டொப்பத் தன்னுணையும் உடன்செலுத்தி அரசாட்சி செய்வானே? கூறுவாயாக. மன்னவ னேவலினின்று பணிந்தொழுகுவனெனில், தாட்டான்றிகப் பொருளினும் அவ்வாறு கொள்ளப்படும். படவே, அஃது எம்மனோர் சித்தாந்தமாகலின், உனக்கு அவசித்தாந்தமாம். இனி, மன்னவ னேவல்வழியின்று அரசாட்சி செய்யினும் அது பரதந்திரமாவதன்றிச் சுதந்தரமன்மையான் உனக்கேலாது; அதிகாரத்தைத் தன்மாட்டுவைத்து மன்னவன் வறிதேயிருப்பத் தான் அரசாட்சி செய்வனெனினும் அது பாசுபதர்மதமாய் முடியுமாகலின், உனக்குச் சித்தாந்த மன்று; மன்னவனை டொப்பத் தன்னுணையும் உடன்செலுத்திச் சுதந்திரனுய் அரசாட்சிசெய்வனென்னின், அஃது அநேகேச்சுரவாதி மதமாய் முடியும்; அன்றியுந் தந்தையைப் பணிந்தொழுகலின்றி அவன் செய்த நன்றியும்மறந்து அவனைடொப்பத் தானும் அரசாட்சி செய்வ

* இச் சிவசமவாதமறுப்புச் சிவாக்கிரபாடியத்தும் பத்தாஞ்சூத்திரத்திற் காண்க; (பக்கம், சஅஎ.)

ஞயின் அவன் நன்மக்களுள்வைத் தெண்ணப்படாமையின், ஈண்டைக் குவமையாதல் செல்லாது. இனிப், பணிந்தொழுகு தலுமின்றி அரசாட்சி செய்தலுமின்றித் தனக்கு வேண்டும் போகங்களே நுகர்ந்துகொண்டு சுதந்திரனாய் இருப்பனெனினும், *"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்பவாகலின், வேடரோடுகூடி மயங் கிச் சிறுமைப்பட்டுநின்ற தன்னை அவரி னீக்கிப் பெருமை யொடுந் தானுக்கிப் பெரியதோர் உதவிசெய்து தந்தையுமாயி னானை அவனேவல்வழி நின்று பணிந்தொழுகாது தானும் மன்ன வனெடொப்பச் சுதந்தரமாய்த் தன்னானையும் உடன்செலுத்தி அரசாட்சிசெய்யும் மகனெடொப்பவனே யாகலான் ஈண்டைக் கேலாதென்றொழிக. அஃதேல், அநாதிமுத்தனுகிய சிவனும் ஆதிமுத்தனுகிய ஆன்மாவும் ஒருசாதியென்ப துணர்ந்து கோடன்மாத்திரைக்கே மன்னவனையும் அவன் மகனையும் ஒரு புடை யொப்புமைபற்றி யெடுத்துக்காட்டிய தெனின்,—நன்றே கூறினாய்! ஒருசாதிமாத்திரையால் உனக்குப் போந்ததென்னை? மன்னவனும் அவன் மனைவியும் மன்னர் சாதியேயாயினும் மன் னவன் செய்யும் அரசாட்சி அவன் மனைவியுஞ் செய்வா ளென் றற் குரிமையின்மையின், அதுபோலச் சிவனும் ஆன்மாவுஞ் சித்தாகல்பற்றி ஒருசாதியேயாயினுஞ் சிவனெடொப்ப ஐந் தொழில் செய்யும் உரிமையுடையனல்லனென் றொழிக.

இன்னும், மன்னவன்மகன் ஏனையோர்போல ஆணையிற் பிறழுதலின்றி அந்தரங்கவுரிமை யுடைமையின், மன்னவன் செய்யும் தண்டத்தை நோக்கச் சுதந்திரனேயன்றிப், பரதந்திர முடையனல்லனாயினும் மன்னவனானவழி நிற்கும் உரிமை யுடைமையான் மன்னவனை நோக்கப் பரதந்திரனேயாவன்; அதுபோல, முத்தனுகிய ஆன்மாவும் ஏனைய ஆன்மாக்கள் போலப் பந்தமுற்றுப் பிழைபடுதலின்றி இறைபணிவழுவாது நிற்கும் அந்தரங்க வுரிமையுடைமையான் இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைபற்றிப் பொதுவியல்பினின்ற முதல்வன் செய்யும் ஐந்தொழிலை நோக்கச் சுதந்திரனேயன்றிப் பரதந்திரனல்ல னாயினும் இறைபணி வழுவாது நிற்றல்பற்றி இலயம் முதலியவற்றி னீங்கித் தன்னியல்பினின்ற முதல்வனை நோக்கப் பரதந்திரனே யன்றிச் சுதந்திரனல்லனென்றறிக. இஃதுணர்ந்துகோடற்கன்றே சர்வஜ்ஞானேத்தரத்திற் "சிவன்" என்றும் "பதி" என்றும் வேறுவைத் தெண்ணியதூஉ மென்க. சிவாகமங்களி லோரோ ரிடத்தில் "ஆன்மாப் பெத்தத்திற் பர தந்திரன், முத்தியிற் சுதந்திரன்" எனவும், "பரதந்திர னுதல்

* திருக்குறள், கக-ம் அதி. செய்ந்நன்றியறிதல், க0.

பற்றி மல வுண்மை துணியப்படும்" எனவுங் கூறுவன வெல் லாம் பொதுவியல்புபற்றிப் பதியென நின்ற முதல்வன் செய்யும் ஐந்தொழிலி னைகப்பட்டு நிற்றலும் அவற்றி னைகப்படாது நிற்ற லும் பற்றியே பிறிதில்லையாகலின், அதுபற்றித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கியுஞ் சுதந்திரனுவன்போலுமென மலையற்க.

இவ்வுண்மை உணராததூஉ மன்றி, விஞ்ஞான தீக்கையின் உடல் பொருள்களோ டொப்பச் சற்குரவன்கையிற் ரூனஞ்செய் தளித்தும், தானஞ் செய்தளித்த பொருளென்றறியும் அறிவு சலியாமைப் பொருட்டு நாளும் நாளுஞ் சிவபூசையிற் செப கன்மங்களோடொப்பச் "சிவோதாதா" என்னும் மந்திரமோதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூரீரொடுந் தானஞ்செய் தளித்துந் தாஞ் சுதந்திரரே சிவனுடைமையல்லர் எனப் பிணங் கிப் பரமசற்பாத்திரத்திற் ரூனஞ்செய்த பொருளை அபகரிக்க நினைக்கும் நினைவுடையாரோடு பேசினும் உய்தியில்லதோர் கொடிய பாவமாமென்றெழுதிக. தம்மைத் தானஞ்செய்தலாவது தாஞ் சிவனுக்குப் பரதந்திரரென் றறிந்து "அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராகி" நிற்றலேயாமென் றுணர்க.

அற்றேல், மலவாசனை நீங்குதற்பொருட்டுத் தம்மைத் தானஞ் செய்ததாகப் பாவித்தன் மாத்திரையே யாகலின், அதுபற்றி இழுக்கென்னையெனின், அங்ஙனமாக; அப்பாவனை உண்மையோ? போலியோ? எனக்கடாயிலுர்க்கு உண்மை யெனின், பரதந்திரராதற் கிழுக்கில்லை; போலியெனின், பசித்த வன் உண்டான்போல எத்தனைப் பாவகஞ் செய்யினும் பசி நீங்குதல் கண்டிலமாகலின், அதுபோலப் போலிப் பாவனையான் மலவாசனை நீங்குமாறின்மையின், அது வீண் தொழிலாய் முடியும்.

இன்னும் பாவனை போலியென்பார்க்குப் * பாவனையின் வழியவாய்ச்செய்யும் மந்திரக்கிரியைகளும் போலியாய் முடியும்; முடியவே பாவனை முதன் மூன்றுனும் அவர் செய்யுஞ் சிவதீக் கையுஞ் சிவபூசையுஞ் செபந் தியானம் முதலிய எல்லா ஆசாரங் களும் அங்ஙனம் போலியாய்ச் செய்வது தமக்கானும் பிறர்க் கானும் பயன்படுமாறின்மையின், மாணக்கரை வஞ்சித்துப் பொருள்கொண்டு தம்மூடம்பை யோம்புதற்பொருட்டுச் செய் யும் ஆரவாரமாத்திரையே போலுமென்றெழுதிக.

அற்றேல், கருடபாவனை செய்வோன் கருடனுதல் கண்டி லம்; அப்பாவனையால் விடந்தீருதல் கண்டாமாகலின், போலிப்

* பாவனையின்வழி அவர்செய்யும் என்பதும் பாடம்.

பாவனையும் பயன்றருமென்பது பெறப்படுமாலெனின், அறியாது கூறினுய். மாந்திரிகன் தன்னுடம்பைக் கருடனுகப் பாவிப்பானல்லன்; மற்றென்னையோவெனின், கருடனுக்கு அதிதெய்வமாகி நிற்கும் மந்திர மூர்த்தியாகத் தன்னை மாலைவப் பாவிப்பன். அங்ஙனம் பாவித்தவழிச் சார்ந்ததன் வண்ணமாய்நிற்கு மியல்புடைய ஆன்மா ஆண்டு அம்மந்திர மூர்த்தியாய் நிற்றற் கிழுக்கின்மையின், அதுபற்றி ஆசங்கையின்மை உணர்க.

இன்னும், பாவனைகளும் உபாசனைகளுங் கற்பித்துக் கொண்டு செய்யும் செயல் போலியென்றன் மாயாவாதிகூறுங் கூற்றுகளின், அது சைவசித்தாந்தத்திற் கேலாமை யறிக.

அற்றேல், ஆன்மாச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு மியல்புடையன் என்றற்கும், அதனுனே தன்னுற் கணிக்கப்படும் மந்திரரூபியாய் நிற்பன் என்றற்கும், விலங்குபுள்ளுக்கு அதிதெய்வமாய்நின்று அதிட்டிக்கும் மந்திர முண்டென்றற்கும் பிரமாணமுண்டாயினன்றே அதுபற்றிக் கருடபாவனை முதலாயின உண்மைப்பாவனையென்று கொள்ளப்படுமாகலின் இவற்றிற்குப் பிரமாணம் என்னையெனின், சர்வஞ்ஞானேத்தர முதலிய ஆகமங்களே பிரமாணமாமென் றறிக. அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்:—

சர்வஞ்ஞானேத்தரத்திற் பசுவும், பாசமும், அதிகாரஞ் செய்து நிற்பதாகிய பதியும், அதிகாரத்தி னெழிந்து தன்னியல்பி னிற்பதாகிய சிவமும் எனப் பதார்த்தம் நான்கென் றெடுத்துக்கொண்டு, அவற்றிற்குத் தனித்தனி இலக்கணமுணர்த்திப், பின்பு அதுகேட்ட அறுமுகக்கடவுளுக்கு அங்ஙனம் அப்பிரமேயமாய் ஒன்றேறு உவமிக்கப்படாததாய் அதிசூக்குமமாய் வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை அறியுமா றெங்ஙனமென்று ஆசங்கை நிகழாமைப் பொருட்டுச் "சிவப்பொருள் அத்தன்மைத்தாயினும் அதனை அறிதற்கு உபாயங் கூறுகின்றும், அவ்வுபாயம்வாதிக ளெவராலும் அறியப்பட்டதன்றாய்க் குருபரம்பரையின் அறியப்படுவது, ஒருவர்க்கும் யாம் கூறினேமல்லேம், அதனை நீ கேட்பாயாக" என்று அதன் பெருமை யெடுத்துக்காட்டி அநாதிமுத்தனுய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும், அத்தன்மையனுகிய சிவனே நான் எனச் சிவோகம்பாவனை செய்யுமாறும், அவ்வாறன்றித் துவிதபாவனை செய்தாற்படு மிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித், "துவித பாவனையைக் கைவிட்டுச் சிவோகம் என அத்துவித பாவனை செய்வோன் ஏகதேசமாய் நின்றறிவதாகிய சிற்றறிவினீங்கி முழுவதும்

வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வு விளங்கிச் சிவனேயறிந்து தான் சிவனேயாவன்'' எனச் சிவனே யறிதற்கு உபாயங்கூறிப், பின் அதுகேட்ட அறுமுகக்கடவுளுக்கு, மேல் உத்தேசங் கூறும்வழியும் இலக்கணங் கூறும் வழியுஞ் சிவனும் ஆன்மாவும் இருபொருளெனவைத் தோதுதலிற் சிவனின் வேறுகிய ஆன்மாச் சிவோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனையாற் சிவனே தானுகை ஐக்கியமாமா றெங்ஙனமென்று ஆசங்கை நிகழாமைப் பொருட்டு, ''ஆன்மாத் தன்னியல்பை அறியாது பசுத்துவத்தோடு கூடிய வழிப் பசுவாய் நின்றூன் ; அதுபோலத் தன்னை அறிந்து சிவத்துவத்தோடு கூடியவழிச் சிவமாய் நிற்பதற்கு ஐயமில்லை யாகலாற் றன்னையுந் தலைவனையும் பராபரபேதத்தானும், தூலசூக்கும பேதத்தானும் எப்பொழுதும் பயின்றறிதல் வேண்டும்'' என் றோதி, அற்றேல், ஆன்மாவினியல்பு தனித்துநில்லாது பசுத்துவத்தோடுகூடிப் பசு எனவும், சிவத்துவத்தோடு கூடிச் சிவம் எனவும் பல தன்மைப்பட்டு நிற்குமாறென்னையென்று மீளவும் ஐயுறுமைப் பொருட்டு, ''அதவா'' என்றெடுத்துக்கொண்டு, தெளிவு பிறவாது மீள மீள மயங்குதற் கேதுவாய வார்த்தைகளை விகற்பித்து இங்ஙனம் பல வாகச் சொல்லியென்னை யெனக்கூறி யொழித்து, எல்லாச் சங்கைகளும் நீங்கித் தெளிவுபிறத்தற் கேதுவாகத் தொகுத்து ஒரு வார்த்தையினுணர்த்துவான் புகுந்து,

''ஆன்மா அங்ஙனம் இருதன்மைப்படுமா றென்னை யென்று ஐயுறுதிகேள் : எல்லாப் பொருளின் தன்மைகளும் ஆன்மாவுக்குளவாம் ; அஃதெங்ஙனமெனின், ஆன்மாயாதனை யாதனைப் பற்றிஞன் அதனதன் சுபாவமே தன் சுபாவ மாந்தன்மை யுடைமையான் அதுவதுவாயே நிற்பன் என்றிங் ஙனம் ஆன்மாவை அறியுமாறு தொகுத்துக்கூறினுங் கண்டு கொள்க'' என்பதாம்.

இங்ஙனந் தொகுத்துணர்த்திப், பின்னும் இவ்வாறறியும் ஆன்மஞானத்தின் பெருமையும், அதனுற் பெறும் பேறும், அதனை அறிதற்கு உபாயமும், அறிந்தானது பெருமையும் விரித்துக்கூறி, ''இதற்குமேற் சொல்லற்பாலது சிறிதுமில்லை யாகலான் மனேவிகற்பங்களை யொழித்து இங்ஙனந் தன்னுண்மை யறிந்து உபாயங்களைச் செய்வோன் இங்கே சிவன் முத்தனுய், அகம்புறமெங்கும் வியாபித்துத், தற்றருமதருமியாய்த், தற்றருமம் எனப்பட்ட முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களுமுடையனுய், இங்ஙனஞ் சிவத்துவத்தைப்பெற்றுச், சிருட்டிப்படுந் தன்மை முதலியனவின்றிச் சிவசமமாவன். இத்தன்

மையுடையானுக்குத் தவஞ் செபந் தியானம் பூசை முதலியன ஒன்றும்வேண்டா ; சத்தியம் ! சத்தியம் ! சத்தியம் !, முக்காலுஞ் சத்தியம் !; இதற்குமேல் அறியற்பாலன ஒருநூலினுமில்லை" என வலியுறுத்திப், பின்னும், "ஆன்மா எல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்குமாற்றைப் பூதான்மா முதல் அறுவகைப்படுத்து விரித்து இன்னுங் கூறுதுங் கேட்பாயாக" என்றெடுத்துக் கொண்டு, பூதபரிணமமாகிய உடம்பினியல்புகளும், ஆன்மா அவ்வுடம்பைப் பற்றியவழி பூதான்மாவென நிற்குமாறும் அகத்தின் கண்ணவாகிய வாக்குக்களினியல்பும், ஆன்மா அவற்றைப்பற்றி அந்தரான்மாவென நிற்குமாறும், சூக்குமபூத முதலிய தத்துவங்களினியல்பும், ஆன்மா அத்தத்துவங்களைப்பற்றியவழித் தத்துவான்மாவென நிற்குமாறும், அத்தத்துவங்களுள்ளும் ஆன்மா எவ்வெத் தத்துவங்களைப்பற்றினன் அவ்வத்தத்துவமயமேயாய் நிற்பன் என்பதூஉம், ஆன்மாப் போதத்திருத்துவமெய்திப் புருடதத்துவமென நிற்குமியல்பும், அந்நனம் புருடதத்துவமாய் நின்று பிரகிருதி குணங்களைப் பற்றி இன்பத்துன்பங்களை நுகருமவ்வழிச் சீவான்மாவென நிற்குமாறும், சுரர் நரர் விலங்கு புள்ளுத் தாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வ மந்திரங்கள் உளவெனவும், தாவர சங்கமங்களுள் மந்திரங்களான் அதிட்டிக்கப்படாத உயிர்களில்லையெனவும், மந்திரங்களை உச்சரிக்கும் முறைமை இவ்வாறெனவும், இவ்வாறு மந்திரங்களினியல்பும், அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாப் படிகம்போல அவ்வம்மந்திரமயமேயாய் மந்திரான்மாவென நிற்குமாறும், தன்னின்வேறுகிய இவ்வைவகைப் பெயரினீங்கியவழி மேற்கூறிய அத்துவிதசாவஸ்தையாற் பரமான்மாவென நிற்குமாறும் விரித்துந் தொகுத்துங்கூறி, ஆன்மாச் சார்ந்தன்வண்ணமாய்நிற்குமென மேற்கூறியதனை மீளவும் வலியுறுத்தி, இவ்வுறுவகையுள் ஏனையவெல்லாம் உபாதிபற்றிய செயற்கையாதலும், அத்துவிதசாவஸ்தையாற் பரமான்மாவென நிற்றல் சித்தென்னுஞ் சாதிப் பொதுமைபற்றிய இயற்கையாதலுந்தெரித்துணர்த்தி, இங்ஙனமாகலான், "அத்துவித சாவஸ்தையுடையோன் ஞானக்கண்ணுற் சிவனை ஆன்மாவிற் கண்டு, முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையனாய், அவ்வப்பொருளியல்பெல்லா மறிந்து, மலவாசனைநீங்கிக், கேவலமாய் நின்று, முடிவு காண்கில்லாப் பேரின்பத்தைப் பெறுவன்" என முடிந்தது முடித்துக்காட்டி, இங்ஙனஞ் சீகண்டவுருத்திராசாரியனார் அறுமுகக்கடவுளுக்குச் சர்வஜ்ஞாஞானேத்தரத்தின் ஞானபாதஞ் செவியறிவுறுத்தருளினார். இன்னும் இதனை ஈண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக்கொள்க.

இவ்வாகமத்துள் இத்துணை வலியுறுத்திச் சிவனெடொற் றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்மஞான மொன்றே அப்பிரமேயமாய் ஒன்றோடு முவமிக்கப்படாது நின்ற அச்சிவனை அறிதற் குபாயமென்றும், அங்ஙனம் பாவிக் கவே அச்சிவனெ டொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவ னென்றும், அசுத்தப்பொருளோ டொற்றுமைப்பட்டு நின்ற ஆன்மாச் சுத்தப்பொருளா டொற்றுமைப்பட்டு நிற்குமா றெங்ஙனமென்னும் ஐயநீக்குதற்குத் தொகுத்து ஒரு வார்த்தை யாற்கூறுதுமென் றெடுத்துக்கொண்டு, ஆன்மா எதனையெதனைச் சார்ந்தான் அதனதன் சுபாவமே தன்சுபாவமாய் அதுவதுவாய் நிற்பனென்றும், இங்ஙனமாகலாற் சிவனெ டொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன்குணங்களாகிய எண்குணங்களுந் தன்றன்மை யாகக்கொண்டு சிவனேயாய் நிற்பன் ; இதுவே சிவத்துவத்தைப் பெறுதலென்றும், இதற்குமேல் அறியற்பாலன ஒருதூலிலு மில்லை ! மூக்காலுஞ் சத்தியம் ! என்று வலியுறுத்தியும், ஆன்மா எல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்குமாற்றை இன்னும் விளங் கக்கூறுதுமென் றெடுத்துக்கொண்டு, பூதான்மா, தத்துவான்மா, மந்திரான்மா, அந்தரான்மா, சிவான்மா, பரமான்மா என அறு வகைப்படுத்து, அவ்வவற்றிற் கூடியவழி அவ்வப்பெயர்பெற்று அதுவதுவாய் நிற்பனென ஆண்டாண்டு நிற்குமாறு விரித் துணர்த்தியும், படிகத்தை உவமைகூறியும், இங்ஙனம் ஏனையாக மங்கள் போலப்பொருள் கவர்ச்சிப்படுதற்கு இடங்கொடாத வண்ணம் அறுமுகக்கடவுண்மாட்டுவைத்த கருணைமிகுதியான் அங்கைபினெல்லிக்கனிபோல ஆன்மாவினியல்பு விளங்கவுணர்த் திப் பலகாலும் வலியுறுத்தி, எல்லாவாகமங்களினும் இதுசிறந்த தென்பது தோன்றச் "சர்வஞ்ஞாநோத்தரம்" எனப் பெயரு மிட்டருளிச்செய்த சிகண்டவருத்திரக் கடவுளின் திருவுளக் குறிப்போடு முரணித் தமக்கு வேண்டியவாறே இவ்வாகமத்திற் கூறப்படும் வாக்கியப்பொருளையெல்லாம் இடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டு உரைசெய்வாருமுளர். அவருரை போலி என்பது சொற்கிடக்கை முறையானும், மேற்பாயிரத்துட்கூறிய நியாயத்தாலும் விளங்கக் கிடந்தவாறறிக.

இன்னும், மதமும் மறுப்புமாகவைத்தோதப்படும் பௌட் கரம், மதங்கம், மிருகேந்திரம் முதலிய சிவாகமங்கட்குச் சுபக்கம் பொதுவகையாற் கூறிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுப்பதுமாத்திரையே கருத்தென்பதூஉம், அவ்வாகமங் களானே பரபக்கங்களினுளவாகிய ஐயப்பாட்டினீங்கிச் சுபக்கத் தைச் சிறப்புவகையான் அறியலுறுவார்க்குத் தூலாருந்தி நியாயம்பற்றி அதனைச் சிறந்தெடுத்தோதுதல் உபதேச

மாத்திரையான் உணர்த்துவனவாகிய சர்வஜ்ஞாஜ்ஞைத்தரம், தேவிகாலோத்தரம் முதலிய சிவாகமங்கட்குக் கருத்தென்ப தூஉம், இங்ஙனமாகலாற் பௌட்கர முதலியவற்றின் ஓதப்படுஞ் சுபக்கப்பொருள் சர்வஜ்ஞாஜ்ஞைத்தர முதலியவற்றின் பொருள் பற்றியே தெளிந்து கொள்ளப்படு மென்பதூஉம், மாறிக் கொள்ளரின் வழுவாமென்பதூஉம் அவ்வச் சிவாகமங்களி னியல்பு நோக்கி வன்மைமென்மைபற்றி உணர்ந்து கொள்க.

இன்னும், பௌட்கரத்திற் காட்சிப் பிரமாணத்தி னியல்பு கூறும்வழி, இந்திரியத்திற்கும் விடயத்திற்குமுளவாகிய சம்பந்தஞ் * சையோகமுதல் அறுவகைப்படுமென நையாயிகர் மதம்பற்றிக் கூறி, உதாரணமும் அவ்வாறே காட்டப்பட்டன; ஆங்காரத்தின் காரியமாகிய சோத்திரத்திற்கும் ஆகாயத்தின் குணமாகிய ஓசைக்குஞ் சமவாயசம்பந்தங் கூறுதல் மேற் பாச படலத்துட் கூறிப்போந்ததனோடு மூரணுதலின், அது சித்தாந்தமன்று; பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறிய தென்பது உனக்குமொப்ப முடிந்தது. குண குணிகளுஞ் சாதி வடிவுகளுந் தம்மின் வேறல்லவென்பதூஉம் † ஆண்டுக் கூறிப் போந்தமையின், ஈண்டு வேற்றுமைப்படுத்துக், குடவுருவத்தைக் கண் காணுங்காற் சையுத்தசமவாயமென்றும், உருவத் தன்மையைக் காணுங்காற் சையுத்தசமவேதசமவாயமென்றும் ஓதியதூஉஞ் சித்தாந்தத்திற் கேலாமையின், ‡ பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதேயாமெனக் கொள்ளப்படும். சுத்த மாயையினுண்மைக்குப் பிரமாணங் கூறும்வழிச் சுத்தாத்துவா விற் கன்மமில்லையெனச் சாதித்ததும் பிறர்மதம்பற்றிப் பொது வகையாற் கூறியதேயாமென்பது இருவினையதிகரணத்திற் காட்டிஞம். இன்னோரன்னவை யெல்லாம் உபசாரம்பற்றிப் பொதுவகையாற் கூறப்பட்டனவன்றிச் சித்தாந்த மல்லவென்பது உனக்குமுடம்பாடேயாமாகலிற், சுபக்கப்பொருளைப் பொது வகையா னூட்டிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுத்தற் பொருட்டேயெழுந்த சிவாகமங்கள் பற்றிப் பொருணுண்மை தெளியப்படாதென்பதூஉம், அவற்றை முன்னெடுபின் மலைவற உய்த்துணரவல்லார்க்குச் செம்பொருள் இனிதுவிளங்கும்

---

* சையோகமுதல் அறுவகைச் சம்பந்தங்களாவன:—சையோகம், சையுத்தசமவாயம், சையுத்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடணவிசேடியத்தன்மை என்பன. இவற்றின் விரிவைத் தருக்கசங்கிரகவுரையிற் பிரத்தியக்ஷப் பிரமாணங் கூறும்வழிக் காண்க.

† ஆண்டு என்றது பாசபடலத்தைக்குறித்தது.

‡ பிறர் என்றது தார்க்கிகரை. அவர் குணமும் குணியும் வேறெனக் கொள்ளுதலை, சகூ-ம் பக்கத்திற் காண்க.

என்பதூஉம், பரபக்கங்களைச் சிறிதுந்தீண்டாது சிறப்புவகையாற் சுபக்கமாத்திரையே கூறுதற்பொருட்டெழுந்த சர்வஜ்ஞாஜ்ஞைத் தரமுதலியவற்றில் அங்ஙனம் உய்த்துணரவேண்டாது சித்தாந்தப்பொருள் இனிது விளங்குமென்பதூஉங் கண்டுகொள்க. அற்றாகலினன்றே பௌட்கரமுதலியவற்றின் இத்துணை வலியுறுத்தியெடுத்துக் கொண்டு ஒதாததூஉஞ், சர்வஜ்ஞாஜ்ஞைக்தரமுதலியவற்றின் "இதற்குமுன் ஒருவருக்குங் கூறினேமல்லேம்: அதனை நீ கேட்பாயாக" எனவும், "இதற்குமேற் சொல்லற் பாலன ஒரு நூலினுமில்லை" எனவும், "தெளிவுபிறவாமைக் கேதுவாய்ப் பலபடச் சொல்லி என்னை" என் றெடுத்துக் கொண்டு, "சார்ந்ததன் வண்ணமாயே நிற்றல் ஆன்மாவினியல் பாம்; இங்ஙனம் ஆன்மாவி னிலக்கணந் தொகுத்துரைத்தாம் உணர்ந்துகொள்க" எனவும், "சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ் சத்தியம்!" எனவும் இத்துணை வலியுறுத்தியோதியதூஉ மென்க.

அற்றேல், இங்ஙனங் கூறியவாற்றாற் சர்வஜ்ஞாஜ்ஞைத்தரத் திற்குச் சொற்கிடந்தவாறன்றி நலிந்து பொருள்கோடல் பொருந்தாதென்ற தொக்கும்; ஏனையவெல்லாஞ் சொற்கிடந்த வாறே வேறுபொருள்படாவாயினும், ஆண்டுத் "தற்றருமதருமி" என்றது தற்றருமத்தோடொத்த தருமத்தை யுடையன் என வேறுபொருள் படுமென்றற் கிழுக்கென்னையெனின், அறியாது கூறினாய். அங்ஙனம் பொருள்கொள்ளிற் படிகம் போலத் தன்னுற் சாரப்பட்ட பொருளின்றன்மையே தன்றன் மையாகக்கொண்டு அதுவதுவாய்நிற்பது ஆன்மாவினிலக்கண மெனத்தொகுத்து ஒருவார்த்தையின்விளங்க மேலோதிய வாக்கியத்தோடு முரணுதலே மறந்தாய்போலும். இன்னும், "ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய்நின்றறிவன், ஒன்றறியும்வழி மற்றொன்றனை யறியாமையின், யாவன் சார்ந்ததன் வண்ண மாகாது நின்றறிவான் அவன் ஒன்றறியுங்கான் மற்றொன்றனை யறியாதானல்லன், சிவன்போல" என்னும் வழியனவையும் இவ்வாகமனவையை வலியுறுத்தியவாறு காண்க. இதனுனே "தற்றருமதருமி" என்றதூஉம், பின் அதனை எண்வகைப்படுத் தோதியதூஉம் மிருகேந்திரத்திற் கலை முதலியவற்றைச் "சிற்சங்க சித்து" என்றதுபோலவைத்துப் பொருள்கோடலே பொருத்தமுடைமை அறிக.

இன்னும், "தற்றருமதருமி" என்பது தற்றருமத்தாற் றருமி என வேற்றுமைத்தொகைப்பொருள்படாது தற்றருமம் போலுந் தருமத்தையுடையன் என்று அன்மொழித்தொகைப் பொருள்படுமாயின், ஆண்டுத் "தற்றருமதரும" என நிற்ப தன்றி, அன்மொழித்தொகைமேல் உடைப்பொருள் விகுதி

வாராதென்னும் வடமொழி வியாகரணவிதியோடு மூரணிக், "தற்றருமதருமி," என உடைப்பொருள் விகுதிபெற்று நிற்றல் பொருந்தாமையிற் சொல்லியல்பானும் அது பிறிதுபொருள் படுதற் கேலாமை அறிக.

அற்றேல், சார்ந்ததன்வண்ணமாய்நிற்றல் ஆன்மாவினியல் பன்று ; செயற்கை யென்றுற்படு மிழுக்கென்னே யெனின்,—அவ்வா றேதாமையானும், செயற்கை ஈண்டோதுதற்கோரியை பின்மையானும், செயற்கையாயவழி அத்துவிதபாவனையால் இரு பொரு ளொற்றுமைப்படநிற்றல் எவ்வாறென மேலோதியது பற்றிநிகழும் ஆசங்கைக்கு விடையாகாமையானும், சார்ந்த தன்வண்ணமாய்நிற்குமாற்றைப் பூதான்மாமுதற் பரமான்மா வீறுக அறுவகைப் படுத்து இன்னும் விரித்துக்காட்டுகின்றேம் என இயற்கை செயற்கை இரண்டினுஞ் சேறற்குரிய இலக்கண மாக அதனைக் கூறுதலானும், மலத்தானுய செயற்கை அறியா மையாதலுங் கலிமுதலிய கருவிகளானுய செயற்கை ஏகதேச வறிவாதலுமாத்திரையேயாகலின் இவற்றின்வேறுகிய சார்ந்த தன்வண்ணமாந்தன்மை இவைபோல மலமுதலியவற்றுனுய செயற்கையென்றற்கோ ரியைபின்மையானும், அஃதான்மாவி னியல்பென்ப தன்றிச் செயற்கை யென்றற்கேலாமை அறிக.

அற்றேல், அவ்வவற்றின் குணமே தன்குணமாதலன்றித் தனக்கென வேறுகுணமில்லாபோலு மெனின்,—ஆன்மாவுக்கு விசேடகுணமில்லையாயிற் குணகுணிகட்கு வேற்றுமை யில்லை யென்பது மேற்காட்டுதலிற் குணமில்வழிக் குணியு மில்லை யெனப்பட்டுச் சிவாத்துவிதமதமாய் முடியுமாகலின், அது பொருந்தாது. படிகத்திற்குச் சார்ந்ததன் வண்ணமாதன் மாத்திரையேயன்றி அதனைப் பற்றுந்தன்மையும், கண்ணுக்குச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றன்மாத்திரையே யன்றி அவ்வா றுகின்று அவ்வப் பொருள்களைக் காணுந்தன்மையும் வேறுள வாயினுற்போல, ஆன்மாவுக்குச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றன்மாத்திரையே யன்றி அவ்வாறுகின்று அவற்றை அறியுந் தன்மையாகிய விசேடகுணம் அவற்றின் வேறுயுண்டென்க. இவ்வுண்மை விளங்கப் புடைநூலாசிரியரும், *"இருளொளிய லாக்கண் டன்மையதாம்" எனச் சித்தாந்தஞ் செய்தார். இதனுனே தனித்துநின்றறியும் அறிவும், சார்ந்ததன்வண்ண மாய்நின்றறியும் அறிவுமெனச் சித்து இருவகைப்படுமாறும், இரண்டுந் தம்முளொவ்வாதவாறும், படிகம் மாணிக்கத்தைச் சார்ந்தவழி மாணிக்கவண்ணம் முழுதுந் தன்வண்ணமாகக்

* சிவப்பிரகாசம், உண்மை, எ.

கொண்டு நிற்றல்பற்றிப் படிகத்தை மாணிக்கமேயென அதனை டொப்புமைகூறுதலையும்; அதுபற்றி மாணிக்கத்தைப் படிகத்தோ டொப்புமை கூறுதலையாதவாறுபோல, ஆன்மாச் சிவத்தைச் சார்ந்தவழிச் சிவத்தின்குணம் முழுவதுந் தன்குண மாகக் கொண்டுநிற்றல் பற்றி ஆன்மாச் சிவமேயெனச் சிவத்தோ டொப்புமை கூறுதல் அமையும்; அதுபற்றிச் சிவத்தை ஆன்மாவோடொப்புமை கூறுதல் சாலாதென்பதூஉம், படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாய்நிற்கும் ஆன்மா மலமுழு வதும் நீங்கித் தன்னறிவு வியாபகமாய் விளங்கிய வழியுந் தன்னுற்சாரப்பட்ட சிவத்தைமாத்திரம் அறிதலன்றி மற்றொன் றனை அறிதல் செல்லாதென்பதூஉம், இதுபற்றி யன்றே சிவனுக் கடிமை எனப்பட்ட தென்பதூஉம், இன்னோரன்னவை பிறவும் அறிந்துகொள்க. இக்கருத்தேபற்றிச், * "சிவன்சீவ னென்றி ரண்டுஞ் சித்தொன்று மென்னில்.....அவனுக் கிவனுமசித் தாம்" என்றார் வழிநூலாசிரியரும்.

இதனானே முழுவதும் மலம் நீங்கிய சிற்சத்தியுடைமை பற்றி ஆன்மாவுஞ் சிவமுந் தம்முளொப்பரென் றோதிய வழி யளவையும் போலியா யொழிந்தவாறுணர்க; என்னை? மல நீங்கித் தன்னறிவுமுழுவதும் விளங்கியவழியும் அதுவதுவாய் நின்றறிதலே ஆன்மாவி னியல்பாகலின், அவ்வாறன்றித் தனித்து நின்றறிவதாகிய சிவமுந் தானுந் தம்முளொத்தல் சாலாமையா னென்பது.

இன்னும் இதனானே, நீரொடு நீரும் பாலொடு பாலுஞ் சேர்ந்தாற்போலென ஐக்கியவாதங் கூறுவார் மதமும், குட முடைந்தவழிக் குடாகாயம் மகாகாயத்தோடு கூடி ஒன்று மாறுஞ் சிறைமுறிந்தவழி யாற்றுநீர் கடனீரோடு கூடி ஒன்று மாறும் போலெனச் சிவாத்துவிதங் கூறுவார் மதமும் மறுக்கப் பட்டன. ஆகமங்களின் அவ்வாறு அவற்றை எடுத்துக்காட்டி யது ஒற்றுமைப்படச் சேர்தன் மாத்திரைக்கு ஒருபுடையொப் புமையாதல்பற்றியே பிறிதில்லை என்க.

இன்னும், "தற்றருமதருபி" என்றோதியதனை மேலவும் விரித்துணர்த்துவான் புகுந்து, முற்றுணர்தன் முதலியனவாக எண்வகைப்படத் தோதியவற்றுள், அநாதிபோதமென் றொரு குணம் முற்றுணர்வு முதலியவற்றின் வேறுவைத் தெண்ணப் பட்டது; படவே, அஃது அநாதி முத்தத்தன்மையென்னுங் குணத்திற்குப் பரியாயப் பெயராய் அநாதியே ஞானம் விளங் குதல் எனப் பொருடருவதேயாமாகலின், அக்குணம் அநாதி

* சிவஞானசித்தி, கக-ம் சூத்திரம், கக.

முத்தனுகிய சிவனுக்கன்றி இடையே முத்திபெற்ற ஆன்மாவுக் கில்லையென்பது உனக்கு மொத்தலான், அநாதிபோதனல்லாத ஆன்மாவுக்கு அநாதிபோதத்தன்மை கூறியது மாணிக்கவொளி முழுவதுந் தன்னேச்சார்ந்த படிகத்தில் விளங்கினுற்போலச் சிவனுக்குரிய தருமந் தன்னேச்சார்ந்த ஆன்மாவின் மாட்டு விளங்குதன்மாத்திரைபற்றி யாகலின், ஏனைக் குணங்கள் ஆன்மாவிற் கோதியதூஉம் அவ்வாறேயாமென்பது தெளியக் கிடந்தவா றறிக.

இன்னும், பௌட்கரம் மதங்கம்முதலிய சிவாகமங்களிற் சிவனுக்குரிய எண்குணங்களே யன்றி அவற்றொடொப்ப வேறுய் ஆன்மாவுக்கு எண்குணங்களுளவென யாண்டானும் ஓதாமை யானும், "தற்தருமதருமி" என்பதற்குத் தற்தருமமே தனக் குத் தருமமாக வுடையனென்னுது தற்தருமமாகிய சிவத் துவத்தோ டொப்ப அதனின் வேறு தருமமாகிய சிவத்துவ முடையனெனப்பொருள் செய்தல் அவசித்தாந்தமென்றுழிக.

அதுவதுவேயாய் நின்றறிதல் ஆன்மாவி னியல்பாகலின், ஆன்மா மலமுழுவதும் நீங்கிச் சிவத்தைச் சார்ந்தவழித் தன் னறிவு முன்போல ஏகதேசமாதலின்றி வியாபகமாய் விளங்கி னும், மாணிக்கத்தை முழுவதும்பற்றிய படிகம் அம்மாணிக்க மாத்திரையேயன்றி மற்றொன்றனையும் பற்றுதவாறுபோல அச் சிவத்தையேயன்றி மற்றொன்றனையும் அறியுமாறில்லை எனவும், மாணிக்கத்தினெளி படிகத்தின் முழுவதும் விளங்காதவழி விளங்காத பாகத்தான் மற்றொன்றனைப் பற்றுமாறுபோலச் சிவத்துவமாகிய எண்குணங்களும் தன்பால் முழுவதும் விளங் காதவழி மற்றொன்றனையும் அறியும்; அறியவே அதுவதுவாய் அழுந்துந் தன்மையானது பந்தத்திற் கேதுவாமாகலின், அங்ஙன மாகாமைப் பொருட்டுச் சிவத்துவம் முழுவதுந் தன் பால் விளங்கும்படி சிவோகம்பாவனையில் உறைத்து நிற்றல் வேண்டும் எனவும் அறிக.

அற்றுகலினன்றே சிவதீக்கையிற் *பிராசாதநெறியானே ஆன்மாவைச் சிவனிடத்தில் †யோசித்துப், பின்னுஞ் சிவ னுடைய எண்குணங்கள் அதன்மாட்டு முழுவதும் விளங்கும்படி ஒரோவொன்றனை மும்மூன்றுகுதியான் விளக்குவித்துச் சிவசம மாகச் செய்வதூஉமென் றுணர்க.

இவ்வாறன்றிச், சிவன்குணத்தோ டொப்ப வேறுகுண முடைமையே சிவசமமென்னுஞ் சொற்குப் பொருள்

* பிராசாதநெறி-பிராசாதமந்திரத்தை உச்சரிக்கும் மார்க்கம்.

† யோசித்தல் - சேர்த்தல்.

என்பாரைக் குணங்களொருபுடையொத்தலாற் சிவசமமோ? மூழுவது மொத்தலாற் சிவசமமோ? எனக் கடாயினர்க்கு ஒருபுடையொத்தலாற் சிவசமமென விடுப்பின், ஒருபுடை யொக்குமென்பது எல்லா வாதிகட்கும் உடம்பாடாகலின், அதனுன் உனக்குப்போந்ததொன் றின்மையானும், முழுவது மொத்தலாற் சிவசமமென விடுப்பின் முழுவதுமொத்தவழி ஒன்றே யாகலின் இருபொருளாய் நிற்குமா றின்மையானும், குணங்களான் வேற்றுமை யின்றியினுங் குணிப்பொருள் வேறுதல் அமையுமெனின், சைவசித்தாந்தத்திற் குணமே குணியுமாய் நிற்பதாகலின் அதனை மறந்து நையாயிகர் மதத் தில் வீழ்ந்து குணமுங் குணியுந் தம்முள் வேறெனக்கொண்டு இரண்டிற்குங் குணங்களொன்று குணியான் வேறென்றல் பொருந்தாமையானும், குணங்களின் வேற்றுமை யில்வழிக் குணிகளின் வேற்றுமை பெறப்படாமையானும், நித்தப் பொருள்களின் வேறுபாடு தெரிப்பதற்கு விசேடமென்றொரு பதார்த்தம் உண்டெனத் தார்க்கிகர் கொண்டதுபோலச் சைவ சித்தாந்தத்திற் கொள்ளாமையின், இலக்கண வேறுபாடே இலக்கியத்தின் வேறுபாட்டைத் தெரிவிப்பதாகலானும், இத னானே அதுவதுவாய்நின் றறிதலாகிய பொதுவிலக்கணமாத்தி ரையேயன்றி ஆன்மாக்களுக்குத் தனித்தனி சிறப்பிலக்கணங்க ளுளவென்பதும் பெறப்படும்; அற்றுகலினன்றே மலசத்திகள் பலவாயின; அவை இவையென்பது உண்மையதிகாரத்திற் காட்டப்படுமாகலின் அதுபற்றி ஆசங்கையின்மையானும், இன்னும், சிவமும் ஆன்மாவும் இலக்கணத்தாலொன்றுபவழிப் பதி பசு என வேறுபடுத்தெண்ணுதல் பொருந்தாமையா னும், பசுத்துவசாதி வேறுகலின் அதுபற்றி வேறெண்ணிய தெனிற் பசுத்துவம் உபாதியாதலன்றிச் சாதியாகாமையின் அங்ஙனங் கூறுதல் சாதி இது உபாதி இது என் றறியாதார் கூற்றேயாகலின், அதுபற்றி வேறெண்ணுதல் பொருந்தாமை யானும், இதனானே பசுவாய்நின்ற ஆன்மசாதி வேறு, சிவமாய் நின்ற ஆன்மசாதி வேறெனக்கொண்டு அவ்விரண்டற்கும் அத்துவிதங் கூறுதல் சர்வஜ்ஞாஞேத்தரத்தின் கருத்தெனத் தமக்குரிய நயத்தைவிட்டு மாயாவாதி மதம்பற்றி உரைசெய்த லும் போலியாகலானும், இன்னும், சிவனும் ஆன்மாவும் இலக் கணத்தான் ஒன்றுபவழிச் சிவனை மறைக்க மாட்டாத ஆணவ மலம் ஆன்மாவுக்கு * ஆவாரகமாதல் செல்லாமையானும், ஞாயிற்றை இருள் மறைத்தல் கண்டிலமாகலானும், சிவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என எல்லாச் சிவாகமங்களும்

* ஆவாரகம்-மறைத்தல்.

முழங்குதலானும், பிறவாற்றானுஞ் சிவசமமென்னுஞ் சொற்கு அது பொருளன்மை உணர்ந்துகொள்க.

இங்ஙனஞ் சிவாகமங்களேயும் பொருந்துமாறுகளேயும் முன்னெடுபின் மலிவறநோக்கிப் பொருண்மை துணியமாட்டாதார், ஐந்தொழிலினேவப்பட்டுப் பிணிப்புண்டு முன்னின்ற பரதந்திரத்தை நோக்கி முத்திபெற்ற வான்மாச் சுதந்திரனென்றோதப்படும்; அங்ஙனமாயினும் அதுவதுவாய் நிற்குமியல்பானே உபாதியினீங்கிச் சிவமேயாயவழிச் சிவமொன்றுனேயே அறிந்து நிற்பதாகலிற் சிவனுக் கடிமையாமென்னும் உணர்வு நிலைபெறும்படி சிவதீக்கையினுஞ் சிவபூசையினும் மந்திர முதலிய மூன்றானுந் தானஞ் செய்தளித்த பொருளாகலான் அதனே நோக்கிப் பரதந்திரனேயாமென்பது முணராது, *"துன்பமா மெல்லாம் பரவசனுய்த் தான்றுவளி—லின்பமாந் தன்வசனு யேயிருக்கில்" என்றதும் இக்கருத்தே பற்றி ஓதியதென்பதற்கு ஆண்டுத் "துவளில்" என்றதே சான்றுமென்பது முணராது, மாசு நீங்கியவழி ஆடையின் வெண்மை ஆடை முழுவதும் விளங்கினுற்போல மலநீங்கிய வழி ஆன்மவியாபகம் முழுதினும் விளங்கிகின்ற ஆன்மஞானம் முன் ஏகதேசத்தின் விளங்கிச் சிற்றறிவாய்நின்றதனே நோக்கப் பேரறிவெனப்படும்; அங்ஙனமாயினும் வியாபக முழுதினுஞ் சிவமாய் நின்று சிவமொன்றனேயே அறிவதன்றி மற்றொன்றனே அறியுமாறின்மையின், முழுதும் ஒருங்கே யுணரும் பேரறிவாகிய சிவஞானத்தை நோக்கச் சிற்றறிவேயா மென்பது முணராது, †"பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்—பெருகி" என்றதும் இக்கருத்தே பற்றியோதியதென்பதற்கு †"நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே" என ஆண்டோதியதே சான்றுமென்பது முணராது, சிவத்துவமுழுவதுந் தன்மாட்டு விளங்குதலாற் சிவனதாகிய சுதந்தரமும் முற்றுணர்வுந் தானுடையனுபினும், ‡"ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடலி—ஞழி முகவாது நாணுழி" என்னும் நியாயத்தாற் றன்னுல் அறியற்பாலது சிவமொன்றே யென்பது முணராது, தனக்குவேண்டும் பெரும்பயனிற் சிறிதுங் குறைவின்மையின் ஏனையவற்றை அறியாமை பற்றி ஒரு தாழ்வில்லே யென்பதுமுணராது, அதுவதுவாய்நின் றநுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும் அறிவுழிச் சிவாநுபவ விளைவிற் குறைபடுமாகலின், ஏனையவற்றை யறிதல் முத்திப் பெரும்பயனுக்கு இடையூறென்பதும் ஏனையவற்றையறியாமையே முத்திப்

---

* திருக்களிற்றுப்பாடியார், சஉ.

† சிவஞானசித்தி, சூ-ம் சூ. சஅ.

‡ வாக்குண்டாம். ககூ.

பெரும்பயனுக்குச் சிறந்த காரணமென்பது முணராது, இக் கருத்தேபற்றியன்றே * "இன்பங் கொடுத்தலிறை யித்தைவினை வித்தன்மலம்" என்றோதியதென்பதூஉ முணராது, எண்குணங் களின் அநாதிபோதமென முற்றுணர்வின் வேறுவைத்தெண்ணி யது அநாதிமுத்தத் தன்மைக்குப் பரியாயப் பெயரேயாகலின் அதுவும் அதனே டடனெண்ணிய ஏனைக் குணங்களும் அநாதி முத்தனுகிய சிவனுக்கே யுரியகுணங்களென்பது முணராது, அக்குணங்கள் முழுவதும் படிகம்போலப் பற்றியதன் வண்ண மாய்நிற்கு மியல்புடைய ஆன்மாவின்மாட்டு விளங்கிய உபசாரத் தால் அவையே ஆன்மாவிற்குரிய குணங்களுமாமென்பது முண ராது † "வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை" என்னும் முறையானே முடவன் மலையிற்றேனை அவாவி வாயூறினைற் போலச் "சிவனேடொப்ப யாமும் எல்லாமறிந்து ஐந்தொழில் செய்வேமாக" என்றெண்ணும் ஆசைமிகுதிப்பாட்டாற் சிவாகமங் களின் ஓரோரிடங்களின் ஆன்மா முத்தியிற் சுதந்திரனெனவும், முற்றுணர்வினனெனவும், எண்குணமுள்ளா னெனவும், சிவ சமமாவ னெனவும் மேற்கூறிய முறைமைபற்றியோதிய வாக்கி யங்கண்மாத்திரையே எடுத்துக்கொண்டு தமக்கு வேண்டியவா றெல்லாம் வலியுறுத்தி உரைசெய்து, சிவகதி, சிவலயம், சிவ யோகம், சிவசாயுச்சியம், சிவாநந்தியம், சிவதாதான்மியம், சிவைக்கியம் என்பனவும் ஆகுபெயராற் சிவசம மென்னும் பொருள் பயக்குமென மாறிக் கூறித் தாமே தம்மை வியந்து கொள்வர். அதனுற் றம் மாணுக்கரை வஞ்சித்தன்மாத்திரையே யன்றித் தம்மாசை நிரம்புமாறில்லை யென்றொழிக.

அற்றேல், ஆன்மாச் சிவனே டத்துவிதமாய்நிற்பனென் பது பெறப்படுமாயினன்றே அதுபற்றிச் சிவசமமென்று உப சரித்துக் கூறியதென்றதமையும்; அத்துவிதமாய் நிற்குமாறெங் ஙனமெனின், அஃது அத்துவித மென்னுஞ் சொற்குப் பொரு ளுணரவே இனிது விளங்கும். அற்றேல், அதற்கென்னியோ பொருளெனின், காட்டுதும்:—அத்துவிதம் என்னுஞ் சொல் லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னும் மூன்றனுள் ஒருபொருள் பயக்கும். அவற்றுள், இன்மைப் பொருள் கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை ஒருபொருண்மாத் திரையினன்றி இரண்டுமுதலியவா யெண்ணப்படும் பொருள் களி னில்லாமையான் அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதேயா மெனவும், ஒருபொருளாயினுங் குண குணியென வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலம் ஒன் றுதலின்மையின் அத்துவித மென்பது உபசாரச் சொல்லாய்

* உண்மைவிளக்கம், நி0. † நாலடியார், பழவினை, ரு.

முடியுமாகலாற் றன்னின் வேறு யொருபொருளு மின்றித் தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கபபடுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பரப்பிரமப் பொருளென்பது அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனக் கோடலின், அவர் "கேவலாத்துவிதிகள்" என வழங்கப்படுவர்.

இராமாநுசர் சிவாத்துவிதசைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைப்பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொண்டு, சத்திசங்கற்ப முதலியகுணங்கள் பரப்பிரமப் பொருட்கு உளவென்று உபநிடதங்களிற் கூறுதலானும், அவை செயற்கைக் குணமென்றற்கோ ரியைபின்மையானும், பசுபாசங்களதுண்மையும் உபநிடதங்களு ளோதப்படுதலானும், அவற்றொடுமுரணிக் கேவலாத்துவிதமெனக் கோடல் பொருந்தாமையிற் றன்னேடியையுடைய பசுபாசங்களானும், தன்குணங்களாகிய சத்திசங்கற்ப முதலியவற்றானும், விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை; ஒன்றென்பதே அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலின், அவர் "விசிட்டாத்துவிதிகள்" என வழங்கப்படுவர்.

பேதவாதிகள் மறுதலைப்பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன்றெனப் பொருள்கொண்டு, அங்ஙனங் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது முண்டென்றற் கிழுக்கின்மையின், அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்குமென்று போவர். அவரெல்லாரும் அத்துவிதமென்ற சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாமெனக் கொண்டு தத்தம் மதங்களோடு மூரணுமைப் பொருட்டுக் கேவலமென்றும், விசிட்டமென்றும், மறுதலையென்றும் அடை கூட்டி இடர்ப்பட்டுப் பொருள்கொள்வர். அவருள், மாயாவாதிகள் கூறுங் கேவலமும், பேதவாதிகள் கூறும் மறுதலையுஞ் சுருதிகளோடு மூரணுதலின், ஈண்டைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசிட்டமென்பது பொருந்துமாயினும் அத்துவிதமென்னுஞ் சொற்குப்பொருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது; என்னை? ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக் கூறலமையும்; அவ்வாறன்றி "அத்துவிதம்" என உய்த்துணரவைத் தோதவேண்டாமையானும் ஒன்றெனப் பொருள் கொள்ளின், மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேட மின்மையின் "அத்துவிதம்" என்றதுபற்றி ஆண்டொரு பயன்படாமையானு மென்க.

மற்றென்னையோ அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனின், சித்தாந்தசைவ ருரைக்குமாறு காட்டுதும்:—"அது

நீ ஆகின்றாய்" எனவும், "அது நான் ஆகின்றேன்" எனவும், "அது இது ஆகின்றது" எனவும் மூவிடம்பற்றி நிகழும் "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பது ஒருபொருள் நீ என்பது ஒருபொருளாகலின், ஒருபொருள் மற்றொருபொருளாமா றியாங்ஙனமென்னும் ஐயம் நீக்குதற்கெழுந்ததாகலின், அது இதுவாதற் கேதுவாய் அவ்விரண்டற்கு முளதாகிய சம்பந்தவிசேடமுணர்த்துதலே அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென் றுணர்ந்து கொள்க.

அற்றேல், அத்துவிதமென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம் ஐக்கியமோ? தாதான்மியமோ? சமவாயமோ? சையோகமோ? சொரூபமோ? வேறோ? எனக் கடாயினார்க்கு, யாற்றுநீருங் கடனீருந் தம்மிற்சேர்ந்தாற்போலவும், குடாகாயமும் மகாகாயமுந் தம்மிற் சேர்ந்தாற்போலவும் ஐக்கியமெனின், அங்ஙனஞ்சேர்ந்தவழி ஒருபொருளேயாகலின் ஒன்றெனவே அமையும்; அத்துவிதமென்று உய்த்துணரவைத் தோதவேண்டா; அன்றியும் ஒன்றியவழி அதுவதுவாய்நின் றறிதலாகிய ஆன்மாவினிலக்கணம் முத்திகாலத் தில்லையெனப்பட்டு வழுவாமாகலின் அது பொருந்தாமையானும், குணகுணிகட்குத் தம்மினுளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனைப்போலக் குணிப்பொருளாய் நிற்பதன்றி முதல்வனுக்குக் குணமாகாமையின் அவ்வாறியைதல் கூடாமையானும், தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறுஞ் சமவாயமென்ப தொன்றின்மையானும், விரலும் விரலுஞ் சேர்ந்து நின்றாற்போலச் சையோகமெனின், அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருள்கட்குக் கூடாமையானும், யாதானுமோ ரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின், அது மகாவாக்கியப்பொருளை வலியுறுத்துதற்கெழுந்த அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளாகாமையானும், சொரூபசம்பந்தமாத்திரையாற் சிவாநந்தத்தை அநுபவித்தல் கூடாமையானும், இவற்றின் வேறாய் இன்னதென்றறியவாராத அநிர்வசனமெனின், அங்ஙனங் கூறுதல் மாயாவாதி கூற்றாய் வழுவாமாகலானும் அவையெல்லாம் ஈண்டைக்கேலாமையின், வேறு விடுக்குமா றென்னையெனிற் கூறுதும் :—

ஒருபொருளே அவயவ அவயவிகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட் டொன்றாய்நிற்றற் கேதுவாகிய தாதான்மியமுமெனத் தாதான்மியசம்பந்தம் இருவகைப்படும். அவற்றுள்,

முன்னையது தாதான்மியமென்றும் பின்னையது அத்துவிதமென்றும் வழங்கப்படும்; அத்துவிதமென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாற்றுன் வேறுபொருள் தருமாறின்றி அன்மைப் பொருள்பற்றிஇரண்டன்றென வேற்றுமைப்படாமையை விளக்கி நிற்றலானென்க. இதுவே ஆசிரியர்கருத்தென்பது, *"அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு" என்றதனுலும், புடைநூலாலாசிரியர், †"பிறிவருமத் துவித மாகுஞ்—சிறப்பினதாய்" என்று உடம்பொடு புணர்த்தோதிய தனுலும் அறிக.

இவ்வத்துவிதம், அபேதசம்பந்தமாகிய ஐக்கியமுமன்றிப், பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப், பேதசம்பந்த மாகிய சையோகமு மன்றிக், கலப்பும் உடனுதலும் வேறுதலு மாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி அம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாகலான், இவ்வத்துவிதத்திற்கு ஒரோரிடங்களின் ‡"அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்" எனவும், §"வானகத்தில் வானும் மணத்தின் மணமும்போல்" எனவும் அபேத வுவமையும், $"பண்ணியு மோசையும் போலப் பழமதுவு—மெண்ணுஞ் சுவையும்போல்" எனவும், ¶"நீரு மிரதமும்போ—லாங்கா ணரனுருள்" எனவும் பேதாபேத வுவமையும், **"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்து" எனப் பேதவுவமையும் ஒருபுடையொப்புமைபற்றி எடுத்துக்காட்டுபவாகலின், இங்ஙனந் தம்முண் முரணுவனபோல வேறு வேறெடுத்துக் காட்டுதல்பற்றி மலையற்க; இம்மூன்றியைபுந் தன்கட்டோன்ற இவற்றிற்கு வேறுய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது ஆன்மபோதமுங் கண்ணெளியுந் தம்முள் அத்துவிதமாய் நிற்றலாமென்க. ††"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்—காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், ‡‡"காட்டக்கண்டிடுந்தன்மை யுடைய கண்ணுக்— கேயுமுயிர் காட்டிக்கண்டிடுமா போல வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன்" எனவும், §§"அறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகும்" எனவும்

---

* இந்நூல் இரண்டாஞ்சூத்திரம், முதலதிகரணத்தின் ஏது.

† சிவப்பிரகாசம், பாயிரம், எ.

‡ இந்நூல், அ-ம் சூ. ச-ம் அதிகரணத்து உதாரணம், க.

§ துகளறுபோதம், நிஎ.

$ இந்நூல், உ-ம் சூ. க-ம் அதிகரணத்து உதாரணம், கூ.

¶ துகளறுபோதம், நகூ.

** சிவஞானசித்தி, கக-ம் சூ. கஉ. †† இந்நூல், கக-ம் சூ.

‡‡ சிவஞானசித்தி, கக-ம் சூ. க. §§ சிவப்பிரகாசம், பாயிரம் எ.

மூன்று நூலாசிரியருஞ் சித்தாந்த முடிபுணர்த்தும்வழி இதனையே எடுத்துக்காட்டியவா றறிக.

இவ்வத்துவிதம், ஏனையோர் கூறும் அத்துவிதம்போலக் கேவலமென்றுதல், விசிட்டமென்றுதல், மறுதலையென்றுதல் யாதானு மொன்றன் விசேடிக்கப்பட்டுநின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்றது யாதானு மொன்றன் விசேடிக்கப்படாது நிற்றலே; அது "விசிட்டசத்தை" "சுத்தசத்தை" எனத் தார்க்கிகர்கூறும் வாய்பாட்டானு மறிக. ஏனையோர் கூறும் அத்துவிதங் கேவலமுதலிய வற்றன் விசேடிக்கப்படாதவழி அவர் கூறும் பொருடருதற் கேலாமையின், அவையெல்லாஞ் சுத்தாத்துவித மாகாமையுங் காண்க.

இங்ஙனம் ஒருபொருள் இருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டுநிற்குந் தாதான்மியம் போல, வியாபகமும் வியாப்பியமுமான இருபொருள் ஒருதன்மையான் ஒற்றுமைப்பட்டுநிற்குந் தாதான்மிய சம்பந்தம் ஒன்றுண்டெனவும், அதுவே அன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்னுஞ் சொல்லா லுணர்த்தப்பட்டதெனவும் அறிய மாட்டாதார் அத்துவிதமென்னுஞ் சொற்குத் தத்தமக்கு வேண்டியவாறே பொருள் செய்வாரும்; "திலத்தின்கண்ணே தயிலம்போல முதல்வ னெல்லாப் பொருளினு மகமும் புறமுமாய் விரவிநிற்பன்" என்னுஞ் சுருதியும், "ஆன்மா எதனை எதனைப் பற்றினன் அதனதன்வண்ணமே தன்வண்ணமாகக் கொண்டு அதுவதுவாய் நிற்பன்" எனத்தொகுத்து ஒருவார்த்தையிற் றெளியவுணர்த்துஞ் சுருதியும், "முப்பொருளுஞ் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும்போல ஒன்றற் கொன்று தூல சூக்குமங்களா மியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்" என்னும் சுருதியும், இன்னும் இவைபோல்வனபிறவும் பயின்றறியாமையிற் *"கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்—பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை—நல்லா ரிடைப்புக்குநாணுது சொல்லித்தன்—புல்லறிவு காட்டி விடும்" என்னும் முறைமையாய்த் தாங்கற்றதுகொண்டு முன்னெடுபின் மலிவற நோக்குமாறின்றிச், சிவதீக்கையின் அத்துவசுத்தி செய்தபின் ஆன்மாவைத் துவாதசாந்தத்திற் சிவனோடு சம்பந்தப்படுத்திச் சிவனுக்குரிய எண்குணங்களையும் ஆன்மாவின்மாட்டு விளக்கிச் சிவசம

* நாலடியார், அவையறிதல், ச.

மாகச்செய்த முறைமையும் மறந்து, சாங்கியர்மதத்தில் வீழ்ந்து, மூப்பொருட்குஞ் சன்னிதிமாத்திரையே சம்பந்தம் பிறிதில்லை யெனத் தம் மறிவின்மையைப் புலப்படுத்திச், சுத்தாத்துவித மெனச் சைவத்திற் கூறும் வாய்பாட்டோடு முரணுமைப் பொருட்டு அநாதிமுத்தனுகிய சிவனும் இடையே முத்தனுகிய ஆன்மாவும் சுத்தமாதற்சாதியொருமையே பற்றிச் சுத்தாத்துவிதமென வழங்கப்படுமென்று போவாரு மாயினரென் றெழுதிக.

மூப்பொருள்களுள், ஆன்மாச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு மியல்புடைமையின் எவ்வெவற்றைச் சார்ந்தான் அவ்வவற்றோடு சார்தன்மாத்திரையே அத்துவிதமாய்த், தத்தம் வண்ணமாகச் செய்யும் அவ்வவற்றை நோக்கத் தூலமாதலுடைமையின் அவ்வவற்றின் வியாப்பியமேயாய் நிற்பனென் றுணர்க. இப்பொருளே பயப்ப * "வசித்திட வரும் வியாபி" என்னூர் வழிநூலாசிரியரும். அங்ஙனம் நிற்குமுறைமையுள்ளுந் தனக்கு அந்நிய சாதியாகிய ஏகதேசப்பொருள்களைச் சார்ந்து அவற்றின் வியாப்பியமாய் நிற்றல் மலத்தானுகிய செயற்கை யெனவும், சார்ந்ததன்வண்ணமாய் நின்றறியும் அறிவாகியதன்னை நோக்கச் சூக்குமமாய்த் தன் சாதியாகிய சிவத்தைச் சார்ந்து அதனின் வியாப்பியமாய் நிற்றல் இயற்கையெனவுந் தெரிந்துணர்ந்து கொள்க. இவ்வாறன்றித் தன்சாதியாகிய சிவத்தின் வியாப்பியமாய்நிற்றலும் ஏனையவற்றின் வியாப்பியமாதல்போலச் செயற்கையென்றல், சார்ந்ததன்வண்ணமாய் நின்றறிதல் செயற்கை யென்பார் கூற்றேயாகலின், அது பொருந்தாமை மேற்காட்டியவாற்றுன் அறிக.

அற்றேல், ஈண்டு ஓதியனவெல்லாம் ஒக்கும்; முத்தியில் ஆன்மாச் சிவானந்தத்தை அநுபவிப்பனென்றற்குப் பிரமாண மென்னையெனின், †"சிவாநுபவம் சுவாநுபூ திகமாம்" என்றற்றொடக்கத்துச் சுருதியே பிரமாணமென்க. இன்னும், "சிவாநந்தம் ஆன்மாவால் அநுபவிக்கப்படுவது, ஆநந்தமாகலின்; உலகாநந்தம் போல" என்னும் வழியளவையும் பிரமாணமாதல் கண்டு கொள்க.

அற்றேல், அநுபவிக்கப்படுவன வெல்லாஞ் சடமாதல் காண்டு மாகலின், அதுபோலச் சிவாநந்தமுஞ் சடமாவான் செல்லும் பிறவெனின், அவ்வாறே அறியப்படுவனவெல்லாஞ் சடமாதல் காண்டு மாகலின், அதுபோலச் சிவமும் அறியப்படிற் சடமாவான் செல்லுமென்பதுபற்றிச் சிவம்ஞேயப்பொருளன் றென்றல் வேண்டும்; வேண்டவே, உணராத பொருள் சூனிய

* சிவஞானசித்தி, சூ-ம் சூ. உ0. † சிவஞானசித்தி, அ-ம் சூ. க சை.

மெனப்பட்டு அவசித்தாந்தமா மாகலின், அது கடாவன் றென்க.

அற்றேல், சத்தாகிய சிவம் ஏனையபோலன்றிச் சுட்டிறந்து நின்றறியப்படும் வேற்றுமை யுடைமையான் அவைபோலச் சடமாவான் செல்லாதெனின்,—நன்று சொன்னாய்! சுட்டிறந்து நின் றறியப்படும் பொருள் சுட்டிறந்துநின் றறிந்தே அநுபவிக் கப்படுவதாகலிற் சுட்டியறிந் தநுபவிக்கப்படும் ஏனையபொருள் கள்போலன்றி வேற்றுமை யுடைமையான் அவைபோலச் சடமாவான் சேறல் பாண்டைய தென்க. இன்னும், ஆன்மாவா லறியப்படும் பொருளெல்லாம் அவனால் அநுபவிக்கப்படும் பொருளேயாமென்னும் அவிநாபாவத்திற்கு யாண்டும் இழுக் கின்மையானும் ஆன்மாவால் அறியப்படுஞ் சிவாநந்தம் அவனால் அநுபவிக்கப்படுமென்றற்கு ஐயமென்னை யென்றுழிக.

இதனானே சிவாநந்தம் அநுபவப் பொருளாயிற் போக்கிய ரூபமோ போகரூபமோவென்று ஆசங்கித்துக் கூறுவார் கூற்றும் பொலியாயவாறு காண்க. ஆன்மாவுக்குப் பிரமேய ரூபமாய் ஞேயமெனப்பட்டன வெல்லாம் அவனுக்குப் போக்கி யமா மென்க.

அற்றேல், இம்முறைமைபற்றிச் சிவனுக்கு ஞேயமெனப் பட்ட பசு பாசங்கள் அவனுக்குப் போக்கியமாம்போலு மெனின்,—அறியாது கூறினாய். அறிந்த பொருளில் அழுந்து தலே சார்ந்ததன்வண்ணமாயறிதல்; அதுவே அநுபவமென் னுஞ் சொற்குப் பொருளாகலின், அவ்வியல்பு ஆன்மாவிற்கே யன்றிச் சிவனுக் கின்மையாற் சிவனுக்கு எல்லாப் பொருளும் அறியப்படும் ஞேயமாதன்மாத்திரையே யன்றி அநுபவிக்கப் படும் பிரமேய ரூபமாத லின்மையிற் போக்கியமாவான் செல்லாமை உணர்க.

இன்னும், பிரமாணரூபமாகிய ஆன்ம சிற்சத்தி சிவனுக் காக, தனக்காக, தன்னைடொத்த பிற ஆன்மாக்களுக்காக மெய்யாகிய நிர்ணயவுணர்விற்கு விடயமாதல் போல்வதோர் ஞேயமாதன்மாத்திரையே யன்றிப் பிரமேய மாதலில்லை யென் பதற்குப் பௌட்கரத்தில், "ஆன்மாவே பிரமாதா, வியஞ்சகத் தால் விளங்குவதாகிய ஆன்மஞானமே பிரமாணம், அதனறிதல் வியாபாரமே பிரமிதி, ஏனையவெல்லாம் பிரமேயம்" என்னுஞ் சுருதியும், "ஒருவாற்றானும் பிரமாணம் பிரமேயமாகாது; பிரமேயம் பிரமாணமாகாது" என வரைசெய்துவைத்தோதி, இதனானே "பிரமேயமாய் அறியப்படுவனவாகிய ஐம்பொறி முதலியவற்றைப் பிரமாணமென்றல் பொருந்தாது" என

நையாயிகர் முதலியோரை மறுத்துச் சித்தாந்தம் வலியுறுத்திய சுருதியுமே சான்றாகலான், ஒருவாற்றான் ஞேயமாயினும் பிரமேயமாதல் பெறப்படாத ஆன்மசிற்சத்தி, தன்ஞதல் பிறிதோ ரான்மாவா ஞதல் சிவசத்தியாஞதல் அநுபவிக்கப் படும்போ லுமென்று ஆசங்கித்தற்குச் சிறிது மேலாமை அறிக.

அற்றேல், இன்பமெல்லாம் விஞையின் பயஞதல் காண்டு மாகலிற் சிவாநந்தமும் இன்பமாயின் அதுவும் விஞையின் பயனுய் முடியுமாலெனின்,—அறியாது கூறினுய். என்னே? தோன்றி யழியுஞ் சாவின்பமாத்திரையே விஞையின் பயனுவதன்றி அதனின் வேறுய் நித்தியாநந்தமான சித்தின்பம் அதுபோல விஞையின் பயனும்போ லுமென் றெண்ணுதற்கோரியைபின் மையா னென்க.

அற்றேல், சிவாநந்தம் இன்பப் பொருளென்றற்குப் பிர மாணம் என்னே? ஆநந்தமென்னுஞ் சொல்லே பிரமாண மெனின், ஆநந்தமென்னும் வடசொற்கு நிறைதல் என்பதே பொருளாகலின், அது பிரமாணமாகாதாலெனின்,—அற்றன்று; தாதுக்கள் பலபொருள் விளக்கும் என்பது வடநூலார் துணிபாகலின், உண்மை யுணர்த்திநிற்கும் "பவம்" என்னுஞ் சொல் அநுபவம் பரிபவம் விபவம் என உபசர்க்கங்களோடு கூடியவழி வேறுவேறு பொருளுணர்த்தி நின்றுற்போல நிறை தலே யுணர்த்திநிற்கும் "நந்தம்" என்னுஞ் சொல் ஆ என்னும் உபசர்க்கத்தோடு கூடியவழி இன்பம் என்னும் பொருளு ணர்த்தி நிற்றல் சாலும். அற்றுகலினன்றே, இன்பம் ஆநந்தம் என்பன ஒருபொருட் கிளவியாகவைத்து யாண்டும் வழங்கப் பட்டன; ஆகலான் அதுவே பிரமாண மென்க.

இன்னும், சர்வஜ்ஞாஞேத்தர முதலியவற்றின் ஆநந்த மென்னுஞ் சொன்மாத்திரையானன்றி முத்தியிற் பரமசுகமுண் டெனச் "சுகம்" என்னுஞ் சொல்லானும் பெரும்பாலும் ஓதுதலின் ஆநந்தத்திற்குப் பொருள் இன்பமன்றெனக்கொண்ட தனலும் நின்கருத்து நிரம்புமாறில்லை யென்க.

அற்றேல், உலகத்தில் இன்பமென்னும் பொருளாவது புறப்பொருள்களைப்பற்றி வந்த புத்திதத்துவத்தின் பரிணமத் தாலுகிய சத்துவகுணத்தின் விளக்கமே வேறென்றன்றுகலின், முத்தியினும் முற்றுணர்வு முதலிய எண்குணங்களின் விளக் கமே இன்பமாவதன்றி வேறுய் இன்ப மென்ப தொன்றில்லை யெனின்,—நன்று சொன்னுய்! ஆன்மாவின் வேறுகிய மூலப் பகுதியின் கண்ணதாகிய சாத்துவிகுணம் ஆன்மாவின் மாட்டு மேற்பட்டு விளங்குதலே உலகவின்பம்; அதுவதுவாய் அழுந்தி

நின் றறிதலே அநுபவமெனப்படுமாகலின், அதுபோல ஆன்மாவின் வேறாய்ச் சிவன்கண்ணே யுளவாகிய முற்றுணர்தன் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவாநந்தவின்பம்; ஆன்மா அதுவாய் அழுந்திநின்று அவ்விளக்கத்தை அறிதலே அநுபவமெனப் படுமென்பது எம்மனோர் சித்தாந்தமாகலின், அதனுள் உணக்குப் போந்ததென்னை என்பது.

அற்றேல், சாத்துவிககுணம் ஆன்மாவின் குணமே மூலப்பகுதியின் குணமன் றென்றுற்படு மிழுக்கென்னை யெனின்,—அது சிவாகம வழக்கோடு முரணுவார் கூற்றுமென மறுக்க.

அற்றேல், பசுத்துவமாய்நின்ற ஆன்மஞானமே சிற்றின்பமெனப்படும்; அதுபோலச் சிவத்துவமாய்நின்ற ஆன்மஞானமே முத்தியின்ப மெனக்கோடு மெனின்,—அற்றன்று; ஆன்மாவின் ஞானமே இன்பமாயின் அதனையறிந்து அநுபவிக்கும் ஞானம் வேறியாதோவெனக் கடாயினர்க்குக் குணியாய்நின்ற ஞானமே அதனையறிந்து அநுபவிக்குமென விடுப்பின், குணியாய்நின்ற ஞானம் அறிவுமாத்திரையாய் நிற்பதன்றி எதிர்முகமாய்நிற்றலின்மையானும், எதிர்முக மாகாமையும் ஆதலுமாகிய வியல்பு பற்றியே ஞாதா வெனவும் ஞானமெனவும் பகுத்தோதியதனை மறந்து ஞாதாவும் அதனை எதிர்முகமாகுமென முரணிக்கூறின், ஞாதாவும் ஞானமாவான் சென்று இலக்கண வழுவா மாகலானும், அதுவும் ஞானமே யாயவழி ஞாதா வென்பதொன்றின்றாய் முடியுமாகலானுங் குணகுணிக ளிரண்டற்கும் இடையே பொதுவாக ஒரு ஞானமுண்டு; அதுவே ஆண்டு ஞாதாவெனப் படுமெனின், மேலும் அவ்வாறு * அநவத்தையாய் முடியுமாகலானும், ஒருபொருள் குணகுணியென்று இருபகுதிப் படுவதன்றி மூன்றாவது ஒருபகுதி யுண்டென்று கூறுவார் யாண்டும் இன்மையானும், குணகுணி இரண்டற்கும் பொதுவாக இடையே ஞானம் ஒன்றுண்டென்று கூறுதல் அவசித்தாந்தமென்க.

**இரண்டாமதிகரணம் முடிந்தது.**

இலக்கணவோத்தின் மூன்றாம்பாதமாகிய

ஆறாஞ்சூத்திரம் முடிந்தது

இலக்கணவியல் முற்றிற்று

**பொதுவதிகாரம் முற்றுப்பெற்றது**

திருச்சிற்றம்பலம்.

---

* அநவத்தை - முடிவுபேறின்மை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உண்மையதிகாரம்

## சாதனவியல்

### ஏழாஞ்சூத்திரம்

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

இவ்வதிகாரம், தூலாருந்ததி நியாயம் பற்றி மேலியதிகாரத்தில் முப்பொருள்களின் பொதுவியல்பு பிரமாணமுகத்தானும் இலக்கணமுகத்தானும் உணர்த்திய ஆசிரியர் அவற்றது சிறப்பியல்பு, சாதனமுகத்தானும் பயன்முகத்தானும் உணர்த்துவான் எடுத்துக்கொண்டா ராகலின், உண்மையதிகாரம் என்னும் பெயர்த்து. சிறப்பியல்பு பொதுவியல்புபோல் இடையே நீங்குதலின்றி எக்காலத்தும் ஒருதன்மைத்தா யுள்ளதுபற்றி உண்மையெனப்படு மாகலின், அப்பெயர்த்தாயிற்று. இதனானே அதிகாரவியையும் இனிது விளங்கும்.

இதனுள் இம்மூதலோத்து, மேற் பொதுவியல்பாற் பெறப்பட்ட முப்பொருள்களினுள்ளும் விள்ளற்பாலதனை விண்டு அதனான் வருந் துன்பத்தி னீங்குதலும், கொள்ளற்பாலதனைக் கொண்டு அதனான் வரும் இன்பத்தை உறுதலுமாகிய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனஞ் செய்யுமா றுணர்த்துதலின், சாதனவியல் என்னும் பெயர்த்து. * "உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ—கழப்பின் வாராக் கையற வுளவோ" என்ப வாகலின், பெரும்பயன், பெறுதற்குரிய முயற்சி செய்தபின்னர்த்தேயாகலின், இவ்வோத்து முன் வைக்கப்பட்டது. ஒருபொருட்கு இலக்கண முணர்ந்தவழி அதனான் வரும்பயன் பெறுதற்குரிய சாதனஞ் செய்யுமா றாங்ஙனமெனச் சாதனத்தை யவாவுதல்

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, க0.

ஒருதலையாகலின், அவ்வவாய்நிலைபெற்றிய வியைபானே ஒத்தி யைபு கண்டுகொள்க.

இதனுள், இம்முதற்பாதமாகிய ஏழாஞ்சூத்திரம் நுதலிய பொருள் என்னையோவெனின், அஃதாசிரியர் தாமே உரைக் கின்றமையின், இனிது விளங்கும்.

வரலாறு :—

எ-து. சூ-ம். எ-னின். மேலதற்கோர் புறனடை யுணர்த்துத லுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக் கருத்துரைக்கின்றது.

இ-ள். மேலைச் சூத்திரத்தின் உளருரு வசத்து எனவும் இருதிறனல்லது சிவசத்து எனவும் வரைசெய் துணர்த்தியவழி, அவ்வா றுணரும் பொருள் அவ்விரண்டினு ளொன்றே வேறே வென்று ஆசங்கை நிகழுமன்றே : அதனை நீக்கி அச்சூத்திரத் திற்குப் புறனுக எடுத்து ஓரொழிபாகிய சதசத்தினியல்பு வரை செய்துணர்த்துமுகத்தானே மேற்பொதுவியல்பு கூறிப்போந்த ஆன்மாவுக்குச் சிறப்பியல்பு கூறுதல் நுதலிற்று இச்சூத்திர மென்றவாறு.

அதிகாரம் வேறுய வழியும் பாத வியைபுணர்ந்து கோடற்கு இவ்வாறுரைசெய்தா ரென்பது.

இப்புறனடையை வடநூலார் வாக்கிய சேடம் என்ப. இதனுட் கூறப்படும் மூன்றதிகரணமும் மூன்று புறனடை போலுமென மலையாமைப்பொருட்டு ஓர் புறனடை என்றார். முன்னையவிரண்டும் இறுதி யதிகரணத்தைச் சாதித்தற் கேது வாய் ஒருபொருண்மேல் வந்தனவேயா மென்பது கருத்து.

ஒன்றனை அறிந்தவழி அதனுன் வரும் பயன் பெறுதற் குரிய முயற்சி செய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்குமாற்றல் தமக்குண்டென்பதூஉம், சாதித்தால் வரும் பயன் இது என் பதூஉம், அதனைப் பயப்பித்தற்குச் சிறந்த சாதனமாவது இது என்பதூஉம், அது வருவாயும் உணர்ந்தாலன்றி அதன்கண் மனவெழுச்சி செல்லாமையின், ஈண்டோதப்படுஞ் சாதனஞ் செய்து பயன்பெறுதற்குரிய அதிகாரியை உணர்த்துவதாகிய இது, சாதன வோத்தின் முன் வைக்கப்பட்டது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—மேலைச்சூத்திரத் துட் கூறிய இரண்டனுள், வாக்கு மனுதீதமாகிய சிவசத் தின் சந்நிதியில் உளருருவாகிய அசத்தெல்லாம் பாழே

யாகலாற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை யறிந்து அநுபவியாது; அசத்தாகிய பாசம் அறிவில்லாத சட மாகலிற் சத்தாகிய சிவத்தை யறிந்து அநுபவியாது; ஆகலாற் பாரிசேடவளவையானே இருதிறனறிவுளதொன் றுண்டென்பது பெறப்படுதலின், அதுவே சத்தாதற்றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள ஆன்மாவாம் என்றவாறு.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தே என் னும் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. அசத்நிலதாகலின் என் றுரைக்க.

அசத்துச் சத்தை அறியாமைக்குஞ் சத்தெதிர் சூனிய மாதலே ஏதுவாதல் அமையுமாயினும் வலியுறுத்துதற் பொருட்டு வேறுமோரேதுக் கூறினர். இக்கருத்தே பற்றிச், * "சத்தின்மு னிலாமை யானுங்—தனைக்கொடொன் றுணர்த லானும்" என இரண்டனையு முடனெடுத்தோதினர் வழிநூ லாசிரியரு மென்க.

அறிதல் - ஈண்டு அநுபவித்தன்மேற்று. † 'இனைத்தென வறிந்த பொருட்கு விளைப்படு தொகுதிக்கண் வேண்டப்படும் முற்றும்மை' விகாரத்தாற் றொக்கது.

இதனுள், யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தே யறி யாது என்றது ஒரதிகரணம்; அசத்நிலதறியாது என்றது ஒரதிகர ணம்; இருதிறனறிவுள திரண்டலா வான்மா என்றது ஒரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

---

## முதலதிகரணம்

அவற்றுள், ‡"மண்டிய வுணர்வு யிர்க்காய் மன்னிகின் றறி யும்" என்னுஞ் சிவாத்துவித சைவரை மறுத்தற் கெழுந்தது முதலதிகரணம்.

அஃதாமாறு:—சிவாத்துவிதசைவர் மேலைப் பொதுவதி காரத்திற் கூறியவாறே பதிபசுபாசங்கள தியல்பும், தத்துவங் களுக்குத் தோற்ற வொடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும் அனைத்துஞ் சித்தாந்தசைவரோ டொப்பக் கொண்டு, பசுபாசங்கள் பதிவியாபகத்தின் வியாப்பியமாய்

* சிவஞானசித்தி, எ-ம் சூ. க. † தொல்காப்பியம், கிளவியாக்கம், கூக. ‡ சிவப்பிரகாசம், உண்மை, கடி.

நிற்பனவன்றித் தனித்த முதலன்மையின் மூப்பொருட்குந்தம் முள் வேற்றுமை குணகுணிகட்குத் தம்முளுளதாகிய வேற்றுமை போலஉட்பேதமேயன்றிப் புறப்பேதமின்மையான், மரத்தின் வியாப்பியமான கவடுகோடு முதலியனவெல்லாம் மரமேயாமாறு போலச் சதசத்தும் அசத்துமாகிய அனேகத்துஞ் சத்தெனவே படுமெனவும், படவே, பதித்தன்மையின் வேறுய்ப் பசுவுக்கறியுந் தன்மை யுண்டென்னிற் றனித்த முதலெனப்பட்டு வழுவா மாகலின், சத்தாகிய பதிப்பொருளே ஆன்மாவினிடமாகநின்று அறியுமெனவும், அனேகத்துஞ் சத்தாயவழிச் சத்தின் வேறுய் அறியப்படும் பொருளொன்றின்மையின் அஃதறியுமாறியாங்ஙன மெனக் கடாயினுர்க்குப், புறப்பேதமா யின்றுயினும் அகப்பேத மாகி அசத்தாகியபாசமுண்மையின், அதனை அஃதறிதல் கூடு மெனவும், சத்தின்முன்னர் அசத்தெல்லாஞ் சூனியமாகலின், அஃததனை அறிதல் கூடாதெனின், சத்தின்முன் அசத்துச் சூனியமென்றல் *"தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னி னின்றே" எனவும், †"கூடுமொளி வளர்குடிலை மாயை மேவி" எனவும், ‡"தாரகமா—மத்தன்று ணிற்றல்" எனவும், §"விமல னுக்கோர்—சத்தியாய்" எனவும், $"உலகமே யுருவமாக" எனவும், ¶"அத்துவா மூர்த்தியாக" எனவும், **"இருநில னுய்த் தீயாகி நீருமாகி" எனவும்வரும் இத்தொடக்கத்துச் சுருதிகளோடு முரணி மாயாவாதிகூற்றுய் முடியுமன்றே யென வுங்கூறுவாராகலான், அதனை மறுத்துச் சத்தேயாறியாது என்னும் மேற்கோளைச் சாதித்தற்கு எடுத்தோதிய ஏதுவை வலியுறுத்து கின்றது இவ்வதிகரணமெனக் கொள்க.

அதிகரணவியைபுபற்றியுந் தலைமைபற்றியுஞ் சத்தினியல்பு முதற்கண் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஈண்டுச் சத்தினிடத் தசத்துப் பிரகாசியா தென்றது

எனவரும்.

வாக்குமனுதீதகோசரமாய்ச் சுட்டுணர்வின்றி நின்றறியப் படுஞ் சிவசத்தின்முன்னர்ச் சுட்டியறியப்படும் அசத்தாகிய பாசம் விளங்கித்தோன்று தென்பதாம்.

---

* சிவஞானசித்தி, க-ம் சூ. ககூ. † சிவப்பிரகாசம், பொது. ஒ.

‡ இந்நூல், க-ம் சூ. உ-ம் அதிகரணத்து உதாரணம், உ.

§ சிவஞானசித்தி, உ-ம் சூ. ஈ. $ சிவஞானசித்தி, இ-ம் சூ. எ.

¶ சிவஞானசித்தி, க-ம் சூ. இசு.

** திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம், பொது, நின்ற திருத் தாண்டகம், க.

ஈண்டுச் சூனியம் என்றது விளங்காமைப் பொருட் டென் பார், பிரகாசியாது என்றுரைத்தார். *"மூன்றத்திடாது" என்றார் வழிநூலாசிரியரும். மூன்றத்திடாமையாவது இதுகுடம் இஃதாடை என நம்மனோராற் சுட்டி யறியப்படுமாறு போல முதல்வனுற் சுட்டி யறியப்படுவதாய் வேறு கில்லாமை என்க. எனவே, ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியம் என்றதுகொண்டு †"தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னி னின்றே" என்றற் றொடக்கத்துச் சுருதிகளோடு முரணுதலும், மாயாவாதி கூற்றுதலு மின்மையின், இவ்வேதுவானே இது குடம் இஃதாடை என்று இவ்வாறு அசத்தின்கண் நிகழுஞ் சுட்டுணர் வுடையது சிவசத்தென்றல் பொருந்தாமையின், சத்தே அசத்தை யறியுமாறு யாங்ஙனமெனச் சிவாத்துவிதசைவரை மறுத்தவாறு காண்க.

அற்றேல், அசத்து விடயமாய் விளங்குதற்குரிய சிற் றுணர்வு சிவசத்துக் குண்டென்றுற்படி மிழுக்கென்னை யென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

மெய்யினிடத்துப் போய் அப்பிரகாசமாய் நிற்றலான்

எனவரும்.

ஆன்மாவுக்குச் சிவத்தைச் சார்ந்து சுட்டிறந்தறிவதாகிய தன்னியல்பு விளங்கினவிடத்துச் சுட்டியறிவதாகிய பொது வியல்பு விளக்கமின்றி நிற்றலான் ஈண்டுச் சந்நிடத் நசத்துப் பிரகாசியாது என மேற்கொண்ட தென்றவாறு.

எனவே, முத்திநிலையின் ஆன்மாச் சிவத்தைச்சார்ந்து தன்னியல்பைத் தலைப்பட்டவழிச் சுட்டுணர்வு நிகழாதென்பது இருவர் மதத்தினு மொக்குமாகலான், ஆன்மாவுக்கு ஆண்டுச் சுட்டுணர்வு நிகழாமை பிறிதொன்றுற் பெறப்படாமையின், அநாதிமலமுத்தனுகிய முதல்வனுக்குச் சுட்டுணர்வில்லையென் பது பெறப்படுதலின், அத்தன்மையனுகிய முதல்வனிடத்து அசத்துச் சுட்டியறியப்படுவதாய் விளங்கி வேறுநிற்பது யாங்ஙனமென மேற்கோளைச் சாதித்தவாறு காண்க.

எக்காலத்தும் நிலைபெற்றுள்ளதாகிய தன்னியல்பே மெய்யெனப்படும், இடையே விளங்கி மறைவதாகிய பொது வியல்பே பொய்யெனப்படும் என்பது, மேலையதிகரணத்தும், சற்காரியவாதத்தும், அபாவவாதத்தும் உரைத்தாம்; கடைப் பிடிக்க.

---

* சிவஞானசித்தி, எ-ம் சூ. க. † சிவஞானசித்தி, க-ம் சூ. க*.

மெய்ப்பரிணிடத்து-மெய் பிரகாசித்த விடத்து என உரைக்க. மெய் பிரகாசித்த விடத்தெனவே ஆன்மாவுக்கென்பது பெற்றும். இவ்வாறுரைக்க அறியாதார் மேற்கோளும் ஏதுவும் ஒரு பொருளே பயப்ப உரைசெய்வர்; அவ்வாறுரைப்பின், "மலீ தியுடைத்து, தியுடைமையான்" என்பதுபோல மேற்கோளைச் சாதிக்கு மேதுவாதல் செல்லாமை அறிக.

அற்றேல், இதுபற்றி முதல்வன் அசத்தை யறியானெனின் அவனது முற்றுணர்வுடைமைக்கு இழுக்காமாலென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

அன்னியமி லாமை யரற்கோன் றுணர்வின்று
மன்னியமி லானசத்தைக் காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று

எனவரும்.

தன்னுள் வியாப்பியமான பசுபாசங்களோடு வேற்றுமை யில்லாத முதல்வனுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன் றில்லை யாகலான், அத்தன்மையனாகிய முதல்வன் அசத்தை அறிய லுறுவானுயிற் சுட்டுணர்வின்றி நின்றவாறே அறிவானன்றி எம்மனோர்போலத் தனக்கு வேறாகச் சுட்டியறிவானல்லன்; நன்மையில்லாத அசத்து ஞாயிற்றின்முன் இருள்போல அவனெதிர் விளங்குதலில்லை ஆகலானென்க.

எனவே, சுட்டுணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர்வுக்கு மேம்பாடாவதன்றி இழுக்கன்மையான் அதுபற்றி ஆசங்கையில்லை என்பது வலியுறுத்த வாறு காண்க.

*"மாயா தநுவிளக்கா" எனவும், †"ஆதலா லிரண்டுஞ் சோதி யிருளென வேறும்" எனவும், ‡"இகலிவரு மிவையுணரி லிருள்வெளியாந் தன்மை" எனவும் ஓதுதலின், மாயையும் அதன் காரியமும் மலம்போல முதல்வனுக்கு மறுதலைப் பொருளன்மையான், சண்டுக் கதிர்முன்னிருள்போல என்றது விளங்காமைமாத்திரைக்கு ஒருபுடையுவமையாக எடுத்துக் காட்டியதேயாமென அவற்றோடு மூரணுதவாறு காண்க.

---

* இந்நூல், ஈ-ம் சூ. உ-ம் அதிகரணத்து உதாரணம், க.
† சிவஞானசித்தி, உ-ம் சூ. அச.
‡ சிவப்பிரகாசம், பொது, உடு.

மற்று - அசை. மற்றுக் காண்குவனேல் என மேலே கூட்டி உரைத்து விஜ்ஞானமாற்றின்கண் வந்ததெனினு மமையும். மாஞ என்பது பெயரெச்சவெதிர்மறை. இன்மை - இன்மையான் என்க.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

மேலையதிகரணத்திற் சிவாத்துவிதசைவரை மறுத்துச் சத்நேயறியாது என்றதனைச் சாதித்தவழி, அதனை யுடன்பட்டுச் சிவசங்கிராந்தவாதசைவர் ஆன்மா விளக்கம்போல விகாரமின்றி அறிவுமாத்திரையாய்நிற்பதன்றி ஒன்றனை அறியுமாறில்லை; அவ்வான்மாவின் சந்நிதியிற் காந்தபாசாசம்போல உடலியங்குழி அதன்கணின்று கருவிகளே விடயங்களை அநுபவிக்கு மெனவும், மலநீங்கும்வழிக் கண்ணுடியின் முகவொளி தோற்றுமாறு போல முதல்வன்றிருவருள் ஆன்மாவின்மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றுமெனவும், அவ்வழி உப்பளத்திட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தை அறியு மெனவுங் கூறுவர். அவற்றுட் சந்நிதி மாத்திரையானே கருவிகள்விடயங்களை அறியு மென்பது, ஐம்பொறிகள் ஆன்மாவானுணருமெனச் சாங்கியரை மறுத்த அதிகரணத்தானே மறுக்கப்பட்டமையின், அவையே சிவகரணங் களாய்ச் சிவத்தை அறியும் என்பதனை மறுத்து, அசத்நறியாது என்றதனைச் சாதித்தற்கெடுத்தோதிய ஏதுவை வலியுறுத்தற் கெழுந்தது இரண்டாம் அதிகரணம்.

இவ்வதிகரணம் முன்வைக்கற்பாலதாயினுஞ் சத்து அதி காரப்பட்டமையின், அவ்வியைபுபற்றி அதனை முன்வைத்தா ரென்பது.

இனி அசத்தினுக் குணர்வின் றென்றது
எனவரும்.

ஈண்டு அசத்து என்றது தத்துவப்பிரபஞ்சத்தை; ஏனைப் பிரபஞ்சத்திற்கு அறிவுண்டெனக் கொள்வார் யாருமின்மை யான் ஆண்டு ஐயப்பாடு நிகழாமையின், அதனை ஓரதிகரணமாக வைத்துச் சாதிக்கவேண்டாமையான் என்பது. சூத்திரத்தில் இலது என்றது அறிவிலதென்னும் பொருட்டென்பார், உணர் வின்று என உரைத்தார்.

அற்றேல், ஆன்மசந்நிதி யில்வழித் தத்துவங்களுக்கு உணர்வில்லை யென்றதாக்கும், அஃதுள்வழியும் அவற்றிற்கு அறிவில்லை யென்றல் பொருந்தாது ; என்னை ? பதிஞான பசு ஞானங்களோ டொப்பப் பாசஞான மொன்றெனவைத்தெண்ணு தலின், அவற்றிற்கு அறிவுண்டென்பது பெறப்படுமாலென்று ஆசங்கைநிகழ்ந்தவழி, அதனை நீக்கி, மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அதுதான் நிரூபிக்கி லின்றுகலான்

எனவரும்.

அவ்வசத்தாகிய தத்துவப் பிரபஞ்சமானது பொதுமை யான் நோக்கும்வழி அறிவுடையதுபோலத் தோன்றினும் ஐயந்திரிபின்றி மாசறுகாட்சியான் ஆராயும்வழி அறிவில்லதாக லான் அசத்தினுக்கு உணர்வின்று எனமேற்கொண்டதென்றவாறு.

எனவே, பாசம் வாயிலாக நிகழும் பசுஞானமே பாசஞான மென்று உபசரித்துக் கூறப்படும் ; அதனைப் பாசத்திற்குள்ள ஞானமெனக் காண்டல் நிரூபியாதவழிப்படும் மடமையே, பிறிதில்லை யென்றவாறுயிற்று.

அற்றேல், உள்ளதுபோலத் தோன்றி இல்லதாதல் யாங் ஙனமென்னும் ஆசங்கையை உவமைமுகத்தா னீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றஃதை
பேய்த்தே ரசத்தாகும் பேற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதெனக் காண்

எனவரும்.

பாலைநிலத்தின்கட் காணப்படும் பேய்த்தேரை நீரென்று கருதி அதனை உண்ண வருகின்ற நீர்வேட்கையுடைய மட வோனுக்கு அதனை அடுத்தவழித் தன்னுலகியற்பட்ட அப் பேய்த்தேர் நீராதலின்றி அசத்தாந்தன்மைபோலக், குரவனறி வுறுக்கும் உபதேசமொழி கிடைப்ப அவ்வசத்தினியல்பை ஆராய்ந்தறிவாரின்றி அறியமாட்டாதாருள்வழி அவர்க்கு அவ் வசத்தின்கண் அறிவில்லதாய் அசத்தாந்தன்மையின்றி, அறி வுள்ளதாய்ச் சத்தாந்தன்மையே காணப்படும் ; குரவனறிவுறுக் கும் உபதேசமொழி கிடைப்ப அவ்வசத்தி னியல்பை ஆராய்ந் தறிய வல்லார்க்கு அஃதறிவில்லதேயாமென்று அறிவாயாக என்க.

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. மை - பகுதிப்பொருள் விகுதி. இன் - உவமவுருபு. வாய்த்தல் - கிடைத்தல். இல்வழி பின் என்பதூஉம், அசத்தின்மை என்பதூஉம் மறுதலைப் பொருளுணர நின்றன. நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது; * "ஐந்தவித்தா னுற்றல்" என்புழிப்போல.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றுமதிகரணம்

மேலை யதிகரணங்களாற் சிவசத்தின்றன்மையே ஆன்மாவுக்குத் தன்மையன்றி வேறில்லை யென்னுஞ் சிவாத்துவித சைவரையும், ஆன்மாவுக்குத் தன்மையென்ப தொன்றில்லை யென்னும் சிவசங்கிராந்தசைவரையும் மறுத்துச், சத்தும் அசத்துந் தம்முள் ஒன்றனையொன் றறியுமா றில்லையெனச் சாதித்தவழி, இரண்டும் இவ்வாறுயின் இவற்றை யறியும் பொருள் வேறென்னை யென்னும் ஆசங்கையை நீக்கிப் பாரி சேடவளவையாற் சதசத்தாகிய ஆன்மாவி னியல்பை வரை செய்துணர்த்துதற் கெழுந்தது மூன்றுமதிகரணம் :—

இனி இருதிற னறிவுள திரண்டலா வான்மா வென்றது

எனவரும்.

ஈண்டுச் சத்தெதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்மு ளொன்றுனொன் றறியப்படாமையான் ஆன்மாவாலும் அறியப் படாதவழி அவை பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாக லான், இரண்டலா வான்மா இருதிற னறிவுளதேயாம்; தம்மு ளொன்றுனொன் றநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தை யும்அநுபவிக்குங் கண்போலுமென அநுமானங் கூறிக் காண்க.

ஈண்டு இருதிறனறிவுளது என்னுந் தொகைச்சொல் விரியுங் காற்படும் பொருள்வேறுபா டுரைக்குமுகத்தானே ஆன்மாவி னியல்பு வேறுவேறு கூறுஞ் சமயங்க ளெல்லாவற்றையும் மறுத்தவாறுணர்த்தற்கு எழுந்த பொழிப்புரை :—

இவ்விரண்டினையு மறிவதாய் உபதேசியாய் நின்ற அவ் வறிவு இரண்டன்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவா மென்றது

எனவரும்.

---

* திருக்குறள், ஈ-ம் அதி. ஈத்தார்பெருமை, இ.

மேற் கூறிப்போந்த சத்து மசத்துமாகிய இவ்விரண்டினையு மறியுந்தன்மைத்தாய், அறிவிக்க வறிவதாகிய வுபதேசியாய், நிலைபெற்ற சத்தசத்திரண்டன்பாலும் அநுபவ வறிவுள தாயுள்ள அதுவே சத்து மசத்துமல்லாத சதசத்தாகிய ஆன்மா என்றவாறும். இருதிறனறிவுள நிரண்டலா வான்மா என மேற் கொண்டதென்றவாறு.

ஆய் என்னும் வினையெச்ச மிரண்டும் நின்ற் என்னும் பெய ரெச்சவினையோடு தனித்தனி முடிந்தன. நின்ற என்னும் பெய ரெச்சம் உள்ள என்பதன் முடிபாகிய அது என்னும் பெயர் கொண்டு முடிந்தது. இருதிறனறிவு என்னுந் தொகைச்சொல் ஈண்டு மூன்றுபொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தான் இவ்வா றுரைக்கப்பட்டது. அவற்றுள், இருதிறனையு மறியும் அறிவு என்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி இரண்டினையு மறிவதாய் நின்ற அது எனவும், இருதிறனுல் விளங்கிய அறிவு என்னும் மூன்றும் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி உபதேசியாய் நின்ற அது எனவும், இருதிறனிலுமுள்ள அறிவு என் னும் ஏழாம்வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி இரண்டன் பாலு முளதாயுள்ள அது எனவும் உரைத்தாரெனக் கொள்க.

இரண்டினையு மறிவதாய் நின்ற அது என இரண்டாம் வேற்று மைத் தொகைப்பொருள்பற்றி இரண்டு மிவ்வாறுயின் இவற்றை அறியும்பொருள் வேறென்னை யென்னும் வினவுக்கு விடைகூறி அவ்விருவர் மதங்களையும், அவற்றோ டொருதன்மையவான புறச்சமயங்களையும் மறுத்தவாறு.

உபதேசியாய் நின்ற அது என மூன்றும் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி ஆன்மா அறிவிக்க வேண்டாது தானே அறியுமியல்பிற்றென்னும் சமவாதசைவர் ஈசுரவிகாரவாத சைவர் ஐக்கியவாதசைவர் மதங்களையும் அவற்றோடொருதன் மையவான புறச்சமயங்களையும் மறுத்தவாறு.

இரண்டன்பாலு முளதாயுள்ள அது என ஏழாம்வேற்றுமைத் தொகைப்பொருள் பற்றி ஆன்மாவினறிவு சத்தோடு கூடுமா றில்லை யென்னும் பாடாணவாத சைவர் பேதவாதசைவர் மதங் களையும், சத்திநோடு கூடியவழி ஒன்றுய்ப் போதலேயன்றி அதன்பாலுளதாமாறில்லை யென்னுஞ் சுத்தசைவர் மதத்தையும், அவற்றோ டொருதன்மையவான புறச்சமயங்களையும் மறுத்த வாறு.

இவ்விரண்டினையு மறிவதாய் எனவே, அவ்வறியுந்தன்மை இவ்விரண்டன் றன்மைபோலன்றி *"இருளொளிய லாக்கண்

* சிவப்பிரகாசம், உண்மை, எ.

டன்மை'' போல வேறுயதோர் தன்மை என்பதூஉம், உபதேசியாய் நின்ற எனவே, அத்தன்மை ஆகாயத்தன்மையாகிய ஒசை போலத் தன்னே விளக்குவதாகிய வியஞ்சகமுள்வழியே விளங்குவதோர் தன்மை என்பதூஉம், இரண்டன்பாலு முளதாய் எனவே, அது படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாய் அழுந்துவதோர் தன்மை என்பதூஉம் பெற்றும்.

இனி, இம்மூன்றனுள் இரண்டினையு மறியும் என்றதனே வலியுறுத்தி இரண்டலாமையை உணர்த்துதற்கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்றுகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றுது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றேக்கு

எனவரும்.

நூணுகியநூல்களே ஆராயும் ஆன்மாவே அருவாகிய சத்தினேயும் உருவாகிய அசத்தினேயும் அறிவதாகலான், அஃது அவ்விரண்டுமன்றி வேறுமென்க.

அற்றேல், அவ்வான்மாத் தன்னேயறியுமோ ? அறியாதோ ? எனக் கடாயினுர்க்கு அறியுமெனில், தன்னேடொளப்பட மூன்றனேயும் அறிவதென்னுது அவ் விரண்டினேயு மறிவதாய் என்றல் பொருந்தாது; அறியாதெனின் அறியாதபொருள் சூனியமெனப் பட்டு வழுவாமாலெனின், ஆன்மாவினுண்மைத் தன்மை சத்தும் அசத்தும்போல விளங்கித் தோன்றியவற்றேடொப்ப நிற்பதுமன்றுய், விளங்கித்தோன்றுது சூனியமாய் நிற்பது மன்றுய் மலரின்கண் வாசம் இவ்விருவகையுமன்றி அதன்கணடங்கித் தோன்றுமாறுபோலச் சத்தினு மசத்தினுஞ் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோரியல்பாம் ; ஆகலான், அஃது அவ்விரண்டினேயும் அறியுமுகத்தான் அறியப்படுவதன்றி அவைபோலத் தனித்தனி யறியப்படுவதொன்றன்றென்க.

ஆகலான் அஃது அவ்விரண்டினேயும் அறியுமுகத்தா னறியப்படுவ தன்றி அவைபோலத் தனித்தனி அறியப்படுவதொன்றன்றென்பது குறிப்பெச்சம்.

சுட்டியுணரப்படாமைபற்றிச் சத்தை அரு என்றும், சுட்டப்படுதல் பற்றி அசத்தை உரு என்றுங் கூறினர். *''உண

* இந்நூல். சூ-ம் சூ.

ருருவசத்து" என்புழி உரு என்றதும் அதுபற்றி. அறிதலான் அன்றரும் எனக் கூட்டுக. இழை நூலாகலான் ஈண்டுச் சாத்தி ரத்தை யுணர்த்திற்று. ஆய்தல் - துணுகுதல்; * "ஒய்த லாய்த னிழத்தல் சாஅ—யாவையி னுன்கு முள்ளத னுணுக்கம்" என் றார் தொல்காப்பியனாரும். ஆயிழை எனப் பொருளி னுணுக்கம் நான்மேலேற்றப்பட்டது. இழையை என இரண்டாவது விரித் துரைக்க.

ஆன்மாவுக்கு அறியுந்தன்மை உண்டாகலானன்றே வேதா கம முதலிய நூல்கள் உளவாயினவென அதனை வலியுறுத்து வார், ஆயிழையாயான்மா என உடம்பொடுபுணர்த்தோதினார். †"பலகலை யுலகி னிலவுத லானும்" என்றார் புடைநூலாசிரி யரும். இவ்வாறன்றி ஆயிழையாய் என்பதனை மகடூ முன்னிலை யாக வைத்துரைப்பின் இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்து தற் கெழுந்ததன்றாய்க் கூறியது கூறலென்னுங் குற்றப்படுமென் றொழிக.

அருவுருவாய் என்புழி ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்து நின்றது; ‡"ஆள்வா ரிலிமா டாவேனே" என்புழிப் போல. தொக்குத்தோன்றல் எனக் கூட்டுக.

அற்றேல், ஆன்மாவுக்கு அவ்வறியுந்தன்மை சிவசத்தோ டொப்பச் சுதந்தரமா யுண்டென்றற்படி மிழுக்கென்னை யென் னும் ஆசங்கையை நீக்கி உபதேசியாய் என்றதனை வலியுறுத்தி இரண்டிலாமையை உணர்த்துதற் கெடுத்துக் காட்டும் உதா ரணம்:—

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

எனவரும்.

நீ அறியும் முறைமை சொல்லில் அறிவை விளக்குதற் குரிய வியஞ்சகமில்வழி ஒரு விடயத்தை இன்னதென் றறிய மாட்டாது மயக்கத்தை யுற்றும், பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்க நோய்க்கு மருந்தாகிய வியஞ்சகமுள்வழி அம்மயக்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், ஈச.

† சங்கற்பநிராகரணம், நிமித்தகாரண பரிணமவாதி நிராகரணம், சஅ-ம் அடி.

‡ திருவாசகம், கோயின்மூத்த திருப்பதிகம், எ.

கம் நீங்கி அதனை இன்னதென நிச்சயித்தும் இங்ஙனம் அறிவுழி யும் ஒருங்கே அறியமாட்டாது ஒருவிடயத்திற் சென்ற அறிவை மாற்றி மற்றொரு விடயத்தை அறிந்து வருகின்றுயாகலின், இவ்வாறு மாறிமாறி ஒன்றொன்று யுணர்கின்ற நீ எல்லாவற் றையும் ஒருங்கே ஓரியல்பானுணர்வதாகிய சத்தின்றன்மை யுடையாயல்லை. அற்றேல், வியஞ்சகமுள்வழியன்றி அறிய மாட்டாத யான் அசத்தின் றன்மையுடையே னுவேனெனின், வியஞ்சக முள்வழியும் நீ முன்னறிந்து செய்த வினைகளை இப் பொழுது நீயே அறிந்தநுபவிக்கின்றுயன்றி அசத்தாகிய பிர பஞ்சம் அறிந்தநுபவித்த லின்மையான் அவ்வசத்தின்றன்மை யுடையாயுமல்லை; வியஞ்சகமுள்வழி அறிதலொப்புமையாற் சத்தாதலும், அஃதில்வழி அறிவு நிகழாமை யொப்புமையால் அசத்தாதலுமாகியதோர் தன்மையுடைய நீ அவ்விரண்டினும் வேறுகிய சதசத்தாவை யென்க.

பேசில் நீ சத்தாகாய்; துய்யாமையால் அசத்துமலை வேறு எனக் கூட்டுக.

வியஞ்சக மில்வழித் தலைப்பட்டும் அஃதுள்வழி நீங்கியும் நிற்பதாகிய மயக்கம், உண்டியில்வழித் தலைப்பட்டும் அஃதுள் வழி நீங்கியும் நிற்பதாகிய பசியோடொத்தலின் அதனைப் பசி நோயாகவும், தீர்த்தலொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசி தீர்க்கும் மருந்தாகவும் உருவகஞ் செய்தார். இஃதேதகதேத வுருவகம். மருந்து எனப் பொதுப்பட உருவகஞ் செய்தாராயி னும் பசிநோய் தீர்க்கும் மருந்தே ஈண்டைக்கேற்புடையதாக லின், ஏற்புழிக்கோடலான் அவ்வாறுரைக்கப்பட்டது. அது பகுதிப்பொருள்விகுதி. தான் என்பது முன்னையது எழுவா யுருபுபட நின்றது; பின்னையது அசைநிலை. துவ்வாமை துய்யாமை என மரீஇயிற்று.

அற்றேல், இம்மயக்கம் ஆன்மாவுக்கேயன்றிச் சிவசத்துக் கில்வழி இரண்டற்குந் தம்முளியைபு கூடாதாகலிற் சிவசத்துக் கும் அஃதுண்டெனக்கோடல் வேண்டுமென்னும் ஆசங்கையை உவமமுகத்தான் நீக்கி ஆன்மா இரண்டன்பாலுமுளதாகலை வலியுறுத்தி இரண்டலாமையை உணர்த்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான முள்ள மணைதல்காண்—மெஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாய்த் தான்

எனவரும்.

மேலே வெண்பாவிற் பெறப்பட்ட மயக்கமாகிய அறியாமை வியஞ்சக மில்வழித் தலைப்பட்டும், அஃதுள்வழி நீங்கியும் இவ்வாறு நிலைபேறில்லதாகலான், அஃதெப்பொழுதும் ஒரு தன்மைத்தாய் நிலைபெற்று விளங்கும் ஞானமாகிய சிவசத்தின் கண்ணே நிகழாது, மெய்ஞ்ஞானமாகிய அச்சிவசத்துள்ள அநாதியேதானே, குளிர்ந்த கடலின்கண் மருவாது கடலிடத்துளதாகிய நீரின்கண் மருவும் உப்புப்போலத், தான் பொருந்துதற்குரிய சதசத்தா மியல்புடைய ஆன்மாக்களும் உள்ளனவாக அவ்வான்மாக்களைப் பொருந்துமாற்றை அறிவாயாக என்க.

அஞ்ஞான மசத்தாகலான் மெஞ்ஞானந் தன்னில் விளையாது, மெஞ்ஞானம் உள அன்றே தானே என்புழிக் தானே என்பது கட்டுரைக்கண் வந்தது. தானே யுளமுளவாய்த் தான் என்புழித் தான் என்பது முன்னையது எழுவாய்; பின்னையது அசைநிலை. ஏயுளம் - விளைத்ததாகை. ஆய் அணைதல் எனக் கூட்டுக. ஆயணைதல் என்பது "மழைபெய்து குளநிறைந்தது" என்றுற் போலக் காரணகாரியப் பொருட்கண் வந்தது. கடல் என்றது நீர்க் கிடங்கொடுத்து நிற்கும் ஆகாயம். உப்புத் தான் மருவுதற் குரிமையில்லாத கடலின்கணின்றிக் கடலோடியைபுடைத்தாயுந் தான் மருவுதற் குரிமையுடைய நீரின்கண்ணே உளதாயினுற் போல, அஞ்ஞானமுந் தான் மருவுதற்குரிமையில்லாத மெய்ஞ் ஞானத்தின்கணின்றி அம்மெய்ஞ்ஞானத்தினோடு அநாதியே இயைபுடைத்தாயுந் தான் மருவுதற் குரிமையுடைய ஆன்மாவின்க ணுளவாகல் அமையுமென்பார், தண்கடனீருப்புப்போல் என்றார். இதனானே வியாபக வியாப்பியங்களாமாறும் பெறப் பட்டது. இதனுள், ஆன்மாவுக் கிரண்டன்கண்ணும் இயைபுடைமை கூறவே, இரண்டன்பாலுமுள தாதலே வலியுறுத்தியவாறு காண்க.

இவ்வதிகரணத்தில் இருதிறனையுமறியு மறிவுளது எனவே, இருதிறனுகிய சத்தும் அசத்தும் எனப்பட்டனவெல்லாம் பிரமேயம், அவற்றையறியும் ஆன்மாவே பிரமாதா, ஆன்மாவினறிவாகிய சிற்சத்தியே பிரமாணம், அவ்வறிவுநிகழ்ச்சியே பிரமிதி என்பதாயிற்று; இருதிறனுள் விளங்குமறிவுளது எனவே, இரண்டனுள் அசத்தான் விளங்கும்வழித் தனக்கு வேறாய் நின்று விளக்குங் காட்சியும் அநுமானமும் ஆகமமும் எனப் படும் அசத்தாகிய பாசஞானம் மூன்றுந் தனக்கு வியஞ்சகங் களாம், சத்தான் விளங்கும்வழி அன்னியமின்றித் தனக்காதாரமாய் உடனின்று விளக்குஞ் சிவஞானந்தானே வியஞ்சகமாம், ஆகலின், அதுபற்றி அவையும் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதாயிற்று; இருதிறனிலும் அறிவுளது எனவே,

ஈரிடத்துங் கேடின்றி அசத்தான் விளங்கி அசத்தையறிவுழி அசத்தின்பாலும், சத்தான் விளங்கிச் சத்தை யறிவுழிச் சத்தின்பாலும் அதுவதுவாய் நின்றுளதென்பதூஉம் பெறப் படும். இவ்வாறன்றி வியஞ்சகங்களேயே பிரமாண மென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ் சகங்களான் நிகழும் பிரமிதி வேறுபாடுகளும், அவற்றதியல்பு களும் ஈண்டு விரிக்கிற் பெருகும். பௌட்கர முதலிய சிவாக மங்களிற் காண்க.

மூன்றுமதிகரணம் முடிந்தது

சாதனவோத்தின் முதற்பாதமாகிய

## வழாஞ்சூத்திரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்.

## திருச்சிற்றம்பலம்

# எட்டாஞ்சூத்திரம்



ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

எ - து. சூ - ம். எ - னின். ஞானத்தினை யுணருமுறை மையினை உணர்த்துத னுதலிற்று.

மேலைச் சூத்திரத்தாற் சாதித்தற்குரிய அதிகாரந் தனக் குண்டென்றறிந்த ஆன்மாவுக்குச் சாதித்ததனாற் பெறப்படும் பயன் இது என்பதூஉம், அதற்குச் சிறந்த சாதனமாவது இது என்பதூஉம், அது வருவாயும் உணர்த்துமுகத்தானே அவ் வான்மாவின் ஞானம் மேல் இருதிறனென்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பா லுளதாய் அசத்தினை அறிந்து நின்ற வாறும், சத்தான் விளங்கிச் சத்தின்பா லுளதாய்ச் சத்தினை அறிந்து நிற்குமாறுந் தரிசிக்கும் முறைமையினை உணர்த்துதல் சாதனவியலின் இரண்டாம் பாதமாகிய இவ்வெட்டாஞ் சூத்தி ரத்தின் கருத்தென்க.

மேல் இருதிற னறிவுளது என்றவழித், தம்முண் மாறுபட்ட பொருளிரண்டன்பாலும் அறிவுளதாமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை ஈண்டு நீக்குதலின், அவ்வாசங்கைபற்றிய வியை பானே அதிகரணவியையும், மேல் ஆன்மரூப முணர்த்தி ஈண்டு அதனைத் தரிசிக்குமா றுணர்த்துதல் முறைமையாகலின், அம் முறைமை பற்றிய வியைபானே பாதவியையும், மேலைச்சூத்திரத் தாற் சாதித்தற்குரிய அதிகாரியை உணர்ந்தவழி, ஏனைப் பய னுஞ் சாதனமும் வருவாயும் யாவையென இவற்றை அவாய்நிற் றலின், அவ்வவாய்நிலைபற்றிய வியைபானே ஒத்தியைபும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—ஆன்மா முன்னே செய்து கொள்ளப்பட்ட புண்ணியவிசேடத்தால் இப்பொழுது தமக்கு அந்தரியாமியாய் உண்ணின்று இதுகாறும் உணர்த்தி வந்த பரம்பொருளே குருவடிவமுங்கொண்டு எழுந்தருளிச் சிவதீக்கைசெய்து, "மன்னவ குமாரனுகிய நீ ஐம்பொறிகளாகிய வேடரோடு கூடி வைகி வளர்ந்து நின்பெருந்தகைமை அறியாது

மயங்கி இடர்ப்பட்டாய் ; நின்பெருந்தகைமையாவது இவ்வியல் பிற்று'' என் றறிவுறுப்ப, அறிந்த மாத்திரையே அவரைவிட்டு நீங்கி, அந்நியமின்றி *அநந்நியமாந்தன்மையி னிலைபெற்று, அம் முதல்வன் றிருவடிகளையணையும் என்றவாறு.

ஆன்மா என்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப் பட்டது. தவத்தினிற் றம்முதல் குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை எனை உணர்த்த விட்டு அன்னியமின்மையின் அரன் கழல் செலும் எனக் கூட்டுக.

மன்னவ குமாரனுகிய நீ என்பது தோன்றுவெழுவாயாய் நின் றது. புலன் - ஆகுபெயர். வளர்ந்தயர்ந்தனை என்பது ''ஈந்து புகழ்பெற்றான்'' என்புழிப்போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது. அயர்த்தல் - மறத்தல். தம்முதல் என்றது வேறு முடிபாகலின், ''யான் எம்மூர் புகுவன் ; நீ நும்மூர் புகுவை'' என்புழிப்போலப் பால்வழுவின்மைகண்டுகொள்க. குருவும் என்ற உம்மை இதுகாறும் உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த் தியதூஉமன்றி என இறந்ததுதழீஇயிற்று ; சிறப்புமாம். அன் னியமின்மையின் என்பது † ''அயரா வன்பின்'' என்பதுபோலச் சேறற்கேதுவாய் நின்றது ; அன்னியமின்றுந் தன்மையுடையவ னுகிச் செல்லும் என்பதாம், அரன் என்பது சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது ; ‡ ''கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான்'' என்புழிப்போல.

வெண்கொற்றக்குடையும், நவமணிமுடியும், சிங்காதனமும் மன்னவர்க்கே யுரிய சிறப்படையாளமாம். அதுபோலப், பிர பஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒருபெரு வெண் கொற்றக் குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான் அறியும் பேரறிவாகிய ஒருபெருஞ் சுடர்முடியும், எவற்றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்து மியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் பிறர்க்கின்றித் தனக்கே உரிமையாகச் சிறந்தமைபற்றிப், பசுக்களுக்குப் பாசங்களே அரித்தலான் அரனென்னுந் திருப்பெயருடைய முதல்வனே மன்னவனுகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதுந் தனதே யாகக்கொண்டு அநுபவிக்குஞ் சுதந்தர முடைமையுஞ் சித்து எனப்படுஞ் சாதியொப்புமையும் பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனுகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ்செல்வம் முழு வதும் § ஆறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்துதலும் விதி விலக்கை இழப்பித்து இழிதொழிலில் நிற்பித்தலுமாகிய இயல்பு

---

* அநந்நியம் - அத்துவிதம். † இந்நூல், ககo சூ.

‡ சீவகசிந்தாமணி, பதிகம். கசo. § ஆறலைத்தல் - வழிப்பறித்தல்.

பற்றி ஐம்பொறிகளே வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃ தேகதேசவுருவகம். * "மன்னவன்றன் மகன்வேட சிடத்தே தங்கி" எனவழிநூலாசிரியர் ஓதியது முற்றுருவகம். ஐம்புல வேடரினயர்ந்தனே வளர்ந்தென எனவே, ஐம்புலவேடரின் வளர்ந் தயர்தலும் அதுவாதமுகத்தான் ஈண்டே பெற்றும்.

இதனுள், நவத்தினி ளுணர்த்த என்பது ஓரதிகரணம்; தம்முதல் குருவுமா யுணர்த்த என்பது ஓரதிகரணம்; ஐம்புல வேடரி னயர்ந்தனே வளர்ந்து என்பது ஓரதிகரணம்; விட் டன்னியமின் மையி னரன்கழல் செலும் என்பது ஓரதிகரணம்; ஆக நான் கதிகரணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

---

## முதலதிகரணம்

அவற்றுள், ஈண்டைக்குச் சிறந்த சாதனம் இது என்ப தூஉம், அது வருவாயும் உணர்த்துதற் கெழுந்தது முதலதி கரணம்:—

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழு மென்றது

எனவரும்.

இவ்வான்மாக்களுக்கு - சாதிக்கும் ஆற்றலாகிய அதிகார முள்ளன வென மேலிச்சூத்திரத்தாற் பெறப்பட்ட ஆன்மாக் களுக்கு. ஞானம் - சாதனமாகிய ஞானம் என்க.

ஆஞடையபிள்ளையார் முதலிய நாயன்மார்க்குத் தவமின்றி யும் ஞானம் நிகழ்ந்ததாலோ வென்னும் ஆசங்கையை நீக்குதற் கும், படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற் செய்த தவந் தானே அமையாதென்பது உணர்த்துதற்கும் முற்செய் தவம் என விசேடித்தார்.

ஈண்டு ஞானமென்றது, குரவனுணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகக் கொண்டறிவதாகிய அறிவினை.

நிகழ்தல் - ஐயந்திரிபின்றி விளங்குதல்.

அற்றேல், †"மூம்மைநற் பதிக டம்மின் முளைத்தவர் முடிந்தோர் மூவாச்—செம்மலர்க் கழல்கண் டோர்கள் சிவத்

---

* சிவஞானசித்தி, அ-ம் சூ. க.

† கோயிற்புராணம், இரணியவன்மச்சருக்கம், சுஎ.

தினைச் சேர்வர்" எனவும், *"செறிந்தடி காணச் சிவன் முத்த ராய்த் திரியலாமே" எனவும், †"சிவார்ச்சனமார்ச் சனமாகிற்— பவமகலும் பரபோகம் பெறலாகும்" எனவும், ‡"ஆதார யோக நிராதர யோகமென—மீதானத் தெய்தும் விதியிரண்டே" எனவும் பிறுண்டும் இவ்வாறோதுதலின், வீடுபேற்றிற்குக் காரணம் இத்தன்மையவாகிய தவங்களுளொன்றே யமையும், அன்றி ஞானங் காரண மெனினும் இவற்றோ டொப்பதொரு காரணமே யென அமையும்; அவ்வாறன்றிச் சிறந்த சாதன மென்றற்குப் பிரமாணமென்னை யெனவும், §"பொருவி னிரு வாண.....மறுவகையு மொருவினினை வரிதாம் பரபதத்து ளுயிர்விரவப் பயிற்றும்" என இவ்வாறு சிவாகமங்களினுந் தீக்கையே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமென் றோதுதலின், அதுவே அமையும், ஏனைச் சரியை கிரியா யோக ஞானங்களெல் லாந் தீக்கைக் கங்கமாக விதிக்கப்பட்டனவெனக் கோடல் பொருத்தமுடைத்து; அதனை யொழித்து ஞானமே வீடு பேற்றிற்குச் சிறந்த காரணமென்றற்குப் பிரமாண மென்னை யெனவும் ஆசங்கை நிகழ்வுழி அதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது:—

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடா வாகலான்

எனவரும்.

தவமெனப்பட்டன இவை யென்பார், சரியைகிரியா யோகங் களை என விதந்துரைத்தார். கிரியாயோகங்கள் என்னும் உம் மைத்தொகை வடநூன் முடிபு. சரியை என்பது தொகை நிலைச் சொல். கிரியாயோக மிரண்டற்குந் தீக்கை ஒன்றென் பது தோன்ற அவ்விரண்டினையுந் தொகுத்தோதிச் சரியையை வேறுவைத்தார். மேற்கோளில் முற்செய் தவத்தான் என்றதற் கேற்ப ஈண்டும் மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி என்றார். மேலாகிய உண்மைச் சரியை கிரியா யோகங்களை யென்றுரைப்பினு மமையும். கொடா என்னும் பயனிலைக்கு எழுவாய் அவை என்றெடுத்துக்கொள்க. காட்டிக்கொடுக்கும் எனற்பாலதனை இரண்டெதிர்மறையாற் கூறினர். ஞானத்தினை யின்றியமையாமை உணர்த்துதற்கு. சரியை கிரியா யோகங்களைச் செய்துழி என்றது உபலக்கணமாகலின், தீக்கை செய்துழி

* கோயிற்புராணம், இரணியவன்மச்சருக்கம், ஈஅ.

† கோயிற்புராணம், வியாக்கிரபாதச்சருக்கம், ஸ.

‡ திருக்களிற்றுப்படியார், உஉ. § சிவப்பிரகாசம், பாயிரம், க.

அதனவும் ஞானத்தைக் காட்டி யல்லது மோட்சத்தைக் கொடா எனவும் உரைத்துக்கொள்க. அவை யெல்லாம் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாமையை வலியுறுத்துவார், நன்னெறியாகிய என ஞானத்தை விசேடித்தார். நன்மை எனப் படுவன எல்லாவற்றுள்ளுஞ் சிறந்த நன்மையெனப்படுவது வீடு பேறென்ப. அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறி யாகலின், ஞானம் நன்னெறி எனப்படும்.

விழுச்சுடர்ச்செம்பொன் மேருமால்வரையைத் தலைப்பட லுறுவாராய்த் தென்றிசைக்கணின்றும் வழிவினுய்க் கொண்டு சென்று காவலந்தீவிற் பாரத வருடத்தினை எய்தி, ஆண்டு நின்று நெறிவினுயினுர்க்கு அஃதறிந்துள்ளார் ஆண்டுக்காட்டிய நெறியே அதற்குச் சென்னெறியாயினும் அந்நெறி இமயத்தை இடையிட்டுக் கிம்புருட வருடத்திற் செலுத்தும்; ஆண்டு நின் றுஞ் செல்லும் நெறி ஏமகூடத்தை இடையிட்டு அரிவருடத்திற் கொண்டு செலுத்தும்; ஆண்டு நின்றுஞ் செல்லும் நெறி நிட தத்தை இடையிட்டு இளாவிருத வருடத்திற் கொண்டு செலுத் தும்; ஆண்டு நின்றுஞ் செல்லும் நெறி இடையீடின்றி மேருமால் வரைக்கே கொண்டு செலுத்தும். இவ்வாறு நாற்றிசையும் யாண்டுநின் றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு இளா விருத வருடத்திற்கொண்டு செலுத்தும்; ஆண்டுநின்றுஞ் செல் லும் நெறி இடையீடின்றி மேருமால்வரைக்கே கொண்டு செலுத்தும். இவ்வாறு நாற்றிசையுள் யாண்டுநின்றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு* இளாவிருத கண்டத்தினைத் தலைப் பட்டன்றி மேருமால்வரையை எய்தல் கூடாதென்பதூஉம், கூடாதாயினும் அ வை யெ ல் லா ம் இளாவிருதகண்டத்திற் செலுத்துமுகத்தான் மேருமால்வரைக்கு வழியேயா மென்ப தூஉம் எல்லார்க்கு மொப்பமுடிந்தது. அதுபோல, வீடுபேற் றைக் காதலித்து அவ்வச்சமயந்தோறு முளவாகிய †"பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றுசென் றேறிச்" சைவத்தினெய்தப் பெற்றோர், ஆசிரியன் காட்டுஞ் சைவாகம நெறியிற் சமயதீக்கையுற்றுச் சரியைநெறியைத் தலைப்பட்டு, அது முற்றிய பின்னர் விசேட தீக்கையுற்றுக் கிரியைநெறியைத் தலைப்பட்டு, அது முற்றிய பின்னர் யோகநூல் கேட்டு யோக நெறியைத் தலைப்பட்டு, இம்மூன்றும் முறையான் முற்றியபின் னர் நிருவாண தீக்கைபெற்று ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேறடைவர். இவ்வாறன்றி வீடுபேறடைதல் கூடாதென்ப தூஉம், கூடாதாயினும் அவையெல்லாம் ஞானத்திற்கு நிமித்தமா

* இளாவிருத கண்டம் - மேருமலையைச் சூழ்ந்திருக்குங் கண்டம்.

† கருவூர்த்தேவர்திருவிசைப்பா, திருவிடைமருதூர், ஙி.

முகத்தான் ஏதுவாதல்பற்றி அவையவையே வீடுபேறடை விக்கு மென்பதூஉஞ் சாலுமென் றுணர்த்துவார், நெறி என்று உருவகஞ் செய்தார். இக்கருத்தேபற்றிப், *"புறச்சமய நெறி நின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலு மாச் சிரம—வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலிகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்— சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளே மிகத் தெளிந்துஞ் சென்றுற் சைவத்—திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" எனவும், †"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கம்.....ஞானம்" எனவும் ஓதினர் வழிநூலாசிரியரும். நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒரு பொருட் கிளவி.

*"சென்றுற் சைவத்—திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" எனவும், ‡ "படிவழி சென்றுசென் றேறி" எனவும் ஓதிய தனுனே முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும் ஆன்மாக்களினறிவு தூலவறிவாகலின் அவ்வாறு விளங்கமாட் டாது தத்தமக்கேற்ற சோபான முறையே சிறிதுசிறிதாக ஏகதேசமாய் விளங்கிவிளங்கி மேம்பட்டுவந்தே வியாபகமாய் விளங்குவதோ ரியல்பிற்றென்பதூஉம், அத்தன்மை நோக்கி அதற்கேற்பச் சோபான முறையாய்த்தானே முதல்வனது சிற் சத்தியும் முற்பக்கத்திற் றிங்கள் போலத் திரோதான சத்திரூப மாய்நின் றறிவிக்கு மென்பதூஉம், எனவே, ஆன்மாக்களினறிவு அங்ஙனம் விளங்காதவழி நிகழும் அறியாமையாகிய மலமும் அதற்கேற்ற பலபல சத்திகளுடைத்தாய் அம் முறையே சிறிதுசிறிதாக முற்பக்கத்திருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கட் பற்றறக் கழியுமென்பதூஉம், அது தேயத்தேய அதற்கேற்பத் திரோதான சத்தியும் அம் முறையே சிறிதுசிறிதாகத் தன்றன்மை நீங்கிச் சிற்சத்திரூப மாய்ப் பதிந்துபதிந்து முடிவின்கண் அதிதீவிரசத்தியாய்ப் பதியுமென்பதூஉம், அது பதியப்பதிய அம்முறையே விடய வெறுப்புண்டா மென்பதூஉம், அஃதுண்டாக வுண்டாக அம் முறையே வீட்டின்கண் விருப்பம் நிகழுமென்பதூஉம், அது நிகழநிகழ அதற்கேற்ப ஆண்டாண்டுப் பலவேறு வகைப்பட உபதேசங்கள் சோபானமுறையான் மேற்பட்டுளவா மென்பதூ உம், அதற்கேற்ப ஆன்மாவின்கண் அநுபவஞானங்களும் அவ் வாறே மேற்படுமென்பதூஉங் கண்டுகொள்க.

---

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கக. † சிவஞானசித்தி, அ-ம் சூ. கஅ.
‡ கருவூர்த்தேவர் திருவிசைப்பா. திருவிடைமருதூர், இ.

இனித், தீக்கையும் ஞானத்திற்கு அங்கமாய் நின்றே வீட்டினைக் கொடுக்குமென்பதூஉம் பாயிரத்திறுதியிற் காட்டினும்; கடைப்பிடித்துக்கொள்க.

அற்றேல், காரணமுள்வழிக் காரியநிகழ்ச்சிக் கிடையீடின்மையின், முற்செய்த சரியை கிரியா யோகங்கள் ஞானத்தைக் காட்டும் நிமித்த மென்பார்க்கு அவை செய்துகொண்ட பொழுதே இடையீடின்றி ஞானம் நிகழ்தல் வேண்டும்; அவ்வாறன்றி மற்றொரு பிறவியின் ஞானம் நிகழுமா றென்னை யென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கெழுந்த உதாரணம்:—

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலாற்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு

எனவரும்.

சரியை கிரியா யோகங்களாகிய தவத்தினைச் செய்தவர் ஒருதலையாக அவ்வத் தவப்பயன்களை எய்துதற்குரிய உலகத்தினை எய்தி ஆண்டு அவற்றை துகர்ந்து வைகி மீள நிலத்தின் வந்து பிறத்தலைச் செய்தே எஞ்சிய வினைப்பயன்களை நுகர்ந்து விடயப் பற்றறுத்தற்பொருட்டு அவ்வாறு தவஞ்செய்து தோன்றிய நல்லினத்தின் வந்து பிறந்து தவத்தான் விடயப்பற்றறுத்து ஞானத்தினைத் தலைப்படுவரென்பதனை வீட்டுநூலை யுணர்ந்தாரது சூழ்ச்சி அந்நூலின் கருத்துணர்ந்து சொல்லும் என்க.

நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல் தவமுதிர்ச்சியுடையார்க்கன்றிக் கூடாதென்பார், தவஞ் செய்தார் என்றும், தவமாக, பிறிதொன்றாக இவ்வுலகத்து உடம்பொடுநின்று ஈட்டிய வினைகள் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் பயன் நுகர்விக்கப்படுதலை ஒருஞான்றும் பிறழமாட்டாரென்பார், என்றுந் தவலோகஞ் சார்ந்து என்றும், அத்தவஞ் செய்துழியும் ஞானம் நிகழ்ந்தாலன்றி ஏகதேசப்பற்றறுதல் கூடாமையின் அதுபற்றி அவ்வுடம்பு இறக்கு ஞான்று மனம் ஒருவிடயத்திற் சென்று பற்றியதாயின் அதனை அநுபவித்தற்குத் துணையாகி எஞ்சிநின்ற உடல்வினையோடும் ஆண்டுப் பிறந்து அநுபவித்தன்றி அவ்விடயப்பற்றறுதல் கூடாதென்பார், பவஞ் செய்து பற்றறுப்பாராக என்றும், தவஞ்செய்தார் மனம் நல்விடயங்களினன்றிப் பற்றுதலின்மையின் அவற்றை அநுபவித்தற்குரித்

தாய்ச் சிறந்தபிறவி எய்துவரென்பார், தவஞ்செய்த நற்சார்பில் வந்துநிந்து என்றும், தவமுதிர்ச்சி யுடையார்க்கெழுந்த தெளிவர்ச்சி மெலிதாய்க் கழிந்தொழிவதன்றி ஏனோர்க்குப்போல முழுமுதன்மையின் இடையீடின்றி ஞானம் நிகழுமென்பார், ஞானத்தை நண்ணுதலே என்றும், இவையெல்லாம் வேதாகமநூற் றுணிபென்பார், கற்றார் சூழ் கண்டு சொல்லுமாம் என்றுங் கூறினர்.

ஆக என்னுஞ் செயவெனைச்சம் "உண்ணவந்தான்" என் புழிப்போலத் தற்பொருட்டாய் நின்றது. கற்றாரது சொல் லுதற்றொழிலைச் சூழ்ச்சிமேலேற்றிக் கூறினர். கற்றார் தமது சூழ்ச்சியான் உணர்ந்து சொல்லுவரென்பது. ஆம் - அசை.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ்சார்ந்து எனப் பொதுப் படக் கூறினராயினும், சரியைக்குச் சாலோகமுங் கிரியைக்குச் சாமீபமும் யோகத்திற்குச் சாரூபமுமாமென்பது, *"சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர் விதமாம்" எனவும் †"உண்மைச்—சரியை கிரியா யோகத் தன்மையோர்க்குச் சாலோக சாமீப சாரூபங்கண்—மருவியிடும்" எனவும் வழிநூலாசிரியரும் புடைநூலாசிரியரும் விரித் தோதிய வாற்றுணர்க.

அற்றேல், ‡ "பால்போ—லொருதன்மைத் தாகு மற விலை யாபோ—லுருவு பலகொள லீங்கு" என்பவாகலின், நல்விலையெனப்பட்டன வெல்லாம் புண்ணியங்களா மன்றே; அவற்றுள் ஏலையவற்றை யொழித்துச் சரியைகிரியா யோகங் கண்மாத்திரையே ஈண்டுத் தவமென விதந்தெடுத்துக் கொண் டோதியது என்னையோ வென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெழுந்த உதாரணம் :—

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யோக்கு
மிசைத்து வருவிலையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து

எனவரும்.

நல்விலை செய்யத் தொடங்கி அற நூலை ஆராய்வாரது உணர்விற்கு விடயமாய் வரும்பொழுதே தம்மாற் றலைப்படுங் காமியப் பயன்களைக் கூறிக்கொண்டே வருவனவாகிய புண் ணியங்களா னுளவாய இன் பம் பசித்துண்டு பின்னும்

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கஅ. † சிவப்பிரகாசம், பாயிரம் கo.
‡ நாலடியார், மெய்ம்மை, அ.

பசிப்பாணுக்கு அவ்வுண்டியான் வரும் இன்பத்தை யொக்குமாக லான், ஒருவனுக்குப் பந்த முறுத்துதற்கட் பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்மூட் சமமாகச் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்களிரண்டுந் தம்மைப்போற் கெடுதலில்லாத சரியை கிரியா யோகங்களானே துலையொப்ப நேராயின், அத்தவங்களின் பயனுகிய பதமுத்திகளை அநுபவித்து வைகும் ஆண்டேதானே ஞானநெறியைத் தலைப்படுவன். அவை அங் ஙனம் நேராகாவிடின் மீள நிலத்தின்கண் வந்து பிறந்து விணை யொப்பு நிகழ்ந்து குரவன் றிருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்படுவன் என்க.

பொருளுக் கோதிய பயனை உவமையினுங் கூட்டி உரைக்க.

அறநூலிற் கூறப்படும் நல்வினையின் பயனெல்லாம் அழி வெய்துவன என்பதற்கு அவ்வற நூலே சான்றென்பார், இசைத்து வருவினை என்றார். எனவே, வேள்வி முதலியன வற்றை விதித்த அறநூலே, அவற்றிற்குப் பயன் காமியமென் பதூஉ முடன் கூறுதலின், காமியப்பொருளெல்லாம் அழி வெய்துமென்பது எல்லார்க்கு மொப்பமுடிந்தமையான் அவ் வழிவெய்துவனவற்றைப் பயப்பனவாகிய புண்ணியங்கள் அழி வின்றி நிலைபேறுடைத்தாகிய ஞானத்தைப் பயக்கமாட்டா வென்றவாறுயிற்று.

இசைத்து வருதல் - "ஆடி வருதல்" "பாடி வருதல்" போல உடனிகழ்ச்சிவினை; நூலின்வினை வினைமேலேற்றப் பட்டது.

சரியை கிரியாயோகங்களான் வரும் பயன் இவைபோல் அழிவெய்துவதன்றென வேற்றுமை கூறுவார், இறப்பிறவும் என்றார். இசைத்து வருவினையி லின்பம் நிலைபெறுமை, பசித் துண்டு பின்னும் பசிப்பார்க்கு அவ்வுண்டியான் வரும் இன் பத்தை ஒக்குமெனவே, இறப்பிறவத்தான் வரும் இன்பம் நிலைபேறுடைமை, பசித்துண்டு பின்னர்ப் பசியாதாராகிய கடவுளர்க்கு அவ்வமிழ்தவுண்டியான் வரும் இன்பத்தை யொக்குமென்பதூஉ மாயிற்று. சரியை முதலியவற்றிற்குச் சிறந்த பயன் ஞானமேயாகலாற் சாலோகமுதலிய பதமுத்திகள் அவாந்தரப் பயனென் றுணர்ந்து கொள்க.

பின்னும் என்ற உம்மை இறந்ததுதழீஇயது. ஒப்பில் என்பது செயின் என்னும் வினையெச்சம். தவத்தால் என்பதனைத் தவத்து ஆன் எனப் பிரித்து, தவத்து என்பதற்கு ஏதுப்பொருட்கண்

வரும் இன்னுருபு விரித்துரைக்க. ஆன் - அவ்விடம் ; *"ஆன்வந் தியையும் வினாகிலையானும்" என்னுர் தொல்காப்பியனுரும். ஒப்பில் என்றதனுல் ஒவ்வாவிடில் என்பது வருவித்துரைக்கப் பட்டது. ஆம் - அசை. தவத்தான் எனக் கூட்டி எழுவாயாக வைத்துரைப்பாரும், ஆனுருபேற்ற சொல்லாக வைத்துரைப் பாரு முளர்.

ஈண்டுக் கூறப்பட்ட இருவேறு புண்ணியங்களுள் இரைத்து வரு வினைக ளெல்லாம் பசுக்களை நோக்கிச் செய்யப்படுதலிற் பசு புண்ணிய மெனவும், இறப்பிறவுங் களெல்லாஞ் சிவனையே நோக் கிச் செய்யப்படுதலிற் சிவபுண்ணியம் எனவும் பெயர் பெறும்.

அற்றேல், †"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாக னுர்தாம் வருவர்" என்பவாக லிற், பசுக்களை நோக்கிச் செய்தலும் சிவபிரானே ‡ ஏன்று கோடலிற் பசுபுண்ணியமுஞ் சிவபுண்ணியமாகு மாலோ வெனின்,—அறியாதுகூறினுய் ; ஈண்டுப் பசுபுண்ணியஞ் சிவ புண்ணியமெனப் பகுத்தது செய்வாரது கருத்து வேறுபாடு பற்றியே யன்றி ஏன்றுகோடல்பற்றியன்று ; செய்வாரது கருத்து வேறுபா டுணர்ந்து அவற்றிற் கிசையவே முதல்வன் பயன் கொடுப்ப னுகலானென்பது. அற்றுகலினன்றே, மக வெனப் பல்லுயிரினத்தையு மொக்கப் பார்க்கும் மெய்ஞ் ஞானிகள் பசுக்கண்மேல் வைத்த கருணையான் அவற்றின்கட் செய்தனவுஞ் சிவபுண்ணியமே யாயினவாறு. அற்றுயினும், தண்ணீர்ப்பந்தர் முதலிய உலகவினைபோலன்றி வேள்வி முத லிய வைதிகவினை சிவனை நோக்கி அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலுமுடைமையின், அவை சிவபுண்ணியமுமா மென் றற்கு இழுக்கென்னை யெனின்,—அற்றன்று ; ஆண்டுச் சிவ பிரானுக்கு அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலும் பசுக்க ளாகிய ஏனைக் கடவுளரோ டொப்பவைத்துச் செய்தலேயன் றிப் பொதுநீக்கிப் பசுபதியென்னுங் கருத்தாற் செய்தலின்மை யின், அவையெல்லாங் கருத்துவகையாற் பசுபுண்ணியமேயாம். ஆண்டுச் சிவபுண்ணியமும் அபுத்திபூர்வமாய் நிகழ்தலின், அது புத்திபூர்வமாய் இனிச்செய்யக் கடவனவாகிய சிவபுண்ணியங் களுக் கேதுவாதன்மாத்திரையாற் பயன்படுதலுடைத்தென்க. அவ்வேள்வி முதலியனவுஞ் சிவபிரானை நோக்கிப் பொதுநீக்கிச் செய்யின், அஃது ஏனையபோலப் பசுபுண்ணிய மாதலின்றி முன்னர்க் கூறப்படும் பொதுச் சிவபுண்ணியமாமெனக்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், சூ. † சிவஞான சித்தி, உ-ம் சூ. உ. ‡ ஏன்றுகோடல் - ஏற்றுக்கொள்ளல்.

கொள்க. இஃதுலக வினைக்கண்ணு மொக்கும். * "வேம்பி னெடு தீங்கரும்பு விரவியெனைத் தீற்றி" என்றோதியதூஉம் இவ் வியல்பு நோக்கி யென்க.

இனிச், சிவபுண்ணியம் அபுத்திபூர்வம் புத்திபூர்வமென்று இருவகைப்படும். அவற்றுள், அபுத்திபூர்வம் வேள்வி முதலிய வற்றுட்போலப் பொது நீக்கி யறியுமாறின்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதூஉம், அந்நோக்கமுமின்றி † மாவலி முன்னைப் பிறப்பிற் செய்ததுபோலச் செய்தவினை யாதானுமோர் ஆற்றுற் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதூஉமென இரு வகைப்படும்.

இனிப், பொதுநீக்கிச் செய்யப்படுவதாகிய சிவபுண்ணிய மும் பொது, சிறப்பு என்று இருவகைத்து. அவற்றுட் பொது வாவது சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீக்கையின்றி அவ்வாறு செய்வது. சிறப்பாவது சிவபுண்ணியத்திற்கு அங்க மாகிய சிவதீக்கையுடையராய் அவ்வாறு செய்வது. இவ்விரண் டும் பத்திகாரணமாக உண்மையாற் செய்வதூஉம், புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வதூஉமென வெவ்வே றிருவகைப்படும். அச்சிறப்புச் சிவபுண்ணிய மிரண்டுஞ் சரி யையுங் கிரியையும் யோகமும் அவற்றுன் நிகழும் ஞானமு மென ஒரோவொன்று நந்நான்காய் அந்நான்கினுள்ளுஞ் சரியை யிற் சரியை கிரியை யோகம் ஞானம், கிரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், யோகத்திற் சரியை கிரியை யோகம் ஞானம், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானமென ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு விரி யான் இன்னும் பலதிறப்படுமென் றுணர்க.

## சரியையிற் சரியை முதலியன

அவற்றுள், திருக்கோயில் அலகிடல், மெழுகல் முதலியன சரியையிற் சரியை. ஐயைந்து மூர்த்திகள் விநாயகக் கடவுள் முதலிய ஆவரணமூர்த்திகள்; இவர்களில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சின்கண் உருத்திரக்கடவு ளைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகம். அத்தியான

---

* சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம், திருநாகைக்காரோணத் திருப்பதி கம், கொல்லிக்கௌவாணம், உ. † மாவலி முன்னைப்பிறப்பிற் செய்த வினையை, "நிறைமறைக் காடுதன்னி னீண்டொரி தீபந்தன்னைக்—கறை நிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்றுதூண்ட—நிறைகடன் மண் ணும் விண்ணு நீண்டவா னுலகு மெல்லாங்—குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கையீ ரட்ட ஞரே" என்னுந் தேவாரத்தானுமறிக; திரு நாவுக்கரசுநாயனார், திருக்குறுக்கை வீரட்டம், அ.

பாவனையின் உறைப்பான் ஓரறுபவ வுணர்வு நிகழ்தல் சரியையியல் ஞானம்.

### கிரியையிற் சரியை முதலியன

சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சிவாகமத்தில் விதித்த வாறே ஐவகைச்சுத்தி முன்னுகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை ஓமந் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகங் கிரியையில் யோகம். அவ்வந்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓரறுபவ வுணர்வு கிரியையில் ஞானம்.

### யோகத்திற் சரியை முதலியன

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். இந்த யோகஞ் சகளஞ் சகள நிட்களங் களைப்பற்றி நின்று செய்யுஞ் சாலம்பயோகமும், நிட்களத்தைப் பற்றி நின்று செய்யும் நிராலம்பயோகமுமென் றிருவகைப் படும். இயமம் முதலிய அட்டாங்கங்களின் இயல்பெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்; சிவாகமங்களுட் காண்க.

### ஞானத்திற் சரியை முதலியன

இனிக், கேட்டன் முதலிய நான்களுள், கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டை கூடல் ஞானத்தில் ஞானமென் றுணர்ந்து கொள்க.

இவற்றுள், உபாயச் சரியையிற் சரியைமுதல் உபாய ஞானத்தில் ஞானமீறுகிய பதினாறு வகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பக் காலாக்கினியுருத்திரர் முதல் குணதத்துவ மத்தகத்திற் சிகண்ட புவனத்தின் கீழுள்ள உருத்திரரீறுன அவ்வப் புவனபதிக ளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச் சரியையிற் சரியைமுதல் உண்மை யோகத்தின் ஞானமீறுகிய பன்னிருவகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பச் சிகண்ட புவனமுதற் சுத்த வித்தைக்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோக முதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற்

சரியை முதலிய மூவகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்கட்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பச் சுத்தவித்தை முதலிய அதிகார தத்துவம் போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோக முதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப் பலவேறு வகைப்பட்டு விரியும் ஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன். ஏனையவற்றிற்கு இலயதத்துவத்திற் பலவேறுவகைப்பட்ட அபரமுத்தி பயனெனக் கொள்க.

உண்மைச் சரியை முதலியவற்றிற்குச் சுத்தவித்தை முதலிய தத்துவத்துச் சாலோக முதலியவற்றிற் சேறல் பயனென்றுரைப்பாரு முளர். சிவதத்துவ புவனங்கள் ஆணவமல நீங்கி வாசனாமாத்திர முடையவரான் எய்தப்படும் அபரமுத்தித் தானமன்றி ஏனையோரெய்தும் பதமுத்தித்தான மன்றென்பது சிவாகமங்களுக் கெல்லா மொப்ப முடிந்ததாகலின், ஞானத்திற் றலைப்பட்டன்றி மல நீங்குதல் கூடாமையானும், * "ஈசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ—ரூனமிலா முத்திபதம் பெற் றுலக மெல்லா மொடுங்கும்போ தரன் முனிலா தொழியினும் பவித்து—ஞானநெறி யடைந்தடைவர் சிவனே" எனப் பதமுத்திகளைப் பெற்றோர்க்கு மீட்சி கூறுதலிற் சுத்தவித்தை முதலிய தத்துவ புவனங்களின் எய்தியோர்க்கு ஆண்டுநின்றவாறே பரமுத்தியைத் தலைப்படுதலன்றி ஒருவாற்றானும் மீட்சியில்லை யென்பது சிவாகமநூற் றுணிபாகலானுஞ் சிவாகமங்களோடு முரணி அவ்வாறு கூறுதல் பொருந்தாமை யறிக. சரியை முதலியவற்றில் நின்றோர்க்குப் பயன் சுத்த தத்துவபுவனத்துச் சுத்தசாலோக முதலாயினவெனச் சில விடங்களிற் கூறியது ஞானத்திற் சரியை முதலியவற்றில் நின்றோர்க்கென்னுங் கருத்தேயாமென் றுழிக.

## சரியை

சரியை முதலியவற்றின் இயல்பு என்னையெனிற் கூறுதும்:- அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான், உயிர்கள் சோபான முறையானுணர்ந்து உய்தற் பொருட்டுத் தூலமாகவுஞ் சூக்குமமாகவும் அதிசூக்குமமாகவும் மூவடிவங் கொண்டருளி அவ்வடிவங்களின் வழிபடும் முறைமையும் வேதாகமங்களில் அவனுல் வகுத்தருளிச் செய்யப்பட்டனவாகலான் அம்மூவகை வடிவின்வைத்துப் பக்குவ முறைமையான் மேம்பட்டு நிகழும், நுண்ணுணர்வின்மையிற் சகள

* சிவஞானசித்தி, அ-ம் சூத்திரம், உரை.

மாகிய தூலவடிவமாத்திரத்தைப் பொருளென்றுணர்ந்து காயத் தொழின் மாத்திரையான் ஆகமத்தின் விதித்தவாறு வழிபடு வது சரியை.

## கிரியை

அஃது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தான் நுண்ணுணர் வுடையராய்ச், சகள நிட்களமாகிய சூக்கும வடி வமே பொருள், சகள வடிவம் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி யென்று இவ்வா றுணர்ந்து புறத்தொழிலானும் அகத்தொழிலானும் விதித்தவாறே வழிபடுவது கிரியை.

## யோகம்

அஃது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தான் அதிநுட்பவுணர்வுடையராய், நிட்களமாகிய அதிசூக்கும வடி வமே பொருள், சகளமுஞ் சகளநிட்களமும் அதனை வழிபடுதற் கிடமாகிய திருமேனி யென்று இவ்வா றுணர்ந்து அகத்தொழின் மாத்திரையான் ஆண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்.

## ஞானம்

மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியானே உள்ளவாறுணர்வு விளங்கி, அகண்டா காரநித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பே சொரூபம், ஏனைச் சகளமுதலிய மூன்றுந் தூலாருந்ததி நியாயமாக அதனை உணர் தற்பொருட்டும் வழிபடுதற் பொருட்டுங் கொண்ட திருமேனி யென் றிவ்வாறுணர்ந்து, காயத்தொழின் மனத்தொழி லிரண் டனையுங் கைவிட்டுக், கேட்டன் முதலிய அறிவுத் தொழின் மாத்திரையான் வழிபடுவது ஞானம்.

ஆகலான், அறிதலொப்புமையாற் சரியை முதலிய நான் கும் ஞானமேயா மெனவும், ஆயினும், * "அரும்பு மலர் காய் கனி" யாதல்போலச் சோபான முறையாகிய தம்முள் வேறு பாட்டான் முறையே ஒன்றற்கொன்று அதிகமாய் நான்கா மெண்ணுமுறைமைக்கணின்ற ஞானமே முடிவாகிய ஞானமா மெனவும், எனவே, இந்நான்கினும் அறிவு நுணுகிவரவர அறி யாமையாகிய மலமும் அம்முறையே தேய்ந்து தேய்ந்து வருத லின், இவற்றின் பயனுகிய சாலோக முதலிய நான்கும் முத்தி யேயாமெனவும், ஆயினும் அம்மல நீக்கமும் அவ்வாறு நிகழுஞ் சோபானமுறையானே அவை ஒன்றற்கொன்று ஏற்றமாய்

* தாயுமானசுவாமிபாடல், பராபரக்கண்ணி, கஅள.

அவற்றுள் நான்கா மெண்ணுமுறைமைக்கணின்ற சாயுச்சியம் ஒன்றே முடிவாகிய முத்தியாமெனவும்உணர்ந்துகொள்க.

### சாலோகம்

சாலோக முதலிய நான்கனுள் அவ்வச்சரியைக் கேற்ப அவ்வப் புவனபதி யுலகங்களி னெய்தி, ஒருவர் மனையிற் பணி செய்யும் அகத்தொண்டர்க் குளதாகிய உரிமைபோல, அவ்வவ் வுலகத்துள் யாண்டுந் தடையின்றி இயங்கி அவ்வப்போகங்களே நுகர்ந்து வாழ்வது சாலோகம்.

### சாமீபம்

அவ்வளவினன்றி, மைந்தற் குளதாகிய உரிமைபோல அவ்வப் புவனபதிகளுக்கு * அணுக்கராய் வைகி அவ்வப்போக விசேடங்களே நுகர்ந்து வாழ்வது சாமீபம்.

### சாரூபம்

அவ்வளவினன்றித், தோழர்க்குரிய உரிமைபோல அவ்வப் புவனபதிகளோ டொத்த வடிவமும் ஒத்த அணிகலனும், ஒத்த போக நுகர்ச்சியும் பெற்று வாழ்வது சாரூபம்.

இம்மூன்றும் உரிமை விசேடம்பற்றி முறையே தொண்டர் முதலியோ ரியல்பை ஒத்தலின், இவற்றை அடைதற்கு நெறியா கிய சரியை முதலிய மூன்றுந் தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்க மெனப் பெயர் பெற்றன வென்பது.

### சாயுச்சியம்

இனிச், சரியையின் ஞானமுதல் யோகத்தின் ஞானமீறு கிய ஞான விசேடங்கட்குப் பயனெனப்படுஞ் சாயுச்சியமாவது, ஒத்தவடிவினராய் வாழ்தன்மாத்திரையேயன்றி அவ்வப்புவன பதிகளான் அதிட்டிக்கப்பட்டு அவ்வவதிகாரங்களே அவ்வவர் போலவே செய்துகொண்டு வாழ்வதென் றுணர்க.

அற்றேல், இவ்வாறன்றிப் புவனபதிகளுடைய சாயுச்சிய மாதலாவது அவ்வப்புவனபதிகளான் அதிட்டிக்கப்படுத லின்றியே அவரோடொப்ப அதிகாரஞ் செய்யும் ஆற்றலுடைமை யென்றற்படி மிழுக்கென்னே யெனின்,—நன்று சொன்னாய்! அவ்வச் சாயுச்சியத்தி னின்றோர் அவ்வப் புவனபதிகளான் அதிட்டிக்கப்படுத லின்றியே அவரோடொப்ப அதிகாரஞ்

* அணுக்கர் - சமீபத்துள்ளவர்.

செய்யும் ஆற்றலுடையராயவழி, வறிதே யிருப்பரோ? அதிகாரஞ் செய்துகொண் டிருப்பரோ? எனக் கடாயினர்க்கு வறிதே யிருப்பரென விடுப்பின், அவ்வாற்றலாற் போந்த பயனென்னை? அல்லதூஉம், வீடுபயக்கும் மெய்யுணர்வு நிகழுங்காறும் மேன்மேல் அவாச்சேற லொருதலை யாகலின், ஆற்றல் பெற்றுழி வறிதே யிருத்தல் கூடாது. இனி, அதிகாரஞ் செய்துகொண் டிருப்பரென விடுப்பின், அவ்வப் புவனபதிகளதிகாரத்தை மாற்றி முழுவதுந் தாமே அதிகாரஞ் செய்வரோ? அவரு மதிகாரஞ் செய்யத் தாமு மதிகாரஞ் செய்வரோ? அவரதிகாரத்தை மாற்றித் தாமே அதிகாரஞ் செலுத்துவரெனின், அவ்வப் புவனபதிகளாதலே சாயுச்சிய மெனப்பட்டு வழுவாம்; அன்றியும், பிரளயாகலர் விஞ்ஞாஞ கலரிற் புண்ணியப்பே றுடையார்க்கன்றிச் சகலரிற் புண்ணியப்பே றுடையார்க்குப் புவனபதிகளாதல் கூடாது. அவ்வாறின்றி அவரு மதிகாரஞ் செலுத்தத் தாமு மதிகாரஞ் செலுத்துவரெனின், ஒரு கம்பத்தில் இரண்டாணைபோலவும், ஒரு நகரியில் இருவேந்தர் போலவும் மாறுதலேயன்றி அவ்வதிகாரம் இனிது செல்லாது; அல்லாதூஉம், தமக்குப் பாதியதிகாரமாய் முடியும், அப்புவனபதிகட்குப் பாதியதிகாரங் குறையும் என்று இவ்வாறெல்லாம் எள்ளலாய் முடியுமாகலின், அவ்வப்புவன பதிகளோடொத்த ஆற்றலுடைமை அவ்வச் சாயுச்சிய மென்றல் போலியென் றொழிக.

இனி, முடிவாகிய ஞானத்திற்குப் பயனெனப்படுஞ் சாயுச்சியத்தினியல்பு முன்னர்க் காட்டுதும். சரியை முதலியவற்றிற்குச் சாலோக முதலியன அவாந்தரப் பயனெனவும், ஞானமொன்றே உண்மைப்பயன் எனவுங் கொள்க.

## சத்திநிபாதம்

இனிச், தவம் இவ்வாறு சரியை முதல் நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழ்தற்கேற்பப், பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அநுகூலமாய் நின்று நடாத்திய திரோதானசத்தி மலம் பரிபாக மெய்தியவழி அக்கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணையெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக்கண்மாட்டுப் பதிவதாகிய சத்திநிபாதமுஞ், சோபானமுறையான் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்பட்டு, அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழுமெனக் கொள்க. எனவே சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாக மென்பதூஉம், அதுவும் அவ்வாறு பலவேறுவகைப்பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன.

சத்திநிபாதமெனுஞ் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. நி என்பது ஏற்றமாக என்னும் பொருள்குறித்து நின்றதோ ரிடைச்சொல். ஓரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக் களத்துள்ளாரை ஆண்டுநின்று மகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்தமாத்திரையே அஃது அவ்வான்மாவை மனவி மக்கண் முதலிய உலகத் தழனியின் அச்சநிகழ்ந்து அவ்வுலக வாழ்க் கையினின்று வெரீஇப் போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சியென்னுது சத்தி வீழ்ச்சியென் றோதப்பட்டது.

### மலபரிபாகம்

மலபரிபாகமாவது மலந் தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்க ளெல்லாவற்றோடுங் கூடுதலேயாம்.

### இருவினையொப்பு

இனி, இறப்பிறவத்தான் நிகழும் இருவினையொப்பாவது யாதெனிற் கூறுதும்:—சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த இரு வினைகளும் பக்குவ முறையானே பயனுய் வரும்வழி, நல்வினை யுண் மிக்கதாகிய பரிமேத வேள்விப் புண்ணியமும், தீவினை யுண்மிக்கதாகிய பிரமக்கொலைப் பாவமும் ஒருங்கே பக்குவமெய் திப்பயன்படுதற்கண்ஒத்தனவாயின், அவைதம்முள்ஒன்றுனென் றடிக்கப்பட்டுச் * சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியு மாகலின், அவை அவ்வாறு தம்முளொத்தலே இருவினை யொப் பென்பர் ஒரு சாரார். சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முளொத்தல் இருவினை யொப்பென்பர் ஒருசாரார். மிக்கவினை இரண்டுந் தம்முளொத் துக் கெட்டனவாயினும் அவையொழித் தொழிந்த புண்ணிய பாவங்கள் தத்தம் பயனைத்தருதற் கிடையீடின்மையானும்; இரு வினைகண் முழுதுந் தம்முளொக்குமாறில்லை, ஒக்குமெனினும் அதுபற்றி ஆணவமலம் நீங்குமா றின்மையான் விஞ்ஞானகல ராவாரன்றி முத்தியெய்துதல் கூடாமையானும்; இவ்வாறு பௌட்கரத்துளெடுத்தோதி அவ்விரண்டனையும் மறுத்தலா னும் ஈண்டோதிய இருவினையொப்புக்கு அவை பொருளல்ல வென் றுரைக்க.

---

* சுந்தோபசுந்தநியாயமாவது சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரரிரு வரும் திலோத்தமை என்னும் பெண்பொருட்டாக ஒருவரை ஒருவர் கொன்றதுபோன்ற ஒரு நெறி.

இனி, இவ்விரண்டும் இவ்வாறுக; வேறு பொருள்படுதற் கேலாமையானும், சிவப்பிரகாசத்தில் * "எதிர் வினையுமுடிவினையுதவு பயனு னேராக" என ஏனை வினைகள்போல ஆகாமியவினையும் முடிவினையும் ஒத்தல்வேண்டுமென் றோதுதலின், அஃதொத்தல் பிறிதோராற்றாற் பெறப்படாமையானும், மலபரிபாகக் குறி சத்திநிபாதக்குறி சிவபுண்ணியக்குறிகளெல்லாம் ஆன்மவறிவின்கண் விளங்குமாறுபோல இருவினையொப்புக் குறியுந்தன்னறிவின்கண் விளங்குமாறில்லையாயின் அதுமுதற்கே தவறுதல் கூடாமையானும், ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப்புண்ணியபாவமிரண்டினும், அவற்றின் பயன்களினும் ஒப்ப வுவர்ப்பு நிகழ்ந்து விடுவோன தறிவின்கண் அவ்விருவினையும் அவ்வாறொப்ப நிகழ்தலே ஈண்டு இருவினையொப்பென்றதற்குப் பொருளென நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

*"எதிர்வினை.....நேராக" எனப்புடைநூல் செய்த ஆசிரியர், இஃதறியாது வேறுவேறுரைப்பாரை நோக்கியன்றே, †அருவினை தூக்க வருவினை நில்லா—வொருவினை புரிகா லிருவினை யாகா—வொப்பிறு மாறு செப்புக" எனச் சங்கற்ப நிராகரணத் தோதியதூஉமென்க. ‡"இனையபல பிறவிகளின்" என்னுஞ் செய்யுளில் "எதிர்வினையும்" என்பதற்கு வேறு முடிபாக வைத்துத் தமக்கு வேண்டியவாறே உரைப்பாருமுளர். அது பொருந்தாமை சொற்கிடக்கைமுறை நோக்கி உணர்க. ஆண்டு இருபயனும் என்ற உம்மை ஏனையிரண்டும்மைகளோடொப்ப எண்ணும்மையாதலே பொருத்தமுடைத்தாகலின், அதனை வேறுபிரித்து முற்றும்மையாகக் கொண்டுரைத்தலும் பொருந்தாமை யறிக. இன்னும் அவர் §"உம்மூன்றாகுமிடனுமா ருண்டே" என்னுஞ் சூத்திரவிதிபற்றி, $"நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து" என்றாற்போல "நுகரும்" என்னும் பெயரெச்சத்தை "நுகருந்து" என வைத்தோதிய ஆசிரியர் கருத்துணராது "நுகர்" என்பதனை முதனிலைப் பெயராக்கிக் கண்ணுருபு விரித்திடைப்பட்டுரைப்பர். "ஒருகாலத்து" எனவும் "முந்து" எனவும் ஓதிய சொற்குறிப்பும் அறிந்திலர்போலும். அன்றியும், அவ்வாறுரைப்பார்க்கு, "அந்தமுறவந்தவினையும்" எனவே அமையுமாகலின் "ஒருகாலத்தருந்த முந்துநுகருந்து பயன்" என்ற சொன்முழுவதும் வெற்றெனத்தொடுத்தலாய் முடியுமாகலானும் அவ்வுரை போலியென் றொழிக.

---

* சிவப்பிரகாசம், பொது உ-சூ. கூ0. † சங்கற்பநிராகரணம், சைவாதிநிராகரணம், உஉ, உகூ, உச-ம் அடிகள். ‡ சிவப்பிரகாசம், பொது, உ-ம் சூத்திரம், கூ0. § தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், ஙச. $ புறநானூறு, கூகூடி.

இனி, இருவினைகள் பசுநல்வினை தீவினை யென்றுஞ் சிவ நல்வினை தீவினை என்றும் இருவேறு வகைப்படும். எனவே, இருவினையொப்பும் அவ்வாறு பசுநல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாகிய இருவினையொப்பென்றும், சிவ நல்வினை தீவினை கள் தம்முளொத்தலாகிய இருவினையொப்பென்றும் இருவேறு வகைப்படு மென்பதூஉம் பெற்றும். சிவ நல்வினை தீவினைகள் தம்முளொத்தலாவது, சிவ நல்வினையுந் தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக்கேதுவாய்ப் பசுபோதம் முனைத்துச் செய்யப்படுவ தொன்றெனத்தெளிந்து உவர்த்து விடுவோனது அறிவின்கண் அவ்வாற்றலைப்ப நிகழ்தல். இவ் விருவகை யிருவினையொப்புள், முன்னையது பக்குவத்தானிகழும் பசுபுண்ணியத்தினும் நிகழ்வனவாயுளவென மேற்கூறப்பட்ட அபுத்திபூர்வம் புத்திபூர்வமென்னும் பொதுச் சிவ புண்ணியத் தான் உண்டாவதாய், மல பரிபாகத்தைத் தோற்றுவிக்கு முகத் தானே மந்ததரமெனப்படும் முதற்சத்திநிபாதத்தில் நிகழும். பின்னையது பலதிறப்படுவனவாகிய நால்வகைச் சத்தி நிபாதத் தான் அவ்வாறே நால்வகைப்பட்ட முறையான் நிகழ்ந்து முடி வின்கண் ஞானத்திற் கேதுவாமென் றுணர்க.

இனி, ஞானத்திற்குக் காரணஞ் சரியை முதலியன வென்ப தூஉம், சரியை முதலியவற்றிற்குக் காரணம் மந்ததர முதலிய சத்திநிபாதமென்பதூஉம் யாண்டும் இனிது விளங்கக்கிடந்தன. இவை யெல்லாவற்றிற்கும் மூலகாரண மெனப்பட்ட பக்குவ மாவது தமக்குரிய சோபானமுறையானன்றி அறியமாட்டா ததோ ரியல்புடைய ஆன்மாக்களுக்கு அம்முறையான் நிகழும் அறியவல்லுதலேயா மென்பது மேல் ஆண்டாண்டுக் கூறிய வாறுபற்றி உணர்ந்துகொள்க. அவ்வல்லுதற்குக் காரணங் கேவலக்கிடையினும் நீங்காது உடனுய் நின்று நோக்கிவரும் முதல்வனது கருணை நோக்கத்தின் அடிப்பாடென அறிக.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

மேலையதிகரணத்தின் உயிர்க்கு வீடு பயக்கும் நல்லறிவு தவத்தினுலேயே வருமெனச் சாதித்தவழி, அற்றேல், மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழிப் பிறிதுகாரணம் வேண்டாது அவைதாமே ஞானத்தைக் காட்டும் போலுமென் னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது இரண்டா மதி கரணம் :—

இனி இவ்வான்மாக்களுக்குத் தமதுமுதருனே குருவுமா யுணர்த்து மென்றது

எனவரும்.

இது, மேலையதிகரணத்தோதிய சரியை முதலியவற்றுன் நிகழும் ஞானங் குரவனையின்றியமையாதவாறும், அக்குரவன தியல்பும் உணர்த்துகின்றது.

இனி என்பது சரியைமுதலிய மூன்றுஞ் செய்து முற்றிய பின் என்றவாறு. இவ்வான்மாக்களுக்கு என்பது, இம்முற்றுப் பேறுடைய ஆன்மாக்களுக்கு என்றவாறு.

தமக்கு முதலாய் இதுகாறும் உண்ணின் றுணர்த்திவந்த பரம்பொருட்கன்றி ஏனையோர்க்கு அவ்வியல் பறிந்து உணர்த் துதல் கூடாதென்பார், தமதுமுதருனே என்றார். ஏனையோரிற் பிரித்தமையின், ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இக்கருத்தே பற்றி, *"அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்—சகத்த வருங் காண்பரோ தான்" என்றார் புடைநூலாசிரியரும். இனித், தானே என்பதனைத் †"தானே தருபவன்" என்புழிப் போலக் கொண்டு உரைத்தலுமொன்று. இதனுனே கருணை மிகுதி கூறியவாறுயிற்று. உம்மைக்குப் பொருள் மேலுரைத்தாம். ஈண்டுக் குரு என்றது மாதுட வடிவினை.

அற்றேல், ‡"மாயா வுருவன் மாயா வுருவினை யேயான்" ஏய்வனுயின் எம்மனேரி லொருவனுய் முடியும்; அல்லதூஉம் ஆகமங்களில் ஆசான் மூர்த்தியாகிய ஆதாரத்தை அதிட்டித்து நின்றுணர்த்துவன் முதல்வனென வேற்றுமைப்படுத் தோதுதலின், ஈண்டிவ்வாறு கூறுதல் அவற்றோடு முரணுமாலென் னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

---

* திருவருட்பயன், அருளுருநிலை, உ. † கோயிற்புராணம், பதஞ் சலிச்சருக்கம், கூஅ. ‡ சங்கற்பநிராகரணம், சைவவாதி நிராகரணம், உசு-ம் அடி.

அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்
எனவரும்.

அம்முதல்வன் வேற்றுமையின்றி உடலின்கண் உயிர் போல்வதோர் கலப்பினால் மாசுதீர்ந்த ஆன்மாவே திருமேனியாகவுடையனாய் நிற்றலான் இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதலாலே குருவுமா யுணர்த்தும் என மேற்கொண்ட தென்றவாறு.

முதல்வன் கலப்பினால் அவையேயாதல் பொதுவதிகாரத்துட் பெறப்பட்டமையின், ஈண்டு அதனை ஏதுவாகவைத்து மேற்கோளைச் சாதித்தார். ஈண்டுச் சைதன்னியம் மாசுதீர்ந்த ஆன்மா வென்பது *"அறிவொளிபோல்" என்றற்றொடக்கத்துப் போல ஏற்புழிக்கோடலாற் பெறப்படும். இவ்வாறன்றி அறிவுசொரூபியாய் எனப் பொதுப்படவுரைப்பின் அவ்வேது ஆன்மாக்கண்மாட்டுஞ் சேறலின், ஈண்டெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்க மாட்டாது † அநைகாந்திகமாய் முடிவதூஉமன்றி மேற்கூறிய ஆசங்கைக்கு விடையாகாமையு முணர்க.

அற்றேல், இது விடையாமாறு யாங்ஙனமெனிற் கூறுதும் :—சில ஆகமங்களிற் குருபூர்த்தி யாதாரத்தை அதிட்டித்துகின் றுணர்த்து மென்றது, பொருட்டன்மையாற் றானேயாமென மேலோதிய வியைபுபற்றி; ஈண்டுத் தம்முதலே குருவுமா யுணர்த்துமென்றது, கலப்பினால் அவையேயா மென்றோதிய வியைபுபற்றி யாகலின், இரண்டுந் தம்முண் முரணுமாறின்மையானும், ‡"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" என்பவாகலின், முதல்வனுக்குத் திருமேனியாகிய சைதன்னியம் முதல்வனைச் சார்ந்து அவ்வண்ணமாயவழி அவ்வுடம்பும் அவ்வா றருண்மயமே யாகலின், இழுக்கின்மையான் அவ்வுடலிடங் கோடல் பொருத்தமுடைமையானுந் தமது முதலாலே குருவுமா யுணர்த்தும் என மேற்கொண்டது சாலுமென விடுத்தவாறென் றறிக. ‡"மாயைமா மாயை" என்னுஞ் செய்யுள் வேறுபொருள்படுதற் கேலாமை மேல் இருவினை யதிகரணத்தின் விரித்துரைத்தாம்; கடைப்பிடிக்க.

அற்றேல், சில ஆன்மாக்களுக்குக் குருவடிவங்கொண் டுணர்த்துதலின்றியும் ஞானம் நிகழ்தலுண்மையின், ஈண்டு குருவடிவங்கொண் டுணர்த்திய பின்னன்றி ஞானம் நிகழா

* சிவப்பிரகாசம், பாயிரம், எ.

† அநைகாந்திகம் - ஒருதலைப்படாதது; அஃதேதுப் போலிகளு ளொன்று.

‡ சிவப்பிரகாசம், உண்மை, உ0.

தென வரைந்தோதியது யாண்டுஞ் செல்லாதாலென்னும் ஆசங் கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்

எனவரும்.

விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும் அன்றிப் பிரளயா கலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும் அஞ்ஞான அச்சகலர்க்கு அக் குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் என மாறுக.

எளிதின் அடைப்படுதலைக்கி "அரிசி தானே யட்டது" என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதலைக்கி மெய்ஞ்ஞானந் தானே விளையும் என்றார். "அரசனெடுத்த ஆலயம்" என்புழிப் போல விவ்விகுதி குன்றி நின்ற தென்றலு மொன்று. இவ்வா றுரையாது வியஞ்சகமின்றித் தானே விளையுமென்றுரைப்பிற் சிவாகமமெல்லாவற்றோடும் முரணுமென் றெழிக. தானே விளைதலாவது வேறிடத்தினில்லாது தன்மையினின்றேவிளைப்ப விளைதல். *"உண்ணின் றறுத்தருளி" என்றார் புடைநூலா சிரியரும்.

பிரளயாகலருக்குத் தான் குருவாய்நின்று முன்னுணர்த்துதலா வது விஞ்ஞானகலர்க்கு உண்ணின்றுணர்த்திய வாறுபோலன்றி நாற்றோளும் முக்கண்ணுங் கறைமிடறும் முதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடாத்திநின்ற தனதியற்கைவடிவே குருவடிவாகக் காட்டி முன்னின்று உபதேசமுகத்தான் உணர்த்துதல்.

சகலர்க் கக்குருவாய்ப் பின்னுணர்த்துதலாவது அவர் வடிவு போலுங் குருவடிவாகிய மானுடப் போர்வையின் மறைந்து நின்று உபதேசமுகத்தான் உணர்த்துதல்.

மெய்ஞ்ஞானம் - வீடு பயக்குமுணர்வு. ஈண்டு அஞ்ஞானம் என்றது அவிச்சையை; சகலர்க்கே விசேடமா யோதுதலா னென்பது. அச்சகலர் - மேற்கூறிய சரியை கிரியா யோகங்கள் செய்து முற்றிய சகலர். அக்குரு - மேற்கோளிற் கூறிப்போந்த குருவென்க. எனவே, ஈண்டுச் சரியை கிரியா யோகங்களைச் செய்தோர்க்குத் தம்முதல் குருவுமா யுணர்த்துமெனச் சகலர்

* போற்றிப்பஃறொடை, அடி, கஉ.

வர்க்கமே எடுத்துக்கொண்டோதிய தாகலின், அஃது ஏனைப் பிரளயாகலர் விஞ்ஞானகலர் வர்க்கத்துச் செல்லாமைபற்றி இழுக்கில்லை யென விடுத்தவாறுணர்க. செய்யுளிறுதியின் முன் என்றது முன்னுகிய முதல்வனென எழுவாயாய் நின்று, உணர்த்தும் என்னும் பயனிலைகள் கொண்டது.

இம்மூவருட் சகலர்க் குணர்த்துங்கால் இயற்கைவடிவை யொழித்துப் பிறிதொரு மாறுடவடிவ மாதாரமாக நின்றுணர்த்துதலின், அது சாதாரமென்றும், ஏனையிரண்டும் அன்னவல்ல வாகலான் நிராதாரமென்றுங் கூறப்பட்டன.

அற்றேல், மூவகை யான்மாக்களுக்கும் ஓரியல்பாய்நின்றுணர்த்தல் அமையும்; அவ்வாறன்றி விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும், பிரளயாகலர்க்கு முன்னிலையினும், சகலர்க்குப் பின்னிலையாகிய படர்க்கையினும் நின்று இவ்வாறுணர்த்துதல் எற்றுக்கென்னும் ஆசங்கையை, ஆன்மாக்களது சிறப்பியல்பும் அவற்றிற்குத் தம்முள் வேறுபாடும் உணர்த்துமுகத்தான் நீக்கி, அவ்வேறு பாட்டிற்கேற்ப வெவ்வேறாய் நின்றுணர்த்துதலே அமைவுடைத்தென அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணேறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கோள் பவர்க்கு

எனவரும்.

ஆன்மாக்கள் அதுவதுவாய்ச் செறிந்தறிவனவன்றி முதல்வன்போலச் செறியாது நின்றறிவனவல்ல வாகலான், அம் முதல்வன் வியஞ்சகமாய் நின்று படிவழிபோல வைத்து முறையான் விளக்கினலன்றி அவற்றதறிவு விளங்காதென்பது பெறப்படும். அவ்வறிவுகள் அவ்வாறு படிவழிமுறைபோல விளங்குதலும் ஒரு தன்மையானன்றிக் கல்விக்குறைவுடைய கணக்காய்வார்போல முன்னும் பின்னுமாய் விளங்குந் தாரதம்மிய முடையனவாம். ஆகவே, அவ்வறிவுகள் விரியாற் பலவேறுபாடுகளுடையவாயினும் அவ்வாறுணர்த்தற் கேற்ப நிகழும் பந்தவேறுபாடுபற்றி விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என வகையான் முத்திறப்படுமென்பதூஉம் பெறப்பட்டது. அவ்வான்மாக்களுட் பலவாற்றானுங் கேட்டுச் சிந்தித்தன்றித் தெளியப்படாத குறைபாடுடைய நூல்வேண்டாத நுண்ணுணர்வுடையார்க்கு முதல்வனுற் கொள்ளப்படும் உண்மைமாத்திரையானே முத்தி

கூடுமென் றறிவாயாக. நூல்வேண்டுந் தூலவறிவுடைய சகலர்க்கு ஞானத்தாற் குறைபாடில்லாத சகத்தின்க ணுளனுகிய குரவனுல் முத்திகூடுமென் றறிவாயாக என்க.

உளங்கள் செறியுமாம் ஆகலான் நெறியின் அறிவிக்கவன்றி யறியா எனக்கொண்டு கூட்டி உரைக்க. அறிவித்தற்கு எழுவாய் மேலே வெண்பாவினின்றும் வருவிக்கப்பட்டது. அன்றி அறியா என எதிர்மறையாற் கூறினர், இன்றியமையாமை யுணர்த்துதற்கு. நெறியின் - இன் உவமவுருபு. முன் பின்னுக என ஆக்கச்சொல் வருவித்துரைக்க. குறைவுடையார்களைக் குறைகள் என உபசரித்தார். போல என்பது சொல்லெச்சம். சொல்லுஞ் சூழும் ஆகுபெயர். கொள்ளார்க்கு என நான்கனுருபு * "ஐந்தவித்தானற்றல்" என்புழிப்போல விகாரத்தாற் றொக்கது. பவம், சம்பவம், உண்மை என்பன ஒருபொருட்கிளவி. ஈண்டு உண்மை என்றது நிராதாரத்தை. ஈண்டுச் சகம் என்றது நிலவுலகத்தை. சகனுல் என்க. விடென் என்பதனை ஈரிடத்துங் கூட்டுக. நூல் குறைவுடையதாயினும் அதனைக் கேட்பித்துச் சிந்திப்பித்துத் தெளிவிக்குங் குரவன தறிவாற்றலிற் குறைபாடின்மையிற் றெளிந்து வீடெய்தல் கூடுமென்பார், குறைவில் சகன் என விசேடித்தார். குறைவில் சகன் என்புழிச் சீர் சிதையாமை † "முற்செய்வினை மாயை" என்பதற்கு உரைத்தவாறுபற்றி உணர்ந்து கொள்க. கொள்ளார் கொள்பவர் என ஆகு வறி சொல்லாற் கூறியது வடமொழிமதம்பற்றி.

ஆன்மா அதுவதுவாய்ச் செறியுமாறும், அதனுனே அறிவிக்கும் வியஞ்சகத்தையின்றி அமையாதவாறும், வியஞ்சகத்தான் அறிவு விளங்கும்வழியும் ஒருங்கே முழுவதும் விளங்காது படிவழியேற்றம் போல அடிப்பட்டு வரவர மெல்ல மெல்ல விளங்குமாறும், அவ்வாறு விளங்கும் அறிவுகளும் ஒன்றுபோலன்றிக் கணக்காய்வார் அறிவின் மந்த தீவிரங்கள்போல முன்னுகவும் பின்னுகவும் விளங்குமாறும், அதற்கேற்ப மலசத்திகளும் பலவாமாறும் ஆண்டாண்டு விரித்துரைத்தாம்; கடைப்பிடித்துக்கொள்க.

இதனுற் போந்தது, தத்தமக்கேற்ற சோபானமுறையான் அறிவு விளங்குதலுடைய மூவகை ஆன்மாக்கண்மாட்டும் விரவி நிற்கும் மூலமலமாகிய அறியாமைப்பொருள் ஒன்றேயாயினும் அவ்வான்மாக்களது பக்குவாபக்குவ தாரதம்மியங்கட் கேற்பப் பலவேறுவகைப்படப் பிணிக்கும் மலசத்திகள் சூக்கும தூல

* திருக்குறள், கூ-ம். அதி. நீத்தார்பெருமை, கி.

† பக்கம், கஉச.

தூல*தர வேறுபாட்டாற் பலவேறுவகையவாகலின், அவற்றின் விஞ்ஞானகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி சூக்குமம், பிரளயாகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி தூலம், சகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி தூலதரமாம்; அற்றாகலினன்றே, விஞ்ஞானகலர்க்கு மாயை கன்மங்களுளவாகவும் அவர் அவற்றாற் பிணிப்புண்டு மயங்குதலின்றி மலமாத்திரையாற் பிணிப்புண்ட தூஉம், பிரளயாகலர்க்கு மாயையுளதாகவும் அவரதனிற் பிணிப்புண்டு மயங்குதலின்றி ஏனை இருமலத்தானும் பிணிப்புண்ட தூஉம், சகலர் அவ்வாறின்றி மூவகையானும் பிணிப்புண்ட தூஉம், ஆகலான் அம்மூவகை மலசத்தியுட் சூக்குமமலசத்தி உண்ணின் றுணர்த்தியவாறே எளிதினீங்குதல் கூடுமாகலானும், தூலமலசத்தி எதிர்நின்று உபதேசமுகத்தாற் றெரித்துணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாமையானும், தூலதரமலசத்தி உபதேசமுகத்தானும் நூன்முகத்தானும் அநுபவமுகத்தானும் பலவேறுவகைப்பட வலியுறுத்தி உணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாமையானும், அவ்வேறுபாட்டிற்கேற்பத் தம்முள் இருவேறுவகைப்படும் நிராதாரமாயுஞ் சாதாரமாயும் நின்றன்றி உணர்த்துவானல்லன் முதல்வனென மேலோவெண்பாவிற் கூறிய பொருளே வலியுறுத்தியவாறுமென்க.

அவ்வாறுணர்த்தும்வழிச், சூக்கும மலமுடைய விஞ்ஞானகலர்க்குந் தூல மலமுடைய பிரளயாகலர்க்கும் மலபரிபாகத்திற்கேற்ப நாலாஞ் சத்திநிபாதந் தீவிரமாயும் தீவிரதரமாயும் நிகழுமாகலின், அவ்விருவகைச் சத்திநிபாதம்பற்றி யுணர்த்தித், தீவிரத்தா னுணர்த்தப்பட்டார்க்கு அபரமுத்தியுந் தீவிரதரத்தா னுணர்த்தப்பட்டார்க்குப் பரமுத்தியும் பயக்குமெனவும், தூலதர மலமுடைய சகலர்க்கு அம்மலபரிபாகத்திற்கேற்ப மந்ததர முதலிய நால்வகைத்தால் நிகழுமாகலின், அந்நால்வேறுவகைச் சத்திநிபாதம் பற்றியுணர்த்தி, மந்ததரத்தாற் சாதாகநிலையும், மந்தத்தாற் சிவன்முத்திநிலையும், தீவிரத்தால் அபரமுத்திநிலையும், தீவிரத்தாற் பரமுத்திநிலையும் பயக்குமென்றறிக. ஈண்டுச் செய்யப்படுந் தீக்கையினியல்பெல்லாம் மேற் பாயிரத்துள் விரித்துரைத்தாம்; கடைப்பிடிக்க.

இவ்வெண்பாவிற்கு இவ்வாறன்றி ஆன்மாக்கள் அறிவித்தாலன்றி அறியாவாகலான் அவற்றிற் கறிவிக்கவே முந்நூல்க ளேனைய வெல்லாம் அவ்வச்சமயநெறியின் முன்னோடின் இணங்காது மாறுபடுங் குறைகள் செறிவனவாகலின் அக்குறைபாடுடைய நூல்களைக் கொள்ளாது குறைபாடில்லாத முதல்

* தரம் என்பது அதிகம் என்பதை உணர்த்தும் ஒரு விகுதி.

வனது சித்தாந்த நூல்களைக் கொள்பவர்க்குக் கொண்ட பிறவியிற்றானே வீடுபேறுமென்று உரைப்பாருமுளர்.

அற்றேல், நூல்கொள்பவராகிய சகலர்க்கு அந்நூலானே அறிதலமையுமாகலாற் குரவன் மிகையாமா லென்னும் ஆசங்கையை நீக்குமுகத்தால் நமது முதலானே குருவாமாற்றை உவமையின்மேல் வைத்துத் தெளிவித்து வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றானே யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று

எனவரும்.

தவத்தான் நன்மையுடைய மாணுக்கனே! ஏந்திய இழைகளையுடையாட்குக் குழவிமாட் டுளதாகிய அருவாகிய அன்பினை வெளிப்படுத்தற்கு அவ்வன்பின் வடிவாகிய முலைப்பாலுங் கண்ணீருங் குழவியைக் காணுமுன் அவண்மாட்டில்லாவாய்ப் பின்னுளவாம். அதுபோல, நீரின்கண் நிழல்போல் ஆன்மாவின்மாட்டுப் பொருந்தி வெளிப்படுத லில்லாத அருவமாய் நின்ற முதல்வனை யார்தாம் அறிவார்? அம்முதல்வன் றானே குருவடிவாய்த் தோன்றிநின்று உணர்த்தாவுயின் என்க. ஒருவரு மறிவாரில்லை யென்பதாம்.

ஆகவே, அருவாய் நின்ற முதல்வனை அறிவித்தற்கு நூன்மாத்திரையான் அமையாமையின், அம்முதல்வனே குருவாய்த் தோன்றி உணர்த்தல் வேண்டுமென விடுத்தவாறுயிற்று.

எதிர்மறையாற் கூறினுர் இன்றியமையாமை உணர்த்துதற்கு. பொருள்வினையை உவமையினுங் கூட்டி உரைக்க.

முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்குமென்பது, *"சுரந்த திருமூலக்கே தாய்யசிவ ஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த—தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்த வாறு" என்பதனானும், †"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூச றரும்" என்பதனானு மறிக. அவ்விரண்டும் அன்பின் வடிவே பிறவல்ல என்பது அன்பை வெளிப்படுத்தற்குரிய காரணமுள்வழி வெளிப்பட்டு, அஃதில்வழி வெளிப்

* திருக்களிற்றுப்படியார், இசை. † திருக்குறள், அ-ம் அதி. அன்புடைமை, க.

படாத ஒற்றுமை நோக்கிக் கண்டு கொள்க. இவ்வொற்றுமை உணர்த்துவார், இல்லாவா யுளவாம் என்றார். இல்லா என்பது வினையெச்சக் குறிப்புமுற்று. ஆல் - அசை.

இவ்வுவமையானே முதல்வன் குருவாதல் கூடுமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையும் நீக்கப்பட்டது. இஃதெடுத்துக் காட்டுவமை.

நீர் அகத்தியங்கு முயிர்கட்கு இடங்கொடுத்த லுண்மையான் நீரின்கண் வெளியுண் டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழலுண் டென்பதூஉம் பெறப்பட்டன. அந்நிழல் வேறுநில்லாது நீரின்கண் விரவிநிற்றலின், நீர்போலப் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவ சைதன்னியமும் யானெனும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்ம சைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென்பார், நீர் நிழல்போல் உற்று இல்லா அருவாகி நின்றனை என்றார். அருவப் பொருள்போற் புலப்படாத இயல்புபற்றி முதல்வனை அருவென்றல் சாலுமென்பார், இல்லாவருவாகி என்றார். நீர் நிழல் தோன்றுமை மாத்திரைக்கு ஒருபுடை யுவமையாகலாற் றோன்றுதற் குவமை வேறு கூறினார்.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றாமதிகரணம்

இரண்டாமதிகரணத்தில் உயிர்க்கு முதல்வனே சற்குருவாய் வந்து உணர்த்துவனெனச் சாதித்தவழி, அற்றேல், இது காறும் பசுகரணமாய் விடயங்களை உணர்த்தி நின்றன ஐம்பொறிமுதலிய கருவிகளா மன்றே! அவை பாகம் வந்துழிச் சிவகரணமாய் நின்று உண்மை ஞானத்தினை உணர்த்துதற் கமையுமாகலின், தம்முதல் குருவுமா யுணர்த்துதல் மிகையாமாலென்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது மூன்றாமதிகரணம் :—

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா வென்றது

எனவரும்.

இனி என்றது இவ்வியைபுணர்த்துதற் பொருட்டு. இவ்வான்மாக்கள்—தம்முதல் குருவுமா யுணர்த்த உணரு மியல்புடைய

ஆன்மாக்கள். ஐவகையுணர்விற் கேதுவாகிய பொறிகளை ஐயுணர்வு என்றுபசரித்தார். ஐம்பொறி என்றது உபலக்கணம். மயங்கி யுணரா என்றது "ஒதி யுணர்ந்தான்" என்பதுபோலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது.

அற்றேல், சகசமலத்தால் உணர்வின்றி நின்ற ஆன்மாக்கள் கருவிகளான் அறிவுவிளங்கி அறியுமென்பது மேற் பொதுவதி காரத்துட் கூறிப்போந்தமையின், ஈண்டு ஐயுணர்வுகளால் ஆன் மாக்கள் மயங்குமென்றன் முரணுமாலென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்

எனவரும்.

பளிக்குக் கல்லிற் சேர்த்திய பலவேறு வகைப்பட்ட நிறங் கள் அப்பளிங்கினுளி தோன்றுதவாறு அடக்கித் தம்மால் அதன்கண் விளக்கப்பட்ட தத்தமியல்பினையே விளக்கி நிற்கு மாறுபோல, அவ்விந்திரியங்கடாம் ஆன்ம சொரூபம் விளங்காத வாறு அடக்கி அவ்வான்மாவின்மாட்டுத் தம்மால் விளக்கப் பட்ட தத்தம் விடயமாத்திரையே விளக்கி நிற்பனவாகலான் இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளால் மயங்கித் தம்மை யுணரா என மேற்கொண்ட தென்றவாறு.

விடயங்களுள்ளும் அவ்வவ் விடயமாத்திரையே அவ்வ விந்திரியங் காட்டவல்லுமென்பார், காட்டிற்றை என ஒன்றறி சொல்லாற் கூறினர் ; கூறவே, ஒன்றறிந்த தொன்றறியாதாகிப் பளிங்கிலிட்டவன்னம்போல் ஆன்மாவினியல்பை மயக்கி விடயக் காட்சிக்கே ஏதுவாகிய கருவியான் ஆன்மாவினியல்பு விளங்கு மாறில்லையென அவற்ற தியல்பைத் தெரித்துக்காட்டி ஆன்ம சொரூபத்தை உணர்த்துதற்குக் குரவன் ஒருதலையான் வேண்டு மென மேலை யதிகரணத்தை வலியுறுத்தவாறு. இங்ஙனம் உரையாதார்க்கு இனி என்பதனு லுணர்த்தப்படும் மேலையதிகர ணத்தோ டொளதாகிய இயைபு கூடாமை அறிக.

அற்றேல், குருவாகி வந்து உணர்த்தியவழியுங் காட்டிற் றையே காட்டி நிற்கு மிந்திரியங்க ளுள்வழித் தன்னியல்பு விளங்காது, அவை நீங்கியவழிக் கேவலமாய் முடியுமாகலின், அறியுமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலி யுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
போய்ப்புலனே வேறுணர்ந்து போய்போய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு

எனவரும்.

தன்னைச் சார்ந்த பலவேறுவகைப்பட்ட வண்ணங்களையே தன்மாட்டுக் காட்டு மியல்புடைய படிகம்போல ஆன்மாத் தன்னைச் சார்ந்த இந்திரியங்களி னியல்பையே தன்மாட்டு விளக்குவதாகிய தனது சார்ந்ததன்வண்ணமாந் தன்மையை முன்னர்ச் சிந்தித் துணர்ந்துகொண்டு, பின்னர்ப் பல வேறு வகைப்பட்ட இயல்புடைய பொதுவியல்பைச் செய்யும் இந்திரியங்களைத் தனக்கு வேறாகக் கண்டு, அவற்றுனுகிய பொதுவியல்பு பொதுவியல்பேயா யொழியுமாறு தனது சிறப்பியல்பை உணர்ந்தாலுயின் அவன் பரம்பொருளாகிய சிவத்துக் கடிமையாய் அப்பரம்பொருளி னியல்பு தன்மாட்டு விளங்கச் செய்வன். அப்பொழுது முன் விளங்கிய பொதுவியல்பு தனக்கு வேறு யொழியு மென்க.

ஆம் என்பதனைப் பின்னுங் கூட்டுக. ஈண்டுப் பொய்மெய் எனப்பட்டன அப்பொருளவாதல் *மேலே காட்டினும்; கடைப் பிடிக்க. ஆக என்பது கடைக் குறைந்தது. பொய்பொய்யாக என்பது "நிலம் வலிதாயிற்று" என்பது போலக் கொள்க.

இதனுற் போந்தது கருவிகள் செயற்படாது தன்னி னீங்கியவழியே கேவலமாம்; அவ்வாறின்றி அவை தத்தந் தொழிற் பாட்டின் மடங்காது நிற்புழி அவற்ற தியல்பைக் குருவாய்வந் துணர்த்த வுணர்ந்து தான் அவற்றைவிட்டு நீங்கியவழிச் சுத்தமாதல் கூடுமாகலான் அவை காட்டிற்றைக்காட்டி நிற்றல் பற்றி ஆண்டுத் தன்னியல்பு விளங்குதற்கு இழுக்கில்லை என வலியுறுத்தவாறு மென்பது.

மூன்றுமதிகரணம் முடிந்தது

---

* பக்கம் ஈஅஈ.

## நான்காமதிகரணம்

மூன்று மதிகரணத்தில் உயிர் பஞ்சேந்திரியங்களிற் பற்றுகையாற் றன்னை யறியமாட்டாதெனக் கருவிகளி னியல்பு கூறி, அதனனே குருவாய் வந்து உணர்த்துதல் ஒருதலையான் வேண்டுமென இரண்டா மதிகரணத்திற் போந்த பொருளை வலியுறுத்தியவழி, அற்றேல், குருவாய்வந் துணர்த்தினும் இன்னியவையொழிய அறிகுவ தெவ்வாறு? அறியினும் விட்டுச் செல்லுமாறுதான் எவ்வாறு? என்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது நாலாமதிகரணம்:—

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையு மென்றது

எனவரும்.

ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா எனப்பட்ட ஆன்மாச் சித்தாய் வியாபகமாகிய தன்னியல்பைச் சடமாய் ஏக தேசமாகிய இந்திரியத்தின் வேறுக வுணரும் வியாபக வுணர் விற்கு இந்திரியத்தா னுகக்கடவதொன் றின்மையிற் சற்குரவ னால் அவ்வாறுணரவே பிறிதுகாரணம் வேண்டாது தனக்காதார மாகிய முதல்வனது திருவடியினைத் தலைப்படுமென்பதாம்.

தமது முதல் என்பது வேறு முடிபாகலின், வழாநிலையாதல் அறிக.

அற்றேல், அவ்வாறுணர்தல் கூடுமாயினுஞ் சேறற்குரிய முயற்சியின்றி அறிந்தமாத்திரையே செல்லுமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:-

ஊசல் கயிறற்ருற் ருய்தரையேயாந் துணையான்

எனவரும்.

ஒருவன் ஏறியிருந் தாடாநின்ற ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல் ஆண்டுத் தாரகமாவது நிலனே யன்றிப் பிறிதில்லை என்னும் ஒப்புமையால் இனிவ்வான்மாத்தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையும் என மேற்கொண்ட தென்றவாறு.

இதனுற் போந்தது கருவிகள் ஆன்மாக்களான் அறியப்படாது நீங்கியவழி மலந் தாரகமாம். அறியப்பட்டு நீங்கிய வழிச்சிவமே தாரகமாம். ஆகலின், ஆண்டுச் செய்யக் கடவதோர் முயற்சி வேறில்லை யென்பதாம்.

அற்றேல், கருவினிகளி னீங்கி மலந் தாரகமாய்க் கேவலப் பட்ட வுயிர், மீளவுங் கருவிகளைக் கூடிச் சகலப்படுமாறு போலக் கருவிகளி னீங்கிச் சிவந் தாரகமாய் சுத்தப்பட்ட உயி ரும் மீண்டுங் கருவிகளைக் கூடும்போலு மென்னும் ஆசங்கையை உவமைமுகத்தானீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று

எனவரும்.

சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளஞ் சிறைவிட்டு அலை கடலிற் சென்று அடங்கும் ஆறுபோல் சிறை செய் புலனுணர்விற் றீர்ந்து உலைவில் அரன் பாதத்தை யுற்று மீளாது எனமாறுக.

ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித் தடைசெய்ய ஆண் டுத் தடையுண்டு தேங்கி நின்ற நீர்போலக் கருவிகளாலாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத் தடுப்ப அதன் கண்ணே ஏகதேசமாய்த் தடையுண்டு நின்ற ஆன்மா அவ்வணை முறிந்து தடைவிட்டொழிந்தவழி இடையீடின்றிக் கடலிற் சென்றடங்கி அந்நீரேயாய்ப் பின்பு மீளுதல் செய்யாத ஆற்றுநீர் போலக், கருவிகளாலாகிய பாசஞானத் தடைபினின்றும் நீங்கியவழிச் சிவபிரானது திருவடியைப் பொருந்தி அத்திருவடிநிறைவே யாய் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது நிலைபெறு மென்க.

புனலின்- இன் உவமவுருபு. தேக்கத்தின் மிகுதி உணர்த்து வார், செழும் புனல் என்றார். மலசத்திக்குக் கேடுண்மையிற் கேவலப்பட்ட உயிர் கருவிகளின் மீளுதல் கூடும், சிவசத்திக் கவ்வாறு கேடின்மையிற் சுத்தப்பட்ட உயிர் அதுபோன் மீளு தற்கோ ரியைபில்லை யென்பார், உலைவிலரன் என விசேடித்தார். அடங்கும் என்னும் உவமவினையைப் பொருளினும், மீளாது என் னும் பொருள்வினையை உவமையினுங் கூட்டி உரைக்க.

அற்றேல், *"மருவுபசு கரணங்கள் சிவகரணமாகத்—துன் னியசாக் கிரமதனிற் றுரியா தீதந் தோன்றமுயல்" எனவும், †"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை-யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" எனவும் இவ் வாறோதுதலின், ஆண்டுப் பசுகரணம்போலப் பாசஞானமுஞ்

* சிவஞானசித்தி, அ-ம் சூ. உசு.

† சிவப்பிரகாசம், உண்மை, உ0.

சிவஞானமேயா மென்பது பெறப்படுதலின், *"ஆற்று லலை கடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை—மாற்றியவ் வாற்றுன் மறித்தாற் போல்" உலகிலரன் பாதத்தை யுற்ற வுயிர் புலன்வழி மீளினும் அதனுற் போந்த இழுக்கென்னை யென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

எவ்வுருவுந் தானென்னி லெய்துவா ரில்லைதா
ளிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்

எனவரும்.

நீ, ஈண்டுக் கூறுவது பதிப்பொருட்கே யன்றிப் பசுபாசங் களுக்கு ஒரு தன்மையில்லை யெனக் கொண்டு இவ்வாறுகளிற் பசுஞான பாசஞானங்களுஞ் சிவஞானமேயா மென்பதோ? அன்றிப் பசுபாசங்களுக்குப் பதிப்பொருளையன்றித் தமக்கென ஒவ்வொருதன்மை யுளவெனக்கொண்டு இவ்வாறுயினும் †"உப் பளத் தடித்த புற்‡பலா லங்கள்" அவ்வுப்பேயாமாறுபோலப் பசுஞான பாசஞானங்களிற் சிவஞானஞ் சங்கிரமமாய்ப் பற்றுத லான் அவையுஞ் சிவஞானமேயா மென்பதோ? சொல்வாயாக. பசுபாசங்களி னுளவாகிய தன்மைகளெல்லாம் பதிப்பொருளின் தன்மையே பிறிதில்லையெனிற் பசுவுக் கொரு தன்மையில் வழிப் பசுக்கள் பாசத்தைவிட்டுப் பதியினை யடையுமாறில்லை யாய்ப், §"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி" என்னும் வேதாகம வசனங்களோடு முரணும். இனிப் பதிப் பொருளையின்றி அமையுந் தன்மை அவற்றிற்கு வேறுளவெனக் கொள்ளின் அப்பொழுது பசுபாசங்களின் தன்மைகட்குச் சிவனு லாகப்படுவதான் றின்மையிற் சிவனுக்கு இறைமை யின் றாய் முடியும்; ஆகலின், அவ்விரண்டுங் கூடா. வேறென்னையோ விடுக்குமாறெனின், ஆன்மாவையின்றி யமையாவாய் ஆன்மா வால் அதிட்டிக்கப்படும் ஐவகை யுறுப்புக்களுள்ளும் மெய் வாய் மூக்குச் செவி என்னும் நான்குறுப்புக்களுந் தம்மாட்டுவந்த விடயங்களை யெய்தறியுந் தன்மையனவன்றிக் கண்ணுறுப்புப் போலச் சேய்மைக் கண்ணுளதாகிய விடயத்தையும் வியாபித் தறியுந் தன்மையுடையனவல்ல. கண்ணுறுப்பு அவ்வாறின்றிச் சேய்மைக்கண்ணும் ஒளியாற் சென்று இயைந்தறியுந் தன்

* திருக்களிற்றுப்படியார், கக.

† சங்கற்ப நிராகரணம், சங்கிராந்தவாதி நிராகரணம், உஎ-ம் அடி.

‡ பலாலம்-வைக்கோல்.

§ சிவஞானசித்தி, பரபக்கம், பாஞ்சராத்திரிமத மறுதலை, உடு.

மைத்து. அற்றேல், ஒளிமழுங்கிய கண்ணுக்கு ஏனையுறுப்புக்களோடொப்பத் தன்கண் வந்த விடயத்தைமாத்திரமே காண்பதன்றிச் சேய்மைக்கண்ணும் வியாபித்துக் காணுமாறில்லையாலெனின், மாசுமிகுதியாற் கண்ணொளி யிழந்தார் கண் பெற்ற விடத்து அவ்வியல்பிற்றாகிய கண்ணினது வெற்றிப்பாட்டைக் காண்பாயாக என்க. எனவே, அதுபோல முதல்வனையின்றியமையாவாய் முதல்வனுல் அதிட்டிக்கப்படும் பசு பாசஞானங்களுட் பாசஞானம் ஏகதேசமாய் விளங்கு மியல்பிற்றன்றிப் பசுஞானம்போல வியாபகமாய் விளங்கு மியல்பிற்றன்று. பசுஞானம் அவ்வாறின்றி வியாபகமாய் விளங்குமியல்பிற்று. அற்றேல், பசுஞானம் பாசஞானம்போல் ஏகதேசமாயன்றி விளங்கக் கண்டிலமாலெனின், பசுத்துவத்தால் அவ்வான்ம ஞானத்தையிழந்தார்பசுத்துவம் நீங்கி ஆன்மஞானத்தைப் பெற்றவழி வியாபகமாய் நிகழும் அதனது வெற்றிப்பாட்டை அறிவாயாக எனப் பொருளினும் உரைத்துக்கொள்ளப்படும்.

இஃது* ஒட்டென்னும் அலங்காரம்.

இஃதென் சொல்லியவாறே வெனின், ஆன்மாப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்றவழி பசுகரணமுஞ் சிவகரணமாயவாற்றுன் அவ்வழிப் பசுஞானத்தோடொப்பப் பாசஞானமும் உப்பளத்தடித்த பொருள்போலச் சிவஞானமேயாமென்பது சிவாகமநூற் றுணிபாகலின், அவ்வைம்பொறியின் மீளினும் இழுக்கின்மையின் மீளாதென மேலே வெண்பாவிற் கூறியது எற்றுக்கென்னுஞ் சங்கிராந்தவாதசைவரை மறுத்து, முதல்வனே பசுபாசமென்று அபேதங் கூறுதலும் முதல்வன் வேறு பசுபாசம் வேறெனப் பேதங்கூறுதலும் ஏலாமையின், முதல்வனுக்கும் பசுபாசங்கட்குஞ் சரீரசரீரி பாவத்தான் அபேதங் கூறுதல்வேண்டும்; வேண்டவே, சரீரசரீரி பாவத்தின் ஆன்மா ஐம்பொறிகளோடு அபேதமாய் நிற்பினும் அவை தத்தந் தன்மையிற் றிரியாவாய் விடயங்களை நின்றியைந் தறிதலும் சென்றியைந் தறிதலுமாகிய இருவேறியல்புடைமையாகிய பேதம், கண் ஒளிமழுங்கியவழிக் காணப்படாதாயினும் ஒளிபெற்றவழிக் காணப்படுதலின், அவ்வாறே பசுஞான பாசஞானங்களிற் சிவஞானம் அபேதமாய் விளங்கினும் அவை தத்தமியல்பிற் றிரியாவாய்ப் பாசஞானத்திற்கு ஏகதேச விளக்கமும் பசுஞானத்திற்கு வியாபக விளக்கமுமாகிய பேதமுடைமை பசுத்துவம் நீங்காத பெத்தநிலைக்கண் அறியப் படாதாயினும்

---

* இதனை, "கருதிய பொருடொகுத் ததுபுலப் படுதற்—கொத்த தொன்றுரைப்பினஃ தொட்டென மொழிப" என்னுஞ் சூத்திரத்தானுணர்க; தண்டியலங்காரம், சூ. நிக.

பசுத்துவம் நீங்கிய முத்திநிலைக்கண் அறியப்படு மாகலின், அவ்வியல்பிற்றாகிய ஆன்மஞானம் அவ்வியல்பினவாகிய ஐயுணர் வுகளை மீளப் பற்றுமாறில்லையென மேலைவெண்பாவின் பொருளை வலியுறுத்தவாறு மென்க. இவ்வாறுரையாதார்க்குச் சொற்கிடக்கைமுறை ஏலாமையும், மேலைவெண்பாவினே டியைபின்மையும் உணர்க. * "எங்குந்தா னென்னினு மெய்த வேண்டா" என்னும் வழிநூலும் இவ்வாறே பொருள்படுமாறுணர்ந்து உரைத்துக்கொள்க. ஏனைநான் கிந்திரியமும் அவ்வவிடங்களி னின்றுங்குறின் றியைந்தன்றி அறியமாட்டாமையும், கண்ணிந்திரியம் அவ்வாறன்றிச் சேய் மைக்கண்ணுஞ் சென்றியைந்தறியும் வெற்றிப்பாடுந் தத்து வங்களி னியல்புரைப்புழிக் காட்டினும்; கடைப்பிடித்துக் கொள்க.

உரு என்றவற்றுள் முன்னைய இரண்டும் பொருட்டன் மையை உணர்த்தின. பின்னையது உறுப்பின்மேற்று. உறுப் பாதாரமாக நிற்றலானும் உறுப்புப் போறலானும் இந்திரியங் களை உறுப்பு எனவும், கழலணிதற் கேதுவாகிய வெற்றிப் பாட் டைக் கழல் எனவும் உபசரித்தார். கழல் - காலணி மணிவடம். சுட்டுச் சிறப்பின்கண் வந்தது. நாண் - முன்னிலையேவல். (ஏ) என்னும் ஏகாரம் ஏழனுருபின் பொருளுணர நின்றது. ஒற்றிரட்டியாமை இலேசாற் கொள்க.

அற்றேல், †"நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யாணம் புலன்கள் கொண்டு—விடுந்தகை யேனை விடுதிகண்டாய்" எனப் பிறண்டும் இவ்வாறே துபவாகலின் ஒழிவிலரன் பாதத்தை யுற்றோர் மீளுதலு முண்மையின், மீளா தென்பது அமையாதா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்து தற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

ஐம்போறியி னல்லையெனு மந்த தரசிவனை
யைம்போறியை விட்டங் கணைசகல—னைம்போறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து

எனவரும்.

---

* சிவஞானசித்தி, அ-ம் சூ. ச அ.

† திருவாசகம், நீத்தல்விண்ணப்பம், கஉ.

நீ, நின்னால் அதிட்டிக்கப்பட்ட வழியும் ஏகதேச வறிவைச் செய்வனவாகிய ஐம்பொறிகள்போ லல்லே, அவற்றின் மேம்பட்டு வியாபகமாய் அறியும் வெற்றிப்பாடுடையை என மேலேவெண் பாவால் உணர்த்தப்படுந் தீவிரதரத்திற் றீவிரதரமான சத்திநி பாத முடையோனே! அவ்வியல்பினவாகிய ஐம்பொறிகளேக் கைவிட்டே சிவன் திருவடியை எய்தி முன் அவ் வைம்பொறியி னின்றுங்கு அதுவாய் உறைத்து நிற்பாயாக. அவ்வா றணைந்து நின்றுயாயிற் சகலனே ஐம்பொறி விட்டு நீங்காதவாறுபோல அச்சிவன் உன்னேவிட்டு நீங்கான். கல்லெறிவழி நீங்கி அல் லுழிப் பரக்கும் நீரின்கட் பாசிபோல, நீ அவ்வாறுறைத்து நிற்புழி நீங்குவனவாகிய மலகன்ம மாயைகள் உலகப் பயிற்சி வயத்தான் ஒரோவழி அந்நிலே நெகிழ்ந்தமைபற்றி வந்து கூடு மாயின் நின் நிலே குலேந்த வழியும் நின்னேவிட்டு நீங்காத அம் முதல்வனே உணருமாறு முன்னர்க் கூறப்படும் உபாயத்தினின்று சாதித்து அவற்றை நீக்கிக்கொள்க வென்க.

ஐம்பொறியி லல்லேயெனு மந்தந் என மேலே வெண்பாவிற் போந்த பொருளே அநுவதித்து, விட்டன்றிச் சேறல் கூடா தென்பார், விட்டு அணை என்றும், சிவனே ஐம்பொறியின் விட்ட வழி மீளாமையை வலியுறுத்துவார், சகல னைம்பொறியி னீங்கான் என்றும், ஒரோவழி மீட்சி யுளதாயின் அதற்குக் காரணம் இஃ தென உவமைமுகத்தா னுணர்த்துவார், நீர்ப்பாசி போல் என் றும், ஐம்பொறியின் மீளுமாயின் அவற்றிற்கு மூலமாகிய மல கன்ம மாயைகளும் அது பற்றுகவந்து தலேப்படு மென்பார், மலகன்மம்வரின் என்றும், அம்மீட்சியை நீக்குதற்கு உபாயங் கூறுவார், நீங்கானை நினேந்து நீங்கு என்றுங் கூறினர்.

இன் இரண்டும் உவமவுருபுகள். அந்தம் என்றது நான் காஞ் சத்திநிபாதத்தை. அதுவும் நால்வகைப்படு மாகலின், அவற்றுள்ளும் மேம்பட்ட சத்திநிபாத முடையாய் என்பார், அந்தந் என்றார். சகலனே என்னும் இரண்டனுருபு விகாரத் தாற் றொக்கது. மல கன்மம் எனவே இனம்பற்றி மாயையுங் கொள்ளப்படும். நீங்கானே நீங்கு நினேந்து எனவே வருகின்ற பாதத்திற்குத் தோற்றுவாய் செய்ததாயிற்று; *"மங்கல மென்ப மனேமாட்சி மற்றத—னன்கல னன்மக்கட் பேறு" என்புழிப் போல.

இம்மூன்று பாட்டும் முறையே திருவடி ஞானத்தைப் பெற்ற உயிர், மீளப் பாசஞானத்திற் சேற லில்லே யெனவும்,

---

* திருக்குறள், சு-ம் அதி. வாழ்க்கைத்துணைநலம், கo.

பாசஞானத்தின் மீளுதல் இழுக்கெனவும், ஒரோவழிப் பயிற்சி வயத்தான் மீளுமாயின் மீளாது செய்துகொள்ளற்பாற்றென வுங் கூறித் நாய்தரையேயாம் என்னும் பிரிகிலேயேகாரப் பொருளை வலியுறுத்தி ஒருபொருண்மேல் வந்தவாறு காண்க.

நான்காமதிகரணம் முடிந்தது

சாதனவோத்தின் இரண்டாம்பாதமாகிய

## எட்டாஞ்சூத்திரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்.

## திருச்சிற்றம்பலம்

# ஒன்பதாஞ் சூத்திரம்



ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துணைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே

எ - து. சூ - ம். எ - னின், ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்துத லுதலிற்று.

மேற் பொதுவதிகாரத்துட் கூறிப்போந்த முப்பொருள்களுள் விள்ளற்பாலதனை விண்டு அதனுன் வருந் துன்பத்தினீங்குதலும், கொள்ளற்பாலதனைக் கொண்டு அதனுன் வரும் இன்பத்தைப் பெறுதலுமாகிய வீடுபேறடைதற்குரிய இயல்பு தனக்குண்டென ஏழாஞ் சூத்திரத்தாற் பெறுவிக்கப்பட்ட ஆன்மாவுக்கு அவ்வீடுபேற்றைப் பயப்பித்தற்கட் சிறந்த சாதனமாவது விள்ளற்பாலதாகிய பகைப்பொருள் இது, கொள்ளற்பாலதாகிய நட்புப் பொருள் இது எனக் குருமுகத்தான் விவேகித்தறியும் ஞானம் ஒன்றேயாம் எனவும், அவ்வறிவு பாசப்பற் றற்றலன்றி நிகழாமையிற் பாசஞானத்தா லெய்தற்பால தன்றெனவும் மேலைச் சூத்திரத்தான் உணர்த்தியவழி, அற்றேல், பாசஞானம் ஏகதேசவுணர்வாகலின் அதனுல் வியாபகப்பொருளை அறியும் விவேகஞானம் நிகழாதாயினும், பசுஞானம் வியாபக வுணர்வாகலின் அதுவே அதற்கமையு மென்னும் ஆசங்கையை நீக்குவதாகிய ஆன்மசுத்தி செய்யுமாறு உணர்த்துமுகத்தானே அச்சாதகத்தை நிகழ்விப்பது இது என்பதூஉம், அதனைப் பெறுமாறும் அது நிலைபெறுமாறுமாகிய சாதிக்குமுபாயம் இது என்பதூஉம் வகுத்துணர்த்துதல் சாதனவோத்தின் மூன்றும் பாதமாகிய இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேலைச் சூத்திரத் திறுதியதிகரணத்தாற் பாசஞானப் பற்றற்ற லன்றி அறியக்கூடா தென்றவழி, அற்றேல், பசுஞானத்தா லறிதல் கூடும்போலும் என்னும் ஆசங்கையை யீண்டு நீக்குதலின், அவ்வாசங்கைபற்றிய வியைபானே அதிகரண வியைபும், மேல் ஆன்மதரிசனமாமா றுணர்த்தி யீண்டு

ஆன்மசுத்தியாமா றுணர்த்துதல் முறைமை யாகலின், அம் முறைமைபற்றிய வியைபானே பாதவியையும், மேற் சாதன மாவது இதுவென் றுணர்த்திய வழி, அதனைச் சாதிக்குமாறு யாங்ஙனமென்று அவாய்நிற்றலின், அவ்வவாய் நிலைபற்றிய வியைபானே ஒத்தியையும் பெறப்பட்டன.

அற்றேல், பசுத்துவமுடையனுயவழியே ஆன்மாப் பசு வென நிற்பதாகலின் பாசப்பற்றறுதி கூறவே பசுப்பற்றறுதி யும் பெறப்படுதலின், ஆசங்கை நிகழாதாலெனின், அவ்வியல்பு முன்னர்க் கூறப்படுதல் நோக்கி நிகழு மென்ப துணர்ந்து கொள்க.

அஃதங்ஙனமாக; சிவப்பிரகாசத்தில் * "தான்பணியை நீத்தலே" ஆன்மசுத்தி என்றோதுதலின், அத்தன்மைத்தாகிய ஆன்மசுத்தி வருகின்ற சூத்திரத்தின் "இறைபணி நிற்க" என் பதனுற் பெறப்படுவதெனவே கொள்ளற்பால தாகலானும், அழுக்கு நீங்குதலே †அறுவைக்குச் சுத்தியாமாறு போலப் பாசகூயம் பண்ணுதலே ஆன்மாவுக்குச் சுத்தியாமாகலானும், அதனை ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்திற்றெனல் வேண்டும்; அவ்வாறுரையாது பதியைநாடி எனவும், நண்ணிமுலாம்பதி எனவுஞ் சிவதரிசனம் பண்ணுமாறே உணர்த்துதற் கெழுந்த இச் சூத்திரத்தை ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்திற்று என்றல் மலை வாம் பிறவெனின்:—ஆகாது; சிவதரிசனம் பண்ணுமா றுணர்த்திற்றென்பது சூத்திரத்தானினிது விளங்குதலின், அதனை எடுத்துரையாது சிவதரிசனத்தின் நிகழ்வது ஆன்ம சுத்தியென்னும் உடனிகழ்ச்சி யுணர்த்துதற்கும், தம்முள் வேறுபாடு சிறுபான்மை யுடையனவாகிய இவ்விருசூத்திரமும் ஒருபொருண்மேலன வென்பது உணர்ந்து கோடற்கும் அவ்வா றுரைத்தாராகலின்.

அஃதங்ஙனமாக; ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றமையின், தமது முதல் சீபாதத்தை அணைதற்கு ஆன்மதரிசனமே யமையும்; ஆன்மசுத்தி வேண்டுவதெற்றுக்கெனின்,—அஃதொக்கும்; திரி யக்காண்டலும், இரண்டிறக் காண்டலும், தெளியக்காண்டலு மெனக் காட்சி மூவகைப்படும். இம்மூன்றும் அதி பரிபக்குவ முடையார்க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழும்; ஏனை யோர்க்குச் சோபான முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் இம்மூன்றனும் முறையே நிகழ்வனவாகலின், ஆன்ம தரிசனத்தைப் பயக்குஞ் சிவதீபத்தின்பின் ஆன்மசுத்தியைப்

* சிவப்பிரகாசம், உண்மை, உக. † அறுவை - ஆடை.

பயக்குஞ் சிவதரிசனம் ஒருதலையான் வேண்டப்படுமென்று உணர்ந்துகொள்க. இதனானே உருவ தரிசன சுத்திகட்குத் தம் மூள் வேறுபாடுங் காண்க. *"நேசமுட்ன் றிருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி—யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்" என வழிநூலாசிரி யர் கூறியதும் இக்கருத்தேபற்றி யென்க. இம்மூவகைக் காட்சி யுமே உருவம், தரிசனம், சுத்தி எனப்படும் என்பது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—பசு ஞானத்தா னும் பாச ஞானத்தானும் அறியப்படாத முதல்வனை அம் முதல்வனது ஞானக்கண்ணானே தன்னறிவின்கண்ணே ஆராய்ந் தறிக. அப்பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனமெனின், நிலமுதல் நாதமீறாகிய பாசக்கூட்டம் நின்றாழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரி னியல்பிற் றாய்க் கழிவ தென்றறிந்து நீங்கவே அப்பதிஞானம் பிறவித் துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அங்ஙனம் விளங்கிய ஞானத்தான் ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும் என்றவாறு.

நாடி. என்பது †"நன்றும னதுநீ நாடாய் கூறி" என் புழிப்போல இகரவீற்று முன்னிலை ஏவல். நாடி எண்ணும் எனக் கூட்டி வினையெச்ச முடிபாக வைத்துரைப்பினு மமையும். சிந்தையின்கண் என்னும் ஏழனுருபு தொக்கது. உரா - முத னிலைத் தொழிற்பெயர். கண்ணுருபு விரித்துரைக்க. "பறவாக் குளவி" "பாயாவேங்கை" என்றாற்போல ஒருவரான் ஊரப் படாத வேகத்தையுடைய தேரெனச் செயப்படு பொருட்கண் வந்த பெயரெச்சமறையாகவைத் துரைப்பினும் அமையும். இப் பொருட்குத் ‡"திருத்தார்நன் றென்றேன் றியேன்" என்புழித் தியேன் என்பதுபோல உரா என்பது குறுக்கல் விகாரம். பின் வந்த பதி ஆகுபெயர்.

ஞானக்கண்ணிற் சிந்தைநாடி எனவே ஏனை ஞானங்களா னறியவாராமை பெறப்படுமாயினும் இனிது விளங்குதற் பொருட்டு அதனை அறுவாத முகத்தான் ஒதினார்.

---

* சிவஞானசித்தி அ-ம் சூ. நகூ.

† அகநானூறு, உசுஅ.

‡ 'பன்மாடக்கூடல்' என்னுஞ் செய்யுள்.

உணரா பதியை என்பதனை வேறுதொடராக வைத்து முற்றுப்பொருள்பட வோதுவாரு முளர். அஃது ஆசிரியர் கருத்தாயின் அதனை வேறோரதிகரணமாக வைத்துரைப்பர். அவ்வாறுரையாமையானும், ஞானக்கண்ணினிலொடி எனவே ஏனை ஞானங்களான் நாடப்படாமை தானே பெறப்படுதலின் அதனை விதிமுகத்தான் ஓதவேண்டாமையானும், வடமொழிச் சூத்திரத்திற்கும், *“பாசஞானத் தாலும் பசுஞானத் தாலும் பார்ப்பரிய பரம்பரனை” என்னும் வழிநூற்கும் ஏலாமையானும் அது பாடமன்மை யறிக.

இதனுள், ஊனக்கண் பாசமுணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி என்பது ஓரதிகரணம்; உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிமலாம்பதி என்பது ஓரதிகரணம்; விதியொண்ணு மஞ்செழுத்தே என்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

---

## முதலதிகரணம்

அவற்றுள், முதலதிகரணம் பாசஞானத்தா லறியப்படாதெனை மேற்கூறிப் போந்த முதல்வனைப் பசுஞானத்தால் அறிதல் கூடுமென்னுஞ் சிவசமவாத சைவரை மறுத்தற் கெழுந்தது :—

ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணினுலே காண்க வென்றது

எனவரும்.

அம்முதலை - ஊனக்கண் பாசங்களா லுணரப்படாதெனப்பட்ட முதலை. ஊனக்கண் பாசங்களை யெடுத்தோதி விலக்கினமையின் ஈண்டு ஞானக்கண் என்றது சிவஞானத்தை எனக் கொள்க. ஏனை ஞானங்களிற் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

அற்றேல், பாசஞான பசுஞானங்களான் அறியப்படாத பரம்பொருள் சிவஞானத்தான் அறியப்படுமென்றற்குப் பிரமாணம் என்னை யென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவன் வாக்கு மனுதீத கோசரமாய் நிற்றலான்

எனவரும்.

---

* சிவஞானசித்தி, கூ-ம் சூ. க.

இதன் பொருள் * சத்தநிகாரத்திற் காட்டிஞும்.

வாக்குமனுதீத கோசரமாய்நிற்றல் ஆண்டுப் பெறப்பட்டமை யின், அதனை ஈண்டு ஏதுவாகவைத்து மேற்கோளைச் சாதித்தார். வாக்குமனுதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்றுற் பெறப்படா மையிற் சிவஞானத்தானே அறியப்படும் என்பது தானே போதருமென அருத்தாபத்தியளவை காட்டியவாறு.

அற்றேல், வாக்குமனுதீதப் பொருள் கோசரமாதல் பிறி தொன்றுற் பெறப்படாதென்ற தென்னை? பசுத்துவமுள்வழிச் செயற்கையான் ஏகதேசத்தின் விளங்கும் பசுஞானம் அப்பசுத் துவம் நீங்கியவழிச் சிவஞானத்தோ டொப்ப எங்கும் வியாபக மாய் விளங்குமென்பது சிவாகமநூற் றுணிபாகலின், அவ்வழிச் சுட்டிறந் தறிவதாகிய பசுஞானத்திற்குக் கோசரமாதல் பெறப் படுமாலென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யேனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னுலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்னு மெனவழிவா ரின்று

எனவரும்.

† நாடி முதலியவற்றுள் யான் யார்? என்னைத் தேடியும் அறிகின்றிலேன் என்று இவ்வாறு தோற்கின்ற தோர்ச்சிக் கூறு பாட்டை இங்ஙனம் ஒன்றிற் றெளிவு பிறவாது மயங்கி நின்று சூழும் சூழ்ச்சிக் குறைவுபாட்டான் நமக் கெய்தியதென் றுராய்ந்து பார்த்து, அங்ஙனம் பார்த்தவழி ; ‡ "உன்னறிவை நீயே யுணர்வையே யாமாகி—லிந்நெடுநாட் பாசத் திசையாயே—யுன்னறிவை—நீங்கா வறிவாகி நீரு மிரதமும்போ—லாங்கா ணரனு ரருள்" என்பவாகலின் அத்தன்மைத்தாகிய சிவ ஞானத்தைப் பெருமையால் எய்தியதென அறிந்து குருவரு

---

* பக்கம், சுசு. † மேலிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்—பாவிய தோலின் பரப்போ தோலிடைப்—புகவிட்டுப் பொதிந்த புண்ணே புண்ணிடை—யூறு முதிரப் புனலோ கூறுசெய்—திடையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை—முடைகெழு மூளை விழுதோ வழு வழுத்—துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்—ரூரும் புழுவி னெழுங்கோ நீரிடை—வைத்த மலத்தின் குவையோ வைத்துக்—கட்டிய நரம்பின் கயிறே வுடம்பிற்குட்—பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா —தின்ன தியானென் றறியே னென்னை—யெங்குந் தேடினன் யாதிலுங் காணேன்" என்னுந் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கற் பாலது ; திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, கஉ. ‡ துகளறபோதம், சுசு.

ளான் உணரப்படுஞ் சிவஞானத்தானே சிவனை அறிந்தவர் அச் சிவனில் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் அறிவர்; அப்படி அறியாதார் மற்றெவ்வியல்பினரென்று தம்மை அறியவல்லுவர் இம்முத்திகாலத்து? என்க.

நாடி என்றது இடை பிங்கலை சுழுமுனை முதலிய தசவகை நாடியை. நரம்பு எனவே அடங்குமேனுந் தலைமை பற்றி வேறு கூறினர். சீ-புண்ணீர். கோழை-ஐ. ஓகாரம்-தெரிநிலை. நாடியோ வென்போ நரம்புசீ நோழையோ என்றது உபலக்கண மாகலின், ஏனைத் தத்துவ தாத்துவிகங்களையும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும். என்று என்பது சொல்லெச்சம். ஒற்றுமை பற்றி அரனது ஞானத்தை அரன் என்று உபசரித்தார். உம்மை எதிரது தழீஇயது. எவன் என்னும் வினாவினைக் குறிப்புப் பெயர் ஈண்டு ஆகுபெயராய் என் என மரீஇயிற்று. ஆம்-அசை.

இது, தம்மை அறியுமாறு கூறுமுகத்தானே தலைவனை யறிந்தபின் அறியப்படுவதாகிய தம்மறிவுகொண்டு தலைவனை அறியுமாறு யாங்ஙனமெனச் சிவசமவாதசைவரை மறுத்துச் சிவஞானத்தானன்றி அறியப்படாமையை வலியுறுத்தவாறு.

அற்றேல், நாடி எனும்பு நரம்பு முதலிய தத்துவ தாத்துவிகங்களை அறிதற்குச் சிவஞானத்தை யின்றி அமையு மான்மாச் சிவனை யறிதற்கண்ணும் அவ்வாறமையு மென்றற் கிழுக்கென்னை? எதிர்முகத் தொருபொருளைக் கண்ட கண்ணை மறித்து நோக்கியவழிப் பிற்பக்கத்துப் பொருளையுங் காண்டற் கமையுமால் என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு வுள்ளத்தின் கண்ணைய
கள்வன்ரு னுள்ளத்திற் காண்

எனவரும்.

எதிர்முகத்துப் பொருள்போல வெரிந்புறத்துப் பொருளும் புறத்துத் தோன்றும் விடயமேயாகலிற் கண் அவ்விரண்டனையும் ஒப்பக் காண்டல் அமையும். காண்கின்ற தன்னைக் காணமாட்டாது. தனக்குக் காட்டாய் உண்ணின்று செலுத்தும் உயிரையுங் காணமாட்டாது. அதுபோலத் தனக்கு வேறுகிய நாடி எனும்பு முதலிய தத்துவ தாத்துவிகங்களைத் தற்போதத்தால் அறிகின்ற உயிருந் தன்னை அறியமாட்டாது.

தன்னைச் செலுத்தும் முதல்வனையும் அறியமாட்டாது தானே. அங்ஙனமாயினுங் கண்போல் உயிர் சடமன்மையிற் கண்ணிடத்து உயிர் நிற்குமாறுபோலன்றி உயிர்க்கு அதனறிவாகி உடனின்றகள்வன் அம்முதல்வனாகலான், அவனை உன்னறிவின்கட் காண்பாயாக என்க.

காட்டிய என்பது தன்னினைப் பொருள்பட நின்றது. *"வாணிக மொன்றுந் தேற்றாய்" † "தேற்ற வொழுக்கம்" ‡ "தேற்றாதார் மாட்டு" என்புழிப்போல. ஏகாரம் அசைநிலை. காணாது என்னுந் துவ்வீறு தொக்கு நின்றது. § "முறைகாக்கும் முட்டாச் செயின்" என்புழிப் போல. ஒருமைப் பன்மை மயக்க மென்பாரு மூளர். கண்ணிய - அறிவாய என்க. உடன் நின்றும் பசுஞான பாசஞானங்களா னறியப்படாமை பற்றிக் கள்வன் என்றார்; $ "கண்ணுகிக் கரணங்கள் காணுமனிற்பன்" என்றார் வழிநூலாசிரியரும். தான் - அம்முதல்வன். காட்டாய வுள்ளத்தைக் கண்காண என உவமைக் கோதியவாறு பொருளினும் வருவித்துரைத்துக் கொள்க. இஃது எடுத்துக்காட்டுவமை.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

மேலை யதிகரணத்தில் இந்திரியத்தின் வேறுவான் காணப்பட்ட தன்னறிவின் கண்ணே சிவஞானத்தாற் சிவனைக் காண்டலொன்றே சிவப்பேற்றிற்குச் சிறந்த சாதனம் என்றுணர்த்திய வழி, அற்றேல், சிவஞானத்தைக் காணுமாறு யாங்ஙனமென்னும் அவாய்நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்குப் புறனடையாக எழுந்தது இரண்டாமதிகரணம்:—

இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்றுகாண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற் பாற்று

எனவரும்.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையார் இலம்பகம், உ எ அ.
† காலடியார், பொறையுடைமை, டு.
‡ திருக்குறள், கஅசு-ம் அதி. இரவு, ச.
§ திருக்குறள், டுடு-ம் அதி செங்கோன்மை, எ.
$ சிவஞானத்தி, கூ-ம் சூ. டு.

படிகசொரூபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங்களே இவை நிலையுதலிலவாகிய வேற்று நிறங்களெனக் கண்டு நீத்தவழி நிலையுதலுடைத்தாய் விளங்கி நிற்கும் படிக சொரூபம்போல, நிலையுதலுடைய ஞானத்தினுடைய சொரூபத் தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிரபஞ் சத்தை இவை நிலையுதலுடையவல்ல என்று விவேகித்தறியின் அவ்வழி நிராலம்பமாய் விளங்கித் தோன்றுவது அச்சிவஞானத் தின் சொரூபமென்று அறியும் பான்மைத்து என்றவாறு.

வன்னபேதங்கள் சித்திரம் எனப்பொருள் கொண்டவழி, நிலையுதலுடைய பித்தியின் சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள சித்திரங்களே இவை நிலையுத லுடையவல்ல என்று கண்டவழி ஒருதன்மையாய் விளங்கித் தோன்றும் பித்திபோல என்று உரைத்துக் கொள்க.

ஆசிரியர் சொற்பல்காமைப்பொருட்டு இவ்வாறு ஏகதேச வுருவகமாகவைத்து உடம்பொடு புணர்த்தோதிய ஏதுவை ஏனை யதிகரணங்களுட்போல மேற்கோளின் வேறுவைத்துக் காட்டுமாறு:—

[இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூப மென்றது, வேற்றியல்பாகிய வன்னபேதங்களே வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிகசொரூபமாந்துணையான்]

வன்னபேதஞ் சித்திரபேத மெனப்பொருள் கொள்ளின் வேற்றியல்பாகிய சித்திரங்களே வேற்றியல்பென்று கண்டு கழிப் பின் உளதாய் நிற்பது பித்தியின் சொரூபமாந் துணையான் என்பதாம்

ஈண்டுப் பாசம் என்றது காரியப் பிரபஞ்சத்தை யென்பார், அசத்தாயுள்ள என்றும், ஏதுப்பொருளே உடம்பொடு புணர்த்துக் காட்டுவார், பிரபஞ்சத்தை என்னுது வன்ன பேதங்களே என்றும், வியாபகப் பொருளுக்கு ஒருவுதலாவது காட்சிவிசேடமேயா மென்பார், அசத்தென் றெழுதிய என்னுது அசத்தென்று காண என்றும், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்றென்பார், உளதாய் நிற்பது என்றும், ஈண்டுப் பதி என்றது பதிஞானத்தை என்பார், ஞானசொரூபம் என்றும், இஃது அநுபவத்தி னன்றிச் சொல்ல வையின் அறிய வாரா தென்பார், உணரற்பாற்று என்றும் உரைத் தார். அசத்தினியல்பு இதுவென்பது* அசத்ததிகாரத்திற் காட்டப்பட்டது; கடைப்பிடிக்க.

* பக்கம், கூசo.

அசத்தெனப்பட்ட காரியரூபப் பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரியன் அறிவுறுத்த உபதேசப் பொருளை நுறைத்துநின்று * "அட்டகுண மெட்டுச்சித்தி கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்—வெறுத்து நெறி யறுவகையு மேலொடுகீ ழடங்கக்" காரண ரூபத்தின் இல்லாமையான் வெறும்பொய்யென நினைந்திருத்தல்"

அற்றேல், அதனை அவ்வாறு கண்டவழித் தோன்றுவது இன்னதென்றறிய வாராத சூனியமே யன்றிப் பிறிதில்லையாலோ வென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியா நந்தனுய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானு வறிவா யளவிறந்து தோன்றுனே
வானே முதல்களையின் வந்து
எனவரும்.

அசத்தெனப்பட்ட மூவகைப் பிரபஞ்சத்துள், அசுத்தப் பிரபஞ்சமெல்லாம் மூக்குணமயமாகலிற் சத்துவகுண விருத்தியாகிய பிரகாசரூபஞ் சாந்தரூபஞ் சுகரூபமாகத்தான், இராசத குண விருத்தியாகிய பிரவிருத்திரூபங் கோரரூபந் துக்கரூபமாகத்தான், தமோகுண விருத்தியாகிய நியமனரூபம் மூடரூபம் மோகரூபமாகத்தான் அளவிட்டறியப்படும்; முதல்வன் இம் மூக்குணங்களுங் கடந்தவனுகலான் இவற்றுளொன்றுக அறியப்படானென்பார், நிர்க்குணனுய் என்றும்; மிச்சிரப்பிரபஞ்சம் மூக்குணங்களைக் கடந்து நிர்க்குணமாய் உள்ளதொன்றுயினும் மலகன்மங்களோடு விரவி நிற்றலின் மலகாரியமாகிய மோக முதலிய எழுவகை யுருவமாகத்தான், கன்மகாரியமாகிய சுக ரூபந் துக்கரூபமாகத்தான் அளவிட்டறியப்படும்; முதல்வன் மலகன்மங்களையும் கடந்து நிற்றலான் அவற்றுள்ளும் ஓரியல்பு பற்றி அறியப்படான் என்பார், நின்மலனுய் என்றும்; சுத்தப் பிரபஞ்சம் மலகன்மங்களையும் கடந்து நின்மலமாயுள்ளதொன்றுயினுங் காரியப்பட்டு அநித்தமா மியல்புடைமையிற் சாதி சயாநந்தரூபமாய் அளவிட்டறியப்படும்; முதல்வன் காரியப் பாட்டினது உபசாரத்தையுங் கடந்தவனுகலான் அவ்வாறும் அறியப்படான் என்பார்; நித்தியாநந்தனுய் என்றும்; ஆன்மாவும் இம்மூவகைப் பிரபஞ்சத்திட்பட்டுச் சகுணனுயுஞ் சமலனுயுஞ் சாதிசயாநந்தனுயும் பொதுவியல்புபற்றி அறியப்படும்; முதல்

* சிவஞானசித்தி, சூ-ம் சூ. சூ.

வன் அவ்வாறும் அறியப்படான் என்பார், தற்பரமாய் நின்ற என்றும்; அங்ஙனம் நின்றநிலை ஒன்றேடு உவமித்தறியப் படாமை பற்றித் தனிமுதல்வன் என்றும்; இத்தன்மையனாகிய முதல்வன் நிலமுதல் நாதமீறாகிய பிரபஞ்சங்களே அசத்தென்று களைந்தவழிப் பயின்றறியாமையின், இன்னதென் றறியவாராத சூனியம் போலச் சுட்டறிவினளவினைக் கடந்து தோன்றிப் பின் னர்ச் சுட்டிறந்தறியு மறிவின்கண்ணே * "சோதிக்குட் சோதி யாய்" வெளிப்பட்டுத் தானே விளங்கித் தோன்றுவன் என்பார், வானே முதல்களாயின் அற்புதம்போல் ஆவிறந்து ஆஅ அறிவாய் வந்து தோன்றுவே என்றுங் கூறினர்.

ஈண்டுக் குணம் என்றது முக்குணங்களை. அவ்வாறின்றி நிர்க்குணன் என்பது ஒருகுணமு மில்லான் என்றுரைப்பின் அது தன்வயத்தனுதல் முதலிய எண்குணங்களை இயல்பாக வுடைய முதல்வனுக் கேலாமையின், மாயாவாதி முதலியோர் கூற்றுய் முடியுமென் றொழிக.

நற்பரன் - தனக்குப் பரன் என நான்க னுருபு விரித் துரைக்க; தன் என்றது ஆன்மாவை. அற்புதம் என்பது ஈண்டுச் சூனியத்தின்மேற்று. ஆஅ அறிவு தன்னறிவின்கண் நீங்காது நிலைபெறு மறிவு. ஓகாரம் எதிர்மறை.

வானே முதல் என்றதனானே தோற்ற முறைபற்றி வானுக் குக் கீழுள்ள பூதங்களும், ஒடுக்கமுறைபற்றி வானுக்கு மேலுள்ள தத்துவங்களும் உடன் கொள்ளப்படும்.

ஏகாரம் அசைநிலை. முதல் - ஆகுபெயர். நிர்க்குணனாய் நின் மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாய் என்புழி ஆக்கச் சொல் உண்மை குறித்து நின்றது வடமொழிமதம். ஆஅ வறிவாய் என்புழி ஆக்கம் முன்னர்ச் சூனியம்போற் றோன்றுவோன் பின் ஆஅ வறிவாய்த் தோன்றுவான் என வேறுபாடு குறித்து நின்றது. குணகுணிகட்கு வேற்றுமையின்மையின், முதல்வ னது ஞானத்தை முதல்வன் என்று உபசரித்தார்.

அற்றேல், வானேமுதல் களைந்தவழி அங்ஙனந் தோன்றும் பொருளும் வேறொன்றெனக் கோடும்; ஞானசொரூபமே அது என்றற்குப் பிரமாண மென்னை யென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

---

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கூ அ.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனற் போய்விட்டுப் போம்

எனவரும்.

ஏகதேசவுணர்வாற் சுட்டி யுணரப்படும் நிலமுதற் சிவ மீறுகிய பிரபஞ்சத்தை அசத்ததிகரணத்திற் கூறிய வியல்பு பற்றி ஒரோவொன்றுகச் சுட்டி அசத்தென்று கண்டு கழித்துக் கொண்டு சென்றவழி, முடிவின்கட் கோசரமாவது வேறின்மை யிற் பாரிசேட வளவையான் அது சத்தேயாமென்று செம் மையே அறிவாயாக. அற்றேல், அசத்தின் வேறுய் அங்ஙனங் கோசர மாவது சத்தேயாமென்ற தொக்கும்; அது முதல்வன் அன்று; உயிரேயா மென்றுற்படும் இழுக்கென்னே யெனின், நிலபேறின்றி ஒரோவொன்றுகச் சுட்டியறிந்து வந்த நீ என் றும் ஒருதன்மைத்தாய் நிலபெற்று நிகழும் அறிவாகிய சத்தாவாயல்லை; அசத்தை அசத்தென்று கண்டு நீக்கியவழி உளதாகிய சத்தினை நீ அடிமையாகச் சென்று தலைப்பட்டதி னுற் சுட்டியறிவதாகிய ஏகதேச வறிவைச் செய்யும் பொது வியல்பு நின்னை விட்டுநீங்கும், ஆகலின் அசத்துமல்லை என்க.

ஆகலின் அசத்து மல்லை என்பது குறிப்பெச்சம். எனவே, *"அசத்தைச்—சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சத சத்தா"வை என்பதாம்.

† "மயக்கம துற்று முருந்திற் றெளிந்தும்" என்ற வெண் பாவாற் பெறப்பட்டதனையே ஈண்டுக் கடைப்பிடித்தற் பொருட் டுச் சுட்டி உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம் புணர்ந்த தனற் போய் விட்டுப்போ மாகலின் அசத்து மல்லை என வேறோ ராற்றானுந் தெளிவித்தாராகலின், இது கூறியது கூறலன்மை யுணர்க. சட்டி என்பது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற் றிடைச்சொல். அது "சட்டம்" என இழிவழக்கில் மகரவீறுய் மரீஇயிற்று. அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. தேவனதடைமை தைவம் என்பது வடமொழி. வாதனையு மின்றிப் பற்றறக்கழியு மென்பார், விடும் என்னுது விட்டுப்போம் என்றார்.

இனி, அசத்தை அசத்தென்று கண்டு நீங்குமாறும் நீங்கிய வழி உண்மையைத் தைவம் புணருமாறும், புணர்ந்தவழிப்

* சிவப்பிரகாசம், உண்மை, எ.

† இந்நூல் எ-ம் சூ. ந-ம் அதி. உ.

பொய்விட்டுப் போமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்
துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டனைந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி லெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் ருன்

எனவரும்.

சுட்டுணர்விற்கு விடயமாகிய பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்று என ஒரோவொன்றுகச் சுட்டி அசத்தாகக்கண்டு விட்டுநீங்கி அங்ஙனம் அறிந்து நீங்கிய தன் னறிவின்கண்ணே சுட்டுணர்விற்கு விடயமாகாத முதல்வனை ஆராய்ந்து, அச் சிவஞானத்தானே ஆசாரியன் "சிவோயம்" எனத் தன்னுள்ளே பாவித்துச், "சிவத்துவமசி" என்றறி வுறுக்குஞ் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று "சிவோகம்" எனப் பாவிப்பானுயின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனுல் அநாதியே கூடியே பொதுவியல்பையும், அதற்கேதுவாகிய மல மாயா கன்மங்களையுந் தான்விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருடதியானத்தில் விளங்குங் கருடனுல் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலா மென்க.

ஆக என்பது ஆய் எனத் திரிந்து நின்றது. நான் - முன்னையது எழுவாய்; பின்னையது அசை. உத்தமனது ஞானத்தை உத்தமன் என்று உபசரித்தார். சரம் - பாகதச்சிதைவு. இதனுனே வருகின்ற அதிகரணத்துக்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று.

ஈண்டுக் கருடபாவனை யென்றது யாதெனிற் கூறுதும்,—ஆதிபௌதிக கருடன் ஆதிதைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டு கொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனெனப்படும். அவற்றுள், ஈண்டுக் கருடனென்றது கருடனுக்கதி தெய்வமாய் மாந்திரிக னுளத்திற் காணப்படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று

பயிற்சி விசேடத்தால அம்மந்திரரூபமே தானாக அநுபவிக்கிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண்கொண்டு பார்ப்பவே அஃது அவ் விடவேகத்தை மாற்றுதல் ஒருதலை யாகலின், அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. இத னானே கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை அசத் திய மென்பார் மதம் போலி யென்பதூஉந் தெற்றெனவுணர்க. புள்ளு விலங்கு மரம் முதலிய சராசரங்களுக் கெல்லாம் அதி தெய்வ மந்திரம் உளவென்பதூஉம், படிகம்போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபி யாவா னென்பதூஉஞ் சர்வஜ்ஞாநாதிகரண முதலியவற்றுட் காண்க.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றாமதிகரணம்

மேலை இரண்டதிகரணங்களானுந் தன்னை இந்திரியத்தின் வேறுவான் கண்ட ஆன்மா, அக்காட்சி நிலைபெறுமாறு அசத்தாயுள்ள பாசத்தை அசத்தென்று கண்டு ஒருவுக; ஒரு வியவழி உளதாய் நிற்கும் ஞானக்கண்ணினுல் ஒருவிய தன்னறி வின்கண்ணே தனக்கு ஞேயமாகிய முதல்வனை நாடுக; இவ் விரண்டும் அக்காட்சியை நிலைபெறுத்தி அரன் கழல் சேற லாகிய சிவாநந்த போகப் பயனைப் பயப்பித்தற்கு முறையே சாதனமாம் என்று உணர்த்தியவழி, அற்றேல், அப்பயனைப் பயப்பித்தற்குரிய இவ்விரண்டினையுஞ் சாதித்தோர்க்கு இனிச் சாதிக்கக் கடவதொன் றில்லைபோலு மெனை மாணாக்கனுக்கு நிகழும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது மூன்றா மதி கரணம் :—

இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்ச ரிக்க வென்றது.

எனவரும்.

இனி என்பது இயைபுணர்த்தற்பொருட்டென மேலே யுரைத்தாம்; கடைப்பிடிக்க. இவ்விடத்து என்பது ஆன்மாப் பாசமொருவி ஞானக்கண்ணினுல் ஞேயமாகிய முதல்வனைக் கண்டவிடத்து என்றவாறு. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை என்பது முத்தி பஞ்சாக்கரத்தை என்றவாறு. விதிப்படி உச்சரிக்க என்பது

ஆன்மாப் பாசமொருவி ஞானக்கண்ணினிற் பதியைச் சிந்தை நாடுக என ஈண்டு விதித்த விதியின்படியே ஒதுக என்றவாறு. பஞ்சாக்கரத்தாற் சாதிக்கப்படும் பொருளும் அதுவேயாகலான் வேறு வகுத்துக் கூறுது விதிப்படி. என மாட்டெறிந் தொழிந்தார். இங்ஙனம் ஆசிரியர் மாட்டெறிந்ததூஉ முணராதார் சாதித்து நிற்குமுறை வேறே ஒதுமுறை வேறே யெனச் சித்தாந்த வழக்கொடு முரணிக் கூறுவர். * நிற்குமுறையும் ஒதுமுறையுந் தம்முள் இயைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதென்றுழிக. இன்னும் இதனியல்பினைத்தும் உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றில் விரித்தோதுதலின், அவையெல்லாம் ஆண்டுக் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும். மானதம் மந்தம் உரை என உச்சரிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதமெனப்படும் அறிவாற் கணித்தலே ஈண்டு உச்சரித்த லென்பார், சூத்திரத்துள் உச்சரிக்க என்னாது எண்ணுக என்றார். வடமொழிச் சூத்திரத்துத் "தியானிக்க" என்றது மது.

அற்றேல், மேலையதிகரணங்களில் ஓதியவாற்றாற் பாசமொருவி ஞானம் பிரகாசித்து ஞேயத்தைக் கண்டுழி, அவ்வளவினமையாது திருவஞ்செழுத்தானும் அதனைச் சாதிக்க என்றல் மிகையுமாய்ச் சித்தசாதனமுமாமால் என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கெனக் கொள்க

எனவரும்.

வேம்பு தின்ற புழு அதனை நீத்துக் கரும்பினிற் றலைப்பட்டு அதன் சுவை தெரிந்துழியும் பயிற்சி வயத்தான் முன்னர்த்தான் நோக்கிய வேம்பின் சுவையை நோக்கி நிற்குமாறுபோல, மேலையதிகரணங்களிற் கூறிப்போந்த சாதகங்களைச் செய்து முற்றிய ஆன்மாக்களுக்கு அச்சாதகங்களான் ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப்பட்ட விடத்தும் பயிற்சிவயத்தான் முன்னர்த்தான் நோக்கிய பாசத்தை நோக்கி நிற்குமாகலின், அந்நோக்கமாகிய வாசனையை நீக்குதற்குரிய சாதக மதுவாகலான் இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்று மேற்கொண்டதெனக் கொள்க என்றவாறு.

---

* நிற்குமுறையும் ஒதுமுறையும் விளங்கத் தேற்றுநூல் பண்டார சாத்திரங்களு ளொன்றுகிய பஞ்சாக்கரப் பஃறொடை.

எனவே, இரண்டும் ஒருதன்மையவாயினும் மேலே விதிக்கப்பட்ட சாதகத்திற்குப் பயன் ஞானம் பிரகாசித்து நிலைகூடுதலும், ஈண்டு விதிக்கப்படுஞ் சாதகத்திற்குப் பயன் அது கூடிய வழியுந் தாக்குவதாகிய வாசனையை நீங்குதலுமாகிய பயன் வேறுபாடுண்மையின், ஒருதலையாற் சாதிக்கக் கடவதாகிய திருவஞ்செழுத்தோதுதல் முகையாகலுஞ் சித்தசாதனமாகலும் யாண்டையவென மாணாக்கனுக்கு ஆசங்கையை நீக்கியவாறுயிற்று. ஆகவே, அங்கிலை கூடப்பெற்றவர்க்கன்றி ஏனையோர்க்கு இஃது ஏலாதென்பது கண்டு கொள்க. ஈண்டு நோக்கு என்றது மனவெழுச்சி விசேடத்தை; *"வாளோக்கி வாழு முலகெல்லாம்" என்புழிப்போல.

அற்றேல், இச்சாதகம் வாசனையை நீக்குமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு

எனவரும்.

ஆன்மாச் சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக் கண்டு, தன்னுடம்பினகத்தே இதயம் நாபி புருவநடு என்னும் மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானந் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசை செய்யும் முறைப்படி இதயகமலத்திற் சிவனை அவ்வஞ்செழுத்தா னமைந்த திருமேனியில், கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய்தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து, குண்டலித்தானமாகிய நாபியில் ஞானவனலை எழுப்பி அதன்கண் அத்திருவைந் தெழுத்தானே விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமஞ்செய்து, விந்துத்தானமாகிய புருவநடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப் பொருளுந் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தாற் சிவோகம் பாவனை செய்யின் அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் சேடசேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமையா மென்க.

* திருக்குறள், நடு-ம் அதி. செங்கோன்மை, உ.

ஓமித்தலுந் தியானித்தலும் பூசைக்கு அங்கம்; பூசை அங்கியென அறிக.

கோதண்டஞ் சாணிக்கில் என்புழிக் கண்ணுருபும், அண்டமும் என்புழிக் குவ்வுருபும் விரித்துரைக்க.

ஆளாம் முறைமை வருகின்ற சூத்திரத்திற் பெறப்படும். சுட்டறிவிறந்து *ஞானத்தான் † ஞேயத்தைக் கண்டு எங்குந் தானுக நிட்டைகூடிய வழியுந் தொன்றுதொட்டு வரும் ஏக தேசப் பழக்கம் பற்றிப் புறத்தே விடயத்திற்சென்று பற்றுவ தாகிய தன்னறிவை அங்ஙனஞ் செல்லாது மடக்கி, அகத்தே ஒருகுறியின்கண் நிறுத்தி, நிட்டைகூடி நிற்கும் முறைமையை அஞ்செழுத்தோதுமுறைமையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்கச் சிவதரிசனத்தை விளக்கி வாதனாவயத்தாற் புறத் திற் சென்று பற்றும் ஏகதேச வறிவைப் பற்றறத் துடைத்துப் பூரணநிலையிற் கொண்டு செல்லுமாகலான் அது வாசனை நீக்கு தற்குரிய சிறந்த சாதனமாத லறிக.

அங்ஙனம் அஞ்செழுத் தோதுமுறையான் ஒரு குறியின் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ் வாறு கண்டவழி முதல்வன் தன்மாட்டு விளங்கித் தோன்று மாறும், தோன்றியவழித் தான் அம்முதல்வனுக்கு அடிமையா மாறும் உவமையில்வைத் துணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் ரேன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாளு மோதஞ் செழுத்து

எனவரும்.

அந்தரத்தியங்கும் நவக்கோள்களுள், ஏனைக்கோள்கள் போலக் காணப்படாத இராகு கேதுக்களை ‡ உபராகத்திற் சந்திராதித்தரிடத்திற் காணுமாறுபோலப், பதி பசு பாசங்களுள் யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என்னும் உணர் விற்கு விடயமாகக் காணப்படும் பசுபாசங்களோடொப்ப வேறு காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன் இதயத் தின்கண் அஞ்செழுத்தோது முறையாற் காணுமாயின், கோல நட்டுக் கயிற்றினுற் சுற்றிக் கடையவே காட்டத்தி னின்றுந்

* ஞானம்-காட்சி.
† ஞேயம்-காட்சிப்பொருள்.
‡ உபராகம்-கிரகணகாலம்.

தோன்றும் அங்கிபோல் அம்முதல்வன் ஆண்டித்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்கும். அப்பொழுது தானுங் கனலிச்சேர்ந்த இரும்பு போலத் தன் சுதந்தரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையா மாகலான் அவ்வஞ்செழுத்தை ஒருதலையா னேதுக என்க.

கேது சாயாக்கிரக மாகலின் வேறு கூறுது இரண்டாவை என்றெழிந்தார். கண் - அறிவு. தோன்றி ஆம் எனக் கூட்டுக. உந்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று. காட்டாக்கினியின் என்பது காட்டாக்கின் என விகாரமாயிற்று. இன் - உவமவுருபு. தான் - எழுவாய். ஈண்டும் ஓதஞ்செபுந்து என்றது வலியுறுத்துதற் பொருட்டு.

அற்றேல், தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட் கண்டு பூசிக்குமாறு யாங்ஙன மென்னும் ஆசங்கையை நீக்கி, *"அண்டபிண்ட மவைசமமாகலால்" அண்டத்தில் உள்ளன வெல்லாம் பிண்டத்துள்ளுஞ் சூக்கும ரூபமாய் உண்மையின், அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்திற் கமலரூபமாய் விளங்குமாகலின், முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டு அங்ஙனம் வியாபகமாய் வயங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் அமைவுடைத்தெனத் தெளிவித்தற்பொருட்டு அவ் விதய கமலத்தி னியல்புணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

மண்முத னுளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமு—ணண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு னேர்

எனவரும்.

இதயகமலத்தின் இயல்பை உற்றறியப் புகின் நிலமுதலிய இருபத்துநான்கு தத்துவமும் நாபியினின்றுந் தோன்றும் எண்விர லளவைத்தாகிய நாளவடிவும், வித்தியாதத்துவ மேழுஞ் சுத்தவித்தையுமாகிய எட்டும் எட்டிதழ் வடிவும், அவற்றின்மேற் கருதப்பட்ட ஈசுர தத்துவமுஞ் சதாசிவ தத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவும், சத்தி தத்துவம் அக் கேசரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டுவடிவும், சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவு மாகலான், அம்மூப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகக் கொண்டு

* கோயிற்புராணம், பதஞ்சலிச் சருக்கம், எ0.

அவற்றின்மேல் நிற்கும் முதல்வன்றிருவடிகள் அவ்விதய கமலத்தின்மேல் நிற்கும். அதனை அறிந்து பஞ்சாக்கரத்தாற் பூசை செய்வாயாக என்க.

வித்தை என்பதனை இரட்டுற மொழிந்துகொண்டு, வித்தியா தத்துவமெனப்படுங் கலாதியுஞ் சுத்தவித்தையும் என்றுரைத்துக் கொள்க. * "மூட்டுமோகினி சுத்தவித்தை" என்னுஞ் சிவஞானசித்தியில் "மோகினி" என்றதூஉம் ஆகுபெயரான் அதன்காரியமாகிய கலாதிகளின்மேற்று.

இனி, இவ்வாறன்றி நில முதலிய மூப்பத்தொரு தத்துவ மெனப்படும் எட்டுக் கொத்தும் எண்விர ஞளவடிவம், அவற் றிற்குமேலாகிய அசுத்த மாயாதத்துவம் நாளத்துக்கும் மல ருக்கும் நடுக்கண்டமாகிய கிரந்திவடிவம், அதற்குமேற் சுத்த வித்தையில் வாமை முதலிய எட்டும் எட்டிதழ் வடிவமாம் என்றுரைப்பாரும்; அசுத்த மாயை கிரந்தியின் அதச் †சதனம், சுத்தவித்தை ஊர்த்துவச் சதனம் என வைத்து, அதற்குமேல் ஈசுர தத்துவத்தில் அனந்தன் முதலிய எட்டுமே எட்டிதழ் வடிவம், சதாசிவ தத்துவமொன்று மாத்திரமே கேசர வடிவம் எனக் கொண்டு அதற்கியையக் கொண்டுகூட்டி உரைப்பாரும்; கலாரூபம் என்றது நிவிர்த்தி முதலிய கலைகளை எனவும், அஃது யாண்டுங் கூட்டி உரைக்கப்படும் எனவுங்கொண்டு, அவ்வாறு கோடலான் மண்ணும் மண்ணை முதலாகவுடைய ஏனை இருபத்து மூன்று தத்துவமு மாகிய கலாரூபமாவன நிவிர்த்தியும் பிரதிட்டையுமே ஆகலான் அவையிரண்டும் முறையே நாளமும் மலருமாம், வித்தியா தத்துவமாகிய கலாரூபமாவது வித்தியா கலை சுத்தவித்தையோடு கூட்டி எண்ணப்பட்ட ஈசர் சதாசிவ மாகிய சாந்திகலையாகலான் அவை இரண்டும் முறையே கலை யெனப்படுங் கேசரமுங் கலைக்குள்ளுரு வெனப்படும் பொகுட்டு மாம், நாதமுஞ் சத்தியுமாகிய கலாரூபமாவது சாந்தியதீத கலையாகலான் அது பொகுட்டின்கண்ணுகிய பீசமாம் என்று இவ்வாறு உரைப்பாரு முளர். இவையெல்லாம் அவ்வவாகம பேதம்பற்றிக் கொள்ளப்படும்.

கலை அறுபத்துநான் காகலான் அஃது அறுபத்துநான் காகிய கேசரங்களுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகு பெய ராயிற்று. ஈசர் என்றது ஆகுபெயராய் அவரான் அதிட்டிக்கப் படுந் தத்துவத்தை உணர்த்திற்று. கலையுரு - கலைக்குள் உரு என உள்ளுருபு விரித்துரைக்க; கலைக்குள் உரு - கேசரங்

* சிவஞானசித்தி, கூ-ம் சூ. கூ.

† சதனம்-இதழ்.

களுக்கு நடுவாய் விளங்கும் பொருட்டென்பது. கலையுருவாஞ் சதிநாத மதன் கண்ணும் என மாறி உரைக்க. ஆம் என்பதனை நாளம் மலர் கலாரூபம் என்பனவற்றோடுங் கூட்டியுரைக்க.

இது நாள முதலாக மேனோக்கித் தோன்றும் உலகத்திற் கமலம் போலாது கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றுந் திவ்விய கமல மென்க.

**மூன்றாமதிகரணம் முடிந்தது**

சாதனவியலின் மூன்றாம்பாதமாகிய
ஒன்பதாஞ்சூத்திரம் முடிந்தது

சாதனவியல் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

———

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பயனியல்

## பத்தாஞ்சூத்திரம்

அவனே தானே யாகிய வன்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே.

எ-து. சூ-ம். எ-னின். பாசகூடியம் பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

மேலை ஒத்துள் மூன்று பாதத்தானும் முறையே சாதிக்கும் பொருளி னியல்பும், சாதித்துப் பெறப்படும் பொருளினியல்பும், சாதிக்குமாறும் உணர்த்தி, ஈண்டு அச்சாதகத்தானுகிய பயனியல்பு வகுத்துக் கூறுவான் எடுத்துக்கொண்டமையின், இவ்வோத்துப் பயனியல் என்னும் பெயர்த்து.

பாசவீடுஞ் சிவப்பேறுமெனப் பயன் இருவகைப்படு மாக லான், அவ்விரண்டனுட் பாசவீடாகிய பயனைப் பெறுமா றுணர்த்துமுகத்தானே ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்கும்வழிச் செய்யற்பாலது இதுவென அஞ்செழுத் ததிகரணத்தின் ஒழிபாய்வைத் துணர்த்துதல் பயனெத்தின் முதற்பாத மாகிய இப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேற் சாதக முணர்த்தியவழிச் சாதகத்தாற் பெறப்படும் பயன் யாதோ வெனப் பயனை அவாய்நிற்றலின், அவ்வவாய் நீலபற்றிய வியைபானே ஒத்தியைபும், ஆன்மசுத்தி கூறிப்பின் ஆன்மலாபங் கூறுதல் முறைமையாகலின், அம்முறைமை பற்றிய வியைபானே பாத வியைபும், விதிப்படி பஞ்சாக்கரத்தை உச்சரித்தால் வாசனுமலம்போம் என்றவழி, அங்ஙனம் உச்சரிக்குங்கால் நிற்குநிலையும் இவ்வாருகற்பாற் றென்பது கூறுக்கால் உச்சரித்தார்க் கெல்லாம் வாசனுமலம் போதல் வேண்டு மென்னும் ஆசங்கை நிகழ்தலின், அவ்வாசங்கைபற்றிய வியை பானே அதிகரண வியைபும் பெறப்பட்டன.

அற்றேல், * "விட்—டன்னிய மின்மையி னரன்கழல் செலும்" எனப்பயனும் ஆண்டே கூறிப்போந்தமையின், ஈண்டு அதனை அவாவுமாறு யாங்ஙனமெனின்,—பயனை அறிவித்தா லன்றிச் சாதகஞ் செய்தற்கண் மனவெழுச்சி செல்லா தென் பது பற்றி ஆண்டுப் பொதுவகையாற் கூறிப்போந்ததனை ஈண் டுக் கிளந்தெடுத் தோதாக்கால் விடுமாறு யாங்ஙனம்? செல்லு மாறு யாங்ஙனம்? என்று அவாய்நிற்றல் ஒருதலை யெனவிடுக்க. ஏனையவும் உய்த்துணர்ந்து கொள்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—ஞானக் கண்ணி னிற் சிந்தை நாடப்பட்ட அம்முதல்வன் பொருட்டன்மையால் வேறேயாயினும் வேறுகாணப்படாது யானே கண்டேன் என் னும்படி உயிர்தானேயாய் நின்ற அப்பெத்த நிலைபோல ஈண்டுத் தானென வேறுகாணப்படாது அம்முதல்வனேயாம்படி ஒற்று மைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின் உராத்துணைத் தோர்த்தெனப் பாசமொருவியவழியும் வாசனையால் வந்து தாக் கும் மலம் மாயை என்னும் இரண்டனுடனே வலியகன்ம மலமும் இல்லையாய்ப் பற்றறக் கழியும் என்றவாறு.

ஏகாரம் - தேற்றம். நேரி - உவமவுருபு. விளையை வேறு பிரித்தமையின், இன்மை என ஒன்றறிசொல்லாற் கூறினார்.

ஈண்டு ஏகனேகி ஒற்றுமைப்படுதலாவது, குடமுடைந்த வழிக் குடாகாயமும் மகாகாயமும் ஒன்றுதல் போல ஒற்று மைப்படுதலோ? அன்றி இப்பியை வெள்ளி யென்பதுபோலத் திரிவுகாட்சியான் ஒற்றுமைப்படுதலோ? அன்றி மண்ணை குடம் என்பதுபோல ஒன்றுதிரிந்தொன்றுய் ஒற்றுமைப்படு தலோ? அன்றி வெள்ளையுந் தாமரையும்போலக் குணகுணித் தன்மையான் ஒற்றுமைப்படுதலோ? அன்றித் தீயும் இரும்பும் போல ஒன்றினொன்று விரவுதலால் ஒற்றுமைப் படுதலோ? அன்றிப் பாலும் நீரும்போலப் பிரிக்கப்படாத சையோகத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிக் கருடனும் மாந்திரிகனும் போலப் பாவனை மாத்திரத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன் றிக் காய்ச்சிய இரும்பின் நீர்போல ஒன்றினொன்று இலயமாய் ஒற்றுமைப்படுதலோ? அன்றிப் பேயும் பேய்பிடியுண்டவனும் போல ஆவேசத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிக் காட்டத் தின் எரிபோல விளங்காமையான் ஒற்றுமைப் படுதலோ? ஞாயிற்றினொளியின் விளக்கொளிபோலச் சத்திகெட்டு நிற்ற லான் ஒற்றுமைப் படுதலோ? அன்றித் தலைவனுந் தலைவியும் போல இன்பதுகர்ச்சிமாத்திரையான் ஒற்றுமைப்படுதலோ?

* இந்நூல், அ-ம் சூத்திரம்.

அன்றி நட்டோர் இருவர்போல நட்பின் மிகுதியான் ஒற்றுமைப் படுதலோ? அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமைமாத்திரை யான் ஒற்றுமைப்படுதலோ? என அவ்வச் சமயவாதிகள் மதம் பற்றி நிகழும் இன்னோரன்ன ஆசங்கைகளை யெல்லாம் நீக்குதற் பொருட்டு, அவனே தானே யாகிய வந்நெறி என உவமை எடுத் துக் காட்டி ஓதினர்.

அற்றேல், ஈண்டுச் சம்பந்தமென்னை யெனின், அது வரு கின்ற சூத்திரத்தில் உவமைமுகத்தான் ஓதுகின்றுராதலின், ஆண்டுக் காட்டுதும்.

இதனுள், அவனே தானே யாகிய வந்நெறி போலுகி என் பது ஓரதிகரணம்; இறைபணி நிற்க மலமாயை தன்னெடு வல்வினை யின்றே என்பது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச் சூத்திரமென் றறிக.

---

## முதலதிகரணம்

அவற்றுள் முதலதிகரணம், மேலைச் சூத்திரத்தில் வாசனு மலம் நீங்கி ஆன்மசுத்தி யாதற்பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத் தைப், பாச மொருவிப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடுக எனச் சிவதரிசனம் பண்ணுமா றுரைத்திய விதிப்படியே மகாவாக்கியப் பொருள் பயப்ப உச்சரிக்க என்று உணர்த்திய வழி, வாசனுமலம் நீங்குதற்கு அவ்வாறு உச்சரித்தன்மாத்தி ரையே அமையும் போலுமென்னும் ஆசங்கையை நீக்கி மேற் செய்யுமாறு இது என்பதாய சித்தாந்தம் உணர்த்துதற் கெழுந்தது :—

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமை யான் அவனிடத் தேகனுகி நிற்க வென்றது

எனவரும்.

ஏகனுகி நிற்றலாவது, * "திரண்டாம் பயனெனுந் திரு வரு டெளியிற்—சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்று—மென்றிறை யியற்கை யியம்புத றகும்" எனச் சங்கற்பநிராகரணத்துப் பரமசித்தாந்தமாக முடிவின்கண் ஓதியவாறே திருவைந்தெழுத்தின் உய்த்துணர்ந்து நிற்றல் என்றுணர்க.

---

* சங்கற்பநிராகரணம், சைவவாதி சங்கற்ப நிராகரணம், அடி, சுக—சுஉ.

அற்றேல், வாசனுமலம் நீங்கி ஆன்மசுத்தி பண்ணுதற்கு ஸ்ரீபஞ்சாக்கரத்தை அவ்விதிப்படி உச்சரித்தலே அமையும்; அதன்மேலும் ஏகனுகி நிற்றல் எற்றுக்கென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் சேருக்கற்று அவனது சீபாதத்தை யணையு மாகலான்

எனவரும்.

ஏகனுய் அப்படி நின்றலே யன்றி யானெனப்படும் * ஞாதாவும், எனதெனப்படும் ஞானமும், அதற்கு விடயமாய் எனதெனப்படும் ஞேயமும் எனப் பகுத்துக்காணும் மயக்க வுணர்விற்கு ஏதுவாகிய மலவாசனை நீங்காது; அது நீங்கினு லன்றி முதல்வனது திருவடியாகிய சிவாநந்தத்தை அனுபவித் தல் கூடாது. ஆகலான், அம்மலவாசனை நீங்கிச் சிவாநந்தத்தை அநுபவித்தற்கு அதுவே சாதனமென்பது பெறப்படுதலான், ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத் தேகனுகி நிற்க என மேற்கொண்டது என்றவாறு.

செருக்கு - ஆகுபெயர்.

அற்றேல், ஞாதிரு ஞானம் ஞேயம் எனப் பகுத்துக் காணுங் காட்சி மயக்க வுணர்வாமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
ருனெனவோன் றின்றியே தானதுவாய்—நானெனவோன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை

எனவரும்.

யானென்றும் அவனென்றும் பகுத்தறிந்து நிற்பார்க்கும் யானேயென நிற்பார்க்குப்போல நாடுகின்ற ஆன்மபோதம் மூனைத்துத் தோன்றும் ஆதலால் அது தோன்றும்வழித் தானென்று ஒருமுதல் காணப்படுமாறின்றித் தான் அவ்வுயிரே யாய்க் காணப்பட்டும், யானென்று ஒருமுதல் காணப்படு மாறில்லை யென்றறிந்து தானே முழுவதுமெனக் காண்பவரை அவ்வாறே வேறு காணப்படுமா றில்லையென்று தனது திருவடி வியாபகத்துள் அடங்கிநிற்கச் செய்து தானே முழுவதுமாய்க் காணப்பட்டும் நிற்பன் இறைவன் என்க.

* ஞாதா - காண்போன்.

ஆய் ஆம் எனக் கூட்டுக. ஆய் ஆம் என்புழிச் செய்தெனெச்சங் கால முணர்த்தி நில்லாது, "மற்று—நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க் கமிழ்தொக்கு மிவன்" என்புழிப் போலத் தன்னினையாதன்மாத்திரையே உணர்த்தி நின்றது.

தூலவொளியாகிய கண்ணொளியுஞ் சூக்கும வொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலைபிரித்தறிய வாராமையின், கண்ணொளியாய்க் காணுங்காற் காணுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின், அவ்வழி விளக்கொளி இருந்து மில்லை; விளக்கொளியாய்க் காணுங்காற் காட்டுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின், அவ்வழிக் கண்ணொளி இருந்து மில்லை. கண்ணொளியும் விளக்கொளியு மெனப் பகுத்துக் காணப் புகினுங் காணுந் தன்மையே மூற்பட்டுத் தோன்றுதலின், விளக்கொளி திரிவுபுலனுகக் காட்சிப்படுவ தல்லது தெளிவுபுலனுகக் காட்சிப்பட்டு நிற்பதில்லை. அதுபோலத் தூலவறிவாகிய உயிருஞ் சூக்குமவறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் பிரித்தறிய வாராமையின், உயிராய்க் காணுங்காற் சிவமில்லை. சிவமாய்க் காணுங்கால் உயிரில்லை. இரண்டுமாய்க் காணப் புகினுந் தற்போதம் மூற்பட்டு நிற்றலின், அவ்வழியுஞ் சிவம் ஐயக்காட்சிக்குப் புலனுய்நிற்ப தல்லது தெளிவுகாட்சிக்குப் புலனுய் நிற்குமா றில்லை. ஆகலான், நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாந—ருனெனவொன் றின்றியே நானதுவாய் என்றூர்.

உம்மை இறந்தது தழீஇயிற்று. இக்கருத்தேபற்றிக், * "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை—காண்பார்க ணன்முத்தி காணுர்கள்" என்றோதிய புடைநூலாசிரியர் மீளக், * "காண்பானுங்—காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்—வாட்டுநெறி வாரா தவர்" எனவும், † "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன் றன்றே" எனவுங் கூறினுர் என்பது.

அற்றேல், இக்காட்சி இரண்டனுள் யாது திரிவு காட்சி, யாது தெளிவு காட்சியெனின், கூறுதும்:—கண்ணொளியானது எவ்வெவ்வொளியோடு கூடினும் அவ்வவ் வொளிவடிவாய்க் காணப்படு மியல்பிற்றன்றி ஒருபெற்றியாய்க் காணப்படுமியல்பிற் றன்மையின், அவ்வவ் வொளிகள் கண்ணொளியோடுகூடிய வழியும் ஒருபெற்றியனவே யெனப்படு மியல்பினவாகலின்,

* வினுவெண்பா, கக.

† சிவப்பிரகாசம், உண்மை, அ.

அவ்வியல்பறியாது அங்ஙனம் அவ்வவ் வொளிவடிவாய்க் காணப்படு மியல்பிற்றன்றி ஒருபெற்றியாய் விளங்காத கண்ணெளியைத் தனித்துக் காண்டல் திரிவுகாட்சி யெனவும், ஒருபெற்றியனவாய் விளங்குவனவாகிய அவ்வொளிகளைத் தனித்துக்காண்டல் தெளிவுகாட்சியவேயா மெனவும் நுண்ணுணர்வாலுணர்ந்து கொள்க.

அற்றேல், காட்டுமொளியின் வேறாய்க் கண்ணுக்கு ஒரொளிக்குணம் உண்டென்றற்கு ஏது வென்னே? உண்டெனின் மின்மினித்தூணையாயினுந் தானே விளங்குமாதல் வேண்டுமாலெனின்,—ஆகாயத்தின் கண்ணதாகிய சத்தகுணம் முரசு * குணிற் சையோகமுதலிய வியஞ்சகங்களான் விளக்கப் பட்டுழி விளங்குதலே யன்றித் தினைத்தூணையானுந் தானே விளங்குமா றின்றென்பது பற்றி, வியஞ்சகத்தான் விளங்கி எதிரொலிவடிவாய்த் தோன்றும் அவ்வோசையை ஆகாயத்தின் குண மன்றென்பார் யாருமில்லை. அதுபோலக், கண்ணின் கண்ணதாகிய ஒளியும் வியஞ்சக முள்வழி விளங்கி அல்லுழி விளங்காமைமாத்திரையே பிறிதில்லை யாகலான் அதனைக் கண்ணின்குண மன்றென்றல் அறிவிலார் கூற்றேயாமெனவும், அக்கண்ணெளி தன்னைவிளக்குதற்குரிய வியஞ்சகப் பொருள் ஏகதேசமாயின் ஏகதேசத்து விளங்கியும், அது வியாபகப் பொருளாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்கு மியல்பிற் றெனவுமுணர்க.

அற்றேல், அஃங்ஙனமாக; †"கண்ணெளி விளக்கின் சோதி கலந்திடும்" என்றற்குப் பிரமாண மென்னே? ஒரு விடயத்தின்மேல் வீழ்ந்த பல கண்ணெளிகட்குத் தம்மு ளியைபில்லாதவாறுபோல ஒருவயிற் பட்ட கண்ணெளி விளக்கொளி கட்குத் தம்மு ளியைபில்லை யென்றலே பொருத்தமுடைத்தா லெனின்,—அறியாது கூறினாய்; ஒருவிடயத்தின்மேல் வீழ்ந்த கண்ணெளிகள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறில்லை; ஒன்றுக்கொன்று காட்டுமாறு மில்லை; ஆகலான் அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின் றென்ப தொக்கும்; அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டு தலுமாகிய இயைபுண்மையின், இவ்வியைபு தம்முட்பெறப் படாத கண்ணெளி முதலாயின ஈண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்கள் தத்தம் விடயங்களோடு இயைந்தன்றிச் சந்நிதிமாத்திரையான் அவற்றை அறிதல்

* குணில் - குறுந்தடி.

† சிவப்பிரகாசம், உண்மை, அ.

செல்லாதென்பதே ஆகமங்கட்கெல்லாந் துணிபாகலானும் அத்தன்மையவாகிய கண்ணெளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லையென்றல் சிவாகமவழக்கோடும் உலகவழக்கோடும் முரணுவார் கூற்றேயாமென உணர்க. இங்ஙனம் உவமைக்கு ஓதியன வெல்லாம் பொருட்கண்ணுமாமாறு உணர்ந்து உரைத்துக்கொள்க.

அற்றேல், இவை அனைத்தும் ஒக்கும்; ஈண்டு எடுத்துக் காட்டிய கண்கள் ஒன்றனையொன்று காணுமாறின்மையின், அதுபோல ஆன்மாக்களும் பிற ஆன்மாக்களை அறியுமாறில்லை போலுமெனின், அறியாது கூறினாய்; கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காண்டலில்லை என்றது விளக்கினையும் விடயத்தினையுங் காணுமாறுபோலத் தனித்த முதலாய் வேறு காணுமாறில்லை என்ற துணையேயன்றிப் பிறிதின்மையின், கண் விளக்கொளியைக் காணுங்கால் அதுவே தானுகநின்று தன்னையும் அவ்விளக்கொளி வண்ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக அறியக் கிடத்தலின், ஏனைக்கண்களையும் அவ்வாறு காண்டல் அமையுமாகலான், அதுபோல ஆன்மாவும் பிறவுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறில்லையாயினுஞ் சிவத்தைத் தரிசிக்கும்வழித் தான் அதுவாய்நின்று தன்னை அறியுமாறு போலப் பிறவுயிர்களையும் அச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமைவுடைத்தாகலா னென்பது. அற்றுகலினன்றே,

* "தன்னுலே தானையறிந்தாற்—றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" எனவும், † "அந்நிலை கரண மாகா வகையதி லறிவ டங்கி—மன்னிட வியாபி யாய வான்பயன் மேனின்றும்" எனவும், புடைநூலாசிரியர் ஓதியதூஉம், ‡ "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்—நின்னிலையினத்தையுங் கண்டே னென்னே—நின்னைக் காணுமாந்தர்—தன்னையுங் காணுத் தன்மை யோரே" என மும்மணிக்கோவையியினுதியதூஉம், பிறண்டும் இவ்வாறே ஓதியதூஉமென்க.

முதலதிகரணம் முடிந்தது

---

* சிவப்பிரகாசம், உண்மை, உஉ.

† சிவப்பிரகாசம், உண்மை, உஅ.

‡ பதினொராந்திருமுறை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, கடு

## இரண்டாமதிகரணம்

முதலதிகரணத்தின், மேலைச் சூத்திரத்தோதிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அவ்விதிப்படி உச்சரிக்கின்றுழி அதன்கண் விளங்கும் ஞாதிரு ஞான ஜ்ஞேயப்பகுப் பிறந்துகின்று உச்சரித்தாலன்றி மலவாசனை அருமையால் அஃது அறும் வண்ணம் முதல்வனிடத்து ஏகனுகி நிற்றல் வேண்டுமென மலவாசனை யறுதற்கு உபாயங் கூறியவழி, அற்றேல், ஆன்மா அவ்வாறு நிற்புழி அதன் குணமாகிய அறிவிச்சைசெயல்கள் கெட்டொழியுமோ? கெடாது நிற்குமோ? என்றூர்க்குக் கெட்டொழியுமெனிற் குணகுணிகட்கு வேற்றுமை யின்மையாற் குணங் கெடவே குணியுங் கெடுமெனப்பட்டு முப்பொருளும் நித்தமென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணி அவசித்தாந்தமாம்; கெடாது நிற்குமாயின், ஏகனுதல் செல்லாதாலென்னும் ஆசங்கையை நீக்கு முகத்தானே ஏனை மாயா கன்ம வாசனை அறுதற்கு உபாயங் கூறுதற்கெழுந்தது இரண்டாமதிகரணம்:—

இனி இறைபணி வழுவாது நிற்க வென்றது

எனவரும்.

நிற்றலாவது, சலியாது நிலைபெறுதலென்பார், வழுவாது நிற்க என்றூர். ஈண்டு இறைபணி என்றது யாதெனின், அஃது ஆசிரியர் தாமே முன்னர்த் தெரித்துரைக்கின்றமையின், இனிது விளங்கும்.

அற்றேல், அவ்விறைபணி வழுவாது நிற்பின் ஆன்மாச் சுதந்திரனல்லனுய்ப், பரதந்திரனெனப்பட்டு முத்தியும் பெத்தமெனப்பட்டு வழுவாம்; * "பரதந் திரியங் கரைகழி பந்தம்" எனச் சிவாகமங்களி னோதுதலா னென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளாச் சாதித்தற்கெழுந்த ஏது:—

அவனருளா லல்ல தோன்றையுஞ் செய்யானுகவே அஞ் ஞான கன்மம் பிரவேசியா வாகலான்

எனவரும்.

கண்ணெளிக்குக் காட்சி விளக்கொளியை யின்றி யமையாமையிற் காண்பன வெல்லாம் அதன் செயலே யெனக் கண்டு தானென வேறு மூனக்குமாறின்றி அவ்விளக்கொளியின் அடங்கி நிற்பின், ஏனை விடய மொன்றுங் கண்ணுக்குத் தாக்குமா றில்லை; அதுபோலத் தன்னுடைய இச்சாஞானக் கிரியைகளின் தொழிற்பாட்டுக்கு முதல்வனது இச்சாஞானக்

* ஞானமிர்தம், கூ.

கிரியைகளே யின்றி யமையாத ஆன்மாவும் அவ்வியைபு பற்றி நிகழ்வன வெல்லாம் முதல்வனது இச்சாஞானக்கிரியைகளது நிகழ்ச்சியே யெனக் கண்டு அம்முதல்வன் வியாபகத்துக்குள் ளாக அடங்கி நிற்பிற் பிரபஞ்சஞ் சிறிதுந் தாக்குமா றில்லை. அஃதின்றாகவே, அது காரணமாக மேலைக்கு வினை ஏறுமா றில்லை. அல்லுழி யெல்லாம் பிரபஞ்சந் தாக்கா தொழியாது. அஃதொழியாதவழி, அது காரணமாக வரும் விருப்பு வெறுப்பு ஏறு தொழியாது ; அஃதேறுமாயிற் பிறவிக்கு வித்தாய் மீளப் பெத்தநிலையிற் செலுத்திவிடும். ஆகலான், அங்ஙனமாகாத வாறு மாயை கன்மங்களின் வாசனை அறுதற்கு உபாயம் இதுவே யாகலான் இறைபணி நிற்றல் ஒருதலையான் வேண்டு மென்பார், அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யாதாகவே அஞ் ஞானகன்மம் பிரவேசியா வாகலான் இனி இறைபணி வழுவாது நிற்க என மேற்கொண்டது என்றார்.

எனவே, *"பரதந் திரியங் கரைகழி பந்தம்" எனச் சிவா கமங்களில் ஆண்டாண் டோதியது இவ்விறைபணி நிற்றலை யன்று ; மற்றுச் சிவாநந்தத்தை அநுபவித்தற்கட் செல்லு மியல்பிற்றாகிய தன்னிச்சைவழி விடாது மலத்தினுல் ஐந் தொழிலில் அகப்படுத்துச் சுழல்விக்குங் காரணமூர்த்திவழி நிற்றலையேயா மெனக் கொள்க. சிவாநந்தத்தை அநுபவித் தற்கு ஏதுவாய இறைபணி நிற்கை, தன்னிச்சைவழி நிற்ற லேயா மாகலின், அஃது அதனை நோக்கச் சுதந்தரமேயா மென்பது.

மலவாசனை யறுதல் மேலையதிகரணத்தாற் போந்தமையின், ஈண்டு ஞானம் என்றது மாயையின் காரியமாகிய மயக்க வாசனையையா மெனவும், சஞ்சிதந் தீக்கையானும் பிராரத்தம் அநுபவத்தானும் அறுதலின், ஈண்டுக் கன்மம் என்றது ஆகாமிய வாசனையையேயா மெனவுங் கொள்க.

அஞ்ஞான கன்மம் - உம்மைத்தொகை.

அற்றேல், அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யாத வழி அஞ்ஞான கன்மம் பிரவேசியாதவாறு யாங்ஙனம்? * "பிற்செயா தநுப விப்ப தின்மையிற்" பிராரத்தம் அநுப விக்கும்வழி ஆகாமிய மேறுதல் ஒருதலையாமா லென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

---

* சிவஞானசித்தி, உ-ம் சூ, கக.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னி
னேத்தநுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்

எனவரும்.

செவிவாய் முதலிய இந்திரியங்கள் முதல்வனது உடைமையாகிய மாயேய மெனப்படுவன வன்றி ஆன்மாவாகிய யாமெனப்படுவன வல்ல; அவை தொழிற்படுதலும் முதல்வன் வயத்தானன்றி நம்வயத்தா னல்ல; அவ்விந்திரியங்கள் சத்தாதி வாக்காதிகளை விடயித்தற்கு வழியாகிய தநுகரண புவனபோகங்களும் அம்மாயேய மாவன வன்றி யாமாவனவல்ல; அவை சேட்டித்தலும் முதல்வன்வயத்தா னன்றி நம்வயத்தா னல்ல; அவற்றோடு கூடிநின்று விடயங்களை ஈட்டி நுகர்ந்து வருகின்ற யாமும் ஞானக்கிரியைகளை முதல்வன் விளக்கியவழி விளங்கியும் அல்லுழி விளங்காதும் இவ்வாறு முதல்வனை யின்றியமையுமா றின்மையான், அம்முதல்வனது உடைமையாவே மல்லது சுதந்திரராவே மல்லேம் என்று இங்ஙனம் பசுபாசங்களி னியல்புகளை உள்ளவா றுணர்ந்து செய்வன வெல்லாம் அவன் அருளின் வழி நின்று செய்யுஞ் செயலாய்க் கண்டுகொண் டிருப்பாராயின் அவ்விறைபணியாகிய அடிமைத்திற முடையார் எவ்வுடம்பி னின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை அவர்க்குப் பந்தமாதலில்லை. அவ்வாகாமிய வினையை அவிநாபாவமாய் உடன் கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியில் உடலுழா யொழிவதன்றி ஏனையோர்க்குப் போல அவர்க்காத லில்லையாகலா னென்க.

நம்வழியி னல்ல என்பதனை மேலுங் கூட்டுக. தருவான் முன்னும் எனக் கூறிக்கொள்க. ஆம் என்பது சொல்லெச்சம். சஞ்சிதவினை ஆசாரியன் தீக்கை செய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின், ஈண்டு முற்செய்வினை என்றது பிராரத்தவினையை எனக் கொள்க. தருதல் - இடவழுவமைதி.

அற்றேல், இறைபணியார்க் குளதாகிய வினை அவரைச் சாருமா றின்றி உடலுழா யொழியுமாறும், ஏனையோர்க்குளதாகிய வினை உயிருழாய் வந்து வருத்துமாறும் இங்ஙனஞ் செய்யும் இறைவன் நடுவுநிலைமையின்றிக் கோட்ட முடையனெனப்படுமா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:—

சார்ந்தாரைக் காத்த றலேவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தானுச் செய்துபிறர் தங்கள்வினே தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினேயு மாங்கு

எனவரும்.

தம்பால் அடைக்கலமெனச் சார்ந்தாரைக்காப்பது உத்தம ராயினுர்க்குக் கடமை யாகலான், முதல்வன் தன்னைச் சார்ந்த வரையே பாதுகாப்போனுகியும் அதுபற்றிக் கோட்டமுடைய னல்லனுய்த் தன்னைச் சார்ந்து தன்னடிப்பணியின் நிற்கவல்ல அடியார் தானேயாய் நிற்குமாறு நிறுவி, அவர்க்குவரும் ஆகா மியவினேயைக் கெடுத்து, அது செய்ய * வல்லாத பிறர்க்குவரும் ஆகாமிய வினேயை அவர்க்குக் கொடுப்ப னுகலான் அவ் விருதிறத்தோர்க்கும் உணவாகி நுணுகிவந்து பொருந்தும் பிராரத்த வினேயும் அவ்வாறே செய்வோர் செய்நிக்குத் தக்க பயனுய் இருவேறு வகைப்படச் செய்வ னென்க.

சாராதாரை ஒழித்துச் சார்ந்தவரையே பாதுகாப்பது நடுவுநிலே யன்றென்பாரை நோக்கி அவ்வாறு கொள்ளினும் அஃது ஆண்டைக்குத் தலேமைக் குணமாவதன்றி இழுக்கன்மை யான் அமையு மென்பார், சார்ந்தாரைக் காத்த றலேவர் கடன் என பழமொழி எடுத்துக் காட்டி, உண்மையான் நோக்க வல்லார்க்கு அது நடுவுநிலேமையே, கோட்டமன்றென அறிவுறுத்துவார், சார்ந்தடியார் தாந்தானுச் செய்து பிறர் தங்கள் வினே தான் கொடுத் தல் என வேறுபடுத்துக் காட்டினுர். சார்ந்தடியார் தாந் தானுச் செய்து பிறர் தங்கள் வினே தான் கொடுத்தல் உண்டென்பது உம், அது நடுவுநிலேமையே கோட்டமன் றென்பதூஉம் ஏனேச் சமயத்தார்க்கும் உடம்பாடாகலின், அஃது ஈண்டைக் குவமை யாயிற்று.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஐந்து என்னும் பெய ரெச்சம் ஈறு திரிந்தது. தான்-முதல்வன். ஆதல் கொடுத்தல் என்புழி ஆனுருபு விகாரத்தாற் றொக்கது. ஆய் என்னும் வினேயெச்சம் கொடுத்தல் என்னுந் தொழிற்பெயரோடு முடிந் தது. ஆய்ந்து-நுணுகி. † "ஒப்த லாப்த னிழுத்தல் சாஅ— யாவயி னுன்கு மூள்ளத னுணுக்கம்" என்றுர் தொல்காப்பிய னுரும். ஆர்-வினேத்தொகை. பிராரத்தவினே சூக்குமை வினேயாக லின் அது கூடும் முறைமை அறிதல் அரிதென்பார், ஆய்ந்தார்

* வல்லாத-மாட்டாத. † தொல்காப்பியம், சொல்லதிகாரம் உரியியல், கூச.

முன் செய்வினையும் என்றார். உம்மை இறந்தது தழீஇயிற்று. ஆங்கு-அதுபோல என்க.

இதனானே மேலே வெண்பாவின் முற்செய் வினையும் தருவல் என்றது பற்றிய ஆசங்கையை நீக்கியவாறு.

அற்றேல், இறைபணியி னிற்கும் ஞானிகட்கும் பிராரத்த வினை தாக்கலுண்டெனச் சிவாகமங்களின் ஆண்டாண்டோது தலின், அவற்றோடு முரணி அஃது அவர்க்குத் தாக்கா தென்றல் அமையாமையின், அது தாக்கும்வழி ஆகாமிய வினையும் ஏறுதொழிதல் யாங்ஙன மென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
யாயவத னலுணரு மச்சு

எனவரும்.

தன்பால்வைத்து எடுக்கப்பட்டொழிந்த காயத்தி னின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாத்திரத்தில் அவ்வாசம் மங்கிப்போய் மெலிதாய்க் கந்திக்குமாறுபோல ஞானவனென் றெண்ணிச் சிவோகம் பாவனை செய்தறியும் ஞானிக்கு நாடுமூல மூண்டாதலு முண்மையின், அது பற்றி அவன் மாட்டுப் பிராரத்தவினையும், அதற் கிடனாகிய உடம்பு முதலிய மாயேயமும் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமாயினும் அவ்வழி ஏறுவதாகிய ஆகாமியவினை மேலைக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்குப் பற்றுக்கோடாகிய மாயேயத்தினோடுங் கெட்டொழியும். அந்த ஞானி பின்னர்ப் பகுத்துணர்வு பிறந்து ஏகனாகி இறைபணி நின்று சத்தாயுள்ள சிவமே யாகிய வாற்றால், ஒரோவழி அவ்வாதனை பற்றிப் பிறழினும் பிறழவொட்டாத அவ்வச்சினையே உணர்ந்து நிற்ப ரெனல வென்க.

எனவே, ஒளி இருளைத் துரக்குமாறுபோல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் துரக்கு மென்பதாம். ஒளி-ஐந்தாம்வேற்றுமை உருபு;* "மரபுளிவழா" என்புழிப்போல. முற்றுகரங் கெடுதல் இலேசாற் கொள்க. உம்மை சிறப்பின்கண் வந்தது. மற்று-வினைமாற்று. அவன் மேற்கூறிப் போந்த ஞானி. தான் என்பது அதுவாத முணர நின்றது. பிறழ விடாமைபற்றி மெய்ப்

* திருமுருகாற்றுப்படை, திருச்சீரலைவாய், கஅ-ம் அடி.

பொருளே அச்சாக உருவகஞ் செய்தார். இஃது இனவெதுகைத் தொடை.

இதனுற் கூறிப் போந்தது சிவாகமங்களில் ஆண்டாண்டு ஞானிகட்குப் பிராரத்தவினை தாக்குமென்றது, இங்குளி வாங்கும் கலத்தைப்போல வாதனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமென்னுந் துணையே யாகலின், அவ்வாறு வரும் பிராரத்த வாதனை நுகர்ச்சியின் ஏறும் ஆகாமியவினை அவ்வுணர்வின் முன்னர்க் கெட்டொழிவதன்றிப் பிராரத்த நுகர்ச்சியினேறும் ஆகாமியம் போலப் பிறவிக்கு வித்தாய் நிலைபெறுமாறில்லையென ஆசங்கையை நீக்கிய வாறுமென்க.

அற்றேல், வாதனைபற்றிப் பெயர்ந்துழியும் நிலையிற்றிரிய வொட்டாத அவ்வச்சினையே உணர்ந்து நிற்குமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை உவமைமுகத்தா னீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு

எனவரும்.

நண்ணனல் வேவாமைக் கேதுவாகிய அங்கித்தம்பனை வல்லார் அவ்வனலிற் குளிப்பினுந் தந்திறலி னீங்காதவாறு போலவும், பண்ணமர மாச்செலுத்துதற்குரிய பாகுநூல் கற்றுவல்லார் அப் பாய்மாவின் வேகத்துட் படினுந் தந்திறலி னீங்காதவாறு போலவும், ஐம்புலன்கள் தமக்கு வியாப்பியமாய் அடங்கத் தாம் அவற்றை வியாபித்து மேற்பட்டு நிற்கும் முறையை ஆராய்ந்து தாம் அரனடியாகிய அச்சினை இறைபணியினின்றுணர வல்லோர் அவ்வைம்புலனிற் சென்றும் அதனனே தந்திறல் நீங்குத லிலரென்க.

நள்ளனல் நண்ணனல் என மரீஇயிற்று; * "நீணுல கெலாம்" என்புழிப்போல. நண்ணனல். † "கீழ்நீர்" போல முன்பின்னகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. தம்மால் நண்ணப்படும் அனல் என்றுரைப்பினும் அமையும். பண்-பண்ணப்படுங் கதிகள். செலுத்துதல்-ஊர்தல். இன்-உவம வுருபு. உம்மை எண்ணும்மை. சென்றும்-உம்மை சிறப்பு. ஐம்புலன்-

* திருநாவுக்கரசுநாயனார்தேவாரம், கோயில், திருக்குறுந்தொகை, ச.
† திருக்குறள், கூடா-ம் அதி. கள்ளுண்ணாமை, கூ.

உபலக்கணம். திறல்-வெற்றிப்பாடு. அதற்கு என்பது உருபு மயக்கம்.

அற்றேல், அசத்தோடு சார்ந்தவழியுஞ் சத்தோடு சார்ந்த வழியும் அதுவதுவேயாய்ச் சதசத்தா மியல்புடைய ஆன்மாக்கள் ஐம்புலனுகிய அசத்தைச் சார்ந்தும் அவர் திறல் நீங்காமையாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

சதசத்தா மேய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு

எனவரும்.

சத்தோடு கூடியவழிச் சத்தாயும் அசத்தோடு கூடியவழி அசத்தாயும் இவ்வாறு சதசத்தாமியல்புடைய தன்னுண்மை உணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் திருவருளா னல்லதொன் றையுங் காணுஞ்சு அவ்வருளின் வழிநின்று காணுமாயின் அவ்வழிப் பாசமாகிய அசத்தின் இதஞ்செய்த லின்மையாற் சத்தாகிய அம்முதல்வனைத் தலைப்படுவோர், சிற்றமிக் கெரியாகின்ற ஒளியின்முன் அந்தகாரம்போல, அச்சத்தினெதிர் தனது சத்தியை ஏற்கமாட்டாத அசத்தாகிய பாசத்தின்மாட்டு எய்துவாரல்லர் என்க.

வேறுமுடிபாகலின், ஒருமைப்பன்மை மயக்கமன்மையுணர்க. அருளில் என்னும் ஐந்தாமுருபு ஏதுப்பொருட்கண் வந்தது. இதமித்தல் என்பது பெயரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல்-பற்றுச் செய்தல். இன்றி-இன்மையாயெனக. இன்மைக்கு ஏதுக் கூறுவார் கதமிக் கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி என்றார். அசத்தைச் சார்ந்து அசத்தாய் நிற்றல் இயற்கையன்றென்பது, * "ஒன்று மிகினு மொளிகவரா தேதுள்ள—மென்று மகலா திருள்" எனப் புடைநூலாசிரியர் ஓதியவாற்றுனு மறிக. ஆங்கேலா அசத்தி எனக் கூட்டுக. ஒப்புமை பற்றிக், கதமிக் கெரிகதிர் என்றார். ஒப்புமை யாதல் † "எல்லே யில்லவ னெரிதுள்ளி னுலென வெகுண்டான்" என்பதனுனும் அறிக.

இவ்வைந்து வெண்பாவானும் முறையே இறைபணியினிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில் உடனுழாய்

* திருவருட்பயன், இருண்மலநீங்கு, கூ.

† பெரியபுராணம், அமர்நீதி நாயனூர் புராணம், உசு.

ஒழிவதாகலின் மேலைக்கு வினை யேறுமாறில்லை யென்றும், அது செய்வோர் செய்திப்பயன் விளையுமாற்றுற் பெறப்படுமென்றும், செய்வோர் செய்திப்பய னன்றியும் விளைவது வாதனை மாத்திரையே யாகலான் அதுபற்றி வரும் வினை ஞானத்தா னழிவெய்துமென்றும், அந்த ஞானம் வாதனை பற்றிச் சலிக்குமாறில்லை யென்றும், அது சலியாமைக் கேது இதுவென்றும் எடுத்துக்காட்டி அஞ்ஞான கன்மம் நித்தியாமையை வலியுறுத்த வாறு காண்க.

ஏகனாகி நிற்றலான் மலவாதனை இன்றாகலும், இறைபணி நிற்றலான் மாயா கன்மங்களின் வாதனை இன்றாகலும் பெறப்பட்டமையின், மலமாயை தன்னெடு வல்வினை யின்றே என்பதனை வேறோரதிகரணமாக வைத்து ஓதல் வேண்டா வாயிற்று. அற்றாயினும் அவை இலவாதற்கனுளதாகிய ஐயப்பாடு முதலாயின இறுதிச் சூத்திரத்தின் "மும்மலங் கழீஇ" என்னும் அதிகரணத்துட் பெறப்படும்.

இரண்டாமதிகரணம் முடிந்தது

பயனேத்தின் முதற்பாதமாகிய

**பத்தாஞ்சூத்திரம் முடிந்தது**

திருச்சிற்றம்பலம்.

———

திருச்சிற்றம்பலம்

## பதிஞ்ஞாஞ்சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னையரா வன்பி னரன்கழல் செலுமே

எ-து. சூ-ம் எ-னின். பரமேசுரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்துத லுதலிற்று.

மேலைச் சூத்திரத்தின் இறைபணி வழுவாது நிற்க என்ற வழிச், * "சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்—சிவ னுடைய தென்னறிவ தென்றுஞ்—சிவனவன—தென்செயலதா கின்ற தென்று மிவையிற்றைத்—தன்செயலாக் கொள்ளாது" அவ்வாறு நிற்கும் ஆன்மாவினுடைய அறிவிச்சை செயல்கள் அவ்விடத் தொன்றனை விடயிக்குமா றில்வழிப் புத்தர் கூறும் ஆலய விஞ்ஞானம்போலச் சூனியமாய் முடியுமாலென்னும் ஆசங்கையை நீக்கி அவற்றிற்கு விடயம் இது வென்ப துணர்த்து முகத்தானே ஆன்மலாப மிரண்டனுள் முடிவாய் எஞ்சி நின்ற சிவப்பேறு கூடுமா றுணர்த்தி, அதற்கு ஏதுக் கூறுமுகத்தானே ஏகனுகி அவ்வாறு நிற்புழிப் பெறப்படுஞ் சம்பந்தம் இது வென் பது காட்டி, மேற் கூறிப்போந்த பாசநீக்கத்துட் பெறப்படாது எஞ்சி நின்ற பிராரத்த வாசனையினெழிபுங் கைமுதிகனியாயத் தான் உணர்த்துதல் பயனெத்தின் இரண்டாம் பாதமாகிய பதி ஞ்ஞாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

ஆசங்கை பற்றிய வியைபானே அதிகாணவியையும், ஆன்ம லாப மெனப்படும் பயனிரண்டனுள் பாசநீக்க மூணர்த்திய பின்னர்ச் சிவப்பேறுணர்த்துதல் முறைமை யாகலின் அம் முறைமை பற்றிய வியைபானே ஒத்தியையும், 'ஏகனுகி யிறை பணி நிற்க' என்றவழி அவ்வாறு நிற்பித்தற்குரிய சம்பந்த மென்னை யெனவும், "மலமாயை தன்னெடு வல்வினை யின்றே' என்புழி வினை என்றது ஏற்புழிக் கோடலான் ஆகாமிய வினையாகவே ஈண்டைப் பிராரத்தவாசனை கழியுமா றாங் ஙன மெனவும் அவாய் நிற்றலின், அவ்வவாய்நிலைபற்றிய வியை பானே பாதவியையும் பெறப்பட்டன.

---

* திருக்களிற்றுப்படியார், சூச.

அற்றேல், ஏகனுகி இறைபணி நின்றூர்க்கு இனிச் செய்யக் கடவதொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சியாமாறு போலப் பசுத்துவ நீக்கமுஞ் சிவதத்துவ விளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வனவா மாகலின் வேறோத வேண்டாமையானும், வடமொழிச் சிவஞான போதத்துட் சுவாநுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ் சூத்திரத்துட் பாச நீக்கத்தோடு ஒருங்குவைத் தோதுதலானும், அதனை ஈண்டு வேறுவைத் தோதுதல் அமையுமா றென்னை யெனின்,— அறியாது கூறினுய்; ஏகனுகி யிறைபணி நிற்பது துரியநிலை யெனப்படும் அருணிலையே யாகலின், ஆண்டு மலநீங்கியதனை யானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவ தன்றி அதீதநிலைக் கண்ணதாகிய சிவத்துவ விளக்க மெனப்படும் பரம சுகந் தோன்றுமையின், அது விளங்குதற்கு அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யாமை மாத்திரையான் அமையாமையின், வேறும் ஆண்டுச் செய்யக்கடவதுண்டென்பது தானே போதரு தலானும், இரு ணீக்கத்தில் ஒளிவிளக்கம் போலப் பசுத்துவ நீக்கத்தில் அருள்விளக்கமாத்திரை உடனிகழ்வதன்றி ஆநந்த விளக்கம் உடனிகழாமையானும், அருள்விளக்கத்திற்கும் ஆநந்த விளக்கத்திற்குந் தம்முள் வேறுபாடு முன்னர்க் காட்டப்படு மாகலானும், வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்திற் பாச க்ஷயம் பண்ணுமா றுணர்த்தியவழிப் பாசநீக்க மாத்திரையே முத்தியென்னுஞ் சமயத்தாரை மறுத்தற் பொருட்டுப் "பாச நீக்கம் பெற்றோன் சுவாநுபூதி யுடையனுவன்" எனப் பதினேராஞ் சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந் துணையே செய்து கொண்டு, சுவாநுபூதி நிகழ்ச்சிக்கண் ஓதற்பாலன வெல்லாம் பதினேராஞ் சூத்திரத்தே கூறிப்போந்தமையின், ஒன்பதாஞ் சூத்திரத்தி லெடுத்துக்கொண்ட ஆன்மசுத்தி பண்ணுமாறு பத்தாஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முடிவு பெற்றூற் போலப் பத்தாஞ் சூத்திரத்தி லெடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலை பதினேராஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெறுத லென்பதின் மலியாமைப் பொருட்டு ஆசிரியர், "சுவாநுபூதி மானுவன்" என்பதனையும் அரன் கழல் செலும் எனப் பதினேராஞ் சூத்திரத்திற்றூனே ஒருங்குவைத் தோதினு ராகலின் அது மாறன்மையானும், அவ்வாறன்றி மொழி பெயர்த்தல் யாப்பான் நூல்செய் துரைப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய் துரையார் ஆகலானு மென்பது.

இஃதறியாதார் பத்தாஞ் சூத்திரம் பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்திற்று எனவும், பதினேராஞ் சூத்திரம் பரமேசுரனது ஸ்ரீ பாதங்களை யணையுமா றுணர்த்திற்று எனவும் ஆசிரியர் தாமே

கிளந்தெடுத் துரைத்த கருத்துரையும் நோக்காது, பத்தாஞ் சூத்திரத்தானே அதீதநிலையுங் கூறியொழிந்தா ரெனக்கொண்டு பதினோராஞ் சூத்திரம் பன்னிரண்டாஞ் சூத்திரம் போலச் சீவன்முத்திநிலையின் நிகழும் அணைந்தோர் தன்மையே கூறிற்று மெனத் தமக்கு வேண்டியவாறேயுரைப்ப. அது போலியென் றொழிக. வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்துச் சுவாதபூதிமா னுவன் என்பதனைப் பதினோராஞ் சூத்திரத்துப் பந்நிசெய்க என்றதன் பின்னுகக் கொண்டுகூட்டிவைத்துரைப்பதே அதன் கருத்தென்பது தெற்றென வுணர்ந்து கொள்க; அஃது ஆண்டுக் கூறியவா றுணர்ந்து பத்தி செய்தவழி யன்றிப் பெறப்படாமை யின். அஃதாமாறு முன்னர்க் காட்டுதும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு—காட்டக் காண் பதாகிய கண்ணுக்கு உருவத்தைக் காணுமாறு பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதற்கு அதனைக் காட்டித் தான் காண் கின்ற ஆன்மாவைப் போல, அறிவிக்க அறிவதாகிய அவ் வான்மா விடயத்தை அறியுமாறு, முதல்வன் பிரிப்பின்றி உடங் கியைந்து நின்று அதற்கு அதனை அறிவித்துத் தான் அறிந்து வருதலான், இவ்வாறு அத்துவிதமாய் நின்று உதவி செய்து வரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடித்துச் செய் யும் அன்பானே அம்முதல்வன் றிருவடியாகிய சிவாநந்தா நுபூதியைத் தலைப்படுமின் என்றவாறு.

காணும் என்னும் உவமையடையைப் பொருளினும், கண்டு என்னும் பொருள்விளையை உவமையினுங் கூட்டிக், காணா என்பதனை ஈறிடத்துங் கூட்டிக், கண்டு காட்டல் என்பதனை *"வேர்த்து வெகுளார் விழுமியோர்" என்புழிப்போலக் காட்டிக் காண்டல் என மாறிவைத்து உரைத்துக்கொள்க. அயராமைக் குச் செயப்படுபொருள் அதனை என்று ஏடுத்துக்கொண்டு உரைக்க. அயராஅன்பு - அயராமையாலுகிய அன்பு என "ஆறு சென்ற வெயர்" போல நின்றது. இக்கருத்தே பற்றி, †"இத்தை —யாயுமறி வுடையனு யன்பு செய்ய" என்றார் வழிநூலாசிரிய ரும். உள்ளத்தை என்பது உருபு மயக்கம்.

அறிவிச்சை செயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் அரன்கழல்சேறலும் முறையே காரண காரியங்களாய் அவ் வொருபொருண்மேல் ஒருங்குநிகழு மென்பார், அயரா வன்பி னரன் கழல் செலுமே என்றார்.

---

* நாலடியார், சினமின்மை, ச.

† சிவஞானசித்தி, சக-ம் சூ. க.

இஃதென்சொல்லியவாறே வெனின், ஆன்மாவை யின்றி யமையாத கண் ஒருருவத்தைக் காணுங்கால், ஆன்மபோதங் கண் ணெளி யெனத் தானென வேற்றுமை யின்றி உடனுய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டிய உருவத்தைக் கண் கண்ட தென் றும், கண்ணை அதிட்டித்து நின்ற ஆன்மாக் கண்டதென்றும் பிரித்தறியப்படுமா றின்றி இருவகைக் காட்சியும் ஒன்றினை யொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே நிகழும் முறைமை போல, முதல்வனை யின்றி யமையாத ஆன்மா ஒரு விடயத்தை யறியுங்கால், அம்முதல்வனது சிற்சத்தி, ஆன்மசிற்சத்தி யெனத் தானென வேறின்றி உடனுய் விரவி நிற்ப, முதல்வனும் ஆன்மா வில் அவ்வாறு விரவினின் றறிவித்த விடயத்தை ஆன்மா அறிந்த தென்றும் ஆன்மாவை அதிட்டித்து நின்ற தானறிந்தானென் றும் பிரித்தறியப்படுமாறின்றி, இருவகையறிவும் ஒன்றினை யொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விடயித்துச் செல்லுமாறு செய்துவரும் இவ்வுபகாரம் பெத்தம் முத்தி இரண்டினும் ஒருபெற்றித்தா யுண்மையின், ஏனைய வற்றை யெல்லாங் கைவிட்டு முதல்வனிடத்து ஏகனுகி அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யானுய் நின்ற ஆன்மா, முதல்வன் அவ்வாறு அத்துவிதமாய் உடனின்று கருணையான் உபகரித்து வரும் உரிமையை நோக்குந்தோறும் அப்பொருளின்கட் செல் லும் இச்சை அடங்காது மீதூர்தலின், அவ்விச்சையே தானுக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப் பெறு மென மேற்கூறிய ஆசங்கையை நீக்கி, அறிவிச்சை செயல்கள் மூன்றும் இம்முறைமையான் அம்முதல்வனை ஒருங்கே விடயித்து நிற்குமாறு விளக்கி, அதீதநிலையினியல்பு கூறிய வாறு மென்க. இக்கருத்தே பற்றி, * "அறிவொளிபோற் பிறிவருமத் துவிதம்" என்றுர் புடைநூலாசிரியரும். † "அங் கியு மொன்றிற் றங்கினின் றல்லது தன்றொழில் நடத்தாது" ஆகலின், அதுபோல முதல்வனும், செய்யுந்தொழில் அனைத் தும் ஆன்மாவினிடத்துத் தங்கி நின்றே செய்வனென்பது உணர்ந்துகொள்க.

இதனுள், காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல் எனவே அவ்விரண்டிற்கு முளதாகிய சம்பந்தம் அத்துவித மென்பது பெறப்படுதலின், அதுவே 'அவனே தானே யாகிய வன்நெறி ஏகனுகி' நிற்றற்கண்ணுளதாகிய சம்பந்தமென்பதூஉம், காட்டிக் காணும் எனவே கைமுதிக நியாயத்தான் முதல்வனையே விடயிக் கும் ஞானிக ளுடம்பினிகழும் பிராரத்தம் முழுவதும் அவர்க

* சிவப்பிரகாசம், பாயிரம், எ. † சங்கற்பநிராகரணம், சிவசமவாதி சங்கற்ப நிராகரணம், அடி, சடு.

னிடமாய்நின்று முதல்வனே ஏன்று கொள்வனுகலின், அவருக்கு அவ்வாதனே தாக்குமாறு இல்லே யென்பதூஉம் பெறப்பட்ட மையின், அவாய்நிலேயை நிரப்பியவாறு மறிக. அத்துவித மாதல் இவ்வியல்பிற்றென்பது பொதுவதிகாரத் திறுதியில் விளங்கக் காட்டினும்; கடைபிடித்துக்கொள்க.

இவ்வாறன்றிக் காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் காணு வுள்ளத்தைக்கண்டு காட்டல் என்பதற்குக் காட்டிவரு முபகார முணர்த்துதலே கருத்தென் றுரைப்பாரு முளர்; அது, *"விளம் பிய வுள்ளத்து' என்னுஞ் சூத்திரத்துத் திரோதானசத்திய திலக்கணங் கூறுமுகத்தாற் கூறிப் போந்தமையின், அதுவே ஈண்டுக் கூறிற்றெனிற் கூறியதுகூறலாய் முடியுமாகலானும், கண்ணழித் துரைப்புழி 'அவனும் அவற்றது விடயத்தை யுணரும்' எனக் காணு முபகார மாத்திரையே எடுத்துக்கொண் டுரைத்த ஆசிரியருக்கு அது கருத்தன் றென்பது தெற்றென விளங்குதலானும் காணு முபகாரங் காட்டு முபகாரத்தின் பின் னர்த்தாய் நிகழுமென்பது உணர்ந்துகோடற் பொருட்டு அது வும் உடன்கூறப்பட்டதன்றி அதனுன் ஈண்டைக்காவதோர் பயன் வேறின்மையானும் அவர் உரைப்பன வெல்லாம் போலி யென் றொழிக. அற்றேல், வடமொழிப் பதிஞெராஞ் சூத்திரத் திற் "காட்டுவான்" என்பது மாத்திரையே அன்றிக் "காண் பான்" என்பதும் உடன்கூறிற் றில்லையாலெனின்,—அறியாது கூறினுய்; ஆண்டுக் "காட்டுவானும்" என்ற உம்மை "காண் பானும்" என எதிரதுதழீஇ நிற்றலிற் கூறுமை யாண்டைய தென்க. அவ்வும்மைக்கு அப்பொருள் காணமாட்டாதார் பாடம் வேறுகக்கொண் டோதுப.

இதனுள், காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் காணு வுள்ளத்தைக் காட்டிக் காண்டல் என்பது ஒரதிகரணம்; அதனை அயரா வன்பி னரன்கழல் செலுமே என்பது ஒரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

---

* இந்நூல், கூ-ம் சூத்திரம்.

## முதலதிகரணம்

அவற்றுள், ஈசுரவவிகாரவாதி முதலியோரை மறுத்து ஆன்மா ஒன்றனே விடயிக்குங்கால் முதல்வன் செய்யும் உபகாரங் கூறுமுகத்தானே அத்துவிதநிலே உணர்த்துதற் கெழுந்தது முதலதிகரணம்:—

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது

எனவரும்.

அவன் - முதல்வன். அவற்றது - ஆன்மாக்களது. ஆருவது அறிதற் கிழமைக்கண் வந்தது *"அன்னபிறவும்" என்றதனைக் கொள்க. உம்மை ஆன்மா உணர்தலே யன்றி முதல்வனும் அதனை யுணருமென இறந்தது தழீஇற்று. விடயம் பெத்தத்திற் பிரபஞ்சமும், முத்தியிற் சிவமுமாம். ஆகவே, முதல்வன் தன்னை யறிதலும் ஆன்மாவின் பொருட்டு ஆன்மாவிற்றங்கி நின்று றறியு மென்பதாயிற்று.

அற்றேல், கண் சடமாகலானும், காண்டற்பயன் ஆன்மாவுக்கே யாகலானுங் கண் காண்புழி ஆன்மாவும் உடனின்று காண்டல் பெறுதும்; கண்போல் ஆன்மாச் சடமன்மையானும், அறிதற்பயன் ஆன்மாவுக்கே யன்றி முதல்வனுக்கின்மையானும், முதல்வனும் அவற்றது விடயத்தை உடனின்றறியு மென்றற்குப் பிரமாணமின்மை லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:—

இவ்வான்மாக்கள் அவனையின்றி யமைந் தொன்றையும் விடயியா வாகலான்

எனவரும்.

கண்ணொளிக்கு விளக்கொளி தன்னோடுங் கலந்து தன்னொடு கூட உருவத்தினுங் கலந்தாலன்றி அவ்வுருவத்தைக் காணும் முறைமை யின்மையின், அதுபோல அறிவித்தாலன்றி அறியுமியல்பில்லாத ஆன்மாக்களும் முதல்வனதுணர்வு தம்மொடு விரவிநின்று தம்மொடு கூடச்சென்று விடயத்தும் விரவி நின்றால் அறிவு விளங்கி அவ்விடயத்தை அறியுமியல்பினவன்றித் தனித்தமையவும்மாட்டா; தனித்தொன்றை விடயிக்கவும்மாட்டா. ஆகலான், அறிவுவிளங்குதன் மாத்திரைக்கே யன்றி விடயத்திற் சென்று பற்றுதற் கண்ணும் முதல்வன் உடனிற்றல் பெறப்படுதலான் ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணரும் என மேற்கொண்டது என்றவாறு.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், ககூ.

அமைந்து விடாவிடா என்பது "உரத்துக் கரியாது" என்றுற் போல வேறுவினையாய் நின்றமையின், இன்றி என்பது ஈரிடத்துங் கூட்டி யுரைக்கப்பட்டது. அவனியின்றி யமையாமையிற் காட்டு முபகாரம் விளங்கினுற்போல அவனையின்றி ஒன்றையும் விடயித்த லின்மையாற் காணுமுபகார மினிது விளங்கு மென்பார், அவனையின்றி யமைந் தொன்றையும் விடாவிடா என்றார். உம்மை முற்றும்மை. விடாவிடா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. இவ்வேதுப் பொருளையே எடுத்துக்கொண்டு வழிநூலாசிரியர் :—

* "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் ருனுஞ்—செவ்விதினி லுளம் புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப—னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்ரு விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ னின்றிடுவ னுத லாரு மரனடியை யகன்று நிற்ப தெங்கே யாமே" என விரித்தோதியவாறு பற்றி யுணர்ந்து கொள்க.

இதனுள், எவ்விடத்தும் என்றது பெத்தம் முத்தி இரண்டினும் என்றவாறு. அரனடியை யகன்று நிற்பது சென்றது அரனடியை விட்டுத் தனித்து நின்றறிவது எங்கே? ஓரிடத்து மில்லை என்றவாறு. இறையடியை யின்றி அறிந்தொன்றை இயற்றியிடா வுயிர்கள் எனவும், ஈசன்ரு னெங்குமாய்ச் செறிந்து நிற்ப னெனவுங் கூறியது விடயத்தின்கட்படும் நிகழ்ச்சிக்கு எனவும், இவ்வுயிர்கள் தோற்றும்போ தவனையின்றித் தோற்ரு எனவும், அவ்வுயிர்போ னின்றிடுவன் எனவுங் கூறியது ஆன்மாவின்கட் படும் நிகழ்ச்சிக்கு எனவுங் கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற் கூறுதல் புனருத்தியாய் முடியு மென்றெழுதிக. விளக்கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படு மென்பது, † "விளக்கொளி கலந்தவற்றை" எனவும், † "விளக்கின்சோதி கலந்திடும்" எனவும் புடைநூலாசிரியர் வகுத்தோதிய வாற்ருலும் அறிக.

அற்றேல், அஃதங்ஙனமாக; பரமுத்தியில் ஆன்மாவுக்கு விடயமாவதொன் றின்மையின், எவ்விடத்தும் அவற்றது விடயத்தை முதல்வ னுணருமென்றல் செல்லாதா லெனின்,—அறியாது கூறினுய்; ‡ "சுத்தவது போகத்தைத் துய்த்தலுணு" எனவும், § "ஒன்றினின் றுணரு முண்மை" எனவும், பிறண்டும்

* சிவஞானசித்தி, சக-ம் சூ. எ. † சிவப்பிரகாசம், உண்மை, அ.
‡ உண்மை விளக்கம், கூ. § சிவப்பிரகாசம், உண்மை, க-எ.

இவ்வாறே யோதுதலின் ஆன்மாப் பரமுத்தியிற் சிவாநந்தாநு பூதியை விடயித்த லுண்மையான், அதுவும் முதல்வனையின்றி யமையாமையின், முதல்வனும் அவ்வநுபூதியை அவ்வான்மாவிற் றங்கிநின் றுணர்தலுண்மையின். இக்கருத்தே பற்றியன்றே சில ஆகமங்களில் முதல்வனுந் தன் ஆநந்தத்தைத் தானநுப விப்ப னென்று ஓதியதூஉ மென்க. ஆண்டு அநுபவிப்பன் என்பதற்குத் தாற்பரியம் அறிவன் என்பதேயாம்.

அக்கருத்தறியாத சிவாத்துவித சைவர் முதலியோர் முதல்வனுந் தன்னாநந்தத்தை அநுபவிப்ப னெனக் கூறுப. அழுந்தி யறிதலே அநுபவித்தல் என்னுஞ் சொற்குப் பொரு ளாகலின், அவ்வியல்பு ஆன்மாவுக்கே யன்றி முதல்வனுக்கில்லை யென மேற் காட்டிப் போந்தமையானும், ஆநந்தரூபமே முதல்வ ஞகலிற் றானே தன்னைப் புதிதாக அநுபவித்தல் வேண்டாமை யானும், முதல்வன் செய்யுஞ் செயலெல்லாந் தன்பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டேயா மென்பது மேற்கூறிப்போந்தமை யானும் அவர் மதம் போலியென் றொழிக.

அற்றேல், முதல்வன் காட்டுதன் மாத்திரையா னமையு மாயினன்றே *'காந்தங் கண்ட பசாசத் தவையே' என்றவாறே விகாரமெய்தாமை பெறுதும், அவ்வளவினன்றி ஆன்மாக்களுட னின்று அவற்றை டொப்பக் காண்டலுஞ் செய்யுமாயின், ஆன்மாக்கள் போலக் † கட்டுற்று விகாரியாவான் சேறல் ஒருதலையாமா லென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத் துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றென்றுப் பார்க்கு முணர்ந்து

எனவரும்.

ஆன்மாச் ‡ "சுவையொளி யூறோசை நாற்றம்" என்னும் ஐவகை விடயங்களை யுணரும் உணர்ச்சிக்கண்ணே தன் னியல்பு இது என வேறு காணப்படுமாறின்றி அவ்வவ்விடயங்க ளேபோல அதுவதுவாய்ச் செறிந்துநின் றறியும் இயல்பிற் றுக லான், அவ்வைந்து மொருங்கே அறியமாட்டாது ஒரோவொன் றுக அறிந்து அநுபவிப்பது ஆன்மாவேயாம். அது போலச் சத சத்தாய்ப் பல தன்மைப்படும் இயல்பின்றி என்றும் ஒருபெற்

* இந்நூல், ங-ம் சூத்திரம். † கட்டுற்று - பந்தமுற்று.
‡ திருக்குறள், க-ம் அதி. நீத்தார் பெருமை, எ.

றித்தாகிய பரம்பொருள் எல்லா வான்மாக்களுடைய விடயங் களையும் ஏகமாய் ஒருங்கே பொதுவகையான் அறிந்து அவ்வான் மாக்களுட னின்று சிறப்புவகையான் அறியும்; ஆகலான் உட னின்றறிதலே பற்றி ஆன்மாப் போலப் பரம்பொருள் விகாரியா வான் சேறலின்றென்பது.

ஆகலான் உடனின்றறிதலேபற்றி ஆன்மாப் போலப் பரம் பொருள் விகாரியாவான் சேற லின்றென்பது குறிப்பெச்சம்.

இது சொற்பொருட் பின்வருநிலை உணராது உணர்வது என இயையும். அவற்றுணர்வு எனச் * "சாரியை யுள்வழித் தன் னுருபு நிலையாது" வந்தது இலேசாற் கொள்க. உணர்வு என் றது தொழிற்பெயர் மாத்திரையாய் நின்றது; † "உறங்குவது போலும்" என்றாற்போல. ‡ வினைசெய்யிடத்தில்வரும் ஏழா வது விரித்துரைக்க.

அற்றேல், ஈண்டுக் கூறிய முறைமைபற்றி ஆன்மாக்களுக்கு விடயமாவ தொன்றேயே முதல்வன் சவிகற்பமாய் உணர்வ னன்றி ஏனையவற்றை அவ்வாறுணர்வா னல்லனெனின், மேல் இறைபணி யதிகரணத்தில், § 'முற்செய்வினை யுந்தருவான் முன்' என்றது சாலாதாய் முடியும்; அன்றிச் சீவன்முத்தருக்குப் பிரா ரத்த வினை தாக்காது உடலொழா யொழியுமெனவும், ஒரோவழித் தாக்கினும் வாதனையாய் நொய்தின் வந்து தாக்குதன்மாத்திரை யேயா மெனவுங் கூறுதலின், அது தருவான்முன்னுதற் கோரியைபில்லையா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியு றுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

ஏகமாய் நின்றே யினையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினை—னேகமா
யுள்ளத்தின் கண்ணுனை னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று

எனவரும்.

முதல்வன் றிருவடிகளில் நானென ஒன்றில்லென்றுதானே யென ஏகமாகி நின்றுகொண்டே பிராரத்தவினைக் கீடாக வரும் விடயத்தை உணர்வாராயின் அதுதான் அச் சீவன்முத்தர்க்கு வினைப்பயனுதலின்றிச் சிவபோகமாய் விளைகின்ற பொலிவானே அவ்வாறு உணர்வாரா லுணரப்படும் விடயத்தை அவ்வுணர்வி

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, கடி. இதில்மெய் பெற என்றது இலேசு. † திருக்குறள், நடீ ம் அதி. நிலையாமை. கூ. ‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், உ0. § இந்நூல், க0-ம் சூ. உ-ம் அதி. க.

னிடத்தாற் பொருந்தி அறிந்து தனக்காக்கிக்கொள்ளான் கொல்லோ? பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் அவ் வறிவின்கண் நீங்காது உடனின்று உணர்த்தியும் உணர்ந்தும் வரும் அம்முதல்வன் என்க.

ஏகமாய் உள்ளத்தின் கண்ணுள் உள்குவா ருள்கிற்றை உள்ளத் தான் உற்றுக் காணுமே என்னும் இசையெச்சத்தால் அவ்வா றுரைக்கப்பட்டது. நில்லாதுணர்தலைப் பிரித்தமையின், ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இணையடிகள் என்புழிக் கண்ணுருபு தொக்கது; *"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்—மெய் யுருபு தொகாஅ விறுதி யான" என்ப வாகலின் உணர என்னுஞ் செயவெனெச்சம் "மழைபெய்யக் குளநிறையும்" என்புழிப் போலக் காரணப் பொருட்டாய் நின்றது. தெளிவுபற்றி விளைந்த என இறந்தகாலத்தாற் கூறினார். விளைந்த பொற்பின் என்றமை யிற் போகஞ் சிவபோகமாதல் பெற்றாம். †"செயற்கைப் பொருளே யாக்க மொடு கூறல்" ‡"ஆக்கந் தானே காரண முதற்றே" என்ப வாகலின், ஆக்கமுங் காரணமு மடித்து வந் தன. ஆணவம்-நீங்காமை. ஏகாரம்-எதிர்மறை.

இஃது இவ்வதிகரணப் பொருள்பற்றி §"முற்செய்வினை யுந் தருவான் முன்" என மேற் கூறிப்போந்ததன்கண் ஆசங்கை நிக ழாமைப் பொருட்டு அதனை வலியுறுத்துதற்கெழுந்ததென்பது.

இணையடிகளில் ஏகமாய் நின்று $"கண்டதோர் பொருளை யந்தக் கருத்தினுற் காண்" பார்க்கு அது சிவபோகமாய் விளையுமென்பது ¶"பெற்றசிற் றின்பமே பேரின்பமாய்" எனவும், **"உடம்புடைய யோகிகடா முற்றசிற்றின்ப—மடங் கத்தம் பேரின்பத் தாக்கில்" எனவும், ††"காணுங்—கரணங்க ளெல்லாம் பேரின்பமெனப்—பேணு மடியார்" எனவும் பிறண் டும் இவ்வாறே ஓதியவாற்று ணர்க.

இனி, இவ்வெண்பாவிற்கு ஒன்றெனப்படும் ஆன்மா ஏகமாய் நின்று இணையடிகளை உணரவே போகமாய் விளைந்த பொற்பை யுடையான் அதுவேயு மன்றி ஆன்மாவுக்குக் கண் ணெனப்படும் அறிவு மாயினு ஆகலான் அம்முதல்வன் உள்குவா ருள்கிற்றை யுள்ளத்தாற் காணுமே என்றுரைப்பாரு

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல், உஉ. † தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம், உ0. ‡ தொல்காப் பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம், உக. §இந்நூல், க0ம் சூ. உ-ம் அதி. க. $ சிவப்பிரகாசம், உண்மை, ஈசு. ¶ திருவுந்தியார் கூக. ** திருக்களிற்றுப்படியார், எசு. †† திருவாசகம், பண்டாய நான் மறை, சு.

முளர். அஃது அதிகரணத் தெடுத்துக்கொண்ட பொருளோ டியையாது வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமென்பது உணர்ந்து கொள்க.

இவ்வதிகரணத்தாற் போந்த பொருள், *"அவையே தானே யாய்' என முதல்வன் தூல வைந்தொழில் செய்யுமா றுணர்த்து முகத்தானும், †'தாந்த முணர்வின் றமியருள்' என அதிசூக்கும வைந்தொழில் செய்யுமா றுணர்த்துமுகத்தானும் பொதுவகை யாற் பெறப்பட்ட அத்துவித நிலையை அவ்வதிசூக்கும வைந்தொழிற்கட் படும் விசேடத்தின்மேலிட்டுச் சிறப்புவகை யாற் பெறுவிக்கு முகத்தானே பெத்தம் முத்தி இரண்டினும் ஆன்மாக்களுக்கு வரும் பயனை முதல்வனே உடனுய் நின்று ஏன்று கொண்டு அவரவர் செய்யுஞ் செய்திக்குத்தக்க பயன் விளைத்து நிற்பனென்பது விளக்கிய வாறுமென்க. இஃது ஆசிரியர்தாமே வருகின்ற அதிகரணத்தில் விளக்குகின்றவாறு பற்றியும் உணர்ந்து கொள்க.

பெத்தர்க்கு வரும் பயனும் உடனுய் நின்று ஏன்று கொள்ளும் முதல்வனெனவே, உடல்பொருளாவி முழுவதும் அவனுடைமை யெனக்கொண்டு தானஞ்செய் தொழித்துப் ‡"பரமே பார்த்திருப்ப" ரன்றிப் ‡"பதார்த்தங்கள் பாரா" ராகிய சீவன்முத்த ருடம்புகொண்ட விந்நப்பயன் ஒருவாற்று னும் அவர்க்குத் தமதாதல் செல்லாமையின், எவ்வாற்றானும் முதல்வனதேயா மென்பது கூறுமே விளங்குமென மேற் பெறப்படாது எஞ்சுகின்ற பிராரத்த வினைத்தொடர்பு அவர்க் கின்றுமாறு கைமுதிக நியாயத்தால் விளக்கியதூஉமாயிற்று. பெத்தர்க்கு வரும் வினைப்பயனும் முதல்வனே உடனுய் நின்று ஏன்றுகொள்வனுகலானன்றே, §"யாதொரு தெய்வங்கொண்டு ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாகனுர்தாம் வருவர்" எனவும் $"அங்குநாஞ் செய்யுஞ்செய்திக் காணைவைப் பால ளிப்பன்" எனவும் ¶"அறிவா யறிகின்றன் றனே" எனவும் இவ்வாறோதியதூஉம், உலகத்து ளொன்றனை ஈவாரும் ஏற்பாருஞ் சிவார்ப்பண மெனக் கருதாதவழிக் குற்றமென்று ஆகமங்கள் கூறியதூஉ மென்க.

முதலதிகரணம் முடிந்தது

---

* இந்நூல், உ-ம் சூ. † இந்நூல், கு-ம் சூ.

‡ சிவஞானசித்தி, கக-ம் சூ. உ. § சிவஞானசித்தி, உ-ம் சூ. உகு.

$ சிவஞானசித்தி, உ-ம் சூ. உசு. ¶ பதினெராந்திருமுறை, காரைக் காலம்மையார் அற்புதத்திருவந்தாதி, உ0.

## இரண்டாமதிகரணம்

முதலதிகரணத்தின் ஏனைச்சமயத்தாரை யெல்லாம் மறுத்துச் சித்தாந்த முத்தியை நிலைபெறுத்துஞ் சுத்தாத்துவித நிலைமை உணர்த்தியவழி, அதனை லதனைப் பெறுமாறு யாங்ஙன மென்னும் அவாய்நிலையை நிரப்பி, ஆன்மலாப மிரண்டனுள் எஞ்சிநின்ற சிவப்பேறு கூறுமாறு உணர்த்துதற் கெழுந்தது இரண்டாமதிகரணம் :—

இனிப் பத்தியினன் மறவா தேத்த அவனது சீபாதத்தை யணையு மென்றது

எனவரும்.

இதன்பொருள் சூத்திரத்தி லுரைத்தவாறுபற்றிக் கண்டு கொள்க.

அறிவிச்சை செயல்கள் மூன்றும் ஒருங்கே உடனுய் நிகழு மியல்பின்கண் எவ்வா றுரைப்பினும் அமையு மாயினும், முதற்க ணிகழும் முறைமையே ஈண்டு எடுத்துக் கோடலின், அதற்கேற்பச் சூத்திரத்து ளுரைத்தவாறே ஈண்டும் மறவாது பத்தியினு லேத்த என்றுரைத்தலே கருத்தாகக் கொள்க. ஏந்துநல் - ஈண்டு அருள்வழிநிற்றன் மேற்று. அன்பு பத்தி காதல் என்பன இச்சை மீதூர்தற்பொருள வாகலின், அது பரமுத்தியினும் உண்டென்ப துணராதார் பத்தியாவது சீவன் முத்திநிலைக்கே செய்யப்படு மொரு சாதகம் போலுமென மயங்கிக்கொண்டு தமக்கு வேண்டியவாறே உரைப்பர். பர முத்தி நிலைக்கண் இச்சை நிகழாதவழிச் சிவபோக மநுபவ மாதல் செல்லாமையானும், சீவன்முத்தி நிலைக்கே கூறுவ தொன்றுயிற் *'செம்மலர் நோன்றுள்' என்னுஞ் சூத்திரத் தொருங்குவைத் தோதவே அமையு மாகலிற் சூத்திரம் வேறு செய்யவேண்டாமையின், அஃது ஆசிரியர் கருத்தன்மையானும் அது பொருந்தாமை அறிக.

அற்றேல், ஒருபொருளை அறிந்தமாத்திரையே அதன்கண் இச்சை நிகழுமாறுபோல இச்சை நிகழ்ந்தமாத்திரையே அதனைப் பெறுதலுங் கூடுமென்பது உலகத்தின்மையால் ஈண்டுப் பத்திமாத்திரையாற் சீபாதத்தை அணையப்பெறுமாறு யாங்ஙனமென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித் தற்குக் கண்டு காட்டலின் என மேலை யதிகரணத்திற் கூறிப் போந்ததன் தாற்பரியம் விளக்குவா னெழுந்த ஏது :—

* இந்நூல், கஉ-ம் சூத்திரம்.

அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்

எனவரும்.

அம்முதல்வன் உலகத்தார் போலன்றிப் பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடனின்றுகொண்டு யார் யார் யாது செய்கின்ற ரென்று அறிந்து அவரவர்க்கு அவ்வச் செய்திக்குத் தக்க பயனை அவ்வப் பொழுதே விளைவிப்ப ஞகலான் இனிப் பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தையனையும் என மேற்கொண்டது என்றவாறு.

அற்றேல், முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினுந் திரி பின்றி ஒருபெற்றித்தாகிய அத்துவிதமாய் நின்று உபகரிப்ப ஞயின் யாதானு மொருவாற்றுற் பசு பாசம் போலப் பெத்த நிலையினும் முதல்வன் புலனுதல் வேண்டுமாலென்னும் ஆசங் கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துமுகத்தானே அயர்மை எனப்படும் அறிவு விளங்கும் முறைமை உணர்த்துதற் கெடுத் துக்காட்டும் உதாரணம் :—

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணுர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணுற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்

எனவரும்.

படல விசேடத்தான் ஒளி மழுங்கிய கண்ணிடத்தும் அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும் வேற்றுமை யின்றி ஆதித்தன் சமமாய் நின்ருலும் அவ்வாதித்தன் ஒளி மழுங்கிக் காட்சியில்லாத கண்ணுக்கு மாலையிருட்டாய்த் தோன்றுவ னன்றி ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறுபோல விளங்கித்தோன்ருன் ; அதுபோல, முதல்வன் பெத்தர்மாட்டும் முத்தர்மாட்டும் அத்துவிதமாய் ஒப்ப நின்ருலும் பாசத்தாஞ கிய ஏகதேச வறிவுடைய பெத்தர்க்குப் பாசஞானமேயாய்த் தோன்றுவன். அப்பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் தனது திருவருட்பார்வையாற் பத்திசெய்து தன்னை அறிதற்குரிய பக்குவ முடையராயினர்க்குப் பாசத்தாஞகிய அவ்வேகதேசவறிவை மாற்றிப் பூரணவறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன் ; தனது கிரணந் தீண்டிப் பக்குவ மெய்திய தாமரைமலருக்கு முன்னுளதாகிய கூம்புதலை மாற்றி ஆயிர மிதழும் அலரச் செய்யும். ஆயிரங்கதிர்ப் பரிதி போல என்க

பொருள்விஞையை உவமையினும் உவமவிஞையைப் பொருளினுங் கூட்டி உரைக்க. ஏகாரம் பிரிநிலை; தேற்றமெனினு மமையும். அல்லுங் காணுரும் பாசமும் பகலும் ஆகுபெயர். தன் னுணர்ந்தார் எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். நோன்றுவன் என்பது சொல்லெச்சம்.

இதனுனே முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் ஒப்ப நிற்பினும் ஒப்பவிளங்காமை உவமைமேல்வைத் துணர்த்து முகத்தானே ஆன்மாவுக்கு முத்திநிலையின் அறிவு நிகழுமாறும், அது முதல்வன தறிவாகிய அருட்கண்ணையின்றி யமையாமை யுங் கூறப்பட்டன.

இனி, இவ்வாறு பக்குவப்படுத்திப் பாசத்தை நீக்கி அறிவை அலர்த்துவதாகிய அருட்கண் புதுவதாய் ஒருகாலத் தின் நிகழ்ந்தொழிவ தன்றென அதனது உபகார மூணர்த்து முகத்தானே அன்|| எனப்படும் இச்சை விளங்கும் முறைமை கூறுதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

மன்னு மிருளே மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் ருன்

எனவரும்.

கண்ணின்கண் நிலைபெற்றுளதாகிய இருளைப் பிறைமதி உடனுய் நின்று முறைமுறையா னுந்தித் தள்ளியவாறுபோல, ஆன்மாவைத் தன் திருவடிக்கட் சேர்த்துக்கோடற் குளதாகிய இச்சைமிகுதியான் அவ்வான்மாவின்கண் அநாதிமுதல் அத்து விதமாய் நிலைபெறும் முதல்வன்ருனே அவ்வான்மாவின்கண் நிலைபெற்ற ஆணவமலத்தை உந்தித் தள்ளிக், காந்தக்கல் இரும் பைத் தன்கண் ஈர்த்துக்கொண்டு தன்வசமாய்ப் பற்றச் செய்தல் போலத் தன் திருவடிக்கட் சேர்த்துத் தன்வசமாய்ப் பற்றிக் கொண்டு நிற்கும்படி பண்ணுதல் அவனுக்கு ஒரு ஞான்றுஞ் சலித்தொழித லில்லை. அவ்வாறு சலியாது செய்யுமாயினும் அதனல் விகாரியாவா னல்லன்; எல்லாத் தொழிலுந் தனது சந்நிதிக்கட் சத்திசங்கற்ப மாத்திரையாய்ப் பரமின்றி விளை யாட்டுப் போலச் செய்யும் அம்முதல்வன் என்க.

மதி என்றது ஈண்டுப் பூர்வ பக்கத்துச் சந்திரனை. *"அந்த வருளுனக்கிங் காதார மாயல்லி—லிந்து வெனவெறித் திட்டு"

* துகளறுபோதம், கூ.க.

என்பது மது. ஏகாரம் மலத்தைத் துரத்துதற்குக் காரணம் அவ்வன்பெனப்படும் இச்சையே யன்றிப் பிறிதில்லை யென்ப துணர்த்தி நிற்றலிற் பிரிநிலை வான் பான் பாக்கு என்பன தொழிற்பெயர் விகுதியுமா மென்பது *"கரப்பாக் கறிந்து" என்பதனு னுணர்க. உவம வுருபு விரித்துரைக்க. செய்வானது சலிப்பின்மை செய்கைமே லேற்றப்பட்டது. சலிப்பில் என்பது பற்றி அங்ஙனம் நிகழ்வதாகிய ஆசங்கையை நீக்குதற்கு விகாரியலன் என்பதும் உடனேதினர். தான் என்னு மெழுவாய் இசையெச்ச மாகலின், அவ்வா றுரைக்கப்பட்டது. வசமாதல் - பற்றிவிடாமை.

இதனுனே முத்திநிலையின் ஆன்மாவினது அன்பு நிகழு மாறும், அது முதல்வனது அன்பை யின்றி யமையாமையுங் கூறப்பட்டன.

இனி, அவ்வா று வசமாதற்கட் படும் ஆசங்கையை நீக்கு முகத்தானே சேறல் எனப்படும் ஆன்மாவினது கிரியை நிகழும் முறைமை யுணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம் :—

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்

எனவரும்.

மேலை வெண்பாக்க ளிரண்டினுங் கூறியவாறே பூரணவறிவு விளங்கி ஆன்மா முதல்வன் வசமாய் ஒன்றுபட்டுக் கூடுங்காற் பண்டை ஏகதேசவறிவு கெட்டுக் கூடுமோ? கெடாது கூடுமோ? எனக் கடாயினர்க்குக் கெட்டுக் கூடுமெனின், குணங்கெடவே குணியுங் கெடுதலாற் கூடமாட்டாது. கெடாது கூடுமெனின், ஏகதேசவறிவு கெடாதவழி வியாபகப் பொருள் விளங்குத லின்மையாற் கூடுமாறில்லை. மற்றெங்ஙனங் கூடுமாறெனின், ஏகதேச வறிவைச் செய்யும் ஆணவங் கன்மம் மாயை என்னும் மலங்கண்மாத்திரையே கெட்டொழிய ஆன்மாத் தண்ணீரைச் சேர்ந்த உப்புப் போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு முதல்வனுக்குச் சேடமாம்; முதல்வன் திருவடி அவ்வான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி இயைந்துநிற்கு மாகலா னென்க.

ஒன்றுது என்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. நசித்தணைந்து என்பது காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினை

* திருக்குறள், ககஉ-ம் அதி. காதற்சிறப்புரைத்தல், எ.

கோடலிற் செயவெனைச்சத் திரிபாதலறிக. * "சிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரின் ரூஞ்சிறிது—மற்றதனி னிற்கினருண் மன்ஞதாம்" எனப் புடைநூலாசிரியர் விளையது மது.

தன்கண்ணதாகிய கடினகுணம் நீங்கி அப்பிணைச் சேர்ந் தொன்றுகிய உப்பு, ஆன்மா மலம் நசித்து முதல்வணைச் சேர்ந்து ஒன்றுபடுதன்மாத்திரைக்கு உவமையாயிற்று.

யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக் கெனச் சுதந்தரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடமெனப்படு மாகலின், அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யாஞைக் கப்பின்றி யியைந்துநிற்கு மீசன்கழலிலே அறிந்து இச்சித் தநுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டு உரிமையெய்திய ஆன்மா முதல்வனுக்குச் சேடமாகியவா றுணர்க. † 'அவையுடைமை யாளாநா மங்கு' என ஒதுதலின் ஏனைப் பசுபாசங்களும் முதல்வனுக்குச் சேடமேயாமாயினும் அவை பொதுவியல்பு பற்றிய சேடமாவதல்லது சிறப்பியல்பு பற்றிய சேடமாகாமையின், இதனை வேறெடுத் தோதினர்.

இதனானே முத்திநிலையின் ஆன்மாவினது கிரியை நிகழு மாறும், அது முதல்வனது கிரியையை யின்றியமையாமையுங் கூறப்பட்டன.

நித்தமாகிய மலத்திற்கு நாசமாமாறும், அது நசித்தவழி ஏகதேசமாய் விளங்கிய அறிவே பூரணமாய் விளங்கி வியாபகத் தைத் தலைப்படுமாறும் உவமையின்மேல்வைத்து இனிது விளக்கி மேலதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

பொன்வாண்முன் கோண்முவிற் புக்கோடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து

எனவரும்.

ஆதித்தன் முன்பு முகிற்படலத்துண் மறைந்து தனது ஒளி ‡ சங்கோசமாய்ச் சிறிதே விளங்கிப் பின்பு அம் முகிற் படலத்தை வாயுத் துரப்ப அதனுன் அது சத்தி மடங்கி விட்டு நீங்கியவழி அவ்வொளி தானே எங்கணும் § விகாசமுமாய் விளங்கும் முறைமைபோல ஆன்மாவும் முன்பு மலத்தின் மறைப் புண்டு தன்னறிவு ஏகதேசமாய்ச் சிறிதே விளங்கிப் பிரபஞ்ச

---

* வினவெண்பா, சூ. † இந்நூல் உ-ம் சூ. ச-ம் அதி. க.
‡ சங்கோசம்-சுருக்கம். § விகாசம்-விரிவு.

விடயத்தை அறிந்து அதில் அழுந்தும். பின்பு முதல்வன் திரு வருள் அம்மலசத்தியைக் கெடுத் தடக்கியவழி அவ்வறிவே பூர ணமாய் விளங்கிக் கப்பின்றி அம்முதல்வன் திருவடியைத் தலைப் பட்டு அந்த ஞேயத்தில் அழுந்து மென்க.

ஒடுங்கி எனவும் எங்குமாம் எனவும் உவமைக்கோதிய வினை யைப் பொருளினுங் கூட்டி உரைத்துக் கொள்க.

இது விளங்குதன்மாத்திரைக்கு ஏகதேச வுவமை என்பார், உலகையுண்ணும் வரத்துச் செல்லும் என வேற்றுமையும் உடன் கூறினர்.

ஏகாரந் தேற்றம். முள் வாள் என்புழி வாள் - ஆகுபெயர். இரிந்து என்பது செயவெனெச்சத் திரிபு. இரண்டனுருபு விகா ரத்தாற் றொக்கது.

மலம் நசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன் மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற் பெறுதும்.

இரண்டாமதிகரணம் முடிந்தது

பயனேத்தின் இரண்டாம்பாதமாகிய

பதினேராஞ்சூத்திரம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

## பன்னிரண்டாஞ்சூத்திரம்



செம்மலர் நோன்ருள் சேர லோட்டா
வம்மலங் கழீஇ யன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே

எ - து. சூ-ம். எ-னின். அசிந்திதனுய் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமோ றுணர்த்துத னுதலிற்று.

மேற்கூறிப் போந்தவாறே 'அயரா வன்பி னரன் கழ' லணைந்த முத்தர்க்குச் சீவன்முத்திநிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் ஒரோவழிப் புறத்துச் சேறலு முண்மையின் அவை செல்லுமிடம் இவையென்பது உணர்த்து முகத்தானே வாக்கு மனுதீதமாய் அயரா வன்பின் அணைந்து வழிபட நின்ற முதல் வனே வாக்குமனக் கோசரமாம்படி தெளியக்கண்டு வழிபடும் முறைமையை உணர்த்துதல் பயனேத்தின் மூன்றும் பாதமாகிய இப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

'அயரா வன்பி னரன் கழல்' சென்றூர்க்குச் சீவன்முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் மூன்றும் புறத்தே எவ்வாறு வியாபரிக்கு மென்னும் அவாய்நிலையை நிரப்புதலின் அவ்வவாய் நிலைபற்றிய வியைபானே அதிகரண வியைபும், முத்திநிலையைத் தலைப்பட்ட மெய்ஞ்ஞானிகட்கு ஈண்டுச் செய்யக்கடவதொன் றில்லை யெனச் சமயிகள் கூறும் ஆசங்கையை விதிமுகத்தா னுரைத்து மறுத்தலின், அவ்வாசங்கை பற்றிய வியைபானே பாதவியைபும், மேல் முத்திநிலையினியல்பு கூறி ஈண்டுச் சீவன்முத்தி நிலைக்கட்படும் விசேடங் கூறுதல் முறைமையாகலின், அம்முறைமைபற்றிய வியைபானே ஒத்தியைபும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு :—அயரா வன்பினரன்கழ லணைந்த சீவன்முத்தன், செங்கமல மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை அணைதற்கு உடம்படாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினை யுடைய மும்மல வழுக்கை ஞானநீராற் கழுவித், தன்னைப்போல் அயரா வன்பின் அரன்கழ லடைந்த மெய்ஞ்ஞானிகளோடு

கலந்து கூடி, அவ்வாறு கழுவப்பட்டு மலமயக்கு நீங்க அன்பொடு மரீஇ அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வனெனவே கண்டு வழிபட்டு வாழ்வான் என்றவாறு.

சீவன்முத்தன் என்றது ஏற்புழிக்கோடலாற் பெறுதும்.

நோன்ருள் - விரதத்தாகை. நோன்றல் - பொறுத்தல். * "எடுத்துச் சுமப்பானே" என்ருர் புடைநூலாசிரியரும். கழீஇ என்பது குறிப்புருவகம். மாறற நேய மலிந்தவர் என்பது அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇயர் எனப் பொருடந்து சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது.

நேயமலிதல் கூறவே வழிபாடும் பெறப்படும்.

தான் - அசை.

அம்மலங்கழீஇ என்றதனற் சீவன்முத்தர்க்குப் புறத்தே அறிவு வியாபரிக்கு மிடமும், அன்பரொடு மரீஇ என்றதனல் இச்சைவியாபரிக்கு மிடமும், நோழும் என்றதனற் செயல் வியாபரிக்கு மிடமும், பெறப்பட்டமையான் அவாய்நிலை நிரப்பியவாறு கண்டுகொள்க. இம்மூன்றும் பிரிப்பின்றி உடனிகழ்ச்சியாய் ஓரிடத்தொருங்கு நிகழ்வனவாகலின் விடயவேற்றுமையின்மையு முணர்க. நோழும் என்பது செலும் என்பதுபோலப் படர்க்கைவினை முற்ருகலின், இஃது அணைந்தோரது தன்மையென்பது பெற்ரும். அற்ருகலினன்றே இதனைச் சாதகவோத்துள் வையாது ஈண்டு வைத்தாரென்பது.

செல்வப் பெருக்க முடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்பு நோயின்றி வளரச் செய்யும் மருந்துமாமாறு போல, இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்காது சிவாநந்தம் மேன்மேல் வளரச்செய்யுஞ் சாதகமாதலு முண்மையான் அதுபற்றி ஆசிரியர் விரித்துரைத்தலுஞ் செய்தாரென்க.

இதனுள், செம்மலர் நோன்ருள் சேரலொட்டா வம்மலங் கழீஇ என்பது ஓரதிகரணம்; அன்பரொடு மரீஇ என்பது ஓரதிகரணம்; மாறற நேய மலிந்தவர் வேடமு மாலயந் தானு மரனெனத் தொழுமே என்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

---

* திருவருட்பயன், உயிரவைவிளக்கம்; கி.

## முதலதிகரணம்

அவற்றுள், சிவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யக் கடவது இது வென்பது உணர்த்துமுகத்தானே அவரது அறிவு புறம்பே வியாபரித்தலு மூண்மையின், அது வியாபரிக்குங்கால் எங்ஙனம் வியாபரிக்கு மென்னும் அவாய் நிலையை நிரப்புதற் கெழுந்தது முதலதிகரணம் :—

ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக வென்றது

எனவரும்.

கன்மம் அதன் மூலத்தை நோக்கிக் கான்மியம் எனவும் பெயர் பெறும். காமியம் எனப் பாடமோதி, * "இனிச் செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்" என வழிநூலாசிரியர் ஓதுதலின், ஈண்டு மலமாயைகளோடு வைத்துக் களைய நின்றது ஆகாமியவினை மாத்திரையே யாகலான் அதுவே ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட தாகலின் காமியம் என்பது தலைக் குறை என்றுரைப்பாரு முளர்.

அற்றேல், ஏகனாகி யிறைபணி நின்று உண்மை ஞானத்தைத் தலைப்பட்டார்க்கு மலமாயைதன்னொடு வல்வினையு மின்றுய்க் கழிந்தொழிதலின், அவற்றுள் மீளச் செய்யக் கடவதொன் றின்மையான் ஈண்டு அவற்றைக் களைதல் எற்றுக்கென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதிக்குமாறு சூத்திரத்தில் உடம்பொடு புணர்த்தோதியதனைத் தெரித்துணர்த்தி வலியுறுத்துதற் கெழுந்த ஏது :—

அவைதாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்து மாகலான்

எனவரும்.

அம் மூன்று மலங்களும் உண்மைஞானத்தைத் தலைப்பட்டார்மாட்டும் யாதானுமொரு நெறியான் றழைந்து அம் மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய அப் பண்டை விபரீத வுணர்வை மேற்படுத்துவனவா மாகலான் அஃது அவர்க் காகாமையின், ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக என மேற்கொண்டது என்றவாறு.

உணர்த்துதல் - உணர்விற்கேதுவாதல். † "அங்கியமானவை யுணர்த்தி யநங்கியமாய் நிறைந்த வறிவறியா மையினானும்" என் றழியு மது. ஈண்டு அஞ்ஞானம் என்றது விபரீத வுணர்வை.

---

* சிஞானசித்தி அம்- சூ. கo. † சிவப்பிரகாசம் பொது, உசை.

இனி, அவை அஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நழுவு மாறும், அஃது அவர்க் காகாமையுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு

எனவரும்.

புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக் களாய்ப் பொருந்துகின்ற இக்கன்ம மலமும், மண் முதல் மாயா தத்துவ மீறுய்க் காணப்படுகின்ற இம்மாயா மலமும், சுட்டி யறிவதாகிய விபரீத வுணர்வைப்பயக்கும் இவ்வாணவ மலமும் என்னும் மும்மலங்களும் மெய்ஞ்ஞானியாகிய உனக்காகா வாக லான் இவற்றை விடுத்தொழிக என்க.

எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மற்றுண்மை ஞானத்தைத் தலைப்பட்டார்க்கு உடம்புள்ளளவும் பிராரத்த வினை அவ்வுடம்பை யொட்டி நிற்றலான் அஃது அவர்க்கு ஒரோவழி வாதனைவயத்தால் இங்குளிவாங்குங் கலம்போல வந்து தாக்குங்காற் * "பிற்செயா தறுபவிப்பது" இன்றுகலின், அது சார்பாக விருப்பு வெறுப்புக்க ளுளவாம்; அவை உளவாகவே † "பரமே பார்த்திருப்பார்"க்கு நில முதன் மாயா தத்துவ மீறுகிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும். அவை காட்சிப்படவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீத வுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறு இம் மூன்றும் அறிவற்றம் பார்த்து இம் முறையானே வந்து தலைப்படும் என்பார், கன்மம் மாயை ஆணவம் என்று இம் முறையே வைத்து, அவை காட்சிப்புலனுமாறு காட்டுவார் அவ் வக்காரிய நிகழ்ச்சிகளே எடுத்தோதிச் சுட்டிக் கூறினர்.

ஆணவ கன்மங்களைச் சுட்டிக் கூறுதலின், மாயையினும் அவ்வாறு சுட்டு வருவித் துரைத்துக் கொள்க. புண்ணிய பாவம் - ஆகுபெயர். மாயை - முன்னையது தத்துவம். ஈரிடத்தும் ஆக்கச்சொல் வருவித்துரைக்க. கான்மாயை - செயப்படு பொரு ளொடு முடிந்த வினைத்தொகை. காட்டுதல் - உபசாரம்.

இவை சிவபோகப் பெருவாழ்வை இழப்பிப்பன வாகலான் மெய்ஞ் ஞானிக் காகா என்றார். மேன்மேன் முறுகுவனவாகிய

---

* சிவஞானசித்தி, உ-ம் சூ. கக.

† சிவஞானசித்தி, கக-ம் சூ. உ.

இவற்றைத் தோன்றும் பொழுதே துடையாக்கால், * "கனைகுரற் —கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்னும் முறைமைத்தாய் முடியுமென்பதுபற்றி விடு என ஈண்டும் வலியுறுத்தப்பட்டது.

விடுதல் - அவை அம்முறையான் நிகழ்ந்தவழி இவ்வஞ் ஞானம் ஏகதேசக் காட்சியா னுயதெனவும், இவ் வேகதேசக் காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற்றத்தா னுயதெனவும், அத்தோற்றமும் பிராரத்தவினை நுகர்ச்சிக்கட் சென்ற தற் போதத்தா னுயதெனவும் அறிந்து, அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துளடங் கிச் † "சிவாநுபவஞ் சுவாநு பூதிகமாம்"படி ஞானநிலையில் உறைத்து நிற்றல். ‡ "ஒங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து வின்பொடுங்கத்—தூங்குவர்மற் றேதுண்டு சொல்" என்றது மது.

அஃதங்ஙனமாக; ஏதுவின்கண் மும்மலங்களும் அஞ் ஞானத்தை யுணர்த்துமெனக் கூறி, ஈண்டு ஆணவமாத்திரையே அஞ்ஞானங் காட்டுமென்றல் மலிவாமா லெனின்,—அற்றன்று; அஞ்ஞானங் காட்டுதல் மாயை கன்மங்கட்கு ஆணவமலச் சார்வானுகிய செயற்கை, ஆணவமலத்திற் கஃது இயற்கை என்னும் பொதுச் சிறப்பாமா றுணர்த்துதற்கு ஆண்டுப் பொது வகையாற் கூறிப்போந்ததனை ஈண்டுச் சிறந்தெடுத் தோதினு ராகலான் என்பது.

முதலதிகரணம் முடிந்தது

---

## இரண்டாமதிகரணம்

முதலதிகரணத்திற் கூறியவாறு மும்மலங்களையுங் கனைந் தார்க்கு அதனை நிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவது இதுவென்ப துணர்த்துமுகத்தானே அவர திச்சை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கு மென்னும் அவாய்நிலையை நிரப்புதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்:—

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக வென்றது

எனவரும்.

---

* திருக்குறள், அஅ-ம் அதி. பகைத்திறந்தெரிதல், கூ. † சிவஞான சித்தி, அ-ம் சூ. டூ. ‡ திருவருட்பயன், அணைந்தோர் தன்மை. க.

சிவபத்தராவார் "பத்தியினுன் மறவா தேத்தி" முதல்வ னது சீபாதத்தை அணைந்தோர். இணங்குதல் - நட்புச்செய்தல். சிவபத்தர்களோ டிணங்குக எனவே, ஏனையோர்களோ டிணங்கற்க என்பதூஉம் பெறப்பட்டது.

அற்றேல், உறவும் பகையு மொழித்து *"மகவெனப் பல்லுயி ரணைத்தையும் ஒக்கப் பார்க்குஞ் செல்வக் கடவுட் டொண்டர்"க்கு இவ்வாறு சிலர்மாட்டு விருப்புஞ் சிலர்மாட்டு வெறுப்புஞ் செய்துகொண்டு பகுத்துநிற்றல் சால்பின்மையென் னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த தது :—

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவ ராகலான்

எனவரும்.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துமாறு :—†"தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறு தம் மாயைக டொடங்கின—வாத்த மானு ரயலவர் கூடி—நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்—சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதமினர் பெருகவும்—விரத மேபர மாகவே தியருஞ்—சரத மாகவே சாத்திரங் காட்டினர்—சமய வாதிகடத்த மதங்களே—யமைவதாக வரற்றி மலிந்தனர்" என்றற் றொடக்கத்தா னறிக. மும்மலங்கள் அஞ்ஞானத்தை யுணர்த்துதல் இலக்கு வாய்த்துழி ஏதுவாதன் மாத்திரை யேயாம். இவ்வா றன்றி, வாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை உபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீத வுணர்விற் செலுத்தியே விடுவ ராகலான், ‡சிவபத்தி யில்லாதார் அம்மலங்களினுங் கொடியராகலின், அவரை அவற்றி னும் அஞ்சி விட்டொழிதலே அறிவுடைமைக்குச் சால் பென்பதாம்.

மகவெனப் பல்லுயி ரணைத்தையும் ஒக்கப் பார்த்தலாவது அவைபடுந் துன்பங் கண்டுழி அதற்குப் பரிதன்மாத்திரையே

---

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, எ.

† திருவாசகம், போற்றித்திருவகவல், அடி, சஉ முதல் நிக வரை.

‡"உரைத தளர்ந்துட லார்நடுங் காமுனம்—நரைவி டையுடை யானிட நல்லமே—பரவு மீன்பணி மீன்பணி வாரோடே—விரவு மீன்விர வாரை விடுமினே" என்னுந் தேவாரமும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது' திருநாவுக்கரசு நாயனார்: திருநல்லம், கி.

யாம். * "நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்" என்ற தும் இக்கருத்தே நோக்கி யென்க.

அற்றேல், சிவபத்தி இல்லாதாரோ டிணங்காமை மாத் திரையே அமையும்; சிவபத்தர்களோ டிணங்குதல் எற்றுக் கென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத் துக் காட்டும் உதாரணம் :—

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னலுணரு
மெய்த்தவரை மேவா வினை

எனவரும்.

மும்மலங்களும் நீங்கி முதல்வன் அத்துவிதமாய் நின்று காட்டியுங் கண்டும் உபகரித்துவரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடிக்கும் ஞானக்கண்ணுடைய மெய்த்தவராயி னர் அதனை மறக்குமாறு செய்து ஞானக்கண்ணை இழப்பித்துத் தீநெறிக்கட் கொண்டுசென்று மலங்களானுய பிறவிக்குழியில் வீழ்வித்துத் துயருறுத்தும் அன்பில்லார் கூற்றிலே தொன்று தொட்டுப் பயின்று வந்த சேர்ச்சி அறும்படி, அம்மறவியை மாற்றி ஞானக்கண்ணை விளக்கிப் பிறவிக் குழியினின்றும் எடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தர் கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்குவ தாகிய சிவஞானக்கண்ணுல் அங்ஙனே கடைப்பிடித்து உணரப் பெற்றவரை எல்லா அநர்த்தங்கட்கும் மூலமாய் வரும் பிராரத்த வினை வாதியா என்க.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பிலார் என மேற்சொல்லிய பொருளையே அநுவதித்து விரித்தோதினர், அதன் எதிர்மறைமுகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை உணர்ந்துகோடற் பயனெனக்கி.

மலங்களின் வீழ்க்கும் என்பது குறிப்புருவகம். மலம் ஆகு பெயர். எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின், அது சிறப்பு எனப்பட்டது. சேர்வை - சேர்ச்சி, பத்தரினத்துப் பித்தாய் என மாறுக. பித்துப் போறலிற் பித்து என்றார். அஃது அதனை யுடையார்மே னின்றது. ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாத லின்றி மல நடையாய்ப் போதலிற் பரனுணர்வினு லுணருந் தவ மொன்றே மெய்த்தவம் எனப்பட்டது. வினை - பால்பகா அஃறி ணைப்பெயர்.

---

* திருமந்திரம், திருமூலர்வரலாறு, கஅ.

சிவபத்தர்மாட் டன்புசெய்து மனஞ் சொற் செய்கை களான் அவர் வழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும்; அஃது அங்ஙனம் நிகழவே, உடம்புள்ளளவும் நிற்பனவாய பிராரத்த வினைகள் அவர்க்கு துகர்ச்சியாதல் செல்லாமையின், அவரை வாதிக்க மாட்டா; அவை வாதியா தொழியவே, சிறப்பிலார்தந்திறத் தச்சேர்வை பற்றறக்கழியும் என்பார், அறப் பித்ரப் பந்தரினத் தாய்ப் பரனுணர்வினு னுருமெய்த்தவரை மேவா வினை என்றார். எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோ டிணங்கினு னன்றித் தொன்றுதொட்டுப் பயின்று வந்தசிறப் பிலாரதிணக்கம் அறுதாகலான் அஃதொருதலையான் வேண்டு மென வலியுறுத்தாவா முயிற்று.

இரண்டாமதிகரணம் முடிந்தது

---

## மூன்றுமதிகரணம்

இரண்டாமதிகரணத்திற் கூறியவாறு சிவஞானிகளோ டிணங்கினார்க்கு அதன் பின்னர்ச் செய்யக்கடவது இதுவென்ப துணர்த்துமுகத்தானே அவரது கிரியை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கு மென்னும் அவாய்நிலையை நிரப்புதற் கெழுந்தது மூன்றுமதிகரணம் :—

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக வென்றது

எனவரும்.

காண்டல் - ஐயுறவின்றித் தெளிதல்.

திருவேடத்தி னியல்பு, *“தூயவெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமு—நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்—பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்—மேயசெவ் வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே,” †“சிந்தையிடை யறுவன்புந் திருமேனி தனிலசைவுங்—கந்தமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்—வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற் பொலி திருநீறு—மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய”, †“கண்டகவு ணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்க் காதற்—றொண்டர்திரு வேடநேரே தோன்றியதென்று

---

* பெரியபுராணம், திருநாவுக்கரசுநாயனார் புராணம், கசo.

† பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம், உஎo, உஎக.

தொழுதே" என்பவற்றுனறிக. இத்திருவேடங் காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல, மெய்யுணர் வுடையாரைக் காட்சிமாத்திரையானே வசீகரித்து இன்பஞ் செய்தல் பற்றிக் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் என்று உபசரித்தார். அது, *"சேலுங் கயலுங் திளைக்குங்கண் ணூரிளங் கொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணி மார்பிலங் குமென்று புண்ணியர் போற்றிசைப்ப" என்பதனு ணும் அறிக.

அற்றேல், மெய்யுணர் வுடையார்க்குப் பகுப்பின்றி எங் கணும் பரமேசுரனெனக் காண்டலே பொருத்த முடைமையா ணும், நின்றதிருத்தாண்டக முதலியவற்றுள் அவ்வா றோதுத லானும், திருவுருத்திரத்துட் பகுப்பின்றி உயிர்ப்பொரு ளுயிரில் பொருள்களே யெல்லாந் தனித்தனி எடுத்தோதி வழிபாடு கூறுதலானும், ஈண்டு இவ்விடங்களின்மாத்திரையே **பரமேசு ரனெனக் கண்டு வழிபடுக** எனப் பிரித்துக் கூறியது பொருந்தாதா லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது :—

அவன் மற் றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத் தப்பிரகாசமாய் நிற்றலான்

எனவரும்.

அம்முதல்வன் எங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ் விரண்டிடத்து மாத்திரையே தயிரினெய்போல விளங்கி நிலை பெற்று அல்லுழிப் பாலினெய்போல வெளிப்படாது நிற்றலான், **இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக** என மேற்கொண்டது என்றவாறு.

மற்று அப்பிரகாசமாய் நிற்றல் என இயையும்.

அற்றேல், அஃது யாங்ஙனமென்னு மாசங்கையை நீக்கிப் பிரகாசமாய் நிற்குமாறும் அல்லாதாரிடத்து அப்பிரகாசமாய் நிற்குமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத் துக்காட்டும் உதாரணம்:—

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றும் பதி

எனவரும்.

* சேந்தனர் திருப்பல்லாண்டு, அ.

வாக்கு மனுதீதமாய் நின்ற பரம்பொருள் உலகத்தார் தன்னை அறியும்படி கருணைசெய்து தனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்து அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குத லானும், அவர்தம்மைச் சோகம்பாவனையான் உணரச் செய்த லானும், அவரை ஒரு குறியின்க ணிறுத்தித் தனது வியாபகத் துக் குள்ளாக இருத்துதலானும், குறியிறந்து நின்று தன்னை உள்ளவா றுணரும் அன்பாளராகிய அவர்மாட்டுத் தயிரின்கண் ணதாகிய நெய்போல விளங்கித் தோன்றும்; பாசக்கட்டுடை யார்க்கு இவ்வியல் பில்லாமையான் அவர் மாட்டுப் பாலின்கண் ணதாகிய நெய்போல விளங்காது நிற்கும் என்க.

இன்மை - விளங்காமைப் பொருட்டு. பாசத்தார்க்கு என்பது உருபு மயக்கம். கொடுத்துச் செய்து இருந்தலால் நிகழும் என இயையும். செய்து என்பது சொல்லெச்சம். இருத்தல் - அல் லீற்றுப் பிறவினைத் தொழிற்பெயர். தன்னையரும் நேசத்தார் எனப் பெயரடையானும் ஒரேதுக் கூறப்பட்டது. தன்னை என் னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

அற்றேல், இவ்வியல்புக ளுடைய சங்கம வேடத்தினிடத்து எஞ்ஞான்றும் முதல்வன் பிரகாசமாய் நிற்பனென்பது பெறப் படும். இவ்வியல்புக ளில்லாத *தாவரத்தினிடத்து மந்திர சாந்நித்திய மில்வழிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படாதா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத் துக் காட்டும் உதாரணம்:—

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுரு
தானதுவா யன்றுனன் றுனதுவாய்த் தோன்றுலே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு

எனவரும்.

† விறகிற்றீ, கடைந்துழி வேறுய் விளங்கும்; அல்லுழி விளங்குவதன்று. அதுபோல, உயிர்கட்குப் புத்தி முத்தி அளித்தற்பொருட்டுக் காணப்பட்ட தாவர வுருவின்கட் கலப் பினுல் அதுவேதானுய் அதுவன்றி வேறு பொருளுமா மியல்பு

---

* தாவரம் என்றது சிவலிங்கத்தை.

† இதனை "விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்—மறைய நின் றுளன் மாமணிச் சோதியா—னுறவு கோனட் டுணர்வு கயிற்றினுன்—முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே" என்னுந் தேவாரத்தானு முணர்க. திருநாவுக்கரசு நாயனுர், தனிக்குறுந். கo.

உடையமுதல்வன், அதுவே தானுய்க் காணுர்க்குத் தம்மால் அறியப்பட்டதொரு மந்திர சாந்நித்தியமில்வழி ஆண்டு விளங்காது நின்று அம்மந்திர சாந்நித்தியத்தால் விளங்கித் தோன்றும் பொருளாம். அவ்வாறன்றி அதுவே தானுய்க் காணப்பெறும் உண்மைத்தவமுடையார்க்கு எப்போதும் அப்படியே விளங்கித் தோன்றுன் கொல்லோ? என்க.

காணுதார்க்கு என்பது சொல்லெச்சம். கடைந்துழி அல்லுழி என்பன ஆற்றலாற் பெற்றும். உவமைக் கோதிய வினையைப் பொருட்கண் எதிர்நிரனிறையாக வைத்துக் கண்டுகொள்க. ஈண்டு உண்மை விளங்குதன்மேற்று. மந்நிரத்தானுளதாம் என இயையும். ஆல்—அசை. ஆனல் என்பது பெயர். ஓகாரம் - எதிர்மறை. தானநுவா யன்ருனல் என்னும் பெயரடையான் அவரவர் பாவனைக் கேற்ப விளங்குதற்கு ஏதுக் கூறப்பட்டது. தானநுவா யன்ருதல் சங்கம வேடத்தினுமொக்கு மேனுந் தாவர வுருவின்க ணிகழும் ஆசங்கையை இதனு னன்றி நீக்க லாகா மையின், ஈண்டுக் கூறினுர். இஃது ஈரிடத்து மொக்கு மென் பது வருகின்ற அதிகரணத்திற் பெறப்படும்.

மூன்ருமதிகரணம் முடிந்தது

---

## நான்காமதிகரணம்

மேலை அதிகரணம் மூன்ருனுஞ் சிவன்முத்தர்க்குரிய ஆசார முணர்த்தியவழி, அற்றேல், இவை சிவன்முத்தர்க்குத் தாமே யுளவாவனவாகிய இலக்கண மாகலின், அதுவாத முகத்தா னேகற்பாலன வாகிய இவற்றைக், கூக, இணங்குக, வழிபடுக என்று இங்ஙனம் விதிமுகத்தா னேதிய தெற்றுக் கென்னும் ஆசங்கையை நீக்குதற்கு அவற்ற தொழிபா யெழுந் தது நாலாமதிகரணம்:—

இனி இவ்விடங்களின் வழிபடுக வென்றது

எனவரும்.

இவ்விடங்களாவன:—பத்தரது திருவேடமுஞ் சிவாலயமும் என மேற்கூறிப் போந்தன. வழிபடுக என்னும் இசையெச்சத் தால் அதுவாதமாய்க்கூற வமையுமென்பாரை மறுத்து விதித் தலே வலியுறுத்தவாறு. வழிபடுக என்பது உபலக்கண மாகலின், கூடுதல் இணங்குதல்கட்கும் இஃதொக்கும்.

அற்றேல், எய்தியதனை விதித்தல் பயனுடைத்தன்றுலென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது:—

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும்புருடன்
அவை யாகாவாறு அப்புருடனு மாகலான்

எனவரும்.

நரம்பு நாடி இறைச்சி என்பு முதலிய தாதுக்களின்கண் வேற்றுமை யின்றி அதுவது தானுய் வருகின்ற உயிர், *'நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ' என்று இவ்வாறு †'பைமறி யாப்' பார்ப்பார்க்கு நரம்பு நாடி முதலியவை யாகாது அவற்றின் வேறுமாயினுற் போல, உயிர்க்குயிராகிய அம் முதல்வனுஞ் சடசித்துக்க ளெல்லாவற்றினும் அதுவதுதானுயும் அல்லனுயும் நிற்பனுகலான், அதுவது தானுய் நிற்றலைக் காணும் காட்சி பற்றி எய்திய வழிபாடு அல்லனுய் நிற்றலைக் காணுங்கா லெய்தாமையின், அவ்வழியும் எய்துவிக்க வேண்டுதலான் இனி இவ்விடங்களின் வழிபடுக என விதித்தோதிய தென்றவாறு.

எனவே, எய்தாததனை எய்துவிப்பதூஉம், எய்திய திகந்தபடாமைக் காப்பதூஉம், எய்தியதனை ஒருமருங்கு மறுப்பதூஉமாகிய விதி மூன்றனுள் இஃது எய்திய திகந்தபடாமைக் காத்த தென்றவாருயிற்று. இது விளங்குதற் பொருட்டன்றே ஆசிரியர் இவ்விடங்களில் வழிபடுக என ஈண்டு இடமாக வைத்தோதியதூஉ மென்க. அவை யாகாவாறப்புருடனுமாம் எனவே, அவ்விடத் தெய்துவித்தல் ஒருதலையான் வேண்டுமென்பது தாற்பரியமாயிற்று. சூத்திரத்தில் நொழுமே என்னும் ஏகாரமும் இப்பொருள் குறித்துநின்ற தேற்றம். வாயு உவமவுருபு. முதலானவற்றை என்பது உருபு மயக்கம்.

அற்றேல், முதல்வனுக்கு இவ்வியல்பு எல்லாப் பொருட்கண்ணும் முண்மையின், யாங்கணும் வழிபாடு விதித்தலே பொருத்த முடைத்தென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு

எனவரும்.

---

* இந்நூல், கூ-ம் சூ. க-ம் அதி. க. † நாலடியார், தூய்தன்மை, உ.

முதல்வன் சடசித்துக்கண் மாட்டு நிற்கும் நிலைமை அறியப் பெற்றார்க்குக் கண் அருக்கன் போல அது இது எனப் * பக்கிசைத் தோதப்படுவதாய பேத நிலைமையனு மல்லனுய், உடல் உயிர்போல அதுவே என்றோதப் படுவதாய அபேத நிலைமையனு மல்லனுய்க், குண குணி போல அதுவாகிய இது என்று பக்கிசையாமல் ஒதப்படுவதாய பேதாபேத நிலைமையனு மல்லனுய் அம்மூன்றற்கும் பொதுமையான் அறிவொளிபோலத்துவிதமாய் நிற்குமாற்றுற் சடசித்துக்கண் முழுவதும் அத் தேவனது வடிவேயா மாயினும், அவற்றுள், அன்பு விளையுமிடத்தில் வழிபடுவாயாக; அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடையோய்! என்க.

அதுவிது என்பது முன்னியது உம்மைத் தொகை. பின்னியது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அல்லான் என்பதனே மேலுங் கூட்டி என்றது என்பதனே அது என்பதனேடுங் கூட்டி உரைக்க. அல்லான் என்பது வினையெச்சக் குறிப்பு முற்று. என்றதை என்பது "ஐயீற்றுடைக் குற்றுகரம்." உம்மை இறந்தது தழீஇயிற்று. பொதுவது என்புழி அது பகுதிப் பொருள் விகுதி. ஆதல் - ஆயவாற்று னென்க. தைவம் என்பது தேவன துடைமை என்னும் பொருட்டாய வடமொழிப் பெயர்ப் பகுபதம். ஆயினும் என்பது சொல்லெச்சம். அத்துவிதி- அண்மைவிளி. அன்பு என்றது ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க.

† "திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி"யி னன்றி † "எங்கு—முருக் காணவொண்ணுத பான் முலைப்பால் விம்மியொழுகுவதுபோல் வெளிப்பட் டருளுவ" தாகி அடிப்பட்டு வரும் அன்பு விளையாமையின், ஆண்டுச் செய்யும் வழிபாடே அத்துவிதஞானத்தை நிலைபெறுத்துதற் பயத்த தென்பார், அத்துவித மாத லகண்டமுந் தைவமே என்று அதுவதித்து, அத்துவிதி யன்பிற் றொழு என்றார். அத்துவிதி என்பது பயனுணர நின்ற குறிப்புப் பெயர். இதனுனே விதிக்குப் பயன்கூறியதூஉ மாயிற்று. இனி, அது இது என்பன அருவுருவாகிய திருமேனி எனக்கொண்டு அதற்கியைய உரைப்பாரு முளர். அவர் அன்பின் என்றதனே ஏதுப் பொருட்கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெயராகவைத்து உரைப்ப.

அற்றேல், இவ் வத்துவித ஞானம் அசத்தாயுள்ள வன்ன பேதங்களே அசத்தென்றுகண் டொருவுதலான் உளதாம்

---

* பக்கிசைத்தல் - பிரிந்திசைத்தல்.

† சிவஞானசித்தி, கஉ-ம் சூ. ச.

பயனுகலின், அதன்பொருட்டு வழிபாடு வேறு விதித்தல் மிகையாமா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம் :—

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றுழு எனவரும்.

உடம்பின்கண்ணதாகிய பிராரத்த வாசனை உயிர்க்குத் தாக்குவதா யுள்ளவளவும் அதனுனே வரும் விருப்பு வெறுப்புக்களும், அவைபற்றிக் காட்சிப்படும் மண் முதன் மாயைகளும், அவை பற்றி நிகழும் விபரீத வுணர்வுமாகிய அசத்துக்கள் ஒருவியவழியும் வந்துகூடி மேற்படுவன வாகலான், இவற்றிற் கெல்லாம் மூலமாகிய பிராரத்தவினைவாதனை பற்றறக்கழிந்தா லன்றி அத்துவித ஞானம் மேம்பட்டு நிகழாதாகலின், அது பற்றறக் கழிதற்பொருட்டு அம்மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே அவ்வினைத் தீர்வு நிகழ்ந்து அவ்வுணர்வு மேம்படும். ஆகலான் அன்பானை அவரை வழிபடுவாயாக என்க.

அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்தென்று கண்ட வழி உளதாய் நிற்கும் ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ் வசத்தினது விளைவுக்கு வேராய வினைத்தீர்வின்கண்ணதாக லான், ஆண்டுளதாய் நின்ற மெய்யுணர்வை அவ்வினை வேரறுத்து நிலைபெறுத்துதற்பொருட்டு அங்ஙனம் அதனை நிலைபெறுத்தினர் மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படும் என்றவாறுயிற்று.

அற்றேல், அவ்வாதனை நீங்கி மெய்யுணர்வு நிலைபெறுதலும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கவே உளதாமென்பது அஞ்செழுத் ததிகரணத்தில் ஓதியவாற்றனும், * "பந்தமா னவைய றுத்துப் பௌதிக மூழலு மெல்லைச்—சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரு—மந்தமா திகளில் லாத வஞ்செழுத் தருளி னலே—வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே" எனப் புடைநூலாசிரியர் கூறிய வாற்றனும் பெறப்படுதலின், அதற்கு அதுவே அமையுமா லெனின்—அஃதொக்கும்; அவ்வுச்சரிப்பும் இவ் வழிபடுதலி யின்றி யமையா தென்பது விதிப்படி உச்சரிக்க என்றதனையா னெழியாது, † 'அஞ்செழுத்தா லுள்ள மரணுடைமை கண்ட ரனை—யஞ்செழுத்தா லர்ச்சித்து' என ஆசிரியர் தாமே அகத்து

* சிவப்பிரகாசம், உண்மை, சு. † இந்நூல், கூ-ம் சூ. ங-ம் அதி. க.

வழிபாடு கூறியவாற்றாற் பெறப்படுதலின், வழிபாடும் அதற்கு ஒருதலையான் வேண்டப்படும் என விடுக்க.

அற்றேல், அஞ்செழுத் ததிகரணத்தையும் இதனைச் சார வைத்து ஈண்டோதுதலே பொருத்த முடைத்தெனின்,— அஃதொக்கும்; சிவப்பிரகாசந் திருவருட்பயன் முதலியவற்றி னும் அஞ்செழுத்தருணிலையை இன்புறுநிலைக்குப் பின்னுக அணைந்தோர்தன்மையைச் சாரவைத்துக் கூறியவாற்றானும் அதுவே பொருத்த முடைத்தாயினும், அஞ்செழுத்தோதும் முறைமை சொற்பல்காது விதிப்படி, என மாட்டெறிந்துணர்த்தற் பொருட்டு ஆண்டே வைத்தோதியதன்றிப் பிறிதில்லை யென் றுழிக.

இது சொற்பொருட் பின்வருநிலை. விகாரமாது என்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது; "உண்ணுகழியும்" என் புழிப் போல. பின்வந்த ஞானம் ஆகுபெயர். ஆனதனை லென் பது ஆனாத்தால் என மரீஇயிற்று; * "பெற்றத்தாற் பெற்றபயன்" என் புழிப் போல.

அற்றேல், பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு, வேள்வி முதலியன போலப் பயன் வேண்டாமையா னுக, பின்னர்ச் செய்து பெறுதுமென் றுக, ஒரோவழி ஒழியவும்படுங் கொல்லோ என்னும் ஆசங்கையை நீக்கிச், செய்யாவழிப்படுங் குற்றமும், செய்தல் கடமையாமாறும் உணர்த்தி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்:—

தன்னை யறிவித்துத் தான்றனைச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி என்வரும்.

தன்னுண்மை யறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க் குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையு மெளிய அவ்வுயிரை எத்தனையுமரிய தானும் வண்ணஞ் செய் தளித்த பெரியதோ ருதவியை அதன் பின்னர் மறக்குமாயின், அஃதிதற்குமுன் அறியாமையான் மறந்த குற்றம் போலத் தீர் திறனுடைய தொருகுற்றமன் றுகலானும், முதல்வன் அங்ஙனந் தான்றனேயாகச் செய்தலும் இதுகாறுந் தனக்குச் சுதந்தர மின்றி முதல்வனது உபகாரத்தை யின்றியமையாதாய் அடிமை யாகிய உயிர் எக்காலத்தும் அவ்வா றடிமையேயா மாகலானுந் தான்றனைச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடுதலே அவ் வுயிர்க்கு வலியாவ தென்க.

* திருக்குறள், கூடம் அதி. சுற்றந்தழால், ச.

தமதுமுதலுனே குருவாகலின், தான்முனைச் செய்தானை என்றும், முன்னைமறந்த குற்றம் அறியாது நிகழ்ந்தாகலிற் கழுவப்படும், இஃது அதுபோற் கழுவப்படுவதன்றென்பார், பின்னைமறத்தல் பிழையலது என்றுங் கூறினர். பின்னை மறத்தல் என்பதனால் முன்னைமறத்தல் பெறப்பட்டது. *"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதூஉமாம். அலதும் எனப் பாடமோதி இது பிழையாத லன்றியும் என்றுரைப்பாரு மூளர்.

ஏகாரம் முன்னையது அசைநிலை; பின்னையன தேற்றம். செய்தாலென்பது செய்து எனத் திரிந்தது. உம்மை சிறப்பின் கண் வந்தது.

தான்முனைச் செய்தல் - எதனை யெதனைப் பற்றினும் அது வதுவாமுயிர் தன்னை அறிந்தவழி எண்குணங்களா னிறைந்த தன்வண்ணமாகச் செய்தல். அங்ஙனஞ் செய்தவழியும் †"உயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கே யுரித்" தென்பார், தைவ மென்றுந் தைவமே என்றார். தைவம் என்னுஞ் சொல் லியல்பு ‡ மேலேயுரைத்தாம்.

மானை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது; மான் என்பது வடசொற்றிரிபு. சுட்டு வருவிக்க. வலிதருவ தனை வலி என்று உபசரித்தார்.

இவ்வுதாரணங்கள் மூன்றனும் வழிபாட்டிற்கு இடத்து நிகழ் பொருண்மாத்திரையே யன்றி இடவிசேடமும் பெறல் வேண்டுமென அதனை வலியுறுத்துமுகத்தான் முறையே சிவ லிங்கத்தையும், சிவபத்தர் திருவேடத்தையுஞ், சிவதேசிகனையும் அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

இங்ஙனஞ் சிவாகமத் துள்ள ஞானபாதப் பொரு ளெல் லாவற்றையும் பொது உண்மை என்று இருவகைப் படுத்துப், பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என நான்கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச் சிவஞானபோத நூலைக் கோடற்குரிய அதிகாரிகளாவார் இவரென்பது உணர்த் துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது :—

---

* திருக்குறள், கக-ம் அதி. செய்ந்நன்றியறிதல், கo.

† சிவஞானசித்தி, கக-ம் சூ. கo.

‡ பக்கம், சுகூட.

சிவமென்னு மந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவமின்றுங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு

எனவரும்.

தான்றுனைச் செய்த வாற்றுற் சிவலெ ன்னும் பெயரினீங்கிச் சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தை யுடைய மாணவகனே, ஒன்று மிரண்டுமாய மலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் முறையே அறிவின்க ணின்று அருட்பார்வையா னேக்குதலானும், தேவகுருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கு எனப்படுந் தீக்கையானும் பிறவிக் கேதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கு மாகலான், அவரின் வேறுகிய மும்மல மூடையார்க்கே உரித்து இவ்வுலகத்து அநுபவமுடைய தேசிகராற் போதிக்கப் படும் இச்சிவஞானபோதநூல் என்க.

அந்தம் வேதாந்தம்; அந்ததரஞ் சித்தாந்தம்; ஆகலின், அதனைப்பெற்றோரது பெருமை கூறுவார், சிவமென்னும் அந்ததர என்றார். என்னும் என்புழிப் படுசொற் றொக்கது. சிந்தை-அறிவு. கண்ணுருபு விரித்துரைக்க. நேர்நோக்குதல் - முன்னே மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையா னேக்குதல். நோக்க-நோக்குதலானென்க. கண் வாசகங்களைக் கூறவே இனம்பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப்படும். மும்-ஆகுபெயர். இந்நூல் அநுபவமுடைய தேசிகனு லன்றி விளங்கா தென்பார், ஒன்றுரு வால் என்றார். போதிக்கப்படும் என்பது அவாய்நிலையான் வந்தது. இன்றிந்நூல்என்பது இந்நூலென்னும் பொருட்டு. இக்காலத்துரைக்கப்பட்ட நூலெனினுமமையும்; அது, 'தானுரைத் தான்.....இன்று' என வருகின்ற வெண்பாவிற் கூறியவாற் றுனு மறிக. மும்மை என்றது ஈண்டு எண்ணின்கணின்றது; *"தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என் புழிப்போல.

**நான்காமதிகரணம் முடிந்தது**

பயனேத்தின் மூன்றும்பாதமாகிய
பன்னிரண்டாஞ் சூத்திரம் முடிந்தது
**பயனியல் முற்றிற்று**
**உண்மையதிகாரம் முற்றுப்பெற்றது**
திருச்சிற்றம்பலம்.

---

* பரிபாடல்.

**சிறப்புப்பாயிரம்**

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் ரூரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

சிவஞானபோதத்திற்கு
மாதவச்சிவஞானயோகிக ளருளிச்செய்த
**சிவஞானபாடியம் முற்றுப்பெற்றது**
திருச்சிற்றம்பலம்.

---

## கோயிற்புராணம்

மழைவ ழங்குக மன்ன வனைங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

---

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி வாழ்க
ஸ்ரீ சிவஞானயோகிகள் திருவடி வாழ்க

சிவஞானபாடியம்

# வெண்பா முதற்குறிப்பகராதி


| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகாரவுகார | ௨௯௫ |
| அசத்தறியாய் | ந-சக |
| அஞ்செழுத்தா | சசச |
| அதுவித | சகூ௨ |
| அதுவென்னு | ந-நிந- |
| அரக்கொடு | ககள |
| அரவுதன் | ௨ந-ந- |
| அருக்கனேர் | சளசு |
| அருவுருவங் | ந-அக |
| அருளுண்டா | ந-ந-௨ |
| அவ்வினையைச் | க௨நி |
| அவ்வுடலி | ௨எஅ |
| அறிந்து | ௨அ௨ |
| அறியவிரண்டல்ல | ந-நி௨ |
| அறிவிக்க | சகசு |
| அன்றன் | ௨எந- |
| அன்னியமிலாமை | ந-அச |
| **இ** | |
| இங்குளி | சசு0 |
| இந்துவிற் | சசநி |
| இலயித்த | எநி |
| இலாடத்தே | ந-௨க |
| இல்லா | சகக |
| **உ** | |
| உணர்ப | ந-சகூ |
| உள்ளதே | கஉச |
| **எ** | |
| எங்குமுள | ௨நிசு |
| எண்ணிய | ந-சஅ |
| எண்ணில | ௨கூள |
| எந்தைசனற்குமர | சகூஅ |
| எவ்வுருவுங் | சள௨நி |
| எனதென்ற | ௨எநி |
| **ஏ** | |
| ஏகமாய் | சளள |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| **ஐ** | |
| ஐந்தையு | சளக |
| ஐம்பொறியி | சள௨ள |
| ஐம்பொறியை | ந-ந-ள |
| **ஒ** | |
| ஒன்றணையா | ந-கச |
| ஒன்றலா | கூகூ |
| ஒன்றறிந்த | ௨எசு |
| ஒன்றென்ற | ககநி |
| **க** | |
| கட்டுமுறுப் | ககநி |
| கண்டதை | சசக |
| கண்டதொரு | சகூ0 |
| கண்டனனைவை | ௨௨கூ |
| கண்டறியு | ௨அ0 |
| கலையாதி | ௨அநி |
| **கா** | |
| காட்டிய | சநூநி |
| **ச** | |
| சதசத்தா | சசூ௨ |
| **சா** | |
| சார்ந்தாரை | சநிகூ |
| **சி** | |
| சிந்தித்தாய் | ௨கூச |
| சிவமென்னு | சகூள |
| சிறைசெய்ய | சள௨ச |
| **சு** | |
| சுட்டியுணர்வதனை | சச0 |
| **த** | |
| தம்மையுணர்ந்து | ந-எ |
| தவஞ்செய்தா | ச00 |
| தன்னுணர | சஅகூ |
| தன்னையறிவித்து | சகநி |
| **ந** | |
| நசித்தொன்றி | சளஅ |
| நண்ணனல் | சசுக, சஅ௨ |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| நா | |
| நாடியோ | சங_சு |
| நாமல்ல | சநிஅ |
| நானவனென் | சநிஉ |
| நி | |
| நிர்க்குணனுய் | சங_அ |
| நெ | |
| நெல்லிற்குமி | கஉ_சு |
| நோ | |
| நோக்காது | கூங_ |
| ப | |
| பசித்துண்டு | சOக |
| பண்ணேயு | ககள |
| பன்னிறங் | சஉஉ |
| பா | |
| பாவகமே | ங_நிO |
| பு | |
| புண்ணிய | சஅச |
| பூ | |
| பூதாதி | எக |
| பே | |
| பேய்த்தேர் | ங_அசு |
| போ | |
| பொன்வாண் | சஎக |
| ம | |
| மண்முத | சசசு |
| மயக்கமதுற்று | ங_கO |
| மறப்பித்து | சஅள |
| மனமாதி | உகங_ |
| மன்னுசிவன் | ங_ங O |
| மன்னுமிருளே | சளள |
| மா | |
| மாயாதது | உகக |
| மே | |
| மெய்ஞ்ஞானந்தன்னில் | ங_கக |
| மெய்ஞ்ஞானந்தானே | சகநி |
| வி | |
| வித்துண்டா | கO |
| வினையா | சகச |
| வே | |
| வெய்யோ | ங_ங க |

சிவஞானபாடியம்

# மேற்கோள் நூலகராதி

(எண் - பக்க எண்)


| நூல் | பக்கம் |
|---|---|
| அகநானூறு | ரூஉ |
| அதர்வசிகை | ஙக, எங |
| அதர்வசிரம் | ஙO |
| அதிகரணரத்ன சங்கிரகம் | உஙங |
| அநுபூதி விளக்கம் | நOள |
| ஆசுவலாயநீயம் | எஉ |
| இருபாவிருபஃது | ஙஙச |
| உண்மை விளக்கம் | உOO, நஎO, சஎO |
| உலகாயதம் | சுள, உOந |
| கந்தகாலோத்தரம் | உங |
| கந்தபுராணம் | ஙசஅ |
| கருவூர்த்தேவர் திருவிசைப்பா | நஙஅ |
| கலித்தொகை | ஙகச, நருங |
| கவுசிதகம் | உக |
| காந்தம் | ஙங |
| காமிகாகமம் | நந |
| காலோத்தரம் | உஉரு |
| கூர்ம புராணம் | ஙள, உக |
| கைவல்லியம் | ஙO |
| கொடிக்கவி | ங |
| கோயிற் புராணம் | சஙந, சசசு |
| கோயிலுண்மணிமாலை | கசO, கசச |
| சங்கற்ப நிராகரணம் | ஙஉஅ, கசநூ, உஉசு, சகக, சகங, சஉருி, சருக, சசுள |
| சதமணிக்கோவை | நகள, நநசு |
| சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் | ஙங |
| சர்வஜ்ஞாரூத்தரம் | உங, நளள |
| சனற்குமார சங்கிதை | உக |
| சாந்தோக்கியம் | ஙO, உஉந, உஉச, நசஅ |
| சித்தாந்த சாராவலி | நக, ஙநள, உருஉ, உருஅ, நஉந |
| சித்தாந்தப் பிரகாசிகை | உந |
| சிவஞானசித்தி | அ, உஉ, உசு, உஅ, நள, சஉ, சுந, சுக, எO, எக, கக, கச, கOO, கOந, கOக, ஙஉ, ஙந, ஙரு, ஙசஅ, ஙசரு, ஙருி, ஙருஅ, ஙருசு, ஙசள, ஙளக, ஙளசு, ஙஅசு, ஙஅக, உOO, உந்O, உந்க, உந்ந, உசுஉ, உஎருி, உஎள, உஎக, உஅO, உகO. உகக, உகஉ, உகருி, உகள, நOசு, நOக, நகங, நகக. நஉக, நஉஉ, நஉந, நஉசு, நநக, நநசு, நநஅ, நநக, நநசக, நநசஉ, நநசச, நநசருி, நநசஅ, நநருசு, நநசுசு, நநக, நஎங, நஎருி, நஅக, நஅஉ, நஅந, நஅசு, நக்க, சOக, சOந, சOசு, சஉச, சஉருி, சஉள, சந்உ, சந்ங, சந்சு, சந்அ, சந்க, சஎள, சருஉள, சருசு, சளO, சளச, சஅந, சஅசு, சஅருி, சகுந, சசுசு
| சிவஞானபோதம் | கஉ |
| சிவதத்துவ விவேகம் | ஙங |
| சிவதருமோத்தரம் | உக |
| சிவப்பிரகாசம் | அ, கு, கக, கஉ, கங, உஅ, நருி, நஅ, சஉ, சுக, எக, கOக, கOஉ, ககக, கஉக, கஉசு, கந்ருி, கந்அ, கசச, கசருி, கசசு, கசள, கருசு, கருள, கருஅ, களஅ, களக, கஅருி, கஅசு, ககக, உOந, உந்ச, நOசு, நOக, நகங, நகசு, நஉச, நஉருி, நஉங, நசO, நசுருி, நளந, நளருி, |

| நூல் | பக்கம் |
|---|---|
| நுஅக, நுஅஉ, ஙஅஞி, ஙுகூஎ, சoக, சகக, சகஉ, சகச, சகஞி, சஉச, சசஎ, சஎo | |
| சிவாகமம் | அங |
| சிவாக்கிர பாடியம் | ஙசு, எசு, அக, அச, அஎ, கஉஅ, கஙoக, கஙுச, கசூஉ, உசஉ, நுஞிசு |
| சிவாதித்த மணிதீபிகை | கசஙு, உகூ |
| சிற்றம்பல நாடிகள் கட்டளைக் கலித்துறை | நுஉஉ |
| சிகண்டபாடியம் | சுஎ |
| சீவக சிந்தாமணி | ஙுகூஞி, சஙுசு |
| சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் | சுநு,ஙுகூ, ஙுஞிஞி, சoச |
| சுவாயம்புவம் | கஙூ |
| சுவேதாச்சுவதரம் | கூஅ |
| சூதசங்கிதை | கஅ, உக |
| சேந்தனார் திருப்பல்லாண்டு | சுஅகூ |
| சோமசம்பு பத்ததி | ஙுஙுக |
| ஞானமிர்தம் | சு, கூ, எஎ, கூஉ, கூச, கூஞி, கoச, கஙஉ, கஙுங, கஞிஅ, உஙசு, ஙுகo, நுஞிஞி, சஞிகூ |
| தண்டியலங்காரம் | கூகூ, சஉசு |
| தருக்கசங்கிரகம் | சக, நுசுஙூ |
| தருக்கபரிபாஷை | ஞிக |
| தாயுமானசுவாமிகள் பாடல் | சoஎ |
| திருக்களிற்றுப்படியார் | கக, கூஙக, ஙுசுகூ, சுகக, சுஉஞி, சசுச, சஎஙூ |
| திருக்குறள் | ஞி, சo, சுசு, கூச, கஅங, உஙச, உஞிசு, உஞிஎ, உஅo, உஅங, ஙுசஙு, ஙுசச, ஙுசஅ, கூஞிஎ, ஙுஅஎ, சுகசு, சுகக, சஉஅ, சஙுசு, சுசச, சுசுக, சஎக, சஎஅ, சஅங, சகஞி, சகஙூ |
| திருஞான சம்பந்தர் தேவாரம் | சுஙு, சுச, எo, கூக, உஉ, கூசக |
| திருநாவுக்கரசர் தேவாரம் | ச, கூசு, கூசு, கஉச, கஙுசு, கசo, கூஙுஅ, கூஞிஞி, கூஅஉ, சoச, சசுக |
| திருமந்திரம் | சுஅஎ |
| திருமுருகாற்றுப்படை | சசுo |
| திருவருட்பயன் | .ஞி, உகூ, சஙு, ககக, கஙுஞி, கஞிச, கஞிசு, உoக, ஙுஉஞி, சகஙு, சசுஉ, சுஅஉ, சுஅங |
| திருவாசகம் | நுஅ, ஙுக, சுஙு, சுச, சுகூ, எo, கoஅ, .ககஉ, கஙுசு, கசக, கசஞி, ககஎ, உஅஞி, ஙுகூஅ, ஙுகூo, சஉஎ, சஎங , சுஅசு |
| திருவிடைமருதூர் மும்மணிக் கோவை | நுஙுசு, ஙுஎக, சஙுச, சஞிஞி, சுஅசு |
| திருவுந்தியார் | கக, எo, சஎக |
| திருவுருத்திரம் | சுஅகூ |
| திவாகரம் | சுஞி |
| துகளறு போதம் | கஎசு, உகூஞி ஙுஎங, சஙுச, சஎஎ |
| தேவிகாலோத்தரம் | உகூ |
| தைத்திரீயம் | உக, உஉங |
| தொல்—எழுத்ததிகாரம் | எஅ, சஎஉ |
| தொல்—சொல்லதிகாரம் | நுஅ, சுசு, கஙுஞி, உஎஎ, நுசுஅ, ஙுஅக, ஙுகூo, சஞிகூ, சசுகூ, சஎஉ, சஎங |
| தொல்—பொருளதிகாரம் | ககூக உகூo |
| தொல்காப்பியப் பாயிரவிருத்தி | கசு, ஙுசு, சுஞி, ககசு, உசுஎ |
| நாலடியார் | ககசு, ஙுஞிஉ, ஙுஎo, ஙுஎச, சoக, சசுசு, சகஉ |
| நீலகண்ட பாடியம் | சகூ, ககஉ, கஉஉ |
| நெஞ்சுவிடு தூது | உoo |
| நையாயிகம் | உஙு, உoக |
| பகவத் கீதை | ககஅ |
| பஞ்சாக்கரப் பஃறொடை | சசஞிு |
| பதினொராந்திருமுறை திருக் கைலாய ஞானஉலா | சுச |
| பதினொராந்திருமுறை அற் புதத் திருவந்தாதி | கஉஞி, கசo, சஎச |
| பரிபாடல் | சகூஎ |
| பவுட்கரவசனம் | கஙு, உஅ, ககo, கசுஉ |
| பாணினி சூத்திரம் | நுச, அசு |
| பாரததாற்பரியசங்கிரகம் | அங |
| பாரதம் | ககஅ |

| நூல் | பக்கம் |
|---|---|
| பிரமதருக்கத்தவம் | அஉ |
| புத்தநூல் | உ0 |
| புறநானூறு | உநிஎ, ஙஉஎ, ஙடுக, சகக |
| பெரியபுராணம் | ககு, உங, ககo, சசுஉ, சஅஅ |
| பொன்வண்ணத் தந்தாதி | சுசு |
| போதாயநீயம் | எஉ |
| போற்றிப் பஃறொடை வெண்பா | கo0டி, ஙகசு, ஙகஅ, ஙஉo, சகடி |
| பௌட்கராகமம் | ஙசுசு, ஙஎசு, சகo |
| மகுடாகமம் | உக, கஉo |
| மச்சபுராணம் | அக, அஉ |
| மதங்கம் | கங, உஅ |
| மிருகேந்திரம் | கஉ, கoக, உஉதி, உசஉ, உசசு, |
| மீமாஞ்சை | உங, உசுஎ |
| யாப்பருங்கல விருத்தி | கஉச |
| வாக்குண்டாம் | ஙசுக |
| வாயவ்விய சங்கிதை | உக |
| விளை வெண்பா | சதிங, சஎக |
| வைசேடிகம் | உங, உகசு |

# சிவஞானபாடியப் பொருளகராதி

(விஷய அகராதி)


| பொருள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகச்சமயம் | ககக |
| அகப்புறச்சமயம் | சுo |
| அகவிருள் ஏனைச் சமயநூல் களான் மடங்காது | ச |
| அகவிருளைச் சிவஞான போத நூல் துமிக்கும் | ச |
| அங்கிகாரியம் | உரு |
| அங்கியின் வகை | உஉக |
| அங்கியும் ஒன்றிற் றங்கிநின்றல் லது தன்றொழில் நடத்தாது (உவமை) | சசுஎ |
| அங்கையினெல்லிக் கனிபோல் (உவமை) | நடசுஉ |
| அசத்தியோ நிர்வாணதை | நடo |
| அசத்து | நடநஎ, நடசக |
| அசபை சூக்கும பஞ்சாக்கரத்தின் பரிணமம் | நடகசு |
| அசற்காரியவாதம் | நடசந |
| அசித்து | நடசக |
| அசுத்தமாயாகாரியம் | ககசு |
| அசுத்தமாயை (மோகினி) | ககஞ |
| அசுத்தமாயைக்கும் சுத்தவித் தைக்கும் நடுவே தத்துவங் களும் புவனங்களும் உள | ககக, நடoஎ |
| அஞ்சவத்தை | நடகஞ |
| அஞ்செழுத்து உச்சரிப்பும் வழி படுதலேயின்றி யமையாது | சகஞ |
| அஞ்ஞானம் என்பது ஞான மின்மை என்னும் பொருட் டன்று, திரிபாகிய ஞானம் என்னும் பொருட்டேயாம் | கஎஉ, உகக |
| அஞ்ஞானங் காட்டுதல் மாயை கன்மங்கட்கு ஆணவமலச் சார்வாகிய செயற்கை | சஅஞ |
| அஞ்ஞானவகை ஐந்து | ககஞ |
| அட்டபுட்பம் | சசச |
| அட்டமூர்த்தம் | கசஞ |
| அட்டவித்தியேசுரர் | உஞக |
| அணுக்கள் | கந அ |
| அணுபக்கம் | உசுo |
| அணைந்தோர் தன்மை | சஅஉ |
| அண்டங்களினியல்பு | உநஞ |
| அண்டத்திலுள்ளன வெல்லாம் பிண்டத்தில் சூக்குமரூபமாய் உள்ளன | சசசு |
| அதன்மவகை பத்து | ககஞ |
| அதிகரணம் | சுஎ |
| அதிசூக்கும வைந்தொழில் | கoக |
| அத்தியாசவாதம் | நoக |
| அத்துவாக்களின் தோற்ற வொடுக்கமுறை | உஞந |
| அத்துவித இலக்கணம் | நஎக,நஎஉ |
| அத்துவிதம் என்னுஞ் சொற் குப் பொருள் | ககந, ககச, நஎஉ, நஎந, நஎச |
| அத்துவிதம் என்னுஞ் சொல் மகா வாக்கியப் பொருளை வலியுறுத்தும் | நஎஉ |
| அத்துவிதம் கலப்பும் உடனு தலும் வேறுதலுமாகிய மூன் றும் தன்கட் டோன்ற நிற் றல் | ககக, நஎந |
| அத்துவிதத்திற்குச் சிறந்த உவமை ஆன்மபோதமும் கண்ணொளியும் | நஎச |
| அத்துவிதநிலை | சஎச |
| அநந்தியமாந் தன்மை | நகஞ |
| அநுபவஞானம் | நகக |
| அநுபவம் பரமான்மாவிற்கும் பாசத்திற்கும் கூடாது | சு |

பொருள் பக்கம்

அநுபவம் நூஎசு
அநேகேச்சுரவாதி நூநிநு
அனைசுவரியவகை எட்டு ககூசு
அந்தக்கரணுண்மவாதி மறுப்பு உகo
அந்தரான்மா நூசுஉ
அபரமுத்தர்கட்குரிய சுத்த தத்துவ புவனம் நூoஅ
அபரமுத்தி யெய்துவோர் உலகத்தை நோக்கி மீளுத லின்றி அங்கு நின்றே பர முத்தியெய்துவர் சoசு
அபாவம் நிo, கங்o, கங்க, உகஅ, உகக, நூoநி
அபாவம் என்னுஞ் சொற்குப் பொருள் பாவப்பொருள் புலனுகாமை உகஅ
அபுத்திபூர்வ புண்ணியங்கள் புத்திபூர்வ புண்ணியங்கட்கு ஏது சoங
அபுத்திபூர்வம் சoங
அபூர்வவினை கங்o
அப்பேணந்த உப்புப்போல் (உவமை) சளஅ
அப்பு உoக
அராகதத்துவம் களக
அராகவகை கஅo
அருத்தநூல் எங
அருத்தாபத்தி கஅசு, உசுஉ, நூஉஅ, சங்ச
அரும்புமலர் காய்கனியாதல் போல (உவமை) சoஎ
அவஸ்தாந்தம் நூசக, நூநிசு, நூசுள, நூளசு, நூளஅ, சநிசு
அவயவம் சுஅ
அவிச்சை நூநிo
அவிநாபாவம் நூளசு
அவையடக்கம் நூள
அவைராக்கிய வகை நூறு ககூசு
அவ்வளவினவன் மகிழுக (நியாயம்) நூசஎ
அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருள்கட்குக் கூடாது நூளஉ
அழிவுபாட் டபாவம் கங்o, கங்க
அழுந்தியறிதல் ஆன்மாவுக் கன்றி முதல்வனுக்கில்லை சளக

ஆ

ஆகந்துகமலம் உகஅ
ஆகமங்களிற் பொதுவியல்பும் கூறவேண்டியதென்னை அ
ஆகாயத் தன்மையாகிய ஓசை போல் (உவமை) நூஅக
ஆகாயம் உண்மைக்குப் பிரமாணம் உகள
ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்து நிற்றல் நூகo
ஆங்காரதத்துவம் ககள
ஆங்காரவகை மூன்று ககள, ககஅ
ஆசிரியத்தன்மையி னதிகாரம் நூக
ஆடூஉவறிசொல் சகள
ஆணவமலத்துண்மை கoo
ஆணவமலம் ஆன்மாவின் குண மன்று நூoo
ஆணவமலம் முதல்வனுக்கு மறுதலைப்பொருள் கசநி, நூஅச
ஆத்தியான்மிகம், பௌதிகம், தைவிகம் கங்ங
ஆயுள்வேதம் எங
ஆருகதம் சள
ஆருகதர் கூறும் ஆன்மவிலக் கணமும் மறுப்பும் நூoஉ
ஆலயவிஞ்ஞானம் சசு, நூoக, சசுச
ஆவேசவாதி கoo
ஆழவமுக்கி முகக்கினு மாழ் கடலி னுழிமுகவாது நாணுழி நூசுக
ஆளுடைய பிள்ளையார் முதலிய நாயன்மார்கட்குத் தவமின்றி யும் ஞான நிகழ்தல் நூகசு
ஆன்மஅறிவு யாண்டும் தனக்கு வியஞ்சகமாய் அறிவிக்கும் அறிவை இன்றியமையாதது எ
ஆன்மசிற்சத்தி பிரமாணரூப மன்றிப் பிரமேய மாதலில்லை நூளக
ஆன்மசுத்தி சநூo
ஆன்மசொரூபம் உணர்த்தக் குர வன் ஒருதலையான் வேண்டும் சளக

| பொருள் | பக்கம் |
|---|---|
| ஆன்மதரிசனம் | ஈகசை |
| ஆன்மலாபம் | சசக |
| ஆன்மா அதுவதுவாய் நின்றறி யும், சிவம் தனித்து நின்றறி யும் | ஈசுசு |
| ஆன்மா இறைவனே அத்து விதமாய்க் காணுமுறைமை | சஇஈ |
| ஆன்மா இறைவனுக்குச் சிறப் பியல்புபற்றிய சேடம் | சளஅ |
| ஆன்மா இறைபணி வழுவாது நிற்பின் அதனிடத்து அஞ் ஞான கன்மம் பிரவேசி யாது | சஇசு |
| ஆன்மா எவ்வெம்மந்திரங் களைக் கணிப்பினும் அவ்வம் மந்திர சொரூபியாவன் | சசஉ |
| ஆன்மா என்னும் சொற்குப் பொருள் | உஅக |
| ஆன்மா சதசத்து | ஈஈஅ |
| ஆன்மா சத்தையும் அசத் தையு மறியுமாற்றுல் அறி யப்படுமன்றித் தனித்தறி யப்படமாட்டாது | ஈஅக |
| ஆன்மா ஐந்தவத்தையுறுதல் | ஈகO |
| ஆன்மா சார்ந்ததன் வண்ண மாகுந் தன்மை இகூ, சுஉ, ஈசச, ஈசுஇ | |
| ஆன்மா சிவத்தைத் தரிசிக்கும் வழிப் பிறவுயிர்களையும் அச் சிவத்தின் வண்ணமாய்க் கண்டறியும் | சஇஇ |
| ஆன்மா சிவானுபவம் ஒன் றற்கே யுரியன், ஐந்தொழிற் செய்தற்குரியனல்லன் | ஈசுஈ |
| ஆன்மா தன்னைச் சிவனுக்குத் தானஞ் செய்தல் | ஈஇஅ, ஈசுஈ |
| ஆன்மா முத்திநிலையினும் சிவனே நோக்கச் சிற்றறி வுடையன் | எ, ஈசுஈ |
| ஆன்மாவால் அறியப்படும் பொருளெல்லாம் அவனுல் அநுபவிக்கப்படும் பொருளே | ஈஎசு |
| ஆன்மாக்கள் அநாதிபந்த முடையன | சு |
| ஆன்மாக்கள் உடம்புதோறும் வெவ்வேறு உண்டு | சு |
| ஆன்மாக்கள் நாடோறும் ஐவகை அவத்தை யுறும் | சு |
| ஆன்மாக்கள் பந்த வேறுபாடு பற்றி முத்திறப் படுவர் | சகசு |
| ஆன்மாக்களுக்கு இலக்கணத் தால் வேற்றுமை | எ |
| ஆன்மாவுக்கு அசத்தைச் சார்ந்து அசத்தாய் நிற்றல் இயற்கை யன்று | சசுஉ |
| ஆன்மாவுக்கு அறியுந்தன்மை யாகிய விசேடகுணம் உண்டு | ஈசுஇ |
| ஆன்மாவுக்கு ஏகனுய் நிற்ற லால் மலவாதனை இன்று கும் | சசுஈ |
| ஆன்மாவுக்கு இறைபணி நிற்றலால் மாயா கன்மங் களின் வாதனை இன்றுகும் | சசுஈ |
| ஆன்மாவுக்கு எல்லாப் பொரு ளும் பிரமேயம் | ஈஎசு |
| ஆன்மாவுக்கு ஏகதேசப்பொருள் களைச் சார்ந்து நிற்றல் செயற்கை, சிவத்தைச் சார்ந்து நிற்றல் இயற்கை | ஈஎஇ |
| ஆன்மாவுக்குச் சிறப்பியல்பு | ஈஅO |
| ஆன்மாவுக்குப் பக்குவம் | சகஉ |
| ஆன்மாவுக்கு முத்திநிலையில் அறிவு நிகழுமாறும் அது முதல்வனதறிவாகிய அருட் கண்ணை இன்றியமையாமை யும் | சளஎ |
| ஆன்மாவுக்கு முத்திநிலையில் அன்பு நிகழுமாறும் அது முதல்வன் அன்பை இன்றி யமையாமையும் | சளஅ |
| ஆன்மாவுக்கு முத்திநிலையில் கிரியை நிகழுமாறும் அது முதல்வனது கிரியையை இன்றியமையாமையும் | சளகூ |
| ஆன்மாவுக்கு விடயம் பெத்தத் தில் பிரபஞ்சம் முத்தியிற் சிவம் | சசுகூ |
| ஆன்மாவை மன்னவகுமார ஞகவும் ஐம்பொறிகளை | |

போருள் பக்கம்

வேடர்களாகவும் உருவகஞ் செய்தல் நடுகுi, நடுகசு

இ

இங்குளி வாங்குங் கலம்போல (உவமை) சசுo

இசையோசைக்கும் எழுத்தோசைக்கும் வேற்றுமை கஙிச

இதய கமலத்தினியல்பு சசசு

இதிகாசம் எந

இந்திரியத்திற்கும் விடயத்திற்கும் உள்ள சம்பந்தம் நசுந

இந்திரியம் உoந

இந்திரியங்கள் உறுப்புக்களின் வேறு உoந, உகo, உகக

இந்திரியங்களின் தொழிற்பாடு ஆன்மாவின் ஞானக்கிரியை களே விளக்குதல் மாத்திரையே உகஉ, நுசகு

இந்திரியான்மவாதி மறுப்பு உஎடி

இயைபு ஐவகை சுஎ

இரட்டுறமொழிதல் கoசு, சசஎ

இராசதகுண விருத்தி சநஅ

இராமாநுசர் நுஎக

இரும்பைக் காந்தம் வலித்தாற்போல் (உவமை) நுஎந

இருவினையுண்மை கஉஅ

இருவினையொப்பு சகo

இருவினைக்குச் சிறப்புவகையால் பற்றுக்கோடு புத்தி தத்துவம் கஅக

இருளுண்மை உoஎ

இருளொளியலாக் கண்டன்மை போல (உவமை) நஅஅ

இருள் காட்சிப்பொருளன்று உoஎ, உoஅ

இலக்கணத்தால் வேறுபாடில் வழி இலக்கியம் பலவாதல் செல்லாது கூக, நுசுஅ

இலயம் போகம் அதிகாரம் உடுக, உசுo

இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்றவத்தையும் முதல்வனுக்கு உபசாரமே சு

இறைபணி நிற்றல் சிவானந் தத்தை அனுபவித்தற்கேது சடுஎ

போருள் பக்கம்

இறைபணி நிற்றலால் மாயா கன் மங்களின் வாதனை இன்றுகும் சசுநு

இறைவன் எவ்வாற்றானும் சத்து நுநுகூ

இறைவன் எவ்வாற்றானும் சித்து நுநுக

இறைவன் சிவனடியார் திருவேடத்திலும் திருக்கோயிலிலும் தயிரில் நெய்போல விளங்கி நிற்பன், பிறவிடங்களிற் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பன் சஅக

இனவெதுகைத்தொடை(இலக்கணம்) சசுக

ஈ

ஈசுரதத்துவம் கசுக

ஈசுரவிகாரவாதி மதமும் மறுப்பும் நுஉஅ, நுஅஅ, சசுக

உ

உடம்பொடுபுணர்த்தல் (உத்தி) நுஉக, நுகo, சஅநு

உடைப்பொருளிருவகை நுஅ

உணவாகிய ஆன்பால் மருந்தாமாறுபோல்(உவமை) சஅஉ

உண்மைச்சரியை கிரியை யோகவகை பன்னிரண்டு சoடி

உண்மை ஞானத்தில் சரியை முதலிய மூவகைக்குப் பயன் அபரமுத்திப்பேறு சoசு

உண்மை ஞானத்தில் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன் சoசூ

உண்மை யதிகாரம் நுஎக

உபலக்கணம் கஉஎ, நுஉசு, நுஉஅ, நுகுஎ, சஉக, சநுடி, சகக

உபவேதம் எந

உபாயச்சரியை கிரியை யோக ஞானவகை பதினாறு சoடி

உயிர் எக்காலத்தும் முதல்வனுக்கடிமையே சகுடி

உருத்திரன் சுநு

உருவதரிசன சுத்திகட்கு வேறுபாடு சநுஉ

பொருள் பக்கம்

உலகத்துள் ஒன்றை ஈவாரும் ஏற்பாரும் சிவார்ப்பண மெனக்கருதுதல் சஎச
உலகிற்கு முத்தொழிலுண்மை சுஎ
உலோகாயதம் சுந, கஉஉ, கஉச
உற்பத்திவாதி கoo

எ

எடுத்துக்காட்டுவமை கஉசு, நஉசு
எண்களுக்குரிய தானவகை ஒன்றுமுதல் பராா்த்தமீறுகிய இருபது உநிஉ
எதிர்மறை அநுமானம் உஎக
எரிகதிரின் முன்னிருள்போல் (உவமை) சசுஉ

ஏ

ஏகதேசபரிணமம் கஅஉ
ஏகதேசவுருவகம் நுகுக
ஏகதேசம் அவயவத்தின்வேறு சுக
ஏகனுகி இறைபணி நிற்பது தூரியநிலை யெனப்படும் அருள்நிலை, ஆண்டுச் சுகப் பிரபை மாத்திரையே விளங்கும், அதீத நிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்க மெனப்படும் பரமசுகம் தோன்றுது சசுநி
ஏகான்மவாதம் நிஎ

ஐ

ஐக்கியவாதசைவம் சுக, உகுக, நுசுசு, நுஅஅ
ஐசுவரியவகை எட்டு ககுச
ஐந்தொழில் கoக
ஐம்பூதங்கள் ஒன்றினின்று ஒன்று உண்டாவனவல்ல உஉஉ, உஉச
ஐம்பூதங்கள் தன்மாத்திரையின் காரியம் உஉஉ, உஉச

ஒ

ஒட்டு (அணி) சஉசு
ஒருகம்பத்தி லிரண்டானைபோல (உவமை) சoக
ஒரு நகரியிலிருவேந்தர்போல (உவமை) சoக
ஒருமைப்பன்மை மயக்கம் கஉக

பொருள் பக்கம்

ஓ

ஓசை கநிச
ஓசை ஆகாயத்தின் குணம் சநிச
ஓமத்தானம் சசச
ஓமித்தலுந் தியானித்தலும் பூசைக்கு அங்கம், பூசை அங்கி சசநி

க

கடல் என்பது நீர்க்கு இடங் கொடுத்து நிற்கும் ஆகாயம் நுகுஉ
கடல் நீருப்புப்போல் (உவமை) நுகுஉ
கணபங்கம் சச, நிக
கண்டங்களின் வகை ஒன்பது உசநு
கண்ணன் சிவோகம்பாவனை யைத் தலைப்பட்டோன் ககஅ
கண்ணிந்திரியத்திற்கும் ஏனை இந்திரியங்கட்கும் உள்ள வேற்றுமை உoஎ, சஉசு
கண்ணிந்திரியம் உoந
கண்ணின்கண் நிலைபெற்றுள தாகிய இருளாப் பிறைமதி உடனுய் நின்று முறை முறையானுந்தித் தள்ளிய வாறு போல் (உவமை) சஎஎ
கண்ணுக்கு ஒளி உண்டு சநிச
கருடபாவனை நுநிஅ, சசக, சசஉ
கருவிகள் ஆன்மாக்களாலறி யப்பட்டு நீங்கியவழிச் சிவம் தாரகமாம் சஉந
கருவிகள் ஆன்மாக்களாலறி யப்படாது நீங்கிய வழி மலம் தாரகமாம் சஉச
கலாதத்துவம் கஎநி
கல்லெறிவுழி நீங்கி அல் லுழிப் பரக்கும் நீரின்கட் பாசிபோல (உவமை) சஉஅ
கல்விக்குறையுடைய கணக் காய்வார்போல (உவமை) சகசு
கனலைச் சேர்ந்த இரும்புபோல (உவமை) சசசு
கனவுநிகழ்ச்சி நனவுபோலச் சத்தியமே உஉசு, நுகக

| பொருள் | பக்கம் |
|---|---|
| கன்மேந்திரியங்கள் உடலெங் கும் வியாபகம் | உகக |
| கன்மேந்திரியம் | உகo |
| **கா** | |
| காகத்தின் கருமணிபோல் (உவமை) | உoஉ |
| காட்சி மூவகைப்படும் | சஙக |
| காட்டத்தினின்றுந் தோன் றும் அங்கிபோல் (உவமை) | சசஙூ, சசசு |
| காட்டுமுபகாரம் | சசுஅ |
| காணுமுபகாரம் | சசுஅ |
| காணுமுபகாரம் காட்டுமுப காரத்திற்குப் பின்னிகழ் வது | சசுஅ |
| காபாலம் | சுo |
| காரகசத்தியுண்மை | உசுஉ |
| காரணகாரிய விலக்கணம் | உசுச |
| காரியத்தோற்றத்திற்கு மூவ கைக் காரணங்கள் இன்றி யமையாதன | உசுஙூ |
| காரியப் பிரபஞ்சத்தை அசத் தெனக் காண்டல் | சஙூஅ |
| காலதத்துவம் | கசுசு |
| **கி** | |
| கிரியாசத்திபேதம் பஞ்ச கலைகள் | கசுo |
| கிரியை | சoஎ |
| கிரியையிற் சரியை முதலியன | சoடி |
| கிரியாயோக மிரண்டற்குந் தீக்கை ஒன்று | ஙூகஎ |
| கிரீடாப்பிரமவாதம் | டுஅ, உஉகூ |
| **கு** | |
| குண குணிகட்கு வேற்றுமை யின்று | உகடு, ஙூசுஅ, சஙூக |
| குணகுணிகளினியல்பு | உகடி |
| குணதத்துவம் மூலப்பகுதி யின் விருத்தியேயன்றிப் பரிணமமன்று | கஅஎ |
| குணம் | களக |
| குமரிக்கண்டத்தின் சிறப்பு | உசஙூ |
| குறிப்புருவகம் | சஅஎ |
| **கே** | |
| கேவலம் | சஉஉ |
| கேவலாத்துவிதிகள் | ஙூஎக |

| பொருள் | பக்கம் |
|---|---|
| **கை** | |
| கைமுதிக நியாயம் | சசுச, சசுஎ, சஎச |
| **ச** | |
| சகசமலம் | உகூஅ |
| சகசமலம் பிராந்தி ஞானத் தின் வேறு | ஙoடு |
| சகலர் | சகச |
| சகலரிற் புண்ணியப் பேறுடை யார்க்குப் புவனபதிகளாதல் கூடாது | சoக |
| சக்கரவாளகிரி | உசடு |
| சங்கம வேடத்தினிடத்து எஞ் ஞான்றும் முதல்வன் பிர காசமாய் நிற்பன் | சகoஎ |
| சங்கற்பமாத்திரையான் இறை வன்சத்தி எல்லாத்தொழி லுஞ் செய்யும் | கூஙூ |
| சங்கற்பம் | கஙூஅ |
| சங்கார காரண னொருவனே செய்தும் செய்வித்தும் எல் லாத்தொழிற்கும் வினைமுத லாகிய முதற்கடவுள் | கூஅ |
| சங்காரமுதல்வன் சுட்டாதறி வன் | கூஅ |
| சங்காரம் ஐவகைப்படும் | சுஉ |
| சங்கிராந்தவாதி | கoo, சஉசு |
| சஞ்சிதம் தீக்கையாலறும் | சடுஅ |
| சடத்துக்கன்றிச் சேதனப் பொருட்குச் சங்கிரமித்தல் கூடாது | ஙூoக |
| சடமுமாய்ப் பலவுமாயின வெல்லாம் தோன்றி நின் றழியும் | சுக |
| சதசத்தினியல்பு | ஙூஅo |
| சதசத்து | ஙூகக |
| சதாசிவதத்துவம் | கசுo |
| சத்தப்பிரமவாதம் | டுஅ |
| சத்தம் ஆகாயத்தின் குணம் | உகக |
| சத்தன் உத்தியுத்தன் பிரவிருத் தன் | சுஙூ |
| சத்தாயுள்ள சிவம் வேறற நின்றுணரும் அநுபவ ஞானமாத்திரையான் விளங் கிக் கோசரிப்பது | ஙூசசு |

| பொருள் | பக்கம் |
|---|---|
| சத்தி சத்திமான்களின் வேற் றுமை | உசுஅ |
| சத்தியும் சிவமும் குணகுணி யாய் நிற்கும் | உடிஅ |
| சத்திதத்துவம் | கசுo |
| சத்தி நீக்கை | உசு |
| சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாகம் | சoக |
| சத்திநிபாதம் | சoக |
| சத்தியோ நிர்வாண தீக்கை | நo |
| சத்திவகைகள் | உடிஅ, உடிக |
| சத்தினியல்பு | நசசு |
| சத்தின் வேறாய் அசத்தென்ப தொன்றில்லை | நகஎ |
| சத்து | நசசு |
| சத்தும் அசத்தும் ஒன்றனை யொன்றறியாது | நஅஎ |
| சத்துவகுண விருத்தி | சநஅ |
| சமய தீக்கை | உஎ |
| சமயப் பாகுபாடுகள் | சo, சக |
| சமவாய சம்பந்தம் | நசுநி |
| சமூகாண்மவாதி மறுப்பு | உஅச |
| சம்பந்தம் | நிசுநி |
| சம்பாத ஹோமம் | உஎ |
| சம்பு பக்கம் | உசுo |
| சரியை | சoசு |
| சரியை முதலிய நான்கிற்கும் மந்ததர முதலிய சத்தி நிபா தங்கள் முறையே ஏது | சகஉ |
| சரியை முதலியவற்றின் பயன் | சoஉ |
| சரியையிற் சரியை முதலியன | சoச |
| சற்காரியவாதம் | எடி |
| சற்சூத்திர அசற்சூத்திரர் வேறு பாடு | நச |

சா

| | |
|---|---|
| சாகபசு நியாயம் | அடி |
| சாக்கிரத்தில் ஐந்தவத்தை | சு |
| சாக்கிரம் | நகஙடி |
| சாங்கியமதம் | டிஅ, கஉஉ, கஉச, உகஉ, நஉஎ, நஎடி |
| சாதனவியல் | நஎகூ |
| சாதாரண புடவி தத்துவமென் னும் அண்டங்கள் விளங் கனி வடிவின | உசசு |
| சாதாரம் | சகசு, சகஅ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| சாதிசயானத்த ரூபம் | சநஅ |
| சாதியும் வடிவும் வேறல்ல | நஉசுநி |
| சாந்திகலை | உடிo |
| சாந்தியதீதகலை | உடிக |
| சாமீபம் | சoஅ |
| சாம்பவதீக்கை | உசு |
| சாயுச்சியம் | சoஅ |
| சாரூபம் | சoஅ |
| சார்ந்ததன் வண்ணமாயறிதல் | நஎசு |
| சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் (பழமொழி) | சடிகூ |
| சாலோகம் | சoஅ |

சீ

| | |
|---|---|
| சித்தசாதனம் | கூஉ, சசச |
| சித்தம் | ககஙூ, உoo |
| சித்தாந்தம் வேதாந்தத் தெளிவு | கஉo, சகூஎ |
| சித்திவகை எட்டு | ககூக |
| சித்து இருவகைப்படும் | நஉசுடி |
| சிவசத்தி அறிவை விளக்கு மன்றி மறைக்காது | நஎoடி |
| சிவசத்து | நஉநடு |
| சிவசமவாதிமதம் | கoo, நடிக, நடிந, நஉடு, நடிசு, நஎஅஅ, சகநஉ, சநஉடி |
| சிவஞானங் குரவனே இன்றி யமையாது | சகந. |
| சிவஞானத்தால் சிவனேயறிந் தவர் அச்சிவனில் வியாப் பியமாய தன்னேயுமறிவர் | சநஉடி |
| சிவஞானபோதநூல் கேட்டற் குரிய அதிகாரிகள் | கடி |
| சிவஞானபோதநூற் பகுப்பு முறை | கூஉ |
| சிவஞானபோதநூல் மலத்தீர் விற்கும் ஆராய்ச்சி யநுபூதி என்னும் இருவகை யுணர் விற்கும் இன்றியமையாதது | டி |
| சிவஞானபோதநூல் வந்த வர லாறு | கடி, கசு |
| சிவஞானபோதப் பெயர் விளக் கம் | கஉ |
| சிவஞானபோதத்தில் ஞான பாதப் பொருளாராய்ச்சி | நட |
| சிவஞானமே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணம் | நகூஎ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| சிவதத்துவ புவனங்கள் (சுத்த மாயா புவனங்கள்) அபர முத்தித்தான மன்றிப் பர முத்தித்தான மன்று | சoசு |
| சிவதத்துவம் | கநிக |
| சிவதரிசனத்தில் நிகழ்வது ஆன்மசுத்தி | சாக, சாஉ |
| சிவதீக்கை | உச |
| சிவதீக்கை ஆன்மாவுக்கே | நக |
| 'சிவத்துவமசி' சித்தாந்தமகா வாக்கியம் | சசக |
| சிவத்துவ விளக்கம் | நஉள |
| சிவநல்வினை தீவினை | சகஉ |
| சிவபத்தர் | சஅசு |
| சிவபத்தர்களோடிணங்குதல் | சஅள |
| சிவபத்தரது பெருந்தகைமை | சஅள |
| சிவபத்தியில்லாதார் மலங்களினுங் கொடியர் | சஅசு |
| சிவபுண்ணியம் | சoநு, சoச |
| சிவபுண்ணியம் பொது சிறப்பென்று இருவகைத்து | சoச |
| சிவபுராணங்கள் வேதத்திற்கு உபப்பிருங்கணம் | அநு |
| சிவப்பேறு | சசுச, சளநி |
| சிவராகம் | கஅக |
| சிவரூபம் ஆன்மதரிசனத்தைப் பயக்கும் | சாநக |
| சிவலிங்கத்தையும் சிவபத்தர் திருவேடத்தையும் சிவதேசிகனையும் அறிந்து வழிபடு முறை | சகசு |
| சிவம் | உநிஅ |
| சிவம்சத்தி, நவபேதம் | உசுக |
| சிவம் வேறற நின்றுணரும் அநுபவஞான மாத்திரையின் கோசரமாம் | நாசசு, நாசஅ |
| சிவமும் ஆன்மாவும் இலக்கணத்தான் வேறு | நாசுஅ, நசுக |
| சிவனடியார்திருவேடம் சீவன் முத்தருக்குக் காட்சி மாத்திரையான் வசீகரித்து இன்பஞ் செய்யும் | சஅக |
| சிவன் சதாசிவன் மகேசன் | சுநா |
| சிவனுக்கு எல்லாப்பொருளும் ஜேயம் | நாஎசு |
| சிவனுக்கு ஒப்பாரு மிக்காரு மில்லையென எல்லாச் சிவாகமங்களும் முழங்கும் | நசுஅ |
| சிவாகமங்களின் வன்மை மென்மை | நாசுஉ, நசுநா |
| சிவாத்துவித சைவம் கக, ககக, கஉo, நாநிஉ, நாசுநி, நாசுசு, நாஎக, நாஅக | |
| சிவாநந்தம் ஆன்மாவிற்குப் போக்கியம் | நாஎசு |
| சிவாநந்தம் இன்பம் | நாஎள |
| சிவாநந்தம் இன்பப்பொருளென்றற்குப் பிரமாணம் | நாஎள |
| சிவாநந்தத்தை அநுபவித்தற் கேதுவாய இறைபணி நிற்கை உயிர் தன்னிச்சை வழி நிற்றலே யாம் | சநிள |
| சிவாநந்தாநுபவம் | நாஎள |
| சிவோகம்பாவனை | சசக, சசச |
| 'சிவோதாதா' என்னும் மந்திரம் | நாநிஅ |
| சிறப்பியல்பு | கக, கநி, கசசு |
| சிறப்பியல்புமெய் | நாஎசு, நாஅநா |
| சிறப்பு நூல்களின் பொருளுக்கேற்பப் பொது நூல்களுக்குப் பொருள் கூறவேண்டும் | கo |
| சிற்சங்க சித்து | நாசுச |

ஈ

| | |
|---|---|
| சீகண்டருத்திரன் | சுநா, சுச |
| சீவன்முத்தர்க்குரிய ஆசாரம் | சகக |

சு

| | |
|---|---|
| சுட்டியறியப்படுவனவெல்லாந் தோன்றி நின்றழியும் | சுசு |
| சுட்டுணர்வின்மை முற்றுணர்வுக்கு மேம்பாடு | நாஅச |
| சுட்டுப்பெயர் முன்வந்ததனையே சுட்டும் என்னும் நியமம் செய்யுளுக் கில்லை (இலக்கண விதி) | கoo, கoக |
| சுதந்திரம், பரதந்திரம் | நாநிள, நாசுசு |
| சுத்தசைவர் | கஉo, நாஅஅ |
| சுத்ததத்துவ புவனங்களிலும் வினையுண்டு | கநாo |

பொருள் பக்கம்

சுத்த தத்துவ புவனங்களினும்
அசுத்ததத்துவ புவனங்களி
னுள்ளன வனேத்துஞ் சுத்த
மாயுள்ளன கஙo
சுத்த தத்துவம் சகலர்க்குத்தேக
மாய் எய்துதல் கூடாது உஉசு
சுத்தப்பிரபஞ்சம் காரியப்பட்டு
அநித்தமா மியல்புடையது சஙஅ
சுத்தமாயாகாரியம் கநிக
சுத்தமாயையின் விருத்தியே
சுத்தப்பிரபஞ்சம் கசுச
சுத்தமாயையுண்மை கநிங, கநிச
சுத்தம் சஉஉ
சுத்தவித்தியா தத்துவம் கசுக
சுத்தாத்துவிதம் நஎச
சுத்தாத்துவிதநிலை சித்தாந்த
முத்தியை நிலைபெறுத்தும் சஎநி
சுந்தோப சுந்த நியாயம் சகo
சுவேதாச்சுவதரம் ஏனை யுப
நிடதங்களினும் வலியுடைத்து
அஎ
சுழுத்தி நஉகக

சூ

சூக்குமதேகான்மவாதி மறுப்பு
உஎஎ
சூக்கும பஞ்சாக்கரம் உகசு
சூக்கும பஞ்சாக்கரம் தூலபஞ்
சாக்கரம் அசஜபிராசாதம்
என்பன தம்மின் வேறல்ல உகசு
சூக்கும வைந்தொழில் கo
சூனியமுதற் காரணவாத
மறுப்பு கநசு
சூனியான்மவாதி மறுப்பு உஎஉ

சே

சேதனப்பிரபஞ்சம் சுட்டுணர்
வின்று கூஅ

சை

சையோகம் நஎஉ
சையோக முதல் அறுவகைச்
சம்பந்தங்கள் நசுங
சைவசந்நியாசம் நக
சைவத்தின் ஆச்சிரமம் நான்கு நo
சைவாகமங்களில் நாற்பாதங்
களும் உள நி

பொருள் பக்கம்

சைவாகமம் சிறப்புநூல் உங
சைவாகமப் பிராமாணியம் கசு
சைவாகமம் வேதசாரம் உக

சோ

சொப்பனம் நகஅ
சொரூபசம்பந்த மாத்திரை
யால் சிவானந்தத்தை அநுப
வித்தல் கூடாது நஎஉ
சொற்பிரபஞ்சம் தோன்றி
நின்றழிதலுமுடைத்து எஉ
சொற்பொருட் பின்வருநிலை
(அணி) கூக, கஉசு, சஎஉ, சகூடி
சோகம்பாவனை ககஅ
சோதகவாக்கியம் டிஉ
சௌத்திராந்திகர் சடி

ஞா

ஞாதுரு ஞானம் ஞேயம்
எனப் பகுத்துக் காணுங்
காட்சி மயக்கவுணர்வு சடிஉ
ஞாபகசத்தியுண்மை உசுச
ஞாபகவேது கஅ
ஞாயிற்றையும் விடயத்தையு
மநுபவிக்குங் கண் போல்
(உவமை) நஅஎ
ஞானத்திற்சரியை முதலியன சoடி
ஞானமே வீடுபேற்றிற்குச்
சிறந்த சாதனம் நஉஎ
ஞானம் சoஎ
ஞானம் நிகழ்ந்தாலன்றி ஏக
தேசப்பற்றறுதல் கூடாது சoo
ஞானவகை எட்டு ககக
ஞானவதியந்தியேட்டி உஎ
ஞானிகளுடம்பினிகழும் பிரா
ரத்தம் முழுவதும் அவர்க
ளிடமாய் நின்று முதல்
வனே என்று கொள்வன் சசுஎ
ஞானேந்திரியம் உoங

த

தண்கடனீருப்புப்போல்
(உவமை) நஉஉ
தத்துவங்கள் கநிக, கசுo, உo2
தத்துவங்களின்வகை உஉடி
'தத்துவமசி' வேதாந்த மகா
வாக்கியப்பொருள் ககங
தத்துவவண்ண ரூபி நஉசு

| பொருள் | பக்கம் |
|---|---|
| தமோகுண விருத்தி | சஙூஅ |
| தயிரில் நெய்போல்(உவமை) | சஙூ0 |
| தருக்கம் | சகூ |
| தவமுதிர்ச்சி யுடையார்க்கு எழுந்த நுகர்ச்சி மெலி நாய்க் கழிந்தொழிவதன்றி முறுகாது | ச0க |
| தவம் சரியை கிரியாயோகங் கள் | நூகூள |
| தற்பரும தருமி | நூசூச, நூசூ, நூகூள |
| தன்மவகை இரண்டு | கஙூ0 |
| தன்மாத்திரை | உகங, நூகங |
| தன்வேதனைக்காட்சி | களஅ |

**தா**

| | |
|---|---|
| தாட்டாந்திகம் | நூநிசூ |
| தாதான்மியசத்தி | உநிசூ |
| தாதான்மிய சம்பந்தம் இரு வகை | நூளஉ |
| தாதான்மிய சம்பந்தத்தின் வேறுய் சமவாய சம்பந்தம் ஒன்றில்லை | உகசூ, நூளஉ |
| தாதான்மியம் | கநி0, உநிநி |
| தார்க்கிகர் | கஉ0, கநிச, உகஉ, நூசூஅ, நூகூநூ |

**தி**

| | |
|---|---|
| தியானத்தானம் | சசச |
| திரிவுகாட்சி, தெளிவுகாட்சி | சநிச |
| திருமேனி அருவம், அருவுரு வம், உருவம் | சூங , கூச |
| திரோதானசத்தி கஙூ,கஉஅ, நூஉநி | |
| திரோதானசத்தி சிறிது சிறிதா கத் தன்றன்மைநீங்கிச் சிற் சத்தி ரூபமாய்ப் பதியும் | நூகூக |
| திலத்தின்கண்ணே தைலம் போல (உவமை) | நூளச |

**தீ**

| | |
|---|---|
| தீக்கை என்னும் சொற்குப் பொருள் | உஅ |
| தீக்கை ஞானத்திற்கு அங்கம் | உசூ, ச00 |
| தீக்கையால் பசுத்துவ நீக்கம் உண்டாகுமேயன்றிச் சாதி நீக்கமுண்டாகாது | நூக |
| தீக்கைப்பேற்றுக்கு உரியோர் | நூங |

| பொருள் | பக்கம் |
|---|---|
| **து** | |
| துரியம் | நூகக |
| துரியாதீதம் | நூஉ0 |
| **தூ** | |
| தூலவுடம்பு சூக்கும தேகத் தின் காரியம் | உங0 |
| தூல நிகழ்கால உண்மை | களநூ |
| தூலப்பொருள் வியாப்பியம் சூக்குமப்பொருள் அதற்கு வியாபகம் | கூக |
| தூலாருந்ததி நியாயம் | அ, நூளகூ |
| தூலாருந்ததி முறைமை | உங |
| **தே** | |
| தேகங்களின் வகை | உஉநி, உஉசூ |
| தேகான்மவாதி மறுப்பு | உளச |
| தேயு | உஉக |
| தேளுக்கஞ்சிப் பாந்தள்வாயில் விழுந்தாற்போல(உவமை) | நூஉஉ |
| **நா** | |
| நரகங்களின் வகை மூப்பத்தி ரண்டு | உநூள |
| நவசத்திகள் புவனம் | உநிக |
| **நா** | |
| நாராயணன் என்னுஞ் சொல் பரமசிவனே யுணர்த்தும் | அள |
| **நி** | |
| நிச்சயித்தல் என்பதன் பொருள் | கஅஅ |
| நிட்களம் | உநிகூ |
| நிட்கள சகளம் | உசூ0 |
| நித்தப்பொருள்கள் பொதுமை யிற் சுட்டியறியப்படுமாயி னும் அநுபவநிலையிற் சுட்டி யறியப்படா | எ0 |
| நியதித்துவம் | களநூ |
| நிராதாரம் | சகசூ, சகஅ |
| நிர்க்குணன் | சநூசூ |
| நிர்வாண தீக்கை | உள |
| நிவிர்த்திகலை | உசசூ |
| **நீ** | |
| நீரின்கண் வெளியுண்டு | சஉ0 |
| நீருக்கு நிழலுண்டு | சஉ0 |

போருள் பக்கம்

நீரூமிரதமும்போல(உவமை) நஎங
நீர்நிழல்போல (உவமை) சஉ0

நை

நைட்டிகப் பிரமசாரி நக
நையாயிகர் கூறும் ஆன்மவிலக்
கணமும் மறுப்பும் ந0ந
நையாயிகர் மதம் நிக, எந, உக0

ப

பக்குவாபக்குவ பேதங்களாமாறு
எ
பசுஞானந் தனக்கெனச் சுதந்தர
மூடைத்தன்று கசஎ
பசுகல்வினை ஜீவினை சகஉ
பசுபாசங்களின் சிறப்பியல்பு
சிவஞானம் ஒன்றே
யறிப்படும் நந்சூ
பசுபாசங்களின் பொதுவியல்பு
சுட்டறிவினால் அறியப்
படும் நந்சூ, நந்எ
பசுபுண்ணியம் சஉந
பஞ்சகஞ்சுகம் கஅந
பஞ்சகஞ்சுகம் பொதுவகை
யான் போத்திருத்துவத்திற்
கேது கஅச
பஞ்சக்கிலேசம் கஅந
பஞ்சக்கிலேசம் சிறப்புவகை
யான் போத்திருத்துவத்திற்
கேது கஅச
பஞ்சாக்கினி வித்தை உந்உ
பதிஉண்மைக்குப் பிரமாணம் சூஉ
பதிஞானம் சுதந்தர ஞானம் கசசூ
பதிஞானம் பெறும்முறை சந்உ
பதிப்பொருளுக்குச் சிறப்பியல்பு
நந்நி
பதிப்பொருளுக்குப் பொது
வியல்பு கக
பயனிருவகை சசசூ
பரதந்திரியங் கரைகழி பந்தம்
சநிஎ
பரமசிவனே பிரபஞ்சமுழு
தும் ஒடுக்கி உளதாக்குஞ்
சருவ காரணன் அக
பரமசிவன் மூக்குணங் கடந்
தவனுகலின் அவ்விறைவன்
பெருமை எல்லாக் கற்பத்
தும் ஒப்பநிகழும் அஉ
பரமாணு அவயவப் பகுப்புடை
யது கங்கூ
பரமாணு முதற்காரணவாத
மறுப்பு கங்அ
பரமான்மா ஒருவன் ஆன்மாக்
களுக்கு உடம்பு முதலிய
வற்றைப் படைத்து நடாத்தி
ஒடுக்குதற்கு உண்டு சூ
பரமான்மா சுட்டியறியப்படு
பவனு மல்லன் அறியப்
படாத பொய்ப்பொருளு
மல்லன் சூ
பரமான்மா மூவரின் மேலோன் சூ
பரமான்மாவின் அறிவு சுதந்
திர அறிவு எ
பரமான்மாவே குருவுமாய்
உணர்த்துவார் எ
பரமான்மாவுக்கு ஐந்தொழில்
புரியுங் காலத்தில் விகார
மில்லை சூ
பரமுத்திநிலைக்கண் இச்சை
நிகழாதவழிச் சிவபோகம்
அநுபவமாதல் செல்லாது சஎநி
பரிணமம் கசூங, கஅஉ
பரிணமவாதி கூக, ககக
பளிங்கிலிட்ட வண்ணம்போல
(உவமை) சஉக
பன்னிருகலைப் பிராசாதம் உகசூ

பா

பாகதச் சிதைவு (சானம் என்
பது) சசக
பாசஞானந் தானென வேறன்று
கசஎ
பாசம் வாயிலாக நிகழும் பசு
ஞானமே, பாசஞானம் நஅசூ
பாசுபதர் சூ0, எக, கசநி, நஉநிசூ
பாஞ்சராத்திரி கூறும் ஆன்ம
விலக்கணமும் மறுப்பும் ந0உ
பாஞ்சராத்திரிமதம் நிசூ, அநி, கூநி
பாடாணவாதசைவர் நஅஅ
பாணினி சூத்திரம் அசூ, அஎ
பாதஞ்சலர் நஉ0
பாரதஞ் சிவன்பெருமையே
விளக்குகிறது அங

பொருள் பக்கம்

பாரிசேடவளவை நஅக, நஅள
சசo
பாலில்நெய்போல் (உவமை) சஅக
பாவவினை கநக
பாவினை நநிஅ
பாற்காரியவாதம் நிஅ

பி

பிரகிருதி முதற்காரணவாத
மறுப்பு கநக
பிரணவம் சத்தப்பிரபஞ்ச
மனைத்திற்குங் காரணம் உகசு
பிரதிட்டாகலை உசக
பிரத்தியபங்கள் கஅஅ
பிரபஞ்சம் அசத்தெனப்பட்ட
தற்குக் காரணம் நநஅ
பிரபஞ்சம் சிறப்பியல்புபற்றி
அநுபவமாய் உண்மையாற்
சுட்டப்படும் எo
பிரம முதற்காரண வாதமறுப்பு
கசo
பிரமாண்ம் பிரமேயமாகாது,
பிரமேயம் பிரமாணமாகாது
நஎசு
பிரமாணம் பிரமேயம் கஉo
பிரமாணம் நஎசு, நசஉ
பிரமாதா நஎசு, நகஉ
பிரமாண்மவாதி மறுப்பு உஅக
பிரமிதி நஎசு
பிரமிதிக்கும் பிரமேயத்திற்
கும் சம்பந்தம் கநிஉ
பிரமேயம் நஎசு, நகஉ
பிரவாகாநாதி கநநி
பிரவிருத்திவிஞ்ஞானம் சசு
பிரளயாகலர் இருவகையர் நoஅ
பிரளயாகலர் சகஅ
பிராசாதநெறி நசுஎ
பிராணன்மவாதி மறுப்பு உஎக
பிராரத்தம் அநுபவத்தாலறும்
சநிஎ
பிராரத்தவாசனையின் ஒழிபு சசுச
பிராரத்தவினை இறைபணியில்
நிற்பார்க்கு உடனுழாய்க்
கழியும் சநிஅ
பிராரத்தவினை சூக்கும வினை
சநிக

பொருள் பக்கம்

பிருதிவி உஉஉ
பிரேரக காண்டம் உஉச

பு

புண்ணிய பாவங்கள தண்மை
கநo
புத்தர் சச, கநி, உகந
புத்திகுண பாவகங்கள் ககo
புத்தி தத்துவம் கஅஅ
புத்திபூர்வச் சிவபுண்ணியம் சoச
பும்ஸத்துவமலம் கஅந
புராணம் எந
புருடதத்துவம் கஅந
புறக்கரணம் அந்தக்கரணங்
கட்கு வேற்றுமை உoக
புறச்சமயம் சக
புறச்சமய அகச்சமயத்தார்க்
குரிய முத்தித்தானங்கள் கஉஉ,
கஉந
புறப்புறச்சமயம் சந
புனருற்பவம் கoநி, கoக

பூ

பூசைத்தானம் சசச
பூட்டுவிற் பொருள்கோள்
(இலக்கணம்) உஎக

பெ

பெத்தநிலைப் பொதுவியல்பு அ,
கசசு
பெத்தமுத்திப் பேதங்களாமாறு எ
பெத்தமுத்தி யிரண்டினும்
ஆண்மாவுக்கு வரும்பயனை
மூதல்வனே உடனுய்ந்று
என்றுகொண்டு பயன்
விளம்பன் சளச, சளசு
பெருங்கடல்வகை ஏழு உந்க
பெருந்தீவுகள் ஏழு உஉக
பெரும்பெயர்க் கடவுளிற்
காண்டல் சு
பெரும்பெயரோடு அஞ்செழுத்
திடை வேற்றுமையில்லை நி

பே

பேதவாத சைவர் நஅஅ
பேதவாதிகள் நஎக
பேரானந்தம் சஉள

| பொருள் | பக்கம் |
|---|---|
| **பொ** | |
| பொது வியல்பு | கக, கo(நு |
| பொதுவியல்புபொய் | ஈ அங., சஉஉ |
| பொய்ப்பொருள் முக்காலத்தும் புலனுகாமை பற்றி; நிகழ் காலத்து விளங்கி ஏனைக் காலத்து விளங்காமைபற்றி அழிபொருளென்பது | உகக |
| பொழிப்புரை இருவகைப்படும் | சுநி |
| **போ** | |
| போக்கிய காண்டம் | உஉநி |
| போசயித்திரு காண்டம் | உஉச |
| **பௌ** | |
| பௌதிகப் பிரமசாரி | கo |
| பௌத்தம் | சச |
| **ம** | |
| மகவெனப் பல்லுயிரனைத்தை யும் ஒக்கப்பார்த்தல் | சஅசு |
| மகாசகலம் | உகசு |
| மகாவாக்கியப் பொருள் | ஙஎஉ |
| மகேசுர மூர்த்தி இறுவாயான திருமேனியே பரமசிவனுக் குச் சுதந்திரவடிவம் | சுங. |
| மங்கல வாழ்த்து | ஙநி |
| மதம் | கஉஎ |
| மலத்தினது சிறப்பியல்பு பொதுவியல்பு | கஉஎ |
| மலபரிபாகம் | சகo |
| மலம் என்பது ஒரு திரவியம் | ஙoo |
| மலம் நசித்தலாவது, அதன் மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையே, பிறிதன்று | சஅo |
| மலம் முதல்வனுக்கு மறுதலைப் பொருள் | கசநி, ஙஅச |
| மலரின்கண் வாசம் போல (உவமை) | ஙஅசு |
| மலைகளின் வகை எட்டு | உசo |
| மனத்தத்துவம் | உoக |
| **மா** | |
| மாசாலப் பிரயோகம் | உஎ |
| மாட்டெறிதல் (உத்தி) | சசஙி |
| மாயாவாதம் | நிஎ, கூக, ககக, கசஅ, கநிக, கசஙி., ஙிசஎ, ஙிசகூ, ஙிசநிக, ஙி.சூஅ, ஙி.எo, சஙி.கூ |
| மாயை | கஙிக, கசo |
| மாயை உலகத்திற்கு முதற்கார ணம் | சு, எசு, கஙிஎ |
| மாயை திரோதானங்களின் பொதுவியல்பு சிறப்பியல்பு | கசசு |
| மாயையின் வகை | கநிஉ |
| மாயையுண்மை | கஙிசு |
| மாயையும் அதன் காரியமும் முதல்வனுக்கு மறுதலைப் பொருள் அல்ல | ஙிஅச |
| மாவிரதம் | சுo |
| மானதக்காட்சி | களஎ |
| **மி** | |
| மிருதி | எஙி |
| **மீ** | |
| மீயாஞ்சை | நிஉ, எசு, கஉச |
| மீமாஞ்சை இயல்வகை | நிச, நிஎ |
| **மு** | |
| முடவன் மலையிற் றேனை யவாவி வாயூறினாற்போல (பழமொழி) | ஙஎo |
| முதலாவ'து சூத்திரத்தொகைப் பொருள் | கoக |
| முதல்வன் ஆனந்த ரூபமே | சஎக |
| முதல்வன் சகலருக்கு மாறுட வடிவை ஆதாரமாகக் கொண்டு செய்யுஞ் சாதார ணிக்கை | சகநி |
| முதல்வன் செய்யுஞ் செயல்க ளெல்லாம் தன்பொருட் டன்றி ஆன்மாவின் பொ ருட்டே | சஎக |
| முதல்வன் பெத்தர்மாட்டும் முத்தர்மாட்டும் அத்துவித மாய் ஒப்ப நின்ருலும் பெத் தர்க்குப் பாசஞானமேயாய்த் தோன்றுவன் | சஎசு |
| முதல்வனே இதயத்தில் கண்டு பூசிக்குமாறு | சசசு |
| முதற்காரணங்களின் குண மெல்லாம் காரியங்கட்கும் உள என்பது நியமம் | கசக |

**போருள் பக்கம்**

முதற்காரண முடிவு கநிசு
முத்திநிலைச் சிறப்பியல்பு அ,·கசசு
முத்தி பஞ்சாக்கரம் சசஉ
முத்தியில் ஆன்மா சிவாநந்
தத்தை யனுபவிப்பன் என்
பதற்குப் பிரமாணம் நடஎநி
முப்பொருள்களும் சத்து நடநட
முப்பொருள்களும் தம்முள்
ஞலசூக்குமமாய் நிற்கும்
முறைமைபற்றி வியாப்பிய
வியாபகமாம் கூக
மும்மலகாரியம் கஉள
மும்மலங்களும் அஞ்ஞானத்
திற்கு ஏதுவாய் வந்து
நுழையும் விதம் சஅச
மும்மலங்களும் சிவபோகப்
பெருவாழ்வைபிழப்பிப்பன,
அவற்றை மேன்மேல்முறுக
விடாமல் தோன்றும் பொழு
தே துடைக்க வேண்டும் சஅச,
சஅடு
முயற்கோடு ஆமைமயிர்க் கம்
பலம்போல் (உவமை) நடநடு
முலைப்பாலும் கண்ணீ ரும்
அன்பை விளக்கும் சகக
முழுதும் பரிணமம் கஅஉ
முற்பக்கத்திருள்போல
(உவமை) நடகக
முற்பக்கத்திற் றிங்கள் போல
(உவமை) நடகக
முனைத்திடாமை நடஅ

**ழ**

மூலப்பகுதி கஅடு
மூலமலகாரியம் கஉள
மூலமலத்தின் காரணப் பெயர்
கள் நடஐ
மூலவினையுண்மை கநடு
மூவகையான்மாக்களுக்கும்
ஆணவமலப்பிணிப்பு வேறு
பாடு சகஅ
மூவகையான்மாக்களுக்கும்
முதல்வன் உணர்த்து முறை
மை சகடு
மூவகையான்மாக்களுக்குரிய
புவனங்கள் நஐள, நஐஅ

**போருள் பக்கம்**

**மெ**

மெய்த்தவம் சஅள

**மே**

மேருவரை உசஐ

**மோ**

மோகம் கஉள

**யோ**

யோகத்திற் சரியை முதலாயின
சஐடு
யோகமதம் டுக
யோகம் சஐள
யோகாசாரர் சடு

**வ**

வருடங்களின் வகை ஒன்பது
உசஐ, உசக
வருணச்சிரமதாரதம்மியம் நஉ
வழிபாடு செய்யாவழிப் படுங்
குற்றமும் செய்தல் கடமை
யாதலும் சகூடு
வழிபாட்டிற்கு இடத்து நிகழ்
பொருள் மாத்திரையே
யன்றி இடவிசேடமும்
பெறல் வேண்டும் சகூசு
வழியளவை ஆகமவளவை
யோடு முரணுது அதனை
வலியுறுத்தும் கசநட, உஅசு

**வா**

வாக்குக்களின் வகை கடுடு
வாக்கு மனுநீதம் நசக, நஅஉ
வாசகஞானம் நடநள
வாமம் கூக
வாயிற் காட்சி களள
வாயு உஉ0
வார்த்திகப் பொழிப்பு எக
வானகத்தில் வானும் மணத்தின்
மணமும்போல் (உவமை) நளநட

**வி**

விகற்பம் ககூஅ
விசிட்டம் கசஐஉ, நஉக
விசிட்டாத்துவிதிகள் நஉக
விசேட தீக்கை உள
விஞ்ஞானகலரின்வகை நஐஅ
விஞ்ஞானகலர் சகஅ

| பொருள் | பக்கம் |
|---|---|
| விஞ்ஞானகலர் பிரளயாகலர், புருடதத்துவம் எனப்பெயர் பெறுதலில்லை | கஅங |
| விஞ்ஞானதீக்கை | உசு, நடுஅ |
| விதிமூன்று (மீமாஞ்சை) கசு, கூள, சகக, சகூஉ | |
| வித்தியாகலை | உருO |
| வித்தியாதத்துவம் | களசு |
| வித்தை பதினெட்டு | எஉ |
| விந்து அங்கி | உரு, உஉக |
| வியாகரணம் | எஉ |
| வியாபகப் பொருட்குப் பாசம் ஒருவுதலாவது காட்சி விசேடமே | சஙள |
| வியாபாரசத்தி | உகூ |
| வில்வேதம் | எங |
| வினைக்குப் பற்றுக்கோடு | கங்ச |
| வினைபிரவாகாநாதி | கஙரு |
| வினை மனம் வாக்குக்காயங்களான் ஈட்டப்படுமாறு | கங்க, கஙஉ |
| வினைமுதல் இருவகை | கூங |
| வினையுண்மை | கஉஅ |


## வீ


| பொருள் | பக்கம் |
|---|---|
| வீடுபயக்கும் மெய்யுணர்வு நிகழுங்காறும் மேன்மேல் அவாச்சேறல் ஒருதலை | சO கூ |


## வே


| பொருள் | பக்கம் |
|---|---|
| வேதசிவாகமங்கள் பரமசிவனால் செய்யப்பட்டவை | கஅ |
| வேதமும் சித்தாந்த சைவாகமமும் என்னுமிரண்டும் உத்தம நூல் | உக |
| வேதமும் சிவாகமமும் ஒரு பொருளுடையன | நக |
| வேதம் பொதுநூல் | உங |
| வேதாந்தம் என்னும்சொற்குப் பொருள் | உங |
| வேம்பு தின்ற புழுப்போல (உவமை) | சசங |
| வேள்வி முதலிய வைதிகவினை பசுபுண்ணியம், சிவபிராணை நோக்கிப் பொது நீக்கிச் செய்யின் பொதுச் சிவபுண்ணியமாம் | சOங |


## வை


| பொருள் | பக்கம் |
|---|---|
| வைசேடிகர் | உகசு |
| வைதிகச்சடங்கு உடம்பு முதலியவற்றிற்கு | நக |
| வைதிகன் சைவாசாரத்திற்கு உரியவன் | உங |
| வைநாசிகர் | திக |
| வைபாடிகர் | சள |
| வைரவம் | சுக |
| வைராக்கியவகை பத்து | ககூங |

# அருஞ்சொல் சொற்றொடரகராதி

[எண் - பக்க வெண்]

## அ

அகண்டாகாரம் ஂ0சு, ஂ0எ
அங்கித்தம்பனே ஂசுக
அசத்தாந்தன்மை ஙஅசு
அசத்தின்மை ஙஅள
அஞ்ஞானம் - அறியாமை ஙகஉ
அணு - சூக்கும உடம்பு உஙஉ
அண்டன் ஂசஂ
அதிகாரி - கேட்போர் ஙசு
அத்தன் - இறைவன் கூ0
அத்துவா - வழி உடுஙக
அநவத்தை - முடிவு பேறின்மை ஙஎஅ
அநந்தியம் - அத்துவிதம் ஙகஙடு
அநாதிபோதம் ஙஎ0
அநாதிமுத்தன் ஙஙஅ, ஙஎ0
அநிர்வசனம் ஙஎஉ
அநுபலத்தி - இல்லையென்றறியும் அறிவு ஙஂ0
அநுபவஞானம் ஙஙஎ, ஙகஙக
அநுபவித்தல் - அழுந்தியறிதல் சு, ஙஎஅ, ஂஎக
அநுற்பூதரூபம் உஉக
அனேகாந்திகம்-ஒருதலைப்படாதது, அஃது, ஏதுப்போலிகளுளொன்று ஂசஂ
அந்தரம் - சித்தாந்தம் ஂசுஎ
அந்தம் - வேதாந்தம் ஂசுஎ
அந்நியயோக வியவச்சேதம் - பிறிதினியைபு நீக்குதல் உடுஙச
அபாவவாதம் ஙஙஅ
அபுத்திபூர்வம் ஂ0ங
அபேதசம்பந்தம் ஙஎஙட
அப்பிரமேயம் ஙடுஙக, ஙசுஉ
அயராவன்பு - அயராமையாலுகிய அன்பு ஂசுசு
அயர்த்தல் - மறத்தல் ஙகஙடு
அயோகவியவச்சேதம் - இயைபின்மை நீக்குதல் உடுஙச
அரன் - பசுக்களுடைய பாசங்களை அரிப்பவன் ஙகஙடு
அருத்தாபத்தி ஂசஙச
அவசித்தாந்தம் ஙஙஎ, ஙஂசக
ஙடுஙசு, ஙசுஎ, ஙஎசு, ஙஎஅ, ஂசுஙசு
அவத்திதன் ஙஎகஙட
அவயவம் - வேறுவேறு பிரித்தற்குரியன ஂசுஅ
அவாந்தரப்பயன் ஂ0உ, ஂ0க
அவிராபாவம் - நீக்கமின்றி நிற்றல் உடுஙடு, உடுஙசு
அவ்வியாப்பிய விருத்தி ஙஎஉ
அளவையறிவு ஙஂ0
அறிவறியாமெய் ஙஂசஅ
அறிவற்றம் ஂசஅஂ
அறுமுனிவர் கஎ
அன்பு - இச்சை மீதூர்தல் ஂசஎடு
அன்றுதல் - மாறுபடுதல் உஎஎ
அன்னியம் - வேற்றுமை ஙஅசு, ஂசகஂ

## ஆ

ஆச்சிரவம்-பொறிவழிச்சேறல் ஂசஅ
ஆடூஉவறிசொல் ஙஎகஙட
ஆணவம் அணுக்களைச் சகச மாய்ப் பற்றிநிற்றல் ஙஂ0சு
ஆகாரயோகம் ஙஎஉஎ
ஆதிதைவிக கருடன் - கருடனுக்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உளத்தில் அது போல வைத்துத் தியானஞ் செய்து கணிக்கப்படும் மந்திரம் ஂசஂக, ஂசஂஉ
ஆதிபௌதிக கருடன்-உலகத்திற் காணப்படுங் கருடன் ஂசஂக
ஆதியான்மிக கருடன் - மந்திரத்தினிடமாகநின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஂசஂக
ஆநந்தம் - இன்பம்; நிறைதல் ஙஎஎ
ஆயிட்டு - ஆகலான்; இட்டு பகுதிப் பொருள் விகுதி ககஂ
ஆய்தல் - நுணுகுதல் ஙகஂ

ஆலய விஞ்ஞானம் - சவிகற்ப மாய் விரியும் ஞானமன்றி ஒடுங்கும் ஞானம் சக, சசச
ஆலோகம் - ஒளி உகஅ
ஆவரண மூர்த்தி சஅ0ச
ஆஞமை - நீங்காமை சளங
ஆஞவறிவு - தன்னறிவின் கண் நீங்காது நிலைபெறும் அறிவு சஙக
ஆன்மா-வியாபகம்: சித்தசித்து உ அக

இ

இணங்குதல் - நட்புச்செய்தல் சஅசு
இதஞ்செய்தல் - பற்றுச்செய்தல் சசஉ
இந்திரியம் - பொறி உ0ங
இரட்டுற மொழிதல் எஉ, நஉக
இரண்டுறக் காண்டல் சஙக
இலிங்கம் ஙஙி
இழை - நூல்; ஈண்டுச் சாத்திரம் ஙகO
இறப்பிறவும் சO2

உ

உடம்பொடு புணர்த்தல் (உத்தி) சுஅ, உளக, சஙள
உத்தேசம் கO2
உபதேசி ஙஅள
உபராகம் - கிரகணகாலம் சசஙி
உபலக்கணம் ஙகளள
உபலத்தி - உள்ளதென்றறியு மறிவு - ஙஅO
உரா சஙஉ
உரூடி - இடுகுறி உங
உலக இன்பம் - ஆன்மாவின் வேறுகிய மூலப்பகுதியின் கண்ணதாகிய சாத்துவிக குணம் ஆன்மாவின் மாட்டு மேற்பட்டு விளங்குதல் நுளள
உலகதருமிணி ஙO
உலகம் - உயர்ந்தோர் கஙஙி
உளம் - ஆன்மா உஙக, ஙகஉ, சகள
உற்பூதரூபம் உஉக

ஏ

ஏகதேசம் சசO
ஏகதேசவுருவகம் ஙகசு

எத்துதல் - அருள்வழி நிற்றல் சளஙி

ஒ

ஒண்குரு - அநுபவமுடைய தேசிகர் சகள

க

கடல் - நீர்க்கு இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம் ஙகஉ
கண் - அறிவு சஙசு
கதம் - சிற்றம் சசஉ
கழல் - காலணி மணிவடம் சஉள
கள்வன்-ஆன்மா உடனின்றும் பசுஞான பாசஞானங்களா னறியப்படாதவன் சஙசு
கனனம் - நிலத்தில் குகை செய்து அடக்குதல் உள
காண்டல் - ஐயுறவின்றித் தெளிதல் சஅஙி
காதல் - இச்சைமீதூர்தல் சளஅ
காரகவேது கஅ
குடிலை - சுத்தமாயை கஙிங
குண்டலி கஙிங
குறியீடு ஙிஙி

ச

சகம் - நிலவுலகம் சகள
சகன் - சகத்தினுளனாகிய குரவன் சகள
சங்கற்பம் - சிவசத்தி அவ்வக் காரியங்களில் உன் முக மாதல் ஙஙO
சங்கீரணம் - கலப்பு அக
சங்கேதம் - நியமனம் சஙங
சங்கோசம் - சுருக்கம் சளக
சட்ட-செப்பப் பொருட்டாய தோரிடைச்சொல்; அது சட்டம் என மரீஇயது சசO
சதனம் - இதழ் சசள
சத்தி - ஆற்றல் உசுக
சமவாயம்-நீக்கமின்றி நிற்றல் ஙிO, உருஙி
சம்பவம் - உண்மை சகள
சன்மார்க்கம் - நன்னெறி ஙகக

சா

சாகபசுநியாயம் அஙி
சாக்கிராதீதத்தினியல்பு ஙஙி

சாதாரதீக்கை - முதல்வன் சகலருக்கு மாநுடவடிவை ஆதாரமாகக்கொண்டு செய் யுந் தீக்கை சகசு
சாதி கிரு
சாதியொருமை நூஉஅ
சாத்துவிகம் களஉ
சாயாக்கிரகம் - கேது சுசசு
சாலம்பயோகம் - சகளம் சகள நிட்களங்களைப்பற்றிச் செய் தல் சரூநி

சி

சித்தசாதனம் கூஉ
சிவதருமிணி நூரூ
சிவபுண்ணியம் சரூச
சிவபோகப் பெருவாழ்வு சுஅச
சிவாநந்தியம் நூஎரூ
சிவாநுபவம் சுஅநி
சிவார்ச்சனம் நூகூள
சிவானந்தபோகம் சுசஉ
சிவைக்கியம் நூளரூ
சிவோகம் சுசக
சிற்சங்கசித்து நூசுச

சீ

சீவான்மா நூகூக

சு

சுகப்பிரபை சுசுஙி
சுட்டுணர்வு நூஅங, நூஅச
சுத்தாத்துவிதம் - யாதானு மொன்றால் விசேடிக்கப் படாத அத்துவிதம் நூஎச, நூஎநி
சுருதி நிநி
சுவாநுபூதிகம் சுஅநி

சூ

சூத்திரம் - சூசிப்பது கரூக
சூழ் - சூழ்ச்சி சரூரூ
சூனியம் - விளங்காமை, மூனைத்திடாமை நூஅங

சே

சேடசேடியபாவம் சுசச
சேடம்-யாதொன்று யாதொன் றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும், அஃது அதற்குச் சேடம் சுளகூ
சேடன் சுசச

சை

சைதன்யசொரூபி சகசச

சொ

சொற்பிரபஞ்சம் - மந்திரம் பதம் வன்னம் எஉ

சோ

சோபானமுறை நூகூகூ

ஞா

ஞாதா - காண்போன் சநிஉ
ஞானம் - குரவனுணர்த்திய வாறு சிவஞானங் கண்ணு கக் கொண்டறிவதாகிய அறிவு நூகூசு
ஞானம் - காட்சி சுசநி

ஞே

ஞேயம் - காட்சிப்பொருள் சுசநி

த

தத்துவப் பிரபஞ்சம் நூஅநி
தத்துவவன்னரூபன் நூகச
தத்துவான்மா நூசூக
தமி - தனிமுதற்பொருள் நூசகூ
தரம்-மிகுதிப்பொருளை உணர்த் தும் ஒரு விகுதி சுகஅ
தன்னியல்பு-சிறப்பியல்பு கசசு
தற்றருமதருமி நூசுசு, நூசுள

தா

தாட்டாந்திகம் நூநிசு
தாதான்மியம் கநிரு, உநிநி
தாமதம் களஉ
தான்றானெகச் செய்தல்-எதனை எதனைப் பற்றினும் அது வதுவாம் உயிர் தன்னை யறிந்தவழி எண்குணங்களா னிறைந்த தன் வண்ண மாகச் செய்தல் சுகூசு

தி

திரியக்காண்டல் சநூக
திரோதானசத்தி நூகூக
திறம் - கூறு சுஅள

தீ

தீவிரசத்திநிபாதம் சரூக
தீவிரதரத்திற் றீவிரதரமான சத்திநிபாதம் சுஉஅ

து

துரத்தல் - உந்தித்தள்ளுதல் ளஎள
துரியநிலை சுசுருு
துவாதசாந்தம் நடஎச
தூண - அதிமேவகம் சநஉ
தெய்வம் - ஊழ் களந
தெளியக்காண்டல் சநக
தைவம் - தேவனதுடைமை சசo, சகூந

ந

நசித்தல் - கெடுதல் ளஎஅ
நண்ணுதல் - தலைப்படுதல் சயக
நந்தம் - நிறைதல் நடஎள
நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து முதிர்ந்தோர் நடசு
நன்னெறி - சன்மார்க்கம் நடகூக

நா

நாடி - ஆராய்ந்தறிக சநடஉ
நாதம் - சிவதத்துவம் சசசு
நான்காஞ் சத்திநிபாதம் சஉஅ

நி

நிகழ்தல் - ஐயந்திரிபின்றி விளங்குதல் நகூசு
நித்தப்பொருள் களஉ
நியதி - ஊழ் களந
நிராதார தீக்கை சகசு
நிராதாரயோகம் நடகள
நிராலம்பம் சநடள
நிராலம்பயோகம் - நிட்களத் தைப்பற்றி நின்றுசெய்வது, சo
நிரூபித்தல் - ஐயந் திரிபின்றி மாசறு காட்சிபால் ஆராய்தல் நடஅசு
நிற்றல் - சலியாது நிலைபெறுதல் சருசு

நே

நேர்நோக்குதல் - முன்னே மருட் பார்வையை மாற்றி அருட் பார்வையான் நோக்குதல் சகள

நோ

நோக்கு - மனவெழுச்சி விசேடம் சசச
நோன்றல் - பொறுத்தல் சஅஉ

ப

பக்கிசைத்தல் - பிரிந்திசைத்தல் சகநந
பங்கம் - அழிவு நிக
பசுஞாணம் சநடஉ
பதி நடநிக
பதிஞானம் சநடஉ
பத்தி - இச்சைமீதூர்தல் சளநி
பரபக்கம் நடசுஉ
பரமகஞ்சசங்கியாசம் ககூ
பரமாண்மா நடகூக
பரம் - அதிசூக்குமம் உஉநி
பலாலம் - வைக்கோல் சஉநி

பா

பாசஞாணம் நடஅசு, சநந
பாடிகாவல் கஉந
பாரிசேட அளவை நடஅக
பால் - ஊழ் களநி
பாவனை-அநுபவத்தின் காரிய மாய் நினைவிற்குக் காரண மாயுள்ளது நிo

பி

பிண்டப்பொருள் - பதப்பொருள் சுநி
பிரகாசம் - விளங்குதல் நடசுந, சஅக
பிரதிசங்கிதை முறை - ஒரு விடயத்தை வேறு வேறு வகுத்துக் கூறுதல் கச
பிரபஞ்சம் நடநள
பிரமாணம் நடகூந
பிரமாதா நடகூஉ
பிரமிதி நடகூந
பிரமேயம் - அநுபவிக்கப்படும் பொருள் நடளசு, நடகூஉ
பிரயோசனம் - பயன் ககூ
பிரவிருத்திவிஞ்ஞானம் - சவிகற்பமாய் விரியும் ஞானம் சசு
பிராசாதநெறி - பிராசாதமந்திரத்தை உச்சரிக்கும் மார்க்கம் நடகூள
பிருகற்பதி -தேவகுரு சச
பிரூண்டும் - வேறிடத்தும் நடநஅ

பு

புணர்தல் - தலைப்படல் சசo
புத்திபூர்வம் சoச

புரோடாசம் - யாகத்திற் கொடுக்கும் ஒருவகை யவி ருருரு
புறனடை - வாக்கியசேடம் ருஅ0
புனருத்தி சஎ0
பூனதல் - அடங்கிநிற்றல் ருருசு

## பே

பேய்த்தேர் - கானல் நீர் ருஅசு
பேரின்பம் - ஆன்மாவின் வேறுப்ச் சிவன்கண்ணே யுளவாகிய மூற்றுணர்தன் முதலிய எண்வகைக் குணங் களும் ஆன்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக் கம் ருஎள, ருஎஅ

## பை

பைமறியாப் பார்ப்பார் சகூஉ

## பொ

பொய் - இடையே விளங்கி மறைவதாகிய பொது வியல்பு ருஅங
பொருட்பிரபஞ்சம் - புவனம் தத்துவம் கலை எஉ
பொழிப்புரை இருவகை சுருரு
பொற்பு - பொலிவு சஎங

## போ

போக்கியம் ருஎசு
போடம் - ஆற்றல் உசுகூ
போத்திருத்துவம் - போகம் நுகர்ச்சியாதல் தன்மை கஅச, ருருசுக

## ம

மங்கலவாழ்த்து மூவகை ருருரு
மகளகமுறை - வேறுவேறு வகுக்கப்பட்ட பலவற்றைத் திரட்டிக் கூறுதல் கச
மந்திரான்மா ருருசுக
மலபரிபாகம் சக0
மனம் ருஞசுசு
மனுநீதம் ருஞசுசு

## மா

மாசாலப்பிரயோகம் உள
மாணுஅசத்து - நன்மையில் லாத அசத்து ருஞசுசு
மாமாயை - சுத்தமாயை கருங
மான் - பெரியோன் சகூருரு

## மு

மூனைத்திடாமை - இதுகுடம், இஃதாடை என நம்மனோ ராற் சுட்டியறியப்படுமாறு போல முதல்வனுற் சுட்டி யறியப்படுவதாய் வேறு நில் லாமை ருஞஅ

## மூ

மூலமலம் ருருகூ

## மெ

மெய் - எக்காலத்தும் நிலை பெற்றுள்ளதாகிய தன்னியல்பு ருஞஅருங
மெய்ஞ்ஞானம் ருருகக
மெய்த்தவர் சஅள
மெய்ப்பொருள் - சத்தாயுள்ள சிவம் சசு0
மெய்யறியாக் கண் ருருஉ

## யா

யாப்பு - ஆசந்தரியம் கசு

## யோ

யோகம் - காரணம் உருஞ
யோசித்தல் - சேர்த்தல் ருஞசுள

## வ

வசித்திடவரும் வியாபி ருஎஙரு
வரம் - ஜேயம் சஅ0
வழியளவை ருஎருரு

## வா

வாக்கியசேடம் ருஞஅ0
வாக்கியம் ருருரு
வாக்கு - பாசஞானம் ருஞசுசு
வாக்குமனுதீதகோசரம் ருஞசுசு, சருஞசு, சருஞச
வாசகஞானம் ருஞருள
வாயில் - பொறி உ0ருஞ
வாயுறைமொழி ககக
வாய்த்தல் - கிடைத்தல் ருஞஅள
வார்த்திகப் பொழிப்பு எக

## வி

விகாசம் - விரிவு சளக
விகாரம் - செயற்கைக் குணத் தோடு சமவேதித்தல் ஙஙஉ
விசிட்டம் ஙஎக
விசேடம் ஙo
விடயம் - நுதலியபொருள் கசு
விதி - ஊழ் களங
விநாசம் - அழிவு ஙக
விந்து - சுத்தமாயை கஙங
விபாகம் உoஅ
வியஞ்சகம் ஙகஙக
வியாத்தி - நியதமாண உட னிகழ்ச்சி சள
வியாபாரசத்தி - கிரியாசத்தி உக
விவர்த்தனம் கசக